Q23:291
M91
114511

Office of the Registrar
of Books & Publications
MADRAS

ஸ்ரீ:

ஒழு ஸமவேதஸிவாயநம:

ஸ்ரீ சைவபுராணமென்னும்

சிவமஹாபுராணம்.

ஞானஸம்ஹிதை.

காப்பு

ஜகதவிதாரஸ்ருஷ்டே ஜகதாதாரஸம்ஸ்திவாடி।
சித்தாந்தஸுமணாயிஸ் மதிகேதஸுண்டாயாதி ஸுஷ்டி॥

உலகங்களெல்லாவற்றுக்கும் (பரம) பிதாவான சிவபெருமானையும், அவ்வுலகங்களெல்லாவற்றுக்கும் (பரம) மாதாவான ஸர்வமங்கள ப்ரதையாகிய உமாபிராட்டியாரையும், இவர்கள் புத்ரனான விகாயக மூர்த்தியையும் நமஸ்காரஞ்செய்து இச்சிவராத்ரிவ்ருத்தாந்தத்தை வர்ணிக்கின்றேன்.

வாழிஸாபஸ்ருவடிவ ஒருதியுஸ்ருவகுஹி।
யஸ்ருஷ்டிஸ்ரீஹ்ருதிவ்ருஸ்வஸிவ கபர்ஸ்ருஹிம்ஸுஜனுஸுஜே॥

எந்த நடராஜமூர்த்தியினது திருமுகத்தில் ஸ்ருஷ்டியும், திருமார்பில் இலக்குமியும், இதயத்தில் ஞானமும் இருக்கின்றனவோ அந்த நடராஜமூர்த்தியை யான் அடைகின்றேன்.

முதலாவது

புராணவரலாறுரைத்த அத்தியாயம்.

ஒருகாலத்தில் தைமிசாரண்ணிய வாசிகளான ரிஷிகள் யாவரும் (அதிசய பயபக்தியோடு) வியாஸபகவானுடைய சிஷ்யராகியும் நற்குணங்களுடையவராகியும் விளங்கும் ஸூதமுனிவரைநோக்கிப் பின்வருமாறு விஞ்ஞாபித்தார்கள்.

மஹா பாக்கியசாலியான ஸூத முனிவரே! வெகு காலம் சிரஞ்ஜீவியாய்ச் சுகித்திருப்பீராக. தேவரீரது திருமுகமாகிய தாமரைமலரிலிருந்து பெருகாநின்ற ஞானமாகிய அமிர்தத்தைப் பானஞ்செய்கின்ற அடியேங்கள்

ருதியென்பவள் எட்டுக்கைகளையும், விசித்திரமான வஸ்திரத்தையும், ஆயிரம் பூர்ணசந்திரர்களுக்குச் சமானமான முகத்தையு முடையவளும்; அநேக விதமான ஆபரணங்களை யணிந்தவள்; நாநாவிதமான கானங்களோடு சேர்ந்தவள்; எல்லாவற்றிற்குங் காரணமானவள்: அழருமுதலியவற்றுல் * அத்விதீயையாயும், புருஷஸம்பர்க்கத்தால் லக்ஷ்மீயையாயுமிருக்கிற அம்மாயாதேவியானவள் எந்தப்பிரமத்தினிடத்திலிருந்து எந்தக்காலத்தில் உண்டானளோ அந்தப்பிரமத்தினிடத்திலேயே அதேகாலத்தில் புருஷனும் உண்டானன். அவ்விருவரும் ஒன்றுசேர்ந்து யோசனைசெய்வதில் பிரியுள்ளவர்களாய் நம்மிருவரால் யாது செய்யப்படவேண்டுமென்று ஒருவரோடொருவர் யோசித்தார்கள். இவர்கள் இவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில் சற்குணத்தோடுகூடிய மங்களகரமான ஓர் வாக்கு "உங்களுக்குளளே நாசந்தேகத்தைப் போக்குவதற்கு நீங்களிருவருந் தவஞ் செய்யவேண்டும்" என்று—உண்டாக, அவ்வாக்கைக் கேட்ட பிரகிருதி புருடன் ஆகிய இருவரும் மிகவுங் கடினமான தவத்தைச் செய்தார்கள்.

நாரதரே! யோகமார்க்கத்தை முக்கியமாகக் கொண்ட அப் பிரகிருதி புருடனிருவரும், எவ்வளவோ கிலங்கழித்து அந்த யோகத்தியான மார்க்கத்தினின்றும் விழித்துக்கொண்டு, விழித்தவுடனே ஆ! ஆ! நம்மால் எவ்வளவுகாலந் தவஞ்செய்யப்பட்டதென்று ஆச்சரியப்பட்டார்கள். அந்த இருவருடைய யாக்கையினின்றும் நாநாவிதமான ஜலப்பெருக்குண்டாகிச் சகல வுலகங்களிலும் வியாபித்தது. எல்லையில்லாததும், பரிசுத்தமாத்திரத்திற் பாபத்தைப் போக்குவதுமான அந்த ஜலமானது பிரமரூபமாக ஆயிற்று. அப்பொழுது புருடனவன் மிகவும் இளைப்படைந்து அப் பிரகிருதியுடன் சேர்ந்து ஜலத்தில் அநேககாலம் பிரீதியுடனே நித்திரைசெய்தான். அம் மகாத்மாவான புருஷனுக்கு அந்த ஜலமயமுதல் நாராயண னென்னும் பெயர் வழங்கலாயிற்று. அந்தப் பிரகிருதிக்கு நாராயணி யென்னும் பெயர் ஸர்வஸம்மதமாய் வழங்கலாயிற்று. பிரகிருதிபுருடன் ஆகியிருவர் தவிர அக்காலத்தில் ஒன்றும் உண்டாகவில்லை. இப்பால் பரமாத்ம சம்பந்தமான தத்துவங்கள் உண்டாயின. பிரகிருதியினிடத்தில் மஹத்தும், மஹத்தினிடத்தில் (ஸத்வம் - தாமஸம் - இராஜஸமென்னும்) முக்குணங்களும், அம் முக்குணங்களினின்று (ஸ்பர்சம் - ஸ்பரிஸம் - ரூபம் - ரஸம் - கந்தமென்னும்) பஞ்சதன்மாத்திரைகளும், அப் பஞ்சதன்மாத்திரைகளிடமிருந்து (ஆகாஸம் - வாயு - தேயு - அப்பு - பிருதிவி யென்னும்) பஞ்சபூதங்களும், அப்பஞ்சபூதங்களிடத்தில் (வாக்கு - பாதம் - பாணி - பாயுரு - உபஸ்தமென்னும்) கர்மேந்திரியங்களும், (மெய்-வாய்-கண்-மூக்கு-செவி யென்னும்) ஞானேந்திரியங்களும், (மனம்-புத்தி-சித்தம்-அகங்கார மென்னும்) அந்தக் காரணங்களும் உண்டாயின. இத்தத்துவங்கட்கு இவ்வாறு எண்ணிக்கை

* அத்விதீயை - இரண்டற்றவள். அதாவது சமானமில்லாதவள்.

பிரதனுக்குத்தான்றியபோதிலும் துஷ்டர்களை நாசஞ்செய்வதற்காக, அதத்தில் தமோகுணப்பிரதனையும், நாராணனையுமுள்ள யாரொருவர் கண்களுக்குப்புலப்பட்டானோ அப்பேர்ப்பட்ட விஷ்ணுவை நான் பார்த்து மிகவுங் களிப்புற்றேன். அவரது மாயையால் மோகிதனான யான் அவ்விஷ்ணுவை நீயார்? சொல்லென்று கேட்டேன்.

நாரதரே! அவ்வாறுவினவிய என் மொழியைக் கேட்ட விஷ்ணு வானவர் என்னைநோக்கி, நல்லவிரதமுடையவனே! அடாகுழந்தாய்! ஸத்வ குணத்தால் வியாபிதனாகவும் உன்னை நிர்மாணம் செய்தவனாகவும் விஷ்ணு வாகவும் என்னையறி. இவ்விஷயம் உண்மையென்று புன்சிரிப்போடு கூறிய அவ்விஷ்ணுமூர்த்தியின் உல்லாசவார்த்தையைக்கேட்டு, அவரது மாயையால் மோகத்தையடைந்தவனும், மீண்டும் அவரைப் பயப்படுத்தி, எவ்வாறு குரு வானவன் சிஷ்யனை எளிதாய்ப்பேசவாரை அவ்வாறு சிருஷ்டித்தொழில் செய்கின்ற என்னை அடாகுழந்தாயென்று சொல்லுகிறாய். உன்னைமாத்திரம் இவ்வுலகங்களை உண்டுசெய்கின்றவனென்றும், மாயையை வியாபிக்கச்செய் கின்றவனென்றும், விஷ்ணுவென்றும், ஸமஸ்த உலகங்களையும் தன்னிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவனென்றும், சிருஷ்டி செய்கிறவனென்றும், இர ட்சிப்பவனென்றும், தாமரை மலர்போலிருக்கும் கண்களையுடையவனென் றும் என் மோகத்தால்சொல்லுகிறாய்? அக்காரணத்தைச் சீக்கிரத்திற்சொல் என்று வினவிய என்னை அவ்விஷ்ணுவும், காலை உலககாரணன்; என்னு டைய சரீரத்தினின்றும் நீ உண்டானாய்; இவ்வுலகங்களை உண்டுசெய்வதற் குண்டான என்னை மறந்துவிட்டாய்; இவ்விஷயத்தில் உன்பேரில் தப்பில்லை; இஃது என் மாயையாற் செய்யப்பட்ட காரியம். பிரமாவே! உண்மையாகச் சொல்லுகிறேன். முன் என்னால் உண்டுசெய்யப்பட்ட இருபத்துநான்கு தத்துவங்களும் என்னிடத்திலேயேயிருக்கின்றனவென்று, இவ்வாறுரைத்த நாராயணனுடைய வார்த்தையைக் கேட்டு, நான் கோபங்கொண்டு, நீயார்? உன்னை யுண்டுபண்ணினவன் ஒருவனிருக்கவேண்டும் என்று கூறிப் பிறகு மிகவுங் கோரமான யுத்தஞ்செய்தேன். இப்படி யுத்தஞ்செய்த எங்களிருவ ருடைய விவாதத்தைத் தீர்ப்பதற்காகவும் எங்களுக்கு ஞானத்தை யுற்ப விக்கச் செய்வதற்காகவும் எங்களிருவருக்கும் மத்தியில் அற்புதமான ஓர் சோதிலிங்கம் உண்டாயிற்று.

முனிசிரேஷ்டராகிய நாரதரே! பல்லாயிரங்கோடி ஜ்வாலைகளால் பூர ணமாயும், காலாக்கியின் முகத்திற்கு ஒத்ததாயும், காச மிருத்திக ளற்ற தாயும், ஒப்பற்றதாயும், வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாததாயும், பிரகாச மில்லாததாயும், உலகங்களை யுண்டுபண்ணத்தக்கதாயுமிருக்கிற அச்சோதி லிங்கத்தினது எண்ணிறந்த சுடர்களால்மோகத்தையடைந்த விஷ்ணுவான வர் என்னைப்பார்த்து, பிரமாவே! என் யுத்தஞ்செய்கிறாய்? இவ்விடத்தில் மூன்றாவது ஒருவன் வந்திருக்கிறான். நம்மிருவரது ஆயோதன மிருக்கட் டும். அக்கினிமயமாக வண்டாயிருக்கிற இச்சோதிலிங்கம் எவ்விடத்திலிரு

(4 - வியாதமுனிவருக்கு பிரமனும் விஷ்ணுவும் சோதியின் வடிவாய் முதற்தோன்றி நின்ற காட்சி.)

ந்து உண்டாயிற்றென்று காற்புறத்திலும் பார்ப்பீரம். அதற்காக நீ ஹம்ஸ வுருவை யெடுத்துக்கொண்டு வாயுவேகத்திற்குச் சமமான வேகத்துடன் அதிசிக்கிரத்தில் ஆகாயத்திற்செல்லவேண்டும். நானும் பராகவடிவமெடுத்துக் கொள்ளுகிறேன் என்று கூறி, விஷ்ணுவானவர் பன்றியாய் வடிவமாறினர். நாரதரே! நானும் அழகான சிறகுகளோடுகூடிய அன்னப்பறவையின் வடிவாகினேன். அதுமுதல் எனக்கு ஹம்ஸமென்றும் ஹம்ஸராஜனென்றும் பெயர்வழங்கலாயின. "ஹம்ஸ ஹம்ஸ" என்று—எவன் ஜபஞ் செய்கிறானே அவன் நானுக ஆய்விடுகிறன். அன்னவடிவடைந்த நான் வாயுவேக மனோவேகத்துடன் ஆகாயத்திற் பறக்தேன். நாராயணனது பத்தியோசனை நீளமும், பத்தியோசனை அகலமும், மேருபருவதம்போன்ற சரீரமும், குரூரகதந்திகளும், பெரியபற்களும், ஊழிக்கால சூரியனுக்குச் சமமான காந்தியும், நீளமானமூக்கும், பெருஞ்சப்தமும், சிறுகால்களும், பராக்கிரமமும், மனோவேகமுமுடைய சுவேதவராக வடிவமாய்ப் பாதாளலோகத்திற்குச்சென்றார். இவ்வாறுசென்ற விஷ்ணுவானவர் ஆயிரவருடமட்டும் பாதாளத்திற் சஞ்சரித்துத் தேடிக்கொண்டிருந்தார். அதுமுதல் எல்லா வுலகங்களுக்கும் சுவேதவராகற்பம் பிறந்தது.

சோதிலிங்கோற்பவவர்ணனமுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

மூன்றாவது

பிரம விஷ்ணுக்களுக்கு வரமளித்த அத்தியாயம்.

முனிகாமனிகளே! விஷ்ணுவும் பிரமாவும் முறையே வராக வடிவையும் ஹம்ஸ வடிவையும் எடுத்துக்கொண்டு பாதாளம் ஆகாயம் இவற்றிற் சஞ்சாரஞ் செய்யச் சென்றபிறகு நடந்த சங்கதிகளைச் சொல்லுகின்றேனென்று ஸூதர் சொல்லுகின்றார்.

பிரமதேவர் சொல்வது:—நாரதரே! விஷ்ணுவானவர் வெகுகாலஞ் சுற்றியும் அவ்விலிங்கத்தினது சிறிது காணத்தையும் அறியவில்லை. அவ்வளவுகாலம் ஆகாயத்திற்சென்ற நானும் சிறிதும் அறியவில்லை. அதன் மூலத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று விடாமுயற்சியோடு சென்ற நான் மிகவும் இளைப்படைந்து அவ்விலிங்க மிருந்த இடத்திலே வந்து சேர்ந்தேன். அதேமாதிரி நாராயணனும் மிகவும் இளைப்படைந்து பயந்த கண்களோடு வராகவடிவுடனேயேவந்து என்னுடனேசேர்ந்து இலிங்கஸ்வரூபியான சிவபகவானை அடிக்கடி நமஸ்காரஞ் செய்து அப்பகவானது மாயையால் மோகத்தையடைந்து இவரெனக்கு மேலானவரென்று நினைத்தார். இத்தன்மையதென்று எவனுக்கூடாததாயும், பெயரும் செயலும் அற்றதாயும், லிங்கமில்லாததாயும், பக்தர்களுக் கருள்செய்யும்படி லிங்கத்தின் தன்மையை யடைந்ததாயும், யோகிகளுக்கும் புலப்படாததாயுமுள்ள அந்தச் சோதிலிங்க வுருவத்தை

மனத்தை யுறுதிசெய்து நமஸ்கரித்த நாங்களிருவரும், கடவுளே! ஸமஸ்த மூலகாரணனே! தேவரீரதுதிருவுருவத்தை நாங்கள் அறியோம். தேவரீரது ஸ்வரூபம் எவ்வளவுபரப்பட்டதோ? தேவரீர் யாரோ? அப்படி அகோசரமான தேவரீரை நமஸ்காரஞ் செய்கிறோம் என்று, இவ்விதமாகத் தோத்திரஞ்செய்து ஆயிரவருடம் நமஸ்காரஞ் செய்துகொண்டிருந்த எங்களிருவருக்கும், மகாப்பிரகாசமாகவும் ஆனந்தமயமாகவும், *ப்ரணவமந்திரையின் லக்ஷணத்துடன் கூடியதாகவுமுள்ள ஓம் என்கிற சப்தரூபம் உண்டாயிற்று.

புத்திரனை நாரதரே! மகா சப்தத்துடன் சேர்ந்திருக்கிறதே இஃதென்ன வென்று யோசித்த நாராயணன் எதனிடத்திலிருந்து இந்தச் சப்தம் உண்டாயிற்றோ அந்தப் பொருளுக்கு நமஸ்காரம் என்று நமஸ்கரித்து, அவ்விலிங்கத்தினது தென்பாகத்தில் அழிவில்லாததும் முதலாவதுமான அகாரத்தையும், அதன் வடபாகத்தில் உகாரத்தையும் இவ்விரண்டிற்கும் நடுவில் மகாரத்தையும், உயரத்தில் "ஓம்" என்னுஞ் சப்தவிசேஷத்தையும் பார்த்தார். அவற்றுள் தெற்கிலிருந்த முதலெழுத்தாகிய அகாரம் சூரியமண்டலம் போலவும், வடக்கிலிருந்த இரண்டாவ தெழுத்தாகிய உகாரம் அக்கினியின் காந்தி போலவும், நடுவிலிருந்த மூன்றாவதெழுத்தாகிய மகாரம் சந்திரமண்டலம் போலவும் விளங்க, அதன்பேரில் ஸ்படிகக்கல் போன்ற காந்தியையுடையதான பரம்பொருளைத் தரிசித்தார்.

ஸிம்ஹஸ்ய ஊர்த்வமேஹமே தத்ரவஸ்துதாதரம் ।
ரூத்ரஸ்யவாமபாகஸ்ய உகாரம் ஹ்ருத்ஸரோஜகம் ।
உகாரம் யஜுதஸ்ரூவ நாஸாந்தம் தக்ஷஸ்ரோதி ॥

சாக்ஷர சொப்பன சுழுத்தி துரியமென்னும் நான்கிற்கும் மேம்பட்ட துரியாதிதமாயும் நிர்க்குணமாயும், மாயாஸம்பந்த விகார மில்லாததாயும், ஸஜாதீயும் விஜாதீய மென்னுந் தொந்தமற்றதாயும், இரண்டாவ தில்லாததாயும், உள்வெளி அற்றதாயும், ஆதிமத்தியாந்தரகிதமாயும், ஆனந்தத்திற்குக் காரணமான பரமானந்தமாயும், ஸத்யமாயும், அழிவில்லாததாயும், முக்கியமாயிருக்கிற ஏகாக்ஷரம் என்று சொல்லப்படுகிற பரப்பிரமத்தைப் பார்த்தார். [அகாரமென்னும் பெயரையுடைய பகவான் சிருஷ்டிபண்ணுகிறவர். உகாரமென்னும் பெயரையுடைய பர்க்கர் திதித்தொழில் செய்பவர். மகாரமென்னும் பெயரையுடைய பவர் அனுக்கிரகிப்பவர்.] தானும் அந்த விஷ்ணுவும் ஆச்சரியமுடைய மனதுடன் அச்சமயத்தில் மிகவும் ஆச்சரியகரமானதும், அழகுள்ளதும், ஐந்து திருமுகங்களுடையதும், பத்துத்திருக்கரங்களுடையதும், பச்சைக்கற்பூரம்போன்ற நிறமுடையதும், பலவிதமான காந்தியையும் பலவித ஆபரணங்களையும் கம்பீரத்தையும் பராக்கிரமத்தையும் மகா புருஷலக்ஷணத்தையும் சிறந்த உருவத்தையும் உடையதும், எல்லாவற்றையும் உண்டுசெய்யத் தக்கதுமாகிய சிவதத்துவதீதையை பார்த்து, உட

* ப்ரணவமாத்திரை என்றது மூன்று மாத்திரை.



5 - பிரமவிஷ்ணுக்களுக்குச் சிவபெருமான் ஜ்யோதிர்லிங்கத்தின் அடியும் முடியும் தேடுதற்கு அனுப்பி வைத்தது.

லை அவர்தான் எல்லாத் தேவர்களுக்கும் ரசனென்று தெரிந்துகொண்டு விதிப்படி வேதோக்தமான ஸத்யோஜாதாதி மந்திரங்களினுல் விஷ்ணுவானவர் அவரைத் தோத்திரஞ் செய்தார்; நானும் அப்படியே தோத்திரஞ்செய்தேன். எங்கள் இருவருடைய தோத்திரங்களாற் சந்தோஷப்பட்ட மாயாஸம்பந்த மற்றவரான மஹேசுவரன் திவ்விய * ஸ்படிகமயமான ரூபத்தையடைந்தவராய் அந்த ஜ்யோதிர்லிங்கத்தில் பெருஞ்சிரிப்புடன் விளங்கினர்.

ஸகாரஸ்ய ஶிகாயுக்ம ஸஹிதம் தீர்க்கஸம்யுதம்।
ஐகாரேணைகபாதம்தத் தீகாரம்வாமகர்ணகம்॥ (๒๒)
உகாரஞ்சைகபாதம்ஸ்யாத் ஶிகாரம்வாமகம்யுதம்।
ஊகாரஞ்சைகபாதம்தத் கவிரோஷ்டம்வராஸனம்॥ (๒๓)
வாமேகவிரஸம்யுக்தம் ணஸ்ய நாஸாவதிஸ்ருதம்।
ஸகாரஸ்ய ஶிகாயுக்தம் வைகாரேயரஸம்விதம்॥ (๒๔)
ஒகாரஸ்யதயோஸ்தானம் ஔதவஜ்ஜீயமக்ரஜ।
ஸம் கரூபதரம்நீதஸ்ய தெவஷ்டவஸ்ய ஶீர்ஷகம்॥ (๒๕)
கரிவஜ்ராகரூபாணஸ்ய வஜ்ரஹஸ்தாபுஜத்வயம்।
தரிவஜ்ராகரூபாணஸ்ய வஜ்ரஹஸ்தாஸ்ய வாஸகம்॥ (๒๖)
டரிவஜ்ராகரூபஸ்ய காரிவஜ்ராகரூபகயா।
வகாரஶிகரூபஸ்ய மகாரஸ்யவாஸுகிரயுதம்॥ (๒๗)
யகாரஸ்யவாஸுதம்தத் ஸகாரஸ்யஸ்யஉயுதம்।
ஶகாரஸ்யஸுயஸ்யாஸ்ய ஶஸ்யாதிவஸ்ய யொநிகம்॥ (๒๘)
யகாரஸ்திஷகாரஸ்ய தம் விஷ்ணுவெஷ்டயர்தயம்।
ஸகாரஸ்தாதிரூபஸ்ய ஹகாரஸ்தாஸ்ய உயுதம்॥ (๒๙)
ஸவயம் ஸுஷியாரூபெ ஸமாணஸ்ய யுகாணர்தரம்॥

அகாரம் அரைருடைய சிரம், ஆகாரம் நெற்றி, இகாரம் வலதுகண், ஈகாரம் இடதுகண், உகாரம் வலதுசெவி, ஊகாரம் இடதுசெவி, ரூகாரம் வலதுகன்னம், ரூகாரம் இடதுகன்னம், லுகாரம் வலதுநாசி, லூகாரம் இடதுநாசி, ஏகாரம் மேலுதடு, ஐகாரம் கீழுதடு, ஓகார ஔகாரங்கள் முறையே மேலுங் கீழுமுள்ள பல்வரிசைகள். அம் அர்தம் பெருமானுடைய வலதுதாடை, அ: இடதுதாடை, கவமவங என்னும் பஞ்சாக்ஷரங்கள் வலதுபக்கத்துக்கரங்கள், சஷஜஞ என்னும் பஞ்சாக்ஷரங்கள் இடதுபக்கத்துக்கரங்கள், டொபயண என்னும் பஞ்சாக்ஷரங்கள் வலதுகால், தழஉயந என்னும் பஞ்சாக்ஷரங்கள் இடதுகால், பகாரம் வயிறு, ஹகாரம் வலதுபக்கம், ஷகாரம் இடதுபக்கம், ஸகாரம் தோள், மகாரம் மகாயோகியும் மகாதேவனுமாகிய சம்புவினுடைய மனது, யரலவஶஷஸ (என்னும் எழுத்துக்கள்) முறையே ரஸம், ரக்தம், மாம்சம், மேதஸ், ஏலும்பு,

* ஸ்படிகமயமான ரூபம் - ஐம்பத்தோரக்ஷரங்களின் வடிவம்.

மஜ்ஜை, சுக்கிலம் என்னும் ஸப்ததாதுக்கள், வகாரம் தொப்புள், ஹகாரம் காதம் என்றுசொல்லப்படுகிறது, இப்படி குணசொரூபியாயும்நீர்க்குவனாயு மிருக்கிறவனுடைய ரூபமானது ஸப்தமயமாம். அத்தகைய பகவானென்னு டன்கூட விஷ்ணுவும் பார்த்து, பிரபுவே! எங்கள்விஷயத்தில் கிருபை செய்ய வேண்டும் என்று விசேஷமாய் வேண்டிக்கொள்ள, எங்கள் பிரார்த்தனைக் கிரங்கிஅப்பொழுது தபஸுள்ளவனுயிருக்கிறேன் என்று திருவாய்மலர்ந்தரு ளியதைக் கேட்டு, நாங்களிருவரும், மகாதேவனே! இறைவராகிய தேவரீர் பிரசன்னமானபக்ஷத்தில் எங்களுக்கிஷ்டமான வரத்தைக் கொடுக்கவேண்டு மென, சிவபெருமான் - சிருஷ்டிசெய்பவன் பிரமன்; சிருஷ்டித்தவற்றைக் காப்பவன் விஷ்ணு; சங்காரிப்பவன் உருத்திரன்; இத்தப் பிரகிருதிதான் தேவ ஸம்பந்தமானது. இந்தப் பிரகிருதியில் பிரமர்ணி யென்ற பெயராயுடைய சக்தி பிரமனையடையப்போகிறது. இன்னும் இந்தப் பிரகிருதியில் லக்ஷ்மி யின் பெயரால் ஒரு சக்தி விஷ்ணுவையடையப்போகிறது. காளியென்னும் பெயராயுடைய சக்தி என் அமிசமான உருத்திரனை அடைவாள். அந்தக் காளியானவள் சிலகாரியார்த்தமாக ஜோதிரூபமாக வண்டாவாள். இதனால் சுபகரமான தேவர்கள் மூவரென்றும், சுபகரமான சக்திகள் மூவரென்றுஞ் சொல்லப்படுவர். அந்தமூவரும் என்னுடைய கட்டளைப்படி சேர்ந்து தம்மு சக்தியருடன் கலந்து சிருஷ்டிதிதிசங்காரங்களைச் செய்வர் என்று திருவாய் மலர்ந்தருளின சிவபெருமானை விஷ்ணுமூர்த்தியானவர் நோக்கி மீண்டும் விண்ணப்பஞ் செய்கின்றார்.

சுவாமீ! தேவரீராற் சொல்லப்பட்டவற்றை நாங்கள் ஏற்றுக்கொ ண்டு செய்கின்றோமாயினும் விஞ்ஞாபனஞ் செய்துகொள்ளவேண்டியதொன் றுண்டு. அதையுந் தேவரீரே செய்யவேண்டியவர் என்றார். அவ்வேண்டு கோளை யங்கீகரித்த பெருமான் "ஓவிஷ்ணுவே! உன் விசுவாசத்தைப்பற்றி மிகவும் இஷ்டத்தை உண்டுபண்ணுகிற இரட்சித்தற்றொழிலாகிய ஒரு பதவி யைக்கொடுக்கிறேன்" என்றுகூறினர். உலகங்களுக்குச் சுகத்தையுண்டுசெய் கிற சங்கரபகவானைக்குறித்து விஷ்ணுவானவர் தேவதேவா! நமஸ்காரம்: எனக்குப் பதவிமுதலியன வேண்டாம். தத்வோபதேசம் செய்யவேண்டும். கல்விரதமே! தியானிக்கத்தக்கதும், சேவிக்கத்தக்கதும், பூஜிக்கத்தக்கதுமா யிருக்கிற ஒன்றை யுபதேசிக்கவேண்டும். எதைச் செய்தால் எல்லா வல்ல மையும் உண்டாகிச் சந்தேகமறுமோ அப்படிப்பட்டதை யுபதேசிக்கவேண் டும் என்று கேட்டார். அதற்குச் சிவபெருமானர் பரதத்வமாயும் பிரணவ ஸ்வரூபமாயும், மங்களகரமாயுமிருக்கிற காதரூபத்தை அருளினர். அவரரு ளால் அந்தாதரூபத்தை அருளப்பெற்று அப்பரதத்வத்தை நன்முயற்சி பிறகு அந்த காதரூபத்தையுந் தரிசித்தார். அதுஷ்டிக்கும் உபாயத்தையும் அந்த மந்திரத்தின் உண்மையையும் சுபமான வழிகளையும் அறிந்துகொண்டு பகவானுகிய விஷ்ணுவானவர் மறுபடி நமஸ்கரித்து காதரூபமான பரம்பொ ருளே மேலேபார்த்தார். ஓங்காரத்தைக்காரணமாகவுடையதும் ஐந்து கலைக

ளோடு கூடியதும் "ஓம் தத்வமசி" என்று சொல்லப்பட்டதுமான மந்திரமா னது சிவசம்பந்தமான மஹாவாக்கியமென்று சொல்லப்படுகிறது. அது சுத்த ஸ்படிகநிறமாயும், மிக மேம்பட்டதாயும், எல்லா அபிஷ்டங்களையுங் கொடுக்கத்தக்கதாயும், ஞானஸ்வரூபமாயும், மந்திரரூபமாயும் உள்ளது. இன்னும் விசேடமான காயத்ரி ரூபத்தோடு கூடியதாயும், இருபத்துநான்கு எழுத்துக்களோடு விளங்குவதாயும், சருமார்த்தகாமமோகஷங்களாகிய சதுர்விதபுருஷார்த்தங்களைக் கொடுப்பதாயும், மேற்பட்ட மிருத்யுஞ்சயம் என்றும், பஞ்சாக்ஷரம் என்றும், சிந்தாமணி என்றும், தக்ஷிணமூர்த்திமந்திரம் என்றுஞ் சொல்லப்பட்ட இவ்வைந்து மந்திரங்களையும் விஷ்ணுமூர்த்தியான வர் அடைந்து ஜபித்தார்.

பிரமவிஷ்ணுக்களுக்குவரமளித்த அத்தியாயம்
முற்றிற்று.

நான்காவது

சிவலிங்க மகிமையுரைத்த அத்தியாயம்.

பிரமதேவர் சொல்லுகின்றார்:— தோத்திரஞ் செய்துகொண்டும் ஜபஞ் செய்துகொண்டு மிருக்கும் நாராயணனுக்கு முன்னே சிவபெரு மான் தரிசனங்கொடுத்துப் பிரசன்னராகி அந்த விஷ்ணுவுக்குச் சுவாச மார்க்கமாக வேதத்தைக் கொடுத்தருளினர்; அவ்வேதத்தில் அநேக மந் திரங்களும் அநுஷ்டானங்களு மிருந்தன. கௌரிகியே! ஸமஸ்த வித்தைகளு க்கும் ஸ்தானமாகவும் பிரபுவாகவுமுள்ள சிவபெருமானிடத்திலிருந்து வந்த அந்த வேதத்தை வாங்கிக்கொண்டு அவ்விஷ்ணுமூர்த்தியும் அதைபோல எனக்குச் சுவாச மார்க்கமாகக் கொடுத்தார். ஒருவராலும் உணர்ப்படாத தமது சிவதத்துவஞானத்தைச் சிரேஷ்டராகிய அந்தச்சிவபெருமான் நாரா யணனுக்குக் கொடுக்க, நாராயணன் மிருந்தயவுடன் அந்தச் சிவதத்துவ ஞானத்தையும் எனக்குக் கொடுத்தார். நாராயணன் எனக்குச் சிவபெருமா னால் கொடுக்கப்பட்ட வேதத்தைச் சாங்கோபாங்கமாக அறிந்துகொண்டு பிறகு சிவபெருமானை நோக்கி, பிரபுவே! தேவரீர் எவ்விதத்தில் சந்தோ ஷமடைபவர்? எவ்விதமாக என்னால் தியானிக்கத்தக்கவர்? அடியேன் தியா னஞ் செய்யத்தக்கது யாது? சங்கரபகவானுகிய தேவரீரை மனிதன் எப்படி யடைவான்? தேவதேவா! கேட்போரது பாபங்களை யெல்லாம் பரிகரிக் கத்தக்க இந்தச் சிவதத்துவ ஞானத்தைத் தேவரீர் அடியேன் விஷயத்தில் தயவுகொண்டு உபதேசிக்கவேண்டும் என்று கூறிய நாராயணனுடைய வார் த்தையைக் கேட்டு, சிவபெருமான் தயாமூர்த்தியாய் விண்ணோவே! சாக்ர தையாகக் கேளும் என்று சொல்லத்தொடங்கினர். விஷ்ணுவே! இப்பொ ழுது நாம் எப்படிப் பிரத்தியக்ஷமாக இருக்கின்றோமோ அப்படியே பிரத் தியக்ஷமாக இருப்பதாக எண்ணிக்கொண்டு இந்த இலிங்கத்தை எப்பொழு

தும் பூசிக்கவேண்டியது. அப்படிப் பூசித்தால் நாம் மனமகிழ்ச்சி யுற்றுச் சகல பிணிகளையும், சகலமான மனோபிஷ்டங்களையும் அநுக்கிரகிப்போம். எப்பொழுது ஒருவர்மனத்தில் துக்கமுண்டாகிறதோ அப்பொழுது இலிங்கமூர்த்தியைப் பூசித்தால் அத்தத் துக்கம் ஒழிந்துபோகும். இந்தப் பிரமன் ஏவின்றிச் சிருஷ்டி காரியஞ் செய்யவேண்டும். நீ பிராணிகளை இரக்ஷிக்கவேண்டும். நீங்கள் எப்பொழுதும் எம்மிடத்தில் மிகுந்த பக்தியைச் செய்யுங்கள் என்று, தம்மை எவ்விதப் பூஜை செய்வதால் சர்வாபீஷ்டங்களையும் கொடுப்போரோ அகலபாபங்களும் நிவர்த்தியாமோ அப்படிப்பட்ட பூஜாவிதியையும் விஷ்ணுவுக்கு உணர்த்துவதாகக் கூறியருளினர். பிறகு, சேதனசேதனமாயும், லோகரூபமாயும், எகல தேவர்களுக்கும் பிரபுவாயும், ருக்வேத சாமவேத யசுர்வேத சுரூபமாயும், சிருஷ்டி திதி சங்கார கர்த்தாவாயும், ஸர்வாபீஷ்டங்களையுங் கொடுக்க வல்லவராயும் உள்ள சிவபெருமானை விஷ்ணு முதலான தேவர்கள் மறுபடியும் துதிசெய்தார்.

வகாரரூபாயநமோவாய சுகாராயாதிரூபிணே ।
உகாரரூபாயநமோவாய விஶ்வரூபாயதேநமஃ ॥ (எ)
தகாரரூபாயகாராய ஸிவாயவரதாதிநே ।
ஜகாரஜகதாவ்யாய நமஸ்தேஜகதாத்மனே ॥ (கஅ)
நிர்குணாயநிரீஹாய ஸுத்தரூபாயதேநமஃ ।
ஜ்ஞானாயஜ்ஞானமய்யாய நமஸ்தேவரதாதிநே ॥ (கஆ)
நிரஞ்ஜனாயாமலாய நமஸ்தேஸ்ஹஜரூபிணே ।
கவர்கத்ருதநாதாய நமோமாஹேஸ்வராணாயச ॥ (கஇ)
வ்ருஷாகவயேஸுவாஹாய கரிதாருஹரிதாருநமோநமஃ ।
ஸ்வாயஸிவரூபாய வ்யாபிநேவ்யாபரூபிணே ॥ (கஈ)
நமோநீயாநாவதயே மீம்நிதேஸிம்நரூபிணே ।
தேஜஸேதேஜஸாஹ்யாதேசுர நமஸ்தேஸுவரூபிணே ॥ (கஉ)
ஸாஸ்தாயவாஸிஷ்டாய வாஸிஷ்டாயயோமிதே ।
ஸ்ரீதாயஸாரதேயாய சுவயோஸுரூபவபுஷே ॥ (கஊ)
சூதாதிபவரூபேதரூபாய ஸுரிதேவிஷ்டவே நமஃ ।
தீக்ஷாரூபாயநமஸ்தேரூபாய வபுஷேஜ்ஞாயநமோநமஃ ॥ ॥ (கஎ)
வீரரூபேதிதேவஸ்தேசுர ஸுஜனாவஸ்திதாயஸே ।
ஜகந்நிவாதாயவரபவேணாய வபுஷேபாவவரணாயதே ॥ (கஏ)
யஜ்ஞேசுரூபிணேயாஜ்யாவயே ரூபவயேயஜ்ஞோத்தாரே ।
வயாதிரூபஸ்தேனமோஸ்தவிஸ்வரூபாயதேநமோ ॥ (கஐ)

வகாரரூபமாகியும், பிரபுவாகியும், அகாரரூபமாகியும், ஞானரூபமாகியும், உகாரரூபமாகியும், ஆதிதேவனாகியும், வித்யாஸ்வரூபமுடையவராகியும் இருக்கும் தேவரீருக்கு நமஸ்காரம். முன்றுவதான மகாரரூபமாகியும், சிவமூர்த்தியாகியும், சிரேஷ்டமானஸ்வரூபத்தை யுடையவராகியும், ஜலரூபியாகியும், ஜலஜந்துக்களை ரக்ஷிப்பவராகியும், ஜலத்தில் நித்திரை செய்பவராகியும் இருக்கிற தேவரீருக்கு நமஸ்காரம். சித்ரூபமாகியும், பிராணிரூபமாகியும், ஸ்மிருதிரூபமாகியுமுள்ள தேவரீருக்கு நமஸ்காரம். ஞானரூபமாகியும், ஞானத்தினால் அடையத்தக்கவராகியும், உயர்ந்த ரூபமான தேவரீருக்கு நமஸ்காரம். சுவர்ணமயமான கைகளை யுடையவரும், சுவர்ணமயமான இந்திரியத்தை யுடையவருமாயிருக்கிற தேவரீருக்கு வந்தனம். ஜடையின் ஸமூகத்தைத் தரித்தவரும், யானையின் தோலைப் போர்வையாக வுடையவருமாயிருக்கிற தேவரீருக்கு வந்தனம். விஷ்ணுரூபியாயும், சங்காரகர்த்தாவாயும், இரக்ஷணை கர்த்தாவாயும், சிருஷ்டி கர்த்தாவாயுமிருக்கிற தேவரீருக்கு வந்தனம். மங்கள ஸ்வரூபியாயும், மங்களத்தை உண்டு செய்பவராயும், பரமகாய சரீரியாயும், மகாபத்ம முதலான நிதிகளுக்கெல்லாம் பதியாயும், லிங்காகாரமாயும், லிங்கஸ்வரூபத்தை யுடையவராயு மிருக்கிற தேவரீருக்கு வந்தனம். தேஜோரூபியாயும் தேஜஸுகளுக்குப் பதியாயும், ஸகல ஸ்வரூபியாயுமிருக்கிற தேவரீருக்கு வந்தனம். நித்தராயும், ஸகலருக்குஞ் சிரேஷ்டராயும், ஜலத்தை உள்ளேயுடையவராயும், தவத்தில் ஆசக்தராயும் பிரமவிஷ்ணுவான எங்களுக்குச் சாமவேதத்தைத் தினமோபதேசித்தவராயும், பரப்பிரமஸ்வரூபியாயும், பரமாத்மாவாயும், நிஷ்களரூபியாயும், ஸகலத்திலும் வியாபித்தவராயும், பிரபுவாயுமிருக்கிற தேவரீருக்கு வந்தனம். ஓங்கார ரூபமாயிருக்கிற தேவரீருக்கு வந்தனம். ஸ்தலமுருதெரிந்த தேவரீருக்கு வந்தனம் வந்தனம்—என்றிப்படி நாராயணமூர்த்தி பிரமதேவருடன் கூடிக்கொண்டு சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து கைகட்டி வாய்பொத்தி நின்றார். [மிகவும் புராணிய ஸ்வரூபமாயும் சிரேஷ்டமாயுமிருக்கிற இந்தத் துதியை எவன் படிக்கிறானோ-அல்லதுகேட்கிறானோ-அல்லது சிரேஷ்டரான பிராமணர்களுக்கேட்கச் செய்கிறானோ அவன் மகா பாபியாயிருந்தபோதிலும் பிரமபதவியை யடைவான். சகலபாபங்களும் போவதற்கு நாராயணனால் செய்யப்பட்ட இச் சிவன்தோத்திரத்தைச் சொல்லித் துதிப்பவனுக்கு வளர்பிறைச்சந்திரன்போல மங்களம் வளரும்.] என்று, ஸூதமுனிவர் சௌநகாதியரான ரிஷிகளை நோக்கிச் சொல்லுகின்றார். விஷ்ணுவானவர் இவ்வாறு துதிசெய்தபின்னர் சிவபெருமான் சிரேஷ்டமான தேவர்களே! நாம் இத்தத்தோத்திரத்தால் மனங்களித்தோம். சிவமூர்த்தியாகிய எம்மைப் பாருங்கள். பயத்தை விட்டுவிடுங்கள். எமது விருப்பத்தின்படி மகா பலத்தையுடையவர்களான நீங்கள் உண்டாக்கப்பட்டீர்கள். எம்முடைய விருப்பத்தால் எமது உருவம் மூன்றுகப் பிரிக்கப்பட்டது.

சுயம்பிதஉகிணைவாஸ்ரூ ஸுரஜாலொகவிதாகமஃ ।
வாகவாஸ்ரூவுகவிகவிஷ்ணு விஸ்ரூதாமஜதுவெபரஃ ॥ (ஈ0)

உலகங்களுக்குப் பிதாமக ஸ்வரூபியான இந்தப் பிரமன் என் வலதுபக்கத்திலும், விஷ்ணு என் இடதுபக்கத்திலும் விசுவாத்மனை உருத்

தீரன் என் இதயத்திலும் ஆக இப்படி மூன்றுஅவதாரமாக விருக்கிறீர்கள். நாம் உங்களிடத்தில் மிகுந்த அன்புடைமையால் நீங்கள் எதைச்சிந்தித்தாலும் அதைக் கொடுப்போம்! என்றிவ்வாறு தயாநிதிபரான சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளி, என்னையும் விஷ்ணுவையும் மிகவும் மங்களத்தைக்கொடுக்கும் திருக்கரத்தால் மிக்க அன்புடன்பரிசித்தார். அதன்பின்பு நாராயணன் சந்தோஷமிகுந்து லிங்கரூபமாயும் லிங்கஏர்ஜிதரூபமிருக்கின்ற சிவபெருமானை வந்தனஞ்செய்து, கடவுளே! தேவரீருக்கு எங்களிடத்தில் பிரியமுண்டானால் நாங்கள் விரும்பியவரங்களைக் கொடுக்கும்பாகத்தில் தேவரீரிடத்திலேயே ஸ்திரமாயும் வேறொருவரை யடையாமலும் மிருக்கும் பக்தி எங்களுக்குண்டாகவேண்டுமென்று கேட்டார். மகரிஷிகளே! பிரபுவான சிவபெருமான் அதற்கு நீங்கள் காரியார்த்தமாக எம்மால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாகையால் உங்களுக்குக் கொடுக்கக்கூடாத வரம் ஒன்றுமில்லை என்றுகூற, நாராயணன் தன் முழங்காலிப் பூமியில் ஊன்றிக்கொண்டு மீண்டும் நமஸ்கரித்து ஸகல தேவர்கட்கும் தேவனான சிவபெருமானே! எங்களுக்குள் ஒருவித விவாதமிருக்கின்றது. அதனைத் தீர்ப்பதற்காகவே தேவரீர் இங்கெழுந் தருளியபடியால் அதனைச்சமனஞ் செய்யவேண்டும் என்று கூறிக் கைகுவித்துச் சித்தாற்பணித்து தியானஞ் செய்துகொண்டிருந்தார். சிவபெருமான் விஷ்ணுவின் வார்த்தையைக் கேட்டு, மீண்டும் நாராயணனை நோக்கித் திருவாய்மலர்ந்தருளுகின்றார். விண்டுவே! உனக்கும் இந்தப் பிரம்மனுக்கும் என்னுடைய ஆஜ்ஞைபால் எம்மிடத்தில் எப்பொழுதும் நீங்காத திடபக்தியிருக்கக்கடவது. நீங்கள் * பார்த்திவலிங்க முதலான மூர்த்தியையும் பூசிக்கவேண்டியது. நீங்கள் விதிமுறைப்படி செய்யும்பூஜைபால் எம்மைப் பூஜி, து நமஸ்கரிக்கக்கடவீர்கள். அப்பூஜைபால் சுகத்தையடைவீர்கள் என்று திருவாய்மலர்ந்தருளி, ஸகலகிலேஸங்களையுஞ் சங்கரிக்கும் சிவபெருமான் பூசாக்கிரமத்தை முறைப்படி உபதேசஞ்செய்து இருவருக்கும் இஷ்டமான அநேகவரங்களைக்கொடுத்து, பிரமனே! நீ எம்முடைய ஆக்ஞைபால் ஸ்ருஷ்டித்தொழில் செய்வாயாக. விஷ்ணுவே! நீ அசையும் பொருள் அசையாப்பொருள்களை இரட்சிப்பாயாக. நிஷ்களமாகிய நாம் சிருஷ்டி திதி சங்காரமென்னும் மூத்தொழில் கடத்தவேண்டிப் பிரமன் விண்டு உருத்திரனென்னும் மூன்றுகப் பிரிந்தோமாதலின், அந்த உருத்திரமூர்த்தி எம்முடைய அம்சத்தைக்காட்டிலும் சாமர்த்தியக்குறைவாயாகப்போகிறதில்லை. பூஜைமுதலானதும் எம்மிருவர்க்கு மொன்றே. (எவ்வினில்) ஜோதிகளுக்கு எப்படி ஜலமுதலான ஸம்பந்தமிருந்தபோதிலும் நாசங்கிடையாதோ அதுபோல நிர்க்குணமான எமக்கு ஸம்பந்தமிருக்கையிலும் அதனால் பந்தனம் கிடையாது. உருத்திர ரூபமும் சிவரூபமேயாம். அதுவிஷயத்தில் வேறுக எண்ணவேண்டாம். சுவர்ணத்திற்கு வேறே சுவர்ணமென்கிற பெயர் எப்படி வரவேமாட்டாதோ, ஒரு வஸ்து

* பார்த்திவம் - பிருதிவியாற் செய்யப்படுவது.

(1 - ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை தூக்கி வருதல்)

(2 - ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை தூக்கி வருதல்)

114511

M91

1101
274.551

வக்கு அலங்காரஞ் செய்தால் வேலைருருப்பர் எப்படி வரவேமாட்டாரோ, ஒரு மண்கட்டியைப் பாத்திரமாகச் செய்தால் மண்கட்டி வேறு, பாத்திரம் வேறு என்கிற வன்துபேதம் எப்படி வரவேமாட்டாதோ, அப்படியென்று நினைத்து நீங்கள் உருத்திரனுக்கும் எம்முக்கும் வித்தியாச மெண்ணக்கூடாது. எம்முடைய சிவசொருபம் வாள்தவத்தில்லாலோர்க்கும்பரார்க்கத்தகுந்தது. விஷ்ணுவே! பிரமனும் நீயும் உருத்திரனும் எம்முடைய வடிவமைப்பில் வேறன்று. அப்படியன்றிப் பேதமாக நினைப்போர் எம்மைத் தரிசிக்கமாட்டார்கள். ஐந்தியமாயும் ஞானரூபமாயும் நாசமற்றதாயும் அநாதியாயு மிருக்கிற எம்முடைய சிவருபமே இவற்றிற்கெல்லாம் ஆதிகாரணம். ஏப்பொழுதும் தியானிக்கத்தக்கதான இச்சிவரூபத்தையே யடைய ஆசைகொண்டிருக்கிற நீங்கள் இச்சிவதத்துவத்தின் மேன்மையை நான் சொல்கிறவண்ணம் அறிந்துகொள்ளவேண்டும். நீங்கள் சிவரூபத்திலிருந்து உற்பவித்தவர்கள். இச்சிவரூபமோ தானே உற்பத்தியாயிருக்கிறது. பிரகிருதியினிருந்து உண்டானதன்று. உருத்திரமூர்த்தி உண்டாவதற்கு எமது ஆஜ்ஞையே காரணம். நாம் ஒருவரே உருத்திரனை அனுசரிக்கப்போகிறோம்.

விஷ்ணுவே! பிரமனே! நீங்கள் எல்லோரும் ஒரேமாதிரி விளங்கும் இச்சிவரூபத்தைப் பூஜைசெய்யவேண்டும். இச்சிவரூபத்தி லிருந்து சிவாம்ஸமாக இலக்குமியும், சரசுவதியும், அவதரிப்பார்கள். இச்சிவரூபமே காரிய நிமித்தமாகச் சிறந்த வேறு ரூபத்தை யடைந்து காளி யென்னும் பெயரால் அவதரிக்கப்போகிறது நிச்சயம். இவர்களுன் விஷ்ணுவே! நீ இலக்குமியைத் துணைகொண்டு இரகஸித்தலாகிய தொழிலைச் செய்யவேண்டியது. பிரமாவே! நீ ஸரஸ்வதியைத் துணைகொண்டு எப்பொழுதும் திருஷ்டி காரியத்தைச் செய்யவேண்டியது. உருத்திரன் மகாகாளியைக் கூடிக்கொண்டு சங்காரத்தொழிலைச் செய்வான். மிகுந்த அறிவுடன் கூடியிருக்கிற நீங்கள் உலகங்களுக்கு இவ்விடங்களே உண்டுபண்ணுகிறவர்களாய், பிராமணர்-க்ஷத்திரியர்-வைசியர் - சூத்திரரென்னும் நான்கு வருணங்களாகவும், பிரமசரியம் - க்ருஹஸ்தம்-வானப்பிரஸ்தம்-ஸந்யாஸ மென்னும் நான்கு ஆச்ரமங்களாகவுங் கூடியிருக்கவும், இன்னும் பல காரியங்களுடன் கூடியிருக்கவுஞ்செய்து சுகத்தை யடையுங்கள். விஷ்ணுவே! நீ நம்முடைய சிறந்த அன்பனுகையால் உன்னுடைய இருபத்தில் நாம் இடைவிடாது இருப்போம் நீங்களிருவரும் வெள்ளியாலாவது இரத்தினத்தாலாவது சுவர்ணத்தாலாவது பிருதிவியாலாவது விளங்கும் இலிங்கரூபத்தை, உலகங்களுக்குச் சுகத்தை உண்டுசெய்யவும், உம்மைப்போல உலகத்தார் பூஜிக்கவும், எக்காலத்திலும் இடைவிடாத அன்புடன் பூஜைசெய்யுங்கள். இச்சிவபூஜாநியமனத்திற்கு காலன் அதிபதியாயிருக்கின்றானே அவனே அடையமாட்டோம் என்று திருவாய்மலர்ந்தருளி அவ்விடத்திலேயே அந்தர்த்தானமாயினர். அது முதற்கொண்டு நாராயணனும் பிரமதேவனும் லிங்கபூசை செய்துதொண்டு சிவபக்தி யுடையவராயிருந்தார்கள். இலிங்கமே சரஸ்வதி; லிங்கமே மகா

லக்ஷ்மி; லிங்கமே மஹாகாளி; லிங்கமே பிரமாதிதேவர்கள்; லிங்கமே சிவபெருமான். [எவன் சிவலிங்கத்தின் பிரபாவத்தைச் சிவசந்நிதியில் வாசிக்கின்றானோ அவனையும் பலனை என்னுற் சொல்லமுடியாது.] என்று ஸூதமுனிவர் சௌனகாதியாகிகளைப்பார்த்துச் சொன்னர்.

சிவலிங்க மகிமையுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

ஐந்தாவது

சிருஷ்டிநிரூபணமுரைத்த அத்தியாயம்.

மகாபாக்கியசாலியாகிய ஸூதமுனிவரே! எந்த லிங்கமூர்த்தத்தின் வரலாற்றைக் கேட்பதனால் துக்கத்திற்கு காரமுண்டாகுமோ அந்த லிங்கமூர்த்தத்தின் பிரபாவத்தைக் கேட்டோம். சிவபெருமான் ஜோதிவடிவாயிருந்து அந்தர்த்தானமானபின்பு என்னவண்டாயிற்றோ அதையும், சிவபெருமானது பிரபாவத்தையும், அவர் உலகசிருஷ்டி செய்த வகையையும் தேவரீர் விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்று சௌனகாதிமுனிவர்கள் கேட்க ஸூதமுனிவர் சொல்லுகின்றார்:—முனிவர்களே! நீங்கள் நன்றாய் விளவினீர்கள். சிவபெருமான் அந்தர்த்தானமானபின்பு யாது நிகழ்ந்ததோ அதை முன்கேட்டபடியே இப்பொழுது சுருக்கிச்சொல்லுகின்றேன். பிரபுவான சிவபெருமான் அந்தர்த்தானமானபிறகு பிரமதேவன் அன்னவடிவத்தையும் விஷ்ணு வராகவடிவத்தையும் எடுத்துக்கொண்டு செய்த காரியங்களைச் சொல்லுகிறேனென்று கூறிய ஸூதமுனிவரை நோக்கி சௌனகாதியாகிகள் அடியேங்கட்கு ஓர் சந்தேகமுள்ளது. அதனை முன்னே நீக்கவேண்டும். அதாவது, பிரமாவும் விஷ்ணுவும் முறையே அன்னவடிவத்தையும் வராகவடிவத்தையும் என் எடுத்துக்கொண்டார்கள்? இவ்வடிவேற்றதற்குக் காரணம் யாது? எனக்கேட்க, ஸூதர் சொல்லுகின்றார்:—அன்னமானது ஆகாயத்தில் பிரகாசமற்பறக்கும்; அன்னத்திற்குப் பாலையும் நீரையும் வைத்தால் அது நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் விவேகமுடையது; ஆதலின் பிரமன் ஞானம் அஞ்ஞானமென்னும் இவ்விரண்டினையுந் தனித்தனியுணர்ந்த அன்னவடிவை வற்றனன். ஆயினும் ஞானத்தால் விவேகத்தை யடையாமல் இளைப்படைந்து திரும்பினன். வராகவடிவமோ வராககல்பமென்னும் கல்பத்திற்காக உதித்தது. விஷ்ணுவானவர் எந்தத்தினத்தில் வராகவருவெடுத்தாரோ அந்தத் தினமுதல் வராககல்பமெனப்படும். அன்னரூபத்தையும் வராகவுருவத்தையுமடைந்த பிரமவிஷ்ணுக்களின் விஷயத்தில் ஆச்சரியப்படவேண்டுவதில்லை. ஏனெனில், சிவபெருமானுக்கு எப்படி விருப்பமோ அப்படியே அவ்விருவரும் வடிவமேற்றனர். நாசரகிகமாயும் நிஷ்களமாயும் குணரஹிதமாயு மிருக்கும் சிவபெருமான் எதைச் செய்கிறாரோ அதற்கொப்பவே எல்லோரும் விளங்குவார்கள். இதுவிஷயத்திற் சந்தேகம்வேண்டாம்.

முனிகளே! மேல்கடக்கவற்றைக் கேளுங்கள்: சிவபெருமான் விஷ்ணுமூர்த்திக்கு அதிகவரங்களைக் கொடுத்து, விஷ்ணுவே! எந்தவிடத்தில் உன்னைப் பார்க்கின்றார்களோ அந்தவிடத்திலுள்ளபாவரும் மோக்ஷக்கடவர். அப்படி மோக்ஷப்பதனால் நீ மதிக்கப்பட்டும் துதிக்கப்பட்டுமிருப்பாய். பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டவுலகத்தில் எப்பொழுதுதுக்கமுண்டாகிறதோ அப்பொழுதே நீ அத்துக்கத்தை நிவர்த்திசெய்து உலகங்களை இரட்சிப்பாய். நாமே உருத்திரமூர்த்தியாய்ச் சகலலோகங்கட்கும் சங்காரத்தொழில் செய்யப்போகிறோம். இவ்விஷயத்திற் சந்தேகமேயில்லை. விஷ்ணுவே! நீயே எம்மைத் தியானிக்கத்தக்கவன். நாமே அதிகவடிவமாகவிளங்குதலின், உனக்கும் எமக்கும் சிறிதும் பேதமுள்ளதாக நினைக்கக்கூடாது. என்றிப்படிச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளி, பிரமதேவனைத் திருக்காத்திற் பிடித்துக்கொண்டெழுகளிருவரையும் எமக்குச்சமமாக உலகத்தார் தியானிக்கக்கடவர். அவ்வாறின்றிக் குறைவுசெய்வோர் நினைவேற்றுத் துன்புறுவாராக. நீங்களிருவரும் சகலஜனங்களுக்கும் பிராணரூபமாய் இருக்கக்கடவீர். பிரமனே! நீ காலாயிரஞ் சதுர்யுகங்களை ஒருதினமாகச்சொல்லப்பட்ட ஆயுவருடமாகிய உன் ஆயுள்வரையில் ஸத்வமுதலான முக்குணங்களோடு கூடிய பிராணிகளின் சிருஷ்டிகாரியத்தைச் செய்யவேண்டியது என்று கூறினர். சிவபெருமானது வார்த்தையைக்கேட்ட விஷ்ணுமூர்த்தி மிக்க ஆனந்தத்துடன் சிவபகவானைப்பணிந்து சொல்லுகின்றார்:—கிருபாசமுத்திரமாயும், உலகங்கட்கெல்லாம் பதியாயுமிருக்கின்ற சிவபெருமானே! தேவரீருடைய ஆக்ஞையைச் சிரமேற்றரித்து, தேவரீர் கட்டளையிட்டவகையே அடியேன் செய்யவேண்டியவனாயினும் விண்ணப்பிப்பதொன்றுளது; அதையுந் திருச்செவிசாற்றியருளவேண்டும். தேவரீர் எப்பொழுதும் என்னுள் தியானிக்கத்தக்கவராயிருக்கின்றீர்; முன்னமே தேவரீர் அருளியவரங்களையடைந்தேன்; நிரேஷ்டமானசொரூபியாகிய தேவரீரைத்துதிப்பதினின்று என்மனமானது கணகாலமும் பிரியாமலிருக்கவேண்டும். என்னிடத்தில் எவன் பக்தனாயிருந்து தேவரீரை நிந்திக்கின்றானோ அவனுக்கு எப்பொழுதும் நரகமே வாசஸ்தானமாகக் கொடுப்பேனென்பது நிச்சயம். எவன் தேவரீருக்குப்பக்தனோ அவன் என்னையும் பக்திசெய்கிறானென்று மகிழ்வேன். தேவரீரால் என்னுடைய மகிமை விருத்திசெய்யப்பட்டது என்று விஷ்ணுவானவர் கூறலும், இவற்றை யெல்லாங் கேட்ட சிவபெருமான் பெருமகிழ்ச்சியுடையவராய் அந்தர்த்தானமாயினர்.

சிவபெருமான் அந்தர்த்தானமானபின்பு, உலகங்கட் கெல்லாம் பிதாமகனை பிரமதேவர் தான்பெற்ற கட்டளைப்படி சிவத்தியானபரராய் விஷ்ணுமூர்த்தியையும் பணிந்துகொண்டு அவரால் ஞானமடைந்து சிருஷ்டிகாரியத்தைச் செய்வதற்கு இச்சைகொண்டார். விஷ்ணுமூர்த்தியும் அப்பொழுதே அந்தர்த்தானமாகப் போய்விட்டார். பிரமதேவர், பூர்வத்தில் எந்த ஜலம் சிருஷ்டிக்கப்பட்டதோ அந்த ஜலத்தில் அஞ்சலிரூபமாகத் தன்

வீரியத்தை விட்டார். உடனே அந்த ஜலத்தில் இருபத்துநான்கு தத்துவங்கள் ஏறிக்கூடிய அண்டம் உண்டாயிற்று. முனிவர்களே! அநேக ஆகாரங்களால் பிரகாசமாய் அந்த அண்டம் சடரூபமாயிருந்தது கண்டு பிரமாசன்தேகத்தை யடைந்து விஷ்ணுவைத்தியானித்துப் பன்னிரண்டுவருடம் உக்கிரமானதவத் தைச்செய்தார். அவர்தவத்திற்கு விஷ்ணுவானவர் மனங்களித்துப்பிரசன்ன ராகி, பிரமாவே! உனக்கு இஷ்டமான வரத்தைக் கேள் கொடுக்கிறேன். உனக்கு என்னற் கொடுக்கக்கூடியதைக் கொடுப்பதற்குத் தடையில்லை என்று சொல்ல, பிரமதேவர் சொல்லுகின்றார். விஷ்ணுவே! சிவபெருமான் உமக்கு என்னைக் கொடுத்தீவிட்டபடியால் நீர் பிரத்தியட்சமானது யுக்தந் தான். சிவபெருமான் எந்தச் சிருஷ்டியைச் செய்யக் கட்டளையிட்டாரோ அது என்னற்செய்யமுடியாமல் ஜடமாய்ப்போய்விட்டது. ஆதலின் நீர் இப் பொழுது பிராணவாயுரூபமாய் அதற்குப் பிராணனை உண்டுசெய்யவேண்டும் என்று பிரமதேவர்கூறிய வார்த்தையைக்கேட்டு, விஷ்ணுமூர்த்தி சிவாக்ஞை யின்படி செய்ய விருப்பமுடையவராய், ஆயிரந்தலைகளும் ஆயிரங்கால்களு முடைய அனந்தரூபம் வஹித்துக்கொண்டு அண்டத்தை வியாபித்தாரென்று ஸூதமுனிவர் நைமிசாரணியவாசிகளுக்குக் கூறியருளினர்.

ஆறுவது

மேற்படி அத்தியாயம்.

தவசிரேஷ்டர்களான முனிவர்களே! எல்லாப்பாபங்களையும் போக் கும்படியான சரித்திரத்தைச்சொல்லுகிறேன் கேட்பீர்களாகவென்று ஸூத முனிவர் சொல்லத்தொடங்கினார்:—விஷ்ணுவானவர் பிரமாவினால் தூண்டப் பட்டவராய் அந்த அண்டத்தைப் பிரவேசித்தபொழுது இருபத்துநான்கு தத்துவங்களையுடைய அந்த அண்டம் பாதாளலோகமுதல் ஸத்தியலோகம் வரையில் பிராணனுடையதாயிற்று. அந்த அண்டத்தில் விஷ்ணுவானவர் பிரகாசமாகவிருந்தார். தவத்தையே தனமாகவுடைய பிரமா தவலோகத்தி லும், சனகாலங்களில் இதரலோகங்களிலும் பிரிந்தார். பிறகு பிதாமகனை பிரமதேவர் மனதினால் சிலபிள்ளைகளை முதலில் உண்டுசெய்தார். அப்பிள்ளை கள் *ஊர்த்துவரேதஸராக ஆனார்கள். சதுர்முகன் மீண்டும் சிலருஷிகளைச் சிருஷ்டித்தார். அவர்கள் மிகவும் விரக்தர்களாக விருந்தார்கள். அவர் கட்டிகரப் பிரமா மிகவுங் கோபமுற்று அழுகையில், அஞ்ஞர்தே யென்று கிரமம்சமாக †உருத்திரமூர்த்திதோன்றினர். அவர் பிரமாவைப்பார்த்துப் பிரமாவே! உனக்குத்தக்கமுண்டானால் அதை நாசஞ்செய்வேன்; சந்தேகப் படவேண்டாம் என்றுகூறினர். அதைக்கேட்டபிரமன் உருத்திரமூர்த்தியே!

*ஊர்த்துவரேதஸ - சுக்கிலத்தைக் கீழிறக்காதவர்கள். ஞானிகளென்பது பொருள்.

†பிரமனிடத்துதித்த இவ்வுருத்திரர் நீலலோஹிதரென்பப்படுவர். இவர் தானே சிருஷ்டிப்புதாகக் கூறினாராயினும், பிரமன் கருத்தப்படி அவனுக்குச் சிருஷ்டி கை கூடச்செய்து சென்றார்.

நீர் சொல்லும்வார்த்தை அழகாயிருக்கிறது. ஆயினும் சிருஷ்டியில் இடை யூறுவராதபடி செய்யவேண்டும் என்று சொல்ல, உருத்திரமூர்த்தி அப்படி யே சிருஷ்டி நிர்விக்கினமாக முடியக்கடவது என்று சொல்லிவிட்டு, எந் தக் காலத்துஞ் சலியாது விளங்குந் திருநீலகண்டத்திற் சிவசக்தியை யடைந்தார். உருத்திரபகவான் இவ்வாறு வரங்கொடுத்துச் சென்றபிறகு பிரமதேவர் ஏற்கருஷிகளைச் சிருஷ்டித்தார். மிகச்சிரேஷ்டமான நாரதரை மடியினின்று உற்பவிக்கச்செய்தார். கர்த்தம ருஷிணியைத் தன்கிழலிலிருந்து படைத்தார். தக்ஷப்பிரசாபதியை * அங்குஷ்டத்தினின்று உண்டுசெய்தார். இவ்வாறு மாநதபுத்திரர் பதின்மர் உண்டாயினர். பிருகுமுனிவரிடத்தில் மரீசி யும், மரீசியினிடத்தில்காசிபரும் தோன்றினர். காசிபருடைய சக்தியினாலே தான் இத்தவலகம் விருத்தியடைந்தது. மகாத்மாவான தக்ஷப்பிரசாபதிக்கு அறுபதுபெண்கள் பிறந்தார்கள். அவருள் பதின்மூன்றுபெண்கள் காசிபருக்கு விதிப்படி மணஞ்செய்து கொடுக்கப்பட்டார்கள். காசிபருக்கு அந்தப் பெண்களிடத்தில் தேவதைகள் அசுரர்கள் †தனுஜர்கள் முதலிய அநேகர் உண் டாயினர்; அவர்கள் உலகங்களெல்லாம் வியாபித்தார்கள். தக்ஷப்பிரசாபதி யின்பெண்களிடத்தில் விருக்ஷங்களும், பக்ஷிகளும், சர்ப்பங்களும், மிருகங்களும், அநேகவிதமான கொடிகளுந் தோன்றின. இந்தச்சிருஷ்டிகள் பாதாளமுதல் ஸத்தியலோகம்வரையில் வியாபித்தன; அவை வியாபியாத இடமே யிடை யாது; இது சக்தியம். தக்ஷப்பிரசாபதிக்குச் சதி என்றொரு குமாரத்தியுண்டு; அக்குமாரத்தியைச் சிவபெருமானுக்குக் கொடுத்தார். அச் சதிதேவிக்குப் பவானியென்னும்பெயர் பிரசித்தமாயிருக்கிறது. உருத்திரமூர்த்தி காளியை மணஞ்செய்தார். விஷ்ணு இலக்ஷ்மியை மணஞ்செய்தார். பிரமா ஸரஸ்வ தியை விவாகஞ்செய்தார். பிரமன் விண்டு உருத்திரனென்னுந் திருமூர்த்திக ளுக்குத் தங்கள் சக்திகளுடன்கூடி முறையே சிருஷ்டி திதி சங்காரங்களைச் செய்துவருவாராயினர்.

முனிவர்களே! எந்தச் சதி யென்பவள் சிவபகவானை யடைந்தா ளோ அவளே மகாகாளி எனப்படுவாள்; அந்தமகாகாளியே பின்னொருகால த்தில் ஹிமோபர்வதராஜனிடத்தில் புத்திரியாகப் பார்வதி யென்னும் பெயரு டன் சிவபெருமானை யடைந்தாள். அந்தப் பார்வதிதேவி காளிகா சண்டிகா பத்ரா சாமுண்டா விஜயாஜயா" என்று கூறப்படும் இத்தியாதி பலநாமங்களை யடைந்தாள். இந்தமூர்த்திகள்மூவரும் குணபேதத்தால் முத்தொழில்செய் கின்றனர் என்று ஸூதர் சொல்லியதைக்கேட்ட முனிவர்கள் ஆனந்தித்து இவ்வளவில் திருப்தியடையாதவர்களாய் மீண்டும் சொல்லுகின்றார்கள். ஓ முனிபுங்கவரே! குருவான வியாஸபகவானுல் தேவரீர் எல்லாமறிந்தவர். தேவரீரது முகமாகிய தாமரைமலரிலிருந்து பெருகுந் திவசரிதையாகிய அமிர்தத்தை இன்னும் பானஞ்செய்ய விரும்புகின்றோம். மகாகாளி முதலில் தக்ஷப்பிரசாபதிக்கு மகளாகவும், பிறகு பர்வதராஜனுக்குக் குமாரியாகவும்

*அங்குஷ்டம் - பெருவிரல். †தனுஜர் - தானவர்.

உதித்த திவ்யசரிதையையும், புண்ணியசீலியான பார்வதாதேவி சிவபெருமானை யடைந்த தன்மையையும் இவற்றோடு ஸம்பந்தப்பட்ட பிறவிரித்தாந்தங்களையும் செவ்வி யருளவேண்டுமென்று கேட்ட சௌநகாதி முனிவர்களை நோக்கி ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

சதருடி நிருபணமுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

ஏழாவது
சிவபூஜாவிதியுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவர்சொல்லுகின்றார்:—கேளுங்கள்ருஷிசிரேஷ்டர்களே! இதுவரையில் சிருஷ்டிநிரூபணத்தைச் சொன்னேன். எந்தச் சரித்தத்தைக் கேட்டால் பிறவி நாசமாகுமோ அந்த மங்களகரமான சரித்திரத்தைச் சொல்லுகின்றேன். முன்னொருகற்பத்தில் தக்ஷப்பிரஜாபதிக்குஞ் சிவபெருமானுக்கும் துவேஷமுண்டான காரணத்தால், தக்ஷப்பிரஜாபதி சிவபெருமான் தவிர மற்றத் தேவர்களையும் முனிவர்களையும் வரவழைத்து வைத்துக்கொண்டு ஒரு யாகஞ்செய்தார். அதனை யறிந்த *தாக்ஷாயணி தன்தை தன்னை யழையாமலிருந்தபோதிலும் அந்த யாகத்தைப் பார்க்க அவளுற்றுச் சிவபெருமானிடம் விடைபெற்றுத் தக்ஷன் மாளிகையையடைய, அவன் அவமதித்ததால் துக்கித்துத் தன் தேகத்தை நீங்கினாள். [சிவபெருமானுக்குக் கோபமுண்டானபோது யாருக்குச் சுகங்கிடைக்கும்?] சிவபெருமான் கோபத்தால் வீரபத்திரனை யனுப்பி அந்த யாகத்தை விக்நஞ் செய்து தேவர் முனிவர் முதலானவரைத் தண்டிக்க, அவர்கள் குறை கூறினர்கள். சிவபெருமான் மீண்டும் அவர்கள் தோத்திரத்திற்கிரங்கி அவர்களை முன்போலவே அதக்ரஹஞ் செய்து விடுத்தார். இஷ்டபோகங்களைக் கொடுத்துச் சகலருக்கும் நன்மை செய்யும்படியான தாக்ஷாயணியின் தேகத்திலுண்டான ஜ்வாலையானது தேவர்களாற் பூஜிக்கப்பட்டு ஹிமோத்கிரியில் விழுந்தது. அது ஜ்வாலாமுகி யெனப்படும்; ஸகல இஷ்டங்களையுங் கொடுக்கத்தக்கது. எல்லோரும் தங்கடங்கள் இஷ்டகாமியங்களைப் பெறுவதற்காக அதைப்பூஜிக்கின்றனர். பிறகு அச்சுவாலாமுகி, இமாசலமன்னன் மனைவியாயும், பிதுர்க்கள் மனதினுலே நிர்மாணஞ்செய்யப்பட்டவளாயு மிருக்கும் மேனை என்பவளுக்குப் புத்திரியாக அவதரித்தாள். அச்சுவாலாமுகி, பர்வதத்தில் அவதரித்த காரணத்தினுல் பார்வதி யெனப் பேயரெய்தினள். அப்பார்வதி சிவபெருமானை நன்முகப்பூஜித்து வரங்களை அடைந்து, தன்னை யாஸ்ரயித்த எல்லோருக்கும் ஸர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கிறாள். நீங்கள் எதைக்கேட்டீர்களோ அதைச் சொன்னேனென்றும், இந்தச்சரித்திரத்தைக்கேட்டவர்களுடைய ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும்; இதுவிஷயத்தில் ஸந்தேகமேயில்லையென்றுங்கூறினர்.

*தாக்ஷாயணி-தக்ஷன் மகள்; இவ்வம்மைக்கு ஸதிதேவி யென்னும் பெயர்.

ஸூதமுனிவர் வார்த்தையைக் கேட்ட நைமிசாரணியவாஸிகளாகிய முனிவர்கள் ஒருமிக்காமனியே! தேவரீர் இதுகாறுங் கூறியவற்றுல் திருப்தியடையாதவர்களாய் இன்னும் சிவசரித்திரங்களிலே எங்கள் மனமானது அவாவுகின்றது. சிவபெருமானை எவ்வாறு பூஜிக்கவேண்டியது? சிவபெருமான் முற்காலத்தில் யாவரால் அம்முறைப்படி பூஜிக்கப்பட்டனர்? அப்பூஜையாற் களித்துச் சிவபெருமான் யாருக்குப்புத்ரனுனாகி எந்தப்பலனைக்கொடுத்தார்? பார்வதிதேவியர் செய்த தவம் - அவ்வம்மைபார் விவாஹம் - த்ரிபுராஸுரவதம்-ஜ்யோதிர்லிங்கங்களின் உற்பத்தி - ஜ்யோதிர்லிங்கங்கள் எத்தனைவிதங்கள்? அவற்றைத் தரிசித்தால் என்ன பலன் கிடைக்கும்? பிராம்மணர்களாலும், க்ஷத்ரியர்களாலும், வைசியர்களாலும், சூத்ரர்களாலும் சிவபூஜை எப்படி செய்யத்தக்கது? இவற்றை எவ்வாறு தேவரீர் வியாஸபகவானிடம் கேட்டீரோ அவ்வாறே விஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்றார்கள். அந்த நைமிசாரணிய வாஸிகளாகிய முனிவர்களுடைய வேதஸம்மதமான வார்த்தையைக்கேட்டு, அக்கேள்விப்படி ஒவ்வொன்றுங் கிரமமாகச் சொல்லத்தொடங்கினர்.

ஸூதர்: முனீச்வரர்களே! உங்களால் எந்தவிஷயமானது நன்றுய்க் கேட்கப்பட்டதோ அந்தரஹஸ்யத்தை என்புத்திக்கு எட்டியபடியும் நான் கேள்விப்பட்டபடியுஞ் சொல்லுகிறேன். உங்களால் எப்படி கேட்கப்பட்டதோ அதிமாநுஷ வியாஸமுனிவரால் முன் ஸநத்குமாரரிடம் விஜ்ஞாபிக்கப்பட்டும், உபமந்யுமுனிவரைக்கேட்கப்பட்டுமிருக்கிறது. பிறகு வியாஸபகவான் ஸநத்குமாரரிடம் சிவபூஜை முதலானவற்றைக் கேட்டு அவர் உலகங்களுக்குஹிதத்தைச் செய்வதற்காக எனக்குச் சொல்லினர். ருஷிகளே! எந்த விஷயமானது ஸ்ரீ கிருஷ்ணனுல் மஹாத்மாவான உபமந்யுவினிடம் கேட்கப்பட்டதோ அதைச் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் லிங்கபூஜை முதலானதை ஸம்க்ஷேபமாகச்சொல்லுகிறேன். ஏனெனில், விஸ்தாரமாய்ச் சொல்ல வேணுமானுல் அநேக வருடங்கள் சொன்னபோதிலும் முடிவு பெறாது. அநேகவிதமாகச் சொல்லுவதாற் பயனென்ன? சுகத்தையடைய விரும்பும் மனுஷ்யன் அவனது ஸர்வ இஷ்டங்களும் கூடிவருவதற்காக அசீரியான சிவரூபத்தைச் சிறந்தபக்தியோடு பூஜிக்கவேண்டும். எவ்வளவுகாலம் சிவபகவானை ஒருமனிதன் பூஜைசெய்யவில்லையோ அவனுக்கு அவ்வளவுகாலமும் தரித்ரத்தன்மை, ரோகம், துக்கம், சத்ருரு மூலமாய் உண்டான துன்பம் ஆகிய நான்குவிதங்களான பாபங்கள் ஸித்தித்திருக்கின்றன. சிவபகவானைப் பூஜைசெய்தமாத்ரத்தில் ஸமஸ்தவிதமான துன்பங்களும் மறைந்துவிடுகின்றன. கிடைத்தற்கரிய மனிதசரீரத்தையடைந்த எந்த மனிதன் ஸுகம் சந்ததி இவற்றில் விருப்பமுள்ளவனுக இருக்கின்றானோ அவன் ஸர்வ இஷ்டங்களும் சித்திப்பதற்காக மஹாதேவனைப் பூஜைசெய்யவேண்டியது. பூதேவர்கள், க்ஷத்ரியர்கள், வைசியர்கள், சூத்ரர்கள் ஆகிய நான்குவருணத்தவர்களும் சாஸ்த்ரப்படி க்ரமமாக *ப்ராம்ஹமுகூர்த்தத்தில் எழுந்திருந்து "மேக

வர்ணனே! நான்கு ஹஸ்தங்களோகூடியவனே! பக்தர்களின் பயத்தைப் போக்குபவனே! உனது அழகான உருவம் என் மனதில் எப்பொழுதும் வாசஞ்செய்யவேண்டியது" என்று—விஷ்ணுவை யாலது குருவை யாலு தோத்திரஞ்செய்து தீர்த்தங்களை ஸ்மரணம்செய்து பிறகு சுபமானஸ்தோத்திரங்களைக் கிரமப்படிசெய்து எழுந்திருந்து தெற்குத்திக்கில் ஏகாந்தஸ்தலத்தில் மலஜலவிஸர்ஜனஞ்செய்து சுத்தமான மண்ணைப் பிரமணன் இருநூறடவையும், க்ஷத்திரியன் நான்குநூறடவையும், வைசியன் மூன்றுநூறடவையும், சூத்திரன் இரண்டுநூறடவையும் கிரமமாக (அந்தந்தஜாதிக்குந் தகுந்தபடி) எடுத்துக் கைகால்களை யலம்பிக்கொள்ளவேண்டும். [இந்த மிருத்திரஹண விஷயங்கள் நான்காவது வர்ணஸ்திரீகள்போலப் பெண்களுஞ்செய்யவேண்டும்.] பிறகு வேதியன் பன்னிரண்டுஅங்குல அளவும், அரசன்பதினாறு அங்குல அளவும், வைசியன் பத்து அங்குல அளவும், சூத்திரன் ஒன்பது அங்குல அளவுமுள்ள பற்கொம்புகளை ஸ்மிருதியிற் கூறியபடி கொண்டு †காலதோஷத்தை விசாரித்துச் சுத்திசெய்து, தீர்த்தங்களில் எந்தெந்த வர்ணங்களுக்கு எப்படிஸ்நானம் நியமித்திருக்கிறதோ அவ்வாறே தேசகாலங்களின் விரோதமில்லாமல் ‡ மந்திரங்களோடு கூடிய ஸ்நானத்தைச் சூரியோதயத்திற்கு மூன்றுகாழிகைக்குமுன் செய்யவேண்டியது.

ஸ்நானம்செய்தவிடத்தில் முதலில் ஆசமனம்செய்து பரிசுத்தமான வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு சிரஜன ஸ்தலத்தில் இருந்து சதுர்வருணங்களில் எந்தெந்த வர்ணஸ்தர்கள் எப்படி அநுஷ்டிக்கவேண்டுமோ அதேமாதிரி ஸந்தியாவந்தனாதி அநுஷ்டானங்களைச் செய்து, பிறகு பூஜை செய்ய ஆரம்பிக்கவேண்டியது. பூஜாக்ரமம்:—மனதை ஸ்திரஞ் செய்துகொண்டு பூஜாக்ருஹத்திற் பிரவேசித்து, பூஜைக்குவேண்டுமான திரவியங்களைச் சேகரித்துக்கொண்டு கிரமமாகச் சிவபகவானைப் பூஜைசெய்யவேண்டியது. முதலில் விநாயகனையும், பிறகு த்வாரபாலகர்களையும், பின்பு தீக்பாலகர்களையும் பூஜித்து, பின்னர் பீடமாவது அல்லது பூஜாத்ரவ்யத்தின் ஸமீபத்தில் அஷ்டதளமான பீடமாவது செய்துகொண்டு அவ்வாஸனத்தில் உட்கார்ந்துகொண்டு பிரபுவான சிவபகவானைப் பார்த்து அடிக்கடி கைகளைச் சுத்திசெய்துகொண்டு மூன்றுதரம் ஆசமனம்செய்து மூன்றுதரம் ¶ ப்ராணயாமஞ் செய்து, ஐந்து முகங்களோடு கூடியவராயும் பத்துப் புஜங்களோடு கூடியவராயும் நிர்மலமான ஸ்படிகக்கல்லுக்கு ஸமானமான ஒளியையுடையவராயும்,

* ப்ராஹ்மம் - சூர்யோதயத்திற்குமுன் ஐந்துநாழிகைகாலம்.

† அமாவாஸை சதுர்தசி முதலான திதிகளில் தந்தசுத்தி செய்யக்கூடாதென்று நியதி.

‡ அகமர்ஷணாதிருக்குகள்.

¶ ப்ராணயாமம் - முகநாஸிகாஸஞ்சாரவாயுவை நிறுத்துதல். பூரகி ஸப்தவியாக்ருதிகளை ப்ரணவஸஹிதமாகச்செய்து மூன்றுதரம் மனஸால் ஜபித்து, பிறகு மஹாவ்யாக்ருதி ஜபித்து, ப்ரணவார்த்தத்தில் மனஸை நிறுத்தல்.

ஸ்ரீவாபரணபூஷிதராயும் புலித்தோலைப் போர்வையாகக்கொண்டு மிருகிற சங்கரபகவானைத்யானம்செய்யக்கடவன். அச்சிவபெருமானதுஸாரூப்யத்தை யடைந்து மனிதன் தன்பாபத்தைப் போக்கடிக்கவேண்டும். சிவலிங்கதிரியானசரீரத்தைத்தரித்துப் பரமேச்வரனைப் பூஜைசெய்கையில் மந்திரத்தால் தேஹசுத்திசெய்துகொண்டு கிரமமாக மூலமந்திரத்தை நியாஸஞ்செய்யவேண்டியது. ஸமஸ்தமானவிடத்திலும் ப்ரணவமந்திரத்தாலே *அது அங்கநியாசங்களையும் செய்யவேண்டியது. பிறகு (அத்யாதிப்ரயோகங்களாகிய) சங்கல்பஞ் செய்து பூஜைக்கு ஆரம்பம் செய்யவேண்டும். அப்படியே ஆசமனத்திற்காக வற்பாடு செய்திருக்கும் பாத்திரத்தையும் கவ கும்பங்களையும் ஸ்தாபிக்கவேண்டியது. அப்பாத்திரங்களைத்தர்ப்பைகளால்மூடினவைகளாய் ஸ்தாபித்துத் தீர்த்தத்தினால் ப்ரோக்ஷணம்செய்து அப்பாத்திரங்கள் எல்லாவற்றிலும் சீதளத்துடன்கூடிய தீர்த்தத்தைச் சேர்க்கவேண்டியது. புத்திமானான மனிதன் சாஸ்திரத்தாற்பார்த்து ப்ரணவமந்திரத்தால் இனி முறையிடப்போகும் திரவியங்களை அப்பாத்திரங்களில் முறையே சேர்க்கவேண்டியது. பாத்யபாத்திரத்தில் விளாமிச்சிவேரும் சந்தனமும், ஆசமநீயபாத்திரத்தில் ஜாதிசுகந்தை-வெட்டிவேர்-கர்ப்பூரம் இவற்றையும் பொடிசெய்து சேர்க்கவேண்டும்; மற்றப்பாத்திரங்களில் சந்தனத்தையும் எலத்தையும் சேர்க்கவேண்டும். சிவபெருமானுடைய பக்கப்ரதேசத்தில் நந்தீசுவரரைப் பூஜைசெய்யவேண்டும். வாசனாத்ரவ்யங்களாலும் புஷ்பங்களாலும் தூபதீபங்களாலும் இன்னும் அநேகவிதங்களாலும் சிவபெருமானைப் பூஜிக்கவேண்டியது. அப்பொழுது மனிதனானவன் மஹாஸங்கல்பத்துடன் கூடியவனும் லிங்கத்திற்குச் சுத்திசெய்து, ப்ரணவம் முதல் நமோந்தமாகிய சிவ மந்திரங்களை ஜபித்துப் பிறகு ப்ரணவத்தால் பத்மாஸனஞ்செய்யவேண்டியது. அதன்கீழ்க்குப்பக்கமானதளம் அணிமாமயம்; தெற்குப்பக்கமானதளம் லகிமாமயம்; மேற்குத்தளம் மஹிமாமயம்; வடக்குத்தளம் ப்ராப்திஸ்வரூபம்; அக்நிபக்கமாய் இருக்கும் நீளம் ப்ராகாம்யமயம்; நிருதிபக்கத்தில் இருக்கிற தளம் சகத்வமயம்; வாயுத்திக்கில் இருக்கிற தளம் வசித்வஸ்வரூபம்; ஈசான்யபக்கத்தில் இருக்கிற தளம் ஸர்வஜ்ஞத்வமயம். கர்ணிகையில் சந்திரனும், சந்திரனுக்குக் கீழ்ப்பாகத்திலும், சூரியனுக்குக் கீழ்ப்பாகத்தில் அக்நிதேவனும், திக்குகளின் கடைசியில் தர்மாதிகளையும், ஸ்தாபிக்கவேண்டியது. நான்கு திக்குகளிலும் பிரகிருதி-மஹத் அஹங்காரம் தத்வகாரம் என்னும் நான்கினையும், கர்ணிகாரூபமான சந்திரன் சமீபத்தில் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்களையும் ஸ்தாபிக்கவேண்டியது. முனிவர்களே! அதன்பின்பு † ஸத்யோஜாதம் ப்ரபத்யாமி என்று பரமேச்வரனை ஆவாஹனம்

* அது அங்கங்கள்—ஹ்ருதயம்-சிரம்-சிகை-கவசம்-நேத்ரம்-அஸ்திரங்கள்.

† ஸத்யோஜாதம்ப்ரபத்யாமி ஸத்யோஜாதாயவைநமோநமஃ।
பவேபவேநாதிபவேபஜஸ்வமாம்பவோத்பவாயநமஃ॥

செய்து ‡ வாமதேவமந்திரத்தால் இரத்தினசிங்காஸனத்தில் எழுந்தருளச் செய்து, ¶ ருத்ரகாயத்ரியால் ஸான்நித்யம் [ஸன்நிதிபரிகல்பகம்] செய்து, $ அகோரமந்திரத்தால் * நிரோதம்செய்து, || ஸகலன்யாஸவித்யாகரம் இத்யாதிமந்திரங்களால் சிவமூர்த்தியைப் பூஜைசெய்யவேண்டியது. சிவபெருமானுக்கு பாத்தியம் அர்க்கியம் ஆசமனியம் கொடுத்து வாஸகாத்ரவ்யம் சந்தனம் முதலியவற்றோடு கூடிய பூர்ணமான தீர்த்தத்தால் மகாபிஷேக பூர்வகமாக ருத்ர மகாபிஷேகம்செய்விக்கவேண்டியது. பஞ்சகவ்வியத்திற்குச் சொல்லியிருக்கிற விதிப்படி மந்திரித்து ப்ரணவமந்திரத்தால் சிவ ஸ்நானம் செய்விக்கவேண்டும். தீர்த்தம்-பால் - தயிர் - தேன் - கரும்புரஸம் - நெய் இவற்றிலேயும் அபிஷேகஞ்செய்யவேண்டும். கஸ்தூரி-சுக்தம்-குங்குமப்பூ-பச்சைக்கற்பூரம் முதலிய புண்யத்ரவ்யங்களாலும் ப்ரணவ மந்திரத்தாலும் மஹாதேவனை அபிஷேகம் செய்யவேண்டும். பிறகு பரிசுத்தமான மந்திரங்களால் அபிமந்திரித்து ஜலகும்பங்களில் வெள்ளிய பரிசுத்தமான வஸ்திரங்களால் வடிகட்டினவைத்த ஜலத்தை யபிஷேகிக்கவேண்டியது. இப்பூஜை சிவபெருமானுக்குத் தூரத்திலிருந்து கையினுலெட்டிப் பூஜிக்காமல் அதிஸமீபத்திலிருந்துகொண்டே செய்யத்தக்கது. சிவபெருமானை மனோரம்யமான வெண்மையாகிய அக்ஷதையாலும் பூஜிக்கவேண்டியது. தர்ப்பை-தாயுருவி-ஜாதி - சண்பகம் - பாடலம் - வெள்ளலரி - மல்லிகை - கமலம்-உற்பலமுதலிய நாகாவிதமான அபூர்வமலர்களை ஜலத்திற்சேர்த்தும் விதவிதமான பாத்திரங்களாலும் அபிஷேகஞ்செய்யவேண்டியது. ஸமஸ்தமான பலன்களையும் கொடுக்கிற இச் சிவபூஜையானது மந்திரபூர்வகமாகச் செய்யவேண்டியது; எந்தமந்திரங்களால் மனிதர்கள் ஒருதடவையாவது சிவலிங்கத்தை அருச்சிக்கிறார்களோ அந்தமந்திரங்களை ஸ்வயலலிதத்திற்காக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

---

‡ வாமதேவாயநமோஜ்யேஷ்டாயநம ஸ்ரேஷ்டாயநமோ ருத்ராயநம காலாயநம கலவிகரணாயநமோ பலவிகரணாயநமோ பலாய நமோ பலப்ரமதனாயநம ஸர்வபூததமனாயநமோ மனோந்மனாயநம:॥

¶ தத்புருஷாயவித்மஹே மஹாதேவாயதீமஹி।
தன்னோருத்ரப்ரசோதயாத்॥

$ அகோரேப்யோதகோரேப்யோ கோரகோரதரேப்ய:।
ஸர்வேப்ய:ஸர்வசர்வேப்யோ நமஸ்தேஅஸ்துருத்ரரூபேப்ய:॥

* நிரோதம்-பூஜை முடிவுவரையில் சிவபெருமானை அங்கேயேயிருக்கச்செய்தல்.

|| ஸ்ரீமஹாகணாதிபதயேநம: ஸ்ரீமஹாகணாதிபதிம் த்யாயாமி ஸ்ரீமஹாகணாதிபதிமாவாஹயாமி ஸ்ரீமஹாகணாதிபதயேநம:॥

எட்டாவது

மேற்படி அத்தியாயம்.

ஸூதர்சொல்லுகிறார்:—பவமாகாதிமந்திரங்களாலேயும், வாங்மீயகமந்திரத்தாலேயும், ருத்ரமந்திரத்தாலேயும், நீலருத்ரத்தாலேயும், கபமான ஸ்ரீஸூக்தத்தாலேயும், ராஜநீஸூக்தத்தாலேயும், மங்களகரமான சமகத்தாலேயும், ப்ரணவத்தாலேயும், அதர்வணவேதோக்தமென்னும் மந்த்ரத்தாலேயும், தசசாந்திமந்த்ரத்தாலும், பாருண்டத்தாலும், அருணத்தாலும், ஜ்யேஷ்டமென்கிற ஸாமத்தாலும், தேவவ்ரதமென்கிற ஸாமத்தாலும், ரதந்தரமந்த்ரத்தாலும், புருஷஸூக்தத்தாலும், புருஷஸூக்தத்தாலும், மிருத்யுஞ்சய மந்த்ரத்தாலும், சிவ பஞ்சாக்ஷரத்தாலும், ஜலப்பெருக்குகள் ஆயிரம் - அல்லது நூற்றெட்டு ரத்நங்களோடுகூடிய பூரணகும்பங்களால் வேதமார்க்கத்திலுள்ளவனு, சிவபெருமானது திருநாமங்களாலாவது அபிஷேகஞ் செய்யவேண்டியது. பிறகு சிவபெருமானுக்குச் சந்தனம்-புஷ்பம் முதலானவை சாந்திப்ரணவமந்த்ரத்தால் மூலவாஸனைகள் கொடுத்து, பிறகு ஸ்படிகக்கல்மயமாயும், நிஷ்களமாயும், அநாரமயமாயும், ஸர்வ உலகங்களுக்குங் காரணபூதமாயும், ஸர்வலோகவ்யாபகமாயும், உத்தமமாயும், இந்த்ரன்-ப்ரஹ்மன்-விஷ்ணு-ருத்ரன் முதலான தேவர்களுக்கும்புலப்படாததாயும், வேதமறிந்தவர்களாலேயும் வேதாந்தத்தில் நேராசரிக்கவில்லையென்று சொல்லப்படுவதாயும், உற்பத்திஸ்திதிநாசம் என்று மூன்று மற்றதாயும், ஸமஸ்தமானலோகங்களுக்கும் மருந்தாயும், சிவதத்துவ மென்று ப்ரஸித்தமாயும், சிவலிங்கத்தில் வைக்கப்பட்டும் இருக்கிற சிவபகவானே லிங்கத்தின்சிரஸில் ப்ரணவத்தினால் தூபம் தீபம் தாம்பூலம் இவற்றை நிவேதநம் சுற்றுவதுபோற் சுற்றி, நமஸ்கரித்துத் துதித்து, அநேக விதமான மந்த்ரங்களாலேயும் பூஜிக்கவேண்டியது. ஸ்தோத்ரம்-ஜபம் நமஸ்காரம் ப்ரதக்ஷிணம் இவற்றையும் விதிப்படி செய்யவேண்டும். அர்க்யம்கொடுத்துத் திருவடிகளில் புஷ்பங்களைச் சமர்ப்பித்து, தேவர்களுக்கு அதிபனான சிவபகவானே மனதால் நமஸ்காரஞ்செய்து பூஜைசெய்யவேண்டியது. கையில் புஷ்பத்தை யெடுத்துக்கொண்டு எழுந்திருந்து திருநாமங்களையும் கூப்பினவனும் இப்பொழுது சொல்லப்போகிற மந்திரத்தால் ஈசானமூர்த்தி சிவபகவானைப் ப்ரார்த்திக்கவேண்டியது.

ஸுப்ரதாந்ருதிவாஜ்ரதாரஸ ஜவலஜ்ஜாதிகம்பயா।
கூடஸ்தஸ்ஸுஸமாஹிதம் கூடயாதவஸம்கர॥ (கச)

ஸ்வாமீ! சங்கரா! என்னுல் அஞ்ஞானத்தாலேயாவது ஞானத்தாலேயாவது ஜபம் பூஜை முதலானது செய்யப்பட்டதோ அது உமதநுக்ரஹத்தால் ஸபலமாக ஆகவேண்டும்—என்று படித்து, அந்தப்புஷ்பங்களைச் சிவபகவானது திருமுடியில் சேர்க்கவேண்டும். பிறகு மங்களாஷ்டகமான அதோக்ர ஆசீர்வாதங்களைச் செய்து சிவபகவான்மேல் † மார்ஜனம்செய்து, பிறகு,

† ஜலத்தாற் ப்ரோக்ஷணஞ் செய்தல்.

மதுபடியும் வந்து அதற்கழிப்பதற்காகத் தான் செய்த அபராதங்களைப் பொறுக்கவேண்டுமென்று தித்தித்து நமஸ்காரஞ்செய்யவேண்டும். இங்ஙனமாக அபராதக்ஷமாபணம் முதலியவை செய்து நமஸ்கரித்து, ஸமஸ்தமான பாபத்தோடு கூடியவனுகினைத்து, மீண்டும் பிரார்த்திக்கவேண்டும்.

ஸீவெஹ்தீஸ்ரீவெஹ்தீ ஸ்ரீவெஹ்தீஹுவெலவெ!
கதயாஸ்மரணம்மாஹ்மி தூவேஸ்மரணம்88! (கஅ)

ஜன்மக்கோறும் (எனக்கு) சிவபகவானிடத்தில் பக்தியிருக்கவேண்டியது. சிவபகவானிடத்தில் பக்தியிருக்கவேண்டியது. சிவபகவானிடத்தில் பக்தியிருக்கவேண்டியது. (உன்னைத் தவிர) எனக்கு வேறு ரக்ஷணம் கிடையாது. சீயேரக்ஷணம்—என்று இவ்வாறு ஸர்வ ஸக்தியையுங் கொடுக்கிற மகாதேவனைப் பிரார்த்தித்துச் சிறந்த பக்தியோடு கூடியவனுய் வர்த்யங்களின் நாதங்களால் விஸேஷமாய்ப் பூஜிக்கவேண்டியது. பிறகு பரிவாரணங்களோடு சங்கரபகவானை நமஸ்காரஞ்செய்த பிருந்த வந்தோத்தத்தையடைந்தவனுப்ச் சுகமாய்த் தன்வேலைகளைச் செய்யவேண்டியது. இந்தப்படிக்குச் சிவபக்தியை முக்கியமாக உடையவனுய் எவன் நினைத்தோறும் சிவ பூஜைசெய்கிறனே, அவனுக்கே அடிக்கடி ஸ்கலமான பலப்ராப்திபும் உண்டாகும். மனதில் நினைத்துக்கொண்டிருக்கிற பலமானது ஆறுமாதத்தில் ஸித்தியாகும். வியாதி-விசனம்-சோகம்-பயம்-சூன்யம்-கோணலான வியாபாரம்-விஷம்-இவைபோன்ற எந்தக்கய துன்பம் வந்தாலும் கேஷமத்தையுண்பென்னுமிலரும் கருணைமூர்த்தியுமான சிவபெருமான் அத்துன்பங்களை விலக்குவர். மேலும் சிவபகவானைப் பூஜிப்பதால் அந்த மனிதனுக்குச் சுபங்கள் உண்டாகும். அவன் குணங்கள் சுக்லபக்ஷத்துச் சந்திரனைப் போல விருத்தியையடையும். வியாஸபகவானிடத்திலிருந்து கேட்கப்பட்ட இந்த அரியவிஷயம் உங்களுக்குபொருட்டு இம்மாதிரியாகச் சொல்லப்பட்டது. இதன்பிறகு என்ன சரிதையை நீங்கள் கேட்கவிரும்புகிறீர்களோ அதையும் போக்கடிக்கவல்ல அச்சரிதையைச் சாங்கோபாங்கமாகச் சொல்லுகிறேன் என்று ஸூதமுனிவர் நைமிசாரண்யவாசிகளை நோக்கிக் கூறினர்.

சிவபூஜாவிதியுரைத்த அத்தியாயம்.

முற்றிற்று.

ஒன்பதாவது

தேவர்களது துயருரைத்த அத்தியாயம்.

மகாபாக்யரான வியாஸகிஷ்யரே! தோஷரஹிதரே! தேவரீர் சொல்லுகக் கூறினீர். இனித்திரிபுரஜபத்தைக் கூறவேண்டும். அந்த த்ரிபுரத்தினுடைய ரூபம் என்ன? அந்த த்ரிபுரம் எவ்விடத்தில் விகாரமடைந்தது? அந்தத் த்ரிபுரத்தினுடைய சைனியம் எவ்வளவு கணக்குள்ளது? சிவபகவானுடைய மஹாத்தான சேனையும் எவ்வளவுபலமுள்ளது? இவற்றைத் தேவரீர் சொல்லவேண்டுமென்று முனிவர்கள் கேட்க, ஸூதமுனிவர் சொல்லுகிறர்:—மஹாபாக்யர்களே! என்முச் கதையைக் கேட்டு உலகங்களின் பயம் நீங்குமோ அப்பேர்ப்பட்ட புண்யசரித்திரத்தைக் கேட்மர்கள். மாயை செய்கிறவர்களையும் மோஹத்தை யடையச்செய்கிறவனும், மஹா மாயா ஸம்பந்தியுமான தாரன் என்னும் அசுரனுக்கு மகனை தாரகன் என்கிற ஓரசுரன் இருந்தான். அவன் ஆதித்யன் உத்திரவிபெற்று மதுவென்னும் அசுரனது மகள்முகிய வகத்தையடைந்து, எல்லாத்தேவர்களையும் வெல்லுதற்கு ஆரம்பஞ்செய்ய வெண்ணி, இருகைகளையும் ஒருகாலியுக் தூக்கிக்கொண்டும், கதிரவனைப் பார்த்துக்கொண்டும் தாழுவருடம் தவஞ்செய்தான். பிறகு தாழுவருடம் வாயில் பெருவிரலை வன்றிக்கொண்டும், தாழுவருடம் ஜலத்தைப் பானஞ் செய்துகொண்டும், தாழுவருடம் வாயுபக்ஷணஞ்செய்துகொண்டும், தாழுவருடம் ஜலத்தில் இருந்துகொண்டும், தாழுவருடம் வெயிலிலும், தாழுவருடம் பஞ்சாக்நியின் மத்தியிலும், தாழுவருடம் கைகளை மாத்திரம் பூமியில் வன்றிக்கொண்டும், தாழுவருடம் மரக்களின் இலையைப் பிடித்துக்கொண்டும், தாழுவருடம் அதோமுகமாகவும் இருந்து, சேட்பவர்கள்மனமும் அஞ்சத்தக்க கடினமானதவத்தைச்செய்தான். அதனுல் அவனுடைய விரத்தினிலன்றும் மஹத்தான தேஜஸ் வினம்பித் தேவர்களின் உலகங்களைக் கொளுத்தலாயிற்று. இந்திரனும் இவ்வசுரன் தன் பதவியை எங்கு அடைத்துவிடுவனோவென்று பயமுற்றான். மிகவும் தயரத்தை யடைந்த தேவர்கள் இஃதென்ன ஆச்சரியம்! ப்ரபுவான சிவபெருமான் அகாலத்தில் ப்ரமாண்டஸம்ஹாரஞ்செய்யப்போகிறரா? என்று ஸந்தேகப்பட்டார்கள். இப்படி இருக்குங்காலத்தில், ஒருவன் ப்ரமதேவனைக் குறித்துப் பயங்கரமான தவஞ் செய்கிறன் என்று தெரியவந்தது.

தேவர்கள் ஒன்றுகூடி, ப்ரமாவானவர் கொடுக்கக்கூடாத அருமையான வரத்தைக் கொடுக்காமல் இருக்கும்பக்ஷத்திலும், எல்லாலகங்களுக்கும் நாசமுண்டாகும். அசுரனுலால் வரங்கொடுத்தபோதிலும் பெருந்துன்பம் உண்டாகும். எப்படி இருந்தாலும் உலகங்களுக்கு நாசம் ஸம்பவிக்கப் போகிறதாலால் ப்ரமாவானவர் வரங்கொடுக்கப் போகிறர். இந்த விஷயத்தில் ஸந்தேஹமில்லை என்று ஆலோசனை செய்துகொண்டு, தேவர்கள் ப்ரமனியடைந்து நமஸ்காரஞ்செய்து அவனை நோக்கித் தாராகாசுரன் தவஞ்செய்யுஞ் சங்கதி முதலானவற்றைத் தெரிவித்தார்கள். தேவர்களின் விருப்பத்தைச்சாதிக்கிற ப்ரமதேவர் ஸமஸ்தமான விஷயங்களையும் நிச்சயித்துக்கொண்டு அவ்வசுரன் கடோரமான தவஞ்செய்யுமிடத்திற்கு ஹம்ஸவாஹனராய்ச்சென்று காட்சியளித்து உன்னுல் கடினமான தவம் செய்யப்பட்டது. வேண்டுமொன்வரத்தைக்கேள்: தருகிறேன் என, தாரகன் ப்ரமதேவனை நமஸ்காரஞ்செய்து சொல்லுகிறன்.

பிரஸன்னரான தேவரீர் வரங்கொடுப்பவராக இருக்க எனக்கு அனாத்தியமானது என்ன இருக்கிறது? தேவர்கட்கிறைவரான பிரமதேவரே! பிரஸன்னரான தேவரீர் எனக்கு வரங்கொடுக்கத்தக்கவராய் இருக்கும்பக்ஷத்தில் இரண்டுவரம் எனக்குவேண்டும். அதாவது, தேவரீரால் சிருஷ்டிஸ்ருஷ்டி செய்யப்பட்டலோகத்தில் பலத்தில் எனக்குச் சமானனுபுருஷன் இல்லையென்று சொல்லத்தக்க பலத்தையும், சிவபெருமானுடைய வீர்யத்திற்கு உண்டாகிற பிள்ளையானவர் சேனாதிபதியாக என்மேல் எப்பொழுது அஸ்த்ர ப்ரயோகஞ் செய்கிறாரோ அப்பொழுதுதான் எனக்கு மரணம் வரவேண்டும் என்பதையும் கேட்டான். உலக பிதாமஹனான பிரமதேவர் அவ்வாறே வரங்களைக் கொடுத்துத் தன்னுடைய ஸத்ய லோகத்தை யடைந்து, அவன் தபோபலத்தால் உண்டான தாஹத்தைப் போக்கடித்துக் கொண்டார். மஹாமுனிவர்களே! அந்தத் தைத்யனும் கவச்செயல் நீங்கினவனுப் அவ்வரத்தை யடைந்து சோணிதபுரியைச் சேர்ந்தான். அப்பொழுது எங்குமுள்ள அசுரர்களும் ஒன்றுகூடி, தாரகாசுரனே! நீ இம்மூவுலகங்களிலுள்ள எங்களுக்கெல்லாம் அரசனாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

தாரகன் அந்த அசுரர்களால் அபிஷேகஞ் செய்யப்பட்டவனுப் அசுரர்களுக்கெல்லாம் மன்னவனுகி, பூமியில் ஒருவராலுஞ் செய்யப்படாத ஆஜ்ஞையை நடக்கச் செய்தான். பிராம்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைஸ்யர்கள், சூத்ரர்கள், *விஜாதியானவர்கள், இவர்களும், தானவர்கள், யக்ஷர்கள், கிம்புருஷர்கள் முதலியயாவரும் அந்தத் துராத்மாவான தாரகனுல் பிடித்து மிகத் துன்பஞ்செய்யப்பட்டவர்க ளானர்கள். அவர்களிடத்தில் இருக்கிற சிறந்த பொருள்களைக் கவர்ந்துகொண்டான். இந்திரன் முதலானவர்களால் தங்கள் தங்கள் செல்வங்கள் அவனுக்குக் கப்பமாகக் கொடுக்கப்பட்டன. இந்திரனுல் உச்சைச்ரவஸ் என்னும் அசுவமும், யமனுல் பயங்கரமான தண்டமும், குபேரனுல் கதை, நவநிதிகள் இவைகளும், வருணனுல் உத்தம ஜாதிகளான குதிரைகளும், ரிஷிகளால் காமதேனுவும் கொடுக்கப்பட்டன. இம்மாதிரியாக எந்தெந்த விடத்தில் உத்தமமானவஸ்துவைப் பார்க்கிறானே அப்பொழுதே அதை வரவழைத்துவிடுவான். ஸமுத்திராஜனும் அவனுக்குத் தன்று இரத்தினங்களைக் கொடுத்தான். சூரியபகவானும் அந்த அசுரனுக்கு எவ்வளவு காலம் சுகமாக இருக்கிறதோ அவ்வளவு காலம் காய்ந்தான். சந்திரன் எப்பொழுதும் அவன் ஸமீபத்திலேயே இருந்தான். வாயு எப்பொழுதும் சுககரனுகவே யிருக்க மெல்லென வீசிக்கொண்டிருந்தான். தேவர்களுக்குச்செய்யும் ஹவ்யம் பித்ருக்களுக்குச்செய்யும் கவ்யம் இவைகளையும் பலிஷ்டனான அவ்வசுரனேயடைந்தான். மூன்றுலகத்தா

* விஜாதியாவது - இக்காலு வர்ணங்களிலும் வேறானவர். அநுலோமர் - பிரதிலோமர் - அத்தானர்-விராத்தியர் முதலானர்.

(சிவபெருமான் தாருகாசுரனுடன் போர்புரிந்து அவனை வதைத்தல்.)

ரும் தேவர்களும் தாரகாசுரனது உத்திரவையே முக்யமாகக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது முனிவர்கள், யக்ஞர்கள், கிம்புருஷர்கள் முதலிய யாவரும் அவனுத்திரவின்படி நடக்கும்பொழுது ஜாமதக்னி ஸஹிதர்களான. இம்மனிதர் விஷயத்தில் கேட்கவேண்டுவது உண்டா? அந்த அசுரனுல் எல்லா †தேவோத்தியானங்களும், ஸமஸ்தமான தீர்த்தங்களுங் கொண்டு வந்து தன் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. இம்மாதிரியாக அதிகவருடங்கள் சென்றன. அப்பொழுது தேவர்கள் யாவரும் ஒன்றுகூடிப் பிரமதேவனைச் சரணமடைந்தார்கள்.

தேவர்களது துயருரைத்த அத்தியாயம்
முற்றற்று.

பத்தாவது
சிவபெருமான் யோகத்தமர்ந்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—முனிஸ்ரேஷ்டர்களே! அத்தத் தேவர்கள் யாவரும் உலகங்களுக்குப் பிரபுவான பிரமனையடைந்து நமஸ்கரித்துத் தலைகுனிந்துகொண்டு நின்றார்கள். அப்பொழுது பிதாமஹன், துன்பத்தையடைந்திருக்கிற அந்தத் தேவர்களைப்பார்த்து, தேவர்களே! நீங்கள் எந்தக்காரணமாக இங்கு வந்தீர்கள்? உங்களுக்கு என்ன அசக்கம்? என்னுல் ரக்ஷிக்கப்படுமேபக்ஷத்தில் அத்தத்துயரத்தை இப்பொழுதே போக்கடிக்கிறேன் என்றுரைத்தனர். ருஷிகளே! இவ்வாறு கூறிய பிரம்மதேவர் மொழிகளைக்கேட்டு தேவர்கள் தங்கள் பரிவாரங்களோடு ஒன்றுகூடி ஒரு வார்த்தை சொன்னர்கள். தாரகாஸுரனுல் நாங்கள் அனுபவிக்கும்துன்பம் தேவரீருக்குத் தெரியாதா? அத்தத் துன்பத்தைத் தேவரீர் போக்கடிக்க வேண்டியது. அதற்காகவே நாங்கள்வந்திருக்கிறோம் என்று இவ்வாறு கூறியதேவர்களைப்பார்த்துச் சதுமுகக்கடவுள் சொல்லுகிறார். விஷ்ணுகூடமாக இருக்கபோதிலும் தானே காப்பாற்றிப் பிறகுவைட்டிவது அயுக்தமாவதுபோல் என்னுல்வ்ருத்தியடையப்பெற்றவனுக்கு என்னுலேயே தஞ்செய்யப்படுவது யோக்கியமன் முறையால்,உங்களுக்கு ஓர் உபாயஞ் சொல்லுகின்றேன். சிவபெருமானுவீர்யத்திற்குப் பிறக்கும்பிள்ளை இவனைக் கொல்லப்போகிறன். அப்படிச் சிவவீர்யத்தில் புத்ரோத்பத்தியுண்டாவது துர்லபமாம். அதுவிஷயத்தில் ஒருயுக்தமான யோசனையுண்டு. நீங்கள் செய்யக்கூடுமானுல் சொல்லுகிறேன்:—ஹிமோத்கிரியின் அழகான கொடுமுடியில் சிவபெருமான் யோகஞ்செய்கிறார். நாரதபகவானுலும் தன்தந்தையான பர்வதராஜனுலும் மஹாதேவனுக்குப் பணிவிடை செய்யவேண்டுமென்று நியமிக்கப்பட்டவளாய்ப் பார்வதிதேவியானவள் தனது இரண்டு தோழிமாரோடுஞ் சிவபெருமான் யோகஞ் செய்யுமிடத்தில் வந்து உபசரிக்கிறாள். ருஷிஸ்ரேஷ்டர்களே! அவளுடன் எப்பொழுது சங்கரபகவான் ஸம்பந்தப்படுகிறாரோ அப்பொழுது

† தேவோத்தியானம்=தேவ+உத்தியானம். உத்தியானம்- பூந்தோட்டம்.

அவனிடத்தில் வீர்யமானது விழும்.பிறகு உங்கள்காரியம் கைகூடுகிறதற்கு ஸந்தேகமே கிடையாது. அந்தச் சிவபகவானது வீர்யத்தைப் பரிப்பதற்குப் பார்வதியே யோக்யமானவள். அக்னிதரியினால் முடியாது. அதற்கேற்ற உபாயம் நீங்கள் செய்யவேண்டியது. அப்பொழுது உங்களுக்கு கார்யஸித்தி யுண்டாகிறது என்று சொல்லினர். அந்தப்பிரமதேவர்வார்த்தையைக் கேட்டுத் தேவதைகள் யாவரும் நமஸ்காரஞ் செய்து ஒருவரொருவர் ஆலோசித்துக்கொண்டு இந்திரனை யடைந்து ஸர்வமான காரியங்களையுஞ் சொன்னார்கள். எப்படியானால் சிவபகவானுக்குப் பார்வதியினிடம் ஆசையுண்டாகுமோ அதைமாதிரி பிரமன் சொன்னபடி உம்மால் செய்யத்தகும் என்று எல்லாவற்றையும்முன்றப்படியுரைத்துத் தேவர்கள்மிகவும் ஸந்தோஷத்தையடைந்தவர்களாய்த் தங்கள் தங்கள் இருப்பிடத்தை யடைந்தார்கள். அந்தத்தேவர்கள் போனபிறகு தேவேந்திரன் மன்மதனை நினைத்தான்.

பிரபுவான மன்மதன் தேவியான இரதியோடு அந்த க்ஷணத்திலே யேவந்து நமஸ்கரித்து நின்றுகொண்டு கரங்களைச் சிரமேற்கூப்பித் தேவர்களுக்கு அதிபனாகிய இந்திரனே! உமக்கு இப்பொழுது என்ன காரியம் உண்டாயிற்று? எந்தக் காரணத்தால் நீர் என்னை நினைத்தீர்? அதைச் சொல்லவேண்டும். அந்த வேலையைச் செய்வதற்காகவே நான் வந்திருக்கிறேன் என்று இவ்வாறுரைத்து மௌனமாக இருந்தான். இந்திரனும் மன்மதன் சொல்லிச் செலியுற்று, நீ சொன்ன வார்த்தை மிகவும் யுக்தம்யுக்தம் என்று நிதிசெய்துகொண்டே சொல்லுகிறான். மகரத்வஜனே! இப்பொழுது எந்தக் காரியம் வந்ததோ அது உன்னால் செய்யத்தக்கதே; எந்தக் காரணத்தால் தங்களை நீ அந்த வேலையைச் செய்ய முயற்சியுள்ளவனாக இருக்கின்றையோ அதைச் சொல்லுகிறேன். எவ்வகை என் காரியங்களோ அவையெல்லாம் உன் காரியங்களே; வேறல்ல. எனக்கு அநேக ஸ்நேஹிதர்கள் இருந்தபோதிலும் உனக்குச் சமமான ஸ்நேஹிதன் எப்பொழுதும் கிடையாது. எனக்கு யுத்தத்திற்காக பிரமதேவனால் உத்தமமான வஜ்ராயுதம் சிருஷ்டிக்கப்பட்டது. உன்னை மற்றொரு ஆனந்தமாகவும் நிர்மாணம் செய்தார். அவ்விரண்டு அஸ்திரங்களில் வஜ்ராயுதம் ஹிம்ஸிக்கும் ஸ்வபாவமுடையது. நீயோவென்றால் சுகத்தையுண்டுபண்ணுகிற தன்மையுள்ளவன் என்று வர்ப்பட்டிருக்கிறது! ஸமஸ்தமானபேர்களிலும் சிறந்தவனான்மதனே! அவ்விரண்டு அஸ்திரங்களுக்குள் நீயே சிறந்தவன். ஏனெனில், வஜ்ராயுதமானது ப்ரயோஜனமில்லாததாக ஆனாலும் ஆகும். நீயோ ஒரு சமயத்திலும் நிஷ்பலனாக ஆகமாட்டாய். ஆகையால் எவனிடத்தினின்றும் ஹிதமுண்டாகுமோ அவனைக் காட்டிலும் ஹிதமான புருஷன் வேறொருவன் நமக்கு எவன் இருக்கிறான்? இதனால் நமக்கு மிகவும் ஸ்நேஹிதனான நீ இந்தக் காரியத்தைச் செய்வதற்கு யோக்யனாகிறாய்; இது அபலாரால் அஸாத்தியமோவெனில் இப்பொழுது நெடுங்காலம் போக்கடிக்க முடியாததாக உண்டாயிருக்கும் இந்தத்துன்பத்தை இப்பொழுது போக்குவதற்கு உன்னைத்தவிர மற்

றொருவனும் முடியாது. உலகத்தில் கொடையாளிக்குக் கருப்புக்காலத்தி லும்லுரனுடனிதனுக்கு யுத்தத்திலும்,ஸ்நேஹிதனுக்கு ஆபத்காலத்திலும் புருஷனுக்கு அசக்தி காலத்திலும், ஸ்திரீகளுக்கும் கற்புலத்தில் பிறந்தவனுக்கும் ஆபத்காலத்திலும், ஸ்நேகத்திற்கு சங்கட்டம் வந்தகாலத்திலும், மனிதர்களால் பரிக்ஷையுண்டாகிறது. ஓ மித்ரஸ்ரேஷ்டனே! உன்னிஷயமான பரிக்ஷையானது இப்பொழுது உண்டாயிருக்கிறது. இந்தக்காரியம் எனக்கு மாத்திரம் சுகத்தைக் கொடுக்கத்தக்க தல்ல; ஸமஸ்ததேவர்களுக்கும் சுகத்தை யுண்டுபண்ணத்தக்கது. இந்த விஷயத்தில் நாமே யாசிக்கிறவர்களாகிறபடியால் இந்தச்சுபமான காரியத்தைசெய்துமுடிக்கவேண்டியது.

இவ்விதமாக இந்திரன் சொல்லிய வார்த்தையைக் கேட்டு மீன கேதனன் விசுவாசத்தால் கம்பீரமாக, தழுதழுப்போடு கூடிய புன்சிரிப்புடன் சொல்லுகிறான்:—தேவேந்திரனே! நம்மிருவருக்கும் பேதம் கிடையாதகையால் நீர் இப்படி ஏன் சொல்லவேண்டும்? உலகங்களில் உபகாரஞ்செய்கிறவன் காரியத்தால் தெரியப்படுகிறானே யொழிய, வெறும்பேச்சால் தெரியப்படுகிறதில்லை. எவன் நான் இந்த வேலையைச் செய்துமுடிக்கத் திறமையுள்ளவனென்று பிரகாசமாய் வாய்விட்டுரைக்கிறானே அவன் எந்தவேலை செய்யப்போகிறான்? ஓ மகாராஜனே! அப்படி அதிசயமாக இருந்தபோதிலும் சொல்லுகிறேன் கேளும். முக்திமார்க்கத்தை யடைந்திருக்கும் உன் சத்ருவைத் தள்ளுகிறேன்; உன்னுடைய ஸ்தானத்தை க்ரஹிக்க எவன் தவஞ் செய்கிறானே அவனை சமயகாலத்தில் ஸ்திரீகடாக்ஷத்தால் கீழேதள்ளச் செய்கிறேன்; தேவனுகிலும்ராக்ஷஸனுகிலும், சிறந்தமுனிவனுகிலும் அவனை சமயத்தில் காலப்படுத்துகிறேன். இப்பொழுது காலப்படுத்தும் மனிதர்களை ஒருகணக்கிற் கூட்டமே இல்லை. உம்முடைய வஜ்ராயுதம் இன்னும் இருக்கும் அனேக ஸஸ்திரங்கள் இவற்றைத் தூரத்தில் எறிந்துவிடும். உமக்கு மிகவும் மித்ரனை நான் வந்திருக்கிற பொழுது அவ்வாயுதங்கள் என்தக்கரீயத்தையே செய்யப்போகின்றன. சிவபெருமானையே தள்ளுவேனையாகில் பிறர் விஷயத்தில் கேழ்க்கவேண்டியதென்ன? என்றுசொன்னான். இந்திரன் அதைக்கேட்டு மகா ஸந்தோஷத்தோடு கூடியவனும் மன்மதனைப் பார்த்துச் சொல்லுகிறான், ஓ மன்மதனே! நான் எந்தக் காரியத்தை மனதில் நினைத்தேனோ அந்தக்காரியம் உன்னால் சொல்லப்பட்டது. உன்னை எதற்காக யான் நினைத்தேனோ அதைச் சொல்லுகிறேன் கேள். தாரகனென்னும் மஹாசுரன் பிரமதேவனிடத்தில் உயர்ந்த வரத்தை யடைந்து தர்மங்களை நாஸஞ்செய்துகொண்டு உலகங்களைப் பிடிக்கிறான். பிரபுவே! ஸமஸ்தமான தேவர்களும் நிர்மலர்களான முநீச்வரர்களும் அந்த அசுரனால் துக்கத்தை யடைந்தார்கள்; அவன் விஷயத்தில் தேவர்களின் ஆயுதங்களும் நிஷ்பலமாக ஆய்விட்டன. அவ்வசுரனுக்கு இப்படி. அஸ்திரங்களால் மரணம் கிடையாது. அந்தத் துஷ்டஸ்வபாவத்தையுடைய தாரகாஸுரனுக்குச் சிவபெருமானது வீர்யத்திற்குப் பிறந்த பிள்ளையால் மரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் காரியமானது உனக்குதான் சாத்தியம். தேவர்களுக்குமிருந்த சுகத்தையும்பெண்ணாத்தக்கதும், எனக்குமிக்க ஹிதஞ் செய்வதுமான இந்தக் காரியத்தை நீ இப்பொழுதே செய்யவேண்டும். சிவபகவானும் மஹத்தான யோகத்தைச்செய்துகொண் டிருக்கிறார். அவருக்குப் பணிவிடைசெய்வதற்காகப் பார்வதி தனது தோழிகளுடன் கூடியவளாய் அவர்மீபத்தில் தனது தகப்பனான நிமாசலமன்னன் உத்தரவு பெற்றுக்கொண்டு இருப்பதாய்நாம் கேள்விப்படுகிறோம். ஆகையால் மஹாத்மாவான அந்தச் சிவபகவானுக்கு எப்படி அந்தப் பார்வதியின்மேல் மோகம் உண்டாகுமோ, அப்படி நீயே செய்யவேண்டியவன்! இந்தப்படி நீ உபகாரஞ்செய்தால்த்ருதார்த்தனுவாய். உலகங்களுக்குண்டான துபரமும் போய்விடும். உன் ப்ரதாபத்தால் உலகங்களுக்கு நல்லான தன்மை யுண்டாகும். இதற்குச் சந்தேகமில்லை என்று சொன்னான். அதைக்கேட்ட அப்பஞ்சாபானன் விகசித்த முகபங்கயத்தை யுடையவனும் அப்பொழுது ஸ்ருத்தையுண்டுபண்ணினவனை இந்திரனைப் பார்த்து விஸ்வாஸத்தால், சிவபெருமானைப்பார்வதிதேவியிடம் மஹா அன்புள்ளவனாகச் செய்துவிடுகிறேன்; இதில் ஸந்தேகமில்லை என்று சொல்லி அந்த தேவேந்திரனது வார்த்தையைச் சிரஸாக வகித்துத் தனது பத்னியான ரதி தேவியோடும் தனதன்பனை வசந்தனோடும் சேர்த்துகொண்டு சுத்தவிடத்தில் லாகஷத்தி சிவபெருமான் பாமபோகம் செய்கிறாரோ அங்குபோய்ச் சேர்ந்தான்.

அப்பொழுது வஸந்தனும் தனது தர்மத்தை யடைந்திருந்தான். வஸந்தருதுவுக்கு எந்தெந்த தர்மங்கள் உண்டோ அந்தந்தர்மங்களியாவும் அவ் வனத்தில் வந்துசேர்ந்தன. அந்தவனத்தில் பலாஸக்காகேளித் புஷ்பங்கள் விரிந்திருந்தன. தேமாமரக்களிலும், அசோக வனங்களிலும் புஷ்பங்கள் மலர்ந்தன. வகுள விருக்ஷங்களிலும் பிமரங்களால் வியாப்தங்களாய் இருந்தன. அதிமாதிரி சில நிலைகளிருக்ஷங்களில் பொற் கேதகிலங்களுடைய இனிமையான சப்தம் உண்டாயிற்று. அந்த மஹாவனத்தில் வண்டெனின் ரீங்காரம் உண்டாயிற்று. சுகபிஞ்சங்கள் தூகிகைகள்போல் மன்மதாவஸ்தையை படைத்திருக்கிற பானியான புருவர்களோ ஸம்போகத்துக்குயோக்கியமான காலத்தில் தங்கள் நாயகியிடம் சென்றார்கள். வாயுவானவன் அந்த இடத்தில் சுகமாய் வீசினான். அவ்வனத்தில் வசிக்கும் முனிவர்களுக்குஞ் சகிக்கக்கூடாததாகக் காமப்பிரக்ஞை உண்டுசெய்து விட்டது. அந்தவனத்தில் கல் மரம் முதலிய அசேதனங்களுக்கும் பன்மதாஸ்த்தியுண்டாகிறதென்றால், தேவர்மானவர்விஷயத்தில் கேட்கவேண்டியதுண்டோ?

யாவருடைய தன்பத்தையும் போக்குபவராயும் சிஷ்டாசாரபரிபூர்ணராயிருக்கிற சிவபகவான் அப்பொழுது அவ்விடத்தில் அகாலத்தில் வஸந்த ருதுவின் உற்பத்தியைப்பார்த்து மஹத்தான வியப்பையடைந்து, பிறகு கடோரமான யோகத்தைச் செய்தார். இவ்வாறு பலவிதமாய் வஸந்தருதுவானது

வியாபித்திருக்கையில், மன்மதன் தனது தேவியுடன் கூடியவனுய்ச் சிவபெருமானது இடதுபக்கத்தில் தனது வில்தபாணத்தைக் கையில் பிடித்துக்கொண்டு நின்றனன். அப்பொழுது எதிரிலுள்ளதான மன்மதனைப் பார்த்து யார் தான் மோஹிக்கமாட்டார்கள்? அத்தருணத்தில், பார்வதிதேவியானவள் பலவிதமான மலர்களோடுஞ் சேகரித்துக்கொண்டு தனது ஸஹிகளோடு கூடியவளாய்ச் சிவபெருமான் இருக்கும் இடத்திற்குச் சிவபூஜை செய்வதற்காக வந்தனள். இந்த உலகத்தில் காகாளிதமாயும் உயர்ந்ததாயும் எப்படிப்பட்ட ஸௌந்தர்யம் உண்டோ அந்த அழகு முழுவதும் அந்தப் பார்வதிதேவியினிடத்திலேயே நிலைத்திருந்தது. அந்தப் பார்வதிதேவியால் வஸந்த ருதுவில் உண்டான புஷ்பங்கள் ஸந்தோஷத்தோடு தரிக்கப்படுமேயானால், அவளுடைய ஸௌந்தர்யத்தை அதிக வருஷங்கள் கூறினும் வர்ணித்து முடியுமா? எப்பொழுது சிவபகவானது சமீபத்தைப் பார்வதியானவள் அடைந்தாளோ அப்பொழுதே மன்மதன் சிவபெருமான் பார்வதியின்மேல் மோஹிக்கத் தனது வில்லை வளைக்கையில், அது அவள் கையில் நின்றும் நழுகிச் சிவபகவான் பக்கத்தில் விழ, அவர் அதனால் மோஹங்கொண்டார்.

அப்பொழுது கருநெய்தல்போலிருக்கிற கண்களையுடைய அந்தப் பார்வதி மஹாதேவனைப் பார்த்து அச்சிவபெருமானை கமஸ்காரஞ் செய்து பூஜைகள்செய்து நின்றுகொண்டிருந்தாள். மிக்க அழகிய சரீரத்தையுடைய அப் பார்வதிதேவியைப் பிரபுவான சிவபெருமான் பார்த்து, அவளது அழகான சரீரத்தை வர்ணிக்கத்தொடங்கினார்:—இது முகமோ அல்லது சந்திரனோ? இவை கண்களோ கருநெய்தற் புஷ்பங்களோ? இப்புருவங்கள் இரண்டும் மன்மதனுடைய தனுஸ்ஸுகளோ? இது அதரமோ கொவ்வைக்கனியோ? இது காகைபோல கினியின் மூக்கோ? இது எள்புஷ்போ? கோகிலத்தின் ஆலாபமோ? இது மந்தமோ? இவளது நடையையும் உருவத்தையும் புஷ்பங்களையும் இவளது வஸ்திரங்களையும் இவளது சிருஷ்டியில் நிர்மாணம் பண்ணப்பட்ட ஸௌந்தர்யத்தையும் என்னவென்று அடிக்கடி வர்ணிக்க முடியும்? என்று, இவ்வாறு பார்வதிதேவியை வர்ணித்து யோகத்தில் நின்று ஒழிந்தவராக ஆனார். சிவபகவான் எவ்வளவுகாலம் பார்வதியின் முன்னிலையைக் காங்ஷாப்பரிசித்தனரோ அவ்வளவுகாலம் தூரத்திலேயே நின்றாள். மஹா ஸௌந்தர்யவதியான அந்தப் பார்வதியானவள் ஸ்திரீ ஸ்வபாவத்தினால் மிகவும் மெட்கத்தோடு கூடியவளாய்த் தனது அவயவங்களைப்ரகாசம்பண்ணிக்கொண்டும் அடிக்கடி சிவபெருமானைப்பார்த்துக்கொண்டும் நின்றனள். இவ்வாறுகப் பார்வதிசெய்துகொண்டிருந்த சிருங்காரங்களைப்பார்த்து, சம்புவானவர் மோஹத்தையடைந்து, ஆ! இவளது ஆலிங்கனத்தைதான் அடைவேனுனால் இதைக்காட்டிலும் அடையும்சுகம் வேறுண்டா? என்று கணகாலம் யோசித்துதான் என் மோஹாத்தையடைந்தேன்? சுகவரனுன தான் ஸந்தோஷத்தோடுகூட அங்கனம்பரிசத்தினை இச்சிப்பேனுகில்

வேறு எந்தவழியின் என்னைத்த அற்பத்தொழிலைச் செய்யமாட்டான்? என்று மனந்திரும்பி ஸ்ரீவாத்மாவான சதவரன் திருட்மான பூர்யங்கபந்த மாயற யோகபட்டத்தைத் தரித்தார்.

சிவபெருமான் யோகத்தமர்ந்த அத்தியாயம்
முற்றிற்று.

பதினொன்றாவது

பார்வதி பரிவர்த்தன முனைத்த அத்தியாயம்.

ருஷிகள் சொல்லுகிறார்கள்:—ஸூதமுனிவரே! பிறகு என்ன சம்பவம் நடந்தது? அதையும் சொல்லவேண்டுமென, ஸூதமுனிவர் சொல்லுகிறார்:—ருஷிகளே! அதன்பிறகு நிகழ்ந்தவற்றையும் சொல்லுகிறேன் கேட்பீர்களாக. யோகத்திற்கு நமுவுதல் வந்ததைப்பார்த்து இதற்குக் காரணம் ஏதாவது இருக்கவேண்டும்; காரணமில்லாமல் நேரிடாதென்று சிவபகவான் அப்பொழுது நான்கு திக்குகளையும்பார்த்தார். தனது இடதுபக்கத்தில் இருந்துகொண்டு பாதுகாப்புசெய்கிற மன்மதனைக்கண்டார். அவனைப்பார்த்துக் கடுங்கோபங்கொண்டு இதென்ன ஆச்சரியம்? ஒருவராலும் ஆக்ரமிக்கக்கூடாத தான், தக்ஷ்னை மன்மதனால் விடப்படவில்லை—என்று சிவபகவான் திருவுள்ளத்தில்கண்ணுகையில், அவரது நெற்றிக்கண்ணில் நின்றும் உயர்கின்றபின்ன ஜ்வாலைகளையுடைய அக்நியானது வெளிப்பட்டது. அந்த அக்நியால் அப்பொழுதே மன்மதன் பஸ்மமானான். எமதுபிரபுவான சிவபகவானே! பொறுக்கவேண்டுமென்று தேவர்களின் வார்த்தைகள் எவ்வளவுக்குள்ளுண்டாயினவோ, அதற்கு முன்னமே மன்மதன் சாம்பலாக்கப்பட்டான். மகாபலசாலியான அத்தமன்மதன் மரணத்தையடைந்தவே தேவர்கள் துக்கத்தையடைந்தார்கள். சிவபகவானும் அந்தக்கணத்திலே அந்த ஆச்ரமத்தைவிட்டு வேற்றிடஞ் சென்றார். பார்வதியும் திருடமான மனதையுடையவளாய், தனது ஆபரணஜாலியவற்றையெடுத்துக்கொண்டு சகிகளுடன் வேகமாகத் தனது தந்தைவீட்டைநோக்கி நடந்தாள்.

அப்பொழுது ரதி தேவியானவள் கூடைகளும் மூர்ச்சனையடைந்து, கணவன் மரணமடைந்ததால் உண்டான துக்கத்தையடையாதவளாய், நரபகம் உண்டாவதிற்கு ஆற்றமுடியாத துக்கத்தோடுகூடிக் கூச்சலிட்டு அழுதாள். அவள் அழுஞ்சமயத்தில் அவ்வனமும் துக்கத்தையடைந்தது. அப்பொழுது மயில்கள் தங்கள் கர்த்தனத்தை விட்டன. விருகங்கள் சலிப்பதை ஒழிந்தன. மிருகங்கள் தங்கள் மேய்ச்சலை நீங்கின. வண்டுகள் தங்கள் சீங்காரத்தை நீங்கின. ஓ பிராமணர்களே! எப்படி முனிவர்கள் மௌனத்தையடைந்திருப்பார்களோ அப்படியே பகிகளும் மௌனமாக இருந்தன. வாயுக்கள் சலிப்பதை நிறுத்திப் பக்தத்திசைகளிலும் வீசவில்லை. இவ்வாறிருக்கையில் ரதி சொல்லுகிறாள்:—என்னசெய்வேன்? எங்குபோவேன்? என்ஸ்வாமியான மன்மதனைத் தேவர்கள் வீணே அழைத்து என்ன காரியஞ் செய்தார்கள்? ஆ நாயகனே! நாயகனே! என்று மன்மதனையழைத்து, கைகளையும் கால்களையும் அடித்துக்கொண்டு கூந்தல்களையறுத்தனள். எனது கர்மத்தால் சமானமான போகமானது லிகிக்கப்படவில்லை. உலகத்தில் சுகத்தைக்கொடுப்பவனும் ஒருவனுங்கிடையாது; துக்கத்தைக்கொடுப்பவனும் ஒருவனுங் கிடையாது; ஆனால் ஸமஸ்தமான ஜந்துவும் தான்செய்த வினையையநுபவிக்கின்றது. ஆகையால் தேவர்களைப்பற்றிச் சோகிப்பதிற்பலனில்லை என்று இதுபோன்ற வார்த்தைகள் சொன்னாள். அப்பொழுது அந்த ரதிதேவியின் அழுகுரலைக்கேட்டு, தேவர்கள் சிவபகவானையடைந்து, அவரைத்துதிசெய்து, உலகங்களுக்குச் சுபத்தை யுண்டுபண்ணுகிற பகவானே சங்கரனே! நாங்கள் சொல்லும் விண்ணப்பத்தைக் கேட்கவேண்டும்; இப்பொழுது மன்மதனுஞ் செய்யப்பட்டகாரியம் தனக்காகவன்று; துஷ்டனான தாரகனாற் பீடிக்கப்பட்ட தேவர்களுடைய வேண்டுகோளாற் செய்யப்பட்டது. இதற்குச்சந்தேகமில்லை. ரதிதேவியானவள் தனியாய்த் துக்கிதையாய்ப் பிரலாபிக்கின்றனள். எம்பெருமானே! தேவரீர் எவ்விதத்திலுங்கிருபை செய்யவேண்டும்; தேவரீர் கோபித்தால் எல்லா அண்டங்களும் இப்பொழுதே அழியும்; ரதிதேவியின் துக்கத்தைப்பார்த்து;தேவர்கள்சகிக்கமாட்டாமல் மரணத்தையடைந்தவர்கள்போல இருக்கின்றார்கள்; ஆகையால் அவ்விரதிதேவியின் சோகத்தைத் தேவரீர் போக்கடிக்கவேண்டும் என்று, உலகங்களுக்குச் சுகத்தையுண்டுபண்ணுகிற சிவபகவானைத் தேவர்கள் நமஸ்காரஞ்செய்து இம்மாதிரி துதிசெய்து, கிருபைசெய்யும்படி பிரார்த்திக்கையில், சிவபெருமான் தயவுடையவராகிச் சொல்லுகின்றார்.

தேவர்களே! ரதிதேவியானவள் துக்கிப்பதுண்மையே! ஆயினும், எது உண்டானதோ அதுவேறுமாட்டாது. ருக்மணி பதியான கிருஷ்ணன் த்வாரகாபட்டணத்தில் வாசம்பண்ணிக்கொண்டு பின்னொருபுண்டுபண்ணப்போகிறான். அதுவரையில் இம்மன்மதன் சரீரமில்லாதவனாகவே இருக்கவேண்டும். பிறகு கிருஷ்ணன் ருக்மணியினிடத்தில் மன்மதனை யுண்டுபண்ணப்போகிறான். அம்மன்மதனுக்குப் பிரத்யும்னன் என்னும் பெயர்வழங்கப்போகிறது. இதற்கையமில்லை. இவன்பிறந்த ஸமயத்திலேயே இவனைச் சம்பரனென்னும்அசுரன் அபஹரித்துச் சமுத்திரத்தையடைந்து தன் நகரம் செல்லப்போகிறான். அவ்வளவுகாலம் அவ்வசுரனது பட்டணத்தில் இந்த ரதிதேவி இருக்கட்டும்; அதே நகரத்தில் மன்மதனையடைந்து சம்பரனையுத்தத்தில் மடித்து அவனது சர்வஸ்வங்களைத் தனது நகரத்திற்சேர்த்துக் கொண்டும் துவாரகையையடையப்போகிறாள். இது நிச்சயம். என்று அறிவித்து, தேவனான சங்கரன் அத்தேவர்கள் பார்த்திருக்கையிலேயே அந்தர்த்தானமாயினர். தேவர்களும் சிவபெருமானது வார்த்தைப்படி அந்தரதிதேவியையடைந்து அவர்சொன்ன வார்த்தைகளைச்சொல்லித் தங்கள் தங்கள்பதிகளையடைந்தார்கள். ரதிதேவியும்தனக்கு உத்தரவுசெய்தபடி அந்தச்சம்பரராசனின்

பட்டணத்தையடைந்தாள். முனீச்வரர்களே அந்நகரத்தைப்படைத்து சிவ பெருமானுற் குறிக்கப்பட்டகாலத்தை எதிர்பார்த்திருந்தனர். தேவர்களும் ஆ! ஆ! என்ன உண்டாகுமோ? என்று துக்கிதர்களாகி, தாரகாசுரனுக்கு வதம் எப்படியுண்டாகுமோ? என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண் டார்கள். பார்வதியும் தன் பிதாவின் விட்டை யடைந்து மாதாவான மேனை யோடு சேர்ந்து தன்னை மறுபடி பிழைத்தவளாக எண்ணினாள். தனுஸ்வுக் தர்யாதிரூபத்தை நிக்நிக்தாள். ஹாஹஷ்டம் ஹாகஷ்டம்என்னே வருந்தினாள். நித்திரைசெய்கையிலும், நிர்த்தபானஞ்செய்யும்பொழுதும், போஜனவேளையி லும், நடக்கும் நேரத்திலும், சதிமார் மத்தியில் இருக்கும் ஸமயத்திலும், எனது உருவத்தை நிந்திக்கவேண்டும் என்றுரைத்தாள். இவ்வாறு துக்க முத்துச் சுகத்தைச்சிறிதுமடையாமல், சிவத்தியானத்துடன் சிவசிவ என்று சிவநாமங்களை ஸ்மரித்துக்கொண்டிருந்தாள். இக்தர் சமயத்தில் நாரதக வான் அப்பார்வதி இருக்கும் இடத்தைவிட்டன்று கன்னப்பூஜிக்கப்பட்டுச் சுகமாய் உட்கார்ந்திருக்கையில், சிவபெருமானது பிரார்த்தியைக்குறித்துப் பார்வதிதேவி கேட்க, ஓ தேவி! சிவபகவானைத் தபஸாலேயே அடையலே யும். அப்படித்தபஸால் அடையாதபக்ஷத்தில், பிரமன் முதலான தேவர் களாலும் அவரை அடையமுடியாது என்று கூறினர்.

பார்வதி பரிவர்த்தனமுனைத்த அத்தியாயம்

முற்றிற்று.

பன்னிரண்டாவது

பார்வதி தபோவர்ணனமுனைத்த அத்தியாயம்.

வ்யாஸமுனிவர் சொல்லுகின்றார்:—ருஷிகளே! பார்வதாதேவியும் நாரதபகவானது வார்த்தையைக் கேட்டுச் சிவபெருமானைத் தவஞ்செய்து அடைவதேதருமென்று நிர்மலித்துத் தவஞ்செய்யமனங்கொண்டு, தானே கேரில் தாய் தக்தையர்களிடஞ் சென்று விஷயத்தை வெளியிட்டு உத்தரவு பெற்வேட்கமுடையவளாய்த் தனது தோழியர்களுக்குச் சொல்ல, தோழி கள் பார்வதராஜனை யடைந்து—அரசே! உமது குமாரத்தியாகிய பார்வதி யின் வார்த்தையைச் சொல்லுகிறோம். நீர் அதைக் கேட்டு ஸம்மதிக்க வே ண்டும்: அதாவது அப்பார்வதிபிறப்பை தனது தேஹத்திற்கும், ஸுக்தரத்திற் கும், உமது குலத்திற்கும் லாபல்யஞ் செய்ய விரும்பி, சிவபெருமானை நோ க்கித் தவஞ்செய்து அவரை மணம் புரிய அவாவுகின்றாள். அதற்கு உமது கட்டளையைக் கொடுக்கவேண்டும் என்றார்கள். பர்வதராஜன் இவ்வாறு கூறிய அத்தோழிகளின் வார்த்தையைக் கேட்டு, ஐகளே! இப்பொழுது நீங்கள் சொல்லிய விஷயம் எனக்குச் சம்மதமே; ஆனால் அவள் தாயான மேனை சம்மதிக்கவேண்டும். அப்படி மேனையுஞ் சம்மதித்து, பார்வதி தவஞ் செய்யும் பக்ஷத்தில் இதைக்காட்டிலும் உத்தமமானது வேறொன்றுமிராது.

இதனால் என்குலம் ஸாபல்யமடைய ஐயமே கிடையாது என்று கூறித் தோ ழிகளை மேனைபால் செல்லவிடுத்தான். பர்வதராஜனிடம் விடைபெற்ற அவ் விருதோழியர்களும் மேனையினுடைய அந்தப்புரஞ்சென்று, அவளைக்கண்டு, தாயே! உனது புத்திரியின் வார்த்தையை நாங்கள் சொல்லக்கேட்டு நீ அவ் வண்ணமேசெய்யவேண்டும்: அதாவது உன் புதல்வியான பார்வதி சிவபெரு மானைக்குறித்துத் தவஞ்செய்ய இச்சையுள்ளவளாய்ப் பிதாவின் அநுமதிபெ ற்று, உன் அநுமதியும்பெறும்படி அனுப்பியிருக்கிறாள்; இப்பதிவிரதை தன் உருவத்திற்குப் பிரயோஜனஞ்செய்ய அவாவுகிறாள்; உன் உத்தரவும் கிடை த்தால் இப்பொழுதே தவஞ்செய்யச் செல்வாள்; ஆதலால் உத்தரவளிக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

பார்வதியின் தோழிகளிருவருஞ் சொல்லிய வார்த்தையைக் கே ட்ட மேனை துக்கத்தை படைத்து தன் புதல்வியை நேரே வருவித்துச் சொ ல்லுகிறாள்:—ஏ பார்வதி! என் இயற்பவியே! நீ ஜன்மாக்ஷத்திற் செய்த தவப்பலனால்தான் இவ்வீட்டிற்பிறந்தாய். இன்னுனக்கு யாது குறைவு? நீ தவஞ்செய்ததற்கு எங்கேபோகிறாய்? இவ்வீட்டில் தேவர்களில்லையா? விசித்ர மான தீர்த்தங்களில்லையா? உன் பிதாக்ரஹமான இவ்விட்டிலேயே தவஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்யும் பக்ஷத்தில், நல்ல திவ்ய ஸித்தியுண்டா கும். நீ முன் சிவபெருமானை அருகே சென்று பணிவிடை செய்திருந்தபொ ழுது எத்தக் காரியத்தைச் செய்து முடித்தாய்? இனி எத்தக் காரியத்தைச் சாதிக்கப்போகிறாய்? உன் நேஹமோ மிகவுங் கோமளமானது! தவமோ மிகவுங் கடினமானதையால், உனக்குத் தகுதியல்ல. ஆயினும் நீ இங்கிருந்து கொண்டே தவஞ்செய்யவேண்டும். அப்படிச் செய்தால் சுலபமாகக் காரியம் கைகூடுமென்று தடுத்தாள். இவ்வாறு பார்வதி தன் தாயாகிய மேனையால் தடுக்கப்பட்டிருந்தபோதிலும், சிவபெருமானைப் பூஜிக்காமல் ஸுகமடைய வேயில்லை. அன்னபுரிந்த மேனை தன் குமாரத்தியின் துக்கத்திற்குச் சகிய வளாய்த் தவத்திற்குச் செல்ல விடைகொடுத்தாள். பார்வதியுமை தன் தாய்மொழி கேட்டவுடன் பெரும்மிழ்ச்சி யுற்றுத் தாய்தக்தையரைப் பணி ந்துவிடைபெற்று, இருதோழியர்களுடன்வரத் தவச்செயலே மேற்கொண்டி திவ்யமான வஸ்திரத்தையும் ஆபரணங்களையும் விலக்கி மரவுரியும் மானுங்கியுக்தரித்து, அந்த ஹிமாசலத்தில் உத்தமமான தீர்த்தங்களிரொரு திய ஒரு சிகரத்தையடைந்தாள். அச்சிகரம் அதுமுதல் பார்வதி தவஞ் செய்த காரணத்தால் கௌரீசிகரம் எனப் பெயர்பெற்றது. அவ்விடத்தில் விருக்ஷங்கள் அழகுள்ளனவாயும் பரிசுத்தமாயும் பலங்களாற் பரிபூர ணமாயுமிருந்தன.

பார்வதிதேவியானவள் பூமியைச்சுத்திசெய்து மஹா முனிவர்களுஞ் செய்ய முடியாத தவத்தைச்செய்ய ஆரம்பித்துத் தேஹவாஞ்சை சிறிதுமில் லாமல், குரியனிடத்திற் கண்களையமைத்து மேலான தவத்தைச் செய்தாள்.

அப்படியே *க்ரீஷ்மகாலத்திற் பஞ்சாக்நி மத்தியிலும், வர்ஷாகாலத்திற் பூமியிலும், குளிர்காலத்தில் ஜலமத்தியிலும் இருந்து, கடுந்தவஞ் செய்பவளாய் விருக்ஷங்களை வைத்தனள். அந்தக் கொளரீசிகரத்தில் காடோறும் விருக்ஷங் கட்குத் தண்ணீர் வார்த்துக் காப்பாற்றுவதுடன் அதிதி பூஜையுஞ் செய்து வந்தனள். பனிக்காலத்தில் காற்றுக்கும், மழைக்காலத்தில் மழைக்கும், எக் காலத்திலும் பசிக்கும் பயத்திற்கும் சிறிது மஞ்சாது, மகா முனிவர்களுஞ் செய்து முடிக்க அரிதியமான †தவத்தைச் செய்தாள். அது கண்ட ஸ்மீ பத்திலுள்ள ருஷிகள் யாவரும் இச்சிறுமியால் என்ன விதமான அருந்தவஞ் செய்யப்படுகிறதென்று, அங்கு வந்து கண்டு பிரமித்தார்கள். [பெரியோர் சிறியோரது தவமுதலியவற்றைப் பார்க்கப்போவது தகுதியாவென்றால், தவமானது யாவராலும் பூஜிக்கத் தகுந்தது.] அங்கு வந்து கண்டவர்களும் அவ்வாறு கண்டவர்களாற் சொல்லக் கேட்டவர்களுமாகிய ருஷிகள் ஆ! ஆ! கடினமான சரீரத்தை யுடையவர்களாலேயே செய்யமுடியாத இவ்வகைப் பட்டதவத்தை இவ்வம்மை எவ்வாறுசெய்யப்போகிறாள்? என்று சொல்லிக் கொண்டார்கள். அவ்வாசீர்மத்திற் கருகிலிருந்த சிங்கம் பச முதலிய மிருகங்கள் தமது இயற்கைப்பகை நீங்கி ஒன்றோடொன்று அளவளாவி வாழ்ந்தன; விருக்ஷங்கள் பலங்களோடு விளங்கின; விதவிதமான புல் பூண்டுகள் செழித்தன; புஷ்பங்கள் அலர்ந்தன. இவ்வண்ணமாக அவ்வம்மையின் தவஸ்வரூபத்தால் அவ்வனமானது ஸ்ரீ கைலாயத்திற்குச் சமானமாக நன்கு விளக்கியது.

பதின்மூன்றாவது
மேற்படி அத்தியாயம்.

வேதர் சொல்லுகிறார்:—முனிவர்காள்! இவ்வாறு பார்வதிதேவி அருந்தவஞ் செய்கையில், தேவர்களும் நாரதர் முதலிய மகருஷிகளும் பார்வதியின் தவத்தைப்பார்த்து, அதிதவத்தின் தேஜஸால் வியாபரிக்கப் பட்டவர்களாய், சிவபெருமான் வீற்றிருக்கும் ஸ்தானத்தையடைந்து, நாரத பகவானை முன்னிட்டுக்கொண்டு சென்று, சிவபெருமானை ஸேவித்து விஜ்ஞாபனமாகத்துதிசெய்து சொல்லுகிறார்கள்:—ஸ்வாமி! தேவாதிதேவ! தேவரிஷிசங்கர! விஸ்வரூபையுடையவர்! பார்வதிதேவியாரால் உலகங்களெல்லாந் தவஞ்செய்வதாயும், பார்க்கப்பயங்கரமானதாயும், முன்னொருகாலுங்காணப் படாததாயும், இனிவரப்போகாததாயும், தேவர் முனிவர் தானவர் முதலான வர்கட்குஞ்செய்யமுடியாததாயுமுள்ள ஓர் அரும் பெருந்தவஞ் செய்யப்படுகிறது. தேவரீர் ப்ரீதியுடையவராய் †எங்கள் காரியத்தைச் செய்யவேண்டும் என்று கூறினர். சிவபெருமான் நாரதர் முதலியோரைப் பார்த்து, தேவர்

* க்ரீஷ்மருதுஆனி ஆடிமாதங்கள். † எங்கள்காரியம் என்றது தேவரீர் பார்வதியை மணந்து, புதல்வனைப்பெற்று, தாரகனை வதைப்பது.

களே! உங்களைப் போன்றவர்களாலேயுங் காணமுடியாத தான இமாசல மன்னன்மகள் செய்யுந்தவத்திற்கு மனமகிழ்ந்தவனுக்குத் தானங்கொடுத்து அவளை மணஞ்செய்யப் போகிறது நிச்சயம்; இது விஷயத்தில் உங்கட்கு யோசனை வேண்டாம்; உங்கள் காரியம் ஈடேறுமாதலின், நீங்கள் இருப்பிடஞ் சேருங்கள் என்று கூறி விடைகொடுத்தனுப்பினர்.

சிவபெருமான் தேவர்களை விடைகொடுத்தனுப்பிய பிறகு, ஜடையையுடைய ஒரு பிராமணவேடந்தரித்து, பார்வதிதேவி தவஞ்செய்யும் ஆசிரமத்தை யடைந்தார். பார்வதி தேவி அவ்விருதியரைக் கண்டவுடன் பெருமகிழ்ச்சிகொண்டு அவ்விருத்த வேதியரை அழைத்துக்கொண்டுபோய் அர்க்கிய பாத்திய ஆசமநாதிகளால் உபசரித்துப் பூஜித்து, அவ்வனத்திலுள்ள பல முதலியவற்றைபளித்து உண்பித்தனள். வேதியர் தமது விருத்தத்தன்மைக்கேற்பச் சிறிதுநேரம்நித்திரைசெய்தனர். சிதலமான வன்றியமனிதனுள்ள அப்பிராமணனைப் பார்வதியம்மை ஸ்நேஹாதரத்துடன் விளித்து ஸ்நேஹவார்த்தைகள் பேசி, நீர் எங்கு வந்தீர்? என்ன விஷயம், வேதிய வடிவாக வந்த சிவபெருமான் தன் விரித்தாந்தங்களை ஒருவாறு சொல்லி, தனது நிஜவடிவைக் காட்டாது தான் கொண்ட வடிவத்திற்கேற்ப, கபடவார்த்தைகள் சொல்லத் தொடங்கினர். அதாவது—ஏ தேவி! இத்தீர்த்தம் - பலம் - உன் தவம் முதலிய யாவும் எப்பொழுதும் பரிபூரணமாக இருக்கவேண்டும். நான்விஷயமுதற்கு நீபதில்சொல்லவேண்டும். பால்யையான நீயுதாரணத் தாலே தவஞ்செய்கிறாய்? எனென்ன நலங்களினும் பூஜாவிதங்களினும் பூரணமாகச் செய்கின்றதனை நோக்கியே கம்மிருவருக்கும் ஸ்நேகம் பிறந்தது. உன் அந்தரங்கத்தை என்விஷயத்திற் பராட்டாது, நீ எதைவிரும்பித் தவஞ் செய்கின்றையோ அதைத் தெரிந்துகொள்ள இச்சிக்கின்றேன். உன்னிடத்திலேயே தவத்தின் ஸர்வபலமுங் காணப்படுகின்றன. இந்தத் தவம் நாயகன் ஸம்பாதிக்க விரும்பிச் செய்யும்பக்ஷத்தில் இதுவரையில் நிற்கட்டும். இரத்தினமானது தன்னைக் கொள்வோனைத் தேடிச்செல்வதில்லையாயினும், இரத்தினத்தைக் கொள்வோன் தானே வந்து விசாரித்துக் கொள்ளுவான். உனது திவ்ய லாவண்யம் தவஞ் செய்வதால் வியர்த்தமாகப் போகின்றது. உன் ஆபரணாதிகளை விட்டுத் தோல் முதலியவற்றை ஏன் அணிந்திருக்கிறாய்? அவற்றிற்குக் காரணஞ் சொன்னால், கேட்டு மகிழ்வேன் என்றார். அவ்வார்த்தையைக் கேட்ட பார்வதிதேவி தானே விடை கொடுத்தக் கூடாதவளாய், தன் ஸகிகளி லொருத்தியை யனுப்பி அவளால் ஸகலமான ஸங்கதிகளையும் வேதியவடிவாகவந்த சிவபெருமானுக்குந் தெரிவித்தாள்.

பார்வதி தபோவர்ணனமுனைத்த அத்தியாயம்

முற்றிற்று.

பதினான்காவது

பார்வதிக்கு வரங்கொடுத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—கைலாரண்ய வாசிகளே! மேல் பார்வதிக்கும், வேதிப் பிடிவாதவந்த சிவபெருமானுக்கும் நடந்த விஷயங்களைச் சொல்லுகிறேன். பார்வதி தேவியால் அனுப்பப்பட்ட தோழியானவள் அவ்வசனங்களைக் கேட்டு, ஐயோ! என்ன காரணத்திலல் பார்வதி தவஞ்செய்கிறாளென்றால், சகவாசத்துடன் கூடியிருப்பினும் இந்திரன்முதலிய தேவர்களை விட்டு, பிசாசமென்னும் வில்லேத்தாங்கிய சிவபகவானைத் தனக்குப் பதியாயடையவேண்டுமென்பதாகருதித் தவஞ்செய்கிறாள். அப்பார்வதி வைத்த விருதங்கள் பலங்கொடுக்கின்றன. இவளோ நாரதமுனிவர் விருப்பத்தின்படி தவஞ்செய்கிறாள் என்று சொன்னாள். அதைக்கேட்ட ஜடாதரராகிய வேதியர் எவர்வந்து! உன்தோழிசொல்லிய வார்த்தை சத்யமா? பரிஹாஸமா? இச்சையத்தை நீயே ஏன் சொல்லக்கூடாது? என்று கேட்க, பார்வதி தேவி அத்தனாரே! என் தோழிசொல்லியபாவு நிஜமே யேதிகமில். மனவாக்குகளுக்கெட்டாத அச்சிவபெருமான் என்னால் எப்படி அடையத்தக்கவர்? அப்படி துர்லபமாயிருப்பினும், மனதிருப்பத்தால் தவஞ்செய்கிறேன் என்று கூறி மௌனமாக நின்றனள்.

அதைக்கேட்ட வேதியர்—பார்வதி! நான் இப்பொழுது என்விருப்பின்படி செல்கின்றேன்; நீ எதை இச்சித்ததோ அதைத் தெரிந்துகொள்ள எனக்குப் பெருவிருப்பமிருக்கிறது; அதை உன் தோழியாலும் உன்னால் தெரிந்துகொண்டேன்; இனி நான் போகவேண்டுகிறேன்; இல்லாவிடில் ஸ்நேகமானது நமக்குக் குறையும் என்று கூறி வினையில் புறப்பட்டனர். அப்படி புறப்படுகிற அந்தப் பிராமண வேஷமுடைய சிவபெருமானைப் பார்த்துப் பார்வதி தேவி—ஸ்வாமி! என் போகப் புறப்படுகிறீர்? என்று வினவ, அதைக்கேட்ட தண்டதரராகிய விருத்த வேதியர்—பார்வதி! நான் உனக்கு மிகவும் அன்பனதையால் சொல்லுகின்றேன். நீயோ சக்தனத்தை விட்டுத் தேற்றைப் பூசவும், யானை வாஹநத்தை விட்டு எருது வாஹனமேறவும், கம்காஜலத்தை விட்டுக் கைற்றுநீரைப் பான்ஞ்செய்யவும், ஸூர்ய வொளியை விட்டு மின்மினிப்பூச்சின் ஒளியைக்காணவும், பட்டுவஸ்திரத்தைவிட்டுத் தோலாடையுடுக்கவும், வீட்டு வாஸத்தை விட்டுக் காட்டுவாஸஞ்செய்யவும் விரும்பினவளாய், நீ செய்யும் முயற்சி யுக்தமாகக் காணப்படவில்லை. தேவர் கிறைந்த ஸபையை விட்டு அசுரர் பாசர் நிறைந்த ஸபையை இச்சிக்கிறாய்; இந்திரன் முதலிய உலகபாலகரையெல்லாம் விட்டுச் சிவனை விரும்புகிறாய்; இது யுக்தமல்ல. மிக்க அநுசிதமாகவே காணப்படுகிறது. இன்னுஞ் சொல்லுகிறேன். பார்வதி! தாமரை மலர்போன்ற கண்களையுடைய நீ எங்கே முக்கண்ணுடைய அந்தச் சிவனெங்கே? சந்திரமுகியான நீ பெங்கே இந்தய



PAGE-40.

னை அச்சிவனெங்கே? வர்ணிக்க அசாத்தியமான கோரரூபங்களையுடைய நீயெங்கே ஜட்டாகூடனுகிய சிவனெங்கே? சந்தனதி வாசனையணிந்த தேஹ மூடைய நீ யெங்கே ஸ்மசான சாம்பலணிந்த உடலையுடைய சிவனெங்கே? ஸுகமான உனதுமெல்லிய பட்டாடையெங்கே அஸுகமான அவனது யானைத் தோல் எங்கே? உனது திவ்ய தோள்வளைகள் எங்கே அவனது பாம்பணி எங்கே? உனது சேவகர்களான தேவர்களெங்கே அவனது பூதகணங்களெங் கே? உனது ம்ருதங்கமுதலிய வாத்தியங்களெங்கே-அவனது டமருக மெங் கே? உனது பேரிகையெங்கே அவனது சிருங்கியெங்கே? உனதுடக்கமெங் கே சிவனது கல்லவாத்ய மெங்கே? ஆகையால் உனக்கும் அவனுக்கும் ஒற் றுமையான ரூபங்களிடையாது. அவனே [விரூபாக்ஷி] கோணலான கண்களை யுடையவன்; அவனதுருவங்ருடிமுதலியன எல்லிடத்தும்நன்றுக அறியப்பட வில்லை. அச்சிவன் செல்வவந்தனுகவிருக்கால்[நிகம்பன்] நிருவானனுக வன் இருக்கவேண்டும்? உலகத்தில் புருஷர்க்குள்ள விலக்ஷணங்களில் ஒன்று வது சிவனுக்குக்கிடையாது. அவன் வாஹனமோ எருது. வஸ்திரமோ யா னைத்தோல். அவன் வைப்யமோ பூதபசாசங்கள். அவன்கண்டத்திலோ விஷ மிருக்கின்றது. விடுகளில் வசிக்க அயோக்கியனுய் வருத்தையடைந்தவன் அவன்ஜாதி யின்னதெனத்தெரியாது. அவனது வித்தையும் ஞானமும் கண க்கிடப்படவில்லை. அவனை ஏகாங்கி-விரக்தன்-சிவன் ஸர்வஸம்மதனுன புருஷ னுயிருக்கால் மன்மதனைத் தகனஞ்செய்வானு? ஆகையால் அந்தச்சிவனிடத் தில் உன்மனதைச் செலுத்துவது யோக்கியமன்று! உனக்கும் சி னுக்கும் பலவகையிலும்தாரதம்யமிருக்கின்றது. அது எனக்குயுக்தமாகக்காணப்பட வில்லை. ஆயினும் விதியைவெல்லமுடியுமா? உன் இஷ்டப்படியேசெய்! அச் சிவபெருமானே ஞானநிதியென். அவனைசிப்பதுருத்ரபூமி; அவன் உலகத்திலு ள்ள ஸகலசானபோருள்களையெல்லாம் அடைகிறன். அப்படிப்பட்டவனி டத்திலிருந்து உன் மனதைத் திருப்புவது கஷ்டம். அது உனக்கு இஷ்டமில் லாவிடில் என்முன் நில்லாது போ என்று சொன்னர். இவ்வாறு கூறிய தண்டதரர் வார்த்தையைக் கேட்ட பார்வதாதேவி பெருங்கோபமுற்று, அவ்விருத்தனைநோக்கிச் சொல்லத்தொடங்கினள்.

சிவதூஷணஞ்செய்வதில் தேர்ச்சியுடைய முதியீரே! இவ்வளவு நேரம் உம்மைத் தன்யரென்றெண்ணியிருந்தேன்; இப்பொழுதல்லவோ நீர் அபத்தமானவரெனத் தெரிந்துகொண்டேன். தேவதேவரான சிவபெரு மானே யறிவேனெனக் கூறிய உமது வார்த்தை முழுப்பொய்யே யன்றி வேறன்று. நீர்நிச்சயமாக அறிந்திருக்கும்பக்ஷத்தில் விநோதமாகச்சொல்ல மாட்டீர். நீர் வஞ்சகர். அந்த ஜகத்ரக்ஷகரான சிவபெருமானது வாசாம கோசரமான ஸ்வரூபத்தை நான் சொல்லுகிறேன் கேளும். அவர் யோகித் துப் பார்க்குமிடத்தில் நிர்க்குணரோ. காரணத்தால் ஸகுணராகவும் நிர்க்கு ணராகவுமிருக்கிறர். அவருக்கு ஜாதியேது? பிறப்பேது? அவர் எல்லா வித்தைகளுக்கும் பிறப்பிடமானவர். அவரே முன் ஒருகாலத்தில் வேதங்

கனைச் சுவாஸமார்க்கமாக விஷ்ணுவுக்குக்கொடுத்தார். பரமாத்மாவும் பூரணருமாகிய அப்பகவானுக்கு விக்தையால் என்ன காரியம்? ஆதிபூதனாகிய அப்பெருமானுக்கு வயதேது? பிரகிருதியே அப்பெருமானிடத்திலிருந்து தோன்றியது. எவன் அப்பெருமானை நித்தியமாக அடைகிருனே அவனுக்கு ப்ரஹ்ம உத்ஸாஹ மந்த்ரஜ சக்திகள் கைகூடும். அவரது ஸேவையால் மிருத்யுவை நிச்சயமாக ஜயிக்கலாம். அவரே ம்ருத்யுஞ்ஜயர். அவரது பூஜையால் யாவர்க்கும் சுகம் உண்டாகிறது. அவருக்குச் சுகம் என்னத்திற்கு? ஏ துர்மதியே! அந்தச் சிவபெருமானுக்கு எப்படி ஆரோக்யமுண்டாகும். எந்தச் சிவபகவானது கடாக்ஷத்தினால் தேவர்கள் ஜீவந்தர்களாக இருக்கிர்களோ, எந்தப் பெருமானுடைய ஸேவைக்காகத் தேவர்கள் காத்திருப்பார்களோ, எந்தப்பெருமானுடைய கணங்கள் தரிஸைத்நிற்காகவரும் இந்திராதிதேவர்களை நெருக்கமொழிக்கவேண்டித் தமது கைத்தண்டங்களால் மோதி அவர்கள் கிரீடங்கள் பொடிபடின்றனவோ, அந்தச்சிவபெருமானே ஸ்வயம்பு. அவ்வகைய பிரபூவங்களையுடைய சிவபெருமான் என்னை இச்சிப்பாரில், கல்யாணரூபனும் தேவதேவனுமாகிய அந்தப் பெருமானுடைய ஸேவையால் எனக்குக் குறை ஏது? எல்லாப் பிறவிகளிலுந் தரித்திரனுகிருப்போன் சிவபெருமானை ஸேவித்தால் அவன் உடனே அஷ்டலக்ஷ்மியை யடைவான். எந்தச் சிவபெருமானிடத்தில் அணிமா முதலிய அஷ்டஸித்திகளும் நர்த்தனம் செய்கின்றனவோ அந்தப் பகவானுக்கு ஐஸ்வரியம் ஏன் துர்லபம்? அவர் எளியராகச் சாமானியர்கட்கு லீலாமாத்திரையாய்க் காணப்படினும், அவரைஸ்மரித்தலினாலேயே ஸர்வமங்களமும் உண்டாகின்றன. *சிவமென்னும் மங்களகாமானபெயர் எவன் முகத்தில் நிரந்தரமாக இருக்கிறதோ அவனது தரிசனத்தினாலே அந்யர்களும் பரிசுத்தர்களாக ஆகிறார்கள் நீர் சொல்லியபடி. பஸ்மமானது பரிசுத்தமில்லாமலிருக்கால் அச்சிவபெருமான் மகாகடனஞ் செய்த பிறகு, தேவர்கள் அதை எப்படி சிரசின்மேல் அணிந்துகொள்வார்கள். எந்தச் சிவபெருமான் உலகங்கட்கு ஆதியாயிருக்கின்றாரோ ஸ்வரனுயிருக்கின்றாரோ ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களைச் செய்விக்கின்றாரோ அவரை எப்படி யறியத்தகும்? இன்னும்சொல்லுகிறேன் கேளும்.

விருத்தவேதியரே! பரமாத்மாவாயும் பரப்ரஹ்மமாயும் விளங்கும் சிவபெருமானது அறியக்கூடாதவருவத்தை,உம்மையொத்த அஞ்ஞானிகள் எப்படி அறியக்கூடும்? தூராசாமுடையவர்களும் பாபிகளும் வேதமார்க்கத்திற்குப் புறம்பானவர்களும், நிர்குணனான சிவபெருமானை எப்படி அறிவார்கள்? தத்வவிசாரணையின்றிச் சிவபரம்பொருளை எவன் நிந்திக்கின்றானோ அவனது அந்தஜன்மத்திற்சேகரித்த புண்யம் பஸ்மமாகும். இப்பொழுது நீரோ அளவற்ற தேஜஸ்ஸையுடைய சிவபெருமானை வெறுவாக நிந்தித்

*ஸ்ரீவெகிஜ்மஹாதேவ ஸ-வையவ ஸ்ரீகண்ட (நிருத)
கலெள யஷ்டாரமீசானம் வதந்தி முனயோ ஜனாஃ (நாக)

நீர்? உமது ஞானத்தை அறிவாமல் விருத்தரென்று பூஜித்து உபசரித்தகாரணத்தால் யானும் பாபத்தையடைந்தேன். [ஸிவனிந்தனம் க்ருஷ்ணவைஷ்ணவாபராதஸமம் எவனொருவன் சிவபெருமானுக்கு த்வேஷியாயிருக்கின்றானோ அவனைக் கண்டால் (அப்பாப நீக்கம் வேண்டி.) *ஸசேலஸ்நானஞ் செய்யவேண்டியது.] ஏ துஷ்டரே! உம்மால் சொல்லப்பட்ட சிவபகவானை நானறிவேன். நீர் கன்றுக அறிவுகாட்டீர். அவர் எப்படிப்பட்டவராயிருந்தபோதிலும் அவரே எனக்கு ஆபீஷ்டர். மீண்டுங் கேட்டாலும் அதையே சொல்லுவேன் என்று கூறிப் பார்வதியானவள் தனது லீலையைப் பார்த்து, லீலையே! துஷ்டமனத்தையுடைய இவனை நீ தகையவேண்டியது. ஏனெனில், சிவநிந்தை செய்பவன்மட்டும் பாபத்தை யடைவதோடு போகாமல், அந்த நிந்தனையைக் கேட்கிறவர்களும் பாபத்தை யடைவார்கள். இவர் மறுபடியும் சிவநிந்தை செய்வாராகையால், நாமே இவ்விடம் விட்டு வேறு இடஞ் செல்வது நலம். இங்கு நெடுகேர்மிருக்கப்படாது என்று, தன் மனதைத் தானே நிந்தித்துக்கொண்டு வேற்றிடஞ்செல்லப்புறப்பட்டுத் தோழியருடன் காலெடுத்துப் பெயர்த்து வைக்கிறதற்குள்ளே, சிவபெருமான் தன் இஷ்டையான பார்வதிதேவியைக் குறித்துப் பிரஸன்னராஞர். பார்வதிதேவி தன் வடிவத்தை வெறுத்துக்கொண்டு, சிவபெருமானைத் தியானித்தவகையே விளங்கத் தரிசித்து, நாணத்தால் தலை குனிந்து நின்றனள். அதனைக்கண்ட சிவபெருமான் பார்வதி! நீ யென்னைவிட்டெங்கேபோவாய்? நீயேம்மால் விடத்தக்கவளல்ல. உன் தவத்திற்காகக் களித்துப் பிரஸன்னமானேன்; உன்னை லீலாமாத்திரையாய் மனஞ் சோதிக்க இவ்வகையாகக்கூறினேன்; உன் திடபக்தியைக் கண்டு மகிழ்ந்தேன். உனக்குக் கொடுக்கத்தகாத வரமே யிடையாது. வேண்டிய வரத்தைக் கேள். நீ உன் தவத்தால் என்னை அடைந்தாய். உனது அழகைப் பார்த்தால் ஒரு க்ஷணம் ஒருயுகமாகிறது. நீ நாணத்தை விடு. நமது வீட்டுக்குப் போகலாம் வா என்றிவ்வாறு சிவபெருமானுகூற, பார்வதாதேவி தனக்குண்டாயிருந்த துன்பத்தை நீங்கித் தபோபலனடைந்து தவத்தால் உண்டாகிய சிரமத்தைவிட்டாள்.

பார்வதிக்கு வரங்கொடுத்த அத்தியாயம்

முற்றிற்று.

பதினேந்தாவது

பார்வதியை மணம்பேசிய அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் அதைக்கேட்டு, மஹாபாகரான ஸூதமுநிவரே! அதன்பின் நடந்த சமாசாரங்களையுஞ் சொல்லி எங்கள் பாபத்தைப் பரிகரிக்கவேண்டும் என்று வினவ, ஸூதமுநிவர் சொல்லத் தொடங்கினர். ருஷிகளே! நான் அதன் தொடர்ச்சியையுஞ் சொல்லுகிறேன். பக்தியுடன் கேளுங்கள்—பார்வதிதேவி சிவபெருமானது வார்த்தையைக்கேட்டு, தான் முன் சொல்லிய கடோரமான சொற்களைக்குறித்து வெட்கமுற்று,—விவாகஞ் செய்துகொள்ளச் சித்தமாயிருந்து, வீட்டிற்குப்போவோம்: பார்வதி! என் காலதாமதஞ் செய்கிறாய்? என்று கூறும் சிவபெருமானுக்குப் பார்வதி, தேவதேவரே! தேவரீர் லக்நஷட்டாயிருக்கும்பகூத்தில் என்விஷயத்திற் கிருபைகூர்ந்து உத்தரவளித்து என்னைத் தந்தைவீட்டிற்கு அனுப்பி, பிரசித்தபுருஷர்களால் சுபமாயும் உத்தமமாயும் சிறந்ததாயுமுள்ள விதிக்கிரமமான விவாஹம் அவ்விடத்திற் செய்துகொண்டு, எனது தந்தையான ஹிமவான் பர்வதராஜன் சிருகத்தில் அவனது ஹகஸ்தாச்சிரம முதலிய யாவும் ஸபலமாகச் செய்யவேண்டும். மணவினை சிறப்பாகவும் என் தந்தை கண்டு பெருமகிழ்வெய்தவும் நீரே செய்விக்கவேண்டும் என்று தோழி மூலமாகக் கூறினள். அவ்வசனத்தைக் கேட்ட சிவபெருமான் அகங்களிதுளும்பி, பார்வதி! உனக்கு எது விருப்பமோ அஃது அப்படியேயாகுக எனத்திரு வாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர்.

பார்வதி தேவி தவப்பயனையடைந்து உடனே தோழியருடன் புறப்பட்டுத் தன் தந்தையாகிய பர்வதராஜன் மாளிகையையடைந்தனள். அதனையறிந்த மேனை அநேக தோழிபர் உறவினர் அந்தியர்முதலிய அநேகருடன் எதிர்கொண்டுவந்து ஜயஜயவென்று சொல்லிக்கொண்டு, நீ நற்கருமஞ் செய்தாய்: உன்னால் நாங்கள் யாவரும் பரிசுத்தராஞ்ஞும் என்று சொல்லி, சந்தன புஷ்பங்களால் பார்வதி தேவியைப்பூஜித்துக் கையுறைகள்கொடுத்து மாளிகைக்கு அழைத்துக்கொண்டு சென்றனள். அப்பொழுது ஹிமவான் நன்று நன்றென்று நாரதபகவானைத் துதிசெய்து தர்ப்புத்திரனைப் பெறுவதினும் சற்புதல்வியைப்பெறுவதேயுக்தமெனத் தனது இல்லறத்தைச் சபலமாக எண்ணினான். ஹிமாசல மன்னன் மாளிகை முழுவதும் ஆநந்தமயமாயிருந்தது. இதுநிற்க.

சிவபெருமான் பார்வதி தேவிக்கு வரங்கொடுத்து அந்தர்த்தானமான பிறகு காசிக்ஷேத்திரத்தையடைந்து ஸப்தருஷிகளை நினைத்தார். சிவபெருமான் நினைத்தபொழுதே கற்பகவிருட்சம் போன்ற ஸப்தருஷிகளும் அதனையுணர்ந்து,பரமாத்மாவாகிய சிவபெருமானைத்தியானித்துக்கொண்டு, விசித்ரமான முத்தி முதலியவற்றாலாகிய ஆபரணங்களையணிந்து தங்கள் தவத்தின் பிரத்தியக்ஷமான ஸித்திபோல விளங்கும் அருந்ததிமுதலிய அவ்

சிவபெருமான் பார்வதிதேவியை மணம்பேசுதற்காக ஸப்தருஷிகளை நினைத்தல்.

வலர் மஹேஸ்வியருடன் சென்று சிவபெருமானிருக்கு மிடத்தை யடைந்து நிற்க, சிவபெருமான் சூரியகாந்திபோல வினங்கும் சப்தருஷிகளைப்பார்த்து, தவசிஷ்டாபரார்யும் தேஜோவந்தர்களாயுமுள்ள மகருஷிகளும் சம்சார சம்பந்தினிகளா யிருக்கிறபடியால் நமக்கும் விவாகவிஷயத்தில் நாணம் வேண்டுவதில்லையென்று கருதினர். அப்பொழுது சப்தருஷிகள் சிவபெருமானை நமஸ்கரித்து, நாம் கிருதார்த்தராகுவுமென்றெண்ணி, நாம்பிரத்தியட்சமாகச் சிவசேவைசெய்வது சத்தியமோ? சொப்பன மாயையோ? அற்பர்களான நாமெங்கே! கிடைத்தற்கரிய சிவதரிசனமெங்கே! என்று இவ்வண்ணமாகக் கருதி, அன்புடன் மீண்டும் நமஸ்கரித்து எதிரில் நின்று, சிவபெருமானை நோக்கிச் சொல்கிறார்கள்.

அளவிறந்த தேஜஸையுடையராகவும் பகவானுகவும் உள்ள சிவபெருமானே! தேவரீருக்கு நமஸ்காரம். *கபர்த்தியாகிய தேவரீருக்கு நமஸ்காரம். மூன்றுதிருமுகங்களையுடைய தேவரீருக்கு நமஸ்காரம். †ஹிரண்யபாஹுவாகவும், நீலகண்டராகவும்உள்ள தேவரீருக்குநமஸ்காரம். ஸர்வவியாபகனுகவும் வியாப்பியனுகவுமுள்ள தேவரீருக்குநமஸ்காரம். சிவனுகவும்சிவரூபனுகவும், பிரணவரூபனுகவுமுள்ளதேவரீருக்கு நமஸ்காரம் என்று பலவாறு தோத்திரஞ்செய்துசொல்கிறார்கள். எல்லோருக்கும் மேலானவரே! ராஜாதிராஜரே! பிரபுவே! யாவர்க்கும் அருள்செய்பவரே! நாங்கள் தேவரீரை எவ்வாறுதுதிப்போம்? நாங்கள் முன்செய்ததவம்-வேதாத்தியயனம்-யாகங்கள்-அமாவாசை பௌர்ணமுதலிய புண்ணியகாலங்களிற்செய்ததானங்கள்-தீர்த்த ஸ்நானங்கள்-மனவாக்குக் காயங்களாற் சம்பாதித்தபுண்ணியம் முதலியவாவும் தேவரீரது தரிசனத்தால் ஸபலமாயின. தேவரீரை ஸ்மரித்தவன் இருதய இருத்திபனுவான். தேவரீரே எம்மை ஸ்மரித்ததால் எமக்குண்டானபாக்கியத்தை என்னவென்றுசொல்லுவோம். எம்பெருமானே! தேவதேவனே! தேவரீரது திருவுள்ளத் தென்னுதலாகிய அநுக்கிரகத்தால் யாவர்க்கும் உயர்ந்தவர்களானேம். நாங்கள் தேவரீரை எவ்வாறு அறியப்போகிறோம்? மிகக்குறியவனுக்கு உயர்மரத்துப் பழம் எட்டினற்போலும், பிறவிக்குருடனுக்குக் கண்கள் பிரசித்தியானற்போலும், ஊமைக்குப் பேச்சுண்டானற்போலும், தரித்திரனுக்குப் புதைஇடைத்தாற்போலும், முடவன் பர்வதத்தைத்தாண்டினற்போலும், மலடிக்குப் புத்திரோற்பவமானற்போலும், தேவரீரது தூல தரிசனமானது அடியேங்கட்குக்கிடைத்தது. இதுமுதல் ருஷி சிரேஷ்டர்களெனப் பெயர்பெற்றோம்; மான்யர்களாகவும் பூஜ்யர்களாகவுமானேம்; பெரும்பதவியனடைந்தோம்; இனி தேவரீர் அடியேங்கட்குச் சாத்தியமாகவும் சுபகரமாகவுமிருக்கும் பணிவிடை செய்ய ஆஜ்ஞாபிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள்.

---

* கபர்த்தி - சடையுடையோன்.

† ஹிரண்யபாஹு - சுவர்ணம்போற் பிரகாசிக்கும் தோள்களையுடையவர்.

சிவபெருமான் அவர்கள் வார்த்தையைக்கேட்டு, எவராலும் பூஜிக்கத்தக்க ருஷிகாள்! உங்களை நினைத்து வருவித்தகாரணமாவது பிரமனுல் வராத்மாவான தாரகாசுரன் பெருவரமடைந்து தேவர்களைத் துயர்செய்து வருகின்றான். வ்யயிவிஸ்வமிஂதெஜோ வாயுராகாஶதேவ்ந் । ஸ்ருஷ்டி-ர் ஸ்ருஷ்டிஹொஹோயாஜீவெதுஷ்டிஹுகி-ர்யீ॥ என்றபடி, நிலம்-நீர்-நெருப்பு காற்று-ஆகாயம்-சூரியன்-சந்திரன் பாகஞ்செய்வோன் எனப்பிரிந்த எனது அஷ்டமூர்த்தங்கள் உலகத்திற்கு உபகாரஞ்செய்வதற்கேயன்றி ஸ்வப்பிரயோஜனத்திற்காக அன்று என்பது தெரிந்த விஷயமே. ஆதலின் சிவையுடன்கூடி நிற்க விவாஹஞ்செய்துகொள்ள விரும்புகின்றேன். சிவையாகிய அப்பார்வதியோ ருஷிகளாலுஞ் செய்யமுடியாத கடுந்தவஞ்செய்து முடித்தாள். அவளுக்கு இஷ்டமான வரப் பலன் கைகூடவேண்டுமாதலின், நீங்கள் பர்வதராசன் மாளிகையையடைந்து பர்வதராஜனையும் அவன் மனைவி மேனையையும் இதமாயும் உத்தமமாயு மிருக்கும் இந்தக்காரியஞ் சாத்தியப்படும்படி பேசி, பார்வதியை மணமுடிப்பிக்கும்படி விரும்புகிறேன். பார்வதியே ஸர்வகுண பரிபூர்ணையான கன்னிகையாதலின் அவளே எனக்கு மணமுடித்துக்கொடுக்கும்படி ஹிமாபர்வதராஜனைக்கேட்டுத் திட்டப்படுத்திக்கொண்டு, தேவர்கட்கு நன்மையுண்டாமாறு விதிப்படி நீங்களே மணவினை நடத்திவிக்கவேண்டும். செய்யவேண்டியவற்றையெல்லாந் தெரிந்த உங்களுக்கு விசேஷமாகச் சொல்லவேண்டுவதில்லை என்று கூறினர்.

பிரபுவான சிவபெருமான் அருக்கிரகித்தவற்றை யெல்லாங்கேட்ட ஸப்தருஷிகள் நம்தன்னியர்களாகவும் ஒருதனிருத்தியர்களாகவும் மஹான்களாகவு மானமென்று ஆனந்தித்தார்கள். பிரமவிஷ்ணுக்களால் வணங்கத்தக்கவரும் எல்லாப் புருஷார்த்தங்களையும் கொடுக்கத்தக்கவருமான இச சிவபெருமான் உலகத்திற்கு நன்மையுண்டாகத்தக்க காரியத்தில் நம்மை யேவினர். இவரோ சர்வலோககர்த்தாவாயும், அப்பார்வதியே சர்வலோகமாதாவாயுமிருத்தலின், இப்பணியிடை மிகவும் யுக்தமானது. இக்காரியம் வளர்பிறைச் சந்திரன்போல் விருத்தியடையவேண்டும் என்று சொல்லிக்கொண்டு சிவபெருமானை நமஸ்கரித்து நமக்கு விசேஷ புண்ணியங்கிடைத்தது என்று ஆகாயமார்க்கமாகச்சென்று ஹிமாசலத்திலுள்ள பர்வதராஜனது நகரத்தை யடைய, அந்தத்திவ்வியநகரத்தைக்கண்டெருவரோடொருவர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ருஷி சிரேஷ்டர்களே! குபேரனதுஅளகாபுரியைக்காட்டிலும், இந்திரனது சுவர்க்கத்திலுள்ள அமராவதி நகரத்தைக் காட்டிலும், ஆதிசேஷனது போகவதி பட்டணத்தைப் பார்க்கிலும் இந்த ஹிமவானது நகரம் விசேஷமாகக் காணப்படுகிறது. ஸ்படிகக்கற்களாலும் அநேகரத்தினங்களாலுஞ் செய்யப்பட்ட அழகிய மாடமாளிகைகள் பிரகாசிக்கின்றன. சூரியகாந்தமணிகளும் சந்திரகாந்தமணிகளும் சுவர்த்தலங்களிலெல்லாம் விளங்குகின்றன. மனோரம்மியமான சித்திரங்கள் எழுதப்

பட்டுள்ளன. சோலைகளும் கற்பவனங்களும் தண்ணிய தடாகங்களும் நடைபாவிகளும் உத்யானங்களும் பலவிதமான மதாம்பொருந்திய கண்டத்தொனியையுடைய பக்ஷிகளும், என்ன விநோதமாயிருக்கின்றன? ஆ! இவர்கள் மனிதர்களா தேவர்களா? ஸ்திரீகளா சித்திரங்களா அப்ஸரசுகளா? இவர்கள் ஸௌந்தரியமென்ன? இப்பட்டணத்தை யாதென்று வர்ணிக்கமுடியும்? இந்த ஹிமாசலத்துக்குச் சுவர்க்கமும் நடாருமா? இந்நகரத்தைப் பாராதகண்களும் கண்களாமா? என்று ஆச்சரியத்துடன் இதுபோலப்பேசிக்கொண்டு அப்பட்டணத்தையடைந்து ஹிமவான்மாளிகை சமீபித்தார்கள்.

சூரியனுக்குச் சமமான காந்தியையுடைய சப்தருஷிகளைப் பார்த்த பர்வதராஜன் தன் மனைவியாகிய மேனையைநோக்கி, ஏழு சூரியர்கள் நமது வீட்டிற்கு வருகிறார்களோ? நான் இரவுகள்தனையால் இவர்களைப் பார்வதியே பூஜிக்கவேண்டியவள். இப்பொழுது தான் நாம் தன்யர்களானோம். என்று சொல்லிக்கொண்டிருக்கையில், ஸப்தருஷிகளும் ஆகாயத்தினின்றிறங்கினார்கள். அதுகண்ட ஹிமவான் அவர்களை எதிர்கொண்டு கண்டு, அவர்களைப்பூஜித்துத் தண்டாகாரமாய் அவர்கள் திருவடியில் விழுந்து சேவித்தான். ஸப்தருஷிகள் தங்கள் கைகளால் பர்வதராஜனைப்பிடித்துக்கொண்டு சுபமுண்டாக: சுபமுண்டாக: சுபமுண்டாக என்று ஆசீர்வதித்தார்கள். ஹிமவான் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து ஸ்வாமிகளே! இன்று தான் என்குடில் புனித மெய்தியது என்று கூறி, ஆசனங்கொடுத்து உட்காரச்செய்து, அவர்களால் ஆஜ்ஞைபெற்றுத்தானும் உட்கார்ந்து, மகான்களாகிய தாங்கள் எழுவரும் எந்தக்காரணத்தால் என்விட்டையடைந்தீர்களோ? நான்தன்னியனானேன். திருத திருத்தியனானேன்; உலகங்களில் யாவரும் பக்திசெய்தருக்தவனானேன்; தீர்த்த சமானனானேன்; நித்தியர்களாகிய உங்கட்குத் தரித்திரனாகிய என்விட்டில் என்ன காரியம்? என் தரித்திரத்தை யொழிப்பதற்காகவா? என்னைப்புனிதப்படுத்தவா? எனது திருகத்தைப்பவித்திரஞ்செய்யவா? எதற்காக வந்தீர்கள்? தாசனான எனக்கு அதனைச்சொல்லவேண்டும்? அவ்வாறு சொன்னால் எனதுதேகஸ்தாச்சிரமம் ஸபலமாகும். அடியேனுக்கு ஏதாவது கட்டளையிடுவதாலுல் விரைவிற் சொல்லியருளுங்கள் என் றில்வாறு கூறிய பர்வதராசனைப் பார்த்து ஸப்தருஷிகள் சந்தோஷித்துச் சொல்லுகிறார்கள்.

ஹிமவானே! நீ இப்பொழுது தன்னியனும் பாக்கியசாலியும் ஆயினும். பரோபகார சிந்தையால் சிவபெருமான் பிராணிகட்குச் சுகஞ் செய்ய விருப்பமுடையவராய் எங்கள் மூலமாக உமது புதல்வியான பார்வதியை அபேக்ஷிக்கிறார். அது உமக்குச் சம்மதமாய் அப்படி கன்னிகாதானஞ் செய்யும் பலத்தில் உலகங்கட்குச் சுகஞ்செய்கிற சங்கரபகவானுக்குப் பூஜ்யராக ஆவீர். இதற்குச் சந்தேகமில்லை. உமது பெண்ணும் அவரது திருவருளால் உலகமாதாவாவாள். உமது ஜன்மம் பிரயோஜனமாவதாகும் என்று

கூறினர். இவ்வார்த்தைகளைக் கேட்ட பர்வதராஜன் எனது பத்தினியாகிய மேனையின் கருத்தைத் தெரியவேண்டும். அப்பார்வதியே என்சரீரம் என் சம்பந்தி என்கீர்த்தி பிறிதொன்றல்லவென்று கூறி, மேனையோடு யோசித்து அவளிடத்தில் அவளுடைய அனுமதியைப் பெற்று, பார்வதியை உலகமாதாவாகப்பார்த்து, அவள் சரீரத்தைப் பூஜித்து, ருஷிகளின் மடியில் உட்காரவைத்து, ருஷிகளைநோக்கி ஓ! இந்தப் பார்வதி என்னால் உங்களுக்குப் பிரஸாதமாகக் கொடுக்கத்தக்கவள். என்னால் கொடுக்கத்தக்க பிரஸாதமிதுதானன்ன, ருஷிகள் ஹிமவானே! நாங்களே பிரஸாதர்கள்; நீரோ பிரஸாதங்கொடுப்பவர்; பார்வதி யே பிரஸாதமாம்பரானுள். இதைக்காட்டிலுஞ் சிறந்தது யாது? என்றார்த்து, பார்வதியைப் பார்த்து, தேவீ! நீ சிவபெருமானுக்குச் சகங்கொடுப்பவளாகுக என்று ஆசீர்வதித்துக் கையைப் பிடித்துக்கொண்டு, உனக்குச் சுபம் உண்டாகப்போகிறது. வளர்பிறைச் சந்திரன்போல உன் கணவர் உன் வீட்டில் சேர்ந்து காளாவண்ணமாக விருத்திபடையப்போகிறார்கள் என்று சொல்லி விடுத்து, ஹிமவானிடம் பலங்களோடு புஷ்பதாம்பூலங்களை ஒருவருக்கொருவர் (விவாஹஸ்திரஞ்சொல்லி) மாற்றிக்கொண்டார்கள். அச் சமயத்தில் மேனை கண்ணில் ஜலமொழுக்கினள். அதுகண்ட அருந்ததி சிவபெருமானது அகந்தகல்யாணகுணங்களை அவள் ஆசையுறச் சொல்லி, கண்ணீரைத் துடைத்தாள். பிறகு அந்த ருஷிகள் நான்காவது தினத்தில் உயர்ந்த லக்கினத்தை விவாஹத்திற்கு எற்படுத்தி நிச்சயஞ் செய்துகொண்டு பர்வதராஜனிடம் விடைபெற்றுச் சந்தோஷித்தவர்களாய் தமது ஸ்தானத்திற்கு டன் காசிக்ஷேத்திரத்தையடைந்து சிவபெருமானைத்தரிசித்து மனைவியின் முடிவு கூறி, தம்மிடஞ் சென்று மீண்டும் வருவதற்கு உத்தரவு கேட்டார்கள். சிவபெருமான் ஸப்தருஷிகளே! நீங்கள் என்னால் விவாஹத்தில் * அத்வர்யுக்களாகச் செய்யப்பட்டீர்களாதலின் நீங்கள் சிஷ்யர்களோடு வரவேண்டும் எனக் கட்டளையிட, ருஷிகள் அவ்வாறேயாகுக வென்று விடைபெற்றுத் தமதிடத்தையடைந்தனர்.

இப்பால் சிவபெருமான் தெளிந்த முகபங்கயத்துடன் கணஸஹிதமாக விவாஹத்தை விரும்பி, ஸ்ரீகைலாயத்தையடைந்து நாரதபகவானை நினைக்க, அவரும் உடனேவந்து தோன்றி, ஸ்வாமீ! அடியேனை நினைத்தகாரணமென்னவெனவினவி, சிவபெருமான் நிகழ்ந்த செய்திகள் யாவுஞ் சொல்லக்கேட்டு மிக்களிச்சோஷமுடையவராயினர். அப்பொழுது சிவபெருமான் பார்வதி கூறிய எனவார்த்தைகளைக் கூறி, பார்வதி என்னைச் சுவாதீனஞ் செய்யத்தக்க அரும்பெருந்தவஞ் செய்தனள் என்று கூற, நாரதர் சங்கரா! நீவீர் பக்தர்கட்குச் சுவாதீனமாவதையே விரதமாகக் கொண்டவராயிற்றே? பார்வதியின் மனோநிஷ்டத்தை நிறைவேற்றினீர். யான் செய்யத்தக்க காரியம் யாது? அது உத்தரவானால் செய்யத்தடையில்லை என்று கூறிய நாரதமுனிவர் வார்த்தையைக்கேட்டு, சிவபெருமான் நீ கூறியபடியே

* அத்வர்யு - காரியநிர்வாஹகர்த்தா.



(9. உமாதேவியாரைத் திருமணஞ் செய்ய சிவபெருமான் சகலதேவர்களுடன் எழுந்தருளல். PAGE-39.

பார்வதியை ஸ்வீகரித்தேன். இவ் விஷயத்தில் உனக்குச் சிறிதும் சந்தேக மே வேண்டாம். நம்மாற் சொல்லப்படும் காரியத்தை மீயே செய்யவே வும். நாரதரே! பிரமன் விஷ்ணு முதலிய தேவர்கள் சப்தருஷிகள் சப்த மாதர்கள் யக்ஷர்கள் கந்தர்வர்கள் நாகர்கள் முதலிய பாவனையும் விவாகத் திற்கு அழைத்துவருவதுடன் இவ்விவாகத்திற்கு வராதவர் எமக்குப் பிரிய ல்லரெனக் கூறவேண்டும் என்று சொல்ல, நாரதர் சிவபெருமானை நமஸ் கரித்துச் சென்று, சகலமான தேவர்களையும் கண்டு சிவபெருமான் கட்ட ளையை யுரைத்தலும், அதிசீக்கிரத்தில் சிவசந்நிதானத்தையடைந்தனர்.

பார்வதியை மணம் பேசிய அத்தியாயம்

முற்றிற்று.

பதினாறாவது

சிவபெருமான் திருமணத்திற்குத் தேவர் வந்த அத்தியாயம்.

வஸிஷ்டர் சொல்லுகிறார்:—முனிவர்காள்! தேவர்கள் யாவரும் சிவ பெருமானைப் பணிவிலேண்டுமென்னும் விருப்பத்தால், தத்தமக்குக்கிடைத்த திருமணத்திற்கு வேண்டிய உபகரணங்களெல்லாம் வந்து சேரச்செய்து, இந்திரன் முதலிய தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸ்திரீகளும் வாத்தி யம் நாட்டிய முதலியவற்றுடன் வந்து சேர்ந்தார்கள். பரிபூரணரான பெரு மானுக்கு அலங்காரஞ்செய்யவேண்டிய தொன்றுமில்லையாயினும், எல்லோ ரும் பக்தியுடன் சேவைசெய்யவேண்டுமென்னும் கருத்துடையவராய், தம்மாற் கூடியவரையில் மணாளனை அலங்கரித்தார்கள். சந்திரன் சிரோபரித்திலிருக் தான். திருநெற்றிக்கண் திலதமாயிற்று. கர்ணபரணங்களாகிய சர்ப்பங்கள் முதலியன கவர்களாகுண்டலங்களாயின. விபூதியே சந்தனமாயிற்று. யானைத் தோலே பட்டவஸ்திரமாயிற்று. சர்ப்பஆபரணமுதலியனவே நவரத்தினஆபரண களாயின. சிவபெருமானது மகிமையால் அவர் தேகத்திலிருந்த இயற்கை களே கண்டோருக்கு அலங்காரங்களாகத் தோன்றின. சிவபெருமான் யாவராலும் வருணித்துச் சொல்ல முடியாத ஸர்வாபரணாலங்காரரூபராக விளங்கினர். சிவபெருமான் இவ்வாறு அலங்கார சோபிதத்துடன் கூடியி ருக்கையில், பிரமதகணங்கள் சகலவாத்தியங்களோடும் கோஷித்தனர். தேவ ர்கள் அப்பொழுது பிரபு சேவைசெய்யவேண்டி வருவாராயினர். அவருள், பிரமதேவர் ஹம்சவாஹனாரூடராய் ஸகல ருஷிகளும் புடைசூழ்ந்துவர வை பவத்துடன் பூதபதியான பரமேஸ்வரனைச் சேவிக்க வந்து சேர்ந்து நமஸ்க ரித்து இருந்தார். விஷ்ணுபகவான் கருடாரூடராய் சகல சேவகர்களுடன் ஸர்வாபரணபூஷிதராய், பரிவாரங்களுடன் வந்து நமஸ்கரித்து அருகிலிருந் தார். இந்திராதி திக்பாலர்கள் யானை-குதிரை-சிவிகை-விமான முதலிய தம் கள் வாஹனங்களிலேறிப் பரிவாரங்களுடன் ஆயுதபாணிகளாய் வந்து பணி ந்து ஒருபுடையிருந்தார்கள். அக்நிவசுக்கள் - துவாதசாதித்தர்கள் - ருத்தி

கள்-கங்காநதிகள்-சப்தசமுத்திரங்கள்-கந்தர்வர்கள் - தேவதாசிகள்-நாகர்கள் முதலிய யாவரும் ஸர்வாலங்காரத்தோடு தங்கள் பரிசனங்களுடன் சிவபெருமானைச் சேவிக்கவேண்டிப் சமையம் இதுவேயென்று சந்தோஷத்துடன் வந்து சேர்ந்து, அவரவர்கள் ஒவ்வொரு கும்பலாக இருந்தார்கள். அந்தச்சமையத்தில் சிவபெருமான் ஸ்ரீகைலாயகிரியிலிருந்து புறப்பட்டுத் தேவர்களைப்பார்த்து நீங்கள் யாவரும் என்முன்னர் செல்லவேனப்பணிக்க, தேவர்கள் பெருங்களிகொண்டவர்களாய் சர்வவாத்தியங்களையு முழக்கிக்கொண்டு சிவந்தாமங்களை ஜயஜய வென்று கூறவும், சப்தருஷிகளாசீர்வதிக்கவும், பாதுகம்பன் ஆயிரம் வாய்களாற் சங்கத்தொனிசெய்யவும், வாஸுகரன் ஆயிரங் கைகளாற் குடமுழவடிக்கவும், திருநந்திதேவர் பொற்பிரம்பேந்தித் தேவர் முனிவர் கூட்டத்தைவிலக்கிக்கொண்டு முன்செல்லவும், இந்திரன் களாஞ்சியேந்தவும், ஈசானன் அட்டப்ப தாங்கவும், வாயு ஆலவட்டப் பணிசெய்யவும், அக்கினி தூபமேந்தவும், வருணன் பூரணகும்பந்தாங்கவும், நிருதி கண்ணாடி பிடிக்கவும், குபேரன் நவநிதிகள் சித்தவும், யமன் கஞ்சுகத்தோழில் புரியவும், நாகராஜர்கள் மாணிக்கத்தீப மேந்தவும், வேதங்கள் திருவடியைச் சுமக்கவும், கங்கைமுதலிய நதிமங்கையர் கவரிவீசவும், குண்டோதரன் குடைபிடிக்கவும், பிரமவிஷ்ணுக்கள் இருபுறங்கைகுவித்து வரவும், சர்வாடம்பரபூர்வமாகச் சிவபெருமான் இடபவாகனாரூடராய் ஹிமாசலத்தைநோக்கி வருகின்றவராயினர்.

இங்ஙிவ்வாறிருக்கையில், ஹிமாசலமன்னன் தன் பந்துமித்திரர்களையெல்லாம் வரவழைத்து விவாஹமண்டபத்தை விநோதமாக அலங்காரஞ் செய்து, நானவித விசித்திர தோரணங்களுங் கொடிகளுங்கட்டி, அதிகமகிழ்ச்சோஷத்துடன் பட்டனமுழுவதும் வர்ணிக்கமுடியாத வகையாக அழகு செய்திருந்தனன். மேருமுதலிய பர்வதங்கள் அவற்றின் மனைவிகள் புத்திரர்கள் புத்திரிகள் யாவும் மானுடரூபம் வஹித்து திருமணத்தைத் தரிசிக்க வந்திராபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு பர்வதராஜன்வீட்டில் விவாஹகாரியங்கள் செய்துகொண்டிருந்த வகையை வர்ணிக்க என்னால் முடியாது. பர்வதராஜன் தன் குமாரத்தியைக் கன்னிகாதானஞ்செய்ய மங்களஸ்நானஞ் செய்வித்து விவாஹத்திற்கு யோக்கியமான அலங்காரஞ் செய்வித்து, நாந்தி தேவதா ஆஹ்வானம்-அங்குராரோபணம் முதலான தேவபூஜை செய்து விவாஹோபகரணங்களைச் சித்தப்படுத்திச் சிவபெருமானைச் சகல தேவர்களுடன் அழைத்துக்கொண்டுவரும்படி தன் ஆப்த ஸ்நேகனான கந்தமாதன பர்வதத்தையும் மற்றொரு சேவகனையும் பதினெண்வகை மேளவாத்தியங்களோடு எதிரே அனுப்பிவைத்து, சிவபெருமான் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

சிவபெருமான் தன் சைன்யங்களோடும் சகலசித்திகளோடும் மஹாவைபவத்தோடும் பட்டன சமீபத்தில் வந்து சேருகையில், சிவபெருமான்

பரிவாரங்களோடு வந்தார் என்பதைத் தூதுவரால்றிந்த பர்வதராஜன் நான் இன்றுதான் ருகார்த்தனானேன் என்று மனதிலெண்ணி, தானும் தனதுபரிசனங்களோடு எதிர்கொண்டுபோய், பிரமவிஷ்ணுவாதி சகலதேவர்களோடுங் கூடிவரும் சாம்பவமூர்த்தியைக் கண்டு அதிக ஆச்சரியமடைந்தான். தேவர்கள் யாவரும் இப் பர்வதராஜனுடைய சேனையைப்பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். இரண்டு மகாசமுத்திரங்கள் ஒன்றுகச் சேர்ந்தாற்போல இவ்விரு சேனையும் ஒன்றுகூடியது. இவ்வாறு யாவரும் கலந்து நாம் கிருதார்த்தரானோமென்று மகிழ்ந்து பர்வதராஜனுடைய தானத்தை நோக்கி வந்தார்கள். ஹிமவான் அங்குவந்த தேவர்கட்கெல்லாம் தக்கபடி விடுதிகள் நியமித்து விடுத்து, தான் விவாகமேடையிற் சென்று அலங்காரங்களைச் சரிவரப் பார்த்து, ஸ்நானதானாதி நித்யகடன்களை முடித்துக்கொண்டு மணாளனது வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மேனா தாதருடன் தனதுப்பரிகையின் மேனிலையிலேறி மகாலஸ்தோஷத்துடன் கூடிப் பக்தர்களுக்குச் சுகத்தைக் கொடுக்கும் சிவபெருமானைக் காணவேண்டும்: அவர் எவ்வளவு அழகரோ? அவருக்காகப் பார்வதி அருந்தவஞ் செய்தனளே என்று கூறினள். அதனையுணர்ந்த சிவபெருமான் அம்மேனை மனம் பிரமிக்கும்படியான ரூபத்தைக் காட்டினர். மேனா தேவர் சேனையைக் கண்டு சந்தோஷமடைந்து, சிவபெருமான் இப்பெருஞ்சேனைக்கு காவலாயிருக்கும்பாகத்தில் அவர் எவ்வளவு சமர்த்தரும் புகழுடையவருமாய் இருக்கவேண்டுமென்று நினைத்திருந்தாள்.

முனிவர்களே! வேடிக்கையாயுள்ள ஓர் கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.—சவுந்தரியமான கந்தர்வர்கள் - அதிக எண்ணிக்கள் - நானவித அலங்காரங்கள் - அதிக வாகனங்கள் - பலவித துவனிகள் - தேவதாசிகள் முதலியவற்றோடுங் கூடிவரும் விச்சுவாவசு வென்னும் கந்தர்வராசனைக்கண்டு இவனே சிவனென்று களித்து என் மருகன் பெருஞ்சேனையுடன் கூடியிருக்கிறான் என நாரதருடன் கூற, நாரதர் ஐயோ இவன் சிவசம்பந்தியிற் சங்கீதம் பாடுவோன் எனை, மேனை இவள் மகிழ்வுறுவின் சிவபெருமான் எவ்வாறிருப்பானோ? என்று நினைக்க, மணிக்கிரீவன் முதலிய மகாகர்களும் அவர்கள் சேனையுந் தோற்ற அவர்கள் தலைவனை குபேரனைக் கண்டு இவனே சிவனென மயங்கிச் சொல்லிக்கொள்கையில், வருணன் தனது சேனைசூழ்ந்துடன் வர இவன்தானே சிவனே என்றும், யமதர்மராஜன் தன் பரிவாரங்களுடன் வரப்பார்த்து இவன் சிவனுமேனை என்றும், இந்திரன் தன் தேவதாசி முதலானவர்களுடன் வரக்கண்டு நான் பார்த்த யாவரிலும் இவனே பிரகாசமுள்ளவனாகவேண்டுமென்றும் நாரதருடன் சொல்ல, நாரதர் அவர்கள் ஒருவருமே சிவனேயல்லவென்கையில், சூரியன் அகண்ட தேஜஸையுங் கூடிச் சகல தேவர்களும் புடைசூழ்ந்துவரக்கண்டு இவன்தானே என, நாரதர் அன்று என, சந்திரன் சகல கிரகங்களோடும் அகண்டமான சுகாந்தியோடும் வரக்கண்டு இவன்

தாமே என்றும், இவனே மருகனுஞல் எல் குலமுழுதும் பவித்திரமாகும்; இவ்வாறுதேஜஸ்டையவன் என்மருகனுயின்,பார்வதியின்பாக்கியத்தை எத் தனைவருஷங்கள் சொன்னலு முடியுமா ? என்றும், பிரமதேவர் சகல பிரம ருஷிகளுடன் கூடி தேஜோராசியாய் வரக்கண்டு, இவனுவது சிவனுவாமோ ஹரனே என்றும், விஷ்ணு மேகவர்ணராயும் சதுர்ப்புஜ பீதாம்பரதாரியா யும் ஸ்ரீவத்ஸ - சங்க-சக்கர - கிரீடமுதலிய ஆபரணுலங்கிருதராயும், கோடி மன்மத சவுந்தரியராயும், தாமரைபோலுங் கண்களுடையவராயும், பக்தர் களுடன் கூடிக் கருடவாகனமிவர்ந்து வரக்கண்டு, இவனே சிவன் ; நான் தன்யனானேன் என்றும் கூற, நாரதர் இவரும் சிவபெருமான் அல்லர் ; இதைக்காட்டிலுஞ் சிறந்தவன் சிவபெருமான். அச்சிவபெருமானே வர்ணி க்க முடியாது என்றார். பிருகு முதலிய ருஷிகளும், கங்காதீர்த்தங்களும், திக்பாலகளும், இவ்டகாமிபக்ஷிகள்கெரடெக்கும் கற்பகவிருக்ஷங்களும், காம தேனு முதலியனவும் புடைசூழ இவர்கள் மத்தியில் பிருகுபதிமுனிவர் வர் கண்டமேனை இவனே சங்கரன் என, நாரதர் இவைக்காட்டிலுஞ் சிறந்த வரும் கீர்த்குணருமாகிய சிவபெருமான் வருவார் என, மேனை திரிலோகத் திலுள்ளவர்களையுங் கண்டேன்; இவர்கள் ஒருவரும் அல்ல என்றல் அர் தப்பகவான் எப்படியிருப்பாரோ என்று யோசித்துக்கொண்டிருக்கையில் சிவபெருமான் வர, அருகிருந்த நாரதர் மேனையே! இவரே சிவபெருமான் எனக் கூற, மேனை சந்தோஷித்துச் சிவபெருமானைப் பார்த்தனள். அவரு டன் வந்த வாயுரூபதாரான சேனைகளை மர்ம ஸ்தத்துடன் வருகையில் இவர்கள் அவர் சேனைகளென்றும், இன்னும் அவர் சேனைகள் வருமென் றும் கூறினர். பிறகு பூதப் பிரேத பசாசங்கள்-திரும்பிய முகமுடையோர்-விகடரூபதரர்-பயங்கரர்-கருநிறத்தர்-கொண்டிகள்-ரோமமுடையர் - தண்ட தரர்-பாசுபாணிகள்-விருத்தவஸ்திரர்-டம்ருகஸ்லவாத்தியக்காரர்-தாளமொ த்துவர் - கொம்பூதுவோர் முதலாகக் கணக்கில்லாத வருஞ் சேனையைக் கண்டு பயந்து, இவர்கட்கிடையே நிர்க்குணசகுணராயும் ஜ்ஞதிருமுகமும் பத்தக்காமும்திரிநேத்திரமும் விபூதிபணியும் சடைமுடியும் சந்திரசேகரமும் கபாலமாலிகாபரணமும் பெரும்புலித்தோலாடையும் நாகவில்லும் கங் காளமும் சங்கபூஷணமு முடையராய்ச் சிவபெருமான் ருஷபவாகனத்தின் மேல் யாணித்தாரே விரித்த எழுத்தருளியிருந்து நிந்தைசெய்து உட லுசைவன்போலிருந்தார். நாரதர் இவரேசிவபெருமான்என்று குறித்துக் காட்டமேனை கற்றுலடிபட்ட கொடிபோலத் தக்கமடைந்து சோர்வுடன் பூமிழுந்து, ஆ! பார்வதி! என்னசெய்தாய்? ஆ! துர்மார்க்கி! என்று சொல்லி மூர்சையடைந்து சிறிதுகோரத்தில் மூர்சைதெளிந்தெழுந்திருக் தாள்.

சிவபெருமான் திருமணத்திற்குத் தேவர் வந்த அத்தியாயம்
முற்றிற்று.

பதினேழாவது

மேனை அஞ்ஞானமயக்கமுற்ற அத்தியாயம்.

வஸிஷ்டர்:—மூர்ச்சை தெளிந்த மேனை நாரதமுனிவரையும் தன்குமா ரத்தியையும் நிந்தித்தனள். எப்படியெனில், நாரதரே! நீர் எமதரசனையடை ந்து உன் குமாரத்தியைச் சிவபெருமான் வரிக்கப்போகிறுரென்று கூறி, சிவ பெருமான் யோகத்திருக்கையில் பார்வதியைப் பணிவிடை செய்யச்செய்து எங்களுமோசஞ்செய்தீர். நாங்கள் பேரசம்பூதிகளும். முனிவர்களுஞ்செய்ய முடியாததவத்தைப் பார்வதி செய்துமுடித்தாள். அதற்குப் பார்க்கவும் மன ஞ்சாகியாத இப்படிப்பட்ட பலனையடையச் செய்தீர். நான் என்ன செய்வேன்? எங்கே போவேன்? எப்படி பிழைப்பேன்? கையில் விளக்கேற்றிக் கிணற் றில் விழுந்தவளானேன். உமக்கென்ன கெட்டது. எமக்கு எல்லாம் விபரீத மாயிற்று. அந்தச் சப்தருஷிகள் இப்பொழுது எங்கே போனுர்கள்? அவர் களைக்கண்டால் அவர்கள் மீசையைப் பறித்துவிடுவேன். அவர்களோடு வந்த அருந்ததியு மிகக் கொடியவள். அவர்கள் சொன்ன வார்த்தையாலும் என்புத்தியின் சுயவிருப்பத்தாலும் இவ்வாறுயது. இவள் இவ்விவாஹ முடி வுசெய்தது பொன்னைவிட்டுக் கருமணியைக் கொண்டாற்போலும், அன்னத் தைவிட்டுக் காக்கையைக் கூட்டில் வைத்தாற்போலும், கங்காஜலத்தை விட்டுக் கிணற்றுநீரைக் குடித்தாற்போலும், சூரிய வெளிச்சத்தைவிட்டு மின் மினிப்பூச்சியைப் பிடித்தாற்போலும், அரிசியைவிட்டு உமியைத்தின்றாற்போ லும், மனமுடைய கெய்யை நீக்கி விளக்கெண்ணெயைக் குடித்தாற்போ லும், சிங்கத்தை விட்டு நரியைப் பணிந்தாற்போலும், யாக பண்டத்தை விட்டு ஸ்மசான் சாம்பலை யணிந்தாற்போலும், சகல தேவர்களையும் விட்டு இவ்விகாரரூபியாகிய சிவன் நிமித்தமாகக் கஷ்டமான தபசைச் செய்ததற்கு இப்படிப்பட்ட பலனை யடைந்தாள். நாரதரே! உம்மையும் உமது புத்தியை யும் உமது நடக்கையையும் ஆலோசிக்கையில் கன்றுகவில்லை என்று கூறி, அந்தப் பார்வதியால் குலம்-நடக்கை-சாமர்த்தியம் முதலியன விபரீதமாக் கப்பட்டன. ஆகலின் இவற்றைக்கண்டு வெருட்டுவதைக் காட்டிலும் இறந் தொழிவதே யுத்தம். பர்வதராஜனே இனி எப்படி பார்ப்பேன்? எனக்கு என் சப்தருஷிகள்சொன்னப்பட்டார்கள்? அவர்கள் யாவரும் கூடி இவ்வாறு செய்து என் குலத்தைக் கெடுத்தார்கள். நான் மலடியாயிருப்பினு நன்று. அல்லது இறந்தொழியினு நன்று என்று பலவாறு அங்கித்துக்கொண்டிரு க்கையில் பிரமதேவர் அவ்விடம் வந்தார்.

பிரமதேவர் அவ்விடத்திற்குவந்தபொழுது, நாரதமுனிவர் மேனை யைநோக்கி, நீ சிவபெருமானுடைய யதார்த்தவடிவத்தைப் பதியவில்லீரென, மேனை யோ கஷ்டமோ! தூர்மார்யிரும்; ஒன்றுஞ்சொல்லவேண்டாம்என, பிரமதேவர் மேனை! நான்சொல்லும் வார்த்தையைக்கேள். சகலபகவான் உலகங்களைச்சிருஷ்டிப்பவரும் ரக்ஷிப்பவரும் சங்கரிப்பவருமாயிருக்கிறர்.

அவரது திவ்விய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளாமலே வீண்துயரடைந்
தாய் எனக்கூறுகையில், மேனே ஸ்வாமீ! நீங்களெல்லோருங்கூடி யாதுகார
ணத்தால் எமதுகுலக்கதை வியர்த்தமாக்கப் பிரயத்தனிக்கிறீர்கள்? பார்வதி
யின் சவுந்தரியத்தை அவலமாக்கி இவ்வகையானவனுக்குமணஞ்செய்வதை
விட, அவளைக் கொன்றுவிடுவது யுக்தமாதலின், நீங்கள் சிவனுக்குக் கொ
டுக்கும்படிச் சொல்லக்கூடாது எனச்சொல்லுகையில், இந்திராதி அஷ்ட
திக்குப்பாலகர்களும்வந்து மேனையைக்கண்டு, அம்மா! சிவபெருமான் ஸர்வ
தக்கமும் போக்கடிப்பவருமாதலாலும் உத்தமருமாயிருந்தும், தயையுடன்
உமது குமாரத்திக்குத் தரிசனங்கொடுத்தார். அத்தரிசனம் யாவர்க்
கும் கிடைக்கத்தக்கதல்ல எனக்கூற, மேனே மனம்பொறாது, இவ்வார்த்
தைகளொன்றும்உபயோகப்படாது. என்னிடத்தில்இப்படிச்சொல்வதைவிட
என்னைக்கொன்றுவிடுங்கள். குரூபியான சிவனுக்குப் பெண் கொடுக்கமாட்
டேன் என, அப்பொழுது சப்தருஷிகள் வந்து காங்கள் கூறியது விருத்த
மான காரியமல்ல. சிவபெருமானுடைய தரிசனம் விசேஷப்பலன்களைக்கொ
டுக்கத்தக்கது அவர் உங்களிடத்தில் தானம் பெறுதற்குச் சற்பாத்திரமாக
உமது வீட்டிற்கு வந்திருக்கிறார். சிவபெருமான் உமதுவீட்டிற்குவந்ததைக்
காட்டிலும் சுபத்தை உண்டுசெய்யத்தக்கது ஒன்றுமில்லை எனக்கூற, மேனே
அவர்கள் வார்த்தையையும் நிராகரித்து, நான் ஆயுதத்தாலாவது கொன்
றேனும்என்றிச் சங்கரனுக்குக் கொடேன் எனச்சொல்லிக்கொண்டிருக்
கையில், பர்வதராஜன் மேனையினிடம்வந்து அவளைத் துக்கத்தோடிருக்கக்
கண்டு, பிராணநாயகி! நமது வீட்டிற்கு யார் யார் வந்திருக்கிறார்கள்? இச்
சமையத்தில் நீ துக்கிப்பானேன்? என் அவர்களோடிருக்கிறாய்? சிவபெருமான்
சர்வலோகங்களையும் காப்பவரும், நிர்விகாரத்தைச் செய்பவரும், ஜகத்
திற் பூஜிக்கத்தக்கவருமா யிருப்பதை யானறிந்து கொண்டேன். உன் மனத்
தையைவிடு. விவாககாரியம் கடத்தவேண்டும் எனக்கூற, மேனே பர்வதரா
ஜனைப்பார்த்து, அதற்கு நான் கூறும் வார்த்தையைக்கேட்டு நீ அவ்வாறு
செய்யவேண்டும். அதாவது என் குமாரத்தியின் கழுத்தில் ஒரு பெரும்
பாம்பைக்கட்டி அனைவர் சமுத்திரத்தில் விட்டு நீ சுகமாயிரு எனச்சொல்
லிக்கொண்டிருக்கையில், பார்வதிதேவியார் அங்கேவந்து தாயே! உனக்கு
என் இப்படிப்பட்ட விபரீத புத்திவந்தது? தர்மத்தையே பிரதானமாகக்
கொண்ட நீ எவ்வாறு தர்மத்தை விடுத்தாய்? இச்சாம்பவமூர்த்தி சர்வோத்
தமரும், பிரம விஷ்ணு ருத்திராதிகட்குக் காரணமானவரும், எல்லோருக்
குஞ்சுகஞ்செய்பவரும், நிக்கிரகா நுக்கிரக சமர்த்தரும், சர்வமுந்தன்னிடத்
திலடையவரும், ஸர்வலோகங்களையுஞ் சிருட்டி திதி செய்பவரும், பிறப்பிறப்
பில்லாதவரு மாகலின் இத்தேவர்க ளெல்லோரும் சேவகர்கள்போல வந்தி
ருக்கிறார்கள். பார்த்தனையா? நீ என்னக்குஇதஞ்செய்பவளாயிருந்தால் இவரை
க்காட்டினுஞ் சிறந்தவர் யாருளரெனச் சொல்லவேண்டும். இதுவரையிற்செ
ய்த விவாகப்பிரயத்தனம் பலனுறச்செய்வாய்; உலகங்கட்குச்சுகஞ்செய்யுஞ்

சங்கரபகவானுக்கு என்னைக் கன்னிகாதானமாகக்கொடுத்து இவ்விவாகத்தை
பவித்திரமாகச்செய்வாய்; கஷ்டப்படாதே; துக்கத்தைவிடு. நீ என்னைச்சிவ
பெருமானுக்குக் கொடுக்காவிட்டால் நான் பிறனெருவனை மணம்புரியேன்.
இங்கமடையும் பொருளோ கரியடையுமா? தாயே! மனவாக்குக்காயங்களால்
நான் சுயமாகச் சிவபெருமானை வரித்தேன்;வரித்தேன்;வரித்தேன்: உனக்கு
இஷ்டமிருந்தாலும் அதைச்செய் எனக்கூறினள். அப்பார்வதியின் வார்த்தை
யைக்கேட்டு, மேனே மிகவும்கோபித்து, பார்வதி! என்வார்த்தைக்கெதிர்த்
துப் பேசவும் வல்லவளாயினையா? விஷங்கொடுக்கிறேன்; அல்லது கிணற்றில்
போடுகிறேன்; அல்லது கத்தியால் வெட்டிவிடுகிறேன்; அல்லது கானுவது
உயிர்விடுகிறேன் எனப்பிரலாபித்துப் பலவிதமாகத் தன்னிற்றானே கூறு
கின்றாள்.

சிவன் பிரபாவத்தை விசாரிக்கையில் தாய் - தந்தை - உறவினர் -
சகோதரர் - தாயாதியர் - கன்னடக்கை - சாதுரியம் - கல்லறிவு - வஸ்திரம் -
அலங்காரம் - போக்கியமான ஜனவர் - நல்ல வாகனம் - வாலிபவயது -
தனம்-பரிதாபம்-பித்தை முதலியவற்றில் ஒன்றுவேண்டா? எதைக்கண்டு
என் குமாரத்தியைக் கொடுப்பது? என்னசெய்வேன்? என்று சிந்தாகுலப்
பட்டு,அங்குள்ளாரைப்பார்த்துக்கூறுஞ்சமயத்தில்,விண்வாசிகளவர் அவ்
விடம் வந்துமேனையைப் பார்த்து, மேனே! போக்கியமான பிதுரர்க்கு மாந
ஸபுத்திரியும், அதிக லக்ஷணங்களையுடையவளும், ஹிமவான்தன் மனைவியும்,
பிரமவம்சத்தில் பிறந்தவளுமான நீ மகா புண்ணியவதி. உன் பாக்கியத்தை
நான் என்னவென்று சொல்லுவேன். தர்மத்திற்கு ஆதாரபூதமான நீ தர்
மத்தை யேன் கைவிடுகிறாய்? தேவர்கள் ருஷிகள் பிரமதேவன் நான் முத
லாக யாவரும் உன்னிடத்தில் நிஷ்பலமான காரியத்தைச் சொல்லுவோமா?
நாங்கள் சொல்வது சுபமல்லாதிருக்குமா? சுபமல்லவென நீ நினைக்கலாமா?
சிவபெருமானை நீ உண்மையில் அறியமாட்டாய்! அந்தப்பெருமான் நிர்க்கு
ணரும் சகுணருமாயிருக்கிறார். அவராலேயே சகல ஜகத்திற்கும் மூலகார
ணமானபிரகிருதி நிருமிக்கப்பட்டது. பிரகிருதியோடு விராட்புருஷன் உண்டு
செய்யப்பட்டான். பிறகு நான் உருத்திரன் ஆகிய மூவரும் முக்குணவ
த்தராகச் சிருஷ்டிக்கப்பட்டோம். பிறகு வேதங்கள் - தேவர்கள் - காணக்
கூடிய தாவர சங்கமங்களாகிய சர்வஜகத்தும் உண்டாக்கப்பட்டனையின்,
அம்மூலற்கடவுளாகிய பரமஸ்வாமியின் குணருபங்களை யாவரறிய வல்லவர்?
நானும் பிரமதேவனும் சிவபெருமானது பிரபாவத்தை ஆயிரம் வருஷங்
கள் சொல்லினும், முடியாது. சத்திய ரூபியும் ஞான ரூபியும் வியாபியு
மான வியாபகனும் ஜராமரணமற்றவனும் பிரபுவும் உபாசிப்பவர்கட்குச் சமீ
பத்திலிருப்பவனும், நான் - பிரமன் - ருத்திரன் - தேவர் - சூரியன் - சந்தி
ரன் - நிருதிகன் - பர்வதங்கள் - நதிகள் - குபேரன் முதலாகக் காணப்பட்ட
உலகமுழுவதையும் ஆக்கினவனும் அச்சிவபெருமானே. ஒரு விதையிலிரு
ந்து விருக்ஷந்தோன்றி காணுகிறமான கொம்பு இலை முதலாக உண்டாவது

போல, இந்தச் சிவபெருமானிடத்திலிருந்து பிரபஞ்சங்களெல்லாம் தோன்றின. ஜகத்தின் முதலிலும் இறுதியிலும் சிவபெருமானே இருப்பவர். சிவபெருமான் ஜகத்திலிருக்கிறார் ஜகத் சிவபெருமானிடத்திலிருக்கிறது. நானும் சிவம்: நீயும் சிவம்: சிவத்தைவிட இரண்டாவதுபொருள்இடையாது. அவ்வாறிரண்டாவதுஒருபொருள் இருக்குமென நினைத்தல் அஞ்ஞானமேயன்றி ஞானமாகாது. காரியமான ஜகத்திற் காரணமான சிவபெருமான் வியாபித்திருக்கிறதனால் காரியம் ஜகத் என்றும், காரணம் சிவமென்றுக் தெரியவேண்டும். அஞ்ஞானத்தஜ்ஞாரணகாரியங்கள் பேதமாகக் காணப் படுமன்றி ஞானிகட்குப் பேதமில்லை. சகல ஜகத்தும் சிவமயமேயாம் என்று கூறினர்.

மேரு அஞ்ஞானமயக்கமுற்ற அத்தியாயம்
முற்றிற்று.

பதினேட்டாவது
பார்வதி விவாக முனைத்த அத்தியாயம்.

மேனையைநோக்கி ஸ்ரீவஸிஷ்டர் மேலுஞ் சொல்லுகின்றார்: சிவபெருமானே யாவுமாக விளங்குகின்றனென்று வேதசிவாகமங்கள் கூறும். குற்றியைக்கண்டு மாடுடனென்றும், கயிற்றைக்கண்டு பாம்பென்றும், இப்பிளைக்கண்டு வெள்ளியென்றுஞ் சந்தேகித்து, உண்மையுணர்ந்தபிறகு, மாடுடனல்ல குற்றியென்றும், பாம்பல்ல கயிறென்றும், வெள்ளியல்ல இப்பிளையென்றும் மனச்சந்தேகந் நீங்கித்திடப்படுமாறு, அஞ்ஞானத்தால் சிவனுக்கு இரண்டாவதாகத் தோற்றும் பிரபஞ்சமுழுதும், ஞான முற்ற பொழுது மூக்காலத்திலும் சிவனே யென்று தெரியும். மேனு! உனக்கு இன்னும் திருஷ்டாந்தங்கள் சொல்லுகிறேன்—உலகத்தில் வேஷக்காரன் வெவ்வேறு வேஷத்தைத் தரித்தாலும் உண்மையில் அவனேயாக இருக்கிறான். தெரியாதவர்கட்கு வேறொருவனென்று மயக்கஞ்செய்து பொருள் சம்பாதிக்கிறான். தெரிந்தவரை அவனைக்கண்டு நகைக்கிறான். அப்படியே ஞானியானவன் பிரபஞ்சத்தைச் சிவனுக்கு இரண்டாவதாக நினையான். அஞ்ஞானியானவன் பிரபஞ்சத்தைச் சிவனுக்கு வேறாக நினைப்பான். அன்றியும், ஒரு புருஷன் அநேக வஸ்திரங்களைப் பலவிதமாக மடிக்கக்கருதி உடுத்துகிறான். வஸ்திரங்கள் வெவ்வேறுயினும் தரித்துக்கொள்பவன் ஒருவனே; அப்படியே சிவஸ்வரூபம் வேறொன்றிற்கலந்தபொழுது காணுக்மகமாகத் தோன்றுமன்றி விசாரிக்கையில் ஒன்றே. ஒருவனிடத்தில் கால் எனது என்னும் அத்போதம் இருக்குமளவும் பந்தமுண்டு. அகங்காரம் போம்பொழுது, தானே சிவமென உணர்வான். ஸ்படிகமணியானது செம்பருத்திப்புஷ்பசையோகத்தால் வேறுநிறமாகக் காணப்பட்டதுபோல, பிரகிருதி சம்பந்தத்தால் சிவபெருமானிடத்தில் அநேகத்துவம் தோற்றுகின்றது. பிரகிருதி



யைக் காட்டிலுஞ் சிறந்த பரிபூரணப் பிரமமாகிய சிவதத்துவார்த்தத்தை நாங்களே இதகாறும் அறியோம். ஆகலின் நீ துக்கத்தைவிட்டுச் சிவபெருமானே ஸேவைசெய்வென்று சிவபெருமானிடத்தில் பக்தியுண்டாகும்படி விஷ்ணுமூர்த்தி போதித்தனர். அத்தச்சமையத்தில் நாரதமுனிவர் சிவபெருமானிடஞ்சென்று, ஸ்வாமீ! நாங்கள் ஒவ்வொருவரும் தேவரீர் விஷயமாக மேனையினிடத்திற் பலவிதமாய்த் தூஷிக்கப்பட்டோமெனச் சொல்வதன் முன்னே, சிவபெருமான் பக்தவாத்ஸல்யத்தால் கண்டோர் மோகிக்கத் தக்க திவ்ய உருவம் வஹித்திருப்ப, நாரதர் மீண்டும் மேனையிடஞ்சென்று அம்மா! உலகமெல்லாம் மோகிக்கத்தக்க பேரழகுடைய உன் மருகனைப் பார் என, மேனையானவள் சிவபெருமானுக்குகோடி சூரியர்கட்குச் சமானமான காந்தியும், கல்ல குளிர்ந்த பார்வையும், சுந்தரமான ஆபரணங்களும், திவ்ய இடங்களும், விலையுயர்ந்த வஸ்திரங்களுந் தரித்து, புன்சிரிப்போடு விளங்கக்கண்டாள்.

ஸகல தேவசேனையோடுசூரியன் குடைபிடிக்கவும், சந்திரன் விசிறீவும், அணிமாதி அஷ்டசித்திகளும் நடிக்கவும், கங்காதி நதிக்கன்னியர்கள் ஸேவிக்கவும், பிரமன் விஷ்ணு உருத்திரர்முதலானதேவர்கள் ஜய ஜய வென்னக்கூறவும், ஸகல முனிவர்களும் பலவாறுதுதித்துக்கொண்டு கொடி கள்பிடித்துலாவவும், விச்சுவாவசுமுதலிய கந்தர்வர்கள் அரம்பாதி தேவதாசிகளுடன் அநேக வேஷங்கள் தரித்துச் சங்கீதகானஞ்செய்யவும், ஜகதணங்கள் யாவரும்-மிருதங்கமுதலியவாத்தியங்களோடு வாசிக்கவும், வேத-அங்க-ஸ்ருதி-ஸ்மிருதிகள் ரூபமடைத்து முன்னே நடக்கவும், சமுத்திரங்கள் நதிகள் அநேகமாக அலங்கரிக்கப்பட்டு முன்னேஉலாவவும், மகாப்பிரகாசத்துடன் சிவபெருமான் விளங்கிய திருக்கோலத்தை வர்ணிக்க யாருஞ் சக்தியுடையரல்லர். அப்படிப்பட்ட திவ்விய மங்கள விக்ரஹமாக விளங்குஞ் சிவபெருமானைப்பார்த்து, சித்திரப் பிரதிமைபோல அசைவற்று ஒன்றுக்கொன்று திருஷ்டிதான்றி, சிறிது நேரத்தில் மனந்தெளிந்து, தேவர்கள்யாவருங்கூறியபடியே இவர் அவ்வகைய சரீரத்தையே யடைந்திருக்கின்றனர், என் மகள் பார்வதி மகா புண்ணியவதியாதலின், இவ்வகைய ஜகன்மோஹக ஸ்வரூபனுஞ் சிவபெருமானுக்கு கணவனாக அடைந்தாள் என்றுகருதி, அவரது அவயவங்கள் ஒவ்வொன்றினையுஞ் சிறிது உற்றுப்பார்த்து மகா சந்தோஷமடைந்து மனதில் ரூபமுற்று இன்னுங் காணக்கூடாதவளாயிருந்தாள்.

தேவகணங்களோடுகூடிச் சிவபெருமான் சர்வாலங்கார பூஷணராய்ப் பர்வதராஜன் மாளிகைக்கு வருகையில், மேனா பிரம விஷ்ணுக்களிருபால்வர, இடையேவருஞ் சிவபெருமானைப் பூஜித்தாள். அப்பொழுது அந்த நகரத்திலிருந்த மங்கையர் யாவரும் மணாளனாகவருகையினாலான பரிணவனை மேளவாத்தியங்களின் தொனியால் மணாளனுக்குக் காணத் தாமதங்கள் செய்துகொண்டிருந்த வேலைகளை விட்டு அப்படியே ஓடிவந்தார்கள். அதாவது, உடம்பில் வாசனைப்பொருட்கள் தேய்ப்பவரும், கணவன் பூஜையிலிருந்

க்கையில் அவனுக்கு விசிறிக்கொண்டிருந்த விசிறினைத் தாங்கினவளும், குழந்தை பால் குடித்துக்கொண்டிருக்கையில் அதை விட்டு வந்தவளும், இடையில் ஒட்டியாணமணியிலெடுத்து அதைக் கையிற் பற்றிக்கொண்டும், வஸ்திரம் கட்டிக்கொண்டிருந்தவள் அதன் மேல் போர்த்துக்கொண்டும், கண்ணிற்கு மைதீட்ட வேண்டியவள் கையிலெடுத்திய சலாகையோடு ஒரு கண்ணிற்றீட்டி மறுகண்ணிற் றீட்டாமலும், கண்ணுடி பார்த்துக்கொண்டிருந்தவள் அக்கண்ணுடியோடும், [illegible]னவனுக்கு அன்னமிடப் பாத்திரத்தி லன்னமேற்றி வந்தவள் அவ்வன்னபாத்திரத்தோடும் குளிக்கையில் மஞ்சள் பூசிக்கொண்டிருந்தவள் ஒருகாலிற் பூசியும் ஒருகாலிற் பூசாமலும், இவ்வாறு தங்கள் தங்கள் காரியங்களை விடுத்துச் சிவபெருமானுடைய கலியாணப்பிள்ளையைக் காண ஓடோடிவந்து சர்வமங்கள விக்ரஹமாக விளங்கிய எம்பெருமானைக்கண்டு உடல் மறந்து சுவற்றிலெழுதிய சித்திரப் பிரதிமை போலச் சிறிது நேரம் அசையாதிருந்து, அவரிடஞ்சென்ற மனதை ஒருவாறு திருப்பி, ஒருவரோடொருவர் ஆஹா! பார்வதி செய்த அருந்தவத்தால் கல்லபுருஷனையடைந்தாள். இவனது அற்புதத்திருவுருவத்தையாரவே வர்ணிப்பவர்? எப்படி வர்ணிக்கமுடியும்? இவருடைய சிவபெருமான் [illegible] களமூர்த்தி] என்னும்பெயர் இவருக்குத் தகுந்ததே. இவரைப்பார்த்தது லேயே அதிக புண்ணிய பலனையடைந்தோம். இவ் விமாசலமன்னன் பட்டணத்திலிருந்ததாலன்றே நாம் கண்களிற்பெற்றதனுலண்டான பலனையடைந்தோம்? இவ்வரிய திருவுருவத்தைக் கண்டவருடைய ஜன்மமும் கிரியையும் ஸபலமாகும். மிகுந்த கஷ்டமான தவஞ்செய்து இவ்விமவானைக்கணவனாகப்பெற்ற பார்வதியே தன்யையாயும் மிகுத கிருத்யையாயுமிருக்கிறாள். இப்பார்வதி புத்தியுள்ளவளாகையால் அவளைச் சந்தோஷப்படுத்தத் தடையிராது. பிரமன் இத்தம்பதிகளை ஒன்று சேர்க்கச்செய்ததே விசேஷம். பார்வதியின் தவம் பெரும்பல னளித்தது. லக்ஷ்மியானவள் விஷ்ணுமூர்த்தியை மணஞ்செய்தாற்போல நமது பார்வதி இச்சிவபெருமானை மணஞ்செய்கின்றாள். பொன்னுடைய இரத்தினத்தோடு கூடினால் நன்றாய்ப் பிரகாசிப்பதுபோல, இப்பார்வதி சாம்பவமூர்த்தியைக் கண்களை அடைந்ததனால் கல்ல சுகத்தை யனுபவிப்பாளென்றுசொல்லி, வந்த புஷ்ப அக்ஷதைகளைச் சிவபெருமான்பேரிற் சமர்ப்பித்தார்கள். சிவபெருமான் இவர்கள் சம்பாஷணையைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து சிறிது நேரமிருந்து பர்வதராஜன் முதலியோர் முன்னின்றனுப்பத்தப்போகத் தனது பரிவாரங்களோடும் விவாஹவேதிகையைச் சேர்ந்தார்.

பிரமதேவர் புரோஹிதராகச் சப்தரிஷிகள் முதலானவருடன் சதுஷ்கோணமான திருக்கல்யான மண்டபத்திலிருந்து அத்யாதி ப்ரயோகமுதலான விவாஹசடங்குகளை நடத்தினர். அப்பொழுது பர்வதராஜனும் மேனையும் ஸ்நானஞ்செய்து ஆடையாபரணாலங்கிருதராகி வந்தனர். பர்வதராஜன் தன்னுடைய கோத்ர முறையைக்கூறி, சிவபெருமானுக்கு ஆவாஹநம்

பாத்யமும் அர்க்யமும் பட்டவஸ்திரம் நிலகம் புஷ்பஹாரம் பொன்னாங்கள் முதலியவற்றைச் சமர்ப்பித்துப் பூஜித்து, வேதிகையில் மேனையுடன் உட்கார்ந்து அக்நிப் பிரதிஷ்டாபனஞ்செய்தனன். சுமங்கலிகள் மங்கலப்பாடல்கள் பாட, லக்ஷ்மி சரஸ்வதி யிருவரும் தோழியராகிச் சகலாபரண பூஷிதையாக விளங்கும் பார்வதிதேவியை அத்தப்புரத்தினின்றும் கைலாகுகொடுத்து அழைத்துக்கொண்டுவந்து சிவபெருமான் சமீபத்தில் இருக்கச்செய்தனர். பிரமன் மந்திரோச்சாரணஞ்செய்ய, மேனை கரகதீர்வார்க்க, ஹிமவான் சிவபெருமானுடைய திருவடியை விளக்கி அவ்வுதகத்தைத் தானும் தன் மனையும் சிரந்தார்க்கர்களாகத் தங்கள் சிரமேற்புரோக்ஷித்துக்கொண்டும், சிறிது உட்கொண்டும், பின்பு சாஸ்த்ரதாகதாரா பூர்வகமாய், பார்வதியின் கையைப்பற்றிச் சிவபெருமான் திருக்கரத்தில்வைத்து என்குமாரத்தியான இப்பார்வதியைத் தேவரீருக்குச் சமர்ப்பித்தேன் என்று கொடுத்தான். உடனே சிவபெருமான் தமது திருக்கரத்தால் மாங்கல்யதாரணஞ் செய்தனர். தேவர்கள் முனிவர்கள் யாவரும் ஆசீர்வதித்தார்கள். ஸுமங்கலிகள் அக்ஷதைகள் சமர்ப்பித்து வணங்கினர்கள். தேவதுந்துபிகள் முழங்கின. தேவர் முதலியவருவரும் பொழிந்தார்கள். உலகமெல்லாம் மகிழ்ச்சி பூர்த்தன.

பார்வதி பரமசிவன் என்னும் வதூவரர்களிருவரும் அக்னிப்பிரதக்ஷிணஞ்செய்துகொண்டிருக்கையில், சிவபெருமான் உமாதேவியின் திருவடியைத் தமது கரத்தாலெடுத்துவைக்க, பார்வதி அம்மி மிதித்தனள். அருந்ததியை நினைக்க அவள் நமஸ்கரித்துக்கொண்டே யெதிர்வரப்பார்த்தார்கள். திருவனும் சப்தருஷிகளும் எதிர்வந்தார்கள். மீண்டும் சிவபெருமானையும் பார்வதிதேவியாரையும் மத்ரசனத்திலிருக்கச்செய்து வேதோக்தமாக ஆசீர்வதித்து யாவருஞ்சந்தோஷித்திருக்கையில், தேவர்கள் யாவரும் உலகமாதாவாகிய பார்வதிக்கும் உலகநாதாவாகிய சிவபெருமானுக்கும் நமஸ்கரித்து, தாங்களோ உலகத்திற்குமாதா பிதாக்கள்: இந்த நிமிஷமுதல் நாங்கள் பெரும் புண்ணியத்தை யடைந்தோமென்று புகழ்ந்தார்கள். அப்பொழுது கந்தர்வர் அப்ஸரசுகள் திருத்தம்கானம் வாத்தியம் முதலியவற்றைச் செய்தனர். பர்வதராஜனும் மேனாதேவியை முடித்துப் பார்வதியைச் சிவபெருமானுக்குக்கொடுத்து, தனது வம்சமும் தனதுகிருகஸ்தாச்ரமமும் சபலமானதென்றுகளித்தான். சிவபெருமானும் பார்வதியுமாகிய வதூவரர்களிருவரும் தாம் கொண்ட தோலத்திற் சேர்ப்பதும், தம்மைப் பார்த்துப் பிறர் அவ்வாறுசெய்யவும் ருஷிதேவதா பிரார்த்தனஞ் செய்து, கங்கணவிசர்ஜனமுடித்து அத்திருமணத்திற்கு வந்திருந்த சப்தருஷிகள் முதலானவர்களைச் சிவபெருமான் * கைகுவித்து அநுக்ரஹித்தனர். ஹிமவானும் தன்னுற்றுடியவனையில் யாவரையும் பூஜித்தனன். அப்பொழுது தேவர்கள் யாவரும் நாம் இவ்விமாசலமன்னன் முன் எவ்வளவென்று நினைத்தார்கள். இப்பூஜா

* சிவபெருமான் அவ்விருடியர்க்குச் கைகூப்பல் தருமோ வெனின், அவர்கள்தம்மைப்போலவே வேதியர்களாதலாலும், தாம் அடியார்க்கடியராதலாலு மையும்.

ஞானங்களைக்கண்ட பிரமவிஷ்ணுவாதிதேவர்கள் இதுகாறும் கண்டும் கேட்டும் இல்லாமையால், ஒன்றுஞ் சொல்லமுடியாமல் அதிசயமுற மானுர்கள். அங்குவந்த யாவரும் மரியாதை பிக்கடைந்து பெருங்களிப்புற்றார்கள்.

தேவர்களும் மகருஷிகளும் சிவபெருமானும் ஹிமவானும் பூஜிக்கப்பட்டும் வெகுமானிக்கப்பட்டும் களித்திருக்கையில், பர்வதராஜன் இப்பொழுது என் ஜனனமும் என் பிழைப்பும் என் இரகஸ்தாச்சிரமமும் பலனுற்றனவென்றன். மேலேயானவன் தான் முன்செய்தகுற்றங்களெல்லாம் மன்னிக்கப்படவேண்டும்: என் குலம்பவித்திரமாயிற்று. என் புத்திரியாகிய பார்வதியால் எல்லாப்புகழும் அடைந்தேன். இவளே எங்கள் புத்திரியாய் அவதரிக்காவிடின் சிவபெருமான திருமால் பிரமதேவர் மற்றத் தேவர்கள் முனிவர் யகூஹர் கருடர்முதலியயாவரும் இங்குவரநேரிடுமா? நீங்கள் மஹா புண்ணியர்களாகையால் இதுவரையில் யான் செய்த குற்றங்களை மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனன். அதனைக்கேட்ட தேவர்கள் அதிக சந்தோஷமடைந்து மீ கிருதகிருத்தியை. ஜகத்ரக்ஷகராகிய சிவபெருமானுக்கு பார்வதியைக் கன்னிகாதானஞ் செய்த பலன் எவ்வளவு எனக் கூறரிய மேனு! பர்வதராஜன் மனைவியாய்ப் பிரசித்திபாயிருந்த மீ பார்வதி தேவியைக் குமாரத்தியாயடைந்தமையின், உன் புகழ்சொல்லத்தக்கதல்ல. மீ எங்களைக் கிரஸ்கரித்தவை சுகமுடையனவா யென்னினும். உன் ஐசுவரியம்விருத்தியடைக. உன்க்குச் சுகமுண்டாக. இனி நாங்கள்போகிறுமென்று, மீண்டும் பர்வதராஜனை ஆசீர்வதித்து அவனது நமஸ்காரத்தையடைந்து சுகலவாத்திய கோஷத்துடன், பர்வதராஜன் மேனை முதலானருடன், தேவர்கள் சமீபித்து உடன்வர, சிவபெருமானும் பார்வதாதேவியும் ஸர்வ தேவர்களும் புறப்பட்டு வழிக்கொண்டு, கைலாயகிரியை நோக்கிச் சென்றார்கள். அப்பொழுது பர்வதராஜனும் மேனை முதலிய இவன் மனைவிகளும் கந்தமாதன பர்வத வரையிலுஞ் சென்று வழிவிட்டுத்திரும்பினர்கள். அன்று முதல் பர்வதங்கள் கிருதார்த்தமாயின. அப்பருவதங்கள் பெற்றபலனை வர்ணிக்கமுடியாது. விஷ்ணு-பிரமன்-இந்திராதி தேவர்கள்-மகருஷிகள் முதலிய யாவரும் ஸர்வ வாத்தியங்களுடன் கிருத்த நாட்டிய முதலிய வைபவத்துடன் திருக்கயிலாயகிரியையடைந்து, சிவபெருமானது திருமாளிகையில் பார்வதியைத் திருஷ்டிவிவேசஞ் செய்வித்து, ஸ்வாமீ! தேவரீர் பார்வதி தேவியுடன் சுகித்திருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்து, அநுக்ரஹம் பெற்று விடைகொண்டு சிவகடாக்ஷமுற்றுச் சிவபெருமானது விவாகமஹோற்சவத்தைப் புகழ்ந்து பேசிக்கொண்டு தங்கள் தங்கள் நகரத்தையடைந்தனர். தேவர்களுக்குண்டான சந்தோஷத்தையும் சிவபெருமான் அநுக்ரஹித்த வகையையும் விவரிக்கவேண்டுமானால் நூறு வருஷங்களானும் முடியாது. முனிவர்களே! நீங்கள் கேட்டபடியால் எனக்குத் தோன்றிய வரையிற் கூறினேன். மகாபாக்கியமுள்ள வாசிகளே! சிவபெருமானது விவாக



PAGE. 51.

(11. சிவபெருமான் பார்வதியை மணஞ்செய்து முருகவேளைப் பெறுதல்.

மஹோத்ஸவசரிதத்தையாவது, அதில் ஒரு ஸ்லோகத்தையாவது, ஸ்லோக அர்த்தத்தையாவது கேட்டவர்கள் சகல சம்பத்தும் பெற்று, அஞ்ஞானம் நீங்கி, அஷ்டைசுவரியமும் ஆயுராரோக்யமும் கன்னியாலாபமும் பெறுவார்கள்.

பார்வதி விவாகமுரைத்த அத்தியாயம்.

முற்றிற்று.

பத்தோன்பதாவது

தாரகன் வதையுந் திரிபுரதோற்றமுமுரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்ய வாசிகள் ஸூதமுனிவரைப் பார்த்து, புண்ணியரே! சிவபெருமான் பார்வதி தேவியாரை மணஞ்செய்த பிறகு, புத்திரனைத் தந்து தாரகாசுரனை என்வரமு மதைத்தனரோ, அதனையும் விபரமாகக் கூறியருள வேண்டுமென, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்:—சிவபெருமான் பிரட்டியாரோடு அக்கப்புர மடைந்து நிறைகாலம் விநோத லீலாமாத்திரையாயமர்ந்திருந்தனர். தேவர்கள் தாரகாசுரனால் மிகவும்பீடிக்கப்பட்டுத் தாங்கள் சிவபெருமானைக் கண்டு விண்ணப்பஞ் செய்துகொள்ளச் சாத்தியமின்றிப் பெருந்துயரத்திலாழ்ந்தவர்களாய், அதிக வருடங்கள் கழித்து ஒருவரோடொருவர் பலவாறு தங்களைத் தாங்களே நிந்தித்துக்கொண்டு, கடைசியாய் அக்கினிபகவானை யடைந்து, ஐயா! சிவபெருமான் பெருமாட்டியை மணஞ்செய்தும், தமது வீரியத்திற் புத்திரோற்பவஞ் செய்து தாரகனை வதைக்கவில்லையே. நீரே எம்மிற் சிறந்தவராதலின், எங்கள் கஷ்டத்தைப் பெருமானுக்குச் சொல்லவேண்டும். நீரே இதற்குத் தக்கவர்: உம்மையன்றிப் பிறிதொருவரால் இக்காரியம் ஆதலில்லை எனப்பிரார்த்திக்க அக்கினிதேவன் ஓர் புருவடிவேற்று மெல்லென உட்புகுகையில், சர்வாந்தியாமியான சங்கரர், யாரடா கபோத வடிவுடன் வருவோன்? என் வீரியத்தை அவனே தாங்கக்கடவன் என்று வீரியத்தை விடுப்ப, அக்கினி தனது புருவடிவத்தோடு அவ்வீரியத்தை வடிவிற்கல்லிச்செல்ல வலுவற்றுக் கங்காநதியில்விட, கங்காநதியும் அதைப் பரிக்கமுடியாது தருப்பைப் புல்லில் விட்டது. அத்தருப்பைப்புல்லில் விழுந்தபொழுது அவ்வீரியத்தினின்று முருகக்கடவுள் அதிசுந்தரமும், கண்டவர்டன் சகலகங்களையுங்கொடுக்கத்தக்க வல்லமையும், காந்தியுமுடைய குமாரரூபமடைந்து விளங்கினர். அங்கே நீராடவந்த ஆறுஇராஜகன்னியர்கள் இக்குழந்தையைக்கண்டு இது என் குழந்தை: இது என் குழந்தையென்று அவர்கள்ஒவ்வொருவரும் முலைகொடுத்தனர். [illegible]
குமாரக்கடவுள் ஆறுமுகத்தோடுஅவ்வரிடத்தும்பால்
த்தால் அவருக்கு ஷண்மாதுரன் [அறுவர் புதல்வன்]
வந்தது.

ஜ்யொயம்ஜ்யஸ்ச வதந்த்யஸ்சபரம்பரம் ।
வம்பாதி-ஷண்முகாஹ்வ ப்ரீதஸ்தஸ்யம்வயம்ததா ॥ கஇ ॥
ஷாண்மாதுரஸ்ததாகாம ஜ்வரித்தந்தமஹாத்மக: ।

மதியோயம்மதீயஸ்ச வதந்த்யஸ்சபரம்பரம் ।
ஸம்பாத்யஷண்முகாஹ்வ ப்ரீதஸ்தஸ்யம்வயம்ததா ।
ஷாண்மாதுரஸ்ததாகாம ஜ்வரித்தந்தமஹாத்மக: ।

அவ்வளவுவரும், பார்வதி மைந்தன் என்றும், அக்கினிபுத்திரன் என்றும், ஸ்கந்தன் என்றும், கங்காபுத்திரன் என்றும், சரவணபவன் என்றும், ஷாண்மாதுரன் என்றும் பல திருநாமங்களைக் காரணத்தால் அடைந்த சுப்பிரமணியக்கடவுளிடத்தில் அத்தியந்த விருப்பமுடையவர்களாய் அவனைப் புத்திரனாகப் பாவித்துப் போஷித்து வந்தார்கள். இச்சங்கதியை நாரதமுனிவரால் தேவர்கள் யாவரு முணர்ந்து சந்தோஷத்துடன் சிவபெருமானிடம் வந்து தண்டாகாரமாகப் பணிந்து, அவருடைய கட்டளைபெற்று, சுப்பிரமணியக்கடவுளைத் தங்கள் சேனைபதியாகக் கொண்டு அவருக்குச் சர்வாதிகாரமுங் கொடுத்துச் சோணிதபுரத்தை யடைந்து, பத்துத் தினங்கள் தோரமானயுத்தஞ்செய்து பிறகு மகாத்மாவான குமாரக்கடவுளால் தாரகாசுரனைக் கொன்று சத்துருஜயமடைந்தார்கள். அப்போரிலிருந்த அசுரசேனையில் ஓடிப்போனவரொழிய மற்றையோர் மடிந்தார்கள். இவ்வாறு சோணிதபுரத்தில் நடந்த யுத்தத்தில் தீயோர் யாவரும் ஒழிய, உலக முழுவதும் க்ஷேமமாயிருந்தது. தேவர்கள் முனிவர்கள் சுகமடைந்தவர்களாய்த் தங்கள் நகரங்களையடைந்து பரிபாலித்து ஆனந்தமயமாய்ச் சுப்பிரமணியக்கடவுளுடன் சிவசந்நிதியை யடைந்து தேவதேவா! மஹா தேவா! விஸ்வேஸ்வரா! பரமாத்மா! பரா! பரா! வாதா! பவா! புவனு! அகந்தபலா! பூதநாதா! சம்ஹர்த்தா! கங்காதரா! திரியம்பகா! திரிசூலதாரீ! கபர்த்தி! பரமாத்மா! தண்டதரா! வேதமந்திரப்பிரதாரா! சிருஷ்டிஸ்திதி சங்காரகாரா! அருபா! ஸ்வரூபா! நீலகண்டா! பஸ்மதாரீ! கைலாயநாதா! பர்வதங்களில் மேருவே! நக்ஷத்திரங்களில் சந்திரனே! ருஷிகளில் வசிஷ்டரே! சகல வேதங்களிலும் ஓங்காரரூபரே! ஸ்வாமீ! ஸம்சார துக்கத்திலிருக்கும் எங்களை ரக்ஷிப்பவர் நீரே. மஹாப்பிரபூ! நாங்கள்செய்யவேண்டியதொழில் ஏதாவது இருந்தால் கட்டளையிடலாம் என்று கூற, சிவபெருமான் சந்தோஷமிருந்து, தேவர்களே! முனிவர்களே! உங்கட்கு எப்பொழுது துக்கம் வந்தாலும் அப்பொழுதே அதனை யொழிப்போம். நீங்கள் எம்மை எப்போதும் வணங்கி வாருங்கள் என்று கடாக்ஷிக்க, யாவரும் அப்படியே சம்மதித்துப்பணிந்து விடைகொண்டு தம நிருப்பிடஞ் சென்றுசேர்ந்து மனக்குறையின்றிச் சிவபூஜைசெய்துகொண்டிர்கள் எனக் கூறிய ஸூதமுனிவரைப் பார்த்து ரைமிச்சாரணிய கள் தாரகாசுரவதம் நடந்தபிறகு நிகழ்ந்தவற்றைக் கூற முனிவர் சந்தோஷித்துச் சொல்லலுற்றார்.



தாரன்பெற்ற புதல்வனுகிய தாரகாசுரனைக் குமாரக்கடவுள் கொன் றொழித்த பிறகு, தாரகன் புதல்வர்களாகிய வித்யுன்மாலி தாரகாக்ஷன் கமலாக்ஷன் மூவரும் அதிக நியமத்துடன் சிவனிடத்தில் உக்கிரமான தவத் தைச் செய்தார்கள். இவ்வகையாகத் தவஞ்செய்வோர் ஒற்றைக்காலினின்று நூறுவருஷங்களும், பூமியிலிருந்து அதோக முகமாய் வருஷங்களும், வாயுபக்ஷணத் துடன் அதோக வருஷங்களும், அதிக தாபமுண்டாகப் பல வருஷங்களும், தலைகீழாகநின்று ஆயிரவருடங்களும், கைகளை மேலுயர்த்தி நூறு வருஷங்களுமாகத் துக்கரமான தவத்தை அதோக வருஷம் பிரமதேவனை நோக்கிச் செய்தார்கள். அவர்கள் கொடியோரேனும் தவஞ்வாலேயா லகமழியுமாதலின், அவர்கட்குப் பிரமதேவர் பிரசன்னராகி, உங்கட்கு வேண் டிய வரம் யாது? உங்கள் தவத்திற்கு மகிழ்ந்தேன் ஏன, அசுரர் மூவரும் தேவரீர் எங்கட்கு வரமளிப்பதாயின் ஸ்வப்பிராணிகளினும் ஒருவராலே னும் இறவா வரமளிக்கவேண்டும் என வேண்ட, பிரமதேவர் நீங்கள் எப் பொழுதும் இறவாதிருக்க யோகமில்லை யாதலின், வேறே வரங்கேளுங்கள் என, அசுரர் ஆலோசித்துப் பிரமதேவரே! அடியேங்கட்கு எண்ணியவிட த்திற செல்ல வலியுடைய பொன்-வெள்ளி-இரும்புகளா லாகிய மூன்று பட் டணங்கள்வேண்டும். அவை ஆயிரவருஷத்திற்கொருமுறை சேரவேண்டும். ஆயின், அம்மூன்று பட்டணங்களும் ஒன்றுகூடியிருக்குஞ் சமையத்தில் ஒரே பாணத்தால் அம்முப்புரங்களையும் அழிக்க வல்லவனிருந்தால் அவனால் நாங்கள் இறக்க வரந் தரவேண்டும் என, பிரமதேவர் அவ்வாறே யாகுகவென் றருளி, மயன் என்னுந் தச்சனைக் கண்டு, பொன் வெள்ளி இரும்புகளால் மூன்று பட்டணங்கள் நிருமித்து, தாரகாசுர புத்திரருக்குக் கொடுக்கக் கட் டளையிட்டுத் தனது பதவியை யடைந்தார். பிறகு, மயன் பிரமதேவர் கட் டளைப்படி புரங்கள் மூன்று நிருமித்துப் பொன் பட்டணத்தைத் தாரகாக்ஷ னுக்கும், வெள்ளிப்பட்டணத்தைக் கமலாக்ஷனுக்கும், இரும்பு நகரத்தை வித்யுன்மாலிக்கும் கொடுத்தான். அவற்றுள் காஞ்சனபுரியைச் சுவர்க்கத்தி லும், இரசிதபுரியைப் மத்தியத்திலும், ஆயசபுரியைப் பூமியிலும் சஞ்சரிக்கத் தக்கதாகச் சூத்திரம் வைத்து, பட்டணம் ஒன்று யோசனை விஸ்தீரணமுடை யதாகச் செய்துகொடுத்ததுபற்றி, பலவான்களான அம்மூவரும் அநேகம் பொருள்களைப் பரிசளித்து வெகு மரியாதை செய்தனுப்பி அப்பட்டணங் களை யடைந்து, யானை தேர் குதிரை சேவகர் முதலிய சேனைகள் - கற்பக விருக்ஷம்-சந்தனவனம்-மேனை-சந்திரசாலை-சித்திரத்தொழில்கள் - சூரியமண் டலம்போன்ற விமானங்கள்-பதுமராக மணிகளாலாகிய விமானங்கள்-கைலாசசிகரம்போன்ற விமானங்கள்-அநேக சாரணர் சித்தர் முதலியோர் வசிக்கும் இடங்கள்-சிவாலயங்கள் - தடாகங்கள் - வனங்கள் - பல்லக்குகள்-கச்சேரி மாவடிகள்-வேதாத்தியயன சாலைகள் - பதிவிரதாஸ்திரீகளோடு அசுர குடும்பங்கள் குடியிருந்து சிரௌதமுதலிய நித்ய கருமங்களை வழாதுநடத்தி வரும் பட்டணத்திற் குடியேறி, எப்பொழுதுங் கண்டிராத நிறப்புட்கள் விளை

க்குவதுபற்றி மிகமயிழ்த்தார்கள். அங்கிருந்த அசுரர்களிற்சிலர் கோபிகள்-சிலர் காந்தவான்கள்-குறியர்-நெடியர்-சமாதர்-அதிரதர்-அர்த்தரதர்-மஹாரதர் சிவபூஜாவான்கள்-பிரம தீக்ஷாபரர்கள்-பலவரங்கள்பெற்றவர்-சூரியன் வாயு இந்திரன்முதலிய தேவர்களுக்குச் சமான வலியுடையவர்கள் என வினங்கினர். வேதசாஸ்திரங்களும் நூறு பூரணமாக விளங்கின. தேவர்கள் அந்நகரங்களின் பிரகாரத்திற்கே நிர்ணயிக்கமட்டாதவர்களாய் ஞானமடைந்து, அவை யிடம்விட்டுப் பெயர்ந்து செல்கையிற் பலகோடி ஜீவராசிகளும் மரித்தல் கண்டு, எவ்விடத்தும் எப்பொழுதும் கண்டறியாத இந்நகரங்களின் சிறப்புத் தயரும நோக்கி மனஞ் சகியாது பிரமதேவனை யடைந்து தங்கள் துன்பங்களைச் சொல்லிக்கொண்டார்கள்.

தாரகவதையுந் திரிபுரதோற்றமுமுரைத்த அத்தியாயம்
முற்றிற்று.

இருபதாவது
திரிபுரஸம்ஹார ஆலோசனை அத்தியாயம்.

ஸூதர்சொல்லுகிறார்:—தேவர்கள் துன்பத்தைச்சொல்லக்கேட்ட பிரமதேவர், தேவர்களே! என்னால் விருத்தியடைந்த அசுரர்களை நாமே சங்கரித்தல் தகுதியல்ல. அவர்களை ஜயிக்கவேண்டுமானால் தக்க யுக்தி சொல்லுகிறேன். அதாவது: சிவபெருமானிடம் நீங்கள் சென்று முறையிட்டால் அவர் அதற்கேற்ற முயற்சிசெய்து உங்கள் தயரத்தை யொழிப்பர் எனக் கூறி விடுப்ப, தேவர்கள் ருத்ரபத்தினனாகிய சிவபெருமானிடஞ் சென்று தங்கள் துன்பங்களை விண்ணப்பிக்க, சிவபெருமான் தேவர்களே! திரிபுராதிகள் மிகப்புண்ணியர்களாதலின் அவர்கட்குமிபத்தாவராது; அவர்கள் புண்ணியசீலராயிருக்குமெல்லையும் ஒருவராலுஞ் சங்கரிக்கப்படமாட்டார்கள்; ஆயினும் இவ்விஷயத்தை என் கட்டளையென்று விண்டுமூர்த்திகளிடஞ் சொல்லுங்கள் எனை, தேவர்கள் வணங்கி விடைபெற்றுத் திருமாலிடஞ் சென்று முறையிட, விஷ்ணு நீங்கள் சொல்வதுண்மையாயினும், தரும மிருக்குமிடத்துக் கதக்கமடையுமா? சூரியசந்திரரிருவி ருளுண்டாமா? எனை, தேவர்கள் மிகவுந் தக்கமுற்றுத் தலைவணங்கி, நாங்கள் என்னசெய்வோம்? இத்திரிபுராதிகளிருக்கையில் எங்கள் தருமங்கள் எப்படி விருத்தியாகும்? அவ்வசுரர்களிருக்கவேண்டுவதே யெனில், இத்தேவர்களை அகாலப் பிரளயஞ் செய்துவிடலாம். நாங்களாவது இருக்கவேண்டும்: அவர்களாவது இருக்கவேண்டும் என்று கூறி அழுதார்கள். விஷ்ணு இவர்கள் அக்கவார்த்தையைக் கேட்டு மிகவும் ஆலோசித்து, தேவர்களே! யாககாரியத்தால் சிவபெருமானைப்பூணிந்தால் உலகத்தில் இவ்விட சித்திகள் கைகூடுமாதலின் நீங்களும் அவ்வாறு செய்தால் திரிபுரங்கள் நாசமாகும் என்று நிசயித்தல், தேவர்கள் கேட்டுச் சந்தோஷித்துக் காரிய சித்தியாயிற்றென்று களிப்புற்றிருக்கையில்,

விஷ்ணுமூர்த்திதேவர்களைப் பார்த்து, பாபிகளைச் சங்கரிக்க வேண்டுமேயன்றிப்பாபிகளல்லாதாரைச்சங்கரிக்கப்படாது. ஆகையால், அவர்கள் ருத்ரமஹிமையாலேயே மிறக்கவேண்டும். சிவாதக்ஷரமந்திரமில்லாவிட்டால், நாமும் பிரமனும் தேவர்களும் முனிவர்களும் தக்ஷத்திரிகளும் பிரயோசனப்படமாட்டோம். சிவபெருமானே அவரவர் இஷ்டார்த்தங்களைக் கொடுப்பவர். தேவர்கள் யாவரும் அவரை உபாசித்துச் சிறிது வல்லமையையும், பிரமன் உபாசித்துச் சிருஷ்டி வல்லபத்தையும், நான் உபாசித்து ரக்ஷிக்கும் வல்லமையையும் அடைந்ததன்றி வேறல்ல. அவரை உபாசிக்காமல் மகிமையுற்றோர் ஒருவருமிலர். நீங்கள் சிவலிங்கார்ச்சனை செய்யவேண்டும். அச்சிவலிங்கார்ச்சனை பலத்தால், சத்ருநாசமாம். ஆதலின் பிருதிவியால்லகூலிங்கார்ச்சனைசெய்யவேண்டுமென்று, அவர்கட்குச்சிவமூலமந்திரத்தையுபதேசித்துக் கந்தபுஷ்பதூபதீப நைவேத்தியங்களால் லிகூலிங்கார்ச்சனை செய்வித்தார். அப்பூஜாகாலத்தில், கோரப்பல்-சூலம்-வேல்-கதை-பாணம்-எரிகல் முதலிய ஆயுதங்களையேந்திக் காலாக்கினருத்ரன்போலவும் பிரளயகால சூரியன்போலவும், கர்ஜிபுடைய அநேக பூதங்கள் தோன்றித் தேவர்களைப் பணிந்து எதிர்நிற்க, விஷ்ணு அவர்களை நோக்கி, பூதர்களே! நீங்கள் முப்புரங்களையுங் கொளுத்தி இடித்துச் சூர்ணித்து வந்தவழியே செல்லுங்கள் எனப் பணித்து, சிவபெருமானைத் துதித்து நமஸ்கரித்துத் தேவர்களைப் பார்த்து நான் இவர்கட்கென் இவ்வகை வரர்த்தை கூறினேன்: எப்படி தேவகாரியத்தைக் கைகூட்டி அசுரர்களைச் சங்கரித்து ஒழிப்பேன்? என்று யோசித்து, தர்மவான்கட்கு அபிசாபம்பிரயோகத்தால் நாசமில்லையே? இப்பொழுது முப்புராதிகள் தர்மிஷ்டைகளாயிருக்கிறார்களே: ஒருவராலுஞ் சர்காவரம் பெற்றிருக்கிறார்களே: பாபிகளாயினும் சிவார்ச்சனை செய்தால், நாமையில்லையில் ஜலஞ் சேராததுபோலப் பாபங்கள் நிலகுமே: என்ன செய்யலாமென்று, நெடுநேரம் யோசித்து அவ்வசுரர்கள் சிவபூஜாக்ரமத்தை மறக்கும்படியாக, மாயையாற்செய்தாலன்றிக் காரியங் கைகூடாது. வேததருமங்களும் சிவபூஜையும் பரிசுத்த கடத்தையும் உள்ளனவாயினும் அவர்கள் இறவார்கள்; அவற்றை விலக்கவேண்டுமென்று தீர்மானித்துத் தேவர்களை விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தனியே வேரிடத்திருந்து மகாகரியமாக யோசித்தார்.

திரிபுரஸம்ஹாராலோசனை
முற்றிற்று.

இருபத்தோன்றாவது
ஸனத்குமாரோபதேசஞ்செய்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—விஷ்ணுமூர்த்தி தன்னிடத்திலிருந்து மாயாஸ்வரூபமான ஓரு புருஷனை தர்மவிக்ந நிமித்தமாக உண்டு செய்தார்; அப்புருஷன் மொட்டைத் தலையும், மஞ்சள் வஸ்திரமுடையும், மழித்தாற்

செய்த குண்டிகையும், மயிற்பீலிகைக்குஞ்சமும், ஒரு கையில் வஸ்திரமும், தர்மாவென்னுஞ் சொல்லுமுடைய்னும் விஷ்ணுவைக் கைகுவித்துப் பணிந்து யான் செய்யவேண்டிய காரியத்தைக் கட்டளையிடவேண்டும் எனக்கேட்க, விஷ்ணு நீ என்னுடலினின் றுதித்தமையின் என்சொற்படி நடக்கக்கடவாய். மோயாமயமான பதினாயிரம் சிரோதங்களை யுண்டுசெய்து கொடுத்தேன். அது நிரொளதாசார ஸ்மார்த்தாசார விருத்தமானதும், வருணாஸ்ரம மில்லாததும், இவ்வுலகத்திலேயே சுவர்க்க நரகங்களுளவென்பதும், வேதம் பொய் யென்பதும், சாஸ்திரங்கள் கர்மவாதமென்பதுமாயுள்ளது. அதனை நீ என்னிடத்திற் பழகித்தேர்ந்து விஸ்தாரப்படுத்தவேண்டும். அவ்வகைய வல்லபமும் நானே உனக்குக் கொடுத்துப் பலவித மாயைகளுஞ் சுவாதீனப்படுத்துவேன். தோன்றுதல் மறைதல், பயம் அவகியம், சிருங்காரம் வீரோதம் முதலிய விசித்ரவித்தைகள் யாவும் உனக்குக் கைகூடும்[1] என்றுங்கூற, மாயாபுருஷன் ஸ்வாமீ! அவ்வரமே அச்சாஸ்திரத்தை எனக்குப் போதிக்கவேண்டுமென்று வேண்ட, விஷ்ணு அவனுக்குத் தோச்சியுண்டாகும்படி போதித்து, நான் சொல்லும் இடத்திற்குச்சென்று உனது மாயாவித்தைகளால் அவர்களை மயக்கி உன் வசப்படுத்தி அவர்கட்கு இந்தச் சாஸ்திரத்தைக் கற்பித்து அவ்வசுரர்களிடமிருக்கும் சிருங்காரஸ்மார்த்த ஆசாரங்களை உன் வலிமையால் விலக்கி, திரிபுர நாசமாகும்படிச் செய்யவேண்டும். விளாவிற்செல்ல : அவர்கள் மோகித்தவுடனே உவர்நிலத்தை யடைந்து கலியுகம் வருமெல்லையுமிருந்து, கலியுகம் வந்தபிறகு சிஷ்யப் பிரசிஷ்யர்கட்குப் போதித்து விருத்தி செய்யவேண்டும். நீ இவ்வாறு செய்தால் என் பதவியையடைவாய் எனக் கட்டளையிட, மாயாபுருஷனானவர் நான்கு சிஷ்யர்களைப்படைத்து, அவர்கட்கு இவ்வித்தையைப் பயிற்றி அவர்களைப் பண்டிதர்களாக்கி விஷ்ணு சமுகமடைய, அவர்கள் நால்வரும் விஷ்ணுவைப் பணிந்தனர்.

விஷ்ணுவானவர் சந்தோஷித்து நீங்கள் நால்வீரும் உங்கள் குருவைப்போலவே வினங்குங்கள் என ஆசீர்வதிக்க, நமக்கு எது கிடைக்கிறதோ அது தர்மமென்று சொல்லிக்கொண்டு,* கந்தைகளைக்கட்டிய பிராணிகிவாரணருச்சினைக் கையிலேந்தி விஷ்ணுவைப் பணிகையில், அவர்கள் நால்வரையும் விஷ்ணுவானவர் கையிற்பற்றித் தனது தேகசம்பூதனான மாயரூபியின் கையில் ஒப்புவித்து இவர்களை ஜாக்கிரதையோடு காப்பாற்றுக. நீ எப்படியோ இவர்களும் அப்படியே யாவர். உனக்குப் பூஜ்யன்-ருஷி-பதி-ஆசார்யன் - உபாத்தியாயன் என்னும் இப்பெயர்கள் பிரசித்த மாவதுடன், [ஆரிஹந்] சத்குருவைச் செயிப்பவன் என்னும் என் பெயர் ஒன்றும், உண்டாகுக. நீங்கள் இப்பெயர்களை உச்சரித்துக்கொண்டிருங்கள் என, மாயாரூபி நமஸ்கரித்து விடைபெற்று நால்வரையு முடன்கொண்டு திரிபுரத்திற்

* எதிர்செல்லும் எறும்பு முதலிய பிராணிகளை விலக்கு நிமித்தம் மென்மைத்தன்மை யுண்டாகக் கந்தைகள் கட்டி உபயோகிப்பது அவர் வழக்கு.

கருகில் ஒருவனத்திலிருந்து, மாயையுடையவர்களையும் மாயை செய்யத்தக்க தான விநோத வித்தைகள் செய்துகொண்டிருக்க, அதனைக் கண்டவர்கள் அம்மதப்பிரவேசமாகித் தீக்ஷைபெற்று மோகித்திருந்தார்கள். மாயையைக் கண்டோர் மதிமயங்கினர்கள். இவ்வாறிருக்கையில் நாரதபகவான் விஷ்ணு மூர்த்தியையடைய, விஷ்ணு அவரையும் இவ்வைவரோடு சேர்கவென, அவர் அவ்வாறே சென்று மாயாதீக்ஷைபெற்று அறுவராகப் பட்டனத்திற் பிரவேசித்தனர். நாரதர் வித்யுன்மாலியைக் கண்டு இங்கே வந்திருப்பவர் மகாபுத்திமான். தர்மமே ரூபமென்று சொல்பவர். அவரிடத்தில் அநேக தர்மங்களுள. அவருக்குச்சமானர் ஒருவருமிலர். நாமும் அவரிடத்துள்ள தர்மங்களைக் கண்டு தீக்ஷை பெற்றேன். நீயும் அவரிடம் தீக்ஷைபெற்று மந்திரோபதேசமடைய விருப்பமிருந்தாற் செய்யலாம் என, வித்யுன்மாலி மகாபுண்ணியரான தங்களை தீக்ஷை செய்துகொண்டால் நானும் அத்தீக்ஷையைச்செய்துகொள்ள வண்டுமென்று நேராகவந்து அம்மாயாரூபியைக் கண்டு மோகித்துப் பணிந்து எதிர்நின்று, மகாநுபாவரே! தாங்கள் எனக்குத் தீக்ஷை செய்யவேண்டுமென, குருவானவன் அரசனே! நான் சொல்வதைத் தடையின்றிச் செய்கவெனச் சொல்லமுன்னரே, வித்யுன்மாலி தங்கள் சொற்படியே நடப்பேன் என, தான் வாய்கட்டிக்கொண்டிருந்த வஸ்திரத்தை நீக்கி தன் உபதேச மந்திரத்தை யடைக வென்று, சிவதருமங்கள் நசிக்கத்தக்க மந்திரத்தை உபதேசித்துத் தீக்ஷை செய்வித்து, உன் பட்டணத்தார் யாவரும் தீக்ஷாதாரராக ஆகவேண்டுமென, அதற்கு அரசனுமிணங்க,சிஷ்யப்பிரசிஷ்யர்களால் நகரமுழுவதும் தீக்ஷை செய்வித்து ஜைனமதவிருத்தி செய்வித்தனர்.

ஜைநதீக்ஷோபாதேசஞ் செய்தது

முற்றிற்று.

இருபத்திரண்டாவது

திரிபுராதியரை வஞ்சித்த அத்தியாயம்.

வியாசதர் சொல்லுகிறார்:—பதினெட்டாதன முதலிய வ்ருத்தி தர்மங்கள். சிரார்த்ததர்மங்கள் - சிவபூஜை-யாகங்கள்-ன்னாகம்-தானம்-தீர்த்த தரிசனம்-வைதிக தர்மங்கள் முதலியதருமத்தாற் பயனில்லை என்று அந்த மாயாரூபி கூற, அந்தகாவாகிகள் அவ்வாறேவிட்டொழிந்தனர். விஷ்ணுவின் கட்டளைப்படி மாயாரூபன் அந்தகாமடைந்தபொழுதே, அம்மாயையோடு மூதேவியும் அப்பட்டணத்திற் குடியேறினள். திரிபுராதிகள் தவஞ்செய்தடைந்த சிவலக்ஷ்மி, அப்பிரமதேவர் கட்டளைப்படி இனி அங்கிருக்க வொண்ணாதென்புறப்பட்டுப்போயினள். மாயாஜாலனுகிய ஜைனனும் நாரதரும் சிஷ்யப்பிரசிஷ்யரும் அந்தகாசுரனையெல்லாம் மாயையால் மயக்கி, அவர்கள் சிவபூஜைமுதலிய சற்கருமங்களைழிக்தனர். அதுகண்டதிருமால் இனிக்காரிய

சித்தியாயிற்றென்று களித்துச் சிவபெருமானே யடைந்து விண்ணப்பித்து, மஹேசுவரா! தேவதேவா! பரமாத்மஸ்வரூபா! * நாராயணரூபா! சம்சாரத்துக் கத்தைப் பிரமஞானோபதேசத்தாற் போக்குபவரே! பிரமாத்மஸ்வரூபரே! மகத்ரூபியே! தேவரீருக்கு கமல்காரம்என்று சாஷ்டாங்கமாகப் பணிந்து † தக்ஷிணமூர்த்தி மந்திரத்தை ஜலத்திலிருந்து மூன்றரை கோடி உருஜபித்துக்கொண்டிருக்கையில், தேவர்கள் யாவரும் சிவபெருமானைத் தியானித்து, சர்வஸ்வரூபா! மங்களகரா! பாபநாஸ்திகா! நித்யா! நீலகண்டா நமஸ்தே கிரியாரஹிதா! ஜலஸ்வரூபா! நமஸ்காரம்: நமஸ்காரம்: திக்குமுற்றும்பொழுது முறையிடக் கட்டளையிட்ட தேவரீரேதுணை. சகல அசுரர்களையுஞ் சங்கரிக்க வல்லசக்தியுடையவர் தேவரீரே: தேவரீரைப் பூஜித்தாலொழிய எங்கள்துயரங்களொழியா. தேவரீரே யாவற்றிற்குங்காரணம். பிரகிருதி புருஷர்கட்கு ஆதியானவனே! ஜகத்குருவானவனே! ஜகத்துக்கனுக்ரஹிப்பவனே! வாச்சியவாசக ரஹிதனே! யோகீசுவர்களெல்லோரும் முக்திபிரியர்களாகித் தேவரீரையே உபாசிக்கிறார்கள். வேதங்கள் தேவரீரைத்தே பரமாத்மனைக் கூறுகின்றன. அணுவுக்கணுவும், மகத்துக்கு மகத்துமாய்உள்ளவர் தேவரீரே! கைகள்-கால்கள்-கண்கள்-சிரங்கள் - முகங்கள் அயிரத்துக்கணக்காக வுடையவர் தேவரீரே. இவ்வாறு விசுவரூபியாயிருந்தும் ஒன்றிலும் அகப்படாதவரே! கோடிசூர்யப்பிரகாசரே! சுயம்பூமூர்த்தியே! நாவரஸ்துமங்களாகிய அப்பிரபஞ்சமும் தேவரீரையன்றி வேறொன்றுண்டா? இல்லையாதலின், மாயாசம்பந்தத்தால் மோகிக்கப்பட்ட இவ்வசுரர்களைச் சங்கரித்து எங்களை இரக்ஷிக்கவேண்டுமென்றுதுதித்தார்கள். சிவபெருமான் விஷ்ணுமூர்த்தி செய்த தக்ஷிணமூர்த்தி மந்திரஜபத்திற்கும், தேவர்கள் செய்த கோத்திரத்திற்கும் சந்தோஷப்பட்டு அப்பொழுது பிரசன்னராய் விஷ்ணுவை ஆலிங்கனஞ்செய்துகொண்டு, திருமாலையுந் தேவர்களையும் பார்த்துக் கம்பீரமாகத் தேவர்களே! விஷ்ணுவால் செய்யப்பட்ட மாயோபாயமும், நாரதர் உபதேசமும் எனக்குத் தெரியும். தர்ம ரக்ஷகர்களாயிருக்கும் அவ்வசுரர்களுடைய மூப்புரங்களையும் இனி நாசஞ்செய்வேன் எனக்கூறி அந்தர்த்தானமாயினர். அதைக்கேட்ட நாராயணன் கான்முகன் இந்திரன் முதலிய இமையவர் யாவரும் கைகளைத் தலைமேற் குவித்துத் தண்டஞ்செய்து சந்தோஷக்கடலிலழுந்தினர்கள். இச் சரித்தத்தைப் படித்தோர்-கேட்டோர்-சொன்னோர்-எழுதினோர் முதலானோர் சகலமான இஷ்டகாரியங்களையும் அடைவார்கள்.

திரிபுராதியரை வஞ்சித்தது
முற்றிற்று.

* அஷ்டமூர்த்தங்களி லொன்றாகிய ஜலத்தை இடமாகக் கொண்டவன்.

† "ஓம் நமோ பகவதே தக்ஷிணாமூர்த்தயே மஹ்யம்மேதாம் ப்ரஜ்ஞாம் ப்ரயச்சஸ்வாஹா"

இருபத்துமூன்றாவது
திரிபுரோபாக்கியான முரைத்த அத்தியாயம்.

ஸூத முனிவர் சொல்லுகிறார்:— தேவர்கள் தங்கள் புத்திரர்களுடன் கூடி, ஸ்வாமீ! ஜயஜயவென்று சிவபெருமானது திருச்சந்நிதித் துவாரத்தின் பக்கலில் சேர்ந்திருந்து, ஐயையோ நாம் யாதறிவிப்பலம்? எங்கே போகலாம்? அந்தோ கெட்டுப்போனோமே எனச் சிலரும், இன்னும் என்ன கடக்கப்போகிறதோ என வேதுசிலரும், நாம் பாபிகள் என இன்னுஞ்சிலரும், நாம் மிகத் தரித்திரர் எனவேதுசிலரும் கூற, தைத்தியர்களே பாக்கியசாலிகள் எனச் சிலரும் சொல்லி, தம்மைத் தாமே இவ்வாறு நிந்தித்துக்கொண்டு, மீண்டும் சிவசந்நிதிக்குட் பிரவேசிக்கையில், இவர்கள் இதுகாலும் சொல்லிய விஷயங்களை யெல்லாம் கேட்டிருந்த கும்போதரன் அவர் இறைச்சலிடுதலின், தன் கையிலிருந்த வஜ்ராயுதத்தால் அத் தேவர்களை யடித்தான். அதனால் அவ்வமரர் யாவரும் அச்சமெய்தினவர்களாய், ஐயோ! ஐயோ! என்று அலறி யோடினார்கள். காசிபர் முதலான ருஷிகளும், இக்கிரௌஞ்சமலையை விழுந்தார்கள். இதனைக் கண்ட இமையவர்யாவரும் முனிவர்முதலிய புண்ணியருக்கும் இப்பேர்ப்பட்ட விபத்துவிளைந்தது தெய்வபலமா? என்று அருகிருந்த விஷ்ணுவை நோக்கினார்கள். அவற்றைக் கேட்ட விஷ்ணு தேவர்களை நோக்கி உங்களுக்கு ஏன் துக்கம் வந்தது? அத்துன்பத்தை அறவே யொழியுங்கள்; எல்லாப்பலனும் ஒருங்கே கைகூடுதற்கு சிவபூஜையைச் செய்வீர்களானால் உங்களுக்கும் கிடைக்காததும் ஒன்று உளதோ? ஸகல கணங்கட்குந் தலைவராகிய சங்கரபகவான் தயையுடையவராகும் வகையைச் சொல்கிறேன்:

தேவர்களே! நீங்கள் முதலில் ‡ ப்ரணவத்தை யுச்சரித்து, நம: என்பதைப் பிறகு கூறி, சிவாய என்பதை இறுதியிற் சேர்த்து, சுபம் சுபம் குரு குரு என்றும், மேல் சிவாய என்றும், நம: என்றும், மீண்டும் பிரணவம் சேர்த்துச் சிவகடாக்ஷத்தைக் கிடைக்குமென்பதையும் ஜபிக்கவேண்டும். இந்த மந்திரத்தைக் கோடி யுருஜபித்தால் சிவபெருமான் கிருபைகொண்டு இவ்விடகாரியங்களை அதுகூலப்படுத்துவர்என்றுபதேசித்தபிறகு, தேவர்களியாவரும் அந்தரங்கமான ஓரிடத்திற் சேர்ந்து, சிவகாமங்களை யுச்சரித்துக்கொண்டே மந்திரஜபஞ் செய்தார்கள். இவ்வாறுகோடிதரம் அம்மந்திரத்தை ஜபித்தபிறகு, சிவபெருமான் கிருபையுடையவராய், பிரத்தியக்ஷமாகி உங்கள் மநோபீஷ்டத்தைச் சொல்லுங்கள என்று கேட்டார். அப்பொழுது தேவர்கள் எல்லாம்ரங்களையுங் கொடுப்பவரான சிவபெருமானை இவ்வாறு துதிக்கலானார்கள். ஸகல உலகங்கட்குஞ் சுகத்தைச் செய்யும் ஸ்வாமீ! பரமாத்மரூபீ! உலகரக்ஷணத்திற்காகச் சூலத்தைத் தரித்தவரே! உயர்வு மிழிவுமில்

‡ ஓம் நம: சிவாய சுபம் சுபம் குரு குரு சிவாயநம: ஓம்—என்பது இதிற் கூடிய மந்திரம்.

லாதவரே! பிரமதகணங்கட்கிறைவரே! கபர்த்தி! திரிநேத்திரங்களை யுடையவரே! வேத நாயகரே! காரிய காரணஸ்வரூபியே!, மூலப்பிரகிருதிக்குக் காரணரே! ஸர்வவியாபியே! நமஸ்காரம்: நமஸ்காரம்: என்றுதுதித்த தேவர்கள் விஷயத்தில் சிவபெருமான் மகிழ்ந்திருக்கையில், தேவர்கள் கை கட்டி வாய் பொத்தி முன்னே நின்று தேவரீர் எங்கள் விஷயத்தில் கிருபை யுடையவராயிருந்தால் திரிபுரங்களை யழிக்கவேண்டும் என்றார்கள். அத்தகத் தேவர்கள் வார்த்தையைக் கேட்டு விச்சுவகர்மனை நோக்கி இரதம் - சாரதி-தநுஸ்- பாணம் ஆகிய இவற்றை உறுதியுள்ளனவாய்ச் சித்தஞ்செய். அப்படிச் செய்தால் திரிபுரங்கள் சிக்கிரத்தில் அழிந்துவிட்டதாய் எண்ணிக் கொள்ளலாம் என்று உத்தரவுசெய்தார். இத்த வார்த்தையைக்கேட்டு விச்சுவகர்மன் பிரபஞ்சரசுநை நிமித்தமாக, ஸர்வதேவ தேஜோமய இன்னிய மங்களஸ்வரூபமான இரதத்தைச் செய்துமுடித்தான்.

திரிபுரோபாக்கியான முற்றிற்று.

இருபத்துநான்காவது

திரிபுரதகனமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவர் சொல்லுகிறார்:—மகருவிதனே! பதினொன்குலகமய மான இவ்யரதத்தைப் பிரயத்தனத்துடன் தேவதேவனுள்ள மகாதேவனுக்கு விஸ்வகர்மன் செய்து முடித்தான். ஸர்வபூதமயமாயும் பொன்னுற் செய்யப்பட்டதும் †வலப்புறம் சூரியனையும் இடப்புறம் சந்திரனையுஞ் சக்கரங்களாயுடையதும், நகூத்திரங்களெல்லாம் வாமபாரிச சக்கரத்திற் கலன்கார ஞ் செய்வதும், குதிரைகளாயும் காலரூபனத்திற்காக இருசக்கரங்களிலிருக்கத்தக்கதும், ஆகாயமே புஷ்கரம் [கொடுமுடி] ஆகவும், மந்தரகிரியே ரதபீடமாகவும், அஸ்தகிரியும் உதயகிரியும் இரிதைகளாகவும், வருஷங்களே வேகமாகவும், உத்தராயண தக்ஷிணாயனங்களே ரதஞ் செல்லும் வழியாகவும், சப்த சமுத்திரங்கள் அலங்காரமாகவும், கங்கை முதலிய நதிமாதர்கள் ஸகலாபரணபூஷணகாரிகளாய்ச் சாமரை வீசவும், பிரமதேவர் ரதசாரதியாகக் கடிவாளத்தை யேந்தி நிற்கவும், பிரணவம் குதிரை செலுத்துங் கோலாகவும், னிதுமேரு குடையாகவும், மந்தரம் குடைக்கொம்பாகவும், மேருமலை வில்லாகவும், வாசுகி நாணாகவும், சரஸ்வதி அதிற்கட்டிய மணியாகவும், விஷ்ணு பாணமாகவும், அக்னி சல்லியமாகவும், வேதங்கள் நான்கும் நான்கு குதிரைகளாகவும், துருவன் முதலான நகூத்திரங்கள் அலங்காரமாகவும், பிரமாண்டத்தில் உள்ள யாவும் ஸம்பந்தப்பட்டுள்ள இவ்ய ரதத்தைச் சிருஷ்டிசெய்தான்.

† வலப்புறம் பன்னிரண்டு ராசிகளைப் பன்னிரண்டு இலையாக வுடையது சூரியசக்கரம். இடப்புறம் பதினாறு கலைகளைப் பதினாறு இலையாக வுடையது சந்திர சக்கரம் என ஸ்ருதிகூறும்.



(13 - திரிபுரதகனம்.)

சிவபெருமான் ஸர்வதேவஸ்வரூபராய் அந்த யுத்தஸந்நத்தமான ரதத்தில் ஆரோகணித்தார். அச்சமையத்தில் ருஷிகள் ஜயஜயவென்று ஆசீர்வதித்தார்கள். தேவஸ்திரீகள் பல்லாண்டு பாடினர். அந்த ரதம் செல்லுகையில் உலகத்தைத் தாங்குங் கூர்மருபியான நாராயணன் இடபரூபத்தை வகித்து வந்து அக்ரதத்தைத் தானுஞ் சுமந்தான். அவ்விரதம் மேலுலகத்துடன் கடந்துபுத்தகோலமாகத் திரிபுரமாகிய ராகஜவைரசஞ்சரனத்திற் சென்றது.

" ஸுமாயஷ்ஷுஷ்வாஷ்ஷுஷ்வாஷ்ஷுஷ்மவாஷ்ஷுயாணீயாஸ்ஸ் ॥ கஇ ॥
வ்ருஷோஷ்ஷுரா-திவிவிஷாத்தாயஷ்ஷுரவயாரோஹவிவ்ருயேழ் ।"

அதாதஸ்யாதஸ்யாஷ்ய பகவாச்சரணீதா:
வ்ருஷேந்த்ர நபிசோத்தாய ஸ்தாபயாமாஸவைரதம்.

அச்சமையத்தில் தேவர்களும் மகருஷிகளும் ஸகல உலகங்கட்குஞ் சுகத்தைச்செய்யும் சதாசிவமூர்த்தியைத் தரிசித்துக் களித்து ஜயஜயவென்று புகழ்ந்தார்கள். அந்தஸ்தோத்திரத்தையும் அவ்வலங்காரத்தையும் நாலுவருஷம் வரையில் வர்ணித்துச்சொன்னாலும்முடியாது. பார்வதிதேவியும் சிவபெருமானுடன் அவ்விரதத்திலிருந்து திரிபுரஸம்ஹாரஞ் செய்து, தேவர் மூவர்கட்கு ஸுகம் உண்டாகும்படித் தானும் உடன்சென்றனள். விஷ்ணு இந்திரன் முதலிய இமையவர்கள் தங்கள் தங்கள் வாகனங்களாகிய ரத கஜ துரக விமானாதிகளில் ஏறி ஆயுதபாணிகளாய்ச் சிவபெருமானுக்குமுன்னே திரிபுரத்தை நோக்கி நடந்தார்கள். ஜடைகளையுடைய ருஷிகள் தண்டகமண்டலங்களுடன் குதித்து ஆர்ப்பரித்தார்கள். சித்தர் சாரணர் முதலானவர் புஷ்பமாரி பொழிந்தார்கள். சிவபெருமான் யுத்தகோலமாகத் திரிபுரத்தை நோக்கிச் செல்லுகையில், ப்ரஹ்மதேவன் - குருதேவன் - கம்பன் - ப்ரகம்பன் - இந்திரன் - இந்திரபகவான் - யமன் - ஸுமேரு - ஸுகட்சன் - பஞ்சசிகன் - ஸுஹஸ்ரசூன் - மஹாதபஸ் - ஸுதஜிஹ்வன் - ஸுதாஸ்யன் - கங்கடன் - கடபூதனன் - த்விஜிஹ்வன் - த்ரிசிரன் - ஏகானனன் - அஜவக்த்ரன் - ஹரபவக்த்ரன் - கஜவக்த்ரன் - ஊர்த்வவக்த்ரன் முதலிய எண்ணிறந்தலக்ஷக்கணக்குடைய சிவகணத்தலைவர்கள் சாம்பவமூர்த்தியுடன் செல்கின்றவர்களாய் ஒருவார்த்தை சொல்கின்றார்கள் :—ஸ்வாமீ ! தேவரீர் மனதால் நினைத்தமாத்திரத்தில் ஸகல சராசரங்களையும் ஸம்ஹரிக்கும் வல்லமை யுடையவராயிருக்க, இந்த ஆடம்பரங்கள் யாதுக்கு? ஸகலமான பரிவாரங்களுடன் கூடி இப்படி ரதாரூடராய் ஆயுதபாணியாய்த் தேவசேனாஸமூஹத்துடன் வருவானேன்? இவற்றால் என்ன பலன் ? இதுவிஷயத்தில் துஷ்டர்களுக்கு கம்பிக்கை வரவும், தேவரீர் கீர்த்தி உலகத்தில் வியாபிக்கவும் அவசியம் இருக்கவேண்டுமெனில் நாங்கள் நினைக்கிறோம் என்றார்கள். எல்லாத் தேவர்களையும் காப்பாற்றுபவர் சிவபெருமானே யன்றிப் பிறரெவருவனில்லையாதலின் அப்படிப்பட்ட சிவபெருமான் திரிபுர சம்ஹாரநிமித்தமாக வில்லை வளைத்தனர். அப்பொழுது திரிபுரங்களும் ஒன்றுசேர்ந்தன.

அதுகண்ட தேவர்கள் பெருஞ்சுகாதாஷமடைந்தார்கள். தேவர்கள் ருஷிகள் பித்தர் முதலிய பதினென்கணங்களும் அவ்விட மூர்த்தமாக விளங்குஞ் சிவபெருமானைத் துதித்தார்கள். அப்பொழுது பிரமதேவர் ஸ்வாமீ! மூப்புரங்களும் ஒன்று சேர்ந்திருத்தலின் இதுவே நல்லசமையம். இவைகளை சீக்கிரத்திற் பிரிந்துவிடுமாதலின் வினாவில் அஸ்திரப் பிரயோகஞ் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்து, வாசுகியாகிய நாணேயேற்றிட்டு, விஷ்ணுவாகிய மூணையுடைய பாசுபதாஸ்திரத்தை ஏற்றி, பிரமன்சொன்னதைக்கேட்டு, புரங்கள் பஸ்மமாகப் போனதென்றும், பிரமன் வார்த்தை பயனற்றதென்றும் நினைத்து, திரிபுரத்தைச் சினந்து பார்க்கத் திக்கென்று நீப்பற்றிப் புரங்கள் மூன்றும் எரிந்தன. பிரமன் நடுநடுங்கிச் சிவபெருமானைப் பரிந்துப் பணிந்து கை கட்டி வாய்பொத்தி எதிர்நின்று, ஸ்வாமீ! தேவ தேவா! தேவரீர் பார்த்த மாத்திரத்தில் பஸ்மமாகப் போயிற்றே. இந்தத் திரிபுரதகனத்திற்கு இரத முதலிய ஆடம்பரங்களெல்லாம் என்னியொத்தவர்கள் இதில் சேவித்த பணிவிடைகள் புகழ் பெறுவதற்காகவே செய்தீர். இனி இப்பாணத்தை விட்டுவிடவேண்டும் என்று பிரார்த்திக்க அவன் வேண்டுகோளுக் கிரங்கிப் பெருமான் அவ்வஸ்திரத்தை விடுப்ப, அது திரிபுரத்தை யடைந்து நாளஞ் செய்து பெருமானைப் பணிந்து அவர்பாலடைந்தது. அநேக கோடி சைத்திய சேனைகளுடன் கூடிய திரிபுரங்கள் ஒரே அஸ்திரத்தால் எரிந்தது. கற்பாந்தகாலத்தில் திரிலோகங்களும் ஓரேபிரளயகால ருத்ரனால் அழிக்கப் பட்டதுபோன் றிருந்தது.

அந்தத் திரிபுரத்தில் சிவபூஜை செய்துவந்த பெருந் தவசிகளாயுள்ளவர்கள் யாவரும் சிவகணப்பதவி யடைந்தார்கள். அந்தச்சமையத்தில் விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்கள் தேவதேவனான சிவபெருமானையும், அவர் வாம்பாகத்தில் விளங்கும் ஸகலலோகமாதாவாகிய உமாதேவியையும் பார்த்துப் பயத்தால் ஒன்றும் பேசாது நமஸ்கரித்து நின்றார்கள். பிரமதேவன், விஷ்ணு, இந்திரன் முதலிய இமையவர்கள் ஒன்று சேர்ந்து, திரிபுரதகனஞ்செய்த சிவபெருமானைநோக்கி மெய்யன்போடுகைகுவித்து ஸ்வாமீ! தேவ தேவனாகவும், பரமேசுவரனாகவும், ஜகத்பிரபுவாகவும், உலகத்திற்கு ஸுகத்தைச்செய்பவனாகவும்விளங்குபவனே! தேவரீர் எங்கள் விஷயத்தில் அநுக்ரஹமுடையவராய்க் கோபந்தணியவேண்டும். பிரணவஸ்வரூபியாகியும், குணரஹிதனாகியும், ஸகுணனாகியும், ஸதாசிவனாகியும், ஸாந்தனாகியும், மஹேஸ்வரனாகியும், பிரகாயோகியும், ஸர்வஜ்ஞனாகியும், ஸகலத்தையும் ரக்ஷிப்பவனாகியும், ஸத்யோஜாதஸ்வரூபியாகியும் விளங்கும் தேவரீருக்குநமஸ்காரம்—என்று ஸ்தோத்திரஞ்செய்து தனித்தனி ஒவ்வொருவரும் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து சத்ருஞ்ஜயமானதுபற்றிப் பெருங் களிப்புடன் சிவத்தியானபரராய் இருந்தார்கள். அப்பொழுது பிரமதேவர் தேவதாயகா! திரிபுர

PAGE. 73.



(14-விசுவகர்மா தேவர்களுக்குச் சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்தது.)

தகனு! அடியேற்குத்தேவரீரிடத்திற் பிரியா நிடபக்தியும், இதுபோலவே என்றும் சாதித்தொழிலும் நிலைபெற அநுக்ரஹஞ் செய்யவேண்டும் என்றார். விஷ்ணு சாஷ்டாங்கமாய்ப்பணிந்து கைகட்டிநின்று ஸ்வரூபியாகியும், ப்ரக்ருதி புருஷரூபனுகியும், விசுவாத்மகனுகியும், பக்தப் பிரியனுகியும், ஸாந்தனுகியும், பரமாத்மனுகியும், ஸதாசிவனுகியும் விளங்கும் தேவரீருக்கு நமஸ்காரம்; தேவரீரிடத்தில் அடியேனுக்கு எப்பொழுதும் நிங்காத பக்தியைத் தயைசெய்யவேண்டும் என்றார். பிறகு ஸகலதேவர்களும் நமஸ்கரித்துப் புராணியைநோக்கி,ஸ்வாமீ! எங்களிடத்தில் தயையுடையவராயிருந்து எங்கள் பக்தியை விருத்திசெய்யவேண்டுமென்றார்கள். இவற்றையெல்லாங் கேட்ட சிவபெருமான் பெருமகிழ்ச்சியுடையவராய், தேவர்களே! உங்கள் தோத்திரத்திற்கு நாம் மனங்களித்தோம்; வேண்டியவரங்களைக் கேளுங்கள் என்றார். தேவர்கள் எங்கள் விஷயத்தில் தேவரீர் தயையுடையவராயின் எங்களுக்குக் கஷ்டம் வரும்போதெல்லாம் பிரத்யக்ஷமாகி அத் துன்பங்களைப் போக்கியருளவேண்டும் என்றார்கள். சிவபெருமான் அவ்வரமே யாகுகவென்றும், உங்கட்கு மோக்ஷானுக்ரஹஞ் செய்வோமென்று திருவாய்மலர்ந்தருளிச் சில வரங்களைக்கொடுத்தனர். அப்பொழுது நிரீச்வரவாதிகளான சில † முண்டித சிரசுடையவர்கள் வந்து தேவர்களைப் பணிந்து எங்கள் கதி என்னவென்று கேட்க, திருமால் பிரமன் முதலிய தேவர்கள், நீங்கள் கலியுகம் வருமெல்லையும் நிர்ஜலபூமியில் வசிக்கவேண்டும் என, அவர்கள் பணிந்து அவ்வாறே சென்றிருந்தார்கள். பிறகு தேவர்களெல்லோரும் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சேர்ந்தார்கள். இந்த உபாக்யாநத்தைக் கேட்கிறவன் ஸர்வாபீஷ்டமு மடைவானென்பது நிண்மை.

திரிபுரதகன முரைத்தது

முற்றிற்று.

இருபத்தைந்தாவது
விசுவகர்மா சிவலிங்கமளித்த அத்தியாயம்.

ஸூதமுனிவர் சொல்லுகிறார்:—பிரமதேவர் தனது ஸத்யலோக மடைந்து ருஷிகளையெல்லாம் விளித்து நகைத்து, உங்கள் யாவருக்கும் இஷ்டகாரியஸித்தியும், நன்மைகளும் உண்டாகவேண்டுமென்று விருப்பமிருந்தால் என்னுடன் சேர்ந்து நிருப்பாற்கடலுக்கு வாருங்கள்; நான் தத்வரஹஸ்யத்தை நன்றாய் விசாரித்திருக்கிறேன் என்று கூறினர். அது கேட்ட தேவர்களும் ருஷிகளும் அப் பிரமதேவருடன் சென்று விஷ்ணுபகவான் வீற்றிருக்கும் க்ஷீராப்தியையடைந்து அவ் விண்டவைப் பணிந்து பலவிதமாகத் துதித்து, தேவதேவா! ஜகந்நாதா! பக்தப் ப்ரியா! லக்ஷ்மீ

† இவர்கள் விஷ்ணு மூர்த்தியால் உண்டுசெய்தளுப்பப்பட்ட மாயாரூபியும் க்ஷபர்களுமாவர்.

நாயகா! அபயங்கொடுத்து அநுக்ரஹிப்போய்! மேகவர்ணா! சதுர்ப்புஜங் களோ புடையாய்! பீதாம்பரதரா! சங்க - சக்ர - கதை - பத்மங்களை யணிந் தோய்! புருஷோத்தமா! புண்டரீகாக்ஷா! கவஸ்துவாபரணா! எவரா லும் நீக்கப்படாத துன்பங்களையும் நீரே நீக்குபவர். அப்படிப்பட்ட தேவ ரீர் எங்கள் விஷயத்தில் தயை செய்யவேண்டும்; ஸந்தோஷத்துடன் பிரஸந்ந ராகவேண்டும்: ஜயஜய வென்றார்கள். அதனைக் கேட்ட விஷ்ணுமூர்த்தி அத் தோத்திரங்களால் மனங் களிகூர்ந்து தமது நிஜவடிவுடன் பிரஸந்நராகி அவர்களைப் பார்த்து ஸந்தோஷகரமான வார்த்தைகளால், தேவர்களே! நீங்கள் என்னகாரியமாக என்னைக்குறித்துவந்தீர்கள்? என்றுவினவ, பிரம தேவரானவர் ஸ்வாமீ! தேவரீருடைய தண்ணிய கிருபையால் ஸகல துன்பங்களு மொழிந்தன. ஆயினும் ஸகலருக்கும் ஹிதமுண்டாகும் விஷய மாக ஒரு சங்கதி கேட்கின்றோம். அதாவது—பிரதிதினமும் எவரைச் சேவித்தால் எல்லாத் துயரங்களு மொழிந்து நித்யமான சுகங்கிடைக்கும்? நானும் இவ் வினமயவர்களும் எவரைப்புஜித்தால் எல்லாநன்மையும் பெறு வோம்? என்று வினவினர். அதனைக்கேட்ட அவ்விஷ்ணுபகவான் பிரமனே! உனக்கு நான் பூர்வத்திலேயே இதனைப் புகன்றுளேன்; நீ அதனைக் கேட் டிருக்கின்றுயேனும் மீண்டும் உனக்கும் இவ்வம்பர்க்கும் உரைக்கின்றேன்....

பிரமனே! ஸேவிக்கத்தக்க பொருள் உனக்கு அகப்படுவதாயிரு ந்தும் என்னைக் கேட்கின்றனை. உலகத்தில் ஸேவிக்கவேண்டுமானால் ஸர்வ துக்கங்களையு மொழிக்குஞ் சங்கரனே புகியல்லாமற் பிறனொருவன் பதிபா கான். எனக்கும் பிரமனாகிய உனக்கும் இவ்விஷயம் முன் சிவபெருமானுற் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது அற்புதமான திர்ஷ்டாந்த மூங்க ளுக்குப் புலப்படுகின்றது. தேவதேவனாகிய சிவலிங்கப்பெருமானைப் பூஜி த்துவந்ததை மறந்து தாரகாசுரன் புதல்வர்களாகிய திரிபுராதிகள் என்ன லும் மாயையாலும் மோகிக்கப்பட்டவர்களாய் எவ்வளாறு மாண்டார்கள்? உங்கள் யாவர்க்கும் நீங்காத சுகம் உண்டாகவேண்டுமாயின் சிரத்தையுடன் சிவலிங்கரூபியானசிவபெருமானைப் பூஜைசெய்யுங்கள். உலகங்களில் எந்தப் பொருளையுஞ் சிவலிங்கரூபமாகச் செய்தால் அதிலும் சிவபெருமான் அமர்ப் பாகமாகிறார். ஆதலின், இஷ்டசித்தியடைய விரும்பினவர்கள் சிவலிங்கார்ச் சனை செய்யவேண்டியது. தேவர்களும் ரிஷிகளும் தானவரும் நாமும் எல்லோருஞ் சிவலிங்கபூஜைசெய்யவேண்டியவர்களே. பிரமனே! நீ மறந்து விட்டனையோ? நீ சிவலிங்கபூஜை எவ்வகையாகவாவது செய்யவேண்டும். எந்தக்காலத்தில் சிவத்தியானம்செய்யாமலிருக்கிறோமோ அந்தச் சமையமே நமக்கு இடையூறுவருங்காலம். அதுவே அதர்மம். அதுவே விக்நகாலம். அதுவே மூடத்தனம். சிவபக்தி எவர்க்குண்டாகுமோ சிவஸ்மரணை எவர் செய்வரோ அவர் அணுவளவுந் துக்கபாத்திரரார்.

மநோகரமான வீடுகள் - பலவிதமான ஆபரணங்கள் - சுதந்தரமான மாதர்கள் - அவாவடங்கத்தக்க தனம் - புத்திரபௌத்திராதிசந்ததி - தேஹா



(15 - தேவர்கள் யாவரும் விஷ்ணுமூர்த்தியின்னிலையில் சிவலிங்கபூசைசெய்தது.

ரோக்கியம் - பலவித சௌக்கியம்பாக்கள் - இரத கஜ துரக முதலிய வாஹனங்கள் - வஹிக்கமுடியாத கீர்த்தி - ஸ்வர்க்கபோகம் - தீர்க்காயு - நற்கதிகிடைக்கர்கள் - முக்திபலம் முதலியவற்றை விரும்பினவர்கள் ஸதா சிவபகவானைச் சிவலிங்கமூர்த்தத்திற் பூஜிக்கவேண்டியது. பக்தியுடன் லிங்கபூஜை செய்கிறவன் புண்ணியகருமங்களைச் செய்ய கோடிமேம்பட்டி, பாபத்தாற் பீடிக்கப்படமாட்டான்.—என்றிவ்வாறு விஷ்ணுமூர்த்தி விளம்பினர். அதைக்கேட்ட தேவர்கள் அவரைப்பணிந்து நாங்கள் பூஜைசெய்வதற்கு லிங்கங்கிடைக்காமையின், இஷ்டகாமியங்களெல்லாம் எங்கட்குக் கைகூடச் சிவலிங்கங்களைப் பிரஸாதிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, விஷ்ணுவும் பிரமதேவரும் யோசித்து விச்சுவகர்மனை விளித்து—நாங்கள் சொல்வதுபோல இத்தேவர்கட்கெல்லாம் யோக்கியமான லிங்கங்களைச் செய்து, அவரவர் கௌரவத்திற்கேற்பக் கொடுப்பாயாகவெனக் கூற, விசுவகர்மன் அப்படியே லிங்கங்களை நிர்மித்து, அவரவர்க்குத் தக்கபடி கொடுத்தனன்.

பதுமராக லிங்கத்தைச் சூரியனும், வஜ்ரலிங்கத்தைக் குபேரனும், கோமேதக லிங்கத்தை யமனும், நீலலிங்கத்தை வருணனும், இந்திரநீலலிங்கத்தை விஷ்ணுவும், ஸ்வர்ணலிங்கத்தைப் பிரமதேவனும், வெள்ளிலிங்கத்தை விச்சுவதேவர்களும் அட்டவசுக்களும், சித்தலிங்கத்தை வாயுவும், பார்த்திவலிங்கத்தை அச்சுவினிதேவர்களும், ஸ்படிகலிங்கத்தை இலக்குமிதேவியும், தாமிரலிங்கத்தைத் துவாதசாதித்தர்களும், முத்துலிங்கத்தைச் சோமராஜனும், வஜ்ரலிங்கத்தை அக்கினியும், பார்த்திவலிங்கத்தைப் பிராமணர்களும் பிராமணஸ்திரீகளும், சந்தன லிங்கத்தை மயனும், பவளலிங்கத்தை அங்காரன் முதலிய ஸப்தபராஜர்களும், * கோமய லிங்கத்தைத் தயித்தியரும் இராக்ஷஸரும், இருப்புலிங்கத்தைப் பிசாசங்களும், † நவநீதலிங்கத்தைச் சசிமுதலியஸ்திரீகளாற்பூஜிக்கப்பட்ட பார்வதிதேவியும், ‡ தாருலிங்கத்தை நிருதியும், பஸ்மலிங்கத்தை யோகியும், மாவுலிங்கத்தைச் சூரியன் மனைவியாகிய சாயாதேவியும், இரத்நிலிங்கத்தைச் சாகவதீதேவியும், தயிராற் செய்த லிங்கத்தை யக்ஷர்களும் பெறும்படி விசுவகர்மன் கொடுக்க அவற்றை அவர்கள் வாங்கி, தேவர்கள் - ருஷிகள் - பிரமா - விஷ்ணு - பக்ஷர் முதலானவர்கள் கார்யஸித்தியின்பொருட்டு விதிப்படி அருச்சித்தார்கள். விஷ்ணுபகவான் பிரமன்முதலியதேவர்களுக்குப் பூஜாவிதியைச்சொல்லியருளினர். பிரமன் முதலிய தேவர்கள் சந்தோஷமடைந்தவர்களாய்த் தங்கள் வாஸஸ்தானத்தையடைந்தார்கள். விஷ்ணுமூர்த்தியும் அந்தர்த்தானமாயினர். பிரமன் ஸத்யலோகமடைந்து, முன் தன்னுடன் க்ஷீராப்திக்கு வராத தேவர்கட்கும் சிவபூஜாவிதியை முறைப்படி யுபதேசித்தனர்.

விசுவகர்மா சிவலிங்க மளித்தது
முற்றிற்று.

---

*. கோம்யம் = சாணம். † நவநீதம் = வெண்ணெய். ‡ தாரு = மரத்தாற் செய்தது.

இருபத்தாருவது

பாஷ்ய்ாந்தரலிங்கங்க ஞலாத்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகள் ஸூதமுநிவரைநோக்கி, பிரமதேவர் ஸத்ய லோகஞ்சென்றபிறகு நடந்த விர்த்தாக்தங்களையும், பிரமதேவர் சிவபூஜா விதியை அவர்கட்கு உபதேசித்ததையும் தேவரீர் எங்கட்குச் சொல்லியருளவேண்டும் என்று வேண்டிக்கொள்ள, ஸூதமுநிவர்—உலகத்திலிருப்பவர் யாவரும் சுகமடையவேண்டியவிஷயமாக எங்களைக் கேட்டீர்கள்; இவ்விஷயம் முன்னொருகாலத்தில் வியாஸமுநிவர் ஸநத்குமாரமுநிவரைக்கேட்க, அந்த ஸநத்குமாரமுநிவர் வியாஸருக்குச் சொல்லியபடியே அவர் எனக்குச் சொல்லியதை உங்கட்குச்சொல்லுகிறேனென்று கூறுவாராயினர்.

பிரமதேவர் ஸத்யலோகமடைந்தபின், தேவர்முநிவர்முதலானோரை நோக்கி, சிவபூஜாவிதியைச் சொல்லுகிறேன் கேட்கவேண்டும். ஸகல ஜன்மங்களிலும் துர்லபமான மாநுஷஜன்மத்தில், நற்குலத்தில் அவயவப்பழுதின்றி உதிப்பது அருமை. அவ்வகைய அரிய பிறவியை யடைந்தபிறகு தன்குலத்திற் கேற்ற காரியங்களைச் செய்யவேண்டுமேயன்றி அளவுகடந்திருந்தால் அக்கருமத்திற்குத் தக்கபலன் கிட்டாது. தன் ஞானத்திற் கெட்டாத கார்யங்களிற் பிரவேஸிக்கப்படாது. கர்மயாகங்கள் பல்லாயிரஞ் செய்வதைக் காட்டிலும் தீர்த்தயாத்திரை முதலிய தபோயாகஞ் சிறந்தது. தபோயாகங்கள் பல்லாயிரத்திலும் ஜப்யாகஞ்சிறந்தது. அந்தஜபயாகங்கள் பல்லாயிரத்திலும், மாநஸிகமான தியானயாகம்சிறந்தது. தியானயாகத்திலுஞ்சிறந்தது பிறிதொன்றில்லை; அதுவே ஞானமார்க்கத்திற்குக் காரணம். ஸர்வவ்யாபகமாகவுள்ள பரப்பிரமவஸ்துவை யோகபுருஷன் தன் தியானத்தினற் றனதுஹ்ருதயத்திற்றரிக்கிறன். தியானயாகத்திலிருப்பவனுக்குப் பரமசிவன் எப்பொழுதும் ஸமீபத்திலேயே யிருப்பன். அவன் பிரமஸ்வரூபமாயிருப்பதால் ஸகலகருமங்களை விடுத்தாலும் பிராயச்சித்தம் வேண்டுவதில்லை. ஸுகம் துக்கம் தர்மம் அதர்மம் ஜபம் ஓமம் தியானம் யோகமுதலிய வெல்லாம் அவனுக்கு அவசியமில்லை.

பரமாநந்தத்தை யுண்டுசெய்வதும், பரிசுத்தமானதும், நாசமில்லாததும், நிஷ்களமானதும், ஸர்வபரிபூரணமாயுள்ளதுமான சிவலிங்கத்தை இதயத்திலிருப்பதாக அவன் எண்ணுகிறான். அந்த லிங்கம் பாஹ்யலிங்கம் - ஆந்தரலிங்கம் என இருவகைப்படும். அவற்றுள், பாஹ்யம் - ஸ்தூலமாகக் கண்ணுக்குப் புலப்படுவது. ஆந்தரம் - ஹ்ருதயத்தில் ஸூக்ஷ்மமாயுள்ளது. கர்மயாகத்திலிருக்கும் எல்லோரும் பாஹ்யலிங்கார்ச்சனை செய்யவேண்டும். ஏனெனில், அஞ்ஞானிகட்கெல்லாம் பக்தியுண்டாகு நிமித்தமாய் ஸ்தூலத்தில் ஸூக்ஷ்மத்தைப் பாவனைசெய்து பூஜிக்கவேண்டியது. ஞானிகட்குத் தோஷரஹிதமான ஸூக்ஷ்மலிங்கம் பிரத்யக்ஷமாகியிருக்கும். அஞ்ஞானிகள் மலரும் மண் - மரம் இவற்றாற் செய்யப்பட்ட லிங்கங்களைப் பூஜிக்கவே

வண்டியது. தத்வார்த்தங்களை யுணர்ந்தவர்கள் இம் மிருத்லிங்க முதலியவற்றும் பயனின்றி, சகலமுஞ் சிவமயமென்றபாவித்து, அகண்டபரிபூரணமாக விளங்குகிறவன் சிவபெருமானென்று தெளிந்திருப்பான். ஞானிக்கு விக்ரஹ ஆராதனம் வேண்டுவதில்லை. இத்தகைய ஞானம் இல்லாதவனுக்குப் பிரதிமாகல்பனஞ் செய்துகொள்ள வேண்டியது அவசியம். உயர்ந்டத்திற் செல்லவேண்டியவனுக்குச் சோபானம்[படி] இன்றியமையாததுபோல, நிர்க்குணமான சிவலிங்கப்பிராப்தியை யடையவேண்டிய அஞ்ஞானிக்குப் பிரதிமாபூஜை சொல்லப்பட்டிருக்கிறது. ஸகுணபூஜையால் நிர்க்குணமான சிவப்பிராப்தி யுண்டாகும். இவ்வாறே ஸ்தலதேவதைப் பிரதிஷ்டைகளும் அவரவர் கோரிக்கையின்படி இஷ்டஸித்திகளைக் கொடுக்கின்றன. நான் பூஜைசெய்கிறேனென்பதுடன்பக்திபூர்வமாக ஞாலேதயமாகும்வரையில் பூஜிக்கவேண்டியது. அத்தகைய ஞானமில்லாதபக்ஷத்தில் அவன் பூஜைசெய்யும் சக்தனம் புட்பம் தீர்த்தம் நிவேதனம் முதலியவாவும் வியர்த்தமாகும். சிவத்தையின்றிப் பூஜிக்கிறவனது பூஜை வியர்த்தமாவதுடன் அவனும் அதோலோகப்ராப்தியடைவான். இத்தக்காரணத்தால் உங்களுக்குப் பாஹ்யபூஜையைச் சொல்லுகிறேன் என்று பிரமதேவர் சொல்வாராயினர்.

தேவர்களே! ஸ்வஜாதிநிஷ்டமான கர்மாநுஷ்டானங்களைச் செய்துகொண்டு, எக்தெந்த விக்ரஹத்தில் தனக்குப் பக்தியுண்டாகுமோ அந்தப் பிரதிமாபூஜை செய்திருக்கவேண்டும். பூஜை தானம் முதலான ஸத்கருமங்கள் செய்யாவிட்டாற் பாதகம் ஒழியாது. பாதகம் ஒழியாதவனுக்கு ஸித்தியுண்டாகாது. அழுக்கேறின வஸ்திரத்தைப் படிகாரத்தில் ஊறவைத்துப் பிறகு தோய்த்துச் சாயம் போட்டால் அதில் நிலைசாரச் சாயம்பிடிப்பதுபோல, பாதகங்களை [ஸ்தூல] பிரதிமாபூஜையால் போக்கின்பிறகு ஸூக்ஷ்மபூஜையால் ஞானமடைந்து விஞ்ஞானியாவர். அத்தகைய ஞானத்திற்கு ஞானமும், ஞானத்திற்கு ஸ்ருடபக்தியும், பக்திக்குப் பிரதிமாபூஜையும், பிரதிமாபூஜைக்கு ஸத்குருவும், ஸத்குருவை யடைவதற்கு ஸத்காரியமுங் காரணமாகும். ஸத்காரியத்தால் ஸத்குருவையடைந்து, ஸத்குருவால் மந்த்ராதிக்ஷ பூஜையும், பூஜையால் பக்தியும், பக்தியால் ஞானமும், ஞானத்தால் விஞ்ஞானமும் உண்டாவது ஸத்யம். விஞ்ஞானிக்கு (நான் அவன், குமான்-பிறன், நிகேஷிதன் - பகையவன், மானம் அவமானம், லாபம் நஷ்டம், ஜயம் அபஜயம் என) பேதமில்லாமல் ஸமபுத்தியுதிக்கும். இத்தகைய கொள்கையுற்றவன் நிவருத்தியாவான். இப்படி விஞ்ஞானியாயுள்ளவன் இல்வாழ்வோரில் கோடிக்கொருவனாக விருப்பான். அப்படி யிருப்பவனை ஒருவன் கண்டமாத்திரத்தில் ஸகல பாபங்களும் ஒழியும். அவ்வண்ணமானவனைக் கண்ட புண்யதீர்த்தங்கள் (இவனை நன்னெற் கண்டவர்களுடைய பாபத்தை அப்பொழுதே நீக்குகிறன். காமோ அநேக காலம் நம்மிடத்தில் ஸ்நானஞ் செய்தால்நம்மைப் புனிதமாக்கமாட்டோம் என்று) வெட்கமடையும். பிரதியுருபமான தேவர்கள் அநேகாலங்கழித்து ஒருவனைப் புனிதமாக்குவர்.

ஞானியோ அவனைக்கண்டபொழுதே புனிதமாக்குவான். இவ்வாழ்க்கையி லிருக்குமெல்லையும் பிரதிமாபூஜைசெய்யவேண்டியது. சிவரூபமாவது-தேவி ரூபமாவது-விஷ்ணுரூபமாவது-சூரியரூபமாவது-கணபதிரூபமாவது அன்றி இவ் வைக்கதபு மாவது ஜீவலக்ஷணத்திற்குக் காரணமான சிவலிங்கப்பெரு மானையாவது பூஜிக்கவேண்டும். மரத்தின் மேலில் வைத்திய நீர் அதன் வேரி லிலை முதலியவற்றிற்குப் பாய்வதுபோல, மூலகாரணனான சிவபெருமானை யர்ச்சிப்பதால் எல்லாத்தேவர்கட்குந் திர்ப்தி யுண்டாகும். மரத்தின் வேரி லிற்சொரிந்த நீர் மரத்திற்குப் பிரயோஜன மில்லாததுபோல, சிவபூஜை செய்யாமல் மற்றத்தேவர்களைப் பூஜிப்பதால் பயனின்றும், தரியம்பகனான சிவபெருமானைப் பூஜித்தால் மனதிலுள்ள லகலமான கோரிக்கைகளுந் கைகூடும்" என்று பிரமதேவர் கூறினர்.

பாத்மோத்தரலிங்கங்களுரைத்தது

முற்றிற்று.

இருபத்தேழாவது
நித்தியகருமமுரைத்த அத்தியாயம்.

வாயுதேவர் சொல்லுகிறார்— ப்ரம்மமுஹூர்த்தத்திலெழுந்து, விஷ்ணு வையும் குருவையும் அன்போடுதுதித்து, தேகசுத்தி செய்து, கால்கைகள் கழுவி, சூர்யோதயத்திற்குமுன் தந்தாவனஞ்செய்து, முகத்தை இருகைக ளாலும் நீர் கொண்டு பதினாலுதடவை கழுவி, நதி முதலியவற்றில் தேகசுத்தி விசேஷமின்றி ஸ்நானஞ்செய்யவேண்டியது. [ஆதிவாரம் - திரயோதசியும் - சூரியகிரஹணத்தி-லேழுணம் - மஹாதானஞ்செய்யுந்நாளையம் - புண்யகாலம்- உபவாசதினமும் - ஆசௌசதினங்கள் இந்தச் சந்தர்ப்பங்களில் உஷ்ணஜலஸ்நா நஞ் செய்யப்படாது.] தயிலாப்பியங்களை ஸ்நானஞ் செய்யவேண்டியவர்கள், முறையே ஆதிவாரம்-சோகத்தையும், சோமவாரம்-தேஜஸையும், அங்காரக வாரம் - மாணத்தையும், புதவாரம்-லக்ஷ்மிகடாக்ஷத்தையும், குருவாரம்-தரி த்ரத்தன்மையையும், சுக்ரவாரம் - அசுகத்தையும், சனிவாரம் - சுகத்தையும் உண்டுசெய்யுமாதலின், நிஷித்த வாரங்களில் அப்பியங்கஸ்நானஞ் செய்யப்ப டாது ; அப்படி நிஷித்தவாரங்களில் ஸ்நானஞ் செய்ய நேரிட்டால், ஆதிவா ரத்தில் புஷ்பமும், மங்களவாரத்தில் மண்ணும், குருவாரத்தில் அருகம் புல்லும், சுக்ரவாரத்தில் ஜலத்தையும் எண்ணெயிற்சேர்த்து அப்பியங்க னஞ்செய்யவும். நித்யாப்யங்கனஞ்செய்யும் நியதியையுடையவன் பரிமளவஸ் துக்கள் சேர்த்த எண்ணெயிட்டுக்கொள்ளலாம். ஸ்ரார்த்தம் - விரததினம் - உபவாசம் - சேதனை இத்தினங்களில் எண்ணெயிட்டுகொள்ளக் கூடாது. அப்படிப்பட்ட தினங்களிலும் முழுகு நேரிட்டால், சிரஸ்நானம் நீங்கிய தினங் களில் கடுகெண்ணெய் உபயோகிக்கவும். தேசகாலங்களையறிந்து சாஸ்திரப் படி ஸ்நானஞ் செய்கையில், வடக்குத்திசையாவது கிழக்குத்திசையை

யாவது நோக்கி ஸ்நானஞ் செய்யவேண்டும். முன்னுரைத்ததும் இராத்திரி உடுத்ததும் பிறர் உடுத்ததுமான வஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு ஸ்நானஞ் செய்யப்படாது. நல்ல வஸ்திர முடுத்துக் கால்கழுவி ஆசமனஞ்செய்து கங் காதி தீர்த்தங்களாகப் பாவனைசெய்து துதித்து, சங்கல்பங்கூறி உடலை நனை த்து, மந்ருத்திகாஸ்நானஞ் செய்து, ஆசமனஞ்செய்து கங்கையைத் துதித்து ஸ்நானஞ்செய்து உடலைத்துடைத்து மடிவஸ்திரங் கட்டிக்கொண்டு ஆசம னஞ்செய்து கோமய முதலியவற்றாற் சுத்திசெய்த நல்லவிடத்தில் நல்ல மர த்தாற் செய்த ஆசனத்தில் கம்பள முதலிய திர்ப்தாசனமிட்டு அதன்மேல் பட்டுவஸ்திரம் பரப்பி அதில் உட்காரவேண்டும். அப்படிப்பட்ட ஆசனங் கிடைக்காவிட்டால் மான்றோலின்மேலிருந்து த்ரிபுண்டரம் - ஊர்த்துவபுண் டரம் - அர்த்தசந்த்ரம்-லமிசபத்ரம்-பாரிஜாதபுஷ்பம் ஆகிய இவ்வைந்தில் தமக்குரிய ஒருவகையாகத் தரித்துக்கொள்ளவும். த்ரிபுண்டர ஊர்த்துவ புண்டரங்கள் சிவபக்தர்கட்குரியன. பிரம க்ஷத்ரிய வைசியர்கள் நான்கு விதமான நிலைகளுள் அனுலோமம், அர்த்தசந்த்ரம் ஊர்த்துவபுண்டரமாகிய இரண்டும் சூத்ரர்கட்குரியன. வம்சபத்ரம் போன்ற திலகம் விஷ்ணுபக்தர் கள் தரிக்கவேண்டும். இவ்வாறு தரித்தால் ஜபம் - தபம் - தானம் எல்லாம் ஸபலமாகும். ப்ரம்ம முதலானது இல்லாவிட்டால் ஜலத்தாலாவது திலகம் தரிக்கவேண்டும். பிறகு தன்குலத்திற்கேற்ற அநுஷ்டானங்கள் செய்து கொண்டு சிவார்ச்சனைசெய்யவேண்டும். எப்படியென்றால், மந்த்ரபூர்வகமாக மூன்றுதரம் அல்லது ஒருதரம்ஆசமனஞ்செய்துகொண்டு கங்கையைத்துதி த்து, [ஆத்மதத்வாய சுவாஹா - சிவதத்துவாய சுவாஹா - வித்யாதத்து வாய சுவாஹா] என்று ஆசமனஞ்செய்து சங்கல்பித்து, பூஜாபாத்ரஜலத் தைக் கொண்டுவந்து, சிவபூஜைக்கு வேண்டிய உபகரணங்களைத் தன் சக் தித்கேற்பச் சேகரித்து, மனதைத் த்ருடப்படுத்தி "லிங்கல்ப ஆக்நேயபாக ன்த: ப்ரகாதி முகமர்ச்சயேத்" என்ற சாஸ்த்ரப்படி, அக்நிதிசையிலிருக் கீச் சிவலிங்கத்தைவைத்து, மந்த்ரகுருவைத் தியானித்துஅவனைப் பூஜித்து, மனதில் குருகடாக்ஷத்தைக் கருதி, மீண்டும் தன் மனதிருப்பத்தைச் சோ த்துச் சங்கல்பங்கூறி, பரிவாரதேவர்களுடன் சிவனைப் பூஜிக்கவேண்டும்.

சங்கம் - சக்ரம் - தேணு முதலிய முத்திரைகளில் ஒன்றைக்காட்டி முதலில் சித்தி புத்தி சமேதராகியும், லக்ஷ்மன் லாபன் என்னும் புதல்வர்களை யுடையவராகியும் விளங்கும் விநாயகக்கடவுளை சிந்தூரவர்ணமான மலர்க ளால் பூஜித்து, நமஸ்கரித்து கூர்மாபவனஞ்செய்து, நத்திகேசுவரனை சிவகுடா சுத்தை கைகூடும்படி பூஜித்து, கைகூப்பிவணங்கி, துவாரபாலக ராகிய மஹோ தரனைப் பூஜித்து, கங்காதேவியைச் சந்தன குங்கும தூப தீப நைவேத்தி யாதிகளால் அர்ச்சித்துப் பணிந்து, சிவசந்நிதி கல்பித்துக்கொண்டு, தன் விட்டில் பார்த்திபம் - பொன்-வெள்ளி-ரத்தினம் - பாதரச முதலியவற்றில் செய்யப்பட்ட *சலிங்கமூர்த்தியையாவது,ஸ்தாபிதலிங்கமூர்த்தியையாவது

* சலம் = அசையக்கூடியது. அதாவது,எடுக்கத்தக்கது.

அன்புடன் பூஜிக்கலாம். இதற்குப்பிராணப்பிரதிஷ்டையும் பூசுத்தி பூதசுத்தி களுஞ்செய்துகொண்டு, திக்பாலகர்களோப்பூஜிக்கவேண்டும். மூலமந்திரத்தா லேயே சிவபூஜை செய்யவேண்டும். வீட்டிற் சிவபூஜை செய்கையில் துவார பாலக பூஜாகியமம் வேண்டியதில்லை. ஆனல் பரிவாரங்களோடு கூடிய சிவ பெருமானே! என்று பாவனுமாத்திரமாகப் பூஜைசெய்யவேண்டியது. ‡ பத் மாசனமாவது பத்ராசனமாவது உத்தாஞசனமாவது பர்யங்காசனமாவது செய்து உட்கார்ந்து ஆகிரைவர்களைக்கொண்டாவது தாமேயாவது பூஜிக் கவும். அர்க்யம் பாத்யங்கொடுத்து ஜலத்தால் லிங்கத்திற்குஅபிஷேகஞ்செ ய்யவேண்டும். நிர்ச்சலமான மனதுடன், இனிச் சொல்லப்படும் மந்திரத் தால் ஆவாஹனஞ் செய்யவேண்டும் :—

கைலாஸசிகரஸ்தஞ்ச பார்வதீபதிமுத்தமம் ‖ (ருசு)
யதோக்தரூபிணம்தேவம் நிர்குணம்குணரூபிணம் ‖
பஞ்சவக்த்ரம்தசபுஜ த்ரிநேத்ரம்ருஷபத்வஜம் ‖ (இவ)
கர்பூரகௌரகம்திவ்யம் சந்த்ரமௌளிம்கபர்தினம் ‖
வ்யாக்ரசர்மோத்தரீயஞ்ச கஜசர்மாம்பரம்ஸுபம் ‖ (இச)
வாசுக்யாதிபரீதாங்கம் பிநாகாதிவிபூஷிதம் ‖
கபாலடமருயுக்தஞ்ச கண்டேகாளஸோபிதம் ‖ (இக)
வித்தயோஷ்டெனசயஸ்யாக்ரோ ந்ருத்யந்தீஹநிரந்தரம்
ஜயஜயேதிஸப்தஸ்ச ஸேவிதம்நிஜபக்தகை : ‖ (கூப)
சேஜஸாதுஸ்ஸஹோகைவ ஸம்பத்தம்தேவஸேவிதம்
ஸரண்யம்ஸர்வஸத்வாகாம் ப்ரஸந்நமுகபங்கஜம் ‖ (சூக)
வேதாகாஸத்தீர்யதாகீதம் ஸதாசிவாவாஹயாம்யஹம் ‖

[(இதன்பொருள்.) கைலாசசிகரத்தி லிருப்பவரும், பார்வதி நாயக ரும், உத்தமரும், நிஜஸ்வரூபியும், நிர்க்குணரும், ஸகுணரும், ஐந்துமுகங்க ளும், பத்துக் கரங்களும், திரிநேத்திரங்களும், ருஷபக்கொடியும், கர்பூரம் போலும் வெள்ளிய திருமேனியும், பிரகாசமும், சந்திரப்பிரகாசமும், சடையும், புலித்தோலாடையும், யானைத்தோலாடையும், ஸுந்தரவடிவமும், வாசுகியா திசர்ப்பங்கள், பிநாகவில்லாதியவற்ற லலங்காரமும், கபாலடமருகமும், நீலகண்டமும், அணிமாதி யஷ்டசித்திகளின் நிருத்தமுடைய சந்நிதியும், நிஜபக்தர்கள் ஜயஜயத் தொனியோடு சேவித்ததும், தேஜோரூபியும், தேவ ர்களால் சேவையும், சர்வரக்ஷணமும், பிரசன்னமுகபதுமமும், வேதசாஸ் திரங்களாற்புகழப்படுவதுமுடைய சிவபெருமானே ஆவாஹநஞ்செய்கிறேன். என்பது.]

நித்தியகரும முறைத்தது.

முற்றிற்று.

---

‡ பத்மாசன முதலியவற்றை இப்பொழுது மொழிபெயர்த்துக்கொண்டு வரும் ஹடயோக தீபிகையில் நன்கு காணலாம்.

இருபத்தேட்டாவது
பூஜாவிதிவர்ணன முறைத்த அத்தியாயம்.

ஸுதர் சொல்லுகிறார்:—பூஜாபர்த்திரத்திலிருக்த ஜலத்தால் இலி ங்கமூர்த்திக்கு அபிஷேகஞ் செய்யலாம். மகாபிஷேகஞ் செய்யும்பொழுது சேகரித்து அருகேவைத்துள்ள வேறுஜலத்தாலும் அபிஷேகிக்கலாம். மேல் அத்தியாயத்திற்சொல்லிய மந்திரமுறைக்க அசக்தனுயிருக்தால். [யதோக்த ரூபிணம்ஸம்பும் ஸிவமா வாஹ யாம்யஹம்] மேற்கூறிய முறைப்படியே சிவபெருமானே ஆவாஹனஞ் செய்கிறேனென்று இலிங்கமூர்த்தத்திற் சிவபெருமான் இருப்பதாகப் பாவித்து விதிப்படி உபசாரங்களைச் செய்ய வேண்டியது. முன்சொல்லிய தோத்திரத்தைக் கூறி ஆசனங்கொடுக்கவேண் டியது. சிவாயநம : என்று கூறி, சோடசோபசாரங்களாலுஞ் செய்யவேண் டியது. அப்படியே கூறி நிர்வியபாயியான பெருமானுக்குப் பாத்யம் ஆசம னம் கொடுத்து, வேதமந்திரங்களாற் பஞ்சாமிர்தமும், தான் விரும்பிய பழ ங்களும், அத்தர் பனிநீர் சந்தனமுதலிய பரிமள திரவியங்களும், சுத்த ஜல மும் அபிஷேகித்து, தான் கையேட்டுத் தூரத்திலிருந்து சந்தனாபிஷேகஞ் செய்து, ஆயிரத்தெட்டு அல்லது நாற்றெட்டுத் தாரைகளையுடைய ஜலபூரண கும்பத்தை மேலே கட்டி, வேதமந்திரங்களாலாவது ஆறுமந்திரங்களோடு கூடிய ருத்ரஸூக்த மந்திரத்தாலாவது ஏகாதசருத்ர மந்திரத்தாலாவது தன்னுற் கூடியவ்ரையில் அபிஷேகித்து, வஸ்திரத்தால் ஒற்றி, ஆசமனீயங் கொடுத்து வஸ்திரதாரணஞ்செய்து, யஜ்ஞோபவீதமுஞ் சமர்ப்பித்து, சந்த னம் வெள்ளையருகுதை இவற்றையிட்டு, [திலாஸ்தரை யவாவாபி கோதூமா மாஷகாஸ்ததா | அர்ப்பணீயா ஸிவாயைவ மந்த்ரார் நாந விதைரபி‖ (கச) என்றபடி] அகுதையாக எள்ளாயினும் யவையாயினும் கோதுமையாயினும் உளுந்தாயினுங் கரிக்கலாம். என் பாபத்தைப் போக்குமென்றும், யவை (கோதுமையில் ஒருவகை) அன்னபாக்கியமும், கோதுமை தேகபுஷ்டியும், மாஷம் (உளுந்து) வீரிணருத்தியுஞ் செய்யுமென்பர். பிரணவாதி நமோந் தகமாயிய சிவமந்திரத்தால் தாமரை-கொன்றை-ஆத்தி-மல்லிகை - சோஜா- வில்வம் - தர்ப்பை - அறுகு - கருவூமத்தை - துளசி இவைபோன்ற தனக் குக் கிடைத்த புஷ்பங்களைக்கொண்டு அர்ச்சிக்கவேண்டும்.

வீட்டிலிருக்கும் சர லிங்கத்தையாவது அசரலிங்கத்தை யாவது தானும்,சந்நிதானத்திலிருக்கும் பரார்த்தலிங்கத்தை ஆகிரைவனைக்கொண் டும் இல்லாது பூஜித்தபின், பரிமளம் பொருந்திய குங்கிலியம்-அகரு-சந்த னத்தூள்-சாம்பிராணி முதலிய திரவியங்களைத் தூபமிட்டு, ஏகார்த்தி - த்வி யார்த்தி - த்ரியார்த்தி - சதுரார்த்தி - பஞ்சார்த்தி முதலான தீபங்களைக் காட்டி, [ரூபந்தேஹி ஜயந்தேஹி பாக்யம்பகவாந் தேஹ்யமே | புத்ரிமுக்தி பலந்தேஹி க்ருஹீத்வார்க்யம் ஸிவாமுநா‖] பரமேசுவரா! நான் தேவரீ ருக்குக் கொடுக்கும் அர்க்கியத்தைப் பெற்று எனக்குச் சமஸ்தியத்தைக்

கொடுக்கவேண்டும். ஜயத்தைக்கொடுக்கவேண்டும். பாக்யத்தைக் கொடுக்க வேண்டும். புக்திமுக்திகளையுங் கொடுக்கவேண்டும் என்று அர்க்கியங்கொடுத்து, நானவிதமான நிவேதனங்களைச்செய்து ஐந்துவர்த்திகளையுடைய தட்டுத்தீபத்தைக் காட்டிக் காப்பூரதீபாராதனைசெய்து, தாம்பூலங் கொடுத்துப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து, குருவுபதேசப்படி மந்திரங்களாற் அர்ச்சித்து, பஞ்சாக்ஷரமந்திரத்தை ஜபித்து, நானவித சிவன்தோத்திரங்கள் கூறி, [தாவகஸ்த்வத் கதப்ராணஸ் தச்சித்தோஹம் ஸதாம்ருடா | இருபாநிதி இதி ஜஞாத்வா பூதநாதா ப்ரஸீதமே || என்றபடி] நான் உம்மூடையவன்; உம்மிடத்திற் பிராணனுடையவன்; உம்மிடத்திலேயே மனமுடையவன்; இருபாநிதியே! ஸகலஜந்த பிராணிகளுக்கும் பிரபுவே! பூதநாதா! எனக்குப் பிரசன்னராகவேண்டும் என்று *புஷ்பாஞ்சலிசமர்ப்பித்து, †க்ஷமாபணஞ்செய்து, நான் மீண்டும் பூஜைசெய்கையில் இங்கெழுந்தருளவேண்டுமென்று வேண்டி அவரை யனுப்பிவிடவேண்டியது.

இருபத்தோன்பதாவது
மேற்படி அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுநிவனைநோக்கி, வியாஸசிஷ்யரே! தேவரீர் யாவுமறிந்தவராதலின், சிவபெருமான் தன்னை எந்தெந்தப்புஷ்பங்களாற் பூஜித்தவர்கட்கு எந்தெந்தப் பலன்களைக்கொடுக்கிறார் என்பதைச் சொல்லவேண்டுமென வினவ, ஸூதமுநிவர் சொல்லுகிறார்: முநிவர்காள்! தனவிருப்பமுடையவன் தாமரைமலர் - வில்வம் - சதபத்திரம் [ஆயு இதற்கு னை யுடையது] ‡ சதபத்திரம் - ஸங்கபுஷ்பம் இவற்றால் லக்ஷக்கணக்காகப்பூஜித்தால் சக்தேகமின்றிப் பெருந்தனத்தையடைவான். தாமரைமலர் இருபதுகொண்டதுபிரஸ்தம். வில்வதளம் ஆயிரங்கொண்டது பிரஸ்தம். சதபத்திரம்-ஆயிரங்கொண்டது அர்த்தப்பிரஸ்தம். [பிரஸ்தம்=பதினாலுபலம் எடை] மஹாபூஜைசெய்கையில் மலர்களை எண்ணிப்பூஜிக்க இயலாதகாலத்தில் இவ்வாறு நிறுத்துப் பூஜிக்கவேண்டும். இராஜபோகத்தை விரும்பினவன் பழுதில்லாத பத்துக்கோடி மலர்களாற் பார்த்திவலிங்கத்தைப் பூஜித்து மகிழவேண்டும். அல்லது பத்துக்கோடி வில்வதளத்தைச் சுகந்தமுடைய சந்தனத்திற்றோய்த்துப்பார்த்திவலிங்கபூஜை செய்யவேண்டும். தாமரையாவது சங்குபுஷ்பமாவது இவ்வாறு பூஜிக்கத்தகுமெனப்பெரியோர் கூறுவர். பிறகு தூபதீபநைவேத்திய அர்க்கிய ஆசார்த்திக பிரதக்ஷிண நமஸ்கார க்ஷமாபண விஸர்ஜனமுதலியவற்றைச்செய்தால் இவ்விடபோகமும்ராஜ்யசுகமும் அவன்பெ

* புஷ்பாஞ்சலி - புஷ்பத்தை யெத்து இருகைகளையுங்குவித்துக் கும்பிட்டு அப்படியே சமர்ப்பித்தல்.

† க்ஷமாபணம்-தான்செய்த பூஜையில் தப்பிதங்களிருப்பின் அவற்றை மன்னிக்கப்பிரார்த்தித்தல்.

‡ சதபத்திரம் - சங்கபுஷ்பம்—தாமரையின் பேதங்களாம்.

றும்படி உலகநாயகராகிய சிவபெருமான் கடாக்ஷிப்பர். பிரதானித்துவத்தை விரும்புகிறவன் ஐந்துகோடிமலர்களாலும்; கைலாஸபதியிருந்து நீங்கவேண்டியவன் லக்ஷம் புஷ்பங்களாலும், ரோக நிவர்த்தி வேண்டியவன் ஐம்பதினாயிரமலர்களாலும், சுந்தரமானஸ்திரீயை மணஞ்செய்ய விரும்பினவன் இருபத்தையாயிரமலர்களாலும், வித்தியா விருப்பமுடையவன் பன்னீராயிரத்தைந்நூறு மலர்களாலும், சத்துருவை வெற்றிகொள்ளவும் சத்துருவை உயிர்கெடுக்கத் தரத்தவும் வேண்டியவர்கள் பத்தாயிர மலர்களாலும், மாரணஞ்செய்யவேண்டியவன் நான்கிலக்ஷமலர்களாலும், மோஹநஞ்செய்யவேண்டியவன் இரண்டிலக்ஷ மலர்களாலும், ஒருபிரபுவைச் செயிக்கவேண்டியவர்கள் கோடிமலர்களாலும், வஸியஞ்செய்யவும் கீர்த்தியடையவும் வேண்டியவர்கள் பதினாயிர மலர்களாலும், வாஹநாதிகள்வேண்டியவன் ஆயிரமலர்களாலும், முக்திவேண்டியவன் ஐந்துகோடி மலர்களாலும், ஞானம் வேண்டியவன் கோடி மலர்களாலும் அருச்சிக்கவேண்டும். சிவபெருமான் பிரத்யட்சமாகவேண்டியவன் அரைக்கோடி மலர்களாலருச்சித்து மிருத்யுஞ்சயமந்திரத்தை ஐந்திலக்ஷம் உரு ஜபிக்கவேண்டும். லக்ஷமலர்களாற்செய்த அர்ச்சனை ஏகசுத்தியும், இரண்டிலக்ஷத்தால் செய்தது ஜன்மாந்தர ஞானமும், மூன்றிலக்ஷத்தால் * கர்மகாண்டமும், நான்கிலக்ஷத்தால் ஸ்வப்நதரிசனமும், ஐந்திலக்ஷத்தால் சிவப்பிரத்யக்ஷமும், பத்திலக்ஷத்தால் எல்லாப்பலனுங்கைகூட்டும். மோக்ஷகாமி லக்ஷம் தருப்பையாலும், தீர்க்காயுவிரும்பினவன் லக்ஷம் அறுகினாலும், புத்திரகாமி லக்ஷம் கருஊமத்தையாலும், கீர்த்திகாமி லக்ஷம் அகத்திப்பூவினாலும், சித்திமுத்திகள் விரும்பினவன் லக்ஷம் துளசியாலும், ஸத்குருகடாக்ஷம் வேண்டியவன் லக்ஷம் லக்ஷம் வெள்ளெருக்கமலர் மாதுளைமலர் உற்பலமலர் சம்பாத்திமலர்களாலும், ரோக நீக்கம் விரும்பினவன் கரவீரமலர்களாலும், விஷ்ணு அநுக்ரஹம் விரும்பினவன் அதஸிப்பூவினாலும், முக்திராயி வன்னியிலையாலும், சுந்தரமானஸ்திரீயைவேண்டியவன் மல்லிகையாலும், ராஜ்யசம்பத்து வேண்டியவன் மல்லிகையாலும், வஸ்திரசம்பத்து வேண்டியவன் கோங்குமலராலும், மன நிர்மலத்துவம் வேண்டியவன் நிர்க்குண்டியாலும் பூஜிக்கவேண்டும். இப்பொழுது கூறின சிவப்பிரீதியான மலர்கள் கிடைக்காவிடின் சண்பகம் தாழை நீங்கிய இதரபுஷ்பங்களாற் பூஜிக்கலாம். இவ்விரண்டும் பூஜாயோக்கியமின்றி நீக்கப்பட்ட காரணத்தைப் பின்சொல்லுகிறேன். சிவப்பிரீதியான மலர்கள் லக்ஷங்கொண்டு அர்ச்சித்தால் அநந்த பலன்கிடைக்கும். இனிச்சிவபெருமானுக்குத் தான்யஞ் சமர்ப்பிக்கும் பலனைச் சொல்லுகிறேன்.

சிவபெருமானுக்கு [சுவேதாக்ஷதை] வெள்ளிய அக்ஷதை லக்ஷம் [ஒன்பது பிரஸ்தமும் இரண்டுபலமும்] சமர்ப்பித்தால் ஸகல சம்பத்துமுண்டாம். இது போதாயனருஷி கூறிய ருத்ரநியாச விதானப்படி சுந்தரமான வஸ்திரந் தரித்துப் பின்னர் சமர்ப்பிக்கத்தக்கது. இதற்குமில்வப்பழம்வைத்து,

* கர்மகாண்டம்-இது இவ்வாறு முடியுமென்றறியும் ஞானம்.

தூபதீபாராதனைகள்செய்தால் பூஜாபலன் கைகூடும். அவன் இருபது பிராமணருக்கு அன்னங்கொடுத்தவும். நூற்றெட்டுத்தரத்திற்குக் குறையாமல் ருத்திரகாயத்திரி ஜபிக்கவும். ஏள் அகூதை லகூதம் [பதினெருபலம்] சமர்ப்பித்தால் சகல பாபநாசமாகும். இதற்குப் பிராமணபூஜையுஞ்செய்யவேண்டும். யவை அட்சதை லகூதம் [எட்டாபிரஸ்தமும் இரண்டுபலமும்] சமர்ப்பித்தால் சுவர்க்கபோகங்கிடைக்கும். இதற்குப் பிரஜாபத்திய கிருச்சிரத்திற்குச் செலவாகுந் தொகையைப் பிராமணபோஜனத்திற் செலவிடுக. கோதுமை அகூதை லகூதம்[நூற்றிருபத்தெட்டுப்பலம்]சமர்ப்பித்தால் ராஜாதிபத்தியம் உண்டாகும். இதற்கும் மேற்கூறிய அளவு பிராமணபோஜனஞ் செய்விக்க. பயறு அகூதை லட்சம் [ஏழரை பிரஸ்தமும் இரண்டு பலமும்] சமர்ப்பித்தால் சதஜீவனமுண்டாம். உளுந்து அட்சதை லட்சம் [பதினேந்தரைபிரஸ்தம்] சமர்ப்பித்தால் இஷ்டகாமியங்கள்கிடைக்கும். இதற்குப்பதினெரு பிராமணரைப் போஷிக்கவும். சாமை தினை முதலிய தானியாட்சதை லட்சம்[சுமார் ஒருபிரஸ்தம்] சமர்ப்பித்தால் தருமார்த்தகாமமோட்சங்கள் கிடைக்கும். இதற்குப் பன்னிரண்டு பிராமணர்கட்குக் கன்னமிடவும். கடுகு லட்சம் [இருபது பலம்] சமர்ப்பித்தால் சத்துருமாரணமாம். இதற்கு நூற்றெரு பிராமணபோஜனமும் ஒருகோதானமும் ஒரு ருஷபதானமுஞ்செய்க. இன்னும் பஞ்சதேவர்கள் தான்யங்களாலும் பூஜைசெய்யலாம். துவரையிலை யைக் குங்குமங்கலந்த சந்தனத்திற் ரேய்த்துப் பூஜித்தால் அதிக பலன் கிடைக்கும் என்று ஸூதமுனிவர் கூறினர். அதனைக்கேட்ட சௌனாதியாதி வாசிகள் ஸ்வாமீ! தானியங்கள் லட்சத்திற்கு இவ்வளவு எடைஎனத் தெரிவித்தீர்; இனிப் புஷ்பங்கள் லட்சத்திற்கு எவ்வளவு எடை யென்பதையுங் கூறியருளவேண்டுமென வினவ, ஸூதமுனிவர் சொல்லலுற்றனர்.

முனிவர்களே! சங்கபுஷ்பம் ஒரு பிரஸ்தமும், ஜாதிமல்லிகை பதினெரு பிரஸ்தமும், மகிமல்லிகை ராஜிகை ஐந்தரை பிரஸ்தமும், மல்லிகை இருபது பிரஸ்தமும், நிலபுஷ்பம் பதினான்பது பிரஸ்தமும், காவிரம் நாற்பது பிரஸ்தமும், நிர்க்குண்டி நாற்பதுபிரஸ்தமும்; கோகிலாக்ஷம் இவை பத்துப்பிரஸ்தமும் லட்சமலர்களை மாத்தின், பிற மலர்களையும் இவ்வாறே நிர்மாணமறிந்து பூஜிக்கவேண்டும். இனித்தாராபூஜையைச்சொல்லுகிறேன்: சிவலிங்கப்பெருமான்மேல் சொரியும்படி தாராபாத்திரங்கட்டி அதனைப் பூஜித்தால் ஜ்வரபாதை முதலியன நீங்கும். சதருத்திரம்-மஹாசதருத்திரம்-ருத்திரம்-புருஷஸூக்தம்-மிருத்யுஞ்சயம்-காயத்திரி-சிவாகமங்கள் முதலியவற்றாலும், ஆகமோக்தமான மந்திரங்களாலும் தாராபூஜைசெய்யத்தக்கது. ஜலதாராபூஜையாற் சுகவிருத்தியும் சந்தானவிருத்தியுங்கைகூடும். நெய்யைத் தாராபாத்திரத்திற்சொரிந்து அபிஷேகஞ்செய்வித்தால் வம்சவிருத்தியும் ரோகநாசமுமுண்டாகும். இதுகாறுஞ்சகத்துவம் வந்தவிடத்தில், பத்தாயிரம் மந்திர ஜபத்தோடும், பிரஜாபத்திய கிருச்சிரச்செலவளவு தொகைக்குப் பிராமணபோஜனத்தோடுஞ் செய்யத்தக்கது. சர்க்கரைகலந்த பாலுக்தாரா



பாத்திரத்தா லவிவேகித்தால் ஒருவன் தன்மேற்செய்த பிரயோகமொழியும்; இதுபதினுயிர மந்திரஜப முடியுமளவுந் தானையிருக்கவேண்டும். சத்துரு உச்சாடனமுங் கலகமும் நீங்கும். பரிமளங்கலந்த மல்லி தானை சத்துருக்களைத் தொந்தரைசெய்யும். தேன்தானை பூதிரோகங்களைப் பரிகரிக்கும். கருப்பஞ்சாற்றுத்தானை ஸகல துஷ்டங்களையுமொழிக்கும். சுத்த ஜலதானை மோட்சபலன் கொடுக்கும். இவையெல்லாவற்றுக் தீமையை யகற்றிச்சுகங் கொடுக்கத்தக்கனவே. இவற்றைப் பஞ்சாக்ஷர மந்திரஜபத்தோடும் பதினெரு பிராமணபோஜனத்தோடுஞ் செய்வித்தால் இஷ்டகாமியங்கள் கைகூடும். முனிவர்காள்! நீங்கள் கேட்டவற்றைச்சொல்லினேன். இப்படிப்பூஜித்தோர் சகல பாபமும் நீங்குவர். ஸ்கந்தர்-பார்வதி-கணபதி-இவர்களுடன்கூடிய சிவபெருமானை ஒருதரமாவது பூஜித்தவனுக்கு இம்மை மறுமைப்பலன்கள்கைகூடி, கோடி சூரியப்பிரகாசமான விமானமேறி அவ்வுலகமடைந்து அநேகதேவதாசிகள் கூடித்துப்பாட, சிவபெருமான்போல எவ்வுலகத்தில் எவ்வளவுகாலம் எப்படிவாழ விரும்புவரோ அவ்வுலகத்தில் அவ்வளவுகாலம் அப்படியே வாழ்வானென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

பூஜாவிதிவர்ணன முரைத்தது

முற்றிற்று.

முப்பதாவது

தாழம்பூவின் சாபமுணர்த்த அந்தியாயம்.

ஸூதமுனிவரே! நீர் தன்யர்: அதிக புண்யர்: தேவரீர் சொல்லிய சிவமஹாத்மியத்தைக் கேட்டு மிகச் சந்தோஷித்தோம். அதில் சண்பகம் தாழை இவ்விரு மலர்களும் பூஜாயோக்கியமற்றவைஎனக் கூறினீராதலின், அக்காரணங்களையுங் கூறவேண்டும் எனக் கேட்ட நைமிசாரண்யவாசிகளை நோக்கி ஸூதர்சொல்லுகிறார்:—ஒருகாலத்தில் ஸ்ரீராமர் லக்ஷ்மணரோடும் சீதையோடுங் தக்ஷைகட்டளைப்படி வனசஞ்சாரஞ்செய்யச் சென்றபோழுது பல்குநிதீரத்திலிருக்கையில், தன் பிதாவின் சிரார்த்ததினம்வரவே, இன்று இத்திதியை எவ்வாறு முடிப்போமென்று யோசித்து, தம்பியாகிய இலக்ஷ்மணனைப் பார்த்து, சமீபத்திலிருக்கும் கிராமத்திற்குப்போய், கொஞ்சம் தானியமுதலானவற்றைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டனுப்ப, இலக்ஷ்மணன் நாணத்துடன் சென்று, சிரார்த்தகாலம் சமீபிக்குமட்டும்வரானைமையால் காலங்கழியுமென்பதறிந்து இராமமூர்த்தியுஞ்சென்றனர். சீதைமட்டுத் தனியேயிருந்து, நாம் பகலிற் சிரார்த்தம் செய்யவேண்டியதற்குச் சாமான்களில்லையே; என் கொழுநனும் கணவனும் வரவில்லையே: எப்படி இதனை முடிப்பது? சிரார்த்தகாலம் கழிகிறதே: அசரகாலம் வருமே: என்று விசாரத்தோடுகூடி நெடுநேரம் யோசித்து, விதிப்படி ஸ்நானஞ்செய்து, தாபசம் இங்குதி இவற்றின் பழத்தைக்கொண்டுவந்து நேருப்பில் வேவித்து மனல்

மேனையிலிருந்து, அப்பொழுதும் அவ்விருவர் வரானையால், பிதுர்க்களுக்குப் பிண்டத்தை நானெப்படி கொடுப்பேன் என்று வருந்தியிருக்கையில், அவ்விடத்திற்சென்று சிறிது மாவைப் பிண்டஞ்செய்து, இவை தன் மாமனரான தசரதராஜனுக்கு ஔர்த்துவதேஹிகமாகவேண்டுமென நினைத்தாள். அப்பொழுது பிதுர்க்கள் வந்து, நாங்கள் செய்யுஞ்சிரார்த்தத்திற்காகத் திரும்பிவைக்கிதாம். சீதா! காணுவித பூலோலங்காரமான உன் கையாற் பிண்டத்தைப் பெற்றோமென்றேற்றுக்கையில், சிதாதேவி, நீங்கள்யார்? என்று வினவ, அதைக் கேட்ட பிதுர்க்களில் மாமனான தசரதன் கன்னியமுடையாய்! யான் உன் மாமன். நீ கொடுத்த பிண்டம் எங்களைத் திருப்திசெய்தது. அது ஔபலமாயிற்று என்றான். சீதை நீங்கள் கையால் ஏற்றுக்கொண்டதைக்கேட்டால் என்கணவர் கம்பமாட்டாரோ எனக்கூறினாள்.

தசரதன் அவ்வார்யின் தக்க சாகுஷ்ய வைத்துக்கொள் என, சீதை அச்சமையத்தில் அங்கிருந்த பல்குநி - பசு - அக்நி - தாழை இக்கான் கையும் பார்த்து நீங்கள் காலவரும் இதற்குச் சாட்சியிருந்து என் புருஷனுக்குச் சொல்லவேண்டு மென்ன, பிதுர்க்கள்சென்றார்கள். பிறகு ஸ்ரீராமர் வந்து பெண்ணே! வினவில் உன் காரியங்களைச் செய்; உன் மாமன் வருவான் என, ஜாகி ஆச்சரியப்பட்டு, கடந்தவை ஒன்றுங் கூறாது இருந்தாள். ஆலசியஞ்செய்வது கண்ட ஸ்ரீராமர் இப்படி ஏன் சும்மா இருக்கிறாய்? என, சீதை நடந்தவற்றைச் சொல்ல, ஸ்ரீராமர் தம்பியைப்பார்த்து, இலக்ஷ்மணா! நீ சீதை கூறியதைக் கேட்டனையா? என்று, பெண்ணே! நாங்கள் சாஸ்திரோக்தமாகச் செய்தாலும் எங்கட்குப் பிரத்யக்ஷமாகாத பிதுர்க்கள் உனக்குப் பிரத்தியக்ஷமானார்களென்பது அபத்தம் எனக் கூறக் கேட்ட சீதைநாணமுற்று, ஸ்வாமீ! நான் பொய் சொல்லவில்லை. எனக்குச் சாகுஷிகளும் உண்டு. அச்சாட்சிகளை விசாரியும் என, ஸ்ரீராமர் சாட்சியிருந்தால் நம்பத்தக்கதே என, சீதை அந்நால்வரையுங்காட்டி இவர்களே சாட்சிகள் என, அச்சாட்சிகள் இராமர்முன்சொல்லப் பயந்து, நாங்கள் இதை யறியோம் எனக் கேட்ட இராமலக்ஷ்மணர் ஒருவரையொருவர் பார்த்து நகைத்துக்கொண்டு, காய் வழக்கப்படி சிரார்த்தஞ் செய்யவேண்டியதேயாதலின் விரைவிற் சமயல் செய்க என, சீதை தூக்கித்துப் பாகஞ்செய்துகொண்டிருந்தாள்.

அப்பொழுது இராமர் சங்கல்பஞ் செய்து சிரார்த்தத்திற்குப் பிராமணர்களில் ஆவாகனஞ் செய்கையில், சூரியமண்டலத்திலிருந்து ஓர் அசரீரி "புத்ரனே! ஏன் *அக்நௌகரணஞ்செய்கிறாய்? நாங்கள் ஜாகி செய்த சிராத்தத்தால் திருப்தியடைந்தோம்" என்று கூறக் கேட்டு, ஸ்ரீராமன் நான் ஜாகி சொன்னதை உண்மையெனக்கொள்ளவில்லையென, பிதுர்க்கள் "செய்த சிரார்த்தத்தை மீண்டுஞ் செய்யப்படாது" என்றும், இராமர் அதையும்

* அக்நௌகரணம்-ஓமஞ்செய்தல்; இது முற்பட்டது. இதனுடன் பிராமண போஜனமும், பிண்டப்ரதானமுங் கூடியது சிரார்த்தமெனப்படும்.

நம்பாது யோசிக்கையில், சூரியபகவான் பிரத்தியக்ஷமாய் "நீயேன் மறுபடியுஞ்சிரார்த்தஞ்செய்கிறாய்" என, இராமலக்ஷ்மணர் சீதையைப்பார்த்து நன்றியிருந்தது; நீ புண்யசாலி! என்று புகழ்ந்துகொண்டு பாகத்தைப் புசித்தபிறகு, ஸ்ரீராமர் தம்பியைப்பார்த்து "வீரனே! இவர்கள் சாகுஷி கோரப்பட்டிருந்தும் ஒன்றுங்கூறாதிருந்தனர். துன்மார்க்கர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கையில், சீதை அந்தச் சாட்சிகள்மீதுகோபித்து, நீங்கள் வாஸ்தவத்தை என் பர்த்தாவுக்குச் சொல்லாமையால் பல்குநியே! நீ * அஸ்தர்வாஹ்நிபோயிருக்கவேண்டும். தாழம்பூவே! நீ என்னற்பூஜிக்கப்படும் பரமேஸ்வரனுக்குப் பூஜாயோக்கியமின்றிப்போவதே உனக்குத்தகும். பசுவே! உன் வாய் யோக்கியமற்றமையால், நீ மிகுபுறத்தில் யோக்கியமும் முகத்தில் அயோக்கியமுமாவாய். அக்நியே! எல்லாத் தேவர்கட்கும் முகஸ்வரூபியாகிய நீ இதனால் ஸர்வபக்ஷகனாகவேண்டும் என்று சபித்தான். அந்நால்வரும் அதைப்பெற்றார்கள். அதுமுதல் பல்குநிக்கும் அச்சாபத்தால் அவ்வாறுயின. இதனால் தாழம்பூவிற்குச் சாபம் வந்தவகையைச் சொன்னேன். இனி சண்பகப் பூவிற்குச்சாபம் வந்ததைச் சொல்லுகிறேனென்று ஸூத முநிவர் சொல்லத்தொடங்கினர்.

தாழம்பூவின் சாபம் முரைத்தது
முற்றிற்று.

மூப்பத்தோன்றுவது
சண்பகப்பூவின்சாபமுரைத்த அத்தியாயம்.

ஸநகாதியர்களே! ஸகல லோகத்திற்கும் சுகத்தைக் கொடுக்கும் சிவபெருமான் கேர்கர்ணேஸ்வரனெனத் திருகாமமுற்றுத் தென்திசையிலிருக்கிறார். அவரது தரிசனத்தால் பாபங்களெல்லாம் நசிக்கும். ஒரு காலத்தில் அப்பெருமானைத் தரிசிக்க நாரதமுநிவர் அங்கே வந்தார். அவ்வாறு வருகையில் பரிமளத்தைதாடலர்ந்தசண்பக விருக்ஷமொன்றையும், அதன்மேல் மலர் கொய்யவந்திருக்கும் வேதிய னொருவனையுங் கண்டார். அவ்வேதியன் நாரதபகவானையும் அவர்கையிலிலங்கிய மகதிவீணையையும் கண்டு, அதன் நாதத்தைக் கேட்டுச் சிறிதுநேரம் அங்கிருந்து தான் வந்த வேலையை (நாம் இப்பொழுது மலர்கொய்தால் இவரும் அவ்வாறு செய்வர் என்னும் எண்ணத்தால்) செய்யாமல் இருந்தான். நாரதர் அவ்வந்தணனைக் கண்டு, மறையோய்! நீ கையிற் பாத்திரமேந்தி இங்கு வந்த காரணமென்ன? என வினவ, வேதியன் உண்மை கூறாமல் நான் பிச்சையெடுக்கப் போகின்றே னென, நாரதமுநிவர் அவனை நீங்கித் திருச்சந்நிதானத்தி னுட்சென்று கோகர்ணேசுவரரைத் தரிசித்துத் துதித்து மீண்டும் வெளியே வந்து அவ்வேதியனைக்கண்டார்; அப்பிராமணனும் முனிவரியவொட்டாது

* அத்தர்வாஹ்நி-மேலே பிரவாகமாக வராதது.

மலர்கொய்து பூஜித்துத் தன் கையிலிருந்த பாத்திரத்தை மறைத்துக் கொண்டு வெளிவர, இருவரும் சந்திக்க, நாரதர் அவனைக் கண்டு எங்கே வருகிறாய்? என, வேதியன் நான் எங்கும் பிச்சை கிடைக்காமையாற் போகின்றேன் என்று பொய்கூற, முனிவர் ஞானத்தால் நடந்த விர்த்தாந்தங்களை யுணர்ந்து, சண்பக விருக்ஷத்தருகே போய், மமமே! இவ்வேதியன் எங்கே போனான்? உன்னிடம் எவ்வளவு பூக்கள்கொய்தான்? எனக்கேட்க, அப்பிராமணன் தன் விர்த்தாந்தங்களை ஒருவரோடும் ஊரைக்க வேண்டா மென முன் தன்னைக் கேட்டுள்ளதாலும், அம்மரம் அப்பிராமணன் யார்? புஷ்ப்பமேது? நீயார்? என்னை யேன் கேட்கின்றனை? என, நாரதபகவான் உண்மையை யுணர்ந்து, சிவசந்நிதியை யடைந்து, சிவபெருமானைப் பூஜித்துள்ள மலர்களைக் கணக்கிட்டுப் பார்க்க, நூற்றொரு மலர்களிருந்தன.

இப்படியிருக்குஞ் சமயத்தில் வேறொரு வேதியன் மலர்களைக் காத்திற் கொண்டுவந்து பூஜித்தான். அப்பிராமணனைப் பார்த்த நாரதமுனிவர், நீயார்? நீ யாது காரணத்தாற் பூஜிக்கின்றனை? இந்தப் புஷ்பங்கள் யாராற் கொண்டுவரப்பட்டுப் பூஜிக்கப்பட்டன்? என வினவ, அப்பிராமணன் நிஜவார்த்தைகள் சொல்கிறான். நானே சத்திரிய பூஜைசெய்து முக்திபடைய வேண்டி வந்தேன். இது நிச்சயம். இதன் முன்வந்து பூஜித்த பிராமணன் இராஜாதிக்க மடையவேண்டுமென்று சிவபெருமானைத்தினந்தோறும் நூற்றொரு சண்பகமலர்களால் அருச்சித்து அவ்வாறே ராஜப்பிரியமடைந்து அவ்வரசனும் செல்வம்பெற்று மற்றுமுள்ள மறையவரை வருத்துகின்றான். இந்தச் சண்பகமலரின் விசேடத்தாற் பெருமை யடைந்து இன்னும் பூஜிக்கிறான். நான் மோக்ஷகோரிக்கையாற் பூஜிக்கிறேன் என்றான். நாரதர் அதைக்கேட்டு வந்தியவானை பிராமணனைப் பார்த்து நிரந்தர முக்தி உனக்குக் கிடைப்பது சந்தியம் என்று கூறி, அவன் கூறிய சங்கதிகளைச் சிவபெருமானுக்கு விண்ணப்பிக்கவேண்டிச் சந்நிதியையடைந்து, சுவாமீ! அவ்வந்தணன் சண்பகத்தாற்பூஜித்து ராஜாதிக்ரஹத்தையும், வேதியருக்குத்தானங்கொடுக்கும் அதிகாரத்தையும் பெற்று, அந்தவரை வருத்துகின்றான். இவையெல்லாம் சண்பகப் புஷ்பத்தின் பூஜாபலம் என்று சொல்லி, இவ்வகைய பலனை அந்தவேதியனுக்கு யான் கொடுக்கவேண்டும்? என, சிவபெருமான் நாரதரே! அது அச்சண்பகத்தின் பலன். சண்பகத்தால் அருச்சித்தவர்கட்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கத் தடையில்லை எனச் சொல்லிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், ஒரு பிராமணஸ்திரீ துக்கமடைந்து சாம்பசிவனைப் பார்த்து, சங்கரா! நான்கெட்டேன்; துஷ்டவேதியனைத் தேவரீர் தண்டிக்கவேண்டும். என் வீட்டிலிருக்கும் பொருளையெல்லாம் அவன் பலவந்தமாகக் கொண்டு போனான் எனச் சொல்லி முறையிட, நாரதமுனிவர் அந்தப் பிராமணஸ்திரீயைப்பார்த்து, மாதே! யாவரால் யாது துக்கமுற்று அழுகின்றனை? எனக் கேட்க, பிராமணஸ்திரீ—மகாநுபாவரே! என் துக்கத்தைச் சொல்கிறேன் செவிகொடுத்துக் கேட்பீராக எனச் சொல்லத்தொடங்கினள்.

முனிவரே! என் கணவர் கன்மவசத்தால் முடவராய் வீட்டிலிருந்தார். எனக்கொரு குமாரத்தி விவாககாலஞ் சமீபித்து வீட்டிலிருக்கிறாள். அப்பெண்ணுக்கு மணஞ்செய்யவேண்டிய அவசியத்தாலும் பொருளில்லாமையாலும் என் கணவர் அரசனிடத்தில் இன்று சென்றுகேட்டு வாங்கினர். அதற்காக இத்துஷ்ட வேதியன் என் வீட்டில் பலாத்காரமாய் நுழைந்து அங்கிருந்த பொருளையெல்லாங் கொண்டுபோனான். அரசன் இவையொன்றும் அறியாது அந்தகன் போன்றிருக்கின்றான். இவ்விஷயத்தை முறையிட்டாலுங் கேட்கவில்லை. எனக்குச் செய்யத்தக்கது இதுவென்று தோன்றவில்லை. என்னைக் காக்கும் பிரபுவுமில்லை. என் வீட்டிலுள்ள பொருளைக் கொள்ளை கொண்டு சென்ற பிராமணன் நினக்தோறும் சிவபூஜைக்கு இங்கே வருகின்றான் என்று சொல்லுகையில், நாரதபகவான் அப்பெண்ணைப் பார்த்து, சுந்தரீ! உன் கணவனுக்கு அரசன் என்ன தானங்கொடுத்தான்? எனக்கேட்க, பிராமணஸ்திரீ சொல்கின்றாள். ஓ அந்தணரே! அரசன் பெருஞ்செல்வத்துடன் ஒரு *உபயகோமுகி தானஞ் செய்தனன். அதையும் இங்கே பூஜைக்கு வரும் பிராமணனே கொடுப்பித்து, தான் கொடுப்பித்த காரணத்தால் என் வீட்டிற்கு வந்து கொள்ளைகொண்டான். இவ்விபரீத கஷ்டத்தை யாரிடஞ் சொல்வேன்? என்னசெய்வேன்? என் கணவர் இதுவரையில் இவ்வகைய பாபதானம் வாங்கினவரல்லர். (என் கன்னிகைக்குக் கலியாணமாக வேண்டியது கருதி வாங்கினர்.) அத்தானம் வாங்கிய பொருளிற் பாதிகொடுக்கச் சொல்லித் தொந்தரவுசெய்தான். அதற்கு நாங்கள் தனத்திற் பாதிகொள்க என, அவன் தனமட்டும் போதாது பசுவையும் பாகித்துக்கொடு என, பசுவை விலைமதித்தலும் பாதியாகப் பகிர்தலும் தோஷகரமாதலின் அப்பாவத்தை யொழிக்க வழியில்லை எனச் சொன்னேம் என்று கூறின அப்பார்ப்பனி மொழியைக் கேட்ட நாரதபகவான், சிவபெருமானை நமஸ்கரித்து ஸ்வாமீ! இத்தன்மையான துஷ்டப் பிராமணன் கையால் தேவரீர் எவ்வாறு பூஜிக்கப்படுகிறீர். இவனைக்காட்டிலும் துஷ்டனொருவனிலன். முதலில் இராஜனிடத்தில் தானமே வாங்கப்படாது. அப்படிப்பட்ட தானத்தை வாங்கினவனிடத்தில் பசுவைப்பங்கிட்டுப் பொருள் வாங்குவோன் பாபத்திற்கு ஆளில்லை.

கோமஹாத்மியம்.

பசுவின் வலதுகொம்பில் கங்கை, இடதுகொம்பில் யமுனை, மத்யபாகத்தில் சரஸ்வதி, முன்காலில் பிரமன், மத்தியத்திற் பரிவாரங்களோடு கூடிய உருத்திரன், பின்பாகத்தில் விஷ்ணு, பக்கங்களில் அநேக தீர்த்தங்கள், வயிற்றின் வலப்பாகத்தில் ருஷிகள், இடப்பாகத்தில் சகல தேவர்கள், வயிற்றின் கீழ்ப்பாகத்தில் சகல நதிகள், குளம்பில் வேதங்கள், பால்மடி

* உபயகோமுகி - ப்சுவானது பிரசவிக்கையில் கன்று தாயினின்று முற்றும் பிரியாதிருக்கையில் செய்யுந்தானம். கன்றின்முகம்ஒன்று பசுவின்முகம் ஒன்று ஆக இரண்டு முகங்களையுடையது. இவ்வாறு கொடுக்க இயலாதவர் பொன்னுஞ் செய்து கொடுப்பதுமுண்டு.

யில்சமுத்திரங்களாக இவ்வாறு பசுவினிடமாக உலகமுழுவதும் விளங்கும். இவ்வகைய சிறப்புடைய பசுவைப் பூஜித்துப் பிரதக்ஷிணஞ் செய்தால் பூப் பிரதக்ஷிணஞ் செய்த பலன் கிடைக்கும். கோதானஞ் செய்கிறவன் சமுத்திரஞ்சூழ்ந்த பூமிமுழுவதையுஞ் சோர்வுபூரிதமாகத் தானங்கொடுத்த பலன் பெறுவான். ஆகையால் கோதானம் பூதானமிரண்டும் சமபலமுடையன. பசுவின் சாணத்தையும் கோமூத்திரத்தையும் உட்கொண்டவன் சகல பாபமும் நீங்குவான். பசுவிடத்திற் பூசிக்கத்தகாத இடம் சிறிதுமில்லை. உலகத்தில் கோதானம் பூதானம் வித்யாதானம் இம்மூன்றும் பவித்ரமானவை. இவை நரகத்திலிருந்த நூற்றெருபது கிலமுறைகளைச் சுவர்க்கவாசத்திற் சேர்க்கத்தக்கவை. பிராயச்சித்தமில்லாத பாபங்களும் கோதானத்தா லொழியும். பசுவின் தரிசனமாவது பரிசமாவது நியாமமாவது உண்டுசெய்யும் பலனைச் சொல்லமுடியாது. அதின் கொம்பில் பொன், குளம்பில் வெள்ளி, புட்டத்தில் காமிரம், நேத்ரத்தில் பவளம், கழுத்தில் ஆபரணம், ஸர்வாங்கத்திலும் வஜ்ரம் இவற்றாலலங்கரித்து, பால்கறக்கும் வெண்கலபாத்திரத்தோடும், கன்றோடு நன்றாய்க் கறக்கும் இளம்பருவமுஞ் அழகுமுடைய பசுவைத் தேசகாலத்தில் யோக்கியனுக்குத் தானஞ் செய்தால், கொடுத்தவனுக்கு எவ்வுலகத்திலும் தர்லபமானது ஒன்றுமில்லை. இவ்வகைய்தோதானங்கொடுத்தவனுக்குப் பெற்றுக்கொண்டவன் செய்திருக்கும் புண்ணியத்தில் எட்டிப்பங்கு அதிக புண்யம் கிடைக்கும். நாயை விற்றல்-கண்ணியாவிற்கிரயம் - வேதவிற்கிரயம்-கோவிற்கிரயம் இக்நான்கு பாபங்கட்கும் பிராயச்சித்தமில்லை.

ஓ சுவாமீ! இத் துஷ்டப் பிராமணன் பசுவைப் பங்கிடச் சொல்லினானே யாதுசெய்வது? தேவரீருக்குப் பக்தனதலின் ஒன்றுஞ் செய்யக்கூடவில்லையென்று வருத்தினர். அதனைக் கேட்ட சிவபெருமான் நாரதரே! நீ யென்பாயபக்தனதலின் உன் மனதில் எப்படி தோன்றுமோ அப்படிச்செய்தால் அது எனக்குச் சம்மதமே. இவன் என் பக்தனதலின் முன்னே பாபபலத்தையும், பின்பு சிவாராதனைசெய்த பலத்தையும் அடையும்வண்ணஞ்செய்யலாம் எனக் கட்டளையிட, நாரதமுனிவர் சன்பகவிருட்சத்தையடைந்து, ஐயமே! உன்னிடத்திலுள்ள பல மலர்களை களாவண்மும் அறுத்துச்செல்வோன் யாவன்? உண்மையை யொளியாது சொல் என, அம்மரம் ஒன்றுங் கூறாதிருப்ப, நாரதர் அப்பொழுது கோபங்கொண்டு, சண்பகமரமே! உலகத்தில் ஸத்தியம் எல்லாவற்றிற்குஞ் சாதனமானது. ஸத்தியத்தைப் பேசினால் இவ்வுலகத்தும் மோட்சவுலகத்துந் தர்லபமொன்றுமில்லை. நீ யப்படியின்றி அனத்தியங் கூறினமையின், இதுமுதல் உன் புஷ்பம் உலகத்திற் சிவபெருமானுக்குப் பூஜாயோக்கிய மில்லாததாகுக என்று சிவாநுக்ரஹத்தாற் சாபங்கொடுக்கையில், தன்மார்க்கவேதியனும் அவ்விடம் வந்தனன். நாரத முனிவர் அவனைக்கண்டு, அடா! நீ சண்பகப்பூவின் விசேஷத்தாற் சிவபூஜை செய்து அரசனிடம் தானதிகாரத்தை வாங்கி, அநேகம் பிராமணர்களைத் தொ

ந்தனாசெய்கிறாய். நீ ராட்சஸகாரியஞ் செய்துகொண்டிருப்பதால் ராட்சஸனைக்கடவாய் என்று சபிக்க, பிராமணன் பயந்து உடல் நடுங்கி, என் தப்பிதத்தை மன்னித்துக் காப்பாற்றவேண்டும் என்று நாரதமுனிவருடைய பாதங்களைப்பணிய, நாரதமுனிவர் சிவபெருமான் கூறிய வார்த்தையையனதிற் கொண்டு, அவன் விஷயத்தில் தயாசொரூபியாய், பிராமணா! நான் சொன்னது பிரதாதாதலின் நீ அவ்வாறே ராட்சஸவடிவடைவாய் என, அவன் அப்பொழுதே விராதன் என்னும் அசுரனனான். அப்பொழுது அவனைப்பார்த்து நாரதர்—நீ ஸ்ரீராமனுடைய தரிசனமடைந்து அவனால் மரணமடைந்து, பிறகு சிவாநுக்ரஹத்தால் திவ்விய ரூபமடைவாய் என்று சாபாநுக்ரஹஞ் செய்தனர். அவன் அப்படியே சகலப்பிராணிகளுக்கும் பயஞ் செய்யத்தக்கராதனானான். நாரதர், சிவபெருமானை நமஸ்கரித்துச் சண்பகத்தின் மகிமையை வர்ணித்துச் சுயேச்சையாகச் சென்றார். ஆதலின் சண்பக மலர் சிவபூஜைக்கு யோக்கியதை யில்லாததாயிற்றென்று அறியுங்களென ஸூதமுனிவர் சொல்லினர்.

சண்பகப்பூவின் சாபமுரைத்தது
முற்றிற்று.

முப்பத்திரண்டாவது
கணபாலன் அவதரித்த அத்தியாயம்.

ருஷிகள் ஸூதமுனிவரைப்பார்த்துப் பரமபுண்ணியரே! நாங்கள் கேட்ட விஷயங்கட்குச் சமாதானமுரைத்தீர். எங்கள் சந்தேகங்கள் விலகின. ஸர்வசந்தேகங்களையும் போக்கடிக்கும் நிறமையையுடைய வியாஸபகவான் தேவரீருக்குக் குருவாயிருத்தலின், நிருதார்த்தரும் தன்யருமாகிய தேவரீர் மகிமையை யாங்கள்கூற முடியுமோ? இதுவரையில் * பஞ்சாயதன பூசை உத்தமமென்றும், இஷ்டகாமியங்களைக் கொடுக்கத்தக்கதென்றும் கூறினீர். அதில் சிவபஞ்சாயதனம் விஷ்ணுபஞ்சாயதனம் சக்திபஞ்சாயதனம் சூரியபஞ்சாயதனம் கணபதிபஞ்சாயதனம் என்னும் ஐந்தாபூஜைகளையும் பிரதானமாகக் கூறினீர். கணபதி எவருடைய புதல்வர்? அவருக்கு இவ்வளவு மஹத்வம் எப்படி வந்தது? சிவபெருமான் முதலிய பெருந்தேவர்களுடன் அவர் இருப்பானேன்? அதிலும் அனை முற்படப் பூசிப்பானேன்? எனக் கேட்க, அந்தகைதிசாரணியவாகினிப்பார்த்து ஸூதமுனிவர்சொல்லுகிறார்.

புண்யபுருஷர்களே! உலகத்திலுள்ளவர்கட்கெல்லாஞ் சுகத்தையுண்டுசெய்யும் நிமித்தமாகக் கேட்டீர்கள். அதையுஞ்சொல்லுகிறேன்: சிவபெருமான் ஹிமாசலமன்னன் புதல்வியாக அவதரித்த பார்வதிதேவியை மணஞ்செய்து அழைத்துக்கொண்டு கைலாயகிரியையடைந்து சிறிதுகாலஞ்சென்றபிறகு, ஒருநாள் பார்வதிதேவி தன் தோழிகளாகிய ஜயை விஜயை என்பவருடன் கூடி விளையாடிக்கொண்டிருக்கையில், அத் தோழிய

* பஞ்சாயதனம் - ஐந்தமூர்த்தங்களை ஒன்றுசேர பூஜித்தல்.

ரில் விஜயை தேவியைப்பார்த்து, தாயே! சிவபெருமானுக்கு நந்தி பிருங்கி முதலிய பிரமதகணங்கள் காவல்கின்றியிருக்க, உனக்குக் காவல்கள் ஒருவருங்காணும். அவர்களே நமது வாயிலிற் சிவாக்ஞைப்படி காக்கின்றனர். அவர்கள் நமதுசேனையிற்றோ? எனின், ஆம். அவர்கள் சிவபெருமான்கட்டளையைக் கொள்வதுபோல நமது கட்டளையைக் கொள்ளமாட்டார்கள். ஆதலின் ஒரு சேவகன் நமது மனுவலுகவிருந்தால் நன்றெனச் சொல்லினள். தோழிவார்த்தையைக் கேட்ட பார்வதி இதவார்த்தையாகக்கொண்டு, அதனை முடிக்கப் பிரயத்தனமுடையவளாயிருக்கையில், ஒருநாள் பார்வதியம்மையார் அந்தப்புரத்தில் நீராடிக்கொண்டிருக்கையில், சதாசிவமூர்த்தி வாயிலிலிருந்த நந்திதேவர் வார்த்தையைக் கொள்ளாது உள்ளே செல்ல, ஸ்நானஞ்செய்துகொண்டிருந்த மாதேவி * நாணமுற்றுச்சென்று, தோழி கூறிய சொல்லைச் சரிதானென்று தீர்மானித்தாள். இவ்வாறு நடந்தமையற்றி எனக்கு யோக்கியனை ஒரு சேவகனிருக்கவேண்டுவதுதான். என் கட்டளையின்றி அணுமாத்திரமும் இவ்வந்தப்புரத்தில் ஒன்று நடக்கப்படாது என்று

வமவிசார்யஸாதேவீ ஜலமஜ்ஜாஹபாணிகா ।
தேஹஸ்தம்ருதமாதாய த்யாத்வாரூபம்ப்ரபோர்ஸுபம் ॥ (கஎ)
நிர்மாயப்ரணவாகாரம் சதுர்பாஹுமந்த்ரிலோசகம் ।
ஸுக்லாம்பரதரம்விஷ்ணும் கஜவக்த்ரம்ஸ்ரிவாக்ருதிம் ॥ (கஅ)

யோசித்துக் கையிற் சலங்கொண்டு உடலிற் றேய்த்தருட்டி, தனது தலைவராகிய சிவபெருமானுடைய திருவுருவைத் தியானித்து, அதுபோலவே பிரணவஸ்வரூபமும் யானைமுகமும் சதுர்புஜமும் திரிநேத்திரங்களும் மங்கள ரூபமுமுடையதாய் வெள்ளிய வஸ்திரமணிந்து ஸர்வவியாபியாய் விளங்கும் கணன் என்னும் புத்திரனை சிர்மித்துப் பிராணன்கொடுத்து, வாயிற்படியிலிருத்தி, நீ என் உத்தரவின்றி ஒருவரையும் உள்ளே விடப்படாது என்று கட்டளையிட்டு, நல்ல வஸ்திராபரணங்களையளித்து, நீ தீர்க்காயுவாயிரு வென்று ஆசீர்வதித்து, நீ என் பிரிய புத்திரன் என்று கூற, உமா புத்திரன் அன்னையைப் பணிந்து, தாயே! உனக்குள்ள பணிவிடையெல்லாம் செய்கிறேன் எனக்கேட்ட பார்வதி நீ இப்பொழுது துவாரபாலகனாயிரு என்று ஒரு தண்டத்தைக் கொடுத்துச் சந்தோஷித்து, முகத்தில் முத்தமிட்டு ஆலிங்கனஞ்செய்து அந்தப்புரஞ்சென்றாள். கணேசுவர் அதுமுதல் பார்வதியின் கட்டளைப்படி திருவாயில் காத்திருந்தனர்.

* நாணமுறுதற்குக் காரணம்—ஸ்நானஞ் செய்கையில் உபசார வஸ்திரமணிந்த நிற்றலின் என்க. ம

இவ்வாறிருக்கையில் ஒருநாள் உமாபிராட்டியார் தோழியருடன் நீராடிக்கொண்டிருக்கையில், சிவபெருமான் பிரமதகணஞ்சூழ்தமாகத் தேவியின் அந்தப்புரத்தை யண்டிச்சென்று உள்ளே செல்ல நீத்தஞ்செய்கையில், கணனர் என் தாய் ஸ்நானஞ் செய்தலின் உள்ளே போகக்கூடாது என்று சொல்லித் தடைசெய்து தண்டத்தைக் கையிலெடுத்தனர். அதுகண்ட சிவபெருமான் யான் யாரென்று நினைத்தாய்? நானே சிவன் என்று கூறி, மீண்டும் நுழைகையில், கணன் கோபித்துக் கையிலிருந்த தண்டாயுதத்தால் ஓரடி யடித்து, சிவனுஞ்சென்ன? இப்பொழுது என் போகிறாய்? என, சிவபெருமான் நீ என்னையறியாய்; மூர்க்கனாயிருக்கிறாய்; உன்னை இங்கேயமர்த்தினவனுக்கு நான் கணவன் என்று மேலுஞ் செல்ல, கணபதி மறுபடியும் ஓரடி யடித்தனர். அதனால் சிவபெருமான் கோபித்து, பிரமத கணங்களை ஏவினர்த்து, இவன் யார்? இவன் துர்மார்க்கத்தனத்தைப் பாருங்கள். என்று சொல்லினர். பிறகு பிரமதர்கள் துவாரபாலகராயிருக்கும் விநாயகரைப் பார்த்து, நீயார்? நீ என் இங்குவந்தாய்? உன்வேலை யென்ன? என்று வினவ, கணம் நீங்கள் யார்? இங்கென் வந்தீர்கள்? தூரமாகப் போகக்கடவீர்கள் எனக் கூற, பிரமதகணங்கள் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்து, இவன்யார்? சத்துருவைப்போலக் கடின வார்த்தைகள் சொல்கின்றானென்று ஆலோசித்து, மறுபடியும்கணனைப்பார்த்து, அப்பா! நாங்கள் சிவகணங்கள். சிவபெருமானது கட்டளையைச் செய்வோர். உன்னையும் எங்கள் கணத்தைச் சேர்ந்தவனென்று கருதியேவினா விருந்தோம். இனி தூரத்திற்செல். இங்கேயிருந்தால் இறப்பாய் எனச்சொல்லியும், கணன் துவாரத்தை விடாமல் அங்கேயே யிருக்க, கணங்கள் யாவரும் சிவபெருமானை யடைந்து நடந்தவிர்த்தாந்தங்களை வெளியிட, சாம்பமூர்த்தி அவர்களைப் பார்த்து, நீங்கள் நபுஞ்சகர்போலிருக்கிறீர்கள்; அவனைத் தூரத்தேபோகச்செய்யுங்கள் எனக் கூற அதைக்கேட்டு பிரமதர் மீண்டும் வந்து கணனைக் கண்டு, அடா! உன்னை வாயிற்படியில் வைத்தவர் யார்? எங்களை மதியாமல் நீ பிழைப்பையா? நாங்கள் துவாரபாலராக இருந்தால் எங்களை இப்படிப் பேசுவது தகுமா? ஹரியானது சிங்காசனமேறித் தானே அரசனுயிருப்பதாக நினைப்பதுபோல நீ யென்னுகின்றனை. நாங்கள் போர்செய்ய எத்தனிக்கு முன் உன் சூரத்துவம் நிற்கும். நாங்கள் போர்செய்ய ஆரம்பித்தபிறகு உன் சூரத்துவம் உபயோகப்படாது. எங்கள் பராக்ரமத்தைப் பார்க்க விரும்பினால் நீ மரிப்பாய் எனக் கூற, கணமுகர் கோபங்கொண்டு கையில் தண்டாயுதத்தைத் தாங்கி, கடினவார்த்தைகள் கூறும் சிவபடர்களைத் தூரத்திற்போங்கள்; சமீபியாதேயுங்கள்; போகாவிட்டால் என் பராக்ரமத்தைக் காட்டுகிறேன் பாருங்களென்று சுழற்றி அடித்தார்.

கணமூர்த்தியால் அடிபட்டசிவகணங்கள் இனி இத்துவாரபாலகனை யெதிர்த்தால் என்ன நினையுமோ? என்று பயந்தவர்களாய், கெடுதூரத்திலிருக்கும் சிவபெருமானையடைந்து, ஸ்வாமீ! அவன் மிகக்கொடியவனாயிருக்

கின்றன். எங்களையெல்லாம் தண்டத்தால் புடைத்தான் என்று முறையிட்டு விண்ணிந்து நிற்க, சிவபெருமான் அவர்களைப்பார்த்து அவனை ஒருவன்; நீங்களோ அநேகர். ஒருவனிடித்தானென்று இத்தனைபேரும் ஓடிவரலாமா? நீங்கள்தானுபிரமதகணங்கள்? உங்கள்வீரம் நன்றாயிருக்கிறது. உடனேபோய் அவனை யெதிர்த்து அவ்விடம் விட்டுத் தூரத்துங்கள் எனப் புன்சிரிப்புடன் சொல்ல, பிரமதகணங்கள் அவ்வாறே மீண்டும் கணபாலனை யடைந்து, சிறு பிள்ளைபோற் பேசுகின்றவனே! சிக்கிரத்தில் இவ்விடம்விட்டுப்போகாவிடில் எங்கள் பராக்கிரமத்தைக் காட்டுகிறோம்பார் எனக்கூற, கணபாலர் இவர்கள் எத்தனைமுறை சொல்லியுங் கேளாமல் வருகின்றார்களேயென் றோசிக்குஞ் சமையத்தில், அந்தப்புரத்திலிருந்த அம்மையார், பிரமதகணங்களுங் கணபதியுங்கூறுங் கோலாகலவார்த்தைகளைக்கேட்டு அருகிருந்த தோழியை விளித்து வெளியேவிடக்கூடாத விவகாரத்தையறிந்து வரும்படி கட்டளையிட்டனுப்ப, அத்தோழி அவ்வாறே புறம்போந்து சிறிதுநேரம் நின்று அங்கே நடக்கும் விர்த்தாந்தங்களை யறிந்துகொண்டு பார்வதிதேவியோடு சொல்லி, இன்றையத்தினம் நமது சேவகன் வாயிலிலில்லாவிடில் சிவபெருமான்மட்டுமல்லாமல் பிரமதகணங்களும் உள்ளேவந்திருப்பார்கள். அப்படியெல்லோரும் வந்திருந்தால் நன்றாயிராது. கணன் நன்றுசெய்தான் இதராரால் தக்கத்தையடைந்தும் ஒருவனையும் விட்டிலன். அதற்காகவே கணங்கட்கும் கணனுக்கும் வாக்குவாதம் நடக்கின்றது. அதுமுடிந்தபின் ஒருவேளைஜயத்தாலாவது விஜயத்தாலாவதுவருவரோ அறியேன். நமது கணனைத் தொந்தரவுசெய்வது நம்மைத்தொந்தரவு செய்வது போலும். தாயே! இச்சமையத்தில் நாம் சிறிது கண்டிப்பாயிருக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறினள்.

தோழிசொல்லிய வார்த்தைகளால் பார்வதாதேவி அபிமானமுடையளாய், இச்சிவபெருமான் நமது வாயிலிலிருப்பவனியேன் தெரிந்தனை செய்யவேண்டும்? அவனைவேண்டிக் கொள்ளப்படாதோ? நன்றாயிருந்தது என்றுகூறி, மீண்டும் தோழியால் ஒருவனையும் உள்ளே விடவேண்டாமென்று கணனுக்குக் கட்டளை யனுப்பினள். அத்தோழி அவ்வாறே வெளிவந்து கணனைக்கண்டு, உன்செயல் சரியானது. நீ ஒருவனையும் உள்ளே விடவேண்டாம். இப்பிரமதர்கள் உன்னைச் செயிக்கமாட்டார்கள். அவர்கள் போர்செய்ய யத்தனித்தால் நீயும் உன்பராக்கிரமத்தைக்காட்டவேண்டும். உன்னைச்செயித்தாவது நல்வார்த்தையாற் கேட்டுக்கொண்டாவது வரவேண்டியவர்களை யொழிய வேறல்லர். ஜாக்கிரதை: இது தேவிகட்டளையெனச் சொல்லக்கேட்ட கணபதி தாய்மொழிப்படி வன்றிரத்தை யிழுத்துக்கட்டி, இடைக்தரித்துத் தொடையைத்தட்டி, பிரமதகணங்களே! உங்களை யடித்தெறிந்து விடுகிறேன். நானே பார்வதிபுத்திரன்: நீங்களோ சிவகணங்கள், நாமிருவரும் சமானமாகச்சேர்ந்தோம். செய்யத்தக்கதைப் பார்ப்போம். இனி உங்களுக்குரிய பலாபலத்தால் அதிகாரத்தைச்செலுத்திச் சிவாக்ஞை

யைக் காத்துக்கொள்ளுங்கள். நானும் என்னுடைய தாய்கட்டளைப்படி நடந்துகொள்ளுகிறேன். நீங்கள் உள்ளே செல்லவேண்டுமானால் என்னைச்சயித்தாவது என்னிடம் உத்தரவுபெற்றாவது போகவேண்டும் என்று கூறினர். அதுகேட்ட சிவகணங்கள் மீண்டும் சிவபெருமானையணுகி வெட்கமுற்றவர்களாய் ஒருவர்பின்னொருவராகநின்று நமஸ்கரித்து, நடந்தசங்கதிகளையெல்லாம் சொல்ல, சிவபெருமான் நாம் அவனைத்தேட்டுக்கொண்டு விஜயத்தாற் சென்றால் ஸ்திரீயாக்ஞைக்குட்பட்டவராவே மாதலின் நாம் அனைவரும் போர்புரிய்வேண்டுவதே: எவ்வாறாயினும் முடியட்டும். நீங்கள் பிரமதகணங்களாயிருக்கும் யுத்தத்தைவிட்டு வேண்டிக்கொள்வது யுக்தமல்ல. பார்வதியின் செயல் நீன்றாயிருக்கவில்லை. அதற்குரிய பலனை அவளும் அநுபவிப்பாள். யுத்தஞ்செய்யவேண்டுவதே யுக்தமென்று கூறினர்.

கணபாலன் அவதரித்தது

முற்றிற்று.

மூப்பத்து மூன்றாவது

கணபாலன் போர்புரிந்த அத்தியாயம்.

வ்யாஸமுனிவர்சொல்லுகிறார்:— இவ்வாறுசொல்லிய சிவபெருமானது வார்த்தையைக்கேட்ட பிரமத கணங்கள் யுத்தமே தருதியெனக்கொண்டியுத்தகளத்தராய் ஆயுதபாணிகளாய்க் கணபதியையடையக் கணபதியர் அவர்களைப்பார்த்துத் தாமும்யுத்தலக்ஷத்தராய், சிவாக்ஞையைப்பரிபாலிக்கிறவர்களெல்லோரும்வரலாம். நானே சிறுவன்: தனியன். தாயின்கட்டளைப்படிகடப்பவன். பார்வதியேபுத்திரனை என்பலத்தைப்பார்ப்பாள். சிவபெருமானே உங்கள் பலத்தைப்பார்க்கட்டும். பலவந்தர்களும் பாலனுமாகிய நம்மிருவருடையயுத்தத்தை நமது தலைவர்களாகிய சிவபார்வதிகள் பார்க்கட்டும். நானும் இதுவரையில் யுத்தஞ்செய்தவனல்லன். இப்பொழுதே போர்க்கு வருகிறேனுயினும் உங்கட்கு நாணமே சம்பவிக்கும். நாமிருவருமே ஜயிப்பதும் தோற்பதுமாக நினைக்கவேண்டாம். நீங்கள்வெற்றிபெற்றால் சிவபெருமான் வெற்றிபெற்றதாகவும், நான்வெற்றியுற்றால் தேவி வெற்றியுற்றதாகவும் நினைக்கவேண்டும் என்று சொல்லக்கேட்ட தேவர்கள்கோபித்துக் கண்செவந்து பற்கள்கடித்து ஹுங்காரஞ்செய்துகொண்டுவந்தார்கள். அவர்களில் நந்திதேவர் முன்னேவந்து கணனுடைய ஒருகாலையும் பிருங்கி மற்றொருகாலையும் பற்றியீர்க்க எத்தனிக்கையில், அவர்க ளிருவனையும் ஒவ்வோரறையறையக் கால்களை விட்டோடினர். உடனே கணன் உருத்தெழுந்து தன்சமீபத்திலிருந்த இருப்புலக்கையால் சிலர்மண்டையையும், சிலர் கன்னத்தையும் சிலர் கழுத்தையும், சிலர்கால்களையும், சிலர்தோள்களையும் உடைத்தனன். எதிரில் நின்றவர்களெல்லாம் இதனைக்கண்டு இவனைஜயிக்கமுடியாதென்றார்கள். அவ்வடியால் சிலர் கீழேவிழுந்தார்கள். சிலர் ஓடினர்கள்.

சிலர் கணனைப்பணிந்து சிவபெருமானே யடைந்தார்களேயன்றி எதிர் நின்று திடசித்தமாகப் போர்புரிவோரிலராயினர். கற்பாந்தமகாப்பிரளயம்போன் றிருக்கும் அச்சமையத்தில் பிரமதேவர் இந்திரன் முதலானவர்கள் இச்சங் கதியை நாரதராற் கேள்வியுற்றுச் சிவபகவானுக்குச் சகாயஞ்செய்யவேண்டு மென்னுங் கருத்துடன்வந்தனர். விஷ்ணுவும் ருஷிகளும் சிவபெருமானைப் பணிந்து ஸ்வாமீ! எங்கட்கு விடைகொடுத்தாற் போர்செய்கிறோம் எனக் கூறுகையில், கணனுல் அடிபட்டுவந்து முறையிடும் பிரமதகணங்களைப்பார்த் துவருந்தி, சிவபெருமான் பிரமனே! நீ அவனிடஞ்சென்று போர்செய்வாயாக எனும் அவனை இதவார்த்தையாற் சுவாதீனஞ்செய்யவேண்டும் என, பிரமன் ருஷிகளுடன் உடனே புறப்பட்டு, பெருவயிறையுடைய கஜானனரிடம் வருகை யிலேயே, கஜானனர்கண்டு பிரமன் மீசையைப்பிடித்துப் பறிக்க, பிரமன் தாளாதவனும் நான்போர்செய்ய வரவில்லை என்றான். கணன் இருப்புலக் கையைக் கையிலெடுக்க, பிரமனும் முனிவர்களும் ஓடிப்போயினர். அவ்வா றோடுவதைக்கண்டு ஓடுங்கள் என்று சொல்லியும், சிலரை அடித்துத்துரத்தி னர். ஓடினவர்கள் அடியுண்டு சிவபெருமானிடம் முறையிட, பெருமான் கோபித்து இந்திரன்முதலிய தேவர்கள் சுப்பிரமணியர் முதலியபிரமதர்கள் பூத பிரேத பசாசங்கள் யாவரையும் போர்க்குச்செல்ல உத்தரவளித்தனர்.

அவ்வாறு கட்டளைபெற்றவர்கள் தங்கள் ஆயுதங்களைத்தாங்கித் சென்று போர்செய்யத்தொடங்கி, தங்கள் ஆயுதங்களைச்செலுத்த, உலக முழுவதும் மறைந்தது. அந்தச்சமையத்தில் அந்தப்புரத்திலிருந்த பார்வதி தேவி இரண்டு சக்திகளைச் சிருஷ்டித்து அனுப்பினள். அதில் ஒருசத்தி பயங் கரமான வுடலும் கரியமேனியும் மலைபோன்ற முகத்திற் குகைபோலத் திறந்தவாயுங்கொண்டும், வேறொருசத்தி மின்னல்போலும் ரூபமும், அநே கங் கைகளுடையவளுமாக வந்து, அமரர் விடுத்த அஸ்திரங்களை வாய்திறந் துண்டுகொண்டிருக்க, கணன் இருப்புலக்கையாலடித்து, பூர்வத்தில் சமுத் திரமுழுவதையும் ஒரு மந்திரமலையே கலக்கினாற்போல, கணன் ஒருவனே தேவர் சமுத்திரத்தைக் கலக்கலாயினன். அதனால் யாவரும் மனங்கலங்கி என்ன செய்வோம்? எங்கேபோவோம்? எனச்சொல்லி வருந்துகையில், அரம்பை மேனகை முதலிய அப்சரசுகள் சந்தனபுஷ்பங்களைக் கையிற்றாங்கி ஆகாயத்திலிருந்தும், நாரதர் முதலிய ருஷிகள் வேடிக்கைபார்த்தும், ஆ! இவ்வகைய வீரனை நாம் கண்டதேயில்லை: பிரளயகாலருத்திரனே இவ்வாறு வந்திருக்கிறான் என்றுசொல்லிக்கொள்கையில், கடல்சூழ்ந்த பூமிமுழுவதுங் குலுங்கியது. சமுத்திரம் நிலைகலங்கியது. சுவர்க்கிரக மண்டலத்தை யுடைய ஆகாயம்பிளவுற்றது. யாவரும் கலங்கினர். இந்த ராதிதேவர்களும் பிரமத கணத்தலும் ஓடினர். அப்பொழுது அபுமுகக்கடவுள் சக்தியிருவரால் அழிந்த சைனியமொழிய மிருந்தவர்களையழைத்துக்கொண்டு சிவசந்நிதியை யடைந்து நமஸ்கரித்து, ஸ்வாமீ! அக்கணனுடைய வல்லமைசொல்ல முடி யாது. இந்த அற்புதவல்லபமுடைய இவனைப்போன்றவனை இதுகாலும்

கண்டதுமில்லை. கேள்விப்பட்டதுமில்லை. இவனைத் தேவரீரே எதிர்க்காவி டில் மகாப்பிரளயமுண்டாகுமெனக்கூற, சிவபெருமான் வெகுண்டு கர்வம் வருகிறதெனப் புறப்பட்டனர். தேவர்கள் யாவரும்அவரைப் பின்தொ டர்ந்து வருவாராயினர்.

அப்பொழுது நாரதர் சிவபெருமானைப்பார்த்து ஸ்வாமீ! அவன் கொல்லத்தக்கவனல்லன்; அவனை வசப்படுத்தினால் சேஷமுண்டாகும். எவ்வகையிலாவது சுவாதீனஞ்செய்துகொள்ளும் எனக்கூறி அந்தர்த்தான மாயினர். சிவபெருமான் அந்நாரதர் வார்த்தையை நிராகரித்துப் போர்புரி யச்சென்று கணனைக்கண்டு அதிசயமுற்று இவனை வஞ்சனையாலடிக்காவிட் டால் இவன் எவ்விதத்திலும் ஜயிக்கப்படமாட்டான் என்று கருதி, சைனிய மத்தியிலிருந்தனர். நிற்குணனுமாகியசிவபெருமான் விஷ்ணுமுதலானவருடன் போர்க்குவந்திருக்கையில், ஸகலதேவர்களுங் கணங்களுஞ் சுற்றிசூழ்ந்த னர். விஷ்ணுமூர்த்தி சுவாமீ! நான் இவனை மோகப்படுத்துகிறேன். அப் பொழுது தேவரீர் இவனை அடிக்கவேண்டும்; வஞ்சனையாலன்றி இவனை ஜயிக்கமுடியாது எனச்சொல்லுகையில், சுற்றிலிருவரும் மறைந்தனர். கணன் விஷ்ணுவுக்கெதிரேவந்து இருப்புலக்கையைப் பிரயோகிக்குஞ்சமை யத்தில், சிவபெருமான் சூலாயுதத்தைக் கரத்திற் றாங்கிக் கோபங்கொண்டு அங்கேவரும்போது சூலப்படை நமுனிமுதலானவர்களைத்தாக்கி நின்றனர். கணன் அவ்விலையும் பரிகரித்தாற்போடபடையும் பரிகரனது இந்துகரங் களின்மேலும் படையும் ஓடியடிக்க, பெருமான் மற்ற இந்துகரங்களால் சூல த்தைப்பிடித்து நாமேஇவ்வாறு தன்புஜவீரமானல் இவனுக்குஇக்கணங் கள் எவ்வளவுள் என்றெண்ணுகையில், விஷ்ணு சுவாமீ! இவனது ரூபம் சௌரியம் முதலியவற்றால் இவனுக்குச் சமானனில்லை எனக்கூறிக்கொண் டிருக்கையில், பரிகரத்தை விஷ்ணுவின்மேற் செலுத்த அது அவரது சக்கர த்தைப் பொடிபடுத்த விஷ்ணு வேறொரு சக்கரத் தாரியுத்தத்திற்குவர, உலக்கையையே அவர்மேல்விடுத்து மல்லயுத்தஞ் செய்துகொண்டிருந்தனர். அத்தச்சமையத்திற் சூலபாணியான சிவபெருமான் பின்புறமாகவந்து கண னைப் பாசத்தால்விக்கிப் பூமிமேல்வீழ்த்தினர். இவ்வாறு கணன் பாசபந்த னைதபற்றித் தேவர் முனிவர் பிரமதர்முதலானர் களிப்பெய்தினர். உடனே நாரதர்பார்வதிதேவியை அந்தப்புரஞ்சென்று கண்டு, சிவபெருமான் பாச த்தாற் கணனைக்கட்டி மூர்ச்சைசெய்வித்தனர்; நீ இச்சமையத்தில் மானம் விடக்கூடாதென்று கலக்஧ செய்து அனுப்பினர். தேவர்கள் ஜயஜய வென்று சுற்றிதாவித்தார்கள். ருஷிகளே! மேலே பார்வதிசெய்த காரியங்க ளைச் சொல்லுகிறேன் கேட்பீர்களாக என்று ஸூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

கணபாலன் போர்புரிந்தது
முற்றிற்று.

முப்பத்துநான்காவது

கணபதி பட்டாபிஷேகமும் விரதமு முரைத்த அத்தியாயம்.

முனிவர்களே! அதன் பின்னர் பார்வதிதேவி கோபமுடையவளாய்ச் செய்த காரியங்களையும் சிவபெருமான் கண்ணைப் பூசத்தாற் கட்டியடைத்த துன்பத்தையுஞ் சொல்லுகிறேன் என்று ஸூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்:—அப்பொழுது பார்வதி பெருங்கோபமுடையவளாய் என்னசெய்வேன்? எங்கு போவேன்? பிரதிஷ்டையைச் செய்யவேண்டி வந்தேன்? எனத் துக்கித்து அதிக ஆயிரஞ் சக்திகளை யுண்டுசெய்தனள். அந்தச் சக்திகள் மாதேவியைப் பணிந்து நாங்கள் செய்யவேண்டிய காரியம் யாது? கட்டளையிடவேண்டும் எனக் கேட்க, பார்வதி தேங்கள்யோசிக்காமல் இச்சமையத்தில் தேவர்கள் முனிவர்கள் யக்ஷர்கள் அசுரர்கள் முதலானவரை மகாப் பிரளயஞ் செய்யவேண்டும். என்னவனென்றும் பிறனென்றும் பார்க்கவேண்டுவதில்லை எனக் கட்டளையிட, சற்பாத்தத்திற் செய்யுஞ் சங்காரத்தைப்போலவும், அக்கினிதேவன் தருணத்தினைத் தகிப்பதுபோலவும், பிரமன் விஷ்ணு சங்கரன் இந்திரன் குபேரன் சூரியன் சுப்பிரமணியன் என யோசிக்காது அகப்பட்டவர்களை அங்கங்கே அவர்களை வாயிற்போட்டுக் கவளிகரிக்கக் கருதி யுலவுஞ் சக்திகளிற் சிலர் வாய்திறந்துகொண்டும், சிலர் பயங்கரமாகவும், சிலர் தலையாட்டிக்கொண்டும் பலவாறு யுத்தஞ்செய்யுஞ் சமையத்தில், இந்தச் சங்காரத்தொழிலைப் பார்த்து, விஷ்ணுவாதி தேவர்களும் முனிவர்களும் ஐய! மகாப் பிரளயமாயிருக்கிறதே; இஃதகாலத்திற் சம்பவித்ததே; நாம் பிழைப்பதே கடினம். யாதுசெய்வோம்? என்று யோசித்து ஒருவரோடொருவர் இந்த மகாப் பிரளயம் பார்வதிதேவி கருணைவைத்தாலன்றி அடங்காது என்று சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு சக்தி சிவபெருமானை இடப்பிலடிக்க, சிவபெருமானும் மிகவருந்தி, பார்வதியிடஞ் சென்று இஃதென்னவென வினவவுஞ் சக்தியற்றிருந்தனர். சக்திகள் தாதையின்றி யாவரையுந் தின்புறுத்தினர். பார்வதி மகாதேஜஸ்ஸோடு அக்நிமயமாக விளங்குவது கண்டியாவரும் பிரமித்திருந்தார்கள். நாரதமுனிவர் அப்பொழுது தேவர் தட்செல்லாஞ்சகத்தை யுண்டுசெய்யக்கருதி, பிரமாதி தேவர்களிருக்குமிடமடைந்து அவர்களோடு கலந்து, யாதுசெயற் பாலது? என்று யோசித்து, பார்வதிதேவிக்குத் தயைவரச் செய்யாவிடின் நமக்குச் சுகமுண்டாவதில்லை எனக்கூற, தேவர்கள் நாரதமுனிவரே! நீரே அதனைச்செய்தற்குத் தகுந்தவராதலின் தயைசெய்து அப்பார்வதி தேவியிடஞ் சென்று அக்கோபத்தை யகற்றவேண்டும் என்று விநயத்துடன் கூறவும், நாரதமுனிவர் சில ருஷிகளுடன் பார்வதிதேவியிடஞ் சென்று யாவரும் ஒன்றுகூடிப் பின் வருமாறு தோத்திரஞ் செய்கின்றார்கள்.

ஜகதம்பமஹேஶ்வரி ஜகந்மயிதேவதமோஸ்துதே।
சுபதாயிமஹேஶ்வரி ஶிவாயைநமோஸ்துதே ॥ உ ॥
ஜயதேவிதுராசதவ்ருத்தி ஹரேஜயதேவிதுராஸதோஸ்துதே।
ஜகதேகதனுர்த்தரேஜயம் ப்ரகருத்யைதேநமோஸ்துதே॥ உச ॥
வரதாகமஹேஶ்வரி ஸுகாயைதேநமோஸ்துதே ॥ உசஅ ॥

ஜகதம்பநமஸ்துப்யம் ப்ரகருத்யைதே நமோஸ்துதே | அபர்ணாயை நமஸ்துப்யம்சிவாயைநமோஸ்துதே ॥ உ ॥ பவாந்யைதேநமஸ்சைவ துர்காயைதேநமோஸ்துதே | பத்ராயைதேநமஸ்துப்யம்ப்ரகருத்யைதேநமோஸ்துதே ॥ உச ॥ சண்டிகாயை நமஸ்துப்யம்காத்யாயன்யைநமோஸ்துதே॥ உசஅ ॥

ஜகந்மாதாவே! பிரகிருதி ரூபியே! சருகுபகூனரு மின்னித் தவஞ்செய்பவளே! ஹிமோபர்வத ராஜபுத்திரியே! *பவானியே! துர்க்க ஸம்ஹாரியே! சகல ஜாத்திற்கும் மங்களஞ் செய்பவளே! முதலாயுள்ளவளே! சண்ட (முண்ட) சம்ஹாரியே! காத்தியாயனியே! உனக்கு நமஸ்காரம்: நமஸ்காரம்: என்று நாரதாதி முனிவர்கள் தோத்திரஞ்செய்தும், அவர்களைப்பார்த்து ஒன்றுங் கூறுமையால், ருஷிகள் பயந்து திருவடியிற் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, தாயே! சிவபெருமானும் நாங்களும் மிருத்த கஷ்டத்தையடைந்தோம். ஸம்ஹாரத்தை நிவர்த்திவேண்டும்; சாந்த மடையவேண்டும்; சாந்தமடையவேண்டும்; நாங்கள் யாவரும் உம்மால் திருஷ்டிக்கப்பட்டவர்களாதலின் சாந்தமடையவேண்டும். க்ஷமிக்க வேண்டும்: க்ஷமிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க, பார்வதாதேவி அவர்கள் விஷயத்தில் தயவுசெய்து, என் புத்திரன் மூர்ச்சை தெளிந்து எழுந்தபிறகு சம்ஹாரம் நீங்கும். அது வரையிற் சம்ஹாரம் நடக்கிறது நீருகும். மேலும் உங்கள் யாவராலும் பூஜிக்கப்படுபவனும், சகலருக்கும் முதற்கடவுளாயிருந்தாலன்றிச் சம்ஹாரமுமொழியாது. நீங்களுஞ் சகமண்டயமாட்டார்கள் எனக்கூற, அவர்கள் யாவரும் பார்வதியின் உத்தரவுபெற்றுச் சிவபெருமானை யடைந்து நிகழ்ந்தவற்றைக் கூற, சிவபெருமானும் விஷ்ணுவாதி தேவர்களுடன் யோசித்து, இப்பொழுது உலகங்கட்கு சேதமுண்டாவதே முக்கியமாதலின் அப்பார்வதியின்னிருப்பத்தின்படி நடத்தவேண்டுவதே: எனத் தீர்மானிக்க, சிவபெருமான் ஸகல சஞ்ஜீவி முதலிய அஸ்திரங்களோடுடைய துரோணசலம் இங்கே வரவேண்டுமென நினைத்தவுடனே சஞ்சீவகரண முதலான அஸ்திரங்களுடன் அப்பர்வதம் வந்து சேர, அதிலுள்ள மூலிகைகளிற் படிந்த காற்று வியது. அதனல்போரில் உயிரொழிந்த தேவமுனிவர்பிரமகணங்கள் உயிர்பெற்றன. அப்பொழுது பாசபத்தினால் விருக்கும் கணனைச் சிவபெருமான் பார்த்து வருந்தி, பாசத்தை யகற்றித் தமது கையாற்றடவினர். கணன் அக்கணமே யெழுந்து என் இருப்புலக்கை யெங்கே? என்னுடன் போர்செய்த விஷ்ணு வெங்கே? அவனைக் கொல்லவேண்டும் என்று கூறிக்கொண்டு தனது

* பவானிபவன் பத்தினி.

இருப்புலக்கையைக் கையிற்றாங்கி முன்னேநிற்கையில், இந்திராதி தேவர்களும் நாரதாதி முனிவர்களும் கணன் எழுந்ததற்காக மனங்களித்துச் சிவபெருமான் விஷ்ணுவாதி தேவர்களைப் பார்த்து, இனிப் பார்வதி தேவியார் கேட்ட காரியங்களை உங்களால் செய்துமுடியவேண்டுமென்றார்கள்.

ஊதுராலொலுஸுகராஸுலொகாகாரஸுவஹைதகாழே ।
வஸுஜீவகரணீயகதுதொணாலலதேயேயீ ॥ ஈஉ ॥
ஹரணாதெவலமிரிராமகுவஸுஸுஹிதஹுஷா ।
ஸுகாரவுராமதிஸுஹுதுவ்வாஸுலோவதிதோதிதொஸ ॥ ஈஊ ॥
ஸெஜீவகரணிவாய-வுயாரஸுஸுதஹுஷா ।
ஸிவஹுவுகரவுஸுஹுாதுஸுஜாஸுலுராமணவுஷா ॥ ஈசு ॥
வரிவஸ்கூாதுவிஷ்ணுஸுஹுஹுதுகாஸுஹிதுஸுதிதி ।
உதுஸுதி-வலதோஹாயஸுஸிதாய-ரிமணாதுதிதி ॥ ஈடு ॥
ஜஸுதிதுராரதாதுஸுாஸுமணஸுவிகுசுதி-சுதிஸ்திதாரி ।
வுஸுஸுவஸ்தஹுஷாஸுதுவாஸுஸிஸுவிஷ்ணு-வஸுவிதிஸ்தஹுா ॥ ஈஎ ॥

இத்யாலோச்யலங்கரஸ்சலோகாநாம்ஸுகஹேதுகாம் | ஸஞ்ஜீவகரணீயுக்தத்ரோணுசலமமேயதி: ॥ ஈஉ ॥ ஸ்மரணுதேவஸகிரிராகத்வ ஸம்ஸ்திதஸ்ததா | பகங்கரஸ்த்வாகதஸ்ஸத்ய:பாஸுமோசநமோதநோத் ॥ ஈஊ ॥ ஸஞ்ஜீவகரணீவாயுப்ரசாரவரஸுதஸ்ததா | ஸ்ரிவஸ்யசகரஸ்பர்ஸாத்ஸுஞ்ஞாம்லப்த்வகண்ஸ்ததா ॥ ஈசு ॥ பரிகம்க்வாத்யவிஷ்ணு:க்வஹந்யதாம்ஹந்யதாமிதி | உச்த்வாமுஸலமாதாயஸ்திதோதுரிகணேத்தம: ॥ ஈடு ॥ இந்த்ராத்யாநாரதாத்யாஸ்சகணம்வீக்ஷ்யமுதாந்விதா: | ப்ரஸம்ஸந்தஸ்ததாதேவாஸ்ரிவம்விஷ்ணுஸ்மிதிந்ததா ॥ ஈசு ॥

தேவர்கள் வார்த்தையைக் கேட்ட- பிரமாதிதேவர்கள், நாமெல்லோரும் ஏப்படிச்சிவாக்கிணையாற் சுகமாகச்சஞ்சரிக்கின்றோமோ அப்படிப்பட்டபரிபூரண தேஜஸு- வேதமந்திரசம்பந்தத்தால் இந்த கணனுக்கு உண்டாகவேண்டுமென்று அபிமந்திரித்து, சந்தாகாரமுடைய கணனைக் கண்டு, யகர்கள்யிருக்கும் விஷ்ணுவாதி தேவர்கள் யாவரும் கணநாதனுக்கு விருக்கும்படிப் பட்டாபிஷேகஞ் செய்து, வஸ்த்ராபரணுலங்காரஞ்செய்து, புதல்வனெழுந்தானெனக் களிகொண்டு கோபந்தணியும்படி பார்வதாதேவியிடம் அழைத்துக்கொண்டுபோய்க் காண்பித்தார்கள். பார்வதாதேவி மிகக்களித்து, கணபதியைச் சகல சாம்பிராஜ்யங்களும் உண்டாக ஆசீர்வதித்து அவர் உட்மீக் கையாற்றடவி, மகனே! நீ மிக வருந்தித் தர்யனுயினை: சரியத்தை முடித்தாய்: இதுமுதல் யாவராலும் முன்னம்பூஜிக்கத்தக்கவனுகுக. உன் முகத்திற் கிற்காரமனிந்திருத்தலின் உன்னைச் செஞ்சாந்தாற்பூஜிக்க மிழ்க. உன்னைச் செம்மலர்கள்-சந்தனம்-கைவேத்தியம்-தீர்ஞ்சனம்-தாம்பூலம்-அர்க்கியம்-பிரதக்ஷினம்-நமஸ்காரம்முதலானவற்றால் பூஜிப்பவர்கட்குச்சகலகாரியசித்தியுங் கைகூடும்; இதற்குச் சந்தேகமில்லை என்று கூறி, தான் முன்கோசமித்துப் பிரயோகித்த சக்கினை யழைத்துத் தன்னிடத்தம் வேண்டாம்

என்று அச்சத்தினைத் தன்னிடத்தொடுத்தினள். அப்பொழுது தேவர்கட்குச்சுகமுண்டானமையின் இந்திராதி இமையவர்கள் அப்பார்வதிதேவியைப் பலவாறு துதித்துச் சிவபெருமானை யழைத்துக்கொண்டுசென்று, தேவியாரிடம் எழுந்தருளியிருக்கச்செய்து இருவரையுஞ் சந்தோஷப்படுத்தி, சிவபெருமானது திருத்தொடையின்பேரில் விநாயகரைக் கொண்டுவந்து உட்காரவைக்கையில், சிவபெருமான் கஜமுகக்கடவுள் சிரசின்மேல் தமது திருக்காத்தை வைத்து, தேவர்களைப்பார்த்து "இவன் என் பிள்ளை." எனக் கூற, கணேசர் சிவபெருமானது திருத்தொடையினின்றிழிந்து எதிர் நின்று சிவபெருமானையும் பார்வதிதேவியையும் நமஸ்கரித்து, தேவர்களை நோக்கிக் கைகுவித்து, சிவபெருமானைநோக்கி, தேவதேவா! நான்செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும். சமயத்தில் வரும் குரோதம் இத்தகையது-எனவு, சிவபெருமான் விஷ்ணுவே! பிரமனே! நாம் உலகத்திற் பூஜிக்கப்படுவது போல இக்கணேசனும் யாவராலும் பூஜிக்கப்படவேண்டும். அன்றியும் இவ்விநாயகனை முதலிற் பூஜித்து நம்மைப் பின்னே பூஜித்தால்தான் நாம் மனமகிழ்வோம். இவனைப் பூஜியாதவர்கட்குக் காரியங்கள் சித்தியாகாவென்று கூறினர்.

அதன் பின்னர் சிவபெருமான் முதலிற் கணபதியைப் பூஜித்தனர். இரண்டாவது விஷ்ணுவும், மூன்றாவது பிரமதேவரும், நான்காவது பார்வதியும், பிறகு தேவர்கள் யாவரும் மிக்க சந்தோஷத்துடன் பூஜித்தனர். இவ்வாறு யாவரும் பூஜித்து சகலத்திற்கும் பிரபுவாயிருக்கும்படிச் செய்தனர். சிவபெருமான் கணேசருக்குப் பல வரங்களைக் கொடுத்து உன்பெயர் [விக்நஹந்தா] விக்னங்களைப் போக்குபவன். சகல கணங்கட்குந் தலைவனை நீ பூஜித்தற்குத் தக்கவனுகவேண்டும் என்று கூற, சிவகணங்கள் மங்கலவாத்தியங்களை முழக்கினர். யாவரும் ஆசீர்வதித்தார்கள். தேவர்கள் கந்தர்வர்கள் அப்சரசுகள் வாத்திய நாட்டிய சங்கீதங்கள் செய்தனர். சிவபெருமான் மீண்டும் கணபதியைப்பார்த்து, பாத்ரபதமாச சுக்லபக்ஷசதுர்த்யாம்தவம்ஸமுத்பன்ன ஹேரம்பவிகணேஸ்வரா | அஸதேசததர்பகேசுசந்த்ரஸ்யோதயகேசுபே ॥ ப்ரதமேசததாயாமே ஜாதேசகிரிஜாஸுதி | சிர்மதாமாஸதேருபந்தஸ்மாத்தேவ்ரதமுத்தமம் ॥ ஈசு ॥

திரோதய சமயத்தில் இராத்திரி முதற்சாமத்தில் உச்சஸ்தக்கிரஹபஞ்சகயோகத்தில் பார்வதிதனிவிக்நேஸ்வரனைநிர்மித்தமையால், அச்சமயத்தில் விக்நேஸ்வரனைப் பூஜித்தல் உத்தமோத்தமமாதலின் அன்றுமுதல் மனுவருஷத்தில் வரும் அத்தத் திதிவரையில் பிரதி சதுர்த்திகளிலும் விரதத்தை நிய

மத்துடன் தான் கட்டளைப்படி செய்யவேண்டும். இப்படிச்செய்வோர் தமது குடும்பத்தில் சகல சவுக்கியங்களும் பெற்றுச் சுகிப்பார்கள் என்று தேவர் முதலானவரை நோக்கிக் கட்டளையிட்டார்.

மார்க்கசீர்ஷ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தி திதி உதயத்தில் ஸ்நானஞ் செய்து ஒரு பிராமணரைத் தான் செய்யப்போகும் கணபதிபூஜைக்கு இராத்திரி உபயோகப்படும்படி நியமித்து, தான் அன்றெல்லாம் உபவாசமிருந்து, அப்பிராமணரைக் கணபதியாகப் பாவித்து, * தார்வத்தாற் பூஜித்து, இரவு ஒருஜாமங்கழித்தபிறகு ஸ்நானஞ்செய்து, பொன் முதலிய லோகங்களாலாவது, பலவித்தாலாவது, வெள்ளெருக்கமரத்தாலாவது, திருநீயாலாவது, கணபதிப் பிரதிமை செய்து, அதற்குப் பிராணப்பிரதிஷ்டை முதலிய நியதியுடன் கந்தபுஷ்ப தூபதீபங்களாற் பூஜிக்கவேண்டும். அவரது சிரீடத்தில் விளங்கும் பாலசந்திரரைப் பின்னர் பூஜித்து, பிறகு அப்பிராமணரைப் பூஜித்து இன்சுவையோடுகூடிய அன்னங்கொடுத்து, தானும் உப்பின்றி இனிய அமுதுண்ணவேண்டும். இவ்வாறே மறு சதுர்த்திகளிலும் செய்துவந்து வருஷமுடிந்தவுடன் விரதபூர்த்திக்காக உத்தியாபனமாகப்பன்னிரண்டு வேதியருக்கு அன்னமிடவேண்டும். இவ்விரதத்தில் கன்சக்நிக்கேதகத்நிவியேலாபஞ் செய்யப்படாது. அஷ்டதளபத்மமெழுதி அதில், ஒருகலசமமைத்து அதில் விக்நேசுவரரை ஆவாகனஞ்செய்து தூபநிவேதனாதிகளாற் பூஜித்துஹோமஞ்செய்து, இரண்டு சுமங்கலிகட்கும் இரண்டு பிரமசாரிகட்கும் அன்னமளித்துப் பூஜித்து, விதிப்படி தான் இரவு முழுதும் விழித்திருந்து வாத்திய கோஷ முதலியவற்றால் உத்ஸவஞ்செய்து, மந்திரபுஷ்பஞ் சமர்ப்பித்து அன்புடன் நமஸ்கரித்துத் தன் இஷ்டங்களைச்சொல்லிக்கொள்ளவேண்டும். மறுதினம் விடியற்காலத்திற் பூஜித்து, மீளும் நான் பூஜிக்கும்பொழுது தேவரீர் எழுந்தருளவேண்டுமென விசர்ஜனஞ்செய்யவேண்டியது. இவ்வாறு விரதமிருப்பவர்கள் மனதிலுள்ள கோரிக்கையடைவர். பத்நியுடன் செஞ்சந்தனம் சுவேதாக்ஷதை உபசாரமுதலியவற்றாற் பூஜிப்பவர் சகல காரியசித்தியும் பெற்று எல்லாத்துன்பங்களையுமொழிப்பர். இவ்விரதம் எல்லா வருணத்தவரும், ஸ்திரீகளும், சத்துருக்ஷயங் கோரின அரசர்களுஞ் செய்யக்கடவர் என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளி, தேவர் முதலிய சிவகணங்கள் முதலிய எல்லோருக்கும் பிரபுவாக்கினர். அக்காலையில் யாவரும் கணாதிபதியைப்பூஜித்து நமஸ்கரித்தார்கள். தன்புதல்வனுக்கு நேர்ந்த ஏற்றத்திற்காகப் பார்வதிக்குண்டான சந்தோஷத்தைச் சொல்ல ஒருவராலும் முடியாது. அப்பொழுது தேவவாத்தியங்கள் முழங்கின. புஷ்பமாரி சொரிந்தனர். உலகமுழுதும் மகிழ்ந்தன.

கணபதி பட்டாபிஷேகமும் விரதமு முரைத்தது முற்றிற்று.

---

* தார்வம்-அருகம்புல். இது கட்டையின்றிப் பன்னிரண்டங்குல நீளமும் மூன்று இலையுமாகவுள்ள தூற்றொன்றுல் அல்லது இருபத்தொன்றுல் பூஜிக்கத்தகும்.

மூப்பத்தைந்தாவது.

கணபதி தாய்தந்தையரை வலம்வந்த அத்தியாயம்.

லோமமுநிவர் மிகாரண்யவாசிகளை நோக்கி மேலுரைத்தவற்றைக் கூறுகின்றேனென்று சொல்லத் தொடங்கினர்:—தேவர்முதலியோரும் ருஷிகணங்களும் சிவசக்தியைப்படிவந்து, சிவபெருமானையும் பார்வதாதேவியையும் கணேசரையும் புகழ்ந்து, எப்படிப்பட்ட பெருபுத்தம் உலகனம் ஹர மாகத்தக்கதாய் நிகழ்ந்தது! என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். சிவபெருமானும் சிவகணங்களும் உலகங்கள் பிழைத்தனவென்று களித்தனர். பார்வதாதேவியுங் கோபமொழிந்து சந்தோஷித்திருந்தாள். சிவபெருமான் பார்வதாதேவியைச் சந்தோஷ வார்த்தைபாலுவப்பித்து, உலகவிர்த்திக்காகவேண்டிய காரியங்களைச் செய்துகொண்டிருந்தார். விஷ்ணு பிரமன் இவருஞ் சிவாக்ஞை பெற்றுத் தமதுலகை யடைந்தனர். காரதபகவானும் பார்வதியைப்புகழ்ந்து பாடிச்சென்றனர். ருஷிகளே! நீங்கள் கேட்ட விஷயங்களையெல்லாஞ் சொல்லவேனென்று கூறிய லோமமுநிவரைப் பார்த்து, ருஷிகள் கணேசருடைய விர்த்தாந்தங்களை யெல்லாந் தேவரீர் சொல்லக் கேட்டோமாயினும், அவ்வளவில் ஆசை தணியாது இன்னும் அவருடைய திவ்ய சரிதங்களைக் கேட்க மனம் அவாவுகின்றமையால் எங்களிடம் கருணை கூர்ந்து இன்னுமுள்ள சரிதங்களைச் சொல்லியருளவேண்டுமென்று வேண்டலோமமுநிவரும் மனக்களிப்போடு சொல்லலுற்றனர்.

ருஷிகளே! பார்வதாதேவியும் சிவபெருமானும் கணபதி விஷயத்தில் அதிகமான புத்திர விருப்பத்தை வைத்துலீலையாடிக்கொண்டு வளர்த்தார்கள். கணேசர் வண்முகர் இருவரும் தாய்தந்தையரிடத்துப் பணிவிடை செய்து அவர்கட்குப் பிரியம் விளைத்தார்கள். வளர்பிறைச் சந்திரன்போல இவ்விரு சகோதரருக்கும் ஸ்நேகம் பெருகிற்று. இப்படியிருக்கையில், பார்வதி பரமேஸ்வர திருவுளமும் தமது புதல்வரிருவர்க்கும் எவ்வாறு மணஞ் செய்யத்தக்கது? என்று விசாரத்தோடிருந்தார்கள். அவ்வார்த்தையைக் கேட்ட புதல்வரிருவரும் ஆச்சரியமுற்று எனக்கு முன்னே விவாஹ மாகவேண்டும் எனக்கு முன்னே விவாஹமாகவேண்டுமென்று ஒருவரோடொருவர் விவாதஞ் செய்துகொண்டிருக்க, அச்சமயத்தில் ஜடாதரராகிய சிவபெருமானும் பார்வதாதேவியும் ஒரு யோசனை செய்து ஓரிடத்திலிருந்து, புதல்வரிருவரையும் வரவழைத்துப் பின்னர்களே! நீங்கள் இருவரும் சமானஸ்தர்கள். உங்களிருவரையும் ஓரேமாதிரியாக நாங்கள் மதிக்கிறோம். இப்பொழுது உங்கட்கு விவாஹஞ்செய்யவேண்டிய காலமாயிருத்தலின் ஒரு யோசனை செய்திருக்கிறோம். அதாவது: எவன் உலகத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து முதலில் வருவானோ அவனுக்கு முதலிலும், எவன் பின் வருவானோ அவனுக்கு இரண்டாவதும் மணஞ்செய்ய வேண்டுமென்பதே என, அதனைக் கேட்ட சுப்பிரமணியர் பூமிப் பிரதக்ஷிணஞ் செய்து வரும்படி விரைவிற் சென்றனர்.

கணபதி நாம் எவ்வாறு உலகப் பிரதகூினஞ்செய்வோம் என்று யோசித்து, இப்படி ஸ்நானஞ் செய்து தாய்தந்தையரைக் கண்டு, நீங்கள் சிறிது சிம்மாசனத்தில் இருக்கவேண்டுமென்று விநயமளிக்க, அவர்கள் அவ்வாறே ஆகுக, நான் உங்களைப் பூஜிக்கவேண்டுமென்று கூறி, சோடசோபசாரத்துடன் பூஜித்து ஏழுமுறை பிரதகூினஞ்செய்து கைகுவித்து எதிரில் நின்று தாய் தந்தையரைப்பார்த்து, நான் சொல்லும் விஷயத்தைக் கேட்டுச் சீக்கிரம் எனக்கு மணஞ்செய்விக்க வேண்டும் என, கணபதியின் வார்த்தையைக் கேட்ட சிவபிரானும் உமாதேவியும் நீ வினாவில் உலகவலம்வா. சுப்பிரமணியன் அதற்காகவேபோயிருக்கிறான். நீயுஞ்சென்று பிரதகூினஞ் செய்து முன்னே வந்தால் உனக்கே வினாவில் மணஞ்செய்வோம் என்றார்கள். அதைக் கேட்ட கணபதி கோபித்து நான் பூமியை ஏழு பிரதகூினஞ் செய்துவந்திருக்க என்னை மறுபடியும்போகச்சொல்லலாமா? எனக்கூறினர். கணேசர் வார்த்தையைக் கேட்டு, நீ எப்பொழுது பூமிவலஞ் செய்தாய்? எனக் கேட்க, விநாயகர் நான் உங்களிருவருக்கும் பூஜை செய்து ஏழு பிரதகூினஞ் செய்தது பிரதகூினமல்லவா? உங்களிருவரையும் பிரதகூினஞ் செய்தால் உலகப் பிரதகூினஞ் செய்ததுபோலா மென்று வேதம் சான்றிதம் முதலியன கூறுவதெல்லாம் அபத்தமா? உலகத்தில் மாதா பிதாக்களைப் பூசித்துப் பிரதகூினஞ்செய்தால் பூப்பிரதகூினபலன் கிடைக்குமாதலின், வீட்டிலிருக்கும் அன்னையையுந் தந்தையையும் அகற்றித்தீர்த்தயாத்திரை செய்வோன் தாய்தந்தையரைக் கொன்ற பாபமடைவான். தாய் தந்தையருடைய பாதபங்கயமாகிய தீர்த்தத்தைவிடப் புதல்வனுக்கு வேறெதீர்த்தங்கிடையாது. கங்காதி தீர்த்தங்களெல்லாம் சுவடப்பட்டடைய வேண்டியவை; இதுவோ சமீபத்திலுள்ளதும் சுலபமானதும் தர்மஸாதனமானதும் எல்லாப்பலன்களையுங் கொடுத்தவல்லதுமாம். புதல்வன் தாய்தந்தையரைப் பூசிப்பதேதீர்த்தம். மணிவி கணவனைப்பூசிப்பதே தீர்த்தம் என்று வேதசாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ளது. நீங்கள் இதனை அலங்கிபமாக்கும் பகுத்தில் உங்கள் இவருடமும் அலங்கியமே. வேதங்களும் அலங்கியமேயாம். ஆகலின் நான் பூப்பிரதகூணம் ஏழுமுறை செய்தது நிச்சயம். வேதசாஸ்திரங்களை அலங்கியமாகவாவது அலங்கியமாகவாவது செய்யுங்கள்; அஃதே உங்கள் விருப்பம் என்று கூறினர். இவ்வார்த்தையைக் கேட்ட தாய்தந்தையர் களித்தார்கள்.

கணபதி தாய்தந்தையரை வலம்வந்தது

முற்றிற்று.

முப்பத்தாருவது

கணபதி விவாஹமுனைத்த அத்தியாயம்.

வஸிதர் சொல்லுகிறார்:—சிவபெருமானும் பார்வதாதேவியும் புத்திரரான கணபதியைப்பார்த்து, கணபதி! நீ மஹாபுத்திமான்; தாய்தந்தையரிடத்திலே திடபக்தியுடையவன்; நீ சொன்ன மொழிகள் சத்தியமானவை. தக்கமடைந்தக்காலத்தில் எவன் நிர்மலபுத்தியுடையவனுயிருப்பனோ, அவன் தக்கங்கள் சூரியனைக் கண்ட இருள்போல நீங்கும். வேதசாஸ்திரோக்தமாகச்செய்தாய். தாய்தந்தையரைப் பிரதகூினஞ்செய்தால் பூப்பிரதகூினஞ் செய்தபலன் கிடைக்குமென்று வேதசாஸ்திரபுராணங்கள் விளம்புமாதலின் நாங்கள் இருவரும் நின் செயலுக்கு மகிழ்ந்தோம் என்று கூறி, புத்திமானுன கணபதியைச் சந்தோஷப்படுத்தி, விவாஹவிஷயத்தில் யோசித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வளவில் விசுவரூபன் புதல்வியர்களாகிய சித்தி புத்தி என்னும் மிகச் சமர்த்தியமுடைய கன்னிகைகளை வேத விதிப்படி ஸர்வாடம்பரபூர்வமாக மணஞ்செய்யத் தீர்மானித்து, தேவர்கள் முனிவர்கள் முதலியயாவருமுவந்திருந்து சிவபெருமான்பார்வதி இவர்கள்முன்னேதத்தின்படி விசுவரூபன் மணவினை முடிக்கக் கண்டு களித்தார்கள். கணபதியும் சித்திபுத்திகளுடன் கூடிச் சுகமனுபவித்ததைப்பற்றிக் கூறமுடியாது. பிறகு சிறிதுகாலம் கழிந்தபின் விநாயகருக்குச் சித்தி என்னும் மனைவியிடம் லாபன் என்னும் பிள்ளையும், புத்தி யென்னும் மனைவியிடம் லாபன் என்னும் பிள்ளையும் உண்டானார்கள். கணபதி இவ்வாறு ஸம்ஸாரவிஷயத்திற் பரமானந்தமுற்றிருந்தார்.

அந்தச்சமயத்தில் பூப்பிரதட்சிணர்த்தமாகச்சென்ற குமாரக்கடவுள் அதனைச் செய்துமுடித்துக் கைலாயபர்வதத்தையடைகையில், நாரதபகவான் அங்கே சென்று ஷண்முகனைக் கண்டு, ஸுப்ரமணியமூர்த்தி! உமது தாய்தந்தையர் செய்த காரியங்களைக் கேட்டனையா? உன்னைத் தீர்த்தயாத்திரை செய்துவருக என நிமித்தம்வைத் தனுப்பி, விக்நேச்சுரனுக்கு இரு கன்னியரை மணமுடிக்க, அவர் அவ்விருகன்னியரிடம் இருபுதல்வரைப்பெற்றுக் களித்திருக்கின்றார். நீரோ சகலகவ்டத்துடன்போய், பூப்பிரதகூினஞ் செய்தீர், தாய்தந்தையரே இவ்வாறு அபகாரஞ் செய்தால் இதரர் என்ன காரியஞ் செய்யமாட்டார்கள்? இது மிக்க அநியாயம்! இது என் மனதிற்கு நன்றுப்படத் தோற்றவில்லை; இவ்வாறு செய்தவர்கள் முகத்தைப் பார்க்கப் படாதெனச் சாஸ்திரம் முறையிடுகிறது; சொன்னேன். இனி உம்மிஷ்டப்படி செய்யலாம் என்று கூறிச்சென்றனர். அதன்பிறகு ஷண்முகர் தாய்தந்தையரிடம் வந்து நமஸ்கரித்துக் கோபாக்கினியினல் தகிக்கப்பட்டு, தாய் தந்தையர் தபோபதுங் கருதாது கைலாஞ்சகிரிநோக்கிச்சென்றனர். அவ்வாறு போகையில் தாய்தந்தையர் நீ போகவேண்டாம். பூப்பிரதகூினஞ் செய்துவந்ததும் விவாஹஞ் செய்வதாகக் கூறியபடி இப்பொழுது விவாகஞ் செய்

ரிறும் என்று கூறித் தடுத்தும், நீங்கள் என்விஷயத்திற் கபடஞ்செய்தீர்க ளாதலின் யான் இங்கிருக்கப்படாதென்று சொல்லிக்கொண்டே நடந்து, தரிசனமாத்திரத்திலேயே சகல பாபங்களையும் போக்கடித்துக்கொண்டு கிரவுஞ்சகிரி சென்று அங்கேயே நின்றுவிட்டனர். அவ்விடத்தில் அதுமுதல் சுப்பிரமணியருக்குக் குமாரபிரமச்சாரி யெனப் பெயர் திரிலோகத்திலும் பிரசித்தமாக வண்டாயிற்று.

கார்த்திகைப் பூரணையினன்று தேவர்கள் ருஷிகள் முதலிய பாவ ரும் அவ்விடஞ்சென்று குமாரதரிசனஞ் செய்கிறார்கள். கார்த்திகைப்பூரணை யில் தரிசிப்பவர்களின் பாபங்கழிந்து இஷ்டகாமியங்கள் கைகூடும். புத் திரன் பிரிவுக்காற்றாத பார்வதாதேவி மிக்க தூயத்துடன் கிரவுஞ்சகிரியை யடைந்தாள். பிறகு சிவபெருமானும் மல்லிகார்ஜுனன் எனப் பெயர் பெற்று ஜோதிர்லிங்க ஸ்வரூபத்துடன் அவ்விடஞ்சென்று வசித்தார். இப் பொழுதும் அவ்விடத்தில் பார்வதி பரமேஸ்வர ரிருவரும் பிரத்தியட்சமாக இருக்கின்றார்கள். இவ்விருவரது வருகையையு முணர்ந்த ஸ்கந்தர் அவ்வி டம்விட்டெழுந்து செல்ல யத்தனிக்கையில், தேவர்கள் யாவரும் அங்கிருக் கும்படி அவரைப் பிரார்த்தித்தமையின் மூன்றுயோசனை தூரத்தில் தங்கி னர். இரு வரவாக்களில், தாய்தந்தையரிருவரும்குமாரக்கடவுளைப்பார்க்கும் விருப்பத்தால் அங்கே வருகின்றார்கள் (என்றும், அமாவாசையில் சிவபெரு மானும், பூரணையில் பார்வதாதேவியும் வருகின்றார்கள்). நைமிசாரணிய முனி வர்களே! கணபதி விவாஹவிஷயம் நீங்கள் கேட்டபடியே சொன்னேன். இச்சரிதத்தைக்கேட்டவர்கள் சகல பாபங்களினின்றும் நீங்குவர் என்று ஸூதமுனிவர் சொல்லியருளினர்.

கணபதி விவாஹ முரைத்தது

முற்றிற்று.

முப்பத்தேழாவது

உருத்திராக்ஷ மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவரே! தேவரீர் கூறியவற்றால் மிகச்சந்தோஷமடைந் தோம். தேவரீரே தன்யர்: கிருதகிருத்தியர்: தேவரீரது தரிசனத்தால் நாங் களுங் கிருதார்த்தர்களாமேனும் என்று துதித்த நைமிசாரணிய வாசிகளை நோக்கி, ஸூதமுனிவர் உங்களால் யானும் புண்ணியனானேன். சிவசரிதங் களே உங்கட்கு விருப்பமுண்டாக்குகின்றன. சிவபெருமானைப் பணிந்து அவ ரது திவ்யசரிதங்களைக் கேட்போர்களே பரிசுத்தர்கள். அவர்களாலேயே அவர்கள் வம்சமுழுவதும் பவித்திரமாகும். சிவநாமங்களை உச்சரிப்பவனிட த்திற் பாபங்களெல்லாம் நெருப்பில்வீழ்ந்த சருகுபோ லழியும். சிவாயநம எனச் சொல்வோன் முகத்தைப் பார்த்தவன் ஸர்வதீர்த்த தரிசனஞ்செய்த பலனை யடைவான். எவனுடைய வாயினிற் சிவநாமங்களும், நெற்றியில்

விபூதியும், கழுத்தில் உருத்திராக்கமும் ஆகிய இம்மூன்றும் விளங்குமோ அவனைப் பார்த்தால் (கங்கா - யமுனா-சரஸ்வதி இம்மூன்றின் சங்கமமான) த்ரிவேணிஸ்நானஞ் செய்தபலன் கிடைக்கும். சகல பாபங்களும் போம். அவனை யிவ்வாறு மதியாமல் அவமதிப்போர் அப்பொழுதே பெரும்பாவ மடைவர். விபூதி யணியாத நெற்றியும், உருத்திராக்ஷதாரணமில்லாத்தும், சிவநாமம் புகலாத வாயுமுடையவனைக் கண்டால், சண்டாளனைக் கண்டாற்போல விலகிச்செல்லவேண்டும். சிவநாமமே கங்கையும், விபூதியே யமுனையும், உருத்திராக்ஷமே ஸர்வபாபங்களையு மொழிக்கும் ஸரஸ்வதியுமா

விஹகீயஹ்வுரொவாஹெ மஹொஷதோகஷயாரணி ।
நஹிஸிவகீயீவாணீ தம்தூஜெஹந்தூஜயஷா ॥ கூ ॥
மொஷம்நாகீதயோரமம்மா விஹகீயஹ்கீஷதாதயா ।
ரஷோக்ஷாவியிஜீவெரோக்ஷா வவஹ்வாவவ்ருணாஸிநீ ॥ சஷ ॥

விபூதிர்யஸ்யநோபாலே கனேருத்ராக்ஷதாரணம் | நஹிஸிவமயீவாணீ தம் த்யஜேதந்த்யஜம்யதா ॥ கூ ॥ ஸைவந்நாமததாகங்கா விபூதிர்யமுனாததா | ருத்ராக்ஷா விதிஜாப்ரோக்தா ஸர்வபாபப்ரணாஸிநீ ॥ கச ॥

மாதலின், இம்மூன்றையும் அணிந்த பலனையும் திரிவேணியைத் தரிசித்த பலனையும் உலகத்திற்கு விதிஞ்செய்யவேண்டிய பிரமதேவர் தலையில்வை த்து நிறுத்திச் சமமாக விருக்கக்கண்டு, பிரமன் முதலான தேவர்கள் யாவ ரும் இம்மூன்றையு மடைந்தார்கள். இம்மூன்றையும் அணிந்தவனுடையபல னைச்சொல்ல வென்னால் முடியுமோ? என்று ஸூதர் சொல்ல, ருஷிகள் யாவ ரும் ஸ்வாமீ! அத்தகைய பெரும்பேற்றினைத்தரவல்ல உருத்திராக்ஷத்தின் பிரபாவத்தை அடியேங்கள் கேட்டுப் புனிதராகும் வண்ணம் விரித்துரைத் தருளவேண்டும் என்று இரப்ப, ஸூதரும் அவர்பால் கிருபைகொண்டு சொல்லலுற்றனர்.

ஆயிரத்தொருநூறு ருத்திராக்ஷங்களைத் தரித்தவன் ருத்ரஸ்வ ரூப மடைவான்; அவன் பலனை அநேக வருஷங்கள் சொல்லினும் முடிவுபெ றாது. அதிற்பாதியாகிய ஐந்நூற்றைம்பது மணிகளால் கிரீடஞ் செய்து தரித்தவன் சிவரூபியாவான். முந்நூற்றறுபது மணிகளால் உபவீதஞ் செய்து தரிக்கலாம். சிகையில் மூன்றும், இருகாதுகளிலும் ஐந்து அல்லது ஆறும், கழுத்தில் நூற்றொன்றும், புயத்தில் பதினொன்றும், கன்னமாலை [இருகாது சுற்றிலும்] பதினொன்றும், மணிபந்தங்களிரண்டில் பதினொன்றும், பூணூ லில் மூன்றுமாக முக்திகாமி தரிக்கவேண்டிய நியமம். ஏம்பது மணிகளைக் கடிசூத்திரமாக அணியத்தக்கது. இவ்வரணிபவன் முக்தியடையச் சந்தே கமில்லை. இவ்வண்ணமாகத் தரித்து ஆசனத்தமர்ந்து சிவத்தியானஞ் செய் பவன் சரபாதிக்ரது சாமர்த்திய மடைவான். அவனைக் கண்டவர் சகல பாப ங்களும்போய்க் கங்காஸ்நானபலனுஞ் சிவதரிசன பலனும் பெறுவர். ருத் திராக்ஷ மாலிகையைத் தாங்கி நூறு மந்திரஞ் ஜபித்தால் ஆயிரஞ் ஜபித்த பலன் கிடைக்கும். சிவபெருமான்-விஷ்ணு-சூரியன்-சக்தி-கணபதி இவ்வை

வர் மந்திரங்களையும் ஜபிப்பதற்கு ருத்திராக்ஷமே சிறந்தது. இதனால் சகல மந்திரங்களுஞ் ஜபிக்கலாம். முக்தி-புத்திரபாக்கியம்-ஆரோக்கியம்-வித்தை-கன்னிகை-கீர்த்தி முதலியவற்றை விரும்பினவர்கள் ருத்திராக்ஷமணி பரித்து ஜபித்தால் அவற்றைத்தடையின்றியடைவர். ஆனாலும் சிவபக்தன் ருத்திராக்ஷமணிமாலையை விசேஷமாகத் தரிக்கவேண்டும். விஷ்ணு பக்தன் ஜபமாலையாகக் கொள்ளவேண்டியது. ருத்திராக்ஷத்தை விருப்புத்தோடாவது விருப்பமின்றியாவது அணிந்தால் பலனுண்டாம் ஆதலின் அவைஉத்தமமாம். [செல்வப்பொருள்விரும்பினவன் பொன்னும்செய்தமணியும், கீர்த்தி வேண்டியவன் முத்துமணியும், புத்திரகாமி ஸ்படிகமணியும், வசியகாமி பவளமணியும், வாஹனகாமி வெள்ளிமணியுங் கையிற்கொண்டு ஜபஞ் செய்யலாமென்று நூல்கள் கூறுமாயினும் ருத்திராக்ஷ மணியே இவற்றைக் காட்டிலுஞ் சிறந்த பலனைக்கொடுக்கும். உபாசனா பலவகைப் படுதலின் இம்மணிமாலையின் பேதங்களைக் கூறினும். சிவபெருமானையும் விஷ்ணுமூர்த்தியையுத் தியானிக்கையில் ருத்திராக்ஷ மாலையே சகலங்கொடுக்கத் தக்கது. சூரியனுக்குப் படிகமணியும், சண்டிகை-கணேசர்கட்கு முத்து பவளமணிகளும் கவி கொடுக்கும் எனப் பெரியோர் கூறியிருக்கின்றனர்.]

இவ்விதமாகச் சொல்லியிருப்பினும் ருத்திராக்ஷம் சிவபெருமானை விசேஷமாகச் சந்தோஷிக்கச் செய்யும். முத்துடன் கலந்த ருத்திராக்ஷம் விண்மை மகிழச்செய்யும். பூர்வத்தில் ஸ்ரீவியாஸபகவான் முதலிய ருஷி சிரேஷ்டர்கள் சாஸ்திர விசாரணையால் ருத்திராக்ஷஞ் சிறந்த தென்றார்கள். அவ்வருத்திராக்ஷத்தின் பேதங்களை இனிக் கூறுவேன். ஒருமுக ருத்திராக்ஷமணி சகலகாரியசித்தியையுங்கொடுக்கும். இவ் வொருமுகமணி இருக்குமிடத்தில் அணிமாதி அஷ்ட சித்திகளும் இருக்கும். இருமுகமணி இருக்குமிடத்தில் லக்ஷ்மீகடாக்ஷம் விளங்கும். மும்முகமணி ஸகல வித்தியையுங் கொடுக்கும். நான்முகமணி சதுர்வித புருஷார்த்தங்களையும் கொடுக்கும். ஐம்முகமணி பாபத்தை பொழிக்கும். ஒரு முகமணி கிடைப்பதரிது; அது இலந்தம்பழ மளவாகக் கிடைத்தால், சுகசவுபாக்கியங்கள் விருத்தியாகும்; கொல்லிக்கனி யளவாயின் சகல துக்கங்களையு மொழிக்கும்; கடலை யளவாயின் விலை மதிக்க முடியாது. அப்படிப்பட்ட மணிகளால் மாலை யணிந்தவன் பலனை என்னென்று சொல்லுவேன். அவ் வொருமணியைவைத்திருப்பவன் சாக்ஷாத் சிவபெருமானே: மண்டலாதிபத்ய ராஜாதிபத்யமும் அதற்குச் சமானமாகா; அப்படிப்பட்ட மணிகிடைத்தாற் பொற்குவியலாவது, ஆனி முத்துகள் தாருவது கொடுத்துப் பெறலாம். உருத்திராக்ஷமணிய வேண்டியவன் பொருள் கொடுத்து வாங்கி யணியவேண்டும். ஒருவன், இனமாகக் கொடுக்க வாங்கப்படாது. ஆனால் தானங்கொடுத்தவனுக்கு விசேஷ பலனுண்டு. பொருள் கொடுத்து வாங்கச் சக்தியில்லாதவன் தன் புண்ணியத்தைக் கொடுத்தாவது பெறலாம். கடலை யளவு மணி போகமோக்ஷங்களைக் கொடுக்கும். குன்றிமணியளவு மணி காரியசாதனஞ் செய்யும். எவ்வளவு சிறிய

மணியைப் பூண்பானே அவ்வளவு விசேஷ பலனைப்பெறுவான். சிவமந்திரம் ஜபிக்காதவனையும் ருத்திராக்ஷமணியாதவனையும் பரிசிக்காமல் தூரமாகப்போகவேண்டும். சர்வவிதைகளிலேயும் அவ்வம்முகங்களை யிருக்கின்றனவெனினும், இவ்வருத்திராக்கவிதையில் முத்தியாகிய முகங்களும்புகுந்தது. ருத்திராக்ஷமாலையணிந்தவனைப்பார்த்தால் பூதப் பிரேத பிசாச டாகினி டாகினி முதலிய சகலதோஷங்களும், ஆபிசாரத்திற் பிரயோகக்கருமும் அவனெருங்காது விலகியோடும். உருத்திராக்ஷமாலிகையைப்பார்த்தால் சிவ விஷ்ணுக்கள் சந்தோஷிப்பர். ஏகமுகருத்திராக்ஷத்தை நீரோட்டத்தில் விட்டால் எதிர்த்தோடும். இருமுகமணியை யணிந்து கெருப்பிலிறங்கினால் உடல் வேகாது; ஜலதோஷம் நீங்கும். மூன்முமுகமணி யணிந்தவனை ஆயுதங்கள் ஒன்றுசெய்யா. நான்முகமணியை வைத்திருப்பவன் வீட்டில்வந்த சோறுணவுக்குக் கண்கள்தெரியா; அது தண்ணீரில்விட்டால் முழுகிவிடும். ஐம்முகமணியிருந்தால் சகல துன்பங்களையும் விலக்கும். அது நீரில் முழுகாது. இவ்வாறு இவற்றின்குணத்தைப் பரிசோதித்துப்பார்த்து அணியவேண்டும். ஸ்நானம்-தானம்-ஜபம்-ஓமம்-அத்தியயனம்-பிதிர்த்தர்ப்பணம்-சிவவிஷ்ணு பூஜைகள்-சிரார்த்தமுதலிய எல்லாக்காலங்களிலும் ருத்திராக்ஷந் தரித்துக்கொள்ளலாம். முனிவர்களே! நீங்கள் கேட்ட விஷயத்தைச்சொன்னேன். இந்த ருத்திராக்ஷ மஹாத்மியத்தை விரும்பிக்கேட்டவன் சிவபெருமானுக்கு அதிகப்பிரியமுள்ளவனுவானென்று ஸூதமுனிவர் கூறினர்.

உருத்திராக்ஷமகிமையுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தேட்டாவது

"ஜோதிலிங்கங்களின் தொகையுரைத்த அத்தியாயம்."

ஸூதமுனிவரே! தேவரீர் சொல்லிய விஷயங்களாற் களிகூர்ந்தோமாயினும், இன்னும் சிலசரித்திரங்களையே கேட்க விரும்புகிறோம் அதாவது: உலகத்திலே புண்ணியதீர்த்தங்களினுள்ள பிரதிஷ்டியான லிங்கங்களையும், புண்ணியக்ஷேத்திரங்களினுள்ள லிங்கங்களையுஞ் சொல்லவேண்டுமென்றுக் கேட்ட சௌநகாதிமுனிவர்களை நோக்கி, ஸூதர் சொல்லுகின்றார். முனிவர்களே! நீங்கள் விவேகவிஷயம் மிகச் சிறந்தபோயினும் பூமியேயெந்தமாயிருத்தலில் அவற்றின் தொகை சொல்லமுடியாது. லிங்கமில்லாத விடமே கிடையாது. கங்கை முதலிய சகல தீர்த்தங்களும் லிங்கமே. உலகமுதலிய யாவும் லிங்கத்திலேயே அடங்கியிருக்கின்றன. யாவும் லிங்கமாயிருத்தலின் அவற்றைக் கணக்கிடமுடியாது. ஆயினும் தெரிந்தவரையில், இலிங்கங்களைச் சொல்கின்றேன். உலகத்தில் காணப்படுவதும், சொல்லப்படுவதும், கேட்கப்படுவதும் ஆகிய எல்லாம் சிவரூபமாகவிரு

வேறொன்று சிறிதுமில்லை. அப்படி யிருப்பினும் எனக்கு வியாஸபகவான் கூறியவற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ருஷிகளே! உலகத்திலிருப்பதுபோலவே பாதாளத்திலும் ஸ்வர்க்கத்திலும் எவ்விடத்தும் லிங்கங்களிருக்கின்றன. பூமியிலிருக்கும் மானவர்களும், பாதாளத்திலிருக்கும் நாகர்களும், ஸ்வர்க்கத்திலிருக்கும் தேவர்களும், ராக்ஷஸர்முதலிய யாவரும் லிங்கபூஜை செய்கிறார்கள். சராசராத்மகமான பிரபஞ்சமுழுவதிலும் ஆன்மாக்களே அநுக்ரஹிக்கும்படி சிவபெருமான் லிங்கரூபமாக விளங்குகின்றனர். பக்தியோடு அர்ச்சிக்கும் ஒவ்வொருவருக்கும் அவ்வவ்விடத்திலேயிளங்கி அவ்வவரது சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கிறார். ஆன்மாக்கள் தன்னை யருச்சித்துக் கூடத்தேறுவதற்காகவே சிவபெருமான் லிங்கரூபத்தை வகித்திருக்கிறார். லிங்கார்ச்சனை செய்வதால் ஸகலபலனும் கைகூடும். பிரதானமான லிங்கங்களைக் கேட்டால் எல்லாப் பாபங்களும் நீங்குமாதலின், தேஜோ லிங்கங்களைச் சொல்கிறேன்.

சௌராட்டிர் தேசத்தில் ஸோமநாத லிங்கமும், ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ச்சுன லிங்கமும், உச்சினியில் மகாகால லிங்கமும், ஓங்காரலிங்கமும், ஹிமோத்கிரியில் கேதாரலிங்கமும், * டாகினியில் பீமசங்கரலிங்கமும், வாராணசியில் விஸ்வேஸ்வரலிங்கமும், கோதாவரி தீரத்தில் திரியம்பக லிங்கமும், † சிதாபுரத்தில் வைத்தியநாத லிங்கமும், தாருகாவனத்தில் நாகேசுவர லிங்கமும், சேதுவில் இராமேசுவரலிங்கமும், சிவாலயத்தில் குஸ்மேச லிங்கமுமெனப்பன்னிரண்டு. இவ்லிலிங்கங்களின் திருநாமங்களை விடியற் காலத்திலெழுந்து துதிசெய்பவன் தன் பாபமொழிந்து சகலசித்தியையும் பெறுவான். இவ்விலிங்கங்களை எல்லா வருணத்தாரும் அருச்சித்து நிவேதிக்கலாம். அவ்வாறு அர்ச்சித்தவர்கள் மகாபாபிகளாயிருப்பினும் இருதகிருத்தியர்களாவர். அந்தஜோதிலிங்கங்களுக்கு நைவேதனஞ்செய்து அவற்றைப் புசித்தாற் புண்ணியபலம்வரும். ஆறுமாதம் இவ்விலிங்கங்களில் ஏதேனும் ஒன்றை அருச்சித்தவர் பிறவித்துயர் நீங்குவர். ஏழ்குலத்துதித்தவன் அருச்சித்தால் உயர்குலத்துதித்துச் சற்கருமங்கள் செய்து மோக்ஷமடைவான். மிலேச்சர் சண்டாளர் நபும்ஸகர் முதல் யாராயினும் தரிசித்தவர்கள் வேதியனுகத்தோன்றி நற்கதியடைவார்கள். ஆதலின் இவ்விலிங்கங்கள் எல்லோருக்காணக்கூடியவை. இத்துவாதச லிங்கங்களேயல்லாமல், ஸ்மரித்தமாத்திரத்திற் பாபங்களை யொழிக்கத்தக்க பஞ்சபூத லிங்கங்களாய் ஐந்து லிங்கங்களுண்டு. அவை, காஞ்சிபுரியில் பிரிதிவிமயமான ஏகாம்பர லிங்கமும், காவேரிதீரத்தில் ஜம்புகேஸ்வரபுரியில் அப்புமயமான ஜம்புகேஸ்வர லிங்கமும், அருணாசலத்தில் அக்கினிமயமான அருணாசல லிங்கமும், ககூதை கைலாயமெனப் பிரசித்திபெற்றுச் சுவர்ணமுகிதீரத்தில் ஸ்ரீகாளத்திபுரத்தில் வாயுமயமான சிகரத்திலிங்கமும், பூலோக மகாகைலாசமென்று புகழப்

* டாகினி-Deccan டெக்கான். † சிதாபுரம்-Paraley பரலே எனவழங்கும்.

பெற்ற நில்வ வனத்தில் ஆகாயமயமான திருமூலலிங்கமுமாம். இவ்வைந்து லிங்கங்களைக் கண்ணுற்கண்டாலும், காதாற்கேட்டாலும், வாயாற்சொன்னாலும், மனதால்நினைத்தாலும் அப்பொழுதே புனிதமடைந்து இஷ்ட சித்திகள் கைகூடப்பெறுவர்.

இனி தீர்த்தங்களிலும் ஸ்தலங்களிலுமிருக்கும் புண்ணிய லிங்கங்களுள் உபலிங்கங்களைச்சொல்கின்றேன்: சௌராட்டிரத்தில் சோமநாதலிங்கத்திற்கு மஹாநதிசாகரசங்கமஸ்தலத்தில் அக்கேசலிங்கமும், மல்லிகார்ச்சுன லிங்கத்திற்குப் பிருகுபர்வதசமீபத்தில் ருத்ரலிங்கமும், மகாகாள லிங்கத்திற்குத் துக்தேச லிங்கமும், ஓங்காரேசுவர லிங்கத்திற்குக் கர்த்தமேச லிங்கமும், கேதார லிங்கத்திற்கு யமுநா தீரத்தில் பூதேச லிங்கமும், பீமசங்கர லிங்கத்திற்குப் பீமேசுவரலிங்கமும், விசுவேசுவர லிங்கத்திற்குச் சரண்பேசுவர லிங்கமும், திரியம்பக லிங்கத்திற்குச் சித்தேசுவர லிங்கமும், வைத்தியநாத லிங்கத்திற்கு வைஜநாத லிங்கமும், நாகேசுவர லிங்கத்திற்கு ஜில்லிகா சரஸ்வதி சங்கமத்திலிருக்கும் பூதேசுவர லிங்கமும், இராமேசுவர லிங்கத்திற்குக் குப்தேசுவரலிங்கமும், குஸ்மேசலிங்கத்திற்கு வீரபத்ரேசுவர லிங்கமும் உபலிங்கங்களாம். இன்னும், பிரதானமான லிங்கங்களையுஞ் சொல்கிறேன். அவை கங்காதீரத்திலிருந்து பலன்கொடுக்கின்றன. அவை கிருத்திவாசேச லிங்கம்-விருத்தகாலேசலிங்கம்-திலபாண்டேசுவர லிங்கம்-தசாசுவமேத லிங்கம்-கங்காசாகர சங்கமத்தில் சங்கமேசுவர லிங்கம்-யமுநாதீரத்தில் கோதூமேசுவர லிங்கம்-பிருந்தாவன சமீபத்தில் நீலேசுவரலிங்கம்-பூதேசுவரலிங்கம்-கௌசிகி தீரத்தில் நாரீசுவரலிங்கம்-கல்லகி தீரத்தில் கபிலேச லிங்கம்-புஷ்கர தீரத்தில் பூரீசலிங்கம்-பல்குநதி தீரத்தில் மண்டலேசலிங்கம்-கோமதிசாகர சங்கமத்தில் சித்தநாதேசுவர லிங்கம்-[பாட்ந]பத்தனத்தில் தூரேசலிங்கம்-மிருகேசலிங்கம்-ஜகநாத (அல்லது வைஜநாத்)லிங்கம் எனப்படும். கருமதை நதிதீரத்திலுள்ள லிங்கத்தொகை சொல்ல ஒருவராலு முடியாது. அந்த மஹா நதியே சிவரூபமாயும் பாபஹாரகமாயு மிருக்கிறது. அதிலுள்ள பருக்கை முதலிய யாவும் சிவலிங்கமே. ஆயினும் அங்கிருக்கும் லிங்கங்களில் சிலவற்றிற்குத் திருநாமங்கள் சொல்லுகிறோம். அங்குள்ள பர்வதத்தில் ஆவர்த்தேசர்-பத்மேசர்-கிம்ஹேசர்-ஸுமேசர்-குமாரேசர்-புண்டரீகேசர்-மண்டபேசர்-தீக்ஷணேசர்-துந்தரேசர்-சூலேசர்-கும்பேசர்-குபேரேசர்-சோமேசர்-நீலகண்டேசர்-மங்களேசர்-நந்திகேசர் எனப் பெயர்பெறும். நந்திகேசர் கோடி பிரமஹத்திகளையும் போக்கடிப்பர். அவ்விலிங்கத்தைப் பக்தியோடு பூஜித்தவன் அடையாத பலனில்லை. அத்தலத்தில் கருமதாஸ்நானஞ் செய்வோர் தாம் செய்த பாவங்களையெல்லாம் நீங்குவர்.

ஜோதிலிங்கங்களின் தோகையுரைத்தது.

முற்றிற்று.

முப்பத்தொன்பதாவது
நந்திகேசுவரலிங்கமகிமையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுனிவரைநோக்கி இன்னும் சிவசரிதங்களைச் சொல்லவேண்டுமென வினவ, ஸூதர்சொல்லுகிறார்:—பூர்வத்தில் தர்மராஜன் நாரதமுனிவரைக்கேட்ட விஷயத்தைச்சொல்லுகிறேன். கர்மதை நதிதீரத்தில் கர்ணகி என்னும் பட்டணத்தில் உதத்திய வமிசத்திலுதித்த பிராமணனொருவன் காசியாத்திரை செய்யவிரும்பி, தன் இருகுமாரர்களிடம் மனைவியை யொப்புவித்துச்சென்று, யாத்திரைசெய்து காசியில் வசித்துக் கொண்டிருந்து ஒருநாள் இறந்தான். இச்சங்கதி கேள்விப்பட்ட புத்திரர்கள் தன் தந்தைக்குச் செய்யவேண்டிய அந்தியேஷ்டி முதலியவற்றைச் செய்தனர். அவ்விறந்தவன் மனைவி தன் மக்கள்மேல் வைத்த விருப்பத்தால் அவரைக் காத்துக்கொண்டுவந்து, மணவினைசெய்து முடித்து, முன்னேர்வைத்த பொருளை இருவர்க்கும் பகிர்ந்து கொடுத்துத் தன் பாதுகாப்பிற்காகச் சிறிது தனம் வைத்திருந்து, சிலகாலத்தில் இறக்குந் தறுவாய், அவற்றைத் தருமவழியிற் செலவிட்டுப் புண்ணியக்கேதடியும் பிராணனொழியாதிருப்ப, புத்திரர் தாயைக்கண்டு மிகவும் வருந்தி, தாயே! உன் முன்குறையேதேனு மிருப்பின் எமக்குக் கூறுக என, எனக்கு ஒரு குறையுளது: அதைச்செய்வீராயின் எனக்கு நன்மரணம் வரும் என்றாள். அது வென்னவெனப் புதல்வர்கேட்க, அஃது என் மூத்தமகன் செய்யற்பாலது: அவன் அப்படிச் செய்யவேண்டுமென்பது என்கோரிக்கை. அஃதென்னெனில், காசியில் மரணங் கிட்டாவிடினும் என் எலும்புகளைக் கங்கையில் விடவேண்டுமென்பது. அவ்வாறுசெய்தால் எனக்கு க்ஷேமம்வரும். இதுவே யென் விருப்பமென்னக் கூறிய தாய்வார்த்தையைக் கேட்ட மூத்தகுமாரன் தாயே! நீ நல்லபிணதாய் உயிர் நீங்கு. உன்காரியத்தை அவ்வாறேசெய்து முன்னர் என்காரியங்களை முடித்துக்கொள்வேன் என்று கைபோட்டுக் கொடுத்த வுடனே, அவள் சிவஸ்மரணை செய்துகொண்டே பிராணன்விட்டாள். அப்பொழுது புத்திரர் தகனமுதல் உத்தரகிரியை யீறுகிய யாவும் சிறப்பாகச் செய்தனர். சுவாதன் என்னும் ஜ்யேஷ்டகுமாரன் முதல் மாசிகஞ்செய்து, காசிக்குப்போகத் தாயின் எலும்பை யெடுத்துக்கொண்டு, தன்மனைவியையும் புதல்வனையும் வீட்டில் நிறுத்தி விரைவில் வருவதாகக்கூறி, ஒருசேவகனைத் துணைகொண்டு புறப்பட்டுசிவஸ்தோத்திரஞ்செய்துகொண்டே ஒருயோசனைதூரஞ்சென்று, அன்றுசாயங்காலம் அங்கோர் வேதியன் வீட்டிற்சேர்ந்து சந்தியாவந்தனமுதலிய கிரியைகளை முடித்துக்கொண்டு அன்றிரவுதங்கி, சிவஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது ஐந்து நாழிகை ராத்திரியில் ஒரு ஆச்சரியம் நடந்தது. அதாவது:

கோவந்தசம்வாதம்.

அவ்வீட்டின் வாயிலிலோர் பசுகட்டப்பட்டிருந்தது. அவ்வீட்டு வேதியன் அப்பொழுதுவந்து பசுவையின்னும் கறக்கவில்லையா? என்று

கன்றையவிழ்த்து விடுத்து, தன்மனைவியைக் கறக்கு மிடத்தங்கூப்பிட்டு, அக்கன்றின் கழுத்தைப் பற்றி யிழுத்துச் செல்லுகையில், அஃதவன் காலை மிதிக்க, வேதியன் சினங்கொண்டு முழங்கையாலிடித்துக் கட்டிவிட்டு, பால்கறந்துகொண்டு கன்னைமிதித்ததற்காகக் கொம்பாலடித்துப் பாலூட்ட விடாமையாலும், பசுவின் மடியிற் பாலிருந்தாலும் பசு மிகவும் அழுதது; அவ்வினைச்சனைக்கேட்ட கன்று, தாயே! என் னிலைகிறாய்? என, பசு எனக்கு நேர்ந்த துக்கமாவது உன்னை அவன் கொம்புகொண்டடித்ததால் உண்டானதுளன, கன்று நாம் கர்மவசத்திலுள்ள ஜீவர்களாகையால் கர்மத்தை யநுபவிக்காமல் வழுவுபோக்கக்கூடும். பூர்வத்திற்கிருத்துக்கொண்டு செய்த கர்மத்தைத் இப்பொழுது அழுதுகொண்டநுபவிக்கவேண்டிவந்தது. சுகதுக்கங்கள் அநுபவிக்காமல் தப்புகிறதில்லை என, பசு மதனை! நீ சொல்லும் வார்த்தை நான் அறிந்ததாயினும், சம்சாரமாயையால் துக்கமடைந்திருக்கிறேன்; நான் அழுதுந் துக்கமடங்கவில்லை என, கன்று உனக்குத் தெரியுமென்று கூறினமையின் நீ அழலாகாது. அழுதாற் பயனென்னை? என, பசு எனக்கு இப்பொழுதுண்டான துக்கம் இப்பிராமணனுக்குண்டானலன்றிச் சிறிது மொழியாதாகையால், இவனுக்கு அவ்வகையநுபஞ்செய்யப்போகிறேன். அப்பொழுதுதான் அது தன்செயலால் விளைந்ததென்றுணர்வான். மகனுக்குத் துன்பம் வந்தால் தாய்க்கு அதைக்காட்டினும் பெருந்துக்கமாயிருக்கும். கல்லது: நானைய உதயத்தில் இவன் குமாரனை நான் கொம்பாற் குத்துகிறேன்: இவன் மகன் இறப்பான் என, கன்று தாயை நோக்கி இதுவரையிற் செய்த கர்மத்தை யநுபவித்துக்கொண்டிருக்கையில், இப்பிரமஹத்தியை ஏன் அடையவேண்டும்? அவன் புதல்வனைக்கொன்றால் உனக்கும் அவ்வகைய துன்பம் மீண்டும் வராமலிராது. நற்கருமஞ்செய்தால் நல்வர்க்கமும், துர்க்கருமஞ்செய்தால் நரகமும், மிசிரகர்மத்தால் மானுஷஜனனமும், கர்மகூயத்தால் முக்தியும் உண்டாகுமாதலின் நீ இவ்வகைய தீச்செயல்புரியவேண்டாம். என்னைபடித்தானென்றுநினைக்கிறையே: நான்யார்? நீயார்? நீ தாயுமல்ல: நான் புதல்வனுமல்லன்: தாய்-தந்தை-பிரபு-பந்து-மகன் முதலாகச் சொல்லப்படும் எல்லாம் பொய். எல்லாப் பிராணிகளும் தத்தங் கருமத்தை யநுபவிக்கவேண்டிய தாதலின் இதனை யுணர்ந்து நீமை செய்யாது நன்மையே செய்: என, தாய்ப்பசு உனக்குவினைத்த துன்பத்தைக் கண்ட நான் அதனை அவர்கட்குத் திருப்பிச் செய்யுமளவும் உடல் பதைக்கிறேன். பிரமஹத்தி வருமென்கிறையே: அதனைப் போக்கடிக்கத்தக்க புண்ணியன்தல மெனக்குத் தெரியும். இவ்வேதியச்சிறுவனைக் கொன்றால் என் உடல் கறுக்குமுன். அப்பிரமஹத்தி கீங்கியவுடன் உடல் பழையபடி வெள்ளையாய்விடும். இது எனக்குத் தெரியுமென, கன்று ஒன்றுங் கூறாதிருந்தது. இச்சம்பாஷணையைக் கேட்டிருந்த காசியாத்திரைப்பிராமணன் இதைச் சோதித்தபிறகே நாம் போகவேண்டுமெனக் கருதியிருந்தான்.

நாற்பதாவது

மேற்படி அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்:—முனிவர்களே! மறுநாள் காலையில் அவ்வீட்டு வேதியன் எழுந்து வழிப்போக்கனைக் கண்டு, ஐயோ! பொழுதேறுகிறதே: இன்னும் நித்திரைசெய்கிறீரே எனக்கும் என் சேவகனுக்குஞ் சிறிது இளைப்பாயிருத்தலின், இரண்டு நாழிகை கழித்துச் செல்கிறேம் என்று மறைத்துச்சொல்லி நித்திரைசெய்பவன்போலிருந்தான். அப்பொழுது பசுவைக்கறக்கும் வேளையாயிற்று. வேதியனுக்கு வேலையிருத்தலின் நீ கன்றைவிடு என்று தன்புதல்வனுக்கு கூறிச்சென்றான். அதைக்கேட்ட சிறுவன் கன்றை யவிழ்த்துப் பசுவிடம் விட, அவன்தாய் பால்கறக்க வந்தாள். பசு மடிசுரந்தது கண்டு கன்றினைப் பழையபடி கட்ட ஓர்கோலால்புடைத்து இறங்கிக்கட்டுகையில், பசுகோபித்து அவனைக்கொம்பாற் குத்தப் பக்கத்திற் பாய்ந்துவிழுந்து மூர்ச்சையானன். அதனைக் கண்டோர் சொல்லத் தந்தைமுதல் ஏனோர் கும்புகூடித் தண்ணீர் கொண்டுவாருங்கள் எனச் சொல்லிக்கொண்டிருக்கையில் அவ்வாலிபன் மரணமடைந்தான். அதனால் யாவரும் அழுதார்கள். அவ்வீட்டு வேலைக்காரன் பசுவையடித்து அவிழ்த்துவிடுத்தான். வெண்ணிறமுடைய பசுவானது பிரமஹத்தியாற் கருநிறமடைந்தது. எல்லோரும் வருத்தமுற்றிருந்தார்கள். இவ்விநோதத்தையெல்லாங் கண்டிருந்த காசியாத்திரைக்காரன் தன் சேவகனுடன் புறப்பட்டுப் பசுவானது போகும் வழியைப் பின்பற்றிச் சென்றான்.

பசுவானது, வாலைக்ஷளப்பிக்கொண்டு நருமதைநதியை யடைந்து, நந்திகேசுவருடைய சமீபத்தில் திவ்யமான் ஜலத்தில் மூன்றுதரம் முழுகி ஸ்நானஞ்செய்து வெண்ணிறமடைந்து தான் வந்தவழியே திரும்பிச்சென்றது. அதைக்கண்ட வேதியன் மிக்க ஆச்சரியமடைந்து ஆஹா! ஆ! இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தமாத்திரத்திற் பிரமஹத்தியொழிந்தது என்று, தானும் தன் சேவகனும் அங்கே ஸ்நானஞ்செய்து நந்திகேசுவரரைப் பிரதக்ஷிணஞ் செய்து சென்றார்கள். அவ்வாறு போகின்ற அவ்விருவர்க்கு முன் சகலாபரணபூஷிதையான ஒரு பெண் எதிர் வந்து, நீ எங்கிருந்துவருகிறாய்? பொய்புகலாது உண்மை சொல்: என்று வினவ, வேதியன் மறையாது விஷயத்தை வெளியிட்டான். அதன்பேரில் அவள் நீ இங்கேயிருக்கவேண்டும் எனவும், அவன் சேவகனுடன் அங்கே தங்கியிருக்கையில், கங்கையாகிய அம்மங்கை நீ எங்கே இவ்விசேஷத்தைக் கண்டாயோ அங்கேயே இவ்வெலும்பை விட்டுவிடுவையாயின் உன் தாய் திவ்வியதேகமடைந்து சுவர்க்கஞ்சேருவள். பிரதி வருஷமும் வைசாகசுத்தசப்தமியில் கங்கை இவ்விடத்திற்கு வருவாள். இன்றையதினம் அந்தச் சப்தமியாயிருக்கிறது. நானே கங்கை. அவ்விடத்திற்குத்தான் செல்கிறேன் என்று அந்தர்த்தானமாயினள். பிராமணன் மீண்டும் அந்த நருமதைதீர்த்தமுள்ள நந்திகேசுவரக்ஷேத்திரத்திற்குவந்து

அந்த அஸ்திகளை அதில் விட்டமாத்திரமே அவன் தாய் திவ்யரூபம் வஹித்துக் குமாரனை ஆசீர்வதித்து, குழந்தாய்! நீ தன்யன்; கிருதகிருத்தியன்; வமிசத்தைப் பவித்திரஞ்செய்தாய். உனக்கு தனம்-தான்னியம்-ஆயுள்-வமிச விருத்தி முதலியன கிடைக்கும் என்று வரமளித்துச் சற்கதியடைந்தாள்.

இவ்விதமாக அவ்வேதியன் தன் தாய் அஸ்தியை நருமதைநதியில் நந்திகேசுவரசந்நிதிக்கருகில் விடுத்து யாத்திரை முடித்துத் தன் வீடு சேர்ந்தான். அத்தினத்திலிருந்து அந்தத்தீர்த்தம் மாதாடர்க்கெல்லாம் பிரசித்தமாகத் தெரிந்தது. ஆகையால் நந்திகேசுவரசந்நிதிக்கருகில் ஸ்நானஞ்செய்வோர் சகல பாபங்களுமொழிந்து இஷ்டகாமியங்களை அடைவார்களென்று பெரியோர் கூறியிருக்கிறார்கள்.

அன்றியும், ருஷிகையென்னும் ஒருபிராமணப்பெண் *பாலவைதவ்வியமடைந்து அந்தஸ்தலத்திற்குச்சென்று கடோரமான சிவபூஜை செய்துகொண்டிருக்கையில், மூடன் என்னும் தைத்தியன் அவளைச் சிவபூஜை செய்யாதிருக்கும்படி பலவகையாகப் போதித்தும், ருஷிகை அதை மேற்கொள்ளாது சிவபூஜையைக் கடைப்பிடித்து நிற்பதால், தைத்தியன் தனது கோரரூப முதலியவற்றை அவளுக்குக்காட்ட, அவள்பயந்து சிவசிவ! என்று சிவநாமங்களைஸ்மரித்து, சரணமடைந்தவளைக் கர்ப்பாற்றும் விரதத்தை உறுதிசெய்யவேண்டும் எனப்பிரார்த்திக்க, நந்திகேசுவரர் அவளுக்குச் சந்தோஷத்தை உண்டுசெய்யக் கருதிப் பிரசன்னராய் உனக்கொரு பயமுமில்லை; உன்னை இரட்சித்தேன்; அவ்விராக்ஷதன் தானே போய்விடுவான். நான் எல்லோனையும் இரட்சிக்கு நிமித்தமாகவே இங்கிருக்கிறேன் என்று வரமளித்து, அவள் பூஜித்திவந்த பார்த்திவலிங்கத்தில் அந்தர்த்தானமாயினர். ருஷிகாதேவியும் பிரசன்னமாய் அப்பிராமணப்பெண்ணைப்பார்த்து என்ன வரம் வேண்டும்? என, அவள் என் நிமித்தமாக இத்தினமாகிய வைசாகசுத்தசப்தமியில் இங்கு வந்து பிரத்தியக்ஷமாயிருக்கவேண்டும் எனக் கேட்க, அவ்வாறே கங்கையும் இணங்கிப் பிரதிவருஷத்திலும் வருகின்றாள். ஆதலின் அத்தினத்தில் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால், சகல பாபங்களும் விலகும். நீங்கள் என்னைக் கேட்ட நந்திகேசுவரமஹாத்மியத்தைச் சொன்னேன் என்று ஸூதமுனிவர் சொல்லினர்.

நந்திகேஸ்வரமகிமை யுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தோன்றுவது

அத்திரிசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுனிவரை நோக்கி இன்னுமுள்ள சிறந்த லிங்கங்களைச் சொல்லவேண்டுமென ஸூதர் சொல்லுகிறார்: வியாசேசுவர-சுகேசுவர-பண்டாரேசுவர-ஹாங்காரேசுவர-சுரேசுவர-பூதேசுவர-

*பாலவைதவ்யம் - இளம்பருவத்திற் கைம்பெண்தன்மை.

சையமேசுவரலிங்கங்கள் பாபஹரமானவை. இன்னும் தப்திகாநதி தீரத்திலே குமாரேசுவர-சித்தேசுவர-ஸ்தூலேசுவர-ராமேசுவர-குஹ்யேசுவர-கும்பேசுவர-நந்தேசுவர-பஞ்சபுஞ்ஜேசுவர லிங்கங்கள் தரிசித்தமாத்திரத்தில் அபீஷ்டங்களைக் கொடுக்கத்தக்கவை. பூர்ணநதி தீரத்தில் பூர்ணகேசுவர வீரேசுவர லிங்கங்களும், கோதாவரிதீரத்தில் கபாலேசுவர-சக்ரேசுவர-சந்த்ரேசுவர-தேவதபாபேசுவர-பீமேசுவர-சூரியேசுவரலிங்கங்களும் விளங்குகின்றன. திருப்திகாநதி தீரத்தில் திரியம்பகேசுவர-கோகர்ணேசுவர-காலகேசுவர-ராமேசுவர-நந்தேசுவர-விமலேசுவர-கண்டகேசுவரலிங்கங்கள் பூஜித்த மாத்திரத்தில் ஞான முண்டாக்கத்தக்கவை. திருப்திகாநதி கிழக்கடற் சங்கமத்திலே தர்மகேசுவர லிங்கமும், மேற்குடற் கரையில் சித்தேசுவர-பிலேசுவர-அந்தகேசுவர லிங்கங்களும் இருக்கின்றன. அந்தகாசுரனைச் சங்கரித்த உக்ர ரூபத்துடன் சிவபெருமான் நின்ற விடமே அந்தகேசமெனப்படும். எல்லா உலகங்கட்குஞ் சுகத்தைக் கொடுக்கும் அற்புதாசலத்தில் சங்கரேசுவர-கர்த்தமேசுவர-கோடீசுவரலிங்கங்கள் இருக்கின்றன. கௌசிகாநதி தீரத்தில் அசலேசுவர-நாகேசுவர-அநந்தேசுவர-யோகேசுவர-வைத்யநாதேசுவர-கோடீசுவர-சப்தேசுவர-பத்திரேசுவர-சண்டீசுவர-சங்கமேசுவர லிங்கங்கள் இருக்கின்றன. இதுவரையில் கீழ்த்திசையிலுள்ளவற்றைச் சொன்னேன்.

முநிவர்களே! இனி தக்ஷணத்தில் உலகத்திலே யிருப்பவர்கள் சுகமடையவும், அத்திரி முநிவரும் அநுசூயையும் ஓர் கூடாமகாலத்தில் அன்னதானஞ் செய்யச் சங்கற்பித்துக்கொண்டதனை நிறைவேற்றவும், சுயம்புமூர்த்தியாய்த் தோன்றிய அத்திரீசுவர லிங்கமொன்று சாகஷாத்காரமாக விளங்குவுன்றது எனக் கேட்ட முநிவர்கள் அவ்வத்திரீசுவர லிங்கத்தின் உற்பவ முதலியவற்றை எங்கட்குச் சொல்லவேண்டுமென விரப்ப, ஸூதர் சொல்லுகின்றார்:—நீங்கள் கேட்ட விஷயம் அருமையானது; அதற்காகப்பெருங்களிப்படைந்தேன்; அந்தக் கதையைச் சொல்லுகிறேன்:— தென்திசையில் காமதம் என்னும் பெயரையுடையவனமொன்றுண்டு. அதுதவஞ்செய்தற்குத் தக்கது. அங்கே பிரமபுத்திரராகிய அத்திரிமுநிவர் தன் மனைவி அநுசூயையுடன் தவஞ்செய்துகொண்டிருக்கையில், நூறுவருஷகாலம் மழையின்மை உண்டாகிச் சகலரும் கஷ்டப்பட்டவந்தது. தண்ணீர் இடையாததாயிற்று. மரங்களெல்லாம் உலர்ந்தன. தளிர்கள் பழங்கள் இல்லையாயின. சந்தியாவந்தனமுதலிய நித்திய கருமங்களும் ஜலமின்றி நிறுத்தப்பட்டன. நிழலுள்ள மரமே யில்லை. கொடுப்புக் காற்றடித்தது. இதனால் யாவரும் பெருந்துன்பமுற்றார்கள். இவற்றைக்கண்ட பதிவிரதையாகிய அநுசூயை இத்துயரைச் சகிக்கமுடியாமல், தன் கணவன் யோகத்திலமர்ந்திருக்க, அவர் சிஷ்ய முதலானோர் பசிப்பிணியாற்றுது பல விடங்கட்குச் சென்றமையால், தானே அவரை ஒன்றியாகச் சேவித்துப் பணிசெய்துகொண்டு, பார்த்திவலிங்கமொன்று

செய்து, பூஜா உபகரணங்கள் கிட்டாமையின் மாநஸிகமாக உபசரித்துப் பூஜித்துத் தன் கணவன் முன்னிருத்தி இருவர்க்கும் தண்டஞ் செய்தும் பிரதக்ஷிணஞ் செய்துகொண்டு மிருந்தாள். அவளது கடினபூஜையைக் கண்டதைத்தியர் தானவர் முதலானோர் சுந்தரவதியான அநுசூயையைப் பார்த்து மோகித்து, சிவபூஜா மஹிமையாலும் பதிவிரதா தன்மையாலும் நெருப்பு மயமாய் உஷ்ணம் வீசுதலின், சமீபிக்கமுடியாமல் அதிதூரத்திலிருந்தார்கள்.

அத்திரிமுநிவர் செய்யுந் தவத்தைக் காட்டிலும் அநுசூயை செய்யுந் தவம் மிக்க கடினமாக விருந்தது. அநுசூயை தவஞ்செய்து முடித்தவரையில் இவ்விருவர் நீங்க வேறொருவரும் அங்கிருந்திலர். இவ்வாறு சிறிதுகாலங் கழிய, அத்திரிமுநிவர் தியானயோகத்தில் மனலயப்பட்டு ஒன்றும் உரையாயினர். பதிவிரதையான அநுசூயை தன்கணவனையும் சிவலிங்கப்பெருமானையுமன்றிப் பிறிதொன்றையு முணராது பெருநிஷ்டையிலிருந்தாள். அத்திரிமுநிவர் தவத்திற்கும் அநுசூயையின் சிவபூஜைக்குஞ் சகல தேவர்களும், ருஷிகளும், கங்கைமுதலிய தீர்த்தங்களுஞ் சந்தோஷித்து இவர்களைக் காணும்படி வந்து, இவர்கள் அற்புத சமாதியைக்கண்டு, ஒருவரோடொருவர் இவர்கள் தவமும் பூஜையுமே சிறந்தன; இதைக்காட்டிலுஞ் சிறந்தது உலகத்திலில்லை; இதுபோல் யாருஞ் செய்திலர்; இவர்கள் மகாபுண்ணியர்கள்; இவர்களைக் காட்டிலும் புண்ணியர்களில்லை என்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள். சிவபெருமானும் கங்காதேவியுமே அங்கு நின்றவர்கள். அவர்களில் கங்கை அநுசூயையின் பூஜாக்ரமத்தைக் கண்டு இவளுக்கு எதேனும் வரங்கொடுத்தே செல்லவேண்டுமென்றும், சிவபெருமான் இந்தமூன்றருளியிருத்தலின் அவரும் எதாவது கன்றிசெய்தே அத்தர்த்தினமாவாசென்னும் நினைத்துக் கொண்டிருந்தாள். அநுசூயையோ தன் கணவன் நிஷ்டை கலையுமளவும் சிவபூஜையிலேயே இருக்கவேண்டுமென்று கருதுக்கொண்டு அன்னபானாதிகளை நீங்கியிருந்தாள். இதுவரையில் இவ்விருவர் நிஷ்டையும் ஐம்பத்துநான்குவருடங்க ளிருந்தன.

ஒருகாலத்தில் அத்திரிமுநிவர் தன் நிஷ்டை நீங்கி அநுசூயையைப் பார்த்து விரைவில் ஜலங்கொண்டுவருக என, அநுசூயை அவ்வாறே யாகுகவென்று கமண்டலத்தை யெடுத்துக்கொண்டுபோய் எங்கெங்குந் தேடியும் நீர் கிடைக்காமல் யோசித்துத்திரிகையில், கங்காதேவி பிரசன்னமாய் உனக்கு வேண்டியதைக் கேள்: கொடுக்கிறேன் என்றுகூற, அநுசூயை நீயார்? எங்கிருந்து இங்கு வந்தாய்? என, கங்கை உன் பதிவிரதா தர்மத்தையும், நீ உன் கணவனையும் சிவலிங்கத்தையும் பூஜித்துவந்த உறுதிப்பாட்டையும் பார்த்துக்கொண்டிருந்தேன். நான்கங்கை. நீ எதைக் கொருவையோ அதைச் சொல் என, அநுசூயை கங்கையைப்பணிந்து, தாயே! எனக்குத் தண்ணீர் வேண்டும் என, கங்கை உன் கையால் சிறுகுழி தோண்டின் அங்கே நான் ஜலங்கொடுப்பேன் என, அநுசூயை அவ்வாறே தோண்ட ஜலதாரை தோ

ன்றியது. அதருயை ஆச்சரியத்துடன் நீர் முகந்துகொண்டு கங்காதேவியை ப்பார்த்து, உனக்கு என்போரில் தலையிருக்கும் பகுதத்தில் என் கணவன் தவஞ்செய்துமுடியுமெல்லையும் இங்கேயேயிருக்கவேண்டும் எனப் பிரார்த்திக்க, கங்கை நீ உன் கணவனுக்குச் செய்த பணிஇடையாலடைந்த பலனில் ஒரு மாசபலனை எனக்குக் கொடுப்பாயாகில் நான் அப்படியே யிருக்கிறேன் என, அதருயை அப்படியே தந்தேனென்று அளித்து, ஜலத்தைக்கொண்டு போய்க் கணவனுக்குக் கொடுத்து முன்னே நின்றனள். அத்திரி முனிவர் முறைப்படி ஆசமனஞ் செய்து தாகந் தீர்ந்து அபரிமிதமான சந்தோஷத்தையடைந்து, பெண்ணே! நான் தினமும் பானஞ்செய்யுஞ் சலமல்ல; இது வேறுயர் சிறந்திருக்கிறது என்று கூறி, தீர்த்தமுஞ் சுற்றிப்பார்த்து, எப்பக்கமும் உலர்ந்த மரமும் நெருப்புக்காற்றுமா யிருக்கக்கண்டு, மழையில்லையா? என மனைவியைக்கேட்க, ஆம்: மழையில்லை என, மழையில்லையாயின் இப்பொழுது எங்கிருந்து இத்தண்ணீர் கொண்டுவந்தாய்? என வினவ, அதருயை என்னை நானே புகழ்ந்தவளாவேனே? சொல்லாவிட்டாற் குற்றம் வருமே? என்று யோசித்துக்கொண்டிருக்கையில், மீண்டும் இரண்டாந்தரம் முன்னுந்தரங்கேட்க, ஸ்வாமீ! நிஜத்தைச் சொல்கிறேன். தங்களை யான் சேவித்தபலத்தாலும், சிவபூஜைசெய்த பலத்தாலுங் கங்காதேவி யிங்கு வந்திருக்கிறாள். அந்த ஜலத்தையே கொண்டுவந்து கொடுத்தேன் என, அத்திரி முனிவர் ஆச்சரியமுற்று, பெண்ணே! நீ சொல்கிறது நிச்சயமா? நான் யதார்த்தமென்று நம்பவில்லை. யோகிகட்குந் தேவர்கட்கும் அசாத்தியமான காரியம் எப்படி உனக்குக்கைகூடும்? ஆனாற் கங்கையை நான் பிரத்தியக்ஷமாகக் கண்டாலன்றி நம்புவேன் என்றார்.

அதருயை அதைக்கேட்டு, ஸ்வாமீ! தேவரீர் எனதுடன் வந்தாற் காண்பீர்களென்று, கங்கை பிறந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோக, அக்குழியிலிருக்கும் ஜலப்பெருக்கைக்கண்டு பெருஞ்சந்தோஷமடைந்து, நீ தன்யை. என் தவமும் ஸபலமாயிற்று. கங்காநதியில் ஸ்நானஞ்செய்யக்கிடைத்ததே! இது பிறர்க்குக் கிடைக்குமா? என்று அக்கங்காநீரில் ஸ்நானஞ்செய்து ஆசமனஞ்செய்து பலமுறை கங்கையைத் துதித்தார். அதருயையும் அவ்விடத்தே ஸ்நானஞ்செய்தாள். அப்பொழுது கங்கை இவர்களைப் பார்த்து அதருயாதேவி! நான் இனிச் செல்கிறேன் என, அதருயை கங்காதேவி! நீ எனக்குப் பிரத்தியட்சமாகிப் பரிபூரண அன்புடையவளாயின், அங்கெழுந்தருளியபடி யிங்கேயே யிருக்கவேண்டுமென்று பலவித மாகத் துதித்தாள். அத்திரிமுனிவரும் பலவாறு துதித்துத் தலை வைக்கவேண்டுமென்று யாசித்தார். பிறகு இருவரும் கங்கையைநோக்கி இங்கேயே யிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, கங்கை நீ முன் தனவனியும் சிவலிங்கத்தையும் பூஜித்தற்பண்டான பலத்தில் ஒருமாசபலனைக்கொடுத்து உன் கணவன் தவம் முடியுமளவுமிருக்கவேண்டுமென்றும். இப்பொழுது இங்

கேயே இருக்கவேண்டுமென்பாயாகில், அந்தப்பலனில் ஒரு வருஷ பலனைக் கொடுத்தால் அப்படியேயிருப்பேன். தானம் - ஸ்நானம் - யாகம் - பதிசேவை முதலியவற்றின் பலனைக்காட்டிலும் பதிவிரதையைக்கண்டால் அதிக பலன் கிடைத்தலின், உன்னைத் தரிசித்துக்கொண்டே இங்கிருப்பதால் எனக்குஞ் சந்தோஷமாம். உலகத்திற்கெல்லாம் க்ஷேமமுண்டாகவேண்டுமென்றதினாத்தால் இந்தப்பலனைக்கொடு என, அதருயை பெரியோர்கள் பிறர்க்குதவி செய்வதே வேண்டுவராதலின், உலகக்ஷேமத்தை விரும்பி வருஷபலனைக் கொடுத்துவிட்டாள். பொன்-சந்தனம்-கரும்பு இம்மூன்றும் தான் தயருறுயினும் பிறருக்கு உதவினாலதுபோல, கஷ்டப்பட்டுத் தேடிய புண்ணியத்தைப் பலர் கன்மையைத்-தில் விரும்பி அதருயை கங்கைக்குக் கொடுத்தாள்.

உலகக்ஷேமத்தை விரும்பி இவ்விதம் கங்காதேவிக்குத் தானங்கொடுத்த அதருயை விஷயத்தில், அவ்வம்மை பூஜித்த பார்த்திவலிங்கத்திலிருந்து சிவபெருமான் பிரத்தியக்ஷமாய் உன் பதிவிரதாதர்மத்திற்குஞ் சிவபூஜைக்குமகிழ்ந்தேன். வேண்டிய வரத்தைக் கேள் என்று கூற, ஐந்து திருமுகங்களோடு பிரத்தியட்சமாக நேரே நிற்கும் சிவபெருமானை அத்திரிமுனிவரும் அதருயாதேவியும்பார்த்து, தேவரீரும் ஜகன்மாதாவாகிய கங்காதேவியும் ஆகிய இருவர்க்கும் எங்கள் விஷயத்தில் தயையிருக்கும்பட்சத்தில், எப்பொழுதும் இங்கெழுந்தருளியிருந்து உலகத்திற்குச் சுகத்தையுண்டுசெய்யவேண்டும் எனப் பிரார்த்திக்க, அவ்விருவரும் அவ்வாறே அங்கீகரித்தனர். சிவபெருமான் அத்திரீசுவரரென்னும் பெயரால், சகலர்க்குஞ் சுகத்தைச் செய்துகொண்டிருக்கிறார். கங்காதேவியும் தன் சகோதரியாகிய பார்வதிதேவியோடும் அங்கேயிருக்கின்றாள். அதுமுதல் அவ்விடத்திற் குழையில்லாத கங்காசலம் எக்காலத்தும் விளங்குகின்றது. பலமுனிவரர்களும் இதை யுணர்ந்து தங்கள் பத்தினிமார்களோடும் சிஷ்யர்களோடும் அடிக்கடி வருகிறார்கள். கோதுமை - தானியங்கள் - இலைகள் - புற்கள் - பழங்கள் - காயும் விருத்தியடைந்திருந்தன. அதுகண்டமுனிவர்கள் யாவரும் இதுவே தபத்திற்குயோக்கியமான பூமியென்று அங்கே தவஞ்செய்திருக்கின்றனர். இத்தவத்தால் களிகூர்ந்த சிவபெருமான் மழைபொழியச்செய்தார். அதனால் சகலருக்கும் சுகமுண்டாகி அன்னபானாதிகளைப் பெற்றத்தங்களுக்குரிய தவங்களைச்செய்திருந்தார்கள். இந்த அத்திரீசுவரப் பிரபாவத்தைக்கேட்டவர்கள் சகல சுபங்களையு மடைவார்களென்று ஸூதமுனிவர் சௌநகாதியமுனிவர்களை நோக்கிக் கூற, சௌநகாதியர்கள் ஸ்வாமீ! இனி தேவரீர் காருவனத்திலுள்ள நாகேசுவரலிங்கப் பிரபாவத்தை யுரைத்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க வியாஸ சிஷ்யர் விளம்பலுயினர்.

அத்திரீசுவர மகிமை யுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்திரண்டாவது

நாகேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்

வலஅதமுனிவர் கைமிசாரணியவாசிகளை நோக்கி முனிகளே! இனி நீங்கள் கேட்ட தேவதாருவனத்திலுள்ள நாகேசுவரலிங்கப் பிரபாவத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள் எனச் சொல்லத் தொடங்கினர். பூர்வம் ஒரு கற்பத்தில் *தேவதாருவனமென் றொருவன மிருந்தது. அதில் வசித்திருந்த அநேக முனிவர்கள் யாகமே எல்லாப் பலன்களுங் கொடுக்கத்தக்கதென்றும் யாகத்தைக் காட்டிலும் கடவுள் வேறில்லை யெனத்தங் தீர்மானித்து நடந்து வருவாராயினர். அவர் மனைவியர் கற்பே சிறந்ததென்றிருந்தனர். சிவபெருமான் அவர்கள் மயக்கத்தை யறிந்து அதனை யொழிக்கக் கருதி, விஷ்ணுவை விளித்து நீ பெண் வடிவேற்று என்னுடன் வருகவெனப் பணித்தனர். அக்கட்டளை பெற்ற திருமால் பொற்பதுமைபோன்ற மேனியும், பூர்ண சந்திரன்போன்ற முகமும், மன்மதனது கருப்புவில் போன்ற புருவமும், வாட்படை வேற்படை முதலியவற்றை வென்ற விழியும், முல்லை யரும்புபோன்ற தந்த பந்தியும், கொவ்வைக் கனிபோன்ற அதரமும், பொற்கிண்ணம் போன்ற குசங்களும், சாணைக்கல் போன்ற கன்னமும், வள்ளைத்தண்டு போன்ற செவியும், சங்கம்போன்ற கழுத்தும், மூங்கில்போன்ற தோளும், உடுக்கை போன்ற இடையும், யானைத் துதிக்கைபோன்ற தொடையும், அரவின் படம் போன்ற அல்குலும், செந்தாமரைமலர்போன்ற கைகளும், செம்பஞ்சுக்குழம்பூட்டிய பாதங்களுமுடைய சர்வாபரண பூஜிதையான பூங்கொடி போன்ற ஓர் பெண்வடி வேற்க, சிவபெருமானும் அம்மங்கைக்கேற்ற ஆடவசிரேஷ்டராய், தோடிருரியப் பிரகாசமான திவ்விய தேஜஸ்ஸுடைய திருவுருவேற்று, ஓர் கரத்தில் தமருக மேந்தி, உள்ளாளப்பண் பாடிக்கொண்டு, திகம்பரராய் மதயானை போற்நடந்து, மாயனுகிய மோகினிப்பெண்ணுடன் தாருவன முனிவர் தவநிலையையும் அம் முனிபன்னியர் கற்பையுஞ் சோதிக்கக் கருதித் தாருவனத்தை யடைந்து, அம்மங்கையர் மையல் கொள்ளும்படி வீதிகள் தோறுஞ் சென்று பிக்ஷையேற்க, அம் முனிமாதர் பலிகொண்டு வெளியே வந்து பிக்ஷாடனரைக் கண்டு காமப் பித்தேறினவர்களும், மதிமயங்கினவர்களும், தூரமாய் ஓடினவர்களும், ஆலிங்கனஞ் செய்தவர்களும், அழைப்பவர்களும், பிடித்திழுப்பவர்களும், மையல் நோய் தன்புறுத்தவதால் சோவாருமென்பவர்களும், பின் தொடர்பவர்களும், பெருமூச்சு விடுபவர்களும், காமமேலிட்டாற் செய்வது தெரியாதவர்களும், வஸ்யல் சோர்வார்களும், வஸ்திரத்தை நழுக விடுவோர்களும், வழி தெரியாது விழ்வோர்களும், வார்த்தை குழறுவோர்களுமாயினர். கற்பையன்றிக் கடவுளில்லை யென்றிருந்த முனிபன்னியர் பின்றொடர்ந்துவர, நீலகண்டராகிய பிக்ஷாடனப் பெருமான்

* இத்தேவதாருவனம் ஹிமோபர்வதச் சாரலிலிருந்ததெனப் புராணங்களால் தெரியவருகிறது.

வேத கீதங்கள் பாடிக்கொண்டும் விநோத வித்தைகள் செய்துகொண்டும் வீதியி லுலாவிக்கொண்டுமிருந்தனர்.

இவ்விதப்படி யிருக்க: மோகினி வடிவேற்ற திருமால், உடனிருக்கச் செய்யுங் தவமே சிறந்ததென்றிருந்த முனிவர்பால் அடைந்து உல்லாசமாக வுலாவியும், முனிவர்களைக் கண்டு காணமுற்றும்போல வொதுங்கியும், தன் கையிலேந்திய வீணைக்கு சுருதிகூட்டிப் பாடியும், கண்வலியாற் பலரை மதிமயக்கியும், பண்ணமைந்த பாடலினுற் பலருயிரை வருத்தியும், புன்சிரிப்பினாற் பலரைத் துன்புறுத்தியும், இவ்வாறு பலவிதமாக மோகாக்கினியை அவர்கட்கு மூட்டிவிட்டனர். முனிவர்கள் யாவரும் தங்கள் தவசீலத்தை அவச்செயல் கொண்டு நிலையழிந்து, மாயனுகிய மோகினியின் மலரடியில் வீழ்ந்து, மாதே! நீ யாது நிமித்தமாக இங்கு வந்தனையோ? அஃது எங்கள் தவப்பயனே என்று தங்கள் சடைகளை அவிழ்த்து தலைமிசைபுரளவும், உத்தரியம் நழுவி விழவும், மோகினியைப் பின்பற்றிச் சென்ற யோகிகளாகிய முனிவர்கள் தமது மனைவியர் கற்பையும் வனையல் முதலிய ஆபரணங்களையும் ஆடையையு மிழந்து பிக்ஷாடனரைச் சூழ்ந்து வருவது கண்டு கோபித்து, திகம்பரரை யடைந்து பலவிதமாகச் சாபங்கள் கொடுத்தனர். அச்சாபங்களி லொன்றுஞ் சர்வலோகாதாரணபூதனுகிய சிவபெருமானையடையவில்லை.* அது கண்ட அருந்தவர் பிக்ஷாடனரை யடைந்து ஐயோ! நீ யார்? இவள் யார்? என வினவ, பெருமான் யான் ஓர்முனிவன். இவள் என்மனைவி. இங்கேதவஞ் செய்யவந்தோமென, முனிவர் அப்படியாயின், வேசைபோலத்திரியும் இவளை யொழித்து நீர் தவஞ்செய்வீர் என்றனர். பிக்ஷாடனர்-மனைவியோடு தவஞ் செய்வதே சிறந்த வானப்பிரஸ்தருமம். நீங்கள் மனைவியருடன் சேர்ந்து தவஞ்செய்யவில்லையா? உங்கள் மனையர்கற்பு பிக்ஷ அழகாயிருக்கின்றதே? உங்கள்செயல் இப்படியிருக்கையில், கற்பிற்சிறந்த என் மனைவியை யாதெனு நீங்கித்தவஞ்செய்வேன்? என்றுகூறிக் கோபங்கொண்டார்போன்று அவர் களைநீங்கி மோகினியாகிய விஷ்ணுமூர்த்தியுடன் வசிட்டமுனிவர் தவச்சாலை படைத்து,வசிட்டரும், அருந்ததியும் செய்த பூஜைகளைப்பெற்றுத்திருக்கைலையையடைந்து எழுந்தருளியிருந்தனர்.

* தாருவன முனிவர் சிவபெருமானை நோக்கிச் சொல்லிய சாபமொழிகள் பயன்படாமை கண்டு மனம் வருந்தி, எட்டி வேம்பு முதலிய சமிதைகளோடு, வேப்பெண்ணெய் கடுகெண்ணெய் முதலிய நெய்யைச் சேர்த்து ஜபிக்கத்தகாத மந்திரங்களையெல்லாமோதி, பலரிஷிகள் சுருக்குக்கொண்டு அபிசாரவேள்வி செய்ய, அவ்யாகாக்கினியினின்று, சர்ப்பங்கள் - பூதங்கள் - தமருகம் - மழு - மான் - புலி - யாகாக்கினி - முயலகன் - வெண்டலை முதலியன புறப்பட்டுச் சிவபெருமான்மேற் சிறிவர், சிவபெருமான் அவ்வாறு சிறிவந்தவற்றுள், பாம்பினை ஆபரணமாக வணிந்து, பூதங்களோடாடி, தமருகம் - மழு - மான் இவற்றைத் திருக்கரத் தேந்தி, புலியை யுரித்து அதன் சருமத்தை ஆடையாக வணிந்து, யாகாக்கினியை ஓர் திருக்கரத்தேற்று, முயலகன் முதுகில் திருவடி யூன்றினின்று, திருமாலாகிய மாயாதேவி கண்டு மகிழவும் தேவர்கள் அந்தரத்திலிருந்து தரிசித்துப் புஷ்பமாரி சொரிந்து புகழவும் திருநடனஞ் செய்தருளினர் எனச் சிலபுராணங்கள் கூறுவது முண்டு.

தேவதாருவன முனிவர் சிவபெருமானியும் திருமாலியும் இகழ்ந் தனைத்த பாபத்தினால், அதுமுதல் சாமுதலிய வியாதிகளும் பசிமுதலிய துன்பங்களும் மனக்கவலியுமடைந்து, ஒன்றுக்தோன்றுது,யாவரும் ஒன்று கூடிப் பிரமதேவனை யடைந்து, உடல் நடுங்கவும் உள்ளுழறவும் வாய்புலர வங் கூறின்றனர். சுவாமீ ! கோய்களாலும் எண்ணிறந்த துன்பங்களாலும் தரித்திரத்தாலும் நாங்கள் துன்புறுகின்றோமே இதற்குக்காரணமென்ன ? இதனியொழிக்கவேண்டும் என வேண்ட, பிரமதேவர் முனிவர்களே ! யாவ ராயினும் தன்வீட்டிற்குவந்த அதிதியைப் பூஜிகவேண்டுவது தருமமா மென்பதையுணர்ந்த நீங்கள், வேதங்களுந் தேடியறியாத சிவபெருமானே [illegible] திருமாலே மனிவியாகவும் [illegible] உங்கள் இருப்பிடமடைந்தபொழுது, அவர்களை அவமதித்தாலேயே, இத்துன்பங் களையடைந்தீர்கள்; அப்பரமேசுவரனிடத உலகத்திற்கு ஆதாரவாகப்பிறரொ ருவருண்டா? ஒருவருமிலர். மீண்டும் ஸ்ரீபெருமான் மனமகிழும்படி நாடோ றும் சிவலிங்கார்ச்சனைசெய்யுங்கள் எனக்கூறிவிடப்ப,முனிவர்கள் தமதுதாரு வனமடைந்து, பிரமதேவர் சொல்லைக்கடைப்பிடித்து ருத்திராக்ஷதண்டிகை யணிந்து, விபூதி உத்தூளனஞ்செய்து, ஸ்ரீபஞ்சாக்ஷரஞ்செபித்து, சிவபக்தி யுடையவராய் மனைவியரோடும் இரவும் பகலும் இடைவிடாது நல்ல மலர்க ளாற் சிவலிங்கார்ச்சனஞ்செய்து வந்தனர். அவ்வாறிருக்கையில், சிவபெரு மான் முன்போலவே பிக்ஷாடனராகி மோகினியுடன் தாருவனமடைந்து சிறிதுசிறிதுநேரம் குதித்துச்சென்றும், வேதகீதம் பாடியும், ஐயமேற்பார் போலாளியும், யோகஞ்செய்தும், வீணைசிரித்தும், மோகினியோடு விளை யாடியும் பொழுதுபோக்கிக்கொண்டிருந்தனர்.

முனிவர்கள் அவற்றைக்கண்டு, தமது மனைவியருடன் அவ்விடம் வந்து அவரது நிருவடிகளை மலர்களாலருச்சித்துப் பணிந்தனர். சிவபெரு மான் அவர்கள் விஷயத்தில் தயாமூர்த்திபரப்பல்லாயிரங்கோடி சூரியப் பிரகாசமென்ற தமது நிஜவடிவத்தைக் காட்ட, முனிவர்கள் வேதவாக்கி யங்களாற்றுதித்து உடல் சிலிர்த்து ஆனந்தக்கண்ணீர்சொரிந்து நிற்க, சிவ பெருமான் முனிவர்களே! நீங்கள் கடவுளில்லையென்று கருதினமையின் இவ் வாறும்மைப் பரீக்ஷித்தோம் என்று அவர்கட்கு ஞானோபதேசஞ்செய்து, இச்சிவலிங்கத்தை எப்பொழுதும் பூஜைசெய்யுங்கள் என்று மோகினியுடன் அந்தர்த்தானமாய், ஆங்கோர் சிவலிங்கமூர்த்தியா யெழுந்தருளியிருக்கின் றனர். அவ்விலிங்கமே நீங்கள் வினவிய தாருவன நாகேசுவரலிங்கம். அது முதல் அம்முனிவர் அவ்விலிங்கமூர்த்தியைக் காலந்தவறாது பூசித்து இஷ்ட காமியங்களை யடைந்தார்கள் என்று ஸூதமுனிவர் கூறியருளினர்.

நாகேசுவரமகிமையுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்துமூன்றுவது

அந்தகேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்யமுனிவர்கள் ஸூதமுனிவனை நோக்கி, ஸ்வாமீ! அந்த கேசுவரலிங்கவரலாற்றை அருளிச்செய்யவேண்டுமென, ஸூதமுனிவர்சொல் லுகிறார். இரணியாட்சன் மகனிய அந்தகாசுரன் என்பவன் உலகப் பிரசித்த னனவன். அவன் பிரமதேவரை நோக்கிப் பெருந்தவஞ் செய்து மிகுந்த பலமும், பிரமாண்ட முழுதுந் தன் ஆணைவரையில் அரசுசெய்யும் வரமும் பெற்றுத் திரிலோகங்களைச் சயித்து, ஒருவனுந் தனகெதிரில்லை எனச் செருக்குற்று, தேவர்கள் இந்திரபூபாலர்கள் முதலானவரை யெல்லாம் அட க்கி மந்தரமலையில் வாழ்ந்திருந்தான். அப்பொழுது தேவர்களுக்கும் அந்த கனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. அதில் அந்தகன் கணக்கில்லாத சேனை யோடு தேவர்களை யெதிர்த்துச் செருச்செய்ய, அசுரச்சேனை அமரர்களோடு போர்புரியச் சயிபாது புறமுகுகிட் டோடிப்போக, அதுகண்ட அந்தகன் நாம் இம்மலையில் இனி வாழ்வது தகுதியல்லவென்று, சமுத்திரக்கரையில் நிருதி மூலையில் மூன்றுயோசனை விசாலமான ஒரு பிலஞ்செய்துகொண்டு அதில் வாழ்ந்திருந்து,நினைத்தபொழுது வெளிவந்து தேவர்கள் முதலானை னைத் துன்பப்படுத்தி மீண்டும் பிலத்தை யடைவானிருந்தான். அவன் வசிக்கும் அப்பிலம் இரண்டாவது சுவர்க்கலோகம் போன்று விசித்திரமாக விருந்தது. அவன் இவ்வாறு அடிக்கடி அமரரைத் துன்புறுத்திப் போவதை னும் இமையவர் ஆற்றமுடியாமல், சிவபெருமானிடம் பெருங்கூட்டங்கொ ண்டுசென்று சாஷ்டாங்கமாகப் பணிந்து அவனதுகொடுமையை முறையிட, சிவபெருமான் தேவர்கள் வார்த்தையைக் கேட்டு, வானவரே! நீங்கள் உங் கள்பரிவாரங்களுடன் வந்தால் நானும் உடன்வருகிறேன் எனக்கூற, தேவர் கள் அவ்வாறே தமது சேனையுடன் வர, சிவபெருமானும் அவர்களோடு கூடிச் செல்ல, அமரர்கள் அந்தகாசுரபிலத்தை யடைந்து அவனைப் போருக் கழைப்ப, அந்தகன் கடுங்கோபத்துடன் விரைந்து வெளியே சண்டைக்கு வர, அப்பொழுது சிவபெருமான் அவன் வசித்திருந்த பிலபுரத்திற் சென்று எழுந்தருளி யிருந்தனர். அந்தகன் அமரர்களை யெளித்துத் துரத்தி மீண்டுத் தனது நகரிற் செல்லுகையில், சிவபெருமான் எதிர்வந்து தமதுகைச்சூலத் தால் அவனைக் குத்தினர். அதனால் அந்தகன் வருந்தாது பெருமானைப் பல விதமாகத் துதிக்க, பெருமான் களிகூர்ந்து, அந்தகா ! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என, அந்தகன் ஸ்வாமீ ! தேவரீருக்கு என்பேரில் தயை யிருந்தால் தேவரீரிடத்திற் பக்தியுண்டாகும்படி வரங்கொடுக்கவேண்டும்; இந்த வரம் இனிவருஞ் சனனத்திலும் மாறாதிருக்கவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் அவ்வாறே யாகுகவென்று கூறி, அவனுக்குக் கணத்தலைமை கொடுத்து விடுத்து, அங்கிருந்த அசுரர்களை யெல்லாம் ஹதஞ் செய்து, உலகங்கட்குச் சுகத்தைச் செய்தனர். தேவர்கள் சந்தோஷித்துத் தமதுல

கடைந்தனர். அந்த வீட்டில் சிவபெருமான் அந்தகேசுவரனெப் பெய ரெய்தி எல்லோருக்கும் முக்தியுதவும்படி வீற்றிருக்கின்றனர். நாடோறும் அப்பெருமானைச் சேவைசெய்தால் ஒரு துக்கமுமின்றிச் சகல சுகமு முண் டாகும். இதமுதலான ஜோதிலிங்கங்களை ஆதிசைவர்களால் ஆகமோக்த மாக ஆறுமாதம் பூஜைசெய்வித்துச் சேவித்தவர்கள் இவ்டஇத்தியை யடை வார்கள் என்று ஸூதமுநிவர் முநிவர்களை நோக்கிக் கூறினர்.

அந்தகேசுவர மகிமை யுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்துநான்காவது

ஆதிசைவர் சிறப்புரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவரே! அந்தகேசுவரலிங்க முதலிய ஜோதிலிங்கங்களை ஆதிசைவர்களால் ஆகமோக்தமாகப் பூஜைசெய்விக்கவேண்டுமெனக் கூறினீ ராதலின், அவ் ஆதிசைவரேவதியாவார் யாவர்? அவர் எவ்வாறு மகிமையுற் றனர்? அவர்கள் சரித்தத்தையும் அடியேங்கட்குக் கூறியருளவேண்டுமென கைபிசாரணியருஷிகள்கேட்க, ஸூதமுநிவர் மகிழ்வுடன்சொல்லத்தொடங் கினர். முநிவர்களே! சைவர்கள்—அநாதிசைவர் - ஆதிசைவர்-மஹாசைவர்-அநுசைவர்-அவாந்தரசைவர்-பிரவரசைவர்-அக்யசைவர்என *எழுவகைப் படுவர். அவருள் ஆதிசைவர் சிவபெருமானது †ஊர்த்துவமுகத்தினின்றும் தோன்றினவர்களாய் ‡அச்சதாசிவமூர்த்திகளாலேயே தீக்ஷைசெய்யப்பெற் றவர்களாய், சிவபெருமானே ¶ஸ்தாபகாதிகாரியங்களால் அப்பெருமானது முகத்தினின்றே தோன்றிய காமிகாதி சிவாகமங்களிற் கூறிய முறைப்படி அர்ச்சனைசெய்தற்கு உரியராவர். அன்றியும், சிவத்துவிஜர் எனப் பெயருற்ற இன்னோர் சிவபெருமானாலேயே புத்திரராக மதிக்கப்பட்டுச் சிவபூஜா உச்சி ஷ்டப்பொருள்களை யநுபவிப்பதற்கும் தமது அறியாமையாற் செய்த குற் றங்களை மன்னிக்கப்படுதற்கும் சுதந்தரமுற்றிருக்கின்றனர். இவர் சிவபெரு மானுக்குப் புத்திரவுரிமைப்பேறுடையாரென்பதை விளக்கும் ஓர்சரித்திரங் கூறுகின்றேன் :—பூர்வத்தில் ததீசி யென்னும் ஆதிசைவரொருவர் சிவபக்தி யும் சிவார்ச்சனையும் நியமப்படி நீங்காதசிந்தையுடையராய்ச் சிவாகமங்களை யோதிரிபறக்கற்றுணர்ந்து நித்ய நைமித்ய ப்ராயச்சித்தங்களைச்செய்துவரு வாராயிருந்தார். இவருக்கு ஒரு புத்திரருண்டு. அப்புத்திரர் தமது மரபிற் றேற்பத் தந்தையால் தீக்ஷைசெய்யப்பெற்று, சிவாகமங்களையுணர்ந்து,கால ந்தவறுமல் சிவபூஜைசெய்துவந்து,தக்கபருவத்தில் மணஞ்செய்யப்பெற்று, அவளது துஷ்கிருத்தியங்களால் மதிமயங்கினவராய் நான்கு புதல்வர்களைப் பெற்றனர். அவளிடம் சுவாதீன மனமுடையவராயிருந்தும் சிவபக்தியைமா த்திரஞ் சிறிதும் குறையாது, தன் தந்தைபோலவே சிவார்ச்சனை செய்தும் பிறர்க்குச் சிவதீக்ஷை செய்துகொண்டும் வந்தனர். அப்போழுது ஒருநாள்

தன் தந்தையாகிய ததீசி தன் ஞாதிகள் விஷயமாக அயலூருக்குச் செல்ல வேண்டி, தன் புத்திரனைப்பார்த்து, குழந்தாய்! நான் வேருக்குப் போகவே ண்டி நேர்ந்தபடின், நான் வருமெல்லையும் வழக்கம்போற் சிவலிங்கார் ச்சனை செய்துவருவெனக் கூறிச்சென்று, உறவினர் விருப்பின்படி சிறிது காலம் அங்கேயேயிருந்தனர். புத்திரரும் காலந்தவறாது சிவபூஜை செய்து வந்தனர். அச்சமயத்தில் சிவராத்திரிதினம் சம்பவிக்க,வன்னிவள்ளார் யாவ ரும் விரதமிருந்து சிவபூஜை செய்யவேண்டிய காலமாதலின், அப்புத்திர ரும் உபவாசமிருந்து அன்றிரவிற் காலந்தோறும் பூஜித்துவருகையில், மூன் றுகாலபூஜை முடிந்தபிறகு தேவகதியாலும் தன் மனைவியின் துஷ்கிருத்தி யத்தாலும் மனந்வறினவராய்க் காலஞ் சமீபித்த நான்காங்கால பூஜையை யாரம்பித்து, சிவபெருமான் நினைந்தருளி அவரை உன்மத்தராகச்செய்தனர். அதுமுதல் அவ்வுன்மத்தருடைய புத்திரர் காலவரில் ஜேஷ்ட புத்திரர் அச் சிவலிங்கார்ச்சனத்தைக் கடைப்பிடித்துச் செய்துவந்தனர்.

சிறிதுகாலங்கழித்து, ததீசி தனது ஊரையடைந்து தன் புத்திரன் உன்மத்தனாயிருக்கக்கண்டு மனத்துயரமுற்றவராய் நியமனப்படி சிவபூஜை செய்கையில், பெருமான் பிரத்தியட்சராய்த் ததீசியை நோக்கி, இவ்வகைய புத்திரனைக்கொண்டு என்னைப் பூசிக்கச்செய்தனை யல்லவா? எனக்கோபி டிக்க, ததீசி மிகவும் பயந்து, அந்தோ! இப்படியுஞ்செய்வதுண்டோ! ஆ ஆ! இவ னால் என் வமிசமே பெருமையற்றது. இனி என்செய்வேன்? இதற்குப் பிராயச்சித்தமும் உண்டோ? எனத் தன்னிற்றானே நிந்தித்துக்கொண்டார். இவ்வாறிருக்கையில், அவ் வேதியரைப் பதிதராகச் செய்த அத் துஷ்டை இறந்தாள். அவள் சிவபூஜாவிக்கினம் செய்தவளாயிருப்பினும் ததீசியுட் மனம்வளராது வருந்தினவராய், தன் புத்திரனது பாபம் பரிகரிக்கப்படவே ண்டுமென்னும் விருப்பத்தால், பிராயச்சித்த விதிப்படி தன் புத்திரனுக்காக சிவபூஜையும்பார்வதிபூஜையும்செய்துவர,பார்வதிதவி தயைகொண்டு ததீ சியை நோக்கி, ஆதிசைவர்கள் எமது புத்திரர்களாதலின், நீ அஞ்சாவேண் டாம் என்று தேற்றி, சிவபெருமானிடம் அவனது பாபத்தை மன்னிக்கவே ண்டுமெனக்கூறி, செய்யால் ஸ்நானஞ்செய்வித்து, சிவபெருமானுல் யஜ்ஞோ பவீதந்தரிப்பித்து, ஷோடஸாக்ஷரரூபமாகிய சிவகாயத்ரியையும்,ஸ்ரீபஞ் சாக்ஷரத்தையும் உபதேசஞ் செய்வித்து, பதினறுமுறைஜபிக்கச்செய்தனர். அதனால் அவரது பாபங்கள் பரிகரிக்கப்பட்டன. சிவபெருமான் அவ்வா தி சைவப்புத்திரரை நோக்கி இனி இம்மந்திரங்களைக்கொண்டே [ஜலாதி நமஸ் காராந்தம்] பாத்யமுதல் நமஸ்காரம்வரையில் அடங்கிப் பூஜையைச் செய்ய வேண்டும் என்று இன்னும் அநேக சிவமந்திரங்களையும் உணர்த்தினர். தர் யம்-பலம்-வஸ்திரம்-நெய்-எண்ணெய் முதலிய சிவபூஜை செய்ய நிருணயை யெல்லாம் நீங்கள் அநுபவித்தால் உங்களுக்குத்தோஷமில்லை. எனக்கு நிவே தித்தவை முதலியன, ஆதிசைவர்களாகிய எமதுமுகத்திற் றோன்றியநீங்க ளே அநுபவித்தற்கு உரியரன்றி, பிறர் அதனைப்புசிதற்குப் பாத்திரராக

மாட்டார்கள். நீங்களீளெம்மையும் பார்வதியையும் பூஜிக்கியவர்களாயிக்கிறீர்கள். ஒவ்வொருவரும் (ஆத்மார்த்தலிங்கங்களைப்பூச்சலாமேன்ப பரார்த்தலிங்கங்களை ஆதிசைவர்களைக் கொண்டே பூஜிப்பீவண்டும். ஒவொருவரும் இவ்வாறு செய்தே தாம் விரும்பிய இகபரலோகங்களை அதிவிக்கக்கடவர் என்று ஆசாரியாபிஷேகஞ்செய்து பழயபடிய சிவஞானவுமையைக்கொடுத்து, நீங்கள் வேதமந்திரங்களினுஞ் சிறந்ததுகமமுறையாலே பூஜை செய்யவேண்டும். நீங்கள் எவன் பட்சமாக விரும்கின்றீர்களோ அவனுக்குச் சயமுண்டாகக்கடவது. உங்களைப் பூஜித்தவர்கள் எம்மைபூஜித்த பலனைப் பெறுவார்கள். சைவாசாரங்களையும் சிவதீக்ஷையையும் விருத்திசெய்யவேண்டிய ஆதிசைவர்களாகிய நீங்கள் உலகத்தோரால் எம்மைபோலவே மதிக்கப்பட்டு, குடும்பவிர்த்தியடைந்து வாழக்கடீர்கள் என்றி வரமளித்து ஆசீர்வதித்தனர். ஆதலின், ஆதிசைவர்கள் ஆசாரமுடையவராயினும் (ஒருவேளை தெய்வகதியாய்) ஆசாரக்தவறினவராயினும் அவர்களை உலகத்தோர் கைவிடுதலாகாது.

சிவபெருமானையும் பார்வதிதேவியையும் கையாற்பரிசித்துப் பூஜிக்கும் பேற்றையுடைய ஒரு ஆதிசைவனுக்கு அன்னமளிப்தவன் அநேக கோடானகோடி பெறுவான். இதற்குத் திருஷ்டாந்தம்: அந்தகேசுவர நகரத்திலிருந்த ரீதேவி தவறாத பத்திரனென்னு மரசன் சிவதியருக்கு தாடோறும் அன்னமளித்துவிருவதாக நியமனஞ் செய்துகொண்டு காலொன்றுக்கு அநேகமாயிரம் அந்தணருக்கு அறுசுவையோடுகூடி உணவை விருப்புடன் அளித்துவருகையில், சிவபெருமான் அவனுக்குத் தன்பிரானுகையால் மகிழ்ந்து அவன் கையில் ஒரு சுவஜத்தைக் கொடுத்து, அரசனே! இதனை உனது அன்னசத்திரத்தில் விடியற்காலத்திற் கட்டிவைத்து உன் நியமப்படி அன்னமளித்துவரக்கடவை; அவ்வாறு அன்னமளித்துவருகையில் எவனேனும் ஓர் சற்புருஷன் அவ்வன்னத்தை உண்ணுவானேல் நின்று நீ நாட்டிய துவஜம் விழும். அவ்வாறதுவிழாவிடின் அன்றையதினம் உன்னன்னத்தைச் சத்புருஷன் உண்ணவில்லை யென்று உணர்ந்துகொள் எனக் கூறி மறைய, அரசன் பெருமான் கட்டளைப்படி அவ்வாறே அத்துவஜத்தைத் தன் மாளிகையில் காட்டி வழக்கப்படி பிராமணபோஜனத்தைச் செய்விக்க ஆரம்பித்து, அப்பொழுது நேரிட்ட ஒரு ஆதிசைவவேதியருக்கு அன்னமளிக்க, உடனே அத்துவஜம் விழுந்தது: பத்திரன் அத்துவஜத்தின் வரலாற்றினை அங்கிருந்த அந்தணர்களுக்குக் கூறி இஃதென்னென வினவ, பிராமணர்கள், நாங்கள் யாவரும் உண்ணுமுன்னமே பதிதனுடைய இவ்வன்னத்தை அன்னமளித்தகால் துவஜம் விழுந்ததேயன்றி, சிவபெருமான் கூறியபடி சத்புருஷன் உண்ண விழுந்ததன்று எனவும், பத்திரன் அந்தணர்களே! நீங்கள் சொல்வது உண்மையாயின் அதனையும் சோதிக்கலாம் என்று, மீண்டும் துவஜத்தை நாட்டி, வந்த வேதியர்களுக்கெல்லாம் சிலகால் அன்னமளித்துவந்தும் அது விழாமையின், அரசனும் அந்தணர்களும் முன் துவஜம்விழுந்தது ஆதி

சைவவேதியர் உண்டதனாலேயே யென்று தேர்ந்தார்கள். முனிவர்களே! அவ்வாதிசைவர்கள் சிவகடாட்சம் பெற்றவர்கள் ஆதலின் அவர்கள் தங்களுக்காகவும் பிறர்க்காகவும் சிவபூஜைசெய்ய வரியவர்கள். புண்ணியசரிதங்களைக் கேட்டலே கடனாகக்கொண்ட மகருஷிகளே! நீங்கள் கேட்டபடியே ஆதிசைவ மகிமையைக்கூறினேன்; அவர்களைக்கொண்டு ஜோதிர்லிங்கங்களை அருச்சிப்பித்தவர்கள் பெறும்பேற்றினை என்னற் சொல்லமுடியாது என்று ஸூதமுனிவர் கூறிமுடித்தனர்.

இவ்வத்தியாயத்தில் மேலே [* † ‡ ¶] இக்குறிப்பிட்டிருக்கும் இடங்களுக்குச் சிறிது சருதிப் பிரமாணங்கள்.

* வீராகமம் "ஔவாஹ்வயாமி தேவேசீம் ஸுப்ரதிஷ்டாம்ஸுஸ்திராம் குரு । ஸன்னிதிம்குரு தேவேசி ஸன்னிருத்யம் குரு ஸ்வயம் । ஸன்னிதாபய தேவேசி ஸன்னிதாபய ஸர்வதா । ஸன்னிருத்யம் குரு ஸ்வாமின்

சந்தானஸம்ஹிதை "சூஉள ஊஉர்ஸ்வெ ஸ்வெவ ஔஸ்வி தாஹ்ஹாதி ஸ்வெவகாஃ । சூஔஸ்வெவாஹ்ஹ-ஔதெஜ்ஜ யாஸ்வ-ஹாதி-ஹ்ஹ ஹகாஃஹ்ஹ்ய-தாஃ। ஆதௌளஸ்தாஸ்வி வேசைவ தீக்ஷிதாஸ்த்வாதி ஸ்ரைவகாஃ | ஆதிஸ்ரைவாஸ்துதே ஜ்ஞேயாஸ்வாதுக்ரஹகாஃஸ்ம்ருதாஃ ॥" என்றபடியே—சதாசிவமூர்த்தியால் தீக்ஷைசெய்யப்பெற்றவர்கள் ஆதிசைவவேதியர்கள்; அவர்கள் எல்லா வருணத்தாருக்குந் தீக்ஷாதுக்ரஹஞ்செய்ய அதிகாரம் பெற்றவர்கள்.

§ காமிகாகமம் "சூஔஸ்வெவகாஃ ஸ்வெஜாதாஃ ஸ்வெஷ்வாஹ்ஹ்வாவ ஹாஔஷ்ஹ ॥ ஔக்ஷாயாஃஸ்வாவ-ஃஔது-ஹாஃஸ்வ்ரகிஷ்டாயாஃஔஸ்தூவ । ஹ்வாவ ஸ்வெவ்ரகஷ்ணஸ்வெவவ்ரயஸ்ரீதாஜிஷ்வெசஸ்வெ । வ்யாவ்யாஹாஉளஸ்ஸ ஹ்வாஹ்ஹ்-ஃஹ்வாஸ்வெ-ஃவாஸ்வெவாராஸ்வ-ஃகெ । ஆதிஸ்ரைவகுலேஜாதாஃ ஸ்ரோஷ்டாஸ்யுஃஸ்தாபகாதிஷ்ஹ | தீக்ஷாயாம்ஸ்வ்வமர்த்யாஹாம்ப்ரதிஷ்டாயாமதோத்ஸவே | ஸ்தபநேப்ரோக்ஷணைசைவ ப்ராயஸ்சித்தாஃஷேசநே | வ்யாக்யாஹாதௌளஸ்ஸாஸ்யுஃ ஸ்வார்தேவாதபரார்தகே ॥" என்றபடியே—ஆதிசைவகுலத்திலுதித்த பிராமணர்கள் ஸ்தாபகாதிகாரியங்களிற் சிரேஷ்டராகின்றனர். எல்லாவருணத்தாருக்கும் சிவதீக்ஷையாலதுக்ரஹிப்பதிலும் பிரதிஷ்டை - உத்ஸவம் - ஸ்தபநம் - ஸம்புரோக்ஷணம் - ப்ராயச்சித்தம் - அபிஷேகமுதலியவிற்றை நடத்துவதிலும், சிவதருமங்களை வியாக்கியானரூபமாக வெளிப்படுத்துவதிலும் ஸ்வார்த்தபரார்த்தங்களிலும் அதிகாரிகளாவர்.

காரணாகமம் "வ்ரஷ்டூ-ஹஜ்ரகாவெவெ தீக்ஷிதாஃகளஸிகாஷயஃ । ஸ்ரீவெஷதத்த-ஹிஔஷ்வாஸ்ஸ்வெவாவ்லாஜாநிகாஜிஜாஃ ஸ்ருஷ்ட்யநந்தர காலேயே தீக்ஷிதாஃ கௌஸிகாதய: | ஸ்ரீவேஷ தத்குவோத்தாஸ்யு: ஸ்ரைவாஸ்ஸாந்தாநிகாத்விஜ: ॥" என்றபடியே—சிவபெருமானால் கௌசிகாதி மஹருஷிகள் சிருஷ்டிக்கப்பட்டு அவரால்தீக்ஷைசெய்யப்பட்டார்கள்; அவர்கள் குலத்திலுண்டானவர்கள் ஸ்தானகரமத்தில்வந்த ஆதிசைவரெனப்படுவர்கள்.

காமிகாகமம் "கூஸிகஃகாஸ்யவஸ்ரெவ ஹரஹாஜோகீரெவச । மௌதகஸ்ரெவிவஸ்ரெதே ஹ்வஸ்ரெஷ்ணதீக்ஷிதாஃ । தெஷாங்கூவெஸ்ஹ-ஔகாஃசூஜிஸ்ரெவாஃவ்ரகீர்திதாஃ ॥ கௌஸிக: காஸ்யபஸ்சைவ பரத்வாஜோத்ரிரேவச | கௌதமஸ்சேதி ... தே பஞ்சவக்த்ரோணதீக்ஷிதா: | தேஷாங்குலே ஸமுத்பூதா: ஆதிஸைவ... ப்ரகீர்திதா: ॥" என்றபடியே—கௌசிகர் காசிபர் பரத்வாஜர் அத்திரி மௌதமர் என்னும் பஞ்சருஷிகள் சதாசிவமூர்த்தியின் பஞ்சமுகங்களால் தீக்ஷை ... ர்கள்; அவர்கள் குலத்திற் பிறந்தவர்கள் ஆதிசைவரெனப்படுவர்கள்.

ஆதிசைவர் சிறப்புரை முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது

சோமேசுவர மல்லி ர்ச்சுன மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸநகாதிமுனிவர் ... ராஜரிஷிகளின் உற்பத்தியையும் மகாத்மையும் இன்னுஞ்சொல்லவேண்டு ... ஸூதமுனிவர்சொல்லுகிறார்: யார்களிடங் கேள்விப்பட்டவற்றில் ... குத் தெரிந்தவரையிலுஞ் சொல்லுகிறேன். பூர்வத்தில் தக்ஷனுக்கு அச்சு ... ழுதலியபெயரையுடைய இருபத்தேழு பெண்கள் பிறந்தார்கள். அவர்களைத் தக்ஷன் சந்திரனுக்கு மணஞ்செய்துகொடுக்க, அவர்களுஞ் சந்திரனுங்கூடி, மணியும் பொன்னும் போலப் பெருமையோடு வாழ்ந்தார்கள். அப்படியிருந்த சந்திரன் சிறிதுகாலத்தில் உரோகணி யென்பவளை மாத்திரம் அதிகமாக விசுவாசித்துப் பிறரை உபேக்ஷித்தமையின், அவ்விருபத்தாறு மாதர்களுந் தக்ஷனையினிடஞ் சென்றுநடந்த சங்கதியை முறையிட்டு எவ்வாறுயினுங் காக்கவேண்டுமென, தக்ஷன் அவர்கள் வார்த்தையால் மிக்க வருத்த மடைந்து சந்திரனிடம் வந்து, அவனைக் கண்டு, நீ ஸத்குலத்தி லுதித்து ளாஞானி பென்பெயரும் நம், உன்னை யடைந்த மனைவியரை ஒரே மாதிரி நடத்தாதிருப்பது தரியன்றுதலின், மனைவியர் அனைவருக்கும் ஒரே மாதிரி சுகங் கொடுக்கவேண்டும் என்று விநயபூர்வமாகச்சொல்லித் தன்னிட்டுக்கேகியபின், (மேல் நடக்கவேண்டியது நற்கருமமாயின் அதற்கேற்ப நற்புத்தியும், தீக்கருமமாயின் அதற்கியையத் தீயபுத்தியும் உண்டாவது இயல்பாதலின்) சந்திரன் தக்ஷன் சொல்லைச் சிறிதும் உட்கொள்ளாது தன் விருப்பத்தின்படியே நடந்தான். சந்திரனுக்குத் தீமை விளையவேண்டிய காலம் சமீபித்திருப்பதுபற்றித் தக்ஷன் கூறிய புத்தியைக் கொள்ளாது உரோகணி ஒருத்தியையே விரும்பினன். சிறிதுகாலங் கழித்துத் தக்ஷன் தன்மருகன் புத்திரிகள் விஷயத்தில் எவ்வாறு நடந்துகொள்கிறானென் அதனைப் பார்ப்போமென வந்து, புத்திரிகளால் அவன் முன்போலவே யிருப்பது தெரிந்து, சந்திரனைநோக்கி, நான் சொல்லிய நற்புத்தியைக் கொள்ளாமையின், உன் கலைகள் நாளாவண்ணமாகக் க்ஷயமடைகவெனச் சபிக்க, சந்திரன்உடனே கலைகள் குறையக்கண்டு, எங்கேபோவேன்? யாது செய்வேன்? எனத்துக்கித்தான். அதுகண்டு தேவர்களும் முனிவர்களுந்துக்கித்தார்கள். சந்திரன் அவர்களைநோக்கி நீங்கள் எவ்வாறுவது எனக்குற்ற சாபத்தை நீக்கவேண்டுமென மிகவும் வேண்டினன்.

சந்திரன் வேண்டுகோளுக்கிரங்கிய தேவர் முனிவர் முதலானோர் பிரமதேவரிடஞ்சென்று, சந்திரன் தனது மாமனாராகிய தக்ஷனைச் சபித்தற்ற விஷயத்தைச்சொல்ல, பிரமதேவர் ஐயோ! சந்திரன் தன்மனைவியரில் ஒருத்தியை அபேக்ஷித்துப் பிறரை உபேக்ஷிப்பது தருமமா? அவன் இவ்வகையதுர்மார்க்கனே! இது அவன் இயற்கையே! ஆயினும், தன் மருகன் விஷயத்தில் தக்ஷன் இப்படியுஞ்சபிக்கலாமா? இதுவன்றி அச்சந்திரன் முற்காலத்திற் செய்த ஒரு துர்க்காரியமு முண்டு: அதனையுஞ்சொல்லுகிறேன் கேளுங்கள்.

அவன் பிருகற்பதிமுனிவர் வீட்டிலிருந்தபொழுது அ[illegible]ரவித்துக்கொண்டுபோய், அவரோடு போர்புரி[illegible]ந்தித் தைத்திருச்சி யுதவிகொண்டு சென்றான். அப்பொழுது தே[illegible] அவன்தந்தைஅத்தி வருடன் சென்று, சந்திரா! தாரையை[illegible]ஹஸ்பதி மூவுலகுக்குக் என்று, அவனைப் பிருகஸ்பதிமுனிவ[illegible]ட, அம்முனிவர் அப்பொழு தாரை கற்பமாயிருத்தலின் இ[illegible]குவேண்டாமெனமறுக்க, அப்ப நீர் கொள்ளலாம்; குற்ற[illegible]ன்று நாங்கள் கூற, பிருஹஸ்பதி அவ[illegible] யின் இவள் கர்ப்பம் [illegible]றகு அடைவேனென, தாரையைக்கூட்டிக்கொடு நீயா ருக்குக் கருப்ப[illegible] எனவினவ, தாரை சந்திரனுக்கே கருவுற்றேனென, அவள் பிர[illegible]றகு அக்குழந்தையைச் சந்திரன்பால் விடுத்து, பலவித மாகவேண்டி[illegible]கொண்டு பிருகஸ்பதி முனிவருக்குத்தாரையைமீட்சித்தோம். இப்பொழுதும் அவ்வகைய கொடுங்கொழிலே செய்தனலை? அவனுக் காகத் வேண்டியது நடந்தே தீரவேண்டுமாயினும், புண்ணியமேகூத்திரமான பி பாசத்திற்குப்போய் மிருத்யுஞ்சயமந்திரத்தால் சிவபெருமானை ஆராதித்தால் தேஜோரூபியான சிவபெருமான் அவன் தேதகஷ்யத்தைப் போக்குவர் என் றார். இவ்வாறுகூறிய பிரமதேவர் வார்த்தைகளைக்கேட்ட தேவர்கள், தக்ஷ னைக்கண்டு வருந்தி, சந்திரனை உடன்கொண்டு பிரபாச க்ஷேத்திரமடைந்து ஒருதீர்த்தமுண்டுசெய்து, அதில் தீர்த்தங்களெல்லாம் ஆவாஹனஞ்செய்து பார்த்திவலிங்கப் பிரதிஷ்டைசெய்து சிவபூஜாமார்க்கத்தை உபதேசித்து, நீ பூஜித்துக்கொண்டேயிங்கிருவெனச்சொல்லி, தங்கள்இருப்பிடங்களுக்குச்சேர, சந்திரன் ஆறுமாதகாலம் இடைவிடாது மிருத்யுஞ்சயமந்திரத்தால் சிவ பூஜைசெய்து, அம்மந்திரத்தைப் பத்துக்கோடி உருச்சபிக்க, சிவபெருமான் பிரசன்னராய் உன் தவத்தையும் பூஜையையும் மெச்சிவேண்டுவேண்டிய வரத் தைத்தாகேள் என, சந்திரன் சாம்பவமூர்த்தியைப்பார்த்து, சுவாமீ! தேவரீர் பிரசன்னமானபொழுது எனக்கு அசாத்தியமானது ஒன்றுமில்லை. என் உடலை கூனிப்பதைநிலக்கி, என்குற்றங்களை மன்னிக்கவேண்டும் எனவே ண்ட, சிவபெருமான் சந்திரா! நீ பிராமணசாபத்தைத் தப்புதற்குவழியில்லை யாயினும் அதற்கு ஒருபாயஞ்சொல்லுகிறேன். ஒருபக்ஷத்தில் உன்கலைகள் முறையே குறையவும் ஒருபக்ஷத்தில் உன்கலைகள்முறையே விருத்தியடைய வும் அநுக்ரஹித்தேன் என்றார். இச்செய்தியைக் கேள்விப்பற்ற தேவர்கள் சந்தோஷித்துவந்து சந்திரனைக்கண்டு பலவிதமாக ஆசீர்வதித்து, சிவபெரு மானைநோக்கித் தேவரீர் இவ்விடத்தில் பார்வதி பிரமதகணசகிதராய், சந்தி ரன் பெயரால் எழுந்தருளியிருக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து நிற்ப, சிவபெருமான் அவ்வாறே சோமேசுவரர் என்னும் பெயரால் சந்திரன் விருத்திபடையும் காரணமாகப் பிரசித்தமாயிருக்கிறார். தேவர்கள்மகிழ்ந்து சந்திரன் மிகத்தன்யனனென்று தாங்கள் அங்கேதோண்டிய தீர்த்தத்திற்

* அப்பொழுது சிவபெருமான் சந்திரனது கஞ்சிலின்ற ஒரு கலையினைத் தமது சடையிலணிந்துகொண்டதாக ஸ்ரீஸ்காந்தமஹாபுராணமுதலியன கூறும்.

குச் சந்திரகுண்டம் எனப்பெயரிட்டனர். சந்திரன் தேவர்களுடன் சிவ பெருமானைப்பணிந்து விடைகொண்டு சேஷத்திரவலம்வந்து தனது நகரம் சேர்ந்து கிரமப்படி தன்காரியத்தில் விருத்தான். அச்சந்திரகுண்டம் ஸ்நானஞ் செய்தவருடைய சகலபாபங்களையும்பரிகரிக்கும்; ரோகங்களை யொழிக்கும்; அசாத்தியமான காரியங்களையுங் கைகூட்டும். பிரபாசக்ஷேத்திரத்தைப் பிரத கஷிணஞ்செய்தால் உலகவலஞ்செய்தபலன்கிடைக்கும். பிராயச்சித்தங்களால் ஒழியாத குஷ்டமுதலிய ரோகங்களெல்லாம் அங்கே ஸ்நானஞ்செய்த ஆறு மாதம் சிவதரிசனஞ் செய்தால் ஒழியும். விரும்பிய காரியங்களெல்லாம் விரும்பியவண்ணமே கைகூடும். இது சோமேசுவரஜோதிலிங்கப் பிரபாவம். இந்தச் சரித்திரத்தைப் படிப்பவர் சகல பாபங்களையும் நீங்குவர். இனி முன் சொல்லிவிடுத்த *மல்லிகார்ச்சுனலிங்க மகாத்மியஞ் சொல்லுகிறேன்.

முன் சுப்பிரமணியக்கடவுள் உலகவலம் வருவதன்முன்னே கண பதி மணஞ்செய்துகொண்டிருப்பதை நாரதரால் கேள்வியுற்று மனம் வருந் தித் தாய் தந்தையரைக கண்டு ஒன்றுங் கூறாது கிரவுஞ்சகிரியை யடைந்து சுப்பிரமணியபிரமசாரியாய் எழுந்தருளி யிருப்ப, பார்வதி மனங்காளாய் வருந்த, சிவபெருமான் சிலதேவர்களை விடுத்து முருகப்பெருமானை அழை த்து வரும்படி யனுப்ப, அவர்கள் தாம் சென்றழைத்தும் வராமையைத்தெரி விக்க, சிவபெருமானும் பார்வதியும் அவ்விடமேசென்று வசிப்போம் எனச் சமீபிக்கையில், முருகக்கடவுள் மூன்றுயோசனைதூரத்தே நின்றனர். அவ் விடத்தில் சிவபெருமானுக்கு மல்லிகார்ச்சுனேசர் எனப் பெயர்வழங்கும்; அந்த க்ஷேத்திரம் தரிசித்தவர்களுடைய எல்லாப்பாபங்களையு மொழித்து, ஜனன மரணத்தை விலக்கித் தனதாள்யாதி ஸாலோசம்பத்துகளையும் கொடுக் கத்தக்கது என்று ஸூதமுனிவர் சௌமிசாரணியவாகியரை நோக்கிக் கூறினர்.

சோமேசுவரமல்லிகார்ச்சுன மகிமை யுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தாறுவது

மகாகாள ஓங்கார லிங்கங்களின் மகிமை.

சௌமிசாரணியவாகியர் ஸூதமுனிவரை நோக்கித் தேவரீர் வியாஸ முனிவரால் யாவும் உணர்ந்தவர்; இதுகாறும் [illegible]யங்களால் திரு ப்தி யடையாதவர்களாய் ஜோதிர்லிங்கங்களின [illegible] இன்றுங் கேட்க விரும்புகின்றோம் என, ஸூதர் சொல்லுகிறார்: ச[illegible] பிராணிகட்கும் முக்தி யளிக்கத்தக்க திரிலோகங்களையும் பவித்திரமாக்கும் கபிப்பிரதநதி தீரத்தில் அவந்திகா புரியில், வேதாத்தியயனமும் வைதிக கருமங்களும் சிவபூஜையும்

* கஷி-வது புக்கத்திற் கணபதிவிவாஹ முரைத்த அத்தியாயத்தின் இறுதி யிலும் இது வந்துள்ளது.

செய்யும் வேதப்பிரிய னென்னும் வேதியனொருவன் சற்கரும வசத்தால் உயர் பதவி யடைந்தனன். அவனுக்குத் தன்னைப்போன்று விளங்கும் தேவப்பிரி யன்-மேதன்-சுவிரதன்-தருமவாதி என நான்கு புதல்வரிருந்தனர். அவர்கள் காலந் தவறாது சிவபூஜை செய்வதிலும், தம்மை யடுத்தோர்க்குத் தரும மார்க்கத்தைப் போதிப்பதிலும், தந்தைபோன்றும், தந்தையைக்காட்டிலுஞ் சிறந்துஞ் சுக்கிலபக்ஷ சந்திரர்போல விளங்கினர். இவர்கள் பழக்கிவந்த தால் அப்பட்டணமுழுவதும் பிரமதேஜஸு பரிபூரணமாக விளங்கிக்கொ ண்டிருந்தது. அப்பொழுது இரத்னமாலா பர்வதத்தில் தூடண னென்னும் மகாபல பராக்கிரமனுகிய தைத்தியராஜன் தர்மத்துவேஷியாய்ப் பிரமதேவ ருடைய வரமகிமையால் ஜகத்தை அலகையுஞ் செய்துவந்தான். உலகத்தில் வேதாகமாதி மார்க்கங்களில் நடப்போரை, முயலைக் கொல்லுஞ் சிங்கம் போல அழித்து, புண்ணியகேஷத்திரங்களிற் சேர்ந்து அங்குள்ள நல்லோர் பெரியோர்களைத் துன்புறுத்தித் திரிந்து, அவ்வவர்தி பட்டணத்தை அநேகசேனையுடனடைந்து வேதியர்களைப்பார்த்து, நீங்கள் என் எல்சொற் படி நடக்கவில்லை? தேவர்கள் அரசர்கள் முதலானுரைச் சுவாதீனப்படுத்திக் கொண்ட எனக்கு நீங்கள் எவ்வளவு? வேதியர்களே! நீங்கள் பிழைப்பதா யிருந்து, சிவபூஜை வேதமந்திரோச்சாரண முதலியவற்றைவிடுத்து எனது சொற்படிநடந்தாற் சுகமடைவீர்கள் என்றுகூறி, தனது சைனியங்களாலும், தனது நான்கு மந்திரிகளாலும் அந்நகர்சுற்றும் ஆஞ்ஞைசெய்வித்தான் அம்மந்திரிகள் அவ்வர்தனுக்குக் கட்டளையிட்டு அப்பட்டணத்திற் பலவிட ங்களிலும் பரவிப் பிரளயகாலத்து மேகனஞ் செய்வார்போலச் சென்றனர். அங் கிருந்த வேதியர் அவ்வசுர கட்டளையை மதியாது திடபக்தியோடு சிவ பூஜைசெய்து சிவத்தியானத்தமர்ந்திருந்தனர். இவ்வாறிருக்கையில் சமீபத் தில் வாசஞ்செய்துகொண்டிருந்து அவ்வசுரமந்திரிகளாற்பிடிக்கப்பட்ட பிரா மணர் அவந்தியை யடைந்து அங்குள்ள வேதியருடன் முறையிட, அவந்திப் பிராமணர் நாங்கள் சத்துருவையுயிக்கும் வன்மையும் ஆயுதமுமடையவில்லை உங்களைப் போலவே சாமானிய சரீரமுடையவர்கள். எங்களைச் சிவபெருமா னே ரகஷிக்கவேண்டும். பிறரொருவன் ரகஷிப்பவனில்லை எனத் தைரியத்து டன் பரார்த்திபலிங்கார்ச்சனை செய்துகொண்டு, இரோக பூரக கும்பங்களா லும் பிரணயாமாதிகளாலுந் தியானித்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்களும் அப்படியே செய்யுங்கள் எனச் சொல்ல, யாவரும் அவ்வாறே சிவலிங்கார்ச் சனை செய்துகொண்டிருந்தனர்.

அப்பொழுது அசுரர்கள் கால்வருடன் தூஷணன் அவர்களிடம் வந்து கண்டு, இவர்களைப் பிடியுங்கள் அடியுங்கள் கட்டுங்கள் எனப் பலவா றுகூற, அவர்கள் தியான சமாதியிலிருந்தலின் கேளாது தங்கள் தொழிலி லிருந்தார்கள். அச்சமயத்தில் சிவலிங்கார்ச்சனை செய்யப் பார்த்திவ மெடு த்தவிடம் பெருங்குளமாயிருக்க, அதினின்று உக்கிரஸ்வரூபமான மகாகாளே சுவரர்தோன்றி அந்தணருக்குவந்தஅவஸ்தையைக்கண்டு ஹுங்காரஞ்செய்து

அசுரர் சாம்பராயினர். ஓடிப்போனவ ரொழிய மற்றையோர் மாண்டனர். சூரியோதயத்தால் இருளொழிந்தாற்போல,சிவதரிசனத்தால் தியோர் யாவ ரும் ஒழிந்தனர். தேவதுந்துபிகள்முழங்கின. புஷ்பமாரிவருஷித்தது. சிவ பெருமான் பிராமணர்களே! நீங்கள்யாதுக்கும் அஞ்சவேண்டாம். தவத்தை க் கைவிடாதீர்கள். உங்கட்கு வேண்டியவற்றைக்கேளுங்கள் என, வேதியர் அடியேங்கட்கு முக்தியருளி, லோக ரக்ஷணார்த்தமாக இங்கெழுந்தருளி யிருக்கவேண்டும் என வேண்ட, சிவபெருமான் பக்தப்பிரியர்களாகக் குளத்தி லேயே, பிரசன்னமூர்த்தமாக எழுந்தருளியிருந்து பிராமணர்கட்கு முக்தி யளித்தனர். அக்குளம் நாற்புறமும் ஒவ்வொரு குரோச அகலமுடையது. இப்பெருமான் மஹாகாளேசவரனெனப் பிரகித்தனர். இவரைத் தரிசித்தால் ஸ்வப்பனத்திலுந் துக்கமடையாது. இஷ்டசித்திகள் கைகூடும். ருஷிகளே! இம்மகாகாளேசவரஜோதிர்லிங்க மகத்துவஞ் சொன்னேன்; இனி ஓங்கா ரேசுவர ஜோதிர்லிங்க மகத்துவஞ் சொல்லுகிறேன்.

ஒரு சமயத்தில் நாரதமுனிவர் சகலலோகங்களிலுஞ் சஞ்சரித் துக்கொண்டு கோகர்ணகேஷத்திர மடைந்து சிவதரிசனஞ் செய்துகொண்டு, விந்தகிரியை யடைந்து விந்த மன்னனால் மரியாதை பூர்வமாகப் பூஜிக்கப்ப ட்டு வீற்றிருக்கையில், விந்தன் நான் எல்லாவற்றையும் மடைந்திருக்கிறேன்; ஒன்றிலுங் குறையில்லை எனக்கூற, முனிவனுஞ் செய்யும் காரியர் கேட்டு, உஸ் என பெருமூச்சுவிட்டு, விந்தன் ஸ்வாமீ! தேவரீர் பெருமூச்சு விட் டது யாதுகாரணம்? என் பூஜையில் யாது குறைவு? என, நாரதர் உன்னிட த்தில் யாவு மமைந்திருப்பினும், மேருமலை உன்னைக் காட்டிலும் பெரிதா யும், தேவர்களுக்கு மிகுக்கத்தக்கதாயு மிருக்கிறது எனக் கூறி யுபதேசியாகச் சென்றனர். அதனால் விந்த மன்னன் நான் பிழைத்தி ருத்தலிற் பயன் யாது? சிவாராதனை செய்து மேருவைச் செயிக்கிறேனென் று நிச்சயித்துக்கொண்டு, ஓங்கார ரூபமான யந்திரமொன்றியற்றிப் பார்த் திபலிங்க பூஜை ஆரம்பத்தையிலும் இடையிடாதும் இடம் பெயராதும் செய்ய, யோகிகட்கும் புலப்படாத சிவபெருமான் திவ்ய மங்களாகாரமாகப் பிரசன்னராகி, உன் விருப்பம் யாது? எனை, விந்தராஜன் தேவரீருக்கு என் விஷயத்தில் தயையிருந்தால் எல்லோரிலும் உயர்வாக வளரச்சக்தியளிக்க வேண்டும்.எனக் கேட்க, சிவபெருமான் பிறருக்குத் துன்பமுண்டாகத்தக்க வரத்தைக் கொடுக்கக்கூடாதாயினும் இவன் செய்த அருந்தவத்திற்காக, விரும்பிய வரத்தைக்கொடுக்கவேண்டியதாயிற்றெனினி, அவ்வாறே விரு த்தியடைக; ஆயினும் நீ * இருமாப்புற்றால் அப்பேருருவம் எமதடியர் களால் சிறிதாக அடங்குக வென்று வரங்கொடுத்தனர். அப்பொழுது

* பின்னொரு காலத்தில் விந்தமலை பேருருவெடுத்துச் சூரிய சந்திரர்களைச் செல்லவொட்டாது தடுப்ப, தேவர்கள் முனிவர்கள் முதலானோர் உலகம் வருந்துவது கண்டு, அகஸ்தியமுனிவர்பால் முறையிட்டு, அவரால் அதன் இறுமாப்பை யடக்கின ரென்பது இச்சரித்திரத்தொடர்ச்சி.

தேவர்கள் ருஷிகள் யாவரும் அங்கே வந்து, ஸ்வாமீ! தேவரீர் அவனுக்
வரங்கொடுத்த பிரஸ்தாபமூர்த்தமாக இங்கெழுந்தருளியிருக்கவேண்டும் எ
அவ்வாறே அங்கமர்ந்தருளினர். ஓங்கார யந்திரத்தில் சுயம்புலிங்கமூர்த்த
ஒன்றும், அவன் பூஜித்த பார்த்திபமூர்த்தம் ஒன்றும் விளங்கும். அவ
நிற்கு ஓங்காரேசுவரம் அமரேசுவரம் எனப் பெயர் வழங்கும். அம்மூர்த்த
க்களைத் தேவர் முதலானோர் பூஜித்துப் பலவரங்களைடைந்தனராதலின், அ
வோங்காரேசுவரரைப் பூஜிப்பவர் மாதுருகர்ப்பத்தை யடையார். மே
மீஷ்ட மெல்லாவற்றையும் அடைவர். இது ஓங்காரேசுவர ஜோதிர்லிங்
மகாத்மியம்; இனி கேதாரேசுவர ஜோதிலிங்கப் பிரபாவத்தைச் சொல்
கிறேனென்று ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

மகாகாள ஓங்கார லிங்கங்களின் மகிமை யுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தேழாவது

கேதாரேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

மகருஷிகளே! பிரமதேவருக்கு ஒரு புதல்வராகிய ஸ்வாயம்புமனு
வின் புத்திரன் பிரியவிரதன். அவனுக்கு எழுவர் புதல்வர்கள். அப்பிரியவி
தன் தான் ஜீவர்தனயிருக்கையிலேயே தன் புத்திரர்கட்குப் பாகித்துக்கொ
டுக்கவேண்டுமென்று கருதி ரதாரூடனாய் மேருமலையை ஏழுமுறை பிரதக்
ஷணஞ்செய்து ஏழுதீவுகளாகப் பிரித்தான். அத்தீவுகளைப்போலவே ஏழு சமு
த்திரங்களாயின. தன் புதல்வர் ஏழுவர்க்கும் ஒவ்வொருதீவைப் பிரித்துக்
கொடுத்துச் சிறிதுகாலத்தில் உயர்பதவியையடைந்தான். அவன் புதல்வர்
களில் மூத்தவனான ஆக்நீத்ரனுக்கு ஜம்புத்தீவைக் கொடுக்க, அவன் அரசு
செய்துகொண்டிருந்தான். அவனுக்குப்பின் அவன் புதல்வன் நாபி என்பவ
னும் தந்தையைப்போலவே அரசுசெய்துவந்தான். நாபி என்பவனுக்கு
ருஷபன் முதலாக ஒன்பது புதல்வர்கள். ருஷபனுக்கு பரதன் முதல் நூறு
புத்திரர்கள். அவர்களில் பரதனே அரசனானன். ருஷபன் முதலிய ஒன்பது
பேர்களும் மகாஞானிகளாயிருந்து ஜகமகாராஜனுக்கு ஞானோபதேசஞ்
செய்து என்பத்தொரு புதல்வரைப் பெற்றனர். அவர்கள் க்ஷத்திரியதர்ம
த்தை நடத்தி முக்திப்பிரியர்களாயிருந்தனர். அப்பொழுது ருஷபன் ஒன்
பது கண்டமாயிருந்த தன் இராச்சியத்தை ஒன்பது ஒன்பது கண்டங்களா
க்கி அவர்கள் யாவர்க்கும் கொடுத்தனன். அவை முழுவதற்கும் பரதனே
யே அரசனாக நிருமித்தான். நாமிருப்பது பரதகண்டமே. இது மற்றக்கண்
டங்களெல்லாவற்றிலுஞ் சிறந்தது. இவ்வெல்லாக்கண்டங்களிலும் விஷ்ணு
மூர்த்தி பல அவதாரங்கள்செய்து லோகரக்ஷணஞ்செய்துவருவார். பரத
கண்டத்திலே *பதரிகாச்ரமத்தில் நாராயண ரூபமாகத் தோன்றியிருக்

* பதரி - இலந்தைமரம்.

கையில், அவ்விருவரும் பார்த்திவலிங்கபூஜை செய்து வர அவர்கள் பக்தி
க்கு மெச்சி ஒருசமையத்தில் சிவபெருமான் அவர்கட்குப் பிரசன்னராய்,
நீங்கள் என் விஷயத்தில் கன்றுப்பூஜித்தீர்கள். எல்லாஸம்பத்துமுடைய
உங்கட்கு யாது வேண்டும்? வேண்டுதல் என, நாராயணர் தேவரீருக்கு
எங்கள் விஷயத்தில் தயையிருப்பின், யாவரும் தேவரீரைப் பூஜித்துக்கடை
த்தேறும்படி இவ்விடத்தில் இப்படியே எழுந்தருளியிருக்கவேண்டுமெனப்
பிரார்த்திக்க, இமவத்பர்வதசாயலில் பனியால் மூடப்பட்டிருக்கும் அவ்விடத்
தில் கேதாரீசுவரனென்னும் திருநாமத்துடன் எழுந்தருளியிருந்தனர். அவ்
விடத்தில் தேவர்கள் ருஷிகள் முதலியவர்களே பூஜிக்க முடியும். பிறர்பூஜிக்
கவும் சேவிக்கவும் முடியாது. இப்பதரிகாச்ரமத்தில் இருப்பவர்கள் கேதா
ரீசுவரரைப் பூஜித்துக் கிருதார்த்தராயினர்கள். அவ்லிங்கத்தைப் பக்தி
யோடு பூஜித்தால் சகலதுக்கமுமகலும். அந்தகேதத்திரத்தில் ஒருசங்கண
ரூபம் இருக்கின்றது. அதனைக் கையிற் பூட்டினவனும் அதைத் தரிசித்தவ
னும் எல்லாப் பாபங்களையும் போக்கடிப்பான். பதரிவனமடைந்து சிவ
தரிசனஞ் செய்பவன் முக்தனுவான். கேதாரகேதத்திரத்தில் நாராயணனை
சேவித்தால் இஷ்டகாமியங்கள் கைகூடும். முனிவர்களே! கேதாரேசு
வர ஜோதிர்லிங்கமகாத்மியத்தைச்சொன்னேன்; இனிப் பீமசங்கர மகிமையைச்
சொல்லுகிறேன் அன்போடு கேளுங்கள் எனச் சொல்லத்தொடங்கினர்.

கேதாரீசுவர மகிமை யுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தெட்டாவது

பீமசங்கர மகிமையுரைத்த அத்தியாயம்.

வ்யாஸர் சொல்லுகிறார்:—காமரூபதேசத்தில் உலகத்திலுள்ளவர்
களை ரக்ஷிக்கவேண்டி லக்ஷ ஸத்குணங்களையுமுடைய சிவபெருமானது வரு
கையைக் கூறுகின்றேன். பூர்வத்தில் உலகத்தையெல்லாம் அழிக்கத்தக்க
மகா பல பராக்ரமசாலியான பீமன் என்னும் அசுரனொருவனிருந்தான்.
அவன் கும்பகர்ணனுக்கும் கற்கடி யென்பவளுக்கும் பிறந்து எல்லோர்க்கும்
துக்கஞ்செய்துகொண்டு, கும்பகர்ணனை இராமர் வதைத்தபின்பு அக்கற்
கடியை யழைத்துக்கொண்டு சையகிரியையடைந்து வசித்து, தாயாகிய கற்
கடியைப்பார்த்து அம்மா! என் தந்தையெங்கே? நீ ஒன்றியாயிருக்கக் கா
ரணமென்ன? என வினவ, கற்கடி மகனே! இராவணனுடைய தம்பியாகிய
கும்பகர்ணனென்னும் உன் தந்தையை, அயோத்தி மன்னனாகிய இராமன்
போரிற்கொன்றனன். உன் தந்தை முன்னொருகாலத்தில் கன் தமையனுடன்
இக்கர்மபூமிதேசத்திற்கு வந்து என்னைக் கலந்தானேயன்றி நான் இலங்கை
யைக் கண்டதுங் கிடையாது. என் தந்தை கற்கடன். என் தாய் புஷ்கஸி.
என் முதற்புருஷன் விராதன். அவ்விராதன் இராமனால் இறந்தபிறகு தாய்

தந்தையிடத்திலே யிருக்கையில், அவர்கள் சுதீக்ஷணை எனும் ஒரு ருஷியைத் தின்னச் செல்ல, மகா புண்ணியரான அவ்விருஷி அவ் விருவரையும் பஸ்மஞ்செய்ய, நான் ஒன்றியாகவே யிருக்கையில், உன் தந்தை என்னைக்கூடி இங்கேயே விடுத்துச்சென்றனன்; அதனால் நீ பிறந்தாய். உன்னைப் பார்த்துக்கொண்டு காலங்கழித்துவருகிறேன் என்றாள்.

தாய்வார்த்தையைக் கேட்ட பீமன், என் தந்தையையும் பிராதனையும் இராக்ஷதன் கொன்றான். என் பாட்டனையும் பாட்டியையும் ருஷி பஸ்மஞ் செய்தான். எனக்குப் பெருத்த கஷ்டமாயிற்று. நான் *குப்பகர்ணனுக்கு மகனென்பது உண்மையாயிருந்தால் இராக்ஷதனைக் கண்டுபிடித்துக் கொல்லாமல்விடேன் என்றுகூறி, பிரமதேவனைநோக்கிக் கைகளைத்தூக்கிக்கொண்டு ஒரு காலில் நின்று சூரியனைப்பார்த்து மனதில் தியானஞ்செய்து ஆயிரவருஷம் அருந்தவஞ்செய்ய, அவன் சிரசிலிருந்து பயங்கரமான தேஜஸ்ஸு கிளம்பி உலகங்களைத் தகிக்க, அதனைச் சகியாத தேவர்கள் பிரமதேவனையடைந்து சரணம்புக்கு, கடவுளே! இராட்சதனுடைய தவத்தேஜஸ்ஸு உலகத்தைத் துன்புறுத்துகின்றது. அவன் எதைக்குறித்துத் தவஞ்செய்கின்றானென்று அதனைக் கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்யாவிடின் நாங்கள் யாவரும் இறப்போம் என, பிரமதேவர் அவ்விடமெவர்சொல்லுக்கினங்கி, துராத்மனை அப்பீமனிடம் அன்னவாகனமிவர்ந்து பிரசன்னராகி, உனது தவத்திற்கு மகிழ்ந்தேன்; வேண்டியதுயாது? என, பீமராட்சஸன் ஸ்வாமீ! எனக்கு அபரிமிதமான பலத்தைக் கொடுக்கவேண்டும் என்று சாஷ்டாங்கமாகப் பணிய, பிரமதேவர் அவ்வரத்தை யதுக்ரஹித்து அந்தர்த்தானமாயினர். இராட்சஸனாகிய பீமனும் தாயைப் பணிந்து, அம்மா! என் புஜபலத்தைப்பார். தேவர்கள் யாவரையும் நாசஞ்செய்கிறேன் என்று காமரூபி தேசத்தையடைந்து அங்குள்ள பிரியதர்மன் என்னும் அரசனைப் பிடித்து வீழ்த்திவிட்டு அவன் வீட்டிலிருந்த யானை-சேனை-சத்திரம்-சாமரம் முதலிய தனங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அவ்விராச்சியத்தைச் சுவாதினப்படுத்திக்கொண்டனன். அவ்வரசன் சிறைச்சாலையிலிருந்துகொண்டே பரமரகசியமாகப் பார்த்திவபூஜை செய்துகொண்டும், கங்காதேவியையும் பலவாறு மானஸீகமாகத் தியானித்துக்கொண்டுமிருந்து, அப்படியே அவன் மனம் லயமாய்விட்டது. அப்பூஜையெல்லாம் சிவபெருமானுக்குப்பிரியமாயின. பஞ்சாக்ஷரமந்திரத்தைப் பிரணவத்தோடுச்சரித்துக்கொண்டிருந்தான். அவ்வரசனுடைய தட்சிணை யென்னும் மணியும் பார்த்திவபூஜைசெய்து சிவத்தியானத்திலேயே மனம் வைத்திருந்தாள்.

இவர்களிருவரும் இவ்வாறிருக்க, பீமன் சகலலோகங்களையும் ஜயித்து, புண்ணியகருமங்களையெல்லாம் அழித்து, தேவர் முதலிவர் முதலானவரைத் துன்புறுத்தி மகசக்ராதிபதியாயிருக்க, யாவரும் மகாகோசநதி தீரத்தில் சிவபூஜைபுஞ் சிவத்தியானமுஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் பூஜைக்குக் களித்த சிவபெருமான் பிரத்தியக்ஷமாய், உங்களுக்கு என்ன

வரம் வேண்டும்? எனக் கேட்க, ஸ்வாமீ! தேவரீருக்குத் தெரியாததொன்றில்லையாயினும் எங்கள் கஷ்டத்தைச் சொல்லுகிறோம். பீமனென்னும் பயங்கரமான ராக்ஷஸன் எங்களைக் கஷ்டப்படுத்துவதால் அவனைக் கொன்று எங்களைக் காக்கவேண்டும் எனக் கூற, சாம்பவமூர்த்தி நல்ல அரசனை மகாபக்தன்; அவன் சிறையிலிருக்கலாமா? அப்படியே பீமனைச் சங்காரிக்கிறேன் என, தேவர்முதலானோர்பணிந்து தமதிடஞ்சென்றனர். அந்தச் சமயத்தில் பிரியதர்மன் பூர்த்திவலிங்கபூஜை செய்துவருவதையறிந்த சிலராக்ஷஸர் பீமனையடைந்து, சிறையிலிருக்கும் அரசன் உன் விஷயத்தில் ஏதோ அபிசாரஞ் செய்வதாகத் தெரிகிறது; செய்யவேண்டியதை விரைவிற் செய்க என, பீமன் வெகுண்டு அவனைக் கொல்லவேண்டுமென்று உடைவாளோடு அரசனிடம்வந்து, யாதுசெய்கிறாய்? உண்மைசொல்லாவிடின் உன்னைக் கொல்வேன்என, அரசன் சத்தியவானுதலின் வருவதுவரட்டுமென்றுகருதி, நான் சிவபூஜைசெய்கிறேன்; பரமதயாளுவான பரமேசுவரன் இதிலிருக்கிறான்; பக்ததயாளுவாயினும் இக்கஷ்டத்திலிருக்கும் நான் அவனைச் சேவிக்க முடியுமா? எனக்கூறி, நமது சக்திக்கேற்பப் பூஜிக்கும்பலனைக்கொடுப்பான் எனத் தன்னிற்றானே நினைந்து, கடவுளே! நான் உன் அடியன். உன்விருப்பின்படி செய் என்று விண்ணப்பித்து, ராக்ஷஸனே! நான் சிவபெருமானைப் பணிந்துகொண்டிருக்கிறேன்; உனக்கு எது விருப்பமோ அதைச் செய் என, பீமன் நான் சங்காரனையறியேன். என் மூதாதையாகிய இராவணேஸ்வரன் அவனைக் கயிலாயத்தோடு தூக்கிவிட்டான். அவன் என்ன பென்ன செய்யமாட்டுவான்? அவனைத்துதிந்தா என்னைச்செயிக்கப்போகிறாய்? நன்றாயிருக்கது. இவ்விலிங்கத்தைத் தூரத்தே யெறிந்துவிடு; அப்படிச்செய்யாவிட்டால்உன் பராக்கிரமத்தைப்பார் என, அரசன் நான் சிவபூஜையை விட்டுவிட்டாலுந் தயாமூர்த்தியான சிவபெருமான் உன்னை விடமாட்டார் என, பீமன் நகைத்துச் சிவபெருமானைத் தூஷித்துப்பேசி, நானே உனக்குத் தெய்வம்என, அரசன்-நீயே இவ்வாறு சொல்கிறாய்; நான் அவ்வாறு சொல்லமாட்டேன். நீ பலவான்; செய்வதைச்செய் என, பீமன்-உன் கடவுள் இருந்தால் தன் பலத்தைக் காட்டட்டும் எனக் கூறி, தன் கைக்கத்தியை அவ்வரசன்மீது செலுத்துவதன்முன், அப்பார்த்திவலிங்கத்தினின்று சிவபெருமான் தோன்றி, நான் பீமேசுவரன். இவ்வரசனைக் காக்கவே இங்கு வந்தேன். உத்தமர்களைக் காப்பதே என் விரதமாதலின் இவனைக் காக்கிறேன். என் வலிமையைப் பார் என்று பிரகாசத்தை வீசித்து அஸ்திரத் தொடுத்து அப்பீமன் எடுத்த உடைவாளை நூறு துண்டாக்கினர். பீமன் மீண்டுந் திரிசூலத்தைச் செலுத்த அதையும் நூறுதுண்டஞ்செய்தனர். சத்தியைச் செலுத்த அதுவு மழிந்தது. அஸ்திரத்தை விடுப்ப அதுவும் பொடிபட்டது. பிரமதகணங்கட்கும் ராக்ஷஸர்கட்கும் பெரும்போர் நிகழ்ந்தது. அது கண்டோரஞ்சத்தக்கது. சொல்ல முடியாதது. உலகமுழுவதும் அதனல்நடுங்கின. சமுத்திரங்கள் கொந்தளித்தன. மலைகள் குலுங்கின. நிரகங்கள் நக்ஷத்திரங்கள் உதிர்ந்

தன. தேவர்கள் துக்கித்தார்கள். அச்சமையத்தில் நாரதமுநிவர்வந்து சிவ பெருமானைப் பணிந்து ஸ்வாமீ! கோபந்தணியவேண்டும். புல்லின்பேரிற் கோடரியைச் செலுத்துவதா? இவனுக்காக இவ்வளவு போர் யாதுக்கு? விரைவில் இவனை அசுரச்சேனையுடன் அழிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெருமான் ஹுங்காரஞ்செய்ய, அதுவே அஸ்திரமாய் மேனியும் அவன் சேனைகளாகிய அசுரர்களையுஞ் சருகிற்பட்ட தீப்போலப் பஸ்மமாகச்செ அவர்களது உருவமுந் தெரியவொட்டா தொழித்தது. அப்பொழு பெருமானது கோபாக்கினி தணியாது அருகிருந்த வனங்களை கொளுத்த வதுகண்டு தேவர்கள்யாவருங் கூட்டமாகப் பலவாறு பிரார்த்திக்க, சிவபெருமான் சாந்தமூர்த்தியாய், அவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி உலகங்கட்குச் சுகஞ்செய்துகொண்டு பீமசங்கர நாமமுற்று அங்கு எழுந்தருளியிருக்கின்றனர் என்று ஸூதமுநிவர் கூறினர்.

பீமசங்கர மகிமை யுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தொன்பதாவது
காசியின் மகிமை யுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் ரூமிசாரணியவாசிகளை நோக்கி முநிவர்களே! நான் இனி எல்லாப் பாபங்களையும் ஒழிக்கத்தக்க விச்சுவேசுவரலிங்க மகாத்மியத்தைச் சொல்லுகிறேன். பக்திபூர்வமாகக் கேளுங்கள். கண்ணுக்குப் புலப்படுகிற (திருச்ய) பிரபஞ்சமானது உண்டாவதன் முன்னதே அழிக்கத்தக்க மாகிய காசி கேஷத்திரமுள்ளது. அந்தக் காசியினபிரபாவத்தைக் காசிகண்ட முதலியவற்றிற் கூறப்பட்டிருப்பினுஞ் சுருக்கி இப்பொழுதுசொல்லுகிறேன். நிர்க்குணமும் சத்யஜ்ஞான ரூபமும் அழிவில்லாமையும் சிதானந்த ஸ்வரூபமும் நிர்விகாரமுமாக விளங்குகிற தேஜஸிலிருந்து பிரகிருதியும் புருஷனும் உண்டாகி, நம்மைப்படைத்தவன் யார்? நாம் செய்யவேண்டியது யாது என்கிறசந்தேகத்துடன் யோசித்துக்கொண்டிருக்கையில், நிர்க்குண ஸ்வரூபியான பரமாத்மாவினிடத்திலிருந்து ஓர் அசரீரிவாக்கு "தபஞ்செய்து பிறகு சிருஷ்டிகாரியஞ் செய்யவேண்டும்"என உண்டாக, அதைக்கேட்ட பிரகிருதி புருஷர்கள் நாங்கள் எவ்விடத்திலிருந்து தவஞ்செய்யவேண்டுவது? என வினவ, பரமாத்மாவால் தேஜோமயமானதும், பஞ்சக்குரோச விஸ்தீரணமுடையதும், மாடமாளிகைகளோடு கூடியதுமான சுந்தரம்பொருந்திய ஒரு நகரமானது நிருமிக்கப்பட்டு ஆகாயத்தில் விளங்குகின்றது. அந்தப்பட்டணத்தை யடைந்து தவஞ்செய்யுங்கள் என்று வாணிகூற, பிரகிருதிபுருஷர் இருவரும் அவ்வாகாய நகரத்தை யடைந்தனர். புருஷனுகிய விஷ்ணு சிருஷ்டியை விரும்பிப் பலவித தவத்தைச் செய்துவந்தார். அநேககாலந் தவஞ்செய்ததனால் மகாத்மாவான விஷ்ணுவுக்குத் தேக இளைப்பால் உடலில் மிருந்த வியர்வை யுண்டாயிற்று. அவ் வியர்வைநீர் பிரபஞ்ச முழுவதையும்

வியாபரித்தபடியால் பிரபஞ்சமெல்லாங் கண்ணுக்குப் புலப்படாதாயின. இஃதென்ன பெருவியப்பென்று விஷ்ணுவானவர்சிரக்கம்பனஞ்செய்கையில், சிவபெருமானுடைய காதினின்றும் ஒருமணி அவர் எதிரில் விழுந்தது. எந்தலிடத்தில் அம் மணி விழுந்ததோ அந்த விடத்திற்கு மணிகர்ணிகை யெனப் பெயர். [இப்படி விஷ்ணுவின் வியர்வினால் மூடப்பட்டிருந்த அந்த ஆகாய நகரமானது சிவபெருமானது திரிசூலத்தின் ஆதரவால் நிறுத்தப்பட்டிருந்தது] அந்தவிடத்திலேயே விஷ்ணுமூர்த்தி பிரகிருதி ஸஹிதமாகச் சயனித்திருந்தார். இப்படி விஷ்ணுவானவர் யோகநித்திரையிலிருக்கையில் உலகங்கட்குப் பிதாமகனை பிரமதேவர் விஷ்ணுவினுடைய நாபிக்கமலத்திலிருந்து பிறந்தார். அப்படிப் பிறந்த பிரமாவானவர் சிவாக்கினை யடைந்து உலக சிருஷ்டியைச் செய்தார். சராசரரூபமாகச் சிருஷ்டிக்கப்பட்ட அண்ட முழுவதும் சிவபெருமானுடைய சுத்த தேஜஸால் வியாபிக்கப்பட்டது. அது முதல் சிருட்டியானது கிரமமாகநிறைவேறினது. அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்தப் பிரமாண்டத்தின் பரிமாணம் ஐம்பதுகோடி யோசனை விஸ்தீரணமென்று முநிவர்களால் மதிக்கப்பட்டது. ஜலத்திலிருக்கும் இப்பிரமாண்டமானது ஜலத்தின்பேரிற் கப்பல்போலவும், தயிரின்மேல் ஏடுபோலவும், அவ்வடுக்கஜங்களால் தாங்கப்பட்டு நிலைத்துநின்றது. இந்தப் பிரம்மாண்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு நடுவிலுள்ளதை மத்தியலோகமென்றும், மற்ற இரண்டினையும் ஊர்த்துவலோகமென்றும், அதோலோகமென்றும் சொல்லப்பட்டன. மத்தியலோகம் பூலோகமென்றும், அதோலோகத்தை அதலம்-விதலம் - சுதலம் - தராதலம் - ரஸாதலம்-மகாதல-ம்பாதல மென்றும் சொல்லப்படும். பூலோகத்தின் மேலுள்ள ஊர்த்துவலோகம்-புவர்லோகம்-ஸ்வர்லோகம் - மஹர்லோகம் - ஜனலோகம் - தபோலோகம் - சத்யலோகமென்றும் சொல்லப்படும். பாதாளலோகங்கள் ஏழும் ஒன்றன்கிழொன்றும், சுவர்க்கலோகங்கள் ஒன்றன்மே லொன்றுமாக முறையே விளங்கும்.

ருஷி சிரேஷ்டர்களே! அப்படிப் பிரிக்கப்பட்ட அந்த லோகங்களின் விஸ்தீர்ணத்தைக் கூர்ந்தம்பெருகிவிடுமென்று சொல்லவில்லை. புராணங்களிலுஞ் சொல்லப்பட்டுள்ளன. புண்ணியஞ் செய்தவர்கள் தங்கள் புண்ணியங்கட்கேற்றபடி ஸ்வர்க்கலோகங்களிலும் பாவஞ் செய்தவர்கள் தங்கள் பாபத்திற்கேற்றபடி அதோலோகங்களிலும் வசிப்பார்கள். இந்தப் பூலோகத்தில் சுத்த சமுத்திரங்களும், சுதந்தீவுகளும், மேருமுதலிய குலபர்வதங்களும், கங்காதி புண்ணிய நதிகளும், விசித்திரமான பல புண்ணியவனங்களும் விளங்குகின்றன. இப்படிச் சிருஷ்டிக் கிரமத்தைச் சொல்லி யினிப் பரப்பிரமஸ்வரூபத்தைச் சொல்லுகிறேன்.

நிர்க்குணமான பரமாத்மாவுக்கு சூக்ஷம அசூக்ஷம என இருவகை உருவங்களுள். காணக்கூடிய ஸ்தூலப்பிரபஞ்சம் சூக்ஷரூபமெனவும், காணுதற்கரிய சூக்குமப்பிரபஞ்சம் அசூக்ஷமெனவும், அவ்விரண்டும் மணியொளி, பூமணம், கதிர் கதிரோல் விளங்குமென்றும் முநிசிரேஷ்டர் கூறுவார்

கள். நிர்க்குண சகுண லக்ஷணங்களை உண்மையுணர்ந்த தத்வஞானிகளே யுணர்வார்கள். சகுணோபாசனை முன்னே செய்து அதன்பலனிலேயே பின்னர் நிர்க்குணோபாசனை செய்யத்தக்கது. சகுணஞானமாகிய அபரஞானம் உண்டானபிறகு நிர்க்குணஞானமாகிய பரஞானம் தானே வளரும். நிர்க்குணப் பரஞானம் உண்டாகும்வரையில் சகுணோபாசனை செய்தேதீரவேண்டும். சிவஞானமுற்றபொழுதே அகங்காராதிகள் நீங்கும். அவை யகன்ற பொழுதே தேகவாஞ்ஞை யில்லா தொழியும். அஃ தொழியவே எங்குஞ் சிவமாகத்தோன்ற, பாபகிருத்யபரிதமாய் சிவோஹம்பாவனையுண்டாகும். அது கைகூடியவர்களுக்கு விதிவிலக்குகளில்லையாகும்.

சிவபெருமான், கர்மபந்தர்களாகிய ஜீவர்கள் எவ்வாறு கிருதார்த்தர்களாகித் தம்மைத் தரிசித்துய்வார்களென்று கருதினவராய், அந்த ஆகாயகரத்தைச் சூலத்தினின்று விடுத்தார். சபத்தைக் கொடுப்பதும், ஸம்சாரகர்மங்களை நசிக்கச்செய்வதும், அவிமுக்தமான லிங்கத்தையுடையதுமான அத்தப்பட்டணம் மாதேவர்களால் எப்பொழுதும் விடப்படக்கூடாதென்று திருவுள்ளங்கொண்டசிவபெருமானுல் தமது திரிசூலத்தினின்று இந்தமத்தியலோகத்தில் நிறுத்தப்பட்டது. பிரமாவின் ஒருபகல் கழிந்த பிரமகற்பத்தில் உண்டாகும் பிரளயகாலத்தில், சிவபெருமான் தமது திரிசூலத்தின் மேல் வைத்து இந் நகரத்தைக் காத்திருந்து மீண்டும் சிருஷ்டிக்கிரமத்தில் திரிசூலத்தினின்றும் விடுவிக்கிறார். கர்மங்களை நாசஞ் செய்வதால் இதற்குக் காசியென்று பெயர். "கஶிஶப்தோகஷ-ஶ்ரோ-ஹ்ரஸ்வோ கர்மணாம் கர்ஷணக் காசி" அவிமுக்தலிங்கமானது காசிக்ஷேத்திரத்திலிருந்து, மகாபாபிகளுக்கும் நிர்மாணாநந்தத்தை யடையச்செய்கிறது. ருஷிகளே! மற்றப் புண்ணியக்ஷேத்திரங்களிலெல்லாம் சாரூப்பிய முத்தியும், இந்த க்ஷேத்திரத்தில்மட்டும் சாயுச்சியமென்னும் உத்தம முத்தியும் பெறப்படும். பஞ்சக்குரோச பரிமாணமுடையதும், கோடி பிரமஹத்தி முதலியவற்றைப் போக்கடிப்பதுமான இந்தக் காசிக்ஷேத்திரமானது கதியில்லாதவர்கட்கெல்லாங் கதியாயுள்ளது. தேவர்களும் இந்தப்பட்டணத்தில் இறக்க விரும்புவார்கள். பிரமவிஷ்ணுக்கள் இந்தர் வித்தியாதரர் முதலியோர்கள் மானுடர் முதலிய யாவரும் விரும்பிச் சேவிக்கத்தக்கது. காசிமகாத்மியத்தை நாலாயிரவருஷங் கொண்டாலும் என்னால் சொல்லிமுடியாதாயினும் கூடியவளவிற் சொல்லுகிறேன். கைலாசபதியும், இச்சையாற் சகுணரும், சுயமாக நிர்க்குணருமாயுள்ள சாம்பமூர்த்தி ஒருகாலத்தில் இக்காசிக்ஷேத்திரத்தில்வந்து, பாபங்களைப் பரிகரிக்கத்தக்கதன்று ஸ்வரூபமான அவிமுக்த லிங்கத்தை யாவருக்குங் காண்பித்து, அந்த அவிமுக்தமகத்மியத்தைச்சொல்லினர். அதனை விஸ்தாரமாக யான் சொல்ல வல்லவனல்லேன். பிரமதேவனே நூறுகோடிவருஷங்கள் சொல்லினுஞ் சொல்லிமுடிக்கார். அவிமுக்த க்ஷேத்ராதிபதி பார்வதிதேவி சமேதராகவந்த சிவபெருமானைத் தரிசித்து அநேகஸ்தோத்திரங்களுடன் நமஸ்காரஞ் செய்து, சுவாமீ! நான் உன்னடிமை. முன்னிடத்தில் தயைவைக்கவேண்டும்.

உலகத்திற்குச் சகமுண்டாகுங் காரணமாகத் தேவரீர் இங் கெழுந்தருளியிருக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து, கண்களினின்றும் ஆநந்தபாஷ்பந் தெரித்து, சிவபெருமானுடைய திருவடிகளைப் பற்றி, அத் திருவடியை விடுக்கமனமின்றி, இந் நகரத்தைத் தேவரீர் இராஜதானியாக வைத்துக்கொள்ள வேண்டும். யான் இந்தையற்றிருக்கவேண்டுமெனக் கருதியிருந்ததற் கேற்பக் கிடைத்த இக் காசிநகரத்தைத் தேவரீர் வாசஸ்தானமாகக் கொண்டு, எக்காலத்திலும் எக்காரணத்திலும் இந் நகரத்தைவிட்டு நீங்காதிருந்து எங்கட்குத் தரிசனமளித்து எங்களையெல்லாம் இருகாத்த ரக்ஷிக்கவேண்டும். எல்லாப் பிராணிகளையும் முக்தியடையச் செய்யவேண்டும் எனப் பிரார்த்திக்கையில், உலகங்கட்கெல்லாம் பதியான சதாசிவமூர்த்தி தன்து பரிவாரங்களுடன் கூடி, லோகோபகாரார்த்தமாக அங்கே யெழுந்தருளியிருந்தனர். சிவபெருமான் தனது திருக்கரத்திலிருந்த பிரமகபாலத்தை அக்காசியிற் பிரதிட்டைசெய்யவேண்டுமென்று கருதிவந்தவராதலின், அவ்வரசன் வேண்டுகோளுக் கிணங்க, தாம் உத்தேசித்து வந்தபடியே அவ்விடத்தில்வசித்திருக்க உடன்பட்டனர் என ஸூதமுனிவர் சொல்லுகையில், கைபிசாணியவர சிகவ் ஸூதமுனிவரை நோக்கி, ஸ்வாமீ! சிவபெருமானிடத்திற் பிரமகபாலம் எது? அதன் வரலாற்றையுஞ் சொல்லவேண்டும் எனவினவ, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

ஸூதருஷிகளே! நீங்கள் கல்ல விஷயத்தைக் கேட்டீர்கள். என் குருவாகிய வியாஸமுனிவர் கூறியவகையே சொல்லுகிறேன். பூர்வம் ஒருகாலத்திலே சிவபெருமான் உலக க்ஷேமங்களை விசாரிக்கத் திருவுள்ளங்கொண்டு சகல லோகங்களினுஞ் சஞ்சரித்துக்கொண்டு பிரமலோகத்தை யடைய, பிரமதேவர் எதிர்கொண்டு மரியாதை பூர்வகமாய், பெரியோர் தன் வீட்டிற்கு வந்தபடியால் மனமிழ்ந்து அழைத்துக்கொண்டுபோய் அருக்கிய பாத்திய ஆசமனாதிகளாற் பூசித்து, தனது நான்கு திருமுகங்களாலுந் தோத்திரஞ் செய்கையில், ஐந்தாவதாகிய ஒரு முகம் சிவபெருமானைக் குறைகூற, அதனைக் கேட்ட சிவபெருமான், பிரமனுடைய நான்கு முகங்களுந் துதித்தவற்றிற்குச் சந்தோஷித்து, ஐந்தாவது முகமானது செய்த தூஷணத்திற்கு மிகவருந்தி, ஆஹா! இத்தனிட முகத்தை நிவர்த்திக்கவேண்டுமென்றும், பாம்பு கடித்த விஷம் முதலியவற்றை யௌஷதமிவதால் அவ்விஷவேகந் தீர்வதுபோல, முழுவதும் நற்குணமுடைய பிரமதேவனது ஐந்தாம முகமொன்றே நிக்கருமமியற்றலின் அதனை விலக்குவதால் அவன் முழுவதும் நற்குண முடையனென்றுங் கருதி, சிவபெருமான் எல்லோருக்குஞ் சுகத்தை உண்டுசெய்ய வேண்டியவராதலின் இப்பிரமதேவனுஞ் சுகமடையவேண்டுவதே பென்று நீர்மானித்து, தமது திருநெற்றி விழியில் அக்கினிக்வாலையைதான்றப் பிரமனைச்சபிக்க அவனது ஐந்தாவது சிரத்தைத் தமது திருவிரலின் நகத்தாற் கொய்தனர். அத்தப் பிரமசிரமானது சிவபெருமானைப் பின் தொடர்ந்தது. அது இங்ஙனமிருக்கையில் அபரை விடுவிலிருந்து

யது. அக்காரணங்க ளிரண்டினாலும் சிவபெருமான் அங்கே யமர்ந்தனர். எனக்கூறுகையில், சௌனகாதிமுனிவர்கள் ஸூதமுனிவரைநோக்கி,ஸ்வாமீ! தாங்கள் சொல்லிவந்தவிஷயத்தில் எங்களுக்கொரு சந்தேகமுளது. அதனையும் நீக்கியருளவேண்டும். அதாவது சர்வ லோகங்களுக்கும் பிதாமகனான பிரமதேவர் தனக்கும் உலகங்கட்குத் தலைவராகிய சிவபெருமான் தமதிடத்தே வரக்கண்டு மரியாதை பூர்வமாக உபசரித்தபொழுது, தான் மகா சாந்தசீலா யிருந்தும் தனது நான்கு வாயினாலும் அதிகத்து ஒருவாயினால் அவமதித்த காரணமென்ன ? என்பதையாம்: எனக் கூறக்கேட்ட ஸூதமுனிவர், முனிவர்களே ! பிரமதேவர் முன்னொரு காலத்தில் தான் சிருஷ்டிசெய்த சரஸ்வதியை நோக்கி அவளது பேரழகு காரணமாக, நீ என்னை யணையவேண்டும்; நீயே யென் மனைவி; நானே உன் கணவன் எனக் கூறக்கேட்ட வாணி இஃதென்னவிந்தை! நீயேயென்னைப்படைத்து மீண்டும் என்னை மணப்பதாகக் கூறுவது தருமமா ? என்று திரஸ்கரித்து மனந்தளராது, மகனென்று பாராது தகாதவார்த்தைகூறிய உனது ஒருவாயானது இப்படியே துர்ப்பாஷைகளை வசனித்துக்கொண்டிருந்து பின்னொருகாலத்தில் சிவபெருமானால் தண்டனை யடையக்கடவது எனச் சாபமிட்டனள். அத்தச் சாபத்தின் மகிமையாலேயே, சிவபெருமானை மற்ற முகங்கள் துதிக்கையில் அந்தச் சிரம் நிந்தித்து, அவரால் அறுத்தெறியப்பட்டது என்று கூறினர்.

ஸ்ரீ॥ ஸ்ரீவொவிஷ்ணவேஸ்ரீவெவ ஜகந்நமஸ்காரவுய ।
வாவைஷ்ணவீகமொதீஹ வ்ருயம்ஷ்ணவீக்ருதம்நஹி । (அச)
கிதூர்ணம்வுஸ்ருஷ்டியகா ஸ்ருஷ்டியக்கேயாஸ்ருஷ்டி ।
ஸ்ருஷ்டிஸ்ருஷ்டிகம்யவு கஷெவவநமஸ்வைஷ்ணவீ॥ (அஉ)
கமொதிவாகியவுவ்ருஷ்ணாரகஷணாயவெவ ।
ரஸ்ருஷ்டிவ்ருதஷ்டிஹம்வாகிகம்கிம்நரொணஹி । (அஊ)
ஸ்ரீவவ்ருதியஷ்வம்யொமாஹீஸ்ருஷ்டிஸ்ருஷ்டிகஸ்ரீஷ்டிகழே ।
கஷ்வாதியஷ்வாரஷ்வொதஹமாவாதிகஸ்நாஸ்ரஷ்டி ॥ (அசு)
ஜகதுவம் ஜாவிகம்வொகெஸ்ரோஷ்ட்ருஷ்டியஷ்வம்ஹவஷ்டி ॥
ஸ்ரவா ரஸ்ஸ்ரஸ்ருஷ்டிஹ்ருஷ்டிகஸ்ரஜாநாதிவெஷ்டிதழே । (அடு)
ஜாகம்மஷ்டிஹம்மெவஷ்டாவிமயவதியாரணழே ।
கஷ்ணவிஷ்டயஜ்ஞயெநமஜ்ருஷ்டஜ்ஞய உஷாஸ்ரைஷ்டிகம் । (அசு)
நிமம்வாஸ்ருயம்மெவஸ்தெஹ்ருஹ்ருஸ்ரஸ்ரஸ்ரீயழே ।
ஷ்ருவெஷ்டிஹ்ருஸ்ரவிஸ்ரஸ்ரஷ்டிகாரஸ்ரஸ்தவிஷ்டியழே ॥ (அஎ)
ஷ்ரஸ்மெஸ்ரஷ்ணோஷ்ரஸ்ரவெஹஷ்டிகாரளேஷ்டிகாநிஸ்ர ।
விகாஹஷ்டிஜவெஸ்ருவஹஸ்ரஷ்டிஷ்ருஷ்டிஸ்ரஷ்டிஸ்ரெஸ்ர॥ (அஅ)

ஷ்ருவாஹஸ்ரஸ்ருஷ்டிஸ்ரெஸ்ருவஹஷ்டிகாரஸ்ரஷ்டிகாநிஸ்ர ।
ஷ்ருவாடிஷ்ரவிஸ்ரவிஸ்ரஸ்ரஷ்டிகாரஸ்ரவாகிகாநிஸ்ர । (அசு)
ஷ்ருஸிரவிஜடாதிவ்ருஸ்ரஷ்டிகாரஸ்ரஷ்டிஷ்ருஷ்டிகழே ।
ஷ்ருஸ்ருஷ்டிணம்ருஸ்ரவடாதிஸ்ரஷ்டிகாரஸ்ரஷ்ணாதிகழே ॥ (கம)
ஷ்ருஸ்ருவஷ்ரு ஸ்ருஸ்ரஷ்டாதிஸ்ரஷ்டிஷ்ருஷ்ணாஸ்ரஸ்ரவாஸ்ரழே ।
ஷ்ருயம்ருஸ்ரவிவாதிவாதிவ்ருஸ்ரஷ்டிகாரஸ்ரவாதிஸ்ரெவஸ்ர ॥ (கக)
யஸ்ரவிவாஸ்ரம்ஸ்ரஷ்டிஷ்ருஸ்ரஷ்ணாரஷ்ணஸ்ரவ்ருயஸ்ரஷ்டிவீ ।
கிஸ்ரவாதிஸ்ரிவ்ருஷ்டிதம்ஸ்ரெவ ஜாதஸ்ரஸ்ரகஸ்ரஸ்ரஸ்ர

காத்துச் சங்காரிக்குஞ் சிவபெருமானுடைய சங்கற்பமுமாடகையும் யாவ னறியவல்லவன். அவர் செய்த காரியங்கள் அநேகம். மன்மதனைத் தகனஞ் செய்திருந்தும் தனதுடலிலேயே வாமபாகத்திற் பார்வதிதேவியை யமர்த்தி யிருப்ப தெங்கே? கண்டத்திலே விஷத்தைத் தரித்திருந்தும் மிருத்யுஞ் சயராயிருப்பதெங்கே? தான் திகம்பர ராயினுந் தன்னையடைந்தோருக்குச் சகல ஐசுவரியங்களையும் அநுக்கிரகிப்பதெங்கே? தான் பசாசங்களைச் சைனி யமாக வைத்துக்கொண் டிருந்தும் தன்னை யாச்சிரயித்தவர்கட்கு யானை - குதிரை-தேர்-காலாள்முதலிய சதுரங்கசேனையைக் கொடுப்பதெங்கே? தன துடலிற் கபாலமாலிகை யணிந்திருந்தும் தனது பக்தர்கட்கு முத்துப் பவ ளமுதலிய மாலைகளைக் கொடுக்கின்றார். தான் மயானச்சாம்பலை யணிந்திருந் தும் தன் பக்தர்கட்குச் சந்தனமுதலிய பரிமளகந்தத்தைக் கொடுக்கின்றார். தான் எருதை வாகனமாகக்கொண்டும் தன்னைச் சேவிப்பவர்கட்கு யானை குதிரை முதலிய வாகனங்களைக் கொடுக்கிறார். தான் கல்லவாத்திபம் வைத் துக்கொண்டிருந்தும் (டங்கா-நகாரமுதலிய) வாத்தியங்களையும் கொடுக்கின் றார். தான் ஜடாதாரராகியும் அன்பர்கட்குக் கிரீடமுதலிய சகலாபரணங்களை யும் கொடுக்கிறார். தான் சர்ப்பாபரண மணிந்திருந்தும் பக்தர்கட்கு மகர குண்டலாதி ஆபரணங்களைக் கொடுக்கிறார். தான் யானைத்தோலை யணிந்தி ருந்தும் அடியவர்கட்குச் சீனி சினும்பரங்களை யுதவுகிறார். இவையெயன் றித் தன்னை யாச்சிரயித்தவர்களிடமு அவரவர்களுக்குப்பிரி கேற்றபடி. இவ்வா போகங்களைக் கொடுக்கிறாதலின், அவர் மகிமையைத் தெரிந்துகொள்ள ஒருவருக்குஞ் சக்திகிடையாது. இப்படிப்பட்ட ருத்ரசோசனிஸ்திரனமுடைய காசி கேஷத்திரத்தைக்காட்டினுந் திரிலோகங்களினுஞ் சிறந்த கேஷத்திரம் ஒன் றுமில்லை. அப்படிப்பட்ட கேஷத்திரமே யில்லாவிட்டால் சிவபெருமானே அங்கு ஈக்காலமும் எழுந்தருளியிருந்து அங்கே இறப்பவர்கள் செவியில் தாரகமந்திரோபதேசஞ்செய்து அவர்கட்கு முக்திகொடுக்கமுடியுமா? விசு வேசுவரலிங்கமூர்த்தமாகச் சிவபெருமான் எப்பொழுது முதற் காசிகேஷ த்திரத்தில் எழுந்தருளியிருக்கின்றனரோ அதுமுதல் காசிகேஷத்திரம் சிற ந்ததாயிற்று. நீங்கள் கேட்டபடியே காசி மகாத்மியத்தைச் சொன்னேன். இக் காசிமகாத்மியத்தைக் கேட்டவர்கள் சகலவித சாம்பிராச்சியங்களையும் அடைவார்கள் என்று ஸூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளை நோக்கிக் கூறியருளினர்.

காசியின் மகிமை யுரைத்தது

முற்றிற்று.

ஐம்பதாவது
காசிநகரவர்ணனமுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகள் ஸூதமுனிவனை நோக்கி, ஸ்வாமீ! காசிநக ரமே புண்ணிய கேஷத்திரங்களிற் சிறந்ததென்றுகூறினீராதலின் அதன் மகி மையை யின்னுந் தேவரீர் விரிவாகக் கூறியருளவேண்டும் என வேண்ட, ஸூதமுனிவர் சொல்லத் தொடங்கினர். முனிவர்களே! காசி மகாத்மியத்தை யும் வீச்சுவேசுவரலிங்க மகாத்மியத்தையுஞ் சுருக்கமாகச் சொல்லுகிறேன். ஒருகாலத்தில் பார்வதாதேவியாரவர் சிவபெருமானை நோக்கி உலகத்தவர் கட்கு இந்தக் காசிகேஷத்திர மகிமையைத் தெரிவிக்கு நிமித்தமாய், ஸ்வாமீ! இவ்வுலகத்திற்பிரபாவத்தை அடியேன்பால் தயவு வைத்து விஸ்தீர்ணமாகச் சொல்லவேண்டுமென்று கேட்க, சிவபெருமான் உமாதே வியார் வார்த்தைக் கிணங்கியுலகத்தவர்கட்கெல்லாம் நன்றாகத் தெரிய மாறு திருவாய்மலர்ந்தருளத் தொடங்கினர்.

பார்வதீ! நீ உலகநன்மையை விரும்பி நன்றாகக் கேட்டனை; அப்படி யே உனக்குக் காசியின்சிறப்பைச் சொல்லுகிறேன்கேட்பாயாக. இந்த கேஷ த்திரமானது மிக்க இரகசியமானது; எனக்குப் பிரியமானது; சகலப்பிராணி கட்குஞ் சர்வகாலத்திலும் மோக்ஷத்தைக் கொடுக்க எத்தனையுள்ளது. இதி லிருந்து யோகசித்தியடைந்த புண்ணியர்கள் என்னைத் திருப்தியடையச் செய் விரதம் தவம் முதலியனசெய்தும், ஸகலஜீவன்களையும் பஞ்சமஹாபாதகங் களைத் தரித்து, எனது சிவலோகத்தை யடைய விரும்பி, சிரேஷ்டமான சிவ யோகத்தை அப்பியாசித்து, பஞ்சேந்திரியங்களையுஞ்செயித்து, அங்கே வசித் திருப்பார்கள். அநேக விருக்ஷங்கள் பறவைகள் முதலியவற்றுடன் தாமரை கருநெய்தல் முதலிய புஷ்பங்கள் நிறைந்த தடாகங்களாலும் அலங்கரிக்கப் பட்டு, அப்ஸரசுகள் கந்தர்வர்கள் முதலியவர்களால் எப்பொழுதும் சேவிக்க ப்பட்டுள்ள இந்த முக்திகேஷத்திரம் எனக்கு எப்பொழுதும் வாசஸ்தானமா யிருக்கும்படி சம்பவித்த காரணத்தைச் சொல்லுகின்றேன். என்னிடத்தில் அன்புடையவனும், மனமுடையவனும், இராகம் குரோதம் பயமுதலியவற் றை விடுத்தவனும், சுகதுக்கங்கள் லாபநஷ்டங்கள் முதலியனவொழிந்த சம மதிப்புடையவனும், கோபமற்றவனும், சிவஞான முடையவனும், சிவதத்து வத்தைவிசாரிப்பவனும், துக்கத்திற்துக்கமும்சுகத்திற்சுகமுமில்லாதவனும், நன்மைக்காக மகிழ்ச்சியுந் தீமைக்காகத் துன்பமடைதலுமில்லாதவனும், ஆகிய அத்தகையவனுக்கும் எனக்கும் பேதமில்லை. அவனே சகல தீர்த்த ங்களுக்கும் ஒப்பாவான். அப்படிப்பட்டவனுடைய தரிசனத்தை நானும் விஷ்ணுவும் பிரமனும் மற்றத் தேவர்களும் விரும்புவோம். எனெனில், அத்தன் மையானவன் ஒருவன், உயிர்விடுவோன் சமீபத்திலிருந்தால் இவனைக் கண்டு உயிர்விட்டவன் மோக்ஷமடைவான். அவனை முக்தனெனச் சொல்லவேண் டியது அவசியமில்லை. அவனே ஜீவன்முக்தனெனப்படுவான். அவனுக்கு

விதிவிலக்குகள் இடையா. இங்கொரு தீர்த்த விசேஷமுள்ளது. அதனையுஞ் சொல்லுகிறேன். பார்வதி! பிரம ரூத்திரிய வைசிய சூத்திரர்களும், பிரம சரிய கிருகஸ்த வானப்பிரஸ்த சந்நியாசிகளும், * பால குமார யௌவனர்களும், அபரிசுத்தனும், குழந்தையும், கன்னிகையும், பதிதையும், விதவையும், மலடியும், †ரஜோதோஷமுடையவளும், பிரசவித்திறந்தவளும், ஜாதகன்மாதி சம்ஸ்காரங்களில்லாதவளும், பரிசுத்தமானவளும், பாபியும், கர்மவசத்தையுடைய அஞ்ஞானியுமாயினும் இத்தக்காசிகேஷத்திரத்தில் இறந்தால், சந்தேகமின்றி மோகூமடைவார்கள். சுவேதசம்-அண்டஜம்-உத்பீஜம்-சராயுசமாயினும், இங்கேயே இறந்தபகூத்தில் அவையெல்லாம் மோகூமடையும். கர்மவசத்தனுயினும் ஞானமில்லாதவனுயினும் பாபியாயினும் நூழ்ந்தேதமின்றி மோகூ மடைவான். ஞானம்-தியானம்-யோகமுமில்லாதவர்களாயினுந் தடையின்றி மோகூமடைவார்கள். முன் யான் கூறிய உயர்குணங்களையுடைய சிவஞானிகள் கணக்கிலாதவர்கள் இவ்விடத்தில் வசிப்பதனால் இந்த கேஷத்திரம் எனக்கு எல்லா கேஷத்திரங்களிலுஞ் சிறந்ததாயிற்று. இவ்விஷயம் மிகவும் அற்புதமானது. இவ் விபரத்தைச் சித்தயோகிகள் அறிவார்களன்றிப் பலர் அறியார். இவ்விடத்தில் எழுந்தருளியிருப்பதே எனக்குப் பெருஞ்சந்தோஷம். இந்நகரமே யாவர்க்கும் முக்திகொடுக்கத் தக்கது. இந்நகரத்திற்கு அவிமுக்தம் எனவும் பெயர். [விமுக்தம்=விடத்தக்கது. அ - எதிர்மறைப்பொருள்தருதலின், அவிமுக்தம்= விடத்தகாதது. என்பதுபொருள்.] காசிநகரம் ஒருதரமாயினும் சென்றால் நீங்கத்தகாதது எனறும், அந்நகரத்திலடைந்தவர்களைத் தன் மெய்யன்பர்போலப் பாதுகாத்து முக்தியளிக்கத் தக்கதன்றி, விடத்தகாதது என்றும் பொருள்படும். நைமிசாரண்யம் - குருகேஷத்திரம் - கங்காத்துவாரம் - புஷ்கரமுதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து சேவித்துவருவதால் மோகூமுண்டாகலாமன்றி இறந்தால் மோட்சமடையமாட்டார்கள். இக் காசிப்பதியிலோ இறப்பதனுலேயே மோட்சமுண்டாவதால் எல்லாத்தலங்களிலும் இக் காசிமாநகரம் உத்தமமாகும். பிரயாகையிலும் மோட்சமுண்டாகுமாயினும் இவ்விடத்தில்யான் நீங்காது வசித்தலின், இது பிரயாகையைக் காட்டிலுஞ் சிறந்ததாகும். இத்தக் காசிநகரமானது கேஷத்திரமகிமை தீர்த்தமகிமை மூர்த்தி மகிமையாகிய மூவகைச் சிறப்பு முடையது. இந்நகரத்தில் வசிப்பவர்கள் அன்னம் - பானம் - நித்திரை - ஸ்திரீபோக முதலியன யாவுங் குறைவின்றிச் செய்துகொண்டிருந்து உயிர்விடினும் மோட்சமுறுவார்கள். அநேக பாபங்கள் செய்து அப் பாபபலத்தாற் பசாசத்துவ மடையினும் இக் காசிப்பதி

* பாலன் பதினுறுவயதுக் குட்பட்டவனும், குமரன் பதினுறுக்குமேல் முப்பதுவயதுக்குட்பட்டவனும், யௌவனன் முப்பதுக்குமேல் நாற்பத்தைந்துவயதுக்குட்பட்டவனுமெனப்படுவர்.

† ரஜோதோஷம் என்றது, மாதர்கள் மாதாந்தருதுச் சிராவகாலத்திலடையும் ரஜஸ் எக்காலமும் ஒழுகப்பெறுதல் என்பர்.

யில் வசிப்பது பலகோடி புண்ணியகாரியங்களைச்செய்து சுவர்க்கத்தில் வசிப்பதைக்காட்டிலுஞ் சிரேஷ்டமாம். இத்தப்பதியில்தாம் வெளியேகாட்டாது தம்மது மனதிலேயே எம்மைநோக்கித் தவஞ்செய்துகொண்டிருக்கும் மேற்கூறிய குணங்களையுடைய மகாநுபாவர்கள் அநேகர் வசிக்கின்றனராதலின் மற்ற ஸ்தலங்களைவிட இத்தப்பட்டணத்திலே சுலபமாகஉயர்ந்த பதவிகிடைக்கின்றது. எந்தெந்தப்பலனைக்கோரித் தவஞ்செய்திருக்கிறார்களோ அவர்கட்கு அந்தந்தப்பலன்களையுஞ்சாயுச்சியப்பதவியையும் யான் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். குபேரன் என்னிடத்தில்சதலக்கிரியைகளையுஞ்சமர்ப்பித்துஇந்தத்தலத்தில்என்னைச்சேவிப்பதால் *காணபத்தியமுற்றிருக்கின்றனன். பராசரனென்னும் யோகியும், வேதவியாசனும், வேதங்களைப் பாகுபடுத்திப் பிரித்து என்க்குப் பக்தர்களாயிருக்கிறுக்கின்றனர். விஷ்ணுவும், திருமகளும், பிரமனும், அநேக தேவருஷிகளும், அஷ்டவசுக்களும், சூரியனும், இந்திரனும் எனைய தேவர்களும், யாவரும் என்னை உபாசித்துக்கொண்டே யிங்கிருக்கின்றனர். இன்னுஞ் சிலயோகிகள் தமது ஸ்வரூபத்தைப் பிறர்க்குத் தெரிவிக்காமலே என்னை இவ்விடத்திற் சேவைசெய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஐம்புலன்வழிமனத்தைச்செலுத்துபவனுயினும்கர்மங்களைச்சிதைத்தவனுயினும் இத்தத்தலத்தில் இறந்தவன் மீண்டுந் தாயின்கருப்பத்தையடையமாட்டான். பஞ்சேந்திரியங்களைச் செயித்தவர்களும், ஞானிகளும், உயர்பதவியுற்றவர்களும் என்னை இவ்விடத்தே சேவித்துக்கொண்டிருப்பதால் இவ்விடத்தில் உயிர்நீங்கியவன் யோகியருவனனும் அடையக்கூடாத உத்தமப்பதவியை அடைவான்.

இக்காசி கேஷத்திரத்தில், பிரமதேவனுற் பிரதிஷ்டைசெய்யப்பட்ட கோப்பிரமேஷகம் ஒன்றுளது. அது கைலாயத்திற்குச் சமானமானது. இக்கக் கோப்பிரமேஷகேச்சுரரைத் தரிசித்தவர்கள் பாபங்களால் விழுங்கப்பட்டுத் துர்க்கதியை யடையார்கள். கபிலாஹ்ரதம் என்னும் பெயரால் வேறொரு கேஷத்திரமும் இங்கேயுளது. அதனைச் சேவித்தாலும் அகத்தபாபங்களுமொழிந்து சிவலோகத்தை யடைவார்கள். இதனை என் ஸ்வரூபமாகப் பிரமதேவன் படைத்தான். நீயும் இதனை என் ஸ்வரூபமாக விளங்குவதைப் பார். இங்கே தேவர்கள் யாவரும் என்னைப் பலவிதமாகப் பிரார்த்தித்தலையின் யான் இலிங்கரூப மாகக்கண்ட பிரமன் என்னைப் பிரதிஷ்டைசெய்து பூஜிக்க யோசித்துக்கொண்டிருக்கையில், விஷ்ணுவானவன் பிரமன் கையிலிருந்த அந்தச் சிவலிங்கத்தினையைத் தானே தாங்கிப் பிரதிஷ்டை செய்து முறைப்படி அருச்சனை செய்துமுடிக்க, பிரமன் கண்டு விண்ணவனே! யான் பிரதிஷ்டைசெய்யவைத்திருந்த சிவலிங்கத்தினை நீ என் பிரதிஷ்டைசெய்தனை? என வினவ, திருமால் பிரமாவே! யான் சிவப்பிரீதி விசேஷமாக வடைமையின் அதனைப் பிரதிஷ்டை செய்தேனுயினும் அஃதுன்பெயராலேயே விளங்குக எனக் கூறினன். அத்தகாரணத்தால் கபிலாஹ்ரதத்தில்விளங்கும் சிவலிங்

* காணபத்தியம் - கணங்கட்குத் தலைமை.

கத்திற்கு இரண்யகர்ப்பேசன் எனப் பெயர் வழங்குகின்றது. இந்தக் காரணத்தாலும் யான் இங்கே யிருக்கலானேன். ஆதலின் இந்த ஹிரண்யகர்ப்பே சுவரைத் தரிசித்தமாத்திரத்தில் எனது சிவலோகங் கிடைக்கும். மீண்டும் பிரமதேவன் தன்னால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக ஒருசிவலிங்கமிருக்க வேண்டுமென்று வேறோர் சிவலிங்கஸ்தாபனஞ் செய்தனன். அதிலும் யான் லீனமாக இருக்தமையின் அதற்கு லீனேசுவரனெனப் பெயரெய்தியது. [லீனம்-ஐக்கியம்] இங்கேயிறந்தவன் மீண்டும்திரும்பாதபோக்ஷமடைவான்.

பார்வதி! இன்னுஞ் சிறிது தூரத்தில், பூர்வத்திலே தேவர்கள் பாவனையுந் துன்பப்படுத்திவந்த ஓர் அசுரோசன் பெரும்புலி வடிவாகி அமரர்களையெல்லாம் அலைக்க, அவர்கள்யாவரும் என்னைப் பிரார்த்திக்க, மனமிரங்கி அவனைச் சங்கரித்து மோட்சமளித்து, அத்தேவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி லியாக்கிரசுவரனெனவும் எழுந்தருளி யிருக்கின்றேன். உன் தக்ஷயாகிய பர்வதராசன் இம்மெனக்கு இன்பமுள்ள கேஷத்திரமென்றுணர்ந்து இங்கடைந்து ஓர் சிவலிங்கத்தைத் தன் பெயராற் பிரதிஷ்டை செய்துள்ளான். அதுவே சயிலேசுவரலிங்கம்; அதனையும் பார்ப்பாயாக. இக்தப் புண்ணிய கேஷத்திரத்தை யலங்காரஞ் செய்துகொண்டு கங்காநதி விளங்குகின்றது. வருணை அசி என்னும் நதிகள் இரண்டும் கலக்கின்ற காரணத்தினால் இந்த கேஷத்திரத்திற்கு வாரணசி என்னும் பெயர். அவ்விருநதிகளுஞ் சங்கமமாகும் இடத்தில் பிரமதேவன் ஓர் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்திருக்கின்றான். அதற்குச் சங்கமேசுவரனெனப் பெயர். [illegible]த்தியமேசுவரர்-ஐம்புகேசுவரர்-சுக்கிரனால் ஸ்தாபித்துப் பூஜிக்கப்பட்ட சுக்கிரேசுவரர்-கிருத்திவாகேசுவரர்-விருத்தகாளேசுவரர்-இந்திராதி தேவாகளால் ஸ்தாபிக்கப்பட்டு அவரவர் பேயரால் விளங்கும் இலிங்கங்கள் ஆகிய பாபஹாரமான சிவலிங்கங்களையும் பார்ப்பாய். இந்த இலிங்கங்களே யல்லாமல் இன்னுஞ் சில அற்புதமான விஷயங்களுஞ் சொல்லுகிறேன் கேட்பாயாக. இந்தக் காசிப்பதி நாற்புறத்திலும் ஐந்து குரோச விஸ்தீரண முடையதாக விருக்கிறது. எங்கேயாயினும் இந்தப் பஞ்சக்குரோசப்பதியின் எல்லைக்குள் இறக்க நேரிட்டால் மோட்ச முண்டாகும். பண்டிதன்-வேதாத்தியான முடையவன்-சண்டாளன்-பதிதன்-சன்னியாசி முதலிய [illegible]யினும் இங்கிறந்தால் மோட்சமடைவார்கள் எனக் கூறிய திருமாலுடைய வார்த்தையைக் கேட்டு, பார்வதாதேவி ஸ்வாமீ! தேவரீர் கூறும் விஷயமானது எனக்கு ஆச்சரியத்தை விளைக்கிறது. கர்மஹீனருடைய ஸந்நியாசியும் கர்மபத்தருடைய பிறவும் சமானமாய்ச் சற்கதி யடைந்து, சமானமான போகமோட்சங்களை யடைவார்களென்பது வியப்பல்லவா? அன்றியும், இறப்பவன் அவனது மனைவி புத்திரமித்திரர் தனமுதலியவற்றில் மனத்தைச் செலுத்துவானேயின் அதற்கேற்ற ஜனன மடைவானென நீதிநூல்கள் கூறுதலின், இங்கிறந்தாலும், தவஞ்செய்ததுந் தீர்த்தயாத்திரை செய்ததுமாகியவற்றால் அடையும் பலனை யடையலாமேயன்றி, மோட்சத்தை யடையக்கூடுமோ? இந்

தச் சந்தேகங்களை நீக்கவேண்டுமென்றுப் பார்வதாதேவி கேட்க, சிவபெருமான் சொல்லத்தொடங்கினர்.

ஐம்பத்தொன்றுவது
மேற்படி அத்தியாயம்.

சிவபெருமான் சொல்லுகின்றார்: பார்வதி! நல்ல விஷயத்தை வினவினை. இதனைக் கேட்டவர்கள் யாவரும் சகல பாபங்களினின்றும் நீங்குவர். அத்தன்மைத்தான சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேள். பாபாத்மனவன் இங்கிறந்தால் அத்தருணமே மோட்சமடைவான். பாபாத்மாவாகவுள்ளவன் இங்கேயிறந்தால், சிறிதுஜனவங்களையெடுத்துத் தன்பாபங்களைக்கழித்துப் பிறகு மோட்சமடைவான். சரிப்பதியிற் பாபஞ்செய்தவன் பசாசரூபமடைவான். அவ்வாறு பசாசரூபமடைந்து காலவரையறுத்தியாற் பத்தாயிரவருஷங்கள் தண்டிக்கப்பட்டுக் கஷ்டமடைந்து பின்னர் மோட்சமடைவான். இதுவே பாபிகளுடைய கதியாகும். இதனை யறிந்துகொண்டு இந்த அவிமுக்தப்பதியை அடையவேண்டியது. அவ்வாறுணர்ந்து இக்கரமடைந்து எம்மைச் சேவித்துக்கொண்டிருப்பவன் இவ்விதியிற் சோர்வடைவான். பிராயச்சித்தங்களால் அழியாத கர்மங்களைச் செய்தவன் சற்பகோடி காலங் கழித்தாலும் அதனை யநுபவித்தே ஒழிக்கவேண்டும். அசுபமான பாபகர்மங்கள் ஒருவனை நரகத்திலே யடையச்செய்யும். புண்ணியகர்மங்கள் சுவர்க்காதி லோகங்களிற் சேர்த்திவைக்கும். மிச்சிர கருமங்களால் உலகத்தில் மானுடர் பசுக்கள் பட்சிகள் முதலிய பிறவியுண்டாகும். தானடைந்த ஜனனம் உயர்ந்ததாயினும் தாழ்ந்ததாயினும் புண்ணிய பாபங்கள் நசித்தாலன்றி முக்திபுண்டாகமாட்டாது. அவையிரண்டும் ஒழிந்த பின்னரே மோட்சமுண்டாகும்.

சற்கருமம் மூவகைப்படும். அவற்றில் பஞ்சக்குரோசகேஷத்திரமுதலிய புண்ணிய பூமியில், பிரதக்ஷிண நியாஸ பூஜாதிகளால் வருவது ஒன்று; இதனால் ஜன்மார்ஜித பாபங்கள் நீங்கும். கர்மவிவரணவிதிப்படி பிராயச்சித்தங்களைச் செய்துகொண்டு பாபங்களைப்பொழித்தல் இரண்டாவதாம். சர்வகர்மங்களும் நசிக்குமிடத்தமாய் என்னிடத்தே தன் கிரியைகளெல்லாம் சமர்ப்பித்து என்னைச் சேவித்துக்கொண்டு இந்த கேஷத்திரத்தி லிருத்தல் மூதலியன மூன்றுவகையாம். இவற்றுளும் பாபகூபமாகும். இனி, கர்மமும் மூவகைப்படும். அது சஞ்சிதம் பிராரத்துவம் ஆகாமியம் எனப்படும். அவற்றுள், பூர்வ ஜன்மத்திற் செய்தது சஞ்சிதம். அத்தச் சஞ்சித வினையால் வேறு பிறவி யடைந்து அநுபவிக்கப் புகுஞ் சுபாசுபகர்மமே ஆகாமியம். அந்த ஆகாமியம் உடலால் அநுபவிக்கப்படுகையினால் பிராரத்துவம் என்பர். பிராரத்துவம் அநுபவியாமலே நாசமடையாது. பாபமில்லாமலே தேகத்திற்குக் கஷ்டம்வராது. துக்கமயமாகக் காணப்படும் யாவும் பாபமயமே எனத் தெரிந்துகொள்ளவேண்டும். அத்துக்கம் ஸ்தூலதுக்கம் ஸூக்ஷ்மதுக

க்கமென இருவகையாகப் பாபத்காலேயே யுண்டாகும். பாபமே யில்லாவி டின், எக்காலத்தும் ஒருவன் சுகமாகவேயிருப்பான். ஓரிடத்திற் சுபமே விரு த்தியாகும். ஓரிடத்திற் பாபமே விருத்தியாகும். ஓரிடத்திற் பாபமே நசித் திருக்கும். இந்த எல்லாக் கர்மங்களும் கூடியமடையவேண்டுமாயின் காசி ப்பட்டணத்தைவிட வேறேரிடங்கிடையவேகிடையாது. உலகத்தில் அநேக புண்ணிய கூடத்திரங்கள் சுலபமாகக் கிடைக்குமாயினும், காசிப்பதியில் வா சஞ்செய்யவேண்டுமென்று நினைப்பவர்க்கு அது விசேஷப் பிரயாசத்தோடும் கிடைப்பது அருமை. ஒருவன் காசிக்குப்போகவேண்டுமென்று தூறு ஜன னங்களிற் பிரயத்தனப்பட்டானெனினும் காசிப்பட்டணத்தைச்சேவிக்க அவ னுக்குத் தடைவரும். உலகத்திலுள்ள எல்லா கூடத்திரங்களுந் தரிசித்தா லன்றிப் *புண்ணியதலத்தில் ஆறிலொன்று தரிசிக்கக்கிடையாது. அப்புண் ணியதலங்களாகிய ஆறிலொன்றை முன்ஜனனத்திற் சேவிக்கக் கிடைத்த வனுக்கே காசித்தலத்தின் சேவைகிடைக்கும். அப்படிப்பட்டவனே காசித்த லத்தில்வசித்திருந்து இறக்கும்படி கைகூடும். காசித்தலத்தை யடைந்து கங் காஸ்நானஞ் செய்பவன் ஆகாமியசஞ்சிதங்களே யொழிப்பானுயினும், தே முள்ளவையும்விடாது தொடர்ந்துநிற்றலின் பிராரத்துவத்தை யநுபவித் தேதீரவேண்டும். அங்கே மரணமடைந்தவனுக்கே பிராரத்துவ மொழியும். மரணமடையும்பொழுது ஒருவன் மனமானது அவன் கர்மவசத்துக்கேற்பச் செல்லும். அக்கர்மத்திற்கு மூன்றுபாதங்களுண்டு. அவைமூன்றும் அக்காசி யை யடைந்தபொழுதே கூலொடிந்து பின்திருடமுடியாதனவை யாகின் றன. அவன் மனமும் அந்தத் தீர்த்தத்தினிலே ஐக்கியமாய் விடும். தீர்த்தஸ்நா னபலமும், அத்தலமகிமையால் சிவத்தியானஞ் செய்த பலமும் ஆகிய இவ் விரண்டின் வன்மையால் மோட்சமே கைகூடுமென்று சுருதிகள் சொல்லு கின்றன. பார்வதீ! முன்னே காசியாத்திரை செய்து அதன்பின்னர் பாபஞ் செய்தவன் முன் தான்செய்த காசியாத்திரைப் புண்ணியவசத்தால் அப்பாப மகலவேண்டி, மீண்டும் அவன் அந்தக்காசித்தலயாத்திரை செய்யும்படி பல வந்தமாகக் கொண்டுபோகப்பட்டுச் சகல பாபங்களையும் தீப்பொறி சித்திய பருத்திப் பொதிபோல நசிக்கச் செய்வான். ஆகையால்கர்ம நிர்மூலஞ் செ ய்யத்தக்க காசித்தலத்தை எவ்வாறுவது பிரயத்தனப்பட்டுச்சேவிக்க வேண் டியது எனச் சிவபெருமான் கூற, பார்வதாதேவி சிவபெருமானை நோக்கி மீண்டும் வினவலாயினர்.

ஸ்வாமீ! பிரயாகையில் உயிர்விட்டவன் இஷ்டகாமியங்களை யடை வானல்லவா? (கங்கை-யமுனை-சரஸ்வதி இம்மூன்றுங் கலக்கின்ற) திரிவேணி யில், திரிவேணிபூஜையும் விச்சுவேச்சுவரபூஜையுஞ் செய்துகாசித்தலத்திலிற ந்தவர்கள் யாதுபலனை யடைவார்கள்? பிரயாகை இஷ்டகாமியங்களைக்கொடு

* புண்ணியகூடத்திரங்கள் ஆறு என்றது, மதுரை-மாயை-காஞ்சி-அவந்தி-துவாரகை - அயோத்தி. இவற்றைக் காசியோடு கூட்டிப் புண்ணியஸ்தலங்கள் எழு னப்படும்.

ப்பது. காசிமுக்தியைக்கொடுப்பது. பிரயாகையில் மரணவன் இஷ்டகாமியங் களைக் கொடுக்கவும், காசியில் நீர் முக்தியைக் கொடுக்கவும் இருக்கிறீர் கள். நீர் சர்வமங்கல ஸ்வரூபியாதலின் இக்கச்சந்தேகத்தை நீக்கி யருள வேண்டும் என வினவ, சிவபெருமான் சொல்லத் தொடங்கினர். காயகி! காசியிலிறந்தவனுக்கு மீண்டும் பிறப்பில்லை. பிரயாகையி லிறந்தவனுக்கு இஷ்டகாமியங்கள் கைகூடுவது நிச்சயம். காசிக்குவந்து பிறகு பிரயாகைக் குப் போவதானல் காசியாத்திரைசெய்த பலன் வீணாப்போகும். பிரயா கைக்குப் போகாவிட்டால் திரிவேணிசங்கம தரிசனபலனில்லாமற்போகும். பிரயாகையில் இறந்தாலும் மோட்சகாமியாக இருப்பானுயின் அங்கேயும் முக்தியேகைகூடும். இவ்வாறேயுன்றி வேறன்று: எனச் சிவபெருமான் திரு வாய்மலர்ந்தருளினர். இவ்வார்த்தையைக்கேட்ட பார்வதாதேவி சந்தோஷ மடைந்தனள். அதுமுதல் சிவபெருமான் விச்சுவேசுவரனென்னும் பெயருடன் பார்வதி பிரமதகனசகிதமாய்க் காசித்தலத்தில் எழுந்தருளி யிருக்கின்றார் என்று, ஸூதமுனிவர் முனிவர்களை நோக்கி சிவபெருமான் காசிப்பதியில் இடைவிடாது எழுந்தருளியிருக்குங் காரணத்தைச் சொல்லினர். அதனைக் கேட்ட கைபிசாரணியவாசிகள் ஸ்வாமீ! இன்னும் சிவசரிதங்களையே தேவ நீர் சொல்லவேண்டும் எனவினவ, ஸூதமுனிவர் சகல பாபங்களையும் பேரக் கடிக்குந் திரியம்பகேசுவரப் பிரபாவத்தைச் சொல்லுகிறேன் என்று சொல் லத் தொடங்கினர்.

காசிநகர வர்ணனைமுடித்தது.

முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது

கௌதமேசுவரமகிமையுரைத்த அத்தியாயம்.

முனிவர்களே! ஏனக்கு வியாஸ்பகவான் கூறிய பாபங்களை யொழி க்கத்தக்க புண்ணியசரித்திரங்களைச் சொல்லுகிறேன். கேளுங்கள் என்று ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்: பூர்வத்தில் முனிசிரேஷ்டராகிய கௌத மமுனிவர் தமது மனைவி அஹல்யை என்னும் பெயரையுடைய மகாபதிவிரதை யுடன் கூடி, தென்திசையில் பிரமகிரியில் பத்தாயிரவருஷங்கள் அகண்டமா னதவத்தைச் செய்துகொண்டு இருக்கையில், ஒருகாலத்தில் பிராணிகட் கெல்லாங் கஷ்டப்படவேண்டிய அகாவிருஷ்டி தூறுவருஷங்களளவு முண் டாகி, உலகத்திலுள்ள மரங்களெல்லாம் உலர்ந்து பிராணிகள் உயிர்பிழைக் கத்தக்க நீரில்லாமலிருக்க, இருடிகள் மாதுடர் பசுக்கள் பறவைகள் அநே கமாக இறந்தும், பலவிடங்களுக்கு ஓடிப்பரவியும் போயினர். பிரம்மருஷி கள் முதலானர் பிராணயாம முதலிய யோகநிஷ்டையி லிருந்து காலங்கழி த்துவந்தனர். அந்தச்சமையத்தில் கௌதமர் பிராணயாமத்திலிருந்து வருணபகவானை நோக்கிப் பிரார்த்திக்க, அவர் ஜபத்திற்குக் களித்த வருணபகவான் பிரசன்னமாகி, இவர்க்கு வேண்டிய வரம் யாது? வெளி

யிடுகவெனவினவ, கௌதமமுனிவர் சந்தோஷித்து, உலகமுழுவதும் தன் புறும்படி உண்டாயிருக்கும் மழையின்மையை யொழித்து, யாவருஞ் சுகமடையும்படி மழைபொழியச்செய்யவேண்டுமெனப் பிரார்த்திக்க, வருணதேவன் கௌதமமுனிவரை நோக்கி, ஈசுவராக்ஞையை விரோதித்து நடக்கப் பிரமேந்திராதி தேவர்களாலும் சாத்தியப்படாதாதலின் அஃது யான் செய்யத்தக்கதன்று. நீ வேறே ஏதேனுங் கோருக. அதனைக் கொடுப்பேன் என, கௌதமமுனிவர் சுவாமீ! என் விஷயத்தில் வரங்கொடுக்கத்தக்க தயவுடையவரா யிருந்தால் யான் சொல்லுகிறன். உலகத்தில் மகாத்துமாக்களை ஆச்சிரயிப்பதால் ஆச்சிரயித்தவர்கட்குப் பெருமையுண்டாகும். மகாத்மாக்களை பிறருக்குற்ற துன்பங்களை விசாரிப்பார்களன்றிச் சாமானியர்கள் விசாரிக்கமாட்டார்கள். சூரியனைக்கண்டமாத்திரமே யிருளொழிவது போல, மகாத்மாக்களைத் தரிசித்தமாத்திரத்திலேயே தரித்திரம் தூரமாகவிலகும். துக்கம் சோகம் பாபம் பயமுதலியனவு நீங்கி விசேஷ நன்மைகளுண்டாகும். சாமானிய மாதுடைய சேவித்தால் அதற் கேற்ற பலன் கிடைக்கும். சிங்கத்தை அதனிடத்திற் சேவித்தால் *முத்துக்கள்கிடைக்கும். நரியை அதன் இடத்திற் சேவித்தால் எலும்புகள் கிடைக்கும். உத்தமர்களுடைய சுபாவம் பிறருடைய துக்கங்களைநீக்கத்தக்கது. தனக்குண்டான எவ்வகைத் துன்பத்தையும் பாராட்டாது அடக்கிப் பிறருக்கு உதவிசெய்யவேண்டியவர்கள் அவர்களே. கற்பகவிருட்சமும் சத்ஜனரும் ஓரே தபாவமுடையவர். விருட்சம் பொன் சந்தனம் இவை தாம் துன்புற்றாயினும் பிறருக்கு உபயோகப்படுவதுபோலத் தாம் கஷ்டமுற்றாயினும் பிறருக்கு உதவிசெய்யவல்லவர்கள் உண்மைப்போல அநேக திருக்கின்றனர். துக்கத்தால் வருந்துவோனுடைய துக்கத்தைப் போக்கடிப்பது அவ்வாறு போக்கடிப்பவர்களுக்கே சுகங்கொடுப்பதாகும். பரோபகாரஞ்செய்பவன் சிறிது பாபமுடையவனென்ன அவனைக் கண்டு விலகுவோன் பாபமுடையவனே யாவானெனச் சுருதிகள் கூறுகின்றன. இப் பூமியானது அண்டசம் சுவேதசம் உற்பீசம் சராயுஜமெனும் நான்குவிதமான பிராணிகளால் நிறைந்துள்ளது. இந் நால்வகைத் தோற்றத்தினிடத்தில் யாவர் தயையுடையவரோ, யாவர் அகங்காரமற்றவரோ, யாவர் ஜிதேந்திரியராய் உபகாரஞ்செய்வரோ, யாவர் எப்பொழுதும் பௌவனமுடையவரோ, அப்படிப்பட்ட புண்ணியர்களாலேயே பூமி தாங்கப்பட்டிருப்பதே யன்றி, ஆதிசேடன் ஒருவனாலேயே தாங்கப்பட்டிருப்பதாக நினைக்கவேண்டாம். நீரே ஜலமுழுதுக்கும் பிரபுவாயுள்ளவர். உலகமுற்றும் உமது ஸ்வரூபமே. ஆகையால் விசேஷத்தொழில் செய்தற்குரிய மழைஜலம்போலச் சம்பூரணமானஜலத்தைக் கொடுக்கவேண்டும். இதே யான் கேட்கத்தக்கது. உமக்கு என்விஷயத்தில் தயையிருக்கும் பக்ஷத்தில் இவ்வாறு அதற்கிரங்கவேண்டுமெனப்பிரார்த்திக்க, வருணபகவான் கௌதமமுனிவரை பார்த்து, நீ ஒரு குளமெடுக்கவேண்டுமெனக் கூற, அவ்வாறே

* முத்தென்றது அதனைச் சங்கரித்த யானையின் மத்தகத்தினின்றுதிர்த்தவை.

கௌதமர்செய்ய, அக்குளம் நீர் நிறைந்திருந்தது. அப்பொழுது வருணமூர்த்தி இஃதெப்பொழுதும் குறையாது நீர்மயமாயிருக்கவும், சகல தீர்த்தங்களிலும் உத்தமமான தீர்த்தமாயிருக்கவும், உன்பெயரால் [கௌதமதீர்த்தம் எனப்] பிரசித்தமா யிருக்கவும், இக்தினமும் ஓமம் ஜபம் சிரார்த்தம் முதலியனசெய்தால் ஒன்று அநந்தமாகவும் வேண்டுமென்று கூறிக் கௌதமமுனிவரால் தோத்திரஞ் செய்யப்பெற்று அந்தர்த்தானமாயினன். அங்கே கௌதமர் அகண்டமான ஜலத்தையடைந்து நித்திய நைமித்திரியைகளை விதிப்படி செய்துகொண்டு, நெல் கோதுமை முதலிய தானியங்களை விதைத்துவிட்டுத் தவத்தில் விருந்துகொண்டிருந்தார். அவை பலன் கொடுத்தன. விருக்ஷங்கள் புஷ்பித்துக் காய்த்துப் பழுத்தன. அங்கேவினைந்த தானியங்கள் பெருங் குவியல்களாகச் சேர்த்துவைக்கப்பட்டன.

இவ்வாறு கௌதம முனிவருடைய ஆச்சிரமும் சோபமாக விருப்பதைச் சிஷ்யப்பிரசிஷ்யர்களால் தெரிந்துகொண்ட மஹரிஷிகள் யாவருங் கௌதமர் விருப்பத்தின்படி அங்கே தமது சிஷ்யர்களோடுவந்து சேர்ந்தனர். பசுக்கள் பக்ஷிகள் முதலிய யாவும் மேய்ச்சலும் நீருக்கினடப்பதுகண்டு அங்கு வந்து சேர்ந்தன. அந்தவனம் பூமண்டலத்திலே அதிசுந்தரமாக விளங்கியது. இருடிகள் யாவரும் அங்கே தவஞ்செய்துகொண்டு காலங் கழிக்கவேண்டிக் தமது சிஷ்யர்களால் உழவுத்தொழில் செய்வார்கள். சோம கர்தத்தின் துக்கத்தைக் கௌதமமுனிவர் புண்ணியத்தினால் மறந்து பரமானந்தோஷத்திலிருந்தனர். அப்பொழுது நிகழ்ந்த விசேஷத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். சௌனகாதிமுனிவர்களே! ஒருகாலத்தில் கௌதமர் தமது சிஷ்யர்களைநோக்கி, யான் சந்தியாவந்தனஞ்செய்ய நீங்கள் நமது குளத்திலிருந்து ஜலங் கொண்டுவருகவெனக் கட்டளையிட, அவர்கள் அவ்வாறே குளத்தையடைகையில், அங்கே கோமபாதையால் வந்திருக்கும் முநிபத்தினிகள் அச்சிஷ்யர்களை நோக்கி, யாம் நீர்முகந்து சென்றபின்னரே நீங்கள் நீரெடுத்துச் செல்லவேண்டும். மேலேயிருக்குஞ் சலத்தை நாங்களே முகக்கவேண்டும் எனப் பயமுருத்த, கௌதமசிஷ்யர்கள் அவர்களை ஒன்றுஞ்செய்ய இயலாதவர்களாய் ஆச்சிரமத்தையடைந்து அஹல்யாதேவியைக் கண்டுநடந்த விஷயத்தை வெளியிட, அஹல்யை அந்தச்சிஷ்யருடன் குளத்தையடைந்து அம்முநிபத்தினிகளைக்கு நன்மொழி புகைத்து விலக்கிச்செல்ல, சிஷ்யர்கள் ஜலமுகந்துகொண்டு கௌதமமுனிவரிடஞ்சென்றுகொடுக்க, முனிவர் தமது சந்தியாவந்தனை முடித்துக்கொண்டனர்.

இஃதிவ்வாறிருக்க, குளக்கரையில் முன்னே நீர்முகவாமல் தடை செய்த முநிபாதர் அஹல்யாதேவியைக் கடிந்து பேசித் தம்முடனவர்பாலடைந்து, அஹல்யை எங்களைத் தினமுந் தஷ்டிக்கின்றாள். நாங்கள் அவள் தண்டனைக்கடங்கி வாழ்கின்றோம். நமக்கு இடமில்லாதிருந்து இங்கு வந்திருப்பதால், இவ்வாறுகடிந்தேயன்றி வேறன்று. உலகத்தில் பெண்சுட்டுப் பொய் கூறுதல் - மாயை - பிடிவாதம் - அதிலோபம்-பரிசுத்தமின்மை-கயை

யின்மை இவை சுபாவமான தோஷங்கள். நமக்குக்கௌரவ முண்டா? என்ன பிழைப்பு? யாதுக்கு? இவள் கோபிப்பதும் நாங்கள் அடங்கியிருப்பதும் எதுக்கு? எனப் பலவாறு கூறினர். அம்மங்கையர் வார்த்தையைக் கேட்ட முனிவர்கள் ஐயோ! அவ்வஹல்லை பதிவிரதையாதலின் இவ்வாறு சொல்லியிருக்கக் கூடுமோ? இவர்களிடத்தில் ஏதேனுங் தோஷங்கண்டு ஒருவேளை சொல்லியிருக்கலாமோ, அல்லது ஒருவேளை தானே பெருமையாய்க்கூறியிருப்பினும் நாம் யாதுசெய்யக்கூடும்? அவர்கள் ஆச்சிரமத்திலிருந்து ஜீவிக்கின்றோமே: நாம் அந்த அஹல்யையின் சிருகத்திலிருந்து ஜீவித்துவருகையில் அப்பதிவிரதைக்குக் குற்றஞ் சொல்வது நம்மையே குற்றமுள்ளவர்களாக்கும் எனத் தம்முள் தாமே கருதியிருக்க, அம் முனிமாதர்கள் தமது சொல்லைக் கணவர்கள் கொள்ளாமையின், ஒன்றுஞ்செய்யமாட்டாதவர்களாய், பிரதிதினமும் கௌதமமுனிவர் பூஜைக்குச் சிஷ்யர்கள் ஜலங் கொண்டுபோகும்படி வரும்போதெல்லாம் இவ்வாறே விகடஞ் செய்வதும், சிஷ்யர்கள் அஹல்யையிடஞ் சொல்வதும், அஹல்யை குளக்கரையை யடைந்து, நமது ஆச்சிரமத்திலிருப்பவர்களை எவ்வாறு கண்டிப்பதென்று நல்வார்த்தைகளால் விலக்கிச் சிஷ்யர்களைத் தண்ணீர் முகந்துகொண்டுபோம்படிச் செய்வதும், அம்மங்கையர் தமது கணவரிடம் பலவாறு அஹல்யையைப் தூஷிப்பதுமாய் நடத்திவந்தது. இப்படி யிருக்கையில், ஒருநாள் முனிகள் யாவரும் அவ்வனத்தை யடைந்து சந்தோஷமாக வசனித்துக்கொண்டிருக்கையில், முனிகள் ஒருவரையொருவர் நோக்கி நமது மனைவிமார் குளத்திற் சலங்கொள்கையில் அஹல்யாதேவி கண்டிக்கின்றனராம். அவர்கட்கு ஒருவாறு நல்ல வகையாகச் சிறிது சொல்லவேண்டும் என்று கூறினர். இதனைக்கேட்ட வேறு சில முனிகள் ஒருவேளை நாமெல்லோரும் இங்குவந்திருத்தலின் அஹல்யை அவ்வாறே செய்திருக்கலாமென்றும், இவர்கள் உண்மையே சொல்லியிருப்பார்களுள். இவர்கட்கு அம்மங்கையரால் சங்கடங்கள் சம்பவித்தே யிருக்கலாமென்றும் யோசித்து, மேல் நடக்கப்போகிற தியகருமத்திற்குப் பாத்திரமாக வேண்டியிருத்தலின், ஒருவரோடொருவர் கலந்து யோசிக்கத் தொடங்கினர்கள்.

கௌதமேசுவரமகிமை யுரைத்தது

முற்றிற்று.

ஐம்பத்துமூன்றுவது

கோதாவரியின் தோற்றமுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்: அந்த முனிவர்களில் யாவரும் ஒன்றுகூடி ஆலோசித்த வகையும், கௌதமமுனிவர் செய்த தியமுஞ் சொல்லுகிறேன். சுமிசார்ணிய வாசிகளே! முனிகள் ஒருவரையொருவர் பார்த்து நாமெல்லோரும் பிழைப்பதாக விருந்தால் இந்தக் கௌதமாச்சிரமத்தில் இருக்குமெல்லையுங் துக்கமின்றிச் சிலிக்கமாட்டோம். இதற்குத் தக்க யுக்தியை விசாரித்துச் செய்து நமது மானத்தைக் காத்துக்கொண்டு நமது தவத்திற்கு விக்கினமின்றி யிருக்கத்தக்க வகையைக் கண்டுபிடித்து, கௌதமமுனிவரை இங்கிருந்து அப்புறப்படுத்தவேண்டியது. அப்பொழுதுதான் நாம் சுகமாக வாழ்ந்திருக்கலாம். கௌதமன் எங்கேயாவது போகட்டும்: நாமெல்லோரும் இவனியடித்துத் துரத்திவிடலாம் என்று தீர்மானித்து, இந்த யோசனைகூடும்படி யாவரும் விநாயகரை யுபாசித்து அறுகு தாமரை அக்ஷதை சந்தனம் தூபம் தீபம் மோதகம் முதலியவற்றால் பூசித்தனர். இவர்கள் செய்த பூஜைக்குவிநாயகர் தயையுடையவராய்ப் பிரசன்னராகி, முனிவர்களே! உங்கட்கு யாதுகருமம் நடக்கவேண்டும்? தயவு வெளியிடுவீர் என வினவ, முனிவர்கள் கணபதியைப் பார்த்து, ஸ்வாமி! தேவரீர் அடியேங்கள் விஷயத்தில் தயையுடையவராயிருந்தால் இந்தக் கௌதம முனிவனை இந்த ஆச்சிரமத்திலிருக்கும் அவனுடையசிஷ்யப்பிரஷ்யருடன் துரத்திவிடவேண்டும். இதுவே யெங்கட்கு வேண்டிய வரம் என்று பிரார்த்தித்தனர். விக்நேசுவர் இதனைக் கேட்டுச் சிரித்து, முனிவர்களே! நீங்கள் இப்பொழுது தியகருமத்தைச் செய்கின்றீர்களு. ருமின்றியே அவர் விஷயத்தில் நீங்கல் உங்கட்கு இடையூறு சம்பவிக்கும்; உபகாரஞ் செய்தவருக்கு செய்வது தகுதியல்ல. அப்படி அபகாரஞ் செய்யும்பக்ஷத்தில் இ சம்பவிக்கும். அருந்தவஞ் செய்து என்னிடம் நல்ல பெ ட்டீர்கள். ஆ ஆ! நல்ல பலனை விரும்பாமல் நினைத்தற்கும் கூடாதைத் இப்படிப்பட்ட வரத்தைக் கோருவது, கையிலிருக்கும் இரத்தினத்தை கூடக் கருமணியை விரும்பினதுபோலிருக்கின்றது! உங்கட்கு வேறு எது விருப்பமோ அதனைக் கேளுங்கள்: அவ்வாறே கொடுப்பேன் என்றருஷிகள் யாவரும் மீண்டுந் தமது மதிமயக்கத்தால் இதேவரம் வேண்டுமெனக் கேட்டனர். அப்பொழுது விநாயகர் மறுபடியும் அந்த ருஷிகளைநோக்கி, உலகத்திலே ஒரு துஷ்டன் ராஜ்சாங்கத்தியத்தால் ஒருகாலத்தில் சாதுவாகிறான், ஒருசாது துஷ்டசாங்கத்தியத்தால் ஒருகாலத்தில் துஷ்டனாகிறான். அந்தச் சாதுபுருஷனுக்கு ஒருவன் தீமைசெய்தால் இதுவும் நமது வினையேயென்று கருதி அதைபொறுத்து தனக்குத் தீமைசெய்தவனுக்கு நன்மையே செய்கிறான். ஆகையால் உங்களை எப்பொழுதாவது கௌதமர் துன்பப்படுத்தினால் அப்பொழுதே அவர் உங்கட்குச் சுகத்தைச் செய்ததாக நினையுங்கள். நீங்கள் அவருக்கு மீண்டும் அபகாரஞ் செய்யவேண்டுமென்பது யுக்தமல்ல. நீங்கள் மாதர்கள் மொழிபால் மதிமயங்கி இவ்வாறுசெய்யத் தகுமோ? அல்லது நிஜமாயிருப்பினும் இச்சமையத்தில் நீங்கள் அடங்கியிருப்பதே உங்கட்குச் சுகத்தை யுண்டுசெய்யும். அந்தக் கௌதமர் உங்கட்குச் சுகத்தை தினமும் செய்வார் என்று இதுபோன்ற பலவகையான நீதிகளைப் போதித்தனர்.

விநாயகர் பலவாறுகூறியும் முனிவர்கள் அதனைச் சம்மதிக்காமையாலும், தான் அவர்கட்கு வேண்டியவரத்தைக்கொடுக்கிறேனென்று முன்னர்ச் சொல்லிவிட்டமையாலும், முனிவர்களே! நான் பலவிதமாக நீதிகளைச்சொல்லியுங்கேளாமையின் உங்கள் விருப்பின்படியே நடக்க வரங்கொடுத்தேன்; ஆயினும் அதனால்வரும் நிந்தனையை நீங்கள் அநுபவிப்பீர்களென்று கூறி அந்தர்த்தானமாயினர். கௌதம முனிவர் முனிவர்களுடைய யோசனையையொன்றுமறியாதவராய்த் தமது தவநிலையிலிருந்தனர். மேலே நடந்தவற்றையுஞ் சொல்லுகிறேன்.

கௌதமாசிரமத்திலிருந்தமுனிவர்வேண்டுகோளின்படி விநாயகர் நடக்கச்சக்தியற்ற கால்களுள்ள மிகவும் இளைத்த ஓர் கிழப்பசுவடிவேற்று, கௌதமருடைய கோதானம் முதலிய நன்முய் விளைந்திருக்கிற அறுகுருத்தியாயுள்ள பயிரில் மேய்ந்துகொண்டிருக்கையில், தெய்வகதியாய்க் கௌதமமுனிவர் அங்கேவந்து பயிரினிடையும் பசுவைக்கண்டு கையில் ஒருபிடிவைக்கோற்முனையெடுத்தெறிந்தனர். அதுபட்டமாத்திரத்திலேயே கௌதமரால் ணிதிரிற்முனை அப்பசுவினது நிழலிலிருந்து இறந்துவிட்டது. அதனைக் கண்ட அங்குவந்திருக்கும் ருஷிகளும் ருஷிபத்தினிகளும் பேரிரைச்சலிட்டு, ஓ கௌதமன் என்னகாரியஞ்செய்தனன்; கோஹத்திசெய்தான் மகா துன்மார்க்கன்: என்று கூறினர்கள். கௌதமரும் அவர்பத்தினியலையும் மிகவுந் துக்கித்து,என்னசெய்வது? எங்கேபோவது? நிஷ்டகோஹத்தி ஸம்பவித்ததே. இதனை எவ்வாறொழிப்பது? எனத்தனக்கொண்டிருக்கையில், ருஷிகள் யாவருங்கூடிக் கௌதமரைச் சமீபித்து உன் ஞானம் யாதாயிற்று? உன்தபம் எங்கொழிந்தது? உன்சர்வக்ஞத்துவம் என்னவாயிற்று? உன் ஓமம் எங்கேயோடியது? திரிகால சந்தியாவந்தனங்கள் எங்கேசென்றன? உன்புத்திசாதுரியம் எங்கொளித்தது? உன்கல்வி எங்கேமறைந்தது? உன்சுகுணசம்பத்துகள் எங்கேநடந்தது? என்றிது போலத் தூஷித்து, கோஹத்திசெய்த உன்முகத்தையும்பார்க்கப்படுமோ? என்று பலவாறு கூறினர். அந்த ருஷிபத்தினிகளும் நானாவிதமாகக் கௌதமரையும் அஹல்யையும் தூஷித்தார்கள். ஓ கௌதமா! இனி நீ இங்கிருதே: எங்கள் கண்ணுக்குப் புலப்படாது உடனே ஓடிவிடு. நீ இங்கிருந்தால் நாங்கள்கொடுக்கும் அவிர்ப்பாகத்தை அக்னிதேவன் அடையமாட்டான்; நாங்கள் செய்யும் சிரார்த்தத்தைப் பிதுர்க்கள் அடையமாட்டார்கள். என்றிவ்வாறுகளைக்கின்றித்தூஷித்து அவர்கள்யாவருங்கல்லாலெறிந்தார்கள். கௌதமமுனிவர் இன்னும் யாதுகெழுமோவென்றுகருதிஹாவென்று, அந்தருஷிகளைப்பார்த்து, ஐயா ருஷிகளே! நான் இங்கிருந்து புறப்பட்டு உண்மையாகவே போய்விடுகிறேனெனச் சொல்லி, தன் ஆச்ரமமாகிய அவ்விடத்தைவிட்டு மனைவியும் சிஷ்யர்களும் உடனேவர, ஒரு நாழிகைதூரஞ்சென்று அங்கிருந்துகொண்டு, கோஹத்திபாபந் தீருமெல்லையும் பிதுர்கார்ய சந்தியாவந்த

னங்கள் செய்யக்கூடாதாதலின் சூதகர்சௌசமுற்றவன்போலத் தங்கியிருந்தனர்.

முனிவர்களாவது முதிபத்தினிமார்களாவது இவைகளைக்கண்டால் முகத்தில் வஸ்திரம்வைத்து மூடிக்கொள்வார்கள். இவ்வாறு பதினைந்து தினங்கள் கழித்து, கௌதமர் அங்கிருக்கும் முனிவர்களை வருவித்து, ஸ்வாமிகளே! நீங்கள் எவ்வருவதும் எனக்கு அநுக்ரகஞ் செய்யவேண்டும். என் பாபமொழியும் வகை ஏதேனுமிருந்தால் அதனைத் தெரிவிக்கவேண்டும். பெரியோர் உபதேசமின்றி ஒருவருக்கும் பிராயச்சித்த சித்தி முதலியன கைகூடாதுஎன்றிவ்வாறு அதிவிநயத்துடன் கேட்டுக்கொண்ட பொழுதும், ஒருவரும் பதில் சொல்லவில்லை யாதலின், அவர்களின் பாதகமலங்களைத்தொடன் நமஸ்கரித்துத் தயை வரும்படி வேண்டிக்கொண்டதன்பேரில், அம்முனிவர்களியாவரும் ஒன்றுகூடிச் சமீபித்துவர, கௌதமமுனிவர் பராபரமாவானவன் பிரமணருக்குச் சமீபத்தில் வரக்கூடாமையினால் தூரத்திலிருந்து அவர்களுக்குநமஸ்கரித்துக் கையேற்றுநின்று, ஸ்வாமிகளே! எம்பாபம் போகத்தக்க வகையை எவ்விதத்திலேனும் யோசித்துச் சொல்லவேண்டும் எனப் பிரார்த்திக்க, அவர்கள் யாவரும் கௌதமரே! உலகத்திலே பாபங்கட்குப் பிராயச்சித்தமில்லாமலே பரிஹார முண்டாகமாட்டாது. அதனின் நீர் தேஹசுத்தியுண்டாம் வண்ணம் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டும். அதாவது முதலில் உன்பாபத்தை ஊரெங்கும் தெரியும்படிச் சொல்லிக்கொண்டு உலகவுலம் வந்து "வயலிலிருந்து கோஹத்திசெய்த நான் பிழைக்குவந்தேன்". என்று பசித்தவிடத்தில் வேதியருக்குரைத்தி அவர்களிடம் எழுவீட்டில் ஒவ்வொரு கவளம் கையிலேற்றுண்டு, மீண்டும் இங்குவந்து ஒருமாசகாலம் *சாந்திராயணவிரதமநுஷ்டித்து, இந்தப் பிரமகிரியை நாற்புறமும் பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் நீர் பரிசுத்தராவீர். வேறொரு வகையாகவுஞ் சொல்லுகிறோம். கங்கையை இங்கே வருவித்து அதில் ஸ்நானஞ்செய்து கோடி பார்த்திவலிங்கார்ச்சனை செய்யவேண்டும். இப்படிச் செய்தாலும் பவித்திரமாவீர். முதலில் இப்பிரமகிரியைப் பதினொரு பிரதக்ஷிணஞ் செய்யும். பிறகு சதகும்பாபிஷேகஞ் செய்துகொண்டால் இப்பார்த்திவ சரீரம் சுத்தமாகும் என்றனர்.

கௌதகாதிமுனிவர்களே! இவ்வாறுகூறிய அம்முனிவர்கள் வார்த்தையைக் கேட்ட கௌதமர் கோடிபார்த்திவலிங்க பூஜையும் கிரிப்பிரதக்ஷிணமுஞ் செய்வேனென்று சங்கற்பஞ் செய்துகொண்டு அப்பிராமணர்களுத்து உத்தரவுபெற்று, கிரிப்பிரதக்ஷிணஞ் செய்து சாங்கோபாங்கப்படி கோடிலிங்கார்ச்சனஞ் செய்து முடித்தனர். பதிவிரதையான அஹல்யையும் முறைப்படி சிவபூஜை செய்துகொண்டிருந்தனள். சிஷ்யப்பிரசிஷ்யர்களும் கௌத

*சாந்திராயணம்-சந்திரசம்பந்தமானது; அது சுக்லபக்ஷப்ரதமை முதலாக ஒவ்வொரு நாளுக்கொரு கவளமாகவுயர்த்தியும், மீண்டுங் குறையுந்தோறும் முன்போல் நாளுக்கொரு கவளமாகக் குறைத்தும் புசிப்பது.

மரையு அவர் மனைவியையுஞ் சேவித்துக்கொண்டிருந்தனர். கைமிசாரணிய வாசிகளான சௌநகாதி முனிவர்களே! இவ்வாறு கௌதமர் சிவபூஜைசெய் துகொண்டிருக்கையில், சிவபெருமான் பக்தப்பிரியராதலின் இவர் பூஜைக்கு மகிழ்ந்து திருக்கைலாயகிரியினின்று பிரமதகணாகிருதாய்ப் பார்வதிசமேத ராய் இடபாரூடராகி வந்து தரிசனமளித்துக் கௌதமரைப்பார்த்து, உன் பூஜைக்கு மனமகிழ்ந்தேம். நீ வேண்டும் வரத்தைக்கேள் எனக் கூற, கௌ தமர் சிவஸ்வரூபத்தைத் தரிசித்துப் பெருங்களிப்புற்று, இனிக் கைகூடா தது ஒன்றுமில்லையென்று கருதிக் கௌரீசங்காரைப் பணிந்து துதிக்கின்றார்.

மூலம் "நிமஸ்தணாத்தஜ்ஜூஹ்வே ஸாகராயநமோவ்ருதீ॥ (கூடு)
வஸூநாம் க்ருத்தவே ப்ரதவாய வ்ருஷாயநமோவ்ருதீ।
வஸூநாம் விஷ்ணவே ப்ரதிவைவ கபிஜ்ஞாயநமோவ்ருதீ॥ (கூசு)
ஸுஹோத்ரவிஷ்ணவே ப்ரதிவைவ வஹ்நயேஸ்வாஹாஜுஷே।
வஸூநாம் த்வஷ்ட்ரவே ப்ரதிவைவ திக்ஷவேஸ்வாஹாவகாயச॥ (கூஎ)
வ்யவ்யாயசதிஷ்ணவேஜுஷ்டம் ஸுஹுணைவாரோஹதேதி।
கபர்தாயிகபர்தாயத வைஜ்ரத்வாயகேசதே॥ (கூஅ)
தீமஹ்நாயமஹ்நாயைவ வ்ருத்ரத்வாயதவோஹ்நதே॥"

நிர்குணய நமஸ்துப்யம் ஸுகராய நம: புந: ॥ கூஇ ॥ பஸ்சாத்ப்ரக்ருதி ரூபாயபுருஷாயநம: புந: ॥ பஸ்சாத்விஷ்ணுஸ்வரூபயா ததஸ்சப்ரஹ்மணே நம: ॥ கூக ॥ ப்ரஹ்மருத்ரவிஷ்ணு காரைவபூஜ்யாய ஸம்ஸயச்சிதே! பஸ்சாத்ருத்ரஸ்வரூபாய ததஸ்சவ்யாபகாயச ॥ கூச ॥ வ்யாப்யாயநமஸ்துப்யம் ப்ரஹ்மணேபதமாத்மகே! அகா ராதிக்ஷகாரந்த பீஜரூபாயதே நம: ॥ கூஅ ॥ நிர்குணயகுணயைவ ஸ்வரூபாய நமோ ஸ்துதே.

"குணரஹிதரும், பக்தர்கட்குச் சுகஞ்செய்பவரும், ஸ்ருஷ்டி யாரம்ப த்தில் பக்தாநுக்ரஹத்திற்காக மாயையோடுகூடிய ரூபமுடையவரும், எல் லாப்பிராணிகளின் சரீரத்திலும் அந்தர்யாமியாயிருப்பவரும், பக்தரக்ஷணைக் காக விஷ்ணுஸ்வரூபமுடையவரும், ஹிரண்யகர்ப்பரூபமுடையவரும், பிர மவிஷ்ணுக்களால் பூஜிக்கப்பட்டவரும், (அடியவர்களுக்காக) சர்வவியாபியா னவரும், வியாபிக்கப்படுபொருளாயுள்ளவரும், தானே சர்வமயமானவரும், பரமாத்மஸ்வரூபியானவரும், அகாரமுதல் க்ஷகாரஇறுதியாகிய வர்ணமாலி காஸ்வரூபரும், குணரஹிதரும், குணஸ்வரூபரும், ஸகலஸ்வரூபரும் ஆகிய தேவரீருக்கு நமஸ்காரம்: நமஸ்காரம்: நமஸ்காரம் என்றபலவாறுதுதித்துக் கையேற்று நின்றுஎண்ணப் பாபரஹிதனைச்செய்யவேண்டும் எனப் பிரார்த்தி க்க கௌதமரைநோக்கிச் சிவபெருமான் சொல்லுகின்றார்.

கௌதமமுனிவனே! நீகன்னியன்: கிருதகிருத்தியன்: இத்துஷ்ட வேதியர்கள் உன்னிடத்திற் பாபத்தைக் கபடத்தாற் சேர்ப்பித்தமாத்திரத்தி னால் உனக்கு ஒப்பொழுதும் பாபமேகிடையாது. உன்னைத்தரிசித்தமாத்திரத்தி

லேயே சகலரும் பாபரஹிதர்களாவார்கள். இத்துரோகசிந்தையுடைய முனி வர்கள் செய்கன்றி மறந்தவர்களாதலின் இவர்கள்செய்த பாபங்கள் பிரா யச்சித்தங்களாலும் பரிகரிக்கப்படமாட்டா. உனக்கு ஏதேனும் சிறிது பாப மிருக்கின் அதுவும் எனது தரிசனத்தால் ஒழிந்துவிடும் என்றுகூறி, அத் துஷ்டவேதியர்கள்செய்த சகலவஞ்சனைகளையும் கௌதமமுனிவருடன் சொ ல்லினர். அவ்வார்த்தைரது வஞ்சகத்தைக்கேட்ட கௌதமர், ஸ்வாமீ! இம் முனிவர்கள் யாவரும் எனக்குத்திமைசெய்திலர். ஐயோசெய்தனர். ஆயினும் பெரிதல்ல; அவர்கள் என்னிஷயத்தில் நன்மையேசெய்தார்கள். அவர்கள் அவ்வாறுசெய்யாவிடின் தேவரீரைத் தரிசிக்கமுடியாது. ஆதலின் அவர்கள் புண்ணியவான்களே யென்கூற, சிவபெருமான் கௌதமருடைய சற்குண விசேஷத்திற்குகளித்து, மஹாபுண்ணியன்: உனக்குவேண்டியவரம் யாது? எனக் கேட்க, கௌதமர் யோசித்துத் தன்பிறப்பு நிலைபெற்பதாகவேண்டு மென்று கிரீனத்து, ஸ்வாமீ! தேவரீருக்கு என் விஷயத்தில் கருணையிருந் தால்சகலலோகங்கட்கும் நன்மைதரத்தக்க கங்கையைக் கொடுக்கவேண் டுமென்று சாஷ்டாங்கமாகப்பணிந்து நமஸ்கரிக்க, சிவபெருமான் பூலோ கத்திலும் ஸ்வர்க்கலோகத்திலும் நிறைந்து பூரணமாயிருக்கத்தக்க தமது சடையிலிருந்த *கங்கையில் சிறிதினைக் கௌதமருக்குக் கொடுத்தருளி னர். அக்கங்கையானவள் உடனே பெண்ணுருவெடுத்துக் கௌதமர் முன் னின்றனள். கௌதமர் கங்காதேவியைப் பலவாறுதுதித்து நமஸ்கரித்து, தாயே! நீ தன்யை: எல்லாவுலகங்களையும் புனிதமாகச் செய்பவல்லவளா தலின் என்னையும் பரிசுத்தனைக்கி யென்பாபங்களை யொழிக்கவேண்டும் எனக் கூறுகையில், சிவபெருமான் கங்கையைப்பார்த்து, பெண்ணே! இக்கௌதம முனிவனை என் கட்டளைப்படி கிருதார்த்தனைச்செய்: எனத் திருவாய்மலர்ந் தருளினர். கங்கையானவள் சிவக்கிணையையும் கௌதமர் வேண்டுகோள யுங்கருதி, நான் பரிவார சகிதமாகவுள்ள இம்முனிவனைப் பரிசுத்தனைக்கி மீண்டுஞ் சிவபெருமானிடஞ் சேருகிறேன் எனக்கூற, சிவபெருமான் கங் கையே! இருபத்தெட்டாவது மஹாயுகத்தில் நடக்கும் வைவச்சுதமன்வந்த ரத்தில், கலிகாலம்வருதலின் அப்பொழுது மனிதர்கள் அற்பாயுவும் சுவல்ப புத்தியுமுடையவராவர். ஆதலின் அக்காலத்திலுள்ளவர்கள் உன்னைத்தரி சிக்கும்படி அதுவரையில் நீயிங்கேயே யிருக்கவேண்டியது எனக்கூற, கங் காதேவி, ஸ்வாமீ! நான் இங்கேயிருக்கும்படிக் கட்டளைபெறுவேனாயின் காசி கேஷத்திரத்திலிருந்து அங்கு வருவோரைப் புனிதமாக்க முடியாதாதலின், இவரைப்புனிதராக்கி நான் அங்கேயாவது போகின்றேன் என, கௌதமர் தாயே! நீ யெங்கும் போகப்படாதென்று விநயமாகக்கூறிப் பிரார்த்திக்க, சிவபெருமான், கங்கா! நீ யிங்கே கௌதமன் விருப்பின்படியிருக்கவும், காசி கேஷத்திரத்தில் விளங்கிய வருவோரைப் புனிதமாக்கவும் வல்லவளாதலின்,

* கங்கை - இது பூர்வத்தில் பிரமனுக்கும் விண்ணுக்கும் இந்திரனுக்குங் கொடுத்து மிருந்திருந்ததை என வடநூல் உரைகாரர் கூறுகின்றனர்.

இங்கு மங்கும் இருக்கக்கடவாய் என, கங்கை நான் அவ்வாறே எல்லாத் தீர்த்தங்களிலுஞ் சிறந்து இங்கே யிருந்துகொண்டிருப்பினும், கௌதமரை வஞ்சத்தால் வருத்திய அப்பாபிகளைப் புனிதமாக்க வல்லவளல்லேன். இக் காரணமாக இவைத்துன்புறுத்தியவர்களை முகாலம்பனமுஞ்செய்ய விருப்ப மில்லையாதலின் நான் அந்தர்த்தானமாகிறேன். அன்றியும் பார்வதி புத்தி ரர்களோடும் பிரமதகணங்களோடும் சிவபெருமான் இங்கெழுந்தருளியிரு ப்பதாயினும் நான் இங்கிருக்கக்கூடும் என, சிவபெருமான் கங்கையே! நீ புகைதல் நீ என்னை வேறன்று. ஆயினும் நீ பென்னை யிங்கிருக்கக்கோரு கின்றமையின் யானும் அவ்வாறே இங்கிருந்தின்றேன்; நீயும் இங்கேயே யிருக்கவேண்டும் என, கங்கை சந்தோஷத்துச் சிவபெருமானைப் பூஜித் தனள்.

கோதாவரியின் தோற்றமுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்துநான்காவது

திரியம்பக லிங்கமகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார்: இந்தச் சமையத்தில் பிரமாதி தேவர்கள் சப்தருஷிகள் நானூர்த்தங்கள் அதிக க்ஷேத்திரங்கள் யாவும் வந்து கௌ தமரையும் கங்கையையும் சிவபெருமானையும் கண்டு ஜயஜயவென்றுபூஜித்து, அதிக வகையாகத் தோத்திரஞ்செய்து சந்தோஷத்திலிருக்கையில், கங் காதேவியும் சிவபெருமானும் அவர்கள் விஷயத்தில் மகிழ்வுற்று யாதுவரம் வேண்டுமென வினவ, ருஷிகள் நீங்கள் இருவரும் எங்கள் விஷயத்தில் தயை யுடையீராயின், நீங்கள் எப்பொழுதும் இவ்விடத்திலே யெழுந்தருளியிருந்து சற்கருமஞ் செய்யும் ருஷிகளை யெல்லாம் அநுக்கிரகிக்கவேண்டும் எனக்கூற, கங்கை அவர்களை நோக்கி நீங்கள் யாவருமே தீர்த்தஸ்ரூபமாக நிற்றலின், யானிங்கிருக்தென்ன இல்லாவிடினென்ன? நீங்கள் யாவருமே கௌதமரி டத்திலேயே யிருக்கவேண்டும். நானேமட்டும் தற்காலம் போகின்றேன். உங் கட்கெல்லாம் க்ஷேமமுண்டாகுக: நீங்கள் உலகத்தைப் பவித்திரஞ்செய்து கொண்டு இங்கிருங்கள் எனக்கூற, தேவர்கள் ருஷிகள் யாவரும் மீண்டும் கங்காதேவியைநோக்கி, தாயே! எங்களையெல்லாம் புனிதமாக்கு நிமித்த மாக நீயிங்கேயிருக்கவேண்டுமென, கங்கை உங்களுக்காட்டிலும் என்னி டத்தே எனதுவிசேஷமிருக்கின்றது எனவே, அவர்கள் கங்கையைப்பணிந்து நாங்கள் மாறுடர்செய்த பாபங்களை அவர்கள் எங்களைச் சேவித்தலாலும் *எங்களிடத்தில் ஸ்நானதானஜபாதிகளைச் செய்ததாலும் பதினெருவருஷமாகப் பெற்று அவற்றைப்பன்னிரண்டாவது வருஷத்தில் ஜாவரும் சிங்கராசியிற் பிரகஸ்பதி பிரவேசித்தபொழுது, உன்னிடம்வந்து ஸ்நானஞ்செய்துபோக் கடித்துக்கொண்டிருப்பதாகலின் நீ எங்களை அநுக்கிரகிக்கு நிமித்தமா

த்தமாகச் சிவபெருமானுடன் இங்கெழுந்தருளியிருக்கவேண்டும். குரு சிங் கத்திற்கு எழுந்தருளியிருக்கும் ஒருவருஷகாலமும் இங்கேவந்து உன்னிட த்தில் ஸ்நானஞ்செய்து எங்கள்பாபத்தை யொழித்துச் செல்வோம் என்று யாவரும் தோத்திரஞ் செய்ய, அவர்கள் வேண்டுகோளுக்கும் கௌதமருக் குக் கொடுத்த வரத்திற்கும் இணங்கி, கங்காதேவியும் சிவபெருமானும் அங் கே எழுந்தருளியிருக்கின்றனர். அந்தத் தினமுதல் சிங்கராசியிற் குரு பிர வேசித்தபொழுது பிரமாதி தேவர்கள் தீர்த்தங்கள் க்ஷேத்திரங்கள் யாவ ரும் வந்துகொண்டிருக்கின்றனர். ஆதலின் சிங்கராசியிற் குரு பிரவேசி த்திருக்கையில்பிறதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்வதனால் ஒரு பலனுமில்லை. அந்தச் சிங்ககுரு கற்பிக்கிறதுதான் அத்தீர்த்தங்கள் தம்மிடத்திலிருத் தலின் அவ்வவர்நிமித்தமுரிய பலன்களைக் கொடுக்கச் சக்தியுடையனவாம். எப் படியிருப்பினும் கங்கை, நருமதை, கயை, கோமதி இவற்றில் எக்காலமும் ஸ்நானஞ் செய்யலாம். சிங்ககுரு வென்பது கணக்கில்லை. தீர்த்தயாத்திரை செய்வோர் முதலிலே கோமதிநதிக்குப்போய்ப் பின்னர் *கோதாவரி நதியை யடைந்து, மீண்டும் கோமதிநதியிற் சென்று ஸ்நானஞ்செய்தால், சகலபாபங் களு மொழிவர். இக்கோதாவரிக்குக் கௌதமி யென்றும் பெயர். இப்பொ ழுது கௌதமிதீர்த்தக்கரையில் எழுந்தருளியிருக்கும் திரியம்பகேசுவர ஜோ திர்லிங்கமகிமையைச் சொன்னேன் என்று ஸூதமுனிவர் கூற, சௌனகாதி மகருஷிகள் ஸ்வாமீ! கங்கை ஜலமயமாக வந்ததாக இச்சரித்திற் கூறினீ ராதலின், அது எங்கிருந்து புறப்பட்டுவந்து சேர்ந்தது? கௌதமமுனிவரு க்கு அபசாரஞ் செய்த துஷ்டப்பிராமணர்கள் அதற்காக என்ன கதியடைந் தார்கள்? இவற்றையுஞ் சொல்லியருளவேண்டும் என வேண்ட, ஸூதமுனி வர் சொல்லத்தொடங்கினர்.

மகருஷிகளே! கேளுங்கள்: நீங்கள் கேட்ட விஷயத்தைச் சொல் லுகிறேன். கௌதமமுனிவராற் பிரார்த்திக்கப்பட்ட கங்கையானவள் பிரம கிரியிலிருக்கும் அத்திமரத்தின்வேரிலிருந்து புறப்பட்டனள். அவ்விடத்திலே கௌதமர் ஸ்நானஞ்செய்து கிருதார்த்தரானார். அநேகருஷிகளும் மாறுடர் களும் அங்கே ஸ்நானஞ்செய்து கிருதார்த்தர்களானார்கள். அது தொடர்ந்து விடத்திற்குக் கங்காத்துவார மென்னும் பெயர் பிரசித்தம். இதனைச் சொ னேன். இனிக் கௌதமத் தபோவிருக்களாயிருந்த முனிவர்கள் சங்கதியையுஞ் சொல்லுகின்றேன். அவ்வேதியர்கள் இக்கௌதமிதீர்த்தத்தில் பிரமாதிதேவ ர்கள்முதலானோர் வந்து ஸ்நானஞ்செய்வது கேள்வியுற்று, தாமும் அதில் ஸ்நானஞ்செய்யவிரும்பி அங்கீகவரக்கண்ட கங்காதேவி, அப்பாவிகள் தன் னிடத்தில் ஸ்நானஞ்செய்வதை மனஞ் சகியாது அந்தர்த்தானமடைவது கண்ட கௌதமமுனிவர், தாயே! அவ்வாறு மறையவேண்டாம். மறையவே ண்டாம். இவ் வந்தணர்கள் யோக்கியராயினும் அயோக்கியராயினும் என்

*கோதாவரி - கௌதமர் பிரார்த்தித்துக் கொண்டுவந்த கங்கை. இப்பொ ழுது வாசிக்கும் மஹிமை யுடையது.

னுடைய ஆச்சிரமத்தில்வந்து காலங் கழித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் செய்தகாரியங்களாலேயே யான் உன்னையும் சிவபெருமானையும் இங்கிருக்கப் பெற்றேன் எனக் கூறுகையில், இவர்கள் மகா கொடியவர்கள்; துரோகிகள்; செய்ந்நன்றி மறந்தவர்கள்; நீசர்கள்; அகங்காரிகள்; கபடவாதிகள்; வேஷதாரிகள். ஆதலின் இவர்களை விலக்கவேண்டும் என்று ஆகாயவாணி கூற, கௌதமர் தாயே! நான் சொல்வதைக் கேட்கவேண்டும். நான் சொல்லுகிறது குற்றவர்கள் நடை. அபகாரஞ் செய்தவர்கட்கு ஏவர் உபகாரஞ் செய்வரோ அவ்வகையை புண்ணிய புருஷர்களால் நான் பவித்திரமடைகிறேனென்று, உலகாரம்பிய சிவபெருமானே சொல்லியிருக்கின்றனன். ஆதலின் அவ்விறைவன் வார்த்தையை நீ பரிபாலிக்கவேண்டும் என, ஆகாயவாணி மீண்டும் கௌதமரே நீர் சொல்லிய வசனம் உண்மையேயாயினும், அவர்கள் உன்னோடுகூடியிருக்கும் யோக்கியதை யடையவேண்டியதற்காக அவர்கள்முன் உன்னைப் பிரமகிரியை நூற்றொருபிரதகூணஞ்செய்யச்சொன்னதுபோல இப்பொழுது அவர்களும் இப்பிரமகிரியை நூற்றொருபிரதகூணஞ் செய்யவேண்டும். அதனால் அவர்கள் செய்த துஷ்கிருத்தியத்திற்குப் பிராயச்சித்தமுண்டாகி மேற்கியர்களாவார்கள் என, அதைக் கேட்டிருந்த ருஷிகள் அப்படியே பிரமகிரியை நூற்றொரு பிரதகூணங்கள் சாஸ்திரோக்தமாகச் செய்தனர். பிறகு கௌதமர் கங்கையைத் தியானித்து இவர்களெல்லாம் அநுக்கிரகிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்க, கங்கை கௌதமர் விருப்பத்தின்படி அநுக்கிரகித்தனள். அதன்மேல் அவர்கள் * கங்காத்துவாரத்தின் மேற்புறத்தில், தருப்பைபாற் பவித்திரமணிந்து முறைப்படி ஸ்நானஞ் செய்தார்கள். அந்த விடம் †குசாவர்த்தம் என்னும் பெயரையுடையது. அவ்விடத்தில் கங்கை பிரத்தியகூமாயிருந்தனள். அஹல்யாதேவியை அவமதித்தனைத்த ருஷிபத்தினிகளும் அவ்விடத்தில் ஸ்நானமும் சிவதரிசனமுஞ்செய்து எல்லையில்லாத சந்தோஷத்தை யடைந்திருந்தனர். கங்காத்துவாரம், குசாவர்த்தம், கிரியம்பகேசுவர சக்கிதி, புண்ணியதீர்த்தங்களெல்லாம் வந்து கங்காதரிசனஞ் செய்த இடமாகிய கோடிதீர்த்தம், இவ்விடங்களில் ஒரிடத்திலாவது ஸ்நானஞ் செய்தவர்கள் மீண்டும் கருப்பாசயப்பையை யடையமாட்டார்கள். அந்தக் கோதாவரி மகிமையை யான் என்னவென்று கூறுவேன். பிரம விஷ்ணு ருத்திரர்களும் பிரதிதினமும் அதனைச்சேவிப்பார்கள். கோதாவரியைச் சேவிக்காதவர்கள் தேவர்கள் ருஷிகள் பெரியோர்களில் ஒருவருமிலர். சாமானியனான மாந்தன் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் சகல சுகங்களையு மநுபவித்து மோக்ஷமடைவான். இதன் மகிமையை யறிந்தவன் முறைப்படி ஸ்நானஞ் செய்தால் அவன் பேறும்பேற்றினையென்னவென்றுரைப்பேன். பூர்வத்தில் ஸ்ரீராமன் இந்தக் கோதாவரி நதி

* கங்காத்துவாரம் - கங்கை பிறந்தவிடம்.

† குசாவர்த்தம் - என்பது, கங்காத்துவாரத்திற்குப் பதினைந்து யோசனை தூரத்திருப்பதாகவும் சில பிரதிகள் கூறுகின்றன.

யைக் கண்டு தான் உலகத்தைப் பவித்திரஞ் செய்விக்கும்படி, * பஞ்சவடி தீரத்திலிருந்தனன். முதலில் கங்கையும், பின்னர் சிவபெருமானும், அதன் பின்னர் விஷ்ணுவுமாக இம்மூவர்கள் பொருந்தியிருக்கும் புண்ணியதீரத்தில் வசிப்பவர்களுக்குத்துர்லபமானது ஒன்றுமில்லை. பிறத்தற்முதல் மரணம்வரையிற் காயிகேஷத்திர வாசஞ்செய்தவன் அடையும் பலனை இப் பஞ்சவடி தீரத்தில் ஒரு ஜாமகாலம் வசித்தவன் பெறுவன். முதலில் உலகசங்காரனுகிய திரியம்பகேசுவரனையும், பிறகுஸ்ரீராமனையும், பின்னர் கங்காத்துவாரத்தையும் தரிசித்தவர்கள் சகலபாபங்களினின்றும் நீங்குவார்கள். இத்தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தவர்கள் ஜீவன்முத்தர்களாவார்கள். கௌதமரும் பிறமுனிவர்களும் முறைப்படியாவரும் சகித்திருந்தார்கள். இப்படிக் கௌதமிகதி மகத்மியத்தையும், திரியம்பகேசுவரமகிமையையும் உங்கட்குச் சொன்னேன். இவற்றைப் பக்தியோடு கேட்டவர்கள் இஷ்டகாமியங்களைப் பெறுவார்கள். இனி வைத்தியநாதேசுவரப் பிரபாவத்தைச்சொல்லுகிறேன்.

திரியம்பகேசுவர மகிமை யுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவது.

வைத்தியநாதேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

சௌனகாதி முனிவர்களே! நான்சொல்லுவதை அன்புடன் கேளுங்களென்று ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்: துர்அகங்காரியும் துஷ்டர்களையே விரும்புகிறவனும் இராட்சத சிரேஷ்டனுமான இராவணன் பூர்வம் கைலாசகிரியில் சிவபெருமானை யாராதித்துப் பெருமான் பிரத்தியகூதமாகாமையின், இமோத்கிரியின் தென்றிசையிலுள்ள ஒரு வனத்தில் ஒரு குண்டத்தோண்டி அதில் அக்கினியை வளர்த்தி அதன் அருகே பார்த்திவலிங்கப் பிரதிஷ்டைசெய்து அக்குண்டத்தில் ஓமஞ்செய்தும் பிரசன்னமாகாமையின், தன் சிரங்களோ ஒவ்வொன்றுக அறுத்து ஒன்பது சிரங்கள்வரையில் ஹோமஞ்செய்தனன். அப்பொழுதும் தரிசனமாகாமையின் பத்தாவது தலையையும் வெட்டிக்கொள்ள உடைவாளை யெடுக்கையில், சிவபெருமான் மனந்தாளாது பிரத்தியட்சமாய் இராவணன் கையைப் பிடித்துக்கொண்டு உனக்கு நான் பிரசன்னமானேன். உன் விருப்பமான வரங்களைக் கேள் எனக் கூற, இராவணன் ஸ்வாமீ! தேவரீர் என்பால் தயை வைத்துப் பிரசன்னமாயிருந்தால், சத்துருவுக் கிணக்காதவன்மையும் அறுத்தெறிந்த சிரங்கள் எனக்குமீண்டும் உண்டாவதுமாய் அதற்கிரகிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்க, பக்த பராதீனராகிய சிவபெருமான் அவனிஷ்டப்படி அபரிமிதமான பலமும் முன்போலப் பத்துத் தலைகள்பெற்றிருக்கவும் நோயில்லாத வாழ்வும் அநுக்கிரகித்தனர். இராவணன் அதனைப் பெற்றுச் சிவபெருமானைப்

* பஞ்சவடி - ஐந்து ஆலமரங்களையுடைய விடம்.

பணிந்து விடை பெற்றுத் தனது நகரிற்கேகுவானாயினன். இதனையறிந்த தேவர்களும் முனிவர்களும் இவனால் நமக்கென்ன துன்பங்கள்விளையுமோவென் றுரைத்திப்பயந்து, என்ன செய்வோம்? எங்கே போவோம்? இவனிடத்தில் துஷ்டர்களாகிய இராக்ஷதர்களெல்லோருஞ் சகாயஞ் செய்துகொண்டிருக் கிறார்களே? எவ்வகைய காரியத்தையுஞ் சாதிக்க வல்லபமுடையவனாயிருப் பானே என்று துக்கித்துக்கொண்டிருக்கையில், நாரதமுனிவர் அங்கே வரக் கண்டு அவரைச் சேவித்து, ஸ்வாமீ! நாரதமுனிவரே! சகல காரியங்களையும் நிறைவேற்றும் வல்லபமுடையவரே! துஷ்டனாகிய இராவணன் சிவப்பிரசாத மனேர்தமையால் எங்கட்குக் கஷ்டமுண்டாக்கச் சித்தமாயிருக்கின்றான். அவன் எங்களைத் துன்புறுத்தினால் எங்கே போவோம்? எனக் கூற, அதனைக் கேட்ட நாரதமுனிவர் தேவர்களை நோக்கி! நீங்கள் துன்பத்தை விட்டுவிடுங்கள். நானொருபாயஞ் செய்கிறேன் எனக் கூறி அங்கிருந்து புறப்பட்டுச் சென்று இராவணன் வரும் வழியில் தமது மகதிவீணையை மீட்டிக் கொண்டிருக்கையில் இராவணன் அவ்வழியே வந்தனன். நாரதமுனிவர் அவனை நோக்கி இராட்சத சிரேஷ்டனாகிய இராவணா! சிவபூஜையைப் பக்தியோடு நீ செய்து வருவதுபற்றி மிகவுஞ் சந்தோஷமுற்றேன். நீ கிருதார்த்தன். உன்னிடத்துள்ள சந்தோஷத்தால் ஒன்றுகேட்கிறேன்; அதனைச் சொல்லவேண்டும். நீ பெருஞ் சந்தோஷத்தோடு எங்கே போகின்றாயென்பது தெரியவேண்டுகிறேன் எனக் கேட்க, இராவணன் நாரதமுனிவரை நோக்கி, ஸ்வாமீ! நான் சிவார்ச்சனை செய்து பரமபதியின் அநுக்கிரகத்தாற் பெரும் வல்லபத்தை யடைந்து என் வீட்டிற்குச் செல்கின்றேன் என, நாரதர் இராவணா! நீ சிவபெருமானை எவ்வண்ணமாக அருச்சித்தனை? நீ யெனக்கு ஆப்தனதலின் அதனைக் சொல்லவேண்டும் என, இராவணன் முனிவரே! நான் பூர்வத்தில் கைலாயகிரியையடைந்து பெருந்தவஞ்செய்தேன். அங்கே யான் செய்த அரும்பெருந் தவத்திற்குச் சிவபெருமான் தரிசனங் கொடாமையின் அங்கிருந்து புறப்பட்டு ஹிமவத்பர்வதத்தின் தென்திசையிலுள்ள வனத்தில் கிரீஷ்மகாலத்திற் பஞ்சாக்கினி மத்தியிலும், மழைகாலத்தில் வெளியிலும், குளிர்காலத்திற் சலத்திலுமிருந்து தவஞ்செய்தேன். இப்படித் தவஞ்செய்தும் சிவபெருமானுக்கு என்பேரிற் தயையுண்டாகவில்லை. அதனால் எனக்குப் பெருவருத்தமுண்டாகிப் பார்த்திவலிங்கத்தைக் கந்தபுஷ்ப தூப தீபங்களால் அர்ச்சித்து நிவேதனஞ் செய்து நமஸ்கரித்து நிருத்திய கீதவாத்தியங்கள்செய்து அங்குசிவப்பிரீதியானயாகங்கள் செய்தும் பிரசன்னமாகாமையின் துக்கமிருந்து செயலற்ற என் புத்தியை நிந்தித்துக்கொண்டு அந்த யாகாக்கினியில் என் பிராணனை விட்டுவிடவேண்டுமென்று கருதி, சிரங்களைச் சந்தனாதிகளால் அலங்கரித்து ஒவ்வொன்றாக அறுத்து ஒன்பது சிரங்களை ஹோமஞ்செய்து, பத்தாவது தலையையும் அறுத்து எறிய உத்தேசிக்கையில், சிவபெருமான் தேஜோரூபியாய்ப் பிரசன்னமாகி, தலையை யறுக்க வேண்டாமென்று என் கையைப் பிடித்துக்கொண்டு, உன் இஷ்டமான வரங்

களைச் சொல் என, அப்பொழுது சிவபெருமானைக் கண்களால் தரிசித்து, உலகத்திலுள்ளவர்களை யெல்லாம் ஜயிக்கத்தக்க பலத்தை எனக்குக் கொடுக்கவேண்டும் எனக் கேட்க, அப்படியே யாகுகவென வரங்கொடுத்து என் சிரங்களைப் பழயபடியே உண்டாகச் செய்து, நோயின்றி வாழ்கவெனக் கூறித் தயவுடன் பார்த்தனர். அத்தச் சிவப்பிரசாதத்தால் யாவும் எனக்குக் கிடைத்தன. அந்த வரத்தைக் கேட்ட பின்னர் யான் இவ்விடமே தேவரீர் இங்கிருக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெருமான் வைத்தியநாதேசுவரென்னும்பேருடன் அங்கெழுந்தருளியிருக்கின்றனர். பிறகு சிவபெருமானைப் பணிந்து திரிலோகங்களையுஞ் சயங்கொள்ளக் கருதி வந்தேன் என்று கூறினன்.

வஸிஷ்டர் சொல்லுகிறார்: நாரதர் இராவணனைப்பார்த்து அதரேசா! உனக்கு இதமான வார்த்தையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. சிவபெருமான் நீ கோரியபடியே உனக்குவரங்கொடுத்தனரென்கூறுகின்றனை. அவ்வாறு கொடுத்தது நிஜமென்றெண்ணவேண்டாம். அந்தச் சிவபெருமான் விஷயானஞ்செய்து நன்னை மறந்தவராதலின் என்னென்ன சொல்லமாட்டார்? அவற்றை நீ நம்பலாமா? ஆனாலும் நீ அவர் கொடுத்த வரம் கைகூடுமோ கூடாதோ எனபதை நான்சொல்லுங் காரியத்தைச்செய்து பரீக்ஷித்து அதனாலேயே தெரிந்துகொள்ளவேண்டும். நீ எனக்கு அன்பதலிற் கூறுகின்றேன்: அதாவது நீ எவ்வாறாயினுஞ் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் வெண்ணிறமாய திருக்கைலாயகிரியை யெடுக்கவேண்டியது. அதை நீ தடையின்றி எடுத்தாயாகில் அவர் உனக்குக் கொடுத்த வரம் தடையின்றிக் கைகூடியிருக்கிறதென நினைத்து அதனை மீண்டும் முன்னிருந்தபடியே வைத்துவிடு என்றுகூறிய நாரதமுனிவர் வார்த்தையைச் சத்தியமாகக் கருதி, இராவணன் ஸ்ரீகைலாயகிரியையடைந்து, சிவபெருமான் பிரமதகண சகிதமாய்க் கொலுக்கொண்டிருப்பதும், திருமால் பிரமேந்திராதிதேவர்கள் நெருங்கிச் சிவசேவை செய்துகொண்டிருப்பதுஞ், சுற்பார்த்தத்திலும் சிறிது மசையாததுமாயுள்ள அவ்விரிதகிரியைத் தனது இருபது கரங்களாலும் அசைத்தெடுத்தனன். அதனால் அம்மலையிலிருந்த விருகூடங்களெல்லாங் குலுங்கின. அருவிகள் வழிதவறின. பிரமன் நிலையினின்று தவறிவீழ்ந்தனன். விஷ்ணு மூர்ச்சையடைந்தனர். தேவர்கள் பிரமதகணங்கள் மகருஷிகள் முதலிய யாவரும் தம்மை மறந்து இறக்காற்போலானார்கள். அக்காசமயத்தில் சிவபெருமான் இஃதென்னென்று யோசித்தனர். பார்வதிதேவியார் சிவசந்தோஷத்தில் அவர்மடிமேலேயே யிருத்தலின் நிர்ப்பயமாகச் சிரித்து, சிவபெருமானைப் பார்த்துக் கைகூப்பி ஸ்வாமீ! தேவரீர் தங்கள் சிஷ்யனுக்குப் பெருவலி யுண்டாக வரங்கொடுத்தமையாலும, அவன் யோக்கியதை மிகுந்தவனாமையாலும் தக்கபலனுண்டாயிற்று எனக்கூற, சிவபெருமான் இராவணன் விஷயத்திற் கோபங்கொண்டு, இராவணா! உன் கரங்களைச் சங்கரித்தற்காக ஒருபுருவன் ஜனித்து அவற்றை வினாவிற் சங்கரித்

துவிடுவான் எனச் சாபமிட்டனர். அங்கு வந்திருந்த நாரதமுனிவர் அதனைக் கேட்டுச் சந்தோஷித்திருந்தனர். இராவணனும் கைலாயகிரியைப் பழயபடியே வைத்துவிட்டு, சிவபெருமான் கொடுத்தவரம் கைகூடியதென்றுகருதி, பலகர்வத்துடன் தன்வழியே சென்று, அதுமுதல் உலகத்தைத்துன்புறுத்தித் தன் ஆக்ஞையைச் செலுத்திவந்தான். இவ்வண்ணமாகவைத்தியநாதேசுவர மகிமையைச் சொன்னேன். இந்த மகாத்மியத்தைக் கேட்டவர்களுடைய பாபங்கள் பஸ்மமாகும். இனிப்போகேசுவர ஜோதிர்லிங்க மகிமையையும் அதன் உற்பத்தியையுஞ் சொல்லுகிறேன் என்று ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

வைத்தியநாதேசுவர மகிமையுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தாருவது

போகேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

சௌனகர்திமுனிவர்களே! ஒருகாலத்தில் தாருகை யென்னும் இராட்சதப்பெண் பார்வதிதேவியைப் பூஜித்து அப்பெருமாட்டியால் பெருவலிமைபெற்று அதனால் கர்வித்திருந்தனள். அவள் புருஷன் தாருகன் அவனும் மகாபலவான். அநேகமான பலவான்களான அசுரர்களுடன்கூடிப் பலவிடங்களிற் போர்செய்து செயங்கொண்டு யாகங்களையும் தருமங்களையும் அழித்துக்கொண்டிருந்தனன். அந்தத் தாருகைக்கு, மேற்கடற்கரையில் பதினாறு யோசனை விஸ்தாரமுடைய வனமே வாசஸ்தானம். அந்த வனமானது தாருகையானவள் பார்வதியைநோக்கித் தவஞ்செய்து பெற்ற வரத்தால், நினைத்தவிடத்திற்குச் செல்லத்தக்கது. ஆதலின் அந்தத்தாருகை ஒருமிடமெல்லாம் அந்த வனமும், அதிலுள்ள விருக்ஷங்கள் தடாகங்கள் மாடமாளிகைகள் அசுரர்கள் குடும்பங்கள் முதலிய யாவையும் உடன்கொண்டு செல்லத்தக்கது. தாருகையும் தாருகனும் அந்த வனத்துடன் ஆங்காங்குப்போய்ச் சில்லோகையுந் துன்புறுத்த யாவரும்பயந்து ஔர்வமுனிவரிடஞ் சென்று ஸ்வாமீ! மகாத்மாவா! தேவரீர் தயைசெய்யாவிடின் நாங்கள் யாவரும் இவ்வசுரர்களால் இறப்போம். நீரோ சகலகாரியங்களையும் நிறைவேற்றும் வல்லமையுடையவர். பூமியில் உம்மையன்றி இரக்ஷிப்பவரொருவருமிலர். உம்மையன்றி வேறியாவரிடத்திற்போய் எங்கள் ஆபத்தை யகற்றுவோம். நீர் விழித்துப்பார்த்தால் எல்லோரும் ஓடிப்போய்விடுவார்கள். இல்லாவிடில் சாம்பராவார்கள். தேவரீரிடத்தில் சுவதேஜஸ் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. உம்மையடித்தவர்கட்குச் சந்நிதானப்போலச்சுகங்கொடுக்கிறீர் என்றிவ்வாறு பலவிதமாக யாவருந்துதிக்கையில், ஔர்வமுனிவர் அடித்தவனைக் காப்பாற்றுமியல்புடையராதலின், நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். இரட்சிப்பேனென்று கூறி, அவ்வசுரர்களுக்குச் சாபமிட்டனராவது:—இராக்

கதர்கள் இனியிவ்வாறு உலகத்திலுள்ள பிராணிகளைத் துன்பப்படுத்தினாலும் தர்மங்களையழித்தாலும் யாகங்களைச் சிதைத்தாலும் அவர்கள் உடனே மரணமடைவர் என்பது. இவ்வாறு ஔர்வமுனிவர் அசுரர்களைச் சபித்துச் சரணமடைந்தவர்களைத் தமதிச்சையின்படியே போகவிடுத்து, தம்மைச் சரணமடைந்தவர்கட்குச் சுகமுண்டாம்வண்ணம் தவஞ்செய்யத்தொடங்கினர். அவ்வசுரர்கட்கு ஔர்வமுனிவர் சாபமிட்டவகையை யுணர்ந்த தேவர்கள் யுத்தசந்நத்தராகிப் போருக்கெழுந்து சிறிதும் பயமின்றி அசுரரை யெதிர்த்துச் சண்டைசெய்தனர்.

அப்போரில் ஆயுதங்களால் அநேக அசுரரிறந்தனர். இவ்வாறு அபஜயமடைந்தஅசுரர்கள்என்னசெய்வோம்; எங்கேபோவோம்; போர்புரியும்நம்மவர் இறக்கின்றனரேயன்றி வெற்றி பெற்றிலர்; கஷ்டம்வந்ததே என யோசிக்கலாயினர். ஔர்வமுனிவர் சாபத்தால் அசுரர்கள் அபஜயமடைவதை வனத்தோடுசென்றுகொண்டிருந்த தாருகை கேள்வியுற்று, அசுரர்களே! யான் பூர்வத்தில் தவஞ்செய்து நான் சென்றவிடமெல்லாம் இவ்வனம் இதிலுள்ள எல்லாவற்றோடும் பின்தொடர்ந்து வரப் பார்வதிதேவியால் வரம் பெற்றுள்ளதனையால், நமக்கு எவ்வகையிலுங் கஷ்டமே வராமாட்டாது. இவ்வனத்தைச் சலத்திலேயே நிறுத்திக்கொண்டு வசித்திருந்தால், சிறிதுகஷ்டமுமின்றிச் சுகமாக வாழலாம் எனக்கூறினள். அதனைக் கேட்ட இராக்ஷதர்கள் மிக்க சந்தோஷமடைந்து, நீ மகா புண்ணியவதி; யோக்கியவதி; எங்கட்கு மகாராணியான உன்னால் நாங்கள் ஔர்வமுனிவர் சாபமேற்றும், இறந்துபோவதினின்று காப்பாற்றப்பட்டோமென்றுகூறி, அவன்இரகஸ்யம்பாளென்று தீர்மானித்து, இவ்வனத்தோடு நாம் அப்படியே விரைவாகச்சென்று எங்கேயாவது சுகித்திருப்போமெனப் பேசிக்கொண்டிருக்கையில், தேவர்கள் யாவரும் மீண்டும் அங்கே போர்க்கருவிகளோடுவந்து சேர்ந்து அவர்களைத்தொந்தரவுசெய்தார்கள். அவ்வமரர்களால்அலைப்புண்டு அசுரர்கள் வருந்துங்காலத்தில், தாருகையானவள் அந்தவனத்தைச் சுகமான இடத்திற்குக் கொண்டுபோகக்கருதி, பார்வதிதேவியை ஜயஜயவென்று பலவாறு துதிக்க, சிறகுடைய பர்வதமானது எவ்வாறு விரைந்து பறந்துசெல்லுமோ அதுபோல அவ்வனமானது அங்கிருந்து மேலே கிளம்பிச் சமுத்திரமத்தியிற்போய்ச்சேர்ந்தது. அதனுல் உபவனம்-நீர்நிலை-கோட்டை-மாடமாளிகைகள் - சுவர்க்கத்திலுஞ் சிறந்த சுகங்கொடுக்கும் உத்தியானவனமுதலியவற்றுடன் அவ்வனம் வந்துசேர்ந்தமையின், அவர்கள் யாவரும்நிர்ப்பயமாயிருந்தனர். அதுமுதல் ஔர்வசாபத்திற்கஞ்சிப் பூமியில்வராது சமுத்திரத்திலேயே வாழ்ந்துகொண்டிருந்து அங்கே யாவராயினும் மரக்கலங்களிலேறி வரக்கண்டால் அவர்களைக் கொலைசெய்வதும், விலங்கிடுவதும், சாராக்கிருகத்திலிருக்கச்செய்வதுமாகத் துன்புறுத்திவந்தனர். முன்னே பூமியிற்செய்த கஷ்டங்கள்போலவே சமுத்திரத்திலகப்பட்டோரைத் தொந்தரைசெய்துவந்தனர்.

இஃதிவ்வாறிருக்கையில், வியாபாரவிஷயமாகவாவது விநோதார்த்தமாகவாவது ஓடமேறிக் கடலில் எவரேனும் வரக்கண்டால், அசுரர்கள் தம் மாயையால் கண்ணுக்குப்புலப்படாது மறைந்துநின்று சமீபித்து வந்த பொழுது, அவர்களியல்லாம் அந்த ஜலமார்க்கமாகவே யிழுத்துக்கொண்டுபோய், தங்கள் வனத்திற் பலவாறு துன்புறுத்துவாராயினர். இவ்வாறு பலமுறை வருவதும் மனிதர்களைப் பிடித்துக்கொண்டுபோவதும் கொலைசெய்வதுமாயிருந்தனர். அசுரர் செய்துவரும் துன்பத்தால் தேவர்களும் மாதுடரும் துக்கக்கடலிலாழ்ந்தனர். அசுரர்களால் காராக்கிருகத்தில் அடைபட்டிருந்தவர்களில் சுப்பிரிய னென்னும் ஓர் வைசிய சிரேஷ்டன் சிவபுத்தனுதலின், தன்னோடிருப்பவர்களைநோக்கிச்சொல்லுகின்றான். அன்பர்களே! நாம் சிவபூஜை செய்யுமெல்லையும் இக்கஷ்டங்களை யநுபவிக்கவேண்டியதே. நாம் விரைவிற் சிவலிங்கார்ச்சனை செய்யவேண்டும் எனக் கூறி, சுப்பிரியன் அவர்கள் யாவர்க்கும் சிவமந்திரங்களை யுபதேசித்து, பார்த்திவலிங்க பூஜை செய்யப்பழக்கி, தானும் அவர்களோடிருந்து யாவருமாகச் சிவலிங்கார்ச்சனை செய்துவந்தனர். அதிற்சிலர் சிவத்தியானத்திலிருந்தனர். சிலர் மானதபூஜையாற் சகல துக்கங்களையும் நீங்கியிருந்தனர். அவ்வையெப்பிரபு பார்த்திவலிங்கத்திற்கு விசேஷமான பூஜையை இடையறாது விதிப்படி செய்தும், தெரியாதவர்கட்கெல்லாம் மந்திரத்தை கன்முகவுணர்த்திச் செய்வித்தும்வந்தனன். இதனால் அக்காராக்கிருகத்திலிருந்த யாவரும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமந்திரத்தால் சிவத்தியானபரராகவிருந்தனர். சுப்பிரியனென்பவன் சிவயோகத்திலிருந்துகொண்டிருக்கையில் சிவபெருமான் அவன் விஷயத்திற் களிகொண்டு பிரத்தியக்ஷமாய், தன்னை மறந்திருக்குஞ் சுப்பிரியனைச் சிவயோகத்தினின்று விழிப்பித்தனர். இவ்வாறு இவர்கள் யாவரும் சிவபூஜை செய்துகொண்டிருந்த காலம் ஆமாதங்களானமையின், அசுரர்கள் இவர்கள் யாது செய்துகொண்டிருக்கின்றனரென்று கண்டுவரும்படி தமது சேவகரை யனுப்ப, அச்சேவகர்கள் அப்படியே காராக்கிருகத்தையடைந்து காண்கையில், சிவபெருமான் பிரத்தியக்ஷமாயிருப்பதைப் பார்த்துத் தாருகனிடஞ்சென்று இச்செய்தியைக் கூற, தாருகன் உடனே காராக்கிருகத்திற்குவந்து சிவப்பிரியனைக்கண்டு, நீ என்னவகையாகத் தியானஞ்செய்கிறாய்? அதனைச் சத்தியமாகச் சொல் என, இவனும் அருகிருப்பவரும் ஒன்முறையாது நீயே தெரிந்துகொள்வாய் எனக்கூற, தாருகன் கோபித்து அசுரர்களையழைத்து இவர்கள் எல்லோரையுஞ் சங்கரிக்கவேண்டுமெனக் கட்டளையிட, அசுரர்கள் யாவரும் உத்தரவின்படி அநேக ஆயுதங்களைத் தாங்கிவருகையில், வைசியசிரேஷ்டனுகிய சிவப்பிரியன் பயத்துடன் துன்புற்று, ஸ்வாமீ! அபயம். சங்கரா! அபயம். ஸர்வமும் நீயேயானவனே! அபயம் என்று தியானிக்க, பூமியினின்றெரு ஆலயம் நான்கு வாயில்களோடும், அதின்மத்தியில் திவ்விய தேஜோமயமான சிவரூபம் பரிவார தேவர்களால் துதிசெய்யப்படுவதாகவுந்தோன்றி, நான் உங்களைக்காக்கிறேனென்று அபயவார்த்தைகள்கூறி, பாசுபதாஸ்திரத்தைக்கொடுக்க, சுப்

பிரியன் தனக்குச் சிவபெருமான் பிரசாதித்த பாசுபதாஸ்திரத்தால் சகல ராக்ஷதர்களையுஞ் சங்கரித்துவிட்டனன். இவ்வாறு அசுரரியாவரும் அழிந்தபின்னர், சுப்பிரியனோக்கி இவ்வனத்தில் இனி வருஞ்சிரம தருமங்கள் செவ்வனே நடந்தேறிவரும். பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் தங்கள் தருமங்கள் தவறார்கள். பிரமசரிய கிருகஸ்த வானப்பிரஸ்த சந்நியாசிகள் தங்கள் ஆச்ரமவொழுக்கங்களை நீங்கார்கள். துஷ்டர்கள் இங்கிருக்க இடமில்லை எனக்கூறிக்கொண்டிருக்கையில், தாருகி உமாதேவியாரைத் தோத்திரஞ்செய்ய, பார்வதாதேவியார் பிரசன்னமாய் உனக்கு யாதுவேண்டும்? என, என்வமிசம் அழியாதிருக்கவேண்டும் எனவேண்ட, தேவி உன்வமிசத்தைச் சத்தியமாகக்காக்கிறேனென வரங்கொடுத்து, சிவபெருமானிடஞ்சென்று, ஸ்வாமீ! நான் அசுரவமிசத்தை இரக்ஷிக்கிறதாக வரங்கொடுத்திருக்கிறதின் தேவரீர் அவர்களைக் காப்பாற்றவேண்டும் என, சிவபெருமான் கோபிக்க, பார்வதி தேவரீர்சொல்லியவார்த்தை யுகாந்தத்தில் அவசியம் நிகழுமாக: அந்தவரையில் இராட்சர்களிருக்கவேண்டும். இந்தமத சிருஷ்டியில் லாவிடிற் பிரளயம் நடவாது. இத்தாருகை பலமுடையவள். இவள் அரசாகழியில் அசுரவிருத்தியுண்டாகட்டும். அவர்கள் இவ்வனத்தில் வசித்திருக்கட்டும் என, சிவபெருமான் தேவியின்விருப்பங் கைகூடவும், காராக்கிருகத்திலிருந்தவர்கட்குக் கொடுத்தவரம் சரிவரநடக்கவுங்கருதி, தான் இக்கேயேயிருந்து இவ்வசுரரால் நிமகள் நிகழாவண்ணஞ் செய்துவந்தனன். மகாசேன ராஜன் குமாரனுன வீரசேனன் கலியுகமுடிவுங் கிருதயுக ஆரம்பமுமாகுங் காலத்தில் என்னைத்தரிசித்து என்னைப்பூஜித்து அப்பலனால் சக்கரவர்த்தியாகப்போகின்றன். அவனுக்கு நானுதர்மங்களையுபதேசித்து விருத்திசெய்யவேண்டியிருக்கிறது என்று சிவபெருமான் சொல்லினர். இவ்வாறு சிவபெருமானும் பார்வதியும் சம்பாஷித்துப் போகேசுவரரென்னும் பெயரால் அங்கு எழுந்தருளி யிருக்கின்றனர் என்று ஸூதமுநிவர்கூறினர். அதனைக் கேட்ட ஸநகாதியரான ரிஷிகள் ஸூதமுநிவரே! வீரசேனன்யாதுகாரணமாக அங்கேபோயினன் எனக்கேட்க ஸூதமுநிவர் சொல்லுகின்றார். 1145/11

நைஷதமென்னும் பட்டணத்தில் க்ஷத்திரியகுலத்தில் மகாசேனனுக்குப் புத்திரனுகத்தோன்றி அகண்டமான பார்த்திவலிங்கபூஜையைப் பன்னிரண்டுவருஷகாலஞ்செய்து சிவபெருமானைத்தரிசித்து, மந்தாலிசருமீன்செய்து அதனை சயத்தாலலங்கரித்து அதற்குமாயாசக்தியுண்டாக்கிக்கொடுக்கப்பெற்று, 'அநேகமரக்கலங்களுடன் அப்பொழுதுவரக்கும் மிலேச்சசேனையோடி தாருகையின்வனத்தையடைந்து, அவ்வனத்தில் ஒன்றியபடைக்கலம்பட்டுள்ள இத்திருக்கோயிலில் விளங்கும் போகேச்சுவரலிங்கத்திற்குப்பூஜைசெய்து பாசுபதாஸ்திரத்தைப்பெற்று, பார்வதிதேவியின் பரிபூரணகடாக்ஷம்பெற்ற தாருகைமுதலிய இராக்ஷதஸ்திரீகளையும் தாருகன்முதலிய இராக்ஷதர்களையுஞ் சங்கரிக்கக்கடவாய். உன்னைக் கண்டமாத்திரத்தில் தாருகையின் வலிமை நிறைதுமின்றி விலகும்' என வரம்

பெற்று, சர்வ [illegible]க்தனே யெல்லாவற்றையும் நிறைவேற்றக்கடவாய் என் ஆசீர்வதிக்கப்பெற்று, அவ்வாறே அவ் வீரசேனன் அத்தவனத்தையடைந்து அங்கிருந்த அசுரர்களோடுஞ் சங்கரித்து அங்கேயே அரசுசெய்வான்: இதுவே போகேசுவர ஜோதிர்லிங்க மகாத்மியம்: இனி இராமேசுவர ஜோதிர்லிங்க மகாத்மியத்தைச் சொல்லுகிறேனென்று ஸூதமுனிவர் கூறியருளினர்.

போகேசுவரமகிமையுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தேழாவது

இராமேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளான சௌநகாதி முனிவர்களே! மேலுமே னுஞ் சிவசரித்திரங்களையே கேட்கவிரும்பிய நீங்கள் இராமேசுவர ஜோதிர் லிங்க மகிமையைப் பக்தியுடன் கேளுங்கள். அது சகல பாபங்களையு மகற்ற வல்லது என்று ஸூதமுனிவர்சொல்லத்தொடங்கினர்: ஒருகாலத்தில் அயோ த்திதேசத்தரசனுகிய தசரதசக்ரவர்த்தியின் குமாரராகிய ஸ்ரீராமர் தன் தம்பி இலட்சுமணரோடும் சுக்கிரீவன் முதலிய பதினெட்டுப் பதுமத்தொகை யுடைய மகா பலசாலிகளான வானரவீரர்களோடுங் கூடித் தென் கடற்கரை யையடைந்து அங்கே தங்கி, தம்பியாலும் சகல வானரவீரர்களாலுஞ் சே விக்கப்பட்டு, ஜநகராஜன் மகளாகிய சீதாதேவி என்னுடன் எப்பொழுது கூடி வாழ்வாளென்று விசாரப்பட்டுக்கொண்டு, இந்தச்சமுத்திரமானது மிகப்பெ ரிதாயிருக்கின்றது. தாண்டிச்செல்லவேண்டிய தூரியங்கள் வானரங்களாயி ருக்கின்றன. நமக்குச் சத்துருவான இராவணன் திருக்கைலாயபர்வதத்தை யெடுத்த மகாபல பராக்கிரமசாலி. இஃதெப்படிநடக்குமோ? என்று துக்கித் துக்கொண்டு, தன் தம்பியாகிய இலட்சுமணனைப் பார்த்து, தம்பி இலக்கு மணு! யான் தாகமாயிருத்தலின் எனக்கு ஜலம் வேண்டுமெனக் கூறமுன், அருகிருந்து கேட்ட வானரவீரர்கள் விரைவில் புனிதமான தீர்த்தத்தைச் சேகரித்துக்கொண்டுவந்து வைத்து, ஸ்வாமீ! சுத்தஜலங்கொண்டுவந்தோம் அதனைப் பருகலாமென, ஸ்ரீராமர் அந்த ஜலகும்பத்தைக் கையிலெடுத்து, சிவபூஜை செய்யாமையை நினைத்துக்கொண்டு, வானரவீர்களே! யான் சிவ பூஜைசெய்யும் வழக்கமுடைமையை நீங்களும் அறிவீர்களே: யான் இன் னும் அதனைச்செய்யாமையின் ஜலபானஞ்செய்தல் யுக்தமல்லவென்று கூறி, நீர் பருகுவதை நிறுத்தி, பார்த்திவலிங்கமொன்றியற்றி ஆவாஹநமுதல் நம ஸ்காரம் இறுதியாயுள்ள பூஜைமுழுவதுங் கிரமப்படிசெய்து, சிவபெருமானை மனதுக்கினையாத பலவிதமான தோத்திரங்களால் துதித்து, சங்கரா! இக் கடல்நீர் விசேஷமானது. என் சத்துருவான இராவணன் பெரும்பலவான். எனக்கோ மிஞ்சினகாரமுடைய வானரங்களே சேனையாயிருக்கின்றன. இச் சமயத்தில் தேவரீர் கடாக்ஷம் மிருதியும் இருக்கவேண்டும். இராவணன்

தேவரீருக்குஅன்பனுதலின் மாறுடரால் ஜயித்தற்கரா தியனுயிருக்கின்றான். உலகோபகாரமான இந்த இராவணசங்கார விஷயத்தில் தேவரீர் கருணை வைத்தருளவேண்டும் எனப் [illegible]ர்த்தித்துப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்க ரித்து ஜயஜயவென்று புகழ்ந்து, சிவமந்திரத் தியானத்துடன் புனர்பூஜை செய்து கல்லவாத்திய முழக்குகையில், சிவபெருமான் அவரது பூஜைக்கு மகிழ்ந்து சகல பரிவாரங்களுடன் தனது நிஜவடிவங்கொப் பிரசன்னராகி, ஸ்ரீராமா! உனக்குச் சுபம் உண்டாகுகவெனக்கூற, சிவபெருமானது திவ்விய மங்கள தேஜோரூபத்தைத்தரிசித்து மீண்டும் முறைப்படியர்ச்சித்து அநேக விதமான தோத்திரங்களால் துதித்து நமஸ்கரித்து, எனக்கு இராவண னைச் செயிக்கத்தக்க வரங்கொடுக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெரு மான் அவ்வாறே உனக்கு ஜயமுண்டாகும் எனக் கூறினர். ஸ்ரீராமர் தான் பருகும்படி சேகரித்துவைத்த ஜலத்தைச் சிவபெருமானுக்குச் சமர்ப்பித் தப்பருகி, மீண்டும் சிவபெருமானை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் இத்திருவு ருவத்துடனே இங்கெழுந்தருளியிருந்து எல்லோரையும் புனிதமாக்கிவர வேண்டும் எனப் பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வாறே ஸ்ரீராமரது வேண் டுகோளுக்கிரங்கி இராமேசுவரனென்னும் பெயருடன் திரிலோகத்தாராலும் புகழும்படி அங்கெழுந்தருளி யிருந்தனர். இந்த இராமேசுவர ஜோதிர்லிங் கப் பிரபாவத்தைக் கேட்டவர்களுக்குச் சகலபாபங்களும் விலகும் என்று கூறியருளினர்.

இராமேசுவரமகிமையுரைத்தது.
முற்றிற்று.

ஐம்பத்தெட்டாவது

குஸுமேசுவர மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவர் சைமிசாரணிய வாசிகளைநோக்கி, இனி குஸுமேசு வர ஜோதிர்லிங்க மகிமையுங் கூறுகின்றேன் கேட்பீர்களாகவெனச் சொல் லத்தொடங்கினர்: ருஷிகளே! தென்தேசத்தில் தேவகிரி யென்றொரு பர் வதமுண்டு. அதனருகே ஒருபிராமண அக்கிரஹாரமும் உ. அவ்வக்கிரஹாரத் தில் பாரத்துவாஜ கோத்திரத்திற்பிறந்த சுதன்மன் என்னும் பெயருடைய சிவஞானியாகிய உத்தமப்பிராமணனிருந்தனன். அப்பிராமணனுக்குப் பதி விரதையும் தர்மமார்க்கத்தில் மனமுடையவளுமான சுதேகை யென்னும் அன்புள்ள மனைவியிருந்தாள். மேற்சொன்ன சுதன்மன் தேவபூஜை அதிதிபூஜை முதலியவற்றைக் கிரமப்படிசெய்பவனும், வேதவேதாங்கங்களைப் பாராயண ஞ்செய்பவனும், திரிகாலத்திலும் அக்கினிகாரியஞ்செய்பவனும், சூரியனுக் குச் சமானமான சிவதேஜசுடையவனும், சிஷ்யர்கட்கு வேதாத்தியயனமுதலிய வற்றை நன்குணர்த்தவல்லவனும், தனவானும், யாசித்தவர்கட்குக் கொடுக் கக் குறையா மனமுடையவனும், பல நற்குணங்கட்கு இருப்பிடமானவனு மாய்க் காலங்கழித்துக்கொண்டிருந்து, ஆயுள்காலம் அதிகமாகச்சென்று

விட்டமையின், அந்நாமனைவி ஸுதேஷை யென்பவளுடைய குதுகா
முழுவதும் வியர்த்தமாயிற்று. அவள் சிவஞானியாயிருந்தமையின் இவ்வி
யத்தை மனத்திற் கொள்ளவேயில்லை. தனக்கு மோக்ஷங்கொடுப்பவ
சிவபெருமானே: சமுத்ர ஜலத்தினின்று புனிதமாக்குபவனும் சிவபெ
மானே யென்று நினைத்து மனைதுக்கமின்றியிருந்தனள். இவளது மனோ
யோ புத்திரப்பேறில்லாமற் போயிற்றேயென்று துக்கித்துத்தினந்தோறு
புருஷனைப்பார்த்து, ஸ்வாமீ! நமக்குச் சந்தானமுண்டாகத்தக்க விஷயத்
பிரயத்தினஞ்செய்யவேண்டுமெனக் கூற, ஸுதன்மன் மனைவியைநோ
பெண்ணே! பிள்ளைகள்யாவர்? தாய்தந்தையர்யாவர்? பந்துயாவன்? பிற
எவன்? உயிருக்கும் உடலுக்கும் தொடர்தமென்ன? ஆராய்ந்தால் எ
மாயாவிலாசமேயன்றி வேறின்றே என்று இன்னணைய பலவெடுத்துச்
கண்டித்துக்கொண்டு பிள்ளையில்லையென் றுக்குக்கத்தைவிட்டிடவே
தினந்தோறும் இவ்விஷயத்தை யென்னிடஞ் சொல்லவேண்டா
கூறி, சிவதருமங்களில் மிக விருப்புடையவனுய்ப் பெருஞ்சந்தோ
சுகமுக்கண்களோடிருந்தனன். ஸுதன்மன் ஒருகாலத்தில் த
னின்று நீங்கி, மனைவியுடன் சத்புருஷரை யடைந்து விநோதமாகப்
போக்கிக்கொண்டிருக்கையில், ஸுதேஷையும் அவ்வேதியர் மனை
வார்த்தையாடிக்கொண்டிருந்தனள். அப்பொழுது அம்மாதரிடை
அம்மா! நீ சந்தானமில்லாதவள். சந்தானமில்லாதிருக்கையிலே
கர்வமடைகிறாய்? அக்கர்வத்தா லென்ன பயனுண்டு? க புத்
யம் பெற்றவள். என்செல்வத்தை பென் புத்திரன் அநுபவிப்ப
செல்வத்தை அநுபவிப்பவர் யாவர்? ஓ மலடே! உன்பொருளை
அநுபவிக்கவேண்டி வருமேயன்றி வேறெவர் அநுபவிக்கத்தகுதி
கூறி அவமதித்தாள். அதனைக்கேட்ட ஸுதேஷை மனவருத்தத்
டிற்குவந்தனள். தன் கணவனும் சிறிதுநேரத்தில் வீட்டிற்குவந்
னே ஸுதேஷை தன்கணவனுடு நடந்தவிஷயத்தையெல்லாம்
அவர்கள் என்னசொல்லினும் நமக்கென்ன? சொல்லிக் கெ
நீயேன் அதனைக் கவனிக்கிறாய்? என்று பலவாறு கண்டித்து, த
தாதிருந்தனன். அவமானமுற்றது சகியாத மனைவியானவள் கண
மொழியாற்பணிந்து, ஸ்வாமீ! எவ்வகையிலாவது நாமோர் பு
தேடிக்கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தித்து, அவ்வாறுசெய்யா
தில் யான் உயிர்துறப்பேன் எனக்கூற, ஸுதன்மா மனைவருத்தமுற்
க்கினிவளர்த்திப் பூஜைமுடித்து, அதனருகே இரண்டு புஷ்பங்களை
வலப்புறத்து மலர்கிடப்பின் புத்திரபாக்கியமுண்டாகுமென்று நி
செய்துகொண்டு மனைவியையழைத்து, பெண்ணே! நீ சிவபெருமா
தியானஞ்செய்து புத்திரபாக்கிய மூண்டாவதற்கு உனக்கிஷ்டமான ம
யெடுத்துக்கொள் எனக்கூற, ஸுதேஷை தன் கணவன் புத்திரப்பேறை
தானும் கிடைக்கவேண்டுமென்று நியமித்தமலரை யவன் அடையவேண்டு

ன்று சர்வலோகநாதனுடைசிவபெருமானைத்தியானித்து அக்கினிதேவனையும்
உளிர்த்து, தன் கணவன் வைத்த மலர்களிரண்டில் ஒரு மலரினை யெடுத்தனள்.
மற்ற புத்திரஹீனமான மலரை அதன் ஸுதன்மாபெருமூச்சுவிட்டு, பெண்ணே!
நீ புத்திரரற்றவளாயிருக்கின்றது என்று அவளருகிருந்து சமாதானங்கூறி,
தெனி நீ சிவதியானஞ் செய்யவேண்டுமென்றுகூறி, நீயும் புத்திரப்பேற்
மனம் விருப்பற்று, சிவத்தியானபரனாகத் தருமகாரியத்திலிருந்தனன்.

ஸ்ரீ இஃதிவ்வாறிருப்பினும் ஸுதேஷை புத்திரனிருப்பத்தினின்று நீங்
மங்களாய்க் கணவனைப்பார்த்து ஸ்வாமீ! என்னிடத்திற் புத்திரோற்பத்தி
விதத்திலாயினும் நீர் வேறொரு மனைவியை மணம்புரிந்தாவது நமது வம்சத்
னைச் சிருஷ்டிசெய்யுமாறு புகல்வினைப் பெறவேண்டும். நீர் மறுமணஞ் செய்
மான் என்ன நான் சம்மதிக்கிறேன்; இனி நீர் வேறு பெண்ணை மணம் புரி
பருருப்புவனிடத்திற் புத்திர சந்தான முண்டாவதற்குத் தடையில்லை எனப்
துப்பரூபித்க, ஸுதன்மன் மனைவியை நோக்கி, பெண்ணே! நான் மணஞ்
ருவதினுள்வேனுயின் தற்கர்ஸ்செய்துவருந் தருமங்கட்கிடையூறு சம்
வேண்டும் உனக்கும் எனக்கும் பலவித மனஸ்தாபங்கள் வருமாதலின் இனி
கோளுரும் புரியச் சம்மதியேனெனக் கூறியும், ஸுதேஷை தனது தமயன்
புகழும்படியே நுண்மையென்னுங் கன்னிகையை மணஞ் செய்துகொள்ளவே
கப் பிரபன், ஸுதன்மன் நான் இவளை மணம் புரிவது இப்போது உனக்குச்
கூறியருளியிருக்கிறது. நான் மணஞ் செய்துகொண்டு இவள் பிள்ளையைப்
அப்போது உனக்கு வருத்தமாயிருக்கும். நீயே இவளுடன் சண்
ாய்: வேண்டாமென, ஸுதேஷை இவள் என் தமயன் குமாரி,
ஆகலால் நீர் மணஞ்செய்துகொள்வதால் நான் இவளைக் கொ
டத்தி, சந்தானமிருப்பமுடையளாதலின் உங்களிருவருக்கும்
செய்குவேன். நீர் மணஞ்செய்துகொள்ளவேண்டுமென்றே
வ, ஸுதன்மன் மணஞ் செய்துகொள்ள மனம் விரும்பி, அப்படி
வ ஜோதிர்மனையினை முடித்துக்கொண்டபின், சுகமை பெண்ணும் இவை
லத்தைபார்த்து, இந்த ஸுதேஷையோடு நீ சண்டை செய்யாமலும்
வதுமுண்டுபாமலும் அன்போடு பாதுகாக்கவேண்டியதென்று முத்தான்
தில் பாரத்தி இவையாள்கையி லெளிப்புவித்தனன். இவையாளும் கணவன்சு
சிவஞானிதைனைக் குருமொழியாகக் கொண்டனள். மூத்த மனையாகிய
விரதையும்மும் தன் தமயன்குமாரி வபதிற்றியவளாதலாலும் தானேதோ
அன்புள்ளவெத்து தன் கணவனுக்கு மணஞ் செய்வித்த பெண்ணைபடியர
முதலியட்டவேலைகளெல்லாந் தானே செய்துவந்தனள்.

ஞ்செய் ஒருகாலத்தில் ஸுதன்மன் தன் இவைய மனையாகிய குஸ்மையை
குச்சி, பெண்ணே! இனி நீ சிவபூஜையைத் தினந்தோறுந்தவறுமற் செய்
வற்கண்டுமெனக் கூறி, சிவபூஜாவிதானத்தையும் போதிக்க, அவள் அவ்வா
கக் காலோறும் தூற்றொரு பார்த்திபலிங்கங்களைப் பூஜித்து அருகிலுள்ள
மாய்டாகத்தில் விட்டெறிவாள். அவள அவ்வாறு ஒவ்வொரு தினமுந்

தவறுதல் செய்துவருங்காலையில் அவள் பூஜித்த லிங்கங்களின் தொகையு யிற்று. அப்பொழுதுசிவபெருமானுக்குக் கிருபையுண்டாகி, அவ பமுற்றுச் சுப்பிரிய ரென்னும் புத்திரனைப் பெற்றனள். ஸுதன்மன் திரனைப்பார்த்துப் பெருங்களிப்புற்று, இதுவரையில் சமுசாரத்தில் அகப்ப டாதிருப்பினுங் காலத்தையநுசரித்து, மணவி புத்திரர் முதலானரிடத்தில் ஆசையடைந்தனன். அதனைக் கண்ட மூத்தமனைவியோ தன் கணவன் குஸ் மையினிடத்திலும் அவள் புத்திரனிடத்திலும் அதிக அன்புடனிருப்பதால் மனவருத்தங்கொண்டு சிறிது கடுகெடுப்பால், முன்னிருந்த அன்பு சிறிது சிறி தாகக்குறைந்து இலேசமுமின்றிப் பெரும்பகைகொண்டவளாயினள். மேல் நடந்த விருத்தாந்தங்களையுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள் முனிவர்களே ! என்று ஸூதமுனிவர் சொல்லலுற்றனர்.

முனிவர்களே ! ஸுதன்மனுடைய மனைவியிருவரில் இளையவளா கிய குஸ்மையையும் அவள் புத்திரனையும் எல்லோரும் அன்போடு கண்டு பேசுவதால் ஸுதேஹையின் மனம் நெருப்புபோலெரிந்தாள். அக்குமாரன் சிவாநுக்கிரகத்திற் சென்னித்தவனுதலின் வித்தை புத்தி வயது முதலியன படிப்படியாய் விருத்தியாசக்கண்டு, உறவினராகிய வேதியர்கள் பெண்கொ டுக்கிறதாகவந்து பேசி முடிவுசெய்து சுபலக்னத்தில் விவாகஞ்செய்து முடித்தனர். ஸுதன்மன் குஸ்மையை மணஞ்செய்ததால் தான் அடையவே ண்டிய புத்திரானந்தத்தை யடைந்தனன். வீட்டிற்குவந்த உறவினர்யாவரும் இளையாளிடத்திற் பேசுவதும் அன்பு செலுத்துவதுமேயன்றி மூத்தாளிட த்திற்பேசுவாருமிலராக, ஸுதேஹை மனவருத்தமுற்றிருந்தாள். ஸுதன் மன் தன் மகனையும் மருகியையும் குஸ்மையின் இருதொடையீ தூட்காரு திருக்கக்கண்டு பெருங்களிப்படைந்தான். குஸ்மை மனங்களிப்பது கண் சுதேஹை இனி யென்னசெய்வேனென் றழுதுகொண்டு நிழுவிழுந்தா சுதன்மன் தன் மூத்த மனைவியிடத்திலேயே அதிக அன்புவைத்திருந்து குஸ்மை பக்நிசெய்துவந்தும், புத்திரனும் மருகியும் அடங்கியிருந்தும் வர் செய்யும் நன்மைகளையுங் கவனியாது சுதேஹை மாத்திரம் தன் மன லேயே எதோ வொருவருத்தமிருப்பதாகவே காட்டிக்கொண்டிருந்தா அதுகண்ட குஸ்மை அவளைப்பார்த்து நீயேன் இப்படியிருக்கிறாய் ? இ உன்மருகி; இவன் உன்மகன்; நீ ஜேஷ்டை; கணவர் உன்னிடத்தில் அ அன்புவைத்திருக்கிறார். அப்படியிருந்தும் நீவருத்தமாயிருப்பதுயாதுக் என்று கூறியும், தன் கோபாக்கினி தணியாதவளாய் ஒன்றுங் கூறாது, எ கோபம் எப்படித்தணியுமென்று யோசித்து, இக்குஸ்மை கண்மறைவிட்ட காலன்றி என்னுக்கமானது சிறிதும் தணியாது என்றுகருதி, இதற்கு யா செய்யவேண்டுமென்றால், குஸ்மையின் மகனை சுப்பிரியனை மாத்திரம் கொ ன்றுவிடவேண்டும். மேலே நடப்பது நடக்கட்டும் என்று தீர்மானித்

ன்று சர்வபாராகளின்) ஒருநாள் குஸ்மையின் மகனும் மருகியுஞ் சயனித் பனிந்துபடிருக்கையில், சுப்பிரியனைச் சரிகையாற் பல துண்டங்களாக அது பஅப்பொழுதே ஒருவருமுணராது எடுத்துக்கொண்டுபோய், குஸ் மன் சிவபூஜைசெய்த லகூலிங்கங்களையும் விடுத்த அக்குளத்தில் ஒருபக்கத் லே கொட்டிவிட்டு, வீட்டிற்குவந்து ஒன்று மறியாதவள்போலச் சயனித் துக்கொண் டிருந்தாள். பொழுதுவிடிவதாயிற்று. அப்பொழுது குஸ்மை பழுந்து ஸ்நானஞ்செய்து வீட்டுவேலை முடித்துச் சிவபூஜையிலிருந்தனள். ஸுதர்மனும் எழுந்து ஸ்நானம்-நித்யகருமம்-சிவபூசைமுதலியன செய்துகொ ண்டிருந்தான். மூத்தவளும் எழுந்து, தினமும் வருத்தமாயிருப்பதுபோ ன்றி மனத்திருப்தியாய் வீட்டுவேலையிலிருந்தாள். மருகி நித்திரை தெளிந் தெழுந்து பக்கத்திற் கணவனைக்காணாது, உதரஞ்சிந்தியிருப்பதும் அவய வங்களைத் துண்டித்த துண்டுகளிற் சிலவிழுந்துகிடப்பதுங்கண்டு, துக்கத் துடன் மாமியையழைத்து, உன்மகன் எங்கே ? பக்கமெல்லாம் உதிர மயமாயிருப்பதேன் ? அவயவத்துண்டுகள் காணப்படுவானேன் ? எனக்கூறு கையில், மூத்தாள்கேட்டு உள்ளே சந்தோஷ நிறைந்திருப்பினும், ஐயோ அப்படியா முடிந்தது என்று மேலுக்கழுதாள். இளையாள் தன் மருகியின் முறைப்பாடுகேட்பதாயினுஞ் சிவபூஜைசெய்து தியானசமாதியிலிருத்தலின், அதனைக்கைவிடாமலும் மனமிளையாமலு மிருந்தாள். அவளுக்குப் புத்திர னிடத்தில் ஆசையிருப்பினும் அதனை யிளையாதுதுக்கமின்றிக்கேவலம் சிவத் தியானத்திலிருந்தாள். ஸுதன்மனும் தன் சிவத்தியானத்துடனே இதனைக் கேட்பினும் இதில் மனஞ்செலுத்தாமற் சிவயோகத்திலேயே யிருந்தான். அவர்கள் சிவத்தியானம் முடிவதற்கு இரண்டுஜாமமாயின. அவர்கள் இரு வரும் புத்திரனிறந்ததாகத் தெரிந்துகொண்டு, சிறிதுந் துக்கியாது இதுவ ரையில் நாம் யாரை உபாசித்துவந்தோமோ அவரே நம்மைத்திருப்திசெய்ய அப்புத்திரனை யெழுப்பித்தரவேண்டுமென்று கருதி மனந்தளர்ந்திலர். அப் படிப்பிரபுவான சிவபெருமான் நம்மை இரக்ஷிக்காவிட்டால் (மலர்கொய் வோன் கட்டிக்கொடுத்த மாலையானது சிறிதுநேரத்தில் வாடிவிடுமாயின் இதன்தன்மை யில்வளவேயென் றறிவதுபோல) நமது கர்மானுசாரம் இவ்வளவேயென்ன எண்ணிக்கொள்வோம் என்று தீர்மானித்தனர். குஸ் மைமலுக்கப்படி தான் பூஜித்த இலிங்கங்களை யெடுத்துக்கொண்டுருளத்திற் குப்போய் அதில்விட்டுவிட்டு, வீட்டிற்குருத்திரும்புகையில், மூத்தாளால் துண் டித்து எறியப்பட்ட புத்திரன் அக்குளத்திலே உயிர்கொண்டு தோன்றி, அம்மா ! நானும்வருகின்றேன். நான் இறந்துபிழைத்தேன் எனக்கூறக்கே ட்டு, குஸ்மை முன்போலவே சந்தோஷித்தனள். அப்பொழுது சிவபெரு மான் பிரசன்னராகி குஸ்மையைநோக்கி, நான் உனக்குவரங்கொடுக்கிறேன். உன்புத்திரனை முத்தாள் கொன்றனள். அவனை உயிர்ப்பித்துக்கொடுத்தேன். அந்தச் சுதேஹையை எனது திரிசூலத்தாற் சங்கரிக்கிறேன் என, குஸ்மை ஸ்வாமீ ! அவள் என் அத்தை. எனக்கு மூத்தவள். அபகாரஞ்செய்தவர்

கட்கு உபகாரஞ்செய்வதே தகுதி. தேவரீரது தரிசனத்தாலேயே அவளுக்குப் பாபந்தொலைந்தாமொழியும். அவளுக்கு நல்லபுத்திவரும். அவளுக்கு மீண்டும் அபகாரஞ்செய்விப்பது யுக்தமல்ல என, சிவபெருமான் இன்னும் எதேனும் வேண்டியவரத்தைக் கேட்டுக்கொள் என, ருஷ்மை எனக்கு வரங் கொடுப்பதாயின் தேவரீர் உலகங்களை இரகஷிக்கவேண்டி இச்சுந்தரரூபத்துடன் இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வாறே உன்பெயரால் ருஷ்மேசனென்று இங்கெழுந்தருளியிருக்கிறேன். நீ சிவலிங்கங்களையெல்லாம்விடுத்த இத்தடாகமே ஆலயமாகுக. உங்கட்கு ஒருவனேபுத்திரன். அவன்மூலமாக இந்தவமிசத்தில் அநேகபுத்திரர்களுண்டாகி, அவர்களில் தீர்க்காயுவுடையவரும், வித்தியாவான்களும், புத்திமான்களும், தனவான்களும், யாகாதிகரரிகளும், ஜ்ஞானிபுத்திரர்களுடன்கூடினவருமாக விளங்குவர். இவ்வமிசம் விருத்தியடைந்திருக்குமென்று வரங்கொடுத்து, சிவலிங்கரூபமடைந்து ருஷ்மேசுவரனென்னும் பெயரால் அக்குளமேகோயிலாகக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றனர். ஸுதர்மனும் ருஷ்மையும் ஸுதேஷ்ணையை யழைத்து, சிவபெருமானையும் பார்வதிதேவியாரையும் தூற்றிறுறு பிரதக்ஷிணஞ் செய்யச்சொல்லி, அவள்கையாற் சிவபூஜைசெய்வித்து, சிவாநுக்கிரகத்தால் அவள் மனத்திலிருந்த பொறாமையைப் போக்கடித்து யாவருஞ் சுகித்திருந்தனர். இவ்வகைய பிரதாபத்தையுடைய ருஷ்மேசுவரனைத் தரிசித்தமாத்திரத்திற் சகல பாபங்களுமொழியும். சுக்கிலபக்ஷசந்திரன்போலச் சம்பத்துகள் விருத்தியடையும். சௌகாதிமுனிவர்களே! இதுவரையில் நீங்கள் கேட்ட ஜோதிர்லிங்கங்களின் சரித்திரங்களைச் சொல்லி முடித்தேன் எனக் கூறிய ஸுதமுனிவனை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் கூறிய சரிதங்களாற் பெருங்களிப்புற்றோமாயினும் இன்னுஞ் சிவசரித்திரங்களையே கேட்க விரும்புகின்றோம் என, ஸுதமுனிவர் ஆநந்தம்யமாய்ச் சிவசரித்தியானஞ்செய்து சொல்லத்தொடங்கினர்.

ருஷ்மேசுவரமகிமை முற்றுற்றது

முற்றிற்று.

ஐம்பத்தோன்பதாவது

இரணியகசிபன் வரம் பெற்றதும்,

பிரகலாதனைப் படிப்பித்ததுமுரைத்த அத்தியாயம்.

மகருஷிகளே! சிவபெருமானுடைய திவ்விய கல்யாண குணங்களை வருணித்துச் சொல்ல யாவராலுமுடியாது. ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்திரங்களையும் உலகத்திலிருக்கும் மணலையும் மழைத்துளிகளையும் எண்ணிமுடித்தாலும் முடிக்கக்கூடுமாயினும், சிவபெருமானுடைய லீலாவிநோத குணங்களைக் கணக்கிடலாமென்றால் யாவரொருவரும் வல்லவராகார். ஆயி

னும் நீங்கள் யாவரும் என்னைக் கேட்பதால் என் புத்திக்குத் தோன்றியவையிலும் என் குருவாகிய வியாஸபகவான் எனக்கு உரைத்தது போலவுஞ் சிறிது சொல்லுகிறேன் கேளுங்கள்: முன்னொருகாலத்தில் நரசிங்கரூபமெடுத்த விஷ்ணுவானவர் இரணியகசிபனைச் சங்கரித்துக் கோபாக்கினி தணியாமல் எவ்வெவர் தோத்திரஞ்செய்வதுங் கொள்ளாதிருக்கக்கண்ட தேவர்கள் யாவரும் சிவபெருமானைப் பிரார்த்திக்க, சிவபெருமான் சரபரூபமடைந்து நரசிங்கத்தைக் கண்டமாத்திரத்தில், நரசிங்கமானது சிவபெருமானிடத்தில் ஐக்கியமாயிற்று. எனக்கூறக் கேட்டகைலாசாணியவாகிகள் ஸ்வாமீ! அடியேங்கட்குத் தேவரீர் நரசிங்காவதார சரித்திரத்தைச் சொல்லவேண்டுமெனக்கேட்க, ஸுதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

ஒரு காலத்தில், லக்ஷ்மியானவள் விஷ்ணுவைப்பார்த்து, ஸ்வாமீ! தேவரீர் திருவுருவம் மிகக்கோமள மாதலின் எவ்வாறு போர்புரிதற்கியலும் எனக்தேட்க, திருமால் பெண்ணே! நீ விரும்பினால் வீரைவிற் பார்ப்பாய் என்று கூறினர். இதுநிற்க: முன்னே ஜயவிஜயரென்னுந் துவாரபாலர்கள் சநத்குமாரமுனிவர் முதலானோருடன் போர்புரிந்தபொழுது, விஷ்ணு அங்கே சென்று அம்முனிவர்களை நீங்கள் வழிமறுத்தது பிசகு என்று தடுத்து, முனிவர்களை நோக்கி நீங்கள் அவர்கள் பதவியை யிழந்து உலகிற்பிறந்து தன்புறம்படி சபிக்கலாமா? அதற்கிரகஞ் செய்யவேண்டும் என, முனிவர்கள் திருமாலைப் பார்த்து இவர்கள் உன்னைப் பக்திசெய்வதான ஜனனங்களெடுத்தால் ஏழுஜனனங்களிலும், உன்னைப் பகை கொள்வதான ஜனனங்களெடுத்தால் மூன்றுஜனனங்களிலும் மீண்டுந் தங்கள்பதவியையடைவார்கள். இதில் இவர்களிஷ்டப்பத்தக்கது எதுவோ அதை அடையட்டும் என, அதற்கு ஜயவிஜயர்கள் நாங்கள்ஏழுஜனனமெல்லையும் ஸ்ரீலக்ஷ்மீபதியைப்பிரிந்திருக்கமாட்டோமாதலின் மூன்றுஜனனங்களிலேயே பகைமைகொண்டாயினும் எங்கள்பதவியையடைகிறோமென்றார்கள். அதுவே விஷ்ணு விருப்பமுமாகவிருந்தது. உடனேஜயவிஜயர்கள் தங்கள் பதவியினின்றுநீங்கி உலகத்தில் காசிபர்வமிசத்தில்திதியாகூன் திரணியகசிபுவென்னும்பெயரையுடையமகாபலபராக்கிரமசாலிகளான இராக்ஷதர்களாகத் தோன்றினர்கள்* சநகாதிமுனிவர்களும் பிரகலாதன்முதலியவர்களாகச் சனித்தனர். திரணிகசிபனைச் சாபவிமோசனஞ்செய்யும்படி நரசிங்கரூபமாகவந்தனர். வேறொரு ஜனனத்தில் அவர்களே இராவண கும்பகர்ணர்களாகச் சனித்தனர். அப்பொழுது நரசிங்கமூர்த்தியே தசரதராமனாக வந்தனர். அக்காலையில் சநகாதி முனிவர்கள் விபீஷணர் முதலியவர்களாகப் பிறந்தனர். இன்னும் பலதேவர்கள் சுக்கிரீவ அங்கதாதிவானரவீரர்களாக வந்தனர். மூன்றும் பிறவியில் அவர்களே கிரு

*சநகன் - சநந்தனன் - சநாதனன் - சநத்குமாரனென்னும் இம் மகருஷிகள் நால்வரும், விஷ்ணுவின் துவாரபாலகரான ஜய விஜயருக்குச் சாப மளித்தமையின் மீண்டும் அவர்களோடிருதாரத்தாக்கத் தாமும் மாதுடப்பிறவியடைந்தனரெனக் கொள்க.

பால தந்தவக்கிரர்களாகத் தமகேஷனென்னும் க்ஷத்திரியகுலத்தில் வந்தனர். அப்பொழுது நரசிங்கமூர்த்தியே கிருஷ்ணவதாரஞ் செய்தனர். சநகாதிகள் அக்குரூரன் முதலியவர்களாகத் தோன்றினர். இனி பாபங்களை பொழிக்கத் தக்க நரசிங்கமூர்த்தியின் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் அதனைக்கேளுங்கள் என்று ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

முநிவர்களே! ஹிரணியாக்ஷன் சிறுவனாயிருக்கையில் விளையாடுகிமித்தம் சூரியனைக் கூப்பிடுவான். அவன் வனங்களிலுள்ள சிங்கங்களையும் மதயானைகளையும் ஏறிச் சவாரிவிட்டு விளையாடுவதேயன்றிச் சாமானியமான குதிரையிலேறுவதில்லை. சண்டைசெய்ய வேண்டியிருப்பின் சிங்கமுதலிய துஷ்டமிருகங்களோடு சண்டை செய்வான். இப்படிப்பட்ட பலபராக்கிரமசாலியாதலின், தேவர்களைத் துன்பப்படுத்தவேண்டுமென்று நினைத்து, சாமானியர்களைப்போல அடிப்பதும் பிடிப்பதும் வேதியர்களையும் யாகங்களையுஞ் சங்கரிப்பதுஞ் சரியல்லென்று, உலகத்தையே ஒரு பாய்போலச் சுருட்டி, நாயானது மாவு மூட்டையை வாயிற் கவ்விக்கொண்டு அநாயாசமாகச் செல்வதுபோல, இவ்விரணியன் பூமியைவாயிற்கவ்விக்கொண்டுஜலத்தில்மூழ்கியிருந்தான். இதனைக்கண்ட பிரமாதிதேவர்பெருவருத்தமடைந்து விஷ்ணுமூர்த்தியைப் பலவகையாகத் துதிசெய்ய, விஷ்ணுவானவர் பிரமதேவனுடைய நாபியிலிருந்து வராகவுருவத்தோடவதரித்துச் சீக்கிரத்திலேயிருஸ்ரீ ॥ ஸ்ரீ॒ஸ்தநூஸ்ஸாவிஷ்ணோ॒ர்வாராஸ்யாத்ஸ்ரஜ்ஜணி॥ வாராஹம்ரூபமாஸ்தாயக்ரமேணவ்ருத்திதாங்கத: ॥ உக ॥ வராஹஉவாச ॥ யாவச்சயுத்யதேதேந தாவஜ்ஜலவிஶோஷணம் ॥ உஇ ॥ கர்தவ்யஞ்சத்வயாசாத்ர இத்யேவங்கத்யதேமயா | ததஸ்சாஞ்ஜலிநாதேந ஜலந்நீத்வா முகேததா ॥ உச ॥ பீதஞ்சஜலஞ்சிஞாதாவத்யாவத்யுத்தம் ஸமாப்யதே ॥ உசஉ ॥

த்தியடைந்து, அங்கிருந்து உலகத்தையடைந்து; உலகமுழுவதும் நீர் மயமாகவே யிருக்கக்கண்டு அதிற் பிரவேசிக்கப் போம்பொழுது நாரதமுநிவரைச் சந்தியாவந்தனஞ் செய்துகொண்டிருக்கப்பார்த்தார். நாரதமுநிவரும் அங்குவந்திருக்கும் வராகமூர்த்தியைத்தரிசித்து நமஸ்கரித்து, யான் சந்தியாவந்தனஞ் செய்துகொள்ள உத்தரவளிக்க வேண்டுமென, வராகமூர்த்தி நாரதரே! நான் ஹிரணியாக்ஷனைச் சண்டை செய்து சங்கரிக்கு மெல்லியும் இந்தச்சலத்தை உலர்த்துவிக்க வேண்டியது. இதி உம்மாலேயே யாகத்தக்கது என, நாரதர் அதற்கினங்கி இருகரங்களாலுமெடுத்துத் தான் வாயிற்பெய்து வராஹமூர்த்திக்கும் ஹிரணியாக்ஷனுக்கும் போர்முடிவுபெறுமட்டும் வைத்துக்கொண்டிருந்தார். பிறகு விஷ்ணுவானவர் ஹிரணியாக்ஷனைக்கண்டுபிடித்

து அவனுடன் *ஜலத்தில் இருநூறு வருஷமும், உலகத்தில் இருநூறுவருஷமும் பெரும்போர் செய்து, †அவனைச்சங்கரித்து அந்தப் பூமியைத் தமது வாயி

* ஜலமென்றது-நாரதமுனிவர் சமுத்திரபானஞ் செய்கையில் சிறிது சேற்றுடன்கலந்து நின்ற ஜலமென வடமொழி வியாக்கியானக்காரர் எழுதியிருக்கின்றனர்.

† வராஹமூர்த்தியின் சரிதம் வேறு வகையாகவும் வழங்கும். அதாவது:— வராஹமூர்த்தி ஹிரணியாக்ஷனைச் சங்கரித்த வெற்றியால் மமதை யுற்று அஷ்டகுலபர்வதங்களை யிடித்தும், பலவுயிர்களை வாயிற் பெய்தும், சப்த மேகங்களும் அஷ்டகஜங்களும் நாகலோகமும் நடுங்கக் கர்ச்சித்தும், பூமியைத் தாங்கும் நவநாகங்களும் நடுங்கும்படி கரையை மோந்தும், பூமியைக் குத்தித் தோண்டியும், கட்கடையில் ஊழித்தீயைச் சிந்தியுநிற்கக்கண்ட தேவர்கள் பயந்து நடுக்கமெய்தி, வெள்ளிமலையையடைந்து சிவபெருமானிடம் விண்ணப்பஞ்செய்து முறையிட, சிவபெருமான் தேவர்களே! அஞ்சவேண்டாம் என்று அவர்களை யனுப்பி, ஓர் வேடுவவடிவு தாங்கி வராகத்தை யடைந்து தமது கைச்சூலத்தால் அதன் சிரத்திற் குத்தி, நிலமிசை வீழ்த்தி ஒரு கொம்பைப் பறித்தனர். அதனால் அகன்ற கழிந்த வராகம் சிவபெருமானைப் பிரார்த்தக்க, சிவபெருமான் முன் ஓடித்த அக் கொம்பினைத் திருமார்பி லணிந்து, மற்றொரு கொம்புடன் விடைத்துச் சென்றனர். திருமால் பண்டைய வுணர்வுதோன்றிச் சிவலிங்கார்ச்சனைசெய்து, தேவர்கள் முநிவர்கள் கேட்கும்படி வராகபுராண மோதி வைகுந்தஞ்சேர்ந்து வாழ்ந்திருந்தனர் என்பதாம்.

பூர்வத்தில் தேவர்கட்கும் அசுரர்கட்கும் நடந்த போரில் தேவர்கள் தோல்வியடைந்து திருமாலைப் பிரார்த்திக்க, அவர் சங்கு சக்கர கதை கட்க கோதண்டங்களோடு போர்க்களமடைந்து அசுரர் பலரைச் சங்கரிக்க, அவர்களிற் சிலர் புறங்கொடுத்தோடி, பிருகுமுநிவர் மனைவியாகிய கியாதியினிடத் தடைக்கலம்புக்கனர். விண்டு அவர்களைப் பின்தொடர்ந்து செல்ல, யெதி பணிந்து நிற்கக்கண்டும் கோபாவேசத்துடன் கியாதியையும் அசுரரையுஞ் சக்கரத்தாற் கொன்றனர். பிருகுமுநிவர் திவ்விணாக்கலால் யோகதிருஷ்டி நடந்த துணர்ந்து, மாதவ! நீ உன் மாமியைக் கொன்ற பாபத்தாற் பத்துப்பிறவிக ளடைந்து துன்புறுக. நின்னடியார் வேதவிருத்தமாகத் தீகைபுரிக எனச் சபித்து, சுக்கிரனுல் உயிருற்ற கியாதியுடன் வாழ்ந்திருந்தனர். அச் சாபம் பெற்ற திருமால் பாசுபதவிரதம் பூண்டு விபுதி ருத்திராக்ஷ மணிந்து உருத்திரசமகமந்திரஞ் ஜபித்து, சருரு நீர் காற்று முதலியவற்றைப் பகுத்துப் பலகாலந் தவஞ்செய்து சிவதரிசனம் பெற்று "அரகர" எனத் துதித்து அஷ்டாங்கபஞ்சாங்கமாகப் பணிந்து, பிருகு முநிவன் சாபத்தை நீக்கியருளவேண்டுமென்று வேண்ட, சிவபெருமான் நாரண! நம் மடியார்சொல் பிழையாது. ஆயினும் நீ நம்மை அருச்சித்தமையின் அவை யுலகிற் குதவியாகுக வென்றும், அப் பத்துப்பிறவியில் நாமே முதலிலந்தில் உன்னைத் தண்டிக்கவும், இறுதி யைந்தில் அநுக்கிரகிக்கவும் பெறுவை யென்றும் அருளினர். விண்டு தேபரீர் திருவுள்ளத்தின்படியே யாகுகவென்றங்கீகரித்தனர். இதனால் மச்சாவதாரத்தில் கண்ணைப் பறிக்கப்பட்டும், (தலையறுக்கப்பட்டும்), கூர்மாவதாரத்தில் ஓட்டினைப் பறிக்கப்பட்டும், வராஹாவதாரத்தில் கொம்பினை முறிக்கப்பட்டும், நரசிங்காவதாரத்தில் தோலை யுரிக்கப்பட்டும், வாமனாவதாரத்தில் முதுகெலும்பைப் பறிக்கப்பட்டுத் தண்டனை யெய்தினர். இதுவே இவர் தசாவதாரங்கட்குங் காரணமென ஸ்ரீகாந்தமஹாபுராணம் சங்கரசங்கிதையில், குமாரோற்பவகண்ட காளிகாண்டங்களும், ஆதித்தியமஹாபுராண, லிங்கமகாபுராணங்களுங்கூறுகிற்கும். இவ்விபரங்கள் நமது சிவபாக்கியத்திற் பரக்கக்காணலாம்

லேயே வைத்துக்கொண்டு வந்து பிரமனுக்கு ஒப்பித்துவிட்டு, செய்
மையான காரியத்தைச் செய்த விஷ்ணுமூர்த்தி அற்புதனமாயினர்
நிற்க.

இவ்வாறு விஷ்ணுமூர்த்தியால் ஹிரணியாக்ஷன் இறந்தசெ
ஞ் செய்தியைக்கேள்விப்பட்ட ஹிரணியகசிபன், தம்பியைக்கொன்ற வி
வைச்சங்கரித்துத் தன்துக்கத்தையொழிக்கக்கருதி, பிரமதேவனேநோ
பத்தாயிரவருஷம் கடுந்தவஞ்செய்துகொண்டிருந்தனன். அதுவரையி
ன்போரில் விருகூடங்கள் முளைத்து நாற்புறங்களிலுங்கிளைத்துப் பெரு
ற்று. அம்மரங்களிற் பலவகைப் பகுதிகள் கூடுகட்டி வாசஞ்செய்து மு
யிட்டுக் குஞ்சுகள் பொரித்தன. அவனே தவத்தை நீங்கினதில்லை. அ
தவாக்கினிதேவலோகத்திற் சென்று கொளுத்த, தேவர்கள் அதனைச்
மற் பிரமதேவனிடஞ்சென்று உம்மை நோக்கியே தவஞ்செய்கின்றா
சும்மாயிருப்பது சரியல்ல. நாங்கள் அவனது தவச்சுவாலையால் இறக்
நிடும் எனப்பலவாறு கூற, பிரமதேவர் அவனுக்கு வரங்கொடுக்கக்
ஹிரணியகசிபனையடைந்து, உன்தவத்திற்காகப் பெருமகிழ்வற்றோ
க்கு வேண்டியவரம் யாது ? எனக்கேட்க, ஹிரணியகசிபன், ஸ்வாமீ,
படைப்பாகிய உலகத்தில் யாவனொருவனும் எவ்வகை யாயுதத்தி
இரவிலும் பகலிலும் என்னைக் கொல்லப்படாது. இவ்வகைவரம் தே
மெனக் கேட்க, பிரமதேவரும் அவ்வாறே வரங்கொடுத்துத் தன ந
சேர்ந்தனர். இரணியகசிபன் சோணிதபுரியையடைந்து சகல தைத்தி
யும் விளித்து, அசுரர்களே ! நீங்கள் 'யாவரும் எங்கள் கட்டளைக்
யிருக்கவேண்டும். அவ்வாறிராதவர்களைச் சங்கரித்து விடுவோம்.
லோக்கடங்கினவர்களைக் காப்பாற்றுவோம். சுவர்க்கலோகமும் மத்திய
மும் எங்களால் ஜயிக்கப்பட்டன. திரிலோகங்களையும் தன்வசமாக்கி இ
கசிபுமகாராஜன் ஏகசக்ராதிபதியாய் விஷ்ணுத்வேஷத்துடன் அரசு
வருகிறான். எவ்விடத்திலும் யாக காரியங்கள்செய்யப்படாது' என்
ருமறியப் பறையறையுங்கள்: அவ்வாறே சுவர்க்கலோகத்திலும் ப
லோகத்திலும், 'மற்றலோகங்கள் கைக்கொள்ளப்பட்டன. போர்பு
ண்டியவர்கள் போர்செய்ய வரலாம். சரணுகதி யெனவந்தவர்களைக் க
ற்றுவோம் எனப்பறையறையுங்கள்' என, அவர்கள் அவ்வாறே திரி
களிலும் பலருமறியப் பறையறைந்தனர். எங்கும் எதிரின்றி இராணிய
ஆசசெலுத்திவந்தனன். இதுநிற்க.

சிறிது காலத்தில், விஷ்ணுத்வேஷ முடைய இரணியகசிப
விஷ்ணுபக்தியுடைய பிரகலாதன் என்னும்புத்திரன் ஜனித்தான். அச்சி
பிள்ளைமைத்தன்மையினுல் வாய்விட்டுஅழுகையிலேயும் விஷ்ணுவின்நி
ங்களைக்கூறும் இயல்புடையவனேயன்றி வேறொருவழக்கமுடையவன
இச்சிறுவன் ஐந்து வயதடையவே, இரணியகசிபன் சகலவாத்திய தே
டன் அசுரச்சேனைகள்புடைசூழ்ந்துவரநிருத்தசாட்டியமுதலியவை

ளோடு வித்தியாப்பியாசஞ் செய்விக்கக்குருகி உபாத்தியாயனுடைய வீட்டி
க்குக் கொண்டுபோய் வித்தியாப்பியாசஞ் செய்விக்கும்படி கட்டளையிட,
அசுரவுபாத்தியாயன் வழக்கப்படி சிறுவனைப்பார்த்து முதலில் இரணியா
யநம: எனச்சொல்லும்படி சொல்ல, பிரகலாதன் ஓம் நமோநாராயணாய என
க்கூற, உபாத்தியாயன் அப்பா! அப்படிச் சொல்லாதே. சர்வலோகங்கட்கும்
மகாப்பிரபுவாகிய உன் தந்தையின் பெயரையே முதலில் தோத்திரஞ் செய்
யவேண்டும் என, பிரகலாதன் மீண்டும் அப்படியே கூற, உபாத்தியாயன்
இரணியகசிபனைநோக்கிப் பிரபுவே ! இது முதல்காளாதலின் இதுவரையி
ருக்கட்டும். காலையினம் நான் கற்பிக்கிறேன். சிறுவனுஞ் சரியாய்ச் சொ
ல்லுவான் ஆன, பிரகலாதன் இன்றல்ல. நாளையல்ல. என்றைக்கும் நான்
விஷ்ணுநாமத்தையன்றி வேறொன்றினைச் சொல்லவேமாட்டேன் எனக்கூற,
பிரகலாதனை வீட்டிற்குக் கொண்டுபோயினர். சிறிது தினங்கள் சென்ற
பிறகு ஒரு தினம் இரணியகசிபன் தன் புத்திரனத்தினத்தினைத் தொடைமீதி
ருத்தி, முழந்தாய் ! இதுவரையில் என்னவாசித்தனை? அதனைச்சொல்லென,
பிரகலாதன் நான் ஓம் நமோ நாராயணாய என்பது படித்தேன் என, இர
ணியகசிபன் தினங்கொண்டு உபாத்தியாயரைவருவித்து என்பிள்ளைக்கு என்
ன கற்பித்தனை? என வினவ, உபாத்தியாயன் ஐயா! உங்கள் புத்திரனுல் என்
கல்விச்சாலையிலிருக்குஞ் சிறியோரெல்லாங் கொடியராயினர். இஃ தென்
னுல்லாகத்தக்கதல்ல. இவன்எனக்குஅடங்கமாட்டான் என, இரணியகசிபன்
தன் மனைவியாகிய கயாதுவை விளித்து, பெண்ணே! உன் பிள்ளை படித்ததை
க்கேட்டுக்கொள்; அதற்கேற்ப அவனைக் கண்டனைசெய் என, கயாது தன்
புத்திரனை அழைத்து அப்பா! இனி ஹரிநாமத்தைச் சொல்லாதே; உன் தந்
தை திரிலோகங்கட்கும் பிரபுவாயிருக்கிறார்; அசுரர்கள் எவ்வளவு கௌரவ
மடைந்துள்ளார் ? உன் சம்பந்து எப்படிப்பட்டது ? இதனை யேன் அலகி
யஞ்செய்து ஹரிநாமத்தை விரும்புகிறாய் ? என, பிரகலாதன், தாயே! நீயெ
ன்ன சொன்னபோதிலும் பயன்படாது. ஒருகாலத்திலும் நான் விஷ்ணுநாம
த்தை மறக்கவேமாட்டேன். ஒரு யானையானது தன்னைக் கொசுகு கடிக்கு
மென்று பயந்து அரசன் மாளிகைவாயிலிலிருந்து போய்விடுமோ ? இந்த நீச
னுன இரணியகசிபன் வலிமை யெல்லாம் மகாதபாலனன விஷ்ணுமூர்த்தி
யின் வலிமை யெல்லாம் ? இதனையறியாது நான் ஹரிபக்தியை விடுவேனு ?
காலினுல் விஷ்ணுவைத் தரிப்பதும், காதினுல் ஹரிநாமங்களைக் கேட்பதும்,
தலையால் வணங்குவதும், கையால் பூஜைசெய்வதும், பாதங்களால் பிரதகி
ணஞ்செய்வதுமாக என்னுடைய அவயவங்களெல்லாம் விஷ்ணுமூர்த்திக்
கேசமர்ப்பித்து, அவருடைய திருவடியையடைய வேண்டுகிறேன். எனு நட
க்கத்தக்கதோ அஃது நடக்கக்கூடும். ஹரிநாமத்தை விடமாட்டேன் எனக்
கூறக் கேட்ட, தாயாகிய கயாது பெருந்துயரத்துடன் தன் கணவனிடத்தி
ற்கு அழைத்துக்கொண்டுபோய் விடுத்து, இவன் எனக்கு அசாத்தியனாயிரு
க்கிறான் என, இரணியகசிபன் கடுங்கோபத்துடன் மந்திரிகளை விளித்து,

மந்திரிகளே! நமது அசுரகுலத்திற்கு ஒரு நெருப்பானது புத்திரரூபமாகப் பிறந்தது. குலத்துக்கு விரோதியான இச்சிறுவனே யெவ்வகையிலாவது— நெருப்பிலிட்டாவது, ஆயுதங்களால்துண்டுசெய்தாவது, விஷமூட்டியாவது, ஜலத்தில் முழுகச்செய்தாவது கொன்றுவிடவேண்டுமேயன்றி உயிரோடு வைத்திருக்கக்கூடாது. இவன் விஷ்ணுவை விட்டுவிடுகிறானே உயிரைவிட்டு விடுகிறானே பார்ப்போம் என்று உத்தரவு செய்து அவர்கள் வசத்தில் ஒப்புவிக்க, அவர்களும் அரசன் கட்டளையிட்டபடியே பலவித தண்டனைகள் செய்வாராயினர்.

பிரகலாதனை அழைத்துக்கொண்டுபோன மந்திரிகள் தண்டலாளர்களால் நெருப்பிலிடுவித்தனர்; அது அவனுக்குக் குளிர்ந்திருந்தது. பிறகு ஜலத்தில் எறிந்தனர்; அது மேடாக ஆய்விட்டது. மலைகளின் உச்சியிலிருந்து உருட்டிவிட்டனர்; அது பஞ்சுமெத்தைபோன் றிருந்தது. விஷமூட்டினர்; அஃதமிர்தமாயிருந்தது. ஆயுதங்களாலடிக்க அவை ஹரிநாமஜபியான பலத்தினால் புஷ்பங்கள்போலிருந்தன. இவர்கள் செய்த ஆக்ஞைகளெல்லாம் பயன்படாவாயின. பிரகலாதனும் மென்மேலுஞ் சந்தோஷமடைந்திருந்தனன். மந்திரிகள் யாவருந் தாம் செய்த தண்டங்கள் பயன்படவில்லையென்னுந்துக்கமும், இவனுக்குக்கஷ்டமுண்டாகாததுபற்றி ஆச்சரியமுமடைந்தவர்களாய், இனி அரசனிடத்தில் என்ன செய்தாமென்று சொல்வது? என யோசித்திருக்கையில், பிரகலாதன் அவர்களைப்பார்த்து, மந்திரிகளே! ஏன் ஆச்சரியமடைகிறீர்கள்? நீங்கள் எவ்வகையாகக் கஷ்டப்படுத்தினும் எனக்கு ஒருவருத்தமுமுண்டாகாது. எனெனில், விஷ்ணுமூர்த்திக்கு ஜலமே சயனஸ்தானம். அஃதென்னை யாதுசெய்யும்? அக்னியே விஷ்ணுவின் திருவாய். [விஷமும் லக்ஷ்மியும் திருப்பாற்கடலிற் பிறந்தமையின்] விஷமோ என் மாமன். ஹிரண்யாக்ஷனுல் அன்புற்ற பூமியானது விஷ்ணுமூர்த்தியால் சுகம்பெற்றது. அஃதென்னையொன்றுஞ்செய்யாது. உலகமுழுவதும் காலும் நீரும், பராதீனமுடையவர்கள். உங்களால் என்னை யாதுசெய்ய முடியும்? எனக்கூறினன். அதனைக்கேட்டு முனுசாம்பி மனம் வருந்தினவர்களாய் ஹிரண்யகசிபனிடம் வந்து சேர்ந்து, பிரபுவே! நாங்கள் இப்படிப்பட்ட வனைப் பார்த்ததுமில்லை; கேள்விப்பட்டதுமில்லை. இவனை வருத்தப்படுத்துவதால் ஒருபலனுமில்லை. நல்லவார்த்தைகளாற் சுவாதீனஞ்செய்துகொள்ளும் என்று இரணியனுக்குத் தாங்களியற்றிய யாவுமெடுத்துக்கூறினர்.

ஹிரண்யகசிபன்மந்திரிகள்கூறியவார்த்தைகளால்மனமிகவருந்தி, புத்திரனை வசஞ்செய்துகொள்ளும்படி யானை குதிரை தேர் பல்லக்குமுதலிய வாகனங்களைக்கொடுத்தும் சிங்காசனத்திலிருந்தும் சந்தோஷப்படுத்தினன். அப்பொழுதும் பிரகலாதன் ஹரிநாமத்தைவிட்டிலன். எனெனில், சமுசாரசுகத்தை வெறுத்த சுத்தஞானிகள் உலக சுகங்களெல்லாவற்றையுங் கருப்பாகவிடுத்து, பகவத் பக்திசெய்வதே பெரும்பேறெனக்கொள்வர்களின். இவ்வுபசாரங்கள் பிரகலாதனுக்கு ஒருவகையினுந் திருப்தியுண்

டாக்கவில்லை. இரணியகசிபன் மீண்டும் உபாத்தியாயரை வருவித்து, இனி இவனைத் தண்டித்து வித்தியாப்பியாசஞ்செய்துகொண்டுவருக எனவிடுப்ப, உபாத்தியாயன் பிரகலாதனைப்பார்த்து, அப்பா! நீ இப்பிள்ளைகளோடு கூடி விளையாடிக்கொண்டு வாசிக்கலாம். உன்தந்தை அகண்ட ஐசுவரியத்துடன் மூவுலகங்களையும் அரசுசெய்கிறார். அவருக்குப்பின் இவற்றிற்கெல்லாம் நீயே அதிகாரி. எங்கட்கெல்லாம் நீயே அரசன். இப் பிள்ளைகட்கெல்லாம் நீயே உபாத்தியாயனுயிருப்பாய் என, பிரகலாதன் அப்படியானால் நான் சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறேனென்று, நாராயணயநம: எனச்சொல்லிக்கொடுத்தனன். பிரகலாதன் அச்சிறுவரை அந்தரங்கமான விடத்திற் கொண்டுபோய், தாப் இல்லை. தந்தையில்லை. உறவினரில்லை. சகோதரரில்லை. சிநேகிதரில்லை. மனையில்லை. இவர்களெல்லாம் சமுசாரசுகத்தையன்றிப்பிரமானந்தசுகத்தைக்கொடுக்க வல்லவரல்லர். சொப்பனமாத்திரமாக விளங்குவது. சாசுவித சுகம் வேண்டுமாயின் விஷ்ணுமூர்த்தியைச்சேவித்தே அடையவேண்டும் எனக்கூறினன். அதனைக்கேட்டபாடசாலைச் சிறுவரெல்லோரும் பெருஞ்சந்தோஷத்துடன் நாராயணஸ்மரணைசெய்துகொண்டிருக்கக்கண்ட உபாத்தியாயன், பிள்ளைகளே! என் ஜீவனத்தைக்கெடுக்கவா தொடங்கினீர்களென்று தண்டித்தான். அவ்வாறு தண்டனை பொறுக்கமுடியாத பிள்ளைகள் உபாத்தியாயனுக்கஞ்சி நாராயணநாம பாராயணத்தைவிடுத்தனர். பிரகலாதன்மாத்திரம் உபாத்தியாயன்தண்டனைக்குச் சிறிதும் பயப்படாது பக்தியோடு ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தான். உபாத்தியாயன் பிரகலாதனைக்கண்டு, ஏது உன் பிதாவின் சொல்லைக்கடந்து நடக்கின்றாய் உன்னை அநேகவிதமாகத் தண்டிப்பேன். ஹரி நாமத்தைச்சொல்லாதே என, பிரகலாதன் ஐயா! நீர் சொல்வது சரியே. தந்தைசொல்லைக் கடக்கக்கூடாது. பாரமார்த்தமான பிதா வெளிப்படும் வரையில் சரீரசம்பந்தியான தந்தையின் சொல்லைக் கொள்ளவேண்டும். பாரமார்த்த பிதா வெளிப்பட்டபின்னர் இப்பிதாவினுல் காரியமில்லை. சகலலோகத்திற்குஞ் சுகத்தைக் கொடுத்துச் சகல பாபங்களையும் ஒழிப்பவர் அந்தப்பிதாவே. விளக்கொளியைக்கண்டு மஞ்சுவெல்லாம் சூரியோதய மாகுமட்டுமே. சூரியோதயத்தின்பின்னர்விளக்கினுல் சிறிதும் உபயோகமுண்டோ? அஞ்ஞானியாயிருக்குமெல்லையும் சுக்கில ரத்த சம்பந்தமான சரீரத்துக்குப் பிதாவினுல் பிரயோசனமுண்டு. ஞானமுதித்தபிறகு அஞ்ஞானியாயிருக்கும் பிதாவினுல் யாது பிரயோசனம்? ஒன்றுமில்லை. இதுவே யென்பிதாவுக்கும் எனக்குமுள்ள சம்பந்தம். இவ்விஷயத்தை நான் நன்றாய் விசாரித்திருக்கிறேன். சரீரபிதாவாகிய இரணியகசிபன் அடிக்கால் ஆத்மபிதாவாகிய ஹரி யென்னைக் காப்பாற்றுவான். இவன் என்பிராணனையே வாங்கிவிட்டாலும் வாங்கிவிட்டும், நான் விஷ்ணுநாமத்தைவிடமாட்டேன் என்றான். அதனைக்கேட்ட உபாத்தியாயன் கண்கோபங்கொண்டு பலவிதமாகத் தண்டித்தனன். அவை சிறிதும் பிரகலாதனைக் கஷ்டப்படுத்தவில்லை. சாமானிய மனுஷனை ஒருவன்

தண்டிப்பதாற் கஷ்டம் வராதிருக்கிறது பிரத்தியக்ஷமாதலின், விசேஷ பக்தியை விஷ்ணுவினிடத்தில் வைத்துள்ள பிரகலாதனுக்குச் சிறிதேனும் ஆபத்துவருமா? உபாத்தியாயன் பிரயத்தனமெல்லாம் பலன்படாததுகண்டு, பிரகலாதனை அழைத்துக்கொண்டு, இரணியகசிபனிடம்போய், உன் சிறுவனை ஒப்பித்துக்கொள். இவனால் மற்றப்பிள்ளைகளும் ஹரிநாமஞ்சொல்லக் கற்றுக்கொண்டனர். என்னுற்கூடியவரையிற் சர்வவிதத்திலும் பார்த்து விட்டு விட்டேன் என்றுசொல்லித் தன்னிச்சையின்படியே போயினன். இதனைக்கேட்ட ஹிரணியகசிபன் தன்புத்திரன் விஷயத்தில் தீராக்கவலைகொண்டு மேல் நடத்திய காரியங்களைச்சொல்லுகிறேன். மைமிசாரண்ய வாசிகளாகிய முனிவர்களே: கேளுங்கள்! என்று ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

இரணியன் வரம்பெற்றதும் பிரகலாதனைப் படிப்பித்தது முதலாத்தது முற்றிற்று.

அறுபதாவது

பிரகலாதன் விஷ்ணுமகிமையுரைத்த அத்தியாயம்.

வஸிஷ்டர் சொல்லுகிறார்: தந்தையான இரணியகசிபன் புத்திரன் விஷயத்தில் மனம்பொறாது தன் மந்திரியினுடைய புதல்வர்களை வருவித்து, நீங்கள் யாவரும் யோக்கியர்; சிருதகிருத்தியர்; பிதாவாக்கிய பரிபாலனஞ் செய்பவராதலின், நீங்கள் என் புதல்வனைச் சிநேகங்கொண்டு அவனுக்கு நற்புத்தி கற்பிக்கவேண்டும் என, அவர்கள் ஆஹா! அப்படியே செய்வோமென்று, பிரகலாதனை அங்கிருந்து மறைவிடத்திற் கொண்டுபோய், இதோ இதனை! நாங்கள் சொல்வதைக்கேட்டு அதனை யங்கீகரிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். அதாவது மகாபாபனான தந்தையைக் கோபம்வரு மாறுசெய்தால் நீ யாதுசுகத்தை யடையப்போகின்றனை? தந்தைசொல்லும் வார்த்தையைக்கேட்டு க்ஷேமமடைவாயாக: இதுவே யெங்கள் விருப்பம்; உனக்குச்சொன்னோம்; உன் விருப்பம் எப்படியோ அப்படி நடக்கலாம். எனப் பலமுறை போதித்தார்கள். அதனைக்கேட்ட பிரகலாதன் - பெரியவர்களே! தந்தை யென்? பந்து யாவன்? தாய் யாவள்? சகோதரர் யாவர்? சிநேகிதர் யாவர்? மனைவி எவள்? இது முழுதும் தேகசுகத்திற்கே யன்றி மோக்ஷசுகத்திற்கல்ல. மாலைப்பொழுதில் பலவிடத்திலிருந்துவந்த பறவைகளெல்லாம் ஒருமரத்தைச் சேர்ந்திருந்து, பொழுதுவிடிந்த வுடனே தத்தங்காரியங்கட்குப் பறந்துபோகின்றன. இத் தாய்தந்தையர் சங்கதி அப்படிப்பட்டது. இது தேகசம்பந்தமான கர்மபோகத்தை யநுபவித்து மீண்டும் வேறு பிறவியைக் கொடுக்கத்தக்கது. சமுசாரத்தில் இதைவிடவேறே சுகமில்லை. இஃது சொப்பனமாத்திரமாகத் தோன்றுகிறது. வாஸ்தவமான தல்ல. பகலிற்பார்த்த விஷயங்கள் இரவிற் கனவாகின்றன. ஆதலின் நீங்கள் யாவரும் விஷ்ணுபக்தியைச்செய்து கிருதார்த்தர்களாகி நித்திய சுகத்தை

ஞ்செய்து கொண்டனராயினும், அவனைப்பிரிய மாற்றாதுபயந்து கடையாய் அப்பா! எவ்வகையிலாவது தவஞ்செய்து எங்கள் கஷ்டத்தை யொழிப்பா யென்று கூறிக் கானகத்திற்குச்செல்ல விடைதொடுத்தனுப்பினர். திரௌபதை பெருந்துக்கமுற்றும், கண்ணீரையொழுக்கிக் காட்டாது மனத்திலேயே யடக்கிக்கொண்டு அருச்சுனனைநோக்கி, எவ்வகையாகவாவது காரியாதி கூலஞ் செய்துகொண்டு வரவேண்டுமென்று விடைகொடுத்து அனுப்பினள். தருமன்-பீமன்-நகுலன்-சகாதேவன்-திரௌபதையாகியவரும் ஒன்றுகூடித் துக்கித்துக்கொண்டு நாம் அருச்சுனனைப்பிரிந்து தைரியத்துடனிருப்பது என்ன மகிமையென் றேசிக்கையில், மீண்டும் வேதவியாஸபகவான் அங் கெழுந்தருள, அவருக்கு ஆசனமளித்துப் பூஜித்துக் கஷ்டத்திலிருக்கும் எங்கட்குத் தங்கள் தரிசனத்தாற் சந்தோஷமுண்டாகிறது. நாங்கள் சிறிது காலம் இக்கிருந்து எங்கள் துயரத்தை யகற்றி ரக்ஷிக்கவேண்டும் எனவே ண்ட, தயாளுவான வியாஸபகவான் அவ்வாறே அவர்கள் விருப்பிற்கிணங்கி காருணியமான புண்ணிய சரித்திரங்களைச் சொல்லிக்கொண்டு அவ்விடத் திருந்தனர். அவ்வாறிருக்கையில் ஒருநாள் வியாஸபகவான் சொல்லிக்கொண்டிருக்க ஒரு சமயத்தில் தருமராசன் என்னை கேட்கின்றனன். அதாவது— குஷி நிரேஷ்டமான வியாஸ முனிவரே! நான் துக்கசாந்தி யடையவேண்டி என்னை வினவுகின்றேன். இப்பொழுது நாங்கள் அநுபவிக்கும் கஷ்டங்களைப் போலப் பூர்வத்தில் எவரேனும் அநுபவித்தார்களா? அல்லது நாங்களே அநுபவிக்கின்றோமா? எனக்கேட்க, வியாஸபகவான் சொல்லுகின்றார்.

கேளும் தருமராசனே! நீங்கள் அநுபவிப்பதும் ஒருகஷ்டமா? மனைவியோடுஞ் சகோதரரோடும் மூவர்களோடும் விளித்துக்கொண்டு சூரியன் கொடுத்த அன்னபாத்திரமிருப்பதாற் சுகித்திருக்கின்றீர்கள். மகாத்மாவான நளன் என்றும் மன்னவன் அடைந்தநுக்கங்கள் அநந்தம். அரிச்சந்திர ராசன் அதைக்காட்டிலும் பெருந்துயர மநுபவித்தான். எல்லோரைக்காட்டிலும் ஸ்ரீராமன் விசேஷ கஷ்டமனுபவித்தான். அரிச்சுனனுடைய சங்கட்டத்தை யான் எவ்வளவுகாலஞ் சொன்னபோதிலுஞ் சொல்லிமுடியாது. இந்துக்கள் கூறுகாட்டிலும் பிறக்கையிலும் இறக்கையிலும் உண்டாகுந் துன்பங்கள் கணக்கிட்டுரைக்க முடியா. முதலில் தாயின்வயிற்றில் கருவாக உண்டான பொழுதுந் துக்கமே. அது பிறக்கும்பொழுதும் அழுகையே. யௌவனத்திற் சுகபோகங்களை அநுபவிக்கையிலும் பல்லுறைபாடுகளாலுந் துக்கமே. சமுசார நுகையிலும் பிருககாரியங்களினுந் துக்கமே. இறக்கும்பொழுதுந் துக்கமே. ஆதலின் எப்பொழுதுந் துக்கமே யென்றுணர்ந்து, தேகசுகம் அநித்தியமென்று தள்ளி, திடமான சத்தியத்தையே ஆச்சிரயித்து பகவானை சிவபெருமான் சந்தோஷிக்கும்படி நடந்துகொள்ளவேண்டியது. அவனைச் சேவித்தால் சகல துக்கங்களும் விலகும் என்று கூறினர். அதனைக்கேட்ட பாண்டுபுத்திரர் எப்பொழுதாவது எங்கள் கஷ்டங்கள் விலகாதிருக்குமா? என்று நினைத்து வியாஸ வாக்கியத்தை நம்பியிருந்தனர்.

இஃதிவ்வாறிருக்கத் தவச்செயலே மேற்கொண்டு செல்லும் அருச்சுனன் வழியில் அநேக கபடசூனங்களைக் கண்டு சத்துருகூயமானதாக நினைத்துச்சென்று, தவத்திற்கு யோக்கியமான இடங்களைப் பார்த்துக்கொண்டு சந்தோஷத்தோடு இந்திரகீலபர்வதத்தில் நிருவ்ருதீரத்தில் அசோகவனத்தில்சுவர்க்கத்திற்குச்சமானமானவிடத்திற்றங்கி,வியாஸபகவான்உபதேசித்த மந்திரங்களை மனநிற்றியானித்து, குருவாகிய வியாஸமுனிவனாகமஸ்கரித்து, அவர் சொல்லியவகையே விபூதிருத்திராக்ஷங்களையணிந்து, முதலில் இந்திர ஜபஞ்செய்து, பிறகு பார்த்திவலிங்கபூஜை செய்யவேண்டி கௌதமதந்திர விதிப்படி (பஞ்சஸூத்ரப்ரகாரம்) பார்த்திவலிங்கமொன்றியற்றி, அச்சிவலிங்கத்தின் முன்னிருந்து அதனைப் பூஜித்து ஜபஞ் செய்துகொண்டிருந்தனன். நிரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்து சிவபூஜை செய்துவந்தனன். இப்படியே கடினமான தவத்தைச் செய்துகொண்டிருக்கையில் அவ்விலிங்கமூர்த்தத்தினின்று தேஜஸ் கிளம்பியது. அதனைக்கண்ட தேவர் முதலானார் இவ்வக்கினியில் இவன் எவ்வாறு பூஜிக்கிறானென்று யோசித்து இந்திரனிடம் அப்பொழுதே சென்று யாவுமுரைத்து, தேவனே! சூரியனே! அக்கினியே! மகாமுனியே! எவனோ உன் வனத்திற் தவஞ்செய்கின்றனன். அவன் தேஜஸால் உஷ்ணம்காளாகாது உன் சமுகத்திற்கு வந்தோம் எனக் கூற, இந்திரன் தன் மைக்கனே தவஞ்செய்கின்றானென்றுணர்ந்து, ஒரு விருத்தவேதியவடிவாய், ஜடதாரியாய், தண்டதரனுய், காற்றில்விழுவான்போல மான்றோலைப் போர்த்து, அடிக்கொருமுறை காலிடறி விழுவான்போல அருச்சுனனுக்கருகே வர, அருச்சுனன் கண்டு விரைவோடு சென்று பூஜித்து முன் நின்று துதித்து, ஸ்வாமி! எங்கிருந்து வருகின்றீர்? எனக்கேட்க, இந்திரன் அருச்சுனனுக்குத் தரிசனமுண்டாகும்படி, நீ இச்சிறுவயதில் மூக்கியமான ஜயத்தையா எதனைக்குறித்து இவ்வகைய கடினதவஞ் செய்கின்றனை? எனவினவ, அருச்சுனன் தனது சரித்திரமுழுவதையும் வெளிப்படக்கூறினன். அதனைக் கேட்ட இந்திரன் நீ நன்முகத் தவஞ்செய்கின்றாயேனும், யுக்தமான காரியத்தைச்செய்யவில்லை. சுகமோ சொப்பனத்திற்குச்சமானமாயிருத்தலின், அதற்காக இவ்வளவு கடினதவஞ் செய்வதைக்காட்டிலும் இப்பொழுதே துஷ்கியையபேக்ஷித்துத் தவஞ்செய்: இந்திரன் சுகத்தைக் கொடுப்பானேயன்றி மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டான். ஆதலால் நான் சொல்லுமாறு முக்தியை விரும்பித் தவஞ்செய்க என்ன, அருச்சுனன் அதனைக் கேட்டுக் கோபித்து, நீயுன் எண்ணம் இவ்வாறு கூறுகின்றனை? வியாஸபகவான் உத்தரவின்படி இத்தவஞ் செய்கின்றேன். என் தவத்தைக் கெடுக்கவா இப்படிக் கூறுகின்றனை? உடனே இவ்விருந்து போய்விடு எனச் சொல்ல, இந்திரன் கேட்டுச் சந்தோஷித்துச் சுரூபமான திவ்வியவடிவத்தை வெளித்துத் தனது இந்திரரூப தரிசனங்கொடுக்க, அருச்சுனன்கண்டு சாஷ்டாங்கமுற்றிருந்த, இந்திரன் அருளினமனங்கேற்றி, நீ தன்யன்; கிருதகிருத்தியன்; நிடபுத்திரபுடையவன்; தர்மபுத்திரனுக்கு உன் தந்தைக்கள் பலவாக்கள். பிஷ்மன், துரோணன், கர்ணன்

முதலியவர்கள் ஜயித்தற்கு அசாத்தியமானவர்கள். அவர்களை நானும்ஜயிக்கவல்லவனல்லேன். அவர்களை ஜயிக்கத்தக்கவனுருவுமிலன். அவர்களை ஜயிக்கவேண்டுமாயின் சிவபெருமானே அவ்வகைய வல்லமனிக்கமுடியுமாதலின் சிவபூஜையைச்செய். சிவபெருமானே போகமோக்ஷங்களைக் கொடுப்பர். நானும் பிரமாதிதேவர்களும் விஷ்ணுவும் யாவருஞ் சிவபூஜை செய்பவர்களே. இதுமுதற்கொண்டு என்னைத்தியானித்த இந்திரமந்திரத்தையிடித்து, சிவமந்திரத்தை ஜபித்துப் பார்த்திவலிங்கவிதானமாகச் சிவபூஜையைச்செய்வாயாகில் உனக்குச் சர்வகாமின்றிக்காரியசித்தியுண்டாகுமென்று வரங்கொடுத்து, மீண்டும் அருச்சுனனென்று விளித்து, நீசெய்யுஞ் சிவபூஜை மனநிடத்துடன்செய்யத்தக்கது. புத்திப்பிரமையடையப்படாது. சற்குருமுகட்குப் பல இடையூறுகள் நேரிடுமாதலின் தைரியத்துடனிருக்கவேண்டும். அப்படியிருந்தால் சிவபெருமான் நீ விரும்பிய பலனை விரைவிற்கொடுப்பர் என்று வரங்கொடுத்து அந்தர்த்தானமாயினன். அருச்சுனனுஞ் சிவபெருமானை நோக்கி அகண்டமான தவஞ் செய்துகொண்டிருந்தனன்.

வியாசருபதேசப்படி அருச்சுனன் தவஞ்செய்தது

முற்றிற்று.

வடபத்தைந்தாவது

மூகாசுர சங்காரமுனைத்தது அத்தியாயம்.

லோமசர் சொல்லுகின்றார் :—அருச்சுனன் ஸ்நானஞ் செய்து நித்ய கருமங்களை முடித்து, மந்திரஜபடங்கியாசங்களைச் செய்து, வியாஸமுனிவர் கூறியவகையே ஒருகாலின்மீது நின்று சூரியமண்டலத்தில் காட்டத்தை நிலைத்திக்கொண்டு தியானயோகத்தில் இருந்தனன். இவனதுதவத்திற்குத் தேவர்கள் யாவருஞ் சந்தோஷித்திருந்தார்கள். மீண்டும் அமரர்கள் சிவலோகமடைந்து சிவபெருமானைத் தரிசித்து, ஸ்வாமி! உலகத்தில் அருச்சுனன் தங்களைநோக்கித் தவஞ்செய்கின்றான். அவனுக்கு என்வரங்கொடுக்கப்படாது? எனப் பலவாறு துதித்தனர். அவர்கள் கூறிய வார்த்தையைக் கேட்டு, சிவபெருமான் தேவர்களே! கேள்கள் போங்கோலாம். அப்படியே அருச்சுனனுக்குச் சர்வகாமின்றி வரங்கொடுக்கிறேனென்ன, தேவர்கள் தங்கள் விருப்பின்படி சென்றனர். இதற்குள் மூகன் என்னும் அசுரனொருவன் துரியோதனன் விருப்பின்படி பன்றியுருவெற்று அருச்சுனன் தவஞ்செய்யுமிடத்தையடைந்து அங்குள்ள பாறைகளைக் கொம்பால் பொடிசெய்து மரங்களைப் பறித்தெறிந்து பலவிதமான இடைஞ்சல்கள் செய்துகொண்டிருக்கையில், அருச்சுனன் அவனைப்பார்த்து போதித்ததாவது—குருரமான தொழில்களைச் செய்பவன் யாவன்? இங்கு வந்து என்காரியங்களைக் கெடுக்கின்றனை. இவன் என் சத்ருவேயென மதிக்கிறேன் என்று நிச்சயித்து, நான் பூர்வத்தில் அநேக ராக்ஷசர்களைக் கொன்றிருக்கிறதனலின் அவர்களைச் சேர்ந்தவன் எவனோ

அப்பகைமை பாராட்டி இங்ஙு வந்திருக்கக்கூடும். அல்லது ஜரியோதனனுக்குச் சிநேகமான ஒரு ராக்ஷசனுகவிருக்கலாம். இவன் சத்துருவல்லாத பக்ஷத்தில் என மனஞ் சந்தேகப்புடாது. இவனைப் பார்க்குப்போதே ஞானம் வேஷமிதலின் இவன் சத்துருவே யென்பதற்கையமில்லே. உலகத்தில் ஒரு வஸ்துவை ஆதாரமாகவு அவஸ்துவை குலத்தை யுணர்த்துகின்றது. சரீரமானது அவஸ்துவை போஜனத்தையுணர்த்துகின்றது. வாய்மொழிகள் அவஸ்துவை கல்வியை யுணர்த்துகிறது. கண்பார்வை அவஸ்துவை மனக்குறிப்பை யுணர்த்துகிறது. கடுக்கை செய்கை மொழி முதலியவற்றால் ஒருவனுடைய எண்ணத்தை யறியலாம். கண்பார்வை நான்குவகை: உற்சவம் - சாசம்-வக்ரம்-ஜுக்ரம். இவை வெவ்வேறு வகையின. உற்சவம் சிநேகனைக் குறிக்கும். சாசம் புத்திரனைக்குறிக்கும். வக்ரம் ஸ்திரியைபுணர்த்தும். ஜுக்ரம் சத்துருவைக்குறிக்கும் ஆதலின், இவனைப் பார்க்கையில் சர்வேந்திரியங்களுந் தகதகவென்றெரிவதால் இவன் சத்துருவேயுவன். இப்பகைவனைத் தடையின்றி சங்கரிக்கவேண்டும். குருவான வியாஸபகவானும் 'உன் தவத்திற்குவிக்கினஞ் செய்பவனைச் சங்கரித்துவிடு' என உத்தரவளித்திருக்கின்றனர். இதற்காகவே என்னுடன் ஆயுதங்களுமிருக்கவேண்டுமென்றுகட்டளையிட்டனர்—என யோசித்து, பாணத்தைக் காண்டீவத்திலேற்றியிருக்குஞ் சமயத்தில், சிவபெருமானும் தனது பிரமசாரி சக்தியாய் வேடருபந்தரித்து அருச்சுனனைக் காக்கு நிமித்தமாகவும் பரீக்ஷிக்கு நிமித்தமாகவும் அவனருகே வருவாராயினர்.

அரையிற் கச்சைகட்டி, தலையினைக் கொடிகளர் விரலக்கிக்கட்டி, உடலில் வெண்ணிற்றுகளும் விபூதியும் அம்பறாத்தூணியுமாக வந்த சிவபெருமான் தம்போலவே வேடத்தரித்த பிரமதகணங்களுடன் "வேவேர்க்குரிய பலவைகைக் கச்சங்களுடன் வருவாராயினர். அவர்களிற் சேனாபதியும் தனது சைனியங்களோடு தன் கட்டளையில் டங்கிக்கொண்டுவந்தனன். பிரமத கணங்கள் செய்யும் விநோதங்கள் பத்துத்திசையிலும் வியாபித்து, பருவதத்திலுள்ள மரங்கள் காற்றிலேயும் தூளியுடன் கலந்தது. இதனால் அருச்சுனன் சந்தேகமடைந்திருந்தனன். அம்மலையிலுள்ள பிறர்யாவருஞ் சங்கடப்பட்டனர். அருச்சுனன் அப்பொழுது மனமயங்காது என்ன நடக்கிறதும் பார்க்கட்டும். சிவபெருமான் சுகத்தைச் செய்யாது விடமாட்டார். பூர்வத்திற் விருஷ்ணிபுத்திரனுகிய சிவபெருமானே சுகல ஞானங்களையு மொழிப்பதெனக் கூறியுள்ளார். வேத புராண ஸ்மிருதிகளுஞ் சிவபெருமானே எல்லாஞ் சொல்லுகின் போகங்கள் மோக்ஷ முதலியவற்றைக் கொடுப்பதெனக் கூறுதலின், சிவதரமங்களை ஸ்மரிப்பவர்கட்குச் சுகமே விளையும், பாபத்தாலுண்டாகுந் துக்கங்கள் முதலியன நசிக்கும். அப்படியில்லாமற் சிவசேவை செய்துகொண்டிருக்கையிலேயே கஷ்டம் வருமாயின் நம்மைத்தான் வந்ததெனக் கொள்ளவேண்டும். பெருந்தன்மையோடு பாபுபிக்க வேண்டியவன் சிவபக்தனுயிருந்தாலும் அப்பெருமானுக்குத் தன்பிருந்தால் அவனுடனே

அல்லது அதுபவித்தே தீரவேண்டியதாயின் வந்து சம்பவிக்கட்டும். அவனிஷ்டத்துக்குமாறுகொள்வோர்யாவர்? சிவபெருமானுக்கே பரிபூரணமாகத் தணிந்திருக்கும்பக்ஷத்தில் எவ்வளவுகஷ்டம் வருவதாயினும், அவையாவுஞ் சூரியனைக்கண்ட மின்மினிப்பூச்சிபோலப் போய்விடும். எம்பெருமான் திருவுள்ளங்கொண்டால் விஷத்தையே அமிர்தமாகவும் அமிர்தத்தையே விஷமாதவுஞ் செய்யக்கூடும். நான் சுகமே உண்டாகவேண்டுமென்று இத்தவத்தை ஆரம்பரித்துவருகிறேன். அவ்விறைவன் பக்தர்களைக்காப்பதே விரதமாக ஆதரித்துவருகிறார். ஆதலின் நன்மையே கடக்கவேண்டும்; பிறிதொன்றில்லை; மரணம் தீபீடத்திலிருக்கிறது! பிறர் கிடைத்தாலென்ன? துரத்தாலென்ன? ஜயவரியும் வந்தால் வரட்டும்: வராவிட்டால் ஒழியட்டும்: வருவது வருதேதீரும். சிவபெருமான் சுகத்தையேகொடுப்பார். ஒருவேளை என்னைப் பரீக்ஷிக்க விரும்பித் துக்கத்தைக் கொடுத்தாலுந் தயாளுவாதலின் இறுதியிற் சுகத்தைக் கொடுக்காமற் கைவிடமாட்டார். சோதிதபிறகே பொன் புனிதமாகின்றதல்லவா? இப்படியே வியாஸபகவான் திருவாக்கால் யான் கேட்டிருக்கிறேன். ஆதலின் சிவபூஜை செய்வதால் எனக்குச் சுகமேயுண்டாகத்தானேயில்லை யென்று யோசித்துக்கொண்டிருக்கையில், ஸூகரவடிவுதரித்த மூகன் சமீபித்தனன். அதன் பின்புறமே சிவபெருமான் கணவமாக வந்த முகன் சமீபித்தனன். அதன் பின்புறமே சிவபெருமான் கணசகிதராய்வந்தனர். சிவார்ச்சனாகட்குமத்தியிலே பர்வதாகாரமான பன்றி நிற்கையில், சிவபெருமான் இது நமது பக்ஷங்கொல்லப்பட்டதெனக் கருதியிருந்தனர். அச்சமயத்தில் சிவபெருமானும் அருச்சுனனும் தமது கையிலிருந்த வில்லிற்பூட்டிய அம்புகளை விடுத்தனர். சிவபெருமான் பிரயோகித்த பாணம் அதின்வாளம்பட்டது. அருச்சுனன் வெளியாக்கிய பாணம் அதின் பாணம் அதின்வாளம்பட்டது. அருச்சுனன் சிவபெருமானது அம்பேபோ வாகினின் முகவாய்வழி மூகத்திற்றைத்து வெளிவந்து விழுந்தது. அருச்சுனன் பிரயோகித்த ஆறு கலபிகை தூத்திக்கொண்டு விழுந்தது. அருச்சுனன் தம்பறாத்தூணியையடைந்தது. அப்போதே திருகுகரம் மரண்மடைந்துவிழுந்தது. அதைக்கண்ட தேவர்கள் சந்தோஷித்துப் புஷ்பமாரிபொழிந்தனர். சிவபெருமான் களித்தனர். அருச்சுனன் சுகமடைந்தனன். அதன்பின்னரு மூகன் (பிஜ) விடவந்ததைக்கண்ட சிவார்ச்சனா மிருக்கும் ஆச்சரியமடைந்தனர். அவர்களில், அருச்சுனன் அவனது மாயாரூபத்தைக்கண்டு சிவபெருமான் இவனைச்சங்கரிக்கும்படி கபுத்தியைக் கெடுத்தனனெனக்கருதி, சிவன்மாதீனஞ்செய்துகொண்டு சந்தோஷித்திருந்தனன்.

மூகாசுரசங்கார முரைத்தது

முற்றிற்று.

அறுபத்தாறுவது

சிவபெருமான் அருச்சுனனே யடைந்த அத்தியாயம்.

மூவிலர்களே! மேல் நடந்தவற்றையுங் கேளுங்கள்; வேடருபந் தரித்துவந்த சிவபெருமான் தன்னே டிருக்கும் பிரமதர்களில் ஒருவனேயனுப்ப, அவன் அப்பாணத்தைக் கொண்டுபோம்படி வந்தனன். அருச்சுனன் தன னெதிரேவிழுந்த அம்பினைக்கண்டு கூத்திரியனதனின் விடப்படாதென்னு நியாயத்தால் அதனே யெடுக்கவந்தனன். இவ்வாறிருவரும் அங்கடைந்த பொழுது, அருச்சுனன் வேடுவனே யடித்து அந்த அம்பைக் கைப்பற்ற, அவன் எங்கள்பாணத்தை யஜமானன் உத்தரவின்படி கொண்டுபோகவந் தால் அதனே நீ பறித்துக்கொள்ளலாமா? நியாயப்படி யென்கையிற் கொடு த்துவிடு என, அருச்சுனன், நீ வனசஞ்சாரஞ்செய்யும் மூர்க்கன். அறியாமை யாற் பேசுகின்றனே. என்முன் விழுந்த பாணம் என்னுடையதே; அஃதுன் னுடையதல்ல. இதிலிருக்கும் சோகை-ரூபம்-மயிற்குஞ்சம்-பெயர் இவற்றைப் பார். அவையெல்லாம் என்னுடையதே. உன்னுடையதாகுமா? உன்துஷ்ட சுபாவத்தால்உன்னுடையதென்று எண்ணுகின்றனேயென, வேடருபியான கணன்சிரித்து, அடா! நீ யாதுகருதிக்கலஞ்செய்கிறாய்? நீ வேடனுதித்துத் தவஞ்செய்கின்றனேபோலன்றி உண்மையிற்றவஞ்செய்திலே. உலகத்திற்றபசி யும் பொய்பேசுவானுநீ என்னே ஒன்றியாகவந்தவனெனை நினையாதே. நான் சேனை நாயகனென்று இன்! எங்கள்தலைவன் வனசஞ்சாரஞ்செய்யும் வேடர் பலருடன் அமோ இருக்கின்றனன்; நிச்சயமா நிச்சய சமர்த்தன். நீயெடுத் துக்கொண்டபாணம் எனதுடையது. உன்பாணமென்றுரைபோது முரை யாதே. அது உன்பாணமென்று பொய்சத்தியஞ் செய்பவலனே யேன் இழக்கின்றனே? களவு-பொய்-அகங்காரம்-புத்திபிரமை – மோசம் எனு மிவற்றுல் தவமழியுமெனக் கேள்விப்பட்டிருக்கின்றேன். என்பாணத்தைக் கொடுத்துவிடு. இல்லாவிடிற் பாபியாவாய். உனக்கு ஆபத்துவருவது கருதி என் யஜமானன் அப்பாணத்தைப் பிரயோகித்தனன். அவன்மீண்டும் அப் பாணத்தைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். நீ சத்தியவரையில் விரை வில் அவ்வம்பினைக்கொடு. சத்தியத்தை விட்டுவிட்டால் உன் இஷ்டகாமியம் கைகூடாது. உனக்குப் பாணம்வேண்டுமாயின் என்தலைவனைக்கேள். இது போல் அநேகபாணங்கள் கொடுப்பான். என்தலைவன் அதோ விருக்கின்ற னன். நீ கேட்பாயாயின் அம்புமட்டுமல்ல; அநேகம் பொருள்களுங்கொடுப் பான். நற்கருமத்தையொழித்துப் பாபபாத்திரமாகாதே என்றுகூறினன்.

வேடன் கூறிய இவ்வகைய வார்த்தைகளைக் கேட்ட அருச்சுனன், அடா வேடா! நீயென்னைப் பொய்சொல்லதாகக்கூறி, நீயே பொய் பேசுகி ன்றனே! அஃதுன் ஜாதிக்கடுத்ததன்றி வேறன்று. நான் பிரபு. நீ திரு டன். உன்னுடன் போர் செய்வது எனக்குத் தகுதியல்ல. போர் செய்தலும் வேட்டலும் மானார்களுடனேயன்றி அமானருடன் செய்யப்படாது.

உன் யஜமானனும் உன்னைப்போன்றவனே. என் தலைவன் கொடுப்பானெனக் கூறினே. கொடுக்கத்தக்க பிரபுக்கள் க்ஷத்திரியர்களாகிய நாங்களேயன்றி வளரியர்களாகிய நீங்களல்லீர். அசனுன நான் வேடனை உன் தலைவனே எவ்வாறு யாசிக்கலாம்? பாணத்திற்காக அவனையாசிக்கும்படி என்னுடனே நீயேன் கூறுகின்றனே? என்னிடத்தும் அநேக பாணங்களுள. உன் எஜமா னன் எனக்குக் கொடுக்கவேண்டுவதில்லே. இத்தப்பாணம் உங்களுக்கு வே ண்டுமாயின், உன் தலைவன் என் இங்கே வந்து என்னைக் கேளான்? அவன் வந்து என்னோடு சண்டை செய்து என்னைச் செயித்து இதனைப் பெற்றுக் கொண்டுபோய்ச் சுகமே யிருக்கட்டும். ஆலசியஞ் செய்யவேண்டாம் எனக் கூறினன். அதனைக்கேட்ட வேடுவன், நீ தெரியாதவனுயிருக்கிறாய்! விசாரி க்கையில் ஒன்றுமில்லே. உனக்கு நீயே மரணத்தைவலிந்தேடிக்கொள்ளுகின் றனே? பாணத்தைக் கொடுத்தாற் சுகமடைவாய்: இல்லாவிடின் துக்கமுண் டாகும் எனக்கூற, அருச்சுனன் அடா வேடா! உன்தலைவன் வந்தால் அவ னுக்குத்தக்கபலனே உண்டுசெய்வேன். எனக்கும் உன் தலைவனுக்கும் சிங்கத் திற்கும் நரிக்குமுள்ள உயர்வு தாழ்வுகள் இருக்கின்றன. இவ்வார்த்தையு அவனுடன் சொல், அவனிஷ்டப்படி செய்யட்டும் என்றனன். வேடுவன் இனி யிவனுடன் பேசுவதிற் பயனில்லே யென்று திரும்பி, சிவபெருமானே யடைந்து, நடந்த விர்த்தாந்தங்களெல்லாவற்றையுமுரைத்தனன்.

விரமதகனத்தலைவனுல் அர்ச்சுனன் கூறிய வார்த்தையைக் கேட்ட சிவபெருமான் சந்தோஷித்துப் புன்னகையருமி, தனது வேடவபரிவாரங் களுடன் யுத்தத்திற்குலர, அருச்சுனன் அச்சரியத்தைக்கண்டு எதிர்வந்து நின்றனன். அத்தச்சமயத்தில் சிவபெருமான் மீண்டும் அக்கணனே நோக்கி நீ அந்தவசியிடஞ்சென்று, "என்னுடைய சத்தியத்தைப்பார், தவத்தாற் கஷ்டப் படுகின்ற நீ மோசஞ்செய்யாது பாணத்தைக் கொடுத்துவிடு. அற்பத்துக் காக மரணத்தையடையாதே. உன் சகோதரர்களும் மனைவியுந் துக்கித்துக் கொண்டிருக்கின்றனர். நீ இதனுல் இவ்வுலகசாம்பிராச்சியத்தை இழக்கி ன்றாய்" எனக்கூறுக எனவிடுப்ப, அக்கணனதன் அவ்வாறேசென்று அருச் சுனனுமுரைத்தனன். அதனைக் கேட்ட அருச்சுனன் நான் க்ஷத்திரியனுயிரு ந்து என்முன் விழுந்துகிடந்த அம்பினை யெடுத்து மீண்டும் அதனை உனக் குக்கொடுத்தால், க்ஷத்திரியதர்மத்திற்குக் குறைவுவருமே. என்சோதரர் யா வரும் இதனைக்கேட்டாற் பெருவருத்தமுறுவர். என் கல்வி பயனற்றதாகு மாயின் நீ போர் செய்யலாம். நிச்சயம் நரிக்குப் பயப்படாததுபோல நான் உன்க்குப் பயந்தோடமாட்டேன் எனக்கூறினன். அதனை அவ்வாறே வேடு வன்சென்று சிவபெருமானிடங் கூற, சிவபெருமான் பக்தப்பிரியனுதலின், அருச்சுனன் வார்த்தைகட்கு அகமிகமகிழ்ந்து போர்செய்யக்கருதி, அருச் சுனனுக் கெதிரேவந்து நின்றனர்.

சிவபெருமான் அருச்சுனனே யடைந்தது

முற்றிற்று.

அறுபத்தேழாவது

அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்ற அத்தியாயம்.

சௌனகாதிமுனிவர்களே! அருச்சுனன் தன்னெதிர்வந்து போர் புரியக்கருதி நிற்கும் வேடரூபமுடைய சிவபெருமானைப்பார்த்து, சர்வாந்தர்யாமியாகிய சிவபெருமானே மனதிற்றியானித்துத் தானும் போருக்குவந்து பயங்கரமான யுத்தத்தைச் செய்தனன். சிவகணங்களாகியவேடர்களும் பலவகைப்பட்ட ஆயுதங்களை அருச்சுனன்மேற் பிரயோகித்துத் தொடுத்தனர். சிவபெருமானும் அருச்சுனனுடு பயங்கரமான போர்செய்தனர். அருச்சுனன் கணங்கள்விடுத்த பாணங்களையும் ஆயுதங்களையும் மத்தியிலேயே துண்டித்தெறிந்தனன். சிவகணங்கள் தாம் எவ்வளவு ஆயுதங்களை விடுத்தும் பயன்படாது, அருச்சுனன் விடுத்த அஸ்திரங்கட்கு ஆற்றமுடியாது காற்புறமுங் கலைத்தோடினர். ஓடுதேவர்களைப்பார்த்து, நீங்கள் பயப்படாது போர்செய்யுங்களெனச் சிவபெருமான் கூறியும், அவர்கள் அருச்சுனன்முன் னே நிற்பதற்கஞ்சினர். மேலே சிவபெருமானும் அருச்சுனனும் போர்புரியத்தொடங்கினர். சிவபெருமான் மனதில் தயையுடையராயிருந்தும் அருச்சுனனுடைய கையியத்தைச் சேதிக்கும்படி போர் செய்ய வந்தவராதலின், சிறிதுக் தாக்ஷிணியம் பாராது நிறைந்த அஸ்திரங்களை விடுத்தனர். அருச்சுனனும் அவற்றையெல்லாம் கண்டங்கண்டமாகச் செய்து ஒஸ்திரத்தால் சிவபெருமானைக் காயப்படுத்தினன். சிவபெருமான் அருச்சுனனுடைய ஆம் புகளையெல்லாந் துண்டித்துவிட்டு, அவனணிந்திருந்த கவசத்தையுங் துண்டித்துவிட்டு வெற்றுடலாக்கினர். அதன்பின்னர் சிவபெருமானும் அருச்சுனனும் மல்யுத்தஞ் செய்யத்தொடங்கினர். அப்பொழுது பூமி நடுங்கிற்று; தேவர்கள் யாவரும் என்னவிபத்து சேர்ந்தோமோவெனப் பயமுற்றனர். ககனமார்க்கத்திற்கிளம்பி ஒருவரோடொருவர் மற்போர்செய்தனர். சமயமறிந்து அருச்சுனன் சிவபெருமானுடைய சிரமேற் கதையாலடித்தனன். அவ்வர்ச்சுனன் "அடிக்த அடியானது எம்பெருமானுக்கே யன்றித் திருமால்பிரமன் முதலிய தேவர்கட்கும் கருடகாந்தருவ சித்த வித்தியாதராதி கணங்கட்கும் நாகர் மானவர்முதலியோருக்கும் சராசரப்பொருள்கள் முதலிய வெல் வோருக்கும்பட்டன. [இஃது இறைவன்று சர்வபரிபூரணத்துவத்தை யுணர்த்தியது]. சிவபெருமான் யாதுஞ் செய்யவல்லராயினும், பக்தவத்சல்யமுடையராய் அவ்வடியினைப் பட்டுக்கொண்டு அருச்சுனனுக்கு அபகாரமொன்றுஞ் செய்யாது புன்சிரிப்புடன் அவனுடையினின்றுக் தப்பித்துக்கொண்டு தன்னுடைய சுந்தரமான நிஜரூபத்தைக்காட்டி, அருச்சுனன் சிவபெருமானைத் தரிசித்து மனதில் ஞானமுற்றவனுய், நான் யாரைக்குறித்துச் சண்டைசெய்து கொண்டிருக்தேனோ அத்தப் பிரபுவடனே போர்புரியநேரிட்டதுரு. ஐயோ! நான் இப்பொழுது எவ்வளவு கொடுங்காரியத்தைச் செய்தேன். சர்வ லோகாதிகாரியாகிய சிவபெருமானுடைய மாயை உலகத்தையெல்லாம் மயங்கச் செய்யும். சர்வேசுவரன் இவ்வளவு வடிவெடுத்து வந்தமையின் மோசம்

போனேனென்று துக்கித்து, ஸ்வாமி! மன்னிக்கவேண்டும்: மன்னிக்கவேண் டுமென்று பலவகையாகத் துதித்து, அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாகப் பணிந்து நமஸ்கரித்து, யான் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்க, சிவபெருமான் அருச்சுனனையெழுப்பி மனந்தேற்றி, நீ எனக்கு மகாபக்தன்; புத்திரசிரேஷ்டன்; உன் வல்லமையைப் பரீக்ஷிக்கக் கருதியே இவ்வளைய வேடரூபத்துடன் வரலானேன். நீ யென்னுடன் போர் புரிந்ததற்காக விசனப்படவேண்டாம் என்று கூறி, ஆலிங்கனஞ்செய்துகொண்டி, தம்மருகிலிருக்கும் பிரமதகணங்களுடன் இவனது பக்திமகிமையைக் கூறி, அருச்சுனனுடைய காண்டீபமகற்றி, அருச்சுன! நான் பிரத்தியக்ஷமானேன். வேண்டியவரத்தைக்கேள். நீ யென்னைப் பாணத்தாலடித்த அடிகளைப் புஷ்பார்ச்சனையாகக் கொண்டேன். அது என் விருப்பத்தால் நடக்கது. உன் குற்றமல்ல. உனக்குக்கொடுக்கத்தகாதது ஒன்றுமில்லை. வேண்டிய வரத்தைக் கேள். நீ எவனிடத்தில் யுத்தஞ்செய்யினும், சிவபெருமானைப் போரிற்ஜெயித்தவன் எனப் பிரதாபமுறச்செய்தேன். உன்மனதிற்பய மும் துக்கமும் வேண்டாம் என்று கூறினர். அருச்சுனன் சிவபெருமானை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் பக்தப்பிரியராதலின் தேவரீர் திருவுள்ளத்தின் படி செய்யலாமென்று வேதசம்மதமான தோத்திரங்களாற் துதிசெய்தனன்.

பிரமாதி தேவர்களிற் பிரகாசமுடையவனே! கைலாஸகிரியில் வசிப்பவனே! எப்பொழுதும் மங்களகரமானவனே! ஐந்து திருமுகங்களையுடையவனே! ஜடையையுடையவனே! திரிநேத்திரங்களையுடையவனே! சர்ப்ப ருத்ராக்ஷ மயமான கர்ண குண்டலங்களை யணிந்தவனே! பிரசன்னமான முகமுடையவனே! பிரசன்னமான திருவுருவமுடையவனே! புன்சிரிப்போடு கூடிய திருமுகத்தை யுடையவனே! நீலகண்ட முடையவனே! சத்யோஜாதஸ்வரூபியே! இடபக்கொடியைப் பிடித்தவனே! வாமபாகத்திற் பார்வதியையமர்த்தியவனே! பத்துத் திருக்கரங்களையுடையவனே! ப்ரமதம்வஸ்வரூபியே! டமருகபாலங்களைத் திருக்கரத்தமைத்தவனே! சிரோமாலை தரித்தவனே! பரிசுத்தமான படிக்கல்போன்ற தேககாந்தியுடையவனே! கற்பூரம்போலச் சிறந்தவனே! பிரகாசமில்லாத் திருக்கரத்தேந்தியவனே! சிறந்த திரிசூலத்தையுடையவனே! புலித்தோலாடை தரித்தவனே! யானைத்தோலைப் போர்த்தவனே! சர்ப்பாபரணந் தரித்தவனே! கங்கையைச் சடையிலணிந்தவனே! மெல்லிய திருவடியை யுடையவனே! முக்தி கொடுப்பவனே! நிர்குண சகுண சொரூப முடையவனே! காணக்கூடிய பிரபஞ்ச முழுவதுந் தேவரீருடைய ஸ்வரூபமேயன்றி வேறன்று. உன் குணங்களை வர்ணிக்கச் சதுர்வேதங்களாலுஞ் சக்தியுடையவல்லவரின் மந்த புத்தியையுடைய நான் யாதெனு வர்ணிப்பேன். யாவராலுங் கண்டறியப் படாத மகாதபோவலுவுடைய உனக்கு நமஸ்காரம்: நமஸ்காரம்: நமஸ்காரம்: என்னிடத்தே தயைவைத்து என்னை இரக்ஷிக்கவேண்டும். என்று பலவாறு துதித்து வணங்கிநின்றனன்.

அருச்சுனன் இவ்வாறு தோத்திரஞ்செய்ததைக் கேட்ட சிவபெருமான் சந்தோஷித்து, அருச்சுனா! உன்மனதில் அபேக்ஷித்ததை விரைவிற் கேள்: கொடுப்பேன் என, அருச்சுனன் சாஷ்டாங்கமாகப்பணிந்து, ஸ்வாமீ! தேவரீர் என் விஷயத்திற் சந்தோஷிக்க வேண்டும். என் சத்துருக்களால் நான் அடைந்த துன்பங்கள் தங்கள் தரிசனத்தாலே யொழிந்தன. இகலோக சுகத்தை நான் கன்றாய் அநுபவிக்கச் செய்யவேண்டுமென்று கூறிப் பணிந்து கைகட்டி எதிரே நிற்பக்கண்டு, சிவபெருமான் அவனுடைய எண்ணத்தையுணர்ந்து, இப்பிரமாண்டத்தில் ஒருவராலுஞ் சயிக்கமுடியாத பாசுபதாஸ்திரத்தை அருச்சுனனுக்குக் கொடுத்து, இவ்வஸ்திரத்தால் நீ ஜயமடைவாய். சத்துருக்களால் வெல்ல அசக்தனாயிருப்பாய். உனக்கு எல்லாச் சுகங்களும் உண்டாகும். நான் கிருஷ்ணனுடன் சொல்லுகிறேன். அக்கிருஷ்ணன் உனக்கு எல்லாச் சமயங்களிலும் உதவிசெய்வான். மேலும் அவன் என் அமிசமாகப் பிறந்தவன். நீ அவனுடைய சகாயத்தால் சகல சத்துருக்களையுஞ் சயித்து, இராஜ்யத்தை யடைவாய் என்று வரங்கொடுத்து, தமது கிருக்ஷத்தை அவன் சிரமேல் வைத்து அருச்சுனனைப் புகழ்ந்து ஆலிங்கனஞ்செய்துகொண்டு, அருச்சுனனும் பூஜிக்கப்பெற்று பிரமதகணங்களுடன் அந்தர்த்தானமாயினர். அர்ச்சுனனுஞ் சந்தோஷத்துடன் தனது ஆச்ரமத்தை யடைந்து, தருமராசனைப் பணிந்து நின்றபொழுது தேவதுந்துபிகள் முழங்கின. மலர்மாரி வருஷித்தது. அப்ஸரஸ்திரீகள் நடித்தார்கள். இந்திராதி தேவர்கள் சந்தோஷித்துப் பல படைகளைக் கொடுத்துச் சென்றனர். இவ்வாறு பல வரங்களைப்பெற்று வந்திருக்கும் அர்ச்சுனனைக்கண்டு, திரௌபதியுடன் பாண்டவரைவரும், முன்போனபிராணன் மீண்டும் வந்ததாகக் கருதி, சுகமுற்றிருந்தனர். இவர்கட்குச் சுபமுண்டாவதற்கு அறிகுறியாக ஸுகந்த சந்தனங்கலந்த மலர்மாரி பெய்தது. சிவபெருமான் அருச்சுனனுக்கு வரங்கொடுத்ததுபற்றிப் புகழ்ந்து, தமது வனவாசஞ் செய்யவேண்டிய பதினைந்து வருஷத்தினெல்லை சமீபத்து விட்டமையின் இனி நமக்கு நேரும் உண்டாகுமென்று கருதியிருந்தனர். அப்பொழுது அருச்சுனன் வந்ததையறிந்த கிருஷ்ணமூர்த்தி அவனைப் பார்க்கும்படி வந்து அப்பா அருச்சுனா! சிவபெருமானை சகலலோகங்களையும் விலக்கிச் சுகத்தைக் கொடுப்பவராதலின், நானும் சிவபூஜை செய்வதுபோல, நீங்களுஞ் சிவபூஜை செய்யுங்களெனக் கூறினனென்று சந்தோஷித்துத் துவாரகாபுரியையடைந்தனர் என ஸூத முனிவர் மகருஷிகளுக் குரைத்தனர்.

அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றது

முற்றிற்று.

அறுபத்தேட்டாவது

அருச்சுனன்செய்த சிவபூஜாவிதானமுரைத்த அத்தியாயம்.

சௌநகாதி மகருஷிகள் ஸூதமுனிவரைப் பார்த்து, வியாஸ சிஷ்யரே! ஸர்வாமுணர்ந்தவரே! தேவரீர் சொல்லிய விஷயங்களாற் பெருங்களிப்படைந்தோம். அர்ச்சுனனுக்குச் சுகமுண்டாகும்படி வேதவியாஸபகவான் பார்த்திவலிங்கபூஜையை யுபதேசித்த விதத்தையுந் திருவாய்மலர்ந்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, ஸூதமுனிவர் சந்தோஷித்துச் சிவத்தியானஞ்செய்து கொல்வாராயினர். ருஷிகளே! நல்ல விஷயத்தைக் கேட்டீர்கள். மானுடனுக்கு எப்பொழுது அஸாத்தியமான துக்கமுண்டாகுமோ அப்பொழுது அத்துக்கமொழிவும் சுகமுண்டாகவும் முக்தியடையவும் சத்குருவைப்பணிந்து, அச்சத்குருவால் மந்திரோபதேசம் பெறவேண்டும். பின்னர் நாடோறும் ஸ்நானஞ்செய்து குருவின் உபதேசக்கிரமப்படி ஆராதனை செய்யவேண்டும். *உஷ:காலத்திலெழுந்திருந்து, மலவிசர்ஜனம் தந்தாவன முதலிய கருமங்களை முடித்து, சிவபக்தியோடு குருநமஸ்காரஞ் செய்து, சிவநாமங்களையுந் தீர்த்தநாமங்களையும் ஸ்மரித்துக்கொண்டு, ஸ்நானஞ்செய்து சிவநாமங்கூறிக்கொண்டு ஆசமனஞ்செய்து, தேகத்தில் பன்னிரண்டிடங்களில் திருவெண்ணீறணிந்து, சாந்தியோக்தமாகப் பூசுத்தி, பூதசுத்தி, பிராணப்பிரதிஷ்டைகளை மூலமந்திரத்தாற்செய்துகொண்டு, தேஜோரூபனான சிவபெருமான் இதயத்திலிருக்கின்றான்; இதயவாசியான சிவபெருமான் என் தேகத்தை ஜபஹோமாதி நிமித்தம் பரிசுத்தப்படுத்துவாராக எனக்கருதி, சிவமந்திரத்தைச்சபித்து, பிறர்த்தர்ப்பணஞ் செய்துமுடித்து, சூரியனுக்கு அர்க்கியதானஞ்செய்து, பின்னர் பூஜாக்கிரகத்தை யடைய வேண்டும்.

முதலில் கணபதியையும் பரிவாரதேவர்களையும் பார்வதிபரமையும் முறைப்படி பூஜித்து, பிறகு பார்த்திவலிங்க பூஜையை விதிப்படி செய்யவேண்டும். எப்படியென்றால், பரிசுத்தமானவிடத்திலுள்ள மிருத்திகையைக் கொண்டோமும் [ஹ்ரீ ஸ்ரீம் கூஷ்மாண்டாயை மஹீ ஓம் ஸ்ரீம் அஷ்டமூர்த்தயே நம:] என்னும் மந்திரத்தைச் சபித்துக்கொண்டு, அதிற் பிராணிகளொன்றுமின்றிச் சோதித்து வைத்துக்கொள்ளவேண்டியது. அவ்வாறு இயலாத பக்ஷத்தில், கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் ஒரு மாதத்திற்கு வரும்படியாகப் போதுமான அளவு மேல்மந்திரத்தைச் சபித்து எடுத்துவந்து வைத்துக் கொள்ளலாம். மிருத்திகையைக் கொண்டுவந்தபிறகு "அக்யாதிப்ரியோக புரஸ்ஸரமாக" அங்கந்யாஸ கரந்யாஸங்களைச் செய்யவேண்டியது. எப்படியென்றால்,—மஹோபாத்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேஸ்வர முத்திஸ்ய ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ஸுபே சோபன முஹூர்த்தே ஸ்ரீமஹாகணாதிபதி பூஜாம்ஹம் கரிஷ்யே தத்பூர்வாங்கதயா கலஸாதி புண்யாஹவாசனம் கரிஷ்யே தாதோ நிர்விக்நேன பூஜாஸமாப்த்யர்த்தம் ஆயுஷ்யமந்த்ரஜபம் கரிஷ்யே தாதோ பூஜாங்கதயா ஸ்வஸ்திபுண்யாஹ மாதுகாபூஜாம் கரிஷ்யே தாதோ நாந்தீஸ்ராத்தம் கரிஷ்யே தாதோ ரக்ஷாபந்தனம் கரிஷ்யே தாதோ ஆசார்யாதி ருத்விக்வரணம் கரிஷ்யே தாதோ ஆசார்ய ப்ரவர்தமாகஸ்ய அத்யப்ரஹ்மண: த்விதியபராார்தே ஸ்வேதவராஹகல்பே வைவஸ்வதமன்வந்தரே கலியுகே ப்ரதமபாதே ஜம்பூத்வீபே பரதவர்ஷே பரதகண்டே மேரோர்தக்ஷிணேபார்ச்வே

*உஷத்காலம் இரவு இருபத்தைந்து நாழிகை; அதாவது விடியற்காலம் நான்குமணி.

ஸ்ரீலலல்ய ஆக்நேயதிக்பாகே தேவப்ராஹ்மணஸங்நிதௌ க்ருஷ்ணகாவேரீ மத்ய தேசே அஸ்மிந் வர்தமாநே வ்யாவஹாரிக சாந்த்ர ஸௌரமாநேந ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே—ஸம்வத்ஸரே—அயநே—ருதௌ—மாஸே—பக்ஷே—சுப திதௌ—வாஸரயுக்தாயாம் சுபநக்ஷத்ர சுபயோக சுபகரண ஏவம்குண விசேஷணவி சிஷ்டாயாம் சுபதிதௌ ஸ்கந்த கணபத்யாதி பரிவாரஸமேத ஸ்ரீபவாநீஸஹித ஸ்ரீ முத்தி ஸ்யஸ்ரீபவாநீசங்கரப்ரீத்யர்தம் பார்திவவிதாநேந ஸ்ரீ பவாநீசங்கர பூஜாங்கரிஷ்யே |

என்று சங்கல்பஞ் செய்யவும். சிவாய அங்குஷ்டாப்யாம்நம:, பவாய தர்ஜநீப்யாம்நம:, ஸர்வாய மத்யமாப்யாம்நம:, பசுபதயே அநாமிகாப்யாம்நம:, மஹாதேவாய கநிஷ்டிகாப்யாம்நம:, ஈசாநாய கரதல கரப்ருஷ்டாப்யாம்நம:, ஏவம் ஹ்ருதயாதிந்யாஸ:. சிவாய ஹ்ருதயாயநம:, பவாய சிரஸேஸ்வாஹா, சர்வாய சிகாயைவௌஷட், பசுபதயே கவசாய ஹும், மஹாதேவாய நேத்ரத்ரயாயவௌஷட், ஈசாநாய அஸ்த்ராயபட், பூர்புவஸ்ஸுவரோமிதி திக்பந்த:. த்யாநம். "த்யாயேந்நித்யம் மஹேசம் ரஜதகிரிநிபஞ்சாரு சந்த்ராவதம்ஸம் ரத்நாகல்போஜ்வலாங்கம் பரசு ம்ருகவராபீதிஹஸ்தம் ப்ரஸந்நம், பத்மாஸீநம் ஸமந்தாத் ஸ்துதமமரகணைர்வ்யாக்ருதிம் வஸாநம் விஸ்வாத்யம் விஸ்வவந்த்யம் நிகலபயஹரம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம். க. கர்பூரகௌரம் கருணாவதாரம்ஸம்ஸாரஸாரம்புஜகேந்த்ரஹாரம், ஸதாவஸந்தம்ஹ்ருதயாரவிந்தேபவம் பவாநீ ஸஹிதம்நமாமி. கஅ. கைலாஸபீடாஸநமத்யஸம்ஸ்தம் பக்தைஸ்சகந்த்யாதிபிஸ்ஸேவ்ய மாநம், பத்தார்த்தி தாவாநல மப்ரமேயம் தியாயே துமாலிங்கித விஸ்வ ரூபம்: கக." என்று தியாநஞ் செய்து பின்னர் சிவபூஜை செய்ய ஆரம்பிக்கவேண்டியது.

அப்படியல்லாத பக்ஷத்தில், சிவபெருமானுடைய திவ்யமங்கள ஸ்வரூபத்தைத் தியாநிக்கிறேனென்று கருதியேனும் சிவபூஜை செய்யலாம்.

ஹரோ மஹேசுவரோ தேவ: சூலபாணி: பிநாகத்ருக். உக.

பசுபதிச் சிவச்சைவ யஜ்ஞாக இதிச்சமாத்.

இந்த அஷ்டநாமங்களில் பிருதிவீஹரணம் [மண் எடுத்துக்கொள்ளுதும்], நீர் விட்டுப் பிசைந்து லிங்கஞ்செய்வதும், பிராணப்பிஷ்டை செய்வதும், அழைத்தலும், ஸ்நாநஞ்செய்வித்தலும், பூசைசெய்தலும், க்ஷமாபணமும், விசர்ஜநமுஞ்செய்யவேண்டியது எப்படியென்றால், ஹராயநம: என்று மண்ணையெடுத்துக்கொண்டு, மஹேஸ்வராயநம: என்று பிருதிவில் நீர் சேர்த்துச் சிவலிங்கஞ்செய்து, ஸூலபாணயேநம: என்று பிராணப்பிரதிஷ்டை செய்திருத்தி, பிநாகபாணயேநம: என்றும்,

கைலாஸஸிகராத்ரம்யாத்சமாகச்சமமப்ரபோ. உசு.

பூஜாம்மோம்க்ருஹாணத்வாசயதோக்தபுலதோபவ |

யதோக்தரூபிணம்ஸம்புமஹாமாவாஹயாம்யஹம் || உச.

என்றும் ஆவாஹநஞ்செய்யவேண்டியது. [மேல்சொல்லப்போகிற மந்திரஜபத்திற்குப் பதிலொருபாகம் ஹோமமும், ஹோமத்திற்குப் பதிலொருபாகம் பிராமணபோஜனமும் செய்யவேண்டியது. இது பூநாக்கிரமத்திற் சேர்ந்திலீலையாயினும் தாலிலுள்ளமையின் அப்படியே மொழிபெயர்க்கப்பட்டது.] மஹாப்பிரதாபமுடைய நக்நிதேவனாரும் பிரமதகணங்களையும் பூஜித்தபின்னரே சிவபெருமானைப் பூஜிக்கவேண்டும்.

யடையவேண்டும். அப்படிச்செய்யாது சமுசார சுகத்திலேயே யிருந்துவிட்டால் யமபாசத்தில் அகப்பட்டுக் கஷ்டப்படுவீர்கள். நாம் இதுவரையிற் பிள்ளைகளாகவும் பிதாக்களாகவும் சகோதரர்களாகவும் எத்தனையோமுறை தோன்றியிருக்கிறோம். இவை கர்மபந்தத்தாற் கருப்பாசய முற்றவையே யன்றி வேறன்று. முழுப்பாபியாயின் நரகத்தையடைவான். முற்றும் புண்ணியஞ்செய்தவனுயின் சுவர்க்கத்தைப் பெறுவான். புண்ணிய பாபங்கள் இரண்டுங் கலந்திருப்பதால் மாறுட ஜனனங்கிடைக்கும். புண்ணிய பாபங்கள் நசித்தவிடத்தில் நித்தமான முக்திகிடைக்கும். கர்மசம்பந்தமானதேகாபிமான மிருக்கு மெல்லியும் முக்திகிடைக்கமாட்டாது. கர்மநாசமுண்டாகும் நிமித்தம் விஷ்ணுவைத் தியானிக்கவேண்டியது. ஹரிநாமத்தால் கர்மங்களொழியும். ஹரிசேவையின்றிக் கர்மமொழியவேண்டுமாயின், அதுபவித்தாவதுபிராயச்சித்தங்கள்செய்தாவது ஒழிக்கவேண்டும். அப்படியொழிக்காவிடின் பிறவியையடைந்து அதுபவித்தே தீரவேண்டும். அழுக்குத்துணியிற் சாயமேறாது; அழுக்கில்லாத வஸ்திரத்திலேயே சாயம்பிடிக்கும். அதுபோலத் தேகாபிமானத்தாலுண்டான மனத்திலுள்ள அழுக்கு ஹரிபஜனையால்லொழியுமன்றி வேறெந்தவழியுமொழியமாட்டாது. நீங்களாவரும் மூர்க்கர்கள். என்னசொல்லினும் என்தந்தைகட்டளைப்படி நடப்பவர்களாயிருக்கிறீர்கள். சத்தியத்தை யறியீர்கள். உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள். நான் மட்டும் விஷ்ணுவையே பக்திசெய்வேனன்றி, என் தந்தைகட்டளையைச் சிறிதுங் கேட்கமாட்டேன். என் விருப்பின்படி நடப்பேன். நீங்கள் போங்கள் என, மந்திரிபுத்திரர்கள் மனவருத்தத்துடன் ஹிரணியகசிபுவினிடம் வந்து, அரசனே! நாங்கள் எவ்வகையாகச் சொன்னபோதிலும் உங்கள் புத்திரன் கேட்கிறவனல்லனென்று சொன்னார்கள்.

ஹிரண்யகசிபன் எல்லையில்லாத சினங்கொண்டு, புத்திரனை வருவித்து வெளியே கோபத்தைக்காட்டாதவனுய், தன்சமீபத்தே உட்கார வைத்துக்கொண்டு போதிக்கின்றான்: மகனே! நான்சொல்வதைக்கேள்; பிடிவாதத்தைவிடு; உலகத்தில் ஜனங்கள் ஹரியை யேன் சேவிக்கிறார்களோ அவ்வகைய ஜகவரியத்தை நீ என்னிலேயே அடைந்திருக்கிறாய். உனக்குநானே ஹரியன்றி வேறு ஹரி யொருவன் வேண்டுமோ? தேவர்கள் தானவர்கள் கந்தர்வர்கள் நாகர்கள் ருஷிகள் முதலானவர்களும் எனக்கு வசப்பட்டவர்களாயிருக்கின்றார்கள். சகலலோகங்களும் என்ஆதீனத்திலிருக்கின்றன. நிகரகாநிகரசாமர்த்தியமுடைய என்னைக்காட்டிலுஞ் சிறந்த ஹரியாரவன்? என்னை விட்டுவிட்டு நீ சொல்லுகிற ஹரி எங்கே யிருக்கின்றானென்? நீ காட்டுவாயா? நீ அறியாமையால் என்னைச்சேவிக்காதிருக்கிறாய் என்றான். இவ்வாறுகூறிய தந்தையின் வார்த்தையைக்கேட்ட பிரகலாதன், ஓ தைத்தியா! ஹிரணியகசிபா! நானே விஷ்ணு; என்னைக்காட்டிலும் வேறே விஷ்ணுவில்லையென்று சொல்லுகின்றீரையே! விஷ்ணு மூர்த்திக்கும் உனக்கும் அதிக ஏற்றத்தாழ்வுகளுள. இரத்தினத்திற்கும் பருக்கைக்கும், குயிலுக்குந் தவளைக்

கும், சந்தனத்துக்குஞ் சேற்றுக்கும், சாந்தமுடையவனுக்குங் கோபமுடை யவனுக்கும், சூரியனுக்கும் மின்மினிப்பூச்சிக்கும்,வேதத்திற்கும்சாதாரணப் பேச்சுக்கும், பொன்னுக்கும் இரும்புக்கும், பசுவுக்கும் பன்றிக்கும் உள்ள வித்தியாசத்தைப்போல விஷ்ணுமூர்த்திக்கும் உனக்கும் அவ்வளவு உயர்வு தாழ்வுகளிருக்கின்றன. அவரோசாந்தசீலர், நீயோ அகங்காரி; பாபி ; காமு கன்; தேகாபிமானி; நீச்சன்; இறப்பவன்; பிறரைத்தூஷிப்பவன். நீவிஷ்ணுவை தோஷமடைவதால்மோக்ஷமடையமாட்டாய். விஷ்ணுவைச்சந்தோஷிப்பித் தால்மோக்ஷமடைவாய்; நீயேவிஷ்ணுவென்றுசொல்லஞானமடைவையோ? எவ்வளவு தைரியத்துடன் சொல்லுகிறாய் ? விஷ்ணுவுக்கும் உனக்குமுள்ள தாரதம்மியங்களை நான் எடுத்துக்காட்டினேன்; அதைநயந்துகொள். யாரை யைவிட்டு நரியை யேறுவாருமுண்டோ? இல்லை ஆகலின்,விஷ்ணுவைச்சேவி ப்பேன். விஷ்ணுவைச்சேவிப்பேன். உனக்குஏதாவதுசெய்யச்சக்தியிருந்தால் வினைவித்செய்யலாம் எனத் தந்தைக்குச் சிறிதும் பயப்படாது கூறினன். இரணியகசிபன் மகனைநோக்கி, சரியே ; நீ எவனைச் சேவிக்கவேண்டுமென் கின்றனையோ அந்தவிஷ்ணு எங்கிருக்கின்றான் ? அவனைக்காட்டு என்றனன். இதனைக்கேட்டுப் பிரகலாதன் சொல்லியவற்றையும், மேல்கடந்த சரித்தி கனையுஞ் சொல்லுகிறேன் கேளுங்களென்று ஸூதமுநிவர் சந்தோஷசித்தத் துடன் சொல்லத்தொடங்கினர்.

பிரகலாதன் விண்மேகிமை யுரைத்தது
முற்றிற்று.

அறபத்தொன்றுவது

நரசிங்க சரபாவதாரங்களின் சரிதங்களுரைத்த அந்தியாயம்.

ஸூதர் சொல்லுகிறார் : முனிவர்களே ! இரணியகசிபன் விஷ்ணு யவற்றிற்குப் பிரகலாதன் விடைவிடுத்ததைச் சொல்லுகிறேன். உலகத்தி ற்காண்படும் சமுத்திரங்கள் பர்வதங்கள் விருக்ஷங்கள் மேகங்கள் நதிகள் சேதனாசேதனப் பொருள்கள் ப்ரமன்கள் பட்டணங்கள் சூரியன் சந்திரன் எனங்கள் * சைத்திரதம் ஸ்மசானம் நீர் முதலிய ஸ்தூல ஸூக்ஷும ப்பிரபஞ்ச முழுவதிலும் நிறைந்திருப்பவனே நாராயணன். அவன் முன்பின் நடு முடிவு முதலிய எவ்விடத்திலும் எக்காலத்திலும் விளங்குவன். அவனு டைய உருவத்தை வர்ணிக்க எனக்குச் சக்தியில்லை. ஹரி இல்லாத இடமே இடையாது என்று கூறிய பிரகலாதனுடைய வார்த்தையைக்கேட்ட இரணி யகசிபன், அடா பிரகலாதா ! அந்த ஹரி யென்பவன் எவ்விடத்திலு மிருப்ப தாக நீ கூறுதலின் அவன் இந்தத்தூணிலிருக்கின்றனனு? சொல் என, பிர கலாதன் சர்வவியாபியாகிய விஷ்ணு இந்தத் தூணிலுமிருக்கின்றனன் தடை யில்லையென், தன்னிலு மிக்க கடவுளில்லையென்று இனி வருவதறியாமல் மிகச் செருக்குற்ற இரணியகசிபன் அப்படி இத்தூணில் ஹரி இருப்பானுயில்

* சைத்திரதம் - குபேரனது நந்தவனம்.

கான்அவனைப் பூஜிக்கிறேன்பார் என்று கூறி, கோபத்தாற் கண் சிவந்து பற்களைக் கடித்து மீசைதூடிக்கக் கத்தியைக் கையிற்பிடித்துத் தான் உட்கா ர்ந்திருந்த பீடத்திலிருந்து விசையிலெழுந்து தன்கையிலிருக்கும் கத்தியை யோச்சி அத்தூணை வெட்டினன். அப்படித் தூணை வெட்டியபொழுது மலை யின்பேரில் இடிவிழுந்தாற்போற் சப்த முண்டாயிற்று. அதுபோது அந் தத் தூணிலிருந்து விஷ்ணுமூர்த்தியானவர் சந்தியாகாலத்தில் உக்ரமான கோபவுருவத்துடன் தைத்தியர்கள் யாவரும் பயப்படத்தக்கதாய் அவதரித் தனர். அவ்விஷ்ணுமூர்த்தியின் பாதிசரீரம் சிங்கவடிவமும் பாதிசரீரம் மாது டவடிவமுமான நரசிங்கவடிவத்துடன், பிரளயகால மேககோஷம் போலக் கர்ச்சித்துக்கொண்டு, பிடரிமயிர்கள் ஆகாயத்திலுள்ள மேகங்களையுடைக்க வும், சிங்காதத்தி திசைகளைச் செவிடுபடுத்தவும், மூசுத்திலுற்பவிக்கும் அக்கி னிச்சுவாலையால் அசுரர்கள் எரிந்துபோகவும், ஹுங்காரங்களால் அசுர மாதர் கர்ப்பத்திலுள்ள பிண்டங்களெல்லாம் விழுந்துவிடவும், பெரிய கூர் மையான வலிக்த நகங்களோடுகூடியும்விளங்கும் நரசிங்காவதாரத்தை அசு ரர்கள் யாவருங்கண்டு பயந்தும், இரணியகசிபனுடைய உத்தரவின்படி யுத்த சந்நத்தராய்ப் பயங்கரமான யுத்தத்தைச் செய்து, நரசிங்கத்தின் மூக்கிலிரு ந்து,வந்த காற்றின் வேகத்தினாலேயே நாசமுற்றனர்.

அவர்கள் யாவரும் க்ஷணகாலத்தில் அழிந்ததுகண்ட இரணியகசி பன் தானே போர்புரியக்கருதி, சர்வாயுதங்களுந் தாங்கிவந்து, நரசிங்கமூ ர்த்தியோடுபோர்புரிகையில், பூமிதேவியானவள் மீண்டுந் தன்னுடைய நிலை மையில் இருப்பேனு என வுக்கங்கொண்டனன். சமுத்திரங்கள் கலங்கின. ஆகாயமசைந்து நக்ஷத்திரங்களுதிர்ந்தன. இவ்வாறு நரசிங்கமூர்த்திக்கும் இரணியகசிபனுக்கும் ஒரு முகூர்த்தகாலம் போர் நிகழ்ந்தது. உலகத்திற் கெல்லாங் கஷ்டமுண்டுசெய்யும் இவனைச் சங்காரிப்பதற்கு இதுவே சமய மென்று நரசிங்கமூர்த்தி நிருவுள்ளங்கொண்டு அத்தூணத்தின் த்வார பீட த்தில் தன் தொடைமீதில் இரணியகசிபனையிருத்திச் சாயுங்காலவேளையில் தமது திருவிரல்களிலுள்ளநகங்களால் அவன் மார்பைப்பிளந்து பெருங்கர ச்சனையுடன் அவன் குடலைப்பறித்துத் தமது கண்டத்தில் மாலையாகத் தரி த்துநின்றனர். இவ்வண்ணமாக இரணியகசிபனுனவன் சகல தேவர்களும் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே நரசிங்கப்பெருமானுல் மரணமடைந் தான். தேவர்கள்யாவரும் இன்றல்லோ நாம் பெருங்களிப்பெய்துநாள்! இந் நாள் மிகநல்லநாளாயிற்று. அசுரபாதை யகன்றோம். அகன்றோம் என்று சந் தோஷித்துப்புஷ்பமாரிசொரிந்து ஜயஜயவென்று நரசிங்கமூர்த்தியைத் துதி த்து நிருத்தியம்நாட்டியம்கான முதலியவற்றைச் செய்து புகழ்ந்தனர்.

இப்பெரும்போரில் அகேகரிறந்தனர். பலர் இந்த யுத்தபயத்தைப் பார்க்கமுடியாது உலகத்தைவிட்டு மறைந்தோடிப்போயினர். பூமியில் இரா க்ஷசப்பூண்டு சிறிதுமின்றி யொழிந்தது. துக்கமென்பது இல்லையாயிற்று.

யாவருஞ் சந்தோஷபூர்த்தியாயிருந்தனர். முன்வைகுந்தபதவியில் விஷ்ணு மூர்த்தியை ஸ்வாமீ! கோமளதேகமுடைய தேவீர் எவ்வாறுபோர்புரிகிறீர் எனக் கேட்டதிருமகள், இந்த நரசிங்காவதாரத்தில் உடனிருந்து இதனைக் கண்டு ஸ்வாமீ! எவ்வகைய உருவத்தைவகித்தீர்! என்று ஆச்சரியமடைந்து சந்தேக நீங்கினள். தேவதுந்துபிகள் முழங்கின. இரணியகசிபன் இறந்தமைக்காக மனம் வருந்தும் அவன் மனைவி கயாது தன் துக்கத்தை வெளியிற் காட்டாது தன் புத்திரனை பிரகலாதனைச் சாந்தப்படுத்தி நிமித்தமாகத் தேற்றிப்பதாகக் காட்டினள். பிரகலாதனும் யான் தன்னிபுனனேன்; விஷ்ணு மூர்த்தியின் தரிசனம் கிடைக்கப்பெற்றேன்; துஷ்டனை இரணியகசிபன் இறந்தொழிந்தானென்று சந்தோஷமடைந்தனன்.

இவ்வாறிருக்கையில், நரசிங்கமூர்த்தியின்கோபாக்கினிதணியாமையின், தேவர்முதலியோரவரும் அக்கோபாக்கினிக்காற்றது இதனுல் என்ன துன்பமடைய நேரிடுமோவென்று துக்கித்திருந்தனர் என்றுணும், விஷ்ணு மூர்த்தியின் அருகிற் சென்று அவரைத் தோத்திரஞ்செய்து கோபந்தணிக்க வலவொருவருமிலர். தேவர்களில் ஒவ்வொருவரும் நீர் போம் நீர் போம் என்று நரசிங்கத்தினிடத்தே பிறரை அனுப்பப்பார்த்தார்களேயன்றி, தாம் போனுல் தமக்கென்ன விபரீதம் விளையுமோவென்று அச்சத்தோடிருந்தனர். இந்திரனை நோக்கி நரசிங்கமூர்த்தியைச் சாந்தப்படுத்துமென, இந்திரன் ஆ! ஆ! இக் கோரரூபத்தினிடம் நான் செல்ல வல்லவனல்லேனென்றனன். பிரமனை வேண்ட, பிரமனும் என் உடல் பொரிந்துவிடும்; நான் போகமாட்டேனென்றனன். திருமகளை வேண்ட, திருமகளும் நான் இப்பயங்கர ரூபத்தை எப்பொழுதுங் கண்டிலன்; நான் போகமாட்டேனென்றனள். ருஷிகளும் தேவர்களும் யாவரும் அவரைச் சமீபிக்கப் பயந்துகொண்டிருந்தனர். யாவராயினுஞ்சென்று பிரார்த்தித்தாலொழியக் கோபசாந்தி உண்டாகாதாதலின் பிரகலாதனைநோக்கி நீதான் அவரைச்சாந்தப்படுத்தவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, பிரகலாதன் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கியும் அவரிடத்தே நீங்காத பக்தியுடைமையாலும் நரசிங்கமூர்த்தியையடைந்து பிரார்த்தித்து ஸ்வாமீ! சாந்தமடையவேண்டுமெனப் பிரார்த்திக்க, நரசிங்கமூர்த்தி அவனைத் தூக்கிக்கொண்டு தாவினுல் அவன் உடலை நக்கி, யாவருந் தேட்டும்படி, பிரகலாதா! நீ இதுகாறும் பலவகையர்கக் கஷ்டமநுபவித்தனை; இனி உனக்குக் கஷ்டமேயில்லையென்றருளி ஆலிங்கனஞ் செய்துகொண்டு, என் மனம் இப்போது குளிர்ந்தது. துஷ்டனை இரணியகசிபனுல் என் மனங்கொதித்தது; புத்திரனை உன்னை ஆலிங்கனஞ்செய்ததால் அது தணிந்தது. நான் எவ்வாறு உன்னை மார்போடனைத்துச் சுகமடைந்தேனோ அவ்வாறே நீயும் உன் புத்திராதிகளைத்தழுவிச் சுகமடைவாய். நீ புத்திரபவுத்திரர்களுடன்கூடி நெடுங்காலம் இராசரிகஞ் செய்வாய். உன் வமிசம் விருத்தியாகும். நீ பக்தனுதலின் உன்னைச்செயிக்க எனக்கும் அசாத்தியமே என்று வரங்கொடுத்து, பூக்காரஞ் [புஸ் ஸை] செய்துகொண்டிருந்தனர்.

அச்சமையத்தில் தேவர்கள் யாவரும் நரசிங்கமூர்த்தி இன்னும் சாந்தமடையாமையைக்கண்டு பயந்து விநாயகக்கடவுளைத் தியானித்து அவரைநோக்கி ஸ்வாமீ! தாங்களே அவரிடஞ் சென்று தங்களாற் கூடிய விகடகாரியங்களைச் செய்து அவரைச் சாந்தோஷப்படுத்தவேண்டுமெனப் பிரார்த்திக்க, கணபதிதனதுயானைமுகமும் பெருவயிறுந்தோன்றச் சிரியதோர் ஆகுவாகனமிவர்ந்து செல்லுகையில், பெருச்சாளி வினைந்துகடவாமையின் கணபதி தனது வாகனத்தையடிக்க, அஃது காலொடிந்திடரியது. விசோதஞ்செய்யவந்தவிநாயகர் லீலாமாத்திரையாகநிலமிசையிழிந்தனர். அருகிருந்த தேவர்கள் யாவரும் கைகொட்டி நகைத்தார்கள். நரசிங்கமூர்த்தியுஞ் சந்தோஷித்துச் சிரித்தனர். அவர் சிரித்ததுகண்டு கோபந் தணிந்தனரென்று தேவர்கள் யாவரும் சந்தோஷித்தார்களாயினும், நரசிங்கமூர்த்தியின் முகத்தி லண்டாயிருந்த அக்கினிச்சுவாலைமாத்திரம் தணியாமை கண்டு, திருக்கைலாயகிரியையடைந்து திருநந்திதேவர் விடைபெற்றுச் சிவபெருமான் திருச்சந்நிதியைச்சேர்ந்து சேவித்து ஸ்வாமீ! எங்கட்கு அடிக்கடி வருந் துன்பங்களை நீக்கி இரக்ஷிப்பவர் தேவரீரே. சமுத்திரத்தைக் கடைந்த காலத்தில் சுபகரமான பொருள்களையெல்லாம் எங்களுக்குக் கொடுத்து ஆலாலவிஷத்தைக்கொடுத்து நீலகண்டனெனப் பெயரெய்தினீர். எங்கட்கு விபத்துவரும்பொழுதெல்லாம் தேவரீரிடத்தில் விண்ணப்பஞ்செய்தே அவ்விபத்தைப் போக்கடிக்கிறோம். இப்பொழுதும் நரசிங்கமூர்த்தியின் உக்கிரமான ஜ்வாலை எங்களைத் துன்பப்படுத்துகின்றது. அதனைத் தணித்தருளிடத் தேவரீரே சமர்த்தராதலின் அதனைச் சாந்தி செய்து எங்களைக் காப்பாற்றவேண்டுமெனப் பலவாறு தங்கள் துன்பங்களைச் சொல்லிக்கொண்டனர். சிவபெருமான் அவர்கள் வேண்டுகோளை யங்கீகரித்து, தேவர்களே! நான்என்னைச் சரணடைந்தவர்களுடைய துன்பங்களை யொழிப்பேனெனக் கொண்ட விரதத்தைக் காப்பாற்றுவேன். உங்கள் துக்கங்களையொழிந்தனவென்று நிச்சயங்களென்று கூறுகையில், தேவர்கள்யாவருஞ்சிவபெருமானை நோக்கிக் கருணைமூர்த்தியாகிய தேவரீர் அடியேங்களிடத்துக் கருணைவையாகொழிந்தால் எங்களுக்கு நேரும் ஆபத்தினின்று நீக்குபவரும் வேறுண்டோ என்று துதித்து விடைபெற்றுக்கொண்டு தத்தம் பதியை யடைந்து சிறிதுங் கவலையின்றி வாழ்ந்திருந்தனர்.

சிவபெருமான் தேவர்கட்குக் கொடுத்தவரத்தை நிறைவேற்ற சரபத்திருவுருவம் வகித்து நரசிங்கமூர்த்தியிருக்குமிடத்திற்குவருகையில், நரசிங்கமூர்த்தியானவர் அதிதூரத்திலே வருகின்ற கடும்பயமான சரபவடிவத்தைக் கண்களாற் கண்டு யோசிக்கையில், சரபவுருவமாக எழுந்தருளியிருந்தருஞ் சிவபெருமான், நரசிங்கமே! நீ இரண்யகசிபனையும் அசுரர்களையுஞ் சங்காரித்து உலகத்திற்குச் சுகத்தைச் செய்தனையல்லவா வெனக் கூறினர். அப்பொழுதே நரசிங்கமூர்த்தி, ஐய ஐயவென்று சொல்லிக்கொண்டு சரபனை

வைப் பிரதக்ஷிணஞ்செய்து * அவரிடத்திலே லயமடைந்தனர். தேவர்கள் நிருத்தம் நாட்டியம் முதலியவற்றுடன் சரபனுர்பேரில் புஷ்பமாரிபொழிந்து சந்தோஷித்து, சிவபெருமானையும் நரசிங்கமூர்த்தியையும் பிரகலாதனையும் புகழ்ந்தனர். சிவபெருமானும் தேவர்களை நோக்கி, இப்பொழுது இரணிய கசிபுவைச்சங்கரித்த நரசிங்கனும் வேண்டியவரங்களை வேண்டியவர்கட்குக் கொடுப்பான் என்று விளம்பி வெள்ளிமலையை யடைந்தனர். பிறகு இரணியகசிபுவே, இராவண கும்பகர்ணர்களாகச்சனித்து ஸ்ரீராமனால் சங்கரிக்கப்பட்டனர். அவர்களே மீண்டும் தமகோஷனுக்குப் புதல்வ

* இச்சரிதம் வேறு வகையாகவும் வழங்கும். அதாவது:—நரசிங்கமூர்த்தி இரணியகசிபுவுடைய உதிரத்தில் ஒருதுளியேனும் கீழ்விழாமற் கையிலேற்றும் வாய்வைத்தும் பருகினர். அவ்வாறு உதிரமருந்தியதால், உன்மத்தங்கொண்டார்போலத் தன்னைச் சமீபித்தவர்களை வாரி வாயிற்பெய்து செருக்குற்று நின்றனர். அதனைக்கண்டு அமரர்கள்யாவரும் அவரருகே செல்வதற்கஞ்சி, இனி ஒரு கொடியில் உலகமழிந்துவிடுமென்று கருதி யோடித் திருக்கைலாயகிரியை யடைந்து சிவபெருமான்திருச்சந்நிதியில் விண்ணப்பிக்க, சிவபெருமானர் "அமரர்களே! அஞ்சாதீர்கள்" என்று அவர்களையனுப்பி, இரு செவியும் இணையில்லாச் சிறகும் கூரிய நகமுமடைய எட்டுக் காலும் கடுங் கோபமும் செடிய வாலும் பேரிறைச்சலுமுடைய சரபத்தினுருவுடன் நரசிங்கத்தை யடைந்து, இடிமுழக்குபோலிரைந்து, உதிரவெள்ளம் ஊற்றெடுத்தோட, சிங்கச்செத்தையுங் கைகளையுங் கறித்துத்தள்ளி, மேலுரோமத்து நெருப்பின் சருமத்தை யுரித்துப் போர்வையாகக்கொண்டு வெள்ளிமலையை யடைந்து எழுந்தருளியிருந்தனர். விண்டு பண்டையவுணர்வு தோன்றிச் சிவபெருமானைப் பூஜித்து, தேவர்கள் முனிவர்கள் கேட்கும்படி நரசிங்க புராணம் ஓதி வைகுந்தமடைந்து வாழ்ந்திருந்தனர்—என்பதாம். இதனைப் பின்வரும் பிரமாணங்களானறிக.

ஜிஷ்ணெ ॥ கூஹஜ்ரணாஃலாஸாய ஜீஷ்ணவிஷ்ணவே ॥
ஹெதிரீயெ ॥ ஹரிம்ஹராக்த மதயந்திதேவா:
விப்வஸ்யேஸாகம் வ்ருஷபம்மதிகம் ॥
ஸ்ரீஸ்காந்தம். ஹரிம்ஹராக்தம் ஸரபம் விஸ்வஸ்யேஸாக மீஸ்வரம் ।
அதயாக்தி ஸுராஸ்ஸர்வே நமோவாக்யைஸ் ஸ்துத்ருதம் ॥
காசிகண்டம். புராஸிரண்ய கசிபும் தைத்யராஜம் மஹாபலம் ।
ஹத்வாதத் குதிராபாக ப்ரம்ஹதம் பாஹிதஸ்வரா: ।
ருத்ரஸரப ரூபேண நரஸிம்ஹ மபீடயத் ॥

ருக்வேதம். அஹம்ம்ருண: ஸரபாய ருஷிபத்நவே ॥

ராய்ச் சிவபாலதக்ஷனுக்கிராகஜனித்துக் கிருஷ்ணனுற் சங்கரிக்கப்பட்டனர். இவ்வாறு ஜயவிஜயர்கள் மூன்று ஜனனங்களெடுத்து விஷ்ணுவைப்பகைத்து அவராற் சங்கரிக்கப்பட்டிவருருத்தையடைந்து தமதுபதவியிற் சுகமாக வாழ்ந்திருந்தனர். ருஷிகளே! நரசிங்காவதார சரித்திரமும், சிவபெருமானுடைய சரபரூப சரித்திரமும் உங்கட்குச் சொன்னேன். எவரேனும் இச்சரிதங்களைக் கேட்டவர்கள் துக்கங்களைபொழித்துச் சகல சுகங்களையுமனுபவிப்பார்கள்" என்று ஸூதமுனிவர் கைமிசாரணிபவாசிகளுருக்குக் கூற

நரசிங்க சரபாவதாரக்களின் சரிதங்க ளுரைத்தது
முற்றிற்று.

அறுபத்திரண்டாவது

நளராஜனது பூர்வகதை யுரைத்த அத்

ஸூதமுனிவரே! நீர் மகா ஞான சீலர். புண்ணியசரித்திரங்களை இன்னுஞ் சொல்லவேண்டும். பூர்வத்தில் தேவர்களும்அசுரர்களும் யாரைப் பூசித்துக் கிருதகிருத்தியர்களானார்கள்? எனக்கேட்ட கைமிசாரணிய வாசிகளை நோக்கி ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்: முனிவர்களே! நீங்கள் கல்வினோதயத்தைக் கேட்டீர்கள். உலகங்கட்குப் பிதாமகனை பிரமதேவரும் அவர் புத்திரர்களாகிய மரீசிமுதலிய மகருஷிகளும், பிரமருஷிகளும், தேவர்முதலியவர்களும் சிவபூஜையைச்செய்தே கிருதார்த்தர்களாயினர். எப்படியென்னில், பார்த்திவலிங்கத்தையும் சுவர்ணமுதலியலோகங்களானும் இரத்தினங்களானும் செய்விக்க லிங்கங்களையும் அர்ச்சித்தும், மானசிகபூஜைசெய்தும் கீர்த்திபெற்றனர். இப்பொழுதும் அநேகர் பூஜித்து வருகிறார்கள். நாரதமுனிவர் விசேஷமான சிவபூஜைசெய்திருக்கிறார். ருஷிசிரேஷ்டராகிய வசிஷ்டரும் பதிவிரதா சிரோன்மணியான அருந்ததியும் சிவபூஜை செய்தனர். காசிபரும் அதிதியும் பார்த்திவலிங்கபூஜைசெய்து இஷ்டபலன்களை யடைந்தனர். சுவாயம்புமநு முதலானவர் யாவரும் சிவபூஜைசெய்து இராச்சியபோகமனுபவித்தனர். சுவாயம்புவின் புதல்வன் பிரியவிரதனும் சிவபூஜையால் தன்னியனுனன். இக்ஷ்வாகு-மாந்தாதா-சகரன்-நகுஷன் - நிமி-பன்-தசரதன்முதலியவர்களெல்லாரும் ஆயுள்காலம்வரையும்சிவபூஜைசெய்துவந்தனர். அதில் தசரதன் எவ்வளவுகபிலம் சிவபூஜைசெய்தும் புத்திரபாக்கியமின்றி அதனை யடையும்பொருட்டு, கோடலிங்கார்ச்சனைசெய்து பின்னர் புத்திரகாமேஷ்டியைச் செய்கையில் சிவஸ்வரூபமான அக்னிதேவன் விஷ்ணுரூபமாகப் பிரசன்னமாய், நான்குபுத்திரர்களாகப்பிறந்தனன். கௌசலையும் வசிஷ்டர்கட்டளையால் பார்த்திவ லிங்கபூஜை செய்துவந்தனள். ஸ்ரீராமனுந் தினந்தோறும்பார்த்திவலிங்கபூஜைசெய்துவந்தனன். அச்சூரியவமிசத்திற் பிறந்தோர் யாவருங் கிரமப்படி சிவபூஜைசெய்து சகல ஐசுவரியங்களையு மடைந்தனர். பார்வதியின் சாபத்தால் பெண்தன்மை யடைந்த

புரூரவன் சிவலிங்கார்ச்சனை செய்து சிவகடாக்ஷத்தால் ஒருமாதம் ஆணுரு வும் ஒருமாதம் பெண்ணுருவு மடைவதானான். பரதன் சிவார்ச்சனையை நன்று கச்செய்திருக்கிறான். பாண்டுபுத்திரர்களாகிய தருமராஜன் முதலிய பஞ்சபா ண்டவர்களும் சிவபூஜைசெய்திருக்கிறார்கள். அவர்களில் அருச்சுனன் வியா கவாலுடைய உபதேசம்பெற்று விசேடமாகச் சிவபூஜை செய்திருக்கி கண்ணன் ஒருகாலத்தில் வடகிரியில் ஏழுமாதவரையிற் சிவபூஜையை செய்து சிவபெருமானிடம் அதிக வரங்களைப்பெற்று உலகத்தைச் ஞ்செய்துகொண்டனன். அந்தச் சிவலிங்கத்திற்கு அவர் பூஜித்த கள் பர்வதாகாரமா யிருக்கின்றன. நளராசன் பூர்வஜன்மத்தில் ன யிருக்கையில் சிவபெருமானைத் தினந்தோறும் பூஜித்ததற் த்தை யடைந்தான். எனக்கூறுகையில், சௌனகாதிமுனிவர் த வேடுவன் தினமும் பூஜித்த வகையினையும், சிவபெரு களித்து இராஜ்யசம்பத்தைக் கொடுத்தருளியதன்மை யும், சிவபெருமான் அருச்சித்த முறைமையினையும் அடி யேங்கட்கு விவரமாக இளக்கியருளவேண்டுமென, ஸூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

முனிவர்களே! அற்புதமென்னும் பெயரையுடைய பர்வதத்தில் வசிக்கும் வேடர்குலத்திற் பிறந்த ஆகுகன் என்பவன் தன் மனைவியாகிய ஆகுகி என்பவளோடு அருகிருக்கும் ஒரு சிவாலயத்தை யடைந்து அவன் சிவாலயத்துள்ளும், அவள் சிவாலயத்தின் புறத்துத் தினந்தோறுஞ் சிவலி ங்கார்ச்சனைசெய்து சிவதரிசனஞ் செய்துவருவது, நியமமாகக் கொண்டு வாழ்ந்திருக்கையில், ஒருகாலத்தில் ஊடாதசாகிய ஒரு யோகி, மாலைப்பொ ழுதில் அவ்வழியே வந்து சிவாலயமிருக்கக்கண்டு நிறுத்தி நின்றனர். அப் பொழுது அவர் வரவைக்கண்ட ஆஹுகி அவரிடம் வந்து நமஸ்கரித்து ஸ்வாமீ! தாங்கள் எங்கே போகவேண்டியவர்கள்? இங்கிருக்கலாம். இரு ட்டினிட்டது எனை உபசாரவார்த்தைகளே மரியாதையோடு சொல்லினள். யோகியோ அவள் பெண்பாலாதலின் அவளோடு வசனிக்கக்கூடாதவராய் மௌனமாகவிருந்தார். அந்தச்சமயத்தில் நிவேதரிசனஞ்செய்யும்படி சிவா லயத்தை யடைந்திருந்த ஆஹுகன் வெளியேவந்து சிவயோகியைப் பார் த்துப் பெருஞ்சந்தோஷத்துடன் அவருடைய பாதாரவிந்தங்களிற் சாஷ்டா ங்கநமஸ்காரப்பணிந்து கைகட்டி எதிரில் நின்று, ஸ்வாமீ! எங்களுக்குத் தெய் வம்போல இங்கெழுந்தருளியதற்காக மிகுதியுஞ் சந்தோஷமடைந்தேன். தாங்கள் எங்கே போகவேண்டும். இப்பொழுது தங்கட்கு வேண்டுவது யாது? என்று பலவகையாக நல்லவார்த்தைகளோடு கேட்க, யோகி அப்பா தான் பாத்திரையாகியாப் போகின்றேன்; எனக்கு ஒன்றும் வேண்டாம்; இராப்பொழுதைக் கழிக்கும்படி சயனிக்க இடம் வேண்டுமென, அவ்வே டன் அப்படியேயாகுகவென்று, தன் குடிசையில் அவரை யிருக்கும்படி செய்து தானிருவரும் புறம்போயிருக்கலாமென மனைவியிடங் கூற, யோகி

ஐயோ! பெண்பிள்ளையை இராக்காலத்தில் வெளியே யிருத்தப்படாதென, ஆஹுகன் ஸ்வாமீ! அப்படியாயின், தாங்களும் இவளும் இவ்விட்டிலிருங் கள். யான் ஆயுதபாணியாய் வெளியேயிருக்கிறேனென்றுகூறி, அவளை உள் ளேயனுப்பி, மனைவியையும் அக்குடிலிலேயே யிருக்கவென விடுத்து, தான் வில் அம்பு முதலிய ஆயுதங்களோடு வெளியே வீழித்துக்கொண்டிருந்தான். யோகி தன்வழக்கப்படி அக்குடிசையிற் சிவயோகத்திலிருந்தனர். ஆஹுகி சயனித்துக்கொண்டிருந்தாள். நடுராத்திரியில் ஒரு பெரும்புலிவந்து ஆஹுகி னைப் பக்ஷித்துவிட்டது.

பொழுது விடிந்தவுடன் ஆஹுகன் இறந்ததுகண்டயோகி ஆஹுகி யைநோக்கி மன்ஸ்தாபப்படுகையில், ஆஹுகி ஸ்வாமீ! தாங்கள் வருத்தப்பட வேண்டாம். என்கணவர் பிராமணனுக்கு உதவிசெய்து உயிர்விட்டமையின் நற்கதியடைவதுபற்றிச்சந்தோஷிக்கிறேன். இனி அடியேனும் அவருடனே பிராணனைவிடத் தேவரீர் உத்தரவு கொடுக்கவேண்டுமென்றுகூறி, காஷ்ட மூட்டி, புலிக்கோட்பட்டிறந்த கணவனுடைய தேகத்தின் மிருதியை அதிற் பெய்து தானும் விழ எத்தனிக்கையில், சிவபெருமான் பிரத்தியக்ஷமாய் அவள்கையைப்பிடித்துக்கொண்டு, நீ விதர்ப்பதேசத்தில் வீமராசன் புத்திரி யாய்த் தமயந்தி யென்னும் பெயருடன் ஜனிப்பாய். உன் கணவனும் நிட்த தேசத்தில் வீரசேனமகாராசன் புத்திரனும் நளமகாராசனெனத் தோன்று வன். இவ்யோகபுருஷன் உங்கள் நட்பைப் பிரித்தவனதலின் அன்னப்பற வையாய்த்தோன்றி உங்கட்குத் தூது நடத்து மனஞ்செய்விப்பான். உங்க ட்கு இனி வேறு ஜனனமில்லை; முக்தி கைகூடுமென்று வரங் கொடுக்கக் கேட்டு, மனஞ்சந்தோஷித்து ஆஹுகி அத்தியில் உயிர்விட்டனள். பின்னர்க் சிவபெருமான் கூறியவகையே அவர்கள் மூவருந் தோன்றினர். சிவபெரு மான் அவ்விடத்தில் அசலேசுவரனெனப் பெயருற்று விளங்குகின்றனர். இனி நீங்கள் கேட்ட அருச்சுனனது சிவபூஜையைப்பற்றிச் சொல்லுகிறேனென்று ஸூதமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

நளராசனது பூர்வகதையுரைத்தது

முற்றிற்று.

அறுபத்தாறாவது

கண்ணனும் வியாசனும் பாண்டவரிடம்வந்த அத்தியாயம்.

முனிவர்களே! முன்னொருகாலத்தில் துரியோதனனால் தோற்கடிக் கப்பட்டு வனத்தையடைந்தபாண்டுபுத்திரர்களாகிய தருமன்-பீமன்-அருச்ச னன்-நகுலன்-சகாதேவன்னென்னும் ஐவரும், அவர்கள் பத்தினியாகிய திரௌ பதியும் துவைதவனத்திலிருந்துகொண்டு சூரியபகவான் கொடுத்த அன்ன பாத்திரமகிமையால் காலங்கழித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது துரி யோதனன்னுண்டுகோளால் துர்வாசமுனிவர் பதினாயிரஞ்சீஷர்களுடன் அங்கு

வந்து, மகாப்பிரபுவாகிய தருமராசனே! எங்கட்கு விசேஷமான அநுசாஸன யோகஉபதேச அன்னமளிக்கவேண்டும் எனக்கேட்க, தருமராசன் ஸ்வாமீ! அவ்வாறேயாகுக: தாங்கள் ஸ்நானஞ்செய்துவாருங்கள் என்றனுப்பிவிட்டு, நாம் எவ்வாறு இவர்கட்கெல்லாம் அன்னமிடக்கூடும்? உயிர்வியோதகலம் என்று நிர்மானித்திருக்கையில், நிசாபதியை தங்கட்கு ஆபத்துக்குதவுங் கிருஷ்ணனே நித்தியானிக்க, கண்ணன் அவ்விடம்வந்து சங்கதியை யுணர்ந்து, அன்ன பாத்திரத்திலிருந்த இலைக்கறியைக் கையிலெடுத்துக்கொண்டு அதின்மேல் ஜலத்தை விடச்சொல்லி, பதினுயிரம்பேருக்கும் போதுமான அன்னபானுதிகளை யுண்டுசெய்தனன். ஸ்நானத்திற்குச்சென்ற துர்வாசமுநிவர் தனது சிஷ்யப்பிரசிஷ்யருடன்வந்து சந்தோஷமாகப்புசித்துப்போயினர்: கடவுள் தனவனென் விஷயத்தில் உண்டோ அவனுக்குங் குறையொன்றிருக்குமோ? ஆதலின் நீங்கள் கடவுளிடத்தே பக்தியுடையவர்கள் என்றகூறி, கிருஷ்ணமூர்த்தி சந்தோஷித்திருக்கையில், பாண்டவ ரைவரும் கிருஷ்ணரைப்பார்த்து இன்று உம்முடைய தயவால் எங்களுக்குவந்த கஷ்டம் விலகிற்று. பலவானன துர்யோதனன் எங்கட்குச் சத்துருவாயிருக்கிறான்; இனி என்ன நடக்குமோ? என்னசெய்வோம்? என வருத்திக்கூற, கிருஷ்ணமூர்த்தி பாண்டவர்களே! நான் சொல்வதைச் செய்வீர்களாக. நான் துவாரகையிலிருந்து சத்துருக்களை வெற்றிகொள்ளத் தருதி உபமந்யு முநிவரால் சிவபூஜாமந்திரத்தை உபதேசிக்கப்பெற்று, வடகைலாயில் ஏழுமாசம் நிஷ்டையிருந்து, சிவபூஜை செய்கையில், சிவபெருமான் பிரசன்னராய் இஷ்டமான வரங்களைக் கொடுத்து வில்வேசுவரரென்னும் பெயரால் அங்கெழுந்தருளி யிருக்கின்றனர். சிவாநுக்ரகத்தால் சத்துருக்களை வெல்லத்தக்க பலத்தையடைந்து சத்துருக்களை வென்றேன். இப்பொழுதும் புத்தி முக்திகளைக்கொடுக்கும் சிவார்ச்சனையைக் கடைப்பிடித்து வருகிறேனுகலின், நீங்களும் சகல சுகங்களையுங்கொடுக்குஞ் சிவபெருமானைப் பூஜிக்க வேண்டுமென்று சொல்லிப் பாண்டவர்களைத்தேற்றி அந்தர்த்தானமாயினன்.

பிறகு பாண்டவர்கள், புத்திவானன ஒருவேடனைத் துரியோதனனிடஞ்சென்று அவன் குணங்களைப் பிரகடித்துவரும்படி அனுப்ப, அவன் அவ்வாறேசென்று அவ்விடத்தில் நடக்கும் இராஜாங்க காரியங்களையும் துரியோதனன் சரிவர நடத்தலையுந் தெரிந்துகொண்டுவந்து தருமராசன் சமுகத்திற்சொல்ல, பாண்டவர்கள் கேட்டு விசனத்தோடு என்னசெய்வோமென்று, சத்தியத்தாற் பிணிப்புண்டிருக்குஞ் சமயத்தில், ஜடாமகுடதாரியாய் விபூதிதாளனஞ் செய்துகொண்டிருக்கும் வேதவியாஸ பகவான் தருமதேவதை போலவும் தேஜோரூபமாகவும் அங்கெழுந்தருளக்கண்ட பாண்டவர்கள் சந்தோஷித்து, தண்ணென்றெழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எதிர்நின்று, அவரை ஓர் ஆசனத்திலிருத்திச் சந்தோஷத்துடன் முறைப்படி பூஜித்து அநேகவகையாகத் துதித்து அவரைச் சந்தோஷப்படுத்தி, நாங்கள் இன்றுதான் கண்ணியர்களானோம். இன்றுதான் எங்கள் ஜனனம் சபலமாயிற்று. எங்கள் சத்துருக்கள் இப்பொழுதுதான் பலனளித்தன. தேவபிராமணர்களை நாங்கள் பூஜித்ததும், எங்கள்தவமுந் தானமுந் தேவரீரது தரிசனத்தாற் பயன்பெற்றன. எங்கள் கஷ்டங்களெல்லாம்விலகின. குரூராத்துமாக்களான பல துஷ்டர்கள் எங்களைக் கஷ்டப்படுத்திக். கொண்டிருந்தனர். அவையெல்லாம் தங்களதுவருகையினல் நீங்கின. மஹாத்து மாக்களுடைய அருகிலிருக்கும் இடைத்தபொழுது துக்கமும் வருமா? எளியோரைக் காப்பதே பெரியோர்கடன். அடியவர்கள் செய்த நீக்கருமங்களை யொழித்து அவர்கட்கு நற்கிணம்வருமாறு ஆசீர்வதிப்பதே பெரியோர் சுபாவம். அடியேங்களைக் காக்கவேண்டியது தங்கட்கு முக்கியமான்கடன். ஒருவன்செய்ய வேண்டியது பெரியோர் சேவையே. தங்கள்தரிசனத்தால் எங்கட்குண்டாகவேண்டுவது சுபமேயன்றிப் பிறிதொன்றில்லை. தங்கள் தரிசனத்தால் அடியேங்கள் மனம் வாடிய பயிர் மழைபெய்யப் பெற்றுற்போலக் களிப்புற்றது எனப் பலவாறு துதிக்க, வியாஸபகவான் அவர்கள் விஷயத்தில் தயையுடையவராய்ச் சொல்லத்தொடங்கினர்.

கண்ணனும் விபீஷணனும் பாண்டவரிடம் வந்தது முற்றிற்று.

அறுபத்து நான்காவது

வியாசருபதேசப்படி அருச்சுனன்தவஞ்செய்த அத்தியாயம்.

வியாஸபகவான் பாண்டவர்களை நோக்கிச் சொல்லுகிறார்: நீங்கள் ஐவரும் மகாபுண்ணியர்கள்; சத்தியவான்கள்; நீங்கள் தருமத்தைக்கைவிடாதிருத்தலின் உங்களை யொத்தவர் பிறரில்லை. சத்ஜனர் ஆயுளுக்கிறுதி வரும் பொழுதும் பொய்புகலார்; அப்படிப்பட்ட சத்தியத்தால்வரும் தருமமே சுவர்க்காதி நல்ல பலன்கட்குக் காரணமாகும். எனக்கு நீங்களுந் துரியோதனுதிகளுஞ் சமானமே யன்றி வேறில்லையாயினும், தருமவான்களிடத்திலே பெரியோருக்குக் கருணை யிருக்கவேண்டுமாதலின், உங்களையே அதிகமாக விசுவாசிக்கிறேன். முன்னே துஷ்டனன திருதராட்டிரன் உங்கள் இராஜ்யத்தைப் பராசையாற் பறித்துக்கொண்டனன். அவனுக்கு நீங்களுந் துரியோதனுபரும் புத்திரரே. உங்கள் பிதாமரித்து நீங்கள் சிறியவர்களாயிருப்பதற்காக உங்கள் விஷயத்தில் தயைவைக்கவேண்டியவன் சிறிதுந் தயைவைத்திலன். கப்பிதஞ்செய்து புத்திரரையுந் தண்டித்திலன். தப்பிதால் விபரீதம் விளையுமோவெனப் பயந்து வாளாவிருந்தனன். நடக்கவேண்டிய காரியம் நடந்தே தீரவேண்டும். அத்திருதராஷ்டிரன் துஷ்டன். சத்தியவான்களாகிய நீங்கள் தர்மவான்கள். விதைத்தவிதைகள் முளையாமற்போகுமா? அவனுகத்தின்பின் துக்கமும், உங்கள் துன்பத்தின்பின் சுகமும் வாப்போகின்றன. ஆதலில் நீங்கள் துன்பப்படவேண்டாம் என்றகூறினர். அதனைக்கேட்ட தருமராசன் முதலானவர்கள் ஸ்வாமீ! தாங்கள் உண்மையேயுரைத்தீர்கள். நாங்கள் பட்டனத்தைவிட்டுவனத்திற்குவந்தும், துஷ்டர்கள்

ஸ்ரீ ஸ்ரீதை] அருச்சுனன்செய்த சிவபூஜாவிதானமுனாத்தது. உ0சு

ஸ்ரீ சிவமஹா புராணம்.

ஞான துரியோதனனிகள் பெருங்கஷ்டங்களை யுண்டுசெய்திருக்கள். அக்கஷ்டங்கள் ஒழியுங் காரணமாகவே தேவரீர் எங்கட்கு நற்கருமங்களை யுபதேசஞ்செய்யவேண்டும். திருஷ்ணமூர்த்தி எங்களைச் சிவாராதனை செய்யும்படி கட்டளையிட்டிருக்கிறார். தாங்களும் அவ்வாறே கட்டளையிட்டுச் சிவபூஜாவிதியை யுபதேசித்தால் உத்தரவின்படி செய்துவருகிறோம் என்றனர். அதன்மேல் வேதவியாஸர் பெருஞ்சந்தோஷமடைந்து, தானுஞ்சிவபூஜைசெய்துகொண்டுவருகிறேன். நீங்களும் அப்படியேசெய்தால், சாஸ்வதமானசுகத்தையடைவீர்கள் என்று, பாண்டவர்கள் ஐவரில் அருச்சுனனே சிவபூஜைசெய்தற்குத் தக்கவனென்று நினைத்து, தவஞ்செய்யத் தக்க உபதேசத்தையும் யோசித்துச் சொல்லலுற்றனர்.

பாண்டவர்களே! கேளுங்கள்: ஹிரண்ய கர்ப்ப பிரபிருதி பரியந்தமான பிரபஞ்சமுழுவதுஞ் சிவரூபமே; வேறில்லை. கண்ணுக்குப் புலப்படும் யாவும் சிவரூபமேயெனத் தியானிக்கவேண்டும். தன்னை யுபாசித்த யாவரையுஞ் சிவபெருமான் சுகமடையச்செய்வார். சிவரூபமே யெய்த விஷ்ணுமூர்த்தி யிருக்கிறார். அவரை யாராதித்தால் நினைத்தகாலத்தில் தரிசிக்கலாம். சிவபெருமானை விரைவிற் பிரசன்னராம்படி முக்தி முக்திகளை விரும்புவோர் சிவார்ச்சனையே செய்யவேண்டும். கூத்திரியனுக்கு இந்திரன் இஷ்டமுடையவனதலின் வினைவிற் பிரசன்னமாய் வேண்டிய அருள்செய்வான். இந்திர மந்திரத்தை முதலில் உபதேசிக்கிறேன் எனக்கூறி, அருச்சுனன் ஸ்நானஞ்செய்து கிழக்குநோக்கியிருந்து, வியாஸபகவானால் இந்திர மந்திரோபதேசஞ் செய்யப்பெற்று, பின்னர்ப் பார்த்திவலிங்கபூஜை செய்யு முறையையும் உபதேசிக்கப்பெற்றனன். வியாஸபகவான்—முதலில் இந்திரனையாராதித்து அவன்கட்டளைபெற்று, பின்னர் சிவாராதனை செய்யக்கடவை; நீ இப்பொழுதே இக்கிருந்துபுறப்பட்டு, கிருஷ்ணநதிக்கரையிலிருக்கும் இந்திரகில பருவதத்திலிருந்து தவஞ்செய்க: தவஞ்செய்கையில் அநேகர் உன் தவத்திற்கிடையூறு செய்வார்களாதலின் சகலாயுதங்களையுங் தரித்துக்கொண்டு நீ யிருக்குமிடம் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமலிருந்து செய்வது தகுதி. நினக்தோனுஞ் சிவன்தோத்திரங்களையே ஜபித்துக்கொண்டிருக்க வேண்டுமெனறு கூறி, ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதிருக்கத்தக்க [அதிரிசிய] வித்தையை யுபதேசித்து ஆசீர்வதித்தனர். தருமராசன் முதலான ஸஹோதரர்களையும் நோக்கி நீங்கள் தருமத்தைப் பாதுகாத்து இங்கிருங்கள். சிக்கிரத்திற் சந்தேகமில்லாமற் காரியசித்தியுண்டாகுமென்று கூறி, யாவரையும் ஆசீர்வதித்துச் சென்றனர்.

அடபொழுதே அருச்சுனன் தான்பெற்ற மந்திரமகிமையால், சிவதேஜாக்கினிவளங்கக்கண்ட தருமன்முதலியோர் காரியசித்தியுண்டாகும்; இக்காரியத்தைஇவனேசாதிக்கவல்லவன்; பிறர்சாதிக்கமாட்டார்கள்; வியாஸபகவான் மொழிந்ததுண்மையே யென்று கருதி, அச்சுனனைப்பார்த்து நமது பிழைப்பைப் பயன்படுமாறு செய்வாயென்றுகூறி, தவஞ்செய்யத் தட

நாமமிரண்டினைதஸ்தோத்தார் மருத்புஜ்ஜய புரஸ்ஸரா:. உ0.

ஸ்நாநப்பயேச்ச ஸ்ரீவம்ஸம்யஸ்தே வஜ்ரயர்கோதகேந ஏன்றும் ஸ்நானஞ் செய்விக்கவேண்டியது. ஸ்ரீசிவாயநம: என்னு மந்திரத்தாலேயே வஸ்திரதாரணம் - யஜ்ஞோபவீதம் - விபூதிதாரணம் - சந்தம் - அக்ஷதை - அலங்காரம் - புஷ்பம் - இவற்றைச் சமர்ப்பிக்கவேண்டியது. மேலும், தூபம் - தீபம் - நைவேத்தியம் - தாம்பூலம் - கர்ப்பூரநீராஞ்சனம் இவையும் சிவாயநம: வென்றே சமர்ப்பிக்கவேண்டும். யஜமானாயநம: வென்று கூறி மானஸபூஜைசெய்து, முன்கூறிய "பூதிபாவேந்த்ரியம்" என்னும் தியானத்தைக்கூறி மந்திரஜபஞ்செய்யவேண்டும். எப்படியென்றால்; "அஸ்யஸ்ரீஸதாசிவமந்த்ரஸ்ய, வாமதேவருஷி:, தேவீபங்க்திச்சந்த:, ஸ்ரீஸதாசிவோ தேவதா, மமபுக்திமுக்திப்ராப்தயே மந்த்ரஜபேவினியோக:" என்று குருவுபதேசஞ்செய்த மந்திரஞ்சேர்த்துச் சிவசந்நிதியிலே, அந்த பலன்களைப் பெறுவிக்கமாக ஜபிக்கவேண்டியது. மந்திரஜபஞ் செய்கையில், தன்மனதைப் பரிபூரணமாகச் சிவபெருமானிடத்திலேயே [illegible] நூற்றெட்டுக்குக் குறையாது ஜபித்து, ஜபத்திற்குப் பத்திலொருபங்கு தர்ப்பணஞ்செய்து, தர்ப்பணத்திற் பத்திலொருபங்கு மார்ஜனம் [தன்சிரமேல் தும்புஜலத்தைப் புரோக்ஷித்தல்] செய்துகொண்டு, சிவத்தியானஞ்செய்து தன்னுஞ் சந்தனம் பூசி, சிவபெருமானது அஷ்டமூர்த்தங்களையும் "சர்வாய க்ஷிதிமூர்த்தயேநம:, பசவே ஜலமூர்த்தயேநம:, ருத்ராய தேஜோமூர்த்தயேநம:, உக்ராயவாயுமூர்த்தயே நம:, பீமாய ஆகாசமூர்த்தயேநம:, பசுபதயே யஜமானமூர்த்தயேநம:, மஹாதேவாய சோமமூர்த்தயேநம:, ஈசாநாய ஸூர்யமூர்த்தயேநம:," என்று அநுலேபந சந்தனம் புஷ்பமுதலியவற்றாலும் பூஜித்து, நிருத்தியம் தேம் கல்லவாத்தியம் முதலியன செய்து, ஆநுலேபநமும் புஷ்பமும் இருகைகளிலுஞ்சார்த்தி,

தாவதஸ்த்ரத்ததப்ராண ஸ்த்வச்சித்தோஹமஸ்மராட் | ச்ருபாகிதேதிதி ஜ்ஞாத்வா பூதநாதப்ரஸீதயே || கூ. அஜ்ஞாதாத்யதிவாஜ்ஞாதாத்பபூஜாதிகம்மயா | க்ருதத்தத்துஷ்டலைஸ்ங் ச்ருபயாதவசங்கர || கஅ. அதோம்பாபீ மஹாதத்ய பர்வஸ்ரேசம ஹாப்பவான் | இதிவிஜ்ஞாயதேலேயதிச்சயிதாகுரு || கூ. வேதை:புராணை: விதந்தை:ஸுகிபிர்விதிதைரபி | நஜ்ஞாதோஸி மஹாதேவ குதோஹம்த்வாம்ஸதாசிவ || கூ. சதாதத்தல்தியோஸ்மி ஸ்வபாவஸ்வர மஹேஸ்வர—என்றது, யான் உன்னவன். உன்னிடத்தே சித்தத்தையும் பிராணனையும் வைத்தவன். சகல சுகங்களையும் கொடுப்பவனே! தயாசமுத்திரனே! சகலருக்கும் பிரபுவே! எனக்கு பிரசன்னமாவாயாக: யான் தெரிந்தும் தெரியாதுஞ்செய்த ஜபமும் பூஜையும் உன் கபனாற் சபலமாகவேண்டும். யான் பெரும்பாவங்களைச் செய்தனன். நீ பவித்திரஞ் செய்பவரிற் சிறந்தவன். யோசித்து உனதிருப்பின்படி செய்யலாம். வேதபுராண சித்தாந்தங்களும் அறியப்படாத நின்னை யாரனேவ்வாறுணரவல்லேன்? சர்வபாவங்களையும் நின்னையே நம்பி நின்னவனுக விருந்தலின் என்னைக்காப்பாற்றவேண்டும்—என்று சொல்லி, சிவபெருமான் சித்தந்தழுப்பித்து, அதேவித பிரார்த்தனைகளைச் செய்து, தேவாயநம: என்றும்—

யதேதானீஞ்சதேவேஶக்ருபார்த்தம்ஸமுபாகத: ॥ கூ.
ததாத்வயாபுநர்தேவஸமாகந்தவ்யமேவச.

ஸ்வாமீ! யான் பூஜைசெய்தற்குத் தயை செய்ததுபோலவே, இப் பொழுதுமீதான்தானஞ் சென்று நான் நாளையதினம் செய்யும் பூஜைக்கு முழுத்தருணவேண்டுமென விசர்ஜனஞ் செய்யவேண்டியது. மீண்டும் ஆத்யாத்மிப் பிரயோகத்தைக்கூறி, "மந்த்ரஹீநக்ரியாஹீநம்பக்திஹீநம்மஹேஶ்வர | யத் பூஜிதம்மயாதேவ பரிபூர்ணந்ததஸ்துதே ॥ அநேநஸ்கந்தாதிபரிவாரஸமேத ஸ்ரீபவாநீ ஸுந்தரபார்ஶ்வஸ்ரீவிஶ்வநாதாப்யாம நம: ஸகலதேவாத்மக ஸ்ரீபவாநீஸுந்தரீ ஸுப்ரீத ஸுப்ரஸந்நோ வரதோபவது, ததஸ்தல்ஸ்ரீஸதாஶிவார்பணமஸ்து" என்று பூஜையை முடித்த பிறகு, சமுசாரவிஷயத்திற் சம்பந்தமான காரியங்களிற் பிரவேசிக்கலாம். இவ்வாறு சிவபூஜை செய்துவந்தால் இஷ்டஸித்திகளெல்லாம் கைகூடும். இப்பூஜை ஆசிரமவேதியர்களே வைத்துக்கொண்டு அவர்கள் சொல்லத்தான் செய்யவேண்டியது. அவ்வாறு அந்தணர் கிடைக்காதபக்ஷத்தில் நானே செய்துகொள்ளலாம். சிவபெருமானே அருச்சித்த புஷ்பம் அக்ஷதை முதலியவற்றைச் சிவாக்நியாலெடுத்து நாம் நிர்மால்யந்தரித்துக்கொள்ளலாம். இப்படிப் பூஜிப்பவருக்கு ஒருகுறையுமிராது. ஆத்மாதம் இவ்வாறு பூஜித்தவன் ஜீவன்முக்தனுவான். சாபாநுக்ரஹசாமர்த்தியனுவான். அவனைத் தரிசித்தால் சிவசேவை செய்தபலன் கிடைக்கும். இதற்குச் சமுசயமில்லை. இப்படி முனிவர்களாகிய வேதவியாஸாதிகள் கூறியிருக்கின்றனர். இந்த விதியை எனக்குத் தெரிந்தவரையில் உங்கட்குச் சொன்னேன். இப்படியே கிருஷ்ணன் இந்திரன் முதலானோர் பலர்களிங்கபூஜைசெய்தனர். இதனைக் கேட்டவர்கட்கு நீங்காத போகபாக்கியங்கள் கைகூடுமென்று ஸூதமுனிவர் சௌநகாதிமுனிவர்களுக்குக் கூறினர்.

அருச்சுனன்செய்த சிவபூஜாவிதான முறைத்தது

முற்றிற்று.

அறுபத்தோன்பதாவது

கண்ணன் சிவபூசைசெய்த அத்தியாயம்.

ஸூதமுனிவரே! தேவரீர் எல்லாமுணர்ந்தவர்: கிருஷ்ணமூர்த்தி தினந்தோறுந் தான் சிவபூஜை செய்வதாகச் சொல்லியிருக்கிறாரல்லவா? அவர் எந்தச்சமயத்திற்பூஜித்தனரோ அதனைச்சொல்லவேண்டுமென்று வினய நைமிசாரணியமுனிவர்களெல்லோர்க்கும், ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்:—கிருஷ்ணமூர்த்தி பிருந்தாவனத்திலிருந்து வடமதுரையையடைந்து, கம்சன் முதலிய தீயோரைச் சங்கரித்து, வசுதேவன் தேவகி இவர்களை விலங்கினின்று விடுவித்து, சகல யாதவர்களையும் வினித்து, உக்ரசேனனுக்குப் பட்டங்கொடுத்துப் பரிபாலித்துவந்தனர். பிறகு கிருஷ்ணமூர்த்தி தக்கதாயன உபநயனஞ் செய்யப்பெற்று, அவந்திபட்டணத்திலுள்ள சாந்திவினை

னுக்குருவையடைந்துசேவித்து, அவரால் சிவபஞ்சாக்ஷரமந்திரமுபதேசிக்கப்பெற்று, அந்தச் சிவமந்திரப் பிரபாவத்தால் சுலபகாலத்திலேயே சகலவித்தைகளோடுங் கற்றுணர்ந்து, முதலியால் விழுங்கப்பட்டு மறைந்த அக்குருபுத்திரனைக் கொண்டுவந்து குருகாணிக்கையாகக்கொடுத்து மதுராபுரியையடைந்து அநேக தைத்தியர்களுடன் போர்செய்தனர். மென்மேலும் தைத்தியவீரர்கள் யாதவர்களைத் துன்புறுத்துவதுகண்டு சமுத்திரத்தில் துவாரகாபுரியில் யாவரையுமிருக்கச்செய்து, அப்பட்டணத்துக்குச் சகலசம்பத்துக்களுமுண்டாக்கி, முசுகுந்தனை யநுக்ரகித்து, காலயவனன் முதலிய ராக்ஷஸர் மேன்மேலும் போருக்கு வருகையில் ஸாவதகிரியை யடைந்து, சிவபஞ்சாக்ஷரமான உபமந்யுமுநிவரைத் தரிசித்து, சத்குருகூயம் எவ்வாறுண்டாகுமென வினவ, உபமந்யுமுநிவர் நீ விஷ்ணுஸ்வரூபியாதலின் சிவபெருமானே யேன் ஆராதிக்கக்கூடாது? தன்னைச் சேவித்தவர்க்குச் சகாயமிருக்கச் சிவபெருமான் காத்திருக்கின்றனராதலின் நீ சிவபூஜைசெய்யும்பக்ஷத்தில், சகல சத்குருக்களையுஞ் செயிப்பாயென்று கூறி, சிவமந்திரத்தை யுபதேசிக்க, ஸ்நாநாதி நைகூடாயை வகித்து, கமலம் - வில்வம் - தருபத்ரம் - துளசி - பாரிஜாதம் - அறுகு - வெள்ளெருக்கு முதலிய நைகஸுகந்திமான மலர்களைக்கொண்டும், தியானயோகத்தானும் பூஜிக்கையில், சிவபெருமான் அக்கண்ணன் பக்திக்கு மகிழ்ந்து பிரசன்னராய், கிருஷ்ணனே! நீ விரும்பிய வரத்தைக்கேள் என, கிருஷ்ணமூர்த்தி சந்தோஷத்துடன் சொல்லுகின்றனர்.

ஸ்வாமீ! தவரீர் பரிபூரணஸ்வரூபத்தால் யாவும் எனக்கிருப்பினும், தைத்தியர்களுடைய தொந்தரவால் துன்புறும் என்னை, அவர்கள் தொந்தரையினின்று நீக்கும்படிக்கே தேவரீரைச் சரணடைந்தேன். பூர்வத்தில் என்பெரியோர் யாவரும் தேவரீரை யாராதித்திருக்கின்றனர். பிரமதேவனும் தேவரீரை யுபாசித்திருக்கிறான். ஆதலின், தேவரீர் எப்பொழுதும் அடுத்திரக்கவேண்டுமென, சிவபெருமான் ஓ கிருஷ்ண! உனக்குத் தீனதரணியங்களும், புத்திரர்களும், அரிய கீர்த்திகளும், விசேஷமான சத்குருசங்காசமர்த்தும் உண்டாகுக என வரம் கொடுத்தனர். அச்சமயத்தில் அருகிருந்த பார்வதாதேவியுந் தந்தோஷித்துப் பலவரங்களைக் கொடுத்தனள். பெரியோர்கள் வரங்களாற் சந்தோஷித்த கண்ணபிரான், ஸ்வாமீ! பூர்வத்தில் தேவரீராற் கூறியதைமென்னுஞ் சத்தியத்தைக் கொடுத்துக் காக்கப்பட்டேன். அச்சக்கரத்தால் சகலமான ராக்ஷஸர்களையுஞ் செயித்துக்கொண்டிருக்கின்றேன். இப்பொழுதும் எல்லா வரங்களையுங் கொடுத்தீரென்று விசேஷமாகப்பூஜிக்க, குருணாமமான சாம்பவமூர்த்தி நீ போக: உனக்கு விசேஷமான சுபங்கள் உண்டாகுமாறு தயை செய்வோமெனக்கூறிவிடுக்க, கிருஷ்ணமூர்த்தியானவர் துவாரகைபைச்சேர்ந்து சந்தோஷத்துடன் வாழ்ந்திருந்தனர். இவ்வாறு கிருஷ்ணனுக்கு வரங்கொடுத்து வில்வேசுவரரென்னும் பெயருடன் அந்த ஸாவதகிரியில் எழுந்தருளியிருந்து, தன்னைச் சேவிப்பவர்கட்

குச் சகங்களை யதக்கிரகித்துக்கொண்டிருக்கின்றனர். இருஷ்ணமூர்த்தி ஏழு மாதகாலமும் வில்வதளங்களாலேயே விசேஷமாக அருச்சனைசெய்த காரணத்தால் அச்சிவலிங்கமூர்த்திக்கு வில்வேசுவரரெனப்பெயராயது. சுதரு தற்கொண்டு கிருஷ்ணமூர்த்தி சகல சாம்பிராச்சியங்களையுங் கொடுத்துஞ் சிவபெருமானைச் சேவித்துவந்தனர். ருஷிகளே! நிங்கள் கேட்டவுறைச் சொன்னேன். இச்சரிதத்தைக் கேட்டவர்கள் சகலபாபங்களினின்றும் நீங்குவரென ஸூதமுநிவர் கூறியருளினர்.

கண்ணன் சிவபூஜைசெய்தது

முற்றிற்று.

எழுபதாவது

திருமால் நேமிபெற்ற அத்தியாயம்.

ஸூதமுநிவரே! விஷ்ணுமூர்த்திக்குச் சிவபெருமான் சக்ராயுதங் கொடுத்ததாகக் கிருஷ்ணமூர்த்தி தோத்திரஞ்செய்தனரெனக் கூறினீரே; தேவரீர் பாவு மறிந்தவர்தலின், அவ்விஷ்ணுசக்ராயுதம்பெற்ற சரித்திரை அடியேங்கட்குச் சொல்லவேண்டுமெனக்கேட்டனர்மகாமுனிவரான சௌநகர், ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர். ருஷிகளே! ஒருகாலத்தில் பலவான்களான ராக்ஷஸர்கள் விசேஷமாகி உலகங்களைப் பீடித்துத் தர்ம விக்கினஞ்செய்கையில், தேவர்கள் யாவருஞ் சங்கடப்பட்டு விஷ்ணுமூர்த்தியையடைந்து, ஸ்வாமீ! ஏங்கள் விஷயத்தில் தயைவைக்கவேண்டும். தைத்தியர்களால் துன்பப்படுகிறோம். எங்கே போவோம்? என்ன செய்வோம்? திதிக்கடவுளாகிய தேவரீரை யடைந்தோம் எனப் பிரார்த்திக்க, திருமால் அத்தேவர் வார்த்தையைச் செவிசாத்தி, அமரர்களே! அஞ்சாதீர்கள். யான் சிவபெருமானை யாராதித்து அவரருளால் உங்களை ரக்ஷிப்பேன். சத்துருக்கள் பலவான்களாயிருத்தலின் பிரயத்தினஞ்செய்து வெல்லவேண்டியிருக்கிறது. சிவாராதனைசெய்கிறேன் என்றனர். அதனைக்கேட்ட தேவர்கள் தங்கள் இருப்பிடங்களை யடைந்து சந்தோஷித்திருந்தனர்.

விஷ்ணுமூர்த்தியும் தேவர்கட்கு ஜெயமுண்டாகும்படி ஸ்ரீகைலாய பர்வதத்திற்குச்சென்று, சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்யக்கருதி, ஹோமகுண்டமுண்டாக்கி யாகம்வளர்த்து, பார்த்திவபூஜாவிதானமாகப் பல விதமான ஸ்தோத்திரங்களாலுஞ் மந்திரங்களாலுஞ் சேவித்து, † மானதசரசிலிருக்குங் கமலங்களாற் பூஜித்து, பத்மாசனத்திலிருந்து சிவபெருமான் பிரத்தியக்ஷமாகுமெல்லையும் அசையாதிருப்பதாக நியமனஞ் செய்துகொண்டு, தான் யோகத்திலமர்ந்து, அநேககாலம் பூஜித்தும் சிவபெருமான் பிரசன்னமாகாமையின், சாண்டிரோக்தமான யோகித்துக் கஷ்டமான தவத்தையும் சிவபூஜையையும் அநேககாலஞ்செய்தும் தரிசனமளிக்காமையின், சிவ

† மானதசரசு என்பது ஒரு தடாகம்.

பெருமானது ஆயிரந் திருநாமங்களையுந் தியானித்து, ஆயிரங் கமலங்களால் (ஒருநாமத்திற்கொருகமலமாகப்) பூஜிப்பதாகச்சங்கற்பஞ்செய்துகொண்டு, ஆயிரங்கமலங்கள் சேகரித்துவைத்துக்கொண்டு ஒவ்வொரு திருநாமங்கூறி ஒவ்வொருகமலர்சாத்திவர, சிவபெருமான் அவரதுபக்தியைப்பரீக்ஷிக்கக் கருதி, ஒரு கமலத்தில் ஒருதிருநாமத்திற்கு ஒருகமலர் குறையும்படிச்செய்ய, திருமால்சிவபூஜாநியமனத்துக்கு விக்கினம்வருவதுசையா து, எனதுகண்ணுக் தாமரையாயிரம்; இதனுலேயே அருச்சித்து நியமத்தை முடிப்பேனென்று, அதனைப் பரிக்கத்தொடங்குகையில், சிவபெருமான் பிரசன்னராய், விஷ்ணுவே! உன் கண்ணைப் பறிக்கவேண்டாம். உன்பக்திக்குமகிழ்ந்தேன். வேண்டிய வரத்தைக்கேட்டால் கொடுக்கிறேன். உனக்குக் கொடுக்கக்கூடாத தொன்றுமில்லையென, விஷ்ணு சங்கர! தேவரீர் அறியாததொன்றுமில்லை. உலகமுழுதும் தைத்தியர்களால் துன்புற்றிருத்தலின், யாவரும் சுகமடையத் திருவுள்ளஞ் செய்யவேண்டும். தைத்தியசங்காரஞ் செய்தற்குத் தக்க ஆயுதம் என்கையிலில்லை! யான் யாதுசெய்வேன்! தேவரீரையே சரணடைந்தேன் என்று கூறி நமஸ்கரித்து எதிர்நோக்கையில், சிவபெருமான் தயாளபூதராய், சுதரிசனமெனுஞ் சக்ராயுதத்தைக் கொடுத்தருளினர். அதனைப்பெற்று அத்திரு

"கமலகாம்பஸஹஸ்ரத ஸ்ருதமேகைகநாமகோடிஷு, நஜ்ஞாதவிஷ்ணுஹரதச்ச மர்யாகரணமத்புதம். சக. க்ருதத்சாபிதத்ஜ்ஞாத்வா தேதமேகமுதாஹ்ருதம், தத்ருஷ்ட்வாசப்ரஸன்தோபூத்சங்கரஸ்ஸர்வதுஃகஹா".

"தைதயாக்ரீஷ்ணுக்தத்தேவ ஸ்ரீயாயுதக்ரப்ரவர்ததே, ஜகரோமி க்வசித் சாமி ஸரணந்த்வா மூபாகத:. உ. இத்யுக்த்வாச நமஸ்க்ருத்ய ஸிவாய பரமாத்மநே, ஸ்ரிதஸ்தைவாக்ரதோதேவ: ஸ்வயஞ்சாஸுரபீடித:. உக. ததாதஸ்மைஸ்வயம்ப்ரும்பு: சக்ரஞ்சதத்வாயம்புவி[illegible]மாயுதம்ச பரமாத்மகம்". உஉ.

மால் சிவபெருமானிடம் உத்திரவுபெற்றுச்சென்று சகஸ்மான தைத்தியர்களையுஞ் சங்கரித்தனர் எனக்கூறினை ஸூதமுநிவரை நோக்கி, விஷ்ணுமூர்த்தி சிவபெருமானைப்பூஜித்த சகஸ்திரநாமங்களெவை? எத்தச் சகஸ்திரநாமத்தால் சிவபெருமான் மனங்களிகூர்ந்து விஷ்ணுவுக்குச் சக்ராயுத மளிக்கிரகித்தனரோ அந்தச் சகஸ்திரநாமத்தைத் சொல்லியருளவேண்டுமெனச் சௌநகாதி மகருஷிகள் கேட்க, ஸூதமுநிவர் சொல்லலாயினர்.

திருமால் நேமிபெற்றது

முற்றிற்று.

எழுபத்தொன்றாவது

சிவநாமங்களாயிரமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுநிவர் சொல்லுகின்றார். முனிசிரேஷ்டர்களாகிய நைமிசாரணியவாசிகளே! யான் வியாசமுநிவரால் எவ்வாறு கேட்டிருக்கின்றேனே அவ்வகையேசொல்லுகின்றேன் கேளுங்கள். விஷ்ணுமூர்த்தியால் சிவபெருமான் சக்தோஷமடையும்படி தோத்திரஞ் செய்யப்பட்டதும் புண்ணியகரமு

மாயுமுள்ள சிவஸஹஸ்ரநாமங்களை இப்பொழுது சொல்லுகின்றேன். விஷ்ணு வாக்கியம்—

ஸ்ரீ விஷ்ணுருவாச || ஸ்ரீவோஹரோம்ருடோருத்ர: புஷ்கர:புஷ்பலோசந:, அர்திகம்ய:ஸதாசார:ஸர்வ:ஸம்புர்மஹேச்வர:. சக்ரபீடஸ்சக்ரமெனலீர் விஸ்வம் விஸ்வாமரேச்வர:, வேதாந்தஸார ஸந்தோஹ: கபாலீ நீலலோஹித:. த்யாநஸ்தாரோ பரிச்சேத்யோ கௌரீபர்த்தாகணேச்வர:, அஷ்டமூர்திர்விச்வமூர்திஸ்த்ரிவர்க ஸ்வர்கஸாதந:. ஞானகம்யோ த்ருடப்ராஜ்ஞோ தேவதேவ ஸ்த்ரிலோசந:, வாமதேவோ மஹாதேவ: பகிபரிப்ருடோத்ருட:. விசுவரூபோவிரூபாக்ஷோ விஸ்வே:சுரிஜ்தமம்; ஸர்வப்ரமாண ஸம்வாதி விருஷாங்கோ விருஷவாஹந:. ஈஸ:பிநாகி கட்வாங்கி சித்ர வேஷஸ்சிரந்தந:, தமோஹரோமஹாயோகி கோப்தாப்ரஜாபதிர்ஜடி:. காலகால: க்ருத்திவாஸா: ஸுபக: ப்ரணவாத்மக:, உக்நதர:புருஷோஜுஷ்யோ துர்வாஸா: புரஸாஸந:. திவ்யாயுத:ஸ்கந்தகுரு: பரமேஷ்டிபராத்பர:, அநாதிமத்யநிதநோ கிரீஸோ கிரிஜாதவ:. குபேரபந்து: ஸ்ரீகண்டோ லோகவர்ணோத்தமோம்ருது:, ஸமாதிவேத்ய, கோதண்டீநீலகண்ட:பரஸ்வதி:. விஸாலாக்ஷோம்ருகவ்யாத: ஸுரேச:ஸெரிய்யதாபத: தர்மதாம க்ஷமாக்ஷேத்ரம் பகவாந்பகதேத்ரபீத். உக்ர:பசுபதி ஸ்தார்க்ஷ்ய: ப்ரியபக்த: பரந்தப:, தாதாதயாகரோதக்ஷ: கர்மந்திகாமஸாஸக:. கூ. ப்ம்மஸ்ருகிலய: ஸூக்ஷ்ம: ப்ம்மராகஸ்தோ மஷேகவர:, லோககர்த்தா ம்ருகபதிர் மஹாகர்த்தா மஸௌகூஷி:. உத்தரோகோபதிர்கோப்தா ஜ்ஞானகம்ய:புராதந:, நீதி:ஸுநீதி:ஸுத்தாத்மா ஸோம: ஸோமத:ஸுகி. ஸோமபோம்ருதப:ஸௌம்யோ மஹாதேஜோமஹாத்யுதி:, தேஜோ மயோம்ருதமயோ ந்நமயச்சஸுதாபதி:. அஜாதஸத்ருராலோக: ஸம்பாவ்யோ துரய வாஹந:, லோகதோவேதகர: ஸுத்ரகார:ஸநாதந:. மஹர்ஷி:கபிலாசார்யோ விசுவ ஜிதிர்விலோச:, பிநாகபாணிர்பூதேவ:ஸுவஸ்தித:ஸுவஸ்திக்ருத்ஸுதி:. தாரிருதாமா தாமக:ஸர்வக:ஸர்வதோசர:, ப்ரஹ்மஸ்ருக்விசுவஸ்ருக்ஸர்க: கர்ணிகார: ப்ரிய: கவி:. ஸாகோவிஸாகோநேகஸ்ருட் ஷிவோபூதிருத்தம:, கங்காப்லவோதகோபவ்ய: புஷ்கல: ஸதபதி: ஸதிர:. விஜிதாத்மா விதேயாத்மா ஸத்கீர்திச்சிந்நஸம்ஸய:. உ0. காமதேவ:காமபாலோ பஸ்மோத்தூலிதவிக்ரஹ:, பஸ்மப்ரியோ பஸ்மஸாயீ காமீகாந்த: க்ருதாகம:. ஸமாவர்தோ நிவ்ருத்தாத்மா தர்ம புஞ்ஜ்ஸதசரிவ:, அகல்மஷச்சதுஷ்பாதஸ்ர ர்த்ராவாஸோ துராஸத:. துர்லபோதுர்க மோதுர்க:ஸர்வாயுதவிசாரத:, அத்யாத்ம யோகநிலய: ஸுதந்து ஸ்தந்துவர்தந:. உகு. ஸுபாங்கோலோகஸாரங்கோ ஜகதீஸோஜகார்தக:, பஸ்மஸத்திகரோமேருரோஜஸ்வீ சுத்தவிக்ரஹ:. அஸாத்ய: ஸாதுஸாத்யச்ச ப்ருத்யமர்கட ரூபத்ருக், ஹிரண்யரேதா: பௌராணேநி புஷ்கலோபல:. மஹாஹ்ருத்தோமஹாகர்த்த: விஸ்தப்ருத்தாரவர்தந:, வ்யாக்ரசர்மாம்பரோவ்யாலீ மஹாபூதோமஹாநிதி:. அம்ருதாஸோம்ருதவபு: பாஞ்ச ஜந்ய ப்ரப்ஞ்ஜந:, பஞ்சவிம்ஸதி தத்வஸ்த: பாரிஜாத: பராவர:. ஸுலப:ஸுவ்ரத: ரூபோப்ரம்ஹவேதவிதிர்நிதி:, வர்ணரூபமருர்வர்ணி ஸத்ருஜித்சத்ருதாபந:. ஆச்ரம: க்ஷபண:க்ஷாமோ ஜ்ஞானவர்சலேசுவர:, ப்ரமாணபூதோதுர்ஜ்ஞேய:ஸுபர்ணேவாயு வாஹந:. சதுர்தரோ தக்ஷாவேதோ குணாதிர் குணாகர:, லக்ஷ்ய:லக்ஷ்யபோதிஜ்ஞே தர் மாங்கோதர்மஸாதந:. கூ0. அநந்தத்ருஷ்டிராகதோ தண்டோதமயிதாதம:, அபிவாத் யோமஹாமாயோ விசுவகர்மாவிஸாரத:. வீரஹாகோ விதீதாத்மா தபஸ்வீ பூதபாவந:, உன்மத்தவேஷ: ப்ரச்சந்நோ ஜிதகாமோ ஜிதப்ரிய.. கல்யாணப்ரக்ருதி:கல்ப: ஸர்வ லோகப்ரஜாபதி:, தரஸ்வீதாரகோதீமாந் ப்ரதாந ப்ரபு ரன்வய:. லோகபாலோந்தர்ஹி தாத்மா கல்பாதி: கமலேக்ஷண:, வேதசாஸ்த்ரார்த தத்வஜ்ஞோ நியமோ நியதாஸ்ர. சந்த்ர ஸூர்ய:சதி:கேதுர்விராங்கோவித்ருமச்சவி:, பத்திவியபரப்ரஜாம்ருகபாஸுர்

பலேந்ரக:. அத்ரிரத்ரியாலய:கர்த்த: பரமத்மாஜகத்குரு:, ஸர்வகர்மாலயஸ்துஷ்டோ மங்கல்யோமங்களாவ்ருத:. மஹாதபாதீர்கதப: ஸ்தவிஷ்ட:ஸ்தவிரோத்ருவ:, அஹ: ஸம்வத்ஸரோவ்யாப்தி: ப்ரமாணம்பரமந்தப:. ஸம்வத்ஸரோமந்த்ர ப்ரத்யய:ஸர்வ தர்சந:, அஜ:ஸர்வேசுவர: ஸித்தோ மஹாரேதா மஹாபல:. யோகியோக்யோ மஹா தேஜா: வித்தி ஸர்வாதிரக்ரஹ:, ஸுஸர்வஜ்ஞோமஹா:ஸத்ய: ஸர்வபாபஹரோஹர:. ஸு தீர்தி:சோபந:புரீமா ஸுவர்ணோமாருதேசர:, அம்ருத: சாசுவத: சாந்தோ பாண ஹஸ்த: ப்ரதாபவாந். கூ0. கமண்டலுகரோதக்ஷி வேதாஸ்தோ வேதவித்முநி:, ப்ராஜிஷ்ணுர் போஜநம்போக்தா லோகநாதோதுராதர:. அதீந்தியோமஹாமாய: ஸர்வாவாஸஸ்சதா ஷ்பத்:, காலயோகிமஹாநாதோ மஹோத்ஸாஹோ மஹாபல:. மஹாபுத்திர்மஹாவீர் யோபூதசாரீபுரந்தர:, நிஸாசர:பிசாசசாரீ மஹாசக்திர்மஹாத்யுதி:. அநிர்தேச்யவபு: ஸ்ரீமாந்ஸர்வாசார்ய மதோகதி:, பஹுஸ்ருதோ மஹாமாயோ நியதாத்மா த்ருவோ த்ருவ:. ஜுஜுஸ்தேஜோ த்யுதிதரோ நர்தக:ஸர்வஸாஸக:, க்ருத்யப்ரியோ ந்ருத்யகித்ய: ப்ரகாஸாத்மாப்ரகாஸக:. ஸ்பஷ்டாக்ஷரோபுதோமந்த்ர: ஸமாக:ஸாரஸம்ப்லவ:, யுகா திக்ருத்யுகாவர்தோ கம்பீரோவ்ருஷபாக்ரஜ:. இஷ்டோவிசிஷ்ட:சிஷ்டேஷ்ட: ஸால தித்ருத்யுகாவர்தோ கம்பீரோவ்ருஷபாக்ரஜ:. இஷ்டோவிசிஷ்ட:சிஷ்டேஷ்ட: ஸால பஸுரபோதது:, தீர்கருபஸ்தீர்கதாஸாதீர்தாத்ருஸ்ய:ஸ்துதோர்சித:. அபாக்நிரநி ஷ்டாகம் விஜுயோஜ்யகாலவித், ப்ரதிஷ்டித:ப்ரமாணஜ்ஞோ ஹிரண்யகவசோ ஹரி:. விமோசந:ஸுரகணோ விதேயோ நர்தக:ஸர்வஸாஸக:, க்ருத்யப்ரியோ ந்ருத்யகித்ய: ப்ரகாஸாத்மாப்ரகாஸக:. ஸ்பஷ்டாக்ஷரோபுதோமந்த்ர: ஸமாக:ஸாரஸம்ப்லவ:, யுகா திக்ருத்யுகாவர்தோ கம்பீரோவ்ருஷபாக்ரஜ:. இஷ்டோவிசிஷ்ட:சிஷ்டேஷ்ட: ஸால தித்ருத்யுகாவர்தோ கம்பீரோவ்ருஷபாக்ரஜ:. இஷ்டோவிசிஷ்ட:சிஷ்டேஷ்ட: ஸால பஸுரபோதது:, தீர்கருபஸ்தீர்கதாஸாதீர்தாத்ருஸ்ய:ஸ்துதோர்சித:. அபாக்நிரநி ஷ்டாகம் விஜுயோஜ்யகாலவித், ப்ரதிஷ்டித:ப்ரமாணஜ்ஞோ ஹிரண்யகவசோ ஹரி:. விமோசந: ஸுரகணோ விதேயோ பிக்ஷு ஸம்ஸரய:, பாலருபோ பலோமத்தோ விகர்தாகதிருத்தரோருஷ:. சரணம் தாரணங்கர்தா ஸர்வபத்த விமோசந:, வ்யவஸாயோ வ்யவஸ்தாந: ஸ்தாநதோ ஜகதாதிஜ:. இரு ஸுரேசோ ஸரிதோ பேதோ பவாத்மாத்மநி ஸம்ஸ்தித:, வீரேஸ்வரோ வீரபத்ரோ வீராஸக விதிர்விராட். வீரஹடாமணிர்வேத்தா தீர்தாகந்தோததிர:, ஹ்ருஸ்தாதாதஸ்திருலீச ஸ்ரீநிவிஷ்ட:ஸ்ரீவாலய:. வாலகில்யோ மஹாகபஸ்திக்மாம்சுர்பதி:சக:, அதிராம:ஸுஸரண:ஸுப்ரஹ்மண்ய:ஸுதாபதி:. மகஸேநஸிகோகோமாக்விராம:ஸர்வஸாதந:, லலாடாக்ஷோ விஸ்வதேஹ: வர: ஸம்ஸாரசித்ரத்ருத். அமோகதண்டோமத்யஸ்தோ ஹிரண்யோப்ரஹ்மவர்சலீ, பரமா த்ம:பரோமாயீ ஹரம்பரோவ்யாக்ரலோசந:. ருதிர்லோருஸ்:ஸ்வர்பதுர்வாசஸ்பதிரயோ நிதி:, ரவிர்விரோசந:ஸ்கந்த:ஸ்ருஸ்தாவைவஸ்வதோயம:. யுகிருத்தரோதிர்விச வாஜ நாக:பருஞ்ஜய:, கைலாஸகிரிபதி:காந்த: ஸவிதாரவிலோசந:, விதிவத்தமோவீதபயோ விஸ்வபர்தாவிலோசந:, நித்யோயஜ்ஞதத்ஸ்யாண:புண்யகீர்திரநாமய:. மநோஜவஸ்தீர்த வஸதிர்வஸுரேதா:சுசிஸ்ரவா:, அமோகோபுண்ட ரீகாக்ஷோ வ்ருஷகர்மாவ்ருஷாக்ருதி:. ருத்ரோபஹுசிரஸ்ருத்: ப்ரீமாந்ஸ்தீமாந்தத: ஸமயஜ்ஞ:, ஸமாஹிதோ நியமாத்மா தபோயோகி தபோதந:. கூ0. ஜடாதரோஜுஜுக்மாதி: ப்ரீமாந

கர்தகாஸஃ, அதர்மஸத்குரஜ்ஞேய: புருஹூதஃ புருஷ்ருதஃ. ப்ரஹ்மகர்போ ப்ருஹத்கர்போ தர்மதேதுர்தநாகமஃ, ஜகத்தைஷிஸ்ஸுதஃ குமாரஃ குஸலாகமஃ. ஹிரண்யவர்ணோஜ்யோதிஷ்மா க்ஸாகாபுத ரதோத்வஜஃ, அராகோ நயநாத்யக்ஷோ விஸ்வாமித்ரோ தகேஸ்வரஃ. ப்ரஹ்மஜ்யோதிர் வஸுதாமா மஹாஜ்யோதி ரநுத்தமஃ, மாதாமஹோ மர்தரிஸ்வா நபஸ்வாந்காகஹாரத்ருக். புலஸ்த்ய: புலஹ ஹாகஸ்த்யோ ஜாதூகர்ண்ய: பராஸர:, ஹிரண்யரணஹிர்வாசோ வைரஞ்சிர்பாவிஷ்டரஸ்ரவாஃ. ஆத்மபூரிருத்தோத்ரி ர்ஜ்ஞானமூர்திர்மஹாயஸா:, லோகவீராக்ரணீர்வீர ஸ்சண்டஃ ஸத்புபதாக்ரம:. வஜ்ர ஸ்யாலாகல்போ மஹாகல்ப: கல்பவ்ருக்ஷ: கலாதர:, அலங்காரிஷ்ணுராச்சோ ரோசிஷ்ணுர்விக்ரமோக்ரத:. ஆயுஃஸுப்ர பதிர்வேதி ப்லவஃ ஸிகிஸாரதி:, அனம் ஸ்ருஷ்டோ திதிஃஸுக்ர ப்ரம்ரிபாத்பாஸஃ. வஸுஸ்ரவாஹுவ்யவர்ஹ: ப்ரதப்தீர விஸ்வபோஜஃ, ஜப்யோஜராதிரமோ லோஹிதாக்ஷாத்ரதாநகாத். ப்ருஹஸ்ஸோமபோயோநி: ஸ்ப்ரதீகஸ்தமிஸ்ரஹா. நிதாகஸ்தபகோமேத: ஸ்வக்ஷ: பரபுரஞ்ஜய:, சு0. ஸுகாங்கில: ஸ்வங்கிஷ்பங்க: ஸுரபி: ஸிஸிராத்மக:, வஸுரேதாமாதவோகரீஷ்மோ நபஸ்யோ பீஜவாஹந:. அங்கிரோ குருர்தக்ரோ விமலோ விஸ்வ வர்ஹந:, பாவந:ஸுமதிர்விஷ்வம் ஸ்வாவித்யேரவர்ஹந:. மநோபுத்திரஹங்கார: க்ஷேத்ரஜ்ஞ: க்ஷேத்ரபாலக:, ஜ்ஞ தத்திர் பலநிர்மிகாலோவிஸ்வகாலவ:. அகோரோதுத்தராயேஜ்ய: ஸ்ரோயோநிஸ்ரே யஸாம்பத:, வ்யவஸாயோ வ்யவஸ்தாநபோ தாநவாரிரநித்தம:. ரஜநீஜநகஸ்சாரு விபாஸ்லோலோகல்பதருக், சதுர்வேதஸ்சதுர்பாவஸ் சதுஸ்ரசதுரக்ஷர:. ஆம்நாயோத ஸமாம்நாய ஸ்தீர்ததேது ஸ்ரிவாலய:, பஹுரூபோ மஹாரூப: ஸர்வரூப ஸ்சராசர:. ந்யாயநிர்மாயகோந்யாயீ ந்யாயஸம்யோநிரத்தர:, ஸுஹஸ்த்ரமூர்தா தேவேந்த்ர: ஸர்வ ஸுஸ்ப்ரபஞ்ஜந:. முண்டோவிரூபோ விக்ராந்தோ தண்டதாந்தோ முண்டதாந்தோ குணோத்தம:, பிங்களாக்ஷோஜநாத்யக்ஷோ நீலக்ரீவோநிராமய:. ஸுஹஸ்த்ரபாஹு: ஸர்வேஷு ஸுர ண்ய:ஸர்வலோகத்ருக், பத்மாஸந:பரஞ்ஜ்யோதி: பரம்பார:பரம்பலம். பத்மகர்போ மஹாகர்போ விஸ்வகர்போ விசக்ஷண:, தராசரஞ்ஜோ வரதோ வரேஸுஸ்து மஹா பல:. சு0. தேவாஸுர குருர்தேவோ தேவாஸுர மஹாஸ்ரய:, தேவாதிதேவோ தே வாக்நிர்தேவாக்நிஸுகத:ப்ரபு:. தேவாஸுரோத்தரவ்யோ தேவாஸுராம்ஹஸ் ஸுர:, தேவ்தேவமயோசிந்த்யோ தேவதேவாத்மஸம்பல:. ஸத்யோகிரஸுரவ்யாக்ரோ தேவஸிம்ஹோதிவாகர:, விபுதாக்ரஸரஸ்சேஷ்ட: ஸர்வதேவோத்தமோத்தம:. ஸிவ ஜ்ஞாநரத: ஸ்ரீமாந் ஸிகிஸ்ரீபர்வதப்ரிய:, வஜ்ரஹஸ்த:விக்ரகட்டீ நரஸிம்ஹநிபாதந: ப்ரஹ்மசாரீ லோகசாரீ தர்மசாரீ தநாதிப:, கந்தீகந்தீஸ்வரோகந்தே கக்கல்பதந: ஸுஷி: ஸித்தர்ய்கஃ:ஸுராத்யக்ஷோ யோகாத்யக்ஷோயுகாவஹ:, ஸ்வதர்மாஸ்வர்கத: ஸ்வர்க கர:ஸ்வரமயஸ்வர:. பாணுத்யக்ஷோபீஜகர்தா தர்மக்ருத்தர்மஸம்பவ:, தம்போ லோபோர்த்தவிசம்பு: ஸர்வபூதமஹேஸ்வர:. ஸ்மஸாநகில்யஸ்தீர்யகூ:ஸேதுரப்ரதி மாக்ருதி:, லோகோத்தர ஸ்புடலோக ஸ்தர்தியம்பதோ காகபூஷணஃ. அக்தகாரிர்மத் ஸ்கேஷி விஷ்ணுகந்தரபாதந:, ஹிரண்யதோக்ஷோ ஹயகுரோ தகஜாரி:பூஷதந்தபித். சு0. தாரஜடி: கண்டபரஸு: ஸகலோ நிஷ்கலோநக:, அகால:ஸகலாதர: பாண்டுரோபீர் ம்ருடோநட:. சு00. பூர்ண பூயிதாபுண்ய: ஸுகுமார: ஸுலோசக:, ஸாமகேய ப்ரி யோக்ரர: புண்யகீர்திராகமய:. மநோஜவஸ்தீர்த்தகரோ ஜடிலோஜீவிதேஸ்வர:, ஜீவி தாந்தகரோ நித்யோ வஸுரேதா வஸுப்ரத:. ஸத்கதி: ஸத்க்ருதி: ஸித்தி: ஸஜ்ஜாதி: காலகண்டக:, கலாதரோ மஹாகாலோ பூதஸத்ய பராயண:. லோகலாவண்யகர்தாச லோகோத்தரஸ்காலய:, சந்த்ரஸஞ்ஜீவந:ஸாஸ்த்ர லோகசூடோமதூரிபு:. லோக பந்துர்லோகநாத: க்ருதஜ்ஞ:கீர்திபூஷண:, அபயோவஸ்ர:தாந்த: ஸர்வஸுஸ்ப்ரபு தாம்பர:. தேஜோமயோத்யுதிதரோ லோகாநாம க்ரணீரணு:, ஸுஸிஸ்மித: ப்ரஸந்

காத்மா தர்ஜேயோ தாமதிக்ரம:, ஜ்யோதிர்மயோஜகந்காதோ ஹிராகரோ ஜலேஸ்வர:, தும்பவீணோ மஹாகோபோ விஸ்ரூக: ஸுராகாரூக:. த்ரிலோகபஸ்த்ரிலோகேச ஸர்வஸுரத்ரிதோகாதி:, அவ்யக்தலக்ஷணேதேவோ வ்யக்தாவ்யக்தோவிஸ்வாம்பதி:. வரஸ்ரீலோ வாருணா ஸோமாக தேஸமய:, ப்ரஹ்மா விஷ்ணு: ப்ரஜாபாலோ ஹம் ஸோ ஹ்யஸ்மைதிர்வய:. வேதாவிதாதாதா ச ஸ்ப்ரஷ்டாஹர்த்தாசதுர்முக:, கைலா ஸஸ்ரிகராவாஸீ ஸர்வாவாஸீஸதாகதி:. சசு. ஹிரண்யகர்போத்ருஹிணேஷ்டதாபோ தபதி, வ்யோதி யோகவித்யோகி வரதோ ப்ரஹ்மண:ப்ரிய:. தேவப்ரியோதேவ நாதோ தேவஜ்ஞோதேவதேவித்த:, விஸ்வமாஸோ விஸ்ரூலாக்ஷோ விருஷதோ விருஷவர் தந:. நிர்மமோநிர்ஹங்காரோ நிர்மோஹோநிருபத்ரவ:, நிர்பஹாதர்பதோத்ருப்த: ஸர்வாஸ்ரயாவித்தக:. ஸுதந்த்ரஜிஸ்ஸுதந்த்ராக்ஷி: ஸங்கத்ப்ரக்ருதிதக்ஷிண:, பூத பவ்யபவத்நாத: ப்ரபவோப்பூதிகாரண:. அர்தோகர்த்தாமஹாகோஸ: பரகார்யைக பண்டித:, நிமிஷண்டக:க்ருதாகர்தோ நிர்வயோஜோவ்யாஜமர்தக:. ஸத்வவாந் ஸாத்வி க:ஸத்யகீர்திர்வ்யஸநேஷ்வதக்ருதாகம:, ஆக்ஷபிதோருணஸ்ராஹிரைகாத்மாலைகர்மக்ருத். ஸுப்ரீத: ஸுமுக:ஸுஹ்ருத்ம: ஸுகரோதக்ஷிணஸில:, கந்திஸ்கந்ததரோதார்ய: ப்ரகட: ப்ரீதிவர்த்தக:. அபராஜிதஸ்ஸர்வஸத்வோ கோவிந்த: ஸத்வவாஹக:, அதிருத:ஸ்வத்ரு தஸ்வித: பூதஸுரர்தி: யரோதக:. வாதாஹ ப்ருங்கத்ருக் ப்ருங்கி பலவாகேக நாயக:, ஸ்ருதிப்ரகாஸ்ஸ்ருதிமா கோபத்ரகேதக்ருத். ஸ்ரீவத்ஸலஸ்ரிவாரம்ப: ஸ்ரீகர்பத்ர ஸமோயுக:, நூஸோ நூஹநேஷ்டுர் பூதக்ருத்பூதபாவந:. சுஉ. அகம்போபத்திகா மஸ்து கலஹா நீலலோஹித:, ஸத்யத்ரதமஹாரத்யாதீ ர்த்ய:ஸாந்தி பராயண:. பரா ர்தஸ்ருத்தி: பரதோ விஸிஷ்டஸ்துஸிஷ்டக்ருத், ஸுபத: ஸுபகர்தாச ஸுபகாமா ஸுபப்ரியம். அகர்திதேகுண:ஸாகஷீ த்யகர்தாகதப்ரப:, ஸ்வபாவபத்தோமத்ய ஸ்த:ப்ரீதக:ஸ்ரீக்ரஸுக:. ஸ்ரீரண்டிகலஸ்ரீஜலீஜடமுண்டிசகுண்டலீ, அம்ருத்யு: ஸர்வதிருக்ஸிம்ஹ ஸ்தேஜோராஸ்ரிர்மஹாமணி:, அஸங்க்யேயோ ப்ரமேயாத்மா வீர்ய வாக்ரீயகோவித:, வேத்யஸ்சைவ வியோகாத்மா பராவர முரீஸ்வர:. அதர்த்தமோ ஹாதர்தோ மதுரப்ரியதர்ஸந:, ஸுரேஸஸரணம்ஸர்வ: முபதப்ரஹ்மஸதாங்கதி:. காலபக்ஷ:காலகாரீக்தகண்டீருதவாஸஸ்தி, மதேஷ்வரோமஹாபீர்தா நிஷ்களங்கோ விஸ்ருங்க்கல:. த்யமணி ஸ்தாரணிர் தர்ய: விர்தி:விர்தலாதக:, விஸ்வத: ஸம்ருத ஸ்துல்யோ வ்யூடோரஸ்கோமஹாபுஜ:. ஸ்வயோநிர்நிராதங்கோ, கராராயண்பிரிய:, நிர்லேபோ நிஷ்ப்ரபஞ்சாத்மா நிர்வங்கோ டியங்க ருத்ரஃ. ஸ்தவ்ய: ஸ்தவ ப்ரிய: ஸ்தோதா வ்யாஸமூர்தி ரிரங்குஸ:, நிரவத்ய மயோபாயோ விர்யாராபூ ரஸப்ரிய:. ப்ரபூர்தபுத்திரக்ஷயண: ஸங்கர்ஷணோத்தர:, வையர்யாகரதூர்யோ தாதீஸ்ர: ஸுராகல்ய:ஸுர்வரிதி:. பரமார்தகுருர்த்ருஷ்ட: ஸ்ரீராஸ்ரிதவத்ஸல: ஸோமோரஸஜ்ஜோரஸத: ஸர்வஸ்தில்வாகலம்பர:. ஏவம்காம்காம்ஸஹஸ்ரேண தவ்ஷ்டாவ வ்ருஷப த்வஜம், ப்ரார்த்தயாமாஸஸுர்புஞ்ச பூஜயாமாஸபங்களை:. சுசு.

இவ்வகையான ஆயிரத்திருநாமங்களால் இடபத்துவஜ காளகண்ட திரிநேத்திரதாராகிய திவபெருமானே விஷ்ணுமூர்த்தியாளவர் மிகவாத்தித்தும், தாமரைமலர்களாற் பூஜித்தாஞ் சக்கரமெவித்தச் செய்துகொண்டிருக்கை யில், உலகரயகனுகிய திவபெருமான் திருமாலின் பக்தியைப் பரீகஷித்து மிக்கமாக அத்தாமரை மலர்களில் ஒன்றினை அவ்வருச்சனைக்காலத்தில் மறைத்தருள, விஷ்ணுமூர்த்தியர் நிருசமத்திற்கு மலர்காணாது குறைத்து வாசித்து, போகட்டும்: போகட்டும்: தாமரையிழத்தபின்னர் இனி எனது

கண்களிருந்து ஆரும் பயன் யாது ? முன்பில்லே. எல்லாப்பிராணிகட்கும் ஈன்முதேலாக வுள்ள சர்வேசுவரன் சிவபெருமானென்றுணர்ந்து தனது நேத்திரமொன்றினைத் தோண்டியெடுத்து மனப்பூர்த்தியாய் அத்தேசுத்திரத்தினைக் கூறிப் பூசித்தனர். ஜகதீசுவரனுகிய சிவபெருமான் திருமால் செய்த தோத்திரங்களையும், விசேஷ பக்தியோடுகூடிய அவ்விஷ்ணுவையும் களிகூர்ந்து பிரத்தியக்ஷமாய் அதிசீக்கிரத்தில் பரார்த்திவலிங்கமூர்த்தத்தினின்று தரிசனங்கொடுத்து நீங்க, தேவரோருபெயரும் பக்தர்களது இதயகமலங்களில் விளங்கும் பொருளாயுள்ள சிவபெருமானை விஷ்ணுமூர்த்தி சர்வ்டாங்கமாகத் தண்டஞ்சமர்ப்பித்து எதிர் நின்று கைகட்டி விசேஷமாகத் துதி செய்து பார்வதிசமேதராக விளங்கும் எம்பெருமானை மீண்டும் பூஜித்துகந்தோவுசித்தத்துடன் எதிர்நின்றனர். கோடிசூரியப் பிரகாசமாயும் எல்லாப் பிராணிகட்கும் காரணபூதமாயும் சுகத்தை யுண்டுசெய்பவராயும் இந்திராதி தேவர்கட்கெல்லாம் மஹாதேவருகியும் விளங்குபவராகிய சிவபெருமான், தன்னெதிர் நின்றுகொண்டும் தன்னையே பார்த்துகொண்டும், கை குவித்துக்கொண்டும் அசையாமல் நிற்கும் விஷ்ணுமூர்த்தியைப்பார்த்து, ஓ! விஷ்ணுவே! சமஸ்த தேவகாரியங்களையுந் தெரிந்துகொண்டேனுனதின் ஸ்தோத்ரத்தினும் பெருமையுடைய சுதர்சனமென்னும் சக்ராயுதத்தை உனக்குக்கொடுக்கின்றேன். ஆது மிகவும் மங்களகரமானது. அதன் விருத்தாந்தத்தை நீ பார்த்திருக்கின்றனை. அது எல்லாவுலகங்கட்குஞ் சுகத்தைச்செய்யவல்லது. உன்னுடைய ஹிதத்திற்காகவுனது செய்யப்பட்டிருக்கிறது. கல்பவிருதத்தையுடைய நீ இவ்விஷயத்தை யுணர்ந்தாயும். யுத்தகளத்தில் ஸ்மரிக்கமாத்திரத்திலேயே தேவர்களுடைய துக்கத்தை யொழிக்கவல்லது. இதோ சக்ரம். இதோ எனது வாகனம். இதோ நீ செய்த சகஸ்ரநாமஸ்தோத்திரம். (இம் மூன்றினையும்) கொண்டுசெல்வாய். இச்சரித்தத்தைப் பக்தியோடு கேட்பவர்கள் இடையிலே நீங்காத சித்திகளை படைவர்.” ஸங்கர உவாச. ஜ்ஞாநம்மமேதம்லகலக்தேவகார்யஞ்ஜகார்த்த, ஸுதர்ஸநாக்யஞ்சக்ரஞ்ச ததாமிதவபோரம். கூ. யத்ரூபம்பவதாருவ்டம் ஸர்வலோகஸுகாவஹம், ஹிதாயதவதேவேஸ ஸ்ருணுபாவயஸுவ்ரத. கூ. ஸுஜிரோபிலம்ம்ருத்ய தேவாகாந்தாக்கரமாகம், இதஞ்சக்ரம்திதம்ரூபம் இதாகமலஹஸ்தகம். ஸ்ருண்வந்திதாபச்த்யா வித்தில்ஸ்யாதபாயிநீ, ஸுமுக்த்யாதசெளசக்ரம் ஸேஷ் யாயுதஸமப்ரபம். சதி. ஸுகூர உவாச ॥ ஜாடுஜியெஉவஸ்ஸுவ தெவஸாயடு ஜதாஉந்த । வஸுஜுஸுடுதாவுஒதுஸுஒடுஸுஜுதாதிதவபெஸாலதடு । சூஉ ॥ உடுடு வெஸலதாஜுஷ்ரு வவஸுதெளகவஸுவாவஸுடு । வித்தாயதவதெவெஸ ஸுஜுகஸாவயவஸுவுதாசஸு। ரணாஜிரோவிலாஸுஜுஸு தெவதாசஸுடுஸுவே தாஸுதடு । ஜஉஸுவுரு ஜஉரஸுவெ ஜஉ தாவிலவஸுவுதடு ॥ சூச ॥ யெஸுஜு ணஸுதிகுபாஸுஜுஸு வித்தில்ஸுஜுதவபாயிதீ । வஸுவதாஸுஜுதஉஸுஜுரு வஸு யஸுபாஸுதவஸுஜுவுதடு ॥ சுடு ॥ என்று திருவாய்மலர்ந்தருளி ஆநேக ருரிய ருடைய காந்திக்குச் சமானமான காந்தியையுடைய சக்ராயுதத்தைக் கொடுத்தருளினர்.

விஷ்ணுமூர்த்தியும் பெருஞ்சக்தாவமுதத்துடன் அதனைப்பெற்றுக்கொண்டு மகாதேவனைப்பணிந்து, பிரபுவே! என் பிரார்த்தனையைக் கேட்கவேண்டும். அகாலமரணம் யான் தக்கதாசத்திற்காக நியானிக்கத்தக்கதும் துஷ்கருத்தக்கதிம் தரிக்கத்தக்கதுமாகவுள்ளது யாது ? என்றுகேட்க, சிவபெருமான் சந்தோஷித்து, விஷ்ணுவே ! என்னுடைய ரூபமே சமஸ்தமானதுக்களுக்கும் விலருப்படி நியானிக்கத்தக்கது. என்னுடைய சகஸ்ரநாமங்களை தினந்தரிக்கத்தக்கது. எவ்வண்ணம்பட்ட துன்பங்களும் ஒழியும்படி என் பிரசாதமாகிய சுதர்சனமே தரிக்கத்தக்கதெனத் திருவாய்மலர்ந்தருளி, மீண்டும், திருமாலே! இச்சரித்தத்தை யாவர் வாசிக்கின்றனரோ அல்லது வாசிக்கச்செய்கின்றனரோ அவர்கட்குச் சொப்பனத்திலுந் துக்கமென்பது சம்பவியாது. ஸுசர்சட்குச் சங்கடமுமுங்காலத்தில் எனது சகஸ்ரநாமங்களை தினமுமுறை நியானித்தால் அவர்கள் சங்கடங்கள் விலகும். விதிமுறைப்படி ஜபித்தவன் சர்வகருக்களையும் ஆடைவான்; சர்வரோகங்களையுமொழிவான். கல்வியை விரும்பினவன் கல்வியைப் பெறுவான். அரும்பெருஞ் காரியங்களையுமுத்தித்தவன் அவற்றையடைவான். இதுவிஷயத்திற்சந்தேகமேயில்லை. இதுவே பெருக்குபவருக்களிப்பைத்தரும். காடோமும்விடியற்காலத்திலெழுந்து சன்னி முறைப்படி தூயைசெய்து எனது சகஸ்ரநாமத்தால் துதிசெய்பவன் எப்பொழுதும் என்னிடத்திலேயே வாழும் சித்தியையடைவான். இதுவே பெருக்குபவருக்களிப்பைத்தரும். காடோமும்விடியற்காலத்திலெழுந்து சன்னி முறைப்படி தூயைசெய்து எனது சகஸ்ரநாமத்தால் துதிசெய்பவன் எப்பொழுதும் என்னிடத்திலேயே வாழும் சித்தியையடைவான். ஸுதித் திருமும் பிசகில்லை யெனச் சந்தோஷித்துவிட்டுன் கூறி, அனந்தமயமாய்விஷ்ணுமூர்த்தியைத் தனது திருக்கரத்தாற்றடவி, யான் வரதனுகளின், உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக. உனதுடைய தோத்திரத்தால் யான் சந்தோஷித்து உனக்கு வசமானேன் எனக்கூற, சர்வேசுவரனை சிவபெருமானைத் திருமால் சாஷ்டாங்கமாகப் பணிந்து, ஸ்வாமீ! தருகட்டென் மீதில் இப்பொழுது தயை வந்திருப்பதைக்காட்டிலும் விரும்பத்தக்கது வேறுண்டிருக்கும் பதார்த்தில், தாங்கள் தயாகொருபியா யிருத்தலின், தாங்களே ஆலோசித்துத் திருவாய்மலர்ந்தருளவேண்டும்; ஆயினும் தங்களிடத்தில் எப்பொழுதும் நீங்காத நிடபக்தி யுண்டாயிருக்கவேண்டும் வரங் கொடுக்கவேண்டும், பகவானே! தேவரீரது அநுக்கிரகத்தால் யான் சர்வ சம்பூரணமா யிருத்தலின் வேறொரு வரம் எனக்கு வேண்டுவதில்லை எனக்கூற, சிவபெருமான் விஷ்ணுவே! உனக்கு என்னிடத்திற் நிடபக்தி யுண்டாருக. நீ தேவர்கள் முதலிய யாவருக்கும் பூஜ்யனுருக. உலகரக்ஷணஞ்செய்யுஞ் சக்தியுங்கொடுத்தேன். உன்னுடையபெயரைத் தியானிப்போர் பரலோகன் சக்தோகமின்றி ஒழியும் என்று வரங்கொடுத்து அந்தர்த்தானமாயினர். அதன்பின்னர் சந்தோஷமனத்துடன் திருமால் மங்களகரமான சக்ராயுதத்தை யடைத்து எப்பொழுதும் சிவசிந்தாபங்களோடு தியானஞ்செய்துகொண்டு, தன்னை ஆச்சிரயிக்கும் அன்பர்கட்கும் இச்சுத் தோத்திரத்தை ஆத்தி

யனஞ் செய்விப்பாராயினர். இந்த சகல்ர் திருநாமங்களால் துதிசெய்ப வர்கள் சிறந்த பலன்களைப் பெறுவார்கள். இதனைக் கேட்டவர்களுடைய பாபங்களெல்லாம் நசிக்கும். இஃதில்வகைய சிறப்பினையுடையது. சைமி சாரணியவாகிலே! நீங்கள் கேட்டபடியே திருமால் தோத்திரஞ்செய்து சிவபெருமானிடஞ் சுதரிசனமென்னுஞ் சக்ரத்தையடைந்த சிவசகஸ்ர நாம ங்களை வியாஸமுனிவராற் கூறக் கேட்டபடியே சொன்னேன். இனி நீங்கள் கேட்கவேண்டிய விஷயத்தைக் கேளுங்களென ஸூதமுனிவர் கூறினர்.

சிவநாமங்களாயிர முணர்த்தது

முற்றிற்று.

எழுபத்திரண்டாவது

சிவராத்திரிவிரதமகிமையுணர்த்த அத்தியாயம்.

ஸூதமுனிவரே! தேவரீர் தன்னியர். திருதிருத்தியர். நாங்கள் முனிவர்களாற்கேட்டிருப்பினும் எங்கள் சந்தேகங்கள்நீங்கவில்லை. தேவரீர் சொல்லிவரும் விஷயங்களைக் கேட்பதாலேயே எங்கள் சந்தேகங்களொழி கின்றன. சிவரர்ச்சனையிற் சிறந்த பக்திமார்களின் தேவரீரையே கேட்கின் றோம். உலகத்தில் எந்தவிரதத்தை யாச்சரியித்தால் சிவபெருமான் சந்தோ ஷித்துச் சகல சுகங்களையும் புக்திமுக்திகளையுங் கொடுப்பரோ அந்த விர தத்தை எங்கட்குச் சொல்லவேண்டுமென வினவ, ஸூதமுனிவர் சொல்லத் தொடங்கினர். ருஷிகளே! சிறந்ததோர் விஷயத்தைக்கேட்டீர்கள். தெரி த்தவரையிற் சொல்கின்றேன் கேளுங்கள்: நீங்கள் என்னைக்கேட்ட இவ்விஷ யத்தையே ஒவ்வொரு காலங்களில் பிரமதேவனும் விஷ்ணுமூர்த்தியும் பார் வதி தேவியும் சிவபெருமானைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குச் சிவபெரு மான் கூறிய, பாபங்களை யொழிக்கத்தக்க அந்தச்சம்பாஷணையை யுங்கட் குச் சொல்லுகிறேன்.

சிவபெருமான் திருமாலைநோக்கிச் சொல்லுகின்றார்: விஷ்ணுவே! உத்தமமான விரதத்தைச் சொல்லுகிறேன். நான்சொல்லும் விஷயம் வேத ங்கள் உபவேதங்கள் ஸ்மிருதிகள் புராணங்கள் தர்மசாஸ்திரங்கள் இவற்றி லுள்ளெல்லாஞ் சொல்லியிருக்கும் இரகசியக்களிலும் அதிரகசியமான சா ராம்சம். அதேகவிதங்களிலும் இதுவே உத்தமமானது. உலகத்தில் மோ க்ஷத்தைக்கொடுக்கத்தக்கவை நான்கு. அவை, சிவரர்ச்சனை - உருத்திரபாராய ணம் அஷ்டமி சோமவாரம் - திருவ்ணபக்ஷம் சதுர்த்தசி [பௌர்ணமியும்] இம் மூன்றும் ரவிவாசம், காசிக்ஷேத்திரத்தில் மரணம் எனப்படும் இந்நான்கு மே முக்திகொடுக்கத்தக்கவை. இந்நான்கிலும் சிவராத்திரிவிரதமே அதி யுத்தமமானது. ஆதலின் புக்திமுக்திகளை விரும்புவோர் இவ்விரதத்தை யது ஷ்டிக்கவேண்டியது. இதைக்காட்டிலுஞ் சிறந்தவிரதமொன்றில்லை யென

க்கூறினர். அதைக்கேட்ட விஷ்ணுவானவர் ஸ்வாமீ! அச்சிவராத்திரி விரதத்தை பெளிமையுலகுக்குச் சொல்லவேண்டும். எத்தமாதத்தில் எத்தவித யால் எப்படிப்பூஜிக்கவேண்டியது? உலகோபகார நிமித்தமாகக் கேட்கின் றேன். எவ்வளவுகாலம் அத்தவிரத்தை யாச்சரியிக்கவேண்டும். சதுர்த்தசி திதி எப்படி மற்றத்திதிகளிலும் தேவரீருக்குப் பிரியமானதாயிற்று. அத னைச்சொல்லவேண்டுமென வினவ, சிவபெருமான் சொல்லுகின்றார். இந்த விரதம் எல்லோருக்குந் தர்மசாதனமானது. பிரமனுதி வருணத்தவர்கட் கும் பிரமசரிய முதலிய ஆச்ரமத்தவர்கட்கும் ஸ்திரீகட்கும் சூத்ரர்கட்கும் இவ்விரதம் அனுஷ்டிக்கத்தக்கது. தேவர்கள் தானவர் கள் முதலாகிய சகலபிராணிகட்குந் தகுதியானது. இஷ்டகாமியங்களைக் கொடுக்கத்தக்கது. அதாவது மாசிமாசத்தில்வரும் கிருஷ்ணபக்ஷ சதுர்த் தசி அர்த்தராத்திரி பதினொரு காழிகை கோடிபிரமஹத்திகளையும் நசிக்கச் செய்யுமாதலின் அந்தத்தினத்திற் செய்யத்தக்க காரியத்தைச் சொல்லு கிறேன்.

விஷ்ணுவே! அன்று விடியற்காலத்தி லெழுந்திருந்து சந்தோஷத் துடன் மாலுடப்பிரியடைதல் அரிது. அது லக்கமுடையதும் சாரமற் றதுமாமாதலின் அம்மாலுடப்பிறவியை இவ்விரதத்தாற் பயன்படுமாறு செய்கிறேனென்று நிச்சயித்துக்கொண்டு, அருகிருப்பவர்களையும் விரதமிருக் கச்செய்யவேண்டியது. பிறகு நல்ல தந்தகாஷ்டங்கொண்டு தந்தாவனஞ் செய்து, நதிமுதலான புண்ணிய தீர்த்தங்களில் தேசகால விரோதமின்றி ஸ்நானஞ்செய்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, பிறகு கைபித்தியாதவிடானஞ்செய்ய ஆரம்பிக்கவேண்டியது. சிவாலயத்திலிரு ந்து எக்காரியஞ் செய்தபோதிலும் ஒன்று அகந்தமாகுமாதலின், சிவசந்நி தானத்திலிருந்து வழக்கப்படி சிவபூஜை செய்துமுடித்து நமஸ்கரித்து, ஸ்வாமீ! ஸாமதேவா! மஹாதேவா! நீலகண்டா! ஸதாசிவா! தேவரீரது கருணையால் சிவராத்திரி விரதத்தை யநுஷ்டிக்கவேண்டுமென் றிச்சையுற்றே னாகையின், அது நிர்விக்னமாக முடியுமாறும், இவ்விரதமுடியு மெல்லையும் காமமுதலிய பகைகள் என்னைத்தன்புறத்தாகவும் துஷ்டக்கனவே வசனி த்தல் - அசுத்தர்களைப் பரிசித்தல் - ஸ்பர்சவஸ்துவழி மனத்தைச் செலுத்தல் - பகல் நித்திரை - ஜலபானஞ்செய்தல் முதலியன விலகியிருக்கவும் அதற் கிரங்கவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டு, பிறகு பூஜாத்திரவியங் களைச் சேகரித்துக்கொள்ளவேண்டியது. தான் வசிக்குமிடத்திற்கருகே எந் தத்சிவலிங்கமூர்த்தம் பிரசித்தமாயும் புண்ணியகரமாயும் பூஜிக்கத்தக்கதாயு முளதோ அந்தச் சிவலிங்கத் தருகேசென்று, அப்பரார்த்தலிங்கத்திற்குத் தென்திசையிலாவது மேற்றிசையிலாவது பூஜைசெய்கற்குத் தக்க இடம் ஏற்படுத்திக்கொண்டு தான் சேகரித்துவந்த பூஜாத்திரவியங்களை வைத்துக் கொள்ளவேண்டும். மீண்டும் அத்தத்திருக்கோயிலிலேயே விதிப்படி ஸ்நா

னஞ்செய்து பரிசுத்தமான தேய்த்துலர்ந்த வஸ்திரத்தரித்து மூன்றுதரம் ஆசமனஞ்செய்து பூஜைக்கு ஆரம்பிக்கவேண்டும். முதலில் அசலவிக்கமான அர்க்யப்பாத்திரவிக்கத்திற்கு மந்திர பூர்வகமாய் உபசாரத்துடன் பூசை செய்விக்கவேண்டியது. மந்திரமின்றிப் பூஜைசெய்யப்படாது. ஸ்ரீதந்தத் திரியங்கட்கு ஸ்ரீதேத்தமந்திரங்கள் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தந்தத் திரவியங்களை அந்தந்த மந்திரங்களைக்கூறியே பூஜைசெய்யவேண்டும். பிறகு கீதம் நிருத்தம் நாட்டியம் வாத்தியம் இவற்றைப் பக்தியுடன் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு முதற்சாம பூஜைசெய்து நிவேதம்நிறுத்தி செய்து, தான பார்த்திவலிங்கபூஜையை நிதமும்செய்யும் வழக்கமுடையவனுயின் தன்வழக்கப்படி பார்த்திவலிங்கபூஜையைச்செய்யவேண்டும். அல்லது முன்னே பார்த்திவலிங்கபூஜை செய்தானுஞ்செய்யலாம்.

பிறகு சிவபெருமான் தன்னிடத்தில் தயைவைக்கும்படி, அதிகவிதமான சிவஸ்தோத்திரங்களாற் ஸ்தோனஞ்செய்யவேண்டும். சிவமஹிமையைப் பிறர்க்குச் சொல்லவேண்டும். அல்லது பிறர்சொல்லக் கேளணஞ் செய்யவேண்டும். இவ்வாறு தான்று சாமங்களிலும் தான்று பார்த்திவலிங்கங்களைச்செய்து ஆவாஹனாதி விசர்ஜனாந்தமான பூஜனையைச்செய்துமுடித்து, ஸ்தாபிதலிங்கத்தையும் பூஜைசெய்வித்து, நித்திரையின்றி உத்கமுத்தலிய சிவபணிவிடைகளுடன் விழித்திருந்து, இரவைக்குறித்து விடிந்முன், மீண்டும் ஸ்தாபிதலிங்கத்திற்குப் பூஜைசெய்வித்து, ஸ்நானஞ்செய்வித்து, சந்தியாவந்தன முதலியவற்றை முடித்து, ஸ்வாமீ! தேவரீர் இருபையாலே யான் ஆரம்பித்த சிவராத்திரி விரதத்தை முடித்தேன். எம்சக்திக்கேற்ப யாகஞ்செய்து தவத்திற்குத் தேவரீர் சந்தோஷித்து நல்ல பலனைக்கொடுக்கவேண்டும்: அடியேனிடத்திற் தயைவைக்கவேண்டுமென்று புஷ்பாஞ்சலி சமர்ப்பித்து நமஸ்கரித்து, பரிவாரதேவதைகளையும்நமஸ்கரித்து, தான்செய்த பூஜாபலனைச் சிவப்பிரீதிசெய்து ஜலபானஞ்செய்து அவ்விரத நியமத்தைவிடவேண்டியது.

விஷ்ணுவே! அரிதென்னுமெனின், யாமங்கள் தான்றிலும், தன் மனதிலுள்ள கோரிக்கையைச்சேர்த்து அத்தியாதிப் பிரயோகமாகிய சங்கற்பஞ்செய்து, ஸ்தாபிதலிங்கத்தையும் பார்த்திவலிங்கத்தையும் பக்தியோடு பூசைசெய்யவேண்டும். பால் தயிர் நெய் தேன் சருக்கரை முதலியவற்றால் அவ்வவற்றிற்குரிய மந்திரக்களைக்கூறி யபிஷேகஞ்செய்யவும். பின்னர் உலர்ந்தவஸ்திரத்தினுல் லிவலிங்கமூர்த்தியை உபசாரமாகவொத்தி, சுகந்த பரிமள சந்தனஞ்சாத்தி, முதல்யாமத்தில் அரிசி யகுதையும், இரண்டாம் யாமத்தில் யவை யகுதையும், மூன்றும் யாமத்தில் கோதுமையகுதையும், தான்காம் யாமத்தில் அரிசி உளுந்து பயறு இவை அல்லது எழுவித்தமான தானியாகுதையுஞ் சமர்ப்பிக்கவும். புஷ்பங்கள்-முதலாம் யாமத்தில் சதபத்திரம் கமலம் காவிரம் முதலியனவும், இரண்டாம்யாமத்தில் கமலமும் வில்வமும், மூன்றும் யாமத்தில் அனுகம் ஆத்தியும், தான்காம் யாமத்தில் கூவ

ளைங்கமழும் பல மலர்களுங்கொண்டு இவர்சாமக்கள்வாலாவது குருவுபதேத்த மந்திரங்களாலாவது அருச்சிக்கவும். நிவேதனம்—முதலாம் யாமத்தில் சுத்தான்னமும் கறிவகைகளும் பலகாரமும், இரண்டாம் யாமத்தில் பரமான்னமும் லட்டுமுதலிய பலகாரமும், மூன்றும் யாமத்தில் மாவாற்செய்த நெய்சேர்த்த பலகாரவகைகளும் பாயசமும், தான்காம்யாமத்தில் கோதுமை சர்க்கரை நெய்சேர்த்தசெய்த மதுரமான பலகாரங்களும் சுரணிதமான பழவகைகளும் நிவேதிக்கவும். முதல் யாமத்தில் வில்வப்பழமும், இரண்டாம் யாமத்தில் பலாப்பழமும், மூன்றும் யாமத்தில் மாதுளம்பழமும், தான்காம் யாமத்தில் பலவித பலர்க்குஞ் சமர்ப்பிக்கவும். தாம்பூல தக்ஷிணைகளோடு யாமங்கள் தான்றிலும் பிராமணபோஜனம் முதலியன செய்யவேண்டும். அவ்வவ் யாமத்தின் முதலிற் சங்கற்பஞ் செய்ததற்கேற்ப அவ்வவ் யாமபூஜையை முடித்து அவ்வவ் பார்த்திவலிங்கங்களை விசர்ஜனஞ்செய்து விடவேண்டியது. பூஜாகாலத்தில் ஸ்ரீம - ஹயாய - நமஹ - ஓம் - ஜீதாய - நமஹ - வடவே - உத்தாய - தீக்ஷாதெவாய - நமஹ - ஸ்ரீம - ஸ்ரீஷ்டாயை நமஹ - ஸ்ரீம்பவாய-நமஹ் வராய-ருத்ராய-பசுபதயே-உக்ராய-மஹாதேவாய-பீமாய-ஸர்வாகாய என்னும் அஷ்ட நாமங்களாலும் பூஜித்துப் புஷ்பாஞ்சலிசெய்து தமது கோரிக்கை களைச் சொல்லிக்கொள்ளவேண்டும். ஒவ்வொருயாமத்திலும் ஒரு பிராமணனுக்குக் குறையாமல் அன்னங்கொடுக்கவேண்டும். மறுநாள் போஜனத்திற்கும் அவ்வவ் யாமத்திலேயே பிராமணர்கட்குத் தக்ஷிணைகொடுத்து நியமித்துக்கொள்ளவும். அபரவர்கள் சக்திக்கேற்றபடி தானங்கள்செய்து பிராமணர் யதிகள் இவர்கட்கு இரவு தான்று யாமத்திலும் சங்கற்பித்துக்கொண்டபடி அன்னமளித்து, சிவபெருமானே நமஸ்கரித்து காரு விதமாகத்தரித்து, மந்திரபூர்வகமாகப் புஷ்பாஞ்சலிசெய்து; ஸ்வாமீ! தான [illegible] னிடத்தேயுள்ளது. தயாசமுத்திரமான நீ உள்ளிட்டபடிசெய்த தெரிந்தோ தெரியாமலோ யான்செய்யும் ஜெபபூஜைகளைப் பன்பெறச்செய்ய வேண்டும். சகலப்பிராணிகளுக்கும்பிரபுவான நீ எனக்குப்பிரசன்னமாக வேண்டும். என்செய்த பூஜாகர்மங்களால் நீசந்தோஷித்துக் குறைந்தவற்றை நிறைவாக்கி விரதத்தைப் பூர்த்திசெய்யவேண்டியது. எல்லா புஷ்பாஞ்சலிசெய்து வெளிமாலியத்தை ஆசிர்வசன பூர்வகமாகப்பெற்று, சிவபெருமானையும் பிராமணரையும் நமஸ்கரித்து, திரும்பவும் தான் பூஜை செய்யுஞ் சபையில் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து, ஏகாக்ரசித்தில் உன்பூஜை எப்பொழுது முடிந்ததென்று நீர்ப்பொழுதும் சபித்திருக்கவேண்டும். இரும்பதனும் உனது நாமங்களினலேயே உன்டாகவேண்டுமென்று பிரார்த்தித்து விசர்ஜனஞ்செய்து, பிராமணபோஜனஞ்செய்வித்தல் சலபாபரியமுறையுமுண்டாகும். இப்படி வீட்டிலுஞ் சிவஸ்தலத்திலுஞ் சிவபெருமான் எழுந்தருளியிருப்பர். இதன

பலத்தைப் பதினாயிரவருஷத்தும் சொன்னாலும் முடியாது. இவ்விரதத்தைப் பக்தியின்றிச்செய்தவனுக்கும் முக்தியுண்டாகும். இப்படியே மாதந் தவறாமல் சிவராத்திரியிலுஞ் செய்யவேண்டும். பிறகு விரதசாந்த நிமித்தமாக உத்தியாபனம் விதிப்படி செய்யவேண்டும். என்று திருவாய்மலர்ந்தருளினார். இவ்வாறு சிவபெருமானுஞ் சொல்லக்கேட்ட விஷ்ணுமுதலிய சகல தேவர்களும் சந்தோஷித்துத் தங்கடங்கள் வாசஸ்தானங்களே யடைந்தார்.

சிவராத்திரிவிரதமகிமை யுரைத்தது

முற்றிற்று.

எழுபத்துமூன்றுவது

சிவராத்திரி உத்தியாபன விதி யுரைத்தது.

ஸநகாதியவாசிகள் ஸூதமுனிவரைநோக்கிஅன்பரே! சிவராத்திரி விரதத்தின் சாந்திக்காக உத்தியாபனஞ் செய்தார் சிவபெருமான். பிரசன்னமாவாரெனக் கூறினீராதலின், அந்த உத்தியாபனவிதியையும் முன்சொன்னபடி அடியேங்கட்குச் சொல்லவேண்டுமென வினவ, ஸூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்: முனிகளே! நான் இதுகாறும் வியாஸபகவான திருவாக்காற் கேள்விப்பட்டதுபோல. சிவராத்திரி உத்தியாபன விதியைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:—சிவராத்திரிவிரததினத்தில் நித்தியகருமானுஷ்டானத்தை முடித்துக்கொண்டு சிவாலயமடைந்து, அங்கே சாஸ்திரப்படி சிவபூஜைசெய்து, குருவிடமிருந்து சிவராத்திரி விரதஞ் செய்வதற்காகச் சங்கற்பஞ்செய்துகொண்டு இரவுமுழுதும் நித்திரையின்றி, நான்குஜாமத்திலும் ஸ்நானாதிகளுஞ் சாந்தித்திலாவது பார்த்திவலிங்கத்திலாவது கூடமாலும் இரண்டினிடத்திலாவது சிவபூஜைசெய்து, மறுநாள்மத்யாஹ்னகாலத்தில் ஸ்நானாதி நித்தியகரியைகள் முடித்தபிறகு, சிவசன்னிதியிற் சங்கற்பஞ்செய்துகொண்டுபிரசாதத்தினால் இவ்விரதத்தைச் செய்தேனென்று, பிரதிமாசமயம் தேவரீர் கட்டளையால் இவ்விரதஞ்செய்யத்தக்கது. அது நிர்விக்கினமாக முடியும்படி அதற்கானு செய்யவேண்டுமென்று சிவாலயத்தில் நியமித்துக்கொண்டு, பிராமணர்களுடன் தானும் புறப்பட்டு, பிராமணஸ்ரீவசனமடைந்து நியமினை முடித்துக்கொள்ளவேண்டும். பின்வரும் திருவிளையாடல் சுவர்க்கசியில் விடியற்காலத்தில் எழுந்து, தீர்த்தத்திலாவது கிட்டவாவது ஸ்நானமுதலிய நித்யகருமங்களை முடித்துக்கொண்டு, சிவசன்னிதியிற்சென்று சிவபூஜைசெய்து, ஸ்வாமீ! இன்று தேவரீர் கட்டளையால் நிராகாரவிரதத்தை நிர்ச்சலமாகச்செய்ய நிச்சயித்திருக்கின்றேன். இவ்விரதத்தை யதவிக்க உத்திரவு கொடுக்கவேண்டுமென்று நமஸ்கரித்து, காமக்ரோதாதிகளை ஜயித்து, பகலிலுறங்காதிருந்து, இரவில் நான்கு யாமங்களும் பூஜித்து மந்திரஜபஞ்செய்து தேகநிருத்தவாத்தியங்களாற் பக்திசெய்து விடியுமளவும் விழித்திருந்து பின்னர் ஸ்நானஞ் செய்து சிவபூஜை முடித்து பிராமணர் யதிகிட்டப் போஜனஞ்செய்வித்து

வேண்டும். இவ்வாறுசெய்யச் சக்தியில்லாதவன் ஒரு வேதியனுக்காவது அன்னமிடவேண்டும். பிராமணரிச்சாதம் பெற்றுக்கொண்டதான பிறகுதான் பாரணஞ் செய்யவேண்டியது.

இப்படியே மாதந்தோறும் உத்தமமான சிவராத்திரி விரதத்தைச் செய்துகொண்டு, மகாசிவராத்திரி வருமளவும் எல்லாச்சிவராத்திரிகளையும் அநுஷ்டித்து, மஹாசிவராத்திரினத்தில் விதிப்படி உத்தியாபனம் செய்யவேண்டும். அவ்வாறு செய்கையில், சிவராத்திரிவிரதத்தை உத்தியாபனஞ்செய்த பிராமணர்களை வருவித்து அவர்களைக்கேட்டும், சாஸ்திரங்களை யாராய்ந்தும் உத்தியாபனஞ் செய்யத்தக்கது. அதெப்படியென்றால், அதனையுஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்:—பிராதங்காலத்தில் ஸ்நானமுதலிய நித்தியானுஷ்டானத்தை முடித்து, சிவாலயத்திலாவது தன் வீட்டிலாவது புனிதமானவிடத்தில், கோரிதிலகமென்னும் பிரசித்தமான பெயரையுடைய அலங்காரமண்டபஞ்செய்து, அதில் மண்டிலஞ்செய்து, ஒன்பது கலசங்கள் வஸ்திர பலபஞ்செய்து, அதில் மண்டிலஞ்செய்து, ஒன்பது கலசங்கள் வஸ்திர பலசூத்ரவேஷ்டிதமாய் அக்கினிகார்யநிமித்தம் மண்டபத்திற்குப் பக்கத்தில் வைத்து, இதனுலும் அம்மண்டபத்திலுவைத்து, அதிற்பார்வதிசமேதராகச் சிவபெருமானைப் பிரதிஷ்டைசெய்து, அச்சிவபெருமானுக்கு வலப்புறத்தில் தியாதானகலசமைவைத்து, இரவிற் பூஜைசெய்யவேண்டியது. இரவுமுழுதும் விழித்திருந்து ஹோமத்தினாற் சிவபூஜைசெய்துகொண்டு சிருத்திகிரமுதலியவற்றைச்செய்து, வேதோக்த விதிபோற் பூஜைசெய்து, விடியற்காலத்தில், ஸ்நானமுதலியன முடித்துப் பூர்வபூஜைசெய்து, குருவிடமிருந்து சமானமான வேதபாரகரான பிராமணர்கட்குருத்விஜ்ஞாபனஞ்செய்து-வஸ்திரம்-மிதியடி-பொன் மோதிரம் - கடிசூத்ரம் முதலியவற்றைத் தானஞ்செய்து, நெய் பாயசம் முதலியவற்றால் ருத்ரமந்திரஜபத்துடன் ஹோமஞ்செய்யவேண்டும். முதலில் கவக்நிகசாக்நி கவக்நிகசாஹோமஞ்செய்யவேண்டும். சிவமந்திரஞ் சபித்துகொண்டே யவையோடு எள்ளோடுஹோமஞ்செய்து, பிறகு தேனிலாவது நெய்யிலாவது ஹோமஞ்செய்து, பொன்னுஞ் சிவபெருமானும், வெள்ளியாற் பார்வதியுஞ்செய்து, கட்டில்மெத்தையவைத்து, எழுவகைத்தானியங்களையதன்மேற்பரப்பி, பசுவுடன்வேதியனுக்குத்தானஞ்செய்யவேண்டும். இவ்வாறுஹோமமுழுத்தி, பின்னர் ஆசாரியனை ஆடையாபரணம் புஷ்பமுதலியவற்றினால் அலங்கரித்து விசேஷமாகப் பூஜிக்கவேண்டும். பக்தியோடு விசேஷமான தக்ஷிணைகளைகொடுக்கவேண்டும். கொம்பிற் பொன்னும், குளம்புகளில் வெள்ளியும், வெண்கலப்பாத்திரமும், இரத்தினங்களாலாவதும், உடலில் வஸ்திரமும், முதுகில் தாமிரமும் மற்றுள்ள அலங்காரங்களுஞ்செய்து, சுன்றுப்பாற்கோதிக்கும் சாதுவான இளம்பசுவைக் கன்றுடன் ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும். பிராமணர்கட்கு நெய் பாயசம் பலகார முதலியவற்றுடன் சிறந்த அன்னமளிக்கவேண்டும். அதேதானங்களுஞ் செய்யவேண்டும். பன்னிரண்டு வேதியருக்குக்குறையாமல் பிராமணபோஜனஞ் செய்விக்கவேண்டும். அச்

தப்பலனைச் சிவப்பிரீதிசெய்து, ஸ்வாமீ சங்கரா! யான் செய்த இவ்விரதத்தால் என்னிடத்திற் கிருபைவைத்து என்னைத் தேவரீருக்கு உரியவனாகக்கொள்ளவேண்டும். என் சக்திக்கேற்ப இவ்விரதத்தைச் செய்தேன். அஜ்ஞானத்தாலாவது, ஞானத்தாலாவது யான் செய்தது பயன் பெறுவதாக; என்று புஷ்பாஞ்சலி சமர்ப்பித்து நமஸ்கரித்து, மீண்டும் யான் பூஜிக்கையில் எழுந்தருளவேண்டும். உம்முடைய திருவடி என் இதயத்திலிருந்து நீங்காதிருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கவேண்டும்.

இவ்வகையாகச் சிவராத்திரிவிரத உத்தியாபனஞ்செய்தவன் இஷ்ட காமியங்களெல்லாம் பெறுவான். இவ்விரதத்தைத் தெரிந்து செய்தாலுந் தெரியாமற்செய்தாலுஞ் சிவபெருமான் சந்தோஷிப்பார். இவ்வாறு விரதஞ் செய்பவன் சிவலோகத்திற்சுகித்திருப்பான். மனவாக்குக்காயங்களால் வந்த துன்பங்கள் இவ்விரதத்தாலழியும். இவ்வாறு விரத முடித்துக்கொண்டு மஹாகால் அமாவாசையில் பிதுர்கட்குப் பிண்டப்பிரதான சர்ப்பண முதலியனசெய்துபிராமணரோஜனஞ்செய்விக்கவேண்டியது. அமாவாசையில் அன்னமளித்தால் அந்தப் பகலும் பதினான்குதினங்களிலும் அன்னமளித்த பலனைகூடும். பக்தியுடையவனும் வேதபாரகனும் சத்குலத்துதித்தவனுமுள்ள பிராமணனுக்கும் பதிதிக்குமேலுட்பொழுது அன்னமளிக்கத்தகும். பிறகு பந்துக்களுடன் தானும் புசிக்கவேண்டும். இப்படிச் சிவராத்திரிசெய உத்தியாபனவிதியை நீங்கள் கேட்டபடியே என்னுங்கூடியவரையிற சொன்னேன். நற்பலனையடைய விரும்புவோர் சர்வப்பிரயத்தனத்தோடும் இவ்விரதத்தை யாச்சரியிக்கவேண்டும். இச்சரித்தத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் சொன்னவர்களும் சிவகடாக்ஷம் பெறுவர் என்று ஸூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறியருளினர்.

சிவராத்திரி உத்தியாபன விதி யுரைத்தது
முற்றிற்று.

எழுபத்துநான்காவது

வேடுவன் சிவராத்திரிபலனை யடைந்தது.

மதிமிகாரணியவரிகள் ஸூதமுனிவரை நோக்கி, ஸ்வாமீ! தேவரீரது திருவாக்கால் இக்கச் சிவராத்திரிவிரதமகிமையைக் கேட்டுப் பரமானந்தத்தை யடைந்தோம். இன்னும் இச்சிவராத்திரிவிரதத்தின் மகிமையையும் பலனையும் விஸ்தாரமாகச் சொல்லியருளவேண்டும். அஜ்ஞானத்தால் இவ்விரதத்தை ஆச்சரியித்தால் யாதாவது பலனுண்டாகுமா? எனக் கேட்க, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்:— சௌனகாதி முனிவர்களே! ஒரு வேடனுடைய எல்லாப்பாபங்களையும் ஒழித்துள்ளதாகிய பூர்வ கதையொன்று சிவராத்திரி மகிமையிற் சொல்லப்பட்டுளது. அதனையும் உங்கட்குச் சொல்லுகின்றேன் கேளுங்கள். அதாவது,—

ஒருவனத்தில் பெருங்குடும்பத்தனும், மகாபலசாலியும், குரூரகர்மமுடையவனும், குரூரமாகிய கொழிலையே செய்பவனும், எப்பொழுதும் வனத்திலுள்ள பல மிருகங்களைக் கொல்பவனும், அவ்வனத்தில் விசேஷமாக வழிபறிப்பவனும், இளம்பருவமுதல் ஒருபோதும் சத்கருமஞ் சிறிதுஞ்செய்யாதவனுமாகிய குருத்ருஹன் என்னும் பெயருடைய ஒரு வேடன் அநேககாலம் உயிர்வாழ்ந்திருந்தான். இவ்வாறிருக்கையில், சுபகரமான சிவராத்திரி சம்பவித்தது. அது இத்ராத்மனுக்குத்தெரியாது. அம்மஹாசிவராத்திரி தினத்தில், தன் தந்தை-தாய்-மனைவி முதலானார் அவனை நோக்கி எவ்வகையிலாவது ஜீவஹிம்சைசெய்து நமக்கு ஆகாரங் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்க, அவனும் உடனே வில்லையெடுத்துக்கொண்டு அம்புகளுத்தாங்கி மிருகங்களை இம்சிக்க வனத்தையடைந்து அங்குமிக்குந் திரிகையில், இவனுக்குத் தெய்வயோகத்தால் இரையாகும் ஒருமிருகமும் கிடைத்திலது. அப்பொழுது குரூரான்தமனமாக, என்னசெய்வேன்? எங்கே போவேன்? மிருகபக்ஷிகள் ஒன்றாவது கிடைக்கவில்லையேயென்று துக்கமுற்று, வீட்டிற் குழந்தைகளுந் தாய் தந்தையரும் மனைவியும் ஆகாரமின்றி யெவ்வாறு வருந்துகின்றார்களோ? ஆகாரமின்மையால் இவர்கள் என்ன துன்பத்தையடைய நேரிடுமோ? என்று எண்ணமிட்டுக்கொண்டு, எவ்வகையிலேனுஞ் சிறிது ஆகாரந் தேடிக்கொண்டே வீட்டிற்குச் செல்லவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டு, அருகிருந்த தடாகத்திற் சிறிது ஜலம் பருகி, ஓர் பாத்திரத்திற் சிறிது ஜலங்கொண்டு அத்தடாகக்கரையில் தழைத்துள்ள வில்வமரமொன்றிலேறி மறைத்துகொண்டு, காலக்கணிக்கும் நிமித்தமாக அத்தடாகத்திற்கு மிருகங்கள் வரக்கூடும் பரிசமயத்தில் அவற்றைக்கொன்று இரைசெய்துகொள்ளலாமென்றுதெளிவுகொண்டு, மிருகங்களின் வருகையை நோக்கி யிருப்பவனும், மிருகங்கள் எப்பொழுது வரும்? நான் எப்பொழுது அவற்றை யெய்வேன்? என்று நினைத்து, பசியுடன் வருந்தி, இன்று நமக்கு இரையில்லையே, உபவாசமிருக்க நேர்ந்ததே என்று திகைத்து நிற்கையில், முதல் யாமத்தில் பெருத்தகாதத்தோடும் பயத்தோடும் பதத்தானுன்டான இரைச்சலோடும் ஓர் பெண்மான் அங்கே வரக்கண்டு, வேடுவன் மனத்திற் சிறிது சந்தோஷமடைந்தவனும் ஆ ஆ இரை கிடைத்ததென்று அம்பினை வில்லிற் பூட்டுகையில், அவனதரைவால் கையிலிருந்த ஜலபாத்திரத்தினின்றுஞ் சிறிதளவேலும் வில்வமரத்தினின்று சிறிதுவில்வதளங்களும் அம்மரத்தடியிலிருந்த ஓர் சிவலிங்கத்தின்மேல் விழுந்தன. இதனாலேயே அவ்வேடன் சிவராத்திரியில் முதற்காலபூசைசெய்தவனானன்; அப்பூசைசெய்த பலனால் அவனது மகாபாதகங்கள் நசித்தன.

இந்நிலைமையாகையில், வேடன் அம்பினை வில்லிற் பூட்டியதைச் சத்தத்தாலறிந்த பெண்மான் ஐயோ! என்னசெய்வேன்? எங்கேபோவேன்? இவ்வேடன் என்னை எப்படியும் பாணத்தாற் கொன்றழிவான். ஆயினும் ஓர்

உபாயஞ்செய்வேனென்று யோசித்து வேட்டைநோக்கி, வேடா! நீ யாதுசெய்யக்கருதியிருக்கின்றாய்? எனக்கேட்க, வேடுவன் அதற்குக்கேட்டு, மானே! யான் பெருங் குடும்பி, என் குடும்பமுழுதும் ஆகாரமின்றிப் பெருங் கஷ்டப்படுதலின் உன்னைக்கொன்று அவர்களுக்கும் எனக்கும் ஆகாரமாக்கப் போகிறேன் என்று கடினமாகக் கூறக்கேட்டு, பெண்மான் பாபபாத்மகுகிய அக்கிராதனை நோக்கி, அப்படியாயின் யான் தன்னையுயானேன். இப்பிரயோசனமற்ற வடம்பின் மாமிசத்தால் உனக்கும் உன் குடும்பத்திற்கும் சுகமுண்டாகும்பக்ஷத்தில், பரோபகாரத்தால் உளதாகும்புண்ணியத்தை யான் பெறுவேன்; அப்பரோபகாரத்தாற் கிடைக்கும் புண்ணியத்தின் பல்லிலப் பலவருஷங்கள் சொல்லினுஞ் சொல்லி முடியாது. பலவற்ற என் தேகத்திற்குஞ் சாபல்லியங் கிடைத்தது. ஆனால் எனக்குச் சில குட்டிகள் என்னிருக்கையில் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாத்துக்கொள்ளும்படி என்னுடன் பிறந்த ஓர் பெண்மானை நியமித்துவிட்டு, என் கணவனுக்கு அதனையே மனைவியாயிருக்கவும் சாந்திரோக்தமாக ஒப்பித்து விட்டு மீண்டும் வருகின்றேன். என் இறைச்சியாலேயே நீங்கள் திருப்தியடைவதாயின் எனக்கு மிகவும் சுபமே யெனக்கூற, வேடன் கேட்டு அதனைத் தற்றுணம் நம்பாமல், அபத்தக்காலத்தில் யாவரும் சமயோசிதமாகப் பேசுவது வழக்கம் எனக்கூற, பெண்மான் கேட்டு, வசரசா! சத்தியத்தாலேயே சூரியன் முதலிய தேவர்கள் யாவரும் பிரகாசிக்கின்றார்களென்றும், சத்தியத்தாலேயே சமுத்திரம் அணையின்றியிருக்கின்றதென்றும், சத்தியத்தாலேயே இந்திரன் மழை பெய்விக்கின்றானென்றும், சத்தியத்தாலேயே யாவரும் நிலைத்திருக்கின்றனவென்றும் அறிவாயாக. ஜீவஹிம்சை செய்கின்ற நீ என் சொல்லை அதற்றியமாகக்கொள்ளவேண்டாம் ஏன், வேடன் அதனையும் நம்பாமையின், பெண்மான் சொல்லுகின்றது.

வேடனே! யான் சொல்வதைக்கேள். யான் சொல்லியபடி மீண்டும் உன்னிடம் வந்து உனக்கினையாகத் தவறியபக்ஷத்தில் யான் பெரும்பாபத்தை யடைவேன். எப்படி பெண்ணால், வேதவிக்கிரயஞ்செய்த பிராமணன் பெறும்பாபத்திலும், நிரிகால சந்தியாவந்தனங்களைச் செய்யாதவன் பேரும் பாபத்திலும், கணவனைக்கட்டளையை நிராகரித்த மனைவியடையும் பாபத்திலும், செய்நன்றிமறந்து தனக்கு நன்மைசெய்தவனுக்குத் தீமைசெய்தவன் அடையும் பாபத்திலும், சிவத்துரோகியும் விஷ்ணுத்துரோகியு மடையும் பாபத்திலும், குருத்துரோகிபெறும்பாபத்திலும், வேதவிருத்தமான ஆசாரத்தில் நடப்பவன் அடையும் பாபத்திலும், போவேனென்று பலவாறு கூற, வேடன் அதன் வார்த்தைகளைக்கேட்டு நம்பிக்கையுடையவனாய், மானே! நீ இனி உன்னிடத்திற்கு விரைவிற்சென்று திரும்பிவருக என விடைகொடுக்க, பெண்மான் பெருங்களிப்படைந்து, தாகந் தணித்துக்கொண்டு தன்னிடத்தை யடைந்தது. அதுவரையில் முதல்யாமம் முற்றும் வேடனுக்கு நித்திரையின்றிச் சென்றது.

அவ்வாறிருக்கையில், முன்வந்துபோன பெண்மானுடன் பிறந்த மற்றொரு பெண்மான் தன் முத்தாள் தாக விடாயுடன் தீர்பருகச் சென்று நெடுநேரமட்டும் வராமையின், அதனைத் தேடிக்கொண்டும் இளைச்சலிட்டுக்கொண்டும் அக்குளக்கரையையடைய, வேடன் அதனைக்கண்டு குணந் தொனிசெய்தான். அப்பொழுதும் முன் போலவே சிறிது ஜலமும் சிலவில்வபத்திரங்களும் அம் மரத்தடியிலிருந்த சிவலிங்கத்தின் பேரில் விழுந்தன. அதனுல் முன்னேவந்தவனுகிய சிவபெருமானுக்குச் சிவராத்திரிகாலத்தில் இரண்டாம்யாம பூஜைசெய்தவனுனன். அவ்வேடனினை அவனது பாணகர்வத்தைஞ் செய்யும் ஒலியால் உளர்ந்த இனியமான் ஓ வேடா! யாதுசெய்யக் கருதினை? என வினவ, வேடன் முன் அதன் தமக்கைக்குக் கூறியவாறே கூறினன். அது அவன்வார்த்தையைக்கேட்டு மகாசந்தோஷமடைந்து யான் மகாதன்மை. ஓ வனசரசிரேஷ்டா! அரித்தியமான இத்தேகம் பிறவுக்குபகாரமாயின் என்தேகம் பலனடைந்தது. ஆயினும் என்வீட்டில் இளம் பிராயமுள்ளபெய சில குட்டிகளிருக்கலின் அவற்றை என்கணவனுக்கு ஒப்புவித்துவிட்டு யான் மீண்டும் சத்தியமாக வருவேன் எனக்கூற, வேடன் யான் உன் வார்த்தையை நம்பமாட்டேன். தடையின்றி உன்னைக் கொல்லுவேன் என், பெண்மான்கேட்டு வியாதனே! யான் திரும்பவும் உன்னிடம் வராவிட்டால் அசத்திய வார்த்தைகள் கூறினோர் தாம் அநுகாலஞ் செய்த புண்ணியங்களிழுத்து எவ்வகைய பாபத்திற்போவாரோ அவ்வகைய பாபத்திலும், அரக்கடி பூமியைக் காலால் உதைப்பவர் உறும் பாபத்திலும், கற்புடைய மனைவியைவிலக்கிப்பிரஷ்டையான ஓர் சோமத்திரிபைப்புணர்ந்தவன்போகும் பாபத்திலும், லவதோக்தமானவர்காத்தை விடித்துக் கல்பிதமான மார்க்கமாக நடப்பவர்களையடையும் பாபத்திலும், விஷ்ணுபக்தி செய்துகொண்டு சிவநிந்தனைஞ் செய்வோரும், சிவபக்தி செய்துகொண்டு விஷ்ணுநிந்தனைஞ் செய்வோரும் பெறும் பாபத்திலும், தாய்தந்தையர்களது வருஷாப்திகத்தை விடுத்தவன் செல்லும் பாபத்திலும், முதலில் இதவார்த்தைகள் கூறிப்பரிகாரமுண்டாக்கிப் பின்னர் வஞ்சிப்பவர் அடையும் பாபத்திலும் போகக்கடவேன் எனக்கூற, வேடுவன் அதன்வார்த்தைகளைக்கேட்டு அதனிடத்தும் நம்பிக்கையைத்துறவாமானே! நீ அப்படியே உன்னிடத்திற்குச்சென்று அதிசீக்கிரத்தில் வருகவென விடுப்ப, அக்கமான் சத்தோஷித்துத் தன்னிருப்பருகித் தன்னிடத்தையடைந்தது. அதுவரையில் அவ்வேடனுக்கு இரண்டாம்பாமமுற்றும் நித்திரையின்றி நீங்கியது.

இதற்குள் அவ்விருபெண்மான்களுக்குங்கணவனுள்ள ஆண்மான் அவ்விரண்டினையுந்தேடிக்கொண்டு அத்தீர்த்தக்கரையையடைந்தது. பருத்தாயர்ந்திருக்கும் அவ்வான்மானை வேடுவன் கண்டு பெருங்களிப்படைந்து, ஆ ஆ இக்க மாமிசமுடையதாயிருத்தலின் நமக்குத் திருப்தியான ஆகாரமாகுமென்று கருதி வில்லை டங்காரஞ்செய்து, அதனை யெய்ய யத்தனிக்கையில், முன்போலவே அவ்வசமிருக்க ஜலபாத்திரத்திலிருந்து நீரும் ஜல

மும் மரத்திலிருந்து சில வில்வதளங்களும் அம்மரத்தடியிலிருந்த சிவலிங்கத்தின்மேில் விழுந்தன. அதனால் அவன் சிவராத்திரி காலத்தில் மூன்றும் யாமபூஜை செய்தவனுயினன். செளந்தரி முகிவர்களே! பக்தியின்றிச் சம்பவித்த செபல்கட்குங் களிகூர்ந்து பூஜைசெய்தாராக்குரிய சிவபெருமானுடைய கருணையை என்னென்று சொல்லக்கூடும்! வேடுவனது காணைநிந்த வொலியைக்கேட்ட ஆண்மான் அவ்வேடுவனைநோக்கி நீ யாதுபுரியக்கருதினை? என வினவ, வேடன் முன்போலவே கூறினன். அதனைக்கேட்ட ஆண்மான் சந்தோஷித்து, யான் இப்பொழுதுதான் தன்யனுனேன். பூரித்திருக்கும் என் தேக மாமிசத்தினால் உன்னைப் போன்றவர்கள் திருப்தியடைவது பற்றிப் பெரும்பிரயோசனமடைவேன். ஒருவன் தன்தேகத்தைப்பரமார்த்தமாகப் பிறர்க்குபகாரஞ் செய்யாவிடி லவன் பெற்றுள்ளயாவும் நிஷ்பலம். சமர்த்தனுயிருந்தும் பிறர்க்குதவாதவனது சௌரியம் பயன்பெறாது; ஆதலின், என் உடலால் உனக்கும் உன் குடும்பத்திற்குந் தடையின்றித் திருப்தியுண்டாகும். ஆயினும் எனக்குச் சிலகுட்டிகளிருத்தலின் அவற்றையென் பேடகைவிடம் ஒப்பித்துவிட்டு, அவைகட்கு நல்ல வார்த்தைகளாற் புத்தி கூறி நிச்சயமாக வந்து உனக்கு இரையாகின்றேன் எனக்கூற, வேடுவன் அதன் வார்த்தையைக்கேட்டு, ஓ மிருகமே! இதுகாறும் இங்குவந்த மிருகங்கள்யாவும் உன்னைப்போலவே இதவார்த்தைகள்சொல்லி என்னைவஞ்சித்துவிட்டுப்போயின. ஒன்றேனும் இதுகாறும் வரவில்லை. நீயும் அப்படியே ஆபத்துவேளையில் அபத்தமுரைத்துப்போய்விட்டால் எனக்கும் என்குடும்பத்திற்கும் எவ்வாறு ஜீவனம் நடக்கும்? எனக்கூற, ஆண்மான் அவன் வார்த்தைகளைக் கேட்டு, ஓ வனசரா! என்னிடத்திற் பொய்யென்பதே கிடையாது. சத்தியத்தினுலேயே சராசரப்பிரமாண்டமுழுதும் விளங்குகின்றது. பொய்பேசுகிறவன் பூர்வத்திற்செய்த புண்ணிய முழுவதையும் கூனகாலத்திலே நாசப்படுத்துகிறன். இப்பொழுது நீ நம்பாதபக்ஷத்தில் யானேர்பிரதிக்ஞைசெய்கிறேன். அதாவது—சத்தியாவர்தன காலத்திலும், இரதிகேளியிலும், சிவராத்திரி காலத்திலும் போஜனஞ்செய்தவன்பெறும் பாபத்திலும், பொய்ச்சாக்ஷிசொல்லுவோர் அடையும் பாபத்திலும், லவ்த்துவைத்திருக்கும் பொருளை அபகரித்தவன் போகும் பாபத்திலும், சத்தியாவர்தனத்தைவிடுத்த பிராமணன் பெறும் பாபத்திலும், லலாடரூனியமாயுள்ளவன்போகும் பாபத்திலும், பிறர்க்கு உதவிசெய்யாத மகா சமர்த்தனுயுள்ளவன் பெறும் பாபத்திலும், பசுப்புணர்ச்சி செய்தவன் பெறும் பாபத்திலும், பர்வகாலத்திலும் விரதகாலத்திலும் புசிக்கத்தகாத பதார்த்தங்களைப் புசித்தவன் பெறும் பாபத்திலும், யான் வராதபக்ஷத்திற் போகக்கடவேன்—எனக்கூற, ஸ்யாதன் அதன் வார்த்தையில் நம்பிக்கையுடையவனுய்ப் போய்வருகவெனவிடுப்ப, ஆண்மான் அகமகிழ்ச்சியோடு தீர்பருகித் தனதிட்டத்தை யடைந்தது. அப்பொழுது அம்மூன்று ஞ்சுகித்து நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லிக்கொண்டவைகளாய், சத்தியபாசத்தாற் கட்டப்பட்டவைகளாய், அவசியமும் அவ்வேடுவனி

டம் போகவேண்டுமென நிச்சயித்துக்கொண்டு, குட்டிகளை நல்ல வார்த்தைகளால் இதமாக அவ்விடத்திலேயே விடுத்துப் புறப்பட்டன.

அப்பொழுது அவற்றுள் மூத்தபெண்மான் தன்கணவனைநோக்கி, இக்குட்டிகள் அநாதரவாகவிருத்தலின் எவ்வாறு ஜீவிக்கும்? யான் முதலில் வருகிறேனெனப் பிரதிக்ஞைசெய்துவந்தமையின் யான்மட்டுமே போகவேண்டும். நீங்கள் இங்கேயிருக்கவேண்டும் எனக்கூற, அதனைக்கேட்ட இளைய பெண்மான் யான் உங்களிருவர்க்கும் பணிவிடை செய்யவேண்டியவளாயிருக்கிறேனதனின் யான் அவனுக்கிரையாகப்போகிறேன். நீங்கள் இருக்கலாம் என, ஆண்மிருகம் அவ்விரண்டின் வார்த்தைகளையுங்கேட்டு, யான் ஒருவனே யவனிடம் போகின்றேன். நீங்களிருக்கலாம் என, பெண்மான்கள் ஐயோ! நீயிறந்தால் நாங்கள் விதவைத்தன்மையடைந்து ஜீவிப்பதைக்காட்டிலுங் கஷ்டம் வேறுண்டா? என்று கூறி, தமது குட்டிகளைத் தக்கபடியே சில மான்களிடம் விடுத்து, மூன்றும் ஒன்றுகூடி அவ்வேடுவனிருக்குமிடத்திற்கு வந்தன. வேடுவனும் அம்மான்கள் மூன்றும் எப்பொழுது வருமோவென்னும் எண்ணத்துடன் வழிபார்த்துக்கொண்டிருந்தான்.

சத்தியபாசத்தாற் கட்டப்பட்டு வருகின்ற அந்த மூன்று மான்களையுங்கண்ட வேடன் சந்தோஷப்பட்டு, ஆ! இம்மிருகங்கள் நம்மிடத்தே சொல்லிப்போனது போல திரும்பி வந்தனவென நினைத்துத் தனது வில்லை டங்காரஞ்செய்தனன். அவ்வாறு டங்காரஞ்செய்கையில் அவன் கையிலிருந்த ஜலபாத்திரத்தினின்று கிறிது ஜலமும் அம்மாத்தினின்று சில வில்வபத்திரங்களும் அம்மரத்தடியிலிருந்த சிவலிங்கத்தின்மேல் விழுந்தன. அதனால் அவன் சிவராத்திரி காலத்தில் சதுர்த்தம் யாம பூஜை செய்தவனுனன். அவ்வேடுவனுடைய பாபங்கள் அப்பொழுதே அவனைவிட்டொழிந்தன. இதற்குள் அம்மிருகங்கள் மூன்றும் ஓ வனசரா! எங்கள் மாமிசங்களை விரைவில் உனக்கு உணவாக்கிக்கொண்டு எங்களைக் கிருதார்த்தர்களாக்கவேண்டும் எனக்கூற, வேடன் அவற்றின்வார்த்தைகளால் மிக்க வியப்படைந்து, தான் அன்றையதினம் அநுபாலனஞ்செய்த சிவபூஜாபலத்தினுல் நிர்விஷஞானமடைந்து ஆஹா! ஞானத்தினாலிது இம்மிருகங்கள் தமது தேகத்தால் அன்னியருக்குஞ்செய்து எவ்வளவு தன்யமாகின்றன. யான் மதுஷ்யஜன்மமெடுத்து யாது புண்ணியந் சம்பாதித்தேன்? பிறரைத் துன்புறுத்தி என் உடலையும் என் குடும்பத்தையும் போஷித்தேன். பிறரை வருத்தியே உயிர்வாழ்ந்தேனக்கு என்ன கதி கிடைக்குமோ? கான் எவ்வெக் கஷ்டங்களை யநுபவிப்பேனே? இத்தகாரத்தால் நற்குணமான பாபங்களைச் சம்பாதித்தேனல்லவா? இதுகாறுஞ்செய்தகருமங்களையெல்லாம் செய்து இப்பொழுது தள்ளிக்கின்றேன். என்வாழ்க்கை நிந்திக்கத்தக்கது எனத் தனக்குள்தானே சொல்லிக்கொண்டு, அவற்றை யெய்துமாறு தன் வில்லிற் சந்தித்த பாணத்தை, இனி அவற்றைக்கொல்லப்படாதென்னுங் கருத்துடன் உடனே வில்லினின்று எடுத்துவிட்டு, ஓ உத்தமமான மிருகங்களே! நீங்கள் பரோபகாரஞ்செய்துவந்தமை

யின் தன்யர்களாயிருக்கின்றீர்கள். உங்களுக்கொல்லமாட்டேன். இனியுங் கள் வாசஸ்தானத்தையடையுங்கள் எனக்கு துணையில், கடுமனமுடையவனு யிருந்து திவ்யஞானத்தை யடைந்த அவ்வேடனுற் பூஜிக்கப்பட்ட சிவபெ ருமான் அவனதுபூஜைக்கு மனமிகமகிழ்ந்து, எக்காலமுங்கிடைக்காத ஞானிக ளால் தியானிக்கப்பட்ட ஜீவந்முக்குகளோடும் தமது திவ்யதிருவுருவ தரிசனங்கொடுத்து, தயாசமுத்திரமான சிவபெருமான் யாதுவரம் வேண்டு மோ அதனைக் கேட்டுக்கொள்; உன் விஷயத்தில் தயையுளடையவனாயிருக்கி றேன் என, வியாதன் திவ்வியஞானமுண்டைய ஜீவன்முக்தனுய், சர்வேசுவர னுடைய திருவடிகளிற் சாஷ்டாங்கமாகப் பணிந்து எல்லாப் பாபங்களும் என்னுற்செய்யப்பட்டுள்ளன. அவற்றை கூடியிந்து எளியேனிய னுக்கிரகிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்க, மகாதேவனுகிய சிவபெருமான் அவனுக்குக் குகன் என்னும் பெயரளித்து, உன் மனத்திற்கருதிய சுகபோகங்களை யடை வாய்: நீயொரு இராஜகானியையுங்காக்க வல்லவனுவாய்: உன்வமிசம் விரு த்திபாகும். தேவர்களாலேயுந் துதிசெய்யத்தக்க திவ்யமான கீர்த்தியை யடைவாய். அயோத்திமன்னனுகிய தசரதன் மதலையாய் விஷ்ணுவே இரா மாவதாரஞ்செய்கையில் உன்னிடத்தில் வந்து உன்னுற்பூஜிக்கப்பட்டுச்செல் லுவன். தேவர்கட்கும் முனிவர்கட்கும் கிடைத்தற்கருந் துர்லபமான முக்தி யைப் பெறுவாய். உன் வமிசத்தவர்கள் என்னைப் பூஜைசெய்யும் விதத்தை வகித்து மகா பலவான்களாயிருப்பார்கள் என வரங்கொடுத்தருளினர்.

இவ்வாறிருக்கையில், அந்த மான்களின் குட்டிகளும் தமது தாய் தந்தைகட்குண்டாகுங் கதியே தமக்குஞ் சம்பவிக்கட்டுமென உடனே அவ் விடம் வந்து சேர்ந்தமையின், அந்த மான்களுக்கும் குட்டிகளுக்குஞ் சிவ தரிசனங் கிடைத்தது. சிவதரிசனத்தால் அம்மிருகங்கள் சமுசாரவிருப்பத் தையும் மிருகதேகத்தையுமொழித்து திவ்வியதேகம் பெற்று அங்குவந்திற ங்கிய விமானத்திலேறித் தமது குட்டிகளுடன் சுவர்க்கலோகத்தையடைந் தன. சர்வேசுவரனுகிய சிவபெருமான் அவ்விடத்தில் அற்புதரூபத்தில் வியாதனுகிய வேடுவனைப் பூஜிக்கப்பட்டமையின் வியாதேசுவரனென்னும் பெ யராயண்டாகி எழுந்தருளியிருக்கின்றனர். அக்குருவேடனும் அதுமுதல் அகண்ட ஐசுவரியமடைந்து இராமமூர்த்தியைத் தரிசித்துப் பலகாலங்களித் து, ஆயுள்முடிவிற் சிவசாயுச்சியத்தை யடைந்தனன்.

அஜ்ஞானத்தாலாவது சிவராத்திரி விரதத்தை யாசரிப்பவர்கள் சிவசாயுச்சியத்தை யடைவதனுல் ஞானவான்களாய்ப் பக்தியோடு அவ்விர தத்தை யாசரித்தவர்கள் சிவலோகத்தையடைவார்களென்பதைச் சொல்லவே ண்டிய அவசியமேயில்லை. எல்லாச்சாஸ்திரங்களும் தருமங்களும் விரதங்க ளும் தீர்த்தயாத்திரைகளும் தானங்களும் பல்லாண்டும் சிவராத்திரி விரதத் துடன் விசாரிக்கையிற் சமானமாகமாட்டா. ஆதலின் மிக்க சுபகரமான இச்சிவராத்திரிவிரதத்தை இதத்தை விரும்புவோராகிய நீங்கள் ஆசரிக்க

வேண்டியது. இந்த விஷயத்தைப்பற்றி இதுகாறுஞ் சொல்லியதேயன்றி, பாபத்தை யொழிக்கத்தக்க வேறொருசரிதமும் உங்கட்குச்சொல்லுகிறேன் என்று வேதமுனிவர் சௌனகாதியவரிகளுக்குக் கூறத்தொடங்கினர்.

வேதவேன் சிவராத்திரிபலனை யடைந்தது
முற்றற்று.

ஏழுபத்தைந்தாவது
வேதநிதி சிவராத்திரிபலனை யடைந்த அத்தியாயம்.

வேதமுனிவர் சௌனகாதியவரிகளைநோக்கிக் கூறுகின்றார். ஓ முனிவர்களே! கண்டோர் கண்ணுக்கு ரம்மியமான அவந்தி பட்டணத்தில், உயர்குலப்பிறப்பும், வைதிகஆசாரமும், மக்களகரமான செயல்களும், வேத சாஸ்திரங்களிற் பூரணஞானமும், கல்வி கேள்விகளிலும் போதிப்பதிலும் வன்மையும் உடைய ஒரு திகழ்திருந்தனர். அவருக்கு சற்குலமும் பதி பக்திபுங் கணவன் கட்டளைப்படி ஒழுகுகுணமுமுடைய ஓர் மனைவியிருந்தனள். அவர்கட்கு வேநிதி-வேதநிதி யென்னும் இரண்டு புதல்வரிருந்தனர். அவர் களில் மூத்தவனுகிய வேநிதி தந்தைதாய்க்குப் பணிவிடை செய்து வரு வதில் விருப்பமிக்குடையவனுயிருந்தான். இளையவனுகிய வேதநிதி வேத முதலிய எல்லாவற்றிலும்வல்லவனுயினும், ஓர்வேசையுடன் கிரீடிக்கவேண்டு மென்னுங் கவலைகொண்டவனுய் அவ்வேசை வீட்டிலேயே எப்பொழுதும் ஸ்நான போஜனாதிகள் செய்பவனுயினன். இதனையறிந்த தந்தை தாய் தம யன் முதலானுர் இவனைக்கண்டித்து அடிக்கடி வற்புறுத்தியும் அவன் மகா பாபியும் துராத்மாவுமாதலின் தன்னியற்கையை விட்டிலன். இவ்வாறிருக் கையில், ஒருநாள் அங்கதத்து மன்னவனுக்கு அத்திக்கிரிபோரில் தயை யுண்டாகி விலையுயர்ந்த இரத்தினமயமான அங்குள்யாபரணம் [மோதிரம்] ஒன்றினை அவன்வெறுமதிசெய்ய, அத்திகிரிதன் அதனைத் தன்வீட்டிற்குக்கொ ண்டுபோய், தன் முத்தமகனுக்குத் தெரியாமல் மறைத்துவைக்கவேண்டு மென்று மனைவியிடங் கொடுத்தனர். அவ் வமையும் அதனை யவ்வாறே மறைத்துவைக்க, அத்தினபுரித்த இளையமுமான் அதனை யபகரித்துக்கொ ண்டுபோய் அன்றிரவே தன் வேசைக்குக் கொடுத்தனன். அவ்வேசையோ அதனையணிந்துகொண்டு ஒருநாள் அரசன்சமுகத்தில் நிருத்தஞ்செய்யச்செ ல்ல, அரசன் அதனைக்கண்டு இஃதியாம் திகழிதருக்குக் கொடுத்ததாயிற்றே யென்னுளைக்க, அடிபெண்ணே! விலையேறப்பெற்ற இம்மோதிரம் உனக்கு யாராம்கிடைத்தது? எனவினவ, அவள் உண்மையுரையாமையின், அரசன் அவ னைப் பயமுறுத்திக்கேட்க, அவள் கடைசியாய் வேதநிதி தனக்குக் கொடுத்த வனென நிச்சயத்தைவெளியிட, அரசன் பலவந்தமாக அவ்வணிவையவாங்கித் தன்னிடம் வைத்துக்கொண்டு மறுநாள் விடிந்தவுடன் திகழிதனைவருவித்து, யான் உமக்குக்கொடுத்த ஆபரணத்தை யென்னிடஞ் சிறிதுநேரங்கொடும்: மீண்டும் பெறுவீர் எனக்கேட்க, திகழிதர் தன்வீட்டையடைந்து மனைவியை

நோக்கி, யான் உன்னிடங்கொடுத்துப் பத்திரப்படுத்திவைக்கச்சொன்ன மோதிரத்தைத் தருகவென, அவர்மனைவி அதைவைத்தவிடத்திற்காணுமல், திரும்பிவந்து தன்கணவனிடம் அதுகாணப்படவில்லையென, தீட்சிதர் துக்கித்து அரசனையடைந்து மன்னவா! அப்பணி அகப்படவில்லை. அஃதெவ்வாறு யதோ அறியேன் என, வேந்தன் நடந்த விர்த்தாந்தத்தை வெளியிட, தீட்சிதர் தன்வீடுசேர்ந்து, மனைவியைக்கண்டித்து, இவ்வளவு அஜாக்கிரதையா? என்று கோபித்தனர். பின்னர் தீட்சிதரும் அவர் மனைவியும் வேதநிதியை நீயினியிங்கிருக்கப்படாது. பொள்ளெனப் புறப்பட்டுப்போ. உன்னுற் பிரயோசனமில்லை. நீ குலநாசகன் என்று தூஷித்துத்துறத்திவிட, அவன் புறம்பேவந்து ஒருநாள் வெளியேயிருந்து, பிக்காசங்களால்வருந்தித் தன் தாசியையடைய, அவளும் இனியிவனுற் பொருள்வராதென வுணர்ந்து நீத்த அநாதரவாயிருந்தனன். அந்தத்தினம் உலகமுழுவதுங் கொண்டாடத்தக்க சிறந்த சிவராத்திரிவிரதகாலமாயிருந்தது. அன்று அக்கரவாசிகளிற் சிலர் சிவராத்திரிவிரதமிருந்து விசேஷமான பூஜையைச்செய்ய விரும்பிப் பலவித நிவேதன முதலியவற்றை உடன்கொண்டு சிவாலயத்துட் செல்ல, வேதநிதி கண்டு இவரோடுசென்றால் நாம் எவ்வாறுவது இவர்களை வயப்படுத்தி ஆகாரம்வாங்கிப் புசிக்கலாமென்று கருதிப் பின்தொடர்ந்துசென்று சிவாலயத்திற் பெரும்பகியோடிருந்து, அவர்கள்செய்யுஞ் சிவபூஜையைப்பார்த்துக்கொண்டு, அன்னபகூஷணத்திலேயே அவாவுடையவனுய், எப்பொழுது இவர்கள் போவார்கள்? எப்பொழுது அன்னம்பட்சிப்பேன்? எவ்வாறு இவ்வன்னத்தைப்பெறுவேன்? என்றெண்ணித் தன் விருப்பங் கைகூடக் கண்விழித்துக்கொண்டிருந்தான். சிவபூஜைசெய்த ஜனங்கள் யாவரும் பிரதம யாம பூஜை முடித்து நிருத்தகீதம் முதலியன வியற்றிக் தமது வாசஸ்தலத்தை யடைந்தனர். சிலபரிசனர்கள் அவ்விடத்திலேயே துயின்றனர். அங்குள்ளார் நித்திரைபோவது கண்ட வேதநிதி, சிவபெருமானுக்கு நிவேதித்து அங்குவைத்திருக்கும் பக்குவான்னத்தை இச்சமயத்திலேதான் கொண்டுபோகவேண்டுமென்று, சிவலிங்கத்தருகே மெல்லநடந்து அங்குள்ள தீபங்கள் பிரகாசக் குறைவா யிருந்தமையின் அவை சண்கட்குப் புலப்படாததால், அவற்றைக் களவாடவேண்டித் தன் உத்தரீயத்திற் சிறிதுகிழித்துத் திரித்துத் தீபத்தைத் தூண்டிவதெனன்றிப் பரார்த்தத்தைக்குறித்துச் சிறிதஞ்செய்ததன்று. இவனது தீபாரோபணத்தால் சந்நிதியிலிருந்த இருள்முழுதும் ஒழிய, தனக்கு வேண்டிய ஆகாரங்களை எடுத்துக்கொண்டு புறம்பேபோகையில், அங்கே சயனித்துக்கொண்டிருந்தகோயிற்சேவகரின்கால்களை மிதித்ததனால், துயின்றோர் சிலர் விழித்து, இவன் யாவன்? திருடன்! திருடன்! எனச்சொல்ல, வேதநிதி அதனைக்கேட்டுப் பயந்து ஓடுகையில், சிலர் இவனைப் பின்தொடர்ந்து கச்சை பிடித்தெல்ல, இராசசேவகர்கள்கேட்டுத் திருடனைப் பின்தொடர்ந்துபிடிக்கையுத்தனித்து அவன் அகப்படாமையின் பாணப்பிரயோகஞ்செய்ய, அது வேதநிதியின் உடலிற்பட்டதனியதால் அவன் நிலமிசை வீழ்ந்திறந்தனன்.

அவ்வேதியன் அஜ்ஞானத்தாலேயே சிவராத்திரி விரதமும் ஜாகரணமும் இருந்தவனுன். சர்வதயாளுவான சிவபெருமான் வேதநிதியை விரதபூர்த்தி செய்தவனுக அங்கீகரித்தனர். அப்பொழுது யமதூதர்களும் சிவகணங்களும் வந்தனர். அவ்விருதிறத்தவரும் இவனைக் கொண்டுபோக வேண்டுவது யாங்கள் யாங்களென்று சம்வாதஞ்செய்தனர். அதில் சிவகணங்கள் யமதூதர்களைநோக்கி, நீங்கள் என் இங்கே கண்டதர்களாக வந்தீர்கள்? ஏன, யமதூதர்கள் சிவகணங்களை நோக்கி, அணுவளவும் புண்ணியஞ் செய்யாதவனும் மகாபாபியுமான இவனுக்காக நீங்கள் ஏன் வந்தீர்கள்? என, சிவகணங்கள் இவன் எவ்வளவு பாபவானயினும் சிவராத்திரிவிரதமிருந்து ஜாகரணஞ் செய்ததாற் புனிதமாயினன் என, யமதூதர்கள் யமதர்மனிடஞ் சென்று கூற, யமன் நிஜமே! அவன்பாபங்கள் நசித்தனவென்று சிவகணங்களைப்பணித்து, வேதநிதியைநோக்கி, நீ பாக்கியவானுகவென ஆசீர்வதித்தனன். அதனால் வேதநிதி மறுபிறவியில் களிங்கதேசத்மன்னவனுகப்பிறந்து சிவபூஜாபக்தியை விசேஷமாகப்பெற்று, சிவராத்திரிவிரதத்தை எக்காலமும் ஆசரித்து, தனது ராஜ்ஜியமுழுதுஞ் சிவாலயப்பிரதிஷ்டைகளும், சிவாலயதீர்த்தயாத்திரை பிரமோற்சவாதிகளுஞ் செய்வித்து மோக்ஷமுற்றனன்.

பக்தியினிற் சிவராத்திரி விரதத்தால் இவ்வளவு இஷ்டபோகங்களும் மோக்ஷமும் பெறுவாயின், பக்தியோடு இவ்விரதத்தை ஆசரித்தவர்கள் சிறந்த முக்தியை அடைவார்களென்பதுஞ் சொல்லவேண்டுமோ? திருடுவதற்காகச் சிவாலயத்திருந்த தீபத்தைத் தூண்டியதால் இப்பலன் கிடைக்கின், ஞானத்தாற் சிவாலயத்தில் தீபம்வைத்தவர்கள் சுபமான மோக்ஷமடையார்களா? இக்காரணங்களால் இச்சிவராத்திரியைப்போன்ற வேறொரு விரதமில்லை. சிவபெருமானைக்காட்டிலும் ஒருவன் தயாளுவானவனும் பரிசுத்தமாக்குவோனும் இலன். முனிவர்களே! நீங்கள் கேட்ட விஷயத்தைச்சொன்னேன். மோக்ஷத்தைக்கொடுக்கத்தக்கது இவ்விரதமே. சிவபெருமான் ஒருவனே பரத்துவப்பொருள். அச்சர்வேசுவரனை முக்திஸ்தானமாக விளங்குபவன். அப்பெருமானை முக்திஸ்வரூபன். இந்தச் சிவராத்திரி விரதத்தினுஞ் சிறந்ததும் சமானமானதும் ஒருவிரதமுமில்லையென் றுஸூதமுனிவர்கூறினர்.

வேதநிதி சிவராத்திரிபலனை யடைந்தது

முற்றிற்று.

எழுபத்தாறுவது

முக்திலக்ஷணமும் சிவரூபமுமுரைத்த அத்தியாயம்.

ஸநகாதிமுனிவர்கள் ஸூதமுனிவரை நோக்கி, ஸ்வாமீ! முக்தியென்று தேவரீர் கூறினீராதலின், அஃதெவ்வகையது? அஃதெவ்வுலகத்தை யுடையது? இதனை எமக்குமுழுவிவரமாகக் கூறவேண்டுமெனக் கேட்க, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். முனிவர்களே! நீங்கள்கேட்ட

முக்தி யென்பது சாரூப்பியம் சாலோக்கியம் சாந்நித்தியம் சாயுச்சியமென்னு நான்குவகை. அம்முக்தி இவ்விரதத்தினாலேயே கிடைக்கும். அம்முக்தியை யாவர்தானடையவேண்டுமெனின்—உலகங்களையெல்லாந் திருஷ்டித்து அவற்றை இரட்சித்துச்சங்காரித்துத் தன்னிடத்திலடக்கி, அவற்றை விசித்திரமாக விஸ்தரிக்கச்செய்யுஞ் சிவபெருமானேயே யாம்— என்று புத்திமான்களால் சாகாசந்திர ஞாயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சிவபரம் பொருளே விஷ்ணுமூர்த்தி-பிரமதேவர்-சனத்குமாரர்-காசதர்- மார்க்கண்டேயர்-ஸுகர்-பிரமபுத்திரர்-வேதங்கள் முதலிய யாவருமறிவார். ஆனால் வேதங்கள்மாத்திரம் அபரோக்ஷமாக, [ஸத்யம் ஜ்ஞாந மநந்தம்ப்ரஹ்ம | சச்சிதானந்த ஸ்வரூபன் சிவபெருமான்] என்று சொல்லுகின்றன. நிர்க்குணமும், மாயாரஹிதமும், நிரஞ்சனமும், நித்தியமும், செம்மை - பசுமை-வெண்மை-கருமை முதலியநிறமற்றதும், மநோவாக்குக் காயங்கட்கதீதப்பட்டதுமாகவுள்ளது சிவபரம்பொருள். அப்பொருள் ஆகாயத்தைப்போலவே சர்வமூர்த்தத்திலும் வியாபித்துள்ளது. அது ஸ்தூலஸூக்ஷ்மங்களாகாது. சுகதுக்கங்கட்கதீதப்பட்டது. மாற்சரியமற்றது. நிர்விகாரமானது. இகலோகத்திலும் பரலோகத்திலும் அப்பரம்பொருளே அர்ச்சிப்பதனாலேயே ஆதன் பிறப்பு யாயெமுக்திகைகூடுமாதலின், சர்வேசவரனுடைய சேவடியை முதற்பிரார்த்தத்திற்காகவே செய்யத்தக்கது. நீங்கள் கேட்டவிஷயத்தைக் கூறினேன். இதனைக்கேட்டவர்கள் சகலபாபங்களினின்றும் நீங்குவர் என்பதற்குச் சந்தேகமில்லை. இதனை விஸ்தரணமாகச் சொல்லப்புகுந்தால் ஆதிசேடனாலுஞ் சொல்லிமுடியாது என்று ஸூதமுநிவர் திருவாய்மலர்ந்தருளினர்.

முக்திலக்ஷணமும் சிவரூபமு முரைத்தது

முற்றிற்று.

எழுபத்தேழாவது

சிவபெருமானது நித்தியத்துவமுரைத்த அத்தியாயம்.

சௌநகாதிமுநிவர்கள் ஸூதமுநிவரைநோக்கி, ஸ்வாமீ! சிவபெருமான் யாவர்? விஷ்ணு என்பவர் யாவர்? உருத்திரன் என்பவர் யாவர்? இவர்களில் இவ்வுலகங்கட்கெல்லாம் கர்த்தாவாக உள்ளவர் யாவர்? நிர்க்குணஸ்வரூபியானவர் யாவர்? நிர்க்குணசொரூபியாயிருந்தும் பஞ்சகிருத்தியகாரணமாகக் குணசொரூபியாய் உலககாரியங்களை நடத்துகிறவர் யார்? இவ்விஷயங்களில் அடியேங்கட்குச் சந்தேகமிருத்தலின் இவற்றை யெங்கட்கு விளக்கியருளவேண்டுமெனக்கேட்க, ஸூதமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

ருஷிகளே! நிர்க்குணஸ்வரூபியுள்ள எந்தப்பரமாத்மாவால் இந்த உலகங்கள் தோன்றினவோ அந்தப்பரமாத்மாவே சிவபெருமான் என உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. அவ்வகைய பரமாத்மாவினின்றும் இருவரும் படைக்கப்பட்டனர். புருஷனுகிய விண்டுவின் சந்தோஷத்தாலுண்டான ஜலமானது

சாசாரப்பிரபஞ்சமுழுதும் வியாபகமாகையில், விஷ்ணு தவஞ்செய்தினைத்து அந்த ஜலத்தில் நித்திரை செய்தனர். அந்த ஜலசயன முதல் புருஷனுக்கு நாராயணனென்னும் பெயராயிற்று. பிரகிருதிக்கும் நாராயணியெனப் பெயர் வந்தது. அவ்விஷ்ணு யோகநித்திரையிலிருக்கையில் அவருடைய உந்திக்கமலத்தினின்று பிரமன் தோன்றிப் பலகாலந் தவஞ்செய்து தனக்குக் காரணபூதனான விஷ்ணுவைக் கண்டனன். அவ்விஷ்ணு, வைகுண்டபதவியிலிருந்து, மகாப்பிரளயத்திற் சிவபெருமானிடத்தில் முக்தி கைகூடுவர். அவ்வகைய விஷ்ணுவும் பிரமனும் ஜகத் கர்த்தாக்களென்று விவாதமடைந்துபொழுது பரமேசுவரன் அவர்கட்குக்காட்டியவுருவமே மகாதேவருரு. இம்மகாதேவனுடைய தியோகத்தால் தோன்றிய வடிவம் உருத்திரன். அந்தமூர்த்தமே நியானியோக்கியமான சிவரூபம். மற்றுத் திருமாலுஞ் தேவர்கள் பிரகிருதி சம்பந்தமானவர்களாதலின் காலாநுக்கிரமமாக காசமடைந்தக்கவருந்தவஞ்செய்து முக்தியடையவேண்டியவருமாவர். உருத்திரன் அப்படி காசமடையாமற் சிவபெருமானிடத்திலே ஐக்கியமாவான். பிரமாதி தேவர்கள் இருடிகளானவர்கள் யாவரும் உருத்திரனைத் தோத்திரஞ்செய்யவேண்டியவர்களேதவிர, உருத்திரமூர்த்தி ஒருவனையுஞ் சேவிக்கத்தக்கவரல்லர். ஆனால் பிரமவிஷ்ணுக்களுடன் கூடி உலககாரியங்களைச் செய்துவருகிறார்.

பிரமவிஷ்ணுக்களைப் பக்திசெய்பவர்கள் அவர்களிடத்தைக்கியமுற்று, அத்தேவர்கள் காலக்கிரமத்தில் முக்திபெறும்போது அவர்களோடு முக்தியடைவார்கள். உருத்திரபக்திசெய்பவர்கள் இதரதேவதைகளையில்லாமலே தகனஞ்சிவசாயுச்சியம் பெறுவரென "ஸ்ருதம்-பிரதானமுதலிய" வேதங்கள்முறையிடுகின்றன. ஹிரண்ணியகர்ப்ப பிரதிகாதிவகையிற் காணப்படும் உலகத்திலுள்ளவர்கட்கு அஜ்ஞானம் பல திறப்படும். விஜ்ஞானமோ நித்ய சுத்த புத்த முக்த சிவ ஸ்வபாவத்தால் பல திறப்பட்டதல்ல. ஆனால் அகண்ட ஏகரஸமாக ஒன்றியாயிருக்கும். இவையாவும் சிவஸ்ரூபமே. இதை விசாரிக்கவேண்டுவதில்லை. சர்வேசவரனுக்குச் சதாசிவன் என்னும் பெயர் எவ்வாறுகிடைத்தென்னில், சிவபெருமானே சிருஷ்டிக்கு முற்பட்டிருந்தவர் "ஸுதேவஸஸர்ஜ்ஜாதி" லயத்திற்குப் பிற்காலத்திலும் இருக்கிறார். "ஸவாயவேநுதேவாகதிவிஸ்ருதிஷேஷு" சிருஷ்டிக்குப் பிற்காலத்திலும் இருக்கிறார். "யஸ்ஸர்யம்கபுஜிஸம்விஸ்ருஜ்" ஆதலின் அச்சதாசிவனென்னும்பெயர் நிர்க்குணராகிய சிவபெருமானுக்குக் கிடைத்தது. முதலில் தனது நிசவாசத்தாலுண்டான வேதமென்னும் பெயரையுடைய வாக்கையும் பலவகைப்பட்ட மந்திரங்களையும் தியானத்தையும் பூஜையையும், "ஸோகங்ஸர்வவித்யாகாம்" முதலிய ஸ்ருதிகளால் ஸர்வ வித்தைகளுக்கும் பிரபுவான சிவபெருமான், தன்னும் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சமுழுதும் நல்ல நிலைமையில் வரவேண்டுமென்னுங் கிருபாகோக்தமுடையவராய் விஷ்ணுமூர்த்திக்குக்கொடுத்தனர். ஆதலின் ஜகத்திற்குச் சிருஷ்டித்துவமும்,

இரகூஷணத்துவமும், சாட்சியும், சம்ஹாரத்துவமும் ஜகதீசுவரருடைய சிவபெருமானிடத்திலேயேயுள்ளனவன்றிப் பிறரிடத்தில்லை. விஷ்ணுவாதி இராதேவர்கட்குக் காலனாயுள்ளதன்றிச் சர்வேசுவரனை சிவபெருமானுக்குக் காலகணிதமிடையாது. சிவபெருமானுக்கு மஹாகாலன் எனப்பெயர். இவர் கட்டளைப்படி காலம் நடப்பதன்றி, அவரிவரையொன்றுஞ் செய்யத்தக்கதன்று. எல்லாவற்றிற்கும் இவரேகாரணபூதர். விஷ்ணுவாதியர் காரியபூதர். சிவபெருமானுடைய இச்சையாலே சிருஷ்டிதிதிசங்காரமுலியதிருத்தியங்கள் நடக்கும். சிவபெருமானுக்குக் காரணபூதரும், சிவபெருமானைச் சங்கரிப்பவரும், சிவத்துவேஷியாயிருப்பவரும் ஒருவருமிலர். ஒரு விதையானது இலை இனை பூ காய் முதலிய பல ரூபங்களாகக் காணப்பட்டுக் கடைசியில் யாவுமழிய அவ்விதையே மிகுதியாயிருக்கின்றதுபோல இவர் தமக்குத்தாமே காரணமாகவும்ஒன்றியாகவுமிருந்தும், சிருஷ்டியாதிகாரணமாக அநேகராய், பிரளயகாலத்தில் ஒன்றியாகின்றனர். இதனை ஞானிகளுணர்வார்கள். அவர் மனிதவாக்குகளுக்கெட்டாதவர் எனக்கூறிய ஸ்ரீதருமிவனாதேரைக்கி,மஹரு ஷிகள்-சிவபெருமானே பிரபஞ்சமென்றும், பிரபஞ்சமே சிவபெருமானென்றுங் கூறினீர். இதனை யாங்கள் நன்குணர்ந்து சிவசாயுச்சியத்தை யடைய வேண்டி, அநேதங்கட்குப் புலப்படிமாறு திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றனர்.

சிவபெருமானது நித்தியத்துவ முணர்த்தது.
முற்றிற்று.

எழுபத்தெட்டாவது
ஞானப்பிரகரண முணர்த்த அத்தியாயம்.

ஸ்ரீதருமிவர் சௌனகாதிமுனிவர்களைநோக்கி, நீங்கள் திருதகிருத்தியர்கள். மகாபுண்ணியர்கள். யான் பூர்வத்திற் கேள்விப்பட்டது போலவே சொல்கின்றேன் கேளுங்கள்—ஒருகாலத்தில் பிரமதேவர் நாரதர் லகத்குமார் வியாஸர் கபிலர் முதலியோர் சபைகூடி நிச்சயித்துக்கொண்ட விஷயமாவது—ஞானமு ஞானம் ஜ்ஞேயம் இம்மூன்றும் பிரமாதிக்குணபரியந்தமாகக் காணப்படும் உலகமுழுவதும் சிவஸ்வரூபமே; பிரிதில்லை. இச்சையுண்டானபொழுது உலகஞ் சிருஷ்டிக்கப்படுகிறது. சுன்னம் படைக்கப்பட்ட சமஸ்தப் பிரபஞ்சத்தையும் தானே சாட்சிபூதமாகப்பார்த்துக்கொண்டிருக்கிறார். பிரபஞ்சவாசிகள் யாவரும் மாயாசகிதரானதனின் சிவபெருமானே ஒருவருமதிகிலர். சூரியன் ஆகாயத்திலிருந்து ஜலாதிகளிற் பிரதிபிம்பித்தவாறு எல்லாவற்றிலும் பிரவேசித்திருக்கிறார். நிச்சயமாக விசாரிக்கையில் பிரவேசமே யிடையாது. மீண்டும் தாம் தாமேயாக விளங்குகிறார். அஞ்ஞானத்தால், அனிதமென்பது மனப்பிரமாந்தியாம். லவலேசுக சான்றிலக்களிலே அனிதங்கூறப்படுகின்றது. சிவபெருமானுடைய அமிசமே ஆன்மாக்கள். அவை மலசம்பந்தத்தால் சிவனெனப்படும். ஜீவஸ்வரூபமான ஆன்மாக்களும்

பதார்த்தத்தைப் பரமாத்ம ஸ்வரூபமெனத் தெரிந்துகொண்டவன் மலரகிதனுய்ச் சிவஞானிசாதனசம்பத்துகளைடைந்து சிவரூபமடைகின்றான். எங்கும் வியாபகமாயிருள்ள சிவபெருமானே எல்லாப் பிராணிகளிலும் வியாபித்து சேத்தறுசேதனங்கள் யாவுந் தாமேயாகி விளங்குகின்றார். விறகுகளிலெல்லாம் சிருஷ்டிபிருந்தும் மதிக்கப்பட்டவிறகிலேதான் அக்கினி பிரத்தியகூமாகாது, ஆன்மாக்களோடும் சிவபெருமான்வியாபித்தும், சிவஞானி உபாயங்களைச் செய்வதனுக்குச் சர்வேசுவரராகிய சிவபெருமானுடைய தரிசனம் சந்தேகமின்றிக் கிடைக்கும். சிவபெருமானே பரத்துவம்! சிவபெருமானே பரத்துவம்! சிவபெருமானே பரத்துவம்! சிவபெருமானே அநேக ஸ்வரூபமாக எப்பொழுதும் பிரகாசிக்கின்றனர். சமுத்திரத்தில் உப்பும், மலரில் மணமும் மணியில் ஒளியும்போற் சிவபெருமான் பிரிவற்றவர். காரியபூதமானது காரணபேதமாகக் காணப்படினும் இறுதியில் விதை யொன்றே யெஞ்சிநிற்றலின், காரணத்தில் காரியம் உண்டானதாக அறிதல் வேண்டும். மாயை விதையென்றும், ஜகத்து மாயாஸ்வரூபமென்றும் உணரவேண்டும். இவ்வகைய நியாயத்தால் மாயை சூழ்ந்திய பிரபஞ்சமுழுவதும் வியாபித்தவர் சிவபெருமானே. சிவபெருமானே மாயை சூழ்ந்திய பிரபஞ்சமுழுவதுமென்பதற்குச்சந்தேகமில்லை. ஜலாதிகளிற் பிரதிபிம்பித்தசூரியாதிபிம்பங்கள் வாயுவாதி சலனத்தால் தோஷஞ் சம்பவித்ததாகக் காணப்படினும் ஜலத்திற்சம்பந்தப்படாத சூரியாதி பிம்பங்கட்கு யாதியில்லாததுபோல, சிவபெருமான் வியாபகத்தால் அநேகத்துவமடைந்தபொழுதும் அவருக்கு அவித்யாசம்பந்தமான தோஷங்கள் சம்பவியா. சுத்தமான பொன் தாமிரத்துடன் கலந்திருப்பதால் மதிப்புக்குறைவற்றுப் புடமிட்டபிறகு உயர்வடைவதுபோலவே, ஆன்மா அத்தகரண பந்தத்தாலடைந்த பசு என்னும் பெயரை, பக்தியாதிகளால் சர்வேசுவரனேயாராதித்து நீங்கி, இறுதியிற் சிவசாயுச்சியத்தையடையும். இதற்குச் சந்தேகமே யிடையாது.

மகருஷிகளே! சிவபெருமானே கடவுள். அவரை யடைந்தவர்கள் பிறவியடையார்கள். இவ்வகைய நிறைவனிடத்தே பக்தியுண்டாவதற்கு ஆயிரம் பிறவிகளில் விசேஷமான தபம் தானம் விரத முதலியவற்றைச் செய்து, சிவபக்தராகவேண்டும். பின்னர் அவன் ஜீவன்முக்தனுவான்—இச்சரீரத்தை அச்சமயமே நிச்சயித்துரைக்கப்பட்டது. இதனைச் சிவபெருமான் விஷ்ணுஸ்வரூபத்துடன் விஷ்ணுமூர்த்திக்கும், அவர் பிரமதேவனுக்கும், அவர் லகத்குமாருக்கும், அவர் நாரதமுனிவருக்கும், அவர் வியாஸமுனிவருக்கும், அவர் எனக்கும் கூறினர்கள். யான் உங்களுக்குச்சொன்னேன். நீங்களும் பக்தஜனங்கட்கு விஸ்தரிப்பீர்கள். நீங்கள் என்னைக் கேட்ட விதத்தை என் புத்திக்கு எட்டியவரையிற் சொன்னேனென்று ஸ்ரீதருமிவர் சொல்லினர். அதனைக்கேட்ட முனிவர்கள் ஆநந்தமாகி, அடியேங்கள் மனத்திலிருந்த சந்தேகங்களை நீங்கினமை, ஸ்ரீதருமிவர் மீண்டும் சொல்லலாயினர்.

சௌனகாதி முனிவர்களே! இந்தச் சரித்திரங்களே வியாஸபகவானுடைய சிஷ்யன் சொன்னதென்று நிர்ணயமாகக்கொண்டு காஸ்திகனுக்கும், பிரத்தையில்லாதவனுக்கும், பக்தியில்லாதவனுக்கும், பணிவிடைசெய்யாதவனுக்கும் சொல்லவேண்டாம். பதினெண் புராணங்களையும், அநேகமான இதிகாசங்களையும், வேதார்த்தங்களையும் பலமுறையாராய்ந்துணர்ந்து இதுவே ஸாரமானது என்று வேதவியாஸபகவான் கூறியருளினர். இவ்விஷயங்களைக் கேட்பதால், பக்தியற்றவர்களுக்கும் மிக்க பக்தியுண்டாம். பக்தியுடையவர்களுக்குப் பக்தி அதிகரிக்கும். ஒருமுறை கேட்டதனாலே இவனுடைய சகல பாபங்களும் நசிக்கும். இரண்டாமுறை கேட்டதனாலே சிவபக்தி இடைக்கும். மூன்றுமுறை கேட்டதனாலே அச்சிவபக்தி விருத்தியடையும். நான்காமுறை கேட்டதனாலே சிவதரிசனங்கிடைக்கும். ஐந்தாமுறைகேட்டதனாலே விரும்பிய பலனெல்லாம் நிர்விக்கினமாகப்பெற்று வாழ்வார்கள். அப்படிப்பட்டவர்க்கு உலகத்திற்கிடையாதன வொன்றுமில்லை. பூர்வகாலத்தில் சில மன்னர் இஞ்ஞானசங்கிதையை ஐந்தாமுறை கேட்டவர்களாய், சிவதரிசனம் பெற்று, சிறப்புடைய மனுபிஷ்டங்களைப்பெற்று வாழ்ந்திருந்தனர். ஆதலின் இதனை இப்போது கேட்பவர்களும் கிடைத்தற்கரிய உயர்பதவியடைவார்கள் எனக்கூற, முனிவர்கள் ஆநந்தமிகுந்தவர்களாய், வியாஸபகவானுடைய பாதாம்புயமுதலிய வஸ்திரங்களையும் சந்தனபுஷ்பங்களையும் ஆபரணங்களையும் ஸந்தமுனிவருக்குப் பாதகாணிக்கையாக வைத்து ஸந்தமுனிவனைப் பூஜித்து, அநேகவிதமாக ஸ்தோத்திரங்கள் கூறி ஜயஜயத்தொனிகளாற் புகழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, பரமானந்தத்திலிருந்தனர். ஸந்தமுனிவரும் சந்தோஷத்துடன் எழுந்தருளியிருந்தனர்.

இந்நூல் மிகவுஞ் சிறந்ததென்று மனத்திற் நிடமுறக்கருதி, சிவபெருமானிடத்தில் பக்தியுடன் சிவபூஜைசெய்து இச்சிவபுராண ஞானசங்கிதையைக்கேட்டவர்கள் இஷ்டகாமியங்களையடைந்து ஆயுள்முடிவிற் சிவசாயுச்சியத்தை யடைவார்கள். இதனை பெருநிப் பொன் முதலிய சகலசிஷ்யோடு சிவபக்தனுடைய வேதியருக்குச் தானமளித்தவன் எப்பொழுதுஞ் சிவலோகத்தில் வசித்து சிவசுபத்தை யடைவான். ஆதலின், எவ்வகையிலாவது இச்சிவபுராணத்தை சகலருக்கும் பலருக்கும் தானமாகக் கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுப்பவர்கள் எப்பொழுதுஞ் சிவலோகத்திலேயே வாழ்வார்கள். இச்சிவபுராணத்தைச்சொன்ன புராணிகனுக்கு அன்னவஸ்திரங்களால் திருப்தி செய்தவன் சிவபக்தியடைவான்.

ஞானப்பிரகாண முரைத்தது
முற்றிற்று.

ஞானஸம்ஹிதை முற்றுப்பெற்றது.

ஸ்ரீசாம்பசிவார்ப்பணமஸ்து.

ஓ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சைவபுராணமென்னும்
ஸ்ரீ சிவமஹாபுராணம்.

தர்மஸம்ஹிதை.

காப்பு.

நாராயணம்நமஸ்க்ருத்ய நரஞ்சைவநரோத்தமம் |
தேவீம்ஸரஸ்வதீம்வ்யாஸம்ததோஜயமுதீரயேத் ||

ஸ்ரீமஹாவிஷ்ணுவையும், மாதவரிற்சிறந்த நரனையும், ஸரஸ்வதி தேவியையும், வியாஸபகவானையும் வணங்கிப் பிறகு ஜயசப்தத்தைச் சொல்லக்கடவன்.

ஜயதிபராஸரஸூனுரஸக்தமனோவாகாதிபத்யபதே |
யஸ்யவநாகமலகளிதம்வாங்மயமாஹுர்மஹர்ஷயஸ்தே ||

பராசரமுனிவருடைய குமாரரும், லக்ஷ்மிதேவியின் மனத்துக்கு ஆநந்தத்தைச் செய்பவருமாகிய வியாஸபகவான் பாவரிலும் மேலாக விளங்குகின்றனர்; அத்தகைய வியாஸபகவானுடைய முகபங்கயத்தினின்று பெருகுஞ் சொற்களாகிய அமுதை உலகம் பருகுகின்றது.

யொயதிதலைவ்நாமீலகமுனைரநுவ்ருஷாரிஜஸ்ரூயீ
ஸாயத்-ராத்ரீவைதிகாமனஸிலீசேயாதிஜீவ்ருத்தீ |
ஸதர்மாதபத்ரிதருஜிவொயஸிஜலஜ்ரஸ்ரஸ்ரஜாஸ்ரஷ்டும்
தத்ரும்ஸ்கவயித்ரியாயிததம்வைனர்ம்ஸ்ரஷ்டேகிரி ||

யோதத்தேபுவசாசித்வருணவான்ஸ்ருஷ்டாரஜஸ்ஸம்ஸ்ரய |
ஸம்ஹர்த்தாதமஸஸ்தயோகுணமயீம்மாயாமதிக்யஸ்திதம் |
ஸத்யாகர்தமஸஸ்வரூபமமலம்ப்ரஹ்மாதிஸம்ஜ்ஞாஸ்புடம் |
தித்யத்தத்வமஸ்யயாதிதமதம்பூர்ணம்ஸ்ரியம்தீமஹி ||

எத்தகைய பகவான் ஸத்வகுணத்தை யடைந்து உலகங்களைக் காத்தும், ரஜோகுணத்தை யடைந்து உலகங்களைப்படைத்தும், தமோ குணத்தை யடைந்து உலகங்களைச் சங்காரித்தும், இம்மூக்குணங்களுமாபமா யுள்ள மாயைக்கு அதிஷ்டிக்கப்பட்டும் விளங்குகின்றாரோ, அத்தகைய ஸத்ய ஸ்வரூபியாயும் ஞானஸ்வரூபியாயும் பேரறிவாளராயும் தோற்றமற்ற ராயும் பிரமம் முதலிய திருநாமங்களுக்கு வாச்யராயும் த்யேயராயும் தத்வ ஆராய்ச்சியாலறியத்தக்கவராயும் ஸர்வ பரிபூரணராயும் விளங்குகின்ற சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

முதலாவது

சிவமஹாத்மிய முனைந்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகளான சௌக்கி லூதமுனிவர்சொல்லுகின்றார்.

முனிவர்களே! ஒருகாலத்தில், தேவதேவர்களாகிய கிருஷ்ணமூர்த்தி தனிமையாயிருந்து தனக்குப் புத்திரபாக்கிய மின்மையால் அதனை யெய்வதனைவேண்டி இந்தாக்கிரகாரத்தையும் கிருஷ்ணசமயத்தில், வியாக்கிரபாத முனிவர் புத்திராதியும், சிவபெருமானுடைய திருப்பாற்கடலைப் பானஞ்செய்வதாயுமுள்ள உபமன்யுமுனிவர் அங்கடைய, அவரைக்கண்டகிருஷ்ணமூர்த்தி சாஷ்டாங்கமாகப்படி நமஸ்கரித்து, நமஸ்தேஸ்து பீடமளித்து அதில் ஆனந்தமுடனிருக்கவைத்து வெகுதருணி யிருக்கச்செய்து ஸ்வாமீ! தாங்கள் தாடோறும் அன்புடன் யாரை அருச்சனைபுரிகின்றீர்கள்? என வினவ, முனிசிரேஷ்டராகிய உபமன்யுபகவான் அகமிக மலர்ந்து கிருஷ்ணமூர்த்தியை நோக்கிக் கூறலாயினர். கிருஷ்ணா! நான் பூர்வத்தில் அதிகமான தவத்தை அதிககாலஞ் செய்கையில், பகவானுகிய சிவபெருமானெழுந்தருளியேதோன்றினர். அப்பொழுது, நேராகவே யோகவினங்குவதும், தன்னை யெப்பொழுதும் பணிபவர்க்குக் கைகொடுப்பதும், ஒருகாலையுடையதும், பயங்கரமான பற்களையுடையதும், ஜ்வாலையோடெடிய ஜோதிர்மயமாகிய முகங்களையுடையதும், இரண்டாயிரங் கரணங்களோடு விளங்குவதுமாகிய எல்லா ஆயுதங்களுக்கும் நிதேஷ்டமானதும், எல்லாவற்றிற்கும் முதன்மையானதும், அநேகவித இன்னங்களையுடைத்தாய பலகோடி சத்துருக்களையும் அபிக்ஷத்தக்கதும், கல்பாந்தகாலத்தில் அண்ட சண்ட பிரமாண்டங்களையெல்லாம் சங்கரிப்பதும், பிரமவிஷ்ணுவாதி தேவர்களாலும் ஜெயிக்கப்படாததும், மஹேசுவரனால் விடப்பட்டுத் திரிலோகங்களையும் சாசரங்களோடும் அழிவிகாலத்தில் சங்கரிப்பதுமாகிய சூலத்தைப் புறத்தில் விளங்கக்கண்டேன். இதற்குச் சமானமானதும் உயர்ந்ததுமாக ஓராயுதம் மூன்று லோகங்களிலுமில்லை. இதனைச் சர்வேசுவரனுடைய திரிசூலமென யாவரும் பிரசித்தமாகக் கூறுவர். சமுத்திரங்களையெல்லாம் உலரச்செய்யவல்லது.

இதனை மாந்தாதா வென்னும் பேரரசன் சிவானுக்கிரகத்தால் அடைந்து மன்னவர் அனைவரையும் வென்று அசுவமேதயாகஞ் செய்திருக்கின்றனன். இலவணாசுரன் சிவாதாக்கிரகத்தால் இதனைப்பெற்றுத் தன் வீட்டில் வைத்துக்கொண்டு கர்வமிகுந்து சத்துருக்கினன் என்னும் அரசனைப் போருக்கழைத்து அவனால் மாண்டனன். [சத்துருக்கினன் அவனைச் செயித்தபின்னர் அவன் பொருள்களைச் சுவாதினஞ்செய்துகொண்டபொழுது அதி திகைன்யமானதும், யாவரையும் அஞ்சச்செய்வதும், சர்ப்பமணிக்கணமும், சொல்லுதியாத பிரபாவத்தையுடையதும், முத்தலைகளைப் புருவங்களாகக்கொண்டு பயமுறச்செய்பவன் போன்றதும், புகையில்லாத நெருப்புப்போன்றதும், பாலசூரியன்போன்றதும், பாசத்தைக் கையிற்றாங்கிய யமன் போன்றதுமான அத்தச் சூலாயுதம் அவனுக்குச் சுவாதினமடையாமற் சிவபெருமானை யடைந்தது.]

கூர்மையானதும், அதிக சர்ப்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பதும், பிரளயகாலாக்கினியாலேயே புருஷரூபமடைந்துள்ளதுமாகிய மழுவாயுதத்தை அம்மகாதேவனுடைய மற்றொருபக்கத்தில் விளங்கக்கண்டேன். இப் பரசு என்னும் ஆயுதத்தைப் பரசுராமன் கூத்திரியர்களைச் சங்காரிக்குமிமித்தம் சிவாதாக்கிரகத்தாற் பெற்று, அது தன்னிடத்திருப்பதால் வலிமையும் ஊற்றலுமிகுந்து எழுபத்தியொன்பதாயிரம் கூத்திரிய குலத்தைச் சங்காரஞ் செய்தனன்.

ஆயிரம் முகங்களையுடையதும், பயாப்தமானதும், இரண்டாயிரம் புஜங்களையுடையதும், புருஷாக்கிருதியானதும், இரண்டாயிரங் கண்களையுடையதும், ஆயிரங் கால்களையுடையதுமான சுதர்சன மென்னுஞ் சக்கரம் அப்பெருமான் பக்கலில் விளங்கப்பார்த்தேன். இவையேயன்றி வஜ்ராயுதம், சக்தி, தூணீரம், கட்கம், பாசம், அங்குசம், கதை முதலிய திக்குப்பாலகர்களுடைய ஆயுதங்களும் அச்சர்வேச்வரன் அருகிருக்கக் கண்டேன். இவ்வாறு எனது திடபக்தியைப் பரீக்ஷிக்குமாறு அவ்வெம்பெருமான் பெரும் கோரரூபமாகத் தரிசனங்கொடுத்தருளினர்.

அவருடைய வலப்புறத்தில் அன்னவாகனத்தைத் தாரத்திலிருத்தி நிற்கிற பிரமதேவனும், இடப்புறத்தில் சங்க சக்கர கதாகட்க கோதண்டங்களை யணிந்து கருடவாகனத்தைச் சமீபத்திலிருத்தி நிற்கிற விஷ்ணுமூர்த்தியும், பராசக்தியாகிய பார்வதிதேவியின் பக்கலில் மயூரவாகனமும் திவ்விய தேஜஸோடு வேலாயுதத்தை யேந்திநிற்கும் குமாரஸ்வாமியும், சூலப்படையைக் கையிற்றாங்கி முன்னே நிற்கிற நந்திதேவரும், அங்குசபாசங்களை யணிந்து ஒருபுறத்திருக்கும் விநாயகரும், பூதகணங்களும், சப்தமாதர்களும், பரிவாரங்களாகச் சூழ்ந்துபலவிதகோத்திரங்களால் அவர்களெல்லோருந்துதிசெய்

யவும்,உலகிலுள்ள யாவும் அவருடைய விளங்கவுங்கண்டு, ஆனந்தத்துடன் அதிசயித்துத்தைரியத்துடன் கைகூப்பி நமஸ்கரித்துநின்று, சர்வேசுவர னைப் பார்த்துச் சந்தோஷத்தோனியால் மிக்க பக்தியுடன் தோத்திரஞ் செய்கையில், பகவானுகிய சாம்பவமூர்த்தி சந்தோஷித்தேனென்று புன்சிரிப்புடன், வேதியனே! யான் எவ்வளவு பயங்கரமாகத் தரிசனங் கொடுத்தும் உன் மனதைச் சலிக்கச்செய்யாமற் போனேனல்லவா? நீ நன்றாய்ப் பரீக்ஷிக்கப்பட்டவன்! எனது நிரதிசயமான பக்தியை யடைந்திருக்கின்றாய். உனக்கு மங்களமுண்டாகுக. தேவர்கட்கும் அரிய வரத்தை விரைவிற் கேள் எனத் திருவாய்மலர்ந்தருள, யான் விளைந்து பக்திவலையிலகப்பட்ட அப்பரமபதியைப் பணிந்து, பகவனே! தேவரீருக்குச் சந்தோஷமுண்டானமையின், அடியேனுக்குத் தேவரீரிடத்தில் நீங்காத பக்திபிருக்கத் தயைசெய்யவேண்டும். அவ்வகைய பக்தியால் என்க்குத் நிரிகாலஞானம் வரும். ஆதலின் பிறரிடத்திற் செல்லாத ஊர்ஜிதமான பக்தியைப் பிரசாதிக்கவேண்டும். என் வமிசத்தார்களும் யானும் பானும் அன்னமும் குறைவின்றிப் புசிக்க வரங்கொடுக்கவேண்டும். பிரபுவே! என்னுடைய ஆச்சிரமத்தில் தேவரீர் எக்காலமும் தரிசனமளித்துக்கொண் டிருக்கவேண்டும் என வேண்ட, மனோபீஷ்டங்களையெல்லாங் குறைவறக் கொடுக்கவல்ல சிவபெருமான் - நீ நரை திரை மூப்புமரணமில்லாதிருக. முனிவர்களிலே தீர்த்தவானுகி அவர்களாலேயும் புகழத்தக்கவனுருக. சீலம் ரூபம் குணம் சேவரியம் முதலியவை என் கருணையால் உனக்கு மென்மேலும் பெருகுக. நீ பாலபோகித்தமையின் உனக்கு க்ஷீர சமுத்திரத்தைக் கொடுத்தோம். நீ விரும்பியபொழுது அங்கேயே யடைக. நீ விரும்பிய பொருள்கள் அப்பொழுதே உன்னை யடையும். அந்த க்ஷீராப்தி அமிர்தங்களுபமாதனின் அதனை நீ பானஞ்செய்வதால் வைவசுவத மந்வந்தர முடியுமட்டும் உன் வமிசத்தர்களுடன் கூடி வாழ்வாய். உன் கோத்திரம் எப்பொழுதும் அபிவிருத்தியாகும். உன்னுடைய ஆச்சிரமத்தில் எப்பொழுதும் என் தரிசனத்தையும், உனக்கு நீங்காத பக்தியையுங் கொடுப்பேன், பிள்ளாய்! நீ தோத்திரஞ் செய்யும்படி இவ்வ் தரிசனங் கொடுத்திருப்போம். இன்னும் உனக்கு வேண்டிய வரம் எதேனுமிருக்கின் அதனையுங் தருவோம். நீ விரும்பத்தக்கது பிறிதொன்றில்லை என்று திருவாய்மலர்ந் தருளி அந்தர்த்தானமாயினர். திருவ்ஞ! இவ்வாறு சிவபெருமான் கோடிசூரியப்பிரகாசமோகந் திவ்யதரிசனமளித்து வரங்களைக் கொடுத்தருளினர். அவர் கட்டளையிட்டபடியே அவர் கருணையால் யான் யாவுமடைந்தேன். கந்தர்வாதி கணங்களுக்கும் ருஷிகளுக்கும் வித்தியாதரர்களுக்கும் மனோரம்மியமான பூஞ்செடிகளையும், மணம் வீசுவதும் வருஷமுழுவதுங் குறைவின்றி மலருவதுமாகிய உத்தியானவனத்தையும், பிற

வற்றையும் அடைந்தேன். சர்வேசுவரனுகிய அச்சாம்பசிவனுல் நிஜ பொழுது நீனைத்த பொருளை யடைய வல்லவனுயினேன் என்று உபமன்யு முனிவர் திருக்ஷ்ணமூர்த்திக்குக் கூறினர்.

இரண்டாவது

மேற்படி அத்தியாயம்.

துவாரகாபுரவாசியாகிய திருக்ஷ்ணமூர்த்தியை நோக்கி உபமன்யு முனிவர் சொல்லுகின்றார்:—ஸ்ரீ சர்வேசுவரராகிய சூலபாணியின் அநுக்கிரகத்தினுல் சர்வஜ்ஞானமும், பூதபவிஷ்யவர்த்தமானங்களும் உணர்ந்தேன். பிரமவிஷ்ணுவாதி தேவர்களாலும் அர்ச்சித்தற்கரியவ அமரராபகளுகிய ஆபரணனே யான் பிரத்தியக்ஷமாகத் தரிசித்தேன். என்னிலும் தன்னியர் திரிலோகங்களிலும் யாவருளர்? இருபத்தாருவதெனப் பிரசித்தமானதும், சுத்தியமானதும், வேதமுணர்ந்த மகருஷிகளால் தியானிக்கப்பட்டதும், நாசமற்றதுமாக விளங்குகின்ற பாத்துவப்பொருள், எல்லாத் தத்துவங்களையும் படைத்துச் சாகஷிபூதமாக நின்று ஷட்குண ஐசுவரிய ஸம்பந்தனை மஹாதேவனேயாம். அவனே பிரதான புருஷேசுவரன். அக்கடவுளே தனது வலப்புறத்திலிருந்து உலகங்கட்குச் சிருஷ்டிகர்த்தாவான பிரமனையும், தனது இடப்புறத்திலிருந்து உலகரகூணகர்த்தாவான திருமாலையும் படைத்தவர்; பிரளயகாலத்தில் தமது இதயத்திலிருந்து உலகசங்காரஞ் செய்யத்தக்க ருத்திரனைப் படைப்பவர்; யுகக்கத்தில் ஊழிக்காற்றுயிருப்பவர்; காலஸ்வரூபமாயிருந்து சர்வபூதங்களையு மழிப்பவர்; சர்வஜ்ஞராயிருப்பவர்; சர்வ பூதாத்மகமானவர்; சர்வ பூதங்கட்கும் பிறப்பிடமானவர்; அவ்வகைய மஹேசுவரன் மேலான தேவர்களாலுங் தரிசித்தற்கரியவர். அம்மஹாதேவனைப் புத்திரலாப முண்டாகுமிமித்தம் நீ அவசியம் ஆராதிக்கவேண்டும். கிருஷ்ண! இது வரையில் சிவபெருமானை யாராதித்து அவனருளால் தங்கள் மனோபீஷ்டங்களை யடைந்தவர்களின் தொகையை சொல்லமுடியாதாயினும், அவருட் சிலர் சரிதங்களை உனக்குச் சுருக்கிச் சொல்லுகிறேன்.

பூர்வத்தில், ஹிரண்யகசிபின் பத்துலக்ஷவருஷம் சர்வதேவர்களுடைய ஐசுவரியத்தையும் சர்வேசுவரனுடைய அநுக்கிரகத்தால் அடைந்து இறுதியில் இரண்டாயிர வருஷ ஆயுளையுடைய பிரஹலாதனைப் புத்திரசிரேஷ்டனை அடைந்தான். அப்புத்திரன் சிவாநுக்கிரகத்தால் இந்திரனென்னப் பிரகித்தமான பெயரெய்தி விஷ்ணுமூர்த்தியின் சுதரிசனமும், இந்திரனுடைய வச்சிரமும் தன் தேகத்திற் பட்டால் அவை பொடியாக வுதிர்ந்துபோகத்தக்க திவ்விய தேகமடைந்தவன். சர்வேசு

வரத்தால் ஓராயுதமும் அவன் தேகத்தை யணுகாத வரம்பெற்று ன் என்னும் பெயரையுடைய மஹா பலசாலியான இந்திரனந்தனன் வரமடைந்துள்ள தனது பரிவாரத்துடன் தேவர்களை யெதிர்த்துத் தாக்குறுத்த, தேவர்கள் இவனைச் செயிக்கமுடியாமல் திகைத்தனர். இவன் விசேஷமாகச் செய்துவந்த சிவபூஜைக்குக் களிகூர்ந்த எம்பெருமான் திரிலோகசம்பத்தும், லக்ஷலருஷ ராச்சியபாரமும், அநேக புத்திரரும் ஊண்டாக அநுக்கிரகித்து, இறுதியில் தாயுச்சியமும், குசத்தீபத்தில் சுபகரமான இராஜபோகமும் உண்டாகுகவென்று வரங்கொடுத்தருளினர். கண்ணெனிரம்தேவனுற் படைக்கப்பட்ட சதுமகன் என்னும் தைத்தியன் சிவபெருமானைக் குறித்து தாறுவருஷம் கடுந்தவஞ்செய்து அவனருளால் ஆயிர நகரங்களை யடைந்தனன். பூர்வகாலத்தில் வேதங்களைப் பிரசித்திபெற்ற யாஞ்ஞவல்கிய மகருஷி சர்வேசுவரனை ஆராதித்து உத்தமஞானத்தை யடைந்தனன். வேத வியாஸ பகவான் சிவார்ச்சனை செய்து சமான ரத்திதமான கீர்த்தியையும், ஞானத்தையும் பெற்றனன். இந்திரனல் அவமதிக்கப்பட்ட வாலகில்லியர் சர்வேசுவரனை யர்ச்சித்து, ஸோமஹர்த்தாவாய் ஒருவரானுஞ் செயிக்கமுடியாத கருடனைச் செயித்தனர். ஜடாதரனுகிய சிவபெருமானுடைய கோபாக்கினியால் ஜலமுழுதும் வரண்டுபோக, தேவர்கள் யாவரும் ¶ ஸப்தகபால புரோடாசத்தால் சிவபெருமானை யாராதித்து, தம இஷ்டப்படி மீண்டும் ஜலத்தையுண்டாக்கிக்கொண்டனர். அத்திரி முனிவர் மனைவியாகிய அநுசூயை சிவபெருமானை நோக்கி முந்நூறுவருஷம் கொம்பின்மேனின்று கடுந்தவஞ்செய்து தத்தாத்தீரேய முனிவரையும் சந்திரனையும் துர்வாச முனிவரையும் புத்திரராகப்பெற்றனள். லிசர்ணன் என்னு மிருடி சிவனை யாராதித்து இஷ்டசித்திகளை யெய்தினன். சாகல்லிய முனிவன் மனசாந்தாதத்துடன் ஒன்பதினுயிரவருஷம் சிவாராதனை மானசிகமாகச் செய்து பகவத் கடாக்ஷத்தால் நீ நிரந்தகர்த்தனுகவென்றும், உன் கீர்த்தி அழியாது திரிலோகத்திலும் விளங்குக என்றும், மஹருஷிகள் பலர் உன் குலத்தில் பிறக்கவென்றும், உன் குலத்தில் பிறந்தவன் ஸுத்ர கர்த்தா வாவானென்றும், அச்வல் ஸாவர்ணி என்னும் பெயர் பெறுவானென்றும், அவன் கிருகயுகத்தில் ருஷியாயிருப்பானென்றும், அறுநூறுவருஷந் தவஞ்செய்வானென்றும், வரங்கொடுக்கப்பெற்றனன். இவ்விதமாகச் சர்வேசுவரன் பூர்விகர்களான பெரியோர்களால் தோத்திரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. கிருஷ்ண ! நீயும் அவ்வகையாகச் சங்கர பகவானை ஆராதிப்பாயாகில் சர்வ மனோபீஷ்டங்களையும் அடைவாய். அவருடைய திவ்விய குணங்களை ஒரு காவினியுடைய நான் அநேகவருஷங்கள் சொல்லினும், சொல்லி முடிக்குங் திறமுடையவனல்லேன்.

¶ ஸப்தகபால புரோடாசம் – ஏழு பாத்திரங்களிற் பண்டத்துக்கொடுத்த அவிசு.

பெருத்துமார் வியாஸமுனிவரை நோக்கிக் கூறுகின்றார்:— ¶ உபமன்யு முனிவருடைய வார்த்தையைக்கேட்டு கண்ணபிரான் பரமசந்தோஷத்தைப் பெற்று, புனிதமான மனதையுடைய உபமன்யுமுனிவரை நோக்கி ஸ்வாமீ! பிராமண சிரேஷ்டரே! தேவரீர் தன்னிபர், தேவரீருக்குச் சமானமான புண்ணியர் ஒருவருமிலர். தேவரீரது ஆச்சிரமத்தில் தேவாதிதேவனுடைய வார்த்தியம் விளங்குகின்றது. முசோர்த்தலரே தேவரீரைப்போன்ற பெரியோருடைய தரிசனத்தால் சர்வேசுவரனுகிய பரமசிவன் எனக்கும் அநுக்கிரகஞ்செய்வான் எனக்கூற, உபமன்யு முனிவர் கிருஷ்ணமூர்த்தியை நோக்கி, நீ விசையில் ஜகதீசுவரனை மஹாதேவனை அவனது கருணையால் தரிசிக்கப்போகின்றனை. பார்வதி சமேதனை அவ்வெம்பெருமானுல் இருபத்து நான்கு வரங்கள் உனக்குக் கிடைக்கும். நீ சாகுகூத் விஷ்ணுவாதலின் உனக்கு நல் வரங்கொடாரா ? நீ தேவர்களிலெல்லாம் பூஜ்யனுவாய். சத்துருங்களால் துதிசெய்யப்பட்டவனுவாய். அச்சுதா ! திரத்தையான மனமுடைய உனக்கு ஜபஞ் செய்தற்கு யோக்கியமான ஒரு மந்திரத்தை உபதேசிக்கப்போகிறேன். நீ அம்மந்திரோபாசனையால் பிரம்மஹத்தியனுகி நிச்சயமாகச் சர்வேசுவரனை விசையில் தரிசித்து, உனக்குச் சமான வலிமையுடைய புத்திரனைச் சிவானுக்கிரகத்தால் அடையப்போகிறுய். ஏ கிருஷ்ணு ! நீ சிவபெருமானைத் தரிசித்து, ஸ்வாமீ ! பாஹுஸ்ரீனைத் தரிசித்தேன். எனக்குப் புத்திரப்பேற்றினைக் கிருபைசெய்யவேண்டுமென வரங்கேட்பாய்எனக் கூறினர். இவ்வாறு உபமன்யு கிருஷ்ண சம்பாஷணையில் சிவப்பிரபாவங்களால் தினங்கள் எட்டு சுகமாகக் கழிந்தன. ஒன்பதாவதுதினத்தில் கிருஷ்ணபகவான் உபமன்யு முனிவரால் தீக்ஷை செய்யப்பட்டனர். ஆசார்யனைவிடவும் பெரியோரில்லாமையால் சிவசம்பந்தமான ஸ்ரீபஞ்சாக்ஷரமந்திரத்தை யுபதேசஞ்செய்யப்பெற்று, கிருஷ்ணமூர்த்திமுன் ஜடாதரராகி, பின் முண்டனஞ் செய்துகொண்டு சிவசம்பந்தமாகவே நின்றேனென்று சங்கல்பஞ்செய்து, ஆசாரியமத்திடன் யோகதண்டமேற்று, தருப்பையால் அனாதண் அணிந்து, தினசரிகை செய்யப்பெற்றவராய்த் தவமேற்கொண்டு முதல் மாசத்தில் நிராகாரமாகவும், இரண்டாம் மாசத்தில் ஜலபானஞ் செய்துகொண்டும், அதன்பின் (மூன்று நான்கு ஐந்தாவதாகிய) மூன்று மாசங்களில் வாயு பக்ஷணஞ் செய்துகொண்டும், கால்பெருவிரல்களின்மேல் நின்றுகொண்டும், ஆறுமாசத்திலிருந்து பதினேந்தாமாசவரையில் தோள்களை யுயர்த்திக் கைகுவித்துக்கொண்டும், பதினேழாமாசத்தின் முதலில் இந்திர தனுசோடுகூடிய மேகங்கள் உலகமுழுதும்

¶ உபமன்யு கிருஷ்ண ஸம்வாதத்தை, ஸுதருமாமுனிவர் வியாஸருக்குச் சொன்னதாகவும், வியாஸர் ஸூதருக்குச் சொன்னதாகவும், ஸூதர் சௌநகாதி முனிவர்களுக்குச் சொன்னதாகவும் புராணமுள்ளதாதலின் மயங்கற்க.

வியாபித்திருக்கையில் சிவபெருமான் தரிசனமளிக்கப்பெற்றனர். பார்வதிதேவியாரும், சந்திரசேகரராயும், பிரமாதி தேவர்கள் சித்த வித்தியாதரர்கள் யக்ஷ இன்னர குருடகாத்தர்வர்களால் துதிசெய்யப்பட்டவராயும், பிறப்பிறப்பில்லாதவராயும், சர்வாச்சரியஸ்வரூபியாயும், விளங்கும் சர்வேசுவரனை சிவபெருமானைக் கிருஷ்ணமூர்த்தி. தரிசித்து அஞ்சலியஸ்தராய் எதிர்நின்று சாரூபிகமான தோத்திரங்களால் பூஜித்துச் ஸஹஸ்ரநாமங்களால் தேவேசுவரனை சங்கரனைத் துதித்கையில், தேவர் கந்தர்வர் வித்தியாதரர் நாகர் முதலாயினர் புஷ்பமாரி பொழிந்தனர். அநேகமுறை புஷ்பவருஷம் பொழிந்திறுதியில் கிருஷ்ணமூர்த்தியின் திரிலோக புஷ்பமாரி பொழிந்தனர். சித்தர் முனிவர் அப்சரசுகள் முதலானோர் புடைசூழ்ந்து விளங்கும் சிவபெருமான் தமது வாமபாகத்தில் விளங்கும் பார்வதிதேவியின் திருமுகத்தைப் பக்தவாச்சல்லியத்தோடு பார்த்து, இக்கண்ணன் செய்த தவத்திற்குக் களிகூர்ந்தேன், எனக்கூறி, கிருஷ்ணமூர்த்தியை நோக்கி, கிருஷ்ணா! யான் உன் பக்தியையும் அறிவேன். நீ திடவிரதத்தை யுடையவனென்றும் அறிவேனுதலின், மூவுலகத்திலும் இடத்தற்கரிய நீ விரும்பத்தக்க வரங்களில்லட்டுவரங்களைக் கேட்பாயாக எனக்கூற, அதுகேட்ட கிருஷ்ணமூர்த்தி அஞ்சலியஸ்தராய், ஸ்வாமீ! (க) எல் மனம் எப்பொழுதும் தருமதெயிலேயே யிருக்கவேண்டும். (உ) என் கீர்த்தி உலகிலுள்ளாருடைய கீர்த்திக்கெல்லாம் மிசையித்திருக்கவேண்டும். (ங) யான் பெரும் பலசாலியாயிருக்கவேண்டும். (ச) தேவரீரிடத்து சாமீப்பியம் எனக்கெப்பொழுது மிருக்கவேண்டும். (ஞ) தேவரீரிடத்தில் எப்பொழுதும் எனக்குத் திடபக்தியுண்டாயிருக்கவேண்டும். (கூ) பத்துப் புத்திரர் எனக்கு மிகுத்திருஷ்டமாயிருக்கவேண்டும். (எ) என் சந்ததிருந்துஷ்டாயிருப்பினும் வம்சவிருத்தியில் அழியவேண்டும். (அ) யோகிகட்கெல்லாம் யான் தலைவனுகவிருக்கவேண்டும். என்று—இவ்வகையாக எட்டு வரங்கேட்டனர். சிவபெருமான் அவ்வரங்களெல்லாம் அவ்வாறே பெறுக பெறுக என்று கூறி, உன் புத்திரர்களில் சாம்பன் என்னும் மகா பராக்கிரமசாலியான ஒரு புத்திரன் உனக்குளனாவான். அவனே பிரளயகாலருத்திரன். முனிவர் சாபத்தால் மறுஜன்மத்தைப் பிறப்பான். இன்னும் நீ வேண்டியவை ஏதேனுமிருப்பின் அவற்றையும் அடைவாயாகவென்று ஆசீர்வதிக்க, கிருஷ்ணமூர்த்தி சிவபெருமானைப் பலவிதமான தோத்திரங்களாற் சந்தோஷிக்கச்செய்தனர்.

சௌநகாதி முனிவர்களே! கிருஷ்ணமூர்த்தி அதன்பின்னர் பார்வதிதேவியாரையும் வேதோக்தமான தோத்திரங்களாற்துதித்து நமஸ்கரித்துச் சந்தோஷப்படுத்த, பார்வதிதேவி கிருஷ்ணனைவாஞ்சைப் பார்த்துக் கிருஷ்ணா! நீ பாக்கியசாலி; நான் பெருங்களிப்படைந்தேன், உலகத்திலுள்ளாருக்குத் துர்லபமான வரங்களை யுனக்குக் கொடுக்கிறேன்.

வேண்டியவற்றைக் கேட்டுக்கொள் எனக்கூற, கிருஷ்ணசுவாமி அஞ்சலியஸ்தராய், மஹாதேவி! தாயே! நீ களிப்படைந்தகாலத்தில் அவ்வண்ணமே அரிய வரங்களை யதுக்கிரகிக்கவேண்டும். ஜகத்ஸ்வரூபிணி! என்க்கு வேண்டிய வரங்களாவன:—ஜீவஹிம்ஸையில்லாதவிரதத்தால் பிராமண சமானனுகவும், எனக்கெப்பொழுதுஞ் சத்துருக்களில்லாதிருக்கவும், பிராமணபூஜை செய்யத்தக்க பக்தியுடையவனுகவும், என் தாய் தந்தையர் எப்பொழுதுஞ் சந்தோஷித்திருக்கவும், சமஸ்த பூதங்களும் என்னிடத்தில் அதுகூலமனமுடையையாயிருக்கவும், எவ்விடத்திலும் என்னை யெதிர்ப்பவரில்லாமலும், தங்கள் சேவை கிடைத்த எனது வமிச பரம்பரை சதாசார சம்பத்துடையதாகவும், நூறு யாகங்கள் செய்து இந்திராதி தேவர்களைத் திருப்திசெய்பவனுகவும், எங்கள் வீட்டில் எப்பொழுதும் ஆயிரத்தேழு பதினஞ்சும் ஆயிரத்தேழு அதிதிகளும் போசனஞ் செய்து திருப்தியடையும் வகையாகவும், பந்துக்களிடத்தில் எனக்குப் பிரீதியுண்டாயிருக்கவும், எப்பொழுதும் நல்ல சுகமுண்டாகவும், சுந்தரமான தேகத்தையுடைய ஆயிரம் மனைவிமாருக்கு நாயகனுய் அகூனமான சரீரமுடையவனுகவும், அன்னதானத்தைக்காட்டிலும் எனக்குச் சத்தியவான் பிரீதியாயிருக்கவும் வரமளிக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து வேண்ட, சர்வ மங்களப்பிரதையாக விளங்கும் பார்வதிதேவியார் கிருஷ்ணமூர்த்தியின் வார்த்தைகளைக்கேட்டு ஆனந்தமடைந்து அவ்வாறே யாகுகவென வரமளித்து, உனக்கு மங்களமுண்டாகுக என ஆசீர்வதித்தனர். அப்பொழுது பார்வதி பரமேசுவரர் பிரமகணை ஸஹிதமாக அந்தர்த்தானமாயினர். பின்னர் கிருஷ்ணமூர்த்தி கேசி என்னும் ராகூசனைச் சங்கரித்து வெளிரிகாச்சரமடைந்து தம் திரோகுருவகிய உபமன்யுமுனிவனைச் சிசாத் வெளிரிகாச்சரமடைந்து தம் திரோகுருவகிய உபமன்யுமுனிவனைச் சிசாத்பணிக்து நடந்தவிர்த்தாந்தங்களெல்லாம் விண்ணப்பிக்க, உபமன்யுமுனிவர் கிருஷ்ணா! சிறந்த வரங்களால் உலகத்திலுள்ளவரை யிரகூபப்பவர் சர்வேசுவரனை சிவபெருமானையன்றித் திரிலோகங்களிலும் யாவருளர்? ஒருவருமிலர். அப்பரமனின் குரோதபுத்தியுடையாருக்கும் சிறிது கஷ்டத்துடன் தரிசனமளிப்பர். ஞானத்திலும் தபத்திலும் சௌரியத்திலும் தைரியத்திலும் சம்புனிலுடைய மேம்பாடுகளைச் சொல்லுகின்றேன் எனக்கூறுகையில், "கிருஷ்ணமூர்த்தி சிறுத்தையோடு சந்திரமௌலியாகிய சிவபெருமானிடத்தில் மனஞ்செலுத்தியிருந்தனர்." அவ்வாறிருக்கும் கண்ணனை நோக்கி உபமன்யு முனிவர் கூறலாயினர்.

கிருஷ்ணா! பகவானை சங்கரன் பூர்வத்தில் பிரமலோகத்தில் மஹாத்மாவும் பிரமயோகவானுமாகிய தண்டி யென்னும் மகருஷியால் ஸஹஸ்ரநாமங்களால் தோத்திரஞ்செய்யப்பட்டனன். மகா விசாலமானதும் நிகண்டும் ஞானசாத்திரமுமாகவுள்ள அந்தத் தோத்திரம் சாஸ்வதமும் பிரமரிஷிகளாகிய சிலரால் படனஞ்செய்யப்படுகின்றது. மாதுடரோகிய மநுத்தர்களாகிய சிலரால் படனஞ்செய்யப்படுகின்றது. மாதுடரோ

அதனைத் தோத்திரஞ்செய்ய அசக்தராயிருப்பர். ஆயினும் உலகத்தில் ஒரேயிடத்திற் சிலர் அதனைப் படனஞ்செய்து அதனாற் பெருமானை யாராதித்துச் சர்வேசுவராநுக்கிரகத்தால் இஷ்டமான வரங்களைப் பூர்வத்திற் பெற்றிருக்கின்றனர். அவ்வாறு வரம்பெற்ற மகரிஷிகளிற் சிலருடைய சரிதங்களையும் உனக்குச் சொல்லுகிறேன் கேட்பாயாக. அத்திரிமுனிவன் ¶ கோகர்ணக்ஷேத்திரத்திற் சர்வேசுவரனை நோக்கி ஈராயிரவருடந் தவஞ்செய்து ஈறு புத்திரர்களையும் அழியாத கீர்த்தியையும் பெற்று வாழ்ந்திருக்கின்றனன். ஜராமரணங்களை யொழித்தவர்களும், தர்மங்களை யுணர்ந்தவர்களும், நிர்மலமேதஜ்ஞையுடையவர்களும், அயோநிஜர்களும், ஆறாயிரவருட ஆயுளையுடையவர்களுமான அப்புத்திரர்களில் ஒருவன் நிலத்தினெல்லை குறிப்பதில் அதிக்ரமமான விவாதஞ்செய்து பிரமஹத்தியடைந்தான்: சமஸ்தமான ருஷிகளும் அவனைப் பிரமஹத்தி செய்தவனென்று விலக்கினர். அவ்வாறு பாபியானவனைச் சிவபெருமான் பரமரகிதனும், தேஜோவர்தனும், வேதசாஸ்திரங்களில் வல்லவனும், சிவபக்த சிரேஷ்டனுமாகச் செய்தனர். பரசுராமன் சர்வ வியாபகனாகிய சிவபெருமானை யாராதித்து, க்ஷத்திரியர்களாற் கொல்லப்பட்ட தன் தந்தையாகிய ஜமதக்கி முனிவனைக் கருதிச் சிவசக்நிதியில் தக்கித்து, அவரது கடாக்ஷத்தால் மகர் தேஜோமான பரசு ஆயுதத்தை யடைந்து ஏழுபத்துமூன்றரம் க்ஷத்திரியவமிசத்தை நாசஞ்செய்து, பிரசன்னமாயிருக்கும் சிவபெருமானுடைய அநுக்கிரகத்தையடைந்து, க்ஷத்திரியவதையால் தனக்கு நேர்ந்த உபபாதகத்தை மகேந்திரகிரியில் தவஞ்செய்து விலக்கி, பிறரால் செயிக்கமுடியாதவனுய்ச் சிரஞ்சீவியாகி, இன்னும் தவஞ்செய்துகொண்டும் சிவலிங்கார்ச்சனை செய்துகொண்டும் சித்தர் சாரணர் முதலானவருடன் மகேந்திரகிரியில் காணப்படுகின்றனன். அம்மலையில் சிரஞ்சீவியான பரசுராமன் கல்பாந்தத்தில் மீண்டும் தனது லவுகுண்டத்தை யடைவான். அஸிதமுனிவருக்குத் தம்பியாகிய தேவலன் என்னும் முனிவன் பூர்வத்தில் இந்திரனுற் சபிக்கப்பட்டு அற்ஞானத்தாற் கோபமுற்று, உலகத்திற்கெல்லாந் தொந்தனை செய்ய யத்தனித்து, அதர்மமான தபசைச்செய்து, இறுதியில் இஷ்டகாமியங்களையெல்லாம் எளிதிற் கொடுக்கவல்ல சிவலிங்கபூஜை செய்து, ஸ்திரமான கீர்த்தியையும் தர்மத்தையும் ஆயுளையும் அடைந்தனன்.

மநுவிற்கு நேத்திரத்தாற் பிறந்த வசிஷ்ட முனிவர் சாமகானஞ் செய்வோர் சபையில் க்ருத்ஸமதன் என்னும் ருஷியை நீ மனங்கெட்டு ஸ்தூலம் என்னும் சாமத்தை அபகவரமாக என் கானஞ்செய்கின்றனை ? என்று கோபித்து, இருபத்தொன்பதினாயிரவருஷம் நீர்த்ஜலியும் சருகுமில்லாததும், துஷ்டமிருகங்கள் சஞ்சரிப்பதுமான கண்டகாரண்யத்தில்

¶ உபமந்யுர் வாசம்.

அஜ்ஞானத்தாற் துக்கதரமுடைய ஒரு மிருகமாக இருக்கவெனச் சபித்தனர். அச்சாபத்தால் துன்பப்படும் க்ருத்ஸமதன் மகா பயங்கரமும் ஜலமற்றதும் பழந்தரும் மரங்கள் ஒன்றுமில்லாததுமான விடத்தில் அப்பொழுதே மிருகமாகச்சென்று, சிவபெருமானைத் தியானித்துப் பலவிதமாகப் பணிந்து, மஹா பக்தியோடு பிரணவத்துடன்கூடிய சிவ பஞ்சாக்ஷர மந்திரத்தை மனதிற் தியானித்துக்கொண்டிருந்து, அதனாற் களிகூர்ந்த சிவபெருமானுல், ¶ மிருகமுகமுடைய ஒரு கணராதனுகிச் சிவபெருமானையடைந்து, சாபத்தை விலக்கிக்கொண்டு லம்போதரர் கணத்தை யடைந்தனன். சிவலிங்கார்ச்சனையிலேயே எப்பொழுதும் விருப்பஞ்செய்த மகா தபசியாகிய ஜைகீஷவ்யன் என்னும் முனிவன் பூர்வத்தில் காலிகேக்ஷத்திரத்தில் சமன்த போகங்களையும் விடுத்து, நிஷ்காமிய மனமுடையவனுய், சிவபெருமானை யர்ச்சித்து அவ்வெம்பெருமான் கடாக்ஷத்தால் அணிமாதி அஷ்டசித்திகளும் பெற்றுத் தவ கஷ்டத்தினின்று நீங்கினன். சர்வேசுவரன் தன்னை நோக்கித் தவஞ்செய்த காக்கிய முனிவருக்கு மோட்சங்கொடுக்கத்தக்கதும் உலகத்தில் துர்லபமானதுமாக வரங்கொடுத்து, சரீரசம்பந்தமான பிரமாண்யமான விஷயத்தால் பிரத்யக்ஷமாகும் நான்குஸ்கந்தங்களையுடைய ஜோதிஷசாஸ்திரமென்னும் கணிதசாஸ்திரத்தையும், ஸ்திரமான எல்லா வித்தைகளின் தேக்கினையும், அவனுக்கே பின்ற ஆயிரம் புத்திரர்களையும் கொடுத்தருளினர்.

பரசுராமுனிவர் தன்னைத் தியானித்தபொழுது நரை திரை மூப்பில்லாத வேதவியாளனென்னும் யோகியைப் புத்திரராகச் சந்தோஷத்துடன் கொடுத்தருளினர். மாண்டவியமுனிவர் பத்துலக்ஷவருஷம் ஞாலாக்நிரத்தினின்று பிராணனை விட்டுவிடுவனென்று தன்னுள்ளியமனஞ்செய்துகொண்டு தவஞ்செய்து, மனுஷ்யாதி நீங்கி மிக்க சூலியாதிகளினின்று சுகமுற்றனர். கர்த்திரணுகளுள்ள ஒரு பிராமணன் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் சபித்துச் சிவாநுக்நிரகத்தால் காலவன் என்னும் புத்திரனைக் குருவின் வீட்டில் விடுத்து, மஹா ரகசியமாகவுள்ள யாகசாலையிலிருந்து, தன் மனைவியை நோக்கி, பெண்ணை ! யாராகினும் அதிதிகள் வந்தால் நாம் தனமில்லாதிருத்தலின் வந்த அதிதியைப் பூஜிக்கச் சக்தியில்லையே ; அதுபற்றி அவருக்கு நான் வெளியே போயிருக்கின்றேனெனக் கூறுகவென்று கூறியிருந்தனன். அப்படியிருக்க, ஒரு சமயத்தில் மிகப்பசியால் வருந்தும் அதிதியொருவர் அங்குவர, அப்பார்ப்பனி அவரை நோக்கி ஸ்வாமி ! என் கணவர் எங்கேயோ போயிருக்கின்றனரென, அதிதி தனது ஞானத்தால் உண்மையை யுணர்ந்துகொண்டு, பெண்ணே ! அவன் அப்படியே யில்லாமற்போகுகவென, அவ்வக்நிசாலையிலிருந்த வேதியன்

¶ மிருகமுகம் லிங்கிட சாபத்திற்குப் பங்கமின்றிச் சிவபெருமானுற் கொடுக்கப்பட்டது.

அப்பொழுதே மரணமடைந்தான். பிறகு விஸ்வாமித்திரமுனிவன் கரு ணையப்பெற்றுவந்த காலவனென்னும் புதல்வன், தாயால் கடந்தவிர் த்தந்தங்களை யழித்துகொண்டுசிவபெருமானை யாராதித்து, சாம்பவி யென் னும்யாகத்தைச்செய்ய, அதனால் தன் தந்தை உயிர்பெற்று அவ்யாகசா லையினின்றும்புறம்பேர, அவனைக்கண்டு கைகுவித்துநின்றனன். பிரா மணன் அவ்வாறு பணிந்துநிற்குங் குமாரனைக்கண்டு, நான்கிவனுக்கிதத் தால்கிருதார்த்தனுவேன். தனவானுகவும்புத்திரவந்தனுகவுமானேன். உன் னைப்புதல்வனுகப்பெற்றதால்இந்தப் பிழைத்தேனென்றான். கேட்டனை யோ கிருஷ்ண! நீயும் சமஸ்தகாமங்களையுஞ் சிவபெருமானுலடைந்தனை, இனி உனைடந்திற்குச் செல்லவெனக் கட்டளையிட, உபமன்யுமுனிவனைக் கிருஷ்ணமூர்த்தி சாஷ்டாங்கமாகப் பணிந்துவிடைகொண்டு தமதுபுவன காபுரியையலங்கரித்தனர். முனிவர்களே! அப்பரமசிவனது குணதுபவங் களை முழுமுறைத்தற்கு ஆதிசேடன்போல ஆயிரம் முகங்களையுடையவ னுயிருந்தாலும் என்னுற்சிறிதுஞ் சொல்லத்தகுமல்ல என்று ஸூதமுனி வர் சௌசாரண்யவாசிகளை நோக்கிக் கூறினர்.

சிவமஹாத்மியமுரைத்தது

முற்றிற்று.

மூன்றாவது

திரிபுரசங்காரமுரைத்த அத்தியாயம்.

சௌனகாதிமுனிவர்கள் ஸூத முனிவரை நோக்கி ஸ்வாமி! சிவ பெருமான் திரிபுரசங்காரஞ்செய்ததைப் பூர்வம் வியாஸபகவானுல் கேள் வியுற்றவண்ணம் தேவரீர் அடியேங்கட்குச் சொல்லியிருப்பினும், அதனை மீண்டும் அடியேங்கள் கேட்க விரும்புகிறுமாதலின், தயைவைத்து அதனைச் சுருக்கி யுரைக்கவேண்டும். மங்களகரமும் மஹேசுரமுமான சிவபெருமானுடைய அந்த கல்யாணகுணங்களை விசாரணைசெய்வோ ருக்கும், சிவராதனைசெய்வோருக்குமுண்டாகும்பலன்களையும் சங்கிர மாகச் சொல்லியருளவேண்டும். திரிபுராசுரர் எவ்வகிசத்தைச் சனித்தவ ரென்பதையும், அப்புரமுன்றும் ஒருகாலத்தில் ஒன்றுகூடியபொழுது ஒரே கணையால் மகாபல பராக்கிரமசாலியான சிவபெருமான் எவ்வாறு சங்கரித்தனரென்பதையும் கூறியருளவேண்டும். எனப் பிரார்த்திக்க, ஸூதமுனிவர் மகருஷிகளை நோக்கி, வேதனியாஸபகவானுல் கேள்விப் பட்டவகையே உங்கட்கு முன் கூறியவற்றைச் சுருக்கிச் சொல்லுகிறேன் கேளுங்கள். திரிபுராசுரரில் தாரகாக்ஷன் மூத்தவன்: கமலாக்ஷன் இளை யவன்: வித்யுன்மாலி இளையவன்: இவர்கள் மூவரும் சமானமான பலமுடையவர்களும் இந்திரியங்களைச் செயித்தவர்களும், உலகினை வெ

ல்ல விரும்பினவர்களும், சமதமாதிகுண சம்பந்திகளும், சத்தியவான்க ளுமாய் மேருமலையை யடைந்து, வசந்தகாலத்தில் தவஞ்செய்தற்குவே ண்டி, புஷ்பமுதலிய போகங்களையும் வீணுகானதங்களையுமுதலிய ரா தங்களையும் வெறுத்தும், கிரீஷ்மகாலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலிருந்தும், தமது மனோபீஷ்டங்களைப் பெறும்வண்ணம் அன்போடியாகஞ்செய்து மகாப்பிரதாபத்துடன் மழை க்காலத்தில் ஆறுகள் ஜலமேமேலோடவும், சரத்காலத்தில் மிக்க ரம்மிய மான கெய்முதலியவற்றும் பக்குவஞ்செய்த மனதுக்கு விருப்பந்தரத் தக்க கிழங்குகளையும் பழங்களையும் பகுதனஞ்செய்துகொண்டும், இந்தி ரியங்களைத்தாபசிதாகங்களைவெறுத்தும், பசியுடையவர்கட்குக் கந்த மூலபலங்களைக் கொடுத்தருளியும், கலங்காதமனத்துடன் ஆகாரத்தை வெறுத்தும், ஹேமந்தருதுவில் தைரியத்தால் பர்வதத்துச்சியிற் பனிசளத் தால் உடல்நனையப்பெற்றவராகி, மெல்லிய கனத்தவஸ்திரமுடையவரா யும், சிசிருதுவில் ஜலத்திலிருந்துகொண்டும் மனவிருப்பங்கள் கைகூடுமென் னு உற்சாகமுடையவர்களாய்க் கிரமங்கிரமமாகப் பெருந்தவஞ்செய்து இரவுபகலும் பொழுதுதெரியாமல் தூறுயிரவருஷங்களை கொடிப்பொ முதாகக் கழித்தார்கள். பிறகு பிரமன் தேவ முனிகணங்களாற் புடை சூழப்பட்டு அவர்கள் தவத்திற்கிரங்கிப் பிரசன்னமாகிச் சந்தோஷத்து டன் அவர்களை நோக்கி நல்லவார்த்தைகளால் தைரியஞ்சொல்லி: நீங்கள் யாதுகருதி இவ்வளவு கடுந்தவஞ் செய்கிறீர்களோ? அதனைச் சொல்லவேண்டும். யான் உங்கட்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுப் பேன். உங்கள் கருத்தை வெளியிடவேண்டும் எனக் கேட்க, அசுரர் மூவ ரும் உலகுக்கெல்லாம் பிதாமகனை பிரமதேவனைப் பணிந்து கைகட்டி நின்று, கடவுளே! இவ்வளவு பலமுள்ள யாங்களுக்குத்தகுந்தவீடு ஒன்று வேண்டியிருக்கின்றது. சத்துருக்களால் சயித்தற்கசாத்தியமானதும், சுகத் தைக்கொடுக்கவல்லதும், தேவர்களாலும் அழிக்கமுடியாததும், பொன் மயமானதுமாக விளங்கும் பட்டணத்தை விரும்பினேனெனத் தாரகாக்ஷ னும், மிகச்சிறந்த வெள்ளியாற்செய்த பட்டணம் வேண்டுமெனக் கமலா க்ஷனும், வச்சிரம்போற் கட்டியாயிருக்கும் இரும்பாற்செய்த பட்டணம் வேண்டுமென வித்யுன்மாலியுங்கேட்டனர்.

தாரகாசுரன் புதல்வர்களாகிய அம்மூவர்க்கும்கேட்டபடியேகை கூடும் எனப்பிரமதேவர்கூற, மீண்டும் அம்மூவரும் எம்மையொருவருஞ் செயிக்கமுடியாத எங்கட்கு இறவாவரம் வேண்டும் எனவேண்ட, பிதா மகன் அசுரரே! மடியாதிருப்போர் லோகத்தில் ஒருவருமிலர். கற்ப காலங்கழியின் யானும் இந்திராதிதேவர்களும் திருமாலும் இறப்போம். ஈசனொருவனேயிறவாதவன். ஆதலின் அதனையன்றி வேறேதேனும்வேண் டியவற்றைக்கேட்க எனக்கூற, அசுரர்கள் அண்ணலே! அவ்வாறுயின்

பொன் வெள்ளி இரும்பினுலைமையும் எம்மது புரங்கள் பூமி அந்தரகவர்க்க மென்னுந் திரிலோகங்களில் ஆயிரவருடத்திற் கொருமுறை யொன்று சேர்வதும், மீண்டும் விரும்பியவிடத்திற்குச்செல்வதுமாக வரமளிக்கவேண்டும். அப்புரங்கள் மூன்றும் ஒன்றுபட்டபொழுது உலகங்கட்கெல்லாஞ் சுத்தவீரனுய்த் தனக்குத்தானே சமானனுன சங்கரபகவானே வருஷகாலத்தில் ¶ அபிஜித்முகூர்த்தகேரத்தில் அழித்தாலன்றி வேறெருவராலும் இறவாதிருக்கவும் வரமருளவேண்டும் எனக்கேட்க, கமலயோனி அவ்வண்ணமே கைகூடுகவென்றுரைத்துத் தமது சத்தியலோகஞ்சார்ந்தனர்.

தாரகாசுரன் முதலாயினர் அளவிறந்த அவுணர்சேனையோடுமயன் என்னும் ஞானவத்தச்சனுல் தமது விருப்பின்படி மும்புரங்களைச் செய்து கொடுக்கப்பெற்று, தமக்கு வேண்டியதொன்றுமின்றிச் சிவபூசையைக் குறைவின்றிச் செய்துவந்தும், தமது குடிக்குணங் குறையாது வைகுண்ட முதலிய தேவ நகரங்களையும், உலகிலுள்ள பல பட்டணங்களையும் திரிபுரத்தோடு சென்று சிதைத்துவந்தமையால் திருமால் இனங்கொண்டு இந்திரன் முதலிய இமையவருடன் சென்று அசுரரை யெதிர்த்துப் போர்புரிந்து ஆற்றுமல் தேவர்களுடன் புறமுதுகிட்டுத் திரும்பி, மேருமலையிற் தவஞ்செய்து, சிவபெருமானைத் தரிசித்து முப்புராதிகள் செய்புரிந்பத்தை மொழிய, இறைவன் அவர் எம்மடியாராதலின் அவர்களை யழிக்கப்படாதென்றருளி மறைந்தனர். அதனுல் மனம்வருந்திய விஷ்ணுமூர்த்தி புத்தவடிவெற்று நாரதமுனிவரைச் சீடராகக்கொண்டு திரிபுரத்தையடைந்து அவர்கட்குப் பலவகையாகப் போதித்து அவர்களைப் பதார்த்தராக்கினர். அவர்களில் மயக்காது நின்றேர் மூவரே. நாரதமுனிவர் பதினேராதர்மத்தாற் பயனில்லையென்று போதித்து எங்கையாலெல்லாம்மறியக்கினர். புத்தனும் கூடுவதுமன்றுசீடர்களைநோக்கித் தமது மாயையிலகப்படாதமூவரையுங் கொடியோரென்று கூறி, அவர்களை முதலம்பனஞ் செய்யாவண்ணம் வற்புறுத்திவிட்டு மேருமலையையடைந்தனர். திருமால் சிவபெருமானிப்பணிந்து ஸ்வாமீ! அவர்கள் வேதவிருத்தர்களை பிருத்தலின் இனியேனும் தேவரீர் அவர்களை பழிக்கவேண்டும் என வேண்ட, சிவபெருமான் விஷ்ணுவே! அவ்வசுரரின் மனைவிப் போர்க்கருவிகளைச் சித்தஞ்செய்யக்கடவை என்றருளிச்செய்ய, விஷ்ணுமூர்த்தி தேவர்களுடன் யோசித்து, ¶ இரதம்வில் அம்பு சூதினை முதலியனவாகத் தேவர்களையும், இரதசாரதியாகப் பிரமனையும், பிறகருவிகளாகப் பிறதேவர்களையும் நியமித்துக்கொண்டு, சிவசந்நிதியில் விண்ணப்பித்தனர். அவர் வேண்டுகோளுக்கிரங்கிய சிவபெருமான் உமாதேவியாருடன் ரதாரூடராய் விநாயகர் சுப்பிரமணியர் பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள் சதுர்தம வாகனங்களில் ஏறிப் புடைசூழ்ந்துவரவும் சத்தரிஷிகள் ஆசீர்வதிக்கவும் ருஷிகன்னியர் மங்கலப்பாட்டுப் பாடவும் திருநந்திதேவர் பொற்பிரம்பேந்தி முன்செல்லவும், பானுகம்பன் வானன் சங்குகர்ணன் முதலியகணநாதர்கள் வாத்தியஞ்செய்யவும், திரிபுரத்தையடைந்தனர். அப்பொழுது புரங்கள் மூன்றும் ஒன்றுசேர்ந்து சரத்கால சந்தியுதயத்தைப்போலிருக்க, தேவர்கள் சிவபூஜைசெய்ய இவர்களை வெல்ல இதுவே சமயமென்றனர். சிவபெருமான் மேருவையே வில்லாவணித்து வாசுகியாகிய நாணேயேற்றி, அக்கினியைக் கூர்வாயாகவும் வாயுவைச்சிறகாகவுஞ் சேர்க்கப்பட்டுள்ள திருமாலாகிய அம்பினைக் கையிலெடுத்தனர். போர்க்கருவிகளாக அமைந்திருந்த தேவர்கள் யாவரும் தம்மிலேயே திரிபுரதகனம் நிகழ்வதாக இறுமாந்தனர். அதனை யுணர்ந்த எம்பெருமான் அவ்வஞ்சனைத்தைப் பிரயோகஞ்செய்யாமல் புன்னகை செய்தனர். அதனுல் புரமூன்றும் பொடியாயின. முனிவர்களே! நீங்கள்கேட்ட விஷயங்களைச் சுருக்கிச் சொன்னேனென்று ஸூத முனிவர் கூறினர்.

திரிபுரசங்காரமுரைத்தது

முற்றிற்று.

நான்காவது

அந்தகாசுரன் கதையுரைத்த அத்தியாயம்.

வேதவிசாரணைய வாசகளாகிய சௌநகாதிமுனிவர்கள் ஸூதமுனிவனேநோக்கி, ஸ்வாமீ! நாங்கள் சொல்லிய சிவசரித்திரங்களைக் கேட்டு ஆனந்தித்தோம். பரமாத்மாவாகிய சிவபெருமான் அந்தகாசுரனைச் சங்கரித்தாரல்லவா? அவ்வசுரன் உலகத்திலே யாவ்வம்சத்தில் பிறந்தவன்? அவன் யாவனுடைய புதல்வன்? அவன் எவ்வாறு கொல்லப்பட்டான்? இந்த விபரங்களையெல்லாம் வேதவியாஸ்கவானுல் நாங்கள் விசாரித்துணர்ந்துவண்ணம் கிரமமாக அடியேங்கட்குச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கேட்க, ஸூதமுனிவர் அவர்கள் விருப்பத்தையுணர்ந்து அவர்களை நோக்கி, ருஷிகளே! லோகோபகாரனுகிய சிவபெருமானுடைய விழிகளே ஒருகாலத்தில் மந்தராசலத்திலே ஜகன்மாதாவாகிய பார்வதிதேவியார் மாந்தளிர்போன்ற கரங்களால் விளையாட்டாக மூடினர். அவ்வாறு மூடிய ஓர் விநாடியிலே உலகமெங்கும் அந்தகாரம்பிறந்தது. அவ்வாறு சிவபெருமானது கண்களைமூடிய பார்வதிதேவிக்கு உடனே உண்டான அச்சத்தால் வெயர்வுண்டாயிற்று. அவ்வெயர்வானது எம்பெருமானதுவலாட நேத்திரமாகிய அக்கினியாற் சூடுண்டு அவ்விரலிலேயே பயமுறத்தக்கதும் கொடுமையானதும் குரூரபுத்தியுடையதுமான ஒரு கர்ப்பமாயிற்று. அவ்வகைய கர்ப்பத்தால் விலகுனமும் விருபமும் ஆடமுடியும் தாடியையும்

¶ அபிஜித் – சத்திரபுஷ்ய நக்ஷத்திரம்.

¶ இரதம் வில் முதலியவற்றின் கிரமமுக்கியம் ஞானசம்ஹிதையில் முன் வந்துள்ளவிடத்திற் பரக்கக் காண்க.

கருமையும் சுருண்டு நெரிந்தமயிரும் அழுகையும் சிரிப்பும் பாடலும் நடித்தலும் பரித்தாற்போன்றும் பிரளயகாலமேகம்போன்றுங்குரலுமுடைய ஒருவன் ஜனித்தான். பகா ஆக்கியமான வருவைத்தோதித்த அவனைச் சிவபெருமான்கண்டு பார்வதியைநோக்கிச் சிரித்து, பெண்ணே! என் விழிகளே நீ வேடிக்கையாக மூடி இவ்வகையாக ஒருவனைப்பிறப்பித்துளன்னைப் பயப்படுத்துவிளைத்தாயா? என விநோதமாகக்கூற, பார்வதிதேவியும் வார்த்தைகட்குச் சிரித்து அவனைநோக்கிமெதுவாகக் கைகளினால்மெத்தித்தனர். இவ்வகைய கோரரூபத்துடன் அந்தகாசுரத்தாற் பிறக்கலின் அவன் கண்ணில்லாத அந்தகனுகவிருந்தான். அப்பொழுது மகாதேவி மகாதேவனை நோக்கி ஸ்வாமி! இவன் யாவன்? குருவுறவும் விருபியாயிருக்கிறன். எந்தவிதத்தால் இவன் இவ்வாறு ஜனித்தான்? இவன் யாருடைய புதல்வன்? இத்தவண்மையைச் சொல்லவேண்டுமென எனக்கேட்க, சிவபெருமான் சொல்லுகின்றார்.

பார்வதி! இவன் மகாபராக்கிரமசாலி. என்னிடமினின்றும் முடிவேயில்லாத இப்பொழுது உன் கையிலிருக்கின்றானே அந்தகனென்னும் பெயர்பெற்றவன். இவனுக்குத் தந்தையானேன். நீ அதுகுலைந்தியோடு உன் கருசனித்தமாய் இவனை ஒருவருமும் சேர்க்கவேண்டுமென எனக்கூற, பார்வதிதேவி சிவபிரானுமாற்கட்டளைப்படி தோழிகளோடுகூடி அவ்வந்தகனைத்தன்புதல்வனே போலவே பாதுகாத்துவருகையில், இலகான் கழித்தின்னர், உலகத்தில் ஹிரண்யாகூன் என்னும் அசுரன் தனக்குப் பத்திரனின்மையைத்தையடைந்து தேகமெல்லாம் இளைக்க இராக த்வேஷங்களின்றி சிவதரிசனத்தை விரும்பிப்பெருந்தவஞ்செய்ய, சிவபெருமான் அவன்தவத்திற்கிரங்கினித்து அவன் தவஞ்செய்யுமிடத்தினின்றும் புறப்பட்டு, பருசேந்திரியங்களையடக்கி இவ்வகையதவம் யாதுகருதிச் செய்கின்றனை? உனக்குவேண்டிய வரத்தைக் கேள்; மொழிப்பீடனை, ஹிரண்யாகூன் சாலேகவரர்! எனக்குப் பராக்கிரமசாலியும் அசுரருலத்தை யாதரிப்பவனுமாகிய புத்திரன் வேண்டுமாதலின் இவ்விரண்டரத்தை ஆசியயிக்கிறேன். அவாவியவாறே யருளுகிறதை செய்யவேண்டும். என் தமையனுக்கு பிரஹலாதாதி நால்வர் புதல்வருளர். எனக்குமட்டிலுந் சந்ததியில்லாவிடில் என் கவலைதீராது சமயநிந்தை இராச்சியம் யாதாகும்? பிறனொருவனுடைய இராச்சியத்தைப் பராக்கிரமத்தாற் சம்பாதித்து, தந்தையின் இராச்சியத்தை பாதாளத்துக்கொண்டு வருகிறவனே புதல்வன். அவ்வகைய புதல்வருலகிலே அவனைப்பெற்றோன் பாக்கியவானே. தர்மசாஸ்திரங்களாகிய முனிவர்களாலே "அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி" என்னுஞ் சுருதியால் புத்திரனே ஈற்றுகதிக்குக் காரணமென்று கூறப்படுதலின், சமவதமானவர்களும் புத்திரப்பேற்றினைக் கிறந்ததாகக் கொண்டாலிவர். எனக்குக் கிரிடாதிபதிநீர் எண்மரிருப்பினும் என் நம்ம பதினியிடம் ஒரு புத்திரன் உண்டாகவேண்டுமென் னெப்பிரார்த்திக்க, சிவ

பெருமான் அன்னார்த்தைதட்கு மனங்களித்து, ஓ தைத்தியாதிபனே! உன் விரியத்தாற் மனித்தபுத்தின் உனக்கிருக்கமாட்டாதுதனின், எனக்குப் புத்திரனுயிருப்பவனும் உனக்குச்சமானமான பராக்கிரமமுடையவனும் பிறர் ஒருவராலுஞ் செயிக்க ஆசாத்தியமானவனுமான அந்தகன் என்னும் புத்திரனை நீ பெறுக. துக்கத்தைவிடுக எனத் திருவாய்மலர்ந்தருளி, உக்கிரனும் திரிபுராரியும் தூகாசுரனும் உமாதேவியிலவனுமாகிய சிவபெருமான் அந்தகனை ஹிரண்யாகூனுக்குக் கொடித்தருள, ஹிரண்யாகூன் அந்தகனைப் பெற்றுக்கொண்டு, பரமசிவனையும் பார்வதிதேவியையும் பிரதகினமஸ்காரஞ்செய்து பலவிதமான தோத்திரங்களால் துதித்து, சிவபெருமானிடம் விடைகொண்டு தனதிராச்சியத்துக்குவந்து, அந்தகனை ராஜதலத்திலே பிரதிஷ்டித்து, தேவர்களையெல்லாஞ் செயித்து உலகமூருவதையும் பாய்போலச் சுருட்டிக்கொண்டு தனது பாதாளத்திற்குச் சென்றான். அதனைக்கண்ட தேவர்களும் ருஷிகளும் ஒன்றுகூடி விஷ்ணுமூர்த்தியை வேதோத்தமமாகப் பூஜிக்க, திருமால் ப்ரீதராகி அவதாரஞ்செய்து, மஹாபராக்கிரமசாலியாக மூக்கினருகுள்ள தந்தங்களால் தோண்டிக்கொண்டு பாதாளத்தையடைந்து, தனது தந்தமுதலியவற்றுலும் கோரைப்பற்களாலும் பலமுறை அசுரனைச் சூன்னித்து, வஜ்ராயுதத்திற்குச் சமானமான கால்களின் அடியால் அசுரசேனையை அநேகமுறையழித்து, கோடிசூரியப்பிரகாசமான தனது சுதர்சனமென்னுஞ் சக்கரத்தால் ஹிரண்யாகூனைச் சங்கரித்து, அவனேறுருத்த துஷ்டர்கள் யாவரையும் நாசஞ்செய்தொழித்து, இறந்த ஹிரண்யாகூன் மகனைய அந்தகாசுரனைப் பாதாளலோகாதிபதியாய்ப் பட்டாபிஷேகஞ் செய்து சிறுத்தி, ஹிரண்யாகூன் பாதாளத்திற்குக் கொண்டுபோன பூமியைத்தன் கொம்பின்மேல்வைத்து எடுத்துக்கொண்டு வந்தபழைய படியேயிருக்கின்ற தன்னுவைகுண்ட பதவியை யடைந்தனர்.

சௌனகாதி முனிவர்களே! அதுமுதல் அந்தகாசுரன் உலகமுழுவதும் அரசுசெலுத்திக்கொண்டிருக்கையில், பிரமதேவர் அங்கடைந்து அந்தகனுக்குத்தரிசனங்கொடுக்க, அவன் பலவிதமாகத்துதித்துப்பணிய, கமலயோனி அந்தகனே! உனக்கு யாதுவரம்வேண்டுமென்ன, அந்தகனும் அஞ்ஞானத்தால் அந்தகன் கொல்கின்றான். ¶ பிரபிதாமகரே! எப்பொழுதும் என்வகைய அஸ்திரசஸ்திர பாசவஜ்ராதியுதங்களாலும், மங்களாலும், மலைகளாலும், ஜலத்தினாலும், அக்கினியினாலும், சத்துருக்களாலும், சுவர்க்க மத்திம பாதாளங்களிலும், இரவிலும் பகலிலும் சந்தியாகாலங்களிலும் எனக்கு மிருத்யுபயமில்லாதிருக்க வரங்கொடுத்தருளவேண்டுமெனக் கோர, பிரமதேவர் அவனைநோக்கி அந்தகா! யான் அவ்வாறே யுனக்கு

¶ பிரபிதாமகன் = பாட்டனுக்குத் தந்தை. பிரமன் மகன் = காசிபன். காசிபன் மகன் = ஹிரண்யாகூன். ஹிரண்யாகூன் மகன் = அந்தகன். இது முறையென்க.

வரங்கொடுத்தேன். நீ எட்டுக்கோடிவருஷம் தானவராச்சியபரிபாலனஞ் செய்வாய் என்றுகூறித் தனது சத்தியலோகமடைந்தனர். இவ்வாறிருக்க, ஹிரண்யாக்ஷன் இறந்தமையாலும் அந்தகாசுரன் இராச்சியாபிஷேகஞ் செய்யப்படினும் அந்தகனுயிருந்தமையாலும், ஹிரண்யாக்ஷன் தம்பியாகிய ஹிரண்யகசிபனை அரசனுயிருந்தமையில் அவன் கதையை யிடையிலே சொல்லுகிறேன் கேளுங்கள்.

முனிவர்களே! ஹிரண்யகசிபன் தர்மங்களை யெல்லாம் மழித்துப் போர்செய்து தேவர்களையெல்லாம் ஜெயித்துத் தன்புறஞ்சேர, இந்திரனுதலிய தேவர்கள் க்ஷீராப்தியையடைந்து அங்கே யோகநித்திரையிலிருக்கும் திருமாலைக்கண்டு பலவிதமான தோத்திரங்களால் துதிசெய்ய, திருமால் சந்தோஷித்து, அமரர்களே! உங்களுக்கு யாது வேண்டும்! எனக் கூறி உணர்ந்து, சூரியகாந்திபோல் விளங்கும் திருமால் அவர்களை யாதரித்து, ஜடையும் வக்ரதரங்களும், கோரைப்பற்களும், கூர்மையான நகங்களும், சிறந்த மூக்கும், குகைபோலத் திறந்துகொண்டிருக்கும் வாயும், கோடிசூரியப்பிரகாசமும், கல்லகோரவடிவமும், பிரளயகாலாக்கினிபோன்ற வடிவமுமுடைய வர்ணிக்கச் சாத்தியமில்லாத நரசிங்கவதாரமெடுத்து, சூரியாஸ்தமானவேளையில் அசுரர் புரத்தை யடைந்து அங்கிருந்த அசுரர்களைப் போர்புரிந்து வதைத்து, அதனுள்ள பிராகாரமத்தைக் காண்பித்துக் கிலியிடுவெனச் சுழன்று, வளங்களை யழித்தும், வனகாவல்களை வதைத்தும் விளங்கும் விஷ்ணுமூர்த்தியை அங்கிருந்த அசுரர்கள் இங்கமேயென் றெண்ணித் திகைக்கையில், பக்தனுகிய பிரகலாதன் மாத்திரம் இவர் ஸ்ரீமந்நாராயணனே யென்று கருதி, ஹிரண்யகசிபனை நோக்கி இந்த சிங்கமன்று யுத்தஞ்செய்வதிற் பலமில்லை: இவர் விசேஷர்; தடுக்குணர்வரிய சம்பிரமர்; முடிவில்லாதவர்; அவ்வகைய நாராயணனே உன்று ரகாத்தை யடைந்தனர். ஆதலின் யுத்தத்தை நிறுத்தி, அந்த நரசிங்கத்தை நீ சரணமடைந்தால் திரிலோகங்களிலும் அகண்டமான ராச்சியத்தையும் அனுபவிப்பாய். அவரைப் பணியவேண்டுமெனக்கூற, ஹிரண்யகசிபன் கோபித்து, அடா பிரகலாதா! இந்நரசிங்கம் எனக்கெவ்வளவு? இதற்கு நீ பயந்தனையா? என்று சொல்லி, தன்னருகே நிற்கும் சேவகர்களைப் பார்த்து நீங்கள் இந்தச் சிங்கத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டுமென, சேவகர்கள் யாவரும் நரசிங்கத்தை யணுகித் தீயினையடைந்த சருகுபோலச் சாம்பராயினர்கள். அதுகண்ட ஹிரண்யகசிபன் அஸ்திரசஸ்திரபாசாங்குச ஆக்நேயப்படை முதலிய படைகளால் நரசிங்கமூர்த்தியோடு ஒருமுகூர்த்தகாலம் யுத்தஞ்செய்து, இறுதியில் இருவரும் சமானமான மல்யுத்தஞ்செய்தனர். அது உலகினருக்குப் பெருங் கஷ்டமாயிருந்தது. ஹிரண்யாக்ஷன் சூலத்தால் பெருங்கடினமான போர்செய்கையில் சிங்க மூர்த்தி கோபமிருந்து அவரது கையிலுள்ள நகங்களால் அவனைக் கழுத்தைத்

குத்திப் பிளந்து கொன்றனர். இறந்துவிழுந்த அவனுடலைப் பலவிதமாகத் தும்சஞ்செய்து உதிரப்பெருக்கோடையில் அதனைச் சூர்ணஞ்செய்தனர். ஹிரண்யகசிபன் இறந்தபின்னர், பிரகலாதன் நமஸ்காரங்கள் செய்துகொண்டிருக்கும் பிரஹலாதனைக் களித்துக் கோபசாந்தியாய் அழைத்து அன்புடன் அவனுக்குத் தந்தையின் இராச்சியத்தை முறைப்படி பட்டாபிஷேகஞ் செய்வித்து, உலகமுழுவதும் விஷ்ணுபக்தியைப் பிரசித்தஞ்செய்பனைக்கித் தனது வைகுண்டபதவியை யடைந்தனர்.

அதன்பின்னர் பிரகலாதன் முதலிய சகோதரர்கள் வேடிக்கையாக, ஓ அந்தகா! உன் தந்தையாகிய ஹிரண்யாக்ஷன் அஜ்ஞானத்தால் பலகாலம் மேருமலையின் குகையிற்சிவபெருமானை நோக்கித்தவஞ்செய்து அவரது கருணையால் விரும்பும் கோரமுங் குரூபமாயிருக்கும் உன்னைப் புத்திரனுக வரம்பெற்றனன். நீ உன் தந்தையின் இராச்சியத்திற்குரியவனல்லன். வேறியாருக்காவது புத்திரனுகாமற்போயினை எனக்கூற, அந்தகன் அவற்றைக்கேட்டு, மனதிலேயே யோசித்து வருந்தி, தன் வாய்மொழியால் அவர்களுக்கேற்ற சமாதானஞ்சொல்லி, ஒருநாளிரவில் வனத்தையடைந்து, அநேகவருஷங்கள் ஒற்றைக்காலினின்று ஆகாரமின்றிக் கையை யுயரவெடுத்துக்கொண்டு தேவாசுரர்க்குச் செய்யமுடியாத ஜபதபஞ்செய்தும், பின்னர் ஒருவருஷகாலம் கூர்மையான அம்புகளால் தன் தேகத்தைச் சிறுதுண்டுகளாகக் கொய்து நிவேதனமும் யாகத்திலிட்டும், உதிரஞ்சொரியுமெலும்புமாத்திரமிருக்கப்பெற்றவனுனன். அப்பொழுதும் பிரமன் பிரசன்னமாகாமையின் எஞ்சிநின்ற எலும்பினையும் ஹோமஞ்செய்ய உத்தேசித்திருந்தனன். அதுகண்ட பிரமதேவன் அவனுக்கு வரங்கொடுக்கவருதிவருகையில், வழியிற்கண்ட தேவகணமும் மகிழ்ந்தனும், ஸ்வாமி! அவன் மகாபாவி. அவனுக்கு வரங்கொடுத்தாற் பெருந்தீமைகளுண்டாகும். கொடாவிட்டால் அவன் எலும்புகளையும் தெருப்பிச் போட்டொழிவான் எனத் தடுப்பவும், கேளாமல் அந்தகனை யடைந்து, அந்தகா! நீ வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள் என, அந்தகன் அகங்களித்து நமஸ்கரித்து, மகபல சாலிகளாகிய பிரகலாதனுதி என் தம்பிமார்களால் இராச்சியம் கைக்கொள்ளப்பட்டதனால், அம்மூவனக்குக் கைகூடவும், அவர்கள் என் சேயர்களாகவும், யான் கண்பெறவும், இந்திராதிதேவர்கள் எனக்குக் கப்பங்கட்டவும், தேவராகஞ்ச கர்தர்வ யக்ஷ மாதுடர்களாலும் என் தந்தையைக்கொன்ற நாராயணனுலும் இன்னும் வேறுவகையாலும் இறவாமலும் வரங்கொடுக்கவேண்டுமென்று கேட்க, பிரமதேவர் அந்தகா! உனக்கு யாதுங்கைகூடுமாயினும் இறவாதிருக்க முடியாது. அவ்வாறு இறவாதவர் திரிகாலங்களிலுமிலர். உலகத்திற் சத்புருஷர்கள் தீர்க்காயுவையிரும்பமாட்டார்கள் எனத் தந்திரவார்த்தை கூற, அந்தகன் முக்காலத்திலும் உள்ளவனும், மகாதிரேஷ்டமும், உத்தம மத்திம வயசும், அதிசுந்தரமுமான ஸ்திரீ

களுக்கிடையில், மஹா அலங்காரப்பூதமாகியும், எனக்குத் தாயாகியும் மனவாக்குக்காயங்களாலும் பாலிக்கப்படாதவளாகியும் யான் மோகிக்கையில் எனக்கு நாசமுண்டாகுக எனக்கூற, பிரமதேவன் புன்சிரிப்புடன் அவ்வாறே யாகுகவென்று வரங்கொடுத்து, இனி லக்ஷ்செயலொழிக. பல பராக்ரமசாலியாய்ப் போர்செய்ய வல்லவனுவாய் என, அந்தகன் கால் அஸ்தி சேஷமாயிருத்தலின் எண்ணத் தங்கள் திருக்கரத்தாற் பரிசித்துப் பூர்ண தேகமுடையவனைக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, பிரமன் அவ்வாறே செய்து தனது சத்தியலோகமடைந்தனன். அந்தகாசுரன் தான் பெற்றுக்கொண்ட வரத்தின் விசேஷத்தால் கண்களையும் பூர்ணதேகத்தையும் பெற்ற வல்பத்தையும்பெற்றுத் தனது நகரத்தையடைந்தனன். இவனைக்கண்ட பிரகலாதனுதியோர் இவன் பிரமதேவனுல் வரம்பெற்றுள்ளானென்றுணர்ந்து அவனை யெதிர்க்கமுடியாமல் அரசாட்சி முழுவதையும் ஒப்புவித்து விட்டு அவனுக்கடங்கியிருந்தனர்.

பின்னர் அந்தகாசுரன் சுவர்க்கலோகத்தைச் செயிக்கக்கருதி, தன் பரிசனங்களுடன் சுவர்க்கலோகத்தை யடைந்து, தேவர்களையும் அவர்கள் சைனியங்களையும்வென்று, இந்திரனைக் கப்பங்கொடுக்கச்செய்து, நாகர்களையும் ¶ வேடர்களையும், அசுரர்களையும், கந்தர்வர்களையும், யக்ஷர்களையும், மலைகளையும், பர்வதவிருக்ஷ முதலிய வெல்லாவற்றையும், சிக்கமுதலிய சதுஷ்பாத ஜந்துக்களையும்பொருந்திய திரிலோகத்தையும் பரிபூரணமாகச் செயித்து, அவர்களில் அதிருபசுந்தரியமான பாரிய வயத்துள்ள மங்கையர்கள் தாற்றுவார யபகரித்து, சாதலத்து ஸ்திரீகளைப் பூலோகத்திற் கொண்டுவந்து சுவாதீனப்படுத்திக்கொண்டு, சுகந்தமான நதி தீரங்களிலும் பல புஷ்பங்களொடு விளங்குகின்ற வனங்களிலும் பூந்தோட்டத்திலும் விளையாடுகின்ற ஸ்திரீகளைத் தேடித்தன்வசமாக்கிக்கொண்டிருந்தான். அன்றியும் உருசியான பழங்களையும் மதுவையும் அமிர்தங்கையாட்கொண்டு. அவர்கள் புசித்து எஞ்சியதைத் தான் உட்கொண்டும், விமரிசைகளங்களிலிலும், மயனால் நிருமிக்கப்பட்டு மலர்மணங்கமழும் திவ்விய மாடமாளிகைகளில் மதனசுமுறைப்படி அவர்களைக்கூடியும், அநுதினமுல்லாசம் கழித்தனன். இதுவாயில் அந்தகன் பரார்த்தமானவினை ஒருதலைவருஞ்செய்ததேயில்லை. தன் புதல்வரிற்பிறந்தவர்களைக் குதர்க்கவாதத்தால் வேதபாஹ்யர்க்க விரோதிகளாக்கித் தனக்குற்ற சேவகியத்தால் ஆனவிகிருதி, வேதபாரகராகிய பிராமணர்களையும், தேவர்களையும், குருவையும் மதியாது மரணம் அகிலாகில் வருகின்றதென்பதை யுணராது உலகமுழுதும் தன் சைனியங்களுடன் யாத்திரைசெய்து அநேககோடி வருஷங்கள் சக்தோடமாகவேயிருந்தனன். அவ்வரிருக்கையில் விதேதார்த்தமாக ஓர் சமயத்தில் மந்தரமலையை யடைந்து, ஆங்கு மகாப்பிரதாபத்துடன் சுவர்க்கலோ

¶ தேவயோனி விசேஷம்.

கத்தையொத்த குகையொன்றினைக்கண்டு, தன் சைனியத்துடன் மதுபானஞ் செய்து வெறிகொண்டு அங்கே யாடியும் பாடியும் இதுகாம் விரித்தற்குத் தக்கதென்று கருதி ஆங்கிருந்த தீர்மானித்து, அதிவிசாலமான நகரமொன்று நியமித்துக்கொண்டு, அம்மந்தரகிரியின் குகையில் மயனால் நிர்மாணஞ்செய்யப்பெற்ற அரசகரத்தில் சுகப்பிரவேசஞ்செய்தனன்.

சௌனகாதிமுனிவர்களே! அந்தகாசுரன் இவ்வாறு அங்கநகரத்திற் சிலகாலம் ஆனந்தத்துடன் கழித்தபின்னர், அவன் மந்திரிகளாகிய துர்யோதனன் லம்பலன் ஏனஹி யென்னுமிவரும் அதிசுந்தரமான ஓர் மங்கையைக்கண்டு விரைவுகாலத்திற்கும்வினாத்து அந்தகனையணுகிச் சொல்லலாயினர்:—யாங்கள் விசேஷமாக விசாரஞ்செய்துபார்க்கையில் ஓர் குகையையும், அக்குகையில் தபோயோகத்திலமர்ந்து விழிதிறவாமூடிக்கொண்டிருக்கும் வெறுமுருடன் அர்த்தசரீரமும் அலங்கரிக்கப்பெற்ற தலைமயிரும், இடையிற் புலித்தோலுடையும், ஜபசரமுடைய பஞ்சமுடிகளால் அலங்கரிக்கப்பட்ட தேகமும், சுபாலமாலிகாபரணமும், ஜடையும், வையில் சூலமுதலும், தோளில் அம்பருத்தூணியும், விசம்பொருந்திய வில்லும், ஜபமாலையும், கட்டமும் யோகதண்டமு முடைய ஓர் முனிவனையுங் கண்டோம். அவன் சமீபத்தில் ருஷபமுகமும் அதிசோரமும் நிறைவாயும் சர்வாபரணமும், நிகரனமாகரத்தியும் வெண்ணிறமுமுடைய ஒருவன் அம்முனிவனுக்குப்பணிவிடைசெய்கின்றனன். அவ்வாறுயோகத்திலிருக்கும் முனிவனுக்கருகில் கல்ல திவ்வியரூபமும், யவ்வனபருவமும், மிருதுவான இனியவசனமும், பவனம் கலமனிகள் முத்துகள் இரத்தினங்கள் வள்ளிகள் பொன் மலர் மாலைமுதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட திவ்வியதேகமுடைய மாதர்களுட்டோன்றுதற்கரிதாகிய ஓர் பெண்ணைக் கண்டோம். அவளைத்தைக் கண்டவளே கணவனாப் பெற்றதனாலன்டான பலனை யடைவான். அவளைக் காணுதவன் கண்கள் பயன்பெறுவாதவில், அம்முனி மன்றத் தேவலோகஸ்திரீயென்று காங்கள் நிஜத்தோம்—எனறனர். இவ்வாறு கூறிய மந்திரிகளின் வார்த்தையைக்கேட்ட அந்தகாசன் மன்மதபாணங்களால்காமாதுரமுற்று, மந்திரிகளே! நான் சொல்லும் வார்த்தைகளை அம்முனிவனிடஞ் சென்று சொல்லவேண்டுமென்று கூறி விடுப்ப, அவர்கள் அவ்வாறே அம்முனிவரிடத்தை யடைந்து கூறலாயினர்.

முனிவனே! தைத்தியபாஜனன் அந்தகாசுரன் சரித்திரத்தைச் சொல்லுகிறோம். அதனைக் கேட்டுக்கொண்டு உன்னுடைய சமீபசரத்தையுஞ் சொல்லவேண்டும். அந்தகாசுரனே ஹிரண்யாக்ஷனுடைய குமாரன்; மகாத்மா: யோவன்? இவ்வேனிருக்கின்றனீ? இளம்பருவமும் பேரழகுமுடைய இப்பெண் யாவள்? யோசித்துப்பார்க்கையில் உன்மனமெவ்வாறு நினைக்கின்றதோ, இவருடைய மெல்லியதேகமோ அதிசோமளமானது: உடல் முழுதும் பன்மதாரணஞ்செய்த என்புமாலையை ஆபரணமாகப் பூண்டனன்

ஏ விரூபி! அம்பரூத்தூணி வில் அஸ்திரம் டமருகம் சூலம் மழு தோமரம் முதலியவற்றை யேந்தினை. உன்தேகத்தில் ஓர்நதி பிரவாகிக்கின்றது. சந்திரனொருவனிருக்கின்றன். முகத்தில் கோரமான நெருப்புப்பிரகாசிக்கின்றது. சர்ப்பங்கள் உன்மேல் உலாவுகின்றன. எருதுவாகனத்தை எதிர்நிற்கவைத்துக்கொண்டு அதனை எந்நேரமும் பார்த்துக்கொண்டிருக்கின்றனை. தர்மவான்போலத் தியானயோகத்திலிருக்கின்றனை. உன் உளவுகள் எவையென்றுந் தெரியவில்லை. இப்படிப்பட்ட சாமானியனை உனக்கு அந்த சௌந்தர்யமான மங்கையுடன் சம்பந்தமானது விருத்தமாகவிருக்கின்றது. ஆதலின் எங்கள் பிரபுவான அந்தகாசுரனுக்கு அவனை நன்மையாகவே கொடுத்துவிடு. அப்படி நீ யிப்பொழுதே கொடாவிடில் அவன் திரிலோகங்களையுஞ்செயித்தவனுகலின் அவனைப் பலாத்காரமாகக் கொண்டுபோய்விடுவான். இதில் றடையில்லை. எங்கள் சொல்லைக்கேட்டு உன்னுடைய அஸ்திரசஸ்திரங்களையுவிடுத்து இவ்வணங்கினை யர்தகனுக்களித்து அதன்பின்னர் அருந்தவஞ்செய்க. இவ்விஷயம் நீ ஒத்துக்கொள்ளாத பக்ஷத்தில் யாங்கள் உன்னுடைய கருத்தை அந்தகாசுரனுக்கறிவிப்போம். அப்பொழுது உன்உடல் உனக்கு நிலைக்காது என்று கூறினர். அதனைக்கேட்டமுனிவேடங்கொண்ட சிவபெருமான் புன்சிரிப்புடன் அசுரர்களே! சிவபெருமானிருக்கும் பக்ஷத்தில் என்னுடனும் உங்களாலும் என்ன நடக்கலாம்: என்தந்தை பொருவனுமிலன். அவனை நானறியேன். இக்குகையிலிருந்து ஏதோவொன்றை ஸ்மரித்துக்கொண்டிருக்கிறேன். இதுவே யென் பாசுபதவிரதம். நான் தாயையறியேன். என் விரதமிது. இது விலக்கற்பாலதன்று. என் தவத்திற்குச் சித்திபூதமாகவிருக்கும் இச்சுந்தரவதியே என் மனைவி. உங்கட்குச்சாத்தியமானால் அவளைக்கொண்டுபோகலாமென்று கம்பீரமாகச்சொல்ல, அதனைக்கேட்ட அசுரர்கள் அம்முனிவனைப்பணிந்து, திரிலோக நாசகனுகவிளங்கும் தங்கள் அரசனை அந்தகாசுரனை யடைந்து, மதுபானத்தால் நன்மை மறந்து புரளும் அவனை நமஸ்கரித்துச் சொல்லலாயினர்.

அரசனே! அங்கிருப்பவர்களும் அம்முனிவனும் ஆ ஆ அந்த அந்தகாசுரனெவ்வளவினன்? அவன் வலிமை யெத்தகையது? என்று புன்சிரிப்புடன் கேலியாக, ஜயஜயவென்று கூறினர். எனக் கூறிய மந்திரிகள்பேச்சைக்கேட்டு, குரூரனும் மகாபாபியுமான அந்தகாசுரன் சிரித்து அசுரனென்னுஞ் சாமானியனு? என் பெயரைக்கேட்ட இயமனும் அஞ்சுவான் இமாசலம்போன்ற புயங்களையுடைய எனக்குச் சமானமான வீரனெருவன் உலகிலுளனு? என் பாணங்களுக்குச் சமானமான பாணங்கள் யாவரிடத்திருக்கின்றன? இயமனும் அஞ்சுமாறு போர்புரியவல்லேன். மிகப்பருவத்தால் உடல்வளர்ந்த அவ்வீரகளுடைய சேவகனெங்கே? மகாபலசாலியானுவனெங்கே? மந்தபாக்கியனை அம்முனிவனுக்கு மகாரூபவதியான அந்தப்பெண் தருகிறா? என்று கூற, மந்திரிகள் அரசனே! அம்முனி

வன் வார்த்தைகளையெல்லாஞ் சொல்லுகிறோம். உம்முடைய பலம் எவ்வளவு? யான் பெருந்தவஞ்செய்து பிறந்த பலனை யடைந்திருக்கிறேன். கூடமாஞல் என்னை யெதிர்த்து உங்கள் வலிமையைக் காட்டலாம். வஜ்ராயுதம் போன்ற பாணங்களிருக்கின்றன. உங்கள் தேகங்கள் மிருதுவானவையென்றும் அம்முனிவன் கூறினனுதலின் நீ அம்முனிவனுடன் அஸ்திர யுத்தஞ் செய்வது யுக்தமல்ல. அம்முனிவன் மகா கர்வமுடையவன். பலவிதமான யோசனையாற் பயனென்ன? அம்முனிவனை யெதிர்த்தால் நீ அபஜயப்பட்டுப் பலராலும் ஸ்மரிக்கப்படுவனுவாய் என்க் கூறினர். அவ்வாறு கூறிய மந்திரிகள் வார்த்தையால், அந்தகன் மானத்தால் ரோஷமுற்று, கெய்சொரிந்த யாகாக்னிபோலக் கொதித்தெழுந்து அம்மந்திரிகள் வார்த்தை சத்தியமாயினும் தனக்கு இதமாயிராமையின் கபடமாகக்கருதி, கட்கத்தைக் கையிலேந்தி, எனக்கு ஸ்திரமான வரமிருக்கையிற் பயமென்ன? என்று பெருந்தொனிசெய்து, மதுபானம் விசேஷமாகச் செய்து, கட்டுடையாளும் கோபத்தாலும் கண்கள் சிவந்து, மதயானைபோல நடந்து அக்குகையை யடைந்து, திரிநேத்திரதாரியும் சிவபெருமானது சாரூபதமாகிய உமாபிராட்டியர்பாகனும், சிவபெருமானையும் அவர் கரத்திலிருந்த அஸ்திர சஸ்திரங்களையும் சுந்தரவதியையும் ஒரேபிடியாகப் பிடித்துக்கொண்டு போகவேண்டுமென்று நினைத்து, உமாதேவியின் அழகைக்கண்டுமன்னவனங்கள் பட்டுமதியைவிட்டு, அக்கினியில் விழும் புழுபோல, திருநந்திகேசுவரால் காவல்செய்யப்பட்டிருக்கும் குகைக்குட் புகுந்தனன். அந்தகன் அவ்வாறு புகுகையில் சுந்தரவதி பாதைகள் பரங்கள் வஜ்ரம் ஜலம் அக்கினி நாகாஸ்திரம் முதலிய பயங்கரமான பல பொருள்களால் பாதித்து, அடா! நீ யாவன்? நீ ஏன் இங்குவந்தனை? என வினவி, வீரசுவாக்கியத்தைக்கேட்டு அந்தகன் தன் கருத்தைக்கூறி, இறுதியில் ஒரு முகூர்த்தகாலம் புத்திக்கெட்டாத ஆச்சரியகரமான யுத்தஞ்செய்து பராஜிதனுகி அவ்விடம் விட்டுப் பரிதாகங்களால் வருந்தி மதுவெறி தெளிந்து புறங்காட்டியோடினன். சுந்தரமுதலிய பலபடைகளால் சின்னபின்னஞ்செய்யப்பட்டதேகத்துடன் ஓடிப்போனபின்பு விகலாதன் முதலிய மந்திரிகளும் பிரகலாதனுதி வீரர்களும் சுந்தரவதியோடி அஸ்திரசஸ்திரங்களால் பயங்கரமான யுத்தஞ்செய்து நானுமென்னும் அங்குசத்தாற் குத்தியிழுக்கப்பட்ட புத்தியையுடையவர்களாய்ப் பிரிந்தனர். பிறகு விரோசனன்-பலி-பாணன்-சதஸ்பாதன்-ரஞ்சன்-லவஞ்சன்-சங்கன்-விருத்திரன் முதலிய அசுரர்கள் பல்லாயிரவகையான அகண்டமான யுத்தஞ்செய்து, கொலைக்களப்பட்டவர்களாயிறந்தனர். இவ்வாறு போர்புரிந்திறந்த அசுரர்தேகங்களைக்கேட்ட இந்த சாரணர் ஜயஜயகோஷத்துடன் சிவபெருமானைப்புகழ்ந்தனர். கண்டபேருண்டபட்சிகளின் அபிநயமும், இராக்ஷஸரூபத்தால் பிசாசுகுலமும், பயங்கரமும், இரத்தத்தால் சேறுபட்டும், மாமிசத்தை முதலியவற்றின் துர்மணமமைந்த போர்க்களத்தில், சர்வாலங்கிய பிரக

பாணி பார்வதிதேவியுடன் எழுந்தருளி, உமாபிரட்டியாரைப்பார்த்து, பெண்ணே! யான் எவ்வளவு கடினமான பாசுபதவிரதத்தை யாச்சியித் தேனோ அத்தவிரதத்தின் பலன் இதுவேயென்று நன்மொழிகளாற்கூறி, நான் இன்னுஞ் சிறிதுகாலம் இப்பாசுபதவிரதத்தை யாச்சியிக்க வென்னினேன். ஆதலின் நான் வேறொரிடத்தையடைகிறேன். நீ இவ்விடத்திலேயேயிரு. உன் குமாரனை நந்தி உன்னைக்காத்திருப்பான். யான் இவ்விரதத்தை முடித்துவருமளவுந் துக்கமின்றிச் சந்தோஷத்துடன் நிர்ப்பயமாயிருக்கவென்று கூறிப் புறப்பட்டு, புண்ணியமயமான வேறொரு வனத்தையடைந்து தம்மைத்தாமே பூஜித்துக்கொண்டு ஆயிரவருஷகாலங்கழித்தனர். பார்வதிதேவியோ எப்பொழுதும் தனித்திருப்பயமுற்றுத் தன் புத்திரனை விரகனல் சம்பாஷிக்கப்பட்டு, தன் கணவன் வருகையைக் கருதித் தங்கித்து, அம் மந்தரபர்வத குகையில் வெத்தியானத்துடனிருந்தனள்.

இவ்வாறிருக்கையில், வரதானத்தால் மகாமத்தனை அந்தகன் அநேக சைனியங்களுடன் பயமின்றி மீண்டும் போர்புரியக்கருதி ஏக்கு கைன்யபடைத்து, நந்திதேவரோடு இரவும் பகலும் பதினாக யித்தினாகளின்றி நூற்றைத்தவருஷங்கள் கடுங்கோபத்துடன் கட்பமுருத்தும் பிண்டி பால்பிக்கூத்தாடி, அந்திரங்கள் அர்த்தசந்திரபாணங்கள் எரிக்தகொண்டிருக்கும் நாராசங்கள் தீக்ஷணமான சூலம் மழு தோமரம் பர்வதம் விருக்ஷம்முதலிய பல நிறப்படைகளால் ஆதி விரோதமான யுத்தஞ்செய்தனன், அவ்வாறு அவன் பிரயோகித்தபாணங்களால் நந்திதேவர் பிருதியும் அடிபட்டு அக் குகைமார்க்கத்திலேயே யைதந்தியர்கள் சர்தோஷிக்க சுமனேரம் மூர்ச்சையாயினர். அசுரர்கள் சந்தோஷித்துக் குகையின் கதவைத்திறக்க பத்தனித்து,அதிதசாத்தியமென்றிருக்னர். இதனையெல்லாமுணர்ந்த பார்வதிதேவி அச்சமுற்றுத் தோழியருடன்கூடி, பிரமவிஷ்ணுக்களையும், வீரபத்திரையும் அவரது சைனியங்களையும் அவ்விடத்திற்குப் பாலகனையும் ஸ்மரித்தனள். இவ்வாறு ஸ்மரித்தமாத்திரத்திலேயே பிரமன் விஷ்ணு முதலியவர்கள் சித்தர்கள் நாகர்கள் குய்யகர்கள் யாவரும் அந்தப்புரத்திலிருக்கும் மகாராணியாதலின் அம்மகாதேவியைப் தரிசிக்கப் பெண்வடிவோடு தமது சைனியங்களுடன் குகைக்குட்சென்று தமது திவ்விய ரூபங்களைக் காண்பித்தனர். பெண்வடிவேற்றவந்த தேவமுதலானவர்களும் பார்வதிதேவியாருடன் ஒன்றுகூடிப்பெருந்தொனியுடன் சம்பாஷித்தபொழுது குகைமுழுவதும் பிரதித்வனியுண்டாயிற்று. அதன்பின்னர் பார்வதிதேவியார் அவர்களையெல்லாஞ் சேனையாகக்கொண்டு போர்புரியத் திருவுள்ளங்கொண்டனர் அப்பொழுது அவரவர் தமது சங்கங்களைப்பூரித்து, யுத்தபேரிகை முழக்கினர். அவ்வோசையைக்கேட்ட நந்திதேவர் மூர்ச்சைதெளிந்தெழுந்து இதாருடராய் அநேகவலையான

ஆயுதங்களால் அசுரர்களை யடித்துக்கொண்டிருந்தனர். இதற்குள் பிரமவிடத்திற்சென்ற பிரமியானவள்மகாதேஜோமயமாயுக்கிரவடிவுதத்துடன் குகைமுகத்தினின்றும்புறம்போந்தாள். விஷ்ணுவினிடந்தோன்றிய நாராயணியென்னுஞ் சக்தி, கதை சங்கு சக்கரம் வில் பழுக்கக்காய்ச்சின சக்தி முதலியவற்றை யேந்தி சக்கிரத்தேரிலேறி வந்தனள். இந்திரனிடந்தோன்றிய சக்தி வஜ்ராயுதமேந்தி ஆயிரங்கண்களோடும் அசுரர்களைஞ்சத்தோன்றினள். அக்கினியிடந்தோன்றிய சக்தி தண்டந்தாங்கி, கத்தைதத்துக்கிக் கொண்டு வந்தனள். கிருதிரம்பந்தமான வைஷ்ணவி மகா கோபத்துடன் கட்கமேந்தி வந்தனள். யமசம்பந்தமானசக்திகாலதண்டந்தாங்கிப் புறப்பட்டனள். வருணசம்பந்தமான சக்தி வருணாஸ்திரந்தரித்தும் பிரளயக்கருநிறமும், வாயுசம்பந்தமான சக்தி அங்குசபாசந்தரித்தும் பிரளயகால வாயுவை விரிக்கொண்டும், குபேரசம்பந்தமான சக்தி (பிரேதவாஹனி) ஊழித்தினை நிகர்த்தகதையைக் கரத்திலேந்தியும், ஈசானசம்பந்தமான சக்தி தீக்ஷண்யமானமுகமும் கோரதமும் பாம்பும் பயப்படத்தக்க நகங்களை ஆயுதமாகக்கொண்டும் அவ்வாறு அஷ்டதிக்குப்பாலர்கள் சக்தியும், பல தேவர்களாற்றோன்றிய கண்ணிறைந்த சக்திகளும் ஒருசேரவந்து, யுத்தபூமியையும் அபாரமான அசுரசேனையையுங் கண்டு ஆச்சரியமடைந்து பயந்து திருவுத்தேவரைச் சேனாபதியாகக்கொண்டு, முன்னொருகாலத்தும் நடந்திராததும், கண்டோர் அதிசயிக்கத்தக்கதுமாய் இயமனும் அஞ்சத்தக்கதுமான யுத்தத்தைப்பார்வதிதேவியாருடன்சென்று செய்தனர். இவ்வாறு பெரும்போர் நிகழுகையில், சேனாபதியான நந்திபகவான் பலவித யுதங்கள் கட்டியிருப்பதையுணர்ந்த அந்தகாசுரன் வெறொரு வகையான யுதம்வருத்து, கிலியென்னும் பெயருடன் உலகினை விழுங்குவான்போல் அங்காத்த வாயுடன் போர்புரிகையில், தம்மைத்தாமே பூஜித்துக்கொண்டிருந்த சிவபெருமான் சர்வஜ்ஞையாதலின் உணர்ந்து, அப்பூஜையைநிறுத்தி, பிரளயகாலருத்திரர் ஆயிரவர் ஒருசேர வந்தாற்போன்ற கார்த்தியோகேயரென்னுந் தேஜஸ்தோன்றும் போர்முனையில் வந்தனர். இவரெருவரானது வருகையைக்கண்ட திருவுத்தேவரும் ஸ்திரூபமுற்ற தேவர்களும் பெருங்கிளர்ச்சியுடன் பயமின்றிப் போர்புரிந்தனர். பார்வதிதேவியும் சிவபெருமான் சர்வஜ்ஞத்தன்மையுங்கண்டு பர்வதராஜபுத்திரியாராகிய உமாதேவியாரைத் திருக்கரத்தாலெடுத்துக்கொண்டு குகைக்குட்சென்றனர். பிரமி நாராயணிமுதலிய சக்திகளும் உடனே உட்சென்றனர். அப்பொழுது பார்வதிதேவியார் அச்சக்திகட்குத் தக்க பணிமணிமுதலிய வெகுமானங்களளித்து அவரவரிடங்களுக்கே கவி விடுத்தனர். குகாமுகத்தில் நந்திதேவர் ஒருவரே தனித்துநின்று அசுரரோடு போர்செய்து பலகாயங்களைப்பட்டுச் சிவசக்திகளையடைந்துசித்தாற்பணிந்து, ஸ்வாமி! அந்தகாசுரன் தனது விகஸனென்னு மந்திரியை அனுப்பினன். அந்தகனும் வருகின்றன்.

அவன் சொன்னது யாதெனில், பெண்ணுலனக்குப் பிரயோசனமில்லை யாதலின் அப்பெண்ணைத் தனக்குக் கொடுக்கவேண்டுமென்பதே. அவ் வாறு விடுத்தபின்னர் உமது காரியங்களைச் செய்துகொள்ளலாம். அம்மங் கையைக் கொடுத்துவிடாதபக்ஷத்தில் உம்மையே விரும்பிச் செய்வாள். அப்பொழுது முடிவனென் நிறைக்கப்படமாட்டாய். சுத்துருவாவாய் அசுரர்கட்கெப்பொழுதுந் துன்பஞ்செய்துவருதலின் தண்டனின்றி கொல்லப்படுவாய் ஆதலால் உன்னுடையஸ்திரியை உடனே அனுப்பிவிடவேண்டும்—எனக்கூறினன் என்றனர்.

அந்தவாக்கியத்தையைக்கேட்ட சபால மாலிசாபரண்டாகிய சிவபெருமான் பெருஞ்சினங்கொண்டு பிரளய காலாக்கினிபோலக் கொதித்துத் திருநெற்றிவிழியைத்திறந்து அக்கணம் மந்திரியாகிய விகலனைப்பார்த்து, அடா! உங்கள் எண்ணம் சுன்றுபத்தெனிற்கது: உலகத்திற் சக்தியற்றவனுக்குச் சுந்தரமான மனைவியிருப்பினும் தனதானிய சம்பத்துக்களிருப்பினும் அவன் அவற்றையிழப்பான். நாளும் அவ்வளவு துர்ப்பலனை உங்கட்குத் தோன்றும்பக்ஷத்தில் அதிகர்வமுற்றிருக்கும் அசுரச்சேனைகளை வரவழைக்கலாம். அசக்தன் தன்தேசத்தைப் போஷிப்பதும் அருமையே. நீங்கள் கருதிய காரியங்களியெல்லாம் அவ்வாறே செய்துகொள்ளலாம். நீங்கள் உங்கள் சைனியங்களோடு வரும்பக்ஷத்தில் யானும் என்னுஞ் செய்யக்கூடிய காரியங்களைச் செய்யச்சக்தனமில்லை. நீங்கள் வினைவிற் போய் வரலாம் விரைந்து செல்லுங்கள் என்றனன். அதனைக்கேட்ட விகலன் சிவனுடைய வார்த்தைகளைக்கேட்டுக் கனிப்புற்றுக் குதித்துக் கொக்கரித்துத் தன்னிலனை அந்தகாசரனிடைச்சென்றனன்.

அசுரராஜனை அந்தகாசரன் சந்தோசத்தோடுமெதிர்கொண்டு தன் மந்திரியாகிய விகலனுடைய கருத்தைத் அவன் வருகையிலேயுணர்ந்து, தன் சேனைப்பங்களுடன் போய்புரியச் செல்லவேண்டுமென்று ஆயுதங்களைச் சித்தஞ்செய்துகொண்டபோதிசரீரம் இங்கருபதுமுற்று, இந்திரன்முதலிய தேவர்களாலும் ஜயிக்கமுடியாத வலிமையுடைய இலாசுரன் என்னும் பெயர் வகித்துத் தன்பரிவாரங்களுடன் சிவபெருமான் சமுந்தருளியிருக்கும் குகையைய்டைந்தனன். அப்பொழுது அவர்களிற் சிலர் அசுரர் அக்குகை வாயிலைத் தம் ஆயுதங்களாற் புடைத்தனர். சிலர் சந்தியகாலாப்பலவிதமாக பாணங்களாற் பலவிதமாக அடித்தனர். சிலர் பார்வதிதேவியாரைத் தூற்றிகொண்டனர். சிலர் அக்குகைவாயிலில் அன்னியர் வரவிடாமல் காவலாய்நின்றனர். சிலர் அங்குள்ள பலபுஷ்பங்களையெல்லாம் அழித்துக் கொண்டிருந்தனர். சிலர் பழங்கள் கிழங்குகள் இவ்வியமான ஜலம் இவற்றைக் கெடுத்தனர். சிலர் உத்தியானவனங்களை யழித்தனர். சிலர் சந்தோ

¶ விகலனுக்கு விகலாசனனென்றும் பெயருண்டு.

ஷத்தால் மலை யுச்சியிலேறி அதின் சிகரங்களை யுருட்டித்தள்ளினர். இவ் வாறு அசுரச்சேனைகள் துவம்சஞ் செய்வதைக்கண்ட சிவபெருமான் சோபமிருந்து விஷ்ணுமுதலிய தேவர்களையும் சிவகணங்களையும் பூதங்களையும் தத்தம் பரிவாரங்களோடு போர்க்கோலங்கொண்டு வரவேண்டுமென்று திருவுள்ளஞ்செய்த மாத்திரத்திலே கணநாதர்கள் யாவரும் தமது சைனியங்களோடும், ஆகாயத்திற் சஞ்சரிக்கும் விமானங்கள்-குதிரைகள்-நிதபங்கள்-பசுக்கள்-ஒட்டைகள்-பறவைகள்-சிங்கங்கள் முதலிய வாகனங்களி லிவர்ந்தும் வந்தனர். விஷ்ணுமூர்த்திமுதலிய தேவர்கள் தமதுசைனியங்களுடன் புலி-மான்-பன்றி-சர்ப்பம்-பசாசம்-விமானமுதலிய வாகனங்களி லிவர்ந்து வந்தனர். உருத்திரர்கள்-ராகர்கள்-யக்ஷர்கள் - கருடர்கள் - கின்னரர்கள்-வித்தியாதரர்கள்-நாகர்கள் முதலிய யாவரும் சபர்த்தியாகிய கருணாமூர்த்தியின் திருச்சக்திதானத்தினிருந்து கமல்கரித்துப் புறஞ் சூழ்ந்து நிற்கையில், சிவபெருமான் அங்கடைடாள்ள யாவையுங் கண்டு திருநந்திதேவரை அவர்கட்குச் சேனா நாயகராக்கிப் போஷ்புரிவென்னு கட்டளையிட்டு விடுத்தனர். அவ்விறைவனது கட்டளையைச் சிரமேற்கொண்டு சம்பெருமானால் ஆசீர்வதிக்கப்பட்டமையின் யாம் தலைப்பின்னிக் சமமடைவோமென்று சந்தோஷத்துடன் புறப்பட்டு விகலனென்னும் பெரியையுடைய அசுரனுடன் சொல்லமுடியாததும் யுகாந்தத்திற்குச் சமானமானதுமான யுத்தத்தைச் செய்கையில், விகலன் தனது பயங்கரமான யுத்தத்தை அந்த சூனைத்திலேயே தன்னெதி போர்புரிந்து சொண்டிருக்கும் திருமால் பிரமன் இந்திரன் முதலிய கணக்கிடற்கரிய முடியாத தேவர்திரளையும், பூதகூட்டங்களையும், சிவகணங்களையும், பயிற்றவன் தன் கண்ணெதிர்ப்பட்ட மானைவக் காளிகரிப்பதுபோல, அந்தகாசுரன் கட்டளைப்படி விழுங்கிவிட்டனன். எவ்வளவு சேனைமுழுவதும் விழுங்கப்பட்டுத் தனித்துநின்ற நந்தியெம்பெருமான்டமேலுன் றோன்றுத சிவபெருமான் எழுந்தருளியிருக்குங் குகைக்குட்பிரவேசித்துப் பெருமானைப்பணிந்து நடந்த விருத்தாந்தங்களை விண்ணப்பித்துத் தெரிவித்து ஸ்வாமி! என் சேனைமுற்றும் விகலனுற்கபளீகரிக்கப்பட்டது. இன்னும் உலகுக்குத் திகிலடவளாய் அசுரச்சேனையிலுள்ளும் எஞ்சிசெய்ய வல்ல திருமாலையும் விழுங்கினன். சூரியசந்திரர்களுமுட்கொள்ளப்பட்டனர். சேனைகளையும் இதினுமியமனும் வருணனும் வாயுவும் விழுங்கப்பட்டனர். யாரெருவரே எஞ்சிநிற்கின்றன்: யாதென்னியாக யாதுசெய்யத்தகும்? அத்தைத்தியாதனை அந்தகன் மகாசந்தோசத்துடன் வினவுகின்றன். அவன் வாயுவேகத்துடன் விரைந்து,அபயமென்றபியாது தேவரிடத்தும் வருகின்றன். ஆதலின் சர்வேசுவரா! யாதுசெய்யத் தக்கதோ அதனை விரைவிற் திருவுள்ளஞ்செய்யவேண்டும். அந்தகன் சாமானியனல்லன். அவன் மந்திரியாகிய விகலனும் வெற்றிதும்

கசாத்தியமானவன். உலகமயக்கமான ஹிரண்யகசிபுவைத் தனது நகங்களாற் பிளந்தெறிந்த ஸ்ரீ மகாவிஷ்ணுமூர்த்தியும் அவன் கோபத்திற்கடங்கி விட்டனர்.

இவ்விகலன் பூர்வத்தில் உலகங்களை விழுங்கவேண்டுமென்னும் வாயைத் திறந்துகொண்டு புறப்படுகையில், உலகங்கட்குப் புனிதரும் தேவேந்திரமாதனுள்ள வசிஷ்டர் முதலிய ஸப்தருஷிகளைச் சபிக்கப்பட்டு, அவர்களைப் பிரியவசனத்தால் ஸ்வாமிகளே! இச்சமயம் எனக்கு எட்போழுது விலகும் என வேண்டிக்கேட்க, அவர்கள் விகலா! நீ போர்க்களத்தில் சூரிய சந்திரர்களைக் கஷ்டப்படுத்துவாய். அப்பொழுது பல்விதபாணங்களாலும் முஷ்டிகளாலும் வென்று அடிக்கப்பட்டு நரகாசுரனுக்கு வாசஸ்தானமாகியவதரிகாரண்யத்தில் படித்திரர்களாகிய அந்தநரநாயணர்களால் உன் பாபங்களொழிந்து நிறைந்த பதவியையடைவாய்என்று கூறுபவரே சாபாநுக்கிரகஞ்செய்தனர். அவர்கள் வாக்கியப்படி இவன் பேருடலினைவேலும் யுத்தத்திற் பிரிந்துகொண்டும் சந்தோஷித்துக் கொண்டும் அந்தகாசுரனுக்கு ஜெநித்தாயுமிருக்கின்றன். இவ்வகையதுஷ்டனாகிய அசுரர்கட்குச் சுக்கிரடகவான் பரமபிதாவுமாகவும் குருவாகவும் சம்மதியாதவர்கட்குச் சத்துருவாகவுமிருக்கின்றனன். அப்படிக்கொண்டாற் சங்கரிக்கப்பட்ட அசுரர்களின் மிருதசஞ்சீவமந்திரத்தினால் உயிர்ப்பித்து யுத்தகாயமுதலியன வொன்றுமில்லாதவர்களாகச் செய்கின்றனன். ஸ்வஸ்தானஞ் செய்து வருவதற்குமேலே அசுரர்கள் உலகமோதற்குரிய எண்ணமெதுவுமில்லாதவர்களாகி போவார்கள். இவ்விதமாய் கடப்பதற்கு முன்னரே யான் இறக்குபதில் உசிதமென்றாலோசித்தேவர்களை, அதனைக்கேட்ட பூதபதியாகிய சிவபெருமான் நீக்காலோசனைசெய்து, நீ லோகத்துயருறுகன்களைச்செய்யுங்கோடருரியதினைகளின் தாத்தினைப் போலே வெளியையுடைய வோமமென்னும் பேயையுடைய சாபத்தைக் காணஞ்செய்தனர். அப்பொழுது அந்தகன் சிவபெருமானுடைய சாபத்தைத் தாங்கிக்கொண்டு, அவரைநோக்கி சுவாமிகளே! நீங்களே மூகாம்பரா சிவாசியாய் சுக்கிரபகவானை யெதிர்த்து நாஞ்சிகமாகப் போர்புரிந்து, அவரைநூலாலும் சலத்தினிலிருந்து கமண்டலுவிலிட்டு இயமனையுஞ் செயிக்கத்தக்க பல் வரங்களையடைந்த நான் காயமுதலாயும் கபளீகரித்துவிட்டனன். என்னை சிவபெருமானே அதனைக்கண்டே யோபாணம் சூலம் கட்க முதலிய ஆயுதங்களையேந்தியவனும், போர்வீரர்களிற்சிறந்தவனும், முஷ்டிகளுக்கெல்லாம் மேலான மனிமையுடையவனும், வேதவேதாங்கமுதலிய வித்தைகளுக்கெல்லாம் வாசஸ்தானமானவனும், தபோமயமதியாதிகுணங்களால் நிரம்பப்பட்டின்னனுமாகிய நந்தியையும் வீழ்ங்கினனல்லவா? என்று கோபத்தோடு அந்நந்தியைப்பார்த்து இடபாகனமிவர்த்து அவனைச்சபித்துப் போருக்கழைத்துக்கொண்டு, இவனை

யில் விகல அந்தகரால் விழுங்கப்பட்டவர்கள் வெளியே வரத்தக்கவர் மந்திரத்தையுச்சரித்துக்கொண்டு, இடிபோன்ற அம்பும் மகாமேருவைப் போன்ற வில்லுங் தாங்கிநிற்கையில் விகஸ்னால் விழுங்கப்பட்டயாவரும் பிரகஸ்பதி, லக்ஷ்மி, விஷ்ணு, பிரமன், இந்திரன்முதலியயாவரும் சிவபெருமானுடைய மந்திரஜபத்தால் அவர்கள் நெற்றிவழியாகப் புறம்வந்து சிவபெருமானையடைந்து சந்தோஷத்துடன் விளங்கினர். இவ்வாறுகடிய சிவகணங்கள் முதலிய யாவரும் அந்தகனுடன் போர்புரிய, அசுரர்களிற் சிலர் புறமுதுகிட்டோடினர். அநேகர் இறந்தனர். அவ்வாறிருக்கும் அசுரர்களை மீண்டும் பிழைத்தவர்களாகச்செய்யும் பார்க்கவனை, இவனுலல்லவாயமெல்லோருந் துன்புறுகின்றோமென்று கோபித்து, கைப்பிடியாகப் பிடித்துவந்து பூதபதிக்குப் பகைவைக் கொடுத்தாற்போலக் கொடுத்தனர். அச்சமயத்தில்சிவபெருமான் பார்க்கவனை விழுங்கினர். பரிக்கவன் அவ்வாறுகண்டமானபின்னர் அசுரசேனையிற் பல மாண்டன, பல வோடின, பல காயமுற்றன. அந்த யுத்தபூமியில் பூதப் பிரேத பிசாசராக்ஷஸர்கணங்களும், நரி முதலிய மிருகங்களும், அசுரர்களது மாமிசத்தைப் புசித்து உதிரத்தைப் பருகிக் குதித்துக் கொக்கரித்துச் சந்தோஷித்துக் கானஞ் செய்துகொண்டிருந்தன. பிரஹஸ்பதி அந்தகசகோதரர்கள் மெய்ங்காலம் விஷ்ணுவாதி தேவர்களையெப்பொழுதும்போரில்செய்து தோல்வியடைந்து அஸ்திரத்தற்குஞ் ஜலமார்க்கத்திலும் பூமார்க்கத்திலும் பாதாளலோகத்தையடைந்தனர்.

அந்தகன் தன் சைன்யங்கள் நஷ்டமடைந்ததுபற்றித் தேவர்கள் மீது பெருங்கோபங்கொண்டு திருநந்திதேவரது சைன்யங்களோடும் பெரும் போர்செய்கையில், அச்சேனையில் ஒரு வீரனுகவிளங்கும் விஷ்ணுமூர்த்தியால் தேகமுற்றும் காயமுறும்படி அடிக்கப்பட்டும், மான் இவர்களால் இறவாதுபிரமனால் வரங்கொடுக்கப் பெற்றுள்ளனென்னுங்கர்வியத்தால் யுத்தத்தைவிடாது நிற்கையில், மகேந்திரனால் மீண்டும் மூர்ச்சையுறுத்தக்க அடிபட்டனன். அதனால் வீரபவசமுற்ற அந்தகன் தருக்கள் மலைகள் முதலியவற்றால் அவர்களை யடித்தனலெக்கிச்சிவபெருமானையடைந்து, இனி நீ போருக்குவருகென்று கூற, சமீபத்திலிருந்த சிவகணங்களெதிர்த்தன. அவற்றையும் வென்று சிவபெருமானை எதிர்த்தனன். அப்பொழுது நந்திபகவான் எதிர்க்க, அவனையுஞ் செயித்தனன். சிவகடாக்ஷத்தால் நந்திதேவர் மீண்டும் வலிமையும் அன்றி சன்னிதானமும் பெற்று அந்தகனைப் பலவாறு அடித்தனர். அவன் உடலினின்றுஞ் சொரிந்த உதிரத்தினின்று இரத்தவாயையால் விஷ்ணு பிரமன் இந்திரன் அந்தகன் முதலிய அநேக ரூபங்கள் தோன்றுகையில், சிவபெருமான் பிரளயகாலாக்கினிபோலக்கொதித்து, அவர்களைச் சூலத்தாற்புடைத்தனர். அவர்களுதிரங்களினின்றும்பலர் தோன்றிச் சைன்யங்களைப்பெருக்கினர்.

அவ்வாறு அசுரச்சேனை பெருகிவரட்டுமல், சிவபெருமான் விஷ்ணுயோகத்தாற் பயங்கரமானமுகமும், அதிகோபமுள்ளதும், இரண்டு விழிகளும், சர்ப்பங்களாலே உரோமமுழுவதையுடைய சண்முகத்தினிகளைக் களைச் சிருஷ்டித்தனர். அவ்வாறு சிருஷ்டிசெய்த சாம்பவமூர்த்தியின் வலதுதோளிலிருந்து நான்கு கால்களுடைய ஒரு சக்தி தோன்றி அந்த சக்திசண்கட்குத் தலைவியாய், தேவர்களால் தோத்திரஞ்செய்யப்பட்டு வெகுடாகம்பெற்றுப் பெரும்பிரியோடு அந்தகன் மார்பிலுதைத்தலினால் உண்டாகும் உதிரத்தைப் பானஞ்செய்துகொண்டிருந்தனள். அதனால் அந்தகன் பலமற்றவனும் உடலினீங்கிச் சிவபெருமானுடன் சத்தி வேல் அம்பு வாள் தோமரம் முசலம் பிண்டி பாலம் முதலிய ஆயுதங்களாலும் வச்சிராயுதம்போன்ற தன்து கங்களாலும் புயங்களாலும், கூத்தியதருமம் விடாதி போர்புரிய, சிவபெருமான் அவனைத் தமது சூலத்தின் முனையிற் குத்தி யுயரத் தூக்கிச் சுழியசெனத்தால் தெக்கச்செய்தும் உயிர் கண்டிலன். விஷ்ணு முதலிய அந்தகசைனியமும் ஹதமாயது. யுத்த முடிவில் தேவர்கள் யாவரும் சிவபெருமானிடத்து அபயமடைந்து அவரிடம் விடைபெற்றுக் கொண்டு சுதந்தமகுரிய தானங்களையடைந்தனர். சிவபெருமான் சக்திகளோடு தமது குகையையடைந்து பார்வதிதேவியாரைப் பார்த்து மகத்த விருத்தாந்தங்களைக் கூறிச் சர்தோஷத்துடன் எழுந்தருளியிருந்தனர்.

அந்தகாசுரன் கதையுணர்த்தது

முற்றிற்று.

ஐந்தாவது

அந்தகாசுரன் முத்திபெற்ற அத்தியாயம்.

ஸெளதமுனிவர்களைநோக்கி வியாசமுனிவரர்கள் கூறலின்றார்:— அந்தகாசுரனுடைய சரித்திரத்தைக் கேட்டுவந்த முனிவர்கள் வியாசமுனிவரை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் கூறிவந்தவிருத்தாந்தங்களால் யாங்கள் பரம சந்தோஷத்தை யடைந்தோம். முன்கூறிய அந்தகாசுரனுக்கு முதலில் வெள்ளி யானவன் சிவபெருமானால் கபளீகரிக்கப் பட்டனனன்றே? அந்தச் சர்வேசுவரனுடைய உதராக்கினி சம்பார்த்தங்களையெல்லாம் விரைவிலே அழிக்கும் ஜீர்ணமுடையதன்றே? அவ்வகைய அக்கினி மகா தபோசம்பந்தமும் மகிமாதி சுவரியமும் தேஜோரூபமும் உடைய இக்கனியைத் தின்ற காரணம் யாது? அவ்வசுரன் திருவயிற்றினின்று வெள்ளி வெள்வாறு வெளிவந்தனன்? எவ்வளவுகாலம் மகேசுவரனால் நியமிக்கப்பட்டனன்? அந்தகாசுரன் எல்லாரு கணாதிபதியாகப் பட்டான்? இவ்விஷயங்களைப் பூர்ணமாகவறிவேண்டுமென்று விரும்பியுள்ளமக்கட்குத் தெளிவாக விளக்கியருளவேண்டுமென வினவ, வியாசபகவான் உண்மையாக நடந்தவற்றைக் கூறுகின்றேனென்று சொல்லத்தொடங்கினர்.

அந்தகனுடைய பெரும்போரில் சிவபெருமானால் விழுங்கப் பட்டபார்க்கவன் பனித்துளிபோன்றும் சந்திரன்போன்றுக் குளிர்ந்தவனும், வருணதேவதாசமானவனும், பெரும்பயம் வினைக்கும் மிருத்யுவை நாசஞ்செய்ய வல்லவனும், எல்லாச்சித்திகளையுங் கொடுக்கவல்லவனும், மங்களகரமானவனும், தொன்றுதொட்டு ஆன்றோரால் உபாசிக்கப்பட்டதுமான மிருத்யுஞ்சய மந்திரத்தை யனுஷ்டித்தான். அதாவது:—

"ஓம் நமஸ்தே தேவேசாய-ஸ்ரவணகமண்டலுதாய-பூதபவ்ய மஹாதேவாய-ஹரிகேசாய-ஹரிகேசாய-புத்திருதினே-வையாக்ரவஸநாத்தாய-அரவிந்தாயாய-த்ரிலோசனாய-பவோத்பவாய. (க೦) ஹராய-ஹரிகேசாத்தாய-யுகாந்தகரணாய-அந்தராய-கணேசாய-லோகபாலபவே-லோகபாலாய-மஹாபுஜாய-மஹாஹனுத்தாய-சூலினே. (உ೦) மஹாதம்ஷ்ட்ரினே-மஹேஸ்வராய-காலாய-காலரூபிணே-நீலக்ரீவாய-மஹோதராய-கணேத்யக்ஷாய-ஸர்வாத்மனே-ஸர்வபாவனாய-ஸர்வகாய. (ஈ೦) மிருத்யவே-மிருத்யுதாராய-பாரியாத்ரஸம்ஹர்த்தாய-ப்ரஹ்மசாரினே-வேதாந்தகாய-பசுபதயே-அவ்யயாய-சூலபாணினே-விருஷபேதவே-ஹரயே. (ச೦) ஜடினே-முண்டினே-ஸிகண்டினே-லகுடினே-மஹாயஸலே-பூதேசவராய-குஹாவாஸினே-விஷ்ணவனவாஸனவேத-அமராயாக்ஷராய. (இ೦) பாலஸூர்யபிபாய-ஸ்மஸானசாரினே-பகவதே-உமாபதயே-அநிந்தமாய-பகஸ்யாகபாதினே-பூஷ்ணோதஸனாசனாய-க்ருதகர்த்ரே-பாஸுபதஸ்தாய-ப்ரளயகாலாய. (சு೦) உல்காமுகாய-அக்னிகேதவே-முனயே-தீப்தாய-விஸாம்பதயே-உன்மாதாய-வேபனாயாய-சதுர்தாய-லோகஸ்தமாய-வாமனாய. (எ೦) வாமதேவாய-வாக்தாகின்யாய-வாமதேவாயஜ்யேஷ்டாய-விஷ்ணுரூபிணே-ஜடினே-ஸ்வயம்ஜடிலாய-ஸர்வதஸ்தப்ரதிஷ்டம்பகாய-வஸுஹரம்ஸ்தம்பகாய-ருத்ரதேவ-ருத்ரகாரணாய. (அ೦) காலாய-மேதாவினே-மதகராய-அசலாய-வாசஸ்பத்யாய-வாஜஸனே-நித்யமாஸ்ரமபூஜிதாய-ஜகத்தாத்ரே-ஜகத்கர்த்ரே-புருஷாய. (கூ೦) சாசுவதாய-த்ருவாய-தர்மாத்யக்ஷாய-தர்மோத்பவாய-ஸுதபவே-ஸுதபஸே-ஸுநிஷேத்ராய-பஹுரூபாய-ஸுத்ர்யாயுதஸம்பதாய-தேவாய-தேவாதிதேவாய. (கo೦) சந்த்ராங்கிதஜடாய-நர்த்தகாய-லாஸகாய-பூர்ணேந்துஸந்நிபானனாய-ப்ரஹ்மண்யாய-ஸர்வாயு-ஸர்வதேவமயாய-ஸர்வதர்யகோதினே-ஸர்வபந்தமோசனாய-பந்தனாய. (கக೦) ஸப்தகாரிணே-தர்மோத்தமாய-புஷ்பதந்தாய-பிங்களாய-முக்யாய-ஸர்வஹராய-ஹரிண்யசிரவஸே-தர்மிணே-ஸ்ரீமதாய-பீமபராக்ரமாய. (கஉ೦) ஓம் நமோநமஃ

இவ்வகைய சிவநாமவருபமான மிருத்யுஞ்சய மந்திரத்தை ஜபித்து, சிவபெருமானது லிங்கக்ருபைவழியாக, சுக்கிரரூபமாகப் புறம்பே வந்தவரும், நாசமற்றவரும், மகாசம்பத்துடையவரும், மூவாயிரவருஷங்கள் சிவபெருமானதுகர்ப்பத்திலிருந்து வேதநிதியுமான சுக்கிரமுனிஸ்ரீபார்

வதிதேவிக்குப் புத்திரராகப் பரமேசுவரரால் படைக்கப்பட்டார்போலச் சனித்தனர். இதன்பிற்பாடு : சூலாயுதத்தின் முனையில் கிடக்கும் தன் தாரியத்தைவிடாது தொங்கிக்கிடக்க அந்தகன்:—மஹாதேவம் - விரூபாக்ஷம்-சந்திரார்த்தசேகரம்-அம்புஜம் - சாசுவதம் - ஸ்தாணும் - நீலகண்டம்-பிரகினம்-விருஷபாரூடம்-மஹாஜ்ஞேயம். (கo) புருஷம்-அவ்யக்தமதம் - காமாரிம் - காமதஹநம் - காமரூபம்-கபர்த்திநம்-ஜிதபம்-ஹரிஹரம்-ஸ்ரீமம்-சேக்ஷணம். (உo) சக்ரவாளம்-யோகிநம்-காலதஹநம் - த்ரிபுரக்நம்-கபாலிநம்-கூடவ்ரதம்-குப்தமந்த்ரம்-கம்பீரம் - பீமசேகரம் - அனிமாதிகுணாதாரம். (ஙo) த்ரிலோகசுகரீபதாயகம்-வீரம்-வீரஹணம்-சேரசம்-விரூபம்-மாம்ஸலம்-பிங்கம்-மஹாமாம்ஸம்-வலேக்யத்தப்பாவம். (சo) பரமேசுவரம்-த்ரைலோக்யடாமரம்-ஜ்யேஷ்டம்- ஜ்யேஷ்டகம் - யஜ்ஞஜ்ஞேஷ்டகம் - க்ருத்திகாவாஸம்-ஸ்தேரத்தம்-உக்மத்தம்-க்ருத்திவாஸஸம் - கஜாசுரத்திபரிதாகம் - சூலபாணம். (ஞo) புஜகபூஷணம்-தத்தாலம்பம்-ச-பேதாளம்-கோரசாகிநிபூஜிதம் - அகோரம் - கோரதைத்யக்நம் - கோரகோஷம் - வகல்பதிம்-பஸ்மாங்கம்-ஜடிலம். (சுo) சத்தம்-பிருண்டபூதலேகிதம்-பூதேசவரம்-பூதசாதம்-பஞ்சபூதாதிபதம்-கணம்-க்ரோதிநம் - கிஷ்குரம்-சண்டம்-சண்டீசம். (ஞo) சண்டிகாபியம்-சண்டதண்டம்-க்ருத்மத்தம் - நிஸ்த்ரிம்சம்-பவோத்பவாய-ஸ்தேலவிஷ்ணவே-மஹாரௌத்ரம்-பத்ரம்-ருத்யோரகோசரம்-ம்ருத்யோர்ம்ருத்யும். (அo) மஹாசேநம் - ஸேநாசாதஸ்யவாசகம்-ராகம்-விராகம் - ராகத்தம் - விதராகம் - சதாசிஷம்-ஸ்வயம்-ராஜ்யதோ-தர்மம். (கூo) அதர்மம்-வாலகாதிநம்-ஸத்யம்-அஸத்யம்-ஸத்நயம் - அனந்ரூபம்-அஹேதுகம்-அர்த்தகாரிசுவரம்-பாதும்-பாதுகோடி. (க00) சதப்ரிபம் - யஜ்ஞம் - யஜ்ஞபதிம் - ருத்ரம்-சமாகம் - வரதம் - சிவம் - மஹாதேவம் (கபஅ)வென்று—அஷ்டோத்தர சத காமங்களையும் துற்றொட்டு முர்த்திகளாகத் தியானித்துக்கொண்டிருந்தனன்.

சிவபெருமான் இத்தோத்திரத்தாற்களித்து, சூலத்தின் முனையில் குத்திவைத்துக்கொண்டிருந்த அவ்வசுரனை அச்சூலத்தினின்றும் நிலமிசையிறக்கி," அவனுக்கு உபதேசகாரமாக நன்மொழிகளைச் சொல்லி, அவனுடலைத் தடவிக் கையாற் பரிசித்து, அந்தகனே! உனக்குண்டாகிய இந்திரியக்கிரக[தபம்]த்தால் என்னையே இதுகாறும் தியானித்ததாலும் சௌரியத்தைர்யாதி சம்பத்துக்களாலும், பலகாலமாகப் பலரூபமாக என்னையே துதித்தமையாலும் யான் உன் விஷயத்திற் பெருங்களிப்படைந்தேன். நீயும் இதுகாறும் மதியீனத்தாற் செய்த பாவங்களையெல்லாம் விலகினவனாக. கல் விரதஞ்செய்தவனே! விரும்பிய வரத்தைக்கேள்? நானுன் விஷயத்தில் தடையின்றி வரங்கொடுப்பேன். நீயும் பரமேசுவரத்தைப் பாத்திரமாலுயிருக்கின்றனை ; உயர் பதனியை யிப்பொழுதே விரும்புக. மூவாயிரவருஷங்கட்குப்பின்னே மோக்ஷமுண்டாகும் என, அந்தகன் அரக்கனுயிர்த்தன்மையின் கை கால்களை ஊன்றிக்கொண்டெழுந்து உடல் நடுங்கி

கைகுவித்து நின்று, உமாபதியாகிய சிவபெருமானைப் பலவாறு துதித்து, பகவனே! மகா தீசனுயிருக்கையான் போர்க்களத்திற் செய்த தவறுகளை யெல்லாம் க்ஷமித்தருளவேண்டும். காமமோகத்தால் அடியேன் அறியாமையிற்று உலகமாதாவாகிய மகாதேவி விஷயத்திற்செய்த பெரிய அபராதத்தையும் மனம்பொறுத்தருளவேண்டும். உலகத்தில் கஷ்டத்தால் துக்கமுற்றவன் விஷயத்தில் தயைசெய்வது வழக்கம். அதிலும் பக்தி செய்துவரும் அடியார்களுக்கு விசேஷமாகச்செய்வது வழக்கம். ஆதலின் யான் பெரும் கஷ்டமநுபவித்தவன். தேவரீரையன்றி யெனக்கு வேறெருவருங் கதியிலர் என்னுந் தீனபாவமடைந்தவனுகவும், பக்தியுடையவனுகவுந் தேவரீரது திருவருளின் மகிமையாலேயே யானென். தேவரீருக்குமஸ்காரம். ஜகன்மாதாவாகிய பார்வதிதேவியாரும் யான் செய்த அபராதங்களை மன்னித்துக் கிருபைசெய்வித் தயைவைத்து அம் மகாதேவியாருடைய அடிமையாகிய என்னைப் புத்திரபாவத்துடன் பார்க்கவேண்டும். ருத்ரதபஸ்க்காதிருணங்களையுடையவனைக்கொல்லுதற்கு சாஸ்திரோக்தமாகவாய் லோகரக்ஷகனுகிய தேவரீரன்றே : காமாதி துர்க்குணங்களையுடைய சாமானியருகிய யானென்றே. மகா பலசாலியாகிய தங்கள் சேஷ்டாபலனுகிய சுக்கிரபகவானென்றே : தங்கள் புதல்வராகிய சுக்கிரதேவரும் அவரை கோபமொழித்து தன் சேவகனுகவன்னைக் கருணையோடுபார்க்கவேண்டுமென்றனென்று சொல்லி, பார்வதிதேவியாரைப் பார்த்து ஜகன்மாதா! இதுவரையில் யான் அநேக அபராதங்கள்செய்திருப்பினும் காணமின்றி வேண்டிக்கொள்ளுகிறேன். தங்கட்கு சுக்கிரதேவர் எப்படி கருணைபுரியாதிருக்கின்றனரோ அதுபோலவேயானும் அவர்க்குச்சமானனுகவிருக்கவேண்டும். மகா சௌலபமான புத்தியோடு தங்களோத் தியானிக்கருதியிருக்கவும், சிவபெருமானையுங் தங்களையும் நிந்தனைசெய்யவும், தேவர்களுடன் விரோதமின்றி ஒத்திருக்கவும், ஞானவானுகவும், சிவன் கண்களில் ஒருவனுகவும், மீண்டும் எக்காலத்திலும் ராகத்தைப் பிறவியடையாமலும் அநுக்கிரகிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டு, திரிலோசனனுகிய பரமேசுவரனையும் ஜகன்மாதாவாகிய பிரமதேவியாரையும் சாஷ்டாங்கமாகப் பணிந்து கைகட்டிநின்றனன். சிவபெருமான் சுக்கிராசார்யருடன் புன்னகை செய்து அந்தகனைப் பார்த்து, அந்தகன் பிறந்ததையும், அவன் வளர்மைபெற்றதையும், அவன் செய்கைகளையுஞ் சொல்லி, அந்தகன் நம்மிடம்விடையே ஜனித்தவனன்றே ? அவன் அவரங்களைப்பெறுதலெவ்வாறு கருதினர். அதனுல் அவன் அப்பொழுதே அவ்வண்ணமாயினன். அந்தகன் காருபத்யமடைந்து தனக்கு மாதாபிதாக்களாகிய பார்வதியையும் பரமசிவனையும் சாஷ்டாங்கமாகப் பணிந்து கிருதகிருத்தியரு மிருக்கையில், இவ்வகைய குமாரனைப் பார்வதி பரமே

சுவரிருவரும் ¶ மூர்த்தாக்ரஹனைஞ் செய்து சந்தோஷித்திருக்கனர். சௌககாதிமுனிவர்களே! அந்தகாசுரனது சரிதத்தையும், ம்ருத்யுவை நாசஞ்செய்யும் ம்ருத்யுஞ்ஜய மந்திரத்தையும் பக்தியோடு படனஞ்செய்தவர்கட்கு எல்லாக் கோரிக்கைகளுஞ் கைகூடும் என்று ஸூத முனிவர் கூறியருளினர்.

அந்தகன் முத்திபேற்றது
முற்றிற்று.

ஆருவது

குருவின் கதையுனைத்த அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகள் ஸூதமுனிவனைநோக்கி, ஸ்வாமி! தேவரீர் கூறிய விஷயங்களாற் பெருங்களிப்படைந்தோம் ஆயினும், மகா பதிவிரதையாயும் உலகங்கட்கெல்லாம் தாயாகியும், சக்திபேதவிரதமாகியும், தவசொரூபியாகியும் ஆத்மசரஞனஞ் செய்துகொள்ள அசக்தியாயிருக்கும் பார்வதிதேவியைச் சிவபெருமான் சுவ்வாறு ரகித்தனர்? அப் பார்வதிதேவியின் உத்திரப்பிரபாவம் எத்தகையது, அதனையுந் தேவரீர் வியாஸபகவானிடங் கேள்வியுற்றவகையே திருவாய்மலர்ந்தருளவேண்டுமெனக் கேட்க, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

முனிவர்களே! எந்தக்காரணத்தால் எந்தக்காலத்தில் எந்த வகையாகத் தனக்கிதமானதும் இதமற்றதுமாகவுள்ள சுபாசுப காரியங்களோ எவன் செய்கின்றானோ, அவன் அந்தக்காரணத்தால் அந்தக்காலத்தில் அந்தவகையாக அவ்வக்காலம்வரையில் செய்வனத்தால் அந்தக் கர்மபலனையநுபவிக்கின்றனன். மஹாஹரமான ரூபத்தையும் ஸ்தபரர்களால் முறியுமினுடையும் சார்திபொருந்திய தேகத்தையும் பிடர்பாணையொத்த கடையையும் பூர்ணசந்திரன்போன்ற திருமுகத்தையுமுடைய லோகமாதாவாகிய தாக்ஷாயணி தேவியை, பொதியமலையில் ஒருகாலத்தில் ருரு வென்னும் அசுரன் கண்டு மதியின்றி மன்மதபாணங்கள் மார்பிற்பட்டு நோவப்பெற்று, அநேக கோடி வருஷங்கள் சூரியகிரணங்களாற் சுடப்பட்ட தேகமுடையவன் போன்றவனுய், ஆகார தேகாபிமானங்கள் நீங்கி, நிச்சலமான தபசெய்கையில், தாமரைமலர்போலுந் தேககாந்தியுடைய பிரமதேவர் பிரசன்னராகி, ஓ அசுரேசா! யாதுகருதி இவ்வகைய கொடுமையான தபசஞ்செய்கின்றனை? அதனை யுரைக்கவென வினவ, பிரமதேவருடைய வார்த்தையைக்கேட்ட ருரு மஹாமோகத்தால் அரைக்கண் மூடிக்கொண்டிருப்பவனுமிருந்து, ஸ்வாமீ! போதுமையாயிருக்கும் தாக்ஷாயணி

¶ உச்சியை முகர்தல் – இது புத்திரர்களிடம் அன்பாற் செய்யுந் தொழில் களிலொன்று.

யெனக்கு மனைவியாயிருக்கவும், சிவன் என்னிடத்தில் விருப்புடையவனுயிருக்கவும், மாதர் காரணமாக எனக்கு மரணம்வராமலும், மற்றைப்பருவஸ்திரீகள் அதிகர் எனக்கு மனைவியராயிருக்கவும், என்னைப் பல்லுகத்தவர்கள் மகாதைரியகாம்பீரியவான்களாயிருந்தாலும் சாமானியர்களாய்ப் பலஹீனர்களாகவும் வரங்கொடுக்கவேண்டுமெனக்கேட்க, பிரமதேவர் புன்சிரிப்புடன் சொல்லுகின்றார்—நீ விரும்பியவரங்கள் திரிலோகங்களிலேயும் கிடைத்தற்கு அசாத்தியமானவை. இவற்றிற் சில பெருங் கஷ்டத்துடன் கிடைப்பினும் கிடைக்கலாம். ஆயினும் உலகமாதாவாகிய தாக்ஷாயணி திரிகாலங்களிலும் உனக்கு மனைவியாகக் கிடைப்பாளென்பது கிடையவே கிடையாது. அடாதுர்ப்புத்தி! சிவபெருமானும் உனக்கடங்கியிருக்கப்போகிறதுமில்லை. அத் தாக்ஷாயணியாகிய பார்வதி உனக்கு மனையியாகும் பக்ஷத்தில் சர்வேசுவரனுகிய சிவபெருமான் வேறெருரு ஸ்திரீயைத் தேடிக்கொள்ளவேண்டும். அப்பெருமானே அம்மகாதேவியை மனையியாகக்கொண்டமையின் அத் தேவிக்குச் சகோதரபாவித்தமாகத் தனது ஜடாடவியில் கங்கையையும் சந்திரனையும் அணிந்துகொண்டு, அவ்வம்மைக்கு உபசாரஞ் செய்யுங்பித்தமாக அதிக மாதர்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். அவ்வகையே பெருமாட்டியுனக்குச் சாத்தியமானவளல்லள். நீ தில்லியமான அப்ஸரஸ்திரீகளோடுசிநேகஞ்செய்துகொண்டு உன்பிராணனைக் காத்துக்கொள். நான்கூறிய வார்த்தைகள் உனக்கு இதமாகக் காணப்படாத பக்ஷத்தில் நீயே அம்மகாதேவியிடம் சேரிற் சென்று உன் விருப்பத்தைப் பிரார்த்தனை செய்து விண்ணப்பித்துக்கொள். அப்பொழுதே காளராத்திரியாகிய அத் தாக்ஷாயணியும் திரிபுராரியாகிய சிவபெருமானும் உன்னைச் சங்கரித்துவிடுவார்கள்—என்று கூறி அந்தர்த்தானமாயினர்.

பிரமதேவர்கூறிய வார்த்தைகளைக்கேட்ட ருரு உடனே மலயாசலத்திற்குச் சென்று பரமசிவனைநோக்கிக் கடுந்தவஞ்செய்தனன். அவனது தவத்தின் விசேடத்தாற்றோன்றிய அக்கினியானது அத்தப் பர்வதமுழுவதையுங் தகிக்க ஆரம்பிக்கையில், சிவபெருமான் தாக்ஷாயணியை யழைத்துக்கொண்டு அவளது தபோசக்திக்குப் பயந்தாற்போலப் பிறவிடத்திற் செல்ல எத்தனிக்கையில், பார்வதிதேவி, ஸ்வாமீ! என்னகாரணமாக இப்பொழுது இவ்விடம்விட்டுச் செல்கின்றீர்கள்? லோகநாயகராகிய தங்கள் இவ்வகதியை யடக்கப்படாதா? அவ்வாறடக்கிவிடாமல் வேடத்திற்குச் செல்வாரென். இதன் உண்மையை யுரைத்தருளவேண்டுமெனக் கேட்க, சிவபெருமான் ஓ பிரிய நாயகி! ருருவென்னும் அசுரன் உன்னை மனையியாகப் பெறக்கருதி உக்கிரமான தவத்தைச் செய்கின்றனன். அவன் தவத்தாலெழுந்த தபோக்கி திரிலோக [illegible]பங் கொளுத்துகின்றது. நான் அதனை நிவாரணஞ்செய்ய வலியுடையவ[illegible]ன், உனக்குச் சக்தியிருக்கும்பக்ஷத்தில் நேயக்தனஞ் செய்து திரிலோகத்தினுமுள்ள சராசர

கனியுங் காத்து ஆத்மரக்ஷணஞ் செய்துகொள்ளலாம். என்பேரிற் கோபம் வேண்டாம். உனக்கோர் நமஸ்காரம். நீ வேற்றுருவெடுத்து அவனிடஞ்செல்லென்று அவன் தவத்தை யழிக்கவேண்டுமெனக்கூறினர். பார்வதிதேவி அதனைக்கேட்டு அச்சமுற்று உடனே தைரியஞ் செய்துகொண்டு, பெருங்கோபத்துடன் பொதியமலையின் வனத்தில், ஒரு யானை மத்தகத்தைக் கைமுஷ்டியாலுடைத்து அதனை யுரித்து அதன் சருமத்தைப்போர்த்து, பல யானைகளைக்கொன்று புசித்து உடல்முழுதும் உதிரமயமாயிருக்குங் கொடுமையான் றினைக்கண்டு அதனை விகோதார்த்தமாகச் சங்கரித்து அதன்தோலை உடையாக அணிந்து சிங்கத்தின் உதிரத்தைத் தலையிற் முழுதுந்தடவிச் செவக்கச்செய்துகொண்டு, பெருவயிற்றுடன் விகாரரூபமுற்று அண்டமுகடு பிளவுறத்தக்க அதிகாஹாஸ்யாரஞ் செய்துகொண்டு அவ்வகாசனிருக்குங் குகையையணுகி, பாதங்களாலும் கை முஷ்டிகளாலும் அக்குகையை அடைத்திருந்த கதவினையுடைத்து ஹ ஹ ஹ ஹ ஹ வென அட்டஹாசமாகச் சிரித்து, பிரளயகால மேககோஷம்போலக் கர்ச்சித்து, அசைக்கண்பார்வையிலிருக்கும் அவ்வகாசனைக்கண்டு, இதோ நீ கோரியிருந்த தாக்ஷாயணியாகிய யான் வந்திருக்கின்றேன். யாதுசெய்யப்போகின்றனை? இதற்காகவா என் இன்னுங் கஷ்டமான தவஞ்செய்கின்றனை, உன் மனத்திலுள்ள கோரிக்கையைச் சொல்லுக. நீ தவஞ்செய்து அநுபவிக்கக்கருதிய கோரிக்கைகளை இப்பொழுதே சுலபமாக அநுபவிக்கலாம் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதில்லோகஞ்சுடிய் மகாபயங்கர ரூபமுடைய தாக்ஷாயணியைப் பார்த்து, மிக்க பயமுற்று உடல் நடுக்கத்துடன் நிலமிசைவிழுந்து மீண்டும் தைரியத்துடன் எழுந்து, நீ தாக்ஷாயணியன்று; உன்மையையுணர்க்கவேண்டும்; நீ காளராத்திரியே; தாக்ஷாயணியோ மிகரம்யமான தேகத்தையும், பூர்ணசந்திரன்போன்ற முகத்தையும், செவ்வரியுத்தையும், பூரித்த ஸ்தனபாரங்களையும் அடைந்திருப்பள். நீயோ கோரரூபி, நீ பார்வதியல்லை; யாரை என் தபோக்கியால் நிர்மூலகங்களையும் எரித்துவிடுவேன். நீ யிச்சி ல் எரித்துபோவாய். விரைவில் உயிர்பிழைத்தோடிப்போய்விடு . று போகாதபக்ஷத்தில் இப்பொழுதே உன்னை யமபுரத்திற்கனுப்பி வன் என்றுகூறிக் கதாயுதத்தால் பார்வதிதேவியையடிக்க, பார்வதி கடுங்கோபங்கொண்டு தமது கை முஷ்டியாலடித்தனள். அதனால் குரு யாரை அஸ்திரசஸ்திரங்களாலடிக்க, மாதேவி மலைப்பாறைக்ஷ விருக்ஷங்களாலும் அதிகவிதமான ஜலாக்னி வருஷங்களாலும் விஷசர்ப்பங்களாலும், கந்தகனாலும், நகங்களாலும் அடிக்கருளாயிய குருவின் உடலினின்று நிற்கும் உதிரத்துளிகள் ஒவ்வொன்றினின்றும் ஒவ்வொரு குருவடிவமாக ம், பேருருவுடையவரும், இளைத்த உடலுடையவரும், கோ வ்வரும், விகாரரூபமுடையவரும், சமான மற்ற பராக்கிரமமுமாக மாயையாற் காட்டினன்.

எண்ணிறந்த குருவடிவேற்ற ராக்ஷஸத்தொகுதியை உமாதேவியார்கண்டு, தனது நியோகத்தால், அபாரமான சத்துருசேனையைப் பகுத்தக்கத்தக்க வலிமையுடைய மகாவிரர்த்த கோரரூபமுடைய சண்டிகா சைனியத்தைத் திருஷ்டிக்க, அச்சண்டிகாகணம் ராக்ஷஸத்தொகுதியைக் கொன்று அவர்கள் உதிரத்தை ஒரு குளியுங் கீழ்விழாமற் பருகி, பிரமத்தனவிருக்ஷருருவின் மாயையையுமழித்தனர். பார்வதிதேவியும் அவ்வசுர ருதிரத்தையருந்திக் கோரரூபத்துடன் எண்ணிறந்த புயங்களோடினஞ்சிநின்ற மாயையையும் விலக்கி, மீண்டும் அற்புதக்கணக்கான மாயையையுடைய குருவுடன் போர்புரிந்தனள். அதனால் குரு பெருங்கோபங்கொண்டு பார்வதியைப்பிரமிக்கச் செய்யவேண்டுமென்னுங்கருத்துடன்வாயுவேகமாய்க் கிரிலோகங்களினுந் திரிந்து தூணேரத்திற் சுவர்க்கலோகத்தை யடைந்து தகதகமே பாதலத்தையடைந்து, போவதும் வருவதும் ஒருவர்க்குந் தெரியவொட்டாதுவினைந்து செல்லுகையில், தேவியார் ஸ்தூலாகாரமாய்ச் சிறிதுநின்று, பிரளயகால சூரியர்போன்ற அதி யாச்சரியமும் பராக்கிரமமுமுடைய கணக்கிட்டுச் சொல்லிமுடியாத பெரியதோர் விசுவரூபமெடுத்தனர். இத்தச்சண்டிகா நாயகியின் உருவம் இவ்வளவு பிரமாணமிருக்கதென்கூறச் சதுர்முகப் பிரமனுக்கும் சாத்தியப்படாது. இதுவரையிலிருந்தவர்களிலாவது இப்பொழு திருப்பவர்களிலாவது இனிப் பிறப்பவர்களிலாவது ஒருவருக்குஞ் சாத்தியப்படாது. இதப் பிரமாண்டமானது ஒரு சுவல்ப வஸ்துவாயிருந்தது. பிரளயகால ருத்திரனும், சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியத் தலைவர்களாகிய பிரமவிஷ்ணு ருத்திர மகேசுவராதிகள் அணுவளவாயிருந்தனர். இவ்வண்ணமாக ஜகதீசுவரியாகிய பார்வதிதேவியார் விசுவரூபங்கொண் டிருக்கையில், குருவென்பவன் காலெடுத்துவைக்கவும் இடமற்றவனுய், அப்பொழுதும் தன் மூடத்தனத்தால் பராக்கிரமத்தைக் காட்டக் கருதிநிற்க, மகாதேவி அவன் கைகளைப்பிடித்து வஜ்ராயுதம்போற் பிரகாசிக்கும் தனது வல கரத்தால் அவன் சிரசைக் கிள்ளியெறிந்து அவன் தோலையுரித்துத் தன்து உடலின்மேற்போர்த்துக்கொண்டு அவனுடலைக் கை முஷ்டிகளாற் குத்தி அதினின்று சொப்புளித்துக்கொண்டு புறப்பட்ட உதிரத்தை வாய்வைத்துப் பருகி, அவனது மாமிசத்தையும் புசித்துக் களிப்புற்று, அவன் தலையை மாமிச சீக்கிக் கபால மாக்கிக் கரத்திற்றாங்கி, ஷ்டகமான பிரமதனங்களாற் சேவிக்கப்பட்டு ஷட்குணசுவரிய சம்பன்னனுகவிளங்கும் சிவபெருமான் எழுந்தருளியிருக்குமிடத்திற்குச் செல்லுகையில், கபாலமாலிகாபரணராகிய சிவபெருமான் பார்வதிதேவியைக்கண்டு மனங்களித்து அதிகவிதமாக உபசாரவார்த்தைகள் கூறினர். அப்பொழுது உமாதேவி தன் கரத்திலேந்திய குருவின் கபாலத்திலிருந்த அவனுதிரத்தில், அம்மகாதேவி பானஞ்செய்து மிருத்தலில், சிறிது தானும் பானஞ்செய்ய விரும்பினவராயிருத்தலையின், உமாதேவியார் அதனைக்கொடுக்க வாங்கிப் பானஞ்செய்தனர். யானைத்தோலும்

சிங்கத்தோலும் குருவின் தோலுமணிந்துகொண்டு அவ்வசுரவதிரத்தால் நனைந்து வினங்கும் உமாதேவியின் தேகத்தை, சிவபெருமான் தன் தேகத் தோடணைத்துக் கொண்டனர். அத்தோற்றமானது பலாசக்காடு புஷ்பித் தாலுள்ள இமாசலத்தையொத்திருந்தது. பின்னர் உமாதேவியார் விநோதார்த்தமாக, சிங்கத்தோலையும் பெரிய யானைத்தோலையும் சந்தோஷ பூர்வமாகச் சிவபெருமானுக்குக் கொடுக்க, அவர் அவ்விரு சருமங்களையும் பெற்று, சிங்கத்தோலை இடையிற்கட்டி, விசாலமான யானைத்தோலை உடல் முழுதும் போர்த்துக்கொண்டனர். பார்வதிதேவி தன் சத்குருவான குரு வின் சருமத்தைத் தரித்துக்கொண்டு சந்தோஷத்துடன் தன் தோழிமா ரோடிருந்தனள். இவ்வாறிருக்கையில் அநேக சராசரர்கள்-ருஷிகள்-தேவ ரனர்-கிம்புருடர்-பிரமன்-திருமால் முதலிய யாவரும் வேத மந்ரஸ்தான நிமித்தமான குருவென்னும் அகாரனைச் சங்கரித்து இவ்வகைய சண்டிகா ரூபத்தைத் தரித்தீர்கள். பயங்கரமான இவ்வுருவத்தைத் தாங்கள் இனி நீக்கவேண்டும். சதக்கால சந்திரன்போன்ற காந்தியோடு விளங்கவேண் டுமென்று பலவாறு சொர்த்தித்துப் பூஜித்தமையின், பார்வதி பரமேசு வரிருவரும் இவ்வகாரவடிவம் வதித்துச் சந்தோஷித்தனர்.

குருவின் கதையுரைத்தது

முற்றிற்று.

ஏழாவது

சக்தி சிவங்களின் சிறப்புணர்த்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகளாகிய சௌனகாதி முனிவர்கள் சூதமுனி வருக்கு நமஸ்காரஞ்செய்து சிவசக்தியிவருபமாகவிருக்கும் இப்பிரபஞ் சத்திற்குக் காரணபூதமாகவுள்ளவர் சிவபெருமானுசிவசக்தியாரிருவரேதா வுங்களால் இவ்விருவரிற் சிறந்தவர்யாவர்? இவ்விஷயம் அடியேங்கட்குச் சந்தேகமாகவிருக்கின் இச்சந்தேகத்தை விலக்கியருளவேண்டுமெனப் பிரார்த்திக்க சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். முனிவர்களே! உல கத்தில் ஸ்திரீகள் விசேஷப்பட்டவர். அவர்கட்கே குணதோஷங்கள் அதி கம். அவர்களே மாயாசரூபிகள். இதில் ஓர் இரகசியமுள்ளது. என்ன வென்றால்—உலகத்திலுள்ள ஸ்திரீகள் புருஷர்கள் பசு பக்ஷியாதி சமஸ்த ஜந்துக்கட்கும் எழுபத்தீராயிரம் நாடிகளுள்ளன. இந்நாடிகளெலாவற்றி லும் கட்டுமாத்திரம் ஜகன்மா என்றும் ஒரு நாடி விசேஷமாகவுள்ளது. கர்ப்ப காரணத்திற் கர்நாடியே போகியமானது. அந் நாடி யிருப்பதால் குணா தோஷங்களால் அதிகப்பட்டவளான ஸ்திரீயைப் புருஷன் மாயாவசனி

¶ பலாசமலர் செந்நிறமுடையது. சிவபெருமான் திருவெண்ணீறு சன்னி த்த வெண்ணிறத்த திருமேனியையுடையவர்.

ல்ஸ்திரீ பாலத்தாலாவது புருஷ பாவத்தாலாவது இருவரும் சம்போகிக்க, பெண்குழந்தையாவது ஆண்குழந்தையாவது பிறக்கின்றது. இவ்வகைய விசேஷாடியைத்தரித்தஸ்திரீ, புருஷனிடத்தும் தன் மாயையால், வசியஞ் செய்துகொள்வதால் ஸ்திரீகளே உலகத்திற் சிறந்தவர்களாவர். ஸ்திரீகளே மாயாசக்தியாற் சிறந்தவர்களென்பதற்கு, புண்ணியகரமும் செவிக்கினிமையுமான ஒரு புராதன கதை சொல்லுகிறேன் கேளுங்கள்.

பூர்வத்தில், பாலுகரனது சோணிதபுரியை யடுத்த நதி தீரத்தில் சர்வேசுவரனை சிவபெருமான் தேவாகசர்களோடுங் கூடி விநோதார்த்த மாக எழுந்தருளியிருக்கையில், அப்சரசுகள் நடித்தனர். கந்தர்வர்கள் கானஞ்செய்தனர். முனிவர்கள் பெருமானைப்பணிந்தும் பூஜித்தும் துதித் தும் இருந்தனர். சமஸ்தமான பிரமத கணங்களும் சேவித்துக்கொண் டிருந்தனர். ருஷிகள் ஜோமஞ்செய்தனர், சித்தர்கள் தமது மனசைச் சிவபிரானிடத்து நிறுத்திவைத்தனர். சுகவரனே யில்லையென்று குதர்க்க வாதஞ்செய்யும் நாஸ்திகர் சிவபெருமானைக்கண்டவுடன் சூரியனைக்கண்ட இருள்போலத் தமது அஜ்ஞானமொழிந்து ஆஸ்திக மதப்பிரவேசமாயி னர். சத்துருக்கள் ஓடினர். சப்த மாதர்கள் எதிரே நின்றனர். உலகத் துக்கு மகா பயங்கரமாயுள்ளவர்கள் சாந்தபுத்தி யடைந்தனர். சிவபக்தர் கள் ஸம்சாரசம்பந்தமான தோஷங்களை ஒழிந்தனர். அங்கிருந்த சபை யோர் பரமானந்தத்தையடைந்தனர். அச்சபையில் அப்சரசுமுதலியோர் நடிப்பதுகண்டு அருகிருந்த சித்தர் முதலியோர் சந்தோஷித்தனர். வசந் தாதி ருதுக்களாலும் தத்தம் புஷ்பித்தல் பழுத்தல் முதலிய திருத்தியங்க ளைச் செய்துகொண்டிருந்தன. மந்தமாருதமானது சுகந்தமாகியமகரந்தத் துடன் வீசாநின்றது. புஷ்பபாரங்களால் வணங்கிருக்கும் விருக்ஷங்களின் மலர்களிலிருந்துவண்டென் அதின்தேனையுண்டு உகரந்தப்போடிகளைப்பூசிக் கொண்டு சிங்காரஞ் செய்துகொண்டிருந்தன. விருக்ஷர்களும் மன்மதாகார மடையும்படி, தேமர்மரங்களில் மதுமான குரலுடன் குயில்கள் கூவின. அப்பொழுது இதன்முன்னரே மன்மதனைச் செயித்திருக்கும் சிவபெரு மான் பார்வதியோடிருப்பது உசிதமென்று கருதினர்போல விநோதமாக சுந்தரியை வினித்து, ஈ கைலாயமடைந்து, புனிதையாய் மகா அலங் காரத்துடன் விளங்கும் பார்வதியை நான் விளித்ததாகக்கூறி அழைத்து வரவேண்டுமென்று கட்டளையிட்டவுடன், சுந்தரிதேவர் சொக்கனைப்படியே, திருக்கைலாய மிருக்குச்சென்று பார்வதிதேவியைக் கண்டு, மகாதேவி! சிவபெருமான் தேவரிசைச் சர்வாபரண பூஜிதையாகக் காண விரும்பினர் எனக்கூற, பார்வதிதேவி அவ்வாறே யாகுகவென்று அலங்கரிக்கத் தொ டங்கினர். உடனே சுந்தரிதேவர் சிவபெருமானிடம் விரைவாக வாயுவேகத் துடன் உமாதேவியின் வருகையைக்கூறக் கருதினர, சிவபெருமான் சுந்தரி! நீ உமையையழைத்துவருகென்று முன்னரும்விடுப்பநந்தரிதேவர்கைலாயத்

தையடைந்து பார்வதியைநோக்கித் தாயே! அதிசுகாலங்காருஞ்செய்து கொண்டு விரைந்து வரவேண்டுமென எமது தந்தையாகிய சிவபெருமான் விரும்புகின்றனர் எனக் கூற, பார்வதிதேவி தன் தோழிகள் ஜெயா சுந்தி தேவருடன் விரைந்து சிவசுகிதியை படைத்து விரைவில் வருகின்றே னெனக் கூறுகவென்று கட்டளையிட்டனுப்பினர்.

இவ்விதிவ்வாறிருக்க, அச்சபையிலிருந்த அப்சரசுகள் நம்மில் எவ ருக்குத் தேவதாசியனிலெல்லாஞ் சிறந்தவளாயிருக்கும் பெருமையுண்டா கும்? ஸப்த மாதர்களில் எவர் கௌரீரூபமுடையவர்? என்றிவ்வண்ணம் யோசித்துச் சிவபெருமானே நாம் கேட்போமெனச் சபீபித்துச்சென்று, ஒருத்தியும் வாய்திறந்து கேட்க வல்லமையில்லாதவளாயிருந்தனர். பின் னர் பாணாசுரன் மந்திரியாகிய குபாண்டன் என்பவனுடைய குமாரத்தியா கிய சித்திரலேகைப் யானை கௌரீரூபம் வகித்துச் சிவபெருமானே இவ்விஷ யத்தைப்பற்றிக் கேட்கிறேனென்று அவ்வப்சரசுகளே புடன்கொண்டு உள் ளனில் ஒருத்தி ஈந்திகேசுவர வடிவமும், மற்றவர்கள் பார்வதியின் தோழிகள் வடிவமும் வகிக்கவேண்டுமென்று கூறினள். அதனைக்கேட்டு, விஷ்ணு மூர்த்தியின் [ஊரு] தொடையினின்றும் ஜனித்தவனாகிய ஊர்வசியான வள் விஷ்ணுசம்பந்தமான மாயையால், சரியான சுந்திதேவர் வடிவை யடைந்தனள். க்ருதாசியானவள் காளி ரூபத்தையும், விசுவாசி சண்டிகா ரூபத்தையும், ப்லம்லோசை சாவித்திரி ரூபத்தையும், மோஹ காயத்திரி ரூபத்தையும், லஹஹங்யா ஜனய வடிவத்தையும், புஞ்ஜகஸ்தலி விஜய வடி வத்தையும், க்ரதுஸ்தலி விஜய ரூபத்தையும், வேறு சில அப்சரசுகள் ஸப்தமாதர் வடிவத்தையும் தரித்துக்கொண்டனர். அவ்வாறு வடிவேற் றவர்களைக்கண்டருகிலுள்ள சித்திரலேகை சரியென்று மனை வனைத் திடஞ்செய்துகொண்டு விஷ்ணுசம்பந்தமான ஆத்மயோகத்தாலடை ந்த ஞானத்தால் அந்தியத்புதல்வருபமுடைய பார்வதிதேவியின் வடி வத்தை யடைந்தனள். அம் மஹாதேவியின் இவ்ய திருவுருவம் எத்தன் மையதெனில், செந்தாமரைமலரின் சுந்தியும் மேன்மையுமுடையபாதங் களும், முறையே யுயர்ந்த ரம்பையானவளின்தொடைபோன்ற விரல்களும், சந்திரகிரணங்களைத் பிறந்து சந்திரனையை வீசுகின்ற நகங்களும், எண் டிசையிலும் கல் கல்லென்றொலிக்கும் நூபுரமும், குதியிருண்ட பா தமும், பொன்மலையாகிய மேருவைப்போன்ற புஷ்டங்களும், மிருதுவாகிய தின்னிய ரோமசேலையும், கனத்த வாழைத்தம்பம்போன்ற தொடை யும், மதயானையின் சுர்ச்சனம்போன்ற ஒலியையுடைய மேகலாபாணமும், விலையுயர்ந்த பல நிறம்வீசுந்த சித்திரப் பட்டாடையும், பலசந்திர ரூபி யப் பிரகாசமுள்ளதாகிய திரோடூஷணங்களும், சிறிது காணமுற்றுப்போன்ற புன்சிரிப்புடன் கூடியமுகமும், சுவர்ணத்தினுத்தாற்செய்த மேகலையினுந்த உச்சிபோன்ற இடையும், பொன்னுத்தாற்செய்த படியோவென்று சொல்

லத்தக்க உந்தியும், பொற்முலாமுதலியபோன்ற * பூர்ணமான மூன்று (வயிற்று) ரேகையும், புடமிட்ட பொன்போன்ற வயிறும், ஜாதரூப நிறமு டைய மார்பும், கோடிசுந்திர்களுக் சமானமானதும் முத்தாரங்களின் தேஜஸ்டையதும் மிருதுவுமான புயங்களும், மலர் கொய்தலில் மிக்குப் பழகிய கைகளும், பிரகாசிக்கும் அதிக விதமான விலையுயர்ந்தஆப ரணங்களும் பதக்கங்களுமணிந்த கழுத்தும், செம்பவளத் துண்டுபோன்ற மெல்லிய அதரமும், பாலசந்திரன் வரிசையாக நின்றிருந்தாற்போன்ற தந்தபந்தியும், செந்தாமரைமலர் மொட்டுபோன்ற நிறமுடைய நாவும், என்னில் மல்லாயொத்தபொன்னிறத்தாரியும், விகாரமற்ற சிலியாசிகா சந்திரங்களும், சுந்திரமண்டலமும் சரணக்கல்லும்போன்ற கபோலங் களும், ஆழமான வள்ளிக்கொடிபோன்ற செவியும், இரத்தினமயமான பொன்னுற்செய்த குண்டலங்களும், வெண்மை செம்மை கருமைகள் கலந்த பிரகாசிக்கும் விழிகளும், மனமதன் வில்லியொத்த புருவங்களும், பிரகாசித்துக்கொண்டிருக்கும் விழிகளின் சிருங்காரசேஷ்டைகளும், சிறிது அசைந்து பிரகாசித்துக் கறுத்த கேசத்தினுன் மயிரும், அர்த்தபிரச்சந்திரன் போன்றமுகமும், குங்குமமுதலிய பரிமளவஸ்துக்களாலாகிய திலகமும், கெந்திமுன்மயிர்க்கலர்திருக்கும்பொன்மணிபலனவ்களால்செய்யப்பட்ட தலைச்சாமரமும், சவரத்தினசிடமும், சவரத்தினமயமான ஜடாகரமும், அதிலணிந்துள்ள மணிகளின் கோலாகரமும், பிரகை மலர்களால் அலங் கரிக்கப்பட்ட அளகபாரமும் மல்லிகைகளும் உண்டத்தாகி, ஒவ்வோரவரி யையுங்கண்டோர் இது விசுவகர்மாவுத் திருஷ்டிக்கப்பட்டது நானெ வென்றுசொல்லத்தக்க சிறந்த மணிபணிகளோடு, பார்வதிதேவி வடிவை யடைந்து, தனக்கேற்ப உடன் வருவோரெல்லாரும் வடிவேற்க, சர்வடி வேற்றிருக்கும் வரவர்ணி தன் கண்களுடல்கூடி, சர்வேசுவரனிடஞ்செ ன்று, ஸ்வாமி! கைலாசகிரியினின்று பார்வதிதேவியை யழைத்துக்கொ ண்டுவந்தேன். ஸப்தமாதர்களும் வெளிவந்திருக்கின்றனர்என்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் வாயுமுனர்க்கவராயினும், அவர்கூட் கேற்பத்தாமும் ஓர் திருவிளையாடல் செய்வான் திருவுள்ளத்தினுன்னி, பெ ருங்களிப்புற்றாற்போல் மிடற்றினின்றும் விரைதெழுந்து ஏழடிதூரம் எதிர்சென்றனர். அப்பொழுது அவருடன் பிரமாதி தேவர்களும் தத்தம் தானவாகனங்களும், மகருஷிகளும், சித்துக்களுங்கூடச்சுற்ற பார்வதி போலக்படவேடங்கொண்டிருப்பவளுமுன்சென்று, பலிதமான தோத் திரங்களால்துதித்துச்சுத்தாதித்திருக்கையில், சிவபெருமான் பார்வதிவே றுருவங்கொண்டிருக்குஞ்சித்திரலேகையைக் கைலாகுகொடுத்து அழைத்து வந்து காலுறிய மலர்களாலலங்கரிக்கப்பட்ட சுயம்பிரகூடமஞ்சத்திலேறி அதிகவிதமாகக் கிரீடித்தனர். சுயம்பிரகூடமேறிய ஸப்தமாதர்களும் வீர் நடித்தனர். சிலர்கானஞ்செய்தனர். சிலர்உருத்திரஜபஞ்செய்தனர். சிலர்

* பூர்ணமான முன்றுரேகைகள் என்றதால் ஸ்தூலமான தேகமுடைய னெனக் கொள்ளக்கிடக்கிறது.

கிரீடித்துக்கொண்டிருந்தனர். சிலர் கூகைத்திருந்தனர். சிலர் இராகங்களை ஆலாபித்துக்கொண்டிருந்தனர். கபடபார்வதியும் பலவித கானஞ்செய்தனள். யாவரும் சிருங்கார ரசகோஷ்டமாக காட்டியகான முதலியன கடந்து கொண்டிருந்தன. இந்த வித்தியாகள் செய்த கபடத்தையுணர்ந்தார் சிவபிரானையன்றிப் பிறரொருவருமிலர். கபடஞான்றி முதலாயினர் சிவார்ச்சனையில் ஆசக்தியுடையவரா யிருந்தனர்.

இப்படிஇவ்வாறிருக்கையில், பார்வதிதேவி திருக்கைலாசகிரியினின்றும் சர்வாலங்காரபூஷிதையாய், பிருங்கிமுனிவர் நந்திமகாகாளர் கண்டகர்ணர் முதலிய பிரமதகணங்களால் தூதிசெய்யப்பட்டு ஆகாசவீதியாய், தனது கணவராகிய சாம்பவமூர்த்தியின் சன்னிதானத்தை வந்தடைந்து, விஷயத்தை யுணர்ந்து, ஆஹா! இதுயார்? என்னைப்போலவே பார்வதியும் எனது பரிவாரங்களைப்போலவே பரிவாரங்களும், பிரமதகணங்களைப்போலவே கணங்களுமாகக் காணப்படுகின்றனரே? என்றுலோசித்திருக்க, கபடவேஷதாரிகள்கண்டு பயமுற்றனர். அப்பொழுது கண்டவர்கள் இரண்டுபார்வதிகட்கும், இரண்டுஸ்பதமாதர்கட்கும், சந்திமுதலிய கணங்கட்கும் பேதங்கண்டிலர். பின்னர் சிவபெருமானருகிலிருக்கும் கபடவேஷப்பார்வதியின்சித்திரலேகை நிறவ்வருபமாக வந்திருக்கும் பார்வதிதேவியைப்பார்த்து மனம்வருந்தி அஞ்சினள். அதனைக்கண்ட பார்வதிதேவி இது அப்சரன்திரிகளின் கபடச்செயலெனச் சிறுகக்கெய்தனள். அப்பொழுது அங்கிருந்த அப்சரசுகளும் பூத பிசாச யக்ஷ ராக்ஷஸர் முதலிய யாவரும் கலகலவென்றுசிரித்தனர். சந்திசேகராகிய சிவபெருமான்கண்டு மாதர்களின் சமத்காரத்திற்காகப் பெருங்களிப்படைந்தனர். பின்னர் கபடபார்வதியாகிய சித்திரலேகையும் சந்திமுதலிய வடிவேற்றுகின்ற அப்சரசுகளும் தங்கள் நிஜவடிவையடைந்து தங்கள் தங்கள் பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தனர். மகருஷிகளே! இந்திரகளாலே சர்வேசுவரனாகிய சிவபெருமான் இவ்வாறு சந்தோஷஞ் செய்யப்பட்டனன். பார்வதிதேவியார் பரமேசுவருடன் கூடி வருந்தருணமிருக்கையில், பார்வதிதேவியைக்கண்டு, வாணாசுரன் புத்தியுரிய உஷையென்பவள் தானும் இவ்வாறு கணவனுடன்சேர்ந்து இந்நிசீதத்தில் பிரிந்துகொண்டிருந்தால் என்னாயிருக்குமே:-இவ்வாறு வாழ்வோரே புண்ணியர்கள். எனக்கு இப்பேறு எப்பொழுது கிடைக்கும்? என்று தனக்குட்டானே நினைத்து, நியமமாகப் பார்வதிதேவியை யாராதித்து இவ்வகைய கோரிக்கையை யீடேறச்செய்து கொள்ளவேண்டுமென்று நிர்மானித்து, இந்திய சிந்தை கந்செய்து விரதமிருந்து பார்வதிதேவியை ஆராதித்திருக்கையில், விரதசிஷ்யாயிருக்கும் உஷையின் கருத்தையுணர்ந்த உமாதேவியார் உஷையை நோக்கி, ஓ பாபமற்றவளே! இந்நிசீதத்தில் ஆதிசிவத்தில் கணவனுடன்கூடிப் பலவிதமாகச் சுகமனுபவிக்கப் போகின்றனை எனக்கூற, உஷை அதனைக்கேட்டு மனத்தில் கம்பிக்கைகொண்டு, தாயே! நான் மந்தபாக்

கியமுடையவள். எப்பொழுது கணவனுடன்கூடிச் சுகமுறுவேன்? அதனைக்கூறவேண்டுமென, பார்வதிதேவி, இது கார்த்திகை மாதமல்லவா? இதன்மேல் ஏழு மாதங்கள் சென்று வைகாசிமாதத்தில் சுக்லபக்ஷத் துவாதசியில், சதுரசாத்திரியில் உபவாசமாயிருந்து நித்தியைசெய்யும் உன்னை எவன் அநுபவிக்கின்றானோ அவனே உன்கணவன். அவனுடனே சகலசுகங்களையுமநுபவித்து அவனுடனே செல்லப்போகின்றனை: நீ இளம்பருவத்திலிருந்து விஷ்ணுபக்தி செய்துவந்தமையின் உனக்கு இவ்வகைய புருஷப்பிராப்தியுண்டாகும் எனக்கூற, உஷை காணத்தால் தலைகுனிந்து நின்றனள். சிறிதுகாலங்கழித்துச் சிவபெருமான் பார்வதி சிவகணங்களுடன் திருக்கைலாயகிரியை யடைந்தனர். பின்னர் அங்குவந்திருந்த தேவர்களும் அசுரர்களும் வானுதிகளிவர்ந்து ஆகாஸமார்க்கமாகத் தங்கள் வாசஸ்தானத்தை யடைந்தனர்.

சிறிதுகாலங் கழிந்தபின்னர் வாணாசுரன் சிவபெருமானையடைந்து அப்பெருமானை யுருத்திரத்துக் கைகூப்பிநின்று பெருந்துதத்துடனும் தெய்வகதியாகக் கர்வத்துடனுஞ் சொல்லுகின்றான்: சர்வேசுவரா! மஹேசுவரா! மஹாதேவரான நீயொருத்த பூரித்த வன்மைபுடைய எனது ஆயிரம் புயங்கட்கும் யுத்தமில்லாதிருத்தலின் யாது பிரயோசனம்? இந்திரன் அக்கினியமன் முகலிய அட்டதிக்குப்பாலகர்களையும் வென்றிருக்கின்றேன். இவர்களில் தேவர்கட்கெல்லாம் அரசனுகிய இந்திரனை எனக்குக் கப்பங்கட்ட வேண்டியவனாகவுஞ் செய்திருக்கிறேன். யோகமாயைகளில் வல்ல ஸைரந்திரியையும் என் ஸ்வாதீனஞ் செய்துகொண்டேன். என் சத்துருக்கள் பிரயோகிக்கும் பாணங்களால் என் தோள்தினவு எப்பொழுது தீரப்போகின்றது? எப்பொழுது அவ்வகைய பெரும்போர்சம்பவிக்கும்? இவ்விஷயத்தைத் தேவரீர் சொல்லவேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் இவ்வாணனின் வார்த்தையைக்கேட்டு, ஆஹா! இவனுக்கு இவ்வளவு கர்வமிருக்கின்றதா? மீண்டு மொருதிச் சினந்து அட்டகாசஞ்செய்து, ஓ தைத்தியர்தமா! உன்கர்வம் விரைவிலழிந்து, உனக்குள்ளவிசேடித்த சர்வமானது பங்கப்பட்டத்தக்கதினமானது நிற்றது. உனக்குள்ளவிசேடித்த சர்வமானது பங்கப்பட்டத்தக்கதினமானது யுத்தம் விரைவிற் சம்பவிக்கப்போகின்றது. சத்துருக்களுடைய பாணங்களால் உன் மஹாபோன்ற தோள்கள் துண்டிக்கப்பட்டுச் சிரித்தொனிந்த காஷ்டம்போல நிலமிசை விழுந்துபோகும். உனதுமயூரத்துவஜமும் காற்று முதலியன வொன்றுமின்றி ஒடிந்துவிழும். அதுவே பெரும்போர் நிகழுங்காலமென்றறிக. அத்தருணத்தில் நீ சர்வசைனியங்களோடும் அபஜய மடைவாய். இப்பொழுது அம்மயூரத்துவஜம் காட்டப்பட்டுள்ள இடத்திற்கு விரைந்துசெல்க. நீ இன்னும் ஒரு மஹோத்பாதத்தையுங் காணப்போகிறாய் என்று திருவாய்மலர்ந்தருளினர். சிவபெருமானுடைய வார்த்தைகளைக்கேட்ட வாணாசுரன் திவ்யமான மலர்களால் மஹாதேவரைப் பூசித்துக்கைகூப்பி, சம்போ சங்கர மஹாதேவா என்று துதித்துவிடைபெற்றுத் தனது ஆயுதசாலையையடைந்து ஊழிக்காலத்துக்குரிய

னென்னும் தன் மந்திரியுடன் சொல்லி, மயூரத்துவஜனும் உடைத்தலுடனே எனதுசைனியங்களுடன் புறப்பட்டுச் *சங்கிராமயாகஞ்செய்து போருக்கு நீ வரச் சித்தமாயிருக்கவேண்டும் என்று கூறி, எக்காலத்தில், எல்லா அஸ்திரசஸ்திரங்களின் பிரயோகத்தையுமறிந்து, எவன் போர்செய்யவரப் போகின்றான்? எப்பொழுது என் தோள்களை வெட்டப்போகின்றான்? எப் பொழுது அவன் தலையை வெட்டியிடப்போகின்றேன்? என்று காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனன்.

இஃதிவ்வாறிருக்க, முன்பார்வதிதேவியார் வாணாசுரனுக்கு வரமளித்தலைக்கே வைகாசிமாசஞ் சம்பவித்து, அம்மாசத்தில் விஷ்ணுபக்தியுடைய உலகஸ்ரானஞ்செய்து அலங்கரித்துக்கொண்டு விஷ்ணுமூர்த்தியைப் பூஜித்து மகாராத்திரியில் அத்தலபுராணத்தை முனிவர் தம்மிடம் கேட்டுக்கொண்டு சயனித்திருந்தாள். அப்பொழுது கிருஷ்ணமூர்த்தியின் போலுவே அிருத்தனும் பார்வதிதேவியாரது போகமாயையால் மோகிக்கப்பட்டவனும், சோணிதபுரத்தையடைந்து, உலகையும் பலவகத மாய்ப்புணர்ந்து பலனிதமான சுகத்தையநுபவித்து, தான் இப்பொழுது என்னிருக்கின்றேன்? எப்படி மீண்டுபோகின்றேன்? என்று தூங்கிக்கொண் டிருக்கையில், மீண்டும் பார்வதிதேவியாரது போகமாயையால் துவாரகை யிலிருக்கையிலேயாய்ப்பட்டனன். பின்னர் உஷையானவள் சுதலோகயால் பலவருத்தத்துடன்விழித்துக்கொண்டு ஒருவினாவுக்காலுற தன்தோழிய ருடன் பலவிதமாகக்கூறி, பான் இருக்கவத்திலேயே உயிர்விடுவேன் என்று மூர்ச்சித்துவிழுந்தனள். அதனைக்கண்ட அவள்தோழியாகிய சித்திர லேகை பனிநீர்முதலியன தெளித்து வீசித்தியோபசாரங்களால் முர்ச்சை தெளிவிக்க, உஷையானவள் எழுந்திருந்து முன்னடந்தவிருத்தாந்தங்களே யெல்லாம் மதுசூதனமானவாக்காற் சுருக்கமாகவுரைத்துத் தன் தோழியை நோக்கி, "சகியே! பூர்வத்தில் ஜகன்மாதாவாகிய பார்வதிதேவியாரைநோக்கி யான் விரதமிருந்தபொழுது அவ்வெம்பெருமாட்டி மகாதபாபூதையாய் உஷையே! உன்னை நித்திரையில்வந்து புணர்பவனே உனக்குக்கணவனாவா னென்று வரங்கொடுத்திருக்கின்றனள். உன்னுடைய உபாயத்தால்தான் யான் விதிபூர்வமாக அக்காயகனையடையவேண்டும். அவன் எக்குலத்தவ னென்றுமுணரேனெனினும், என்மனது அவனுக்கலப்பட்டதனாலச் சொல் லினள். அதுகேட்ட சித்திரலேகை உஷையே! நீ சொப்பனத்திற்கண்டவன் இன்னவனென யாதறியேனுதலின், அவன்யாவனெனு எவ்வாறுகண்டுபிடிப் பேன்? என, உஷையே! நீயவ்வாறுசொல்வாயாயின், பிறதொருவரால் இது செய்ய முடியாததுபற்றி யான் இக்காமத்துயராலிறப்பேன் என, சித்திர லேகை அஃது உண்மையேயென்றுணர்ந்து, உஷையே! நீ யென்றற்கும் அஞ்சற்க. உன்னைக் கரவிற்புணர்ந்து சென்ற கணவனை யான் எவ்வகையி

* சங்கிராமயாகம் போருக்குச் செல்வோர் தாம் வெற்றியுண்டாக வருதிச் செய்யுமோர் யாகம்.

லேனும் எழுதினங்களிற் கொண்டுவந்து உன்னிடஞ்சேர்ப்பிக்கின்றேனென் று உறுதியாகக்கூறி, தனதுமாயையால் சயனித்த அசுரர்களையுங் துணைய காக் கூட்டிக்கொண்டு அவ்வாறு உஷையைப்புணர்ந்தவன் அிருத்தனென் றறிந்துகொண்டு, மகாசக்தோஷத்துடன் நீ திருட்டித்தனமாய் எதோவோ ருபாயத்தால் என் பிராணசத்திரிமாகவுள்ள உஷா கன்னிகையைப்பறிகொ த்து அப்பொழுதே அவளுயிரைக் கொள்ளைகொண்டனை? நீயெக்குலத்த வன்? எவ்வயிரத்தவன்? உன்பெயர்யாது? எனக்கேட்டு, அவன்விருத்தாந் தங்களையுணர்ந்து, எவனைநீங்கி யென் தோழியாகிய உஷை கூறுனேரமும் பிழைத்தியாதொரு, அவனைக் கொன்வேறத்தக்க வுபாயம் யாதென்று சிறிது தன்னுள்ளேயோசித்து, தன்சிநேகியாயிவளைபுத்திரியுடன் நல்ல வார்த்தைகள்பேசி ஆனிமாச கிருஷ்ணசதுர்த்தசியில் உதயமுகூர்த்தத் தில் மதுவேலகத்துடன் கூடப்பொழுதில் யோகமாயையின் வன்மை யால் ஆகாசமார்க்கமாகத் துவாரகையையடைந்து, அந்தப்புரத்திலுள்ள உத்தியானவனத்தில் அசோகவிருக்ஷங்களுடன் மதுபானஞ்செய்துவீணையடித் கொண்டிருக்கும் அிருத்தனைக் கண்டனள். அப்பொழுது அிருத்தன் மலர்ப்பாயலும் பஞ்சணையுமுடைய தன் சயற்கூடமந்திரத்தில் எழுனன்.

சித்திரலேகை அதனைக்கண்டு, அங்கிருப்பவரையும் அிருத்தனை யுந் தனது மாயாசக்தியால் ஒன்றுமுணராதவர்களாகச்செய்து, அிருத்த னைக் கட்டியுடன்தாக்கித் தன் நிசமெல்லைக்குக்கொண்டு, காமமயக்கத் தால் ஒன்றுமுணராது பலவிதமான சிங்காரபாவங்களைப் பிரதம்பிடித்த வண்போலச்செய்துகொண்டிருக்கும் உஷாகன்னிகையிருக்குஞ் சோணித புரத்தைநிசாடியிற் சேர்ந்தனள். சித்திரலேகையால் இவ்வண்ணங்கொண் வரப்பட்டவுிருத்தனைக்கண்டு உஷை, வல்லமையிக்க அசுரர்களாற் காக்க ப்பட்டிருக்கும் அந்தப்புரத்தில்அவனுடன் கிரீடித்துக்கொண்டிருந்தனள். இதனைத் தம்முதகாக்களில் ஆயுதங்களேந்திக்காவல்செய்யும் அசுரர்கள் அக்கேடகடக்கும் இவ்விதங்களால் தம்முட்சந்தித்து உஷையின் கடத் தலையைக்கண்டுபிடித்து, அதி இவ்விபரீதமும் இளம்பருவமும் சன்கட்கு சம்மியமான அழகும் யுத்தப்பிரியமும் நிரம்முடைய ஒருமனுஷன் கம் முடையவாணுசுரபுத்திரியுடன் அந்தப்புரத்திலிருக்கின்றனென் றுகன்று கத்தெரிந்துகொண்டு, மாவலியின் புத்திரனும் தமது ராஜனுமாகிய வாண சூரனிடஞ்சென்று, மன்னனே! எங்களாற் காக்கப்பட்டிருக்கும் அந்தப் புரத்தில் மகாபலசாலியாகிய தன்னின் புத்திரியைப்பலாத்காரமாக எவனோ ஒருவனேடுசெய்துகொண்டு அங்கேயே வாழ்ந்திருக்கின்றான். காங்களே போய் அவனைக்காணலாம் என்றனர். அவ்வாறுகூறிய அந்தப்புர துவர பாலர்வார்த்தையைக்கேட்டவாணன்தினைத்து அந்தப்புரத்தையடைந்து நீலமேகம்போன்ற நிறமும் வாலிப வயதுமுடைய அிருத்தனைக் கண்டு ஆச்சரியமும் குரோதமும் குரோதத்தாற் சிரிப்புமுண்டாகி, இவன் எவ்வ வறு பேழைகுடையவன்? எவ்வளவு தைரியமாலி? இவன் என் குலதெய

வத்தையும் எல்லையிலாத்தையும் என்குமாரத்தியையும் கெடுத்துப் பலர் நகைக்கச்செய்தானன்றே? என்றகருதி, கல்லிரச்சனை வருவித்து நீக்கள் துர்மார்க்க சம்பன்னனை இவனை, உடனே அஸ்திரசஸ்திரங்களால் கதுக்கிப்பாசத்தாற்கட்டிக் காராக்கிருகத்திற் சிறைசெய்து காலம்வருமளவும் ஓடிபோகவொட்டாமல் காத்திருங்கள் எனக்கூற, வாலவீரர்களில் ஒரிலக்ஷம்பேர் அதிக ஆயுதங்களேந்தாங்கி அதிருத்தனைப் பிடித்துவரச் சென்றார்கள். அதனைக்கண்ட அதிருத்தன் சற்சிறிது அற்புதவாயிற்படியினிருந்த ஒரு தம்பத்தை யெடுத்துக்கொண்டு போர்செய்யப் புறப்பட்டனன். அக்கோலமானது இயமன் வச்சிராயுதமேற்று நின்றாற்போன்றிருந்தது. உடனே அதிருத்தன் அவ்வீரர்களையெல்லாங்கொன்று மீண்டும் அற்புதமண்டபத்து உலகையுடன் சேர்ந்திருந்தனன்.

ரூபிரேக்ஷர்களே! கோபத்தால் உதிரம்போலச் சிவந்திறம் வாய்ந்த பரந்தகண்களையுடைய அதிருத்தன் அவ்வீரர்களையெல்லாங் கொன்றசெய்தியை யறிந்த வாணாசுரன் பெருங்கோபங்கொண்டு தன் மந்திரியாகிய குபாண்டனையழைத்து நீ லக்ஷம் குதிரைவீரர்களை யுடன்கொண்டு சென்று, மகாபராக்கிரமசாலியாயிருக்கும்அதிருத்தனைத்தொந்தமுற்றஞ் செய்து செயித்துவரவேண்டும் என்றுஜ்ஞாபிக்க, குபாண்டன் அவ்வண்ணமேயிசைந்து சேனையுடன் அதிருத்தன்பேரிற்போருக்குச்சென்று அவனை யெதிர்த்துப் போர்செய்கையில், அதிருத்தன் அப்போரில் தனக்குக்கிடைத்த ஒரு கட்கத்தால் அவர்களில் அநேகரைக் கொன்றனன். சிலர் ஓடிப்போயினர். இதனையுணர்ந்த வாணாசுரன் மனமகாளாக்கிபோன்ற சுவாலையையுடைய ஒரு சக்தியை அதிருத்தன்பேரிற் பிரயோகிக்க, அதிருத்தன் அச்சக்தியை வீரோதார்த்தமாகப் பிடித்துக்கொண்டு, அச்சக்தியாலேயே வாணாசுரனை யடித்தனன். வாணன் அவ்வடியால் இரதபீடத்தில் மூர்ச்சித்து விழுந்து, மந்திரியாகியகுபாண்டன்செய்த சைத்தியோபசாரங்களால் மூர்ச்சையெளிந்து எழுந்திருக்க, வாணனை உபசரஞ்செய்து கொண்டுபோயினர். அதிருத்தன் மிகுந்த சலியாதுநின்றனன். அவ்வதிருத்தனது பராக்கிரமத்தை வாணனுடைய மந்திரியின் சேனைகள் கண்டு, இவனுடனியாயமாகப் போர்செய்தால் காரியங்கைகூடாது. கபடமார்க்கமாகவே வெல்லவேண்டுமென்று நிர்மானித்து, பலவிதமான அஸ்திரசஸ்திரங்களால் தன்புறத்தி வஞ்சமாக வீரர்கள் அநேகர் முன்னும்பின்னும் நின்று காதால் நிர்த்தாக்கட்டி வாணாசுரனிடம் அழைத்துக்கொண்டுபோய் காட்டினர். வாணன் கடுங்கோபங்கொண்டு இவன் கடதருலத்துக்கு மானம்மிகுத்தவன். இவனைச்சிரச்சேதஞ்செய்யுங்கள். இவனுடலைத்துண்டத்துண்டமாகச் செய்து அசுரர்கள் உண்ணும்படி கொடுத்துவிடுங்கள். அல்லது நரிகட்காவது இரையாக்குங்கள் அல்லது இவனை யாழுமான பாழ்ங்கிணற்றிற்றள்ளுங்கள் என்றுமிகக்கோபத்தோடுசொன்னன். அதனைக்கேட்ட குபாண்டன் மகாதர்மபுத்தியுடன், தலைவனே! இப்பொழுது தாங்கள் கோபசாந்தமாக

வேண்டும். இவனைநாம் இப்படிக்கொல்வோமாயின் நம்முடைய உயிரைக் கொன்றவர்களாவோம். இவன் பராக்கிரமத்தால் விஷ்ணுவுக்குச்சமானனாகவுஞ் சிவகடாக்ஷத்தைப்பெற்றவனுமிருக்கின்றான். இவ்வளவுகஷ்டத்தில் அகப்பட்டுக்கொண்டும் வீரத்துடன் விளங்குகின்றானேயன்றி மனம் வருந்திலன். மகாசர்ப்பங்களால் கடிக்கப்பட்டிருக்கும் இவன் பல பராக்கிரமசாலிகளாகிய நம்மை,ஒரு துரும்பாகநினைக்கின்றான் என்றுகூறி,அதிருத்தனைக்கண்டு, நீயாவன்? எக்குலத்தினன்? எவ்வுபாயத்தால் இங்குவந்தனை? ஓ துராசாரசம்பன்னா! ஓ நராதமா! தைத்தியராஜனுடைய வாணாசுரனைத் தோத்திரஞ்செய். நமஸ்காரஞ்செய். அடிக்கடிதான் உங்களாற்செயிக்கப்பட்டேனென்று சொல்லிக்கொள். இவ்வாறு செய்வாயாகில் நீ பாசத்தினின்று நீக்கப்படுவாய் என்று கூறினன். அதனைக் கேட்ட அதிருத்தன் அடா தைத்தியாதமா! பரமின்டோபஜீவிகா! நிசாசரா! துராசாரசம்பன்னா! கூசத்திற்கருமத்தைபயிலாமல் என்னைக்கேட்டுக்கொள்ளும்படி. நீ கூறுகின்றனை. சூரனுக்கு மரணத்தைக்காட்டிலும் அவமானமுந் தோல்வியும் புறங்கொடுத்தலுஞ் சிறந்தவையன்று. விருத்தமான அபகீர்த்தியைத் தேடிக்கொள்வதைக்காட்டிலும் சேர்முகமாகநின்று போர்புரிந்து உயிர்த்தரத்திலே புகழுடைத்து. இழிவானவார்த்தைகளைக் கூறி வேண்டிக்கொண்டு உலகத்தில் உயிர்வாழவேண்டுமென்னுங்கருத்து எனக்கிலது. இப்படி இழிவடைவதைக்காட்டிலும் மரணமாவது ஸ்லாக்கியமாவது பெறுவதே யுசிதம். உனக்குப் பேசத்தெரியாவிடில் ஊமைபோல் ஒன்றுமுரையாதிரு. அநேகாசுரர்களும் திரிலோகங்களும் எப்பொழுதும் என்பாட்டனுக்குப்பணிசெய்து துதிப்பவர்களாயிருக்கிறார்கள். அவ்வையவ மிசித்தவன் யானே அறுத்தெறியப்பட்ட கைகளாகிய வனத்திற்சஞ்சரிக்கும் நிக்கம்போன்ற சுத்தவீரனென்றறிந்துகொள் எனக்கூறினன். வாணன் தன் மந்திரிவார்த்தைகளால் அதிருத்தனைக் கொல்லாதுவிட்டு, அற்புதத்தையடைந்து*வீரபாணஞ்செய்திருந்தனன். அதிருத்தன் மகாவிஷத்தையுடைய நாகாஸ்திரத்தாற்கட்டப்பட்டுத்தன்மனதை உஷையினிடத்திற்செலுத்தித் தன் இஷ்டதேவதையாகிய பார்வதியைத் தியானித்துத் தாயே! யான் நாகாஸ்திரத்தாற் கட்டப்பட்டு அதனாற் கடிக்கப்பட்டிருக்கின்றேன். உன் பக்தர்கட்குத் துவேஷிகளிடத்தில் உனக்கு ரோஷமிருந்தால் விரைவாக வந்துஎன்னைக்காக்கவேண்டுமெனத்துதிக்க,பார்வதிதேவியுமிலேபோன்ற வடிவுடன்வந்து ஆனிமாத திருஷ்ணசதுர்த்தசியில் நரசிம்மாஸ்திரத்தினையடைந்து, தனதுவலிபொருந்திய கைமுஷ்டியால் நாகாஸ்திரத்தையுடைத்து,அந்த அஸ்திரத்தைப் பல்பலஞ்செய்து அவனைத்துயர்தீர்த்து,அற்புதத்தில் உஷையிடம்விடுத்து அந்தர்த்தானமாயினள். அதிருத்தன் சந்தோஷத்துடன் வானபுத்திரியைக்கூடி. இச்சைப்படியிருக்கையில், அங்கிருக்கும் விதிஹனங்கள் அவன்பட்ட கஷ்டங்களைக்கருதித் துக்கித்தனர்.

* வீரபாணம் - போர்செய்துவந்தவன் தன்தேகத்துள்ள காயத்தின் வாசை நீக்கப் பருகுவதோர் உணவு.

இவ்விஷயங்களையெல்லாம் துவாரகாபுரியிலிருக்கும் கிருஷ்ணமூர்த்தி நாரத முனிவரால் கேள்வியுற்று, பிரத்யும்நன் பலராமன் முதலிய வீரர்களுடன் எண்ணிறந்த சேனைகளைக்கூட்டிக்கொண்டு உடனே சோணிதபுரியையடைந்து அக்கினி-யமன்-சிவபெருமான்-முன்னூறு சிங்கங்கள் மூன்றுகால்களோடும் கூடிய சூரம்-குமாரக்கடவுள்-பிரமகணங்கள்-மகா பயங்கரமான எண்ணிறந்த நாணமற்ற மர்மஸ்தானத்தைக் காட்டிச் சத்துருக்களின் விரத்தைக் கொள்ளத்தக்க நிம்பான்திரன் முதலானவருடன் போர்புரிந்து, இறுதியில் வாணாசுரனுடன் போர்புரிந்தனர். இவ்வர் மஹேஸ்வர சம்பந்தமான ஜ்வரங்கட்கும் போர்விகழ்ந்தன.

வாணன் கிருஷ்ணமூர்த்தியை யெதிர்த்து தன் மந்திரி முதலான எண்ணிறந்த சேனையுடன் போர்புரிந்து தன் கைகியக்கள் யாவு மழியப் பெற்று, இறுதியில் கண்ணனுல் விடப்பட்ட சுதர்சனத்தால் தனது ஸாயிரம் புயங்களும் அறுபட்டனன். கிருஷ்ணன் வாணன் சிரத்தைக் கொய்ய வேண்டுமெனக் கருதுகையில், சிவபெருமான் கண்ணனைப் பலவாறு சந்தோஷிக்கச்செய்து, அவனைக் கொல்லவேண்டாம் இதுவரையிற் செய்தது போதும் சுதரிசனத்தை வருவித்துக்கொள். இச்சுதரிசனம் பூர்வகாலத்தில் உனக்கு யான் கொடுத்தேன், நீயே ஜயமுற்றனை. நீ யோகவான், பக்தப்பிரியன், ஷட்குணைசுவரிய சம்பன்னனி யாவருக்கும் நன்மைசெய்யக் கருதுகின்றனை. வாணனுக்கு கிருத்யுபயமின்மை வரங்கொடுத்துள்ளேன். நீ அவனைச் சங்கரிக்காவிடின் என் சொல்லைக் காப்பாய்—என்று கூறினர். அதனைக்கேட்டு, கிருஷ்ணமூர்த்தி தன் சக்ராயுதத்தை வருவித்துக்கொண்டு, தன் தேகத்திற் சிறிதுங் காயமின்றி ஜயமடைந்து தன் பேரனுகிய அநிருத்தனையும் அவன் மனைவியாகிய உஷையையும் தூரிவதித்து அழைத்துக்கொண்டு, இரத்தினமுதலியவற்றைக் கொள்ளைகொண்டு, உஷையின் பிரியமுள்ள தோழியாகிய சித்திரலேகையையும் உடன்கொண்டு, தன் வாகனமான கருடனிலிருந்து ஒடத்திலேறித் துவாரகாபுரியையடைந்து சந்தோஷமாக வீற்றிருந்தனர். கிருஷ்ணன் சென்றபிறகு சக்தமயமான தேகத்துடன் தங்கித்துக்கொண்டிருக்கும் வாணனை சங்கிபகவான் கண்டு நீ வருந்தற்க. சிவபெருமான் சங்கிதியில் கிருத்யுபயகோற்சவஞ் செய்த எனக் கூற, வாணன் அவ்வாறே கிருத்தஞ்செய்யக்கருதி, தன் இரண்டு கரங்களோடின்று உடலிற் பட்ட காயங்களால் உதிரமொழுகி பூமியை நனைத்து, * பிரத்தியாலீடமுதலிய கால்வகை நிலையினின்று, புருவமுதலியவற்றின் செயல்களாகிய அபிநயங்களையு, ஸஹஸ்ர சிரக்கம்பனஞ்செய்து, அநேகமுறை பிரத்தியாகீதஞ்செய்து பலவிதமாகத் தழுன்று சிவபெரு

* கால்வகைநிலைகள்—பைசாசம் - ஆலிடம் - பிரத்தியாலீடம் - மண்டலம். அற்றைஒருகாலினிலேநின்றெருகாலைமுடக்கும்-பரியாயமின்பைபசாசநிலையே. வலக்காலைமண்டலித்திடக்கான்முன்தூறும் - அதற்பின்பைராலீடநிலையாகும். இருகான்மண்டலித்திதென்மண்டிலமே. வலக்காலைமுன்தூற்றிடக்கான்மண்டலிப்பிற் - பிரத்தியாலீடமெனப்பெயராகும் எனவருஞ் சூத்திரங்களால் உணர்க.

மான் கிருபைசெய்யுமாறு கடனஞ்செய்தனன். அன்பர்களிடத்தில் அதிக விசுவாசமும் கடனிதற்களிற் பேரானந்தமுமுடைய சிவபெருமான் அவ்வாணன் செய்த கிருத்தத்திற்கு ஆனந்தமிகுந்து,வாணாசுர! உன்கருத்திற் கிசைந்த வரம் எதேனும் கோருக எனக் கேட்க, வாணன் சிவபெருமானைப்பணிந்து, ஸ்வாமி! என் தோளிலுள்ளகாயங்கள் நீங்க வேண்டுமென்றும், அழிவில்லாத சரணுபத்தியத்தை யெனக்குக் கொடுத்தருளவேண்டுமென்றும், இச்சோணிதபுரியின் இராசரிகத்திற்கு என் குமாரத்தியின் கணவருகிய அநிருத்தனை புதல்வன் அரசனுகவேண்டுமென்றும், எனக்குத் தேவர்களுடன் விரோதமில்லாதிருக்கவும், கல்பாந்தத்தில் விஷ்ணுமூர்த்தியால் எனக்கு மரணமுண்டாகவும், இராகூலத்தும் எப்பொழுதுபில்லாதிருக்கவும், விஷ்ணு ஆரதனை யெனக்கெப்பொழுதுமிருக்கவும், சர்வ நன மித்திரத்துவம் வேண்டுமென்னுல் கோரினன். சிவபெருமான் அவ்வாறே யாருகவென்று வரமளித்து அந்தர்த்தானமாயினர். பின்னர் வாணாசுரன் சிவனைத்தவிர்ந்த மிகுவனுயினன். உஷையினிடமாக விஸ்வஜித் என்னும் பெயரையுடைய ஒரு புத்திரன்தோன்றினன். கிருஷ்ணமூர்த்தியின் கிருப்பாத்திற்படி குபாண்டன் முதலிய மந்திரிகள் விஸ்வஜித்தை பிரசஞ்சித்தனர். அவ்வபிசத்தில் கல்பாந்தவரையிற் பிறந்தவர்களும் பிறப்பவர்களும் உலையும் சித்திரலேகையும் விஸ்வஜித்தும் சிவபெருமானுடைய கிருவடிநீழலை யடைவர்கள். இவ்வண்ணமாக உலகத்திலுள்ள சகல குருமித்ருஞ் சற்குருவாய், குலபாலியாய், மன்மதனென்னும் வைத்திற்கு அச்சினிவைத்யனாய் விளங்கும் திரிலோகத்தாதனுகிய சிவபெருமானுடைய சரித்திரத்தை என் புத்திக்கெட்டியவரையில் பெரியோர்களாற் கேள்விப்பட்டபடி உங்கட்குச்சொன்னேன். இச்சரிதத்தால்சிவபெருமான் சத்சரம்பந்தமாகவே நின்று எல்லாச் சாரியங்களையும் நடத்துவரென்று உரைவேண்டும். சிவமும்சக்தியும் பூவும் மணமும், மலரியு தொனியும், நீரும் சப்பமும்நிலாவை அபேதமாக விளங்குவர் என்று வியாதமுனிவர் சௌனகாதிமுனிவரை நோக்கிக் கூறினர்.

சக்தி சிவங்களின் சிறப்புரைத்தது

முற்றிற்று.

எட்டாவது

காமத்தின் கதையுரைத்த அத்தியாயம்.

சௌனகாதிமுனிவர்கள் வியாச முனிவரை நோக்கி, ஸ்வாமி! காமமாகிய வனத்திற்கு அக்கினிபோன்ற சிவபெருமானைக் காமபாதையுற்றுற்போன்றனரென்று தாங்கள் திருவாய்மலர்ந்தருளியதுமிகவும் ஆச்சரியகரமாயிருக்கிறது. அதன்பின் சிவபெருமானையும் மோகிக்கச்செய்யவல்ல காமம் எத்தன்மையது? ஆகாயம் வாயு அக்கினி ஜலம் பிருதிவி புத்தி மனம் சித்தம்

ஆகங்காரமுதலியன யாவும் நிகிருதியாலுண்டாயினவென்றும், புருஷன் அல்குஷ்டமாத்திரப் பிரமாணமாக விளங்குகின்றனென்றுங் கேட்டிருக்கின்றோம். இவ்விஷயம் எங்கட்குச் சந்தேகமாயிருத்தலின் எங்கட்கு நன்கு விளங்கும்படி கூறியருளவேண்டுமெனக் கேட்க, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

மகருஷிகளே! அனாதியாந்த தேஜஸோடுகூடிய மாயாபகனான் சொல்லியவண்ணமே உங்கட்குச் சொல்லுகின்றேன். கேளுங்கள். காமத்தின் சொரூபமானது பிரமவிஷ்ணு ருத்திராதிகளின் சொரூபமாயிருப்பதும், எல்லாப்பூதங்கட்கும் ஆத்மஸ்வரூபமாயிருப்பதும், ஸாத்விக ராஜஸ தாமஸமாயே திரிகுணங்களுடையதும், பிரபஞ்ச ரூபமாகப் பரிணமித்திருப்பதும், தன்னைக்காட்டிலும் விரும்பத்தக்கது பிறிதொன்று மில்லாததுமாக விளங்கும். சிவபெருமான் நிஷ்காமமாய் விளங்குகையில், காமமானது இல்லாததாக முடியும். சிவபெருமானும் விஷ்ணுவும் பிரமனும் சூரியனும் சந்திரனும் காமசொரூபிகளலர். இனிக் காமமென்பது யாதெனில், எதை யவலம்பித்து ஸ்நானம் தியானம் யோகம் இயமம் நியமம் ஜபம் யஜ்ஞம் நிஷ்டை ஸ்வாத்யாயம் ஜ்ஞானம் தானம் வேதபாதம் ஸ்மிருதி விசுத்தி பாபீடை சுவர்க்கம் மோக்ஷம் நிரோதம் முதலியனவும், தேவர்களின் அண்டயோனிகள், மாநுடயோனி, பக பக்ஷி மிருகங்களின் ஜீவஜை யோனிகள் ஆகக்கூடிய பதினெரு யோனிகளிற் பிறந்தனவும் பிறக்கின்றனவும் பிறப்பனவுமாக யாவும் உண்டாயினவோ அதுவேயாம். ஆதலின் அவ்வகைய காமத்தினாலேயே யாவுந் தோன்றிப் பெருகி நடக்கின்றன. பலவித யோனிபேதமான அன்னியோன்னிய பந்தியுடைய தம்பதிகளுக்குக் கிரமமாக உண்டாகும் இச்சாபேதத்தாற் காமம் பலதிறப்படும். அஃதெவ்வாறெனில் பிறப்பும் இறப்புமுடைய சமுசாரத்தில் சப்தாதிவிஷயாயிருக்கும் விஷயங்களால் இவ்வாசாரமானசமுசாரசாகரத்தால் யான் பிரமன் யான் உபேந்திரன் உருத்திரன் தேவன் தானவன் சுகபான் கந்தர்வன் மநுஷன் பசு மிருகம் ஆசாரியன் சகாயனர்த்தசெய்பவன் கொடையாளி குரு கற்பகவிருக்ஷம் அண்ணன் தந்தை தாய் இயமன் என்று சொல்லிக்கொண்டு, நரகபாதையென்றிச் சொர்க்கப்பிராப்தி யுண்டாகவேண்டுமென்றிதுபோன்ற இச்சாவிசேஷம் பலவிதமாக விளங்கும். காமத்தின் குணத்தை இவ்வளவென்றும் இத்தகையதென்றுஞ் சொல்ல ஒருவராலுமுடியாது.

முனிவர்களே! இவ்விரியாதி தத்துவங்கட்குப் பரமாயிருப்பதும், பூதங்கட்கெல்லாம் அந்தர்யாமியாயிருப்பதும், புத்திமான்களாலே அனுபவிக்கத்தக்கதும், ஸ்பரிசத்தால் அநுபவிக்கத்தக்கதும், அனந்தங்கட்கெல்லாமே ஆனந்தமானதும், அபரிமாணமானதுமாக விளங்குவது பரம்பொருள். சூரிய சந்திராக்கினிகளின் தேஜஸ் எத்தேஜஸ்களின்முன் இல்லாது மழுங்குமோ, எப் பொருளால் எல்லா விகாரங்களும், சூரிய சந்திர அக்கினி பிரமன் விஷ்ணு

வாதியர் மநுஷர் மிருகபசுபக்ஷியாதிகளும்பிறந்திறப்பரோ,அப்பொருளே பரம்பொருள். அப்பொருளைப் பரமாத்மாவென்றும்பரசிவமென்றுங் கூறுவர். அப்பரம்பொருளாலேயே யுண்டாகும் விகாரமானது காமமென்று சொல்லப்படுகிறது. சாக்கிர சொப்பனதி அவஸ்தைகளை யுற்றவரிடத்தெல்லாம் இருந்து எல்லாக்காரியங்களையுஞ் செய்யும் அப்பொருளே பரம்பொருள். இவ்வாறு சர்வேசுவரனுற் செய்யப்பட்டகாரியத்திற்குக் காமமென்று பெயர். சத்தி சத்திமானுடைய இவ்விருவராலேயே பிரபஞ்சமானது சிருஷ்டிக்கப்படுகிறது. பிரியமும் அப்பிரியமுமான வார்த்தைகளும், ஸ்பரிசமும், ரூபமும், ரசமும், கர்தமும் எவன் அமிஞ்ஞரோ, எவன் ஹிரண்யகர்ப்ப பிதிகாதிபரியந்தம் தானேவிளங்குகிறனோ அவனே பரமாத்மா. அவனே செய்பவனும் செய்பொருளுமென்று சுருதிகள் கூறும். காரியங்களெல்லாம் இறுதியில் அழிவுமாயினும் அவற்றையெல்லாஞ் செய்துவரும் பரமாத்மா ஒருகாலத்தும் நசிக்கமாட்டார். சித்திரவேலைக்காரன் பலவிதமான செயல்களைச் செய்யுமாறு, சர்வேசுவரன் நானாவிதமான சித்திரகாரியங்களைச் செய்துவருகிறான். சர்வேசுவரன் ஒருவனையிருந்து பல காரியங்களைச்செய்துவருதலை உலகினர் உணராது,பலர் பலகாரியங்களைச்செய்வதாகக் கூறுகின்றனர். சுயேச்சையால் எல்லாக் காரியங்கட்குங் கர்த்தாவாகவிளங்குபவன் சிவபெருமானொருவனே. உலகத்திலிருக்கும் எல்லாப் பொருள்களும் சர்வேசுவரஸ்வரூபமேயென்று நினைக்கவேண்டும். இவ்வாறு சர்வேசுவரன் உலகஸ்வரூபியாயிருப்பினும், உருவமற்றவன், மஹாகாசம்போலச் சர்வவியாபியாயுள்ளவன், தனக்குத்தானே தெரிந்துகொள்ளத்தக்கவன், பரதத்வஸ்வரூபன். அவ்வகைய சர்வேசுவரனுலேயே இவ்வுலகத்தில் காமமும் ஞானமும் பிறந்தன. சங்கல்பத்தாலேயே தோன்றியதாயினும் அவ்வாசைகளினால் வெண்ணிறமும் சிவப்பும் மஞ்சளும் கலந்த சுக்குக்கரதாழமாய் கான்குமுகங்களுடன் விசேயுயர்ந்த இரத்தின சுவர்ணபுஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டு, சாஸ்வதி இரதி முதலியவர்களுடன், பிரீதி கீர்த்தி சாந்தி புஷ்டி துஷ்டிகளோடும் கருடனுடனுங் கூடிக் கிருதயுகத்தில் பிரத்யும்னன் எனப் புருஷனைப் பிறந்தனன். இலக்குமிசமேதனாகத் திருப்பாற்கடலில் ஆதிசேஷன்பேரில் யோகநித்திரைசெய்யும் விஷ்ணுமூர்த்திக்குப் புத்திரனாகத்தோன்றிய அக்காமனே உலகங்கட்கெல்லாம் பிரியவானுகி, பூர்ணசந்திரன்போன்ற முகமும் சாமவர்ணமும் திவ்விய காந்தியையுடைய நேத்திரங்களும் விசாலமார்பும் பொன்னாற்செய்த ஸ்வரத்தினங்களிழைத்த ஆபரணங்களும் பாசாங்குசங்களும் பெற்று மன்மதனென்னும் பெயருடன் தோன்றினன். அவனைத் தேவர்கள் யாவரும் சமீபித்துப் பிரார்த்தித்துக் கைலாச கிரியில் சிந்தாரப்பிரதை சான்றும் பட்டணத்தில் யோகத்திலிருக்கும் சிவபெருமானிடத்து, அவரை யெவ்வகையிலேனும் மோகிக்கச் செய்யவேண்டுமென்றுகூற, மன்மதன் உடனே உம்பர் வேண்டுகோளுக்கிரங்கி அவ்விடத்தினின்று புறப்பட்டு, அசோகவிருக்ஷ மஹாரசங்கிதத்தோனிகளுடன் புஷ்பபாணம்

கனைத் தாங்கிச் சிவபெருமானிடமடைந்து, நீ யாவன்? என வினவ, சிவபெருமான் மன்மதனைநோக்கி, நீ யாவன்? எனக் கேட்க, யான் காமன் என, யாது கருணை என மீண்டும் இறைவன் கேட்க, மன்மதன் ஈடேறினபடியாய்? அபியாயாயில் அறிவித்திருக்கின்றேன் என, சிவபெருமான் இங்கு நீ யாதுகாரணமாக வந்தனை? என வினவ, மன்மதன் உன்னை மோகிக்கச் செய்பவர்தெனன, எதனால் மோகிக்கச்செய்வாய்? என, பலத்தாற்செய்வேன் என, உனக்கவ்வலமு பலமுண்டா? என, இதோ என் பாணங்களாகிய மலர்களைப் பார் என்று புஷ்பபாணங்களால் இறைவனை மோகிப்பிக்கயத்தனித்தனன். அப்பொழுது இறைவனது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய அக்கினிச்சுவாலையால் மன்மதன் சாம்பராயினன். அவ்வாறு மன்மதன் இறந்தநால் அவன் மனைவியாகிய ரதி சிவபெருமானைவேண்டினள். சிவபெருமான் நீ துவாபரயுகமுடிவில் யாதவகுலத்தில் கிருஷ்ணனுக்குப் புத்திரியாகப் பிறப்பாய். சம்பரன் உன்னைக் கொண்டுபோவான். அப்பொழுது பிரத்யும்னன் அவனைச் சங்காரித்து உன்னை மனைவியாகக்கொள்வானென்று வரங்கொடுத்தனர். இது கிடக்க:

மூவிலைவேலனே! சிவபெருமானது நேத்திரத்தாற் சாம்பராக்கப்பட்ட மன்மதன் துவாரகாபுரியில் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டில் பிரத்யும்னன் என்னும் குழந்தையாகப் பிறந்தனன். இதற்கும் முன்புத்திரியாகப்பிறந்த மாயாவதி என்னும் பெயருடன் போதுமென்ன வளர்ந்தனன் டருக்கு கண்ட சம்பரன் அவளது அழகுக்கு மனமிழந்து மனைவியாகச்செய்துகொள்ளக் கருதிக் தனது நகரத்திற்குக்கொண்டுபோய் அன்புடன் போஷித்து வந்தனன். இதிலிவ்வாறிருக்க: சம்பரன் பிரத்யும்னனைப் கொல்லுபோய் மாயாவதியிடம்விட்டு வளர்க்கச்சொல்ல, அவளும் அன்புடன் வளர்த்தனள். [illegible] கொன்று பூர்வம் சிவப்பிரசாதப்படி மாயாவதியை மனைவியாக்கிக்கொண்டு சம்பராரியென்னும் பெயர்பெற்று, அவனை யடங்கொண்டே துவாரகைமைடைந்து, சம்பரன் சாம்ராஜ்யமுழுவதையும் தங்கையாகிய ருக்மிணி மூர்த்தி இருவரையும் அங்கிருந்தபடியே பரிபாலித்துக்கொண்டிருந்தனன். துவாரகாபுரியில் உத்தியானவனத்தில் ஒருகாலத்தில் விசேஷகாற்புயமாக மனைவியுடனிருந்த பிரத்யும்னனைச் சம்பன் பிடித்துகொண்டுபோய்த் தன் சமையலுக்கிய நிசும்பனிடம்விட்டு இப்பாலனை யீபகாலத்துசெய்கவென விடுப்ப, அவன் தன் சம்பிரமொத்த இளைய ஆசுபமார்க்கமாக தெரிந்தாய் இளம்பி அங்கேவிடுப்ப, பிரத்யும்னன் தெய்வயோகத்தால் வாயுவழமூற்று, சம்பன்பட்டணத்திலிருக்கும் ஓர் பர்வதத்தருகியில் விழுந்துமுச்சித்துச் சுயதேகத்திற்றெளிந்து அவ்வுத்யானத்திலுலாவிக்கொண்டிருந்தபொழுது ஸ்திரியாகிய லக்ஷ்மியெல்லாம் கல்லியைப்பெற்று, ஸாத்திரிய தர்மமாகிய சாதுர்வர்ணத்தைக் கலந்தனன். இரண்டியையுஷத்தம்பன் இவனையும் காதாவரிசேனாதிபதியின் யுத்தியில் பலதினம்

வைத்துக் கடலியில் இமாசலத்திலுள்ள விசுவாகதிசேத்தில் வஜ்ரபஞ்சரங்கட்டி அதில்வைத்து அசுரசேனையாற் காத்துவந்தனன். விஷயத்தைச் சொல்லியும் காகங்களாற் கடிக்கப்படும் பிரத்யும்னன் மகாபலமுடைய விஷ்ணுசக்தியாகிய துர்க்காதேவியைநோக்கி இக்கஷ்டத்தைத் தவிர்க்க வேண்டுமெனப் பிரார்த்திக்க, உடனே பார்வதிதேவி அங்கடைந்து அவ்வஜ்ரபஞ்சரத்தை யுடைத்தலுமையாயிருத்தலின் காகனைவாய்ப் பறவை வடிவேற்று உட்சென்று ஓர் இவ்ய பேருருவம் வஹித்துப் பஞ்சரத்தைப் பஞ்சாக்கினள். அதுகண்ட அசுரசேனை பெதிர்க்க, பிரத்யும்னன் அவர்களோடி பெரும்போர்செய்து அனைவரையும் அழைவித்தழித்தனன். இவ்விவரங்களியெல்லாம் ஒற்றராலுணர்ந்த கம்பரிதம்புரிள் தங்கள் சைனியங்களைக் கூட்டிக்கொண்டு போர்புரியத்தருகிவந்து, அர்க்கையில் அழகைக்கண்டு மோகித்துத் தூக்கையையடைந்து தம்மைக் கூடும்படி இருவருக்கேட்க, தூக்கை உக்கவிருவரில் வல்லவனெவனோ அவனை என்னைப் பெறுகவெனக்கூற, சும்பநிசும்பர் ஒருவரோடொருவர் பெதிர்த்துப்பெரும் போர்புரிந்து இருவரும் ஒருவராலொருவர் வெட்டுப்பட்டு உயிரொழித்தனர். அர்க்காதேவி பிரத்யும்னனை மனைபோடி அவரகையில் விடுத்து, அந்தர்த்தானமாயினள். பிரத்யும்னனுக்கும் சம்பபுத்திரியான லக்ஷ்மிக்கும்பிறந்தவிஷ்வக்சேனன் சம்பாசுரத்திற்காசனுக்கப்பட்டனன். மாயாவதியிடம்பிறந்தவன் மயன்னப்பாட்டன்பெயர்பெற்று, சம்பபுரத்திற்கு மன்னனுக்கப்பட்டனன். ருஷிசிரேஷ்டர்களே! காதலுடனு இனிமையான வாக்குகளால் காமத்தின் மகத்துவத்தை யுங்கட்குச் சொன்னேன். உலகத்தையெல்லாம் வருத்தும்படி பிறந்த மன்மதனுடைய பிரபாவத்தையுஞ் சொல்லுகின்றேன் கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லலானார்.

காமத்தின் கதையுணர்த்தது

முற்றிற்று.

ஒன்பதாவது
மன்மதன் கதையுணர்த்து அத்தியாயம்.

சூதமுனிவர் கௌதமசாண்டில்யாதிகளை நோக்கிக் கூறுகின்றனர்: மரீசி அத்ரி அங்கிரசு புலஸ்தியன் புலகன் க்ரது வசிஷ்டன் தக்ஷன் பிருகு நாரதன் ஆகிய பதின்மர் பிரஜாபதிகளும், யோகேச்வரர்களாகிய சனகாதியரும், ஸனத்குமாரரும் சதுராசனத்தால் தினமும் அன்பங்களே ராசனு செய்பவராயும் நீயோசைச் செருப்பவராயும் இனங்களும் ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் மன்மதனுல் பலவிதமாகப் பாதிக்கப்பட்டு க்ஷீரசமுத்திரத்தின் குமாரத்தியாகிய லக்ஷ்மிதேவியைத் தன் திருமார்பிலேயே தரித்துக்கொண்டிருக்கின்றனர் எனக் கூறுகையில், அதனைக்கேட்ட சௌனகாதிமுனிவர்கள், மன்மதமுனிவரை நோக்கி ஸ்வாமி! ஸ்ரீ மகாலக்ஷ்மி க்ஷீராப்திக்கு எவ்வாறு புத்திரியா

யினனென்பதையும் உரைத்தருளவேண்டுமெனக் கேட்க, ஸுத முனிவர் சொல்லலுயினர்.

மகரிஷிகளே! பூர்வத்தில் அமரருக்கும் அவுணருக்கும் கோரிட் டபோரில், இருதிறத்தவரிலும் பலர்மடிதலால், அவர்கள் சத்தியலோகஞ் சென்று பிரமதேவனைக் கண்டு யாங்களிறவாது நெடுநாள் போர்புரியக் கருதினமாதலின் பாற்கடலைக் கடைந்து அமுதளிக்கவேண்டும் என வேண்ட, பதுமன் திருமாலிடத்திற்கூறிக் கருதியது முடிப்பிப்பேன் என் றுரைத்து, அவர்களுடன் கூரோப்தியடைந்து சேஷசயனத்திற் சாகஞ்துயிர் பாவ யோகநித்திரைபுரியுந் திருமாலிவணங்கி அவர்கள் விருப்பை யறி விக்க, விஷ்ணுமூர்த்தி யதற்கினங்கினவராய் அல்வாறேயாகுக என்று, மந்தரமலையை மத்தாகநாட்டிச் சுந்தரினை அடைதாலுக்கி அட்டநாகங்களு ளொன்றுயிவாகியென்னு மரவைத் தாம்பாகம்பூட்டி தேவர் ஒருபுறமும் அசுரர்மறுபுறமும் சுற்றும்படி கட்டினையிட்டு, தாம்கூர்மவடிவேற்று மலை யின் அடியையு முடியையு முதலினுஞ் சுகளாலும் பற்றிநிற்க, தேவா சுரர் கடையெய்தக் காலம் பல கடைந்தமையால், கயிறுகிய வாசுவெருத்த மாற்றது, உடல் பதைத்து சுத் துடிக்கத் தனது ஆயிரம் வாய்களாலும் விஷஞ் சிந்தியது.

அவ்விஷம் எங்கும் இருளெய்தும்படி பரவ, தேவர் முதலாயி னர் பயந்தோடினர். அது கண்ட விஷ்ணு அமரர்களைக் காப்பேனென்று ஆற்றல்கூறி, அவர்கள்மேற்செல்லும் ஆலத்தைத் தாமெதிர்சென் றடர்த் தனர். அவ்விஷம் அவர் திருமேனியைக் கருநிறஞ்செய்ய, அவரும் சிற்றற் கஞ்சி யோடினர். அப்பொழுது யாவரும் ஓருங்குசென்று திருக்கைலாய கிரியை வண்ணி, திருநந்திதேவ ரதஞ்சுருதியினால், திருச்சந்திதானத்தினுட் சென்று கருணைநிதியாகிய கண்ணுதலைத் தரிசித்துக்கைகட்டி வாய்பொத்தி நின்றனர். சிவபெருமான் திருமாலைநோக்கி ஓமாதவ! உருவம் வேறுபட் டுத் தேவர் குழுவுடன் வந்தது யாது? என்று அறியார்போல் வினவ, பரமபதியே! தேவரீர் கட்டளையின்றிப் பாற்கடலை மதித்தமையின் அமுது பெறுதல் விஷம்பெற்றோம்; அடியேங்களைக் காத்தருள்புரியவேண்டும் என்றிரந்து நிகழ்ந்தவற்றையிசைப்ப, சிவபிரான் தம திடப்பாகத்துள்ள பார்வதிதேவியைநோக்க, உமையம்மையார் இவர்களைக் காத்தருளவேண்டும் என்று விண்ணப்பித்தனர்.

சர்வான்மாக்களின் இடுக்கண்களையுஞ்சம்பு அதனைவாங்கித் திருக் கரத்தில் வைத்துக்கொண்டு ஓதேவர்களே! இதனை யுண்ணாவிட்டிடி னு? எனு, தேவர்கள் தேவரீரது திருக்கரத்தில்வரவே இது தன்னுருவஞ் சிதைத்தது; இதனை விட்டால் உலகை யழிக்கும். எவ்வெவற்றினும் முற் பாகந் தேவரீரதே யாதலின், விஷமாயிருப்பினும் இதனைத் தேவரீர் உட்கொண்டருளல்வேண்டும், என்றுபிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வா

றே சம்மதித்துத் திருவுளஞ்செய்கையில், அது கண்டத்தளவுசெல்ல அதனை யாவருங் கண்டு, எம்மை யுயிர்காத்தற்குச் சாகியாக இவ்விஷத்தைக் கண்டத்திலேயே தரித்தருளல்வேண்டும் என்று வேண்ட, எம்பெருமான் அவர்கள் வேண்டுகோளுக் கிசைந்து, அங்கேயே ஒரு நீலமணிபோன்று நிறுத்தி மணிகண்டர் நீலகண்டர் சேகண்டர் முதலிய திருநாமங்களைப் பெற்றனர். பிறகு பெருமானருள்பெற்றுக் கடல்கடைகையில் லக்ஷ்மி தேவி கற்பகத்தரு சந்திரசூரியர் கல்பகத்தரு உச்சைச்சிரவசு காமதேனு கவுத்துவம் அமிர்தம் பிறந்தன. அமிர்தம் பிறக்குங்காலத்தில், அமிர்த பிண்டங்கள் வெளியே சிந்தினபடியால், பார்ப்பதற்குச் செவ்வரியமான கொழுபழமும் சதுர்காலத்திற் பிரகாசிக்கும் பூரணசந்திரன்போன்ற முகமும் பின்னல் சூரியன் அஸ்தமிபோலுந் தேககாந்தியு முடையவர்களாய், அவர்க ளிற் சிலர் சீலோற்பலநிறமும், சிலர் பொன்னிறமும், சிலர் பவளநிறமும், சிலர் இந்திரநீல நிறமும், சிலர் வெண்ணிறமும், சிலர் பதுமகர்ப்பம்போற் செம்மையும் வெண்மையுங் கலந்த நிறமும், சிலர் நீலமலர்நிறமுமாய்வாய்ந் தவர்களாய், கணக்கில்லாத அநேககோடி அப்சரசுகள் தோன்றி, தங்கள் தேககாந்தியால் பத்துத் திக்குகளையும் விளக்கி, வயோதிகம் துக்கம் சோகம் மரணம் நோகம் முதலியன நீங்கி, ஹாரங்கள் நூபுரங்கள் கடகங் கள் முதலிய திவ்விஷபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களாய், இருள் முதலிய ரசாதிக்கமான மதுமான குரலோசையால் யாவருடைய காதுமுதலிய ரசாதிக்கமான மதுமான குரலோசையால் யாவருடைய மனத்தையும் வசப்படித்தி, காமாதுரராய், அமிர்ததுல்யமான கண்பார்வை யால் உலகமுழுவதையும் பிரமிக்கச்செய்துகொண்டிருந்தனர். கூரோப்தி யிற்றோன்றிய பல பொருள்களில், காமதேனுவும் பாரிஜாதமும் உச்சைச் சிரவசுமாகியிவற்றைநீங்கிரண்டுபெற்றுக்கொண்டவன் கவுத்துவமணியை யும் இலக்குமியையும் விஷ்ணுமூர்த்தியுற்றனர். தன்வந்தரியை எல்லாரும் (மருத்துவனுக) அடைந்தனர். அமிர்தம் எங்கட்கு எங்கட்கு என்று தே வாசுரர்கள் பிரளயகாலகோஷம்போற் கோதித்து, அக்கினி சூரியவ்போ லத் ருரூரத்துடன் கோபித்துப் போர்செய்து, அப்போரில் அசுரர்கள் தமது வலி யிருதிபால் அமிர்தத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். அதனைக் கண்ட விஷ்ணு சார்ங்கியே சொரூபமாகவுள்ள லக்ஷ்மி யென்னும் மாயை யோடுகூடி, அசுரர்களை வினித்து யான் உங்கட்கு அமிர்தத்தைப் பகிர்த் தளிப்பேனென்று கேட்க, அசுரர்கள் அங்கிசித்து அவ்வாறே சமபாகம் பெறுதற் நிர்மானித்து, தம்மை மோகிக்கச்செய்த விஷ்ணுமூர்த்தி கையிற் தொடித்து, அப்பாற்கடலிற்றோன்றிய அப்சரசுகளைக்கண்டு விஷ்ணுமாயை யாற் காமமிருத்து அவர்களை உடன்கொண்டு சுவர்க்கலோகத்திலுள் நிற நிலையிலிருந்து தமது நகரங்களை யடைந்தனர்.

அவ்வாறு சுரர்கள் நகரங்களை யடைந்தபின்னர், ஐயோ! தேவர் கள்விட்டுவிட்ட இந்தவிஷத்தினை விழுங்கொண்டுவந்தோமே என்றமனம் வருந்தி அவர்களைவிட்டு, தங்கள் பட்டணங்களை அகழி மதில்முதலிய

காவல்களிற் குறைவின்றி விளங்கச்செய்து, தம்மைவஞ்சித்து அமிர்தத்தைக் கொண்ட தேவர்களோடு செருச்செய்யக்கருதி, ஆகாயமுழுதும் மறையும்படி புழுதியெழும்பக் கதைகடாடந்து, சங்காரதமும் வாத்திய முழக்கமுஞ் செய்துகொண்டு, அமிர்தத்திற் பாகம்பெற வேண்டுமென்று புறப்பட்டுவந்தனர். அவ்வாறு போர்க்கோலங் கொண்டுவந்த அசுரச்சேனையைக்கண்ட அமரர்களும் போர்க்கோலங்கொண்டனர், அவ்வெரு திறத்தவருக்கும் பெரும்போர் நிகழ்ந்து அகோரமிதமான அஸ்திரசஸ்திரங்களால் அடித்துக்கொண்டனர். அப்போரில் அசேகர் தானவரைத் தேவர்களும், அசேகத்தானவரைத் திருமாலும் கொன்றனர். இத்தயுத்தத்தில் உயிர்பிழைத்தார்போதுமென்று சிலர் பாதாளலோகத்தையடைய, மகாபலபராக்கிரமசாலியான விஷ்ணுமூர்த்தியானவர் சக்ராயுதத்தைக் ஙகையிற்றாங்கி, அவ்வாறு ஓடுவோரையும் கொல்லவேண்டுமென்னும் உட்கிடையால், அவர்களைப் பின்தொடர்ந்து தானும் பாதாளலோகத்தை யடைந்து, ஒளித்துக்கொண்டவர்களைத் தேடிக்கொண்டிருக்கையில், அமிர்தசம்பவமும், பூர்ணசந்திரன்போன்ற முகமும், அதிக சௌந்தரியத்தால் கருக்குமுற்றிருக்கும் அசேகஸ்திரீகளைக்கண்டு மோகமுற்று, மன்மதபாணத்தாலடிபட்டு, தான்வந்தகாரியத்தை மறந்து அம்மாதர்களுடன் விநோதமாடிக்கொண்டும் பலவிதமாக விளையாட்டுச்செய்துகொண்டும், அசேகஸ்திரீகளுமிருந்து, உலகத்திற்கண்டோர் யாவரும் அருச்சிக்கத்தக்க ஆண்தன்மையும் போர்த்திறமுமுடைய புத்திரர் பலரைப்பெற்றனர். இவ்வாறிருக்கையில் பிமஸேனன் கைலாயகிரியையடைந்து சிவபெருமானைப்பணிந்து ஸ்வாமீ! தேவரீர் கட்டளையிட்டருளியபடி யான் திருட்டியும் விஷ்ணு திறியும் செய்யவேண்டியவர்களன்றோ? விஷ்ணுமூர்த்தி இப்பொழுது காமாந்தகாரத்தில்முழ்கிப் பாதாளலோகத்தில் மாதர்களுடன் விநோதமாகக் காலங்கழித்துக்கொண்டிருக்கின்றனர். அவரது நிஷ்டைதொழில்கடக்கும்படி தேவரீர் அங்கெழுந்தருளி அவர்மனைதைத் திருப்பி யருளவேண்டுமென வேண்ட, சிவபெருமான் அவ்வாறே யாகுகவென்று, இடபருபந்தரித்துப் பயங்காமாகக் கர்ச்சித்துக்கொண்டு, பிரகலிலேத்தாங்கிப் பாதாளத்தை யணுகி மகாபயங்காமான பலித தொனிகளைச்செய்ய, அவ்வொலியால் அண்டருத்த புறங்கள்யாவும் அதிர்ந்தன. அப்பொழுது விஷ்ணுமூர்த்தியின் புதல்வர்கள் இவ்வாறு பேரொலியால் சமையும் சமய பட்டணத்தையும் பயமுறுத்துவோன் யாவனென்று கோபித்து, யுத்தஞ்செய்யக்கருதிப் புறப்பட்டனர். சர்வேசுவரனை உருத்திரபகவான் கணதருணம்புகளாலும் கொம்புகளாலும் அவர்கள் யாவையும் கொன்றனர். அவ்வாறு புத்திரர் இறந்தனரென்னுஞ் செய்தியைக் கேள்வியுற்ற அச்சதகர்ம மகாகோபத்துடன் யுத்தஞ்செய்யச் சிவபெருமானைச் சமீபித்து, பலிதமான அஸ்திரசஸ்திரங்களை ருத்ரபரூபமாகவந்திருக்கும் பெருமான்மேற்பிரயோகிக்க, பகவான் அந்த எண்ணிறந்த திவ்யாஸ்திரங்களை விநோதகார்த்தமாகத் தரித்துக்கொண்டனர். இதனைக்கண்ட விஷ்ணுமூர்த்தி ஓகோ! ஜகத்பதி

யாகவுள்ள உமாசமேதனை இங்கு இடபரூபமாக வந்தானென்றிப் பிறிதன்றென்றுணர்ந்து, கம்பிமானைகாக்குந் ஸ்வேகவரா! சங்கரா! பகவானே! வட்குணேசவரிய சம்பன்னு! ஸ்வாமீ! யான்செய்த குற்றத்தை க்ஷமித்தருளவேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்விஷ்ணுமூர்த்தியின் பிரார்த்தனைக்கிரங்கி, கேசவா! நீ இவ்வித்தற்றெழிலுடையவனென்பதை யாதுகாரணத்தான் மறந்தனை? இனி இப்பாதாளத்தில் ஸ்திரீலோலனாயிருப்பதைநீக்கவேண்டுமெனக்கட்டளையிட அதனைக்கேட்டவுடனே, விஷ்ணுமூர்த்தி ஐயோ! நியேனையியான்செய்த இவ்வதீனமான காரியத்தை ஜகதீசுவரன் தெரிந்துகொண்டானல்லவாவென்ன முற்று, சர்வேசுவரா! அடியேனுக்குத் தேவரீர் பிரசாதித்தருளிய சுதர்சனமென்னுஞ் சக்ராயுதம் இவ்விடத்திலிருக்கின்றது; அதனையும் எடுத்துக்கொண்டு விரைவில் வருகின்றேன் என, சிவபெருமான் அதனைக்கேட்டு, காரண! இப்பாதாளம் அசேக தைத்யாகனைகட்கு வாசமாயிருக்கின்றது. இவர்கள் எப்பொழுது சரீரத்தைத் துன்மார்க்கஞ் செய்கின்றார்களோ அப்பொழுது இவர்கள் காணமுடியும்படி சுதர்சனச்சக்கரமும் இங்கேயே யிருக்கட்டும். உனக்கு இதற்குச்சமானமான மகாபயங்கரமானதும் பயமுற்றெரு சக்ராயுதத்தைக் கொடுக்கின்றேனென்று கூறி, அவ்வாறு திருவுள்ளத்தில் சங்கற்பஞ் செய்தபொழுதே பிரளயகாலத்திற்போன்றதாகத்தீயைவெடிய ஓர் சக்ராயுதமுண்டாக, அதனைச் சிவபெருமான் விஷ்ணுமூர்த்திக்குக் கொடுத்தருளினர். விஷ்ணுமூர்த்தியும் மகாசந்தோஷத்துடன், பிரளயகாலசூரியர் ஆயிரக்கணக்கினிலிருந்தால் ஒவ்வாத தீனஞ்சிறப்பொன்ற தீனத்தையுடைய சக்ராயுதத்தைக் கைப்பிரசாதமாகப் பெற்றுக்கொண்டனர். திருமாலும்சிவபெருமானும் பாதாளத்தை விலகித் தத்தம் பதவியடைந்தனர்.

முனிவர்களே! அதன்பின்னர் விஷ்ணுமூர்த்தியானவர் இந்திராதி தேவர்களைப்பார்த்து, அமரர்களே! பாதாளத்தில் மகா வெளவமான கர்ஜனி லாவண்யங்களையுடைய எண்ணிறந்த ஸ்திரீகள் இருக்கின்றனர். அவர்களுடன் பலகாலம் பலவகையாகக் கலவி செய்தும்கூட கலவிசெய்ய வெனைப் பலவான் எனக்கூற, அதனைக்கேட்ட அமரர் மாமகிழ்ச்சியடைந்து, எவ்வகையிலாவது பாதலத்தையடைந்து அம்மங்கையர்களைத் தரிசிக்கவேண்டுமென்று உறுதிகொண்டு புறப்படுகையில், தட்குணேசவரியசம்பன்னனை சிவபெருமான் முற்றுணர்வுடையனுதலின் அவர்கள் கருத்தையுணர்ந்து, யாவருமொருவன் இவ்வுலகைநீங்கிப் பாதலஞ் செல்கின்றீரே அவன் உட்கோட ரோழிக எனக் கடிந்தரபமிட்டனர். அதனைக்கேட்ட அமரர்கள் ஐயோ! இவ்வகைய கொடுந்தாபத்திற்கு யாதுசெய்வோமென்று தங்கள் மனைதைத் திருப்பிகொண்டு தத்தம்புரத்தையடைந்தனர். நிஷ்டைகொள்ளு சென்றபின்னர், சிவபெருமான் ஒருகாலத்தில் சிந்தாகுலமுற்றிருந்தனர். அச்சர சமயத்தில் உமாதேவி

வியார் எம்பெருமானையடைந்து, ஸ்வாமி! தாங்கள் எல்லாப் பூதங்களையும் படைத்திர்கள்; சராசரப் பிரபஞ்சமுழுவதற்குங் காரணமாகவிருக்கிறீர்கள்; இவ்வாறிருந்தும் தாங்கள் மனவருத்தமாக ஆலோசிக்கவேண்டிய காரணம் யாது? என வினவ, சிவபெருமான் பெண்ணே! பாதாளத்திலிருக்கும் ஸ்திரீகளுடைய இவ்ய வடிவத்தைக்கருதி இந்திக்கின்றேன். திரிலோகங்களிலும் சிருஷ்டிமுதல் இதுவரையில் அவ்வளவிய சிறந்த அழகு வாய்ந்த ஸ்திரீகளை இடையார் எனக்கூற, பார்வதிதேவி ஸ்வாமி! தங்களுக்கும் வியப்பினையுண்டாக்கத்தக்க அழகினையுடைய அப்பெண்களின் வடிவத்தைக் கட்டளையாகஞ் அடியேன் போய்க்கண்டு வருவேன் எனக்கூற, சிவபெருமான் அவ்வண்ணமே பார்த்துவருக எனஅநுமதிகொடுக்க, பார்வதி விடைகொண்டு, கண்ணுடிபோன்றபிரபை பிரதிபிம்பிக்கும் காலத்திற்குள் பாதலத்தையடைய, அங்கிருக்கும் பாதாள் ஸ்திரீகள் இங்குவந்தனரெனக் கூறத்தக்க வொளியுடைய மஹாமாக புத்திரியாகிய பார்வதியைக்கண்டு, ரூபலாவண்ணியத்தால் மகாமதர்களாய் நல்லமொழிகளால் உபசரியாதிருந்தனர். அம்மங்கையர்களுடனைப்பார்த்திருந்தேவியார் பார்த்து, திவ்யமான உருவத்தையுடைத்திருந்தும் களங்கமின்றிப் பிரனற்றிருக்கின்றீர்கள். அதிபரிசுத்த தேகமுடையவர்களாயிருந்தும், ஆகாயத்திற் புஷ்பங்களும் பலங்களுமிருந்தால் ஒருவர்க்கும் பயன்படாததுபோலவும், ஆழமானதும் அகலமானதுமாயிருக்கும் நிர்ப்புஷ்பித்தகடல்கள்போலவும், நிஷ்ப்புருஷமாகிய இப்பாதாளத்திலிருந்து புருஷசம்பந்தமின்றி யுங்கள்வனப்பு அவலமாகின்றது. பிரமதேவன் ஸ்திரீகளோ புருஷர்க்குப்பயோகப்படும்படி படைத்திருக்கும், உங்களால் ஒருவருக்கும் பயனில்லையென்று கூறினள். அதனைக்கேட்ட கன்னிபர்கள் இம்மாதேவி பாவனென்று நெடுநேரம்யோசித்து, பார்வதிதேவியென்றுணர்ந்து சாஷ்டாங்கமாகதண்டஞ்செய்து, பலவிதமாகத் தோத்திரஞ்செய்து சந்தோஷிக்கச்செய்ய, உமாதேவியார் திருவுள்ளங்களித்து, ஓ கன்னிகைகளே! உங்கட்குப் புருஷராயிருக்கத்தக்கவர்கள் உங்களைக்கருதிப் பாதாளத்துக்குரை அநுக்கமாயிருக்கையில், சிவபெருமான் அவர்களே கொத்தி கிங்கள் பாதாளலோகஞ்சென்றால் உடனே பிறப்பிர்களென்று சபித்தனராதலின், அவர்களும் உங்கட்குப் புருஷர்களாகமாட்டார்கள். ஆதலால் நூவரையர்களையும் மகாமந்திரபாராயணமுடையவர்களையும் தபோ நிஷ்டைகளையும் மனுஷரூபம் வகித்து, என்புதல்வர்களாகவும், சிவபெருமானுக்குக் கண்களாகவுமிருக்கின்றார்கள். அவர்கள் அதிரூப லெனன சம்பன்னர்களாகவுமிருத்தலின் அவர்களைப் புருஷர்களாகக்கொண்டு பலவிதமான இரதிகேளிகளை யநுபவிப்பிர்களாகவென்று கூறி அந்தர்த்தானமாயினர்.

முனிவர்களே! இவ்வண்ணமாக மகாவிஷ்ணுவும் ஒருகாலத்தில் தன் சகோதரர்களாயெ தைத்தியர்களைச் சங்கரித்து அவர்களில் ஒருவரை கூறைப் பின்தொடர்ந்து அவர்கள் ஸ்திரீகளைச் சர சல்லாப உல்லாசமாக

அநேககாலம் அநுபவித்துக்கொண்டிருந்தனர். திரேதாயுகத்தில் அவ்விஷ்ணுமூர்த்தியே ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து சீதையை மணந்து அநேககாலங் கூடி வாழ்ந்திருந்து அந்தச் சீதாதேவியின் தேகவியோகத்திற்குப்பின் மதனலீலைகளையுந் தானமாட்டாது பலவிதமாகக் காமபாதையை யநுபவித்தாரல்லவா? துவாபரயுகாந்தத்தில் மீண்டும் அவ்விஷ்ணுவே மதுராபுரியில் வசுதேவனுக்கும் தேவகிக்கும் புத்திரனுகத்தோன்றி மகா பலவானுகி, வாலிபத்திலேயே கோபிகாஸ்திரீகளுடன் பிருந்தாவனத்தில் விசேஷமான இரதிகிரீடையை நடத்தி, பத்துலகூம் புத்திரனைப்பெற்று அதனோடு திருப்தியடையாமல் அநியாயவனத்தால் ருக்மணி தேவியை இராக்ஷஸ மணமாகக் கொண்டுவந்து மணஞ்செய்து பிரத்யும்னனுதி புத்திரனைப் பெற்று, அதனோடு திருப்தியடையாது, பிராக்ஜோதிஷ பட்டணத்தின் மன்னனுயெ நரகாசுரனைப் பலாத்காரமாகச் சங்கரித்து அவனது ஆயிரமானவியர்களுங் கிரகித்துக்கொண்டு அவர்களோடுங் கிரீடித்துத் தொண்ணூறு புதல்வர்களைப்பெற்று, மீண்டுந் தன் அத்தையாகிய ராதாவென்னும் பெயரையுடைய ஸ்திரீயைக்கூடி, அநேகவிதமாகச் சுகமநுபவித்தும் மனின்னும் எண்ணிறந்த பலஸ்திரீகளுடனும் பலவகையாகச் சுகமநுபவித்துத் திருப்தியடைந்திலர். சமானமான வயதுடைய ரூப யௌவன சம்பன்னர்களான ஸ்திரீ புருஷர்கட்கு மனவொற்றுமை யுண்டாயிருக்குஞ்சொழுது அது மோகூகசுகத்தைக் காட்டிலும் விசேடித்த சுகமென்று நினைக்கும்படியிருக்கும். இவ்வாறுகாமார்த்தமாயுள்ளவன் தர்மார்த்தத்தையுங் குலீத்தையுங் கவனியான். அஃதெங்ஙனமெனில், சரத்தகமும், சர்வசுவதந்தியானத்திலே தேபொருந்திய மனதும், மதத்துக்கட்டெல்லாம் மதத்தும், செந்நிற தேக மூம்நான்குமுகங்களும், அயோநிஜமும், வேதவேதாங்கவிஸ்ர்ச்சியுமுடைய உலகுருவெல்லோருக்கும் பரமகுருவாயிய பிரமதேவன் ஒரு காலத்தில் திருமணக்கோலங்கொண்டிருந்தபார்வதிதேவியின் பாதத்தைக்கண்டு மனங்கலங்கி மீண்டும் ஜகர்மாதாவிஷயத்தில் அபராதியானேனேயென்று பரிஹாரமாகப் பலவித விரதங்களிருந்து அம்மகாதேவியாரைப் பிரார்த்தித்து க்ஷமாபணஞ் செய்துகொண்டனன். இவ்வாறு மகாவிஷ்ணுவுக்கும், மன்மதனுல் விளையவிருந்த தீமையைச்செயித்த பிரமதேவனுக்கும் சம்பவித்த காமவிசேஷங்களை உங்கட்குச் சொன்னேன்.

பத்தாவது
மேற்படி அத்தியாயம்.

ஸுத முனிவர் சௌநகாதி முனிவர்களை நோக்கிக் கூறுகின்றார்: மகருஷிகளே! வெண்மை செம்மை நீலமுதலிய நிறங்களையுற்றுப் பலவித ரூபங்களை யடைந்து, சாந்தம் கோபம் குரோதம் இந்திரியநிக்கிரகம் இச்சையின்மையாதியுடைய சிவபெருமானுக்குச் சிருஷ்டி செய்யவேண்டி

மென்னும் விருப்புண்டாகி, ஜலமும் பிராணிகளிதயமும் தாளமாகவையுடைய நாராயணனைச் சிருஷ்டித்தனர். அவ்வாறு படைக்கப்பட்ட நாராயணன் தவஞ்செய்து இருதியில் கூரீர்ப்பதியில் அநேககாலஞ் சயனித்திருக்க, அந் நாராயணனது உந்தியினின்று ரஜோகுணத்தால் பிரமன் தோன்றி, முத னில் விருஷமுதலிய ஐவகைத் தாவர சிருஷ்டியைச்செய்து, பின்னர் மனு ஷர்முதலிய ராஜஸ சிருஷ்டியைச்செய்து, இருதியில் தேவர்முதலிய எண் வகைச் சத்துவசிருஷ்டியையும், பின்னர் உலகங்கள் தர்மங்கள் பரிபால னங்கள் ஜீவிதங்கள் ஆகாரங்கள்முதலிய சிருஷ்டிகளையும் செய்தனன். பர மாத்மா அச்சிருஷ்டிகளிலெல்லாம் பிரவேசித்து வினங்கினர். இச்செயல்க ளெல்லாம் முடிந்தபின்னர் நாராயணன் துயிலொழிந்து, தான் சிருஷ்டி காமியாய் யோகநித்திரையி லிருந்தமையின் படைக்கப்பட்டிருக்கும் பிர பஞ்சத்தையும் ஜீவராசிகளையுங் கண்டு, இச்சகத்து யாவரால் படைக்கப் பட்டதென்று கருதியிருக்கையில் ஓர் அக்னிமயமான தாணுலிங்கம் விளங் கக்கண்டனன்.

அது ஜ்வாலாகாரமாயும் மகா பயங்கரமாயும் திரிலோகங்கட்கும் ஒரேஸ்தம்பாகாரமாயும் ஆதிமத்திபர்ந்த மறிய வசமில்லாததாயும் அள விட்டறைக்க முடியாததாயும் தேஜோமயமாயும் விளங்கியது. பிரம விஷ் ணுக்களிருவரும் ஒருகாலத்தில் ஒருவரையொருவர் சந்தித்து, நான் பரம் நான் பரமென்று தருக்கெய்திச் செருச்செய்து, கடையிடையே ஜோதிமய மாக விளங்கும் அந்தத் தாணுலிங்கத்தை நோக்கி இங்ஙனம்வாறு விளங்கு வது யாது?என்று நினைந்து, இது நம்மிருவராலும் படைக்கப்பட்டதன்று இது தானுகவே யுண்டானதாகக் காணப்படுகின்றது. ஆதலால் நாமிருவ ரும் ஜகத்காரணமென்று சொல்லிக்கொள்வது அவலம் என்று கர்வம் நீங்கி, இருவரும்நிகேபாவமாக ஒருவரைபொருவர் ஆலிங்கனஞ் செய்து கொண்டு இஃது யாது? இதனது வரலாற்றினை யுணரவேண்டுமென்று அடிக்கடி யோசித்து, இதனைக்கண்டமிவதே கலமென்று நிர்மானித்துக் கொண்டனர். அப்பொழுது யான் அடியைக்காண்பேனென விஷ்ணுவும், முடியைக் காண்பேனெனப் பிரமனும் நியமித்துக்கொண்டு புறப்படுகை யில் அசரீரி 'பிரம விஷ்ணுக்களே! இது சிவபெருமானேயன்றிப் பிறி தன்று. அவர் உங்கள் வல்லபத்தை யறியக்கருதி ஜ்யோதிமயமாக நின்ற னர். இத்தத் தாணுலிங்கத்தை நீங்கள் பூஜித்தால் மகத்தான இஷ்டசித்தி களையடைவீர்கள். புஷ்பம்-கந்தம்-தூபம்-தீபம்-நிவேதனமுதலியவற்றால் தன்னையாராதித்தவர்கட்குச் சிவபெருமான் சந்தோஷமுற்றுப்பக்தவத்சல னுதலின் இஷ்டகாமியங்களைக் கொடுத்தருளுவர்' என்று கூற, அதனைக் கேட்டு, பிரம விஷ்ணுக்கள் மகர்முதலிய பூஜாவுபகரணங்களால் விதிப்படி பூஜித்து, வேதோத்தமமாகத் துதித்து இஷ்டசித்திகளையெல்லாமெய்தினர். மற்றொரு கல்பத்தில், சர்வேசுவரனும் காமாரியுமாகி விளங்குஞ் சிவபெரு மானும் மதனுதரத்தால் தனது தேவியாகிய பார்வதிதேவியாருக்குப் பாதி

சரீரங்கொடுத்து அர்த்தநாரீசுவரனெப் பெயரெய்தி, அடியவர்கட்கெல் லாம் சேவையளித்துக்கொண்டு விளங்குகின்றனர். மற்றொருகாலத்தில் பார்வதிதேவியைத் திருமணம்புரிந்து இமாசலத்திலுள்ள ஓர் குகையில் பூதசேனைகளுடன் அநேககாலம் எழுந்தருளியிருந்து விஹாயாடினர். அப் பொழுது பார்வதிதேவி தனக்கிருக்கும் * காளவடிவம் நீங்கிக் கௌரவ வடிவத்தை யனீடதற்கு விரும்பி அதனை யெவ்வாறு அடைவது என்று யோசித்து, தவஞ்செய்வதாகத்தீர்மானித்து, கணவன்தன் மணவினைமுன்ன ரே கங்கையை முடிமேலணிந்திருத்தலின் இதுபோல இன்னும் வேறெவ னையேனும் விருப்பமுறுமல், தன் தோழியாகிய உத்தாமகுஸுமை யென்ப வனையும் தன் புதல்வனுகிய ¶ வீரகனையும் ஒவ்வொரு வாயலிலிருத்தி வே றெரு ஸ்திரீயையும் உள்ளே விடப்படாதென்று உறுதியாகக் கட்டளை யிட்டு அவர்கள் அவ்வாறே வாயில்காப்பதாகக் கூறக்கேட்டுக்கொண்டு தபோவனத்தையணுகி, தடாகங்களுடையதும் அரசர்கள் பூர்வம் வசித்துத் தவஞ்செய்ததும் ஜயந்தியென்னும் பெயருடையதுமான அங்கிருக்கும் ஒரு குகையைக்கண்டு இதுவே கல்லவிடமென்று துணிந்து அங்கேயே தவஞ்செய்துகொண்டிருந்தனள்.

முனிவர்களே! இவ்வாறு ஜகன்மாதாவாகிய உமாதேவியார் தவஞ் செய்துகொண்டிருக்கையில், ஆடி யென்னும் பெயருடைய அசுரனொருவன் பிரமனை நோக்கிப் பலவிதமாகத் தவஞ்செய்ய, பிரமன் பிரத்தியக்ஷமாய் யாதுவரம் வேண்டும்?எனக்கேட்க, யான் இறவாதிருக்கவரமளிக்கவேண் டுமெனக் கோர, பிரமன் உனக்கு இவ்வுடம்புடனே இறவாத்தன்மை கை கூடாது. அது கைகூடுதற்கு ஏதேனுங் காரணங்கோருக என, அதைக் கேட்டதைத்தியன் கடவுளே! சந்திர தேவதாகமான சுகூத்திரத்தோடு கூடிய உருத்திர தேவதாகமான முகூர்த்தத்தில் இந்திரன் மேகசாலங்க ளாற் பெருமழை பெய்விக்கையில் யான் மகா கபடியாய் வேற்றுருவம் எப்பொழுதெடுப்பேனே அப்பொழுது மரணமடையவேண்டும்.' எனக் கேட்க, பிரமதேவன் அவ்வாறே நடக்குமென்று கூறி அந்தர்த்தானமாயி னன். அவ்வரத்தால் இறுமாப்புற்ற அசுரன் மதபானஞ்செய்து மதங்கொ ண்டு ஹிமாசலத்தை யடைந்து சிவபெருமான் எழுந்தருளி யிருக்குங் குகையைக்கண்டு, குகாமுகத்திற்காவலிருக்கும் வீரகனையும் உத்தாமகுஸு மையையும் பார்த்து அவர்களோடு வசனித்து அவர்களால் பார்வதிதேவி தவஞ்செய்யச்சென்றிருப்பது முதலிய சங்கதிகளையறிந்துகொண்டு, இப் பொழுது சிவபெருமான் தன் மனைவியைப் பிரிந்திருப்பதால் மதன விர்க முற்றிருக்குமென்று நினைத்து, நான் இவ்வியவடிவுடன் உட்புகுவதா னுல் துவாரபாலகர் தடுப்பரென்று அவ்வடிவை நீங்கி, சர்ப்பரூபந்தரித் துத் துவாரபாலக ரறியவொட்டாமல் குகைக்குட் பிரவேசித்து, நிர்ம மான கௌரீரூபத்தைகூணேரத்தில் வகித்துச் சிவபெருமான் சமீபத்

* காளகிறம் - கருநிறம். ¶ வீரகன் - கந்திதேவருக்கோர் திருநாமம்.

திற்சென்று, விரகவாதனை யுடையாள்போல எதிர்நின்று, சந்திரசேகரா! நான் பார்வதிதேவி. நான் அருந்தவஞ்செய்து பொன்னிறமான தேகத்தை யடைந்துவந்துள்ளேன். யான் விரகமுற்றிருக்கின்றேன். என்னைக் கலந்தணையவேண்டும் எனக் கூறினள். அதனைக்கேட்ட சிவபெருமான் ஒன்றுமறியார்போன்று அப்படியா? என் மனைவியா? வந்தனையா? என்று தனது திருக்கரத்தால் ஆலிங்கனஞ்செய்து புறத்தொழிலியற்றிக்கிடக்கையுத்தனிக்கையில், மாயாவிகாரமான அந்தரிந்திரியினிடத்தில் மயனுல் நீர் மிக்கப்பட்டு விளங்கும் ஆண்குறியொன்றினைக்கண்டு, மாயைசெய்ய வந்தவன்மிக்க மதியீனனேயாம். இவனைத் திரிசூலத்தாற் சங்கரிப்பேனென்று கருதியும், அவன் கருதியபடியே தன்னைப் புணர்ந்ததாகத் திருப்தியடையட்டுமென்று திருவுள்ளங்கொண்டு விசேஷமாக ரதிக்கிரிடை செய்வார் போலத் தோற்றுவிக்க, ஸ்திரீவேஷமுற்று வந்திருக்கும் அசுரன் இச்சமையத்தில் சிவபெருமானை எவ்வகையிலாவது சங்கரிக்கவேண்டுமென்னுந் துன்மார்க்க எண்ணங்கொண்டு, இவருடையகுறியை யறுக்கவேண்டுமென்று எத்தனிக்கையில், சிவபெருமான் அவன் கருத்தை யுணர்ந்து, தனது குறியினின்றும் சூலம் பாசம் முதலியவற்றை யுண்டுசெய்தனர். அதனையுணர்ந்த ஆடி தன் பெண் வடிவு நீங்கிப் புருஷவடிவை யடைய, அவனை அவ்வாயுதங்களாலடிக்க, அவன் சிவபெருமானை நோக்கி, சர்வேசுவரா! நான் தர்ப்புத்தியுடைய அசுரன்! தேவரீரால் ஆடிபட்டனன். நான் இறந்த செய்தியை என் தமையன் கேட்டு மகா பல பராக்கிரமசாலியாய், தேவரீரைச் சங்கரிக்கக்கருதி, பார்வதிதேவியின் வடிவுகொண்டு இங்கு வந்து உம்மைக்கொல்வான்; அல்லது என்னைப்போலவே யிறப்பான் என்று சொல்லிக்கொண்டே நிலமிசை வீழ்ந்து உயிர் நீங்கினன். அவனது தேகத்தை அப்புறப்படுத்திப் புத்திரனிய நந்திதேவருக்கு இச்செய்தியையும், மாதர்கள் மாயையில் வீசடித்தவர்களென்றுங் கூறி, அவ்வசுரன் வழங்கிய வார்த்தையை மனத்திற் கொண்டிருந்தனர். இது நிற்க.

சனகாதிமுனிவர்களே! தவச்செயல் மேற்கொண்டிருக்கும்பர்வதிதேவியார் புடபாக சோபிதமான ஹரிப்பூருகநிறமுற்றுக் கோரியென்னும் பெயருடன் திருக்கைலாயபதியையடைய, உத்தாமகுணமையென்னுந் தோழியானவன்தன்குலவியும்லோகநாயகியும்பசுபதியுமொழிந்துபொன்னிறமுமாக விளங்கும் பார்வதிதேவியைப்பார்த்துச் சபிபித்து கமல்கரித்து, தாயே! உன் நாயகராகிய சர்வேசுவரனைக் காமார்த்தனுகவொட்டாமற்காக்க எனக்குச் சக்தியில்லாமற் போயிற்று. உன் புத்திரனை வீரகனது அசுரக்கிரதையால் அதி யெளவனஞ்திரியொருத்தி சிவபெருமானையடைய, இளஞ்சந்திரனையணிந்த சுமதிறைவன் அவளுடன் அதேகவிதமாகக் கிரிடித்திருக்கையில், யாதும் அவ்விரதிசின்னத்தைக் கண்டு நாணமுற்றேன் எனக் கூறினன். அதனைக்கேட்ட பார்வதிதேவி வீரகன்பேரிற் கோபங்கொண்டு அவனைச் சபிக்கவேண்டுமென்று கருதி, கிழக்குமுக

மாகத் திரும்பி நீர்கொண்டு ஆசமனீயஞ்செய்து, என்புதல்வனை வீரகன் பிறவுதிரனை உள்ளே அனுப்புவதில்லையென்று என்னிடம் நியமஞ்செய்துகொண்டு தவறிய குற்றத்தினால் நரை திரை மூப்பினையடையும் மாதுட தேகமுற்று ஓர் பிராமணனுக்குப் புத்திரனுக என்று சபித்து, நான் இங்கே சிறிதுகாலம் இல்லாமையின், இவ்வளவு காரியங்கள் நடந்தனவென்று ஆச்சரியமுற்றுத் தன் அந்தப்புரத்தை யடைந்து, அங்கிருக்கும் தன் புத்திரனை வீரகனைக் கோபத்துடன் பார்க்க, வீரகன் பார்வதியின் கோபத்தைப் பார்வையாலேயே உணர்ந்து, தாயின் திருவடிகளில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, தாயே! ஆடியென்னும் அசுரன் மாயையாற் சர்வேசுவரன் இறவாமற் பிழைத்தது உனது தவப்பலனே: நீயே பாக்யவதி: எனக் கூறக்கேட்டித் துக்கித்து, வீரகா! உன் அஜாக்கிரதையாலல்லவா இவ்வளவு தீமைகள் விளைந்தன. ஆதலின் நீ அஜ்ஞானத்துடன் உலகத்தில் சிலாதன் என்னும் வேதியனுக்குப் புத்திரனுகத்தோன்றி, பன்னிரண்டு வருஷங்கள் அவனிடம் வளர்ந்து, பின்னர் சாபவிமோசனம் பெற்று அத்தேகத்துடனே யெனக்குப் புத்திரனுவாய் என்று கூறினள். அவ்வாறே வீரகன் சிலாதமுனிவன் புதல்வனுய்ச் சனித்து, தனக்கு நியமித்துள்ள பன்னிரு வருஷங்களும் கழிந்துகொண்டிருந்து கிரமமாகப் பார்வதி தேவியாரிடம் மீண்டும் புதல்வனுக வந்துசேர்ந்தனன் எனக்கூறிய ஸூத முனிவரை நோக்கி ஸ்வாமீ! வீரகன் சிலாதபுத்திரனுகப் பிறந்த சரித்தத்தையுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்க ஸூத முனிவர் சொல்லலாயினர்.

சிலாதர் என்றது காரணப்பெயர்: [சிலை - மலை. பெருமலையை ஹதஞ்செய்தவரென்பது பொருள்.] அவர் பிள்ளைமைப் பருவத்தில் தன் வீட்டிற்குப் பிச்சைக்குவந்த வேதியனது அன்னபாத்திரத்தில் அவ்வந்தணனியாதது ஓர் சிறுகல்லை யெறிந்தனர். அந்தணன் அச்சிறு கல்லுடன் னைவியாதது ஓர் சிறுகல்லை யெறிந்தனர். அந்தணன் அச்சிறு கல்லுடன் னைவியைப் புசித்தனன். அவர் வயதுவளருந்தோறும் விவேகவானுகிஞான னுனைவ

அதிற் சிறிதுடைத்துப் பொடித்துக் கரைத்துக்குடிப்பதுமாக அம்மலை வடிவான பாறையைக் கரைத்துவிட்டனர். யமபுரத்துத் தனக்காக வளர்ந் திருந்த சிலையை ஹதஞ்செய்த காரணத்தாற் சிலாதரெனப் பெயரெய்தி னர். பின் ஒருகாலத்தில் அவர் சகல வேதாகமங்களை யுணர்ந்த சிவஞானச் செல்வராயிருந்தும், புத்திரப்பேறில்லார்க்கு முத்தியின்மை என்பதையுணர்ந்தவராய், அதனை விரும்பித் திருவையாற்றை யடைந்து அயனரிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சிவபூசை முடித்துத் திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ் செய்து, சிவபெருமானுடைய திருமுன்னே நின்று வணங்கி, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்துப் பஞ்சாக்கினிமத்தியில் ஒருகாலினின்று அநேக நாள்கள் தவஞ் செய்துகொண்டிருந்தார். சிவபெருமான் அத் தவத்திற் கிரங்கி ருஷபவாகனத்தின்மேல் பார்வதி சமேதராய் எழுந்தருளி வந்து, முநிவனே! நீ விரும்பிய வரத்தைக் கேளென்ன, அவர் எம்பெருமானே! அடியேனுக்கு ஒரு சற்புத்திரனைத் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித் தார். அதற்குப் பெருமான் மகிழ்ந்து, சகல சற்குணங்களும் நிரம்பியஒரு புத்திரன் பதினாறுவயதுடையவனும் நீ செய்யும் யாகபூமியில் உழுபடை யின்மூலமாக வெளிப்படுவானென்று கூறி மறைந்தனர். பின்னர் சிலாத முநிவர் யாகஞ்செய்யப் பொன்னேர் பூட்டி யாகசாலையை யுழுதபோது, அக் கொழுவின் மூலமாக ஒரு மாணிக்கப்பெட்டி தோன்ற, அதனை முநி வர் திறந்துபார்த்தனர்; அதனுள்ளே நெற்றிக்கண்ணும், இளம்பிறை தவ ழுஞ் சடையும், நான்கு தோள்களுமாக விளங்குஞ் சிவமூர்த்தத்தைக் கண்டு மயங்கித் தோத்திரஞ்செய்து நின்றார். அப்போது சிவபெருமான் அசரீரியாக முநிவனே! அப்பெட்டியை மூடித் திற என்று கூறியருள, அவ்வாறே மூடித் திறக்கபொழுது, அவ் வெம்பெருமான் ஒரு இளங் குழவியாகி அழுதனர். முநிவர் அக்குழந்தையை யெடுத்துத் தமது மனை வியாரிடத்துக் கொடுத்துப் பாலூட்டி வளர்த்துச் சேப்பேசுவரரென்று திருப்பெயர் தரித்து வளர்த்துவருங்கால், அவருக்குப் பதினாறு வயது வர, அவரது தாய்தந்தையர் தம் புத்திரரது அற்ப ஆயுளைக்குறித்து வருந் துதலை யுணர்ந்து, அஞ்சாதீர்கள்; யான் அழியாவரம் பெறுகின்றேனென் று தேறுதல் கூறித் திருக்கோயிலை யடைந்து அயனரி தீர்த்த மத்தியி னின்று அருந்தவஞ்செய்ய, பெருமான் ருஷபவாகனத்தின்மேல் உமா தேவியாரோடு எழுந்தருளி நித்தியதேகந் தந்து, அவரது திருமுடியின் மேல் திருக்கரம்வைத்து தீக்ஷை புரிந்து அவருக்குரிய பண்டைய சாரூப் பியம் அளித்து, திருநந்திதேவர் என்று அபிஷேகத் திருநாமஞ்சாத்தி, குருசந் தானம் விளங்க வேதசிவாகமங்களைச் சனற்குமாரர் முதலிய முநிவர்களு க்கு உபதேசிக்கக் கட்டளையிட்டருளி, சுயசை யென்னுங் கன்னிகையைத் திருமணம் புணர்த்திச் சிவகணங்களுக்குந் தலைவராயிருந்து சகல சிவால யங்களிலும் அதிகாரஞ்செலுத்தும்படி சரிகையும் பிரம்புங் கொடுத்துத் திருமுடிசூட்டியருளினர். முநிவர்களே! நந்தியெம்பெருமான் பார்வதி தேவி சாபப்படி சிலாத புத்திரராகத் தோன்றிய சரிதமுஞ் சொன்னேன்.

இதனிதிக்ஷ: பொன்னிறத்துடன் வந்த பிராட்டி திரிபுரதகனராகிய் சிவ பெருமானைச் சாஷ்டாங்கமாகப் பணிந்தனள். சிவபெருமான் முன் ஆடி யென்பான் கூறியபடி அவன் தமையன் வந்திலன்; பார்வதியே வந்தனள் என்று சந்தோஷத்துடன் வரவழைத்து ஆசுவாசித்திருந்தனர்.

சிறிதுகாலஞ் சென்றபிறகு, தாருவன முநிபன்னியர் மோஹிக னாய், கற்பின் மேம்பட்டுத் தருக்கெய்தி நிற்றலின், அவர்களது கற்பை யழிக்கவேண்டுமென்று சிவபெருமான் பிரமதகணங்களுடன் பரசைக்கர்ப் பூரமுதலிய கூட்டிய விபூதியை உடல்முழுதும் உத்தூளனமாகவணிந்து, திகம்பரராய், மிளிர்கிஞ்ச புஞ்சங்களைக் கரத்திற்றாங்கி, யோகதண்டத்தில் கட்கம் கதைமுதலியன கட்டித் தொங்கவிடித்து, பூர்ணசந்திர கண்டமோ வென்று சொல்லத்தக்க கபாலத்தைக் கரத்திலேற்று, காந்தியும் யௌ வனமுமுற்று, லதாகனைப் பிரமிக்கச்செய்து, புன்சிரிப்பாகிய சந்தோஷத் தால் விநோதங்கள் காட்டிக்கொண்டு, ஆகாயத்தில் தோரணமாகக் கட் டிய நீலமலர்களோவென்று சொல்லத்தக்க மனத்திற்கு ரம்மியமான வளை ந்த முகத்திற் நெருங்குந் தலைமயிரும், சுந்தரமான கறுத்த வளைந்த புருவங் களாற் பிரகாசிக்குந் திருமுகமும், முநிமங்கையர் மோகமுறும்படி பார் த்து அசைந்துகொண்டிருக்கும் மதர்த்துப் பரந்தவிழிகளும், பூரித்த தேக மும், செங்கமலம்போன்ற கரங்களும் பாதங்களும், நல்ல மலர்மாலை களும், ஆபரணங்களுமுடையராய்த் தாருவனத்தையடைந்து, பதினான்கு தோஷங்களற்றதும், மந்த தார மத்திமஸ்வரங்களுடன் கூடியதும், பல வகைத் தாளங்களையுடையதும், ஆரோகண அவரோகணஞ் மூர்ச்சைகளை யுடையதும், இசை எழினியுமுடையதுமாய்ப் பலவித பாஷா பேதங்க ளாகிய தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி நரம்புக்கருவியோடு கூடியதாயுள்ள கானத்தைப் பூதகணங்களோடு சேர்ந்தும், சிறிதுநேரம் ஆடிக்கொண்டும், ஆச்சரியமாகச் சிரித்துக்கொண்டும், வனத்திலுள்ள பலம் கிழங்கு முதலியவற்றைப் பரித்துக்கொண்டும், நதிகளின் தலையில் வரித்துக்கொண்டும், தன் கணங்களி லொருவராக வந்திருக்கும் விஷ்ணு மூர்த்திக்குத் தனது சாந்தரஸத்தோடுகூடிய நாட்டியத்தைக் காட்டிக்கொ ண்டிருந்தனர்.

அவ்வாறிருக்கையில்,வசிஷ்டர் மனைவியாகிய அருந்ததிநீங்கமற்ற ஸ்திரீகள் யாவரும் இன்சிச்சலமான வனத்தில் யாரோவொருவன் ஒரு காதல்தூதியுடன் வந்து மதுரமான திவ்ய பாடல்களைப் பாடிக்கொண்டு, மூவர்களாச்சிரமமத்தியில் வெட்கமின்றி ஐயமேற்கின்றனன். இவனது சுகரூபமே யற்புதமானது என்று ஆலோசித்துக்கொண்டு அவர்களிற் சிலர் மூர்ச்சித்தனர்; சிலர் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர்; சிலர் பெருங் கனிப்பாற் கண்ணீர் விட்டனர்; சிலர் காமவிகாரத்தாற் காமசேஷ்டை செய்துகொண்டிருந்தனர்; சிலர் காமத்தால் உடைசோர்ந்தனர். இவ்வாறு அச்ஸ்திரீகள் மன்மதாவஸ்தை படுக்கொண்டு வசிஷ்டபத்தினி நீங்க

மற்றெல்லோரும் காமக்கடலிலாழ்ந்து, அவரோடு எவ்வாறுவது பேச வேண்டுமென்று சில வார்த்தைகள் பேசுவாராயினர்: ஓ சுந்தரா! வன் இத் தபோவேடந் தரித்தனை? இத்தவத்தால் யாது பயன்? தவத்தைப்போக் கித்தி கருதிச் செய்கின்றது உலகவழக்காதலின் அவ்வகைய போகசித்தி யும் உனக்குப் பரதாரங்களாகிய எங்களாற் சித்தியாகுமே. புண்ணியஹீன னுகிய புருஷனைப் பரஸ்திரீகள் ஒருபொழுதுங் கோரமாட்டார்கள். நாங் கள் உன்னுடத்திற் பெரு விருப்புடையேமாதலின் எங்களை நீ திரஸ்கரிக்க வேண்டாம். அநேக புண்ணியத்தாற் கிடைக்கவேண்டியது உனக்குச் சுல பத்திற் கைகூடும்போது விட்டுவிடவேண்டாம். திவ்விய, தேகமுடைய உன்னைக் காணுந்தோறும் எங்கட்குக் கிருபையுண்டாகிறது என்றுதீபா லப் பல பேச்சுகளைப் பேசிக்கொண்டும், இறைவன் பிக்ஷார்த்தமாகச் செல்லுகையில் அவரைப் பின்றொடர்ந்துஞ் செல்வாராயினர். அத்தரு வன முனிவர் தமது மங்கையர் கற்புநிலை தவறியவற்றை யறிந்து மனக் காளாராய், பலவித சாபமொழிகளைப் பகர, அவை சிவபெருமானைச் சிறி தும் அடைந்தில. ஆனல் வசிஷ்டரும் அருந்ததியும் திகம்பரராகவந்தவர் சிவபெருமானென்றும் உடன்வந்தமாது மலையரசபுத்திரியென்றும் கண்ங் களாக வந்தோர் விஷ்ணுவாதி தேவர்களென்றும் உணர்ந்து பலவிதமா கப் பூசித்தனர். சிவபெருமான் சந்தோஷித்து அருந்ததியை நோக்கி உன் கணவன் வாலிபனுகவென்று வரங்கொடுத்தருளினர்.

தாருவன முனிவர் திகம்பரனுகிய சிவபெருமானை யொன்றுஞ் செய்ய இயலாதவர்களாய், தாங்கள் திகம்பரனுக்கிட்ட சாபங்கள் பலியா வாயினும் அதற்குப் பதிலாகப் பலவித ரோகங்களாலும் வறுமையா தன்பங்களாலும் பீடிக்கப்பட்டவர்களாய், யாது செய்வோம்? என்று வசிட்டமுனிவரையும் பிரமதேவரையும் வினவி, அது சிவநிந்தையின் பல னென்றுணர்ந்து சிவலிங்கார்ச்சனைசெய்துமம்பெருமானது கடாக்ஷத்தை யடைந்தனர்.

முனிவர்களே! இதனற் காமபாதை சிவபெருமானைப் பாதித்த தென்று ஒருபோதுஞ் சொல்லப்படாது. சப்தாதி விஷயங்களும், மாயா சம்பந்தமான போகங்களும் மாயையும் யாவும் அச் சர்வேசுவரனிடத்து லயமடையவேண்டியனவேயாதலின், காமரூபமான சாஞ்சல்லிய தோஷ மானது ஆத்மஸ்வரூபியான பரசிவத்துக்குத் தோஷமாகக் கொள்ளப் படாது. உலகத்தில் பதிவிரதாஸ்திரீகளும் சித்தர்களாகிய புருஷர்களுமா கிய இருவரும் இல்லறதருமம் நடத்தி,சற்பாத்திரமாகிய அதிதிகளைப் பூஜிக் கிறார்களேயன்றி, நீசர்களாயும் தனவான்களாயும் அஜ்ஞானிகளாயும் மோக்ஷஞான மில்லாதவர்களாயும் ரோகவான்களாயும் பதிதர்களாயும் காமக்குரோதாதிகளாலும்சிதோஷ்ணங்களாலுஞ்செப்போதும்துக்கமுற வித்துப் புத்திரவாஞ்சைமுதலிய விருப்பத்தால் மனஞ் சாஞ்சல்யப்படுத்தி கொண்டு அதிதிபூஜைமுதலிய சத்கருமங்களைச் செய்யாது காமத்தாற்

பீடிக்கப்பட்டிருக்குந் தீயோரைப்போன்று இல்லறத்தை மேற்கொண்ட வர்களல்லர். உலகத்தில் கிரகஸ்தாச்சிரமத்தை யடைந்தவர்களில், சிவ பெருமானையே அதிதியாகக்கொண்டு பன்னிரண்டுவருஷகாலம் ஆசனம், போஜனம் ஸ்தானமுதலியவற்றினுல் உபசரித்தவர்கள் வசிஷ்டரையன்றி யாவரிருக்கின்றனர்? சிவபெருமானைக்கண்ட ருஷிபத்தினிகளில் அவரழ குக்கு மோகமுறுதவர் அவ்வசிஷ்ட முனிவர் மனைவியாகிய அருந்ததியை யன்றி யாவரிருக்கின்றனர்? இப்பொழுதும் உலகத்தில் விவாகாலத்தில் வதூவரிருவரையும் அருந்ததியைப் பார்க்கச்சொல்லி, இவ்வருந்ததி யைத் தரிசித்தால் உனக்கு மகா பதிவிரதாஸ்வரூபமும் புத்திரபாக்கிய முதலியனவும் உண்டாகும். இவ்வருந்ததி பூர்வத்தில் சிவபெருமான் பால வேடந்தரித்துத் திகம்பரராய் வந்தகாலத்திலும் மனங்கலங்காத கற்பினை யுடையவள். ஆதலின் அவ்வருந்ததியைத் தரிசித்து, என் கணவன் எப் பொழுதும் என்னிடத்தில் அன்புடையவனுகவும், தனவானுகவும், அன்ய ஸ்திரீ சங்கமமின்றி யென்னையே கூடி வாழ்ந்து சந்ததிவிருத்தியை யுண்டு செய்வதற் தயைபுரிய வேண்டுமென்று கூறச்செய்து, அவ்விருவரையும் நமஸ்கரிக்கச்செய்கிறார்கள். அவ்வருந்ததியின் கற்பின் விசேடத்தை யா தென்று சொல்லத்தகும்? சிவபெருமானும் விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவ னும் மற்றெல்லோரும் காமத்தின்வழி மனஞ்செலுத்தினவர்களேயாவர்.

மகருஷிகளே! எல்லா முனிவர்கட்குஞ் சற்குருவும் பார்வதிநாய கனும் மதனவிகார சூனியனும் தேவதேவனுமாகிய சிவபெருமானுடைய லீலா காமவிகாரமுழுவதையும் உங்கட்குச் சொன்னேன். இன்னுஞ் சிலவற் றைச் சொல்லுகின்றேன் கேளுங்கள் என்று ஸூத முனிவர் மகருஷிகளை நோக்கிச் சொல்லலாயினர்.

பதினென்றாவது

மேற்படி அத்தியாயம்.

ஸூத முனிவர் சௌநகாதிமுனிவர்களை நோக்கி, முனிவர்களே! இந்திரன் பூர்வத்தில் யக்ஞர் தானவர் தைத்தியர் முதலானோரைச் சயித்து தேவர் அசுரர் உரகர் முதலாயினரைத் தன் சுவாதீனஞ்செய்துகொண்டு பூலோரமசை மனைவியோடும், பேரழகுவாய்ந்த எண்ணிறந்த அப்சரசுக ளோடும் இன்பந் துய்த்து மூவுலகங்களையும் அரசுசெய்து காமவிகாரத் தால் மோகமுற்று, தவத்தால் என்புமாத்திரமாயிருக்க இளைத்த தேக டையை கௌதமமுனிவருடைய தர்மபத்தினியாகிய அஹல்யாதேவியைப் பாணசாலையில் தனித்திருக்கையில், அம்முனிவனை வஞ்சித்துக் காமசுக தை அநுபவித்து, அவரிடப் பிரியமாட்டாது மோகசித்தத்தால் அங் கேயே விருந்தனன். இந்திரன் அஹல்யையைப் புணர்ந்துகொண்டிருக் கையில், கௌதமமுனிவர் பழம் பிழங்கு முதலியனவற்றைச் சேகரஞ்

செய்துகொண்டு தன் பர்ணசாலையடைய அஹல்லை, ஐயோ! சர்வேசுவர னேபோன்ற என் கணவனை விட்டு மதியீனமாகக் கற்பழிந்தேனே என்று பயமுற்று ஒன்றுஞ் செய்யமுடியாமல் ஸ்தம்பாகாரமாக நின்றனள். கௌ தமர் ஆச்சரியமுங் கோபமுங் கொண்டனர். இந்திரன் மகாமுனிவர் மனை வியைப் புணர்ந்தேனேயென்று பயமும்ஞாணமுமுற்றுத் தன்னெறை ந்துசெல்ல, கௌதமர் பிரளயகாலாக்நி ருத்திரர்போலக் கொதித்து அடா துஷ்டா! என்னை வஞ்சித்து என் மனைவியை நீ அந்தரங்கமாகப் புணர்ந்த மையின், காமாதுரத்தாற் பரதார சம்போகஞ்செய்த உனது பீஜங்கள் நிலமிசை விழக்கடவனவென்று தன் சரத்தே வைத்திருந்த யோகதண் டத்தைப் பூமியிலடித்துச் சபித்தனர். அவ்வண்ணமே இந்திரனுடைய விருஷணங்கள் விழுந்துபோயின. அதனால் அவன் விரியமற்றவனாக, தே வர்கள் யாவருங்கூடி மேஷத்தின் அண்டத்தைக் கொண்டுவந்து இந்திர னுக்கு அண்டமாகச் சேர்த்து விரியவர்தனைச் செய்வித்து மேஷவிரு ஷணனென்று காரணப்பெயர் தந்தனர். இவ்வண்ணம் இந்திரன் மீண்டும் விரியவர்தனைச்செய்யப்பட்டதைக்கேள்வியுற்ற கௌதமமுனிவர் இவன் ஓர் பெண்குலியைக் கருதி இவ்வளவு பாடுபட்டமையின், இவன் உடலெல் லாம் பகக்குலி [பெண்குலி] யும் இலங்கையிலிருக்கும் இராவணன் முத லிய ராக்ஷஸர்களால் சுமார் இலக்ஷவருஷங்கள் சிறையிருப்பும் பெறுக வெனச் சபித்தனர். அச்சாபத்தால் இந்திரபட்டம் ஸ்திரமில்லாததாயது. பின்னர் அதி ரூபவதியாய் [illegible] அஹல்லையைப் பார்த்து, பெண்ணே! நீ கல்லைப்போல நின்றிருத்தலின் அப்படியே கல் லாகுகவென்று சபிக்க, அஹல்லை தன் கணவனைப் பணிந்து ஸ்வாமி இச்சாபம் எனக்கெப்பொழுது நீங்கும்? அதனை விளைவில் விலகும்படி கிருபைசெய்தருளவேண்டுமெனக்கோர, அசுரகுலமாகிய காட்டிற்கு அக் கினியாகிய திருமால் இராமாவதாரஞ் செய்யப்போகிறார், அக்காலத்தில் அவருடைய பரிசத்தால் உன் நிஜவடிவை நீ மீண்டும் அடைவாய் என்று சாபாநுக்கிரகஞ்செய்ய, அஹல்லை அவ்வண்ணமே பாறையாய்க் கிடந் தாள். இந்திரனும் தான் பெற்ற சாபப்படி உடல்முழுதும் பெண்குலி யுடையவனாகி, காணுதற்கும் அருவருப்புடன் விஷ்ணுமூர்த்தியை யாரா தித்து அவர் கிருபையால் அக்கௌதமர் அநுக்கிரகிக்க அவை பிறர் கண் கட்குக் கண்களாகவும் தன் கண்கட்குமட்டும் யோனிகளாகவுங் காணு மாறு வரம்பெற்று மகிழ்ந்தனன்.

இந்திரன் கௌதமமுனிவரால் இவ்வளவு தண்பத்தை யநுபவித் தும் விவேகமுறுது மீண்டும் ஒருகாலத்தில் காமார்த்தனாகி, பாரிகித னென்னும் அரசன் மனைவியும் ரூபலாவண்யங்களுடையவளுமாகிய வபுஷ் டமை யென்னும் பெயருடைய ஸ்திரீயைக்கவர்ந்து அவளது யௌவன சௌபாக்கியத்தை மனத்திற்கொண்டு, எவ்வகையிலேனும் யான் இவ ளைச் சம்போகஞ்செய்யவேண்டுமென்று கருதிப் பலவகையாக முயன்றும்

பயனுறாது, இறுதியில் மாறுவேடமாகி அவளது அந்தப்புரத்திற்சென்று பலவிதமாகச் சமயம்பார்த்து வஞ்சிக்க யத்தனித்தும் தன் கோரிக்கை முடிவுறாது வருந்தியிருக்கையில், அவ்வரசன் அசுவமேதயாகஞ் செய்ய, உத்தமலக்ஷணமமைந்த யாகப்பசுவாகிய அப்புரவியைக் கொல்லக்கண்டு, இதுவே நல்லசமயம் இதைவிட்டா லினிக்கிட்டுமோ? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்று கருதி, உயிர்நீத்த அப்புரவியின் தேகத் திற் புக்குநின்றனன்.* யாகமுறைப்படி இறந்த குதிரையின் கலேபரத்திற் கும் யாககர்த்தாவின் மனைவிக்குந் தேகசம்பந்தஞ் செய்யவேண்டி அவ் வாறு செய்ய, குதிரையின் குறியை அவ்விராஜஸ்திரீயின் குறியிற்புகுத்த, குதிரையுட் பிரவேசித்திருந்த இந்திரன் தன் விருப்பங் கைகூடிற்றென்று சந்தோஷித்து அவ் வபுஷ்டமையைப் புணர்ந்து திருப்தியடைந்தனன். அந்த யாகத்திற்குப் பசுவாகவந்த புரவியில் இந்திரன் புகுந்து விபசா ரஞ்செய்தனனாதலின் அவ் யாகம் பலனற்றதாயிற்று. இந்திரன் காமத் தால் இவ்வகைய அடாத காரியங்களையுஞ் செய்தனன்.

சௌநகாதிமுனிவர்களே! இன்னும் பிறதேவர்களின் காமச்செ யல்களையுஞ் சொல்லுகின்றேன் கேளுங்கள்: ஒருகாலத்தில் அக்கினிதேவன் சப்தருஷிகளின் மனைவியர்மீது மோகித்துக் காமவிகாரமுற்று, அம்மாதர் கள் தனக்குச் சுகங்கொடாமையின், விரக்தனாகி வனத்தை யடைந்து மன்மதபாதையுற்றிருக்கையில், அவ்விடத்தில் தெய்வீகமாகவும் விதிவச மாகவுஞ் சம்பவித்த திருத்திகைப்பெண்கள் அறுவரும், மகா பதிவிரதை யாகிய அருந்ததி நீங்க வனைய ருஷிபத்தினிகள் அறுவரது வேடந்தாங்கி அக்கினிதேவனுடன் கூடி, அவனைக் காமாதுரத்தினின்றுந் தப்பிப் பிழை க்கச்செய்தனர். அக்கினியும் ஷட்கிருத்திகைகளுடன் கூடிக் களித்தது போல், தன் மனைவியாகிய ஸ்வாகாதேவியுடன் கூடியகாலத்தும் மகிழ்வுற் றிலன். பின்னர் சிறிது காலஞ் சென்றபின்னர், தென்திசையிலுள்ள மாஹிஷ்மதியென்னும் பட்டணத்தை வேதிபவடிவுடன் அடைந்து, அப் பட்டணத்தரசனுடைய நீலனது அதிசௌந்தரிய யௌவனமுள்ள மனைவிய ருடன் கிரீடிக்கக்கருதினன். அதனை யறிந்த அரசனாகிய நீலன், தனை அக்கினிதேவனைப் பிடித்துத் தன் வழியக்காரனைக் கட்டுப்பாட்டில் வை த்துக்கொண்டனன். அக்கினிதேவன் அவ்வாறு அநேககாலம் இருந்துகொ ண்டு ஒருசமயம் மாயையால் ஜ்வாலாரூபமாகப் புறப்பட்டு விருப்பின்படி போயினன்.

* தாயதாஸுவஸுஸ்தம்ஹ்வயுவமஸ்யாமித்த ॥ ஆதிரூதிவஜாசாம் "நிராயத்யாப்வஸ்யபிஸ்தம் மஹிஷ்யுபஸ்தேநிதத்தே"—என்றது ஸ்ருதிவசனம். அசுவமேதத்தில், இதுவேயன்றி, அத்வர்யுவாயுள்ளவனைப் பிரமதேவனுக்கொண்டு அசுவமேதத்தில், இதுவேயன்றி, அத்வர்யுவாயுள்ளவனைப் பிரமதேவனுக்கொண்டு அசுவமேதத்தில், இதுவேயன்றி, அத்வர்யுவாயுள்ளவனைப் பிரமதேவனுக்கொண்டு அவனுக்கு அந்த ராஜஸ்திரீயின் சுகத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் பலவகையாக அவனுக்கு அந்த ராஜஸ்திரீயின் சுகத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் பலவகையாக அவனுக்கு அந்த ராஜஸ்திரீயின் சுகத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் பலவகையாக வுஞ் சொல்லப்படுகின்றது. ஆயினும் அவ்விதயங்களோ ரண்டு விரித்தெழுதவது மற்றொன்று விரித்தலென்னுங் குற்றமாகாதலின் இதற்குமட்டும் வேதப்பிரமாணங் காட்டினேம்.

உலகங்களுக்கு ஆயுர்ப்பூதமும், மகா பலமுடையவனும் தாவர சங்கமங்களாகிய பிரபஞ்சத்தின் தேகத்தில் பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் என ஐவகையாக இயங்குபவனும், உலக முழுதுஞ் சஞ்சரிப்பவனும், திதி புத்திரனுயிருந்தும் இந்திரன் கிருபையால் தெய்வத்தன்மையடைந்தவனும், எப்பொழுதும் யோகிகளாயிருப்பவர்களால் பரமாத்மஸ்வரூபமென்று தியானிக்கப்பட்டவனும், நித்தியனும், ஜகத்சிரேஷ்டனுமாகிய வாயுதேவன் காமத்தாற் பீடிக்கப்பட்டு, பிரமதேவனுக்குப் புத்திரனை குசன் என்பவனது புத்திரனை குசாம்பன்பெற்ற தாமுபுத்திரிகள் உருவித்தாலும் இளமையாலும் தேககாந்தியாலும் ரூபத்தாலும் சமானரூபர்களாயிருக்க அவர்கள் கட்டழகைக்கண்டு காமபாணங்களாலடிபட்டு எவ்வகையிலேனும் இவர்களைப் புணரவேண்டுமென்று பலவித மானவுபாயங்களைச்செய்து அவையொன்றனாலும் அவர்களையணையச் சரிப்படாமல், பிரத்யக்ஷமாக அவர்கள்முன் சென்று அன்புடன் சொல்லுகின்முன்: ஓ தூற்றுவராயிருக்கும் ஸ்திரீகளே! யான் வாயுதேவன்; திரிலோகங்களிலுள்ளாரானும் எப்பொழுதும் பூஜிக்கப்படுபவன்; பரமாத்மஸ்வரூபமாகவுள்ளவன்; ஜகத்சிரேஷ்டன்; பிழத்தன்மையும் மரணமுங்கிடையாதவன்; எல்லாவஸ்துக்களையும் அநுபவிக்கிறவன்; எல்லா ஜந்துக்களையுஞ்சிருஷ்டித்தவன்; எல்லாப் பிராணிகட்கும்ஜீவபூதமாகவுள்ளவன்; அமிர்தமயமானவன்; இவ்வகைய சிறப்புவாய்ந்த யான் உங்களைப்பார்த்து யாசிப்பதென்னெனில், மகா காமாதுரமாய் நேரில் வந்திருக்கிற எனக்கு உங்கள் தேகங்களைப் போகார்த்தமாகக் கொடுத்துவிடவேண்டுமென்பதே என, ஸ்திரீகள் யாவரும் அவ்வார்த்தையைக் கேட்டுச் சிரித்து, நீ ஈவ்வகைய மகிமையுடையவனுயினும், பரமாத்மாவாயினும், எவ்விதவிசேடத்துடன் சிருஷ்டிசெய்யப்பட்டவனுயினும் எப்பரமாத்மாவுக்குப் பிரீதியான பக்தனுயினும், பரமாத்மாவின் அபரரூபியாயினும், காரியநிமித்தமாகச் சனித்தவனுயினுமாகுக. ஓவிருத்தா! நீ எங்கட்குக் கணவனுகவேண்டாம்: நாங்கள் கன்னிகைகளாய்த் தந்தையின் கட்டளையிலிருக்கின்றோமாதலின், எங்கள் பிதா விருப்பமுற்று யாருக்கு எங்களைக் கொடுப்பாரோ அவருக்கே நாங்கள் வசியப்படுவோமென, வாயுதேவன் கேட்டு மாச்சரியத்துடன் கூடி, அந்தஸ்திரீகளையெல்லாம் குப்ஜர்களாகவும், விகாரரூபிகளாகவும், ரோகிகளாகவுஞ் செய்தனன். சிறிதுகாலஞ் சென்றபின்னர் அந்த மங்கையருக்குப் பிதாமகனை குசனென்னும் இருடி இவ் விருத்தாந்தங்களை யுணர்ந்து, தனது தபோபலத்தினுல் அவ்வனிதையரைப் பண்டுள்ளபடியே திவ்ய யௌவன சௌந்தரிய பாலிகைகளாக்கி வாயுதேவனுக்கே மனைவியராகக் கொடுத்துவிட்டன். இது நிகழ்ந்தவிடமாகிய குசாம்பனுடைய ராச்சியத்திற்கு இப்பொழுதும் கன்யாகுப்ஜமென்னும் பெயர் வழங்குகின்றது. [குப்ஜர் - குனியதேகமுடையவர்.]

முனிவர்களே! பிரளயகாலாக்கினியைப்போன்றவனும், பிரசண்டமான கிரணங்களுடையவனும், பயங்கரமான உரோமங்களால் அலங்கரிக்கப்பட்டு நெருப்புமலைபோன்ற விழிகளும், மின்னல்போலப் பிரகாசிக்கும் கேசைகளும், ஆகாயத்திலேயே வசித்தலும், யோகிகளுடைய தியானத்தால் புகழும், பிரமாதிதேவர்களால் ஸதா அர்ச்சனையுமுடைய சூரிய பகவான் துவஷ்டா என்பவனது குமாரத்தியாகிய சஞ்ஞாதேவியைக் கண்டு காமத்தால் துயருற்று, மனைவியாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் விருப்பத்தால் பலவிதமான இன்சொல்லால் சஞ்ஞாதேவியைப் பிரார்த்திக்க, சஞ்ஞாதேவி சூரியனுடைய வடிவைக்கண்டு, நீ தீக்ஷணமான தேகம்பெற்றிருத்தலின் உன்னுடன் சேர்ந்திருக்க எனக்குச் சக்தியில்லையென, சூரியன் பெண்ணே! யான் நீ விரும்பத்தக்க வடிவை யெடுப்பேன் எனக்கேட்டுப் புன்சிரிப்புடன், உன் அபேக்ஷிதத்தை யொழிக. நீ யென் விருப்பிற்கிணங்குவதாண்மையாயின், என் தந்தையால் செய்யப்படுஞ் சாணையிலேறுக. உன்னைத் தேவர்களும் என் தந்தையுஞ்சாணைபிடித்து உன் சரீரமான தேஜஸை நீக்குவார்கள். அதனுல் மத்தேஜஸையடைவாய். அப்பொழுது உன்னை வரிப்பேன் என்றனன். சூரியன் காமமிகுதியால் அத்தச் சாணையிலேற, தேவர்களும் துவஷ்டாவும்சாணைசெய்ய, அவனுடலினின்றுதிர்ந்த பொடிகளை யெடுத்து, தேவர்கள்ஸைதர்சனுதி ஆயுதங்களைச் செய்துகொண்டனர். அதன்பின்னர் சஞ்ஞாதேவி சூரியனை மணந்து சிறிதுகாலம் வாழ்ந்திருந்து, மீண்டும் அவன் உடல்வெப்பஞ்சகியாது பெண்குதிரைவடிவேற்று, ஓட, அதனைக்கண்ட சூரியனும் ஆண்குதிரை வடிவேற்றுப் பின் செல்ல அதனைக்கண்ட சஞ்ஞாதேவி தன் பெண்குறியை மறைத்துக்கொண்டு எதிர்முகமாகநிற்க, சூரியனுடைய ரேதஸு பெண்குதிரையின் முகத்தினில் விழ, அதனை நாசிகாரந்த்ரவழியாக அச்வினிதேவர்கள் ரூபத்தின் வழியாக இரண்டு புத்திரர்கள் பிறந்தனர். அவர்கள் தேவவைத்தியர்களாகிய அச்வினிதேவர்கள் எனப்படுவர். பின்னுஞ் சிலகாலஞ் சென்றபின்னர் சஞ்ஞாதேவி-வைவஸ்வதமநு-யமன்-யமுனையென்னும் பெண் இவர்களைப் பெற்று, சூரியனது உடல் வெப்பத்திற்காற்றுது கபடமாகத் தன் சாயையை அவனிடம் இருத்தி, சூரியன் தன் காமத்தாற் சாயையைப் புணர அதனுல் சாயாதேவி சாவர்ணிமநு-சனி-பத்திரையென்னும் பெண் இவர்களைப் பெற்றனள். சூரியன் கன்னிகையாயிருந்த குந்தியால் பிரார்த்திக்கப்பட்டுக் காமார்த்தமாக அவளுடன் சம்போகிக்க, கவசகுண்டலங்களோடு கூடிய ஓர் புத்திரன் [கர்ணன்] பிறக்க, அப்புத்திரனை அவளிடம் விடுத்து வந்தனன்.

கூரிராப்தி கடைகையிலும், அத்திரிமுனிவர் மனைவியாகிய அநுசூயாதேவி கர்ப்பத்தினின்றுந் தோன்றி, உலகத்துக்கெல்லாம் ஆனந்தகரத்துடன் விளங்குஞ்சந்திரன் விஷ்ணுமூர்த்தியால் பயிர்காட்டும்ஸ்திரீகளுக்கும் பிராமணர்களுக்கும் பிரபுத்தன்மையடைந்து மகாபலபராக்கிரமசாலி

யாய் இராசசூயமாகஞ்செய்து, தக்ஷபுத்திரிகளாகிய இருபத்தேழு பெண்களை மணஞ்செய்து காமவசத்தால் ரோகிணி யென்பவளிடத்திலேயே அன்புவைத்திருந்து தக்ஷசாபத்தால் க்ஷயரோகமடைந்து, கிருஷ்ணபக்ஷத்தில் தேய்பவனுகவும், எப்பொழுதும் சுரதப்பிரீதி யுடையவனுகவுமாயினன். அவன் வாலிபத்தில், பிருஹஸ்பதி முதலானுடைய தர்மபத்தினியாகிய தாரையைக் குரு பத்தினியென்று கருதாது காமத்தாற் களவாடித் திருப்தியுறுது அதற்காகப் போர்புரிந்து இந்திராதிதேவர் விருப்பின்படி தாரையைப் பிரஹஸ்பதி முதலானுக்குக் கொடுத்துத் தன் புத்திரனுகத் தாரையினிடந்தோன்றிய புதன் என்பவனைமட்டுங் காத்துக்கொண்டனன்.

பூர்வம் அகோரமான தவஞ்செய்த மித்திராவருணர் விஷ்ணுமூர்த்தியின் தோளிடையினின்றும் தோன்றி யாகங்கட்கு அநுசரணையாயிருக்கும் யௌவனமுடைய ஊர்வசியைக்கண்டு மோகித்தவர்களாய்த் தமது ரேதசை ஒருவன் கும்பத்திலும் ஒருவன் ஜலத்திலுமாக விடுத்தனர். அதில் ஜலத்தினின்றும் புசிஷ்டருதித்தனர். கும்பத்தினின்றும் சக்த சமுத்திரங்களையும் ஆசமனீயந்செய்யும் வன்மையும் வடவாமுகாக்கினியோன்ற காந்தியும் உடைய அகஸ்தியர் தோன்றினர். முனிவர்களே! உங்களுக்கு இந்திரன் அக்கினி வாயு சூரியன் சந்திரன் மித்திராவருணர் முதலாயினர் மன்மதவிகாரமுற்று வருந்திய சரிதங்களைச் சுருக்கிச்சொன்னேன்.

பன்னிரண்டாவது

மேற்படி அத்தியாயம்.

சௌனகாதிமுனிவர்களே! மென்மைத்தன்மை உற்சாகம் பகவத்ஸ்மரணை ஸ்நானதானமுதலியவற்றினும்பிரமசரியம் முதலிய விரதங்களாலும் மேம்பட்டு விளங்கிய தக்ஷப்பிரசாபதியும் பூர்வகாலத்தில் காமார்த்தனுயிருந்து, வித்யுத்பர்ணி யென்னும் பரஸ்திரீயைக் கோரினன். எப்பொழுதும் பகவத்பிரானமும் எல்லாவற்றிலும் வெறுப்பும்முடைய நாரதமுனிவரும் அஸ்வித்யுத்பர்ணி யென்பவளைப் பிரமலோகத்திற் கண்டு காமாதுரமாயினர். பிரமதேவரும் தன்னிடத்திற் சிறிதும் விருப்பில்லாத அஸ்வித்யுத்பர்ணையைக் கண்டு மோகித்தபொழுது, அவள் பிரமனை விரும்பாமையின், கபிலவர்ணமுடைய பசுவடிவேற்றுப் பலவிதமாகத் துன்பஞ்செய்யப்பெற்று, அதன்பின்னும் தன் காமத்தை யடக்காது, தன் குமாரத்தியாகிய ஸரஸ்வதி தேவியை யடைந்து மானச வாசக காயிக சிருஷ்டிகளைச் செய்தனர். காசிபர் வமிசத்திற்றோன்றிய மரீசி யென்னும் மகருஷி காமார்த்தனுகித் தக்ஷப்பிரசாபதியை யணுகி அவரது புதல்வியைத் தனக்குக் கொடுக்கும்படி கோர, தக்ஷப்பிரசாபதி அவருக்குத் தன் புத்திரிகளிற் பதின்மூவரை மணஞ்செய்து கொடுக்கப் பெற்று, அவர்களோடு பலவிதமாகச் சுகித்து, இப்பிரபஞ்சமுழுவதும்

பூர்ணமாக விளங்குந் தேவாதிகளான புதல்வரைப் பெற்றனன். மகாயோகியும், பிரளயகாலாக்கினிபோன்ற தேஜசுடையவரும், சமுத்திரஜலத்தை உழுந்தளவாகக்கொண்டு ஆசமனஞ்செய்தவரும், விந்தகிரியின் இறுமாப்பை யடக்கினவரும், வாதாபியென்னும் வலிய அசுரனை வாயிற்பெய்தவருமாகிய அகஸ்தியமுனிவரும் காமார்த்தராய் விதர்ப்பராசன் புத்திரியாகிய உலோபாமுத்திரையை மணந்து அவ்வம்மையார் சொற்படி நடந்தினர். தவசிரேஷ்டரும் பிரமநிஷ்டாபரருமாகிய சமீகருஷி ஆகாயத்தினின்று "நீ எனக்குப் பிரியவானுகவிருந்து உன் பிராணனை யெனக்குக் கொடுத்தனன்னைக் காக்கவேண்டும்" என்றுண்டான மதுரம்பொருந்திய வாக்கைக்கேட்டு, ஹஹா! யாரோதிவ்யமானஸ்திரீ என்பேரில் மோகமுற்று இப்படிக் கூறுகின்றுளென்று கருதி மனத்திற் காமங்கொண்டு, தன் சுக்கிலத்தை அங்கிருந்த உலர்ந்த சருகில் விடுப்ப, அச்சுக்கிலத்தால், மகாலக்ஷ்மி அங்கிருந்த உலர்ந்த சருகில் விடுப்ப, அச்சுக்கிலத்தால், மகாரோஷமுடையபருங்கி யென்பவன் ருஷபமுகத்துடன் சனித்தனன். பிருகுகுலமாகிய ஆகாயத்துதித்தவர்களாகிய தவசிகளென்னுநக்ஷத்திரங்கட்குச் சந்திரன்போன்ற ருருவென்னும் ருஷி பிரமத்வனையென்னுங் கன்னிகையை மணந்து பலகாலங் காமசுகத்தை யநுபவித்து, பின்னர் அவள் விஷந்தீண்டி யுயிர்விட, ரதிபங்கமுற்றுத் துக்கித்து, எவ் மனையை யிழந்து உயிர் தரியேனென்று மன்மததேவரைத் தாஷத்தால் வனத்தை யடைந்து உயிர்நீங்க யத்தனிக்கையில், தேவர்கள் அவனை நோக்கி, நீ பிராணச்சேதஞ்செய்துகொண்டால் மகா பாபியாவாய்: உயிர் நீங்கவேண்டாம்; உன் ஆயுளிற் பாதி அவளுக்குக் கொடுத்தால் அவள் உயிர்பிழைப்பாள்: நீ யவளை அநுபவித்துச் சுகமடையலாம் என, சந்தோஷித்து, அவர்கள் கூறிய வகையே தன் ஆயுளிற் பாதி அவளுக்குக் கொடுக்க, அவள் உயிர்பெற்று தன் கணவனை யாலிங்கனஞ்செய்துகொள்ள, இருவரும் அதிமுதல் சந்தோஷித்து ஒன்றுபட்டு வாழ்ந்திருக்கையில்,

அத்தகனுகிய சவனமகாருஷி மகா யோகதவசியாயிருக்கக் கருதி, மழைக்காலத்தில் ஜலத்தினிருந்த பரிசுத்தமான மருத்திகையால் உடலெல்லாம் முத்திரைசெய்துகொண்டு, தன்னிழிகனை காசிமுனையில் நிறுத்திப் பலவருஷங்கள் தவஞ்செய்ய அவருடல் புத்தினுல் மறைக்கப்பட்டது. இவ்வாறிருக்கையில் மங்கைப்பருவமுடைய ஓர் கிராதஸ்திரீ அப்புத்தினைத் தோண்ட அம்மகருஷி அங்கிருந்தெழுந்துவர, அவ்வேடப்பெண் அவரை அரசன்முன் கொண்டுபோய் விடுத்து நடந்த சங்கதியை வெளியிட, அரசன் இவரை மகானென்று அர்க்கியபாத்திய ஆசமனுதிகளாலுபசரித்து அங்கிருத்தி, இவர் கண்கள் பெறவேண்டுமென்று கருதி, அச்சுவினி தேவர்களை வருவித்து அவர்களாற் கண்கள் பெறச்செய்தனன். இவ்வகைய மகாத்மாவான சவனருஷியும் பின்னர் அக்கிராதஸ்திரீயைக்கண்டு மோகித்து வாலிபமாயே தேகமடைந்து அநேககாலம் அவளுடன் கூடி வாழ்ந்திருந்தனர். ஆமையைப்போலவே நீட்டுவதுஞ் சுருக்குவதுமாகிய

கழுத்தையும், க்ரிபர் மனைவியர் பதின்மூவரில் விநதையென்பவள் புத்திரரும், யோகத்தியானரும், பரமாத்ம ஞானமும், சாந்த சொரூபமும், எனும்புமாத்திரமான தேகமும், கூரிராப்தியிடையிலிருந்து அதிற் சில துளிகளைப் பருகிவருதலால் தாங்கும் உயிருமுடைய பக்ஷிசுவரனென்னு முனிவன் ஒருகாலத்தில் அச்சமுத்திரத்திடையே பெண்களுடன் கூடிச் சுகமநுபவிக்கும் ஆண்களாகிய மீன் கண்டு தவமுமுதலிய சலசாங்களைக் கண்டு, தானும் காமாக்கிரந்தனுப் தானும் இவ்வாறு ஸ்திரீகளுடன்கூடினால் சந்தோஷிப்பேனென்று, சுதன்மனென்னும் அரசனிடஞ் சென்று யாசித்து நல்லஸ்திரீகளை யடைவேனென்று நிர்மானித்து கூரிராப்தியை நீங்கி, சுதன்மராசனிடம் வர, அவ்வரசன் பக்ஷிசுவர முனிவனைக்கண்டு,பல விதமாக உபசரித்துப் பொற்பீடத்தமர்ந்து,மகாநுபாவரே! தேவரீர்யாது கருதி யிங்கெழுந்தருளினீர் ? அதனை வெளியிட்டருளவேண்டுமென்று விண்ணப்பிக்க, ருஷிசுவரன் சந்தோஷித்து, அரசனே! யான் காசிப முனிவருக்கும் விநதைக்கும் பிறந்தவன். ஸ்திரீகளைக் கோரிவந்திருக்கின்றேன்; உனக்குக் குமாரத்தியிருப்பின் அவளை யெனக்குக் கொடுக்கவேண்டுமெனக்கேட்க, அவரது பக்ஷிஸ்வரூபத்தை நினைத்து, இவருக்குப் பெண் கொடேனென்றற் கோபம் வரும்; கொடுப்பேனுகிற் பக்ஷிஸ்வரூபமும் விகாரமுமாயிருக்கின்றனர் என்று, புத்திசாலியாதலின் தீர்க்காலோசனை செய்து, உபாயமொன்று செய்யவேண்டுமென்று கருதி, மகருஷியே! திவ்ய தேகத்தையுடைய பதினேந்து புத்திரிகளெனக்குளர். அவர்கள் தாமே விரும்பிய வரனை யான் மணம்புரிவிக்க வேண்டியவனேயன்றி என்னுவாதீனமாக ஒருவருக்குக் கொடுக்கக்கூடாதவனுயிருக்கின்றேன். இவ்விஷயத்தைத் தங்களிடம் விண்ணப்பித்தேன் கோபஞ்செய்யவேண்டாம். தேவரீரே என் குமாரத்திகளிருக்கும் அந்தப்புரத்தை யடைந்து தங்களை விரும்புகின்றவரை [illegible] அவளை மணந்து செல்லுங்கோறென்று அவனை யுள்ளே விடுப்ப, அம்முனிவன் தனது யோகமகத்துவத்தால் மன்மதவடிவமெடுத்து ரூபலாவண்ய யௌவனங்களுடன் கூடி உட்புக,அக்கன்னிகைகள் இம் முனிவனைக்கண்டு, இவ்வகைய சொரூபமுடையவன் யாவன்? மன்மதனேயோ? என்று ஒவ்வொருகன்னிகையும் தன்னை மணஞ்செய்து கொள்ளும்படி சொல்லினள். இவ்விர்த்தாந்தங்களைக் கேள்வியுற்ற சுதன்மன் அக்கன்னிகைகளையெல்லாம் பக்ஷிசுவர முனிவனுக்கே மணஞ்செய்து கொடுப்பேனென்று, சுக்கிரன்முதலிய திரகங்கள் சுயகேந்திரத்தில் உச்சமாகிய திரிகோணமுற்று, புத்திர சௌபாக்கிய சம்பந்துகளைக் கொடுக்கத்தக்கவையாயிருக்கும் நல்ல திவ்ய முகூர்த்தத்தில் அவ்வாறே மணவினை செய்வித்தனன். அம்முனிவன் அம்மங்கையரைப் பெருங்களிப்புடன் கூடி இராஜபோக முதலிய சம்பத்துகளை நெடுங்கால மனுபவித்திருந்து, தன்னைப்போன்ற சிறப்பினையுடைய பல புதல்வர்களைப்பெற்று, ஆயுள் முடிவில் சொர்க்கலோகத்தையடைந்தனன். ஹிமாசலகுகையில் வசித்துக் கொண்டிருக்கும் அதிரூபவதியும் அக்கினிதேவன் குமாரியுமாகிய நல்ல

வயதும், சாண்டிலியென்னும் பெயருமுடையவளைக் கருடன் கண்டு மதனவஸ்தையுற்று மோகித்து இவளை யெவ்வகையிலேனுஞ் சொர்க்கலோகத்திற்குக்கொண்டுபோகவேண்டுமென்று உத்தேசிக்க,அதனை அச்சாண்டிலியறிந்து, இக்கருடன் கொடியோனென்று கருதிக் கோபத்துடன், உன் சிறகுகள் அழிகவென்று சபிக்க, கருடன் தன் சிறகையிழந்து அப்பெண்ணைப் பலவாறு பிரார்த்திக்க, சிறிது தயையுடன் மீண்டும் சிறகினையடையுமாறு அதுக்கிரகிக்க, சொர்ணமயமான சிறகினையடைந்து அவளைப் பலவாறு புகழ்ந்து தனது நகரத்தையடைந்தனன். நீண்ட மீசையும் சடையும், சுருங்கித்த உடலும், கூர்மையான நகங்களுமுடைய விபாண்டக முனிவன் ஒருகாலத்தில் ஓர் நதியையடைந்து ஸ்நானஞ்செய்கையில், அதிதூரத்தில் வருகிற பெண்ணினமுடைய ஓர் ஸ்திரீயைக்கண்டு மன்மதவிகாரமுற்றுத் தன் சுக்கிலத்தை அக்நதி சலத்தில் ஒழுக்கினன். தெய்வகதியால் அந்தச் சுக்கிலசம்பந்தமான சலத்தை யோர் பெண்மான் பானஞ்செய்து கருவுற்று ருஷ்யசிருங்கமுனிவனைப் பெற்றது. அப்பிரகாரக்கண்ட விபாண்டகருஷி சகலகூஷணசெய்து வளர்த்து முனிவனிடம்போலவே உபநயனுதி கிரியைகளும் வேதாத்தியயனமுஞ் செய்வித்தனன். அச்சிறுவன் இளமையிலேயே சாந்தம் இந்திரிய நிக்கிரக முதலிய குணங்களையடைந்து க்ருகவாசதற்காலத்திலும் சுத்த சாந்த பிரமசாரியாய் இலை கிழங்கு புன்செய் தானியங்களைப் பக்குவித்துக்கொண்டும் தந்தைக்குப் பக்திசெய்து கொண்டும் வேதபாராயண முதலியன செய்துகொண்டும் ஸ்திரீ புருஷ பேதமே தெரியாது இருக்கையில், அங்கதேசத்தில் மழையின்மையால் பெரும்பஞ்சமுண்டாக, அத்தேசத்து மன்னனுகிய உலோமபாதன் இந்த ருஷ்யசிருங்கமுனிவனைத் தன் தேசத்திற்குக் கொண்டுபோனால் தேசம் சுபிக்ஷமடையுமென்று கருதி அவனை அழைத்துக்கொண்டு போயினன். அங்கே பலவகைப்பட்ட வேசைகள் பலவித உபசாரங்களால் இவனை மதிமயக்கவும், அவர் தன்னிடத்துப் பெரியோர் எக்கண்டால் அவனை யுபசரிப்பதுபோலவே அவ்வேசையரையும் உபசரித்து மரியாதை செய்தனர்.

பராவசு என்னும் மகருஷி ஓரசனுக்கு யாகஞ்செய்விக்குநிமித்தமாகச் சென்றிருக்கையில், தனித்து வனத்திலிருந்த அதி யௌவன சுகுமாரமுடைய அவருடைய மனைவியை யவக்கிரீதனென்னும் முனிவன் கண்டு காமாக்கிராந்த சித்தமுடையவனுப் அவளைக் கிரகித்துக்கொண்டு இரதி கேளி யநுபவித்திருக்கையில், பராவசு ருஷியின் தந்தையான ஸாப்பியருஷி அதனை யுணர்ந்து, மருகியை விளித்துக் கடுங்கோபங்கொண்டு அவளுடலைத் துண்டித்து அம்மாமிசத்தை அக்கினியில் ஹோமஞ்செய்து, தனது யோகமாயையால் அவளது தோலைச் சேர்த்து மகா கொடுமையுடைய ஓரிராக்ஷஸஸ்திரியை யுண்டுசெய்து, பெண்ணே! அயோக்கியனை அந்த யவக்கிரீவனை நீ விழுங்கிவிடவேண்டுமென்று விடுப்ப, அக்கொடியஸ்திரி

தனது மாயாவல்லபத்தால் கோரரூபத்தை நீங்கித் தான் அந்த ருஷி பத்தினி வடிவேற்று, யவக்கிரீவனை யடைந்து, ஓ முனிவனே! என் மாமன் யாகசாலையில் வந்திருத்தலின் நீ யவனைக் கொன்றுவிட்டால் நாம் பழய படியே சுகித்திருக்கலாமென, அவன் இவ்வஞ்சனையை யறியாது உடன் வந்துகொண்டிருக்கையில், அவ்வரண்யத்தில் சூலபாணியாயிருந்த அசுர னொருவன் யவக்கிரீவனைக் கொன்றுவிட்டு அந்தஸ்திரீயைக் கொண்டு போயினன். பின்னர் யவக்கிரீவன் தந்தை அவ்விடம் வந்து இறந்துகிடக் கும் புத்திரனைக்கண்டு, புத்திரசோகத்தாற் பெருஞ் கோபங்கொண்டு, சாப்பியமுனிவனே என் மைந்தனைக் கொன்றவனென்று மனத்திற் நிச் சித்து சாப்பியமுனிவனை யடைந்து, நீ யென் புத்திரனை மாய்த்தமையின் நீ யுன் பூதேல்வனு லுயிரொழிகவெனச் சபித்து அவ்வனத்திலேயே தீ மூட்டி மகனது தேகத்தைத் தகனஞ்செய்தனன். சிறிதுகாலஞ் சென்ற பின்னர் சாப்பியமுனிவன் வனத்திற் சிறிது தூரத்திலிருக்குந் தடாகத்தில் சந்தியாவந்தனஞ்செய்ய, மான்றோலைப் போர்த்துக்கொண்டு போயிருக் கையில், பராவசுருஷி யாகத்தை முடித்துவிட்டு அவ்வரசன் கொடுத்த தானமாகிய பலவஸ்துப் பொருள்களையுங்கொண்டு சந்தோஷத்துடன் தன் இருக்கையை யடைந்தனன். இதற்குள், சாப்பியமுனிவன் சந்தியாவந்தன முடித்துத் தன் வாசஸ்தலத்திற்குத் திரும்புகையில், பராவசு கண்டு மானென்று சந்தேகித்துப் பயத்துடன் அஸ்திரப் பிரயோகஞ் செய்ய சாப்பியமுனிவன் வீழ்ந்து உயிர்துறந்தனன். பின்னர்த் தந்தையே இறந் தவனென்று தெரிந்துகொண்ட பராவசுருஷி அன்றிரவிலேயே அவனைத் தகனஞ்செய்தனன். பொழுது புலர்ந்ததும் பராவசு தன் சகோதரராகிய பாரத்துவாஜரிடஞ்சென்று நமது தந்தையாகிய சாப்பியமுனிவனை மிருக மென்று கருதி மிகவும் பயந்து அஸ்திரப்பிரயோகஞ்செய்து கொன்று விட்டேன். அந்தோஷ நிவர்த்திக்காக யாது பிராயச்சித்தஞ் செய்யத் தக்கதோ அதனைக் கட்டளையிட்டு என்னை யனுப்பவேண்டும் எனக்கேட்க, பாரத்துவாசர் ஐயோ! இப்பெரும்பாவத்தை நீக்க நீ வல்லவனல்லை. நீ யிங்கேயேயிரு. உனக்காக யான் வனத்திற்குச் சென்று அகோரமான தவஞ் செய்து உன் பிரமஹத்தியை யொழிப்பேன் என்று வனத்தை யடைந்து அதிகமான கடுந்தவஞ்செய்து பிரமஹத்தியை யொழியச்செய்து சிறிது காலத்தில் தன் இருக்கையை படைய, பராவசு அவனைக்கண்ட வுடனே அடா துஷ்டா! தந்தையைக்கொன்று தவஞ்செய்யச்சென்ற நீ யென்னிருக்கையி லுழையற்க. புறம்பே செல்க எனக்கூற, பரத்துவா சர் ஒன்றுந் தோன்றுதற்தம்பாகாரமாக நிற்கையில், அரசனது ராணுவ வீரர்கள் இதனை யுணர்ந்து பாரத்துவாசனைக் கட்டி யிழுத்துக்கொண்டு போய் கர ஹத்தி செய்தவனென்று பலவாறு துன்புறுத்தவும், மகா ஞானியாதலின் சிறிதுங் கோபமின்றி, தனது கையைச் சிரமேற்குவித்து இந்திரா! அக்னீ! வருணு! தேவர்களே! யான் என் தந்தையைக் கொன் றிருப்பேனுகில் மகா பாபியாகிய என்னை நீங்களே கொல்லுங்கள்: அவ்

வாறில்லாதபக்ஷத்தில் அமிருத தாரைகளால் என்னை நனைத்துக் குளிர்ச்சி செய்யுங்கள். யான் இதுவரையில் காலத்தில் ஹோமஞ்செய்தும் பெரி யோருக்குப் பணிவிடைசெய்துமிருந்தால் இதுவரையில் இறந்திருக்கும் சாப்பியமுனிவரும், யவக்கிரீவமுனிவரும் உயிர் பெறுவராக என்று பிரார் த்திக்க, தேவர்கள் அதற்கிரகசித்தத்துடன் பிரசன்னராகித் திவ்வியமான அமிர்த பிண்டுக்களால் பாரத்துவாசரை நனைத்து அவருடலிற்பட்ட காய முதலியவற்றை விலக்கி, சாப்பியமுனிவனையும் யவக்கிரீவ முனிவனையும் மீண்டும் உயிர்பெறச்செய்தார்கள். பாரத்துவாசமுனிவர் சந்தோஷித்துத் தன்னிருக்கையை யடைந்தனர். காமத்தினுல் இவ்வகைய தீமைகள் எண் ணிறந்தன நிகழ்ந்துள்ளன.

பிரமனிஷ்டரும் எப்பொழுதும் யோகசமாதியி லிருப்பவரும் கூணமான சமுசாரதோஷத்தினின்றுவிலகினவரும் வனத்திலேயே வசிப் பவருமாகிய கௌதமமுனிவர் பெருந்தவஞ் செய்துகொண்டிருக்கையில், இந்திரன் இவர் கடுந்தவஞ் செய்வதுகண்டு இதனால் எனக்கு தீங்குகள் விளை யுமோ? என்று பயந்து, இம்முனிவன் தவத்தையழித்து இவனது மனத் தைச் சாஞ்சல்யப்படுத்தவேண்டுமென் றுத்தேசித்து, பலவித புஷ்பங்க ளுமலர்ந்து திவ்யமான மந்தமாருதம் வீசும் வசந்தகாலத்தில் ஓர் அப்சர ஸ்திரீயை அக்கௌதமரிடம் அனுப்ப, கௌதமர் அந்தஸ்திரீயைக் கண்ட மாத்திரத்திலேயே மனங்கலங்க, அதற்குள் அவ்வப்சரசு வஸ்திரஹீனமா யெதிர்வர, கௌதமர் அத்திகம்பரியாயிருக்கின்ற ஸ்திரீயைக்கண்டு மன் மத சேஷாபித மனசுடையவராய், தனது சுக்கிலஸ்கலிதமாக அதனைத் துரோணத்தில் விடுக்க, அத் துரோணத்தினின்றும் வில்லேப்பிடித்தவர் கட்கெல்லாம் ஆசாரியராகிய துரோணர் பிறந்தனர்.

ஒருகாலத்தில் பிரமதேவர் சூரியனைக்கண்டு நீ பூமியில் அரசனு யிருந்து பிரமசரியமுதலிய ஆச்சிரம தர்மங்களை செய்யவேண்டும் எனக்கூற, அவ்வண்ணமே தேவர்களிற் சிரேஷ்டனுகிய சூரியபகவான் அயோத்தியாபுரியில் உபரிசரவஸு என்னும் பெயர்பெற்ற மன்னனுயிரு ந்து ஆச்சிரமதருமங்களை நிலைநிறுத்தி, புலி சிங்கமுதலிய துஷ்டமிருகங் களையும் சத்துருக்களையுங் கொன்று அரசரிமைசெய்து, தருமத்தைநடத்தி * சேனம் வில் அம்புமுதலியன கையிற்றாங்கி ஆகாயத்திற்சஞ்சரிக்கும் விமானத்திலேறி ராச்சியங்களையெல்லாம் சுற்றிப்பார்த்துவருவான். அவ் வாறிருக்கையில் ஒருகாலத்தில் வசந்தருதுவானது சம்பவிக்க, தன் மனைவி யர் யாரும் அருகிலிராதபொழுது மன்மதவிகாரமுற்று மனம்வருந்தி தனக்குவெளிப்பட்டரேதஸைப் பலாச இலையாற்செய்து தொன்னையில்விடு த்து ஐயோ! இவ்வீரியம் வீணையிற்றே. என் பத்னி அயோத்தியிலிருந்த வின் இது அவளையடைந்தால் அவளோர் புத்திரனைப்பெறுவளே என்று யோசித்து மனம்வருந்த, அதனைக்கண்டசேனம் அரசனே! அதனையெனக்

* சேனம் - டேகை; இஃதோர் பறவை.

களித்துக் கட்டளைசெய்தால் யான் அயோத்தியைடைந்து உன் மனைவி கையிற் கொடுப்பேனென்று பெற்றுக்கொண்டு ஆகாயமார்க்கமாக அயோத்தியைநோக்கி வருகையில், அந்தமுக்கிற் கௌவப்பெற்றுவரும் பலாசத் தொன்னையைக்கண்ட மற்றொரு டேகை இது மாமிசம்போலும் இதனை நான் கைக்கொள்ள வேண்டுமென்று மனத்திற்கொண்டு அதலோடு சண்டைசெய்ய, அப் பலாசத்தொன்னையிலிருந்த ரேதசு யமுனையாற்றில்விழுந்தது. அந்தச்சலத்திற் பிரமசாபத்தால் மச்சவடிவுற்றிருக்கும் கிரிகையென்னும் அப்சரஸ்திரீ அந்த ரேதஸைப் பானஞ்செய்து அப்பொழுதேகர்ப்பமுற்றுப் பின் பிரசவவாதை யுறுகையில், வலிஞன் ஒருவனெனிந்த வலியிலகப்பட,அவன் அதனை விட்டிற்குக்கொண்டுவந்துசேதிக்க,அதன் கர்ப்பத்தில் ஆண்குழந்தையொன்றும் பெண்குழந்தையொன்று மிருந்தன. அதனைக்கண்ட வலிஞன் தனக்குக்கிடைத்த பொருளில் சமபாகம் அரசனுக்குக் கொடுக்கவேண்டிய நியதியின்படி விலியுயர்ந்த ரத்தினத்திலுஞ் சிறந்த அப்புத்திரனை உபரிசரவஸுவுக்குக் கொடுத்துவிட்டனன். மன்னவன் அதனைப் பெற்றுக்கொண்டு அச்சிறுவனிடத்திற் பொருந்தியுள்ள ராஜலக்ஷணங்களைக்கண்டு தீர்க்காலோசனைசெய்து இவன் அரசபுத்திரனே யென்பதற்கையமில்லையென்றுட்கொண்டு அவ்வலிஞனை இச்சிறுவன் வரலாறு யாதென்றுவினவ, வலிஞன் தான் வலியெனிந்ததிற்கிடைத்த மீனைச் சேதிக்க அதின்வயிற்றில் இரண்டு குழந்தைகளிருந்தன. எப்பொருள் ஒருவனுக்குக் கிடைப்பினும்அதிற்பாதிமன்னவனுக்குக்கொடுக்கவேண்டுமென்னும் முறைப்படி தங்கட்குப் புத்திரனை யளித்தனனென்றான். அதனால் அம்மன்னன் தன்விரியத்தைச் சேனத்தின் மூல்மாக அனுப்புகையில் அது யமுனையாற்றில் விழுந்ததால் அதினின்று தோன்றியதேயன்றி வேறன்றெனத் தெரிந்துகொண்டு மகாசந்தோஷத்துடன் அருமையாராட்டி வளர்த்து வேதவித்திப்படி சமஸ்காரஞ்செய்து உபநயனமுடித்துத் தனது மச்சதேசத்திற்கு மன்னனுக்கி மகுடாபிஷேகஞ் செய்வித்தனன். அவ்வலிஞன் தன் புத்திரியைச் சிரோட்டிப் பாராட்டி வளர்த்து, தன் தந்தை வமிசத்திலிருந்தமுதியள்பெயரால்மார்த்தண்டி யென்றும்,யமுனாநதியினின்று தோன்றினவளாகிய காரணத்தால் அந்நதியின் பெயர்களொன்றுல் கோகினி யென்றும், கிரிகையென்பவள் மச்சவடிவமாய்ப் பெற்றதால் கிரிஞாவென்றும் பேயருறத்தக்க அப்பெண்ணுக்குச் சத்தியவதி யென்று பெயரிட்டனன். அவள் தன் தந்தைக்குரிய படகினை யமுனையாற்றி லோட்டிக்கொண்டிருந்தனள். தெய்வகதியாகப் பராசரமுனிவர் அல்லோடமிவர்த்து நதியைத்தாண்டுகையில் அப்பெண்ணினுடைய பூரணசந்திரன்போன்ற முகமும் நீலோற்பலமலர்போன்ற நேத்ரகாந்தியும், செம்பவளத்துண்டுபோன்ற அதரமும், வள்ளிக்கொடிபோன்ற செவியும், சேற்கெண்டைபோன்ற விழியும், கமலமொட்டுபோன்ற குசங்களும், சுருங்கிய இடையும் அதிசுந்தர அவயவங்களும் தன்மனத்தைக் கிரகிக்க மன்மதவாதையுற்று மனம்வருந்திமக்சகெந்தியென்று காரணநாமஞ்சொல்லும்படி துர்மணமு

டைத்தாயிருந்த அச்சுந்தரமாதைப் பரிமளகெந்தியென்னுங் காரண நாமமுடையவளாகச்செய்து, அதன்பின்னர் அவளைப் புணர்ந்தனர். அப்பொழுது மகாத்மாவான வியாஸபகவான் தோன்றி, அவர் சாந்திரமதமாதி சற்குணங்களையுடையவராயிருந்தும் தேவர்களது நன்மைகருதி விசித்திரவீரியன் சித்திரங்கதன் இறந்தபின்னர் அவன் மனைவியைப்புணர்ந்து த்ருஷ்ராஷ்டிரன் பாண்டு விதுரன் என்னும் மூன்று மன்னர்களை யுண்டுசெய்தனர். பின்னொருகாலத்தில் ஆரண்யத்தில் அரணிமிதித்து அதினிடமாக அக்னியோடு ஸுகமென்னும் பரிசுத்தப் பிரமஞானியைப் புத்திரராகப் பெற்றனர். அந்த ஸுகமகாருஷி கௌரவம் கபிலம் கிருஷ்ணம் நீலம் என்னும் பெயராயுடைய மஹாத்மாக்களாகிய நான்குபுத்திரையும்யோக சாரியான ஒருபுத்திரியையும்பெற்றுக்கொண்டனர். உடல்முழுதுங்கபால மாலையுணிந்துள்ள வாமசிரமுனிவன் பூர்வத்தில் நாகலோகத்திருந்த ஒரு கட்கத்தைக்கொண்டு வரவேண்டுமென்று யத்தனித்து பாதாளத்தையடைந்து, ஓர் யாககுண்டம் நியமித்துச் சுற்றிலும் மூன்றடித்து அதனைப் பஞ்சவர்ணமான தூல்சுற்றிக்கட்டி ஓர்வகையான ஜபஹோமஞ்செய்து அதனால் பாதாளலோகத்தைச் சுஷ்கிக்கச்செய்ய, அங்கிருந்த நாகங்கள் வருந்தி அந்தக் கட்கத்தை அவருக்களித்தன. அப்பொழுது அங்கிருந்த ஒரு வேசை நிர்வாணமாயிருக்க அவளைக்கண்டுகாமத்தால் மோகமுற்று, இக்கட்கத்தால் எனக்கு யாதுபலன் என்று நினைத்துஞான் ஹோமஞ்செய்து கொண்டிருந்தவ்ருவத்தைவிட்டுவிட்டுப்பூர்ணாஹுதியுஞ்செய்யாதெழுந்து வியாகுலமானமனத்துடன் அந்த நாகதாசியுடன் ரமித்தனன். இவ்வாறு மஹருஷியான ஒருவன் காமாந்தமுற்று ஒருவேசையால் வஞ்சிக்கப்பட்டனனல்லவா? அந்தச்சுரதமுடிவில் இவர்விரதபங்கமுற்றமையின்பன்னகங்கள் அக் கட்கத்தைப் பண்டுபோலக் கொண்டேபோயின. சௌநகாதிமகருஷிகளே! மன்மதனால் காமபாதையுற்று வருந்திய மஹருஷிகளின் சரித்ங்களையெல்லாம் ஒருவாறு உங்கட்குச் சுருக்கிச் சொன்னேன். இன்னும் சிலவற்றை யுங்கட்குச் சொல்லுகிறேன்.

ப்தின்மூன்ருவது
மேற்படி அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளாகிய முனிவர்களே! கூருத்திய குலமணியாயுமீ காதிராசன் புத்திரனையும்விளங்கும்விஸ்வாமித்திரமுனிவர்பூர்வம்வசிஷ்டமுனிவருடைய விரதலக்ஷ்மியைக்கண்டு மனத்தில் அழுக்காறுற்றுத் தான் பிராமணத்துவமடைந்து திரிலோகங்களையும் வருத்தவேண்டுமென்று தீர்மானித்துத் தீக்ஷைசெய்து வனத்தையடைந்து உடல்முழுதும் இளக்கும்படி அநேககாலம் அருந்தவஞ்செய்ய, தேவர்கள் கண்டு இவன் செய்யுந்தவத்தால் என்ன விபரீதம் விளையுமோவென்று மனம் வருந்தி அவனது தவத்தையழிக்கக்கருதி, அவ் விஸ்வாமித்திரது ஆச்சிரமத்திற்கு மோகை

யென்னும் அப்சரஸ்திரீயை யனுப்ப, அவர் அவனைக்கண்டு மோகித்து மனம் வருந்திக் காமராகங்களின் வசமாயினர். அதேமாதிரியாகத் தேவர் தானவர்களாலும் வெல்லற்கரிய வல்லபமுடைய சும்ப நிசும்பர் மகா ரூப யௌவன சுந்தரமுடைய * கோபேந்திர கன்னியைக்கண்டு மோகித்து இருவரும் ஒருவரோடொருவர் போர்புரிந்து மாண்டனர். அத்தச் சும்ப நிசும்பர்கட்குப் புத்திரரும் ஒருவராலுஞ் செயிக்கப்படாதவருமாகிய சுந் தோபசுந்தர் திலோத்தமை யென்னும் அப்சரஸ்திரீயைக் கண்டு காமத் தாற் கவரப்பட்ட மனமுடையவராய் இருவரும் ஒருவரோடொருவர் போர்புரிந்திறந்தனர். இங்ஙனமாகு வமிசத்திற்றோன்றிய ஒருவன் இந்திர புரியைப்போன்ற இராச்சியத்தை யரசுசெய்துகொண்டிருந்து ஒருகாலத் தில் தண்டகாரண்யஞ்சென்று சுக்கிரபகவான் குமாரியாகிய சுரியப்பிரபை யைப்பார்த்துக் காமமோகிதனுய் அவளைக் காந்தர்வமணத்தாற் கலக்க, சுக்கிராச்சாரியார் தெரிந்துகொண்டு அவனுடு எட்டுநாள் அகோரமான யுத்தஞ்செய்து தேவாசுரர்கட்கும் ஜெயிக்கமுடியாத அவனைப் பாசத்தாற் கட்டித்தண்டித்து, இறுதியில் அவனை இராச்சியத்துடன் சுட்டெரித்தனர். அந்த யுத்தபூமி பாணங்களாற் சுடப்பட்டு நாளதுவரையில் புல் பூண்டுமு தலியன வொன்றுமுளைக்கவிருக்கின்றது. பூர்வம் மன்மதன் சிவபெருமா னது நிவிழியாற் சாம்பரானபின்னர், அவன் மனைவியாகிய இரதிதேவி மயன் வீட்டில் சுந்தரவடிவுடனே பிறந்திருக்க, சம்பரன் என்னும் அசுரன் அவளைப் பலாத்காரமாகக் கொண்டுபோக, அவ்விரதி மரத்தாற்பதுமையொன்று செய்து அதனை மணிபணிமுதலியவற்றினலங்கரித்துத் தன் யோகமாயை யால் தன்னைப்போலும் வடிவுடையதாகச்செய்து பிராணதாரணைசெய்து தனக்குப்பதிலாக அப்பதுமையைச் சம்பரன் வீட்டிலிருத்தி அவனைமோ சஞ்செய்து தன் கணவனுகப்பிறந்திருக்கிற பிரத்யும்னனிடம் போயினள். அதன்பின்னர் கபடவேஷமுற்றுள்ள பதுமையை மயன் புத்திரியாகிய மாயாவதியேயென்று கருதிய சம்பரன் மகா காமசித்தத்தை யுடையவ னுய் அதனுடன் இரவும்பகலும்கிரீடித்துக்கொண்டிருந்தனன். இதுநிற்க: கருமலைபோன்ற தேகமும் பத்துமுகமும் பார்த்தற்குப் பயங்கரமான அகோரரூபமும் இருபதுபுயங்களும் உலகமுழுதினும் பராக்கிரமமுமுடைய வனுய்விச்ரவசுவுக்குங்கேகியென்பாளுக்கும்புத்திரனுனஇராவணன்தனக் குச் சமானமான மேகநாதனென்னும் புத்திரனைச் சகாயமாகக்கொண்டு இந்திரனைப் பிடித்துப் பாசத்தாற்கட்டிச் சிறையிலிட்டுத் திரிலோகங்களி னும் அரசுசெலுத்தி, அதிரூபசௌந்தரியமுடைய அநேக அப்சரஸ்திரீக ளோடுங் கிரிடித்துக்கொண்டிருந்தும், மயன் என்பவன்புதல்வியாகிய மன் தோதரியை மணந்து சுகித்துக்கொண்டும், இவ்வாறு பெருஞ்செல்வமும் பலஸ்திரீகளின் சுகமுமுடையவனுயிருந்து, பாஸ்திரீகளைப் புணரவேண்டு மென்னுங் கருத்தாற் காம மோகிதமான சித்தத்துட னிருந்தனன்.

* கிருஷ்ணமூர்த்திக்கு முன்னுதித்த மாயை.

இச் சம்பரனுடைய மாயாமனைவியாகிய மரப்பதுமையின் கட்டழகினைத் தன் கண்களிருபதாலுங்கண்டு காமபாதையுட்கொண்டு, எவ்வகையிலே னும் அவளைக் கொண்டுவரவேண்டுமென்று கருதித் தன் சைனியங்களும் மந்திரிமார்களும் உடன்வரப் பாதாளலோகத்தையடைந்து அங்கேவிஸ்வ கர்மனுல் நிர்மிக்கப்பட்ட பலரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதாய்ச் சுவர்க்கலோகத்திலும் எண்மடங்கு விசேடித்த ஐசுவரியத்தையுடைய அச்சம்பரன் மாளிகையிற் பிரவேசித்த பொழுதே, மயனுல் நிருமிக்கப் பட்டிருக்கும் சூத்திரபாசங்களாற் கட்டப்பட்டு வச்சிரமயமான காராக்கி ரகத்திற் பந்திக்கப்பட்டு அக்குள்ள சூத்திரங்களாகிய மேஷங்களால் மூட் டப்பட்டும் விதிக்கப்பட்டுந் தன்பற்ருன். அதனைக்கேள்வியுற்ற மந்தோ தரி மிகவுந் துக்கித்துப் பாதாளமுற்று, தன் தந்தையாகிய மயனைப் பிரார்த் தித்து, எந்தையே! என்னுயிரினை எவ்விதத்திலேனும் தன் சைனியசகித மாகச் சிறையினின்றும் நீங்கச் செய்யவேண்டுமென வேண்ட, மயன் துக்கமுற்றுத் தன் புத்திரியாகிய மாயாவதியை விளித்து இவ்விராவணன் என் குமாரியாகிய மந்தோதரியின் கணவனுதலின் உன் நாயகனுக்கு இத வார்த்தைகளைக்கூறி அவனை விடுவிக்கவேண்டுமெனச்சொல்ல, அவள் அவ் வாறே சம்பரனுக்குரைத்து வச்சிரமயமான காராக்ருகத்திலிருந்த இராவ ணனைச் சைனியங்களுடன் விடுவிக்க, இராவணன் நெட்டுயிர்ப்புவிட்டு நாணத் தோடுர் தாகத்தோடும் பதியோடும் வெளிவருகையில், மாயாதேவி கண்டு அவனுடு சாவகாசமாகப் பேசத்தொடங்கினள்.

இராவணு! உன்முகம் நளாவென்னும் பெயருடைய கரும்பாம்பு போல அகோரமாகவும், உன்ருபம் பசாசம்போலப் பராக்கிரமமாகவு மிருக்கின்றன. இவ்வகைய நீ தேவர்கட்குங் கிடைத்தற்கரிய என்னைப் போன்றஸ்திரீயைக்கைக்கொண்டதினுலன்ருே, இவ்வுனக்குச் சாந்தியுமாதிசாசாரா! உலகத்தில் தன்வீட்டில் மனைவியிருக்கப் பரஸ்திரீகளிரும்பிப் போகுபத்த னுகித் துக்கமுறுவதென்? அப்படிக் சோருவதற்காவது ஸ்வஸ்திரீயைக் காட்டிலும் பரஸ்திரீயிடத்தில் என்ன விசேஷமுள்ளது? உன்னைப்போன்ற துஷ்டனுக்குப் பரஸ்திரீகளிடத்தில் விருப்புண்டாவது அவனுடைய ஆயுளை க்ஷீணஞ்செய்து அவயவங்கட்கெல்லாம் பாதையுண்டாக்குவதற் கன்றி வேறு என்ன பிரயோசனத்தையுண்டாக்கும்? அல்லது, ஸ்திரீக ளே மனம்விரும்புவார்களாயின் அப்பொழுது அவர்களைப்புணர்பவனுக்கு ஆயுள் குறையினுஞ் சிறிது சுகமேனும் உண்டாகும். அப்படியின்றி உலகத் தில் ருபவதிகளாயுள்ள ஸ்திரீகளை யுத்தாபுத்தம்பாராது அவர்கள் சௌந் தரியத்திற்காக வீணுக மோகிப்பவர்களுக்கு ஆயுள் க்ஷீணமாதற்குத் திருஷ்டாந்தமாக அப்பொழுதே மரணம் சம்பவிக்கும். மிக அருவருக் கத்தக்கதும் கிருமியாதிகளுக்குப் பிறப்பிடமானதும் பெண்கள்பார்க்கவும் அலஷ்யமானதுமாகிய தவனைபோன்ற தேகத்தையுடைய ஆடவர் கிலர் தமது தேகசுகத்தை யவாவி, பரதார கமனமுரலிய மகா பாதகங்களைத்

தேடிக்கொள்ளுகிறார்கள். புருஷருக்குப் பரதார கமனத்தாலுண்டாகுஞ் சுகம் அணுவளவாயிருந்து, பின்னர் அது மலைபோலப்பரிணமித்துத் துக்க ஸ்வரூபமாகும். உலகத்தில் புருஷர்களாவது மாதர்களாவது இவ்வண்ணம யிருமலை உன்னைப்போல இவ்வகைய நீயகாரியத்தைச் செய்கின்றனர். உடலைத்தரித்த புண்ணியர்கள் அப்பொழுது சிறிது துக்கமாயிருப்பினும் அது பின்னர் சுகாத்மமாயும் எண்ணிறந்ததாயும் விருத்தியடையத்தக்க ஸத் கருமங்களையே செய்வார்கள். ஆதலால் உனக்கிவை நன்குவிளங்கு மாறு சிறிது எடுத்துரைத்தேன். இனி யெப்பொழுதும் இவ்வகைய காரி யத்தைச் செய்யவேண்டாம்; விரைவில் ஓடிப்போ. இப்பாதாளலோக ஸ்தி ரீகள்எப்பொழுதுந்துன்புறுத்துவார்களேயன்றிச்சுகமுண்டாக்கமாட்டார் கள்: இனி அவர்களைக் கனவிலும் நினைக்கவேண்டாம் ; அவர்கள் மேகத் தில் அக்கினியிருந்தாற்போன்றவர்கள்; விஷ சர்ப்பங்களையே கத்திகளாக வுடையவர்கள் ; பலவித மாயைகளையுணர்ந்தவர்கள் ; துஷ்டபுத்தியுடைய வர்களாகவு மிருக்கின்றார்கள்; இவ்வகையஸ்திரீகளை வஞ்சிக்க ஒருவனுஞ் சாமர்த்தியமுடையவனுகமாட்டான். விரைவில் இவ்விடம்விட்டுப் போய் விடு என்று கூறினள். அதனைக்கேட்ட இராவணன் ஒன்றுமுரையாது தன் சைனியங்களுடன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்பிலத்தின்வழியே பூலோ கத்தையடைந்து அவ்வேளையில் உலகத்தில் இப்படியே சஞ்சரித்துக் கொண்டிருந்தனன்.

முனிவர்களே! இராவணன் இவ்வளவு கஷ்டங்களையநுபவித்தும், ம மரவரியிலித்தவிஷ்ணுமூர்த்தியையே யெப்பொழுதுந் தியானித்துக்கொ ண்டு சந்தோஷசித்தத்துடன் ரூபவதியாய் இந்திரிய நிக்கிரகசாமர்த்திய முடையவளாய்க் கன்னிகையா யிருக்கும் ஆங்கீரசமுனி புத்திரியாகிய வேத வதி யென்பவளைக் கண்ணுற்று, மீண்டுங் காமமோகிதனுய் அவளைக் கேட்க, அவள் ஒன்று முரையாது அழுதுகொண்டிருக்கையில், பலாத்கார மாகப் பிடித்திழுத்தனன். அதனுல் அவ்வேகவதி மகா பாபியாகிய இவன் பரிசித்த இத்தேகம் இனி வேண்டியதில்லையென்று தன் பிராணனை அக் கினியில் விடுத்து, இவ்விராவணனை யெப்படியுங் கொல்லவேண்டுமென்று, மிதிலாபுரியின் அரசனுகிய ஜனகராஜனுடைய யாககுண்டத்திற் புரர்ஜன்ம மெடுத்து விஷ்ணுமூர்த்தியின் அவதாரமாகிய ஸ்ரீராமனுக்கு ஏகபத்தினி யாய்ப் பிரதிதினமுந் தன் கணவனுற் சந்தோஷமுற்று, முன் ஜன்மத்தில் தனக்குத் தீமைசெய்த இராவணனைத் தன் கணவனுற்கொன்று, இரண்டு புதல்வரைப்பெற்று இனி க்ஷீராசாகரத்தில் நமது கணவனுடன்கூடி வாழ்ந் திருக்கவேண்டுமென்று பூமிவழியாகச் சென்றனள். ஸ்ரீராமமூர்த்தி சீதா தேவியின் பிரிவாற்றாது மனம் வருந்தி மன்மதவாதையுற்று இனி யானும் க்ஷீராப்தியையடைந்து அவளுடன்கூடிச்சுகமநுபவிப்பேனென்று எண்ணி க்கொண்டிருந்தனர்.

பின்னெருகாலத்தில், கைலாயகிரிக்கருகில் குபேரன்புத்திரனை நளகூபரனையும்படி திவ்வியரூபத்தையுடைய அரம்பையானவள் அதி சுந்தரமாக அலங்கரித்துக்கொண்டுசெல்லுகையில் இராவணசுரன் கண்டு, சுராபானத்தால் மத்தனகிருந்தமையின் தன் மருகி யென்றுஞ் சிறிதும் யோசியாது பலாத்காரமாகப் பிடித்துச் சம்போகஞ்செய்தனன். அதனை அரம்பை தன் கணவனுகிய நளகூபரனிடஞ்சொல்ல,நளகூபரன் அப்பொ முதே பெருங்கோபங்கொண்டு, இனி இராவணன் பரஸ்திரீகளைப் பலாத் காரமாகப் புணர்ந்தால் உடனே அவன் சிரம் ஆயிரஞ் சுக்கல்களாகுக வென்று சபித்தனன். மீண்டுஞ் சிறிதுகாலங்கழித்து இராவணன் பாதாள லோகத்தைச் சயிக்கவேண்டுமென்று அங்கடைந்து அங்குள்ள ஓர் திவ்ய மான வீட்டிலிருந்த, பார்ப்பதற்கு மனோகரமான உருவமும் நீலமேக நிறமும்செவ்வரிபரந்த விழிகளும்பிரளயகாலாக்கினியின்ஜ்வாலைபோன்ற ரோமரேகைகளும் மின்னல்போன்றதேகமும் மின்னல்போன்ற ஜடை களும் ஆயிரஞ்சூரியர்போலத் தேககாந்தியும் சர்ப்பங்களின் விஷத்தாற் றேன்றிய அக்கினியே வஸ்திரமுமாகக்கொண்டு விளங்கும் மகாவிஷ்ணு வைக்கண்டு அப்புருஷன் சமீபத்திலிருக்கும் க்ஷீராப்தியின் புதல்வியா கிய மகாலக்ஷ்மிதேவியின் பேரழகைத் தனதிருபது கண்களாலுங்கண்டு பெருமயல்கொண்டு இந்த லக்ஷ்மியை ஒருவேளையிலேனும் அபகரித்துக் கொண்டுபோகவேண்டுமென்று யோசிக்கையில், அம்மகாபுருஷனுடைய நிசுவாசத்தினுல் இராவணன் நூறு காததூரத்தில் வீசித்தெறியப்பட்டுச் செயலற்று விஷயமின்னதென்றுணர்ந்து, பயபக்தியுடன் அம்மகாபுரு ஷனையணுகி, பகவானே! அடியேனுக்குத் தேவரீருடைய கைளாலேயே மரணம் அடிக்கடி சம்பவிக்குமாறு அதற்கிரங்கவேண்டுமென்றுகேட்டு அவர் அவ்வாறே உத்தரவுகொடுக்கப் பெற்றுக்கொண்டு, முன்னரே அங் குச் சிறையிடப்பட்டிருக்கும் மாபெலிச்சக்ரவர்த்தியை விடுவிக்கவேண்டு மென்றுஞ்சித்தமுடையவனுய் அவனிடஞ்செல்ல, அந்தவாயிலிற் பெருங் கருமையாய இரு கரங்களுடன் இருப்புலக்கைதாங்கி, சங்குசக்கரங்களை வந்திக் காவலாகநிற்குந் துவாரபாலகனைக்கண்டு, ஓகோ இவன் விஷ்ணு மூர்த்திபோலிருக்கின்றன். நான் இங்கே சென்று சமீபித்தால் நீமை விளையுமென்று அச்சமுற்று, உடனே பாதாளத்தைவிட்டு விலகிப்பூலோ கத்தையடைந்தனன். மீண்டுஞ் சிலகாலத்தில், கஷ்திரிய வம்சத்தில் திருவவதாரஞ்செய்திருந்த ஸ்ரீராமமூர்த்தியினுடைய மனைவியாகிய சீதா தேவியைத் தண்டகாரண்யத்தில், மரவரியுடுத்துக் கந்தமூலபலங்களைப் புசித்துக்கொண்டு, உடல் முழுவதும் புழுதியாகத் திரிந்துகொண்டு, தாய் தந்தையர் விருப்பத்தின்படி வனத்தையடைந்துள்ள தன் கணவனிடத் திற் பெரு விருப்புடன் தொடர்ந்து பர்ணசாலையில் வாழ்ந்திருக்கையிற் கண்டுகாமமோகிதனுய்அவளையெவ்வகையிலுங்கிரகித்துக்கொண்டுபோய்ச் சேரவேண்டுமென்று கருதி, தன்மந்திரியாகிய மாரீசனை விளித்துத் தன்

மோகத்தைக் கூறி, நீ பவளத்தாற் கொம்புகளும், வயிடூரியத்தால் விழி களும், மரகதத்தாற் புஷ்டபாகமும், பூர்ணசந்திரன்போன்ற முகமும், முத்துமாலையால் அலங்கரிக்கப்பட்ட தேகமும், பத்மராகத்தாற் கால்களு முடையவோர் பொன்மான் வடிவெடுத்து, இராமபத்தினி யாகிய சீதை காணும்படி அவள் முன் உலாவுவையாகில், அவள் அம்மான்வடிவத்தில் மனம்விரும்பி, அதனைப் பிடித்துக்கொடுக்கவேண்டுமென்று கணவனைக் கேட்பள். அப்பொழுது இராமன் உன்னைப் பின்றொடர்வான். அந்தச்சமயத் தில் யான் ஸந்தியாசி வேடமுற்று அப்பர்ணசாலையை யடைந்து சீதையை யெடுத்துக் கொண்டுபோகிறேன் எனக்கூற, மாரீசன் அதற்கிணங்கி, தனக்கு இராவணன் கூறியவகையே திவ்யசுந்தரமுடைய மான் வேட மெடுத்துச் சீதைமுன் விநோதமாக வுலாவ, சீதை அதனை விரும்பித் தன் பர்த்தாவாகிய இராமமூர்த்தியை அதனைப் பிடித்துக் கொடுக்கவேண்டு மெனக் கோர, இராமமூர்த்தி தன் தம்பியாகிய இலக்குமணனைச் சீதைக் குக் காவலாகநிறுத்தி அந்த மானைத்தொடர்ந்து சென்றனர். கெடுந்தூரம் பின் றொடர்ந்தும் அம்மிகப்படாமையின் அஸ்திரப்பிரயோகஞ் செய்ய, மாரீசன் கீழே விழுந்து உயிர்துறக்கையில், தான் இராவணனுக்கு நன்மை செய்வதாகக் கூறிவந்ததை நினைத்து வஞ்சகமாக, சகோதரா! நான் இறந் தேன் என்று கூறி உயிர்விட்டனன். இவ்வாக்கியத்தைப் பர்ணசாலையி லிருக்கும் சீதா லக்ஷ்மணர் கேட்டபடியால், சீதை தன் கணவனுக்கு ஏதோ அபாயம் சம்பவித்ததென்று தன்மைத்துனனாகிய இலக்குமணனை யனுப்ப, அச்சமயத்தில் இராவணன் சந்நியாசிவேடந் தரித்துப் பர்ண சாலையை யடைந்து கூனகாலத்திற் சீதையைக் கொண்டுபோய்த் தன் இலங்காபுரியைச் சேர்ந்து தன்னை விரும்பும்படி பிரார்த்தித்துக்கொண்டு அநேக அசுரரையும் அசுரஸ்திரீகளையுங் காவலிட்டு அசோகவனத்திற் பாதுகாத்துவந்தனன். அதனை யுணர்ந்த தசரதராமன் தன்னைச் சந்திந்த ஹநுமான் சொற்படி சுக்ரீவனைக்கண்டு வாலியை வதைத்துச் சுக்ரீ வனுக்கு முடி தரித்து எழுபதுவெள்ளம் வானரசேனைகளோடு தென் கடலையடைந்துசேதுபந்தனஞ்செய்து அவ்விராவணனோடியுத்தஞ்செய்யத் தொடங்கினர்.

அச்சமயத்தில் இராவணன் தன் தம்பியாகிய கும்பகர்ணனுதவி யிருந்தால் ஜயமடைவரென்று கருதி, அவனைமதுமாமிச பக்ஷணஞ் செய்து வாயைத்திறந்துகொண்டுபிரளயகாலாக்கினிபோலத் தங்காஞ்சனத் தொங்கலைத்துக்கொண்டு மகா பயங்கர ஸ்வரூபத்துடன் நித்திரை செய்துகொண்டிருந்தனன், இராவணன் தன் வீரர்களாற் பெருங் கோ ஷஞ் செய்வித்தும், குதிரை முதலியவற்றால் மிதிப்பித்தும், கத்தி கோடரி மரம் அக்கினி ஜலமுதலியவற்றாலடிப்பித்தும் நித்திரை தெளியாமையின் அனேக ஸ்திரீகள் அவன் மேல்விழுந்து குசங்களாலும் ஊருவுகளாலும் காடனஞ்செய்ய, அவன் காமாக்கிரோத சித்தமுடையவனுதலின் சிறிது

விழித்தனன். அதனைக்கண்டு இராவணன் சந்தோஷித்துத் தன் தம்பி யாகிய கும்பகர்ணனைத் துணையாகக்கொண்டு இராமமூர்த்தியை யெதிர்த்து பெரும்போர்புரிந்து, அவன் புத்திர மித்திர குடும்ப சகிதமாய் இராம பாணத்திற்கிரையாயினன். அவ்விராக்கதரில் இராமமூர்த்தியைச் சரண மடைந்த விபீஷணன் ஒருவனே உயிர் பிழைத்தனன். ஏனையோர் நெருப் புப்பொறிபட்ட பஞ்சுபோலாயினர். சவுநகாதி முநிவர்களே! காமக்ரோ தாதிகளைக்களைந்து தர்மபுத்தியையுடைய மஹருஷிகளுடைய மன்மதாவஸ் தையையும், அரசர்களிற் சிறந்த காதிராசன் புத்திரான விசுவாமித்திர முநிவருடைய காமத்துயரையும், திதிபுத்திரர்களாகிய சும்ப நிசும்பர் களும் அவர்கள் புத்திராகிய சுந்தோப சுந்தரும் கொண்ட மன்மத விகாரத்தையும், சக்ரவர்த்தி திருமகனாகிய இராமமூர்த்தியின் மனைவியைக் கண்டுகாமத்துன்புற்ற பர்வதங்கட்குச் சமானமான புஜபலத்தையுடைய இராவணனது காமாதுரத்தையும், மிருக பக்ஷியாதிகளின் மாமிசங்களைப் புசிக்கும் பெருவயிற்றினையுடைய கும்பகர்ணனுடைய மதனுவஸ்தை யையும் உங்கட்குச் சுருக்கிச் சொன்னேன்.

பதினொன்காவது

மேற்படி அத்தியாயம்.

சௌநகாதி நைமிசாரண்ய வாசிகளாகிய மகருஷிகளே! இன் னுஞ் சில சரித்திரங்களையுஞ் சொல்லுகின்றேன். சூரியவமிசத்திற்பிறந்த தசரதசக்ரவர்த்தி மாதுட தேகத்தினுடனே சொர்க்கலோகத்திற்குப்போவ தும் வருவதுமாயிருந்து அங்கேயே தன் பிதுர்க்களுக்குத் திலோதபிண் டங்களைக் கொடுக்குஞ் சாமர்த்தியமுடையவராயிருந்து, அறுபதினாயிர வருஷம் ஏகசக்ராதிபதியாய் அரசுசெலுத்தியுங் காமாக்கிராந்தசித்தராய்த் தன் பட்டமஹிஷியாகிய கைகேயியின் சொற்களைக்கேட்டு, தன் பிராணத்தையும் இராச்சியத்தையும் புத்திரனையுந் துறந்தனர். அவருக்குப் புத்திரனும் போர்முனையிற் சுத்தவீரனும் மகாபுத்திமானும் தர்மவானும் இந்திரிய நிக்ரஹமுடையவனும் எல்லாருடைய மனத்திற்கும் ரம்மியமானவனும் எல்லாப் பூதங்கட்கும் பிரியவானும் மகாமானியும் திரிலோகங்களிலும் வெற்றியுடையனுமாகிய இராமமூர்த்தி காமத்தால் மோகிக்கப்பட்டு, கிஷ் கிந்தாபுரியில் அரசனாயிருந்த வாலி தன் தம்பியாகிய சுக்ரீவனோடு பெரும்போர் செய்து அவன் இராஜ்யத்தையும் மனைவியையும் அபகரி த்துக்கொண்டது கேள்வியுற்று, நிரபராதியாகிய வாலியைப் பிரய காலாக்கினிபோன்ற அஸ்திரத்தாற் கொன்றனன். அயோத்தியாபுரியி லிருந் தரசுபுரிந்த சூரிய குலத்திற்கு ஓர் சூரியன்போன்ற தசரத சக்ர வர்த்தியும், எல்லாத்தேவர்களாலுந் துதிக்கப்பட்டகீர்த்தியையுடைய விஷ் ணுமூர்த்தியின் அவதாரமாய் அத்தசரதன் மதலையாய்த் தோன்றிய இராம

மூர்த்தியும் காமாக்கிரோந்தசித்தமுற்ற சரித்திரங்களையுஞ் சொன்னேன். ஆதலால் மன்மதன் எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனும், தேவர் முனிவர் அசுரர் மானுடர் பசு பக்ஷியாதி எல்லோருடைய இதயங்களிலு மிருந்து இவ்வாறுதன்கிருத்தியத்தை நடத்திக்கொண்டு வருகின்றனென் றறியவேண்டும். லோகநாயகனைய சிவபெருமான் இவன்பிறராற்சயிக்க ப்படாதவனென்று உலகத்திற்கு நன்மையுண்டு செய்யு நிமித்தமாகப் பார் வதியை மணந்து காண்பித்து,இலிங்கஸ்வரூபமாயினர். அவ்வகைய இலிங் கத்தைக்கண்ட ஆகாயவாணி முனிவர்களே! தேவர்களே! தைத்தியர்க ளே! உத்தமமான பத்தியால் நீங்கள் இதனைப் பூசைச்செய்யும்பக்ஷத்தில் உங்களுக்குள்ள இஷ்டகாமியங்களை யடைவீர்களென்று கூறினள் என்று ஸூதமுனிவர் மகருஷிகளைநோக்கிக்கூறினர்.

மன்மதன்கதையுரைத்தது
முற்றிற்று.

பதினாந்தாவது
நித்யநைமித்திக பூஜாவிதியுரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்கள் ஸூதமுனிவரைநோக்கி, ஸ்வாமீ! அநேக சாஸ்திரங்களில் வியாஸபகவான் தேவரீருக்குபதே சித்தவகையே எல்லாவற்றையுந் தேவரீர் அடியேங்கட்குச் சொல்லக் கேட்டுக் கிருதார்த்தர்களானோம். இந பரலாபங்களைக் கொடுக்கவல்ல சிவதருமங்களை யிப்பொழுது சிறிது சொன்னீர். அதனை யாங்கள் இது காறுங் கேட்டிலமாதலின், சிவலிங்கார்ச்சனை செய்வதால் வரும் பலனை, வியாஸபகவானுற் கேள்வியுற்றவகையேயுலகுக்கிதமுண்டாகும்படி சவிஸ் தாரமாகச் சொல்லியருளவேண்டும். எப்பொழுதும் அசலமான மனத் துடன் ஈசுவரதர்மத்தைப் பிறருக்குச் சொல்லுகிறவன் அநேக யாகங்கள் செய்த பலனை யடைந்து ஜீவன்முக்தனுவான்.உலகத்திற்காக ஹிதாஹிதத் தைச் சொல்லுகிறவன் தர்மார்த்தகாம மோக்ஷங்கட்கு உத்கருஷ்டமான பலனை யடைவானென்று மகருஷிகள் சொல்லியிருக்கின்றனராதலின் தரு மங்களில் முக்கியமானது யாது? சர்வேசுவரனுடைய வாக்கு எத்தகை யது? இலிங்கமூர்த்தத்தில் எவ்விதியால் ஆவாஹனஞ்செய்து பூஜித் தாற்சிவபெருமான் பிரசன்னமாவான்? சிவதானம் சிவயாகம் எவை? இவ் விஷயங்கள் சுருதிகளிற் சொல்லப்பட்டிருப்பினும் யாவருக்கும் புலப்படி மாறு உரைத்தருளவேண்டும். புண்ணியங்களிலெல்லாஞ் சிறந்த புண்ணி யத்தை எதனால் அடையலாம்? கிரகஸ்தன் எந்தச்செயலாற் சொர்க்க லோகத்தையடைவான்? எந்தச் செயலால் மானுடனுகப் பிறந்து ஈசுவரா நுக்கிரகத்தை யடைவான்? கர்மயாகம் தபோயாகம் ஸ்வாத்யாயயாகம் த்யானயாகம் ஜ்ஞானயாகம் என யாகங்கள் ஐவகையில், எது உத்தம மானது? யாகங்களின் கதிகளெவை? இவ்யாகங்களால் யாது பலன்

கிடைக்கும்? தர்மாதர்மங்கள் எத்தனைவகைப்படும்? எவ்வெப் பாவத் தால் எவ்வெவ் விகாரையை யநுபவிக்கவேண்டும்? தர்மாதர்மங்களாகிய அலைகளாற் கலக்கப்பட்டு, காமாதிகளாலுண்டான துக்கங்களாகிய நுரை களாற் பூர்ணமாயிருக்கிற சமுசாரமாகிய சமுத்திரத்தினின்று ஆன்மாக் கள் எவ்வாறு நீக்கமுறுகின்றன? இவற்றை யெல்லாம் அடியேங்கட் குரைத்தருளவேண்டுமென்று கேட்க, ஸூத முனிவர் சௌநகாதி முனிவர் களை நோக்கிக் கூறலாயினர்.

மகருஷிகளே! பூர்வம் இதே விஷயத்தைத் தத்வதரிசிகளாகிய முனிவர்கள் வியாஸபகவானைக் கேட்க, வியாஸபகவான் சொல்லுகின்றார். நான் பூர்வகாலத்தில் இவ்விஷயத்தை ஸநத்குமார முனிவரிடங் கேட்ட பொழுது, அவர் சொர்க்க மோக்ஷ பலன்களைக்கொடுக்கத்தக்க சருவேசு வரனைப் பணிந்து அவ்வெம்பெருமானுற் சொல்லப்பட்ட வகையே சிவ தருமங்களைச்சொல்லுகிறேனென்றுசொல்லலாயினர்.சிவதருமம்சிரத்தை பூர்வமாகச்செய்யவேண்டும்; சிரத்தையே சிவதருமத்திற்கு ஆதாரவாகும்; சிரத்தையே பிரதிஷ்டையாகுமாதலின்,சிரத்தாமயமாகவே சிவதருமங்கள் விளங்குகின்றன.அவைகிரவணஞ்செய்தமாத்திரத்திலேயே ஆனந்தங்கொ ள்ளத்தக்கவை; சூக்ஷ்மமானவை; பாசம் பசு பதியென்னும் இவற்றும் பிரதி பாதிக்கப்பட்டவை; சிரத்தையாலன்றிக் கைகண்டதேக கஷ்டம் தானம் முதலியவற்றுந் கிரகிக்கத்தக்கவையன்று. தேவர்களாயினும் சிரத்தையின்றி இதனைக் கிரகிக்க அசாத்தியராவர். சிரத்தையே பரம தர்மமும், சூக்ஷ்ம தத்வமும், தானமும், தவசும், சுவர்க்கமும், மோக்ஷமும், ஜகத்துமாகும்.ஒருவன்சிரத்தையின்றிச்செல்வமுழுவதையும்பிராணனையுந் தானஞ்செய்யினுஞ் சிறிது பலனும் பெறமாட்டான்.ஆதலின் சிரத்தையே பரமபதம். சிரத்தாஸ்வரூபமாகவே சிவதருமங்களெல்லாஞ் சொல்லப் படுகின்றன. சிரத்தையாலேயே சர்வேசுவரனுகிய சிவபெருமானை யடைய வுந் தியானிக்கவும் பூஜிக்கவுங் கூடுமாதலின், முகாரமானதும் மோக்ஷ மளிக்கத்தக்கதும் சிவாக்கினியின் சித்தி ரூபமானதும் மனோகரமான வாக்குமயமானதும் சர்வேசுவரப் பிரதிபாதகமானதும் அநேக சித்திகளை யளிப்பதும் உலகிலுள்ளவர்கள் யாவரும் விரும்பத்தக்கதும் உச்சரித்தற் குச் சுலபமானதும் எண்ணிறந்த பொருளைக் கொடுப்பதுமாகவுள்ள சிவ மூலமந்திரத்தை உங்கட்குச் சொல்லுகின்றேன். சமஸ்த வித்தைகளுக்குங் காரணமானதும் அதி சூக்ஷ்மமானதும் தர்மார்த்தகாம மோக்ஷங்களைச் சம்பாதிக்கத்தக்கதும் ஆலவிருக்ஷத்தின் மரம் பெரிதும் விதை சிறிதுமா யிருக்குமாறு, மந்திரம் சிறிதாயினும் உபாசிப்பவர்க்கு அநந்த பலனைக் கொடுக்கத்தக்கதும், ஆதியக்ஷரத்துடன் ஆறு அக்ஷரங்களையுடையதும் ஆகிய ஓம் நமசிவாய என்பது சிவப்பிரதிபாதகமான மூலமந்திரமென்ப தாம். உலகத்திலுள்ள சூக்ஷ்ம மந்திரங்களும் அலங்காரார்த்தமான விசேஷ மந்திரங்களும் இந்தச்சிவமந்திரத்தில் அடங்கியிருக்கின்றன. இவ்

வகைய ஷடக்ஷரமுடைய சூக்குமமான மந்திரத்தில் குணத்திரயாதீதரும் சர்வஜ்ஞரும் சமஸ்தமுஞ் செய்பவரும் பிரபுவும் பிரபஞ்ச முழுவதிலும் தூலசூக்குமமாகப் பிரவேசித்திருப்பவருமாகிய ஜகதீசுவரன் பஞ்சப்பிரம தேகமுற்று வாச்சிய வாசகசம்பந்தத்தால் பிரத்யக்ஷமாக விளங்குகின்றனர். அநாதியாயுள்ள சமுசாரசாகரம் தோன்றியவுடனே அநாதியாயுள்ள சிவபெருமான் அதனை விலக்கும்படியிருக்கிறார். வியாதிக்கு ஔஷதமும் வைத்தியனும்போலச் சமுசார வியாதிக்குச் சிவபெருமான் பரமௌஷதமாகவும் பரமவைத்தியனாகவும் விளங்குகின்றார். சூரியனில்லாத பிரபஞ்சம் இருண்மயமாமாறு ஜகதீசுவரன் இல்லையென்று சொல்லும் பக்ஷத்தில் உலகமுழுவதுந் தமோகுணமாகும். ஆதலின் அநாதியாயும் சர்வஜ்ஞராயும் சுபாவமாகவே சர்வபரிபூரணரும் முக்திகாரணரும் ஜ்ஞானத்தைப் பிரகாசிக்கச்செய்பவருமாகிய பரசிவன் ஒருவனிருக்கின்றனர். அப்பெருமானை யடையத்தக்கது இம் மகாமந்திரமே. அம்மந்திரத்தின் பொருள் சிவபெருமானே. அபிதான அபிதேயசம்பந்தத்தாற் சிவபெருமானே அம்மந்திரமாவன். முக்திகாமிகள் இம் மந்திரத்தை ஷடக்ஷரமாகச் சபிக்கவேண்டுமென வேதங்களும் அநேகவித மந்திரங்களாலும் சாஸ்திர விசாரணைகளாலும் பிரயோசனமில்லை. இம்மந்திரம் ஸ்திரமாக மனத்திலிருக்கப்பெற்றவன் எல்லாவற்றையும் வாசித்தவனும் எல்லாவற்றையுங் கேட்டவனும் எல்லாவற்றையும் அநுஷ்டித்தவனுமாவன். இம்மந்திரத்தை யெப்பொழுதும் அப்பியசித்தவன் உலகத்திற் பரமசிரேஷ்டனாவன். மற்ற ஞானமும் கல்வியும் யாவும் இம்மந்திரத்திற்குப் பதினாயிலொருகலைக்கும் ஈடாகாது. இந்த மந்திரம் சிவஸ்வரூபமென்று உறுதிகொண்டிருக்குமெல்லியும் அவன் பரமபதத்திலிருப்பவனாவன். இவ்வாக்கியம் விதிவாக்கியமன்றி அர்த்தவாதவாக்கியமன்று. இது சத்தியம். உலகரக்ஷகனாகியசிவபிரான் சர்வஜ்ஞனும் பரிபூரணனுஞ்சர்வதோஷநிவர்ஜிதனுமாயிருந்து தீர்க்காலோசனை செய்துசொல்லியது இம்மந்திரம். உலகத்திற்குக் கர்த்தாவாயிருக்கும் இறைவன்புண்ணியபாபபலன்களை உண்மையாகச் சொல்லுவானேயன்றி அபத்தமாகச் சொல்லமாட்டான். இதில் துவேஷாபிமானிகளாய் ஈசுவரனிடத்திற் பக்தியின்றியிருப்பவர்கள் பலவாறு பொய் புகல்வார்கள் என்று, இவையெல்லாம் புனிதராகிய சிவபெருமான் திருவாய்மலர்ந்தருள வுணர்க்தேன். இவை முழுதும் பிரமாணம். இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. பெரியோர் கூறிய விஷயங்களை ஈசுவரவாக்கியமாக நம்பி நடக்கவேண்டும். சிரத்தையின்றி அசிரத்தையாற் பிரமாண்மாகக்கொள்ளாது சந்தேகிக்கிறவன் அதோகதியடைவான். தர்மமான ஞானோபதேசஞ்செய்யும் புராணிகனைச் சர்வேசுவரனாகிய சாம்பமூர்த்தியைப்போலவேபூஜிக்கிறவன் தர்மத்தையும்ஞானத்தையுமடைந்து இறுதியில் மோக்ஷத்தை யடைவான். உலகத்திற் பிரபுவாயுள்ளவன் ஹிதஞ்செய்யவேண்டுமென்னுங் கருத்துடன் சுபகரமான தருமங்களைப் பரோபகாரமாகச்செய்யவேண்டுமென்று கட்டளையிட்டு, தானே தர்ம தற்

பரனுயிருக்கும்பக்ஷத்தில், அவன் கட்டளையிலடங்கிய உலகினர் நம திறைவனப்போல நாமும் தக்க சிக்ஷனையை யுடைத்தாயிருக்க வேண்டுமென்றுவது, நமது தலைவன் கட்டளையை மீறிநடந்தால் நாம் தண்டனையடைவோமென்னும் அச்சத்தாலாவது, தமக்குக் கட்டளையிடப்பட்டுள்ள நல்ல தருமங்களைச் செய்வார்கள். ஆதலின் பிரபுவாயுள்ளவன் எப்பொழுதும் தருமத்தை யவலம்பித்தே பிரஜைகளைப் பரிபாலித்தால், அப்பிரஜைகளும் அவ்விறைவனது சுபகரமான கீர்த்தியைப் புகழ்ந்து தர்மார்த்த காமங்களில் தாந்தாம் மனம் விரும்பியவற்றை யடைவார்கள். இதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. இப்பிரஜைகள் தர்மவான்களாயினும் அதர்மவான்களாயினுஞ்சரி; அவர்கள் புண்ணியபாவங்களில் அரசன் அரைக்காற்பங்குபெறுவான். ஆதலின் பிரஜைகளிடத்திலிருந்து அரைக்காற்பங்கு புண்ணியத்தைத் திரிக்கும்படியாவனையும் புண்ணியமான மார்க்கத்திலேயே நடக்கச்செய்பவல்ல அரசர் கிருதயுகமுதலிய நான்கு யுகங்களிலுமிருந்து மகாசமர்த்தராய், தர்மார்த்த சித்தமுடையவர்களாயிருப்பவர்களைத் தர்மார்த்தர்களாக்கவேண்டும். அரசன் இவ்வாறு தர்மமார்க்கத்தை விருத்திசெய்யாது பிரஜைகட்குப் பிடை யுண்டுசெய்யும்படி நடப்பானுயின், அப்பிரஜாபிடையால் உண்டாகிய அக்கினி அவ்வரசனது பிராணனையும் சம்பத்தையும் குலத்தையும் ராச்சியத்தையுந் தகிக்காமல் விடாது. அரசன் தர்மவானுயிருக்கவேண்டுமென்னும் விருப்பத்தினாலேயே சிவபெருமான் மந்த்ரௌஷதிமுதலிய ஷடங்கரூபமாக வேதங்களை நிருமித்திருக்கின்றனர். பிரகிருதி சாஸ்திரவாதத்தால் காமமார்க்கத்தை மட்டிலும் கைக்கொண்டு நடக்கும் மன்னனை யோகத்தால் தர்மமார்க்கத்திற் றிருப்பவல்லவனாகிய சர்வேசுவரனே சிவபெருமான். அவ்வெம்பெருமானே மன்னவருக்கும் மன்னன். அவனே ஜகத்குரு. ஒருவன் அவ்வகைய ஜகத்குருவாகிய சிவபெருமானைத் தஞ்ஞான சொரூபத்தாற் சர்வப் பிரயத்தனத்தோடுந் தெரிந்துகொண்டு, சமுசாரமாகிய சேற்றில் முழுகியும், அஜ்ஞானமாகிய கெருப்பினுட் சுடப்பட்டும் இருப்பவர்களை ஞானமாகிய அமிர்தத்தால் தணித்துச் சமுசாரபாதையை யொழிப்பானுயின், அவனுக்குத் தந்தையுஞ் சமானமாதமாட்டான்.

இவ்வகைய சர்வேசுவரன் தேகசிரமம் - யாகம் - தானங்கள் - பெருஞ்செல்வம் - அரசு முதலியவற்றால் அடியத்தக்கவனல்லனென்று வேதங்கள் தோஷிக்கின்றன. சாந்தசிலராகிய முகிவர்களால் சுவர்க்கமோக்ஷங்கள் சித்திக்கத்தக்க சோபனமான வஸ்துவொன்றிருக்கின்றதென்று சொல்லப்பட்டுள்ளது. அர்த்தவாதத்தில் ராகத்வேஷக்ரோதலோபங்களோடு கூடிக்கொண்டு அவித்யா ராகவ்வரூபமாகவும் மகாமிருதுவாகவும் பார்ப்பதற்குப் பலர் அநுஷ்டித்ததாகவும் சமுசாரத்தை யுண்டுசெய்கற்குக் காரணமாகவும் விளங்கும் வாக்கியங்கள் சிலவுள்ளன. அவை அதோகதியை யுண்டுசெய்யத்தக்கவை. எந்த வார்த்தையைக் கேட்ட

மாத்திரத்தில் காமக் குரோதாதிக ளொழிந்து, ஜகதீசுவரனுகிய சிவபிரானிடத்தில், அஹேதுகமாகிய பக்தி ஞானங்கள் உண்டாமோ, அவ்வார்த்தை செவிக்கு இனிமையாயிராவிடினும், அதுவே மங்களகரமானது. பதினென் புராணங்களும் இதிகாசங்களும் வேதங்களும் சாஸ்திரங்களும், தர்மார்த்த மாக முனிவர்களாற் கர்ணபரம்பரையாகச் சொல்லப்பட்டுள்ளன. அவற் றுள், ஆன்மாக்கட்குப் புத்திர தார சமுசார பந்தமும், சத்யோகர்ப்ப முத லியனவற்றிற்கு ஹேதுவுஞ் சொல்லப்பட்டுள்ளன. "இவையேபான்றவை மோக்ஷமார்க்கத்திற்குத் துணைசெய்யமாட்டா. உலகினருக்கு ஆயிரவருஷ காலம் ஆயுளிருப்பினும் எல்லா நூல்களையும் ஆராய்ச்சிசெய்ய இயலாது. நமக்கிருக்கும் ஆயுளோ சொற்பகாலம். பண்டிதனும் சமர்த்தனுமா யுள் ளவன் சாஸ்திரசமூகங்களையெல்லா மொழித்து, இகபர லோகங்கட்குச் சுபகரமான அக்ஷர தன்மாத்திரமாயுள்ளதை யுணர்ந்துகொள்ளும்பக்ஷத் தில், அவனே எல்லாச் சாஸ்திர ஞானத்தையு மடைந்தவனுவான். எல்லா நூல்களையுங் கற்றுவிடேனென்று காலத்தைக் கழிப்பவனும் எல்லாவற் றையுங் கற்றுவிட்டேனென்பவனும் முழுமூடனேயாவன். அவன் சக்தி யடைந்திருப்பினும் அசக்தனேயாவான். சமுசார சேற்றிலிருந்து அவன் வெளியே வருவதற்கு ஒருகாலத்துஞ் சமர்த்தனுகான். சிவஞானத்தைச் சிரத்தைபக்திகளுடன்விசாரித்தறிபவனே பண்டிதன்; அவனே எல்லாச் சக்திகளுமுடையவன்; அவனே மகா தபஸ்வி, அவனே ஜிதேந்திரியன்; அவனே உலகமுழுவதையும் மேருமலையுடன் கூட்டித் தானஞ்செய்தவன்; அவன் அந்நியாயமாகக் கூறினும் சர்வேசுவரன் அதனை நியாயமாமாறு அநுக்கிரகிப்பான். ஆதலின் யான் நியாயமாக உங்களுக்குக்கூறுகின்றேன். சிவஞானத்தை யுள்ளபடி யுணர்ந்தவனே சிவசாயுச்சியத்தை யடைவான்.

முனிவர்களே! அவ்வகைய சிவஞானத்தை யடைதற்கு முக்கிய சாதனமாயுள்ளது சிவலிங்கார்ச்சனையேயாம். அச்சிவலிங்கபூஜையோ நித் யம் நைமித்திகம் காமியமென மூன்றிறப்படும். அதனைச்சுருக்கிச்சொல்லு கின்றேன் கேளுங்கள்: பஞ்சாமிர்தத்தாலும் ஸ்நானம் பாத்திய முதலிய வற்றுலும் அச்சர்வேசுரனை நித்யமாக ஆராதித்தால் அவர்கள் சித்திரமாக அநுக்கிரகிக்கப்படுவர். தேவாசுரர்களால் திருப்பாற்கடல் மதிக்கப்பட்ட காலத்தில் சமஸ்தலோகத்திற்கும் மாதுருபூதமாக நந்தை - பத்திரை - சுரபி-சுமனையென்னும் ஐவகைப் பசுக்கள் தோன்றின. இவ்வைவர் தில் சுரபியென்பது தேவர் முனிவர் மானுடர் முதலிய யாவர்க்கும் உதவி செய்யவேண்டுமென்னுங் கொள்கையால் பூலோகத்தை யடைந்து, சர் வேசுவரனுகிய சிவபெருமானுக்குத் திருமஞ்சனத்திற்கு உபயோகமாக வேண்டுமென்னுங் கருத்துக்கொண்டே பூமியில் நின்றுவிட்டது. அப் பசு வின் கோமயமும் கோரோசனமும் கோசலமும் க்ஷீரமும் தயிரும் நெய் யும் இவை உலகத்தில் எல்லாவற்றையும் பவித்திரமாகச்செய்யும் வஸ்து க்கள். இவ்வாறனுல் ஒன்றுகிய கோமயம் ஒன்றினுலேயே சிவப்பிரீதி

யாகவுள்ள வில்வமரமும் பதமத்தின் விதைகளும் உதித்தன. இவற்றில் வில்வமரத்தை லக்ஷ்மீ முதலியவர்கள் ஸ்ரீவிருக்ஷமென்று கூறினர். பசு மையான கோரோசனம் சிவபெருமானுக்கு அபிஷேகத்திற்குரியசாமான் களிற் சிறந்த வொன்று. கோசலத்திலிருந்தே சாம்பிராணியாகிய தூபத் திரவியம் தேவப்பிரீதியாகத் தோன்றியது. எல்லாப் பிராணிகட்கும் வீரிய விருத்தியை யுண்டுசெய்யுந் தயிர் அப்பசுவின் க்ஷீரத்தினின்றும் உதித்தது. அத்தயிரினின்றும் நெய் உண்டாயது. அந்த நெய்யினின்று தேவர்கட் குப் பிரீதியாயுள்ள அமிர்தம் தோன்றிற்று. ஆதலின் நெய், க்ஷீரம் தயிர் முதலியவற்றினுல் இலிங்கரூபமாயுள்ள சிவபெருமானைப் பக்தியோடு அபி டேகித்து, பின்னர் திவ்ய மலர் மணம்பொருந்திய சுத்த ஜலத்தினுலும், சிறிது உஷ்ணமாயுள்ள ஜலத்தினுலும் மங்களவாத்தியயுக்தமாக ஸ்நானஞ் செய்வித்து, சந்தனம் பச்சைக்கற்பூரம் முதலியவை கூட்டிய சீதோதகத் தால் அபிஷேகித்து, கமலம் குற்றமற்ற மிருதுவான வில்வ பத்ர முத லியவற்றுற் பூசித்து, நெய்கலந்த பரிமளத்ரவியங்களாற்றூபங்கொடுத்து, க்ஷீரான்னமும் ஏழுதரஞ் சோதித்த சுத்தஜலமும் தயிரும் நெய்யும் நெய் கூட்டிச் சமைத்த பலவித பக்ஷியங்களும் மஹா நிவேதனமாகச் சமர்ப் பித்து, பலமுறை பிரதக்ஷிணஞ்செய்து "ஓம் ஹர ஹர நமசிவாய சர்வேஸ் வர சங்கர மஹாதேவா" என்று—சாஷ்டாங்க தண்டஞ்செய்து, பலவித பாபங்களைச் செய்த பாபியாதலின் என்னை மன்னிக்கவேண்டுமென்று சூக்ஷமாபணஞ்செய்து இவ்விதமான விதிபால் சிவபெருமானை இலிங்கமூர்த் தத்திற் பூசித்தால், அவ்வகைய பக்தன் விஷயத்திற் கிருபைகொண்டு பிர தத்திற் பூசித்தால், அவ்வகைய பக்தன் விஷயத்திற் கிருபைகொண்டு பிர சன்னராய், இகலோக பரலோகங்களிலும் அடைதற்குரிய அவன்-விரும் விய கோரிக்கைகளைக் கைகூடுமாறு அநுக்கிரகிப்பான். இவ்விதியாக நித்தமும் பூசிப்பவனும், சதுர்த்தசி அஷ்டமிகளில் பூசிப்பவனும் விசேஷ சிவபக்தியுடையவனுய் நரகத்தில் விழுந்துகிடக்கும் இருபத்தொரு தலைமுறைவரையிலும் அகா யாசமாகச் சொர்க்கத்திற் செலுத்த வல்லவனுய், இறுதியிற் அவன் சிவபத வியையடைவான். சிவார்ச்சனை செய்பவனிடத்தில் அவனுக்குப் பூஜாவுபகர ணங்களைச் சேகரஞ்செய்துகொடுத்த உற்றின்முறையாரும் ஊழியக்கார ரும் பக்தியோடு பசுபதிகைங்கரியத்தைச் செய்த பலத்தில் அவர்களும் இறுதியிற் கைலாயத்தை யடைவார்கள்.

ஒருவன் பூர்வத்தில் சிவபெருமானுக்கு நானுவிதமான மலர்க ளாற்றொடுத்த மாலைகளைச் சிவசந்நிதானத்திற் கொடுத்துக்கொண்டு பக்தி செய்ததால், சிவகடாக்ஷமுற்று அவர் அநுக்கிரகத்தால் உலகத்தில் ஏக சக்ராதிபதியாய் அரசு செலுத்தி அவுன் முடிவிற் சிவசாயுச்சியத்தை யடைந்தனன். ஆதலின் உலகத்தில் பாதுடப்பிறவியடைந்தோர்யாவரும் பக்திபூர்வமாகச் சிவப்பிரீதியாகிய இலிங்கார்ச்சனையை விதிப்படி செய்ய வேண்டியது. ஷடக்ஷரங்களையுடைய மந்திரசிரேஷ்டமாகவுள்ள பஞ்சா

கூர மந்திரத்தினால் சர்வேசுவரனுகிய சிவபெருமானே ஏகாக்ரமானசமாய்த்யானஞ் செய்பவன் மகா சிவபக்தியுடையவனுய்த் தன் பிதுர்க்களே மோகூத்திற் சேர்த்துத் தானுஞ் சிவபதவியை யடைவான். அவ்வகைய சிவாராதனைக்கு அநுகூலமாயுள்ளவனும் ஆயுள்வரையில் இவ்வுலக இன்பத்தை அநுபவித்து, தான் அநுகூலஞ்செய்த பக்தனுடன் சிவ சாந்நித்யத்தை யடைவான். சிவநாமங்களே ஸ்மரித்துக்கொண்டிருப்பவர்களும், சிவஸ்தோத்திரங்களைப் பண்ணேசையுடன் பாடிவந்தவர்களும், சிவசரித்தனங்களைப் பாடினவர்களும் விதிப்படி சிவலிங்கபூஜை செய்தோர் அடையும் பலன்களே யடைவார்கள். இவ்வகையாக விதிப்படி பூஜிக்கப்படும் சிவலிங்கமூர்த்தியைப் பார்த்துக்கொண்டிருப்பவன் சுமஸ்தபான யாக பலன்களையுஞ் சந்தேகமின்றி அடைந்தவனுவான். சிவ சரித்திரங்களைச் சொல்லவும் வாசிக்கவுஞ் செவிகொடுத்துப் பக்தியோடு கேட்டுக்கொண்டிருப்பவன் அந்த யாகபலனே யடைவானென்பது நிச்சயமான சிவபெருமானது திருவாக்கு. சிவபெருமானைப் பக்திசெய்துகொண்டும் அபிஷேகித்துக்கொண்டும் பூஜை செய்துகொண்டும் இருக்கையில், சிவபெருமானையும் அவ்வாறு செய்வோனையுங் கண்டு ஆனந்திக்கின்றவன், மேற்கூறிய சிவாராதனை செய்வோன் அடையும் பலன்போன்ற பலனே யடைவான். மனத்திற் பக்தியோடு சிவல்மரணை செய்பவனும், அத்தன்மையான பலனைச் சர்வேசுவரனுடைய திருவையால் அடைகிறுன். சிவ-ருத்ர-ஹர என்னும் சிவநாமங்களாகவுடைய இரண்டெழுத்துப் பெயர்களில் ஒன்றை ஒருகாலத்தில் உச்சரித்தவனும், சர்வேசுவரனைப்போலவே புண்ணியவடிவமும், எல்லாப் பொருள்களும் நிறைந்திருக்கப்பெற்றதும், எண்ணிறந்த புண்ணியர்களால் சேவிக்கப்பட்டிருப்பதுமாகிய ருத்ரலோகத்தை யடைவான். ருஷீச்ரேஷ்டர்களே! பலவிதமான சிவதர்மங்களும் மகாகூர்மமாயிருப்பினும் பெரும் பலன்களைக் கொடுக்குமென்று அந்தச் சிவபெருமானே திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். அவற்றை நீங்கள் நித்யபூஜை செய்பவர்களாதலின் சங்கிரகமாகச் சொன்னேன்.

நித்யஸைமித்திகபூஜாவிதியுரைத்தது

முற்றிற்று.

பதினுருவது

சிவலிங்கபூஜாபலனுரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்ய வாசிகளான சௌநகாதி முனிவர்கள் ஸூதமுனிவரை நமஸ்கரித்து, ஸ்வாமீ! சிவபெருமானுடைய கிரியாயோகத்தை வியாசமகாமுனிவர் வியாசபகவானுக்கு ருஷ்டிசெய்தவகையே தேவரீர் அடியேங்கட்கு தயைசெய்தருளவேண்டுமென்னுங் கேட்கப் பேரவாவுடையவர்களாயிருக்கிறோம். எனக் கேட்க, ஸூத முனிவர் சொல்லத் தொடங்கினர்.

விலக்கற்கரிய சமுசார துக்கத்தினின்றும் விலகிய மகாமுனிவர்களே! சிவபெருமானுடைய கிரியாயோகத்தை வியாஸபகவானுக்கு ஸநத்குமார முனிவர் கூறியருளியவகையே சங்கிரகமாகச் சொல்லுகின்றேன்; கேட்பீர்களாக. ஒருகாலத்தில் வியாஸமுனிவர் ஸநத்குமாரரையடைந்து அவரது இருசரணாரவிந்தங்களையும் பணிந்து, ஸ்வாமீ! சிவபெருமானது கிரியாயோகத்தையும் அதனால் வரும் பலனையும் தேவதா *ந்யாசத்தையும் மானஸிக பூசையையும் பாஹ்யபூஜையையும் இவ்வகையெனத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டும். அன்றியும் பிரமசரிய மனத்தானும் புண்யகரமானவாக்குக்காயங்களானும் கிரியாயோகத்தைப்பெரியோர் அநுஷ்டித்தமுறைப்படி அநுஷ்டித்தவன் எவ்வகைப்பலனையடைந்து எவ்வகையாகச் சிவபதமடைவான். சிவருப்மாகிய இலிங்கத்தை விதிப்படி அபிஷேகித்தருச்சித்தவன் பெறும் பலனும் யாது? எவ்வெம்மலர்கள் சிவபெருமானுக்குப் பூஜாயோக்கியமும் எவ்வெம் மலர்கள் அயோக்கியமுமானவை? எவ்வெத்தூபங்கள் சிவார்ப்பணஞ் செய்யத்தக்கவை? எவ்வெவை விலக்கத்தக்கவை? ஒவ்வெக்கனிகள் சிவபெருமானுக்கு நிவேதிக்கத்தரும், எவ்வெவை நீக்கத்தரும்? எவ்வெவ் வாத்தியங்கள் சிவசந்நிதியில் வாசிக்கத்தக்கவை? எவ்வெவை நீக்கத்தக்கவை? நெய் பால்முதலியவற்றுல் சிவபெருமானே அபிஷேகித்தவன் யாது பலனே யடைவான்? சந்தனம் கஸ்தூரி முதலியவற்றை சிவபெருமானுக்கு உபலேபனே செய்தவன் பெறும்பயன் யாது? இன்னமுள்ள மற்றைய சிவபணிவிடைகளின் பலன் யாவை? இவற்றையும் அடியேனுக்குச் சொல்லியருளவேண்டுமென்று கேட்க, ஸநத்குமாரமுனிவர் சாற்றலாயினர்.

ஸத்யவதியின் புதல்வனே! வியாஸமுனிவனே! நீ யென்னைக் கேட்ட சிவபூஜாவிஷயங்களே யெல்லாந் தெளிவாகச் சொல்லுகின்றேன். முழுமனத்துடனே கேட்பாயாக: பரமாத்மாவாகிய பரசிவனிடத்திற்சித்தத்தைச் செலுத்தியிருப்பதே ஞானயோகம்: பரசிவத்தின் பாஹ்யமாகிய அர்ச்சாரூபத்தில் எப்பொழுதும் பூஜைமுதலிய உபசாரங்களைச்செய்வது கிரியாயோகம். இதுவே சிவபெருமானைத் தியானிப்பதற்கு முக்கியமான சாதனம். இஷ்டகாநியங்களைக்கருதிச்சிவாலயநிர்மாணமுதலியசிவபுண்ணியங்களைச் செய்தவர்கள் பெறும்பலனைச் சொல்லுகின்றேன். சிவபெருமானுக்குக் கருங்கல்லாலாவது மரத்தாலாவது பொன் வெள்ளிமுதலியலோகங்களாலாவது மண்ணுலாவது திருக்கோயில் கட்டுவித்தவன் நாடோறும் சிவயோகத்தால் அச்சிவனேவரனைப் பூஜிக்கிறவன் பெறும் பலனையுங்கூறி, தன் குலத்தில் பிறந்த பிதுர்க்களே தாழ்தலிலமுறைவரையிலும் என்றும் ஆகந்தமயமாகிய சிவலோகத்திற் செலுத்துவான். சிவாலயம் ஒன்று பெரிதாகவேனும் சிறிதாகவேனும் நிர்மாணஞ் செய்யவேண்டுமென்று ஒருவன் தன்மனத்தில் நினைத்தவுடனே, தான் செய்ஞனங்களிற்

---

* ந்யாஸம் - இருக்கச்செய்தல்.

செய்த பாபங்களினின்றும் புனிதமாவான். சர்வகர்த்தாவாகவுள்ள சிவபெருமானுக்கு ஆலயங்கட்டுவித்து அதிற் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தவன் சமஸ்தமான லௌகிக போகங்களையு மனுபவிப்பான். புண்ணிய ஸ்தலங்களில் சிவாலயப் பிரதிஷ்டை செய்வித்தவன் சமஸ்த லோகங்களினுஞ் சிறந்த முத்திலோகத்தையடைவான். கருங்கல்லாற் சிவாலயஞ் செய்வித்தவன் அக்கற்கள் ஒவ்வொன்றினுக்கும் ஒவ்வோராயிரவருஷஞ் சிவலோகத்தில் வசிப்பான். சிவபெருமானது அர்ச்சாரூபங்களாகிய இலிங்கமூர்த்தத்தைச் செய்வித்தவன் ஒருகாலத்தும் அழிவில்லாத சிவலோகத்தையடைந்து அறுபதினாயிர வருஷம் பலவித சுகங்களையு மனுபவித்து அப்படியே ஒவ்வோர் பதவியினும் அறுபதினாயிரவருஷம் வசித்திருப்பான். புண்ணியகரமான சிவலிங்கப் பிரதிஷ்டை மாத்திரம் செய்த பக்தனில் இறந்தபின்னரும் இறவாதவனுகவேயிருந்து, தன் வமிசத்தி லிறந்தவர்களையும் இனிப் பிறப்பவர்களையும் கற்பாந்தகாலவரையிற் புனிதர்களாகச் செய்ய வல்லவனுவான். சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று மனத்தில் நினைத்தவன் தன் பிதுர்க்களை யேட்டுத் தலைமுறை வரையிலுந் தன்னோடு சிவசாயுச்சியம்பெறச் செய்வான். சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தவனைக்கண்டு நாமும் இவ்வாறு சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தாற் சற்கதியையடையலாமென்று நினைத்தவன் அப்பொழுதே பரம புண்ணியனுகித் தான் முன்செய்த பாவங்களையெல்லா மொழித்து முக்திக்கு அருகனுவான்.

முநிவர்களே! பூர்வத்தில் பிரமதேவன் இயமனுக்கு அதிபத்தியமும் பாசமுந் தண்டமும் கிங்கரர்களோடு கொடுத்து, நீ உலகத்திற் சஞ்சரித்து தர்மாதர்மங்களை விசாரணைசெய்யவேண்டுமென்று கட்டளையிட்டுச் சொல்லத்தொடங்கினர். பிறதேவர்களைப் பணியாது தேவ தேவனுகிய சிவபகவானையே பரம்பொருளென்றுணர்ந்து அப்பெருமானையே சரணகதியென்று உறுதிகொண்டிருக்குஞ் சிவபக்தர்களையும், உலகத்தில்மகேசுவரனை மனத்திற் தியானஞ்செய்துகொண்டிருப்பவர்களையும், நித்திரை செய்கையிலும், நடக்கையிலும், இருக்கையிலும் நிலமும் பகலும் யாது செய்கையிலும் சிவத்தான மகாதேவா, சிவா! மஹாதேவா! சந்திரசேகரா! நீலகண்டா! சங்கரா! மகேஸ்வரா! ஜகத்பதி! சச்சிதானந்தஸ்வரூபா! என்று பூஜை செய்பவர்களையும், சிவபெருமானை நித்திய நைமித்திக பூஜைகளால் சந்தோஷிக்கச் செய்பவர்களையும், சிவபெருமானைப் புஷ்ப தூப தீப முதலியவற்றால் ஆராதிப்பவர்களையும், சிவாலயத்தைஜீரணோத்தாரணஞ் செய்பவர்களையும், சிவாலயத்தைக் காலை மாலையில் திருவலகிட்டுச் சுத்தஞ்செய்பவர்களையும் அவர்கள் முன்னோரை முன்னு தலைமுறைதனையும், சிவாலயத்தைக் கட்டுவிப்போர்களையும் அவர்கள் வமிசத்திற் பிறக்கும் தாயுதலைமுறைகளையும், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தவர்களையும் அவர்கள் வமிசமுறையிற் பிறக்கும் ஆயுதபுருஷர்களையும், நீங்கள் அடையப்படாது. அவர்கள் சிவகணங்கட்குச் சமானமானவர்கள். அவர்

களை நீங்கள் தண்டிக்க முடியாது என்று பிரமதேவன்கூற, இயமன் அதற்கிணங்கித் தன் சேவகர்களாகிய கிங்கரர்களுக்கு நாடோறும் இவ்விஷயங்களைச் சொல்லிக் கியாபகப் படுத்திக்கொண்டிருந்தனன்.

சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்து முறைப்படி பூஜை செய்பவன் தன் மனத்தில் விரும்பிய கோரிக்கைகளையெல்லாம் சந்தேகமின்றி சித்திக்கப்பெறுவான். தேவர்களாலருச்சித்தற்குரிய அர்ச்சாரூபமான சிவலிங்கத்தை, தேன் பால் நெய் தயிர் முதலியவற்றால் அபிஷேகித்தவன் ஆயிரம் பசுக்களை அருமறையாளர்க்குத் தானமளித்தவன் பெறும் பலனையும், வேதபூர்ணர்களானவேதியருக்குப்பசுநெய்யைத்தானமளித்தவன் பெறும் பலனையும் பெறுவான். ஆடகப் பிரமாணமான நெய்யினால் அகாதியாகவுள்ள சிவலிங்கத்திற்கு அபிஷேகித்தவன் சத்த சமுத்திரங்களாற் குழ்ந்த உலக முழுவதையுந் தானஞ்செய்தவன் பெறும் பலனையடைவான். கிருஷ்ண சதுர்த்தசியில் சிவலிங்கத்திற்கு நெய்யினால் அபிஷேகித்தவன் தான்செய்த பாபங்களையெல்லாம் விலக்குவான். பூரண அமாவாசைகளில் அர்ச்சாரூபமான சிவலிங்கத்தைப் பிரயத்தனபூர்வமாகப் பூசித்தவன் சர்வ பாபங்களினின்றும் நீக்கப்படுவான். ஞானத்தாலாவது, அஞ்ஞானத்தாலாவது ஒருவன் செய்த பாபங்கள் சிவபெருமானுக்குப் பிரதோஷகாலத்தில் நெய்யபிஷேகஞ் செய்த தக்ஷணமே அவனைவிட்டகன்றுபோம். தேவர்களிற் சிறந்தவன் சிவபெருமான், * ஹவ்யங்களிற் சிறந்தது நெய். இச்சர்வேசுவர சிருதசம்பந்தம் [சர்வேசுரனை நெய்யினுலபிடேகித்தல்] பாபங்களை வேரோடறுக்கத்தக்கது. சிவபெருமானுக்குப் பசுவின்பாலால் விசேஷமாக அபிஷேகித்தவன் இவ்வுலகத்தை நீங்குகையில் பாலே ஜலமாகப் பெருக்கெடுக்கும் நதியையும், பாலின் சம்பந்தமான சேற்றையுமுடைய வழியாகச் சிவலோகத்தையடைந்து சந்தோஷமும் சுகமும் ஸ்வஸ்திதமும் ரோகமின்மையும் நல்ல வுருவமும்பெற்று வாழ்ந்திருப்பார்கள். நெய்முதலிய பொருள்கள் யாவும் பாலினுலுண்டாகுமாறு, பெரும் போகங்களெல்லாம் சிவார்ப்பணமாக அபிடேகித்த பாலினுலேயே யுண்டாகும். நேசபுஷ்டியை யுண்டுசெய்யும் பாலினால் சிவலிங்கத்திற்கு அபிடேகித்தவன் திவ்வியமான ஞானிருத்தியடைவான். சிவபெருமான் கூரபிஷேகத்தாற் களிகூர்ந்து, அவ்வாறு அபிஷேகித்தவனுக்கு நவக்கிரகங்களின் அநுகூலமும் புஷ்டியும் யாவரிடத்திலுங் கிருபையுமுண்டாகும். நெய்யும் பாலும் சிவபெருமானுக்கு அபிடேகித்தவுடன் சிவபெருமான் பிரசன்னமாவர். சிவபெருமானை யெப்பொழுதும் நெய்யினாலும் பாலினாலும் அபிஷேகித்தவனுக்கு உலகில் யாவும் நன்மையாகவே யிருக்கும். இதற்குத் திருஷ்டாந்தமாக ஓர் பூர்வ சரிதஞ் சொல்லுகின்றேன்.

---

* ஹவ்யம் - தேவர்கட்காக ஹோமஞ்செய்யுந் திரவியம்.

பூர்வத்தில், பூஷ்ணன் என்பவனும் அவனது அதிரூபவதியானசுமதி என்னும் யௌவனமுடைய மனைவியும் சுவர்க்கலோகத்தை யடைந்து பல விதமாகக் கிரீடித்துச் சுகமனுபவித்துக்கொண்டிருக்கையில், கௌதமியென் பாள் கண்டு ஆச்சரியமுற்றுச் சுமதியை நோக்கி, சுமதி! இச் சொர்க்க லோகத்தில் இந்திராதிதேவர்கள் எண்ணிறந்தவர்களிருக்கின்றனர். அவர் களுக்கும், உனக்குள்ள காந்தியும் உன்னிடம்போன்ற தேகமனமும் அதிக அழகும், அருவிலைப்பணிகளும், பட்டாடைகளுங்கிடையா. இவை யாவற்றி னும் இந்திராதி தேவர்களைக்காட்டினும் நீங்களிருவரும் மேம்பட்டிருக் கிறீர்கள். உங்கள் மனவொற்றுமையும் அவர்களுக்கில்லை. நீ இவ்வகைய சிறப்பினையெல்லாம் ஒருங்கே யடைந்து கணவனுடன் விளையாடிக்கொண் டிருக்கின்றனையே. இஃதனைக்குந் தவத்தாற் கைகூடியதா? தானபலத் தாற் கிடைத்ததா? யாகாதி கிருத்தியங்களாற் சம்பவித்ததா? இதனை முழுதுஞ் சொல்லவேண்டும் எனக்கேட்க, சுமதியானவள் சந்தோஷித்துச் சொல்லலாயினள்: என் பர்த்தாவின் முதாதைகள் யாவரும் குல பூர்வமாகச் சிவபெருமானை யாராதித்துவந்து கடைசியில் என் கணவன் அத்தச் சாம்பவமூர்த்தியைக்குறித்து அநேக யாகங்களைச்செய்ய, அந்த யாகத்தால், யாகபதியாகிய சங்கரபகவான் திருவுளங்களித்து அதுக்கி கித்தமையின், சுவர்க்கப்பிராப்திக்குக் காரணமாயிற்று. அந்த யாகத்தில் தீர்த்தோத்தகல்நானமும் கிருதஸ்நானமும் கணக்கின்றிச் செய்வித்தமை யின் எங்களிருவருக்கும் திவ்வியமான தேக காந்தியும், மனவொற்றுமை யும், மிருதுத்தன்மையும், சுகமும், யாவருக்கும் விருப்பமும் உண்டாயின. இவை யாவும் நெய்யினுலபிடேகித்த பலத்தினுலேயே யிடைத்தன. அந்த யாகத்தில் மூனுபீஷ்டமான விலையுயர்ந்தவஸ்திரங்களையும் நவரத்ன கசிதமான பூஷணங்களையும் சந்தனமுதலியபரிமளவஸ்துக்களையும் அநேக விதம்பூனமலர்மாலைகளையும் சிவார்ப்பணமாக்கினேமாதலின் அச்சிவார்ப் பணஞ் செய்தவை யாவும் இப்பொழுது எங்களுக்குச் சொர்க்கலோகத் தில் உண்டாயிருக்கின்றன. சிவபெருமானை காலுவித நிவேதனங்களால் திருப்தி செய்வித்தோமாதலின் நாங்கள் இவ்விடத்தில் எப்பொழுதும் திருப்தியாகவே யிருக்கிறோம். சுவர்க்க காமியாகிய என் கணவன் சிவார்ச் சனைசெய்கையில் பானும் அவருடனிருந்து அருச்சித்தமையின் எனக்கு அற்புதமான புஷ்டியுண்டாயிருக்கிறது. மன வாக்கு காயங்களால் நீவி வெவ் கோரிக்கையோடி ஒருவன் சிவபெருமானது அருச்சாரூபமான இலிங்கத்தைப் பூசித்தால் அவன் அவ்வவ் கோரிக்கையை விரும்பிய வகையே யடைவானென்பதிற் சிறிதுஞ் சந்தேகமேயில்லையென்று கௌ தமியை நோக்கிச் சுமதி சொல்லினள். ஆனபடியால் ஒருவன் சிவபெரு மானைப் பக்திபூர்வமாக அருச்சிப்பானுயின், அவன் தேவர்களுக்குந் துர் லபமான போகபாக்கியங்களை யநுபவிப்பான். சந்தனம் குங்குமப்பூ அகரு பச்சைக்கர்ப்பூரம் முதலிய சுகந்த திரவியங்களால் சிவலிங்கத்தை * உப லேபனஞ்செய்தவன் அப்பொழுதே சுபகரமான வரங்களைப் பெறுவான்.

* உபலேபனம் - பூசுதல்.

சிவபெருமானுக்குக் கருஞ்சந்தனமுங் கருந்தூபமும் விதியோகித்தவன் பூஜியாவான். நல்ல சுகந்தமுடைய வேதோக்தமான சாம்பிராணி முத லியவற்றினை நெய் கூட்டித் தூபங்கொடுத்தவன் தனக்குத் துஷ்டி புஷ்டிக ளுண்டாகப்பெறுவான்.

மனத்திற்கு ரம்மியமில்லாத மலர்மாலைகளைச் சிவபெருமானுக் குச் சாத்தப்படாது. மனோகரமான மலர்களாற்றொடுத்த மாலைகளையே தேவதேவனுக்குச் சாத்தலாம். சிவபெருமானுக்கு விருப்பத்தைத் தரத் தக்க மலர்கள்- மிருதுவானதும் மணமுடையதுமான எல்லா மலர்களும், தாமரைமலரும், உலர்ந்திருப்பினும் வில்வபத்திரமும், நீலோற்பலமும், ஜாதிபுஷ்பமும், மல்லிகையும், பாடலமும், கரவீரமும், ஆத்தியும், கொன் றையும், கோங்கும், சதபத்திரமும், துளசியும், அகத்திப்பூவும், முல்லையும், இருவாகியும், பலாசமுமாகும். ஆதலின் இவ்வகை மலர்களாலேயே சிவபெருமானைப் பூஜிக்கவேண்டும். இவையேயன்றி மனத்திற்குங் கண் ணிற்கும் ரம்மியமான மலர்கள் யாவும் சிவாராதனைக்குத் தக்கவையாம். செவ்வந்தி மலர்களும் கறுத்த மலர்களும் சிவலிங்கரூபத்தில் பூஷணார்த்த மாகச் சமர்ப்பிக்கவேண்டும். சிவபெருமானைச் செந்நிறத்த மலர்களால் நாடோறும் பூஜிப்பவன் சித்தர் வித்தியாதரர் அப்சரச கணங்கள் முதலா னருடன் அநேககாலம் வாழ்ந்திருந்து சந்தோஷமடைவான். முன்னியுடை யனும் உக்கிரகந்தமுடையதுமான ஊமத்தைமுதலிய மலர்களாற் சிவலிங் கத்தை யருச்சித்தவன் சிவகணங்கட்குப் பிரீதிவானுவான். மலர்கள் கிடைக்காவிடின் ப்ருங்கராஜபத்ரம் [கரசாரங்கணி], அறுகம்புல், சமீபத்தி ரம், தமாலம் முதலிய பத்திரங்களாற் பூஜைசெய்யலாம். இவ்வாறு நித்த மும், பரமகாரணனை சிவபெருமானை இலிங்கமூர்த்தத்திற் பூஜிக்கிறவன் அப்சரச கணங்களாற் பூஜிக்கப்பட்டுச் சிவலோகத்தில் வாழ்ந்திருப்பான். அவனுக்கொருகாலத்தில் உலகத்திலே ஜனனமுண்டாயினும், பேரரச லுய்ப் பெருஞ் செல்வத்துடன் ஏகசக்ராதிபதியாயிருந்து நிரமமாக மோ க்ஷமுறுவான். தாழைமலர்களாற் சிவபிரானை யர்ச்சிக்கப்படாது. மரு தோன்றிமலர்களாற்பூசித்தவன் மிலேச்சராசனுவான். சுகந்தமான மலர்க ளாலும் சுகந்த கர்ப்பூர சந்தனங்களாலும் பரிசுத்தமான ஜலத்தினுலும் சூர்வசுரனுகிய சிவபெருமானை யபிஷேகித்து, பட்டினுலாவது பருத்தி யினுலாவது செய்யப்பட்டுள்ள வஸ்திரத்தைத்தரித்து மனோகரமான உருத் யுள்ள விரும்பத்தக்க பகியங்களையும் சிரேஷ்டமான பலவித பழங்களை யும் சுவர்ணபாத்திரத்தில் வைத்து நிவேதித்து, சுவர்ணம் நவரத்தினங்கள் முதலியவற்றையுஞ் சமர்ப்பிக்கவேண்டியது. பின்னர் மகா யோகியும் சதாசார ஸம்பன்னனுமான பிராமணனைச் சிவபெருமானுகவே பாவித்து "ஸர்வாயவ்யக்த ரூபாய் தாம்ரா தஸ்மை" என்று சொல்லிக்கொண்டு, சிவார்ப்பணஞ் செய்த பொருள்களிற் சிலவற்றை அவ்வேதியனுக்குக் கொடுக்கவேண்டும். சங்கிராந்தி - விஷுவத்புண்யகாலம் - வ்யதிபாதம்-

தகஷிணாயண வுத்தராயணங்கள் - கிரஹணகாலம் - பூரணை - அமாவாஸை - சதுர்த்தசி - அஷ்டமி முதலான புண்ணியகாலங்களில் செய்யப்படும் பூஜை கமித்திக பூஜைபாதலின், அக்காலங்களில் சிவலிங்கார்ச்சனை செய்தவர்கள் நித்ய பூஜை செய்வோரைக்காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமான பலனை யடைவார்கள். இது *சிவபெருமானாலேயே கூறப்பட்டவை. இவற்றை உள்ளபடியே உனக்குச் சொன்னேன் என்று ஸநத்குமார முனிவர் வியாஸபகவானுக்குக் கூறினரென்று ஸூதமுனிவர் நைமிசாரண்ய வாஸிகளுக்குரைத்தனர்.

சிவலிங்கபூஜாபலனுரைத்தது

முற்றிற்று.

பதினேழாவது

சிவனடியர்சிறப்பும்அடியவர்பூஜாபலனுமுரைத்தஅத்தியாயம்.

ஸௌநகாதி முனிவர்களே! வியாஸபகவான் ஸநத்குமார முனிவரைப் பணிந்து, மஹருஷியே! சிவபெருமானுக்குப் பரமபக்தராயிருந்து வேதாகமங்களில் விதித்த முறைப்படி பக்திசெய்யுஞ் சிவபக்தர்களைப்

* மேருபர்வதத்தின் மேலுள்ள சதசிருங்கநகரியின் நடுவில் பிரமதேவனது மநோவதி நகரத்தில் ஸநத்குமாரமுனிவர் அநேக இருடியர் புடைசூழ்ந்திருப்ப, புலித்தோலாசனத்தமர்ந்து காயத்ரி மந்திரத்தாலும் பஞ்சப்ரம மந்திரத்தாலும் பரமசிவனைப் பலகாலந் துதித்து அசைவற்ற சிவயோகத்திலமர்ந்து ஆனந்தபரவசராய் அநுபூதியில்கொண்டிருக்கையில், சிவபெருமான் அம்முனிவருக்குத் திருவருள்புரியத் திருவுள்ளங்கொண்டு பார்ப்பதிசமேதராய்த்தருமவிடை யிவர்ந்து கந்தர்வ யக்ஷ சித்த முநிகணங்கள் துதிசெய்யவும், தும்புரு நாரதர் வீணைவாசிக்கவும், ஆகாயவீதியிற் காட்சிதந்தருள, ஸநத்குமாரர் தாம்கொண்ட சிவயோகத்தால் அதனை யறியாராகி, யெழுந்திராதிருக்க, சிவபெருமான் இவன் என்னையே தியானித்துக்கொண்டிருக்கவென் றுசீர்வதித்துத் திருக்கைலைசேர்ந்தனர். அப்பொழுது அருகிருந்த நாரதமுனிவர் வெகுண்டு, இம்முனிவன் தன்னைச் சமீபித்தி சிவபிரானைச் சேவைசெய்யாது ஒட்டகம் போல விருந்தமையின் ஒட்டகமாகுக வென்று சபிக்க, ஸநத்குமாரர் ஒட்டகமாகி உலகெங்குந் திரிந்து கல்வினைப்பயனால் காஞ்சிநகரை யடைந்து அங்கு அருந்தவஞ் செய்துகொண்டிருந்த தன் தந்தையாகிய பிரமதேவனைக் காண, பிரமன் மனம் வருந்தி தனது ஞானத்தால் நிகழ்ந்தவற்றை யறிந்து, கச்சபேசுவருடைய சன்னிதானத்தையடைந்து பலவிதமாகத் துதிக்க, சிவபெருமான் கருணைகொண்டு பிரசன்னராக, பிரமன் தன் மைந்தனுக்குற்ற விடுக்கணை மாற்றியருளவேண்டுமென, பெருமான் அதுகேட்டிலரும். அவன் சதசிருங்கமடைகவென் றநுக்ரஹித்தனரினர். பின்னர் பிரமதேவர் திருநந்திதேவரைப் பலவகையாகத் துதித்தனர். நந்திபகவான் அவர் தோத்திரத்திற்சென்று ஸநத்குமாரமுனிவரைப் பழையவுருவமெய்தக் கடாக்ஷித்துத் தமது மாணாக்கராக்கிக்கொண்டு, சிவபெருமான் தமக்குபதேசித்த வேதாகம சாஸ்த்ரங்களெல்லாம் அவருக்குப் பயிற்றியருளினர். அதனைச் சிவபெருமானுற் கூறப்பட்ட வகையே கூறுகின்றேனென்றார்.

பூசைசெய்தவன் யாது பலனை யடைவானென்பதைச் சங்கிரகமாக எனக்குச் சொல்லவேண்டும் எனக்கேட்க, ஸநத்குமாரமுனிவர் சொல்லுகின்றார்: வியாஸமுனிவனே! எப்பொழுதுஞ் சிவபெருமானிடத்திலேயே தமது மனவாக்கு காயங்களை யொப்புவித்த சிவபக்தர்களை அச்சிவபெருமானுக்கு வே பாவித்துப் பூஜித்தவன் எண்ணிறந்த போகங்களை யநுபவித்தபின் முடிவிற் சிவகடாக்ஷத்தாற் கைலாயபதவியை யடைவான். ஆதலின்சிறந்த போகங்களை யநுபவிக்கவேண்டுமென்று கருதுகிறவன் சிவபக்தருக்குத் தன் சக்திக்கியன்றவரையில் வஞ்சனையின்றி, வஸ்திரம் ஆபரணம் அன்னம் முதலியவற்றைத் தானமாகக் கொடுத்துப் பக்தியோடு பூஜிக்கக்கடவன். சிவபக்தனுக்கு வஞ்சனையின்றித் தன்னாலியன்றவரையில் விதிப்படி பணிவிடைசெய்தவன் பிரபுவாயினும் ஏழையாயினும் அவன் அடையும் பலனைச் சொல்லுகின்றேன்: அவன் உயிர்நீங்கினவுடனே சூரியகிரணங்களைப் போன்ற வொளியுடைய திவ்ய விமானத்திலேறி, தன் முன்னோரில் ஏழு தலைமுறைவரையிலும் அதோகதியி லிருப்போரையும் உடன்கொண்டு சிவமந்திரத்தை யடைந்து மநோகரமான போகங்களை யநுபவித்து, தேவமாநகணிதமான அநேக ஆயிரவருஷங்கள் பலராற் சேவிக்கப்பட்டுப் பின்னர் விஷ்ணுபதவியை யடைந்து அங்குள்ள போகங்களை யநுபவித்து மேற்கூறிய காலவளவு அவ்விடத்துள்ளவராற் சேவிக்கப்பட்டுப்பிரமலோகத்தை யடைந்து அங்குள்ள விமலமான ஸ்த்ரீமுதலிய போகங்களை மேற்கூறிய வளவுகாலம் அநுபவித்தமுறையே இந்திரலோகம் கந்தர்வலோகம் யக்ஷலோகம் இவற்றை யடைந்து ஆங்காங்குள்ள அளவிறந்தபோகங்களை யநுபவித்து மீண்டும் பூலோகத்திற் சிரேஷ்டமான வேதியகுலத்தில், தான் முன்னடைந்துள்ள விசேஷ ஞானகுணமுடையவனுய்த் தோன்றி, ஜ்மாக்ஷர புண்ணியலக்ஷத்தாற் சற்குருவை யுபாசித்து அக்குருவருளால் அகண்டமான சிவஞானத்தை யடைந்து யோகோபாசனை செய்து, சமுசாரபந்தத்தினின்றும் விலகிச் சிவசாயுச்சியத்தை யடைவான்.

வியாஸமுனிவனே! யாகம் தர்மயாகம் ஞானயாகமென்றிருவகைத்து. அதில் கர்மயாகமானது பலவிதமான தானம் பூஜை அக்னிகாரிய முதலியவற்றுற் பிரசித்தமாயுள்ளது. தியானம் என்பது சர்வேசுரனை யடைய வேண்டுமென்னுங் கொள்கையோடுஞ் சாந்த்ராயணசரணமும், சுவாத்தியாயமும், ஜபமுமென மூவகையாகப் பிரசித்தி பெற்றிருக்கின்றது. இதில் ஜபமென்பது எப்பொழுதும் அடிக்கடி சிவசிந்தனையுண்டாயிருத்தலின் அது ஞானயாகமெனப் பெயருற்றது. அந்த ஞானயாகம் அத்தியாபனம், அத்தியயனம், வியாக்கியானம், சிரவணம், சிந்தித்தலென ஐவகைப்படும். இவை ஐந்தனுள், முதலாகிய அத்தியாபனத்தைக்காட்டிலும் அத்தியயனமும், அத்தியயனத்தைக்காட்டிலும் வியாக்கியானமும், வியாக்கியானத்தைக்காட்டிலும் சிரவணமும், சிரவணத்தைக்காட்டிலும் சிந்தித்தலும் ஒன்றற்கொன்று அதிகமாகச்சொல்லப்பட்டிருத்தலின் ஞான

யாகத்தின் ஜீவகையிற்சிக்தித்தலேசிவகடாக்ஷத்தால் முக்தியைக் கொடுக்கத்தக்கது. ஞானத்தையின்றித் தியானங் கைகூடாது. யோகமார்க்கத்தாலேயே ஞானம் பெறப்படும். ஆதலின் ஞானமுந் தியானமும் உடைத்தாயிருப்பவன் சமுசாராசாகரத்தை நீந்த வல்லவனுவான். ஞானமென்றது தாமசகுணமின்மையும், விவகாரமற்ற மனமும், அநித்தியப்பொருள்களில் அவாவின்மையுமுடையது. அவ்வகைய ஞானமும் எப்பொழுதும் யோகசாதனமுடைய பரிபூரண விரக்தனுக்கே யுண்டாகும். அந்த ஞானமே முக்திமார்க்கத்தைக் கொடுக்கவல்லது. ஒருவர் சொல்வதைக்கேட்டு உண்டான ஞானமானது விகல்ப புத்தியை யுண்டுசெய்து இராகத்துவேஷாதிகளை யுடைத்தாகிச் சஞ்சலமாமாதலின் மோகூத்தைக் கொடுக்கமாட்டாது. யோகமார்க்கத்தால் சுத்தமாகவும் இராகத் துவேஷாதிகளின்றி விளங்கும் ஞானத்தைப் பண்டிதனுனவன் சிறிதுசிறிதாக அப்பியசிக்க வேண்டும். முன் கூறிய கேள்வியால் வரும் ஞானமானது ஆரம்பத்திலும் சிரவணத்திலும் அப்பியாசத்திலும் நிஷ்டையிலும் இராகத்துவேஷாதிகளாற் பலவகையாகிப் பரிசுத்தமான ஞானமுண்டாவதற்கு வழியாகும்; பாத்திரசுத்தஞ்செய்யவேண்டினோர் முதலில் அழுக்குஜலத்தாலும், பின்னர் சுத்தஜலத்தாலுங் கழுவுகையில் முதலிற் கழுவிய நீரால்சிறிது அழுக்குப்போமாறு பயன் சிறிது தருமெனக் கொள்ளவேண்டும். புழுதியால் மறைக்கப்பட்ட ஆகாயமானது முறையே சிறிது சிறிதாகப் புலப்படுமாறு விகல்ப ஞானமானது சிறிதாகத் தோன்றி இறுதியில் பரிசுத்தஞானத்தை யுண்டாக்கும். அலைகளாற் கலக்கப்பட்ட சமுத்திரமானது அசைவற்று நின்றுற்போல விஷயவாதனையால் அலைத்துகொண்டிருந்த மனமானது சலனமற்றிருப்பதே ஞானமெனப்படும். மற்றவை அஞ்ஞானம். இராகத்துவேஷாதிகளில்லாததும், பாவனமயமுமாகிய சிரேஷ்டமான ஞானமே முக்தியையளிக்கவல்லது. அஞ்ஞானமாகிய பாசத்தாற் கட்டப்பட்டுள்ள புருஷன் அமுக்தனெனப்படுவானுயினும், ஞானத்தால் அஞ்ஞானத்தை யகற்றியபின்னர் அப்புருஷனே முக்தனென்று கூறப்படுவன். சமுசாரத்திற்குக் காரணமாகவுள்ளது அஞ்ஞானம். அஞ்ஞானியாயிவனே சமுசாரச்சேற்றி லழுந்திக்கிடப்பான். அகண்ட தேஜஸாய், தூய நிசிக்குமாறு ஞானத்தால் அஞ்ஞானம் ஒழியும். அஞ்ஞானமுள்ளவையில் இராகத்துவேஷாதிகளால் தர்மாதர்மங்கள் உண்டாகின்றன. தர்மாதர்மங்களுள்ளவையில் அவனுக்குச் சரீரமுண்டாகும். சரீரமுள்ளவையில் கிலேசங்களாற் பாதிக்கப்படுவான். கிலேசத்தை யொழிப்பதற்காக மீண்டும் பிறவியடையாத வுபாயத்தைத் தேடவேண்டியது.

அஃதெவ்வாறெனில், தத்துவஞான மடைந்தாலன்றி அஞ்ஞானம் நசிக்கமாட்டாது. அஞ்ஞான நாசமுண்டானகூணத்திலேயே இராகத்வேஷாதிகள் உண்டாகா. இராகத் துவேஷாதிக ளொழிந்தவுடனே புண்ணிய பாப கூயமுளவாகும். புண்ணிய பாப பரிகூயத்தாற் பிறவியில்லையாகும். பிறவியில்லாதபொழுது கிலேசமுதலியன உண்டாவதற்கிடமில்லை. கிலேசங்களற்றவிடத்தில் முக்தனென்று சொல்லப்படுவான். ஆதலின் மாதவருக்குப் பலவித துக்கங்களும் அஞ்ஞானத்தாலேயே தோன்றுகின்றன. அந்த அஞ்ஞானத்தை ஞானத்தாலின்றிக் கர்மாதிகளால் நசிக்கச்செய்யமுடியாது. ஞானமொன்றனலன்றி மற்றெந்தச்சு புண்ணியபாப பரிகூயமுண்டாகாது. ஆதலின் மோகூத்தை யடைய வேண்டியவன் ஞானத்தையே யடையவேண்டும். வெண்கலம் புளியினற் புனிதமாகுமாறு ஒருவன் மனம் ஞானத்தாற் புனிதமாகும். ஞானமென்னும் அமிர்த ரசத்தை ஒருமுறை பானஞ்செய்தவன் எல்லாக் காரியங்களையும் விடுத்து மீண்டும் அதனையே பானஞ்செய்ய எப்பொழுதும் விரும்புவான். ஒருமுறையேனும் ஞானமிருத ரசபானஞ் செய்யாதவன் அதன் தன்மையை யுணராகுகி மற்ற விஷயங்களிலேயே மனத்தைச் செலுத்திநிற்பான். ஞானமிருத்தால் திருப்தியடைந்த கிருத கிருத்தியனை சிவயோகி உலகத்திற் செய்யவேண்டிய காரியம் ஒன்றுமிராது. அப்படிச் செய்யத்தக்கதொன் மிருக்கும்பக்ஷத்தில் அவன் உண்மையான தத்துவஞானியல்லன். இகலோக பரலோகங்களில் அவன் செய்தற்குரிய காரியஞ் சிறிதுமில்லையாதலின், அவன் இவைகளுக்கிடையே முக்த தசையையடைந்து பரிபூரணஞ்ஞ விளங்குவான். ஞானத்தைக்காட்டிலும் பரிசுத்தமானதும் பரிசுத்தமாக்குவதும் பிறிதொன்றுமில்லை. அதனைப்படிப்படியாக அப்பியசித்தபக்ஷத்தில் ஆத்மசொரூபம் நன்கு விளங்கும். விசுவாசாரணங்கள் தானங்கள் தபசுகள் யாகங்கள் ஸந்தியாசமுதலிய அச்சிரமதருமங்கள் தீர்த்தயாத்திரைகள் முதலிய யாவுஞ்சுவர்க்கபதவியையளிக்க உண்டுசெய்ய வல்லவையேயன்றிப் பிறவியை யொழிக்கவல்லவையன்று. சாந்தியை யளிக்கும் சிறந்த ஞானமொன்றே புனராஜன்ம நாசஞ்செய்ய வல்லது. எப்பொழுதும் இந்திரியநிக்கிரகமும் ஒரே மனதும் மகருஷிகளாற் கூறப்பட்ட புராண தர்மநிரவணமும் படனமும் உண்டாயிருக்கும் பக்ஷத்திற் பாபபுண்யமுண்டாகி அவ்வகைய ஞானம் தோன்றி அதனால் முக்தி கைகூடுகின்றது. யாகஞ்செய்தவன் தேவபோகங்களை யடைவான். தானஞ்செய்தவன் போகபதவியை யடைவான். தானஞ்செய்தவன் பலவித போகங்களை யடைவான். ஞானப்பியாசஞ் செய்தவன் மோகூத்தையடைவான். அஞ்ஞானி புண்ணியபாபங்களால் துன்புறுவான். ஞானியோ தன் ஞானமாகியகத்தியரீல், தன்னை ஜன்மத்திற்கிழுக்கும் புண்ணியபாபங்களாகிய சூத்திரத்தை யறுத்து, பரம்பொருளாகிய சிவத்தை யடைவான். ஞானிகளுக்குச் சுபாசுப கர்மங்களாற் பந்தமுண்டாயின், விலக்கியிற்றூற் பந்திக்கப்பட்ட அவர்களுக்கு எவ்வாறு பரமுக்தி கைகூடுமென்பதாயிற் சொல்லுகின்றேன். சுபாசுப கர்மங்கள் தேகமுள்ளவரையில் இலோகத்திலாவது பரலோகத்திலாவது அநுபவித்தேதீரவேண்டும். தர்மாதர்ம பரிகூயத்தால் முக்தி கைகூடுமென்றதால், தர்மத்தைச் செய்யாமலும் அதர்மத்தைச் செய்யாமலுமுள்ளவன் முக்திபெறுவானெனின் பெற

மாட்டான். எவ்வாறெனில் தர்மஞ் செய்யாதபொழுது அதர்மஞ் சித்தித்து விச்சலத்துவமுண்டாதாது. அதர்மஞ் செய்யாதபொழுது தர்மமுங்கைகூடாது. ஆதலால் தர்மாதர்மங்களேப் பயன் விரும்பாது செய்து அதனால் வினையும் புண்ணியபாபங்களே ஞானமாகிய அரியினால் நீக்கிமுக்தியடையவேண்டும்.

வியாளமுநிவனே! அக்கினியானது உலர்ந்த விறகைக் தகிக்குமாறு, ஞானமென்னுந் தியானது சுபாசுபங்களாலுண்டான தர்மாதர்மங்களாகிய விறகினைத் தகித்துவிடுகின்றது. மணிமந்திரௌஷதங்களினே யுடையவன் பாம்பொடு பழகியிருப்பினும் விஷபாதை யடையாததுபோல, ஞானமுடையவன் இந்திரியங்களாகிய பாம்புகளுடன் கூடியிருப்பினும் அவற்றால் ஒரு துன்பமுமடையான். மந்திரௌஷதியுடையவன் விஷபானஞ்செய்யினுந் துன்படையான்போல ஞானமுடையவனேப் பாபங்கள் துன்புறுத்தமாட்டா. ஞானத்தைப்போலவேதியானமும்விளங்கும். அவையிரண்டும் சமானமாக வுள்ளவை. ஞானத்தியானங்களேயுடைய முநிவன் சௌக்கியமடைந்து ஆயுளிறுதியில் மோக்ஷத்தை யடைவான். தியானத்தால் அகண்டைகவரியமும், ஐசுவரியத்தால் உத்தமமான சுகமுமுண்டாகும். பின்னர் ஞானத்தால் அந்தச் சுகத்தை வெறுத்துப் பிறவியை யொழித்து முக்தியை யடைவான். உத்தோதி யுபாசனைகள்-யாகதானாதி அநுஷ்டானங்கள் தியான சமாதி முதலியவற்றால், உண்டாக்கத்தக்க ஞானமானது சித்தமும் சுத்தமும் சூக்குமமும் பிரசன்னமும் தோஷரகிதமும் சிரேஷ்டமும் முத்திக்கேதுவுமானதாகும். தியானயாகமே பிற யாகங்களைப்பார்க்கிலுஞ் சிறந்ததென்று கொள்ளவேண்டும். அந்தர்யோகமான இந்தத் தியானயாகத்தால் எப்பொழுதும் சிவபெருமானேப் பூஜை செய்பவன் அடைதற்கரிய உயர் கதியையடைவான். இந்திரியங்களே யடக்கி மனத்தைச் சிவபெருமானிடத்திலிருத்தி, பத்துத் திசைகளிலும் நடுவிலும் இன்னும் பிற விடங்களிலும் அச்சிவபிரானே யிருக்கின்றார் என்று தியானிப்பவனேப் பரமயோகியென் றுணரவேண்டும். கர்மயாகத்தினுந் தபோயாகம் பத்துப் பங்கு உயர்ந்தது. தபோயாகத்தைக் காட்டிலுந் தியானயாகம் நூறுபங்கு உயர்ந்தது. ஞானத்தியானங்களிரண்டுமும் சூக்குமமான சிவயோகமேயிறந்த மஹாயாகமாம்.

சிவபூஜை செய்தவன் அகண்டமான பிரபுல ராஜபோகமும், அக்கினிகாரியஞ் செய்தவன் சம்பத்தும், ஜபஞ்செய்தவன் பாபநிவாரணமும், ஞானத்தியானங்கள் செய்தவன் முக்தியும் பெறுவான். பாபசூயஞ் செய்தவனுக்கே ஞானத்தியானங்களில் மனஞ்செல்லும். ஒருகோடி வருஷப் பிரயத்தனத்தால் யோகசித்தியும், அரைக்கோடி வருஷப் பிரயத்தனத்தால் அக்கினி காரியசித்தியும், காற்கோடி வருஷப் பிரயத்தனத்தால் புண்ணியஸ்தலவாசமும் புண்ணிய தீர்த்தஸ்நானமுங் கைகூடும். அக்கினிகாரியஞ் செய்பவனுக்குப் பகவான் அக்கினியிலும், பண்டிதர்

களுக்கு அவர்கள் இதயத்திலும், அஞ்ஞானிகளுக்கு விக்ரஹங்களிலும், ஞானவான்களுக்கு எல்லாப்பொருள்களிலும் விளங்குவதாகக்கொள்கை. மகா யோகிகள் தங்கள் ஆத்துமாவே பரசிவமென்று கொள்வதன்றி விக்ரஹங்களிற் தியானஞ் செய்யமாட்டார்கள். அவ்விக்ரஹங்களும் யோகிகளின் மனத்திற் தரிசித்தவகையாகவே நிர்மாணஞ்செய்யப்பட்டுள்ளன. சாந்தஸ்வரூபியாகிய சிவபெருமானேச் சர்வவியாபகனென் றுணர்ந்து ஸ்மரணைசெய்பவன் எவனோ அவனிதயத்திலேயே சங்கரபகவானும் நீக்கமற எழுந்தருளியிருப்பர். இதயத்தில் தன்னுள்ளேயே விளங்குந் தலைவனேக்காணமாட்டாதவர்கள் இறைவனெங்கேயோ இருக்கிறானென்று திரிகிறார்கள். சர்வாந்தர்யாமியாய் எல்லாப் பொருள்களிலும் சிவபெருமானே நிறைந்திருக்கின்றா ரென்றுணர்ந்த சிவயோகிகள் ஒருநாளாகிலும் அரைநாளாகிலும் வசித்த இடத்தின் பாக்கியமே பாக்கியம். அதுவே தீர்த்தம். அதுவே தபோவனம். யோகஞ் செய்யவேண்டுமென்று கருதி தீர்த்தயாத்திரைகள் செய்தவனும் அடையமாட்டான். த்வமணியுங் கல்லும் இரண்டுங் கற்களேயாயினும், கல்லைச் சுமந்தவன் தேககஷ்டமுதலியன அநுபவித்தும் விசேஷ சுகத்தை யடையாமல், மணியைச் சுமந்தவன் சுகமடைவான்போல, கர்மயாகஞ்செய்தவன் கஷ்டமநுபவித்தும் விசேஷ பலனே யடையாமல் ஞானத்யான யாகஞ்செய்தவன் சிறந்த பலனேயடைவான். உலகத்தில் அரசனுயிருப்பவனுக்கு அவனருகிலிருக்கும்மந்திரிமுதலானோர் பிரியுண்டுசெய்தபிறர் பிரியஞ்செய்யாததுபோல, தியானயோகஞ் செய்தவர்கள் சிவபெருமானுக்குப் பிரியவான்களாய்க் கர்மயாகஞ் செய்தவர்கள் பிரியவான்களாகமாட்டார்கள். யானேயின் தந்தங்களில் உள்ளேயிருக்கும் பலவைஅறுக்கப்படாமற் சுகமாயிருப்பவையும் வெளியே தோன்றுபவை அடிக்கடி அறுபட்டுக் கஷ்டமடைவனவும்போல, சிவபெருமானே அந்தரங்கமான தியானயாகத்தாற் பக்திசெய்பவர்கள் சுகமடைபவர்களாகவும் புறம்பே கர்மயாகத்தாற் பக்திசெய்பவர்கள் கஷ்டமடைபவர்களாகவுங் கொள்ளவேண்டும். ஆதலின் தியானயோகத்தால் மனத்துக்கு மாத்திரம் விஷயமாகமும் மகாநுபவமுடையதுமான ஞானமுண்டாகும். அவ்வகைய தியானயோகத்தை அறிவுள்ள புருஷன்எப்பொழுதுஞ்சிவார்ச்சனையாகச் செய்யவேண்டியது. ஆதலால் கர்மயாகத்தாற் பலனில்லையோவெனக்கேட்பாயின், வியாளமுநிவனே! கர்மயாகத்தாலும் பயனுள்ளது. அஃதெங்ஙனமெனில், யானேயைப் பிடிக்கவேண்டியவன் தன்னிடத்தில் நெகொளாகப் பழகிவந்த ஒரு யானேயை உடன்கொண்டு வனத்தை யடைந்து அங்குப் பல யானேகளுடன் போர்செய்துகொண்டிருக்கும்யானையைத் தன் யானேயாற் பிடித்துக்கொண்டுவருமாறு, அடைதற்கரிய ஞானயாகத்தைத்தான் நெகொள் பழகிவந்த கர்மயாகத்தினாலேயே யடையவேண்டியது. ஆகாயத்தில் பறக்க விரும்பும் பறவையானது தன் ஒரு சிறகினுற் சாத்தியப்படாது இரண்டு சிறகுகளாலும் பறக்குமாறு, சிவசாயுச்சியத்தையடைய

வேண்டியவன் கர்மயோகத்தால் அடைந்த ஞானயோகவுகளினா லடைய வேண்டியது என்னும் பெரியோர் சிலர் சொல்லுவர். ஒருமுகூர்த்தகாலம் சிவபெருமானைத் தியானயோகத்தால் அர்ச்சித்தவன் பெறும்பேறுஇத்தன் மையதென்று அளவிட்டுச் சொல்ல ஒருவருக்குக் காரணமுமுதியானயோகஞ் செய்ய யத்தனித்தவனுக்குத் தெய்விகமாக அநேக விக்கினங்கள் சம்ப வித்தபோதிலும், சிரத்தையும் குருபக்தியுமட்டும் உண்டாயிருப்பதற்கி, உருத்திரலோகத்தை யடைந்து அங்குள்ள சகல சுகங்களையு மநுபவித்து யோகிகளது புனிதமான குலத்தில் ஜனித்து ஞானயோகம் பெற்றுச் சமு சார விசுத்தியடைவான். அதமம் மத்திமம் உத்தமமனச் சிரத்தையானது முத்திறப்படும். ஞானயோகமானது மூன்று ஜனவங்களிலுங் கைகூடப் பெறுதலனுக்கு அசிரத்தையுண்டென்று கொள்ளவேண்டும். பக்தியோடி சிவபெருமானைத் தியானஞ்செய்வோன் விரதத்தாலுந் தவத்தாலுங் கோ ரத்தக்கவை பாவும், பெற்று ஞானமடைந்து நித்யமான மோக்ஷசுகத்தை யடைவான். வியாளமுகிவனே! இவ்வகையாகத் தியானயோக மகிமையை யும், அந்த ஞானயோகத்தை அப்பியசிக்கும் சாந்தமனமுடைய முகிவர்க னது பிரபாவத்தையுஞ் சொன்னேன். இனி அவ்வகைய பெரியோர்களா கிய ஞானயோகஞ் செய்வோருக்குத் தானஞ்செய்தவன் பெறும் பேற்றி னையுஞ் சொல்லுகின்றேன் கேட்பாயாக.

வியாளமுகிவனே! கர்மயோகஞ்செய்வோருக்கு ஒருதரம் தானஞ் தால் சாதாரணமான வேதியருக்குப் பத்துஜனனங்களில் தானஞ் ப்த பலனும், தபோதிஷ்டர்களுக்குத் தானஞ்செய்தால் நூறு ஜனனங் ளில் தானஞ்செய்த பலனும், கர்மயோக தபோயோகமுடையவருக்குத் தானஞ்செய்தால் ஆயிரஞ் சனனங்களிற் செய்த பலனும், சிவபக்தர்க ளான தியானயோகமுடையவருக்குத் தானஞ்செய்தால் லக்ஷ ஜனனங்களிற் செய்த பலனும் உண்டாகி, அது அற்பதானமாயினும் எக்காலமும் பல னளிக்கத்தக்கதாக முடியும். இதில் தேசம் காலம் விதி சிரத்தை முதலிய வற்றுற் சற்பாத்திரமான சிவபக்தனுக்கு அற்பமாயினும் விசேஷமாயி னுஞ் சக்திக்கேற்பச் செய்த தானமானது அக்ஷயமான புகழினைக் கொ டுக்கும். தேசகாலங்களைக் கவனித்து விதிப்படி பக்தியோடு சற்பாத் திரனுக்குத் தானஞ்செய்தவனும், ஹோமஞ்செய்தவனும் அக்ஷயமான பலனடைவதிற் சிறிதும் ஐயமின்று. ஞானமார்க்க ஜலத்தால் புனிதமாக் கப்பட்ட மனத்துடன் ஆசாரம் விசுவாசம் விபூதிதரணம் முதலியனவுடைய வன் சற்பாத்திர சிரேஷ்டனும், தானஞ்செய்தவனது கோரிக்கையைக் குறைவறக் கொடுக்கவல்லவனுமாவான். ஞானசின்மையாகிய தூளையு டைய சமுசாரமாகிய சாகரத்தில், ஞானமாகிய நெய்பத்தால் தாண்டிக் தன்னுடன் பலரையுந் தாண்டச் செய்கிறவனும், பெரும் பாவமாகிய சமுத்திரத்தை ஞானமாகிய படகினுற் கணகளில் பலரையுந் தன்னுடன் வரச்செய்து அவர்களைவிண்ணிறத்தவர்களாகக் கரைகாணச்செய்விக்கிற

வனும், உத்தமபாத்திரமாவர். சிவயோகியானவன் எவன் வீட்டில் ஒரு வேளை பிக்ஷை யேற்கின்றானே அவனுடைய வமிசத்திலிருப்பவர்கள் யாவரையும் முத்திக்கனுப்புவான். யாகத்தினாலும் தீர்த்தயாத்திரைமுதலிய வற்றினாலும் உண்டாகும் பலன்களெல்லாம் சிவபக்தர்களுக்கு அன்ன தானஞ்செய்வதனாலேயே உண்டாகும். சாந்தமும் சிவத்தியானமுமுடைய ஞானவானுக்குச் சிரத்தையுடன் ஒரு முறை அன்னமளித்தவன் தன் பாவங்களையெல்லாம் அப்பொழுதே ஒழித்து இஷ்டகாமியங்களை யெல் லாங் குறைவின்றி பெடைவான்.

பிதுர்க்களையுத்தேசித்துச்சிரார்த்தகாலங்களிற்சிவபக்தர்களுக்கு அன்னமளித்தவன் தன் குலத்தவர்களைப் பதினெரு தலைமுறைவரையில் உடன்கொண்டுசிவலோகமடைவான். போஜனகாலத்தில் சிவா! சங்கரா! என்று பகவன் நாமத்தானஞ்செய்தவன் புசித்த உணவுகளெல்லாம் சிவப்பிரசாதப்பலனையுண்டுசெய்யும். சாஸ்திரோக்தப்படி சிவநிவேதனஞ் செய்து, அக்னிகாரியம் (வைசுதேவம்) முடித்துத் தன் குருபாகத்தைக் குருவிற்குக் கொடுத்து அங்குவந்த பிராமண அதிதிகளுக்கும் அன்ன மளித்துப்பின்னர்புசிக்கவேண்டும். அல்லாதவன் அன்னம்புசித்தவனுகாது சமஸ்த பாவங்களையும் பகுத்தவனுவான். அஃதெங்ஙனமெனில் திருஷி விருத்தி வர்த்தகம் கோபம் லம்மார்ஜனம் முதலியவற்றுற் பலவிதமான பாவங்கள் பருஷருக்கு விருத்தியாகிக்கொண்டிருக்கின்றன. அப்பாவங் களின் விருத்தியால் லம்மார்ஜனம் அஞ்சனம் தோயம் அக்னிருண்டம் நிபேஷணமென்னும் பஞ்சஸூனாங்கள் எப்பொழுதுங் கிரகஸ்தர்களை அர் சியித்தேயிருக்கின்றன. தான் புசிக்கும் பக்குவான்னங்கள் யாவும் சிவ அக்னி குரு அதிதிகளுக்கு நிவேதித்துப் புசித்தால் இப்பஞ்ச லூனதோ ஷமும் இதரமான அநேகபாவங்களும் இல்வாழ்வோரை யடையமாட்டா. ஆதலின் அவ்வன்னங்களைச் சிவாதிகளுக்கு ஆராதித்தே புசிக்கவேண்டும். சிவ அக்னி குரு முதலியவர்க்கு எத்தனை புசிக்கை நிவேதிக்கின் றார்களோ அத்தனையாயிர வருஷங்கள் சிவபுரத்தில் வசித்திருப்பார்கள். கெய் பாயிலங்கள் அன்னம் இவற்றை நிவேதித்தவன் தானுபங்குவிசேஷ பலனையடைவான். ஸ்ராஷ்டிகோதன நிவேதனஞ்செய்தவன் ஆயிரம்பங்கு பலனையடைவான். சுத்தமான சாயிரியாற் சமைத்த அன்னத்தை நிவேதித்தவன்முற்கூறிய பதினும்பத்துப்பங்குபலனையடைவான். செஞ்சாலி யன்னம்படைத்தவன் முற்கூறியதிலும் பத்துப்பங்கு பலனைப் பெறுவான். ரக்தசாலியன்னம் நிவேதித்தவன் லக்ஷகற்பகாலம் பலன் பெறுவான். இவ்வாறு ஒன்றற்கொன்று விசேஷபலன் கொடுக்கத்தக்கவை. நல்ல பதார்த்தங்களோடு கூடி அன்னம் படைத்தவன் புண்ணியமிருந்து யடைவான். கூதாரன்னி நிவேதனத்தால் பத்துப்பங்கு விசேஷபலன் கைகூடும். தயிர் சர்க்கரை கூட்டியன்னம் நிவேதனத்தால் முற்கூறிதிலும் பத்துப்பங்கு அதிகபலன் வரும். நல்லகாயையும் குளிர்ச்சியும் பச்சைச்

கர்ப்பூடையச்சியவற்றின் மணமுழுமுடைய அழுசுவையோடுகூடிய அன்னம் படைத்தவன் பத்துக்கோடிப்பங்கு விசேஷ புண்ணியத்தையடைவான். நெய்யாற்செய்த அதிரசங்களைப் படைத்தவன் பெரும் புண்ணியத்தைப் பெறுவான். இப்படி உருசியுடையதும் நெய்யாற்செய்ததும் மனமுடையதுமாகிய இவற்றைப்பக்தியுடன் சிவ அக்னிருரு பந்துக்களுக்குச் சமர்ப்பித்துப் பின்னர்தான்புசித்தவளவில் அகூயமானபலனையடைவான். சிவயோகிகளைப் பிதுர்தினத்தில் வருவித்து இப்படிச் சுவையோடு கூடிய உணவைப் பக்திபூர்வமாக அவர்களுக்குப் படைத்தவன் தன் பிதுர்க்கள் செய்த பாவங்களை நீக்கிச் சுவர்க்கலோக மடைவிப்பான். வஸ்திரம் அன்னம் பானமுதலியவற்றைச் சிவயோகிகளுக்குச் சிரத்தையுடன் ஒரு முறையாவது கொடுத்துப் பூஜைசெய்தவன் அப்பொழுதே பிரம விஷ்ணு ருத்திரர்களைப் பூஜித்தபலனையடைவான். சிரார்த்தினத்திற் சிவராதனை செய்து சிவயோகிகளைப் பிரகூதிகொள்ளும்படி. விளித்தபொழுதே அவனுடைய பிதுர்க்கள் ஆனந்திதரு—டனஞ்செய்தும் கானஞ்செய்தும் அவனை ஆசிர்வதிப்பார்கள்.

வியாசமுனிவனே ! விபூதியை உத்தூளனஞ் செய்துகொண்டு உருத்திராகூமணிமாலையணிந்து சிவாதிகாமங்களை யுச்சரித்துக்கொண்டு சிவயோகி யொருவன்வந்து வாயிலினின்றவுடனே, அவ்வீட்டிற்குத் தனதானியசம்பத்துக்கள்சேரும்.உத்தமமானசொர்க்கபதவியுமுண்டாகும்: ஆதலின் அதிதிவருவதுணர்ந்தவன் அவனை அஞ்சலியஸ்தனு யெதிர்கொண்டு அழைத்துவந்து சக்திக்கேற்றபடி பக்தியுடன் அன்னபானதிகளால் அவனைத் திருப்திசெய்யவேண்டும். அவ்வதிதி தேஜோரூபமுடையவனாயினும் விரூபியாயினும் மலினனாயினும் மலினவஸ்திரமுடையவனாயினும் அவன் இவ்வகையினனென்றுவிசாரியாமல் இவன் சிவயோகியேயென்று உள்ளத்திற்கொண்டு உபசரிக்கவேண்டும். தன்வீட்டிற்குவந்தஅதிதியைத் துவேஷித்த இல்வாழ்வோன், சாகூதாத் சிவபெருமானையும் எல்லாத் தேவர்களையும் வேதங்களையும் யாகங்களையும் ஆகமங்களையும்துவேஷித்தவனாகிஅதோமுகனையும் ஊர்த்துவபாதனையும் நரகத்திற் பெருந்துயர் அனுபவித்து, பலவிக புழுக்களாற் கடிக்கப்பட்டு, அக்கினியாற் சுடப்பட்டு, கல்பாந்தவரையில் அநேகதோரமான நரகங்களிற் பாதிக்கப்படுவான். சிவயோகிகளை அபராதிகளென வொருவன் சொல்லுகையில்,கேட்டுக்கொண்டிருந்தவன் இன்னும்விசேஷமானநரகங்களில் இவ்வுலகமுள்ளவரையிற் பாதிக்கப்படுவான். சிவயோகியை அபராதியென் சொல்பவன் விசேஷமான பாவங்களை யநுபவிப்பானென்பதிற் சிறிதுஞ் சந்தேகமே யில்லையாயினும், சொல்பவனைக்காட்டிலும் கேட்பவன் தண்டிப்புப் பாவத்தை யநுபவிப்பான். தூஷிப்பவன் தூஷணையைக்கேட்பவன் அதனையங்கீகரிப்பவன் தூஷிக்கலாமென்றவன் அவர்களோடொப்புயவனுமிய இவர்கள் ஐவரும் பஞ்சமகாபாதகரென்று சொல்லப்படுவர்.

அஞ்ஞானமாகிய சேற்றிலழுந்திக் தன்னை யிரட்சிக்கொள்ளச் சக்தியற்றுப் பர்வமாகிய மலைகளால் மறைக்கப்பட்டுச் சதகுணஞ் சிறிது மற்றுள்ளவன் அபாத்திரனென்றறிந்து கொள்ளவேண்டும். அபாத்திரனுக்குந் தானங் கொடுத்தபகூத்தில், சுடாத பச்சைமண்ணுஞ் செய்த பாத்திரத்திற் சொரிந்த ஜலமானது அதில்நிற்காது பாத்திரத்தை விரித்துக்கொண்டு கீழேபோய்விடுமோ, அத்தானமும் பலனற்றதாகும், அத்தானம் வாங்கியதைப்பரிக்க வல்லபமில்லாது தானமேற்ற அபாத்திரனும் அழிவான். அன்னியும் அபாத்திரனுக்குக் கொடுத்தானம் கவர்நிலத்து விதைத்தவிதையையும், சம்பலிற்சொரிந்த ஹோமதிரவியத்தையும்போல நிஷ்பலமாக முடியும். ஞானஹீனனாகிய அபாத்திர வேதியனுடைய ஜன்மமானது, ஸ்திரியை யடைந்த நபும்ஸகனைப்போல நிஷ்பலமாகும். அபாத்திரனும் அவனுக்குத் தானங்கொடுத்தவனும், இருப்புக் தெப்பத்திலேறிச் சலத்தைத் தாண்டவேண்டியவன் தெப்பமுந் தானும் முழுகி பொழிதல்போல, இருவரும் அஞ்ஞானத்திலழுந்தி வருந்துவர். காருணியமாகவும் சிரத்தாபக்தியோடுஞ் சற்பாத்திரத்திற் தானஞ்செய்பவனது தானமே ஸமஸ்தமான உத்தம கோரிக்கைகளையெல்லாங் கொடுப்பது. குருடர் தரித்திர் முடவர் நிக்கற்றவர் பாலர்கள் விருத்தர்கள் போகிகள் இவர்களை இல்வாழ்வோன் அதிதிகளைப்போஷிப்பதுபோலவே தன் சக்திக்கேற்ப உதவி செய்யவேண்டியது. ஞானிகளை அவர்களது போக்கியதைக்காகவும்,பிறரை அவ்வாறில்லாதவராயினும்மாதுடஜனனம் வகித்ததற்கேற்பப் பரோபகாரசிந்தனையோடும் உதவிபுரியவேண்டியது. அதிதிகளும் சற்பாத்திரரும் தமக்குத்தானங்கொடுப்பவனுக்குதவிசெய்யவேண்டுமென்னுங்கருத்தால் யாசிக்கின்றனரேயன்றித் தமதுசுயப்பிரயோசனத்திற்காகமாத்திரம் யாசிப்பவர்களல்லர். ஆதலின் தரித்திரனும் சாதுவுமாயிருப்பவனை அதிக பிரயத்தனத்தோடும் தயையோடும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பவனே இல்வாழ்வோனென்னப்படுவான். தானஞ்செய்யாமையினாலேயே ஒருவனுக்குத் தரித்திரமும், தானஞ்செய்வதனாலேயே சம்பத்தும் உண்டாகின்றன. அதிதியானவன் கொடையாளிக்கு உதவி செய்யவேண்டுமென்னுங் கொள்கையினாலேயே தனக் குதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றன். அதனால் கொடுப்பவன் தேவலோகத்தும் வாங்குபவன் பூலோகத்துமிருப்பார்கள். யாசகன் என்கிறுக் கொடுக்கவென்று கேட்பது தாதாவுக்குச்சிலவிஷயங்களைப் போதிக்கின்றது. அவை:—யாசிப்பதுமகாகஷ்டம். இது ஜன்மாந்தரத்தில் தானஞ் செய்யாமையாலுண்டானது. அதனின் இவனுக்குத் தானங் கொடாத பகூதத்தில் இவனைப்போலவே நமக்கும் சம்பவிக்கும் என்பதாம். ஆதலின் யாசகனைப் புறுபுறுதவன் யாவன் ? தானஞ்செய்தவனிலேயே சொர்க்கத்தையடைவான். இவ்வுலகத்தில் அதிதிகளைக்காட்டிலும் பரம பந்துக்கள் யாவருளர் ? கொடையாளிக்கு இகலோகத்திலும் பரலோகத்திலும்

பல செய்பவர்களே யாசகர்கள் என்னுரைவேண்டும். நாடோ
றும் யாசிப்பவர்கள் அதிதிகளல்லர். திரவியவான்கள் யாசிக்கவ்ரு
வார்களின் அவர்களு மதிதிகளாகார். படிகத்துக்குற்ற அழுக்கு துடைத்த
மாத்திரத்திலேயே நீங்குமாறு, அப்போதைக்கப்போது தனக்குச்
சேர்ந்த பாவங்களைப் பரிகரிக்கும் வல்லமுடையோரே அதிதிகள்.
அவ்வகைய அதிதி தானமேற்றருளுவின் தானும் தாதாவும் ஊர்த்துவ
லோகப் பிராப்தியடைவர். தானங்கொடுப்போனும் ஏற்போனுமாகிய
இருவரில்கொடுப்போன்மேலுலகத்தையும் பெறுவோன்கீழுலகத்தையும்
பெறுவானென்பதைத் தானகாலத்தில் அவர்கள் கைகளே யுணர்த்துகின்
றன. எனயாகிய யாசகன் தன் வீட்டை யடைந்து யாசிக்கையில், வணிக
தருமத்தை யாராய்ந்து அவனைத் திரஸ்கரித்துப்பிறனை யெதிர்பார்ப்பவன்
உண்மையிற் கொண்டியாளியாகமாட்டான். உலகத்தில் யாசகரில்லாவிடின்
தர்மமென்பதே கிடையாதாதலின் யாசக ரிருக்க வேண்டுவதுதான்.
சாதுக்களான அதிதிகளுக்குத் தானஞ்செய்வதாற் பெறும் பலனை யாச
கருக்கு குதவிசெய்வதாலும் அடையலாம். சாதுக்களை விஷ்ணு விஷயமாகப்
பரிகரிப்பவன் உத்தமன். அவனுக்குச் சத்பாத்திரத்திலாவது தஷ்பாத்
திரத்திலாவது ஏழைகளிடத்திலாவது தானம்தரை பரோபகாரமுதலியன
சிறிதுமுண்டாகமாட்டா. இல்வாழ்வோரிற் சிலர் வாயினல்மாத்திரம் மரி
யாதை பராட்டி உபசாரவார்த்தைகள் சொல்லி, கடைசியில் ஒன்றுங்
கொடாது அனுப்புவோருமுளர். அதிதிகளைக்கண்டவுடனே யெழுந்திருத்
தல் எதிர்செல்லல் க்ஷேமம் விசாரித்தல் ஆசனங்கொடுத்து அதிலிருக்கச்
செய்தல் கால்கழுவச்செய்தல் பிரியவாக்கியங்கூறல் அவர்கள்செல்லுகை
யிற் பின்றொடர்தல் என்னும் எழும் இல்வாழ்வோனைச் சுவர்க்கமடையச்
செய்யுஞ் சோபானங்களாம். பொருளுள்ளவளவில் தன் சக்திக்கேற்பத்
தானஞ்செய்யவேண்டுமென்று யோசனையுண்டாவதொழுதே யாசகனுக்
குக் கொடுக்கவேண்டும். இது தர்மராஜனை யமனுக்குத் தூனையான
தர்மமாய் முன்னின்று அவனை நரகத்திற் போக்காது சாசுவதத்திற்குச்
சேனுத்தும். தானஞ்செய்வதிலேயே விருப்பமுடையவன் சொர்க்கவாசி
யேயாவன். பிரியவார்த்தையோடு செய்த தானஞ் சிறந்தது எனப் பெரி
யோர் கூறுவர். க்ஷேமத்தையடையக் கோருகிறவன் ஒருகாலத்திலாவது
அன்பு பாராட்டிச் சத்பாத்திரனுயுள்ள ஒரு வேதியனுக்கு உபசார பூர்வ
மாகத் தன்னற் கூடியவளவில் தானஞ்செய்தால் இஷ்டமான கோரிக்
கையையும் சிறந்த சித்தியையுமடைவான். தானஞ்செய்யச் சிறிதுஞ்
சக்தியில்லாதவன் தன் வீட்டிற்கு வந்த யாசகனுக்கு நல்ல வார்த்தைகள்
சொல்லிச் செல்லவிடுவதுஞ் சிறந்த பலன்தருமென்று பெரியோர் கூறுவர்.
ஒருவன் வீட்டிற்கு வந்தவனைக் கடினமான வார்த்தைகளால் மனோ
வச்செய்து அதிகமாகத் தானஞ்செய்யினும் அது தீனபலனைச் சிறிதுங்
கொடுக்கமாட்டாது. தானம் விரதம் நியமம் யாகம் தியானம் ஹோமம்

தவம் இவை யாவும் மனப்பூர்வமாகச் செய்யத்தக்கவை. அவ்வாறின்றி
நிர்ப்பந்தத்தாற் செய்தவன் சிறிது பலனையும் அடையமாட்டான். சிரத்
தையோடு தானஞ்செய்தவனும் பரிசுத்தமான மனத்துடன் தானமேற்
றவனும் சுவர்க்கத்தை யடைவார்கள்; நரகம் ஒருகாலத்திலும் அவர்கள்
கண்கட்குப் புலப்படமாட்டாது. உதாரகுணம் சத்சாவகாசம் நிசேகத்
தன்மை தயை அசூயையின்மையாகிய ஐந்தும் வள்ளற்குரிய குணங்கள்.
இவை மகா பலன்களைக்கொடுக்க வல்லவை. காசி - குருக்ஷேத்ரம் - பிர
யாகை - புஷ்கரம் - கங்காசமுத்திரசங்கமம் - நைமிசாரணியம் - ஸ்ரீ பர்
வதம் - மஹா புண்ணியதரமான கோகர்ணம் - ஞானபர்வதம் இவை சுர்
சித்தர் முதலியோரால் எப்பொழுதுஞ் சேவிக்கப்படுகிற புண்ணியக்ஷேத்
திரங்களென்று சொல்லப்படும். சிவபெருமான் எழுந்தருளியிருக்கும்
இடங்களெல்லாம் புண்ணியக்ஷேத்திரங்களே. பர்வதங்களில் தோன்றும்
நதிகள் யாவும் புண்ணியநதிகளே. பசுக்கள் சித்தர்கள் முனிவர்கள் வசிக்
கும் இடங்கள் யாவும் புண்ணியக்ஷேத்திரங்களே. சிவக்ஷேத்திரங்களில்
எவ்விடத்திலாவது அற்பதானங் கொடுப்பினும், அது சிவக்ஷேத்திர மகி
மையால் எண்ணிறந்த பலனைக் கொடுப்பதாகும். சக்திருசுரியர் கிரகண
காலமும் விஷுவத் புண்ணியகாலமும் உத்தராயண தக்ஷிணாயண காலமும்
வியதிபாதமும் ஷடசீதிமுதலிய காலங்களும் மாதப்பிறப்பும் புண்ணியத்
தை விருத்திசெய்யத்தக்க காலங்களென்று சொல்லப்படும். இவ்வகைய
புண்ணியகாலங்களில் மகா பக்தியோடு தானஞ்செய்தால் அளவற்றபல
மாகும். ஞானத்திற்கும் சுகிர்தத்திற்கும் சிரத்தையே தாயாகும். ஆதலின்
சிரத்தையோடு கூடிய மனமுடையவனாய் க்ஷேமம் கோருகிறவன் தானஞ்
செய்யவேண்டும். சத்பாத்திர மானவனுக்குத் தேசமுங் காலமுமுணர்ந்து
சிரத்தையோடு செய்த தானம் சமஸ்தகாமியங்களையும் அவன்விரும்பிய
வகையே அடையச்செய்வதற்குச் சிறிதுஞ் சந்தேகமேயில்லை. இவற்றிற்
கெல்லாங்காரணம் சிரத்தையேயாம் என்று ஸநத்குமாரமுனிவர் வியாஸ
முனிவரைநோக்கிக் கூறினர் என்று ஸூத முனிவர் கைமிசாரணியவாசி
களுக்குச் சொல்லினர்.

சிவபூஜையவர் சிறப்பும் அடியவர் பூஜாபலனுமுரைத்தது
முற்றிற்று.

பதினேட்டாவது
பாவவிவரணமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுனிவர் சௌநகாதிமகருஷிகளை நோக்கிக் கூறுகின்றார்:
மனவாக்குக் காயங்களினுற் செய்யுமவறும் நரகத்திற்கேதுவுமாகிய பெ
ரும் பாவங்களைச் சங்கிரகமாகச் சொல்லுகின்றேன் கேளுங்கள். பரஸ்திரீ
யை யடைய விரும்புதல், அக்கியர் பொருளை யபகரிக்கவிரும்புதல், அபகா
ரஞ் செய்யவேண்டுமென்றே நினைத்தல், செய்யத்தகாத காரியங்களையெல்

லாஞ் செய்ய விரும்புதல் இக்ஙன்கும் மானசிகபாவங்களெனப்படும். சம் பந்தமின்றிப்பேசுதல், பொய்பேசுதல், அப்பிரிய சம்பாஷணை, புறங்கூறல் இக்ஙன்கும் வாசிகபாவங்களெனப்படும். புசிக்கத்தகாதவற்றைப் புசித் தல், ஹிம்சித்தல், நிஷித்த காரியாசரணம், பிறர் பொருளை யபகரித்தல் இக்ஙன்கும் காயிகபாவங்களெனப்படும். இந்தப் பாவங்கள் பன்னிரண் டும் மானுடருக்கு நரகமுண்டுசெய்யச் சாதனமானவை. எல்லைநிறைந்த துஷ் கர்ம பலனைக் கொடுக்கத்தக்க இப்பாவ பலன்களைச் சொல்லுகின்றேன்.

முனிவர்களே! சமுசாரமாகிய வனத்தைக் கடக்கச்செய்யும் சர் வேசுவரனைத் துவேஷிப்பவர்கள் மகா பாதகர்கள். ஈசுவரனையும் சாஸ்திரங் களையும் சர்வார்த்த சாதகமான ஞானத்தையும் தூஷிப்பவர்கள் மகா பாதகராதலின் அதிகோரமான நரகத்தையடைந்து அவர்கள்படும் பாட்டினை யொருவராலுஞ் சொல்லமுடியாது. சிவஞானத்தைச் சொல்லிக்கொண் டிருக்குந் தபோநிஷ்டனையும் குருவையும் பிதுர்க்களையும் நிந்திப்பவர்கள் சிறந்த நரகமான அதிதாகுநிய யடைவார்கள். சிவநிந்தை குருநிந்தை சிவஞானநிந்தை தேவர் பொருளை யபகரித்தல் வேதியர் பொருளை யழித் தல் ஆகிய இவை மகா பாதகங்கள். மூர்க்கர்களானோர் சிவஞானத்தை யுணர்த்தும் நூல்களை யபகரித்ததனுலடையும் பாதகங்களும் மகா பாத கங்களேயாம். சர்வேசுவரனைப் பூஜித்துக்கொண்டிருக்கக் கண்டு சந்தோ ஷியாதவர்களும் நமஸ்கரியாதவர்களும் துதியாதவர்களும் பய பக்தி யற் றிருப்பவர்களும் இஷ்டப்படி நடப்பவர்களும், குருசந்நிதியிலும் அக்கினி சந்நிதியிலும் இவ்வாறிருப்பவர்களும் மகா பாதகர்களேயாவர். பருவ காலங்களில் சிவாலயத்தில் திருத்தொண்டினை விதிப்படி செய்யாதவர் களும், குருபூஜை செய்யாதவர்களும், ஞானயோகிகளின்றிக் கர்மயோகி களாயிருப்பின் மகா பாதகர்களேயாவர். சிவசாரநிவாரணம் சிவபக்த நிந்தை சிவாகமங்களைப்பூஜியாமை அத்தியயனஞ் செய்யாமை எழுதாமை அஞ்ஞானத்தால் சிலமில்லாத மொழிகளைக் கேட்டல் உச்சரித்தல் பொரு ளாவினுல் நிஷித்தமான உபசாரங்களைச்செய்தல் பரிசுத்தமில்லாதவிடங் களில் ஞானபாகமாகிய வேதமுதலியற்றை யுரைத்தல் சிவஞானமமைந்த கதைகளை யாகூபித்தல் வீண் கதைகளைக் கூறுதல் பொய்பேசுதல் சக்தியிருந்துந் தானஞ்செய்யாமை கத்தமான விடங்களில் சிவசரிதஞ் சொல்லுகையில் அசத்தமாகச் சென்று சிரவணஞ்செய்தல் குருவினுல் தீலாராய்ச்சியுற்று யுக்தாயுக்தமுணர்ந்து அக்குருவுக்குப் பக்திசெய்யாது அவரை யவமதித்து அவர்கட்டளையைக் கடந்து எதிர்த்துப்பேசுதல் குரு பூஜை செய்கையில் அலகியம், ரோகியும் அரத்தனும் பரதேகியும் சத்குரு பாதையுற்றவனுமாகிய குருவை அல்லது ஒருவனைத் திரஸ்கரித்தல், குரு பத்னி புத்திர மித்திரரிடத்தில் அவமானஞ்செய்தல் தர்மமார்க்கத்தை யுணர்த்துங் குருவுக்கு விசேஷ அவமானஞ் செய்தல் ஆகிய இவையொவ் வொன்றுஞ் செய்தோர் சிவநிந்தையா லடையத்தக்க பாவத்தை யடை வார்கள்.

தைமிசாரணியவாசிகளே! பிரமஹத்தி செய்தவனும், பொன் திரு டினவனும், மதுபானஞ் செய்தவனும், குருபத்தினியைக் கூடினவனும், இவர்களோடு கூடியவனும் ஆகிய இவரும் பஞ்சமஹாபாதகர்கள். குரோ தம் லோபம் பயம் துவேஷம் முதலியவற்றுல்வேதியனைக்கொல்லவேண்டு மென்று கருதியவன், பொருள் கொடுப்பேனென்று வேதியனை விளித் துப் பின்னர் கொடாதவன், காரணமின்றி யொருவனைத் தூஷிப்பவன், வித்தியாபிமானத்தால் சபாநாயகனுக அமர்ந்திருக்கும் சத்பிராமணனை இழுமாப்பால் எதிர்த்து அவமதிப்பவன், தான் யாவும் வல்லவனென்று பிறரிடம் தற்புகழ்ச்சி செய்துகொள்பவன், பிறருடைய நற்குணங்களை மறைத்து அவர்கட்கில்லாத துர்க்குணங்களையெல்லாம் உளையோவெனக் கூறுவோன், பிதாகத்தால் வருந்திய சத்புருஷனைத் தன் விட்டில் சேர்க் காதவன், பிறருக்குப் பயத்தையே யுண்டுசெய்பவன், பாவசுபாவத்தால் பிறர் தோஷங்களை மன்னனுடன் கூறி அவன் ஜீவனத்தைக் கெடுப்பவன், பசியால் வருந்திய பசு பார்ப்பார் குரு முதலியோரை விக்கினமுறச்செய் பவன், தேவபூமி பிராமணபூமி கோபூமியாகவுள்ளவற்றைத் தன் பலத் தால் கிரகித்துக்கொள்பவன் முதலானோர் பிரமஹத்தி செய்தவர்களே யாவர்.

தேவபிராமணருடைய சொத்துக்களைக் கிரகித்தல் பிரமஹத்திக் குச் சமானமான பாவமென்றுணரவேண்டும். அதற்குச் சந்தேகமே யில்லை. வேதத்தையும் சிவஞானத்தையுமறிந்தும் மூடனைப்போல் அவற்றை விடுத்த வேதியனும், அதிதமான பூஜையைக் கைக்கொண்டு நியதியான பூஜையை விடுத்தவனும், பஞ்சயஜ்ஞங்களை விடுத்தவனும், சுரபானஞ்செய் தற்குச்சரியான பாபத்தை யடைவான். பிதாமாதாக்களை நிந்தியதால் வரும் பாவமும், வேதியனுக்கு விரோதமாகப் பொய்ச்சாகஷிபுகன்ற பாவ மும், சிவபக்தர்களை நிந்தித்துணைத்ததால் வரும் பாவமும், புசிக்கத்தகாத வற்றைப் புசித்ததால் வரும் பாவமும், வனத்தில் திரியும் மான்முதலிய மிருகங்களையும் பறவைகளையும் நிரபராதிகளாயிருக்கையிற் கொன்றதால் வரும் பாவமும், சிவபக்தனைச் சாதாரண வேதியனுக்குப் பணிசெய்கவை யப் பணிப்பதால் வரும் பாவமும், பசுக்கள் செல்லும் வழியிலும் வனத் திலும் கிராமத்திலும் நெருப்புவைப்பதால் வருகும் பாவமும் மகா கோர மானவை. அவை பிரமஹத்திக்குச் சமானமானவை. அறிவு முதலியவற்றுற் குறைந்த ஒருவனுடைய செல்வத்தை யபகரித்தல், புருஷர்கள் ஸ்திரீகள் யானைகள் குதிரைகள் பசுக்கள் பூமி வெள்ளி வஸ்திரம் தானியம் இரசப் பொருள்கள் சந்தனம் அகரு கர்ப்பூரம் கஸ்தூரி தூபத்திரவியங்கள் முத லியவற்றைத் திருடுதல், பொன் திருடுதலுக்குச் சமானமான பாதகங்கள். விவாகதசையடைந்த கன்னிகையைக் கோரிவந்த தக்கவனுக்குக் கொ டாது வீட்டில் வைத்திருத்தல், புத்திரன் மனைவியாகிய மருகியோடும் கட் பாளன் மனைவியோடும் உடன்பிறந்தவளோடும் புஷ்பவதியாகாத பெண்

ஜூவஹிம் சண்டாளஸ்திரீயோடிம் தன் கோத்திரத்துஸ்திரீகளோடிம்புணர்தல், முதலியவற்றுல் வரும் பாவங்கள் யாவுங் குருபத்தினிப்புணர்வுதால் வரும் பாவத்திற்குச் சமானமான பாவங்கள். இனி இவற்றிற்கெயர்த்த உபபாதகங்களையுஞ் சொல்லுகின்றேன் கேட்பீர்களாக,

சனகாதிமுனிவர்களே! வேதியனுக்குக் கொடுக்கிறேனென்று சொல்லிய பொருளை அவனுக்குக் கொடாது நிறுத்திக்கொள்வதும், பிராமணனுக்குத் தானங்கொடுத்தபின்னர்கொடுத்துவிட்டோமேயென நினைப்பதும், வேதியன் பொருளை யபகரிப்பதும், சமயாசார தருமங்களை விடுப்பதும் மகா மானியாயிருப்பதும், கோபியாயிருப்பதும், டம்பமாயிருப்பதும், செய்ந்நன்றி மறப்பதும், ஸ்திரீ புஷ்பம் சந்தனம் முதலியவற்றிற் பெரு விருப்பும், இருபையின்மையும், வஞ்சனையும், பொறுமையும், பரதார கமனம், பதிவிரதைகளைத் தூஷித்தல், மூத்தவன் மணஞ் செய்துகொள்ளு முன்னர் இளையவன் மணமுடித்துக்கொள்ளுதல், இளையவன் மணமுடித்துக் கொள்ளக்கண்டு மூத்தவன் மனம் வருந்துதல், அவ்வகைய இருவருக்குந் தானங்கொடுத்தல், வஞ்சித்தல், புத்திரர் மித்திரர் களத்திரர் யஜமானர் ஸாது பந்துக்கள் தவசிகள் முதலானோரைத் தனலோபத்தால் விடுத்தல், கோக்கள் மன்னர்கள் ஸ்திரீயர்கள் வைசியர்கள் இவரை வதைத்தல், சிவாலயத்திலுள்ள விருக்ஷத்தைச் சேதித்தல், தீர்த்தவனத்தை யழித்தல், சிவசேஷத்திரவாகிகளுக்குத் தோஷஞ்செய்தல், பசுதனம் தான்னியமுதலியவற்றை அபாத்திரவானுக்குத் தானஞ்செய்தல், சுவர்ணம் பசு முதலியவற்றைத் திருடுதல், சொல்லத்தகாதவர்களுக்கு வேதஞ் சொல்லுதல், யாகனிக்கிரயம், தர்மவனத்தை விற்றல், தர்மகடாகங்களை விற்றல், மன்னி புத்திரர் முதலானுரை விற்றல், தீர்த்தயாத்திரைசெய்வோருடைய விரதங்களை விக்னஞ்செய்தல், ஸ்திரீ தனத்தாற் ஜீவனஞ்செய்தல், காமத்தால் பெண்களுக்குச் சுவாதீனப்படுதல், விபசாரி சாவகாசஞ்செய்தல், இழிகுல மாதர்மீது விருப்புறல், விருத்தகன்னியில் மணம்புரிந்துகொள்ளல், தானியங்களை வட்டிக்குக் கொடுத்தல், பூமியின் பொருளைத் தானமாக வாங்கல், கல்ல பொருள்களைக் கபடமாகக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளுதல், எருதை வாகனமாகக்கொள்ளுதல், உச்சரிட்டனஞ் செய்தல், முறையறியாது வைத்தியஞ்செய்தல், தனக்குப் பிரயோசனப்படும்படி யாகவே சற்கருமஞ்செய்தல், ஜீவனோபாயமான வேதத்தைப் பொருள் வாங்கிக்கொண்டு சொல்லுதல், விரதங்களை விடுதல், குலாசார தருமங்களை விடுதல், பொய்த்தூல்களை யப்பியசித்தல், ஸ்ருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமாக வாதித்தல், தேவநிந்தை குருநிந்தை சத்தியநிந்தை சோதிநிந்தை, பிராமணநிந்தை, இராஜநிந்தை, தேவபூஜாநிஷேதம், குரு பூஜாநிஷேதம், சேமற்ற நால்திறுடன் சேருதல், பருவகாலத்திலாவது பகற்காலத்திலாவது ஜலத்திலாவது ஸ்திரீசங்கமஞ் செய்தல், மன்னி புத்திர மித்திரர் முதலானுரைக் கடிந்துபேசுதல், தன்தையை வெறுத்தல்,

காலத்திற் கெடுத்தல், ஸ்ரீ குளம் முதலியவற்றின் கரையை யிடித்தல், உடனுண்ணும் உறவினரைப் பிரியச்செய்தல் முதலியவற்றுல் உண்டாகும் பாவங்களைபடைத்த ஸ்திரீகளாவது புருஷர்களாவது உபபாதகர்களென் றழைக்கப்படுவர். இன்னும் இவற்றிற்குச் சமானமான சில பாவங்களையுஞ் சொல்லுகின்றேன்.

பசு - பிராமணன் - கன்னிகை-சுவாமி - மித்திரன்-தவசி முதலானுடைய காரியங்களை யழித்தல், பிறர்செல்வத்தைக்கண்டுபொறுமையடைதல், பிறருடைய பொருளை யபகரிக்கக்கருதல், பிறரைக் கெடுக்கத் தந்திரஞ்செய்தல், பிராமணனுக்குத் தக்கமுண்டாக்குதல், ஒருவனைப்பாணத்தாற் குத்திக் கொன்றசெய்து கொல்லுதல், வேதியன் சூத்திர சேவை செய்தல், விருப்பத்தால் மதுபானத்தைக் காணுதல், ஹிம்சை செய்வதிலேயே மனமுடைத்தாயிருத்தல், அயோக்கியனுயிருந்தும் பிறர் மதிக்கு மாறு தானம் யாகமுதலியவற்றைச் செய்தல், பசு கட்டுமிடத்தும் அக்கினிகாரியஞ் செய்யுமிடத்தும் ஜலத்திலும் வழியிலும் மரநிழலிலும் மலைகளிலும் வனத்திலும் ஏலயக்களிலும் ஜலாசயத்திலும் சந்திரசூரியர்களை விசர்ஜனஞ்செய்தல், மதுபானஞ்செய்ய விரும்புதல், சர்ப்பங்களை யாட்டிப் பிறரைப் பயமுறுத்தல், பிறரது குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலேயே விருப்பம், மூங்கில் செங்கல் கருங்கல் விறகு முள் முதலியவற்றுல் வழியடைத்தல், அன்னியனுடைய புலத்தில் தன் புலத்திற்கு வரப்புப்போடுதல், கபடமாகத் தண்டித்தல், கபடகாரியங்களையேசெய்தல், கபடமாகப் போர்செய்தல், தகாத அன்னத்தைப் பிச்சை கொடுத்தல், தருமமில்லாத வஸ்திரத்தைத் தானஞ்செய்தல், பயன்படாதவில் அரிசி முதலியவற்றைப் பிறருக்குக் கொடுத்தல், பெரு லாபத்தை வர்த்தகஞ்செய்தல், வழியக்காரரிடம் எப்பொழுதும் பிரியமாயிருத்தல், பசுக்களைப் பட்டியிலடைத்தல், ஸ்வாமி குரு மித்திரர்களுக்குத் தோஷஞ்செய்தல், சஞ்சலபுத்தியால் துஷ்மார்க்கமாக நடத்தல், மன்னி புத்திர் ஆப்தர் மித்திர் பாலர் நோகவே முதலானுரையும் வழியக்காரரையும் பயமுறுத்தி தன்னிடம் வந்த அதிதிகளையுமொழித்துப் புசித்தல், பல வேதியர் தன் ஊரில் வந்து புசிக்கக் கருதியிருக்க, அவர்களை யொழித்துத் தன்வசையில் திருப்திகரமாக உருசியுள்ள பதார்த்தங்களைமட்டு புசித்தல், வக்கியாசமேற்றுப் பிரஸ்தானமடைதல், அந்தரங்கமான சங்கதிகளை வெளிப்படுத்தல், பசுக்களை யடித்தல், வலிமையற்றவரை மனங்களித்துச்செய்யாதவற்றைப்பிறர்முதல் இழித்துப்பேசுதல், தன்னை யடைந்த ஏழைகளைக் கஷ்டப்படுத்தி வேலைவாங்குதல், வண்டியிற் கட்டிய குதிரை மாடுகளை இரண்டொரு நாழிகையில் அவிழ்த்துவிடாது எந்நேரமும் சவாரி செய்தல், தன் விட்டிற் சமையெடுத்து அனுத்துக் கிழப்பருவமடைந்த எருதைப் புல்முதலியவற்றுற் காப்பாற்றுது விடுத்தல், எருதுகளை விரையடித்தல், மலட்டுப்பசுவைக் கன்மெடுப்பித்தல், பிரதாகத்தாற் சீவ

முற்று ஆதரணை விரும்பித் தன்விட்டிற்குவந்த அதிதிகள்-சத்புருஷர்கள்-ளைழகள்-பாலர்கள்-ரோகிகள்-விருத்தர்கள் முதலானுரை மூடபுத்தியால் தயைவையாமை முதலிய காரணங்களால் உண்டாகும் பாவங்கள் யாவும் உபபாதங்களெயாம்.

ஒருவன் மரணமடைந்துஸ்தூலதேகத்தைவிட்டுச்செல்லுகையில், அவனது தனதானிய சம்பத்துகள் யாவும் வீட்டிலேயே யிருக்கின்றன; புத்திர மித்திர களத்திராதிகள் மயானம்வரையில் வருவார்கள். அவன் செய்த சத்கரும துஷ்கருமபலன்கள்மாத்திரம் அவனுடன்வரும். ஆதலின் யோக்கியனுகவுள்ள புருஷன் இதனை யுணர்ந்து நடக்கவேண்டும். பிராம்மணராகப்பிறத்தல், ஆட்டுவர்த்தகஞ் செய்தல், எருமை வர்த்தகஞ்செய்தல், சமூத்திரயாத்திரை செய்தல், ஸ்த்ரீஸ்திரீயுடன் சம்போகஞ்செய்தல், ஸ்த்திரியிருத்தியாற் சீவனஞ்செய்தல் முதலிய பாவங்களைச் செய்த பிராமணர்கள் பிராமணதமர்கள் எனப்படுவர். லாகுணமுயாது சிற்பத் தொழில்புரிதல், பொன் வேலைசெய்து வஞ்சித்தல், முறை யயியாது வைத்திருஞ்செய்தல், பொருள் வாங்கிக்கொண்டு தன் தேகத்தைச் சுவாதீனஞ்செய்தல், தாராலோசனை புடையவர்களோடேயே கூடியிருத்தல் முதலியவற்றால் வரும் பாவங்களும் உபபாதகங்களே. இவற்றைச் செய்வோர் மகா நரகிகள் என்னப்படுவர். தன் நகரத்தில் வசிக்கும் குடிகளை வருத்திக் கிரமமான வரிப்பணத்தைக்காட்டிலும் விசேஷமாக வாங்கி அவர்களைக் கஷ்டப்படுத்தும் நிராதரிகளாயானவன் அரசனுற் தண்டிக்கப்பட்டு, தனது செல்வத்தைக் கள்வர் அபகரித்துக்கொள்ளத் துக்கியுற்று முடிவில் நரகலோகத்தையடைவான். நரகத்தை யடையத்தக்க பாவகிருத்தியங்களைச் செய்வோரிடத்திலும், அவ்வகையான குடிகளை ஆண்டுவரும் மன்னவனிடத்திலும், தானம் வாங்கிய வேதியரிடத்திலும் கோரமான நரகத்தை யடைவார்கள். குடிகள்பொருளை அக்கிரமமாக அபகரித்து வேதியருக்குத் தானஞ்செய்யும் வேந்தனுவன் நரகவாதனையை அவ்வுலகத்தில் அடைந்து தன்புறுதல்போல, அக்குடிகளால் அவ்வரசன் இங்கேயே பாதிக்கப்படுவான். செங்கோல்முறைப்படி அரசாளுத்தாத க்ஷத்திரியனுக்குப் பரதாரகமனஞ் செய்வோனும் சேரும் பெறும் பாவம் சம்பவிக்கும். அஞ்ஞானமுடைய அரசன் கள்வனல்லாதவனைக் கள்வனுகக்கருதியும், கள்வனைக் கள்வனன்றென்று கருதியும் விசாரணைக் குறைவால் திருடனை விடுத்துத் திருடனல்லாதவனைத் தண்டித்த அபராதியாகி அவ்வரசன் பெரு நரகமடைவான். நெய் எண்ணெய் அன்னம்பானம் மது மாமிசம் கள் வெல்லம் கரும்பு சர்க்கரை தயிர் கிழங்குகள் பழங்கள் விதைகள் இலைகள் புஷ்பங்கள் மருந்துகள் வாகனங்கள் குடைகள் வண்டிகள் பீடங்கள் பாத்திரங்கள் சயம் தாமிரம் பித்தளை ஜலத்திற்றோல்பை சங்குமுதலியவை விணைமுதலிய வாத்தியங்கள் பட்டுவஸ்திரங்கள் பருத்திவஸ்திரங்கள் முதலியவற்றை விரும்பிப் பிறரை வஞ்சித்துக் களவாடுகிற

வர்கள் நரகத்தை யடைவார்கள். எலிதெவ்வாதிருப்பினும் இருக்க: பிறன் பொருளைக் கடுகளவேனும் அபகரித்தவன் சந்தேகமின்றி நரகமடைவனென்பது சத்தியம்.

இவை முதலிய மஹா பாதகங்களும், மஹா பாதகத்திற்குச் சமானமான பாதகங்களும், உபபாதகங்களும் உபபாதகத்திற்குச் சமானமான பாதகங்களும், ஆகியவற்றைச் செய்த புருஷன் உயிர் நீங்கியபின்னர் யாதனைசரீரமடைந்து யமலோகத்தையுற்று, பெருந்துக்கத்தையடைவான். அதர்மத்திலேயே மனமுடைய தேவர் மாதுடன் பசு பக்ஷியாதிகளுக்கு இயமதருமராஜனே விசாரணை கர்த்தாவாயிருந்து பலவித்தமான தண்டனைகளைக் கட்டளைசெய்வான். வேதோக்தமான ஆசாரமுடையவர்களாயிருந்து ஒருகாலத்தில் நீதி தவறினவர்களாயின், அவர்களுக்குக் குரு வே தண்டனைகர்த்தாவாயிருந்து பிராயச்சித்த முதலியவற்றைக் கட்டளையிடுவான். அவ்வாறின்றி மனப்பூர்வமாகச் செய்திருப்பார்களாயின், இயமனே தண்டனைகர்த்தாவாயிருப்பான், பரதாரகமனஞ்செய்வோர் சோரர்கள் அதியாயவான்கள் இவர்களுக்கு அரசனே தண்டனைகர்த்தாவாவான். ஒருவர் கண்ணுக்கும் புலப்படாது வஞ்சனையாகப் பாவங்களைச் செய்வோருக்கு இயமனே சிக்ஷகன். ஆதலின் ஒருவன் செய்த பாவத்திற்கு அவனியம் பிராயச்சித்தஞ் செய்யவேண்டியது. அரசன் குரு பிராயச்சித்த முதலிய வழியாகப் போக்கிக்கொள்ளாதவனுடைய பாவமானது கற்ப கோடிகாலங் கழியினும் அவனைவிட்டு நீங்காது. பாவஞ் செய்வோனும் பாவஞ்செய்விப்போனும் பாவஞ்செய்கையில் அதுமோதிப்பவனும் பாவபலனை அநுபவித்தல் சத்தியம்.

பாவவிவரணமுரைத்தது

முற்றிற்று.

பத்தொன்பதாவது

பாவிகள் பெறுந் தண்டனையுரைத்த அத்தியாயம்.

லோகத்துமாமுனிவர் வியாஸபகவானுக் குரைத்தவகையே யின்னுஞ் சொல்லுகின்றேன் கேளுங்களென்று சௌநகாதிமுனிவர்களை நோக்கி சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். முனிவர்களே! மேற்கூறிய நால்வகைப்பட்ட பாவிகள் பயத்தைபுண்டுசெய்யும் மகாகோரமான இயமலோகத்திற்கு இயமபடர்களாலடித்துப்பிடித்துக்கட்டிக்கொண்டுபோகப் படுவார்கள். கர்ப்பத்திலிருப்பவர்களாயினும், பிறக்தவர்களாயினும், பாலர்களாயினும், யவ்வனர்களாயினும், ஸ்திரீகளாயினும், புருஷர்களாயினும், சபாக கர்மங்களைச் செய்தருற்கேற்ப அநுபவித்தேதீரவேண்டுமென்று, சித்திரகுப்தாதிகளும் வசிஷ்டாதி மகருஷிகளும் இதுவரையில் விசாரித்தறிந்திருக்கிறார்கள். உலகத்திலுள்ள பிராணிகள்யாவும் இயமசந்நிதானத்

தைக் காணமற்போவதில்லை. அங்ஙனடைந்து அவர்கள் புண்ணியபாவங்களை ஆராய்ந்து இயமதர்மனால் சுவர்க்கநரகங்களை யடைய விதிக்கப்படுவார்கள். அவர்கள் இயமலோகத்தை யடைவதெங்ஙனமெனில் அதனையுஞ் சொல்லுகிறேன்:—சாந்தசித்தர்களும் தயாளவான்களும் புண்ணியர்களும் கிழக்குவழியாக இயமபுரத்தை யடைவார்கள். பாவிகளும் தானதிகள்செய்யாதவர்களும், பயங்கரமான தக்ஷிணவழியாக இயமபுரியையடைவார்கள். இப்பாவிகளுக்கு இயமாலயம் என்பத்தாறு யோசனைதூரமாகக்காணப்பட்டு அநேகவித கோரஸ்வரூபமாகவுந் தோன்றும். புண்ணியர்களுக்கு அதிசமீபத்திலிருப்பதாகவும் அலங்கார ரூபமுடையதாகவுந் தோன்றும். அஃதேனெனில், பாவிகள் செல்லும் வழி பயங்கரமானதும் சுற்று வழியுடையதும், ஊசிபோன்ற கூர்மையான முட்களும், இலந்தை முதலிய முண்மரங்களிலுள்ள முட்களால் செல்வோரைப் பிடித்திழுப்பதும், கத்தியைப்போலக் கூர்மையுங் கடினமுமான பாறைக்கற்களும், அதிக பற்றமான சேற்றினால் சிலதூரம் காலடிபெயர்த்து வைக்க முடியாததும், சிலதூரம் இருப்பூசிகளைப் பதித்ததும், சிலதூரம் பேராழமான குழியுமுதலிய ஸ்தானங்களும், சிலதூரம் உயர்ந்த பர்வதங்களும், சிலதூரம் நெருப்பு எரிவதும், சிலதூரம் புல் மூடித்திருப்பதுபோலத் தோன்றிக் கால்வைத்தவுடன் சருகி அளவுகடந்த ஆழத்தில் விழுத்தக்க மாயாஸ்தானமும், சிலதூரம் நெருப்புப்போலச் சுடும் மணலும், சிலதூரம் பழுக்கக் காய்ச்சி வட்ட இருப்பு மூங்கிலும், சிலதூரம் தழைத்த மூங்கிற்புதரும், சிலதூரம் இருள் வழியும், சிலதூரம் சிறுவழியுமாய்த் தவறினால் இருபுறத்திலும் விழுத்தக்க பெரும் பள்ளங்களும், சிலதூரம் *தாவானலமும், சிலதூரம் சுடுபாறைகளும், சிலதூரம் மிகக்குளிர்ந்த பனிக்கட்டிகளும், சிலதூரம் கால்வைத்தவுடன் கழுத்துவரையிற் தூமியில் இறங்கிவிடத்தக்க வெண்மணலும், சிலதூரம் கொதிநீரும், சிலதூரம் வாட்டிநெருப்பும், சிலதூரம் சிங்கங்கள், கோனாய்கள், பெரும் புலிகள், பெரும் கொசுக்கள், அட்டைகள், மலைப்பாம்புகள், கரேமான சுக்கள், விஷசர்ப்பங்கள், மத்தகஜங்கள், காட்டுப்பன்றிகள், நெடுங்கொம்புகளையுடைய எருமைகள், கனத்துப் பருத்த ஒட்டகங்கள், பயங்கரமான துஷ்டினியபாதிபசாசங்கள், கோரைப்பற்களையுடையராக்ஷஸர்கள், சியாதிகள், தாளிமயமான சுழல்காற்றுகள் முதலியன இடையிடையே வந்து தத்தம் இயற்கைக்குணங்களால் அவ்வழியே இயமபடர்கள் கொண்டுவரும்பாதகர சரீரத்தைத் துன்புறுத்தத் தக்கதுமானது. அவ்வழியிலுள்ள தனபங்களெல்லாம் அநுபவித்துக்கொண்டு மேலே யின்னுஞ் செல்லுகையில், தாமொரு துயரு மனுபவியாது உன்னருகும் தூதர்கள், அதபதி அதபதி யென்று சொல்லிக்கொண்டுவரை, பாறைமழை சொரிந்தாற்போலக் காற்றினலெறியப்படும் பாறைகளும், பயமுறக் குமுறி விழும் இடிகளும், அவ

* தாவானலம் - சூழ்ந்து பின்தொடரும் நெருப்பு.

யவழுவலுஞ் காயப்படத்தக்க பாணவருஷமும், கண்களைத் திறக்கமுடியாத மின்னல்களும் நக்ஷத்திர விழுகைகளும், நெருப்புமழையும், பெருங்காற்றினால் புழுதிகள் நவத்துவாரங்களையும் மூடிக்கொண்டு வழிதெரியாமல் திக்பிரமைசெய்தலும், மேககர்ஜனையும், ஆயுதவருஷமும், உப்பு நீர் மழையும், அதி சீதளமான காற்றும், அதி உஷ்ணமான காற்றும், சிறுதுசிறு யோசனையில் பலவித பேதங்களையுடைய வழியில், அன்னபானாதிகளின்றி மூடர்களாகிய அப்பாவிகளை நிர்த்தாக்ஷிணியமுடைய இயமகிங்கரர்கள் பலாத்காரமாக இழுத்துக்கொண்டு செல்வார்கள். அப்பொழுது அப்பாவிகள் திக்கற்றுத் தேற்றுவாரற்றுத் தாம் செய்த பாவச்செயல்களை நினைத்தும் சொல்லியும் துக்கித்துப் பிரேதத்துவமடைந்து வல்லிரவின்கண், பெருந் தாகத்தால் நாவும் நெஞ்சுமுலர்ந்து சுஷ்கிதேகமுடையவர்களாய் இயமதூதர்களுடைய அடி உதை குத்துக்குத்து அடிக்கடி பயந்து, பசியாகிய அக்கினியால் தபிக்கப்பட்டு இயமபுரத்தை யடையில், அவர்களை இயமகிங்கரர் செய்யுந் தொழில்களைச் சொல்லுகின்றேன்.

முனிவர்களே! இயமகிங்கரர் அவ்வபாதிகளையுடைய பூர்க்கத்திற் பாவிகளை எவ்வாறு கொண்டுபோவார்களென்னில்:—சிலரை யிருப்புச்சங்கிலியாற் பிணித்தும், சிலரைச் சங்கிலி பாசக்கயிறு முதலியவற்றாற்கட்டியும், சில பாவிகளை நெற்றியில் அங்குசத்தாற் குத்தி அதனைப் பற்றியும், சில பாபாத்துமாக்களை முட்களாற் குத்தியும், சிலரை நெருப்பில் வீழ்த்தியிழுத்தும், சிலரைத் தோள்களிற் பிணித்தும், சிலரை வயிற்றில் அங்குசத்தாற் குத்தியும், சில தீயோரைக்கையிற் கனமான இருப்புக்கட்டிகளைக் கட்டிவிட்டும், சிலரைக் கழுத்தில் அங்குசஞ் சேர்த்தியும், சிலரை நாவில் அங்குசத்தாற் குத்தியும், சிலரை மூக்கினிற் குத்திக் கயிறு கட்டியும், சிலரைக் காதைப்பிடித்தும், சில துன்மார்க்கரை மோவாயைப்பற்றியும், சிலரைக் கைகளினையும் காதுகளையும் உதடுகளையும் காலையையும் சினத்தையும் விருஷணத்தையும் அறுத்து ஹிம்சைசெய்துகொண்டும், குத்தத்தாற் குத்தியும், அஸ்திரங்களால் அடித்தும், ஆகாயவழுத்துத் துடிக்கச்செய்தும், சிலரை முகலத்தால் அடித்தும், சிலரைச் செஞ்சூரியன்போலப் பிரகாசிக்கும் பழுக்கக்காய்ச்சிய இருப்புமுட்களாற் குத்தியும், பிண்டி பாலமுதலிய ஆயுதங்களாலடித்து உதிரமொழுக இலந்தைமுட் புதரிற் தள்ளியும், அங்கிருக்கும் நானவிதமான சிருமிகளாலிட்டுப்பக்ஷிக்கச்செய்தும், மூர்ச்சையுற்றபின் கீழே விழுத்திச் சிறிதுநேரத்தில் மூர்ச்சை தெளிந்து பசிதாகமுற்று அன்னம் வேண்டும் பானம் வேண்டும் நிழல் வேண்டும் எனக் கேட்கும்படி, தானஞ்செய்யாத தீயோராகிய பாவிகள் யமதூதர்களாற் கஷ்டத்துடன் அந்தக் கொடிய வழியாற் தொல்லைபோகப்படுவார்கள்.

தான தருமங்களைச் செய்த புண்ணியர்கள் பசி தாகம் முதலிய தொந்தரையின்றி வேண்டிய விடங்களிலெல்லாம் அன்னம் ஆகாரம் நிழல்

முதலியன குறைவின்றி மனத்துயர் சிறிதுமில்லாமல் சித்தசாந்தத்துடன் இயமபுரத்தை யடைவார்கள். அவ்வாறு புண்ணியர்களும் பாவிகளும் யமாலயத்தை யடைந்தபின்னர், தூதர்கள் தமது தலைவனுகிய இயமதருமராஜனிடஞ் சென்று பிராணிகள் வந்திருப்பதைத் தெரிவித்து இயமன் அப்பிராணிகளைக் கொண்டுவருகவென்று கட்டளையிடப் பெற்றுக்கொண்டு தூதர்கள் தாம் கொண்டுவந்த பிராணிகளை அத்தருமன் சந்நிதியிலிருத்துவார்கள். அப்பொழுது அவர்களில் இயமன் புண்ணியவான்களையுள்ளவர்களைச் சந்தோஷத்துடன் பார்த்து சேஷமலாபங்களை விசாரித்து அவரவர்க்குத் தக்கபடி ஆசனமுதலியன கொடுத்து, நீங்கள் புண்ணியர்களாதலின் மேம்பட்டவர்கள்; நீங்கள் சிறந்த போகபாக்கியங்களை யநுபவிக்கவேண்டியவர்களென்று பலவிதமாக நன்மொழியோடு உபசாரமாகப் பேசி, திவ்வியவஸ்திரம் முதலியசிறந்த போகங்களை யநுபவித்து, இவ்வியமான விமானங்களிலேறி சுவர்க்கலோகத்தை யடைந்து எண்ணிறந்த போகங்களை யநுபவித்து, புண்ணிய முடிந்தபின்னர் சிறிது பாவஞ்செய விரும்பின் இங்குவந்து அதன்பலனை யநுபவியுங்கள் என்று சொல்லுவன். எனெனில், ஆத்துமாக்களுக்கு நித்திரபூதமான புருஷர்கள் இயமதருமனே இவ்வாறு சாந்தமாகவும் தயாளபுருஷனுகவுங் காண்கின்றார்கள்.

பாவகருமங்களையேசெய்துவந்தபாவிகள்எவ்வாறுஇயமதரிசனஞ் செய்வார்களெனில்,கோரமான வக்கிரதந்தங்களுடன் திறந்துகொண்டிருக்கும் வாயும், கோபமிகுதியால் நெரித்த புருவமும், ஊர்த்துவகேசமும், பெரிய நீண்ட மீசையும், உதறிக்கொண்டிருக்கும் பூரித்த உதடும், மலைபோலப் பருத்த பதினெண் புயங்களும், நீலமேகம்போன்ற திருமேனியின் தேகமும், சர்வாங்கங்களையுந் தாங்கிநிற்கும் கைகளும், பலவிதமான தண்டனைசக்தியும், மதித்த மஹிஷவாகனமும், எரித்துகொண்டிருக்கும் பெருநெருப்புபோன்ற விழிகளும், செங்கிறமான வஸ்திரமும், சிவந்த மலர்மாலையும், மேருமலைபோன்றுயர்ந்த தேகமும், பிரளயகாலமேகத்தொனிபோன்ற கர்ச்சனையும், சமுத்திரமுழுவதையும் க்ஷணகாலத்திற் பானஞ்செய்யவல்ல ஆற்றலும், வாயைத் திறந்துகொண்டிருத்தல் பர்வதங்களையெல்லாங் கபளீகரிக்க வல்லவனென்று பயமுண்டாக்கவல்லதும், பேரும் பொழுதே நெருப்புக்கண்டங்கள் சொரிவாண்பபோலக் கடின வார்த்தையும், பிரளயகாலாக்கினிக்குச் சமானமான காலம்பருப்பு, அருணநிறமான காலபாசன், இரிதாந்தன், மாரீசன், நிருமாரி, காளராத்திரி, நானவிதமான பயங்கரமுண்டுசெய்யும் மாயநி ரூபங்கள்முதலியன சமீபத்தில் விளங்கவும், சக்தி - சூலம் - அங்குசம் - பாசம் - சக்கரம் - கத்தி - வஜ்ரம் - தண்டம் - கூரி - அம்பறாத்தூணி - வில் முதலியவற்றைத் தரித்தும், பயங்கரமான கணக்கில்லாத கரிய மலைகள்போலத் தேகமுடைய பல ஆயுதங்களை யேந்திய மஹா வீரர்களான இயமதூதர்களாற் புடைசூழப்பட்டும் விளங்குவதாக இயமதருமராஜனையும் தெரிசிக்கிறவர்களுங் காண்பார்கள். அப்பொழுது இயமன் அவர்களை நோக்கிக் கடுஞ்சொல் கூறுவான்.

பிறர் பொருளை யபகரிக்க விரும்பினவர்களே! ரூபவிசேஷத்தால் அந்நியஸ்திரீகளைப் புணர்ந்தவர்களே! நீங்கள் செய்த கருமங்களை நீங்களே யநுபவிக்கவேண்டும். உங்கள் ஆத்துமாவை நாசஞ்செய்வதற்காகப் பாவகாரியங்களைச் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது என் தனிக்கின்றீர்கள்? அவரவர்கள் பாவத்திற்கேற்ப அவரவர்களே அநுபவிக்கவேண்டும். இங்கே யாவரும் தருவனை வினைதன்புறுத்தமாட்டார்கள் என்று இயமதருமன் கூறுவான். பாவிகளான அரசர்கள் இயமபுரத்தை இவ்வாறு வழிவருத்தத்துடன்சென்று இயமாலயத்தையடைந்தபொழுது, இயமதருமன் அவர்களை நோக்கி, பிரஜைகளைக் கஷ்டப்படுத்திய துராசாரமுடைய அரசர்களே! அற்பகாலும் அநுபவிக்கத்தக்க ஒரு ராச்சியத்தைக் கருதி இராச்சியயோகத்தால் பிரஜைகளை அந்யாயமாகப் பிடித்தபடியால் உங்களுக்கு விசேஷ பாவம் சம்பவித்தது. அதன் பலனை இப்பொழுதுநேருங்கள். பூமி விஷயமாகவும், மனை விஷயமாகவும், புத்திர மித்திரவிஷயமாகவும் இப்பெருந் தீமைகளைச்செய்து இப்பொழுது அவர்களையெல்லாம் விட்டுத் தனியே வந்திர்களே? பிரஜைகளைத் துன்புறுத்துகையில் உங்களுக்கிருந்தவல்லப முழுதுந் தூதர்கையிலகப்பட்டபொழுதே போயிவிட்டனவென்று எண்ணுங்கள் என்றிவைபோலப் பலவகையாகத்தீவர்களை நிந்தித்து உங்கள் கர்மங்களை யநுபவியுங்களெனுஞ் சொல்லுவான். அம் மன்னர்கள் ஒன்றுஞ் சொல்லமுடியாமல் அழுதுகொண்டும், தமது விடங்களை நிந்தித்தும் நிற்பார்கள். அப்பொழுது இயமதருமராஜன் அவர்கள் நிலைமையைத் தருமமாக ஆலோசித்து, அவர்களுடைய பாவமாகிய சேற்றிலைக் கழுவ நினைத்து, தன் தூதர்களாகிய சண்டன், மகாசண்டன் என்பவர்களை நினைத்து, நீங்கள் இவ்வரசர்களைப் பிடித்துக்கொண்டு போய் மூதைப்படி நரகாக்கினியில் விழத்திப் பரிபக்குவஞ் செய்யுங்கள் என்று கட்டளையிட, தூதர்கள் அவ்வரசர்களைப் பற்றிக்கொண்டு கிருகிருவென வேகத்துடன் சுழற்றிக் கீழே விழத்துவதும் மேலே தூக்குவதுமாகச் செய்து, சுபோதைகளிற் கிடத்திப் புரட்டி, இரத்தப்பிரவாயிலிட்டு முழுக்கி, நிச்சேஷ்டையாளராக்கி, மீண்டும் மூர்ச்சை தெளிந்ததின் பின்னர் அவர்களைப் பாவ நீக்கஞ் செய்விக்குநிமித்தம் நரகத்திற்றள்ளுவர்.

முனிவர்களே! நரகங்களிற் சிறந்தவை இருபத்தெட்டு:—அவைலப்தலோகங்கள் வாயிலுக் தாழ்ந்து ஆழமாயிருக்கும். முதலிலுள்ளது கோரம், இரண்டாவது சுகோரம், மூன்றாவது அதிகோரம், நான்காவது மகாகோரம், ஐந்தாவது கோரரூபம், ஆறுவது தலாதலம், ஏழாவது பயாநகம், எட்டாவது காளராத்திரி, ஒன்பதாவது பயோத்சடம், பத்தாவது சண்டம், பதினொன்றுவது மகாசண்டம், பன்னிரண்டாவது சண்டகோலாகலம், பதின்மூன்றுவது பிரசண்டதாநாயகம், பதினான்காவது பத்மம், பதினைந்தாவது பத்மவதி, பதினாறுவது பீஷ்டை, பதினேழாவது பீமப்பிரணயசம்,பதினெட்டாவது கராளம், பத்தொன்பதாவது விகராளம், இருபதாவது வச்சிரம்,

இருபத்தொன்றுவது திரிகோணம், இருபத்திரண்டாவது பஞ்சகோணம், இரு
பத்துமூன்றுவது சுதீர்க்கம், இருபத்துநான்காவது பரிவர்த்துலம், இருபத்
தைந்தாவது ஸப்தபௌமம், இருபத்தாருவது அஷ்டபௌமம், இருபத்தே
முவது தீப்தம், இருபத்தெட்டாவது மாயை என்னும் பெயர்களோடு
மூன்றையே ஒன்றன்கிழொன்றாக விளங்கும். இந்நரகங்களின் தத்தம் பெயரா
லேயே பெருந் தீமை விளைக்கத்தக்கவையென்று தெரிந்துகொள்ளவேண்
டும். இவையோ யாதனைசரீரத்துடன் பாவிகள் தமது பாவத்தின் பயனை
யநுபவிக்கும் ஸ்தானங்கள். இன்னும் இந்நரகங்கள் இருபத்தெட்டனுள்
ளும் ஒவ்வொன்றிலும் ஐயைந்து முக்கிய யாதனஸ்தானங்கள் உண்டு.
அவையாவன:—ரௌரவம், மகாரௌரவம், தமசு, தீதம், உஷ்ணம், சகோ
ரம், மகாதாருணம், பத்மஸஞ்சிவனம், சிவம், மகாதமஸ்ரீலம், சூலாமம்,
கண்டகம், தாரிரவேகம், காளம், விகரானம், பிரகம்பனம், மகாவக்ரம்,
வக்ரம், காலம், பிரகர்ஜனம், ஸூசீமுகம், ஸூகேமி, காதகம், சுப்பிர
பிடனம், சும்பிரோதகம், சுபாகம், கிரகசம், தாருணம், அங்காராரஸி, பஸ்
ணம், மேதப்பிரஹரணம், அஸ்ருக்பிரஸ்ரிதம், தீக்ஷணதண்டம், சகுனி, மகர
சமவர்த்தம், திது, [illegible], பங்கலேபம், பிரதிமாசஸ்ரம், பூத்பவம்,
உச்வாஸம், நிர்[illegible]வாசம், ஸூதீர்க்கம், கூடசால்மலி, பிரதிபத்மம், ஸ்மஹா
காதம், பிரவாஹம், [illegible]னம், மேகம், விருஷம், சல்லியம், சிம்ஹம்,
வியாக்ரம், கஜம், சுவராஜம், நரராஜம், மஹிஷம், அவிகாரம், விருகான
னம், கிரஹர்க்ஷம், மீனவக்ரம், [illegible]ர்ப்பம், கூர்மம், வாயசம், க்ருத்ரம்,
[பருந்து], உலூகம் [ஆந்தை], ஜலௌகம் [அட்டை], சார்த்தூலம்,
விகர்க்கடகம், மண்டூகம், பூதிவக்த்ரம், இரஜிதம், பூதம்ருத்பிண்க, கண
தாமம், கணந்னி, கிருமிபூகம், அக்னிகாலம், பிரதிஷ்டம், ருதிராம்பம்,
ஸ்வபோஜனம், லாலாபக்ஷணம், ஆத்மபக்ஷணம், ஸர்வபக்ஷணம், ஸூதா
ருண்டம், ஸூகண்டம், ஸூசிசாலம், விகடம், கடபூரனம், அம்பரீஷம்,
கடாஹம், கஷ்டம், வைதரணிநதி, சதப்லோகசயகம், ஏகபாதம், பிரபூர
ணம், அதிதாலவனம், கோரம், அஸ்திபங்கம், ஸூபூரணம், நிலாதஸி,
சுயந்திரம், கூடபாசம், பிரமர்த்தனம், மகாரௌர்ணி, சுரௌர்ணி, தப்தலோர்க
மயம், பர்வதத்திலிருந்து விழும் ஜலப்பெருக்கு, மலவர்த்தகம், மூத்திர
விஷ்டம், சுக்லபம், தாரகூபம், சீதலம், முசலம், உதாலம், யந்திரம், சிஜ,
சாகடம், லாங்கலம், தாலபத்ரம், கஹனம், மகாசகடமண்டபம், ஸம்மோ
ஹம், ஹுண்டிபாகம், தப்தம், மலயம், குடம், பஹூனுக்கம், மகாதுக்கம்,
கலமலம், ஸ்யாமலம், மலம், ஹாலாஹலம், விரூபம், கரூபம், பயாநகம்,
ஏகபாதம், திரிபாதம், திவிரம், அர்விசரம் என்று சொல்லப்பட்ட பெய
ருடையனவாய் முறையே அவ்விருபத்தெட்டினும் வையத்தாகவுள்ள பிர
தானஸ்தானங்களாம். அம்மகாநரகங்களிருபத்தெட்டினும் வைகக்கொரு
கோடியுண்டு. ஆதலின் நரகங்கள் இருபத்தெட்டுகோடியென்பர்.

இவ்வகைய இருபத்தெட்டுக்கோடி நரகங்களிலும் ஒவ்வொன்
றினும் ஐயைந்து பிரதானஸ்தானங்களாக ரௌரவம்முதல் அர்விசரமீ
றாகநரக முக்கியஸ்தானங்கள் தூற்றுநாற்பதுகோடி. இந்நரகங்களிலே
பாவிகள் பதைபதைப்பார்கள். அவரவர்கள் கர்மகாரமெய்துமாயையில்
நாஞ்சித பாதகனே யநுபவிப்பதில் மனஞ்சகியாது இங்கும் அங்கும் ஓடி
யலைவர். அவர்கள் கர்மத்திற்கேற்ப இயமதூதர்கள் அவர்களது கால்கை
களை உறுதியாகப் பிடித்துக்கொண்டு, பழுக்கக் காய்ச்சிய இரும்புச்சங்
கிலிகளாற் கட்டி, பெருமரத்தின் உயர் கிளைகளில் தூக்கி, முழுபலத்துடன்
ஊசலாட்டுவதால் அவர்கள் பத்துக்காத தூரத்திற்குக் குறையாமல் ஒவ்
வொரு புறமும் போயுந் திரும்பியும் மூர்ச்சையடைவர். தீதுலேயன்றி
இருப்புப்பாறைகளை அவர்கள் கால்களுளிற் கட்டிச் சுக்கச்செய்வர்.
அப்பொழுது அடிக்கடி தாங்கள் செய்த பாவகருமங்களை யெண்ணிப் பரி
தவிப்பர். எரிந்துகொண்டிருக்கும் அங்குசத்தாலும், இருப்புத் தண்டங்
களாலும் உடல் முழுதும் சுறுக்குவர். பின்னர் நெருப்பைப்போற் சுடும்
படியான ஓர் பொடியைத் தேகத்திற் பூசுவர். தீதுனல் பின்னை தேக
மடைவார்கள். மீண்டும் அப்பாவிகளின் ஜீவங்களைத் தனித்தனி
கொய்து காய்ச்சியுள்ள இருப்புக்கடாரங்களிற் புரட்டுவர். மலகுபங்களி
லும், கிருமி கூபங்களிலும் மேதைக்கிரிதீஸ்ரீம, உதிரவாவிகளிலும்,
அப்பாவிகளை வீழ்த்துவர். அங்கிருக்கும் கூர்மையான வாயினையுடைய
கிருமிகளும், இருப்புத்துண்டங்களையுடைய காகங்களும் அவர்களைப் புசிக்
கும். நாய்கள் கோநாய்கள் மிகுந்த பயங்கரமான சிங்கமுகவியமிருகங்கள்
பலவிதமாகக்கடித்துத் தின்புறுத்தும். பின்னர் அங்காராரஸியென்னுநரகத்
தில் இவர்களை மீன்போலச் சமைப்பார்கள். செக்கில் எள்ளைப்போட்
டாட்டுவதுபோல, சக்ரிகமென்னுநரகத்தில் இவர்களைப்போட்டுத்திருப்பி
உருண்டையாக்குவார்கள். மீண்டும் அவ்வுருண்டையை மிகவுஞ் சுமை
யுடைய இருப்புச்சட்டியிற் போட்டு வறுப்பார்கள். அதன்பின்னர் கொ
திக்குக்கொண்டிருக்கும் எண்ணெயிலிடுவார்கள். அதுதியவர்த்தைகளை
சொன்னவனுடைய நாவினை அதிகத் துண்டுகளாகக் கொய்து பழுக்கக்
காய்ச்சிய இருப்புச்சலாகையால் நாவிலும் மார்பிலுங் குத்துவார்கள்.
பொய்நூல்களைப் பழக்குவித்தவனுடைய நாவினை, சுடுகின்ற சூட்டுக்
கோலினுற் பலவிதமாகத் தண்டிப்பார்கள். தாய் தந்தை குரு முதலிய
பெரியோரைப் பயமுறுத்திய பாவிகளது மூக்கினை வச்சிர மூக்குக்களை
யுடைய நீரட்டைகளாற் குத்தவிடுத்து நெருப்புப் பொடிகளை அவர்க
ளுடல்முழுதும் பூசித் தகித்து, கொதிக்கும் எண்ணெயை முகத்திலெ
றிந்து அதிகவிதமான ஆயுதங்களாலடித்து மலமூத்திரக் குழிகளிற்
தள்ளிவிடுவார்கள். சிலரை வினையில் துண்டுசெய்யத்தக்க சிகரநரகத்தி
லிடுவார்கள். அப்பொழுதே அதிலிருக்கும் அரக்கர்கள் அவர்களை வினைச்
கேற்பத் தோன்றியிருந்திலின், துண்டுதண்டமாகச்செய்த தன்னை மாமிச

ஹதியே புரித்து, தங்கள் உதிரத்தையே பானஞ்செய்வார்கள். அதிதிமுத லாஞருக்கு அன்னபானதிகளருளாது தன் வயிற்றுப்பாம்பு சகிதமாய்ப் போஜனஞ்செய்துகொண்ட பாவிகளை வாளினும் கருமபைத் துண்டித்தல் போலத் துண்டித்து அதிதாலவனமென்னும் நரகனிசேவத்திலிட்டு ஊசிக ளால் உடல்முழுதுங் குத்தி யெரித்துகொண்டிருக்குஞ் சூலத்தின்முனையிற் கழுவேற்றிப் பலவிதமாகக் கஷ்டப்படுத்துவர். பின்னர்கிருச்வாசமென்னு நரகத்தில் வீழ்த்திச் சுவாசமும் விடவொட்டாமல் வைத்திருப்பர். அப் பொழுதும் அப்பாவிகளிறவார். யாதனுதேகமானது துன்பமனுபவிக்கவும் சுகமதுபவிக்கவும் பாத்திரமாயிருக்குமேயன்றி, துண்டத்துண்டமாகவெட் டினாலும் பொடியாகச் சூர்ணித்தாலும் மொத்தமாக அரைத்தாலும் அழி யுந்தன்மை யுடையதன்று.

பின்னர் அவர்களை யெடுத்துப் பிரக்ஞைவரச்செய்து வாதகா னமென்னும் நரகத்திற் சிறிது காலமிருத்தி, அதன்பின்னர் கனவான் களும் பிழுந்துவிடுத்து துன்புறும் இரௌரவம் என்னும் மகாநரகத்தில் வீழ்த்தி, அப்பாவிகள் துக்கமுறும்படி பலவித வாதனைகளைச் செய்து கொண்டு, அவர்களுடைய முகம் குய்யம் விழி கழுத்து மார்பு நெஞ் முதலிய அவயங்களில் பழுத்தகாய்ச்சிய இருப்பு முளைகளைக் கொண்டு குத்தி, அடிக்கடி நெருப்புச் சமானமான கனைகையுடைய மணலில் வீழ்த்தி யுருட்டி யெடுத்து, கொதித்துக்கொண்டிருக்கும் அரக்குக் கடா ரத்திலிவர்களை. பாதாரசங்களைஞ் செய்தவர்களை இயமதூதர்கள் விளி த்து, பூர்வம் அவனைனைக்த பெண்வடிவாகச் செய்யப்பட்டுப் பழுக்கக்காய்ச்சிய பதுமையை முன் இவனை ஆலிங்கனஞ்செய்துகொள் டது போலவே இப்பொழுதும் அதையாய் ஆலிங்கனஞ்செய்துகொள்க வென்று அனேயச்செய்வார்கள். அதுபோலவே அன்னியபுருஷனை யணைத் ஸ்திரீயையும் அழைத்து அவ்வாடவனுருவம்போல எரிஞனைச் செய்த பதுமையைப் பழுக்கக்காய்ச்சி அவனை அப்பதுமையை யணையச் செய் வார்கள். அவள் அப்பாதகனையச் சமீபாது இங்குமங்கும் ஓட, இயம தூதர்கள் அவளைப் பிடித்து வந்து நீயுன் கணவனை வஞ்சித்துப் பிற புருஷனை யிச்சித்தனையன்றே ? இப்பொழுதும் அவனை யணைகவென்று அணையச்செய்து பின்னர் அவனை இருப்புப்பாத்திரத்திலேற்றித் தீயிட்டெ ரிப்பார்கள். வேறு சிலபாவிகளை உரலிலிட்டுப் பொடியாக இடித்து அத்த காரமான நிணங்களில் வீழ்த்துவர். அங்கிருக்குங்கிருமிகள் அவர்களைப்பல விதமாகத் துன்புக்கும். அதன்பின்னர் * கூபாகபத்தில் தள்ளுவார்கள். மீண்டும் அவர்களை யகந்தமாகத் துன்புறுத்தி அவர்கள் சுயாபாவம் ஒடுகை யில் கட்டிக்கொண்டுவந்த வீழ்த்துவர். மானிடன் துன்மார்க்கர்களாகர் கள் ஒருவர் கீர்த்தியைக் கெடுத்தவர்கள் முதலானவை நரகனிசேதனங்களை விசேஷமாக அநுபவிக்கச்செய்து இருப்புச் சங்கிலிகளாற்கட்டி மறு

* கூபாகம் - ஓர்வகையப்பு; இது மிகச் சுடுநீருடையது.

ஜ்வாலமென்னும் நரகத்தில் கிருமியாதி ஜந்துக்களாற் பலவித துக்கங்களி யெல்லாம் அனுபவிக்கச்செய்து அவர்களுயிர்வருத்தும்படி எண்ணெய்க் கொப்பறைகளிலேற்றி யெரித்து மகா உப்புமிருந்த நீரைக் குடிக்கச் செய்து அவர்கள் பாவமொழியும் வாயையும் முண்மயமான பாவிறக்கற் களிலிட்டுச் சந்தனமரைப்பதுபோல அரைப்பார்கள். அப்பொழுதும் அவர் கள் நோகங்களினின்றுநீங்கி விழுந்த துண்டுகளிற் றோன்றிய புழுக்கள் அவர்களைப் பலவிதமாகக் கடித்துக் கஷ்டப்படுத்தும். பின்னர் அர்க்கந்த மிருந்தமாமிசாசியென்ய நரகத்தில் வீழ்த்துவர். அதன் பின்னர் மலைப்பா றைகளைமெதிர்ந்து அவர்களையடித்தும் அவர்களால் மலைப்பாறைகளை யடித் தும், மீண்டும் அதிதாருணமாகவும் ஊர்த்துவபாதமாகவும் அப்பாவி களைநிறுத்தி அடியில் அக்கினியைக் கொளுத்தியும், பழுக்கக்காய்ச்சிய இருப்புக் குண்டுகளை விழுங்கச் செய்தும், விழுங்காவிடில் உலக்கையா விடித்து வாயினுட் புகுத்தியுத் துன்புறுத்துவர். சிதிபருமானுடைய திருக்கோயில் புஷ்பவனம் நடாகம் கின்று முதலிவற்றிற்குப் பிரா மணரது வீட்டிற்கும் உபத்திரவமுண்டுசெய்து அதிவிடங்களைஅபகரித் துக்கொண்டு, தம்முடைய உபயோகமாக எள்ளுண்ணும் பாதுகை அப்பியங் கனம் கிரீடை மைதுனம் குரும் முதலிய தூரியங்களில் அவ்விடங்களில் செய்து கொண்டிருந்த பாவிகள் அநேக விதகோரமான கரும்பாலை போன்ற நரகங்களையடைந்து பிரளயகாலம்வரையில் கோரமிருத்த நரக வேதனையை யநுபவித்துக்கொண்டுப்பார்கள். பெரியோர்களை நிந்தனை செய்கையிற் கேட்டுக்கொண்டிருந்தவனுடைய காதுகளில் உஷ்ணமேழிய இருப்பு முளைகளை யடித்திறக்கி சயமுதலிய உலோகங்களையுருக்கி அவனது காதில் வார்த்தும் அதிகவிதமானதுன்பங்களை யநுபவிக்கச்செய்வார்கள். தத்தமது ஓவ்வோரிந்திரியங்களாற் செய்த பாவங்களுக்கும் அவ்வாறே அவ்வவ் விந்திரியங்களை வருத்தி காணவிதமான கஷ்டங்களை யநுபவிக்கச் செய்வார்கள். பரஸ்திரீகளை விரும்பி அவர்களைப் பெறுதல் அசரித்திய மென்று, கைகளாற் சமயத்திற் பரிசித்தல் முதலியன செய்தவர்கள் அக் கினிமயமான இருப்புப்பொடிகளைக் கையிற்றருங்கி கூதாராதிகளால் உடல் முழுவதும் பூசப்பெற்றுப் பலவிதமான யாதனுஸ்தானங்களில் பலவித மானகஷ்டங்களை யநுபவிப்பார்கள். காய்தக்தையர்களைக்கையாலடித்தும், காலாலுதைத்தும், கண்ணைப் பயமுறுத்தியும், துன்புறச்செய்தவர்களும், பரஸ்திரீகளைக் காமாதுரத்தால் பார்த்தவர்களும் ஆயிபாவிகளின் விழி களில் நெருப்புமயமான ஊசியாற்குத்தி கூதாராதிகளை புடல்முழுதும்பூசி, முறையே அநேக நரகங்களில் அநேகவிதமான பாதனைகளை யநுபவிக்கச் செய்வார்கள்.

தேவர் - குரு - அக்கினி - பிராமணர் முதலியோருக்குச் சமர்ப் பியாமல் முறைதவறிப் புசித்தவனுடைய காலையும் முகத்தையும் காய்ச் சிய இருப்புச்சலாகைமுதலியவற்றாற் குத்துவர். சிவபெருமானுடைய திரு

வனத்திலுள்ள மலரை ஆசையுடன் திருடிக்கொண்டுபோய்த் தலையிற் சூடிக்கொண்டவனுடைய சரத்தையும் நாவினையும் அரசக இருப்புமுளைகளாற்குத்தி, கூரராதிகளைப்பூசி, சமஸ்தவேதனைகளையும் அநுபவிக்கச்செய்வார்கள். மகாத்மாக்களையும்குருவையும்அக்கினியையும் சிவபெருமானையும் சாசுவதமான மதுவாதி தர்மசாஸ்திரங்களையும்நிந்தித்தவர்களுடையமார்பு கழுத்து நாக்கு பற்சந்துகள் தவடை உதடு சிரம் முதலிய அவயவங்களில் அக்கினிஸ்புடமான முத்தலையுடைய இருப்பு முளைகளைவைத்து இருப்புத் தண்டங்களால் மேலே யடித்திறக்குவார்கள். பின்னர் எரிந்துகொண்டிருக்கும் கூரத்தாற் பூசி உடல் முழுவதும் சித்திரவதைகள்செய்து எல்லாநரகங்களிலும் எல்லாத்துயரங்களையும் அநுபவிக்கச் செய்வார்கள். அக்நியருடைய பொருளைத்திருடினவனும், பிராமணனுடைய பொருளையும் சிவபெருமானுடைய பொருள்களையும் கவர்ந்தவனும், இயமதூதர்களுடைய வாயுஷ்டிகளாலும் கால்களாலும் இடிக்கப்பட்டும் உதைக்கப்பட்டும் தத்தம் கைகால்களிலுண்டாகிய அதிக கஷ்டமான துன்பமாகிய நரகவேதனைகளை நுகர்வார்கள். சிவாலயத்தருகிலும் தீர்த்தவனத்தருகிலும்மலமூத்திரவிசர்ஜனஞ்செய்த பாவிகள் இருப்புலக்கைகளால் தமது சிரசுவிருஷணங்களில் அப் பொழுதிக்கப்பட்டு, இருப்பூசிகளாற் குத்தப்பட்டு கூரம் பூசப்பெற்று, சேர்ந்திருந்த எண்ணெயை அவ்விரண்டிடங்களிலும் ஊற்றப்பெறுவார்கள். மனதுக்கு விருப்புண்டாகவேண்டு மென்னும் இச்சையே காரணமாக ஜனங்கள் பாவங்களைச்செய்து அவற்றால் விளைந்த நரகவேதனைக்கு ஆளாகிறார்கள். பொருளிருந்தும் உலோபத்தால் தானஞ்செய்யாமலும், அதிக கஷ்டப்பட்டு வந்து தன் வீட்டை யடைந்த அதிதியை அவமதித்தும் இருப்பவன் மனவாக்குக் காயங்களாற்குத்தப்பொறுத்தாத பெருங்கஷ்டமான நரகத்தையடைவான். சுவானங்களுக்கும் காகங்களுக்கும்பலியிடாது அன்னம் புசித்தவனுடைய முகமானது வச்சிரத்தினால் விகாரமுறச்செய்யப்பட்டு, பலவித புழுக்களாலும், இருப்புத்தண்டங்களைய மூக்கினையுடைய காகங்களாலும் பகிக்கப்பட்டுப் பலவித உபத்திரவத்துடன் வருந்துவான். நரகத்திற்குப் பலியிடுகையில் "ஶ்யாமஶ்சஶபளஶ்சைவ யமமார்க்காதரோதகௌ | யௌஸ்வஸ்தாப்யாம் ப்ரயச்சாமி தெளக்ருண்ஹீதமிமம்பலிம்"—யமமார்க்கத்தைத் தடைசெய்யும் ஶ்யாமம் ஶபளமென்னும் இரண்டு நாகங்களின் நிமித்தமாகப் பலியைக்கொடுக்கின்றேன் ; அத்தப்பலியை அவ்விரண்டும் ரக்ஷிக்குமாக" என்று சொல்லிக்கொண்டு பலியிடவேண்டும். வாயத்திற்குப் பலியிடுகையில் "ஐந்த்ரவாருணவாயவ்ய யாம்யாநர்ருதவாயஸாஃ | வாயஸாஃ புண்யகர்மாணஸ்தே மேக்ருண்வந்த்விமம்பலிம் || ஐந்திரம் வாருணம் வாயவ்யம் யாம்யம் என்னும் பெயருடன் கறைந்துகொண்டிருக்கும் புண்ணியகருமங்களைச்செய்த வாயஸங்கள் யான் கொடுக்கும் பலியைக் ரக்ஷிக்குமாக" என்று சொல்லிக்கொண்டு பலியிடவேண்டும். பிரயத்தனபூர்வமாகச் சிவ மூலமந்திரங்களாற் சிவபெருமானை யாராதித்துப் பின்னர் விதிப்படி அக்கினிகாரிய

முடித்து, அதன் பின்னர் பலியைக்கொடுத்தவர்கள் இயமதண்டனை பெறுமாட்டார்கள். அவர்கள் சுவர்க்கபதவியை யடைவார்கள். ஆதலின், நாடோறும் பூமியில் நான்கு மூலைகளையுடைய மண்டலஞ்செய்து, அம்மண்டலத்தைக் கந்தபுஷ்ப தூபதீபங்களாற் பூசித்து ஈசானதிக்கில் தங்வந்தரிக்கும், கிழக்குத்திக்கில் இந்திரனுக்கும், தென்திசையில் யமனுக்கும், மேற்றிசையில் வருணனுக்கும், நைருதத்தில் பிதுரர்க்கும், சிற்த்திசையில் சூரியனுக்கும், பூமியில் தாதா - விதாதா - துவாரபாலகர் - சுவானங்கள் - சுத்திசிஸ் - வாயசங்கள் முதலானருக்கும் பலியைக் கொடுக்கவேண்டும்.

தேவர் - பிதுரர் - மாதுடர், காணப்படாத பிரேதத்தருமடைத்து வாய்சரூபமாக இவ்வாழ்வோனே யாச்சிரயித்திருத்தலின், வாயச முதலியவற்றிற்குப் பலியிடவேண்டியது ஆவசியகம். சுவாஹாகாரம் - சுவதாகாரம் - வஷட்காரம் - ஹந்தகாரம் என்னும் நான்கும் தேவுவிற்குடைய ஸ்தனங்கள். அவற்றுள் சுவாஹாகாரமென்னும் ஸ்தனத்தைத் தேவர்களுக்கும், சுவதாகாரமென்னும் ஸ்தனத்தைப் பிதுரர்களும், வஷட்காரமென்னும் ஸ்தனத்தைப் பூதேசுவரர் முதலிய இதர தேவர்களுக்கும், ஹந்தகாரமென்னும் ஸ்தனத்தை மாதுடரும் எப்பொழுதும் பானஞ்செய்கிறார்கள். ஆதலின் மாதுடன் பசுவைச் சிரத்தையோடு நாடோறும் விதிபூர்வமாகப் பூஜிக்கவேண்டும். அவ்வாறு செய்வோனுக்கு அத்தேனு அக்கினிகாரியத்துக்குரிய பஞ்சகௌவியங்களைக் கொடுக்கும். தேனுவைப் பூஜியாத நரகஸ்தன் தாமிஸ்ரம் [அஞ்ஞானம்] என்னும் நரகத்தை யடைவான். ஆதலின் அவசியம் கோபூஜைசெய்யவேண்டுமென்னர் ஒரு கூவணகோமேனும் அதிதியின் வருகையைப் பார்த்திருக்கவேண்டியது. நாளொன்றுக்கு ஒரு நாமத்தில் வசிக்கும் பூர்ணையத் திவ்வியமான அன்னபானாதிகளுடன் தனது சக்திக்கேற்றபடி தன்னுடன் போஜனஞ்செய்விக்கவேண்டியது. ஒருவன் வீட்டிற்குவந்த அதிதி உணவின்றிச் செல்வானாயின், அவ்வதிதியின் பாவம் நரகஸ்தனையும், நரகஸ்தன் பெற்ற புண்ணியம் அதிதியையுஞ்சேரும். அதிதி பூஜை செய்யாது அவனுடன் தன்வசையில் புசித்தவன் நரகத்தில் இருப்புச்சங்கிலியாற் கட்டப்பட்டு நெடுங்காலந் துன்புற்று விழுந்துகிடப்பான். அப்பொழுது இயமதண்டலாவர் அவன் மாமிசத்தையே யறுத்து அவனை யுண்ணச்செய்தும், அவனுதிரத்தையே அவனைப் பானஞ்செய்யச்செய்தும் கஷ்டப்படுத்துவர். பதிதாசங்களுடன் பலவித நரகவேதனையையடைவான். விசேஷமான பாவத்தையும் சிறிது புண்ணியத்தையுஞ் செய்தவனும், விசேஷமான புண்ணியத்தையும் சிறிது பாவத்தையுஞ் செய்தவனுமடையுங் கதியையுஞ் சொல்லுகின்றேன். அதிகமான பாவஞ்செய்தவன் தான் செய்த சுவல்ப புண்ணியத்தின் பலனை முதலில் அநுபவிப்பான். அவன் புண்ணியபலனை யநுபவித்தாலும் அது அவனுக்குச் சுகமாகத் தோற்றமாட்டாது. அவனது புண்ணியம் குறையக்குறையச் சுகமுங் குறைந்து பாவாநுபவம் பின்னர் விளைவில் சம்பவிக்கும். உபவாசமிருந்து மகா

புண்ணியங்களைச்செய்த இல்வாழ்வோன் தான் செய்த சுவல்ப பாவ பலனை முதலிலநுபவிப்பினும், மகா தனவந்தனுக்குக் கொஞ்சங் கஷ்ட மனைந்தகாலத்தில் அது தோன்றுதுபோல இலேசாக அநுபவித்துப் பின்னர் புண்ணியவசத்தால் விசேஷமான சுகங்களை யநுபவிப்பான். புண் ணியபாவங்களிரண்டும் தம்மைச் செய்தவர்கள் அனுபவிக்கும்படி ஒன்று அநர்த்தமாக விருத்தியாகும்.

பாவிகள் பெறுந் தண்டனையுரைத்தது

முற்றிற்று.

இருபதாவது

புண்ணியர் பெறும் பதவியுரைத்த அத்தியாயம்.

வேதவியாஸபகவான் ஸநத்குமாரமுனிவரை நோக்கி வினவுகின் றார்: தருஷியே! பாவிகள் பெருந்துக்க மநுபவித்துக்கொண்டு இயம புரத்தை யடைவரென்கூறியருளினீர். இயமலோகத்துக்குச் செல்லு வோரைச் சுகமாகச் செய்விக்கத்தக்க தருமங்களிவையெனக் கூறியருள வேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரமுனிவர் வியாஸமுனிவரை நோக்கி, அவற்றையுஞ் சொல்லுகின்றேன் சாவதானமாகக் கேளுமென்று சொல் லத்தொடங்கினர். வியாஸமுனிவனே! சாந்திரங்களை யநிக்கிரமித்துச்செய் யும் அசுபகர்மங்களும், சாஸ்திரயுக்தமாக விளங்குஞ் சுபகர்மங்களுஞ்செய் தோர் அவற்றின் பலனை அவசியம் அநுபவித்தேதீரவேண்டும். ஆதலின் சுகத்தைக்கொடுக்கவல்லதருமங்களைச்சொல்லுகின்றேன்: இவ்வுலகத்தில் சாந்தமான மனத்துடன் தயையோடு சாஸ்திரசம்பந்தமான தருமங்களைச் செய்வோர் யாவரும் இயமமார்க்கம் மகா பயங்கரமாகவிருப்பினும் தாம் செல்லுகையில் சுகமானதாகவே காணப்படுவர். அவ்வகைய சுகமான வழியால் இயமபுரத்தை யடைவர். வேதியர்களுக்குச் செருப்பையாவது பாதுகையையாவது தானஞ்செய்தவன் சிரேஷ்டமான குதிரையிலேறிச் சுகமாக இயமாலயத்தை யடைவான். பிராமணனுக்குப் பக்தி சிரத்தைக ளுடன் குடையைத் தானஞ்செய்தவன் பட்டுக்குடை பிடித்துக்கொண்டு இயமமார்க்கத்தைக் கடப்பான், பல்லக்கு தானஞ்செய்தவன் திவ்விய மான இரதத்திலேறிக்கொண்டு இயமமார்க்கத்தைத் தாண்டுவான். கட் டில்முதலிய படுக்கைகளைத் தானஞ்செய்தவன் சுகமாக இயமமார்க்கத் தைத் தாண்டுவான். வீதிகளில் விருக்ஷங்களை வைத்து வளர்த்தவனும், கந்தவனங்களையுண்டுசெய்தவனும், தோப்புகள் வைத்துநிழலுண்டாக்கின வனும், புஷ்பவிமானங்களிலேறி இயமமார்க்கத்தைக்கடந்து சுகமாக இய மாலயத்தை யடைவர். தேவாலயங்களையும் அநாத மண்டபங்களையும் சத் திரங்களையும் முனிவர்களுடைய ஆச்சிரமங்களையுஞ் சீர்வையாகச் செய் வித்தவர்களும், தேவர் அக்கினி குரு பிராமணர் தாய் தந்தையர்முதலா

னோர் காடோறும் பூஜித்தவர்களும் தாம் விரும்பியவகையே சுகமாக இயமமார்க்கத்தைக்கடந்து செல்லுவர். தீபதானஞ் செய்தவர்கள் சோதி மயமாகவிருக்க இயமமார்க்கத்தைக் களிப்புடன்தாண்டுவர். சத்திரஞ்சாவ டிகள் கட்டுவித்து வழிச்செல்வோரை யாதரித்தவர்கள் சிறிதுந்தடை பின்றிச் சந்தோஷத்துடன் இயமவழியைத் தாண்டுவர். மந்திரோபதே சஞ்செய்த குருவைப் பக்தியோடு பணிவிடை செய்துவந்தவன் இயம மார்க்கத்தில் தாம் விரும்பியபடி திவ்வியமான தோப்பு குளம் பூந்தோட் டம்முதலியன விளங்க, சந்தோஷத்துடன் போவான். கோயிற்றுரை தூக்கித் தூக்கொண்டுவந்து தன் வீடுசேர்ந்த வொருவனை யாதரித்து மருந்துமுத லியவற்றால் அவனைச் சுகப்படுத்தினவன் சுகத்தோடு இயமமார்க்கத்தைக் கடப்பான். பிராமணருக்குக் கோதானஞ்செய்தவனும், பிராமணர்களை அன்னபானாதிகளால் திருப்திசெய்தவனும், இயமமார்க்கமுழுதிலும் இஷ்ட காமியங்களை யநுபவித்துக்கொண்டே செல்லுவான். வேதியனுடைய கால் களைச் சுத்தஜலத்தாற் கழுவிப் புனிதஞ்செய்வோர் குளிர்ந்த பூஞ்சோலை வழியாகக் குதிரையின்மீதேறி இயமவழியைத் தாண்டுவர். வேதியருடைய கால்களைக் கழுவி வஸ்திரங்களாற் றுடைத்து அன்னபானாதிகளளித்து, இடங்கொடுத்துபகாரஞ்செய்தவன், சந்தோஷமாக இயமமார்க்கத்தைத் தாண்டி, இயமனால் மரியாதை செய்யப்பெறுவான். நவரத்தினங்களையும் சுவர்ணத்தையும் அந்தணருக்குத் தானமளித்தவர்கள் கஷ்டமான வழி முழுதுஞ் சுகமாகத் தாண்டிச்செல்வார்கள். வெள்ளியாற்செய்த இடபத் தைத் தானஞ்செய்தவன் திவ்வியமான வாகனங்களிலேறிப்போவான். பூமிதானஞ் செய்தவன் சுமையான வழியாகச்செல்லுவான். இவ்வாறு நல்ல சௌக்கியத்துடன் சென்று இயமதரிசனஞ்செய்து சுவர்க்கபோகங் களை யநுபவித்துக்கொண்டிருப்பார்கள். முன் சொல்லிவந்த எல்லாத் தானங்களிலும் அன்னதானமே சிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில், அப்பொழுதே பிரீதியையும் திருப்தியையும் உண்டுசெய்யவல் லதும், மனோகரமானதும், உடலுக்கு வலிமையையும் புத்தி விருத்தியையும் உண்டாக்கத்தக்கதுமாம். ஆதலின் வியாஸமுனிவனே! அன்னதானத்திற் குச் சமானமான தானம் உலகத்திற் பிறிதொன்றில்லை. அன்னத்தினா லேயே பூதங்களெல்லாம் ஜீவிக்கின்றன. அன்னமில்லாதபக்ஷத்தில் சகல ஸ்தாவரஜங்கமபூதங்களுமழியும். உதிரம் மாமிசம் நிணம் சுக்கிலம் முதலியன அன் னத்தினாலேயே பெருகுகின்றன. அன்னத்தாலுண்டான சுக்கிலத்தினா லேயே பூதங்கள் உண்டாகின்றன. இத்தியாதி நியாயங்களால் சராசரப் பிரபஞ்சமுழுவதும் அன்னமயமாகவே விளங்கும். அன்னமின்றிப் பசியா யிருப்போருக்கு, பொன் இரத்தினங்கள் குதிரைகள் யானைகள் ஸ்திரீகள் புஷ்பமாலைகள் சந்தனமுதலிய திவ்விய வஸ்துக்களைக் கொடுப்பினும் ஆனந்தமுண்டாகமாட்டாது. வயிற்றிலிருப்போரும்பிறந்தவர்களும்பாலர் சனும் விருத்தர்களும் யக்ஷனர்களும் தேவர்களும் அசுரர்களும் ஆகாரத்

ஜீதயே கோருகின்றார்கள். பசியானது எல்லா நோய்களிலுஞ் சிறந்து முற்பட்டுள்ளது. பசியாகிய வியாதி அன்னமாகிய அவஷதத்தால் நிகிக்கின்றது. பசிக்குச்சமானமான துக்கமும் வியாதியுங்கிடையா. நோயற்றிருப்பதுபோன்ற சௌக்கியமும், குரோதத்தைப்போன்ற சத்துருவுங்கிடையா. அன்னதானத்தாலுண்டாகும் புண்ணியம் அளவிட்டுச்சொல்லிமுடியாததாதலால் பசியாகிய அக்கினியால் தஹிக்கப்பட்டுப் பிராணிகள் யாவும் இறக்கவேண்டியதுதானதலின், அன்னத்தைக் கொடுத்தவனே பிராணனைக் கொடுத்தவனுவான். பிராணனைக்கொடுத்தவன் எல்லாவற்றையுங் கொடுத்தவனுவான். ஆதலின் அன்னதானஞ்செய்தவன் தானங்களெல்லாவற்றையுஞ் செய்த பலனை யடைவான். ஒருவனுடைய அன்னத்தைப் புசித்துச் சிலித்துத் தர்மமார்க்கத்தில் நடப்பவன் சம்பாதித்த தர்மத்திற் பாதி தருமம் அன்னமளித்தவனுக்கும், பாதி தருமம் அதனைச்செய்தவனுக்குஞ் சித்திக்குமென்று தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. திரிலோகங்களிலுமுள்ள இரத்தினங்கள் ஸ்திரீகள் வாகனங்கள் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்கள் யாவும் அன்னதாதாவுக்கு இவ்வுலகத்திலேயே கைகூடும். அறம் பொருளின்பம் வீடென்னும் நால்வகைப் புருஷார்த்தங்களையுமடைதற்குத் தேகமே முக்கியமான சாதனம். அன்னமே பிரமம். அன்னமே விஷ்ணு. அன்னமே சிவம். ஆதலின் அன்னதானத்தைப்போலச் சிறந்த தானம் திரிலோகங்களிலுந் திரிகாலங்களிலுங்கிடையாது. திரிலோகங்களுக்கும் ஜலமே பிராணமயம். அதுபுனிதமானது அமிர்தமானது சமஸ்த ரசங்களுக்கும் பிராணபூதமானது. ஒருவன் எல்லாப் பாவங்களையுஞ் செய்தவனையினும், பின்னர் அன்னபானாதிகளைத் தானஞ்செய்வானையின், அவன் அப்பாவங்களினின்று நீங்கிச் சுவர்க்கலோகத்திற்குப் போவான். அன்னதானம் பானதானம் கோதானம் வஸ்திரதானம் பூமிதானம் குடைதானும் ஆதனதானம் பாதுகாதானமென்னுமெட்டும் பிரேதலோகத்திற் சிறந்தபலனை யனிக்குந் தானங்களென்று சொல்லப்படும். இவை போன்ற விசேஷ தானங்கள் இயமபுரத்தில் சுகத்தை யநுபவிக்கத்தக்க பலனளிக்க வல்லவையாயகந்தமுள்ளன—என்று கூறிய ஸாத்குமாரமுனிவரை நோக்கி, வியாஸமுனிவர் ஸ்வாமி ! அப்பிரேதலோகம் மகாகஷ்டமானது. அவ்வகைய வுலகத்தில் சுகத்தையடைய வேண்டியிவர்கள் மேற்கூறிய சிறந்த தானங்களைச்செய்து அப்பெருங்கஷ்டங்களை நீங்குவரென்கூறக் கேட்டு, மிகவும்அஞ்சுகின்றேன். ஆதலின் சுகமானது எதனுண்டாகுமோ அதனையும் போதித்தருளவேண்டுமென்று கேட்க, ஸாத்குமார முனிவர் கூறலாயினர்.

வியாஸமுனிவனே ! ஆச்சரியகரமான விஷயத்தைக்கேட்டனை ; நீ விரும்பியபடியேசொல்லுகின்றேன். எவன் எவ்வகைக்கர்மத்தால் எவ்வகைக்கதியையடைகின்றானோ அவன் அக்கர்மத்தால் அக்கதியையேமரணமடைந்த பின்னும் அநுபவிப்பான். தவஞ் செய்வதால் சுவர்க்கம் தீர்த்தி

ஆயுள்விருத்தி சந்தோஷம் போகம் ஞானம் விஞ்ஞானம் ஆரோக்கியம் அழகு சௌபாக்கியம் சுகம் முதலியன கைகூடும். தவத்தினைச் செய்யாதவர்களுக்கு உயர்கதியாகிய சிவலோகம் சம்பவிக்காது. தவஞ்செய்வதால் சுவர்க்காதி பதவிகள், கஷ்டசாத்தியமான ஞானம், அதிதுரமான சிவலோகபதவி, பாவநாசம் முதலியன யாவும் சுலபமாக அடையகூடும். அரும்பெருங்கஷ்டத்தாலடையத்தக்க செல்வமும், சகலரும் பூஜிக்கத்தக்க மதிப்பும் தவத்தாலேயே கிடைக்கத்தக்கவை. உலகத்தில்தானஞ் செய்வதால் செய்தவனுக்குச் சமஸ்தமான போகங்களும் சித்திக்கும். பிரமசரியாச்சிரமத்தைச் சரியாக நடத்தினவன் ஆயுர்விர்த்தியடைவான். அஹிம்சையால் வலிமையும் நிர்வியரூபமும் உண்டாகும். சிவதீக்ஷையால் நற்குடிப்பிறப்புண்டாகும். பழங்கள் நிழங்குகளைப்புசிப்பதால் அரசாளுமை கைகூடும். இலைகளைப் புசித்துத் தவஞ் செய்தவர்களுக்குச் சுவர்க்கங் கைகூடும். பாலைப்பருகித் தவஞ்செய்தவர்களுக்கு உயர்பதவி சித்திக்கும். குருவுக்குப்பணிவிடைசெய்தவன் விசேஷவித்தியாவான்வான். சிரார்த்தாதிகளால்பிதுர்த்தேவர்களைத்திருப்திசெய்தவனுக்குச் சந்ததிவிர்த்தியையும், சாகதீக்ஷைசெய்துகொண்டவர்களுக்குப்பசுக்கள் அபிவிருத்தியாகும். புல்முதலியவற்றைப் புசித்துத் தவஞ்செய்தவன் சுவர்க்க மடைவான். காலியுச்சிமாலைகளில் முறைப்பார்ஷ்தானஞ்செய்யும்நியதியுடையவனுக்கு ஸ்திரீலாபமுண்டாகும். வாயுபக்ஷணஞ்செய்துகொண்டு தவத்திலிருப்பவனுக்கு யாகபலன் சம்பவிக்கும். காலியுச்சி மாலைகளில் ஜபஞ்செய்தவனுக்கு நிஷ்களங்கமானஞ்செய்த பலனுண்டாகும். மௌனமாகத் தியானஞ்செய்வோனுக்கு இராஜ்யாதிபத்தியமுண்டாகும். அன்னத்தைவெறுத்துத் தவஞ் செய்வோனுக்குச் சுவர்க்கபதவி சித்திக்கும். நிலமிசைப்படுத்து, [ஸ்தண்டிலமாயி] தவஞ் செய்வோனுக்குத் திவ்வியமான வாகனமும் நல்லலமாயி] தவஞ் செய்வோனுக்குத் திவ்வியமான பட்டவஸ்திரங்களுங் கைகூடும். மரவுரியுடுத்துவோருக்குத் திவ்வியமான பட்டவஸ்திரங்களுண்டாகும். படுக்கை ஆசனம் முதலியவற்றைத் தவசிக்குத்தானஞ்செய்தவனுக்கும், நியதியாக அக்கினிகாரியஞ்செய்தவனுக்கும் பிரமலோகம் கைகூடும். மதுரமுதலிய அறுசுவைகளை வெறுத்தவர்கட்குச் சம்பத்துகளுண்டாகும். மாமிசபக்ஷணத்தை விடுத்தவனுடைய புத்திராதிகள் ஆயுர் விருத்தியடைவர். உதயகாலத்தில் விழித்துக்கொண்டிருப்பவன் இராஜ்யாதிகாரியாவான். சத்தியவசனமுரைப்பவன் தேவர்களுக்குப் பிரியவானுவான். எந்தப் பொருளையாவது தானஞ்செய்தவன் கீர்த்தியைப் பெறுவான். ஜீவஹிம்சை ஒருகாலத்திலுஞ் செய்யாதவன் ஆரோக்கியத்தை யடைவான். பிராமணபக்தி செய்தவன் பெரிய இராச்சியத்தை யடைவான் ; அல்லது வைதியவமிசத்தில்தோன்றி நன்னடக்கையோடு வினங்குவான். சுத்தஜலத்தை நல்ல வேளைக்காலத்தில் தானஞ்செய்தவனுக்கு இஷ்டகுமியங்கள் கைகூடும். சமஸ்த பூதங்களிடத்தும் பச்சாத்தாபமுடையவன் சகலதுக்கங்களையுமொழிவான். தேவபக்திசெய்தவன் அகண்டராஜாதிபத்தியத்தையாவது தேவபதவியையாவது அடை

வான். தீபதானஞ் செய்தவன் பிரபுவாகி நேத்திரவியாதியை ஒருகாலத்தும் அடையான். சர்வேசுவர ஞானப்பிரதிபாதகமான சாஸ்திரங்களைத் தானஞ்செய்தவன் விசேஷஞானவானுவான். கந்தடிஷ்ப சந்தனுதிகளைத் தானஞ்செய்தவன் சிரேஷ்டமான கீர்த்தியை யடைவான். வாளப்பிரஸ்த ஆச்சிரமத்தை மேற்கொண்டு சடைமுடி முதலியன வளர்த்தவன் சிரேஷ்டமான சந்தானத்தை யடைவான். உபவாசமிருத்தல் சிவதீக்ஷைதரித்தல் சிவார்ச்சனைசெய்தல்முதலிய கருமங்களிலிருந்தவர்கள், யுத்தபூமியிலுயிரிழந்து சிவசுவர்க்க மடைவோர்போல, அப்பதவியில் பன்னிரண்டுவருஷம் வீற்றிருப்பார்கள். வேதோக்தப்படி ருத்பாத்திரனுக்குத் தனது கன்னிகையைத் தானஞ் செய்து, காசி தாசர்கள் பூமி பொன் அசுவம் முதலியவற்றை ஸ்திரீதனமாகக் கொடுத்தவன் உத்தமமான கதியையடைவான். தீர்த்தயாத்திரை செய்து உபவாச மிருப்போருக்கு உண்மையாகச் சுவர்க்கபதவி கிடைக்கும். பலம் புஷ்பங்களைத் தானஞ்செய்வோன் அழியாத மோக்ஷத்தை யடைவான். பொன்னுறைசெய்த கொம்பணி பூட்டிய ஆயிரம் பசுக்களைத் தானஞ்செய்தவன் தேவலோகத்திலும் புகழ்ந்துபேசத்தக்க சிறந்த கதியையடைவான். பொன் முதலியவற்றால் நன்றாக அலங்கரித்த காராம் பசுவைக் கன்றுடன் தானஞ்செய்தவன் தான் விரும்பிய இஷ்ட சித்திகளெல்லாம் குறைவின்றி யடையப்பெறுவான். ஒருவன் கோதானஞ்செய்த பசுவானது அத் தானவரையும் அவன் சந்ததியில்வரும் ஏழு தலைமுறையாரையும் தனக்குள்ள உரோமமொன்றிற்கொருவருஷம் தேவபதவியில் இருத்தவல்லதாகும். பொன்னுக்கொம்பும், வெண்கலத்தால் தேகமும், வியூபர்ந்த வஸ்திரமும், தகுதிணையுடன் வைத்துச் சத்பிராமணருக்குத் தத்தஞ்செய்தவன் சுசீலோகத்தைச் சுலபமாகப் பெறுவான். தமது வினைக்கேற்ப அந்தகாரமான நரகத்தில் விழுந்து பரிதவிப்பவனுக்கு; சருத்திரத்தைத்தாண்ட ஓடம் பயன்படுமோது, கோதானமே அவனைக் கஷ்டத்திலின்றுங் கரையேற்றத்தக்கது. கன்னிகாதானஞ் செய்தவனும், பூமிதானஞ் செய்தவனும், நானுவித தானியங்களைத் தானஞ் செய்தவனும், இந்திரலோகத்தை யடைவார்கள். எல்லாப் பொருள்களும் நிறைந்துள்ள வீடுமுதலியவற்றை வேதபாரகனுயுள்ள வேதியனுக்குத் தானஞ்செய்தவன் நித்தியமான சத்பதவி பெறுவான். எருதுகளைத்தானஞ் செய்தவனும், குதிரை முதலிய வாகனங்களைத் தானஞ்செய்தவனும் வசுலோகத்தை யடைந்து வசிப்பார்கள். வெள்ளி பொன் முதலியவற்றைத் தானஞ்செய்வோருக்குச் சுவர்க்கபதவி யுண்டாகுமென்று சொல்லுகிறார்கள். குடைகளைத் தானஞ்செய்வோருக்கு நல்ல வீடுகிடைக்கும். பாதரக்ஷை முதலியவற்றைத் தானஞ்செய்தவருக்கு விசேஷமான வாகனங்கள் கிடைக்கும். வஸ்திரதானஞ் செய்தவன் நல்ல அழகை யடைவான். கந்தகானஞ் செய்தவன் திவ்விய தேகத்தையடைவான். புஷ்பம் பழம் முதலியவற்றோடுகூடிய விருக்ஷத்தை வேதியனுக்குத் தானஞ்செய்தவன் நல்ல வீட்டையும் கீர்த்தியையும் செல்வத்தையும் பெறுவான். பகுதியம்

அன்னம் பானம் அநுசுவை. முதலியவற்றைத் தானஞ்செய்தவன் இச்சித்த ரஸங்களையெல்லாம் பெறுவான். யாத்திரைவாசமாக வந்தவர்களுக்குத் தங்கியிருக்க இடங்கொடுத்தல், மறைவுகட்டிக் கொடுத்தல் முதலியன செய்தவன் மறுஜனனத்தில் விசேஷமான போகபாக்கியங்களை யடைவான். புஷ்பமாலை - சந்தனம் - சுண்ணப்பொடி முதலியவற்றைத் தானஞ்செய்தவனும், ஸ்நானதானஞ்செய்தவனும் மகா ஆரோக்கியர்களாகி நல்ல ரூபத்துடன் அரசனைப் போன்ற சம்பத்தை யடைவார்கள். தான்னியங்களை நிரம்பவு முடைத்தாய், பாத்திரங்களை யுடையதாய் விளங்கும் வீட்டினை வேதியனுக்குத் தானஞ்செய்தவன் நல்ல உத்தியாஷ்வனத்திற்குச் சமானமான சிறந்தமாளிகையை யடைவான். மெத்தை தலையணை திண்டு முதலியவற்றுடன் கட்டிலைத் தானஞ்செய்தவன் ரூபவதியும் புத்திரவதியுமாகிய மனைவியைப் பிரயத்தனமின்றியே பெறுவான் எனக் கூறிய ஸநத்குமார முனிவரை நோக்கி வியாஸமுனிவர் வினவலாயினர்.

ஸ்வாமீ! தேவரீர் சிறந்ததானங்களை யெல்லாம் அடியேன் அறிந்து கொள்ளும்படி திருவாய் மலர்ந்தருளினீர். ஆயினும் இவற்றுள் முக்கியமாக அநுஷ்டிக்கத்தக்க தானங்களெவையோ அவற்றையுந் திருவாய் மலர்ந்தருள வேண்டும் எனக்கேட்க, ஸநத்குமார முனிவர் சாற்றலாயினர். வியாஸமுனிவனே! சமஸ்தபிராணிகளுக்கும் துன்பமுண்டாயிருக்கும் பொழுது அபயங் கொடுத்து அறுக்கிரகஞ் செய்தலும், தன்னை வந்தாயாசித்தவனுடைய விருப்பத்தையறிந்து அவன் விரும்பியபொருளை அவனுக்குத் தானஞ்செய்தலும், தானஞ்செய்தவனுக்குத் துணையாகநின்று அவனுக்கு உதவிசெய்தலின் இவையே சிறந்தவை. இன்னும் அவனையுடன்பற்றிச் செல்லத்தக்க சிலதானங்களையுஞ் சொல்லுகின்றேன். மதிவாணனே! கவர்ணதானம்கோதானம்பூதானம்கன்னிகாதானமென்று சொல்லப்பட்டவை, ஒருவன்செய்தபாவங்களைவிலக்கச்சமர்த்தங்களாகவுள்ளன. இத்தானங்களைச் சத்புருஷருக்குச் செய்தபுண்ணியத்தில் அதிசிஷ்டமான நரகத்தினின்று நீங்குவான். உலகத்திற் சிறந்தபொருளாவது, தன் வீட்டிலுள்ளவற்றிற் சிறந்ததாக மதிக்கிருக்கும் பொருளாவது குணவந்தனுக்குத் தானஞ்செய்தால் அழியாத பதவி கிடைக்கும். வாங்குவோனுக்கு விருப்பமான பொருளைத் தானஞ்செய்தவன் எந்த லோகத்திலும் தனக்கு விருப்பமான பொருளையடைந்து, இகலோகத்திலும் பரலோகத்திலும் சமஸ்த பூதங்களுக்கும் பிரியமானவனுவான். யாசியாதவனும், தேகாபிமானம் விடுத்தவனும், தரித்திரனுமாகிய யாசகனுக்குச் சக்தியானுசாரம் பூஜைசெய்து உதவிசெய்யாதவன், நராதமனும் மகாபாவியுமாவான். சத்துருவாயிருப்பினும் தன்னைக் காக்கவேண்டுமென்று சரணமடைந்தவனை அந்த ஆபத்துவேளையில் ஆதரிப்பவனே புருஷனென்று உலகத்திற் சொல்லப்படுவான். ஏழையும் அபிமானியும் ஜீவனோபாயமில்லாதவனுமாகிய ஒருவனைக் காத்துவந்தவனும் புருஷனேயாவான்.

தரித்திரத்தால் தன்புற்றவனும், மனைவிபுத்திரர்களை யுடையவனும், நியத விரதமுடையவனும், ஞானத்தால்யாசியாதவனுமாகவுள்ளசத்புருஷனைக்கல்ல தான காலத்தில் சமஸ்த உபசாரங்களோடும் உபகாரஞ் செய்தவன் பெறும் புகழ் முதலியவற்றை, உலகத்தில் மாதுடையது தேவராவது பேசமாட்டார்கள். உண்மையை யுரைப்போரும் நியாயவழியிலேயே ஜீவிப்போரும், முறைப்படி வேதவாசாரஸ்தியோமம் விரதங்களை யெல்லாம் அநுஷ்டித்தவரும், முக்திமார்க்கத்தையே விரும்பினவரும், பொறாமைகருதாது தானஞ்செய்வோரும், ப்ரகாசமான மில்லாதவரும், சத்திரகேற்பத் தானஞ்செய்ய விரும்புவோரும், ஸ்ருதி ஸ்மிருதி புராணங்களையுணர்ந்தவரும், யாகாதிகளியங்களைச்செய்தோருமாகியமகாத்துமாக்களும், அவர்களது ஆசாரியர்களும், புரோகிதர்களும் எப்பொழுதும் பூஜிக்கத்தக்கவர்களாவார்கள். "தர்மத்தையே செய்யவேண்டுமென்று விருப்புற்று இதரரைத் தமது புத்திரர்போலவே பரிபாலனஞ் செய்வோரும், சபகாரியங்களையே செய்வோரும், பூதிக்களே, தன்னுடைய தர்மங்களை நியதியாக அநுஷ்டிக்கிறவன் பிராமணரை யெப்பொழுதும் சமஸ்காரிக்க வேண்டியது. வேதியனைத்தாய்போல மரியாதைபாராட்டிப் பணிவதுடைய பாவங்கள் அவனுடைய பக்தியாகிய கதியினாலே கழிக்கப்படும். க்ஷத்திரியர்களும் பிராமணர்களை சமஸ்காரித்தே சிறந்தபலனை யடையவேண்டும். பிராமணர்களிடம் பக்தியையாதும் பூஜியாதும் நிரஸ்காரித்தவனை உலகத்தார் நிந்திப்பார்கள். அவர்கள் மறுபிறவியிலும் கஷ்டமதுபவிப்பார்கள். இது அகாதியாயுள்ள தருமமார்களின் இதயனுளக்குச் சொன்னேன். க்ஷத்திரியன் எப்பொழுதும் பிராமணரைப்பணிய வேண்டும். வைசியன் க்ஷத்திரியரையும் பிராமணரையும் வணங்கவேண்டும். சூத்திரன் வைசிய க்ஷத்திரிய பிராமணரை சமஸ்காரிக்கவேண்டும். இவ்வகைய தான்கு வருணத்தவர்களும் மேன்மைத்தன்மையும் லக்ஷ்மிகுணமும் தர்மாநுஷ்டானம்முடையவர்களாகுங்குடிப்பிறப்பு சோக்காது வணங்கத்தகும் என்று லோத்குமார முனிவர் கூறினர்.

வியாஸமுனிவர் லோத்குமார முனிவரைநோக்கி ஸ்வாமி! வித்தையில் மேம்பட்டவனும் வயதில்மேம்பட்டவனுமாகிய இருவரில், தானபாத்திரமாக வுள்ளவன் யாவன்? என்னும் விஷயத்தை அடியேனுக்கு விளக்கியருளவேண்டும் என விளவ, லோத்குமார முனிவர் கூறலாயினர்: வியாஸமுனிவனே! வித்தையால் சிறந்தவனும், வயதால் மூத்தவனும் சிறந்த தானபாத்திரமாகமாட்டார்கள். சதாசார சம்பத்தையுடைய பிராமணனே தான பாத்திர மெனப்படுவன். யாசித்தவனுக்குக் கொடுக்குந் தானத்தைக் காட்டிலும் யாசியாதிருக்கிற பிராமணனுடைய விருப்பத்தையறிந்து கொடுத்த தானமே சிறந்தது. அப்படி யாசியாதிருப்பவர்களிலேயும் தேகாபிமானத்தால் மிக்க சிரமத்தை யநுபவிப்பவனைப்பார்க்கிலும் விரக்தனாயிருப்பவன் சத்பாத்திரன். யுத்தத்திலேயே பெருவிருப்பினையுடைய க்ஷத்திரியனும், யாகாரியத்திலேயே மனமுடைய பிராமணனும் தேவர்களைத் திருப்தி செய்பவர்களாவார்கள். பிராமணன் ஒருபொருளை யாசித்தலால், திருடன் வார்த்தைத் தொந்தரை செய்வதுபோல, பிறருடைய பஞ்சேந்திரியங்களைத் தன்புறத்துகின்றன். ஆனல் யாசித்தவன் மரணத்திற்குச் சமானமானதுக்கத்தை யடைகிறன். அவ்வாறு யாசித்தவனுக்கு இல்லை யென்னுஞ்சொல்வது அதைக்காட்டிலுந்துக்ககரமானது. கொடையாளியோ தன்னுயிர்போகுமவரையில் தானஞ்செய்து தன் ஆத்துமாவை உச்சிவிக்கச் செய்கின்றன். ஜீவஹிம்சை செய்யாதிருப்பதே உத்தமமான தருமம். குடும்பம் வருத்தமடையும் பொழுதும் யாசிக்கப்படாதென்னுங் கொள்கையால் துக்கமுற்றிருப்போரைக் கண்டுபிடித்துப் பிரயத்தின பூர்வமாகத் தானஞ்செய்யவேண்டும். எந்த அரசாகூயில் யாசியாத விரதம் பூண்ட வேதியர் வாழ்ந்திருப்பரோ அந்த அரசாகூயிலுள்ளோர் நீதபூத்த கெருப்புப்போல விளங்கும் அவர்களுடைய தரிசனத்தால் தமது பாவங்களை யொழித்து கிருதார்த்தர்களாக்கப் படுவார்கள். ஞானம்-விஞ்ஞானம்-பிரபாவம் - அத்தரங்கமானதவம் - வேதவேதாங்கவுணர்ச்சி - விரதாசரணம்-சத்திநிருத்திக்காக ஸ்ரீ சங்கமம் முதலிய செயல்களையுடைய பிராமணர்களைப் பிரியமான உபசாரங்களால் உத்தமமான தானகாலங்களிற் பூஜிக்கவேண்டியது. அவ்வகையாகச் சத்திக்கேற்பத் தானங்கொடுக்கையில், வாங்குவோன் பொருளாசையுடன் வாங்காது, கொடுப்போனை உச்சிவிக்கச்செய்ய வேண்டுமென்னுங் கருத்தோடு வாங்கிக்கொள்ள வேண்டியது. பயிரானது வாட்டமடைந்துமேகம் எப்பொழுது வருஷிக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுபோல தானவான் சத்பாத்திரமானவன் எப்பொழுது வருவானென்று எதிர்பார்த்தவனு யிருக்கவேண்டும். இவ்வகைய தாதாவுக்குச் சந்தேகமின்றி மோக்ஷமானது கரதலாமலகமாகச் சித்திக்கும்.

முனிவனே! க்ஷத்திரியனானவன் இராசரிகவிஷயத்தில் பரிபாலிக்க வேண்டி அதிக தியகருமங்களைச் செய்யினும், அவனில் வினையும் பாவங்களை யொழிப்பதற்கு அதிக யாகங்களையும் சிறந்த தானங்களையுஞ்செய்ய வேண்டும். பாவிகளான அரசர்கள் கொடுக்குந் தானத்தைப் புண்ணிய சீலர்களாகிய பிராமணர்கள் பெறமாட்டார்கள். பாவிகளான அரசர்கள் காடோறுந் தானஞ்செய்து தமது பாவங்களைப்போக்கிக்கொண்டுவருவார்களையின், புண்ணியர்களான அத்தனரும் அவர்களிடந் தானம்பெறுவர். தானவான் மித்திரனையும் புத்திரனையும் வேதபாரகரையும் சதாசார சம்பன்னரையும் விசேடமாகச் சன்மானித்து, தன் விட்டையடைந்த விப்பிரனுக்குந் தானஞ்செய்யவேண்டும். பசுக்கள் எருதுகள் அன்னம் குடை வஸ்திரம் பாதுகை அசுவம் முதலிய வாகனங்கள் வீடுகள் சயனங்கள் ஏன்றி சொல்லப்பட்டவை சிரேஷ்டமான பலனைக்கொடுக்கத்தக்கதானங்களாம். ஜீவனோபாயமில்லாத பிராமணருக்குச் சிவனம் உண்டுசெய்வானுகில் எல்

லாப்பாவங்களினின்றும் நீங்கிச் சுவர்க்கமடைவான். தன் ஊழியக்காரரைப் புத்திரர்போல அன்புபாராட்டி நடத்தவேண்டியதும் தன் பிரஜைகளைத் தன் சேவகராகமதித்துப் பரிபாலிக்கவேண்டியது. தேசியர் யோகக்ஷேமங்களை நாடோறும் விசாரித்துக்கொண்டிருக்கவேண்டியது. குடிகளை வருத்தி விசேஷமாக வரிமுதலியவற்றை வாங்கிக் கஷ்டிப்படுத்துகிற மன்னவன் பெரும்பாவியென்று மதிக்கப்படுவான். நியாயமார்க்கமாக வரி வாங்கித் தானதருமங்களைச்செய்யும் அரசன்கொடுத்த தானம் பலிதாயிருப் பினும் மேலோர் அதனை அநந்தமாகக்கொள்வார்கள். நல்ல முறைப்படி தேடிய பொருளால் செய்த யாகத்தைத் தேவர்கள் திருப்தியடைவார்கள். சமுத்திரஜலத்தைப் பானஞ்செய்து சூல்கொண்டெழுந்த மேகமானது பெருமழையைச் சொரியுமாறு மன்னவன் குடிகளிடத்திற்றேடிய பொருளைக்கொண்டு யாகஞ்செய்து அத்தனருக்கு அபரிமிதமாகத் தானங்கொடுக்கவேண்டும். பாலர் விருத்தர் அற்பர் வியாதிஸ்தர் முதலானோருடைய பொருளை அரசனே காத்து அவர்களுக்கு உபயோகப்படுத்தவேண்டியது. பூமியிற் புதைபட்டிருந்தபொருளையும், தானுவது பெரியோரானது தானஞ் செய்த பொருளையும் அரசன் ஏற்றுக்கொள்ளப்படாது. இவ்வண்ணமின்றி அநியாயத்துப் பொருள்தேடும் மன்னவன், தனது இராச்சியத்தைத் தானேயழிப்பவனாவான். பண்டிதரும் வேதபாரகரும் சிவனடியார்களுமான தனது இராச்சியத்திலிருக்கும்படி அரசுசெய்வோன் உயிர்பிழைத்திருத்தல் அவசியம். அவ்வரசன் வேதோதாக்தமாக அப்பண்டிதர் முதலானோருக்குச் சிவபூஜைபரயணம் உண்டுசெய்யவேண்டுமென்று சிபிச்சக்கரவர்த்தி முதலானோர் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு செய்யாதவனுடைய இராச்சியத்தை அந்நாடும்பத்தையும் வடவாமுகாக்கினி தகித்துவிடும். பதிவிரதா தருமங்கெட்டஸ்திரீகள் வாழும் இராச்சியாதிகாரி மகாநரகத்தையடைவான். தானம் புரியும் நீதி முதலிய நற்செய்கைகளில்லாத அரசனை அவனது இராச்சியத்திலுள்ளவர்கள் பலரும் நிந்தித்து அவமானப்படுத்துவார்கள். நன்றும் அரசபரிபாலனென்று கூறி முறைதவறி நடத்தும் அரசனைப் பலருங்கூடி அடக்குக்கொல்லுதல் நியாயமாகும். அரசனது ஆக்கினைக்குறைவால் பிரஜைகள் செய்யும் பாவத்தில் அம்மன்னவன் காற்பங்கு பெறுவானென்று கூறுகின்றராயினும், அஃதென்மதமன்று; அவன் அப்பாவமுழுதையும் அல்லது முறைப்பங்கையேனும் அடையவேண்டும். வேந்தன் சரியாகநடத்துவதாற் பிரஜைகள் செய்யும் புண்ணியத்தில் அவன் காற்பங்கு பெறுவானென்பதற்கு ஐயமில்லை என்று ஸநத்குமாரமுனிவர் வியாஸமுனிவனை நோக்கித் திருவாய்மலர்ந்தருளினார்.

புண்ணியர் பெறும் பதவியுரைத்தது

முற்றிற்று.

இருபத்தொன்றுவது

அன்னதான பலனுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸநத்குமார முனிவரை நோக்கி, ஸ்வாமீ! உத்தம குண சிரேஷ்டர்களான வேதியருக்குத் தானஞ்செய்வதிலேயே விருப்பமுடைய அரசன், இவ்வுலகத்தில் யாதுதானத்தைச் செய்யவேண்டும்? அதனையும் எனக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டும் என வினவ, பிரமபுத்திரராகிய ஸநத்குமார முனிவர் சொல்லத் தொடங்கினர்: தேவர்களும் ருஷிகணங்களும் அன்னமே சிறந்ததென்று சொல்கின்றார்கள். அன்னத்திலேயேபாவும் லீனங்குகின்றனவாதலின், சத்ஜனங்கள் அன்னதானத்தையே விசேஷமாகச்செய்ய விரும்புவார்கள். அன்னதானத்திற்குச் சமானமான தானம் இதுவரையில் ஒன்றுங்கிடையாது, இனிமேலும் உண்டாகமாட்டாது. அன்னமே சராசரப் பிரபஞ்சமாகிய ஸ்ஸ்லாவற்றையும் நிலை பெறச்செய்கின்றது. அன்னமே உலகத்தில் வலிமையை யுண்டுசெய்யும். அன்னத்திலேயே பிராணன் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. தன் ஆத்துமத்திற்கு இதத்தைச்செய்ய விரும்புவோன், குடும்பத்தைப் பீடித்தாயிலும், தன்வீட்டையடைந்த சங்கியாகிக்கும் அதிதிக்கும் அன்னமளிக்கவேண்டும். தன் ஆத்துமாவிற்கு இகலோகத்திலும் பரலோகத்திலும் சுகத்தையுண்டுசெய்ய விரும்புகிறவன் தன்வீட்டையடைந்த அதிதிக்கு அன்னமளிப்பானுயின் அது மேலுலகத்திற்குப் பெருந்துணையான நிதியாகவிருக்கும். கீர்த்தியை விரும்பினவன் நடுப்பகலில் மகாசந்தனனும், தூரதேசத்தினின்று வந்தவனுய்த் தன்வீட்டையடைந்த அதிதியைப் பூஜைசெய்யவேண்டும். வியாஸமுனிவனே! அன்னத்தையளிப்பவன் சந்திரலோகமும் சத்குணனுகவும் நின்று அதிதி பூஜைசெய்யும்பர்யந்தம் நரகத்தில் இம்மை மறுமைப்பலன்களை யடைவான். தூரதேசத்திலிருந்து வந்த அதிதியை ஆதரணை செய்யாது திரஸ்கரிப்பவன் மகாபாவத்தையடைவான். தன்வீட்டையடைந்தவனுடைய குடிப்பிறப்பு, இனம் முதலியவற்றை விசாரணை செய்யவேண்டுவதில்லை. ஒவ்வொருவனுக்கும் அன்னதானங்கொடுப்பதே விசேஷபலனையளிக்கும். முன்பின் அறியாதவனுன அதிதிக்குச் சிரேஷ்டமான அன்னத்தையளித்தவன் ராஜசூயசாம்பிராஜ்ஜியங்களின் பலனும் பெறுவான். பிதிரர்களும் தேவர்களும் வேதியர்களும் அதிதிகளுமாகிய இவர்களை, அன்னத்தால் ஆனந்திக்கச்செய்பவன் அசுவமேதபுண்ணியத்தை யடைவான். பெரும்பாவியாயிருப்பினும் அதிதிக்கு அன்னமளித்தவனுடைய பாவங்களெல்லாம் நெருப்புப் பொறிபட்ட பஞ்சுபோல நசிக்கும்; அதிலும் அவ்வதிதி அத்தனையிருப்பின் விசேஷபலன் கைகூடும். பிரமணனுக்கு அன்னதானஞ் செய்தால் அழியாத பலனைக் கொடுக்கும். சூத்திரனுக்கு அன்னதானஞ்செய்தால் மகத்தான பலனைக்கொடுக்கும். சூத்திரனுக்கு அன்னபானங்களைத் தானஞ்செய்தால்

அதனுஞ்சிறந்த பலனைக்கொடுக்கும். அதுவே பிராமணருக்குக் கொடுக்கச் சம்பவித்தால் அக்ஷயமாகும். ஆதரணையற்றுவந்த அதிதியைக் கோத்திரம் சரணம் ஸ்வாத்தியாயம் தேசம்முதலியவற்றை விசாரியாது அவ்வதிதிக்கு அன்னதானஞ் செய்யவேண்டும். அன்னதானஞ்செய்பவன் திவ்வியமான சம்பத்துகள் உண்டாகப் பெற்று, தன் புத்திரமித்திராதிகளால் மதித்து உபசரிக்கப்பட்டு, அவ்வாறே சுவர்க்கலோகத்தில் புகாமதேனு கற்பகவிருக்ஷ முதலியவற்றால் தனது பணிகள் செய்யப்படுபவுவான். வியாஸமுநிவனே! அன்னதானத்தினால் சுவர்க்கலோகத்தையடைந்து அதனைப் பிரகாசிக்கச்செய்வார்கள். அவ்விடத்தில் அவர்கள் விரும்பிய சுகங்கள் யாவும் சித்திக்கும். பொன்னுற்செய்த கிணுகிணுப்பு, மணிகளுமான தடாகங்களும், மலர்ச்சோலைகளும், வெண்ணிறத்தவாகனங்களும், சிறந்த பகழியங்களும், தேவாங்கனமும், மணிமண்டபங்களும், நவரத்தினகசித மான ஆபரணங்களும் அவர்களுக்குண்டாகும். அவ்வுலகத்தில் சதியாகப் பால்பெருக்கெடுத்தோடும். தவளமாளிகைகள், பொன்சிறத்த கட்டில்கள் முதலியவற்றுடன் தாம் விரும்பிய இடங்களிற்சென்று திரும்புவர். புண்ணியகரமான அன்னதானத்தால் இவ்வகைய சிறந்த பதவிகள் கைகூடுவதால் அன்னதானமே விசேஷமாகச் செய்யத்தக்கது. சார்த்தகாலத்தில் சத்பாத்திரனான வேதியனுக்குப் பக்தியோடு அன்னதானஞ்செய்தவன் தனது பிதுர்க்களை அக்ஷயமான பதவியிலிருத்துவான்.

அன்னதானபலனுரைத்தது

முற்றிற்று.

இருபத்திரண்டாவது

பானதானம் தவமுதலியவற்றின் சிறப்புரைத்த அத்தியாயம்.

ஸநத்குமார்முநிவர் வியாஸமுநிவரை நோக்கிக் கூறுகின்றார்: பானீயதானம் எல்லாத்தானங்களிலுஞ் சிறந்தது. ஆதலின் வாவி கூபம் தடாகமுதலியவற்றை ஒருவர் உண்டுசெய்யவேண்டும். கிணறெடுக்கவேண்டுமென்று கருதியவனுக்கு அப்பொழுதே அவனுக்குள்ள பாவத்திற் பாதித்தீயும். பதினாயிரம் சத்ஜனர் சாதாரண மானுடர்முதலிய ஜீவஜந்துக்களுக்கும் உபயோகப்படும்படி, ஒரு ஜலாசயத்தைத் தோண்டுவித்தவனுடைய, தன் வமிசத்தார்கள் எல்லோரையும் புனிதர்களாக்க வல்லவனாவான். அந்த ஜலாசயம் வேனிற்காலத்திலும் குறையாத ஜலமுள்ளதாகவும், சாதாரணமாக இறங்கி யேறக்கூடியதுமாக விருக்கவேண்டும். தடாகம் நிர்மாணஞ்செய்தவன் திரிவேஷ்டகங்களிலும் மற்றெவ்விடத்திலும் பூஜிக்கத்தக்கவனாவான். சூரியலோகத்திலாவது விஷ்ணுபுரத்திலாவது விற்றிருப்பான். இவ்வுலகத்திலும் நிரோஷ்டமான கீர்த்தியுண்டாகும். இவ்வியமான தேசத்தில் ஒரு கோத்திரமந்திரில் விசாலமான ஒரு தடாகத்தையாவது

கிணற்றையாவது பலர்க்கும் பயன்படுமாறு செய்வித்தபக்ஷத்தில் அவனுக்குத் தர்மார்த்தகாமங்கள் கைகூடுவதுடன் உத்தமமான சம்பத்துங் கைகூடும். இவ்வனைய ஜலாசயத்தைத் தேவர்களும் மாதுடரும் கந்தர்வரும் பிதுரரும் உரகரும் இராக்ஷஸரும் தாவரங்களும் எப்பொழுதும் விரும்புகின்றார்கள். விருக்ஷருதுவில் பூரணமான ஜலமுடைய கிணற்றை யெடுப்பித்தவனுக்கு எப்பொழுதும் நித்யாக்கினிவளர்த்திய பலன் சித்திக்குமென்று பெரியோர் சொல்லுவர். சரத்காலத்திற் பூரணமான ஜலமுடைய கிணற்றை யெடுப்பித்தவனுக்கு ஆயிரங்கோதானஞ்செய்த பலன் சத்தேதகமின்றிக் கிடைக்கும். ஏமந்தசிருதுக்களில் பூரணமான ஜலமுடைய கிணற்றை யெடுப்பித்தவனுக்கு விசேஷமான சுவர்ணதக்ஷிணை கொடுத்து மகாயாகஞ் செய்வித்த பலன் கைகூடும். வசந்தகிரீஷ்மருதுக்களில் பூரணமான ஜல முடைய கிணற்றை யெடுப்பித்தவனுக்கு அதிராத்திரம் அசுவமேதம் என்னும் யாகங்கள்செய்த பலன் சம்பவிக்கும்.

பலவிதமான விருக்ஷங்களை நிழலில்லாதவிடங்களில் உண்டாக்கி வளர்த்து வழிச்செல்வோருக்கு நிழலுண்டாக்கினவன் தனது வமிசத்தில் இறந்தவர்களையும் இனிப் பிறப்பவர்களையும் பாவிகளாயிருப்பினும் உத்தரித்துப் பிதுரர்களுக்குப் பிரீதியுண்டுசெய்பவனுவான். ஒருவனிறந்த பின்னர் அவனது புத்திரர் அவனைச் சத்கியடையுமாறு பலவித கிரியைகளைச் செய்வார்போல ஒருவன் வளர்ப்பித்த விருக்ஷங்களும் அவனைச் சத்கதியடையச்செய்விக்கும். விருக்ஷங்கள் புஷ்பத்திலுல் தேவகணங்களையும் பழத்திலுல் பிதுர்தேவர்களையும், நிழலிலுல் அதிதிகளையும் பூஜிக்கின்றன; புஷ்பம் பழம் முதலியவற்றுடன் கூடின்று பூலோகத்துள்ளவர்களையும் திருப்திபெறச்செய்கின்றன; கின்னரர் உரகர் இராக்ஷஸர் தேவர் கந்தருவர் மானவர் ருஷிகணங்கள் முதலிய யாவரும் விருக்ஷங்களை விரும்புகிறார்கள். இகலோகத்திலும் பரலோகத்திலும் இவ்விருக்ஷங்கள் தம்மைவளர்த்தவனுக்குப் புத்திரர்களென்று சொல்லப்படுகின்றன. ஜலாசயங்களை யுண்டுசெய்தவர்களும் விருக்ஷங்களைவைத்து வளர்ப்பித்தவர்களும், யாகங்களைச்செய்த வேதியர்களும், சத்தியவான்களும் ஒருகாலத்திலும் சுவர்க்கலோகத்தைவிட்டு நீங்கமாட்டார்கள்.

வியாஸமுநிவனே! கேட்பாயாக. சத்தியமே பரப்பிரமசொரூபம். சத்தியமே சிறந்த தவம். சத்தியமே சிறந்த யாகம். சத்தியமே சிறந்தது என்று சொல்லப்படும். சத்தியமே வேதங்களிற் சொல்லப்பட்டுள்ளது. சத்தியமே மேம்பட்ட பதவி. சத்தியமே தேவ ருஷி பிதுர்பூஜைகளுரிய தாயிருக்கின்றது. சத்தியமேவைதிகதருமமுஞ் சிறந்த பிரமயஜ்ஞமுமாகும். சத்தியமேமிரதாசரணம். சத்தியஸ்வரூபமேஓங்காரம். சத்தியத்தினுலேயே காற்று வீசுகிறது, சூரியன் தகிக்கிறது, அக்கினி யெரிகிறதுமென் றுணர்வேண்டும். சத்தியத்திலேயே ஸ்வர்க்கம் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கிறது. சத்தியவானுக்குச்சர்வவேதபாராயணமும் சகலதீர்த்தஸ்நானமுஞ்செய்த

பலன்களைகூடுவதுடன் தன்கோரிக்கைகளெல்லாவற்றையும் அடையக் கூடும். ஆயிரம் அசுவமேதங்களைச் செய்தபலனையும் சத்தியத்தின் பல னையும் நிறுத்துப்பார்த்தவிடத்தில், சத்தியத்தின் பலனே விசேஷமாயிருக் கும். சத்தியத்தினாலேயே தேவர்களும் முனிவர்களும் திருப்தியடை கிறார்கள். சத்தியமே கவனிக்கத்தக்கது. முனிவர் முதலானோர் சத்தியத் தினாலேயே சிறந்த சித்திகளைப்பெற்று அப்சரசுகளுடன்கூடி, திவ்விய விமா னங்களிலேறி விரும்பிய விடங்களிற் சென்று திரும்புகிறார்கள். ஆழ்ந் தும் பரந்தும் விளங்குந் தீர்த்தமாகிய புனிதமுள்ள சத்தியத்தில் நல்ல மனத்துடன் ஸ்நானஞ்செய்யவேண்டும். அதுவே சுத்தமான ஸ்நானமா கும். தன்னிமித்தமாகவாவது, பிறனிமித்தமாகவாவது பொய்புகலாது சத்தியத்தையே சொல்பவர் எப்பொழுதும் சுவர்க்கபதவியிலேயே யிருப்பர். பிராமணரிடத்தில் வேதம்யாகம் மந்திரம் முதலியன எப்பொ முதும் இருக்கின்றன வெனினும், அவர்கள் அசத்தியர்களாயின் ஒரு பல னையும் அடையமாட்டார்கள். ஆதலால் மனப்பூர்த்தியாகச் சனங்கள் யா வரும் சத்தியத்தையே உறுதியாகக்கொள்ளவேண்டியது எனக்கூறிய ஸநத்குமார முனிவரைநோக்கி வியாஸமுனிவர் வினவலாயினர்.

பிரமபுத்திரராகிய ஸநத்குமாரமுனிவரே! எல்லாவருணத்தவர் களுக்கும், விசேஷமாகப் பிராமணர்களுக்கும் நிதியாகவிளங்குந் தவத் தின் பிரபாவத்தை விரிவாகக் கூறியருளவேண்டும் என வியாஸமுனிவர் கேட்க, ஸநத்குமாரமுனிவர் சொல்லலாயினர். வியாஸமுனிவனே! எல்லாக் காமியங்களையும் கொடுக்கவல்லதும் பிராமணர்களாலேயே பெருங்கஷ் டத்துடன் செய்யத்தக்கதுமாகிய தவத்தின் மகிமையைச் சொல்லுகிறேன். தவமே பரப்பிரமஸ்வரூபமென்று பெரியோர் கூறுவர். தவத்தினாலேயே பெரும்பலன்கள் கைகூடும். தவத்தில் விருப்புடையவர் தேவர்களுடன் கூடிச்சகலபோதபவிப்பர். தவத்தாலேயே சுவர்க்கம் கீர்த்தி மோக்ஷம் ஈசுவர தரிசனம் ஞானம் விஞ்ஞானம் சௌபாக்கியம் ரூபம் இஷ்டசித்திகள் முதலியன கைகூடும். தவஞ்செய்யாதவர்கள் ஒருகாலத்தினும் பிரமலோ கத்தைக்காணமாட்டார்கள். எந்தக்கோரிக்கையோடு தவஞ்செய்தாலும் அந்தக்கோரிக்கையை யீடேற்றும். கள்குடித்தவனும் பரதாரகமனஞ் செய்தவனும் பிரமஹத்திசெய்தவனும் குருபத்தினியைக்கூடினவனும் முத லானவர்கள் தவத்தைச்செய்தே தமது பாவங்களை யொழித்துக்கொள்ளு கிறார்கள். இன்னும் என்ன விசேஷமென்று சொல்வது. சர்வேசுவரனாகிய சிவபெருமானும், விஷ்ணுமூர்த்தியும், பிரமதேவனும், அக்கினியும், இந்திர னும், பிறதேவர்களும் தவத்தின் சொரூபமாகவிளங்குகின்றார்கள். பிரம னியத்தை மேற்கொண்ட எண்பத்தாறாயிரமுனிவர்களும் தவத்தையாச் சிரயித்தே சுவர்க்கலோகத்தில் தேவர்களுடன்கூடி ஆனந்தித்திருக்கிறார் கள். இந்திரன் எண்ணிறந்தகாலம் பெருந்தவஞ்செய்து திரிலோகாதி பத்தியமடைந்து சதக்ருக்களைச் செயித்தனன். சூரியசந்திரர் நகஷத்

திரங்கள் நவக்கிரகங்கள் சர்வலோகங்களுக்கும் இதமுண்டாக மகத்தான தவத்தைச்செய்து உலகங்களைப் பிரகாசிக்கச்செய்கின்றார்கள். தவத்தை மேற்கொள்ளாத பகஷத்தில் இகலோகத்திலும் பரலோகத்திலும் சிறி தஞ் சுகமென்பது உண்டாகமாட்டாது. தவத்தையே கடைப்பிடித்துச் செய்தவர்கள் பலவிதமான பலன்களை யடைவார்கள். எல்லாவற்றையும் மனிதன் தவத்தினாலேயே யடையவேண்டும். வனத்திலுள்ள கந்தமூல பலங்களைப்புசித்துத் தபோவனத்திலே தவஞ்செய்து கொண்டிருப்பவன் மகாசுசியுடையவனும் வேதத்தை முறைப்படி அத்தியயனஞ்செய்தவன் பெறும்பலனையடைவன்.

வித்யவ்ரதி புதல்வனே! இவற்றையெல்லாங் கிரமமாக அறிந்து கொள்வதற்குப் புராணங்கள்விசேஷம். புராணசிரவணத்தினாலேயே பரத் தின்றன்மை யித்தகையதென ஒருவனுணரக்கூடும். புராண சிரவணமும் சத்தியவாஞ்சித்தவத்தை மேற்கொண்டு வனத்திலேயேயிருக்கும் புண் ணிய சொரூபியான வேதியனுக்குச் செய்யத்தகும். புராணங்களின் விஷயங் களையெல்லாம் முனர்க்த குருவே சத்பாத்திரங்களிலெல்லாம் மேலான உத்தமபாத்திரன். பாத்திரனென்பதற்குப் பாவத்தால் நரகமடையவேண் டியவனிடம் சிறிது பொருளைப்பெற்றுக்கொண்டு அவனுடைய பாவத்தை விலக்கிப்புண்ணியத்தை யுண்டுசெய்ய வல்லவனென்று அருத்தம். தனம் தான்னியம் வெளவனம் தரம் முதலிய வஸ்துக்களைச் சிஷ்டமான உத் தமபாத்திரவானுக்குத் தானஞ்செய்தவன் உத்தருஷ்டமான கதியையடை வான். பசுவும் இரதமும் எருமையும் யானையும் குதிரையும் சத்பாத்திரன் பெறும்படி தானஞ்செய்தவன் எல்லாப்பிலன்களையும் கொடுக்கத்தக்க அசுவமேதஞ் செய்தபலனை யடைவான். கருமையாயும் விசேஷவினவு கொடுப்பதாயுமுள்ள பூமியைத்தானஞ்செய்தவன் தன்வமிசத்தில் முன் சென்ற பத்துத் தலைமுறையையும், மேல்வரும் பத்துந் தலைமுறைகளையும் கடைத்தேறச்செய்து, தானுந்திவ்வியமான விமானத்திலேறிச்சுவர்க்க லோகத் தையடைவான். புராணசிரவணத்தால் திருப்தியடைவதுபோல, யாகத் தாலாவது புஷ்பபூசையாலாவது தேவர்கள் திருப்தியடையமாட்டார்கள். சிவாலயத்திலாவது விஷ்ணுவாலயத்திலாவது சூரியனெதிரிலாவது பிர தேவர் சன்னிதியிலாவது தர்மப்பிரதிபாதகமான புராணத்தைப் பிரசங்கித் தவன் இராசரூப அசுவமேதங்கள் செய்தபலனைப்பெறுவான். புராண திகாசங்களுடைய சிரவணத்தால் இஷ்டகாமியங்களையெல்லாம் பெற்றுச் சூரியமண்டலமார்க்கமாகப் பிரமலோகத்தையடைந்து, தானுகற்பகாலம் வாழ்ந்திருந்து மீண்டும் பூலோகத்திற் பேரரசனைச் சனிப்பான். தேவர் சன்னிதியில் ஜயஜயவென்று புகழ்ந்தோர் ஆயிரம் அசுவமேதபலனையடை வார்கள். ஆதலின் சர்வப்பிரயத்தனத்தோடும் சர்வேசுவரனை சிவபெரு மானது சுபகரமான ஆலயத்தில் புராணேதிகாச சிரவணஞ்செய்த பலத் தில், சிவபெருமானுக்கும் பிறதேவர்களுக்கும் பெருங்கலிப்புண்டா

கும் என்று ஸநத்குமாரமுனிவர் வியாஸமுனிவருக்குரைத்ததாக ஸூத முனிவர் நைமிசாரண்யவாசிகளுக்குரைத்தனர்.

பானதானம் தவமுதலியவற்றின் சிறப்புரைத்தது

முற்றிற்று.

இருபத்துமூன்றாவது

புராணசிரவண மஹிமையுரைத்த அத்தியாயம்.

ஸூத முனிவர், நைமிசாரண்ய வாசிகளாகிய ஸௌநகாதி முனிவர்களே! பூர்வம் புராணஶ்ரவண பலனைத்தகையது? எனக்குச் சொல்ல வேண்டுமென ஸநத் குமார முனிவர் தமது தந்தையாகிய ப்ரமதேவரைக்கேட்க, ப்ரமதேவர் அதனை ஸநத்குமார முனிவருக் குரைத்தனர். ஸநத் குமார் முனிவர் பின்னொருகாலத்தில் அதனையே வியாஸபகவானுக்கு வெளியிட்டனர், அவ்வியாஸபகவான் எனக்குக் கூறியருளிய வகையே யான் உங்களுக்குச் சொல்லுகின்றேன் கேட்பீர்களாகவென்று சொல்லத் தொடங்கினர்.

ப்ரமதேவர் ஸநத்குமாரமுனிவனைநோக்கிச் சொல்லுகின்றார். புத்ரனே! யாமொருகாலத்தில் இயமலோகத்திற்கு விஜயதாத்தமாகச் சென்றபொழுது இயமதருமன் என்னைப் பலவிதமாகப் பூசித்து அர்க்கிய பாத்ய ஆசமனாதிகளாலுபசரித்தனன். பின்னர் ஓர் திவ்வியமான பீடத்தில் இருவரும் பிருந்து விநோதமாகப் பேசிக்கொண்டிருக்கையில் அற்புத மொன்றைக் கண்டேன், அஃதென்னெனில் வைடூர்ய மணிகளாற் செய்யப்பட்ட வோரழகையதாய், பலவித ரத்னங்களாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டதாய் மணிமாலைகள் கட்டப்பட்டுக் கனகமயமென்னு மொளியுடையதாகிய திவ்விய விமானத்திலெழி யோர் திவ்விய புருஷன் வர, இயமன் அப்புருஷனைக் கண்டு தன்னெழுந்து சுபகரமான வார்த்தைகளைச்சொல்லி, சுகமாவென்று விசாரித்து, தர்மமுணர்த்தவினே! உனதுதரிசனத்தாற் சந்தோஷமடைந்தனன். உனக்கு இங்கிருக்கவிருப்ப முள்ளவரையிலிருந்து பின்னர் நீ ப்ரமலோகத்திற்குச் செல்லலாம் எனக் கூறினன். அப்பொழுதே மற்றொருவன் அவ்வகைய திவ்வியவிமானமிவர்ந்து இயமதருமனிடம் வந்துசேர இயமதருமன் அவனையும் அன்புடன் பூசித்து முன்வந்தவனுக்குக் கூறியதுபோலவே உபசாரவார்த்தைகள் கூறி க்ஷேமம் விசாரித்தனன். இவ்வண்ண நிகழ்ந்ததைக் கண்டதிசயித்த யான் இயமனை நோக்கி, உன்னிடம் இப்பொழுது வந்த இருவரும் யாவர்? அவர்கள் செய்துள்ள நற்கருமங்கள்எவை? அவர்களை நீ கனப்படுத்திய காரணம்யாது? இவற்றையறியவிரும்புகின்றேன். தேவர்களாலே யெல்லாம் பூசிக்கப்படும் உன்னும் பூசிக்கப்பட்டவர்கள் யாவர்? எனக்கேட்க, இயமதருமன் சொல்லலாயினன்.

பூலோகத்தில் வைதிசமென்னும் பட்டணத்தில் தராபாலனென்னும் அரசன் சிறந்துவிளங்கினன். அந்தச் சமயத்தில் பார்வதி தேவியார் தமக்கு அபசாரஞ்செய்த ஓர்தோழியைப் பன்னிரண்டுவருஷம் கரியாய்த் திரியும்படி சபித்து விதஸ்தா வேத்ரவதி யென்னும் நதிகளின் சங்கம க்ஷேத்ரத்தில் உன்மாத மொழிகவென்றும் சாபாதுக் ரஹமுஞ் செய்தனர். அதனால் அத்தோழி கரிவடி வேற்று உலகத்தில் பன்னிரண்டுவருஷஞ் சஞ்சரித்து ஒருகாலத்தில் விதஸ்தா வேத்ரவதி நதிகளின் சங்கமஸ்தானத்தை யடைந்து, அங்கு ஆகாரங்கிடைக்காது உயிர் நீங்கித் திவ்வியமான சரீரத்தை வகித்து விமானத்திலேறிச் சிவசந்நியடைந்து பண்டையபணிவிடையி லிருந்தனள். அதனியற்சமயத்திருந்து கண்டதாரபாலனென்னும் மன்னவன்! ஆ! அந்தரிவுயிர்விட்ட வுடனே திவ்வியவிமானமேறிப் பரகதியடைந்ததன்றே? இஃதுத்தம க்ஷேத்ரமென்று கருதி அங்கேயோர் சிவாலயங்கட்டுவித்து அதில் சிவலிங்கப்ரதிஷ்டைசெய்து பரிவார தேவர்களையு நிறுத்தி, திவ்விபமான மண்டப கோபுர ப்ராகார முதலியனவாகமுடித்து யாவரும் பூஜித்துப் பணியச்செய்தனன். இவ்வாறிருக்கையில், புராணைதிகாசங்களை கன்றுகத் கற்றுப்பிறருக் குரைத்து; ப்ரம்ஞானமுற்ற முனிசிரேஷ்டனை ஓர் தேதியன் வர, அவனைப் பூஜித்து அவன்பாலிருந்த புஸ்தகத்தையும் கந்த புஷ்ப தூபதீபங்களால் முறைப்படி பூஜித்து, வினயத்துடன் அப்ப்ரமணனை நோக்கி, யான் சிவாலயமொன்று இங்குக் கட்டுவித்தேன். அச்சிவ சன்னிதியிற் புராணசிரவணஞ் செய்யவேண்டுமென்றுகருதிய நாற்குலத்தவர்களும் கேட்கும்படி புராணஞ் சொல்லவேண்டும். நீர் புராணஞ் சொல்லுகையில் வருஷமொன்றுக்கு நூறு பொன்* நிஷ்கம் ஜீவனத்திற்காகக்கொடுத்துவருகிறேன். உமக்கும் இதுகல்ல வித்தியோகமாமென்று கூறி அவரைச் சம்மதிப்பித்துப் புராணஞ் சொல்லுவிக்க ஆரம்பித்து ஆயுமாதம் ஊராருடன் புராணசிரவணஞ்செய்து தன் ஆயுர் முடிந்ததால் அரசன் காலகதியாயினன். அப்பொழுதே கைலாசாதிபதியால் திவ்வியமான விமானத்தைக் ஏகாண்டுபோய் அழைத்துக்கொண்டுவந்தனன். இது இவனுடைய சுகர்மபலன். இது புண்ணியசரிதம். புராண சிரவணஞ்செய்வதால் சகல தேவர்களுக்குந் திருப்தியுண்டாவதுபோல, கற்பவ்ருக்ஷாதி உபகரணங்களாற் செய்த பூஜையாலும், கோதானம் சொர்ணதானம் வஸ்த்ரதானம் முதலியவற்றினாலும் தானத்தாலுந் திருப்தியுண்டாகமாட்டாது. தர்மங்களைச்சொல்லும் புராணசிரவணத்திலேயே தேவர்கள் ப்ரீதியடைவர்கள். புராணைதிகாச சிரவணத்தால் யானும் அதிக சந்தோஷமடைகிறேன். அதனையே யானும் புகழ்கின்றேன். இவன் இவ்வாறு புராணசிரவணஞ்செய்த நற்பலனால் சாலோக்யத்தால் தர்மபுத்ரியுண்டாகி, தர்மங்களையெல்லாம் கன்குணரப் புராணசிரவணஞ் செய்யவேண்டுமென்னும் இச்சையால், சித்தை பக்தி

---

* நிஷ்கம் - ஓர் நாணயம். இதனுமார் மூன்று உருப்படையுள்ளது.

ருடன்கூடிப் புராணஞ்சொல்லச்செய்து சிரவணஞ்செய்து விசேஷமான பக்திபடைத்தனன். ஆதலின் மாதுடன் புராணஞ்சொல்லும் பெரியோரிட்ஞ்சென்று பிரதக்ஷிணமஞ்காரஞ்செய்து உலோபாதிகளின்றி, சுவர்ணத்தைத் தக்ஷிணையாகக் கொடித்தால், சாசுவதமாகப் பிரமபதவியை யடைவான். இரண்டாவது விமானத்தில் வந்தவனும் இதேசத்தருமஞ் செய்தவனன்றிப் பிறிதொன்று செய்தவனல்லன். இவன் புராணிகனுக்கு விசேஷமான பூஜைசெய்துள்ளானதலின் அதன்கருதியே யான் இவனையும் பூசித்தேன். புராணஞ்சொல்பவனைப் பூசித்தால் யானும் பிரமவிஷ்ணுருத்திரர்களும் பூசிக்கப்பட்டவர்களாவோம். சிரார்த்தாதிகாலங்களில் உத்தமமானபக்ஷிய போஜனங்களுடன் ஒருமுறை பூஜைசெய்கின்றவர்கள் என்னைப்பதினைந்து வருஷங்கள் பூசித்தபலனை யடைவார்கள். புராணப்பிரசங்கியை ஒருமுறை திருப்திசெய்தபலத்தில் அரைவாசியாவது யான்திருப்தியடைவேன். யான்மட்டுமன்றி, இந்திராதி சகலதேவர்களும் பிரமவிஷ்ணுசிவாதிகளுந் திருப்தியடைவார்கள். புராணப்பிரசங்கி சந்தோஷிப்பானுயின் சமஸ்ததேவர்களும் திரிமூர்த்திகளும் சந்திர சூரியர்களும் ரிஷிகளும் சந்தோஷிப்பார்கள். ஸ்நானம் பூஜை ஜபம் ஹோமம் சாஸ்திரம் சமஸம் அஹிம்ஸை விரதாசரணம் உபவாசம் தைரியம் மௌனவிரதம் இந்திரியநிக்கிரகம் பிரமஞானம் குரோதமின்மை தானம் கூசாந்திரயை தவம் வாவி கூப தடாகங்களின் பிரதிஷ்டை சாந்திராயணம் யாகங்கள் தீர்த்தங்கள் ஆச்சிரமங்கள் முதலியனவெல்லாம் தர்ம சாதனத்திற்காகவே யிருக்கின்றனவென்று பெரியோர் கூறுவர். தர்மத்தாலேயே பொருளும் காமமும் மோக்ஷமும் உளவாகும். சகர்விஷ்ணுஷார்த்தங்களாலேயே இகபரங்களில் நிரந்தரசுகமுண்டாகும். பாவத்தால் துக்கமுண்டாகுமாதலின் பாவத்தைச்செய்யாமல் தர்மத்தை யாச்சிரயித்துப்புண்ணிய கருமங்களையே செய்யவேண்டியது.

அவ்வகையதருமமும் ஸத்வமயம் ரஜோமயம் தமோமயமென முத்திறப்படும். ஸத்துமயமான தருமம் தவத்தால் பிரமஞானமடைந்த முனிவர் சித்தர்களிடத்தில் எப்பொழுதும் நித்தியமாகவிருக்கும். ரஜோமயமான தருமம் தேவர்களிடத்திலிருக்கும். தமோமயமான தருமம் தானவதைத்தியரிடமிருக்கும். பரிசுத்தமான இவர்களுடைய சத்தருமம் சொல்லப்பட்டது. இதுசத்தியம். அத்திவ்வியபுருஷர்களிருவரும் மகாபுண்ணியர்கள். அவர்களுடைய சரித்தத்தை நீ கேட்டனையதனின் நீ புண்ணியபுருஷனென்பதிற் சந்தேகமில்லை. இயமன் கூறியவையாவும் சத்தியமென்றுயாவரும் நம்பவேண்டும். புத்திரனே! எனக்கு இந்தாவது முகமொன்றிருந்தது. அம்முகத்திலிருந்தே புராணங்கள் பலவிதமாக வெளிப்பட்டு உலகத்திற்கு இதத்தைச்செய்கின்றன. புராணங்கள் எனக்குப்பிரீதிகரமானவை. வேதவேதாங்கங்களும் எனக்குப் புராணங்கள் போலப் பிரீதிகரமானவையன்று. இப்புராணேதிகாசங்களிற்சரித்திரபத்திகளுடன்

புராணிகனுக்குச் சிவனேபாய விருத்தியையுண்டுசெய்து, எப்பொழுதுஞ் சிரவணஞ்செய்வோர் உத்தமமான கதியை யடைவார்கள். தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பூலோகத்தில் நன்றாக விளக்குவதற்காகவே புராணேதிகாசங்கள் எல்லாவற்றையுஞ் சொன்னேன். இவைவேதார்த்தத்தை விஸ்தரணமாகச் சொல்லத்தக்கவை. சுலபாண்டித்திய முடையவர்கள் வேதார்த்தத்தையுணரா ராகையின் அவர்களும் நன்குணருமாறு விஸ்தரணமான புராணேதிகாசங்களைச் சொன்னேன். தர்மப்பிரதிபாதகமான இவ்வகைய புராணேதிகாசங்களைச் சிரவணஞ் செய்பவனும் பக்தியோடு பாராயணஞ்செய்பவனும் உத்கிருஷ்டமான ஸ்தானத்தை யடைவார்கள். புராணசிரவணகாலத்தில் தக்ஷிணைகொடுத்துக் கேட்கும்பக்ஷத்தில் பரமார்த்த ஸ்வரூபத்தில் ஐக்கியமாகின்றான். இஃதொரு ஆச்சரியமல்ல. பாத்திரனுக்குத்தானஞ் செய்தபக்ஷத்தில் அவனுக்குயாவுங் கைகூடும். தீர்த்தங்களில் கேதாரம், விரதங்களில் மஹாவிரதம், பர்வதங்களில் மேரு, பக்ஷிகளிற் கருடன், நதிகளிற் கங்கை, தேவர்களிற் சர்வேசுவரனுகிய சிவபெருமான், பாத்திரங்களில் வாசகன் [புராணிகன்] சிரேஷ்டமாம். இவ்விஷயத்திற் சிறிதுஞ் சந்தேகமில்லை. புராணஞ் சொல்லுகையில் பக்தியோடு பூஜைசெய்தவன் சகலதேவர்களையும் பூஜை செய்தவனுவான். புராணபாராயணஞ்சிரவணஞ்செய்தவர்களின் பெறும்புண்ணியம் ஆச்சரியம். விசேஷமான தானங்கொடுத்துச் சிரவணஞ்செய்தவனுடைய பலன் இன்னும் விசேஷமானது. காடோதும் பக்திசிரத்தையோடுசிவசந்நிதானத்திலிருந்து சிரவணஞ் செய்தவன் சிவசாயுச்சியத்தை யடைவதிற் சிறிதும் ஐயமில்லை இது சத்தியம் என்று கூறியருளினர்.

புராண சிரவண மகிமை யுரைத்தது

முற்றிற்று.

இருபத்துநான்காவது

சுவர்ணதான பூதானங்களின் மகிமையுரைத்த அத்தியாயம்.

ஸநத்குமாரமுனிவர் சொல்லுகின்றார். வியாஸமுனிவனே! உலகிலுள்ள தானங்களிற் சில சிரேஷ்டமானவையும், கோரமானவையுமாகவுள்ளன. இவற்றையறிந்து தானவான்கள் சத்பாத்திரத்திற் தானஞ்செய்யவேண்டியது. சுவர்ணதானம் கோதானம்பூதானம் முதலியவற்றைவாங்குவோர் தானஞ்செய்வோரைப் பவித்திரராக்குவதுடன் தாமும்பவித்திரராவர். இச்சிரேஷ்டமான தானங்களைச் செய்தோர் சகலபாவங்களின்றும் நீங்குவர். கோதானம் பூதானம் வித்தியாதானம் இம்மூன்றும் சமானமான பலனைக் கொடுக்கவல்லவை. இவற்றில் கோதானம் பூதானம் என்பவற்றைக் காட்டிலும் வித்தியாதானம் சிறிது சிறந்ததாயும். ருது குடை பாதுகை பானம் அன்னம் இவற்றைத்தக்கவர்களாயிய வேதிய

குக்கு கல்ல மனத்துடன் தானஞ்செய்த்பகூத்தில், சிரத்தையுடன் பெரும் தகுதினை வைத்துச் செய்தயாகமாம். அசூயையின்றித்தானஞ்செய்வதே எல்லாயாகங்களினுஞ் சிறந்தது. சுத்போத்திரமாயுள்ளவர்களது பிராமணர் தன்மையையும் நீக்கிவிடத்தக்க கோரமான தானங்களாவன—இறந்தவனுடைய பசுக்கை மான்மேல் சண்டாளன்கைப்பொருள் மிலேச்சன்கைப் பொருள் உபபதகோமுகி துலாவேறியபொருள் குருதோஹத்தித்தில் தானம் வாங்கல் என் பதின்கைப்பொருள் விசேஷதகூனிக்கு விருப்பி ஒருவன் பாவத்தவாங்கல் என்று சொல்லப்பட்ட இவ்வபத்தும் துர்த்தானங்களாமாதலின், இவற்றுள் ஒன்றினைவாங்கிய வேதியன் ஞானஹீனனுகிக் கோரமான நரகத்தைபடைவான். இவற்றைத்தானஞ் செய்தவன் கரிபஸ்னித் கல்லைவைத்து அதின்மீது காலான்றி அதனைக்கடந்து செல்வரீன்போல, தன் பூவ கர்மத்தில் அன்வேதிபினை வைத்து, தான் உத்தம பதவியையடைவான். தானங் கொடுப்பவனும் வாங்குபவனும் அடையும் பலனைச்சொன்னேன். இன்னும் மகாதானங்களையும் துர்த்தானங்களையும் வாங்குவோன் பலனை விசதமாகச் சொல்லுகின்றேன்.

வியாஸமுனிவனே! சூர்யனுடைய கொடையாளி எப்பொழுதும் சுத்பாத்திரமான வேதியருக்குத்தானஞ்செய்துகொண்டேயிருக்கின்றனன். ஆயினும் வாங்குவோன் பொன் வெண்மையாபெண்கள் யானை கன்னிகை தாசி வீடு இரதம் அசுவம் பூமி காராம்பசு எள்ளும்பத்தர் சிறந்தகாவய் கனியும் வாங்குவானுயின் தானஞ்செய்தலனைப் பரிசுத்தனுக்குவதுடன் தானும் ஞானவிர்த்தியடைந்து, புனிதனுவான். சுவர்ணம் முதன்மையானது. அதுவே சிறந்த தகுதினை; அதுவே உத்தருஷ்டமானது; மங்களகரமானது. அதனைத்தானஞ்செய்தவன் தன்முன்னோர் பதின்மரும் பின்னவர் பதின்மரும் தானைருவனுமாகிய இருபத்தொருவரையும் பாவதிதரார்க்குவான். சுவர்ணத்தைச் சுத்தமான மனத்துடன் தானஞ்செய்தலன் சகல தேவர்களாலும் சகல கோரிக்கைகளும் பூர்த்திசெய்வான். சுவர்ணதானத்தால் எல்லாத்தேவர்களையுந் தானஞ்செய்த பலன் கிடைக்கும். அக்கினியாதி சகல தேவர்களும் சுவர்ணசொரூபிகளாயிருக்கிறார்கள். புனிதமான சுவர்ணமானது புனிதமற்ற பிறபொருள்களுடன் கூடியபொழுது அவற்றையும் புனிதமாக்கும். பித்ருர்க்கும் தேவர்க்கும் மாதாபர்க்கும், சுவர்ணமே பெப்பொழுதும் இஷ்டமானது. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் பரிசுத்தமாக்குவது ஜலமெனினும் அந்த ஜலத்தையும் கனகமே பரிசுத்தமாக்கும். காடோறும் விடியற்காலத்தில் அக்னிகாரியத்தை முடித்துச் சுவர்ணதானஞ்செய்தவர்கள் தாம் விரும்பிய பொருள் களையெல்லாம் அடைவார்கள். சுவர்ணதானஞ்செய்தவன் சகல தானங்களையுஞ் செய்த பலனை இம்மையிலுமறுமையிலுமடைவான். அப்சரசு கந்தர்வாதிகளால் நிருத்தநிருந்செய்யப்பட்டு ஹம்ஸங்களாற் கடைக்கப்பட்ட விரும்பிய இடத்திற்குச் செல்லத்தக்கவிமானம்பொருந்திய பொன் விமானத்திலேறிச் சுவர்க்கலோகத்தில் தான் விரும்பிய இடத்தில் இஷ்டகாமியங்களையநுபவிப்பான். ஆதலின் சக்திக்கேற்ப அதிதிகளுக்குச் சுவர்ணதானஞ் செய்யவேண்டியது. இதனைக்காட்டிலும் பாவத்தையொழிக்கத்தக்க வேறு தானம் இடையாது. சுவர்ணதானஞ் செய்தவன் புனிதமான மனத்துடன் எண்ணிறந்த வருஷங்கள் தேவபோகங்களை நுகர்வான் என்று கூறிய ஸநத்குமாரமுனிவரை நோக்கி வியாஸமுனிவர் கூறுகின்றார்.

வஸந்குமாரமுனிவரே! மங்களகரமான சிரேஷ்ட தானங்களெல்லாவற்றையுக் தேவரீர் திருவாய்மலர்ந்தருளக்கேட்டேன். இன்னும் பூதானத்தின் பிரபாவத்தைக் கேட்க விரும்பினேனதலின் அதனையும் விவரமாகச் சொல்லியருளவேண்டும். தாங்கள் முன்னர் சங்கிரகமாகக் கூறியிருப்பினும் அதனை விரித்துரைத்தருள வேண்டுமென வேண்டிக்கேட்க, ஸநத்குமாரமுனிவர் கூறலாயினர். சிரேஷ்டமான தானபாத்திரத்துக்குக்கொடுத்த தானங்கள் சிறந்தபலனை யளிக்குமென்று கூறினனன்றே. அவையெல்லாவற்றினும் பூதானம் மிகவுஞ்சிரேஷ்டமானது. அப்பூதானமே சிறந்ததென்பதைப்பற்றிய ஓர் பூர்வசரித்திரஞ் சொல்லுகின்றேன் கேட்பாயாக: பூர்வம் சித்திரரதன் என்னும் பெயர்பூண்ட மன்னனொருவனிருந்தனன். அவன் ஐப்பதிவருஷத்துக்கும் மேற்பட்டுச் சகல சுகங்களையுமநுபவித்துக்கொண்டிருந்து, ஒருகாலத்தில் திவ்வியமான இரதத்திலேறிச் சுவர்க்கலோகத்தையடைந்து தேவதைகளினங்களோடுகூடிய இந்திரனென்னுந் தன் ஆக்கினையை அங்கேயும் வியாபிக்கச்செய்து திரிலோகங்களையுங் காத்து, தனக்குத்தானே இப்படிருஞ் செல்வமெல்லாமுண்டாயதென்று யோசித்து ஆச்சரியமுற்று, ஆருயிரும் புதல்வரைப்பெற்று, அகாயமான பொக்கிஷத்தை வைத்துக்கொண்டு, பிரஜைகளுக்கு உதவியாகவிருந்து சிறந்தவரகனங்களைப்பெற்று அகாலமானமுதலியனவின்றி இனியோடுஅர்ச செய்துகொண்டு இருந்தனன். அவனுக்கு அதிரூபசௌபாக்கியமுடைய மனைவியிருந்தனள். அவ்வாறிருக்கையில், அம்மன்னன் இவ்வகைய பெருஞ்செல்வம் மறுஜனனத்திலும் அடையத்தக்க நியத்தனம் யாதெனக் கருதி, தர்மங்களையெல்லாம் நன்குணர்ந்த வசிஷ்டமுனிவனை யடைந்து, ஈமன்சுனித்து முனிசிரேஷ்டரே! தமது அநுக்கிரகத்தால் அளவில்லாத செல்வத்தை யநுபவிப்பதுடன், திவ்வியமான மனைவியும், தானசக்தியும், ஐசுவரியமும், அரசகல்விகளும், அன்னபானாதிகளை யனவர்க்கும் கொடுக்கும் சாமர்த்தியமும், ஆயிரம்பானையின் வலிமையும், சத்தருக்களை யும், சுற்புத்திரரும், உத்தமசேவகரும், அதராகமுதலிய தோஷமற்ற குடிகளும், தருமமுறைப்படி அரசாளுஞ்சக்தியும்அடைந்திருக்கின்றேன். யான்விரும்பியபடியே தடையின்றி அப்பொழுதே கைகூடுகின்றன. இவையாவும் ஜன்மாந்தரத்தில் செய்தசுமாசரணத்தாலுண்டானவை யென்று தெரிந்து கொண்டேனுயினும், யான்செய்த புண்ணியகருமம்யாதென விசதமாகத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமெனக்கேட்க, வசிஷ்டமுனிவர்

அற்புதங்களைக்கண்ட அவ்வரசன்மனமகிழ்ந்து அதிசயித்து மெக்கு இப்பெருஞ் சம்பத்துமுதலியன யாம் பூர்வத்திற்செய்த அவ்வகைப் புண்ணியத்தாற் கிடைத்தனவென்று யோசித்து, சன்னவனிப்பணிந்து, தன்விருப்பத் தையுணர்த்த, அப்பிருதுசக்ரவர்த்தியும் உன்மம்புனராது ஆச்சரிய மடைந்து, சர்வஜ்ருகளான வேதியரையடைந்து சாஷ்டாங்கமாகப்புணி ந்து, வேதபிரேஷ்டர்களே! தாங்கள் என்விஷயத்தில் தயையுடையவர் களாயிருப்பீர்களாயின், தமது விசேஷ ஞானத்தால் யான் கேட்பதற்குப் பதில்சொல்லவேண்டும். யான் தங்களுக்கு வேண்டுவனவற்றைக் குறை வறக்கொடுப்பவனன்றே? தாங்கள் யாவர்க்கும்உபகாரஞ்செய்புத்தர்ள வான்களன்றே? எனச் சேட்க, முனிவர்கள் மொழிபலாயினர். அரசனே! உன்மனத்திலுள்ள சந்தேகம் யாது? நீ சந்தேகிக்கத்தக்கது யாது மிலை யும்? அதனை யெங்களுக்குணர்த்தவையாயின் நாம் அதின்விபரத்தை வெளியிடுவோம். நீ லப்தநதிவகளையும்முறைப்படி பரிபாலனஞ்செய்து உன்னி டத்தே பெருங் களிப்புற்றிருக்கிறாய். [illegible] முடிவர்க ளிடத்திலேயே தர்மங்களை யறியவேண்டும். உன் கருத்தை யறிவதற்கு கேட்க, அதிராஜனுனபிருதுசக்ரவர்த்தி வேதியரைப்பணிந்து, யான் பூர் வத்திற்செய்த சன்மார்த்தங்களையும் என் பிறப்பையும் அதிசௌந்தரியமுடைய தன்புனைவி செய்துள்ள சத்கருமங்களையும், எங்களிருவருக்கும் நீங்காத பெரிய விருப்புற்றதற்குக் காரணமும், நாடோறும் புருஷார்த்தங்கள் உண் டாகிருக்கும்வகையும், மன்னர்கள் யாவரும் எனக்குக் கப்பங்கட்ட சேர்க்கையும், அனவிடப்படாத என் பொக்கிஷமும் விருத்தியானதின் விப ரமும், தோன்வலிமையிற் சிறந்துள்ள தேஜசும், நோயற்ற வாழ்வற்ற வ லமும், அரிய விருப்புகின்றனதலின் இவற்றை விவரமாகத் தெரிவிக்க வேண்டும் எனக் கேட்க, பிராமணோத்தமர்களாகிய முனிவர் யாவரும் ஒன்றுகூடி. மரீசிமுனிவரை விடையிறுக்குமாறு பிரேரேபித்தார்கள். மரீசி மகருஷி சிலதினம் யோகநிஷ்டையிலிருந்து விருத்தாந்தங்களெல்லா வற்றையுமுணர்ந்துகொண்டு, கைகட்டி நெடிர்நிற்கும் அம்மன்னர்பெரு மானேநோக்கிக் கூறலாயினர்.

சக்கிரவர்த்தியே! நீ சமஸ்தமான போகங்களையும், இப்பொழுது அனுபவிப்பதற்கெல்லாங் காரணம் பூர்வஜன்மத்தில் உன் மனைவியுமன் சேர்ந்து செய்த சத்கருமத்தின் பலனேயன்றி வேறன்று. அதனையும் விவ ரமாகச் சொல்லுகின்றேன். சாவதானமாகக் கேட்பாயாக—நீ ஜன்மாந் தரத்தில் ஜீவஹிம்சை செய்வதிலேயே விருப்பமுடைய ஓர் சூத்திரன். உன் மனைவியோ மகா பதிவிரதையாதலின் உன் விருப்பின்படி நடந்து உனக்கு சேவை பணிவிடைசெய்வதிலேயே மனமுடையவள். நீ மிகுதியும் மூர்க்கத் தன்மையால் உன் மனைவியை நீக்கி ஒருவனிடம் ஊழியத்திற்கமர்ந்தனை. நீயுன் மனைவியைப் பிரிந்தபோதிலும் அவள் உன்னைப்பிரியாது அப்போ தைக்கப்போது உன்னைக்கண்டு உன் பணிசெய்வதையே உறுதியாகக்கொ

ண்டிருந்தனள். இவ்வாறிருக்கையில் அயோத்தியில் மகா தனிகனாயிருந்த மகாராஜாவானவன் பத்திரத்தகளுடன் ஆங்கோர் விஷ்ணு ஆலயம் நிர்மாணஞ்செய்து அங்கே விஷ்ணுமூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்கையில், பொன்மயமான பூதானத்தைச் சத்பிராமணருக்குச்செய்து அந்தக் கோயில் முழுதும் பொன்மயமாக்கினன். அந்தத் தேவாலயத்தில் நடந்தவற்றை நீயும் உன் மனைவியும் அதிக ஆவலோடு கண்டு அடிக்கடி நிலத்தை விளக்கியும் மெழுகியுஞ் சுத்தஞ்செய்துகொண்டிருந்தீர்கள். ஆலயத்தில் அலங்கிதல் முதலிய தொண்டு செய்துவந்ததால் அப்போழுதே உங்களுக் கிருந்த பாவங்களெல்லாம் நசித்தன. அன்றியும் யொன்றுமறியாத பசுவினைத் தானஞ்செய்த பலனை யடைந்தாய். அதனால் இந்தச் சமஸ்தமான சம்பத்தும் இப்பூமியும் உனக்குச் சொந்தமாயின். ஜன்மாந்தரத்திற் செய்த திரனுயிருந்து நீ கெய்தருகிறத்தால் இந்தச் சனனத்திற் பேரரசனாயினை. இனியிச்சானதிற்றீர்ந்தபூதானத்தைச் செய்க. வேறொன்றுஞ் சொல்ல வேண்டியதில்லை. ஸ்ரீகணவிகாரமான பூதானத்தைச் சத்பாத்திரனுக்குக் கொடுப்பதே அவன் தன் பிதுரர்களையும் தன் வமிசத்திலிணிப் பிறப்பவர்களையும் தன்னோடுகொண்டு சூரியசந்திரருள்ளவரையில், சுவர்க்கலோகத்திலேயே வாழ்ந்திருப்பான். தருமார்த்த காம மோக்ஷங்களும் பூதானத்தினாலேயே கைகூடும். ஆன் ஜன்மாந்தரத்தை நன்குணர்ந்தினனன்றே? சமஸ்தமான காலத்திலும் பூதானஞ்செய்வாயாகில் உன் கோரிக்கைகளெல்லாம் சுடேறப்பெறுவாய். துஷ்டர்களையன்றிச் சூத்திரராயினும் பூதானஞ்செய்யும்பகூத்தில் சமஸ்த பாவங்களினின்றும் நீங்குவர். பூதானஞ்செய்யவேண்டுமென்று மனத்திற் கருதியவனும் சுவர்க்கபதவியை யடைவான். இத்தச் சரித்திரத்தைக் கேட்டவர்களும் பக்தியோடு படித்தவர்களும் எல்லாப்பாவங்களையுமொழித்து சுவர்க்கபதவியை யடைவார்களென்று பிரமாத்திரராகிய மரீசிமுனிவர் கூறியருளினர்.

சுவர்ணதான பூதானங்களின் மகிமையுரைத்தது.

முற்றிற்று.

இருபத்தைந்தாவது
பூதானவிதியுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸூதருமாரரை நோக்கி, ஸ்வாமீ! மகருஷியே! மகாபிரசித்தமுற்ற வேனபுத்திரனைய பிருதுசக்கிரவர்த்தி பூதானத்தை எவ்வகைவிதியுடன், எந்தக்காலத்தில் தானஞ்செய்தனன்? அதனையுரை. அவனினேன் எனக்கூற, ஸூதருமாரமுனிவர் சொல்லலாயினர். வியாஸமுனிவனே! சக்திக்குவஞ்சனையின்றித் தானஞ்செய்வோரில் உத்தமர் மத்திமர் அதமரென மூன்றுவகையினருளர். அவர்கள் தம்வகைக்கேற்ற பலன்களை யதுபவிப்பார்கள். சுவர்ணப்பொடிகளையாவது, தாமிரப்பொடியையாவது, பிருதிவியையாவது தனுகையால் மூன்றுகையாவது, இருகையாவது ஒருகையாவது ருப்பலாகவைத்து, அதன்மேல் தகுனியாகச் சுவர்ணநிஷ்கங்கள் இலகுவாவது ஆயிரமாவது நூறுவது ஐம்பதாவது, வைத்து, அதன்பேரில் கலசத்தினங்களையாவது பொற்பொடியையாவது வைத்து அக்குவியலை மேருமலையாகக்கொண்டு, அதன்கிழக்கில் மந்தரமும், தெற்கில் கந்தமாதனமும், மேற்கில் நீலமும், வடக்கில் விபுலமும், அம்மேருவினுச்சியில் வைடூரியமயமான வீடும், அவ்வீட்டின் கிழக்கில் நானவிதரத்தினங்களும், தெற்கில் பவளமும், மேற்கில் நீலமும், வடக்கில் பதுமராகமும் வீட்டின்மேல் நானவிதமான ரத்தினங்களும் (அல்லது சுகந்தமுடைய சுண்ணங்களும்) தாம்பூலமும்வைத்து, இவற்றைப் பூமண்டலமாக்கொண்டு இதனைச்சுற்றிலும் இலவணசமுத்திரமிருப்பதாக உபசரிக்கப்பெய்ய ஜம்புத்வீபமாம். அதனைச்சுற்றிச் சிறிதளவாகத்திற் கரும்புரசத்தைப்பெய்தால் அதுபிலக்ஷதீபமாம். அதனை வெளியே நெய்யைச்சொரிய, சான்மலித்வீபமாம். அதன்புறம்பேதயிரையெழுத்துக்குசைத்வீபமாம். அதன்சுற்றிலும் பாலைச்சொரியக் கிரவுஞ்சத்வீபமாம். அதன்புறத்தில் மதுவைச்சொரியச் சாகத்வீபமாம். அதன்வெளியே நல்லஜலத்தைவார்க்கப் புஷ்கரத்வீபமாம். இவ்வகைய ஸப்தத்வீபகளோடு கூடியதாகச்செய்து அதப் பூமியை வைதிகளுகளுள்ள தானபாத்திரனுக்குக் கொடுக்கவேண்டும். வியாஸமுனிவனே! உத்தமமான பிருதிவிதானத்தின் முறைமையையுனக்குச் சுருக்கிச்சொன்னேன். இதனைவிரித்துச் சொல்லவேண்டுமாலுல் அதிக ஆயிரவருஷங்கள் சொல்லினுஞ் சொல்லிமுடியாது. இந்தத்தானஞ்செய்த பின்னர் தாதாவின் கையளவாக ஓர்குண்டமுண்டாக்கி அதில் அக்கினியை வளர்த்தி, யவை கடுகு எள் இவற்றைக்கலந்து, திக்குப்பாலகர்களுக்கும், நவக்கிரகங்களுக்கும் அவரவர்கட்குரிய மந்திரங்களினத்தி மும்முறையும், விஷ்ணுப்பிரீதியாக நூற்றெட்டுமுறையும், வருணனுக்கும் வசுவுக்கும் மும்முறையும் ஹோமஞ்செய்யவேண்டும். அதன்பின்னர் பிருதிவியைக்குறித்து ஒருமுறை ஹோமஞ்செய்யவேண்டும். அதன்பிறகு இவ பெருமானைக்குறித்து அவரே உலகுக்கு ஆதாரமாயிருப்பவரென்றும், யாவராலுந் துதிக்கத்தக்கவரென்றும், தேவதேவரென்றும், பயபக்தியுடன் உன்னியான் பூஜிக்கின்றேன். நீயே உலகினைப்படைத்துக்காத்துத் தானஞ்செய்து அதனைபெற்றுக்கொண்டவன் என்று கூறித்தானமேற்ற பிராமணரையாசாதித்து, வஸ்திராபரணங்களையும் விசேஷமாகக்கொடுத்து என் கோரிக்கைகளெல்லாம் சுடேறுமாக என்று நமஸ்கரிக்கவேண்டியது. பிரேஷ்டமான தானகாலத்தில் சத்பாத்திரனுக்குஇவ்வாறு தானஞ்செய்த பகூத்தில், தன்முன்னோர் தாற்றுவரையும் தன் பின்பிறப்போர் தாற்றுவரையும் சுவர்க்கமேற்றி, தானுஞ் சுவர்க்கபதவியை யடைவான். இந்த வகையாகச்செய்யப்படும் பூதானத்தால் அடையக்கூடாத இஷ்டசித்தி இடையிலை யிடையாது என்று வஸத்குமாரமுனிவர் கூறியருளினர்.

பூதானவிதியுரைத்தது

முற்றிற்று.

இருபத்தாறுவது

திலாதஸ்திதானமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸூதக்குமாரரைநோக்கி ஸ்வாமி! கேள்ஞானமாவது தவமாவது செய்பச்சாத்தியில்லாதவனுக்குப் பிரமஹத்திபாதி தோஷங்கள் எப்படிநசிக்கும்? இவ்விஷயத்தைத் தேவரீர் பிரமதேவரிடம் கேட்டுணர்ந்தபடி அடியேனுக்குவிவரமாகச்சொல்லியருளவேண்டுமென்னக் கேட்க, ஸூதக்குமாரமுனிவர் சொல்லுகின்றார். ஒருவனுடைய தேஹமானது பரிசுத்தமாகும் பரியந்தத்தில் அவனுடைய எல்லாப்பாவங்களும் நீங்கி நிர்தாகத்தழித்து போகுமென்று முன்னரே கூறியிருக்கிறேனன்போ? உடனேயிலிருக்கும் பிராணனே ஜீவனெனப்படும். உடலின் வெளியி லுள்ள தனமும் போகமெனபாம். ஜீவனைக்கவ்வப்பதித்துத் தவஞ்செய் தாலது பொருளை விழுப்பமுடித்துத் தானஞ்செய்தாலது முத்தியடையலே ண்டும். குருசிரேஷ்டனுகிய வியாஸமுனிவனே! இன்னும் யேயிய வேண் டிய விஷயமேதேனுமிருப்பின் அதனையுஞ்சேட்க என, வியாஸபகவான்— பாவபூரமாகிய இக்கலியுகத்தில் மாதாபர் ஆசாரமிலர்களாகி, பாவங் களைச் செய்வதிலேயே விருப்பமுடையவர்களாயும் ஞானமற்றவர்களாயு மிருந்து பலவிதபாவங்களைச்செய்து கொடிதாகியதரகவிசே ஷங்களில் விழுந்து கஷ்டங்களை யநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவ வகைய நரகவேதனையை யடையாது தப்பித்துக்கொள்ளத்தக்க தானம் யாது? என்றதானத்தைச் செய்தால் நரகத்தைக்கண்ணினுங் காணமலிருக்கலாம். இவற்றைச் சொல்லியருளவேண்டுமெனக்கேட்க, ஸூதக் குமாரமுனிவர் சொல்லுகின்றார்.

நில்ல விரதத்தையுடையவனே! கேள். கார்த்திகைமாச பூரணையிலாவது, நரகசதுர்த்தசியிலாவது, எள்ளினைக்கொண்டு யானைவடிவாகச் செய்து கந்தபுஷ்ப அருகுதைகளாற் பூசித்துநைவேத்தியஞ்செய்து விஷ்ணு பூஜைசெய்து, கன்றையுடைய பசுவினை யொருபுறங்கட்டி, திபம்வைத்து, எள்ளாற்செய்த யானையின் கண்களில்முத்துக்களும், பற்களில் வெள்ளி யும், சுற்றிலும் பவளமும், நெற்றியில் திலகமாகப் பொன்னும், கர்ணங் களில் சாமரையும் வெண்கவரிகள் இரண்டில், உடலில் பட்டுவஸ்திரமும், கும்பஸ்தானத்தில் முத்துக்களும், சிரசில் சிந்தூரமும் வைத்து, முத்து மாலை பாதுகை குடை இண்ணம் ஆசனம் கண்ணாடி முதலியவற்றைச் சத் திக்கேற்பப் பொன்னும் செப்புவைத்து அந்த யானையின்முன்னர் குங்கு மத்தால் அஷ்டதள பத்மம் வரைந்து, அதன் இடையே சர்வலோக காரணபூதரான சிவபெருமானையும் விஷ்ணுவையும் ஆவாஹனஞ் செய்து, அப்பதுமத்தின் கிழக்கில் தேவர்தலைவனை இந்திரனையும், அதன் பக்கவி லுள்ள தளத்தில் அக்கினியையும், தென்பக்கலில் பிதுர் தேவப்பிரபுவும்

தர்மவான்களுக்கு இன்பங்கொடுப்பவனுமாகிய இயமனையும், அதற்கடுத்த தளத்தில் இராக்ஷஸப் பிரபுவாகி நரகலோகத்திற்குச் சமீபமாகவுள்ள லோகத்தில் வசிக்கும் நிருதியையும், அதற்குப்பக்கலில் ஜலத்திற்கு நாயக னும் சகல ஜலங்களின் சவுக்கியத்தை யுண்டுசெய்பவனுமாகிய வருணனை யும், அதன்பக்கலில் பொன் விமானத்திற் சஞ்சரிப்பவனும் எல்லோருக் கும் ஆயுர்ப்பூதமாயிருப்பவனுமாகிய வாயுவையும், அதன்பக்கலில் தனாதி பதியான குபேரனையும், அதன்பக்கலில் பசுக்களாகிய பிராணிகட்டெல் லாம் பூரியாகவுள்ள ஈசானனையும் தனித்தனி நமஸ்காரமென்று தீர்த்தம் முறையே ஆவாஹனஞ்செய்து, தூர்க்கமான மார்க்கத்தினின்று இரக்ஷிக் கவேண்டுமென்றும், நிர்மூர்த்திஸ்வரூபமும் விசுவரூபமும் சுகத்தைக்கொடுப்ப தாயுமாகிய சிவபெருமானுக்கு நமஸ்காரமென்று துதித்து, பரிவார தேவர்களைப் பூசித்து, உலக பாலன கர்த்தாவாகிய திருமாலை மீண்டும் பூசித்து அஞ்சலியஸ்தராகி, இந்த யானை என்னை இயம தூக்கவழியிற் சுக மாகச்செலுத்தி, எனக்கு மங்களபலமான பூரணகும்பமும் காமதேனுவும் கற்பகவிருக்ஷமும் சிந்தாமணியும், ஐராவதமும் உண்டாக்குமாக என்று சொல்லிக்கொண்டு சக்திக்கேற்ப, சத்பாத்திரனை பிராமணனுக்குப் பொன்னுபரணங்களை யளித்து, அத் திலஹஸ்தியையும் தானஞ்செய்து அன்று முழுவதும் உபவாசமிருந்து, மாலையில் தீபதானஞ்செய்து அதன் பின்னர் போஜனஞ்செய்யவேண்டியது.

வியாஸமுனிவனே! இவ்வகையாக விதிப்படி தமது சக்திக்கேற் பத் திலஹஸ்திதானஞ் செய்தவர்கள் கோரமான நரகஸ்வரூபமாக விளங் கும் இயமமார்க்கத்தைக் காணுமலே, எல்லாப் பாவங்களையுமொழித்து, பந்துமித்திரர்களுடன் கூடிச் சுவர்க்கலோகத்திற் பதினாறு இந்திரபட் டங் கழியுமெல்லையும் வாழ்ந்திருப்பார்கள். அவர்கள் ஜ்ஞஷ்டபுஷ்கரத் தில் காமாம்பசுக்கள் ஆயிரந் தானஞ்செய்த பலனும், உபயமுகி கோதா னம் நூறு செய்த பலனும் அடைவார்கள். இராகுக்கிரஸ்தமான சூரிய கிரகணகாலத்தில் பூதானஞ்செய்த பலனும் இத்தானபலத்திற்குச் சமான மானதல்ல. இத்தத் தானமானது கிருஷ்ணசன தானத்தாலுண்டாகும் பலனைக்காட்டிலும் நூறுபங்கு விசேஷ பலனை யளிக்கும். யானை-குதிரை-இரதம்-எருதுமுதலியவற்றை ஒரேகாலத்தில் தானஞ்செய்த பலனைக் கொடுக்கும். எள் நெய் ஜலம் பசுமுதலிய தானபலனைக்காட்டிலும் நூறு பங்கு விசேஷ பலனைக்கொடுக்கும். இவ்விதியை யுணர்ந்து திலஹஸ்தி யைப் பூசித்து, மஹேஸ்வரரூபமானதும் திக்கஜஸ்வரூபமானதுமாக இவ் யானையைத் தானஞ்செய்கிறேனென்று சங்கல்பஞ்செய்து காந்தாஹஸ்தி தானஞ்செய்தபகுதியில் சர்வேசுவரனான சிவபெருமானும், தைத் திய சங்காரமுகிய நிருமாலும் சந்தோஷிப்பார்கள். குடும்பியாயும் ஏழை யாயுமிருக்கிற நிர்ஷ்டமான வேதியனுக்கு இதனைத் தானஞ்செய்ய வேண்டும். இத்தத் தானம் பாவத்தை யொழித்துப் புண்ணியத்தைக்

கொடுப்பதும், நாகத்தை மொழித்து மோகூத்தை
இதனைப் படித்தும், வாசித்தும், சிந்தித்தும் உள்ளவ
யடைவார்கள் என்றுகூறி யருளினர். ம்.

திலஹஸ்திதானமுறைத்தது
முற்றிற்று.

இருபத்தேழாவது
சதுர்த்தசிவிரத மகிமையுரைத்த அத்தியாயம்.

பிரமபுத்திரராகிய ஸுதக்குமார முனிவரைநோக்கி வியாஸமுனிவர்! சர்வேசுவரனை சரம்பவமூர்த்தியை ஒருதினம் பூஜித்து உபவாசமிருந்தால், எல்லாவிரதங்களையும் ஆசரித்தலையும்தானங்களையுஞ்செய்த பலனை யடையத்தக்க ஒருவிரதத்தை அடியேனுக்கு அதற்கிரகஞ் செய்தருளவேண்டும். குருவுகளெல்லோருக்குங் குருவாகிய தாங்கள் கூறும் ஒவ்வொன்றும் பெரும்பலன் கொடுக்கவல்லவையாயிருக்கும். ஆதலின் அவ்வகைய விரதமொன்றினையும் அதனைப்பற்றிய திருஷ்டாந்தமாகச் சரித்திரத்தையுஞ் சொல்லவேண்டுமெனவேண்ட, ஸுதக்குமாரமுனிவர் கூறலாயினர். வியாஸமுனிவனே! சிவபெருமானை நியமத்துடன் ஒருநாள் ஆராதித்தால் அவருடைய அநுக்கிரகத்தை யடையலாம்! தேதகஷ்டமான அநேக விதவிரதங்களைச்செய்து அதனுலடையும் பலனைக் சுக்கிலபக்ஷ சதுர்த்தசியிற் சிவார்ச்சனைசெய்வதாலேயே, இரத்தினவியாபாரி ஒருபொருளைத் பெரியலாபத்தைத் தேடிக்கொள்வதுபோல, அதிசுலபமாக அடையலாம். எனக்கூற, வியாஸமுனிவர், ஸ்வாமீ! அத்தவிரதத்தை இதுகாறும் யாவர் ஆசரயித்தனர்? அதன்விதியாது? அவற்றையெல்லாம் விரிவாக வினங்கக் கூற வேண்டுமென, ஸுதக்குமாரமுனிவர் கூறுகின்றார்.

ஸத்யவதிபுத்திரனே! பூர்வயுகத்தில் ஜம்புத்வீபில் தர்மங்களே யுணர்ந்தவனும், தரு அக்ஷரோணிசேனைகளையுடையவனும், வில்லாளிகளில் மேம்பட்டவனும், வேதசாஸ்திரங்களில் நம்பிக்கையும், சத்திய வாக்கும், நகைத்தன்மையும், சகலபோகானுபவமும், அதிதிகளிடத்தில் விருப்பமும், பொன் வஸ்திரமுதலியவற்றை காடோறுந் தானஞ்செய்தலு முடைய ஓர் மன்னவனிருந்தான். அவனுக்கு எண்ணிறந்த சைன்யங்களிருப்பினும் சதானீகன் என்பது பெயராயிருந்தது. அவன் தனதராச்சியத்தை அநேககாலம் பரிபாலித்து ஓர் புத்திரனைப் பெற்றுமரணமடைந்தான். அப்புதல்வன் குலமுறையாக அநுபவித்துவந்த இராச்சியத்தைத் தருமமுறைப்படி காத்து, காந்தியாற் சந்திரனையும் பிரதாபத்தாற் சூரியனையும் போன்று, சத்துருபயமின்றி அரசபுரிந்துவந்தும்; தனதுதந்தை யைப்போலத் தானஞ்செய்த லொன்றுமாத்திரம் இல்லாதவனுமிருந்தான். இவ்வாறிருக்கையில், நியதியான விரதமுடைய வேதிபர் யாவரும்

தர்மவான்களுக்கு ஞானச்செயலின்மையால் ஏழைகளாகிய காமெல்லோ
தனத்தில் இராகூ இவ்விஷயத்தைக் கேட்கவேண்டுமென்று யோசித்து,
லோகத்தில் விசி சன் அவ்வர்தனனை முன்போல்படி பூசித்து ஆசனமளித்
னும் சகல ஜனங் அப்பூசையாலேயே மனங்களித்துக் கூறுபவராயினர்.
யும், அதன்பக் கள் ஒருவிஷயத்தை வெளியிடக்கருதியிருக்கின்றேம்.
கும் ஆயுர்ப்பு சமாகக் கேட்கவேண்டும். உனது தந்தைகாடோறும் வஸ்
பதியான சங்கவர்ணம் முதலியவற்றை யெங்களுக்குத் தானங்கொடுத்
லாம் பூ செய்து வந்தனன். நீயோ சிறிதுந்தானஞ் செய்யாமையின்
முனி பிராமணர் அன்னமின்றித்தேசாந்தரஞ்சென்றிருக்கின்றனர். நாங்
கூறு பெரிய குடும்பிகள்; தங்களிடத்தில் இதனையுணர்த்தி நாங்களும்
ன்னலுஞ்சிறிதளித்திற செல்லக்கருதியிருக்கின்றேம். எங்களுக்குள்ள தரித்
திரத்திலுமேலே யிந்தயோசனை யுண்டாயிற்று எனக்கூறினர். அதனைக்
கேட்ட மன்னவன் புன்னகைசெய்து, வேதியர்களே! அத்தனருக்குத்
தானங்கொடுப்பதாற் புண்ணியங் கிடைக்குமென்ப தெனக்குத் தெரிந்
திருப்பினும், யான்கேட்கத்தக்க தொன்றுண்டு. அதற்குப்பதில் சொல்ல
வேண்டும். தானஞ்செய்வன் இவ்வுலகினின்று சுவர்க்கத்திற்குச்சென்று
அங்குள்ள போகங்களே துகர்ந்து மீண்டும் பூமியையடைந்து சுகமாக வாழ்
கின்றனென்று நீங்கள் சொல்லுகிறீர்களல்லவா, பிராமணர்களே! என்
மிதாவானவன் இப்பொழுது சுவர்க்கத்தில் எவ்வாறுகவிருக்கின்றனென்
பதை நீங்கள் கண்டுக அறிந்துகொண்டு அதனை யெனக்குச் சுருக்கிற்
சொல்லவேண்டும் எனக்கூற, வேதியர் ஒன்றுகூடினார்கள். அரசன்
முகத்தைப் பார்த்துக்கொண்டு சிறிதுகோ மிருந்து புறப்பட்டசென்று
ஒருவரோடொருவர் யோசித்தனர். அதாவது இவ்வரசன்பிதா மகா
தார்மிகனதலின் இப்பொழுது எவ்வுலகிலிருக்கின்றனோ. அதனை நாம்
எப்படிச் சொல்லக்கூடும்? என்று பலவாறு யோசித்து நெடுநாள் தமது
நித்யகரும சந்தியாவந்தன அக்நிகாரியாதிகளையெல்லாம் மறந்தனர்.

முனிவனே! வேதியரொழுக்கம் குன்றியதால், சூரியன்முதலிய கோள்கள் நிலைதவறி, மழையில்லாமையாய் கோரம் சம்பவித்தது. அக்கினியில் நோயருக்கெய்தவை சூரியனையடையும். சூரியன் அந்த அதுதி யாற் சந்தோஷித்து மழைபொழியச் செய்வான். அத்தமழையால் ஜீவகோடிகளுக்கெல்லாம் ஆரோக்கியம் உண்டாகும். அன்றியும் உலருக்கு எப் பொழுதுந் திருப்தியுண்டாகும். அவ்வாறின்றி நிலைமாறியதால், உலகத்தில் வேதியர் யாககருமஞ்செய்யாது மழைமாறி உலகமழிகின்றது. அவர் களை காண்கண்டு வசனித்து அவர்கள் கருத்தையறியவேண்டுமென்று சூரிய பகவான் கருநிப்பிராமண வேடம்பூண்டு பூலோகத்திற்குவந்து அவ்வர்த்தனை யடைந்து, நீங்கள் என் முகமுற்றுநோக்கினீர்கள்? உங்கள் குலாசார தருமங்களை யேன்கைவிட்டீர்கள்? பஞ்சயஜ்ஞங்களின்பலன் எண்ணிறந்த தன்றோ? நித்தியகருமஞ்செய்யாதவரைத்தீர்த்த கர்மத்தைச்செய்து பலனை

னிருக்கும் உலகத்திற்கு அம்முனிவன் கையைப்பற்றிக்கொண்டு சூரியபக வான் கொண்டுபோயினன்.

அச்சமயம் அவ்வரசனே இயமகிங்கரர்கள் ஓர்பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றிச் சமைத்துக்கொண்டிருந்தார்கள். அதனைக்கண்ட பார்க்கவமுனிவர் ஐயோ ! மகாபுண்ணியவுருவ இவனுக்கும் இவ்வகைய தீமை சம்பவித்ததே யென்றுச்சரியமுற்று, சிறிதுநேரம் இளைப்பாறி, சதாநீக மகாராஜனே ! நீ வேதாட மகாதானங்களையுஞ் சத்பிராமணருக்குச் செய் தனையென்றும், இரத்தினங்கள் வஸ்திரங்கள் கோமங்கள் தானஞ்செய்தனை யென்றும் பிராமண சிரேஷ்டர்களாற் கேள்விப்பட்டிருக்கின்றேன். நீவஞ் செய்தாலும் பகவத்பக்தி செய்தாலும் தானஞ்செய்தாலும் சுவர்க்க மடையவேண்டியிருக்க, மகாதானங்களைச்செய்த உனக்கு எத்தப்பாவபல னிருந்து இங்குத் தண்டிக்கப்படுகின்றனை. அஃதுனக்குத் தெரியுமேம! அத னைச் சொல்லுக. வெனக்கேட்க, ஸுதாநீகன் கேட்டி, வேதியனே ! என்வர லாற்றினைக்கேள். யான் அநேகவித்தமான தானங்களை அந்தணருக்குப்பரி பூரணமாகக் கொடுத்தவனுயினும், அஞ்ஞானத்தினுற் பிரஜாபீடையாற் பொருள்தேடினேனுதலின் இத்தப்பாவத்தை யநுபவிக்கின்றேன். தேவரீர் என்விஷயத்தில் தயைசெய்து என்புத்திரனிடஞ்சென்று யான்விமுக்த னுகும்படி சுகிர்த்தவிசேஷத்தை யாசரிக்கும்படி சொல்லியருளவேண் மே. இல்லாவிடின் இப்பாவத்தை யான் அநுபவித்தல் பெருங்கஷ்டமாம். சத்ஜன சாங்கித்தியத்தாலேயே இதுநீங்கவேண்டியது. தாங்களும் இச் சமயம் இங்குவந்தீர்கள் எனக்கூற, பார்க்கவர் தன்புண்ணியங்களொழிந் தமையின் தனக்கு இதுமுண்டாகவும், இவ்வரசன் வாதனைநீங்கவும், உலகி னர் சுலபமாக நற்கதியடையவும்விரும்பினவராய், சூரியதேவனை நோக்கி, ஸ்வாமீ! சத்ஜனதரிசனம் மகாபுண்ணியகரமான்று. சத்ஜனர் தீர்த்தமான வன்றே! தீர்த்தயாத்திரை காலக்கிரமமாகப்பலனளிக்கும். சாதுசங்க மம் அப்பொழுதே பல்கொடுக்கும். புண்ணியமில்லாதவனுக்குஞ் சூர் யவேசுவரனுகிய சிவபெருமானிடத்திலும் வேதியரிடத்திலும் சத்ஜனரிடத் திலும்தபஸிகளிடத்திலும்பக்தியென்பதுண்டாகாது. புருஷனுக்குப் பாவ கூபமுண்டானபொழுது தானத்தியானம் முதலியன செய்யவேண்டுமெ ன்று நினைவுண்டாகும். யான் தங்களைத்தேவதேவனுகச் சந்தேகமின்றி நினைத்திருக்கின்றேன். தங்கள் தரிசனத்தாலேயே இந்த ரோகவாதனை யாவரும் சுகமடைவர். யான் தங்கள் சந்நிதியிலிருந்தும் சுகமண்டாந்தி லேன். ஆதலின் சிறிதும் தர்மமென்பதில்லாத எனக்குத்தர்மத்தை யுண்டு செய்வதும், அதனையநுசரிப்பவர்கள் யாவரும் சொர்க்கமடையச் செய்ய வல்லதும், மண் பெண் பொன் என்னும் வஞ்சனத்தினியங்களால் துன் புறுவார்களைக் கடைத்தேற்றுவதும், தர்மாசாரனியற்றவர்களையும் உத்தா ரணஞ்செய்ய வல்லதுமான விரதமொன்றினைச் சொல்லவேண்டுமெனக் கேட்க, சூரியதேவன் பார்க்கவரது வார்த்தைக்குச்சளித்து, வேதியனே!

உலகினுக்கு இதமுண்டாக நீ யென்னை வினவினை. உன்தருமமும் விருத்தி யாகுந்தக்க விரதமொன்றினைக் கூறுகின்றேனுகேட்பாயாக வெனச்சொ ல்லத் தொடங்கினர்.

பார்க்கவமுனிவனே! தருமத்தைப்பிறருக்குக்கூறுவோன் அத்தத் தருமாசரணஞ்செய்த பலனையடைவான். தருமஞ்சொல்லும் தாவே சிறந்தது. உலகினுக்கு இதமுண்டாகத்தக்க தர்மமார்க்கஞ்சொல்லவேண் டுவதேயாம். ஆதலின் சர்வபாவநாசமான விரதத்தைச் சொல்லுகின் றேன். வருஷமுழுவதினும் முக்தப்பிரதமாகிய சித்திரைமாசசுக்லபக்ஷ சிவ பெருமானுக்கும் சர்வதேவர்களுக்கும் பிரீதிகரமானது. அம்மாதத்தில் தேவர்கள் விசேஷதாத்பரராகச் சக்தோஷித்துப் பூமியில்வந்து தமதுஸ்தா னத்தை யடைகிறார்கள். சிவபெருமானும் பாலரூபத்தோடு பார்வதி தேவியாருடன் விளையாடிக்கொண்டிருப்பர். பார்வதி தேவியின் தோழி கள் சிறந்த ஆடையாபரணலங்காரராகி அம்மகாதேவிக்கு உபசாரஞ் செய்வார்கள். இத்தச் சித்திரைமாசத்துச் சதுர்த்தசிதிதியில் நீபதானஞ் செய்துவருவோர் சிவபெருமான்முதலிய எல்லாத்தேவர்களுக்கும் நேத் திரங் கொடுத்தபலனையும் மோக்ஷத்தையுமடைவர். அதன்விதியையுஞ் சொல்லுகின்றேன்.

சித்திரைமாசத்தில் பூர்வபக்ஷத்திலாவது அபரபக்ஷத்திலாவது சம்பவிக்குஞ் சதுர்த்தசியில் உபவாசமிருந்து சர்வேசுவரனை சிவபெரு மானுயுத்தேசித்து ஓர் கோதானஞ்செய்து தீபதானமுதலியனசெய்தவன் எல்லாப்பாவங்களையுமொழித்து சுவர்க்பதவியைச் சந்தேகமின்றி யடை வானெனச்சூரியபகவான் அதன்விவரங்களைச்சொல்லக்கேட்ட பார்க்கவர் விடைகொண்டு ஜம்புத்தீபமடைந்து அவ்வேதியருடன் கூடி அம்மன்னன் புதல்வனைக்கண்டு அவனும் அவன்மந்திரிமார்களும், அவனது கொலு மண்டபத்திலிருந்தவர்களுமாகிய யாவருமறியும்படி சதாநீகராஜனுடைய நிலைமையையும், அவன் அந்தணபத்தினியை நீங்கத்தக்க வழியையும், சதுர்த்தசிவிரதபலனையும், அதன்முறையையும் விவரமாகச் சொல்லினர். அவ்வரசன் பார்க்கவர் வார்த்தையைக்கேட்டு அப்பொழுதே புறப்பட்டுச் சமீபத்திலுள்ள ஓர் புண்ணியதீர்த்தத்தையடைந்து பெரும்பொரு ளைச் செலவிட்டு ஓர் தடாகமெடுத்து ஞானவிதமாகக் கோதானமீ பூதான முதலியன செய்து, பார்க்கவமுனிவர் சொல்லியபடி சதுர்த்தசி விரதநீதை யாசரிக்குச் சந்தோஷத்துடன் தீனனு நீகரத்தை யடைந்தனன். அவ்வ முறைப்படி சதுர்த்தசிவிரதாசரணஞ்செய்து பலனைத் தானங்களைக் கொடுத்ததால் அவன் பிதா தனக்குற்றிருந்த நரகவேதனைகளை நீங்கிச் சுவர்க்கமடைந்து தன் மூதாதைகளுடன் பலவகைச் சுகங்களையு மநுப விக்துக்கொண்டிருந்தனன். ஒருபகல் உபவாசமிருக்கவேண்டிய இந்த விரதத்தை யநுஷ்டித்தலன் சகல பாவங்களையு நீங்கிச் சுவர்க்கத்தைச் சேடைவான்.

வியாஸமுனிவனே! சித்திரைமாச சதுர்த்தசியில் சிவபெருமானைப் பூசித்து உபவாசமிருந்து சிரேஷ்டனை பிராமணனுக்குக் கோதான மாவது செய்விறைந்த பக்திர தனமாவது செய்து அன்னபான வஸ்திராதிகளால் உபசரித்தபுருஷத்தில் எல்லாப் பாவங்களையுமொழித்துச் சுவர்க்கலோகத்தையும் பிஷ்னர் உருத்திரலோகத்தையுமடைந்து அநேககாலம் அங்குள்ள சுகத்தை அநுபவித்து மீண்டும் இவ்வுலகில் தருமசீலனை அரசனுகப்பிறப்பாய். வசந்தருதுவிற் சங்கரப்பிரீதிகரமான சதுர்த்தசிவிரதத்திற்குரிய மூர்த்திவிசேஷத்தைச் சொல்லுகின்றேன். மந்திரத்தைக்காட்டிலும் பிராமணன் சிரேஷ்டன். கூத்திரியனும் வைசியனும் சுத்தர்களே. மந்திரபலமில்லாவிடினும் தானமிருப்பமுடையவனுயின் சூத்திரனும் பரிசுத்தனே. இவர்களெல்லாரும்முத்திபடைவார்கள். மந்திரங்கள் சர்வதேவபிதுர் யகூஸ்வரூபமாகவுள்ளன. மந்திரங்களையுணர்ந்தவனுக்குயாவரும் மரியாதைசெய்கிறார்கள். மந்திரமறியார்களை யாவரும் அவமதிக்கிறார்கள். ஆகலின் உமாபதியின் விரதமுழுவதும் மந்திரபூர்வமாகவே செய்யவேண்டியது. எல்லாப் பாவங்களையுமொழித்துச் சுவர்க்கமடையச்செய்யுமகதிராதி விதிகளைச் சொல்லுகின்றேன்.

முதலாவது வைகாசியில் ஒரேகாலபோஜனமும் காகமுஞ்செய்து, துவாதசியில் யாசியாது புசித்து, திரயோதசியினிரவில்மட்டும் புசித்து,சதுர்த்தசியன்று நிராகாரமாயிருந்து, பூசனையில் கோதானஞ்செய்யும் பகுதத்தில் அந்தச் சதுர்த்தசிவிரத பலனையடைவான். அதனால், சிவபெருமான் பெருங்களிப்படைவர். அவனுக்குச் சிறந்தபலன் கைகூடும். இவ்விரதத்தை முறைப்படிசெய்யப் பொருளும் தேகவலிமையு மில்லாதபகுதத்தில், ஓர் பொற்கிண்ணஞ்செய்து அதுநிறையும்படி நெய்யைவிட்டு அதற்குவஸ்திரமாவது நூலாவது சுற்றி, ஸ்தாணுவும், சதனும், ஜகத்பிரபுவும், ருத்ரபாணியும், உலகநாயகனும், பூதநாதனும், கபாலமாலிகாபரணனும், கட்வாங்கதாரியும், ஜகந்நாதனும், அர்த்தசந்திரதாரியும், சர்வாபரணபூஷிதனும், உமாநாதனும், ஞானிகளுடைய மனத்தில் விளங்குபவனும், என் இதயத்திலிருப்பவனும், அஹங்காரமற்றவனுமாகவுள்ள சர்வேசுவரனே நான் நமஸ்கரிக்கின்றேன்: அவன் என்பாவங்களை யொழிப்பானுக—என் அகஜீச் சிவபிரானைப் பூசித்துப் பிராமண சிரேஷ்டனுகவுள்ளவனுக்கு இந்த நெய்ப்பாத்திரத்தை[சர்வேசுவரன்சந்தோஷிப்பானுக—என்றுசொல்லிக்கொண்டு] தானஞ்செய்தபகுதத்தில் அவர்கள் திவ்விய தேஜோரூபமுற்றுத் தனவான்களாவார்கள். மனவாக்குக்காயங்களால் காலை உச்சிமாலை சந்தியாதிகாலங்களில் மாதாடர் செய்யும் பாவங்களெல்லாம் இந்த விரதத்தை யநுஷ்டித்தபகுதத்தில், ஜலத்திலிட்ட லவணம்போல இல்லாதனவாகி, சுகவான்களாயிருப்பார்கள். முன்யுகத்தில் குமுதனென்னும் அரசன் இவ்விரதாசரணத்தால் தன்பாவங்களையொழித்துச்சுவர்க்கத்தை யடைந்தான். இவ்விரதத்தை யநுசரித்தவன் அடையும் பலனை யெத்தனை

யளவிட்டுரைக்கமுடியாது. இவ்விரதபலனானது, நியமம்-ஆசாரமுதலிவராபுடன் சிவபெருமானிடத்திலேயே மனத்தைத் திறுத்தி அவ்விறைவனாய ஆயிரந் திருநாமங்களையுந் துதித்துக்கொண்டிருப்பவன் பாவமொழிந்து சிவலோகத்தையடைவானுதலின், அவன்பெறும் பலனுக்குச்சமானமாகச் சொல்லக்கூடுமென்றி வேறென்றும் அதன்பலனுக்குச் சமானபலனுடையதாகமாட்டாதென்று, ஸுதக்குமாரமுனிவர் கூறினர்.

சதுர்த்தசிவிரதமகிமையுரைத்தது.

முற்றிற்று.

இருபத்தெட்டாவது

சதுர்த்தசிவிரத சமானமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸுதக்குமாரமுனிவரை நோக்கி ஸ்வாமீ! உலகத்திற்கு இதமுண்டாகும்படி, இகலோகத்திலும் பரலோகத்திலும் பலனைக் கொடுக்கத்தக்க சிவ ஸஹஸ்ரநாமங்களையும் சொல்லியருளவேண்டுமெனக் கேட்க, ஸுதக்குமாரமுனிவர் சந்தோஷசித்தத்துடன் சொல்லலாயினர். வியர்களுக்கிறே! எல்லாப்பாவங்களையும் ஒழிக்கத்தக்க சிவபெருமானது ஆயிரந் திருநாமங்களையுஞ் சொல்கின்றேன். அது யாவரும்சொல்வதல்ல. சிவபெருமானது திருநாமங்களையெல்லாம் சொல்வதற்கு அவ்விறைவனது திருவருளே அவசியமிருக்கவேண்டுமாதலின், வாதனும் விசுவேஸ்வரனும் சாந்தனும் சர்வகர்த்தாவும் அவ்யயனும் சர்வஜ்ஞனும் ஸ்வபாவதப்பிராசாதனும் அசலனும்அமேயனுமனாதியும், அதுலனும், சூக்ஷ்மனும்,மஹானும், சித்தனும், வியாபியும், முக்தப்பிரியனும், அமலனும், சதாசிவனும், பூதநாதனும், சர்வவேதாகமப்பிரதிப்பாதனும், தைரியவானுமாகிய அந்தச் சர்வேசுவரனைப் படிகலிங்கம் - சடைமுடி - ஐந்து திருமுகம் - பத்துக்கரங்கள் - ஒரு நேத்திரம் - இரண்டு திருவடிகள் - வலக்காதில் இச்சாஞானக்கிரியை யென்னும் மூவிலைச் சூலமும், பராசக்தி ரூபமான மழுவும், கர்த்தாருபாவமான கட்வாங்கமும், வானும், பிரஜாபாசமும், வஜ்ரமும், ஜாகபயத்தைப் போக்குவதான அபயமும்,இடக்கரத்துள்ளடங்கிருணமாகிய நாகமும், ஸூலசூக்கும பூதங்களை நடத்தும் மாயாரூபமாகியபாசமும், குணமாகிய நீலோற்பலமும், அங்குசமும், சுத்தாசுத்த அத்துவாவைப் பிரவர்த்திக்குங் குணமான கமருசும், போகத்தைத்தரும் வாதமும், சாதகுணமாகிய மணியும், சங்காரகுணமாகிய அக்கினியும், திரோதாயி யென்னும் பரிவட்டமும், அருளாகிய சுகந்தமும், பரையாகிய மாலையும், அஜக்கிரகாந்தரமான நிறுகையும்பொருந்தியவனுகத் தியானஞ்செய்து, என்தந்தையெனக்குபதேசித்த சிவநாமங்களாயிரத்தையுஞ் சொல்லுகிறேன். அவை பதினுயிரந் திருநாமங்களாயிருந்தவை. அவற்றை யென் பிதாவாகிய பிரமதேவர் கண்டு மனத்தால் அவற்றின் பொருளைக் கிரகித்து அவற்றின் சாரமுதமாகிய இந்த ஆயிரந்திருநாமங்களை, நயினைக்கடைத்து

ணனையை யெடுப்பார்போலவும், பர்வதத்தை யிடித்து அதனுள் ளிருக்குஞ் சாரமாகிய பொன்னை யெடுப்பார்போலவும், கான்குவேதங் கட்குஞ் சம்மதமாயுள்ளவையா யெடுத்து, இவ்வண்ணமாகத் திதிப்பேரர் சகல பாலங்களையு மொழிப்பரென்றுரைத்தனர். உலகினர் பெருக்தஞ் செய்தாலல்லி இந்நரமங்களைப் படனஞ்செய்தற்கு இயலாது. இது சாந்தி யையும் புஷ்டியையுங் ககாடுக்கவல்லது. யகூத ரகூத பிசாசங்களையெல்லாம் விலக்கவல்லது. இது மிகவும் புனிதமானது. பக்திமானும் ஆஸ்திகனும் சிரத்தையுடையவனுமாகிய புருஷனுக்குபதேசிக்கத்தக்கதன்றி சிரத்தை யற்றவர்களுக்கும் காஸ்திகர்களுக்கும் இந்திரியநிக்கிரகமற்றவர்களுக்கும் உபதேசிக்கத்தக்கதன்று. பூதாத்மகனும் தேவதேவனும் பிரகபாணியு மாகிய சிவபெருமான் விஷயத்தில் அசூயையுடையவன் தனது மூதாதை கள் அதிக புண்ணியஞ்செய்து சுவர்க்காதிபதவிகளை யதுபவித்துக்கொண் டிருப்பினும், தன் பகவதபசாரதோஷத்தால் அவர்களையும் தன்னெடு நரக வேதனையை யடையச்செய்வான். இதுவே ஞானம் தியானம்யோகம். இது வேதியானிக்கத்தக்கது. இது ஒருவனது ஆயுண்முடிவில் ஸ்மரிக்கும் படி ஜன்மாந்தர புண்ணியவசத்தால் சம்பவித்தால் அவன் பெரும்பாவியா யிருப்பினும் உத்தமமான கதியை யடைவான். இது புண்ணியகரமானது, உத்தமமானது; மங்களகரமானது. இந்த ஸஹஸ்ரகாமங்களே எல்லாத் தோத்திரங்களிலும் உத்தமமான தோத்திரம். இதனைச்சொல்லுகிறேன் கேள். இதனையும் இன்னும் அநேக தோத்திரங்களையும் பூர்வம் பிரமதே வன் வைத்துக்கொண்டு இவற்றின் தாரதம்மியங்களை விசாரித்து இதனே எல்லாத்தோத்திரங்களுக்கும் அரசனென்று அதற்கு அரசத்தன்மையுங் கொடுத்திருக்கின்றனன். அதுமுதற்கொண்டு மஹாத்மாவாகிய சிவபெரு மானுடைய இந்தத் தோத்திரமானது, உலகத்தில் மானுடராலும், சுவர்க் கத்தில் தேவர்களாலும் பூசிக்கப்பட்டு, ஸ்தவராஜம் [தோத்திரராஜா] என்று பிரசித்திபெற்றிருக்கின்றது. இத்தவராஜம் முதலில் பிரமலோ கத்தினின்று தோன்றி அங்கிருந்து இவ்வுலகத்திற்குக் கொண்டுவரப் பட்டது. அதனால் இது பிரமனது தோத்திரங்களிலும் பரமானது. தேஜஸ் களுக்கெல்லாம் தேஜஸானது. தவத்திற்கெல்லாம் தவமானது. சாந்திக் கெல்லாஞ் சாந்தியானது. தைரியத்திற்கெல்லாம் தைரியமானது. யோக த்திற்கெல்லாம் யோகமானது. காரணத்திற்கெல்லாங் காரணமானது. சக்தியத்திற்கெல்லாஞ் சக்தியமானது. சிறந்தவற்றிற்கெல்லாஞ்சிறந்தது. எதனால் உலகங்களெல்லாம் பிறக்கின்றனவோ, எதனால் உலகங்களெல் லாம் பிறவாதிருக்கின்றனவோ அதுவே யிதுவாகும். இது சர்வேசுவரை யுடைய தேஜோரூபம். இவ்வகைய பிரபாவத்தையுடைய சாம்பமூர்த் தியின் ஸஹஸ்ரகாமங்களையுஞ் சொல்லுகின்றேன், சிரத்தை பக்திகளுடன் நீ இதனைக்கேட்டபசூத்தில், சகலமான கோரிக்கைகளையும் சிறிதும் ஐய மின்றிப் பெறுவாய் என்று கூறத்தொடங்கினர்.

அஞ்ஞராய ஸ்தாணவே ப்ரபவே பாகவே ப்ரவராய வரதாய வராய சர்வாத்மனே சர்வவித்யாதாய சர்வாய (கஅ) சர்வகராய உத்பவாய ஜடிலே வர்மிணே சிகிலே கட்கினே ஸர்வாங்காய ஸர்வபாவகராய ஹராய ஹரிணாக்ஷாய (உ0) ஸர்வபூதஹராய ப்ரபவே ப்ரவ்ருத்தசக்ர நிவர்த்தாய சாகவதாய த்ருவாய ஸ்மசானசாரிணே பகவதே கேசராய (ஙo) கசரோத்பவாய அபிவக்த்யாய மகாகர்மணே தபஸ்விநே பூதபாவனாய உன்மத்தவேஷாய ப்ரசன்னாய சர்வலோகப்பிரஜாபதயே மஹாரூபாய மகாகாயாய (சo) ஸர்வரூபாய மகாசனாய விசுவரூபாய விரூபாய விசுவ பூஜ்ய வாமனாய மனஸே லோகபாலாந்தர்ஹிதாத்மனே ப்ரசாதாய ஹயாய. (ஞo) கர்த்தமிநே பவித்ராய மகதே நியமாய நியமாஸ்ரயாய ஸர்வவர் மணே ஸ்வயம்பூவே அநாதயே ஆதயே அவ்யயாய. (�கo) வைகக்யரூபாய விரூபாக்ஷாய லோமாய கசேந்த்ரசாதகாய சந்த்ராய ஸூர்யாய சநயே கேதுக்ரஹாய க்ரஹபதயே வராய (ஏo) அத்ரயே அத்யிலயாய கர்த்தரே ம்ருகபாணார்ப்பணாய அகாய மஹாதபசே தீக்ஷகபவே ஆதித்ய நேன சாதகாய சம்வத்சரகராய (அo) மந்த்ராய ப்ரமாணாய பரமாய தபஸே யோகினே யாஜ்யாய மகாபிஜ்யாய மகாமாத்ராய மகாதபஸே கவர்ண ரேதஸே (கo) ஸர்வஜ்ஞாய சுபீஜாய வ்ருஷவாகராய தபோகவே அநிவிஷாய நீலகண்டாய உமாபதயே விசுவரூபாய ஸ்வயம்பிரேஷ்டாய பலாய (கoo) வைரோசனாய அநிக்நே கனஸ்பத்யே கணபத்யே இக்வாண ஸே காம்யாய பனித்ராய பரமாய மந்த்ராய ஸ்வபாவஹராய (ககo) ஹராய சமன்டனுதராய தர்விதே பாணஹஸ்தாய ப்ரதாபவதே அரகாயே ஸுதந்வயே கட்கிநே பட்டிசிநே ஆயுதிநே (கஉo) மகதே சருவஹஸ்தாய சுரூபாய தேஜஸே தேஜஸ்கராய மஹதே உஷ்ணீஷிணே சுவக்த்ராய அத் யுக்ராய விரதாய (கஙo) தீர்க்காய ஹரிகேத்ராய சுதீர்த்தாய க்ருஷ்ணாய ஸ்ருகாலரூபாய ஸர்வவர்த்தாய முண்டாய குண்டிநே கமண்டலவே அஜாய (கசo) ம்ருகரூபாய கர்தமாலினே கபர்த்திநே ஊர்த்வரேதஸே ஊர்த்வலிங்காய ஊர்த்வசாயினே நபஸ்தலாய த்விஜடினே சிவாசலே நுத்ராய (கடo) சேநாபதயே விபவே அஹஸ்சராய நக்தஞ்சராய திக் மன்யவே சுவர்க்கலே கஜக்நே தைத்யக்நே லோகாய லோகதாத்ரே (ககo) குணாகராய சிங்காரத்தூலரூபாய ஆர்த்தசர்மாம்பராய கால யோகிநே மகாகாத்ராய சர்வாவாசாய சதுர்புதாய திசாசராய ப்ரேத சாரிணே பூதசாரிணே (கஙo) மகேசுவராய பசுபூதாய பகுதனய சர்வ தாராய அமிதாய கதயே நிருத்யபிரியாய நித்தியத்ருப்தாய நர்த்தகாய ஸகிலாசகாய (கஎo) போஜாய மகாதபசே பராம்ருவே நித்யாய கிரிச ராய நபஸே கைவல்யநாதாய விஜயாய வ்யவசாயாய அதிசித்தாய (ககo) அமர்வணாய மர்வணஜ்ஞாய ஸகஸ்ரஜிஜ்ஞாய ஹராணே சடாயை மத்யமாய தபோபஹாரிணே பலவதே முதிதாய (உoo) அர்த்தினே அநிதாய வராய கம்பீரகோஷாய கம்பீரபலாய னேய ந்யக்ரோதரூபாய ந்யக்ரோதாய வ்ருக்ஷகர்ணாய அபிதே (உக0) விபவே ஸுதிக்ஷ்ணதம்ஷ்ராய மகாகாயாய மகானனாய விஷ்வக்சேனாய ஹரயே யஜ்ஞாய ஸம்யுகாபிடவாகராய தீக்ஷணபாஹவே ஹர்யக்ஷாய (உஉ0) மகாகாய கர்மகாலவிதே விஷ்ணுப்ரஸாதிதாய யஜ்ஞாய ஸமுத்

இந்த ஸஹஸ்ரகாமங்களைத் தரிக்கையில் முதலில் ஓம் என்றும் இறுதியில் நமஃ என்றும் கூட்டி, ஓம் அந்திராயநமஃ, ஓம் ஸ்தாணவேநமஃ என்ற முறையே உச்சரித்துக்கொள்க. இதில் 'மஹா' என வருகோறும் 'மஹா' எனக்கொள்க.

ராய வடவாமுகாய லம்பனய லம்பிதோஷ்டாய பருமாயாபயோந்தயே
மகாங்காய (உகூ0) மகாதம்ஷ்ட்ராய மகாஜிஹ்வாய மகாமகாய மக
ரகாய மகாரோம்ணே மகாகேஸராய மகாஜடாய அஸபத்னய ப்ரளா
தாய ப்ரத்யயாய (உசo) கிலாதகாய ஸ்ரேஷ்ஹனய அஸ்நேகனய அநி
தாய மஹாமுகயே வ்ருகூதகாராய வ்ருகூதகேதவே தரளாய வாயவாக
னய மண்டலினே (உடி0) வாயுதாம்னே தேவதானவதர்ப்பக்னே அதர்வ
சீர்ஷாய லாமாஸ்யாய நிபுஹஸ்தாய மிதேதக்னய யஜுஷே பாதபுஜாய
குஹ்யாய ப்ரகாசாய (உகூ0) ஜங்கமாய அமோகாய அர்த்தப்ரசாதாய
அதிகம்பாய ஸுதர்சனய உபகாராய ப்ரியாய சர்வய ககாய காஞ்ச
னவ்ரீவாய (உள0) நந்திநே நந்திகராய பவ்யாய புஷ்கராய ஸ்தபதயே
வ்ருக்ஷாய தபனய தாபனய ஆத்யாய க்ரிணினே (உஷ0) யஜ்ஞாய ஸமா
ஹிதாய நக்தாய கலயே காலாய மகராய காலபூஜிதாய ஹருனய கணகா
ராய பூதபாவனய (உகூ0) சாரதயே பல்மசாயினே பல்மரூஷாய பல்ம
ரூபாய தரங்கனயே அகனய லோபாய மகாத்மனே ஸர்வபூஜிதாய
சங்கவே (உ00) சங்குசம்பன்னய சுசயே பூதநிஷேவிதாய ஆஸ்ரமஸ்தாய
கபோதஷ்தாய விஸ்வகர்மபதயே வராய சாகாய நிசாகாய கும்பாண்டாய
(ஊகo) அர்த்தஜாலாய ஸுநிச்சயாய கபிலாய அகபிலாய சுக்ராய ஆயுஷே
அபராய உரகாய கந்தர்வாய அதிதயே (ஊஉ0) தார்க்ஷ்யாய அரிஷ்டநே
யாய சுசாரதயே பரஸ்வதாயுதாய தேவாய அர்த்தகாராய ஸுதியே வராய
தம்பனய மஹாகோபாய (ஊந0) ஊர்த்வரேதஸே ஜிதலயாய உக்ர
வம்ஸகராய வம்சாய வம்சதாராய அநிந்திதாய சர்வாங்கரூபாய மாயா
விதே சுகிர்தாய அகிலாய (ஊசo) அநலாய பார்தவாய பாந்துகர்த்ரே
ஸுபந்தவே அவிலோசனய சுயஜ்ஞரூபே சுகாமாயே மஹாதம்ஷ்ட்
ராய அலமாய பாஹவே (ஊடி0) அநிந்திதாய சர்வாய சங்கராய தனதாய
தனய அமரேசாய மஹாதேவாய விசுவதேவாய சுராரிக்நே நிதயே
(ஊசo) அழிர்புத்ன்யாய சேகிதானய ஹரயே அஜாய ஏகபாதாய கபர்
தினே த்ரிலங்கவே அஜிதாய சிவாய தன்வந்த்ரினே (ஊஎ0) தூம
கேதவே ஸ்கந்தாய வைசிரவனய தாத்ரே ஸுக்ராய விஷ்ணவே மித்ராய
தவஷ்ட்ரே த்ருவாய தனய ப்ரபவாய (ஊஅ0) ஸர்வகாய வாயவே அர்யம
ணய ஸவித்ரே ரவயே உதக்ராய விதாத்ரே மாந்தாத்ரே பூதபாவனய
ஸுததீர்த்தாய (ஊசo) வாக்மினே ஸர்வமாலகுணவஹாய பத்மவக்த்ராய
மஹாவக்த்ராய சந்த்ரவக்த்ராய ஷுஜுஹவாய பலவதே உபசாந்தாய
புராணய புண்யசஞ்சாரிணே (ச00) குரவே கர்த்ரே காலரூபிணே குரு
பூதாய மஹேஸ்வராய சர்வாசனய தர்மரூபாயினே சர்வப்ரிராணிபதயே
தேவதேவாய ஸுகாஸுத்தாய (சகo) ஸேதவே அஸேத ஸர்வபந்தவிமோ
கலாசதிவாசினே ஹிமவத்கிரிஸம்ஸ்ரயாய கூலஹாரிணே கூலகர்த்ரே
பசுபீஜாய பசுப்ரதாய வணிஜாய (சஉ0) வர்த்தனய வ்ருக்ஷாய
குலாய சந்தனச்சதாய ஸாரபோடாய மஹாஜந்தவே அலோலாய மஹௌள
ஷதாய சித்ரார்த்தகாரிணே சித்ரார்த்தாய (சசo) சக்தாய வ்யாகரணா
நக்தாய லிங்காதாய லிங்கதம்ஸ்டாய லிங்காய லிங்கவாகலாய
ப்ரபாவாத்மனே ஜகத்காலாய தலாய லோகஹிதாய (சச0) ஜ்ஞானசாராய
மதங்காராய கேதுமாலினே சுபாவனய பூதாஸயாய பூதபதயே
அஹோராத்ராய அநிந்திதாய வாமனய ஸர்வபூதாத்மனே (சடு0) நிலயாய
விபவே பவாய அமோகாய ஸஞ்சயாய பாரிவாய ஜீவனய ப்ராணதார
னய தருகிமிதே ஆத்மவதே (சஎ0) தாரகாய ஸத்க்ருதாயு யுகாதிகரா

கோபாலாய கோயுத்தீய க்ராஹாய கோசர்மவசனய அராய ஹிரண்ய
பர்கவே குஹாபாலாய (சஅ0) ப்ரவேதிதாய ப்ரதிஷ்டாயினே மகாஹர
ஷாய ஜிதகாமாய ஜிதேந்த்ரியாய காந்தாராய ஸுலாலாய தனவே ஆத்
மனே கதயே (சஆ0) வராய மகாகிதாய மகாந்ருத்யாய அப்சரோகண
சேவிதாய மஹாகேதவே தனுஷே தாதவே விகர்த்ரே சரேசுவராய
ஆவேதநீயாய (சசo) ஆவாஸாய ஸர்வகந்தசுகாவஹாய தோரணய
தாரணய வாயவே பர்ஜன்யாய ஹுதாசனஸஹாயாய ப்ரசாந்தாத்மனே
ஹுதாசனய உக்ரதேஜஸே (டு00) மகாதேஜஸே ஜயாய விஜயகரா
யாதே ஜயோதிஷே அநகய சித்தயே ஸர்வசிரகாய பர்கிநே தண்டினே
முண்டிநே (டுக0) ஜ்வாலினே மூர்த்தஜாய துர்தராய வணிஜே வைணவினே
வணிஜினே தாளினே காலாய காலகடங்கராய நகஷத்ராய (டுஉ0) விக்ர
காய விருத்தயே குணவ்ருத்தயே அமோகமாய ப்ரஜாபதயே நிரா
மயாவே விபங்காய ஸர்வதாமுகாய விமோசனய சாதகனய (டுசo)
ஹிரண்யகவசோத்பவாய மேடினாய பலசாரிணே மகாசாரிணே ஸு
தாய சர்வதூர்விகாதிநே சர்வவாத்யபரிக்ரஹாய பாலரூபாய பிலா
வாசாய ஸுமாலினே (டுச0) தரங்கவிதே க்ரிதஜ்ஞாய த்ருஷிருதாய
சந்தஸே சர்வபந்தவிமோசனய பந்தனய சுரேந்த்ராய சத்ருவிகாயனய
சாங்க்யப்ரசாதாய துர்வாசஸே (டுடி0) சர்வசாதுஸேவிதாய ப்ரஸ்கந்த
னய விபாகாய அதுலாய யஜ்ஞஸமவிதே சதுர்வாஹாய சர்வசாரிணே
துர்வாசஸே வாசவாய அமராய (டுசு0) ஏமாய ஏமகராய யஜ்ஞாய
சர்வசாரிணே தரோத்தமாய லோகிதாக்ஷாய மகாக்ஷாய விரூபாக்ஷாய
விஸாரதாய சங்கராய (டுஎ0) விக்ரமாய சாமாய சர்ப்பசிரநிவாஸதாய
முக்யாய வியுக்தகேசாய கேசாரயே சர்வகாமதாய சர்வகாலப்ரஸா
தாய சுபலாய (டுஅ0) பலரூபத்ருஸே சதாகாசாய நிரூபாய நிபான்யே
ஊனய சகாய ரௌத்ரரூபாம்ஸவே ஆதித்யாய வஸவே அக்னயே (டுகo)
சுவர்ச்சிதே வசுவேகாய மகாவேகாய மநோவேகாய நிசாசராய சர்வா
வாசாய ப்ரியாவாசினே உபதேசகராய ஹராய மூநயே (சு00) ஆத்மாக
ராய லோகாய லம்போஜ்யாய ஸதஸ்பதயே பகஹினே பகநிரூபிணே
விசுவதிபாய விஸாம்பதயே உன்மாதாய மதனகாராய (சுக0) அர்த்தாய
அர்த்தகராய கரமேதவாய வாமாய ப்ராக்தேவாய வாமனய சுத்தயோக
பசாரிணே சித்தாய சித்தார்த்தசாதகாய பிகூவே (சுஉ0) பிகூரூபிணே
விஷாணினே ம்ருகவே அவ்யயாய மகாசேனய விசாகாய சஷ்டிநிர்காய
நிசாம்பதயே வஜ்ரஹஸ்தப்ரதிஷ்டம்ஹினே ஸுஜரஸ்தம்பனய (சுகo)
ஸ்தம்பனய வ்ருக்ஷாவ்ருதகராய கலாய மனவே மதுகராய சலாய வானஸ்
பத்யாய வாஜிமேதாய நித்யாய ஆஸ்ரமபூஜிதாய (சுச0) ப்ரஹ்மசாரிணே
லோகசாரிணே சர்வசாரிணே சுசாரவிதே சமாநாய ஈசுவராய கால்ய
நிசாசாரிணே அநேகத்ருஸே நிமித்தஜ்ஞாய (சுடி0) நிமித்தாய நந்தினே
நந்திகராய ஹாய நந்திவராய நந்தினே நந்திவேதே நந்திவர்த்தனய
பகஸ்யாக்ஷிஹந்த்ரே காலாய (சுசு0) ப்ரமவிதாம்வராய சதுர்முகாய
மகாலிங்காய சதுர்லிங்காய லிங்காத்யக்ஷ்யாய மகாத்யக்ஷ்யாய லோகாத்
யக்ஷ்யாய யுகாவஹாய ப்ரஜாத்யக்ஷ்யாய ப்ரஜாகர்த்ரே (சுஎ0) அத்யாத்
மாநுகதாய பலாய அதிஹாஸகர்த்ரே கல்பாய லோத்தமாய ஜலிகவரய
தம்பாய தம்பகராய ரம்ஹாய வஸியாய (சுஅ0) வஸியகராய கலயே லோக
கர்த்ரே பசுபதயே மகாகர்த்ரே மதிகவரதாய அக்ஷராய பரமாய
பலவதே சுக்ராய (சுக0) தீக்ஷாயை அதிக்ஷயே சுதந்தாத்மனே சதுத்மானய

கதிப்ரதாய பகுப்ரசாதாய சுஸ்வப்னய தகதினைகாய அமித்ரஜிதே
வேதகராய (எ00) சூத்ரகாராய வித்வாம்சாய ப்ரமாய தபஸே மகா
மேகநிஞ்தினே மஹாகோரவ்சிகராய அக்னிஜ்வாலினே மகாஜ்வாலினே
அதிதாமாய ஹரிதாய (எக0) ஹரிகேஷ வ்ருஷ்ணய ஸங்கராய நித்யாய
வர்சஸ்வினே தூமகேதனய நீலாய ஸதத்தாங்கனுத்தாய சோபனய
நிவக்ரஹாய ஸ்வஸ்திதாய (எஉ0) ஸ்வஸ்திபாகாய பாகிநே பாககராய
பகவே உத்ஸங்காய மகாங்காய மகாகர்பபுராய பகுனே க்ருஷ்ணவர்
ணய சுவர்ணய (எங0) சர்வதேஹிந்த்ரியாய மதாபாதாய மகாஸல்
தாய மகாகாயாய மகாயஸஸே மகாமூர்த்தினே மஹாநேத்ராய மஹா
மாத்ராய விசாலாய மகாதந்தாய (எச0) மகாகர்ணய மகேஷுதேவ
ம்காதகராய மகாநாதாய மகாகம்பவே மகாகரீவாய சுகாந்தத்ருஸே
மகர்சஷ்டமேஷ மகாவக்த்ராய அந்தராத்மனே (எடு0) ம்ருகாலயாய
மகாகடினே மகாகரீவாய மகாபாஹவே ப்ரதாபவதே ஸம்யோகாய
வர்த்தனய வ்ருத்தாய நித்யவ்ருத்தாய ருஜவேதிகாய (எக0) நித்யாப்
ரர்மகராயாய தேவாசுரபதயே பதயே அயுக்தாய யுக்தபாஹவே
த்விஜிதாய சுபர்வனய ஆஷாடாய சுஷாடாய (எஎ0) த்ருவாய ஹரிஹராய
ஹராய வஸவே ஆவ்ருத்திமதே நித்யாய வசஸ்ரேஷ்டாய மகாதாய
நிரோஹாரிணே விசர்ப்பிணே (ஏ0) லர்வலக்ஷணபூஷிதாய அக்ஷராய
கூராய யோகினே சர்வபோகினே மகாபலாய சமாம்ருதாய சமாம்ன
யாய தீர்த்தகரினே மகார்தாய (எக0) நிர்ஜீவாய ஜீவனய வாசினே
நீரசாய பஹுகர்க்கசாய ரதனப்ரியபுதாய ரத்னங்காய மஹாஹ்ருதகிர
தக்ருதே மூலாய விசாலாய (அ0) கீர்வ்ருத்தாய யக்தாய அவ்யக்தாய
நிதயே ஆரோஹனய நிருஹாய சபிஷ்டாகினே மகாதபஸே சேது
கல்பாய மகாகல்பாய (அக0) யோகாய யோககராய ஹராய யுகரூபாய
மகாரூபாய அயனய சகனய நராய நாட்யதிர்வாபனய பாதாய (அஉ0)
பண்டிதாய விசுவ்லோசனய பஹுமாலாய மகாமாலாய சமாலாய பஹு
லோசனய விஸ்தாராய பவனய க்ருராய குசுமாய (அங0) சுபலோதயாய
வருஷபாய வ்ருஷபாங்காய மல்லிகில்லாய ஜடாதராய இந்தவே விசர்க்
காய சுழுகாய சுகாய சுவாயுதராய (அச0) கிவேதனய சதனமேன
வங்காதராய மகாஹனுஷே கர்தமாலினே பதவதே உத்தாயய மர்தா
னய பஹுனாய பாஹவே (அடு0) சகலாய சர்வலோசனய உன்மாதிக
ராய தாளினே ஊர்த்வவம்ஹனனய வடவே சதுரபத்ரகவிக்யாதாய சர்வ
லோகாஸ்ரயாய மகதே முண்டாய (அசு0) விருபாய விகிர்தாய தண்டி
னே முண்டாய விகர்வுலுப ஹரியகூராய கோகசாய சங்கினே நிப்த
ஜிஹ்வாய லகண்டபாதே (அஎ0) லன்ரமுர்த்தினே தேநவேகத்தாய சர்வ
பூதகியாய குரவே லகண்டபாஹவே சர்வாஸ்தாய சரண்யாய சர்வலோகக்
ருதே பதித்தாய த்ருமதவே (அஅ0) மந்த்ராய கனிஷ்டாய க்ருஷ்ண
பிங்களாய ப்ரம்மதண்டவிகிர்மாத்ரே சதகண்டினே சதபாசத்ருதே பத்ம
கர்ப்பாய ஹிமகர்ப்பாய ஜலகர்ப்பாய ஜலோத்பவாய (அசு0) கர்ப்பஸ்தாய
ப்ரஹ்மணிதே ப்ரஹ்மணே ப்ரமத்னாய ப்ரதாஹ்மனய வதயே அனந்த
ரூபாய சௌகாத்மனே திக்மதேஜஸே தர்மாதாய (கூ0) ஊர்த்வகாத்
மனே பசுபதயே வாதரம்ஹஸே மனோஜவாய சக்தனினே பத்மநாளாத்
ராய சாம்யுத்தராயய நராய கர்ணிகாராய மகாசக்தீய (கூ0) நீலமாத
ப்ரகாதருதே உமாபதயே உமாகாந்தாய ஜான்னவீம்ருதயங்கமாய
ஊர்த்வ ரேதஸே யுதாய லவிசாய கமகாகவனய மகாபரதாய (கூஉ0

அகாய துக்ரக்னே வேதபிங்களாய பிதாத்மனே ப்ரயதாத்மனே ஸம்ய
தாத்மனே பிதாமஹாதித சர்வபார்சவகதாய தார்க்ஷ்யாய தர்மசாதார
ணய (கூ0) தராய சராசராத்மனே சூக்ஷ்மாத்மனே சுவர்ஷாங்காய
வ்ருஷேக்ஷணாய சாத்ய்ய ருஷபாய வசவே ஆதித்யாய விவசுவதே (கூச0)
சவித்ரே அர்க்கிதாய வியாசாய சாவர்த்தசம்கேதபாய விஸ்தாராய பரி
யாய பர்யாயநிதலே ஸம்வத்சராய மாசாய (கூடு0) பக்ஷாய லக்தாஸ
மாபகாய கலாய காஷ்டாய லவாய மாத்ராய முகூர்த்தாய அன்னே
கஷாய (கூசு0) க்ஷணய விசுவசேஷத்ராய பீஜனிதாய பீஜாய ஆத்யாய
அநிதாய சர்வாதயே ஸர்வத அவதே வியக்தாய (கூஎ0) பித்ரே மாத்ரே
பிதாமஹாய சுவர்க்கத்வாராய பிரஜாத்வாராய மோக்ஷத்வாராய திரிவிஷ்
டபாய நிர்வாணய தர்லாகனுய ப்ரஹ்மலோகபராகதயே (கூஅ0) தேவாசுர
விதிர்மாத்ரே தேவாசுரபராயண சுராசுரகதயே தேவாய தேவாசுரநமஸ்
க்ருதாய தேவாசுரமகாமாத்ராய தேவாசுரமசாஸ்ரய்ய தேவாசுரகணத்
யக்ஷாய தேவாசுரகணாக்ரணயே தேவாசுரருபவே (கூகூ0) தேவாய
தேவாசுரபரிஷ்க்ருதாய தேவேசுரமகாமாத்ராய தேவாசுரமகேசுவராய
சர்வதேவமயாய அசிந்த்யாய சிந்த்யாய தேவாத்மசம்பவ்வாய உத்பிராய
சக்ராய (க000) ஆவேதயாய விராஜாய விராஜாம்பராய சஜ்ஜாய ஹஸ்திநே
சுரவியாக்ராய தேவசிங்காய நராஷ்பாய நிராயுதாய வரஸ்ரேஷ்டாய(க0க0)
சர்வதேவோத்தமோத்தமாய குருவே காந்தாய நிஜாய சர்வாய பவித்ராய
சர்வாகனுப் ப்ரயுக்தாய சோபனய வஜ்ராய(க0உ0) சமாகாய ப்ரபவே
அவ்யயாய பிருங்கினே பிருங்கப்ரியாயு ராஜ்ஞே ராஜராஜாய நிராமயாய
அபிராமாய சுரகனுய (க0கூ0) விராமாய சுவர்க்கசாதனய லலாடாக்ஷாய
விசுவதேகாய ஹரிணய ப்ரஹ்மவர்ச்சலினே விதாலராணுபதயே நவ
மாய இந்திரியவர்த்தனய சித்காரத்தாய (க0சo) சர்வபூதாரத்தாய நித்
யாய சத்யனிரதாய சருயே வ்ரதாதயே பரமாய ப்ரஹ்மனே பக்தானும்
பரமாகதய விமுக்தாய (க0டு0) நிப்கதேஜஸே ஸ்ரீமதே ஸ்ரீவர்த்தனய
நமோ—நமஸ்தே நமஸ்து.

வியாஸமுநிவரனே! பிரம்மேந்திராதி தேவர்களுங்காண்டற்கரிய
சிவபெருமானை முன்னொர்காலத்தில் யான் இந்த ஆயிரந்திருநாமங்களாற்
சிரத்தைபக்தியுடன் தோத்திரஞ்செய்தேன். இத்தத்தோத்திரத்தால்
காடோறும் பக்தியோடு துதித்தவன் மேலானபதவியையடைவான். இது
பிரமதேவரற் சொல்லப்பட்டது. ருஷிகளும் முனிவர்களும் நாடோறும்
இத்தத்திருநாமங்களால் துதிசெய்திருக்கள். பக்தியுடன் தினந்தோறும்
இதனைத் துதிசெய்த பக்தர்களைச் சிவபெருமான் கருணைகொண்டு தமிழ்ட
த்திற் சேரச்செய்வின்றார். பூலோகத்தில் ஆஸ்திகர்களாய் நம்பிக்கை
யுடைய சாதுக்கள் அநேகர் இந்த ஆயிரந்திருநாமங்களைத்தினந்தினஞ்சத்தி
யடைந்திருக்கிறார்கள். இதனையேதோத்திரஞ்செய்து ஆசுகந்தித்திருக்கிறார்
கள். மாதாடனைகள் தோடிபுண்டாரஞ் அகில் ஒருஜனத்திற் சிவபெரு
மானிடத்திற் பக்தியுண்டாகிறது. அப்பக்தி ஸ்திரமாயிருக்கும்பகுத்தில்
அதுவே முக்திக்குகாரணம். இந்தத் தோத்திரம் தேவர்களுக்குங்கிடை
க்கற்கரியது. சிவபக்தியோ அவ்விறைவனது பிரசாதத்தினாலேயே யுண்
டாகத்தக்கது. எந்தவனையிலேனும் சிவபெருமானையே யிடைவிடாது

தோத்திரஞ்செய்பவர்கள் சமுசாரசாகரத்தினின்று கடையேறுவார்கள். தேவர்களும் சிவபெருமானைப் பூசித்தேதமது உயர்பதவிகளை யடைந்தனர். தாருகனின் மாறுபாடு முத்தியடைதற்கு மகாதேவனைத் துதித்தலே நீங்க வேறுமார்க்கமுக்கிடையாது. இத்தத்திருநாமங்களாற் சிவபெருமானை யிடைவிடாது துதிசெய்து வந்த தண்டியென்பவர் உயர்ந்தகதியை யடைந்தார். பிரமாவானவர் இந்தத்தோத்திரங்களை இந்திரனுக்குபதேசித்தனர். இந்திரன் மிருத்புவுக்கும், மிருத்யு உருத்திரருக்கும், உருத்திரர் தண்டிக்கும் முறையே உபதேசஞ்செய்தனர். தண்டியென்பவர் அநேககாலந் தவஞ்செய்து இத்த மந்திரரூபமான சிவஸஹஸ்ரநாமங்களைத் தனக்குக் கிடைக்கப்பெற்றார். தண்டியென்பவர் சுக்கிரனுக்கும், சுக்கிரபகவான் கௌதமருக்கும், கௌதமர் வைவசுவதமநுவுக்கும், வைவசுவதமநு பரிகாசிரமத்திற் றவஞ்செய்து கொண்டிருந்த தனக்கிஷ்டராகிய நாசிகாயணனுக்கும், தர்மப்பிரஜாபதியின்புதல்வனாகாராயணன் இயமனுக்கும், இயமன் மிருகண்டுவுக்கும், மிருகண்டு மார்க்கண்டேயருக்கும், மார்க்கண்டேயர் புத்திசாலியான நாசிகேதருக்கும், நாசிகேதர் உபமன்யுவுக்கும், உபமன்யுவானவர் செல்வமுண்டாகும்படி கிருஷ்ணமூர்த்திக்கும் முறையே உபதேசிக்கப்பட்டுவந்தது. இத்தஆயிரத்திருநாமங்களும் இவ்வண்ணமாக உலகத்திற் பிரசித்திபெற்றன. இத்தஸஹஸ்ர நாமஸ்தோத்திரமானது காமபோகத்தையும், சர்வசித்தியையும், சுவர்க்கத்தையும், தேகாரோக்கியத்தையும், தீர்க்காயுளையும், தனதானியவிருத்தியையும் உண்டுசெய்யும். இதனைநாடோறும் படிப்பவர்க்கு யகூதாவவ பசாசாதிகளால் ஒருவிதவிக்கினமும் உண்டாகமாட்டாது. யாவர் ஜிதேந்திரியராயும், பிரமசாரிகளாயும் பூரணமனத்துடன் இதனை ஒருவருஷகாலம் ஜபிப்பரோ அவர் பசுபதிபாகிய சிவபெருமானைப் பிரத்தியக்ஷமாகத் தரிசிப்பார். இதனைச் சிவசந்நிதியில் தோத்திரஞ்செய்தவர்கள் சகலபாவங்களையு மொழித்து அசுவமேத பலனையும், சதுர்த்தசிவிரத பலனையு மடைவார்களென ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

சதுர்த்தசிவிரதசமானமுறைத்தது
முற்றிற்று.

இருபத்தோன்பதாவது
அலாபுருவதானமுறைத்த அத்தியாயம்.

விபாஸமுநிவர் ஸநத்குமார முநிவனைநோக்கி ஸ்வாமி! தருமமொன்றினாலேயே சதுர்விதபுருஷார்த்தங்களையு மடையலாமெனக்கூறினீர்; ஆதலின் பண்டிதனுயிருப்பவன் தருமத்தைச் செய்யவேண்டுமென்று புலப்படுகிறது. சாத்விகமாகிய தவம் தானம் வீரதம் நியமமுதலியவற்றால் ஸ்வர்க்கலோகத்தையடையலாம். ஆகலாபாதி நிக்குணங்களையொழித்து மாநிடஜனனத்தில் தானஞ்செய்தவர் சிலரேயடைவர்.

ரஜோகுணமாகிய தவஞ்செய்தவர்கள் அதிபாசையுடையவர்களாய் உலகத்திற்பிறந்து சுவர்க்கபோகத்தை விரும்புவார்கள். தமோகுணமானதவஞ் செய்தவர்கள் குரூரமானகுணத்துடன் உலகத்திற் பிறப்பார்கள். தாமசகுணமுடையோருக்கு நேத்திராதி இந்திரியங்களாலேயே பாவமுண்டாகிறது. இப்படியால் ரஜோகுண தமோகுணங்களினின்றும் சத்துவகுணத்துடன் செய்யுந்தவத்தையே தவமென்று சொல்லப்படும். சருகுபக்ஷணவாயுபக்ஷணங்களுடன் வனசஞ்சாரஞ்செய்து இந்திரியநிக்கிரகஞ்செய்யாதவர்களைக்காட்டிலும் தமதுவாசஸ்தலத்திலேயிருந்துகிருகஸ்தாச்சிரமதருமத்தை யநுசரித்து இந்திரியநிக்கிரகஞ் செய்தவர்களே சிறந்தவர்களாவார்கள். ஆசையையொழித்துப் பிறர்க்குத் தீமைபுரியாது தம்மிடத்திலேயே யிருப்பவர்களுக்கு அதுவே தபோவனமாகும். நான்காவதும் மேம்பட்டதுமாகிய ஸந்நியாசாச்சிரமம்சிறந்ததாயினும் இந்திரியநிக்கிரகமின்றி அதீத லகுகூடாதாதலின் புத்திமான்கள் இல்வாழ்க்கையிலிருந்தே இந்திரியநிக்கிரகஞ்செய்து பரமபதமடைவார்கள். தபோவனத்திலிருந்து தவஞ்செய்து பசித்து ஸரையடைந்தவர்களுக்கு, இல்வாழ்க்கையிலேயிருந்து அன்னபானாதிகளைக்கொடுத்து உபசரித்தவன் அத்தவசியின் புண்ணியத்தில் ஒரு பாகத்தைப்பெறுவான். ஆதலின் பிரமசரியாதி சதுர்விதாசிரமங்களில் இல்வாழ்வேமேன்மை மூன்று ஆச்சிரமிகளுக்குந் தானேயாதரிப்பதுடன், அவன் இவ்வுலகத்தில் இஷ்டபோகங்களை யநுபவித்து, பின்னர் சுவர்க்கலோகத்தை யடைந்து சுகதோஷத்துடன் வாழ்ந்திருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும், அக்கிரகன்தர்கள் பாவஞ்செய்துவிட்ட பகுதியில் யாது தானஞ்செய்வதால் தமது பாவத்தையொழித்துச் சுவர்க்கத்தை யடைவார்களோ அதனை அடியேனுக்குச் சொல்லவேண்டுமெனக்கேட்க ஸநத்குமாரமுநிவர் சொல்லலாயினர்.

ஸத்யவதியின் புத்திரனே! பாவத்தையொழித்து, சர்வசம்பத்துக்களையுமளித்து, இம்மை மறுமைப்பயன்களைக் கொடுக்கவல்லதாகிய ஒருதானத்தை யுனக்குச்சொல்லுகின்றேன். அதுவோ, கிரியாகமித்யாகருமங்களை முடித்துச் சுபகரமான முகூர்த்தத்திற் சிவபெருமானைத் திருப்தியுண்டாக்கத்தக்கது. நரகத்தை யடையாது விலக்க விரும்புகிறவன் சுத்தமான திரவியத்தினால் இத்தத்தானத்தைச்செய்து தேவர் பிராமணர்களுக்கு உபயோகித்துச் சிரேஷ்டமான கதியையடைகிறான். பூர்வம் இத்தத்தானத்தைச்செய்த புத்திரர்களால் பிதாக்களுமிவர் கடைத்தேறினர், தர்மசாஸ்திரத்திற் சொல்லியபடி, புண்ணியகூஷ்மத்திரத்தில் தானகாலமறிந்து சுபாத்திரர்களுக்குச் செய்யும்பக்ஷத்தில் விசேஷபலனையடையலாம். பெரும்பொருளாற் செய்யத்தக்கதும், தேகசுத்தியுண்டாக்கத்தக்கதும், சுவர்க்கபதவியையடையச்செய்வதும், மஹாபாதகங்களை யொழிப்பதுமாகிய இத்தத்தானத்தைச் செய்யும்பக்ஷத்தில், சத்தியமாக மோக்ஷத்தை யடைவான். பிருகுமைந்தரிற் பிரசித்த பரசுராமர் இருபத்தொரு தலை

முறைவரையில் கூதத்திரியவதஞ் செய்தபாவத்தை யொழிக்கப்பிரவித்தானஞ்செய்தும் அசுவமேதமுதலியன நடத்தியும் புதனியகத்தோடு வருந்தியிருக்குஞ் சமயத்தில் திரிமேத்திரராகிய சிவபெருமானுடைய இந்தத் தலாபுருஷ தானமானது அவருக்கு உரைக்கப்பட்டது. பாவத்தையே செய்துவந்தவனும், பலரைச்சிறையிலிட்டவனும், அநேகரைக்கொன்றவனும், பரஸ்திரீயைப்புணர்ந்தவனும், மதுபானஞ் செய்தவனும், மாமிசபக்ஷணஞ்செய்தவனும், புசிக்கத்தகாதவற்றைப் புசித்தவனும், சிவஹத்தி செய்தவனும், குருபத்தினியைப் புணர்ந்தவனும், யாகஞ்செய்தற்கு அருகல்லாதவருக்கு யாகஞ்செய்வித்தவனும், ஒருதினம் உபவாசமிருந்து இந்தத்தானத்திற்கு எத்தனஞ் செய்யவேண்டும்.

வியாஸமுனிவனே! தலாபுருஷதானஞ் செய்பவன் முதலில் இந்திரன் வருணன் வாயு நிருதி புனன் அக்கினி முதலிய தேவர்களுக்குப்பிரீதியாக ஹோமஞ்செய்யவேண்டியது. சகலதேவதை இஷ்டதேவதைகளுக்கு வியாஹ்ருதியால், அதன்பின்னிட்டு, ஓமஞ்செய்யவேண்டியது. "யத்தேவா தேவஹேடனம்", என்னும் மந்திரத்தினாலும் "யதிதிவா" என்னும் மந்திரத்தினாலும், "பஞ்சோக்தா" என்னும் மந்திரத்தினாலும் பசுநெய்யினால் சாகல்லியசூத்திரோக்தமாக ஹோமஞ்செய்யவேண்டியது. இவ்வாறு தேவப்பிரீதியாக ஹோமஞ்செய்து இரண்டெழுஞ்சுள்தம்பங்களை நிறுத்தி, அவற்றிற் கணபதியையும் ஸ்கந்தரையும் ஆவாஹனஞ்செய்து கந்தபுஷ்ப தூபதீபங்களால் ஆராதித்து அவர்களனுக்கிரகத்தைப்பெற்று, பிரகபாணியாகிய சிவபெருமானே ருத்ரஸூக்தத்தால் ஆசனம் முதலான ஷோடசோபசாரங்களோடு பூஜித்து, பல பகுதியங்களை நிவேதித்து, யாவுன்தோலையணிந்தவனே! உமாபதியே! சூலபாணியே! என்று துதித்து, அடியேன் செய்த பூஜையை அங்கீகரித்தருள்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்து, பிரமகூர்ச்ச பவித்திரமணிந்து, "ஸுர்யஸ்யையவது" என்னும் மந்திரத்தினால் ஹோமஞ்செய்து தூபதீப நைவேதனமுடித்து, "தலாபுருஷாயஸ்வாஹா" என்று பூர்ணாஹுதிசெய்து, பூர்ணாஹுதியை முடித்து, தலாவைச் சுத்தஞ்செய்து அதின் ஒரு தட்டில் திரவியத்தை வைத்து மற்றொரு தட்டிலே தானே ஏறவேண்டியது. அதன்பின்னர், தலையே! பூமிதேவியே உன் சூரியும், பிரமதேவன் உன் தந்தையுமாயிருப்பதனாலும், நீ சத்தியத்தருமரூபமாகி உன்மேலி லெழுந்திருக்கிறவென்னைத் தரிக்கவேண்டியது. சத்தியத்தினாலேயே தேவர்களும் முனிவர்களும் நற்கதியடைந்திருக்கிறார்கள். அந்தச் சத்தியரூபமாகிய நீ யென்னுற செய்யப்பட்ட தானத்தை யங்கீகரித்து என் பாவத்தைப் போக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்து, தலையினின் றிறங்கிவிடவேண்டியது. பாரமான தனது தேகத்தைக்காட்டியும் திரவியத்தைச் சாமானியமாக நினைப்பவனே இந்தத் தானஞ்செய்தற் கருகலுவான். இந்தத் தானத்தை ஒருதானஞ் செய்தவன் தூல பாவங்களுமொழிவான். இரண்டா

முறை நிசயத்தால் தானத்தைவர்களை யொருவனுகச் சந்தேகமின்றி யாவான். ஒன்றுமுதலே செய்தால் சிலசாந்திபரியந்தையுடையவன். இந்தத் தானமபூர்ணை, வைதிருதிபிரிவேளையும், சிரஹணகாலமுதலிய புண்ணிய காலங்களிலும், புண்ணியஷேத்திரத்திலாவது, தீர்த்தக்கரையிலாவது செய்யத்தகும். இப்படிச்செய்தவன் சிருதசிருத்தியனுவான். இந்தச் சரித்திரத்தைக் கேட்டவனும், சிருவிக்கவிரும்பியவனும் பாவங்களை விலக்கி சுவர்க்கலோகத்தில் யிடைவார்கள் என்று வசுத்குமாரமுனிவர் கூறினர்.

தலாபுருஷதானமுரைத்தது
முற்றிற்று.

மூப்பதாவது
பரசுராமர் சரித்திரமுரைத்த அத்தியாயம்.

வியாஸபகவான் ஸுத்குமாரமுனிவரை நோக்கி ஸ்வாமி! பரசுராமர் இந்தத் தானத்தைச் சிவபெருமானால் உபதேசிக்கப்பெற்றுச் செய்தனரென்கூறியருளினீர்கன்றே? அவர் பஞ்சுத்தராயிற்றே. க்ஷத்திரியகுலத்தை அவர் இருபத்தொருமுறை வதஞ்செய்தற்கும், சிவபெருமான் அவருக்கு இவ்விரதத்தை யுபதேசித்தற்குங் காரணங்களெவை? அவற்றையுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்க ஸுத்குமாரமுனிவர் சொல்லுகின்றார். வியாஸமுனிவனே! சிவபக்தனுயிருக்கிற பரசுராமருடைய ஜனனத்தையும், அவர் சௌரியவீரியங்களைப்பெற்ற வகையையும், தலாபுருஷதானஞ்செய்த காரணத்தையும் நீ விரும்பியவகையே சொல்லுகின்றேன்.

பூர்வத்தில் தர்மவானை ருசிகனென்னும் அரசனொருவனிருந்தான். அவன் பலசாலியான ஒரு புத்திரபாக்கியத்தை விரும்பி, தன்னுடல் மிகவும் வருந்தப் பெருந்தவஞ்செய்து, ஆயிரங்கண்களையுடைய இந்திரனைத் தரிசித்து அவனையே புத்திரனுகப்பெற்றனன். அப்புதல்வனுக்குக் காதியென்று பெயராயிற்று. காதியென்பவனுக்கு ஸத்யவதி யென்னும் ஒரு புதல்வியுண்டானுள். அப்புதல்வியை ருசிகமுனிவன் மணஞ்செய்தனன். ருசிகமுனிவன் காதிராசனுக்குச் சுகதி யுபதேசிய விரும்பி ஓர்யாகஞ் செய்து, அதினின்று ஜனித்த சருவிண்டபுருஷனை தன் மனைவிக்கையிற் கொடுத்து, உன் தாயின் கர்ப்பத்தினின்று பிறாமற் செயிக்கமுடியாத க்ஷத்திரியரிரேஷ்டனொருவனும், உனக்குப் பிராமணர்மனங்களிற் குறைவின்மி யென்னும்பால வினங்கும் புதல்வனொருவனும் பிறப்பார்கள். நீ யிதனையும் உன் தாய் இதனையும் புசித்திரனக்கருவி அவர்களைக்கொடுத்து, வனத்தையடைந்து தவச்செயலிலிருந்தனர்.

அக்தச்சமயத்தில் காதிராசன் தன்மனைவியுடன் ருசிகமுனிவனது ஆச்சிரமத்தையடைய, ஸ்யவதிகண்டு சந்தோஷித்ததுடன் விளாக்து தன் கணவன் கொடுத்த சருக்களிரண்டையுந் தன் தாயினிடங் கொடுத்

துத் தன் கணவன் கூறியதை வாய்விண்டுகூற, காரணவன் சினந்தாக்கத்துடன் அவற்றை வாங்கி, வஞ்சனைசெய்ய விரும்பினானாய்த் தான் புரிக்க வேண்டிய கருமத்தைக் குமார்த்திக்குக்கொடுத்து, குமாரத்தியிடம் சொல்லவேண்டிய சருமைத் தான் புகித்தனன். அதனால் ஸத்தியவதியானவள் கூதத்திரிய குலகாளனைபுத்திரனைக் குரு தேஜஸுடன் உற்பத்தி செய்தனள். பின்னொருகாலத்தில் நிகமுனிவர் தன்மனைவியின் பெயர்காமான் கர்ப்பத்தை ஞானதிர்ஷ்டியாலுணர்ந்து ஸத்யவதியைநோக்கி, பெண்ணே! நீயுன் தாயால் வஞ்சிக்கப்பட்டனை. மஹாதபியாக உன் தம்பி பிறக்கப்போகிறான். அவன் தன் வேதியத்வத்தால் சர்வலோகப் பிரசித்தனுவான் எனக்கூறினர். அதனைக்கேட்டஸத்யவதியானவள்நிகமுனிவனைப்பணிந்து, நாயகா! பிராமணர்களுக்குள் துஷ்டனை பின்னை யெனக்குப் பிறப்பதென்று சர்வ சாஸ்திரங்களையுமுணர்ந்த தேவரீர்சொல்வது தருதியன்றி எனை, முனிவர் அடிபெண்ணே! அஃதெனக்கருந்தன்று; உன் தாயின்செயலே அவ்வகையாகச்செய்தது எனை, ஸத்யவதிநல்லாய்! அந்தியலோகங்களையுஞ் சிருஷ்டிக்கவல்லவராகிய நீர் என்க்குச் சத்புத்திரோத்பத்தி கைகூடும்படி தயைசெய்யவேண்டும் எனை, நிகமர் ஐயோ! நான் அக்கினிதேவனை நோக்கி அத்தச்சருவை புண்டுசெய்கையில், ஜெரித்த மந்திரம் அத்தகையதன்று; யான் விளையாட்டிற்கும்பொய்சொல்லமாட்டேன் எனை, ஸத்யவதி ல்வாமீ! அப்படியாயின் அவ்வகைபவொருவன் நம்மிருவருக்கும் பவுத்திரனுகத் தோன்றட்டும் என வேண்ட, நிகமர் பெண்ணே! யான் புத்திரனிடத்திலாவது பவுத்திரனிடத்திலாவது தாரதம்மியம் வைக்கத்தக்கவனல்லன். உன் விருப்பின்படியே யாருதவெனக்கூறினர். அதனால் அவர்கள் பவுத்திராகவும் ஜமதக்கினிமுனிவருக்குப் புத்திராகவும், தமம் இந்திரியநிக்கிரக முதலிய சத்குணங்கள் நிறைந்தவராகவும் பராசராமர் தோன்றினர். காதிராசன் மனைவி தவத்தில் மேம்பட்டு அக்கினிக்குச்சமானமான பிரமதேஜஸிலுங்கூடிய விசுவாமித்திரமுனிவனைப் பெற்றனள். அதுநிற்க.

வியாஸமுனிவனே! அவ்வாறுதோன்றிய பராசராமர் கூதத்திரியர்களுக்குரிதமான புஜபலத்தோடு, கதுர்வேதத்தின் எல்லையுணர்ந்தவராயும், சகலசாஸ்திரங்களையு மறிந்தவராயும், ஜ்வாலியோகமுடையவராகிய அக்கினிக்குச் சமான காந்திமானுமாய் விளங்கிச் சிவபெருமானை நோக்கிப் பெருந்தவஞ் செய்துகொண்டிருந்தனர். அப்படி யிருக்கையில் ஒருகாலத்தில், தைன்ஹய வம்சத்தில் தோன்றிய கிருதவீர்யன் புதல்வனான அதிதேஜஸுடம் ஆயிரங்கைகளும் சூரியசமானமான காந்தியுமுடைய கார்த்தவீரியார்ச்சுனன் என்பவன், தத்தாத்திரேயனும் முனிவனைப்பூஜித்து அவராலால் அக்கினி பகவானையே ஆயுதமாகவிருக்கப்பெற்று, அவ்வஸ்திரத்தால் அநேகநகரங்கள் கிராமங்கள் கந்தனவனங்கள் முதலியவற்றைச் சுட்டெரித்து, ஒருகாலத்தில் சமுத்திரத்தையும்ருஷியாச்சிரமங்களையுங் கொளுத்திக்கொண்டு, ஆபஸ்தம்பமுனிவரிருக்கும் ஆச்சிரமத்தையுங்கொளுத்த,

அம்முனிவர்முனிந்து அவனைநோக்கி, நீ வினைமிற் பராசராமனுற் சிரமொழிக வெனச்சபிக்க அதனைப்பெற்றுக்கொண்டு, சிலகாலஞ்சென்ற பின்னர் ஜமதக்கினி முனிவரது ஆச்சிரமத்தை யடைந்தனன். ஜமதக்கினி முனிவர் கார்த்தவீரியனுக்கு பரியாதை செய்திருந்தனர். அப்பொழுது அவரிடத்தில் இருந்துகொண்டிருந்த காமதேனுவைக்கண்டு இதுதான் நினைத்தவற்றையெல்லாங் கொடுக்குமாதலின் இதனைப்பெற வேண்டுமென்று கருதிய கார்த்தவீரியன் அவரைநோக்கி, யான் உமக்கு அநேகம் பசுக்களைக் கொடுப்பேன், இக்காமதேனுவைக்கொடுக்க வேண்டுமெனக்கேட்க, அவர் மறுக்க, கார்த்தவீரியன் போர்செய்ய எத்தனிக்க, அத்தச்சமயத்தில் அருகிருந்தபராசராமர் தனது ஆயுதங்களால் அவனுடன் போர்செய்து அவனது ஆயிரம் புயங்களையும் அறுத்தெரிந்து, மகேந்திரகிரியையடைந்து சிவசந்நிதியில் தவஞ்செய்து கொண்டிருந்தனர். அதனையறிந்த அச்சுனனுடையபுத்திரர்கள் ஜமதக்கினிமுனிவனிடம்வந்து அவனைக்கொன்றுவிட்டனர். பின்னர் மகேந்திரகிரியிற் றவஞ்செய்துகொண்டிருந்த பராசராமர் சிவப்பிரசாதமடைந்தவராய்த் தனதிடத்தை யடைந்து தன் தந்தையிறந்ததற்காக வருந்தி, பழிக்குப் பழிவாங்கக்கருதி, கார்த்தவீரியனையும் அவனது புத்திர பௌத்திரர்களையுங் கொன்று, தன் தந்தையின் உடலிற்பட்ட அஸ்திர காயங்களைக்கண்டு மனங்கலங்கி, இந்த கூதத்திரியகுலத்தை நிர்மூலமாகச்செய்வேனென்று சபதஞ்செய்துகொண்டு அவ்வாறே கூதத்திரியர்களையெல்லாங் கொன்று பூமிமுழுவதும் எவ்விடத்திலும் கூதத்திரியப்பூண்டென்பது சிறிதுமின்றிச் செய்து, பூமியைப் பிராமணருக்குத் தானஞ்செய்துவிட்டுத் தவச்செயல் மேற்கொண்டு அநேககாலங்கழித்து மீண்டும் வந்து பார்க்கையில், அந்த கூதத்திரியஸ்திரீகள் பிராமணர்களைக் கொண்டு சந்ததி விர்த்திசெய்துகொண்டதால் அப்புத்திரர்கள் பிராமணர்களிடம் இராச்சியத்தை வாங்கிப் பரிபாலனஞ் செய்ய, அந்தக் குலம் தலையெடுக்கவொட்டாது ஆங்காங்குஞ்சென்று கூதத்திரியர்களைக் கொற்றனர். இவ்வாறு இருபத்தொருமுறை கூதத்திரியகுலத்தைக் கருவறுத்தொழித்தனர். அதிற் சில கூதத்திரியஸ்திரீகள் பிராமணருடையு கிருபையால் சில பிள்ளைகளைக் காப்பாற்றிக்கொண்டனர். பராசராமர் தான்செய்த கூதத்திரியகொலை நிங்கும்படி பூமிமுழுதையும், அநேக பசுக்களையும் காசிபமுனிவருக்குத் தானஞ்செய்து, அதனிலையுந் திராது, அசுவமேதஞ் செய்து அதனிலையும் ஒழியாது, சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து, இப்பாவம் எவ்வகையாக நிங்குமெனக்கேட்க, சிவபெருமான் அவனை நோக்கித் துலாபுருஷதானஞ் செய்யுமபடி சொன்னர். சர்வேசுவரனுகிய சிவபெருமானுற் சொல்லப்பட்ட நிறைந்த துலாபுருஷதானத்தைப் பராசராமர் செய்து தன் பாவங்களினின்று நீங்கிப் புனிதமானவராய்த் தவச்செயலை மேற்கொண்டு சென்றனர். வியாஸமுனிவனே! கூதத்திரியகுலத்தைப் பலமுறை துவம்சஞ்செய்த பாவத்தைப் போக்கடிக்கும்படியாக இத்தத் தானம் பராசராமரால் செய்யப்பட்டது. பிரமஹத்தியாதி பெரும்

பாவங்களையெல்லாம் அழித்தழித்தக்க இத்தகு துலாபுருஷதானத்தைப் பொன்னைக்கொண்டு செய்யச் சக்தியில்லாதவர்கள் தேவள்ளி-தேன்-நெய்-வெல்லம்-வஸ்திரம்முதலிய பொருள்களையாவது துலாவிலேற்றிச் சுவர்ண தக்ஷிணையுடன் தானஞ்செய்தால், இத்தானபலத்தை அடைந்து சுவர்க்கபதிபோகக் கூடியவர்கள். மனவாக்குக்காயங்களாற் செய்த பாவங்களும், கொலை முதலியவற்றாற் சம்பவித்த பாவங்களும், இத்தகு துலாபுருஷதானத்தால் நசிக்கும். எத்தகைய பாவத்தைச்செய்தபோதிலும் துலாபுருஷதானஞ்செய்தவன் அவற்றினின்றும் நீங்கிப் பரிசுத்தனாவானென்பதற்குச் சந்தேகமில்லை. 'பால்யத்திலாவது யவ்வனத்திலாவது விருத்தாவஸ்தையிலாவது யான் செய்திருக்கும் பாவங்களை ஸ்மரித்தருளவேண்டும்; துலாபுருஷரூபமாயிருக்கும் பரிவனே! யான் துலாவிலேறிப் பொன்னை நைவேத்யம்முதலியவைகளால் நமஸ்கரிக்கின்றேன்' என்று பிரார்த்தித்துப் பல பிராமணருக்கு விநியோகப்படுத்தவேண்டியது. துலாபுருஷதானத்தை ஒரே வேதியனுக்குக் கொடுக்கப்படாது. அப்படி ஒருவனுக்கே கொடுத்தால் தாதாவினுடைய பாவம் பரிகரிக்கப்படமாட்டாது. இத்தகு துலாபுருஷதானத்தைச் செய்தவன் பதினான்குஇந்திரபட்டம்வரையிற் சுவர்க்கலோகத்தில் இஷ்டகாமியங்களை அநுபவித்து வாழ்ந்திருப்பான் என்று ஸூதருடைய முனிவர் வியாசபகவானுக்குரைத்தனர்.

பரசுராமர் சரித்திரமுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தொன்றாவது

பாதாளலோகவர்ணனை யுரைத்த அத்தியாயம்.

வியாசமுனிவர் ஸநத்குமாரமுனிவரை நோக்கி, ஸ்வாமீ! எத்தகு தானத்தைச் செய்வதாற் சகல தானங்களினுஞ்செய்த பலனை யடையக் கூடுமோ அத்தகு தானத்தை எனக்காகவும் மாதுடன்பிறந்தாருக்காகவுஞ் சொல்லியருளவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரமுனிவர் சொல்லலுற்றனர். எல்லாத் தானங்களையுஞ்செய்தபலனை யளிக்கவல்லதும் முக்தியைக்கொடுக்கவல்லதும் சமுசார துக்கத்திலின்று கரையேறச்செய்யவல்லதும் சப்தலோகங்களுக்கும் அதிபனாகச்செய்யத்தக்கதும் சூரியமண்டலத்தினுள்ளவனாகிய சுவர்க்கபதியின் தன் பரிதாருடன் வாழ்ந்து பின்னர் விஷ்ணுபதவியைப் பெற்றுச்செய்யத்தக்கதுமாகவுள்ளது பிரமாண்டதானம் எனக்கூற, வியாசமுனிவர் பிரமாண்டதானமென்பது எத்தகையது? எனினவை, ஸநத்குமாரமுனிவர் வியாசனே! அண்டரண்ட பிரமாண்டங்களையும் அவற்றிலுள்ள ஆன்மகோடிகளுடன் படைத்தளித்தழிக்கும் ஆற்றலுடையவன் சிவபெருமானென்று தனது ஞானதிருஷ்டியினால், யான் எனது எண்ணம் நன்கு பூர்த்தியாகுமாறு, யானுஞ் சிவன் செயலெனக்

கொண்டு, சுகதுக்கங்களுங் கர்மஞானங்களுஞ் அவனுலேயே திருவுள்ளஞ் செய்தருளப்பட்டன்வென்னு மனத்துடன் உலகியாபாரமின்றி இறைவனிடத்திலேயே மனதைப் பதித்திருத்தல் பிரமாண்டதானமெனப்படும். அத்தகையினர் எல்லாப் போகப்பாக்கியங்களையும் இம்மை மறுமைப்பலன்களையும் நீங்கியடைவரெனக் கூறக்கேட்ட வியாஸமுனிவர் பேறும் வினவலாயினர்.

ஸநத்குமார முனிவரே! பிரமாண்டம் எப்படி யுண்டுசெய்யப்பட்டது? அஃதியாவராற் படைக்கப்பட்டது? அஃதெவ்வளவு விஸ்தீரணமுடையது? அதற்கு ஆதாரம் யாது? இவற்றை யெனக்கு விளங்கச் சொல்லவேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரமுனிவர் வியாஸமுனிவனே! இந்தப் பிரமாண்டத்தின் விஸ்தீரணத்தையும் உயரத்தையும் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். இந்தப் பிரமாண்டத்திற்குக் காரணமாயும் அவ்யக்தமாயும் அகாமயமாயும் எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாயும் எல்லாவற்றிற்கும் லயத்தானமாயும் விளங்குஞ் சிவத்தினின்றும் ஆகாயம் உண்டாயிற்று. ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்கினியும், அக்கினியினின்று ஜலமும், ஜலத்தினின்று பிருதிவியுந் தோன்றின. பஞ்சபூதாத்மகமான பிரமதேவர் உண்டாகிப் பிரமாண்டத்தைச் சிருஷ்டிசெய்தனர். அவற்றுள் பாதலலோகங்களும் ஏழு, சுவர்க்கலோகங்களும் ஏழு. இந்த ஏழுலகங்களுக்கு ஆதாரமாக வெண்ணிறமான ஆதிசேஷன் விளங்குவான். அவனை விஷ்ணுவென்றுஞ் சொல்லப்படும். பிரமன் வாக்கின்படி அவ்வாதிசேஷன் சகல லோகங்களையுந் தாங்கிநிற்பான். அந்தச் சேடனுடைய குணனுபவங்களைத் தேவர் முனிவர் முதலானவர்களாலுஞ் சொல்லிமுடியாது. ஆயிரஞ் சிரங்களும் தேவர் முனிவர்களாற் செய்யப்படும் பூசையும், சித்தர்களாற் சொல்லப்படும் அனந்தனென்னும் பெயரும், எல்லாத்திக்குகளையும் பிரகாசிக்கச்செய்யும் ஸ்வஸ்திகாபூஷணம் போன்ற ஆயிரம் பணமுடிகளும், நெருப்போடி பிரகாசிக்கும் வெண்மலை போலச் சுவாலையோடு சுழன்றுகொண்டிருக்கும் ஸஹாயிரம் விழிகளும், நவமணிகளிழைத்த கிரீடகுண்டலங்களும், திவ்விய மணம்பொருந்திய மலர்மாலைகளும், வெண்ணிறத்த ஹாரமும், நீலநிறத்த வஸ்திரமும், கையிலாயகிரியைப்போன்றுயர்வும், கலப்பை இருப்புலக்கைகளாகிய ஆயுதங்களும், வருணன் கன்னிகையாகிய வாருணி அருகிருந்து செய்யும் உபசாரமும், பிரகாசித்துக்கொண்டிருக்கும் விஷ்ணுவாலியும், * சங்கர்ஷணரும், ருத்திரரூபமும், பிரளயகாலாக்கினியும், சர்வலோகங்களையுந் தன்னிடத்திலாடுக்கும் வல்லபமும், சர்வாண்டங்களையும் ஓர் கடுகுபோலச் சுமக்கும் ஆற்றலும் உடையவராக விளங்கும் ஆதிசேஷனுடைய உருவத்தை ஒருவருக்கும் வர்ணிக்கச் சாத்தியப்படமாட்டாது. அவனுடைய சிரோரத்தினங்களின்பேரிற் படிந்திருக்கும் பூமியானது அம்மணிகளின்

* சங்கர்ஷணம் - சலத்தையும் இழுக்குஞ் சக்தி.

பிரதிபிம்பத்தாற் குசுமமாலைபோல விளங்காநிற்கும். அத்தச் சேடன் சோர்வுற்றதாலேயில், சமஸ்த பர்வதங்களோடுகூடிய உலகமுழுவதும் அசையும். அது பூகம்பமெனப்படும். அவனுடைய குணவிசேடங்களை சித்தர் முனிவர் கந்தர்வர் உரகர் இன்னரர் யக்ஷர் தைத்தியர் தானவர் முதலானவர்கள் அறியாதவர்களாகி அநந்தனென்று சொல்லுவார்கள். அழிவில்லாதவனாக விளங்கும் அந்தச் சேஷன் தன் மார்பிலணிந்திருக்குஞ் செஞ்சந்தனத்தைத் தனது பெருமூச்சாற் பரிக்கச்செய்து திக்குகளாகிய மாதர்களையடையச்செய்பவல்லவன். அவனிட்டத்தில் அநேககாலந் தவஞ்செய்த கர்க்கர் (மஹரிஷி) கிமித்தசாஸ்திரத்தையும் சகலபாவஜோதிஷ சாஸ்திரத்தையும் அடைந்தனர். பாதாலலோகங்கள் ஏழுந் தனித்தனி பதினாயிரயோசனை விஸ்தீரணமும், இருபதினாயிரயோசனை யுயரமும் உடையன. பாதாளலோகங்களில் ரத்தினமயமான பூமியும், ரத்தினங்களிழைத்த உப்பரிகைகளும், மதில்களும், தங்கம் வினாயும் பூமியுமுள்ளன. அவ விடத்தில் திதி புத்திரர்களான தைத்தியர்களும் நாகராசர்களும் இராக்கதர்களும் வசிக்கிறார்கள். காந்தியோடு கூடிய இரத்தினங்களையுடைய பாதாளலோகமானது சந்தோஷத்தை அளவின்றி யுண்டுசெய்யும். அதற்குச் சமானமான லோகங் கிடையவேகிடையாது. தேவ தானவ கன்னிகைகளாலுண்டாகும் மோகத்தை விடாத விரக்தனுக்கும் பாதாளலோகத்தில் விருப்பமுண்டாகத் தடையிராது என்று திரிலோகசஞ்சாரியாகிய நாரதபகவான் ஸ்வர்க்கலோகவாசிகளாகிய இந்திராதி தேவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். அவ்விடத்தில் பகலிற் சூரியவொளியும் இரவிற் சந்திரகாந்தியுங் கிடையா. குளிர்ச்சி வெப்பங்களுந் இல்லை. இரத்தினவொளியே இவை யாவுமாக விளங்கும். அங்கே தேவாமிர்த்தத்திற்குச் சமானமான பகழியபோஜ்யங்களும், திருப்தியை யுண்டுசெய்யத்தக்க அன்னபானாதிகளும், ருதுக்களாறினும் புஷ்பிக்கும் புஷ்பசாதிகளும், அம்மலர்களிலுள்ள தேனைப் பருகி ரீங்காரஞ்செய்யும் பொன்மயமான வண்டுக்கூட்டங்களும், வைடூரியமயமான விருக்ஷத்தளிர்களையுண்டு களித்த தோகிலங்களின் குரலோசையும், ஸ்படிகத்தினாற் செய்த படிக்கட்டினையுடைய தடாகங்களிற் புஷ்பித்த சுவர்ணமயமான தாமரைமலர்களும், அமிர்தமய மாவுஞ்சலத்தைப்பெருக்கும்நதிகளும், இரத்தினமயமான நீலம்பாபீதாம் பரங்களைக்கொடுக்கும் விருக்ஷங்களும், வச்சிர கோமேதகங்களாலாக்கிய பூஷணங்களைக் கொடுக்கத்தக்க பர்வதங்களும், வாடாது வாசனை வீசும் மலர்களையுஞ் சந்தனத்தையுங் கொடுக்கும் மரங்களும், வீணை வேணுமிருதங்கமுதலிய வாத்தியங்களை யெப்பொழுதும் வாசித்துக்கொண்டிருக்கும் நாககன்னிகைகளும் நிரம்பப்பெற்றுள்ள பாதாளலோகத்தில், எவ்வளவு காலம் ஒருவன் வாழ்ந்திருப்பினுங் காலங்கழிந்ததாகவே தோன்றாது.

பாதாளலோகவர்ணனை முடிந்தது.

முற்றிற்று.

முப்பத்திரண்டாவது
நரகலோகவர்ணனை முடிந்த அத்தியாயம்.

வியாஸமுனிவனே! பாதாளலோகத்தின்மேலே யிருக்கும் நரகலோகத்தையும், அதிற் பாவிகளிருந்தனுபவிக்குந் துன்பங்களையுஞ் சொல்லுகிறேன். ரௌரவம் சூகரம் ரோதம் தாலம் விசசனம் மகாஜ்வாலை தப்ததும்பம் தப்தலவணம் விலோஹிதம் வைதரணி பூயவாஹி கிருமிபோஜனம் அபிபத்திரவனம் லாலாபக்ஷம் அபாயம் வன்னிஜ்வாலை அதிரக ஸாந்தம்சம் காலசூத்ரம் தமசுவிசிரோதனம்ஸ்வபோஜனம் அதிர்ஷ்டம் மஹாரௌரவம் சான்மலி முதலிய நரகங்களிற் பாவிகள் சமைக்கப்படுவார்கள். வேதியர் முதலியோருக்கு விரோதமாகப் பொய்ச்சாகஷி சொன்னவன் ரௌரவத்தையும், சுஹ்ருத்தி செய்தவனும் பிறர் பொருளை பகரித்தவனும் கோஹத்தி செய்தவனும், விசுவாசகாதகனும், சுராபானஞ்செய்தவனும், பிரமஹத்தி செய்தவனும், பொன் திருடினவனும், இப்பாவிகளோடு சிநேகஞ்செய்தவனும் சூகரமென்னும் நரகத்தையும், ஆசாரியனைக் கொன்றவனும், உடன்பிறந்தாளுடன் போகித்தவனும், தாயைப் புணர்ந்தவனும் தப்தசும்பமென்னும் நரகத்தையும், பதிவிரதைகளைப் பலாத்காரமாகப் புணர்ந்தவனும், தன் ஸ்திரீயைப் பிறனுக்குச் சேர்ப்பித்தவனும், தப்தலோஹமென்னு நரகத்தையும், ஆசிரியனை யவமதித்தவனும், தன் தாய் தந்தையர் குழந்தைகள் முதலானவர்களை வஞ்சித்துப் புசித்தவனும், நவதானஞ்செய்தவனும், வேதவிக்கிரயஞ்செய்தவனும், சேரத்தகாத ஸ்திரீகளைச் சேர்ந்தவனும், தப்தகலமென்னும் நரகத்தையும், தர்மசாஸ்திர விரோதமாக நடந்தவன், அபிசிரோதமென்னு நரகத்தையும், தேவ பிதுர்க்களைத் துவேஷித்தவனும், இரத்தினங்களைக்குறைத்து மதித்தவனும், புனிதமான ரத்தினங்களுக்குத் தோஷஞ்சொன்னவனும், தேவர் பிதுர் முதலியோருக்கு நிவேதியாது புசித்தவனும், லாலாபக்ஷமென்னு நரகத்தையும், அன்னபானங்களில் விஷங்கலந்து கொடுத்தவன் விசசனமென்னு நரகத்தையும், அரத்தியவான்களோடு சிநேகித்தவனும், புசிக்கத்தகாதவற்றைப் புசித்தவனும், யாகஞ்செய்ய அருகலில்லாதவர்க்கு யாகஞ்செய்வித்தவனும், யாகத்திற் செய்யும் வியாமிச்ரயணமென்னுந் தானந்தை வாங்கினவனும் ருதிராந்தமென்னு நரகத்தையும், சிநேகிதனைக் கொன்றவனும், மதுவைக் காரணமின்றி விரும்பியபொழுது பருகினவனும், வாலிபத்தால் மத்தனுகிச் தர்மசாஸ்திர விரோதமாக நடந்தவனும், தன் ஜீவனமார்க்கத்தை விடுத்துக் கபடமார்க்கமாகச் சீவித்தவனும், வைதரணி நரகத்தையும், பசுமையான மரங்களை வெட்டுபவன் அசிபத்திரநரகத்தையும், மிருகங்களை ஹிம்சிப்பவனும் விடமுதலியவற்றை கெருப்பாற் கொளுத்தினவனும் வன்னிஜ்வாலையென்னு நரகத்தையும், தனது ஆச்சிரமதருமத்தை விடுத்தவனும் பிறருடைய விரதங்களைக் கெடுத்தவனும் சந்தம்ஸம் என்னும் நரகத்தையும், பசற்காலத்தில் ரேதஸ்கலனஞ் செய்தவன்

ன்னபோசனமென்னு நரகத்தையும் அடைந்து,பலவித கஷ்டங்களை யநுப விப்பார்கள். இப்படிப்பட்ட நரகங்கள் அநேகமுள்ளன. மநுஷ்யஜன்மம் களுக்கும் தர்மசாஸ்திரத்திற்கும் விரோதமாய் மன்னர்க்குக்காய்களாற் பாவஞ்செய்தவர்கள் யாவருந் தலைகீழாய்க் கஷ்டத்தை யநுபவிக்கிறார் கள். அந்நரகவாசிகள் ஒருகாலத்திலுங் தேவர்களைப் பார்க்கிறதில்லை. அவ் விதமான நரகங்களை யநுபவித்தபின்னர் விருகமும் பச பக்ஷி மிருகங்களா கப் பிறப்பார்கள். தர்மசாஸ்திரத்திற் கூறியபடி கடந்தவர்கள் களைக்க போகத்தை யநுபவித்து, கல்ல பிறவிகளை யடைந்து, க்ரமமாக மோக்ஷத் தையடைவார்கள். எவ்வளவு புண்ணியர்கள் சுவர்க்கத்திலிருக்கிறார்களோ அவ்வளவு பாபிகள் நரகத்திலிருக்கிறார்கள். எந்தப் பாவத்தைப் புத்தி யில்லாமற் செய்துவிட்டபோதிலும், அந்தப் பாவத்திற்குத் தக்கபடி சுலபமாகவுங் கஷ்டமாகவும் ப்ராயச்சித்தங்களை மநுவாதி பெரியோராற் கூறிய ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்டிருப்பினும், அதுஷ்டசெய்து தமது பாவத்தை விலக்கிக்கொள்ளாது பராமுகமாக விருப்பவர்கள் இவ்வா நரகலோகத்தை யடைந்து கஷ்டங்களை யநுபவிப்பார்கள். ப்ராயச்சித்தங் களைச் செய்துகொள்ளச் சக்தியில்லாதபக்ஷத்தில், நாம் பாவஞ்செய்தோ மேயென்னும் பச்சாத்தாபத்துடன் சிவபெருமானை நோக்கித் தன் பாவங் கள் பரிகரிக்கப்படுமாறு காசி யுத்ரி மாலைகளில் சிவஸ்மரணை செய்து கொண்டிருந்தால் அவை யொழியுமென்றும், பாவநீக்கத்தினாலும் புண்ணி யப்ராப்தியாலும் சுவர்க்கத்தை யடைவார்களென்றும் வேதங்கள் கூறு கின்றன. ஜபம் ஹோமம் தியானமுதலியவற்றாற் சிவபிரானையே தொத்தி ரஞ்செய்தவன் சர்வகர்மபந்தங்களையுமொழித்து தேவர்களாதிபோகங் களை யநுபவித்துச் சிவஞானத்தை யடைவான். சிவபெருமானிடத்திற் பக்தியுடையவனுக்கு ஒருகாலத்திலும் நரகமென்பது சித்திக்கமாட்டாது. வியாஸமுனிவனே! சுகத்திற்குந் துக்கத்திற்குங் காரணமாகவுள்ளது மன மாதலின் அதனைச் சிவபெருமானிடத்திலேயே நிறுத்தித் தியானிக்கும் பகுதத்திற் பிரமஞானமுண்டாகிறது. ஞானமே பரப்பிரமம் ; ஞானமே தத்துவரூபம் ; ஞானமே சராசராத்மகமான ஜகத்ரூபம் ; ஆதலால் ஞானத்தைக் காட்டிலும் சிறந்தது பிறிதொன்றில்லை. சிவஞானத்தை யடைந்து முக்திபெறுவதற்கு இதுவே வழியாகும். பாதாளத்தின்மே லுள்ள நரகலோகம் இப்படிப்பட்டது. அதற்குமேலுள்ள பூலோகத்தின் விபரத்தைச் சொல்லுகிறேன்.

நரகலோகவர்ணனை முற்றிற்று.

மூப்பத்துமூன்றுவது

பூமண்டல விஸ்தீரணமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவனே! பூமண்டலத்தின் விஸ்தீரணத்தைச் சுருக்க மாகச் சொல்லுகின்றேன். அது ஜம்புத்வீப - பிலக்ஷத்வீப-சான்மலித்வீப-குசத்வீப - க்ரௌஞ்சத்வீப - புஷ்கரத்வீப - சாகத்வீப என்னும் ஏழு த்வீபங்களாய், உவர்நீர்க்கடல் - கருப்பஞ்சாற்றுக்கடல் - தேன்கடல்-நெய்க் கடல் - தயிர்க்கடல் - பாற்கடல் - சுத்தநீர்க்கடலென்னும் ஏழு கழுத்திரங் களாற் சூழப்பட்டுள்ளது. அவற்றில், ஜம்புத்வீப எல்லாத் தீவுகளுக்கும் நடுவிலுள்ளது. அதன் மத்தியிற் பொன்மயமான மேருபர்வதமானது பூமியில் பதினாயிரயோசனை வேரூன்றியும் என்பத்துநாற்காயிரயோசனை யுயர்ந்துமுள்ளது. அதன் சிகரம் முப்பத்திரண்டாயிரயோசனையகலமுடை யது. மேருமலையானது பூமியாகிய தாமரைமலருக்கோர் மொட்டுப்போல் வினங்கும். ஹிமாசலம் ஏமகூடம் நிஷதமென்னும் மூன்று பர்வதங்களும் மேருவின் தென்திசையிலும், நீலம் சுவேதம் சிருங்கியென்னும் மூன்று பர்வதங்களும் மேருவின் வடதிசையிலும், பதினாயிரயோசனை யகலமும், இருபதினாயிரயோசனை யுயரமும், கனகத்தின்மயமான சாரலும், பதுமராக மணியைப்போன்ற சிகரமும், அக்கினிஜ்வாலைபோன்ற பிரகாசமு முற்றுவிளங்குகின்றன. மேருவின் தென்பக்கலில் பாரதம் கிம்புருஷம் ஹரிவர்ஷமென மூன்று வர்ஷங்களுண்டு. வடபக்கலில் ரம்யகம் ஹிரண் மயம் உத்தரகுருவென மூன்று வர்ஷங்களுண்டு. இவ்வர்ஷங்க ளொவ் வொன்றும் ஒன்பதினாயிரயோசனை விஸ்தீரணமுடையன. நடுவிலுள்ள இளாவ்ருதகண்டத்தின் மத்தியில் மேருமலை மிகவும் உன்னதமாயிருக்கும். மேருவின் கிழக்கில் மந்தரமும், தெற்கில் கந்தமாதனமும், மேற்கில் விபு லமும், வடக்கில் சுபார்ச்வமுமென நான்கு பர்வதங்கள் நாற்புறத்திலும் நின்று, பத்தினாயிரயோசனை யகலமும், ஒன்பதினாயிரயோசனை யுயரமுங் கொண்டு, அம்மேருவுக்கு உறுதிபாக விட்டம்பசைலங்களாய் நிற்கும். இப்பர்வதங்களில் மந்தரகிரியில் கடம்பமரமும், கந்தமாதனகிரியில் ஜம்பு விருக்ஷமும், விபுலகிரியில் அரசினிருக்ஷமும், சுபார்ச்வகிரியில் ஆலமர மும் வளர்ந்தும். இம்மரங்கள் ஆயிரயோசனை விஸ்தாரமுடையன. காலன் மாத்திரையே இக்கத் தீபத்திற்கு ஜம்புத்வீபமென்று பெயர். அம்மரத் தின் பழங்கள் ஒவ்வொன்றும் யானையைப்போல வுருவமுடையனவாய்ப் பழுத்து நிலமிசை விழுந்து, அப்பழச்சாற்றினின்று பெருகும் ஆறுதான் ஜம்புநதியாகிறது. அதன் நீரைத்தப் பிப்போர் துக்கம் நோய் விருத்த நரை இந்திரியநாசமுதலியனவின்றி சுகப்போழுதும் கர்வதாஹத்துடன் வாழ்ந்திருப்பார்கள். அந்நதிநீரிலுள்ள மண் பொன்மயமாகவல்லது. மேருவுக்குக்கிழக்கே பத்ராசுவமும், மேற்கே கேதுமாலமுமென இரண்டு விருக்ஷங்களுள். அவற்றிற்கிடையிலேதான் இளாவ்ருதகண்ட முள்ளது. கிழக்கில் மந்தரமலையடியில் அருணமும், தெற்கில் நந்தனவனத்தடியில்

மானதசரகம், மேற்றில் விபுலகிரியடியில் சீதோதமும், வடக்கில் சுபார் சுவகிரியடியில் மகாமேரும் என நான்கு மடுக்களுண்டு. இம்மடுக்களில் முறையே சயித்திரக்கா விசித்தினி வைப்பிரசை திருதாக்கியமென்ன நான்கு நந்தவனங்களுண்டு. இந்நந்தவனங்களினடுவில் முறையே தாமரை மலருடன்கூடிய தாகமும், குமுதங்களோடுகூடிய மானதசரகம், செந்தாமரையுடன்கூடிய விமலோதகமும், நீலோற்பலத்துடன்கூடியமேனுதமுமென நான்கு ஓடைகளுண்டு. சீதரஞ்சனம் குமுதம் சூரஹர மால்யவான் என்னும் பர்வதங்கள் பூர்வபாகத்திலும், கேசரபர்வதம் தக்ஷிணபாகத்திலும், திரிகூடம்-சிசிரம்-பதகம்-ரஜதம் - நிஷதம் இவைகள் தக்ஷிணபாகத்திலுமுள்ளன. மேற்புறத்தில், சிகிவாசலை - வைதூரியம் - கபிலம்-கந்தமாதனம்-ஜாருதி என்னும் பர்வதங்களும், வடபாகத்தில் சங்கருடமென்றும், நிஷபமென்றும், ஹம்சமென்றும், காலஞ்சரமென்றும், பர்வத கேசரங்களுமுள. இந்த மேருமஹியிலுச்சியில் பதினலாயிரம் யோசனை விஸ்தாரத்தோடு கூடியதாயுள்ளது பிரமலோகம். இதற்சுற்றிலும் அஷ்டதிக்குப்பாலகர்களின் லோகங்களுள்ளன. அத்தப்பிரமலோகத்தின்எட்டுத்திக்குகளிலும், சந்திரமண்டலம் பிரகாசிக்கிறது. விஷ்ணுபாதத்திலுண்டாகிய கங்கையானது, அவ்விடத்தில் சீதையென்றும் அலகநந்தாவென்றும், சகஷுசுவென்றும், பத்ராவென்றும், நான்கு திக்குகளிலும் பிரவாகிக்கின்றது. சீதையென்னும் நதிகிழக்குத்திக்கிலும், அலகநந்தா தென்திக்கிலும், சகஷுசுவ மேற்கிலும், பத்ராவடதிக்கிலும், பிரவாகித்துப் பர்வதங்களையதிக்கிமித்து, சமுத்திரத்தையடைகின்றன. சுபீலம் கிஷதம், மாலியவான் கந்தமாதனமென்று சொல்லப்பட்ட நான்கு பர்வதங்கள், தாமரைமொட்டுபோன்ற மேருமஹியின் கரணிபுறத்திலுமுள்ளன. பாத, கேதுமால, பத்ராசுவ, குருவென்னும் நான்கு வர்ஷங்கள், மேருவாகிய தாமரைக்கிழங்குபோ லிருக்கின்றன. அதன்மத்தியில் தேவகூடமும், தென்னண்டை கந்தமாதனமும், வடவண்டை கைலாசமும், முறையே கிழ மேல்பாகங்களில் நிஷத நீலபர்வதங்களும் மேருவின் நான்குபுறத்தின் திசாங்களில் ஒவ்வொருபாகத்திலும் இரண்டு கேசர பர்வதங்களுமுள்ளன. அதில் கைலத்துரோணி யென்னுமோர் ஓடையுண்டு. அதைச்சுற்றிலும் மனசுமியமான புஷ்பங்கள் பூத்தநந்தவனங்களும், காகேளுட்மற்றவையுமுள்ளன. அந்தக்காகேளில் எப்பொழுதும் யக்ஷர்களும், கின்னரர்களும், கந்தர்வர்களும் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பூலோகஸ்வர்க்கமென்னும் பெயருண்டு. தருமஞ்செய்தவர்கள் இந்தலோகத்திற் சுகத்தையனுபவிப்பார்கள். இதனைப் பாவிகள் பார்க்கவும் அடையவுங் கூடாது. இப்புருஷாதி எட்டுவர்ஷங்களில் வசிப்போர்களுக்கு, கோபம், துக்கம், ஆயாசம், துவேஷம், பதி, தாகம், பயம், சோம்பல் முதலியனகிடையா. எப்போதும் கோயற்றதேகமும், துக்கமில்லாமையும் இருபத்திரண்டாயிர வருஷ ஆயுளுமடைவார்கள். கிருதமென்றும், திரேதாவென்றுஞ் சொல்லப்பட்டநதிகள் அப்பூமியில் எந்நேரமும் பிரவாகித்துக்கொண்

டிருக்கின்றமையால் மழைகிடையாது. அப்பூமியின் போகம் அனுபவிக்கப்பட்டுள்ளது. அதிகமாக அனுபவிக்கமுயன்றாலும் பிரயோஜனப்படாது. அப்பூமியின் நதிதீரத்திலுள்ள மணற்பராகங்கள் பொன்னிறமாகவும், புட்பங்கள் சுவர்ணமயமாகவும், கனிப்புறம் இரத்தினமயமாகவும், வைடூரியமயமான பசும்புல்லுள்ள திட்டுகளுமாக விளங்குகலின் அங்குள்ளவர்கள் விளையாடி பொழுதுபோக்குவார்கள்.

பூமண்டலவிஸ்தீரணமுரைத்தது

முற்றிற்று.

முப்பத்துநான்காவது

பாரதவர்ஷ விஸ்தீரணமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவனே! இனி ஹிமவத்பர்வதத்தின் தக்ஷிணபாகத்துள்ள பாரதவர்ஷத்தின் விஸ்தாரத்தைச் சொல்லுகிறேன். இப்பாரதவர்ஷமானது, ஒன்பதினாயிரம் யோசனை விஸ்தாரத்தோடுகூடியது. இதற்கு கர்ம பூமி யெனவுமோர் பெயருண்டு. இப்பூமியில் புண்ணியஞ்செய்தோர் புண்ணிய பூமியாகிய தேவலோகத்தையும், பாவம்பண்ணினோர் நரகத்தையும், ஞானவான்கள் மோட்சத்தையுமடைவார்கள். அன்றியும் இப்பாரதவர்ஷமானது நவகண்டங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்திரத்வீபனும், கசேரு, தாம்ரபர்ணம், கபஸ்திமான், நாகத்வீபம், சௌமியத்வீபம், காந்தர்வம், வாருணம், பரதமென்னும் பெயர்களோடுவழங்கும். இவைகளில் ஒன்பதாவதாகிய பரதகண்டமானது, நான்கு சமுத்திரங்களாற் சூழப்பட்டதும், வடதிசுதற்கில் ஆயிரயோசனை விஸ்தாரத்தோடுகூடியதுமாகவிருக்கும். இக்கண்டத்தின் கிழ்ப்புறத்தில் கிராதர்களும், மேற்புறத்தில் யவனர்களும், தக்ஷிணபாகத்தில் ஆந்திரரும், வடக்கில் துருஷ்கர்களும் வசிக்கிறார்கள். இக்கண்டத்தின் மத்தியில், பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய எழுவருண்டோர்கள் கோடி கோடியாய் வசிக்கிறார்கள். இவர்கள் அசுவமேதாதியாகங்களாலும், புண்ணியதீர்த்தங்களாலும், தேவதாப்பிரதிஷ்டைகளாலும், கோதானமுதலிய தானங்களாலும் கற்கதியடைகிறார்கள். இப்பூமியில் மஹேந்திரமென்றும், மலயமென்றும், சஹ்யமென்றும், சுக்திமானென்றும், ரிக்ஷமென்றும், விந்தியமென்றும், பாரியாத்ரமென்றும் ஏழுகுலபர்வதங்களுண்டென்றனர். வேதஸ்மிருதியென்றும், கர்மதாயென்றும், சுரஸாயென்றும் பேரபெற்ற நதிகள் பாரியாத்ரமென்னும் பர்வதத்திலுற்பத்தியாகி நான்கு புறத்திலும் பாயி, இப்பூமியைப் பரிசுத்தஞ்செய்கிறது. விந்தியபர்வதத்திலின்றும் கோதாவரி, பீமரதி, தாபிமுதலிய மகாநதிகள் தோன்றி, தங்களிடம்வந்தபானஞ்செய்வோரது பாவங்களைப்போக்கிப் பரிசுத்தஞ்செய்கின்றன. கிருஷ்ணவேணி, காவேரிமுதலிய மகாநதிகள் சஹ்யபர்வதத்திலிருந்து

ன்றித் தகுணதேசத்தைப் பரிசுத்தஞ்செய்கின்றன. கிருதமாலா, தாம்ர பர்ணி முதலிய நதிகள் மலயபர்வதத்தி லுற்பத்தியாகி அவ்விடங்களைச் சுத்தி செய்கின்றன. மகேந்திரபர்வதத்தினின்று திரியாமா, ரிஷிக்குல்யா என்னும் நதிகளுற்பத்தியாகி அப்புறங்களைப் பரிசுத்தஞ்செய்கின்றன. குமாரியென்னும் நதி சுக்திமர்னென்னும் பர்வதத்திலுண்டாகிப் ப்ரவகிறது. இப் பூமியில் நான்கு வருணங்களும், ஸ்நான, தானங்களைச் செய்து இவைகளால் சுகத்தையும் பரிசுத்தத்தையுமடைகிறார்கள். இக்கண்டத்தில் நான்கு யுகங்களுண்டு. மற்றத் தீபங்களில் இவ்விதயுகங்களில்லை. இப்பரதகண்டத்திலுள்ள ஜம்புத்தீபமானது கருமபூமியானதால், இதிலுள்ள ஜனங்கள் தோதானமுதலிய தானங்களையும், அக்நிஹோத்ரமுதலிய சத்கருமங்களையும், தவமுதலிய யோகங்களையுஞ்செய்து நற்கதியடைகிறார்கள். ஒன்பது வகையினவாகிய வருஷங்களுள் பாரதவருஷஞ் சிறந்தது. மற்றவைகளெல்லாம் போக பூமிகளையன்றிப் புண்ணியஞ் செய்து நற்கதியடையத்தக்கவையல்ல. ஆதலின் ஜனன மரணமாகத் தோன்றினாலும் இப்பரதகண்டத்தில் ஓர் ஜனனமெடுப்பது அருமையினு மருமை. சுவர்க்கமோக்ஷங்களடையக்காரணமாயிருக்கிறது இப்பரதகண்ட மாகையால், தன்னியர்களாயிருக்குந் தேவர்களும், இப்புண்ணிய பூமியில் தோன்றினால் மறுபடியும் தேவாம்சமடையலாமென்று விரும்புகிறார்கள். இவர்கள் இப்பூமியில் தோன்றி, சிவபெருமானைத்தியானித்து உயர் பதவியையடைகிறார்கள். ஆகையால் இப்பரதகண்டத்தில் தோன்றி ஈசுவரனைத்தியானித்து பதவியடைவதினுஞ்சிரேஷ்டமானது வேறேதினுமை பால் இதுவேமேலானது. இப்பரதகண்டம் முப்பத்துநாலாயிரம் யோசனை விஸ்தீரணமுடையதாகும். உவர்நீர்க்கடல் இரண்டரை யோசனை விஸ்தீரணமுடையதாய், ஜம்புத்தீபத்தைச் சூழ்ந்திருக்கும். இதற்கிரட்டிப்புள்ளது லக்ஷத்தீபம். அதில்கோமேதகம் சந்த்ரம் நாரதம் துர்துரி சோமகம் கமனஞ்சிப்பிரராஜம் என்னுமேழுசலங்களுள. அப்பர்வதங்களில் எப்போதுந் தேவர் கந்தருவர் சந்தோஷத்துடன் வசிப்பர். அநுதப்தா சிகா பாப்கினி த்ருதிவா இருபா அமிருதா சுகிர்தா வென்னும் ஏழுநதிகள் பிரவஹிக்கும். அநேகவிது நதிகளும் உள. அங்குள்ளோருக்கு மனோவியாதி தேகபீடை முதலியன கிடையாது. அந்நதிகளில் ஸ்நானஞ்செய்து நீர் பருகினோர்பதி லுயிர்வருஷகாலந் தியித்திருப்பர். அவ்விடத்தில் ஜம்புத்தீவைப்போல யுகவித்தியாசமில்லை. எப்பொழுதுந் திரேதாயுகத்திற்குச் சமானமாகவே யிருக்கும். ராமனந்தி சதுர்வர்ணத்தார்களுமிருக்கின்றனர். பிலக்ஷத்தீவு வென்னும் பெயர்அவ்விருக்ஷத்தினாலே யுண்டாயிற்று. அவ்விடத்தில் சங்கரனையும் திருமாலையும் பிரமதேவனையும் வேதமந்திரங்களாற் புகழ்கிறார்கள். அதைச்சுற்றிலுக்கடலாற் சூழப்பட்டிருக்கும்.

அதன்பின்னர் சான்மலித்தீபத்தில் ஸ்வேதம் ஹரிதம் ஜீமூதம் ரோஹிதம் வைத்யுதம் மானவம் சுப்ரபமென ஏழுவர்ஷ பர்வதங்க

ளுள. சான்மலி என்னும் பெயர் அங்குள்ள அவ்விருக்ஷத்தாலேயே யுண்டானது. அதற்கிரட்டிப்பாகச் சுறுக்கடல் சூழ்ந்திருக்கும். சுக்ல ரக்த ஹிரண்யா சந்த்ரா சுக்ராவிமோசனி நிவிர்த்தியென்னும் ஏழு நதிகள் அவ்வர்ஷங்களினின்றும் பெருகும். அப்பூமியில் சதுர் வருணத்தாரும் உளர். யஜ்ஞமுதலியவற்றால் விஷ்ணுவை வணங்குவர். அவ்விடத்தில் தேவர்கள் உல்லாசமாக வசிப்பார்கள். அதற்கிரட்டிப்பாகிய குசத்தீபத்தில், அசுரரும் தேவரும் கந்தர்வ கிம்புருஷாதிகளும் மானுடரும் சதுர்வருணத்தவர்களும் வாழ்வார்கள். ஆசார அநுஷ்டானங்கள் தவறமாட்டார்கள். அங்குள்ளவர்கள் சிவபெருமானையுந் திருமாலையும் பூசிப்பார்கள். குசேசயம் ஹரி ஜாதிமான புஷ்பவான் மணித்ருமம் மஹாசைலம் மந்தராசலம் என்னும் ஏழு பர்வதங்களும், தூதபாவை சிவை பவித்திரை சம்மதி வித்யை தம்பா மஹீ என்னும் ஏழு நதிகளும், இன்னும் பலநதிகளும் உள. இது அங்குள்ள குசையினுலே அப்பெயருற்றது. இதனை நெய்க்கடல் சூழ்ந்திருக்கும். அதற்கிரட்டிப்பாகித் தயிர்க்கடலாற் சூழப்பட்ட கிரௌஞ்சத்தீபத்தில் கிரௌஞ்சம் வாமனம் அந்தகாரம் திவாவிருத்யம் புண்டரிகம் துந்துமானஸ எனும் ஏழுவர்ஷ பர்வதங்களும், பலவிதமான விருக்ஷங்களும், புஷ்பவனங்களும், தேவர் கந்தர்வர்களும், சதுர்வருணத்தவர்களும் நோயில்லாத வாழ்க்கையுமுடையதாயிருக்கும். கௌரீ குமுத்வதி சந்தியா ராத்ரீ மனோஜவா கியாதி புண்டரீகா என்னும் ஏழுநதிகளுண்டு. அங்குள்ளவர்கள் சிவபெருமானே யோகமார்க்கத்தால் தியானிக்கிறார்கள்.

அதற்கிரட்டிப்பாகிய க்ஷீரசமுத்திரத்தாற் சூழப்பட்ட சாகத்தீவானது உதயகிரி ஜலதாரம் பரேதா சாமம் அஸ்தகிரி அம்பிகாகிரி கேசரி யென்னும் ஏழுவர்ஷ பர்வதங்களையுடையது. சதுர்வருணத்தவர்களு பங்குளர். சுகுமாரிகுமாரி கலிந்த வேணுகா இக்ஷு ரேணுகா கபஸ்திர் எனவும் ஏழு நதிகளும், அநேக மலைகளும் நதிகளுமுள. அங்குள்ளவர்கள் தர்மவான்களாயிருப்பார்கள்; சந்தோஷமாயிருப்பார்கள்; அவர்கள் சூரியனையே யெப்பொழுதும் யாகாதிகருமங்களாற் பூசிப்பார்கள். அதற்கிரட்டிப்பாகிய புஷ்கரத்தீவானது மானதசரசு என்னும் ஆயிரயோசனை விஸ்தீரணமான தடாகத்தையும், அதில் தாமரைமலர்கள் ஐந்துயோசனை யுயர்ந்தும் விளங்கும். அவ்விடத்துள்ளவர்கள் இராகத்துவேஷாதிகளும், உத்தமோத்தமபேதமுமின்றிச் சத்தியவான்களாய்ச் சுவர்ணைய அலங்காரத்துடன் சமானஸ்தர்களாய்ஜராதிரோகங்களின்றிப்பதினாயிரவருஷம்வாழ்வார்கள். அது சுகமானவிடம். புஷ்கரம் தாதகி கண்டம் மகாவிதம் தியக்ரோதம் என்னும் இடங்களில்தேவாசுரர்களாற்பூசிக்கப்பட்டவராய்ப் பிரம தேவர் எழுந்தருளியிருப்பர். அது சுத்தநீர்க்கடலாற் சூழப்பட்டிருக்கும். இவ்வாறு ஏழுசமுத்திரங்களாற் சூழப்பட்டிருப்பன சப்ததிவுக்களாம். சமுத்திரஜலங்கள் சந்திரன் விருத்தியாகையில் விருத்தியாகி, அவன் குறைகையிற் குறைந்துவிடும். சமுத்திரத்திலுள்ள வடமுகாக்கினி அந்த ஜலப்

பெருக்கைப் பருகிவிடும். புஷ்கரத்தீவிலுள்ளோர் அறுசுவையோடுகூடிய அன்னபானாதிகளைப் புசிப்பர். க்ஷீரசாகரத்துக்குப் புறம்பே உலகங்களில்லை, பிராணிகளுமில்லை. ஆயினும் பொன்னிறமான பூமி அதற்கிரட்டிப்பு விரிவாக ஆயிரயோசனை யுயரமாகவிருக்கும். அவ்விடத்திற்கப்புறம் அண்டச்சுவர் உள்ளது. அதுவரையிலுள்ளதான் பூமி. இந்த ஸப்தத்வீபங்களும் ஐம்பதுகோடி யோசனை விஸ்தீரணமாம். இதுவே எல்லாப் பிராணிகளுக்கும் ஆதாரகர்ணமாக விளங்கும்.

பாரதவர்ஷ விஸ்தீரணமுரைத்தது முற்றிற்று.

மூப்பத்தைந்தாவது

மிருத்யுஞ்சய மந்திரமுணர்த்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே ! சூரியசந்திரருடைய கிரணங்கள் செல்லுமெல்லையும் பூலோகமென்று சொல்லப்படும். சூரியமண்டலமானதுபூமியினின்றும் லக்ஷயோசனை யுயரத்திலும், சந்திரன் மண்டலமானது அதன்மேலில் லக்ஷயோசனை யுயரத்திலும், அதன்மேலில் நக்ஷத்திர மண்டலமும், புதனும், சுக்கிரனும், அங்காரகனும், பிரகஸ்பதியும், சனியும், அதன்மேலில் சப்தருஷிகளின் மண்டலமும், அதன்மேல் லக்ஷயோசனையில் ஜோதிச்சக்கரமுடைய துருவமண்டலமும் உள. இதுவரையில் மூன்று லோகங்களும் கோடியோசனையுமாயின. அதன்மேலில் மஹாலோகம் அதில் சநகர் சநந்தனர் சநாதனர் கபிலர் ஆசரி ஓடீ வஞ்சிக: என்னும் வேதியர் எழுவர் அநேக சத்புருஷர்கள் சூழ்ந்து பணி செய்ய வாழ்ந்திருப்பார்கள். அதன்மேலில் சனலோகம். அங்கே வைராஜதேவர்களும் தேவர்கள் பிதாகளும் வாழ்வார்கள். அதன்மேலில் தபோலோகம். அங்கே தேவர்களும் வேதியர்களும் வசிப்பார்கள். அதன்மேலில் சத்யலோகம். அங்குள்ளோர் நிர்மலமான மனதும், தருமத்தில் விருப்பமுமுடையோரும், இந்திரிய நிக்கிரகமும், சத்தியமேநித்தியமென்னுஞ் சித்தையும் உடையவர்கள். இவ்வகையாக மேலேழுலோகங்களையும், கீழேழு லோகங்களையும் உனக்குச்சொன்னேன். இதுவே இந்த அண்டத்தின் விஸ்தீரணம். இவ்வண்டகடாகத்தில் பத்துப்பங்கு ஜலமும், பத்துப்பங்கு அக்நியும், பத்துப்பங்கு வாயுவும், பத்துப்பங்கு ஆகாயமும், பத்துப்பங்கு பிராணிகளுமாயிருக்கும். இவ்வண்டத்திற்குப் பிரதாவு புருஷன் சிவபெருமான். அவர் ஆதியந்தமற்றவராயும் அளவிடப்படாப் பிரபாவத்தையுடையவராயும், எல்லாவற்றிற்கும் ஆதாரபூதியுமிருப்பர். அவரிடத்தினின்றும் அநேககோடி அண்டங்களுண்டாயின. நிறையில் தெருப்பும், பாலில் நெய்யும், எள்ளில் தயிலமும் விளங்குவதுபோல, சர்வப்பிராணிகளிடத்திலுஞ் சிவபெருமானே அந்தர்பூதமாகி விளங்குவர். சரா

சரமகமென்னும் விருக்ஷங்கட்கு விதையாக விருக்கின்றனர். அந்த இரண்டினிடத்திலிருந்து மனம் புத்தி சித்தம் அகங்காரமுதலியன தோன்றும். அவருடைய இச்சையில் மூலப்பிருகிருதி தோன்றி, அதினின்றும் தேவாசுரர் ஜனிப்பர். விதையினின்று விருக்ஷமும், சூரியகாந்தியினின்று அக்நியும் உண்டாவதுபோல, சிவபெருமானிடத்திலிருந்து ஜகத்து உண்டாகிறது. சிவசக்தி சிவங்களின் ஐக்கியத்தில் எல்லாத்தேவ மாநுட கதி பேதங்களும், சர்மங்களும் உண்டாகும். சிவபெருமானே திரிமூர்த்தி ஸ்வரூபமாயிருந்து திருஷ்டியாதி காரியங்களை நடத்துகிறார். எவரிடத்தினின்றுஞ் சர்வலோகங்களுந்தோன்றி எவரிடத்தில் லயமடையுமோ. எவரிருவருத்திற்குங் காரணமோ அவரே சிவபெருமானென்று ஸநத்குமார முநிவர் சாதனரென ஸூதர் கூறினர்.

இவ்வாறு கூறிய ஸூதமுநிவரை நோக்கி கைமிசாரண்ய ருஷிகள் வினவுகிறார்கள். ஓ ஸூதமுநிவரே! சிவபிராணுக்குத்தியந்தப்பிரியமாகவும், சகலசாஸ்த்ர ரகஸ்யமாகவும், தர்மார்த்த காம மோக்ஷமாகிய புருஷார்த்தங்கள் கரதலகாயங் கொடுக்கவல்லதுமான ஷடாக்ஷர மந்திரத்தைப் பூர்வங் கேட்டுச் சந்தோஷித்தோம். இன்னும் சிவத்திற்குப் பிரியமாயும், அஷ்டமாசித்திகளையளிக்கத்தக்கதாயும் உள்ள எந்த மந்திரத்தால் மாண்டவ்யாதி மகருஷிகளெல்லாந் தேவத்வத்தையடைந்தனரோ அந்த மந்திரத்தையுபதேசிக்கவேண்டுமென்று கேட்ட கைமிசாரண்யமுநிவர்களுக்கு ஸூதமுநிவர் சொல்லுகின்றார். ஓகைமிசாரண்ய முநிவர்களே! பூர்வத்தில் பரமசிவனுனவர், குமாரக்கடவுளுக்குபதேசித்த மந்திரத்தையும், அதன் மான்மியத்தையுஞ் சொல்லுகின்றேன் கேட்பீர்களாக. அம்மந்திரத்துவக்கத்தில் பிரணவத்தை யுச்சரிக்கவேண்டும். அகாராதிகணங்களில் முன்றுவதாகிய ச கணத்தின்மூன்றுவது. அசுரமாகிய ஜ என்னுமெழுத்தை, பஞ்சமசுரமாகிய உ காரத்தோடு கூட்டி, இறுதியில் பிந்துவாகிய ம் பூர்ணஹுகாரம் (மகாரம்) சேர்த்தும்; எட்டாவது ஷ வர்க்கத்தில் மூன்றுவது அசுரமாகிய ஸ வென்னு மெழுத்தை இரண்டு பிந்துக்களுடன் கூட்டி, (ஃ) இவ்விரண்டு எழுத்துக்களுக்கும் பிரணவத்திற்கு மத்தியில் ஹ்ரீம் என்னும் பீஜாட்சரத்தைக் கூட்டி ஜபிக்கவேண்டியது. இதுவே மிருத்யுஞ்சயமந்திரம் இது சிவபெருமானுக்குப் பிரீதியானதும், சர்வசித்தியையும், போகத்தையும் பரலோக முத்தியையும் மனசுத்தியையுங் கொடுக்கவல்லதுமாம். பிரமஹத்தி, அகம்பாகமனம், சுரபானஞ்செய்தல், பொன்திருடல், சிசுத்தி குருபத்தினியைக் கருதுதல், கம்பிக்கைத்துரோகம், ஆசாரியனைக்கொலுதல், பிதா மாதாஸ்திரீகள் முதலியோரைக்கொல்லுதல், முதலிய பாதகங்கள் இம்மந்திரதை யுச்சரிக்க, அக்கினியிலகப்பட்ட இலவம்பஞ்சுபோலவிப் பன்பமாகும். ஒருவன், இம்மந்திரத்தைப் பூர்த்தி பூர்வமாய் ஒருமுறை ஜபித்துச் சிவபெருமான் சிரசில் ஒரு மலரையாவது சமர்ப்பித்தால், கோடிமுறை இம்மந்திர ஜபஞ்செய்த பலனை யடை

வ்ன். இம்மந்திரத்தைப் பிரதினம் முக்காலங்களிலும் தவறுதலுவக்குக் குறையாமல் ஜபிக்கும்படிக்கு, ஜபிப்பவனுக்கு கொருக்கவும் அபமிருத்தியுவடைகிறதில்லை. இம்மந்திரத்தை ஜபிக்குங்காலத்தில், நியாச தரியாச நியமத்தோடு ஜபித்தால் கோடி ஜன்மங்களிற் செய்த பாவங்களைப் போக்கிச் சிவ சாயுச்சியத்தை யடைவார்கள். இம்மந்திராநுஷ்டானமுடையோர், மழை காற்று இடிமுதலியவைகளால் அபமிருத்யுவடையார். அன்றியும் புலி, திருடர், குஷ்டஜ்வரம், ஜ்வரம் முதலியவைகளால் தொந்தரையடையுங் காலத்திலு மிதனைப் சரிக்கில், அப்பயத்தினின்றுங்குவித்தருத்கர்ஷத்திலும்சுத்தனை காசுஞ்செய்து ஜயமடைவார்கள். புலவித துல்பக்கனை யுஜ்ஜனி தனுக்கொண்டிருப்பினும், இதை இராப்பகலாக இடைவிடாது மானசிகமாகச் ஜபித்தோர், அத்துன்பங்களினின்று நீங்கித்தமது இஷ்டசித்தங்களையல்லா மடையப்பெறுவார்கள். தன் பாரியாவோடு கூடி உலகடைப்பிரிப்பவனுயினும், இதற்குரிய மிருத்யுஞ்சய யந்திரத்தினல், இம்மந்திர ஜபஞ் செய்வானுயின், எல்லாக் கோரிக்கைகளும் சூடேறப்பெறுவான். இம்மந்திர ஜபஞ்செய்வோன், பிரமசரியம், உபவாசம், மௌனம் முதலியன அநுஷ்டிக்கவேண்டியதில்லை. ரும்பமுத்திராகாட்டிச் சுகாசனத்திலிருந்து தன் இதயமாகிய ஸஹஸ்ரதளகமலத்தில் எழுந்தருளியுள்ள சர்வேசுவரனை சிவபெருமானே இம்மந்திரத்தால் தியானித்து, மானசிகமாக ஒரு வ்ருஷகாலக் தியானயோகத்திலிருந்தவன் அணிமாதி யஷ்டசித்திகளையும், திவ்விய தேகத்தையும், சர்வஜ்ஞத்வத்தையும், நீங்காத ஆனந்தத்தையும், ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்கும்படியான யோக்கியதையையும், பரம சிவத்தைப் பிரத்தியக்ஷமாகத் தரிசிக்கும் சித்தினையுமடைகிறன். இதை ஆதியில் பரமசிவன், உமாமகேசுவரிக்கும் சுப்பிரமணியக்கடவுளுக்கும், அவர் லக்ஷ்மிமாரமுதலிவருக்கும் அவர் தியாலமுதலிவருக்குஞ் சொன்னதை நானுங்களுக்குச்சொன்னேன். இம்மந்திரத்தைப் பூர்வத்தில் அகஸ்தியர்முதலிய முனிவர்களெல்லாந் தியானித்து, சிவ மூப்புமுதலியன நீங்கி யிருந்தார்கள். என்று ஸூதமுனிவர் நைமிசாரண்யமுனிவர்களுக்குச் சொன்னர்.

மிருத்யுஞ்சயமந்திரமுணைத்தது

முற்றிற்று.

மூப்பத்தாறுவது

மிருத்யுஞ்சயப் பிரபாவமுணைத்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகளே! மந்திரராஜமாகிய மிருத்யுஞ்சய மந்திரப்பிரபாவத்தைச் சொல்லுகின்றேன். முன்னொருகாலத்தில் இவ்விஷயத்தைச் சர்வலோக மாதாவாகிய உமாபிராட்டியார் சிவபெருமானைக் கேட்க, சிவபெருமான் பார்வதி தேவியைநோக்கிச் சொல்லுகின்றார்.

உமையே! லக்ஷ்மிஸரஸ்வதிஜ்யேஷ்டை திருமுகங்களுடன் கூடிய என்னைச்சிருட்டிக்கிரமத்தாலாவது சங்காரக்கிரமத்தாலாவது மிருத்யுஞ்சய மந்திரத்தால் இதயத்திலேயே தியானித்தவன் எனக்குச்சமானமானவன். அவன் சர்வபாவங்களையும் நீங்கி அணிமாதி அஷ்டசித்திகளையும் அடைவான் எனக்கூறு, பார்வதிதேவி ஸ்வாமி! அபமிருத்யுவை யொழிக்கத்தக்க மிருத்யுஞ்சயமந்திரத்தைக்கேட்டேன். துராத்மாக்கள் ஒருகாலத்திலும் அடையாததாயும், பரிசுத்த மனமுடைய ஞானிகளாலேயே யடையத்தக்கதாயும், தேகஸ்நாமுதலிய சுகதுக்கங்களால் வருந்தும் ஜகத்தினைச் சுகமடையச்செய்ய வல்லதாயுமிருக்கிறமோகூத்தையடையு மார்க்கத்தை, எனக்காகவும், புகினருக்கு இகமுண்டாதற்காகவுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்க, பரமேஸ்வரன் பகரலாயினர். இத்தப்பஞ்சபூ தாத்மகமான தேகத்தில் சர்வவியாபியான்னைச் சிவோகமென்னப்பட்ட ஞானத்தினல் அறிந்து கொள்ளுபவன், தனது ஜனன மரண பந்தத்தினின்றும் விடுபடுவான். பின் னைதென்று சொல்லுவதே பந்தமும் துக்ககரமானதுமாம். யானல் என்னென்றுடையதன்று என்று விடுத்தில் சுகமும் மோகூகரமானது மாம். தேகவியோகவு விடுத்தவனைப் புத்திரமித்திர தாராதிகள் பாதிக்க மாட்டார். இதுதான் பாசுபதயோகம். இதனையுனக்குச் சொன்னேன் எனக்கூறு, பார்வதிதேவி, இந்திரிய நிக்கிரகஞ்செய்தல் மிகவுங்கடினமானது. யான் எனக்கென்னுந் தற்போத மொழிவது துர்லபம். இதனைக் காட்டிலுஞ் சுலபமான வழியையுபதேசிக்க வேண்டுமெனக்கேட்ட பார்வதியைநோக்கி, சிவபெருமான் பெண்ணே! இராகத்துவேஷாதிகளை யொழிப்பது திரேதாயுக, திரேதாயுக துவாபரயுகங்களிலேயே கஷ்டமாயிருப்பின், கலியுகத்தில் அதனைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? எனக்கூறு, உமாதேவி ஸ்வாமி! மாதர்கள் யாவரும் பாவயுக்தர்களாயிருத்தலின் அவர்கள் பிறவிக்கடலைச் சாமான்யமாகக் கடக்கக்கூடிய வழியைச்சொல்ல வேண்டுமெனக்கேட்க, சிவபெருமான் தேவி! மாதருடைய இதத்திற்காக முத்திமார்க்கத்தைக் கேட்கின்றமையின் கியாயோகத்தைச் சொல்லுகிறேன். அதுகிலரங்களை யொழிக்கத்தக்கதும், சற்புருஷர்கள் சித்தாந்தலே அனுஷ்டிக்கத்தக்கதுமாம். மூர்த்திகளில் ஆவாஹனாதியைச் செய்து என்போற்பூசிப்பது கிரியாயோக மெனப்படும். இது எல்லாயோகத்திலுஞ் சுலபமானது என்றுணர்ந்து, பிராமணர் முதலிய சதுர்வருணத்தவர்களும்; இதில் பக்தியோடு மனதைநிறுத்தி அநுஷ்டான பரர்களாகி நாடோறுஞ் சிவலிங்கார்ச்சனை செய்யவேண்டியது. சிவலிங்கத்துமையை யர்ச்சிப்பவனுக்குத் திரிலோகங்களிலுந் துர்லபமானது ஒன்றுமில்லை. என்னிடத்திலே மனதைநிறுத்தி நிஷ்டைசெய்தல் - எல்லாவற்றையும் அர்ப்பணஞ்செய்தல் - சரணாகதிசெய்தல் - ஜபம்-ஸஹஸ்ரநாமத்யானம்-யாகம் முதலியவற்றைக்கொண்டு தியானித்தல் - விரதமிருத்தல் - உபவாசஞ்செய்தல் - ஏகாதசியில்லாதிருத்தல் - முதலியவற்றைச் செய்பவர் என்

னுடைய சிவலோகத்தில் உருத்திரரூபமடைந்து வாழ்வார்கள். உலகமுழுவதும் யான் வியாபித்திருப்பவனென் றுணர்ந்தவனே என்னோ யுள்ளபடியேயுணர்ந்த உருத்திரபதவியடைவான். தாவரசங்கமங்களிலும் ஆத்மாவிலும் சமதிருஷ்டியுடையவன் உருத்திரனுவான்.

உமையே! சுவர்ணத்தினுலாவது வெள்ளியினுலாவது இரத்தினங்களாலாவது சிலையினுலாவது பிருதிவியினுலாவது இலிங்கரூபஞ்செய்து தன்சக்திக்கேற்றபடி பூஜாபகரணங்களால் என்னை நாடோறும் பூசிக்க வேண்டியது. புசிக்கையிலும், நடக்கையிலும், நிற்கையிலும், இருக்கையிலும், கிடக்கையிலும், எக்காலத்திலும், தன்பக்கங்களிலுமுள்ளனவும் பின்னும் மேலுங் கீழும் யானிருப்பதாகநினைத்து என்னைநிய பூசிக்கப்பட்டவன் முக்திபடைவான். கங்காசலத்தினுலும் பசுவெதிர்பினுலும் செஞ்சந்தனத்தாலும் சுகந்தபுஷ்பத்தினுலும் கர்ப்பூரத்தினுலும் ரிதவாத்திய சப்தங்களினுலும் நவரத்தினமயமான ஆபரணங்களினுலும்சிவன்பரி முதலியவஸ்திரங்களினுலும் பக்தியுடன் என்னைப்பூசித்துநமஸ்கரித்து என்னையே சரணுகதியடைந்தவனும், என்சரிதங்களைக் கேட்க விரும்பினவனும், எனது பக்தர்களுடைய சரிதங்களைக்கேட்க விரும்பினவனுமாகவுள்ளவர்கள் தமதுமனதில் விரும்பியபதவிகளையும் சர்வலோகத்திற்கும் காயகரான சிறப்பினையும் பெறுவார்கள். இத்தகைனிடத்திலே என்னை யமையப் பெற்றவன் தாவரசங்கமங்களுக்கெல்லம் கர்த்தாவுங் காரியமுமாக விளங்குவான். இவ்விதமாக என்னைக் காரணி கர்த்தரு ஏவரூபமென்றுணர்ந்தவனும் நாடோறுஞ்செய்கின்ற சத்கர்மானுஷ்டானங்களுத்தன்னுடைய தென்னுங் கருத்தின்றியெனக்கு அர்ப்பணஞ்செய்கிறவனும், ஒன்றிற்கனக்தமாக விசேடபலனையடைவார்களே. இவ்வாறு நடப்பவர்கள் ஜீவன்முக்தராவார்கள். சமுசாரபயத்தை நிவர்த்திக்கவேண்டியவர்களுக்குக் கல்லவழியை நீ விரும்பியவகையே சொன்னேன். கிரியாயோகம் ஞானயோக மென்னுமிரண்டில், இந்திரிய நிக்கிரகமின்றி ஞானயோகங்கைகூடாதாகலின், கிரியாயோகத்தைக் கைப்பிடித்தவன் முறையே ஞானத்தையும் முக்தியையும் அடைவான். கிரியாயோகத்தினுல் தேவத்துவமுண்டாயிற் பின்னர் சிறந்த ஜனனங்களையெடுத்து முக்தியை யடையக்கூடும். அக்கினியானது காற்றுடன்சேர்ந்து திருணகாஷ்டாதிகளை நாசஞ்செய்வதுபோலச் சிவலிங்கார்ச்சனமானது சர்வபாவங்களையும் நாசஞ்செய்துவிடும். என்னுடைய நாமத்தையேனுக உச்சரித்தபோதினும், அவர்கள் கர்மநாசமடைவார்கள். கர்மபூமியிற்பிறந்து என்னையாராதிக்காதவனுடைய ஜனனம் பிரயோசனமற்றது. இரத்தினம் புஷ்பம் சந்தனம் முதலியவற்றால் பூசித்தாலும் பக்தியில்லாவிடின் எனக்குத் திருப்தியில்லை. அவைகுறைந்திருப்பினும் பக்திமாத்திரமிருக்கும் பக்தனிடத்தில் எனக்குத்திருப்தியுண்டாகும். ஏத்தனையோகோடி ஜனங்களில் ஒருஜனனம் இக்கர்மபூமியிற் கிடைப்பதருமை. அதிலும் மாதுடதேகங்கிடைப்பது அரிலபம். அப்படிக்கிடைத்த

அரியதேகத்தாற் சிவலிங்கார்ச்சனை செய்யாதிருப்பது என்னதக்கரமானது? என்றுகூற, பார்வதி தேவியார் சிலபெருமானிடம்கொக்கிளம்பி! சதுர்வருணத்தவர்களும் என்ன மந்திரங்களாற் சிவலிங்கார்ச்சனைசெய்யத்தகுமெனக்கேட்க, சிவபெருமான் கூறுகின்றார். பிராமணர்கள் வேதமந்திரங்களாலேயும் புராணேக்தத்தாலேயும் பூஜித்து, பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் சந்திரன் சூரியன் யஜ்வா ஆக எட்டும் சிவமூர்த்தமென்று கருதவேண்டும். எல்லாத்தேவர்களும் மந்திரத்தை ஆச்சரயித்திருக்கிறார்கள். மந்திரமோ பிந்துவையும், பிந்து நாதத்தையும், அவ்வகைய நாதம் பரமாத்துமாவையும் ஆச்சரயித்திருத்தலின், அப்பரமாத்மாவைப் பூர்வங்கூறிய மிருத்யுஞ்சயமந்திரத்தால்தியானிக்கவேண்டும். யகரத்திற்குமேட்டாவதெழுத்தாகிய ஹ என்னுமெழுத்தைத் தீர்க்கமாக்கி[ஹா]அதன்பின்னர் பிந்து ம்[ம்] சேர்ந்து அங்கநியாச கரநியாஸமாகச் செபிக்கவேண்டியது. இவ்விதமான கிரமத்தைப் பூசிப்பவர்களுக்குச் சர்வகாமியங்களுங் கைகூடுமென்று பெரியோர்களெல்லாருஞ் சொல்லியிருக்கிறார்கள். இகலோகத்திலும் பரலோகத்திலுஞ்சிவபூசையேசர்வசித்திகளையுங்கொடுக்கவல்லது. உலகத்தில் என்னைப்பூசித்து எல்லாப்பலனையும் அடையவேண்டுமென்பதிலதொன்றுங் கிடையாவே கிடையாது. என்னுடைய பஞ்சப்பிரமவ்வரூபத்தையுணர்ந்து நாடோறும்என்னுடைய இந்துமூர்த்திகளையும் பூசிப்பவன்என்னுடைய ஸாரூப்பியத்தையுடையவான். அப்* பஞ்சபிரமமந்திரத்தைச்சொல்லுகின்றேன் என்று கூறியருளினர். இதுசர்வமந்திரங்களிலுஞ் சிரேஷ்டமானது. இதனை யப்பியசித்துப் பூசிப்பதனல் கிடைத்தற்கரிய தேவத்துவம் கந்தர்வத்துவம் முதலிய யோகியதையும், அணிமாதி அஷ்டமகாசித்தியும் அடைவார்கள். மிருத்யுபயம் நிவாரணமுதலியன இம்மந்திரஸ்மரணையாலேயே நீங்கும். இதனைச்சபிப்போருக்கு இடி மழை காற்று முதலாகிய பஞ்சபூதங்களினுண்டாகும் ஆபத்துகளும் தாவர சங்கமங்களால் உண்டாகும் ஆபத்துகளும் ஒருபோதுஞ் சம்பவிக்கமாட்டா. இம்மந்திரத்தை நூறுமுறை ஜபித்தவன் நூறு ஜனனங்களிற்செய்த எல்லாப்பாவங்களையு மொழிவான் என்று சிவபெருமான் கூறியருளினரென ஸநத்குமாரமுனிவருரைத்தனர்.

மிருத்யுஞ்சயப் பிரபாவமுரைத்தது.

முற்றிற்று.

---

* உஈ - உசை - வது பக்கங்களிற் பதித்துள்ளமந்திரங்களே பஞ்சப்பிரமமந்திரமெனப்படும். இவற்றையே மேல்வரும் இரண்டத்தியாயங்களுங் கூறும்.

மூப்பத்தேழாவது

பஞ்சப்பிரம மந்திரமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவரைநோக்கி ஸூதக்குமாரமுனிவர் சொல்லுகின்றார். முனிசிரேஷ்டனே! பஞ்சப்பிரமமந்திரத்தின் பிரபாவத்தை விளக்கிச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. அந்தரங்கமான பரிசுத்தமான இடத்தில், தான் பரிசுத்தனாகவும் ஏகமனமுடையவனாகவுமிருந்து இந்தப்பஞ்சப் பிரமமந்திரத்தைப் பிரித்து அங்கநியாஸகரநியாஸஞ்செய்வேண்டியது. எப்படியென்றால்,—ஓம்ஹ்ராம் ஹ்ருதயாயநமஃ | ஓம்ஹ்ரீம் அகோரேப்யோசிரசேஸ்வாஹா | ஓம்ஹ்ரூம்கோரகோரதரேப்யஃசிகாயைவஷட்— ஓம்ஹ்ரைம் ஸர்வதஸ்ஸர்வேப்யஃ கவசாயநமஃ | ஓம்ஹ்ரௌம் சமஸ்தருத்ரரூபேப்யஃ நேத்ராப்யாம்வஷட் | ஓம்ஹ்ரஃ அஸ்த்ராயபட் | பூர்புவஸ்வரோமிதி திக்பந்தஃ—என்று அங்கநியாஸமுஞ் இதுபோலவே கரநியாஸமுஞ் செய்யவேண்டியது. இவ்விதமாய் அகோரமூர்த்தியைபித்த பிங்குலிகளுடன் தன்னுடைய இதயத்திற்பூசிக்கவேண்டும். அதன் மத்தியில், தண்டம் இளஞ்சந்திரன் அங்குசம் கொடிநிவத்தையுடைய அகோரேசுவரியென்னுந் தேவியைப் பூசிக்கவேண்டும். மும் அகோரேஷ்டரீம் ஹும்பட்' என்னும் மூலமந்திரத்தால் பூசிக்கவேண்டும். இப்படி ஏகமனத்துடன் பூசிக்கும்பகுதத்தில் இஷ்டகாமியங்களெல்லாஞ் சித்திக்கும். தியானம் "கபால மாலாபரணஞ் சதுர்ப்புஜம் ஸுத்ரேக்ஷணம் முலை தாரபயப்ரதம் | த்ரிலோசனங்கவட்ட சஸாங்கதரிணம் க்யாபேத்தரம்பஸ லைபேத ஈப்ஸிதக்." மகாபாபியாயிருப்பினும் இத்தத்தியானத்தால் சங் காரனைப்பூசித்து லக்ஷமில்லங்களால் சிவலிங்காபிஷேஞ்செய்தவன் சகல பாவங்களையு நிவிப்பரிசுத்தனாகிறான். இந்தமந்திரத்தினாலே இலக்ஷ ஹோமஞ் செய்தவனுக்குச் சிவபெருமானுடைய சாரூபமாவர். இலக்ஷந் தாமரைமலரால் அருச்சித்து ஓமஞ்செய்தவன் அணிமாதிசித்திகளை யடைவான். பயத்தினாற்பூசித்து அதனாலே ஓமஞ்செய்தவன் ஜராமரணங்க ளில்லாத உலகத்தையடைவான். எள்ளினால் ஓமஞ்செய்தால் சகபீடை கள் நசிக்கும். நெய்யோடுசர்க்கரையோடும் பூசித்துப்பாலுள்ளமரத்தின் சமித்துகளால் ஓமஞ்செய்தவனுக்கு ஆயுள்விர்த்தியுண்டாகும். அகோரே சுவரிசமேதராகிய அகோரமூர்த்தியின் பூசையையிவ்வாறு செய்தவன் திரிலோகங்களிலும் துர்லபமான உயர் பதவியையடைவான். இந்தப் பூசையைச்செய்கையில் அகோரமூர்த்திக்குப் பிரியமாக அகோரேஸ்வரி முத்திரையைக்காட்டி மனம்பூர்வமாகத் தியானிக்கும். பகுதத்தில் பூதப் பிரேத பசாசங்கள் கிரகபீதாளங்கள் சாகினிடாகினிகளாற் சிறிது முன்பமுமின்றித் தேவராகு மதுஷர் சுவாதீனமடைவார்கள். இந்தப் பூசையைச்செய்தே மஹாருஷிகளெல்லாரும் மோக்ஷசித்தியை யடைந்தார் கள். ஸத்தியோஜாதக் ரிமத்தால் பூசிப்போர் மோக்ஷத்தையும், தத்புரு ரிமத்தால் பூசிப்போர் சுவர்க்காதிபோகத்தையும் பெறுவார்கள். இந்த

வகையிலாவது சிவபிராணைப் பூசித்தவன் இஷ்டசித்தியையும் மோக்ஷத் தையுமடைவான் என்பதற்குச் சந்தேகமில்லையென்று கூறினர்.

பஞ்சப்பிரமமந்திரமுரைத்தது

முற்றிற்று.

மூப்பத்தெட்டாவது

ஈசான கல்பமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸூதக்குமாரமுனிவரை நோக்கி ஸ்வாமீ! ஆன்ம கோடிகளுக்குப் புக்திமுக்திகளைக் கொடுக்கவல்லவர் சிவபெருமானே: அவர் தலைவர் மந்திரோக்தமாகப் பூசியாவிடினும் பக்தியுடையவர்களுக் கும் அவரவர்களுடைய இஷ்டகாமியங்களைக் கொடுக்கும்பகுதத்தில் மந்திர பூர்வமாக அர்ச்சிக்கின்றவர்களுடையும் பலனை எடுத்துச் சொல்லவேண் டுமாய்? சர்வலோகத்திற்குமே ஈசுவரனும், மோக்ஷத்தைக் கொடுக்கத் தக்கவனும் மஹாதேவனன்றி வேறே யில்லையென்று சந்தேகமறத் தெரிந்திருந்தும், விழித்துக்கொண்டிருந்தும் தூங்குவதுபோ லழிவும் மாந்தர்கள் விஷ்ணுவின் மாயையிலகப்பட்டு மோக்ஷமார்க்கத்தை யடைய வழியறியாதழிவதற்குக் காரணமென்ன? என்று கேட்ட வியாஸபக வானை நோக்கி ஸூதக்குமாரமுனிவர் சாற்றலுற்றினர். தாவரசங்கமங்களா கிய பிராணிகளியாவும் சதுர்வர்க்கவிவேக்கிடாகத்தகரணபுவனபோகங் களை யநுபவிக்கிறார்கள். மோதடருக்கு ஆகாம், நித்திரை, பயம், மைது னம்முதலியன பொதுவாயிருப்பினும் ஞானிகளுக்கே மோதடரென்னும் பெயர் தாற்றியுடையதும், ஞானிகளல்லாருக்கு மிருகங்களென்னும் பெயர் தருகிறதுமையதுமாகும். பிரமனார் முதலிய சதுர்வருணத்தோராக இப் பூமியி லவதரித்தவர்கள் எவ்விதப் பிரயத்தனப்பட்டுஞ் சிவஞானத்தை யடையவேண்டியே தாவசியகம். அப்படியில்லாது மாதடர் சமுசாரமாகிய காட்டில் நெடுங்காலமுழன்று பெருந் துன்பங்களை யநுபவித்தும், அதனை வெறுத்தும், சிவபெருமானுடைய கடாக்ஷவீக்ஷணியத்தை யுணர்ந்து, அவ்வெம்பெருமானுடைய திருவடியை யடையாது நரகத்தை யடைந்து கஷ்டங்களை யநுபவித்து, இறந்தபின்னர் புல் பூண்டுமுதலிய தாவரங்க ளாகச் சனித்தும் மீண்டுக் * திரியக்குயோனியிற் பலமுறை பிறந்தும், பின்னர் மாதடரில் இழிந்தோராய்ப் பிறந்து சர்வலோக காரணபூத ராகிய சிவபெருமானை யடையாது மீண்டும் மீண்டுஞ் சமுசாரதுக்கத்தில் அழுந்தி வருந்துவர் என்று ஸூதக்குமாரமுனிவர் கூறி முன் நீ கேட்ட பஞ்சப்பிரமவிதானத்தைப்பற்றிப் பூர்வம் பார்த்திதேவியாருக்கும் பரமசிவ னுக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லுகின்றேன்.

---

* திரியக்கு - பசு.

வியாஸமுநிவனே ! பஞ்சப்ரம்மமொளுபியான சிவபெருமானைக் காராம்பசுவின் பஞ்சகௌயங்களா லபிஷேகித்து, எள்ளினுல் ஆயிரத் தெட்டு முறை ஹோமஞ்செய்யும்பட்சத்தில், சர்வ பாவங்களினின்றும் நீங்குவர். அவ்விதமாகவே ஒவ்வொருதினமும் தூற்றெட்டுக்கும்பங்களில் மஹாகதி தீர்த்தங்களை நிரப்பி, சிவபெருமானை யபிஷேகித்தவன் நிரகத்தில், மஹாலக்ஷ்மி நீங்காமல் வசிப்பாள். அவன் ஜனனங்தோறும் புத்திர பாக்கியமுடையவனு யிருப்பான். ஒருநாள் முற்றும் உபவாசமிருந்து அஸ்தமித்தபின்னர் தக்ஷிணமூர்த்தி சந்நிதானத்தில நிஞ்சாமிர்தத்தாலபி ஷேகித்து, முக்தமென்னும் பயற்றினுல் ஆயிரத்தெட்டுமுறை ஹோமஞ் செய்தவர்கள் யக்ஷ ராக்ஷஸ பைசாசங்களைக் கவாதினப்படுத்திக்கொண்டி யுத்தரங்கத்தில் ஜயத்தை யடைகிறார்கள். மேலும் தக்ஷிணமூர்த்தி சந்நிதானத்திலேயே மூன்று தினங்களில் ஆயிரத்தெட்டுத் தடவைக்குக் குறையாமல் காராம்பசுவின் நெய்யோடு சமித்துகளில் ஹோமஞ்செய்தும், அதன் தயிர் கலந்த அன்னத்தைக்கொண்டு ஹோமஞ்செய்தால் மந்த்ரம் மியமான புத்திரபாக்கியம் கிடைக்கும். தாமரைப்புட்பங்களால் ஆயிரத் தெட்டுமுறை பூஜித்தோர், பிரமஹத்திமுதலிய பாவங்களினின்றும் நீங்கிச் சிவ சாயுச்சியமடைவார்கள். பிக்ஷையெடுத்துண்ணும் வ்ரமுயாயினும் ஈர்க் கத்தா லபிஷேகித்து வில்வத்தாலக்கொண்டு பூஜித்தவன் அஸ்வமேதஞ் செய்த பலனையடைவன். பஞ்சகவ்யத்துடனும்பாலபிஷேகித்து பவித்ரபாணி யாய் பரிமளமுள்ள சந்தனத்தாலலங்காரஞ்செய்தவன் அபயப்பிரதானஞ் செய்த பலத்தை யடைவான். நெய்யோடு ஹோமஞ்செய்தவன் தரித் திரம் நீங்கிச் செல்வத்தைச் சதா அனுபவித்திருப்பான். இந்த ஈசான மந்திரத்தைத் தன் ஆபத்துவேளைகளில் சூரியனுக்கெதிர்முகமாய் நின்று கைகளை மேலேயுயர்த்தி ஜபிப்போன் சர்வ பாபங்களையுஞ் சந்தேகமின்றி நீங்குவான். இம்மந்திரத்தை (ஜலபானபர்யந்) செய்துகொண்டே ஜலத்தி லிருந்து ஏழுநாள்ஜபஞ்செய்வோன் ஜ்வரபானம், மலமூத்ராதிபட்சணம், தங்கத்தை திருடினது, குருநிந்தகமனம் முதலிய மகா பாவங்களினின் றும் நீங்கிப் புனிதனுவான். அரசர்களிடத்தில் வாங்கத்தகாத தானத்தைப் பெறுதல், சூத்திரனுடைய அன்னத்தைச் சதா புசித்தல் முதலியன செய் திருக்குமொருவன் திரிகாலங்களி லிம்மந்திரஜபஞ் செய்தால், தான் செய்த பாவங்களைப் போக்குவான். மந்திரத்தை மனதினுல் ஜபிப்பவ னுக்கு யாதொரு சங்கம், சத்ருமுதலியவைகளால் ஒருக்காலும் தீங்குண் டாகாது. இந்த ஈசானமந்திரத்தை மனதினுல் தியானிப்போன் இந்தத் தேகத்தோடே சிவசாரூப்பியத்தை யடைகிறான் என்று ஸநத்குமார முனிவர் கூறினர்.

ஈசானகல்பமுரைத்தது

முற்றிற்று.

முப்பத்தொன்பதாவது

தற்புருஷ கல்பமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே ! தற்புருஷமூர்த்தியின் பூசாபலனைச் சுருக்கமாகச் சொல்கிறேன். வில்வம், அத்தி இவற்றின் சமித்தையால் தற்புருஷ மந்திரஞ் ஜபித்து ஆயிரத்தெட்டுமுறை ஹோமஞ்செய்தால் பிரமஹத்தி முதலிய பாவங்களைப் போக்கலாம். தக்ஷிணமூர்த்தி சந்நிதானத்தில் இம் மந்திரத்தை ஒருமாதகாலஞ் சபித்தால் யக்ஷணி பிரசன்னமாகி வேண்டிய வைகளை யளிப்பாள். தக்ஷிணமூர்த்தி சந்நிதானத்தில் கரவீரபுட்பத்தால் அர்ச்சிக்கின் வசிய்சித்தியாகும். ஆறுமாசகாலம் தக்ஷிணமூர்த்தி சந்நி தானத்தில் கர்மகார புஷ்பத்தா லர்ச்சிக்கின்றவன் இஷ்டார்த்தத்தைத் தேவ கந்தர்வ ரன்னியர் பூர்த்திசெய்வர். பிரதிதினம் சிவலிங்கத்தைப் பூசிப்போர் மாதுடனிருந்தே முக்தியடைவர். இம்மந்திரத்தால் உப்பு நிலத்தைக்கூட்டிப் பூசிப்போன் சத்ருக்களை வசப்படுத்துவான். கீர்த்தியை விரும்பினேன் நெய்யினுலும், ஆயுள்விர்த்தி விரும்பினேன் அருகம்புல்லினுலும் ஹோமஞ்செய்யவேண்டும். சிவசந்நிதானத்தை மேழு கிட்டு சுத்திசெய்து கோலமிட்டவன் சர்வரோக நிவாரணனுவான். கடுகி னுல் ஹோமஞ்செய்தோன் சர்வஜன ரக்ஷகனுவான். சந்திர சூரிய கிர ஹண புண்ணியகாலங்களில் இம்மந்திரத்தைத் தக்ஷிணமூர்த்திசந்நிதானத் தில் ஆயிரத்தெட்டுமுறை ஜபிப்போன் மனோபிஷ்டத்தை யடைவான். ஒருவருடகாலம் தியானிப்போனுக்குப்பரமசிவனே பிரசன்னமாகிவேண்டு வனவளிப்பர். பஞ்சகவ்யத்தை யாகாரஞ்செய்துகொண்டு இம்மந்தி ரத்தை ஜபிப்போன் சந்தேகமின்றி மோக்ஷத்தையடைவான். பர்வ காலத்தில் இம்மந்திர ஜபஞ்செய்வோன் சர்வயாகங்களுஞ் செய்தபலனை யடைவன். மயானத்தில் ஜபஞ்செய்வோனுக்குச் சர்வபிராணிகளும் வச மாகும். சாந்தியடைய விரும்பினேன் வெண்கடுகாலும், வசியஞ்செய்ய விரும்பினேன் செவந்தபுட்பங்களாலும், கொல்லுந்தொழிலே விரும்பி னேன் கறுப்புப்புட்பங்களாலும், துவேஷத்தை விரும்பினேன் மஞ்சள் நிறப்புட்பங்களாலும், உச்சாடனம்விரும்பினேன் மேகநிறபுட்பத்தாலும் ஹோமஞ்செய்யவேண்டும். சர்வசித்தியைக்கொடுக்கக் கூடியதாகிய இம் மந்திரத்தை ஜபிப்போன் தர்மார்த்தகாமங்களை இங்கு அனுபவித்து அவ் வுலகத்தில் மோக்ஷத்தையடைகிறான்.

தற்புருஷ கல்பமுரைத்தது

முற்றிற்று.

நாற்பதாவது

அகோர வாமதேவ ஸத்தியோஜாத கல்பங்களுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவனே! அகோரமூர்த்தியின் பிரபாவத்தையுமுனக்குச் சொல்லுகின்றேன். அகோரமூர்த்தியை ஸ்மரிப்பதற்குத் திதிவாரநக்ஷத்திரங்கள் கவனிக்கவேண்டியதில்லை. அவன்மந்திரத்தை எந்தச்சமயத்தில் ஸ்மரித்தபோதிலும் அப்பொழுதே சர்வபாவங்களினின்றும் நீங்கலாம். ஸ்நானஞ்செய்து நித்யகருமமுடித்து அகோரமூர்த்தியைப் பஞ்சகௌவியத்தால் அபிஷேகித்து அகோரமந்திரத்தைப் பதினாயிரந்தரம் ஜபித்துப்பசுசெய்யினால் ஆயிரமுறை ஓமஞ்செய்தவன் திரிலோகங்களையுஞ் சுவாதீனஞ்செய்து கொள்ளுவான். சதுர்த்தசியிலாவது அஷ்டமியிலாவது தக்ஷிணமூர்த்திசந்நிதியில் எட்டாயிரஞ் சபித்து மண்டலாந்தின் கொழுப்பினால் ஆயிரம் ஓமஞ்செய்தவனும், மாதுடனது கபாலத்தில் தவிசுசெய்யிற்றாமரைநூல் சேர்த்துத் நீபமேற்றி அதிற்றேன்றிய மையை யெடுத்துத் திலதமிட்டவனும் பிறர்கண்ணுக்குப் புலப்படாதவனாகிறான். இவ்வாறே கருக்கநூலினால் விளக்கெரித்துத் திலதமிட்டவன் அதிரிகியனித்தையும், பிரமலோகாதிலோகங்களுக்குஞ் செல்லும் ஆற்றலையும் எல்லாப்பொருள்களையுங் காணும் வல்லபமும் பெறுவான். காலெள்ளிலைப் பதினாயிரம் ஓமஞ்செய்து பஞ்சுத்திரிசேர்த்திய செய்த்திபத்தின் மையைத் திலதஞ் செய்தவன் பிறர்கண்களுக்குப் புலப்படாது சஞ்சரிப்பான். தேரோசனத்தால் ஆயிரம் ஓமஞ்செய்தவனுக்குப் பூதப் பிரேத பராசாசதுஷ்டதேவதைகள் வசீகரமாகி, டாகினி சாகினி ஜ்வரமுதலிய பீடைகள் நீங்கும். அபிதாஸத்தால் எண்ணாயிரஹோமஞ்செய்து ஐயாயிரஞ் சபித்தவன் வுணிமாதி அஷ்டசித்திகளையடைவான். தக்ஷிணமூர்த்திசந்நிதானத்தில் லக்ஷாதிலவங்களால் அருச்சித்து லக்ஷம் ஜபஞ்செய்து பதினாயிரம் ஓமஞ்செய்தவன் திரிலோகாதிபத்தியும் ஜ்வராதிரோகங்களின் நீக்கமும் அடைவான். அம்மந்திரத்தை யெப்பொழுதுஞ்சபிப்பவன் அடையக்கூடாதசித்தி ஒன்றுமில்லை. பிரமசாரியதிலையினின்று பஞ்சகௌவியங்களையே புசித்து ஒருமாசகாலம் தக்ஷிணமூர்த்தி சந்நிதியில் இம்மந்திரத்தை ஸ்மரித்துக்கொண்டிருந்தவன் சுவர்க்கத்தையும் பாதாளலோகத்தையும் இகபரத்தேகத்துடனே அடையும் வல்லபம் பெறுவான். காய்கனிகளைப்புசித்து ஏகவில்வார்ச்சனை செய்தவன் பிரமஹத்தியாதி பாவங்களினின்று நீங்குவான். கபிலைநெய்யை யேற்றுப்புசித்து ஆறுமாதகாலம் தக்ஷிணமூர்த்தி சந்நிதியில் சிவபூஜை செய்து இம்மந்திரஞ் சபித்தவன் சமஸ்தபாபங்களினின்றும் விலகுவான். காலொன்றுக்கு நூறுமுறை இம்மந்திரஞ் சபிப்பவன் எல்லாப் பாவங்களையுமொழிவான். இது அகோரமூர்த்தியின் பிரபாவம்.

வியாஸமுநிவனே! இனி வாமதேவமூர்த்தியின் வைபவத்தைச் சொல்லுகின்றேன். தக்ஷிணமூர்த்தி சந்நிதியில், பஞ்சகௌவியங்களால் அபிஷேகஞ்செய்வித்து வெண்மலர்களால் அருச்சித்து வாமதேவமந்திரத்தை எண்ணாயிரஞ்சபித்து வெண்மை செம்மை மஞ்சள் நிறமுடைய பதினாயிரமலர்களால் ஓமஞ்செய்தவனுக்கு மனோதைரிய சித்தியுண்டாகும். மூன்று தினங்கள் உபவாசமிருந்து வாமதேவமந்திரத்தை காலொன்றுக்குப் பதினாயிரஞ்சபித்து [ஹாஸ்பகதி] பருந்தின் எலும்பைக் கையிற்கட்டிக் கொண்டவன் பூதப்பிரேதராக்ஷஸ மாதுடமிருகபக்ஷியாதிகள் வசியமாகப் பெறுவான். காராம்பசுவின் நெய்யினால் எண்ணாயிரம் ஓமஞ்செய்து வாமதேவமந்திரத்தை எண்ணாயிரஞ் சபஞ்செய்தவனுக்கு யக்ஷணியானவள் சுவாதீனமாகிச் சம்பத்து முதலியவற்றைக்கொடுப்பாள். பரிமளமிருந்த எண்ணாயிரமலர்களை வாமதேவமந்திரஞ் சபித்துத் தக்ஷிணமூர்த்திக்குச் சமர்ப்பித்தால், இவ்விடங்களெல்லாஞ்சித்தியாகும். யவையினுலாவது நெல்லினுலாவது, வாமதேவமந்திரஞ்சொல்லி, லக்ஷம் அருச்சனை செய்தவன் குபேரசம்பத்தை யடைவான். நாகபுஷ்பம் புன்னைமலர் அசோகமலர் கர்ணிகாரம் பாதிரிமுதலிய மலர்களினாமதேவ மந்திரங்கூறி, தேன் கலந்த அன்னம் ஹோமஞ் செய்தவன் ஐசுவரிய வித்தியையடைவான். நெய்யினுலே ஹோமஞ்செய்தவனுக்குக் கிரகபாதைகள் நீங்கும். பெருங்கிழங்கினுல் ஹோமஞ்செய்தவனுக்கு சகலபந்தனஞ் செய்யும்வல்லபமடைவான். பலவிதமான புஷ்பங்கள்கொண்டு வாமதேவ மந்திரத்தால் அர்ச்சித்தவன் தனதான்ய திரவியங்களுக்கு சக்கரவர்த்தியாவான். தகரம்மல்லிகைசெந்தாமரைமுதலிய புஷ்பங்களாற்பூசித்தவன் நஷ்டராஜ்ய லாபமடைவான். சுக்லபக்ஷ பிரதமை முதல் பூர்ணவரையில் தினங்கோறும் எண்ணாயிர மலர்களுக்குறையாமல் அருச்சித்தவன் சிவரூப்பியத்தையடைவான். திவ்யசந்தனத்தினுல் அபிஷேகித்துப் பரிமளமலர்களால் எண்ணாயிரம் ஓமஞ்செய்தவன் சம்பத்துள்ளவனாகவும், தீர்க்காயுஷ்மானாகவும், பிறராற் சயிக்கமுடியாதவனாகவுமாகிறான். இந்த வாமதேவமூர்த்தியே சூரியனாகப்பிரகாசித்தும், பர்ஜன்யரூபமாக வர்ஷித்தும், சர்வபூதங்களையுஞ் சிருஷ்டியாதிகாரியங்களைச் செய்தும், சர்வகாமியங்களையுங் கொடுத்தும் விளங்குவர். இதுவே வாமதேவமூர்த்தியின் பிரபாவம்.

வியாஸமுநிவனே! ஸத்யோஜாதமூர்த்தியின் பிரபாவத்தையுஞ் சொல்லுகின்றேன். ஸத்யோஜாதமூர்த்தியைக் கிருஷ்ணபக்ஷஸப்தமியிற் பூசியபடி, எண்ணாயிரமுறை ஸத்யோஜாதமந்திரஞ் சபஞ்செய்து ஆத்மார்த்தமாக எண்ணாயிரஹோமஞ்செய்தவன் மனோவிருப்பமுழுவதையும் அடையப்பெறுவான். தேன்கலந்த எண்ணாயிரம் புஷ்பங்களைக் கொண்டு ஓமஞ்செய்தவன் யக்ஷராக்ஷஸபைசாசாதிகள் வசியமாகப்பெறுவான்; இரசாயன சித்தியையுமடைவான். காமக்குரோதங்களைப்போக்கி நிராகாரமும்[மௌனவிரதத்தோடு சுக்லவஸ்திரமணிந்து இந்நியமத்தை

கஞ்செய்து பயற்மினல் எண்ணுயிர ஹோமஞ்செய்துளத்யோஜாதமூர்
யைப் பூசித்தவன் அஷ்டமகாசித்தியும் சத்துருக்கூயமுமடைவான். தே
பால் இவற்றுல் எண்ணுயிர ஹோமஞ்செய்தவன் ராஷ்டராஜ்ய லாபத்தை
யடைவான். வில்வம் எருக்கு அத்தி அசமுதலிய சமிதைகளால் எண்ணு
யிரமுறை சிவசக்திதியில் லத்யோஜாதமூர்த்திக்குப் பிரியாக ஓமஞ்செய்
தவன் அளவிறந்த இராச்சிய போகத்தையடைவான். இந்த லத்யோஜாத
மந்திரத்தை நாடோறும் ஆயிரமுறை அன்புடன் சபித்தவன் கோயில்நின்
கோடிமன்மதாகாரமான அதிசுந்தரதேகத்தையடைவன். லக்ஷம் ஆயிரம்
மலர்மாலை முதலியவற்றுல் அருச்சித்தவன் லைபாக்கியத்தையடைவான்.
இம்மந்திரத்தை லடனிருவுத்தின் பிறிருந்து இலக்ஷமுறை ஜபித்தவனுக்கு
யக்ஞனிசித்தியுண்டாகும். ஜலமத்தியினின்று ஜோயிரஞ் சபித்தவன்
பிரமஹத்தியாதி பெரும்பாவங்களை யொழிப்பான். ஐம்பதினாயிரஞ் ஜபித்
தால் மஹாபாதகங்களும், இருபத்தையாயிரஞ் சபித்தால் உபபாதகங்களை
மொழியும். ஏகலிங்கார்ச்சனஞ்செய்து இலக்ஷமுறை இம்மந்திரஞ்ஜபித்த
வன் சிவதரிசனம் அடையப்பெறுவான். இவையெல்லாம் இம்மை
சுகத்தை விரும்பினவர்கள் பெறும்பலன்களாம். கிஷ்டியனுய் இம்மந்
திரஜபஞ் செய்தவன் முன்னிலையடைத்து சிவசாந்நித்யமுறுவான்.
இதுவே லத்யோஜாதமூர்த்தியின் பிரபாவம்.

வியாஸமுனிவனே! சிவனுடைய மூர்த்தியின் பெருங்கருணையும், சாத்து
விக பூஜாவிதியும், அதனுலடையும் சாதனங்களும் உனக்குச் சொல்லு
கின்றேன். சுயம்புலிங்கம் பாணலிங்கம் ஜோதிர்லிங்கம் எனப் பலவகை
வல்லமூர்த்திகள் முன்று. இவையே சேஷ்டத்தக்கன. பரிசுத்த சித்த
துடன் நித்திய நியமமுடித்து பக்தியோகெடிபுனத்துடன் ஆராமுடை
யவனுய், மிதமான உணவுகொண்டு, சர்வபூதங்களினிடத்தும் இரமுடை
யவனுய், மௌனவிரதம் பூமியிற் படுத்தல் இந்திரியநிக்ரகமுடையவனுய்,
முதியோராகிய சமயாசாரியரிடத்தில் சிவபூஜாவிதானத்தைத் தெரிந்து
கொண்டு, பிரதக்ஷிண நமஸ்காரஜப தியானயோகாப்பியாச முதலியவற்றுல்
சிவபெருமானைப் பூசிக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் பக்தியேகாரணம்.
மகேசுவரனைப் பக்தியினுலேயே யடையவேண்டும். எல்லாவருணுக்கோரி
களும் பாலர் விருத்தர்களும், ஆஸ்திகபுத்தியோடும் பிரத்தையோடும்
நாடோறும் சர்வபூதாந்தர்யாமியான பரமசிவனைத் தியானிப்பார்களானுல்
சர்வசித்திகளுமடைவர்கள். உலகமுழுவதும் சிவஸ்வரூபமேயென்றுணர்
ந்து தியானித்தவன் ஆறுமாதகாலத்தில் யோகியாவான். சிவபெருமா
னிடத்திலேயே மனம்பதிந்துள்ள சமாதியும், யோகாப்பியாசசாமர்த்திய
முமுடையவனுய் தியானம் ஜபம் மௌன முதலியன செய்தவன் ஜீவன்
முக்தனுவான். இனி மந்திரபலன்களைச் சொல்லுகின்றேன். கங்காமுதலிய
நதிகள், நந்தாமுதலிய நதங்கள், கயாமுதலிய சமுத்திரங்கள், மேரு
திரமுதலிய பர்வதங்கள், சிவாலயங்கள் முதலிய பரிசுத்தமான விடங்களி

ம், மேற்திசைநோக்கிய சுயம்புலிங்கமுள்ள இடங்களிலுள் காராம்
சுவின் சாணத்தினுற் சுத்தஞ்செய்து, அவ்விடத்திற் சிவபெருமானைப்
பஞ்சகௌவியங்களால் லத்யோஜாதமந்திரங்கொண்டபிஷேகித்து, வாம
தேவமந்திரத்தாற் பிரதிஷ்டைசெய்து, தற்புருஷமந்திரத்தாற் பஞ்சா
மிர்தத்தாலும் சுத்தஜலத்தாலும் அபிஷேகஞ்செய்து, அகோரமந்திர
தாற் கர்தபுஷ்ப சந்தனுதிகள் சமர்ப்பித்து, ஈசானமந்திரத்தால் அருச்சனை
செய்யவேண்டும். சிவலிங்கமானது ஸ்வயம்புலிங்கமாயினும், பாணலிங்க
மாயினும், தேவாசுரர்களாற் பிரதிஷ்டிக்கப்பட்டதாயினும், லக்ஷணலின
மாயிருப்பினும், உடைந்திருப்பினும், அழைவற்றிருப்பினும், அதுசித்திகளை
யெல்லாங் கொடுப்பதென்று கருதிப்பூசிக்கவேண்டும். சாமானியமாகக்
கருதப்படாது. இவ்வாறு சிவலிங்கப்பெருமானை ஆறுமாதகாலம் அருச்
சித்தவன் சர்வசித்தியையும் அடைவான். ஈசானமந்திரத்தை இடையளவு
ஜலத்தினின்று இலக்ஷஞ் சபித்தவன் ஈசானதிருஷ்டியனடைவான். சிவ
பிரணுமத்தை யெண்ணுயிரஞ்ஜபஞ்செய்து சிவபெருமானைத் தனதிருவுரு
த்திற் பிரத்யக்ஷமாகினைத் தியானித்தவன், எல்லாத்துயரங்களையு மொழி
த்துநித்தியானந்தத்தை வாழ்வான். பர்வதத்துச்சியிலிருந்து இதனைச் சபித்தவன்
இந்தத்தேகத்துடன் சிவதரிசனஞ்செய்வான். புஷ்கலத்தகாத அன்னபா
னாதிகளும், பகல்நித்திரையும், ஸ்வப்பனத்தில் ரேதஸ்கலனமும், பிரமண
ஹத்தையும், கோஹத்தையும், தேவஹத்தையும், பதிவிரதாஹத்தையும், தர்ம
சாஸ்திரவிரோதமான கடத்தையும் ஆகியவற்றுல் வரும்பாவங்கள் ஈசான
மந்திரசபத்தாற் பஸ்மமாகும். இதுவரையில் பஞ்சப்பிரமஞானத்தைச்
சொன்னேன். இனிச் சிவபக்தர்களுடைய பிரபாவத்தைப் பூர்வம் பரம
ஞானி பாவதிக்குரைத்தவகையே சொல்லுகின்றேனென்று ஸுதர்மாத
முனிவர் கூறுகின்றார்.

வியாஸமுனிவனே! பரிசுத்தமான பக்தியோடுத் தவறுதோடுஞ்
சிவபெருமானை யிடைவிடாது அருச்சித்தும் தியானித்தும் யோகஞ்செய்
தும் காலங்கழிப்பவர்களைச் சிவபெருமானையே பாவிக்கவேண்டும். நாக
ரீகமான சிவலோகத்தைத் தவஞ்செய்யாதவர்கள் ஒருபோதும் அடைய
மாட்டார்கள். தவத்தாலேயே தேவர்கள் தங்கள் உயர்பதவியை யடை
ந்து வாழ்கின்றார்கள். முனிகள் பிரமானந்தத்தையடைகிறார்கள். இதனைச்
சத்தியமென்று நினைக்கவேண்டும். தன்னுல் அடையக்கூடாதவொவ்வொ
ன்றையுத் தவத்தினுலே யடையலாம் ஆயினும் தவமொன்றே கடினமா
னது. அத்தகதவத்தைத் திரிமூர்த்திகளும் இன்னுங் கடைப்பிடித்திருக்
கிறார்கள். சிவபெருமானை யாதுகருதிப் பூசிக்கிறார்களோ அவர்கள் அந்தப்
பலனையடைவது சத்தியம். அந்தத்தவம், சாத்விகம் ராஜசம் தாமசமென
மூன்றிறப்படும். தேவர்கள் தமது தேவபதவியை யடையுஞ் செய்ததும்
ஊர்த்வரேதசுகளாகிய முனிவர்கள் செய்வதும் சாத்விகதவமாம். உலகினர்

ரர் ராகூலர் முதலானவர் உலகைக் கஷ்டப்படுத்திப் பிடிவாதத்தாற் செய்
தவம் தாமஸமாம். அவற்றுள் சாத்விகமே சிறந்தது. அதுஜபம் தியானமுத
லிய கர்மங்களால் பக்தியோடு தேவர்களையுஞ் சிவபெருமானையும். பூஜிப்ப
தாம். அவ்வாறு சாத்விக தவஞ்செய்தோர் இகலோகத்திற் சர்வகர்மங்
களையுமநுபவித்துப் பரலோகத்தில் மோக்ஷத்தையடைவார்கள். உத்தமமான
தர்மத்திலேயே மனம் - நாடோறும்ஸ்நானம் - சிவபூசை - காயத்ரிமுதலிய
ஜபம் - ஔபாசனஹோமம் - ஆசாரம் - அஹிம்சை - சிவவ்ரதங்கள் -
மௌனங்களே இந்திரிய நிக்ரஹம் - மனத்தை வித்யாவிஷயத்திற் செலுத்
தல் - சத்தியம் - குரோதமின்மை - கோதானமுதலிய தானங்களைச் செய்
தல் - பொறுமை - அந்தக்கரணவொடுக்கம் - தயை - வாவிகூபங்களை நிர்மா
த்தல் - தேவாலய நிர்மாணஞ்செய்தல் - சத்ரம் மடம் தோப்பு ஆச்ர
மம் முதலியன நியமித்தல் - தீர்த்தயாத்ரை - பிராஜாபத்திய முதலிய
இருச்ரங்களை யநுசரித்தல் - சாந்த்ராயணஞ் செய்தல் - மாசப்பிறப்பில்
பிதுர்தர்ப்பண மியற்றல் - ரதசப்தமி முதலிய புண்ணிய காலங்களில் விசேஷ
தானதிகளைச் செய்தல் முதலியவை, இகலோகத்திற் சௌக்கியத்தை
யநுபவித்து இந்த்ராதி லோகங்களிலும் இஷ்டகாமியங்களை நுகர
வல்லனவாம். அந்தியகாலத்தில் பரமசிவனைத் தியானித்து அவ
ஸ்வரூபத்தை மனத்தில் தியானித்தலும் சேகபூரககும்பகங்களால் பிர
ணவாயுவை பிறத்திச் சிவத்தியானஞ் செய்தலும், பிராணயாமமுதலிய
வற்றுற் சர்வேசுவரனை த்தியானித்தலுமாகிய இவை ஞானத்தையும் மோ
க்கவையும் மோக்ஷத்தைக்கொடுக்க வல்லவையுமாம். ஸ்நிக்தி - சயனம் -
ஆசனம் - வஸ்த்ரம் - வாசனத்ரவியம் - தூபம் - தாம்பூலபக்ஷணம் -
ராஜ்யபோகம் - சுவர்ணம் - காமிநிமுதலியவை - விடை-குதிரைகள் - பசுக்
கள் - விதவத்தன்மை - வேதசாஸ்த்ரங்கள் - கீதங்களிய விளையாட்டுக்
கத்தானங்கள் - யானை - குடை - சாமரம்முதலியவை போகஸுபமாதலின்,
இவற்றை விரும்பினவன் யோகமார்க்கத்தை யடையமாட்டான். எள்ளி
னுள் தைலரசமிருந்து அந்த எள்ளினைச்செக்கிலிட்டு ஆட்டச்செய்வது
போல, மேற்கூறிய போகங்களின் இச்சையானவை ஒருவன் மனத்தி
லிருக்குமாயின் அவை அவனைக்கல்லி யோகமார்க்கத்திற்செல்லவொட்டாது
கடித்து, உலகவியாபாரமாகிய செக்கிலிட்டு ஆட்டுவிக்கும். ஜாமரணபீ
டையுடைய பிராணிகள் எற்றத்தின் முளாக்கோல் போல, பலபிறவிகளில்
உயர்வுமிழிவு மடைந்து நின்புறுகிறார்கள். எண்ணிறந்த பிறவிகளெடுத்த
பின்னர் மானுடதேகத்தை யடைதல் துர்லபம். புண்ணிய கருமவிசே
ஷத்தினாலேயே மானுடசரீரங்கைகூடி மாதவின் கர்மத்திகள் விசேஷமா
னவை. சுவர்க்கலோகட்சங்கட்குச் செல்லத்தக்க அரியமானுட தேகத்தை
யடைந்தும் உயர்க்குறுதிதேடிக் கொள்ளாதவன் இறந்த பின்னர் நெடுங்
காலம் பெருந்துக்கத்தையநுபவிக்கிறான். தேவராசரிஷிகளிலும் மா
னுஷனாகப் பிறந்ததாயிருக்க, அவ்வகைய மானுடத்தையடைந்தும் நரக
வாதையுடையாதவழியையேன் தேடிக்கொள்ளாதிருக்கிறார்கள்? தர்மத்

திற்கு மூலமாயிருக்கும் மானுடதேகமெடுத்தும், மோட்சத்தைத் தேடா
விடினும் நரகத்தையாவது தாவர்ஜனனத்தையாவது சம்பாதித்துக் கொள்
ளாதிருப்பதுசிதம். இலாபங்கருதியேவர்த்தகஞ் செய்பவன் இலாபங்கை
கூடாவிடினும் நஷ்டமடையா திருக்கவும் மூலதனத்தையாவது கர்த்
துக்கொள்வதும் விசேஷமன்றே? அது போலத் தனதுமூலதனமாகிய
மானுடதேகத்தை யிழந்து போகாதிருப்பது சிறப்பு. மானுடதேகத்
திலும் பிராமணத்துவத்தைப்பெறுவது மிகவும் அருமை. அப்படிப்பட்ட
பிராமணத்துவத்தை யடைந்தும், ஆத்மாபசாரஞ் செய்து கொள்ளாத
வனைக்காட்டிலும் இழிந்த ஜந்து யாதுள்ளது? புண்ணிய பூமியாகிய
பாரதத்தில், இடைப்பது நிச்சயமென்று கருதப்படாத துர்லபமான
மானுடயோனியிற் சனித்தும், ஆத்மாவுக்கு நல்லகதியைத் தேடிக்கொள்
ளாதவன் ஆத்மத்துரோகியாவான். இதுவே கர்மபூமியாதலின், இவ்
விடத்தில் தேடியவற்றை யிதரபூமியில் அநுபவிக்கலாமன்றி அங்கே
யொன்றுந் தேடமுடியாது. பஞ்சேந்திரியங்களும் நல்லநிலையிலுள்ள
பொழுதே ஆத்மாவிற்குச்சத்கதியைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டியது.
நித்தியமில்லாத இத்தேகத்தையடைந்தவன் நித்தியமான மோக்ஷத்தை
யடைப்பிரயத்தனஞ் செய்யாவிடின், தேகநஷ்டமும் மோக்ஷநஷ்டமு
மடைந்துபயப்பிரஷ்டனாவான். மானுடனுக்குள்ள ஆயுள்சுலபம். அதிலும்
நிரவிருத்திரை பாதியைக்கொண்டுபோகும். மற்றப்பாதியில் வாலிப
வார்த்திரங்கள் பாதி கொண்டுபோம். அதிலும் ஜ்வரமுதலியபீடைகள்
மனக்கவலைகள் அரைப்பங்கினைக்கொண்டுபோம். எப்பொழுது தான்மரிப்
பனென்பதை ஒருவ மறியான். வருங்காலமறியாத மரணத்துக்கஞ்சிப்
புண்ணியகருமங்களைச்செய்யாது தைரியமாயிருப்பது தகுதியா? தருமமே
பரலோகயாத்திரைக்குப் பொதிசோறாகும். தானஞ்செய்திருப்பானாகில்
அவன் சுவர்க்கலோகஞ் செல்கையில் அங்கு உதவியுண்டாகும். தனத்தை
வீட்டில் வைத்துவிட்டு இறக்தால் அஃதவனோடு வரமாட்டாது. அவனும்
வழியிற் சாப்பாடுகொண்டு போகாதவன் கஷ்டப்படுவதுபோல அநேக
துன்பங்களை யநுபவிப்பான். அதிதிகளை யெதிர்கொண்டழைத்து அர்க்கிய
பாத்யாதிகளாற் பூஜித்தோர் அன்னபானாதிகளை யமமார்க்கத்திற் பெறு
வார்களென்பதை நம்பிப் புண்ணியத்தைச்செய்து பாவத்தை நிவர்த்திக்க
வேண்டியது. புண்ணியத்தால சுவர்க்காதிலோகங்களையும், பாவத்தினால்
நரகவாதனையையும் அடைகிறார்கள். ஒருமுறையேனும், சிவபெருமானையே
சரணகதியென்று நம்பினவன் கோரமான நரகத்தையும் இயமனையுங்
காணமாட்டான். அவன் சிலகாலம் மானுடதேகத்தையடைந்து கிரமப்படி
புண்ணியமிகுதியால் மோக்ஷத்தைபடைவான். சிவபெருமானையே கதி
யென்று எப்பொழுதும் மனத்தில் திடங்கொண்டுள்ளவன் தாமரையிலையில
ஜலம் ஒட்டாதது போல, பாவத்தில் தோயாதவனாகி மோக்ஷமடைவான்.
சிவசிவ ஹரஹர வென்று சிவநாமங்களை ஸ்மரித்துக்கொண்டிருப்பவன்

காகவேதனையும் யமபாதையுமடைகிறதேயில்லை. ஆகையால் மாதுடனே மேன்மேலும் மேலிடத்த புத்திமான் சிவபெருமானிடத்தில் இடையறாது பக்தி செலுத்த வேண்டியது என்று லோகத்குமாரமுனிவர் வியாஸமுனிவருக்குரைத்தருளினர்.

அகோர வாமதேவ ஸத்தியோஜாத கல்பங்களுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தொன்றாவது

க்ஷத்திரிய தர்ம முரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் லோகத்குமார முனிவரை நோக்கி ஸ்வாமீ! பிரம்ம தேவனுடைய முகத்தினின்று தோன்றிய பிராமணர்களும், தோளினின்று தோன்றிய க்ஷத்திரியர்களும், தொடையினின்று தோன்றிய வைசியரும், பாதத்தினின்று தோன்றிய சூத்திரரும் என உலகத்திலுள்ள பிரஜைகள் சதுர்வர்ணத்தவர்களாயிருக்க, அவர்களில் உயர்ந்தோர் இழிகுலத்தோராகவும் இழிந்தோர் உயர்குலத்தோராகவும் ஜனனமாவது நற்று நியாயமாதோ அதனையும் அடியேனுக்குரைக்க வேண்டுமெனக்கேட்க, லோகத்குமார முனிவர் கூறலாயினர். வியாஸமுனிவனே! உயர்ந்தபிறவியை யடைந்தும் அந்தப்பிறவியைக் காத்துக்கொள்ள வகையறியாது இழிந்தபிறவியை யடைகிறார்கள். ஆதலின் புத்திமான் தன்பிறவியைக்காக்க முயலவேண்டும். பிராமணன் க்ஷத்திரிஸ்திரீயினிடத்திற் சந்ததியையுண்டு செய்வானாயின் அவன் பிராமணத்துவகீங்கி க்ஷத்திரியனாகிறான். இவ்வாறு தன்னிலும் குறைந்தகுலத்தாருடன் சங்கமஞ்செய்வதால் அந்த ஜாதிகளுண்டாகின்றன. ஔபாசனத்தினீஹோத்ரங்களைச் செய்தவனும், வேதசாஸ்திரங்களை யுணர்ந்தவனுமாகிய பிராமணன், சூத்திரான்னத்தைப்புசித்து அதுவயிற்றிலிருக்கையிலேயே இறப்பானாயின் சூத்திரஜனனமடைவான். சுபகாமாலாபிராமணனுகப்பிறந்தும் புசிக்கத்தகாதபதார்த்தங்கள் அதாவது மாமிசபக்ஷணஞ் செய்தவன் க்ஷத்திரிய னுகப்பிறப்பான். சூத்திரனுயிருப்பனும் புத்திமானுயிச்சத்தருமங்களைச் செய்தபக்ஷத்தில் வைசியஜனனத்தையடைவான். சூத்திரன்தன்குலதர்மத்தை யதுசரித்து, தன்மேற்குலத்தார் முவருக்கும் பணிவிடைசெய்யும் பட்சத்தில் வைசியனுகப்பிறப்பான். வைசியன் தர்மசாஸ்திரங்களை யுணர்ந்து அநேகவிதங்களிற்பூஜித்து, அதன்சேடத்தைப் புசிப்பானாயின் க்ஷத்திரியனுகப்பிறப்பான். க்ஷத்திரியனுகப் பிறந்தவன் நல்வழியிற் சம்பாதித்த திரவியத்தால் யாகங்களைச்செய்து தேவர்களைத் திருப்தி செய்வித்து, வேதசாஸ்திரங்களை யப்பியாசித்துக் காருகபத்திய ஆகவனிய தக்ஷிணாக்னிகளைப்பூசித்து, எப்பொழுதுந் தானங்கொடுப்பவனுய் நல்ல நீதிநெறியை யுடையவனுய்ப் பூமியைப்பரிபாலித்து, தன்பாரியையை * ருதுகாலமனஞ்செய்து, தர்மார்த்த காமபங்களை யனுபவிக்க விரும்பி, கோப்பிராமணர்களைக்காத்து, புறமுதுகுகாட்டாதுபோர்செய்து தேகங்கழிப்பானுயின், அவன் பிராமண ஜனனமடைந்துவேதசாஸ்திரங்களை யுணர்ந்து யாகாதி காரியங்களைச்செய்து தேவபதவியை யடைவான். ஆகவே, பிராமணத்துவம் பெரும்பிரயாசத்துடன் சம்பாதிக்கவேண்டியதாயிருக்க, அதனையடைந்தும் காத்துக்கொள்ளாது கைவிடுதல் உசிதமல்ல எனக்கூறிய லோகத்குமாரமுனிவரை நோக்கி, ஸ்வாமீ! யுத்தரங்கத்திலிறந்த க்ஷத்திரியன் பிராமணனைப்பிறப்பானெனக் கூறினீராதலின், அந்தயுத்த மஹாத்மியம் யாது? அதனைக்கேட்கவிரும்புகின்றனெனக் கேட்ட வியாஸமுனிவனைநோக்கி, லோகத்குமாரமுனிவர் கூறலாயினர்.

வியாஸமுனியே! யாககாலத்திற் பெருந்தக்ஷிணை கொடுத்ததனால் வரும்பலனும், யுத்தபூமியில் உயிர்விடுதேதான் பெறும்பலனுக்குச் சமானமாமாட்டாதென்று பெரியோர்கள் கூறுவாராதலின் க்ஷத்திரியர்கள் தங்கள் யுத்தத்தினல்அடையும்பலனைச்சொல்லுகின்றேன்: சத்துருக்களுடையசைனியத்தை யழித்து, சயமடையுஞ் சூரனுக்குத்தர்மார்த்தகாமமென்னுந்திரிவித புருஷார்த்தங்களும் ஸித்கூடும்; அன்றியும் கீர்த்தியையும் யாகஞ்செய்தபலனையுமடைவான். சத்துருவைச்சயித்து அவனுடைய யவாகனத்தினழித்தோன்டவன், விஷ்ணுபதவியை யடைவான். யுத்தரங்கத்திற் சத்துருக்களைத்தன் ஆயுதத்தினலடித்து, சத்துருக்களுடைய ஆயுதத்தாலடிபட்டு உயிர்துறப்பவன் அசுவமேதஞ்செய்தபலனையடைவான். அரசன் மந்திரி சேனாதிபதி யுத்தபடன்முதலியவர்களில் யாராலாவதுவிடப்பட்ட ஆயுதங்களால் உடலிலுள்ள ரோமங்கள் எத்தனை அழிந்தனவோ அவ்வளவுகாலம் புண்ணியலோகத்தையும் வீரசுவர்க்கத்தையும் அடைவான். கோஹத்தி செய்தவனையினும் பிரமஹத்தி செய்தவனையினும், பகுனிமித்தமாகவும் பிராமணனிமித்தமாகவுந் தன்யசமானனிமித்தமாகவும் யுத்தரங்கத்தில் உயிர்விடுத்தவன் சுவர்க்கத்தையடைவான். யுத்தரங்கத்திற் பயமின்றித் தன் சைனியங்களைக்காத்துப்போர்செய்தவனும், தன்னுற்சாகமின்றி உயிர்விடுத்தவனும் மேற்கூறியபலனையே யடைவான். யுத்தகளத்தில் உயிர்நீங்கித் தன்தேகத்தைப் பூதப்பிரேத பசாசங்களுக்கும் கழுகு காகம் பருந்து நரிமுதலிய பிராணிகளுக்கும் விருந்தாகஞ்செய்தவன் அட்சயமான பதவியையடைவான். தானம் தருமம் யாகம்முதலிய யாவுஞ்செய்யக்கூடும். பிராணனை விடுத்தற்குமாத்திரம் ஒருவனுக்கும் மனந்துணியாதலின் அதனைவென்றுத்து தைரியத்துடன் போர்புரிந்தவன் எல்லாத்

---

* ருதுகாலம் - ருதுகாலமென்றதால், மாதருதுவடைந்த ஸ்திரீயை அன்று முதல் நான்கு தினங்களளவையில் நீங்கி, அதன்பின்னர் பன்னிருதினங்களிற் புணரலாமென்பது விதி. இதனை "பூத்தகாலையிற் புணையிழை மகளிரை — நீராடியபின் னீராறு நாளுங்—கருவியிற் றூராஉங் காலமாதலாற்—பிரியப் பெரு அன் பரத்தையிற் பிரிவோன்" என்னும் அகப்பொருட் சூத்திரத்தானறிக.

தானங்களையுஞ்செய்தபலனையடைவான். கொல்லத்தக்கவர்களையுங்கொல்ல
ாதவிடத்தக்கவர்களையுஞ் சொல்லுகிறேன்: வீட்டைத்தீயிட்டெரிப்ப
வன், விஷமூட்டுபவன், அஸ்திரத்தாலடிப்பவன், சமயமறிந்துமோசஞ்செய்
யக்கருதியவன் முதலானோர் வேதியர்களாயிருப்பினும் அவர்களைக்கொல்ல
லாம். அவர்களைக் கொல்வதாற் பிரமஹத்திதோஷம் சம்பவியாது. சிறிது
தோஷமிருப்பினும் அது சுலபப்பிராயச்சித்தத்தா லொழியும். தன்னைக்
கொல்லத்தக்க சத்துருவாயிருப்பினும் யுத்தபூமியில் தாகத்திற்கு ஜலம்
வேண்டுமென்று கேட்டவனும், வியாதியஸ்தனும், பலஹீனனும், வாலிப
னும், ஸ்திரீகளும், வில்லொடிந்தவனும், கிராயுதனும், நாணியறுந்தவனும்
ஆகிய இவர்களைக்கொன்றவன் பிரமஹத்திதோஷத்தையடைவான். குடி
யிழந்தவனும், வெறிபிடித்தவனும், சருகைக் கையிற் பற்றினவனும்,
பூமியை வாய்ற் கௌவினவனும், உன் ஊழியனென்று சொன்னவனும்,
என்னைக் காக்கவேண்டுமென்றவனும், விருத்தனும், யுத்தப்பயிற்சியில்லா
தவனும், நபும்சகனுமாகிய இவர்களைக்கொன்றவனும், பிரமஹத்திதோஷத்
தைச் சந்தேகமின்றியடைவான். வியாஸமுனிவனே! பெரிய யாக்கஞ்சாற்
கஷ்டப்பட்டு அடையத்தக்க உயர்பதவியை, யுத்தகளத்தில் தன்தேஹத்தை
விடுப்பதனுல் சுலபமாக அடையலாம். இருக்குயசுர் சாமம் அதர்வனமென்
னும் வேதங்களையும், சிட்சை வியாகரணம் சந்தஸ் நிருத்தம் சோதிடமென்
னும் ஷடங்கங்களோடு அத்தியயனஞ்செய்து வனத்தையடைந்து வாஜ
ப்ரஸ்தாச்சிரமத்தை யேற்று யோகத்தை யப்பியசித்தவர்கள் அடைவுக்
கூடிய கதியைச் [சங்கிரம்யாகம்] யுத்தமாகிய யாகத்தில் தன்சரீரமாகிய
அவிசைக்கொடுத்தவன் சந்தேகமின்றியடைவானென்று கூறினர்.

கூத்திரியதர்மமுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்திரண்டாவது

கற்பவாச கஷ்டமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸூதக்குமாரமுனிவரை நோக்கி ஸ்வாமீ! கற்பவாஸத்திற் பிராணிகள் அடைப்புற் அன்பங்கீனி விவரமாகச்சொல்ல வேண்டுமெனக்கேட்க ஸூதக்குமாரமுனிவர் கூறலாயினர். வியாஸமுனிவனே! நரக வாதனையிலிருந்த பிராணிகள் கற்பவாசத்தை யடைகிறார்கள். அதில் அவரவர்களுடைய புண்ணியபாவமிசித்தால் கால்வகையோனியிற் பிறக்கின்றார்கள். அவை செடிமரமுதலிய உத்பிஜமும், கிருமி டேமுகலியல்வேதஜமும், முதலை ஆமை பறவைகள் முதலிய அண்டஜமும், சதுஷ்பாத ஜந்துக்களாகிய மிருகங்களும் மானுடருமாகிய சராயுஜமுமென்னப்படும். பூமியானது ஜலத்தால் நனைந்தும், சூரியன்முதலிய தேஜஸால்தபிக்கப்பட்டும், வாயுவினுல் வீசப்பட்டும் ஆகாசசம்பந்தமாக ஓர்விதை யுண்டாகப்பெற்

றுக்குரிய ருதுவில் பரிபக்குவப்பட்டு மீண்டும் மழையினல் நனைக்கப்பட்டு அதினின்று முளையுண்டாகி, அம்முளையினின்றும் இலைகள் வெடித்து, இலைகளினின்றுங் காம்புண்டாகி, அதினின்றுங் கிளைகள் தோன்றி, அவற்றினின்றும் மலர் காய் பழமுதலியன வுண்டாகின்றன. யவமுதலியவை பதினெழுவகைப்பட்ட திருணங்களினின்றுந் தோன்றும். ஓஷதிகளெல்லாம் பலனையே முக்கியமாக வுடையவை. இவற்றை அழுத்தல் இடித்தல் சமைத்தல்முதலிய தொழில்களைச்செய்து அறுசுவையோடுண்டி அன்மாக்கள் விருத்தியாகின்றன. இவ்வகைய அன்னமானது தன்னைப்புசித்தவர்களுடைய பிராணனைப்பாதுகாக்கும். அவ்வாறு புசிக்கையிற் பிராணவர்யுவானது அன்னம் வேறும் ஜலம் வேறுமாகப்பிரிக்கின்றது. அதனல் ஜடராக்கினியின் மேலே ஜலமும் ஜலத்தின்மேலே அன்னமுமாகநிற்கும். அபானவாயுவானது ஜடராக்கினியையெழுப்ப ஜடராக்கினி வயிற்றிலுள்ள ஜலத்தை அதியுஷ்ணமாக்கும். அந்தஜலத்தின்உஷ்ணத்தினல் அன்னமானது மீண்டும் பசன்செய்யப்பட்டு அன்னரசம் வேறுகவும், அதன்திப்பி வேறுகவும் பிரிக்கப்பட்டு, காதுகள் - கண்கள் - நாசி - கை - சரு - தந்தம் - சிஸ்னம் - குய்யம் - நகம் - கபம் வெயர்வு என்னும் பன்னிரு மலங்களால் மலமுத்திரங்கள் வெளிப்படும். அன்னரசமோ, இதய தமனியில் எல்லாநாடிகளுந் தொந்தமுற்றிருத்தலின், பிராணவாயு அந்த இதயகமலத்திற் சந்தித்துள்ள நாடிகளின் முகத்திற்செலுத்த, அந்த நாடிகள் நன்றாக இரசமயமாகித் தமது மூலமாக அதனை உடல்முழுவதும் பரவச்செய்யும். இதயத்தில் வந்தபொழுதும் நாடிகளின் நடுவிலுள்ள பெருநாடியும் அந்த அன்னரசத்தைச்சரீரத்தின் அங்கினியானது இரண்டாகப் பிரித்து, ஒருபாகம் குளிர்ச்சியாகவும் ஒருபாகம் உஷ்ணமாகவும் மாற்றும். உஷ்ணத்தால் மாமிசமும் உரோமங்களும் உண்டாகும். மாமிசத்தினின்று நரம்புகளும் தலையிரும் உண்டாகும். நரம்புகளின்று எலும்புகளும் நகங்களும் உண்டாகும். எலும்பிலிருந்து கொழுப்புண்டாகும். கொழுப்பினின்று சுக்கிலமுண்டாகும். இதுதான் பிரசவத்திற்குக்காரணமாகும். சுக்கிலமானது ஸ்திரீயினுடைய ருதுகாலத்தில் அவளுடைய குறியிற் சுரோணிதத்துடன் கலந்து ஸ்திரீயினுடைய உஷ்ணசம்பந்தத்தால், ஜீவன் தனது கர்மத்திறுற் செலுத்தப்பட்டுப் பிண்டமாகும். சுக்கிலசோணிதங்கள் கட்டியபொழுது ஒருதினத்திலேயே சிறுகடினமாய் ஐந்தினவனையில் அப்படியேயிருந்து அதன்பேரில் புற்புதம்போலாகி, ஏழுதினங்களின்மேல் பதினஞ்சு தினங்களில் சுக்ர மாமிசங்களிரம்பிய மாமிசபையாகி, இருபத்தஞ்சுதினங்களுள் அந்தப்பிண்டத்தின் முகமேதான் முதலாகி, ஒருமாதத்தில் பஞ்சபூதசம்பந்தமடைந்து, இரண்டுமாசத்தில் கடினபிண்டமாகி, மூன்றுமாசத்தில்எல்லாஅவயவங்களின் சூக்ஷ்மமுற்று, நான்குமாசத்தில் கைவிரல்களுண்டாகி, ஐந்துமாசத்தில் முகம் நாசி காதுகளுண்டாகி, ஆறுமாசத்தில் பல்லரிசை குய்யம் நகம் காதுத்துவாரமுண்டாகி, ஏழுமாசத்தில் கொப்பூழ்முதலிய அங்கங்களின் முழுத்திறமுண்டாகி,

வெம்மோதத்தில் தலைமயிர் முதலியவற்றுடன் பூரணமாகிப் பரிபக்குவ மடைந்து தாய்புகிக்கும் அன்னரசத்தைக் கொப்பூழ்வழியாகவுட்கொண்டு ஜன்மாந்தர வுணர்ச்சியுண்டாகித் தான்பெற்ற சுகதுக்கங்களுமும் பிறவி கலியுங்கருதி, தானகேகவிதயோகினிற் ஜனித்திருந்தனுபவித்த கஷ்டங் களையறிந்து இனிப் பூவுலகிற் ஜனனமெடுக்காதிருக்கும் படியான மார்க் கத்தை யோசிக்கிறான். 'ஜனனமெடுத்த உடனே சிவஞானத்தையடைய வேண்டுமென்று மெண்ணத்தோடு, ஜீவனுவன் 'கருமத்திற்கேற்ப துக்கங்களையநுபவித்து, மோகூஹாபாயத்தை நாடி எள்ளுமிட்டுக் கொண்டு, வழிப்போக்கன் மலை - செடி - கொடிமுதலியவைகளாற் மடை படுவான்போலக் கர்ப்பாசயப்பையாற் கட்டப்பட்டுத்துன்புற்றும், சமுத் திரத்தில் வீழ்ந்தான் மூன்புறுதல்போலக் கர்ப்பத்திற் பூரித்தஜலத்தால் வருத்தியும், இருப்புக்கொப்பறையில் ஜலத்தோடிட்டுச் சமைத்தாற்போல உதராக்கினியால் வருத்தியும், காய்ச்சிய இருப்பூசியாற் குத்தப்படுவான் போலத் தாயின் கர்ப்பத்தினுள்ள சுரம்புகளாற் குத்தப்பட்டும் வருந்து கிறான். துக்கங்களிலெல்லாம் கர்ப்பத்திலநுபவிக்கின்ற துக்கத்தைவிட அதிகமான தொன்றுமில்லை. இவ்வாதனைகளெல்லாம் ஏழுமாதத்திற்கு மேல் ஜீவனுக்குப்புலப்படும். ஆலியிலிட்ட கரும்பைப்போலவும், செக்கி லிட்ட எள்ளைப்போலவும், பாபமாகிய இருப்புலக்கையால் அடிக்கப் பட்டும் ஜீவன் துன்பமடைகிறான். இரத்த மாமிசங்களால் நிரம்பப்பெற்று மல்முத்திரங்கள் பொதிந்து, நலமயிரால் மூடப்பட்டு, ரோகங்களுக்கெல் லாம் வாசல்தானமாயும், வாயே பெருந்துவாரமாகவும், உதடுகளில்சொ ள்ளும் ஈழைரோமுதலியன சொரியவும், பாதத்திலத்தியந்தமான பேதத் தோடும், இராகத்துவேஷாதிகளால் நிரம்பப்பெற்றும், திரும்புதற்கும் இடமின்றி யிருக்கையில், பிரசுதவாயு முரித்துத்தள்ள யோனிவழியில் நெருக்குண்டு ஸ்மசானியின்றி நிலமிசைத்தோன்றி, பூமியைப்பரிசித்த மாத்திரத்தித் தன்னெண்ணமெல்லாம் மறந்து அஞ்ஞான மூடப்பட்டும், மீண்டும் பிறவியைத்தரத்தக்க உலக வின்பத்தையே யவாவுகிறான். மல முத்திரத்தில் தோன்று நிலமிசை வீழ்ந்த ஜீவனுக்கு எலும்பின் கூடாகிய தேகத்தில் மூன்றரைக்கோடி உரோமங்களும், மூன்றரைக்கோடி காடிகளும் முப்பத்திரண்டு பற்களும், இருபது நகங்களும், ஒருபடி பித்தமும், குருணி கபமும், இருபத்துபல நினரும், பத்துப்பலங் கபிலரத்தமும், பனிரண்டரை பல மேதையும், மூன்று பல மகாரத்தமும், பனிரண்டுபல மச்சையும், அரைப்படி விரியமும், ஆயிரம்பலம் மாமிசமும், நானுபலம் இரத்தமும், ஆகாரத்திற்கேற்ற மலமூத்திரமுங்கூடிய அசித்தியமாயிப் தேகமானது அசுத்தமாயிருப்பினும் பரிசுத்தராகிய பரமபதிபா லருளப்பட்டதாய் நித்தியமான ஆன்மாவிற்கு வாசஸ்தானமாயிருக்கிறது. அத்தப்பாம பதியால் ஆன்மாக்களின் விணக்கிடாகச்சுக்கிலசுரோணிதங்களால் இந்தத் தேகமாக்கப்பட்டது. சதா மலமூத்திரங்களால் நிரம்பப்பெற்று அசுத்த மானதாய், பஞ்சகௌவ்ய முதலிய பரிசுத்தவஸ்துக்களால் பரிசுத்தஞ்

செய்தாலுஞ் சிக்கிரத்தில் அசுத்தமாக்கக்கூடியதாய், சகந்தவாசனைத் திரவியங்கள் பூசினும் துர்க்கந்தம் வீசச்செய்யும் இந்தத் தேகத்தைக் காட்டினும் துர்க்கந்தமானது பிறிதொன்றில்லை. பர்வதத்தினின்றும் அருவியாறுகள் பாய்வதுபோல இந்தத் தேகத்திலிருந்து கபம்மூத்திரம் மலம் புரீடாதிகள் நாடோறும் வெளியாகின்றன. தன்னுடைய தேகமா யிருப்பினும் மலமூத்திராதிகள் வரும்வழியை மண் கொண்டும் நீர் கொண்டுந் தேய்த்தலம்பி அருவருத்தும், மாதுடர் அந்தத்தேகத்திற்கே ஊழியஞ்செய்து கொண்டும், கந்தபுஷ்ப வாசனைகளிச்சேர்த்து அழகு படுத்தியும் வருகிறார்கள். தன் தேகத்தினின்று வெளியாகும் புரீடங்களைக் கண்டும் அதனிடத்துவிரக்தி யடையாததேன்? இந்த வுலகத்திலுள்ள மாதுடர் தமது தேகத்தினின்று தோன்றும் அருவருப்புக்களைக்கண்டும் அதன்பால் அபேகூயையிடாது மோகங்கொண்டிருப்போரைப் பற்றி யென்னசொல்லப்போகிறேன். கங்காஜல முதலிய புண்ணிய தீர்த்தங் களினால் இடைவிடாது சுத்திசெய்யினும் மாதுடதேகம் புனிதமாவதல்ல. அது அவனுடைய மனசுத்தியினுலேயே புனிதமாகவேண்டும். நெருப்பி லிட்டுக்கொளுத்தினும் மனுசுத்தியில்லாதவனுக்குமோகமுண்டாகாது. எப்படியெனில், கங்கையாதி தீர்த்தங்களில் மச்சம் முதலிய நீர்வாழ் வனவும், இமாலயங்களில் பகிமுதலிய நிலமிசை வாழ்வனவும், சதா ஸ்நித்திருந்தாலும் புனிதமாகாததுபோல், சித்தசுத்தியில்லாதவன் முத்தி யடையமாட்டான். ஆனபடியால் சகலவிதபாவங்களைச் செய்தாலும் பேகூஷமடைய மனத்தின் சுத்தியேகாரணமாகவிருக்கிறது. அஃதெப்படி யெனில் ஸ்திரி புருஷர்கள் ஆலிங்கனகாலத்தில் வேறு எண்ணத்தோடு சம்மேளிக்கப்படுவார்களாயின் அதனால் உற்பத்தியாகுங் குழந்தை, தாய் தந்தையர்போலல்லாது வேறே வடிவமாவதேதான்றும். தன் மனம்மிய மில்லாதல்திரியொருத்தி தன்னைப்பலவந்தத்தி லாலிங்கனஞ்செய்தாலுங் தான்கரியப்படுகிறதில்லை. புசிப்பதற்காகவிளங்கும் பதார்த்தங்களாவும் சமமாகவிருப்பினுஞ் சிலர் ஒவ்வொன்றில்தம் மனத்தைச் செலுத்துவது போல காமக்குரோத லோபங்களில் பிரவர்த்திப்பதும் இம்மனதே யாகிறது. ஆகையனால் மனிதன் வசப்படுத்தப்படுகிறான். அப்படி வசப் பட்டதினின்று விலகிப் பாவத்தையொழிப்பானுயின் மோகூஷமடைகிறான். மனஞ்சுத்தமாகவே தானம் யோகம் யாத்திரைமுதலியன செய்கிறார்கள். ஞானமாகிய நிர்மல ஜலத்தாலும் வைராக்கியமாகிய மண்ணினுலும் அஞ் ஞானமாகிய இராகத்துவேஷாதிகளாலும் மலத்தைச்சுத்திசெய்து போக் குவானுயின் அவனே பிரமக்கியானியாகிறான். சுவிதை ஜன்மமெடுத்தோர் களுக்கும் அஞ்ஞானத்தாலும், தானுகர்ம தோஷத்தினுலுஞ், சம்சாரத் தைச்சுகமாக அநுபவிப்பவர்கள் சுலபமாக மோகூஷமடைய அநேக கோடிகிரந்தங்களிற் சொல்லியிருப்பதைச் சுலபமாகச் சுருக்கிச்சொல்லு கின்றேன். அதாவது: யாவென்னுங் கற்பாதமுடையதே பெருந்துக்க மும் அதையொழிப்பதே பெருஞ்சுகமுமாகும். இவ்விதமாக ஒழித்தே

அநேக அரசர் மோக்ஷமடைந்திருக்கின்றனர். கர்ப்பவாசஞ் செய்கையில் உண்டாகும் ஞானமும், மயான ஞானமும், பூர்வஜன்மவினை காலத்து ஞானமும், ஸ்திரீ சங்கமார்த்தத்தில் உண்டாகும் ஞானமும், ஒருவனுக்கு நிங்காதிருக்கும் பட்சத்தில், அவன் உலகசுகத்தைவெறுத்து மோக்ஷ சுகத்தை யடைவதற்குச் சந்தேகமில்லை. ஜன்மத்தையெடுத்தவன் பெரி யோரால் ஞானோபதேசஞ் செய்யப்பெற்றும் விஷயசுகத்தா லதனைக் கடைப்பிடியாமல், கல்வழியிற் செல்லையிற் றவறுபவன்போல, மோக்ஷ வழியினின்று நீங்கி உலகவியாபாரங்களிலுழலுகின்றான். வாலிபத்தில் இந்திரியங்களெல்லாம் நிரம்பப் பெறுமையால் தன் விருப்பத்தைத் தெரிவிக்கவுஞ் செய்து முடிக்கவும் சக்தியற்றவனுகி, பற்கள் முகைக் கையில் துன்புற்று, பாலக்கிரகங்களாற் பீடிக்கப்பட்டு, சாமான்யவியாதி களையும் பெரிதாக் அனுபவித்து, மலமூத்திராதிகளிற் புரித்து, பசிதாக மடைந்தகாலங்களில் அன்னபானாதிகளிற்பெறுதுவருந்தி, பலவகையினுற் துன்புறுவான். கௌமார பருவத்திற் காதுருத்துதலால் வருந்தியும், வித் தியாப்பியாசத்தால் அடிபட்டும், தன்மனம் போனபடிசெல்லாமல் தன் தாய்தந்தையரல் திருத்தப்பட்டுத் துன்பமடைவான். யௌவன காலத்திற் பிறன் கல்வி, செல்வம், உருவமுதலியவற்றக்கண்டு பொறுமை கொள் ளும், ஒருவன் சொல்லிய அற்பவார்த்தைகளுக்கும் மானத்தாற் கோப முற்றும், பகற்காலத்திற் பொருள்தேடக்கருதிவருந்தியும், இரவில் பஞ் மதாக்கினியால் தஹிக்கப்பட்டும்,மனத்தை மாதர்கள்பால்செலுத்தி பெய் மறந்து இந்திரியஸ்கலிதஞ்செய்துகொண்டு பலவினனுகியும்,மலமூத்திரங் களது குழியாகியும்,தான்பிறந்த இடமாகியும், மற்றும் அசங்கிதங்களெல் லாம் பொதிர்ந்துகிடக்கு மிடத்தையுடையோராகிய ஸ்திரீகள்பால் விருப் புற்று அதில் உழல்வதே பரமசுகமாக எண்ணுகிறான். துன்பங்களுக்கெல் லாம் பிறப்பிடமாகிவினங்கும் ஸ்திரீகளிடத்தில் அணுவளவுஞ் சுகமில்லை யென்று பூர்வம் பஞ்சசூடை யென்பவள் சொல்லியிருக்கிறாள். புருஷன் ஸ்திரீகளாவில் வைத்தபிரியத்தாற் அவர்கள் பிரியுங்காலத்தில் மிகவும் வருந்தி யௌவனகாலத்தையொழித்து,தேகங்கன்றி மயிர் கறைத்து, சக்தி பங்கங்கள்களர்க்து பல்லுதிர்ந்து, பூர்வத்தில் ஸ்திரீபுருஷர்களுக்குஆவலை யுண்டுசெய்க அவ்யவங்கள் பிரியமற்றனவாகி, கிழத்தன்மையால், மனைவி புத்திரர் பந்துக்கள் மித்திரர் வழியர் முதலானோரால் அவமதிக்கப்பட்டு மனம்வருந்துகிறான். இவ்வகைய துன்பங்களை யநுபவிக்கும் மாந்தரதிகத் தைக் கண்டு வெறுக்காதவனிக்காட்டிலும் அசேதனன் ஒருவனுமில்லன். யௌவனகாலத்திற்றான் தருமார்த்த காமியங்களை நட்டித் மோக்ஷோ பாயத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமேயன்றி வயோதிகத்தில் ஒன்றுஞ் செய்ய வியலாதுளன்று ஸநத்குமாரமுனிவர் கூறினர்.

கற்பவாசகஷ்ட்முராத்தி
முற்றிற்று.

நாற்பத்துமூன்றுவது

ஸ்திரீகளின் ஸ்வபாவமுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவர் ஸநத்குமார முனிவரைநோக்கி, ஸ்வாமீ ! பஞ்ச சூடையென்பவள் ஸ்திரீகளின் தோஷத்தைச்சொல்லி யிருக்கிறு னைக் கூனிராதனின் அவற்றை யெனக்குவிளக்கிக்கூற வேண்டுமெனக்கேட்க, ஸநத்குமாரமுனிவர் கூறுகின்றார். வியாஸமுனிவனே ! ஸ்திரீகளே தோஷ ங்களுக் கிருப்பிடமாயும், அற்ப புத்தியுடையவர்களாயுமிருக்கிறார்கள். பூர்வம் நாரதமுனிவருக்கும் விபசாரியாயிருந்த பஞ்சசூடையென்னப்பட்ட அப்சரப்பெண்ணுக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லுகின்றேன். நார தர் உலகசஞ்சாரஞ்செய்து திரும்புகையில், பிரமதேவனிடத்திற் பிறந்த பஞ்சசூடையைக்கண்டு, பஞ்சசூடையே ! என்மனத்தில் ஒரு பெருஞ்சந் தேகமிருக்கின்றது, அதனை நீதான் சொல்லவேண்டுமென, பஞ்சசூடை நாரதமுனிவரை நோக்கி அஃதெனக்குத் தெரிந்தவிஷயமாகிற் சொல் லத்தடையில்லை என, நாரதர் உனக்குத் தெரியாத விஷயத்தை உன்னைக் கேட்கவில்லை. அழகோடு கூடியவளே ! ஸ்திரீகளுடைய ஸ்வபாவத்தை நிச்சயமாக அறியவேண்டுகின்றேன் எனக்கூற, பஞ்சசூடை பகரலா யினள்: நாரதமுனிவரே ! ஸ்திரீகளை ஸ்திரீயேநிந்திப்பது தர்மமல்ல. இவ் விஷயம் தேவரீருக்குத் தெரிந்ததே. இதனைப்பற்றி நீர் என்னைக் கேட் பது தருமமன்று என, நாரதர் பெண்ணே ! உண்மையைச் சொல்வதில் ஒருபொழுதுங் தோஷமில்லை. பொய்யைச் சொல்லினுல்தான் தோஷம் ஒரும் என்கூற, பஞ்சசூடை பகரலாயினள்.

நாரதமுனிவரே ! சத்குலத்துதித்தவர்களும் ரூபவதிகளும் கண வனுக்குகந்தவர்களுமாயிருப்பினும் மாதர்கள் கட்டுப்பாட்டிலிருக்கமாட் டார்கள். உலகத்திலஸ்திரீகளைக்காட்டிலும் பாவப்பிராணிகள் வேறையா ரென்பதைத் தேவரீருமறிவீர்களே ? கணவன் வேதசாஸ்திரமுணர்ந்து செல்வத்தையுடையனும் அழகையுடையமனைவிக்குச்சுவாதினனுகியுமிருப்பினும் ஸ்திரீகள் ஒருவரி அன்புபாராட்டி யணையாது, சந்தர்ப்பம் வாய்க்கும் பக்ஷத்தில் பரபுருஷனையிரும்பிக் கூடுவார்கள். பிரபுவே ! மாதர்களுக்கு ஏமக்குக் கணவன் பேரழகனுயிருப்பினும் வெட்கமின்றிப் பிறபுருஷரைக் கலப்பதே பெருந் தூர்க்குணமாகும். சமீபத்திலிருப்பினுங் கள்ளத் தனத்தினுங் கணவனைவிடுத்துக் காமிப்பும்பியவன் தூரத்திலிருப்பி னுந் தம்பால்சிறிது அன்புபாராட்டாதிருப்பினும் அவ்வயலா னிடத்தி லேயே மனஞ்செலுத்தி மகிழ்வர். மாதர்கள் ஒருபோதும் பதிபக்திசெய் கிதில்லை. ஆனுல் தம்மைப்பிரார்த்திப்போரில்லாமையாலும் பலர்கண்டு அவமதிப்பாரகுளின்னும் பயத்தாலுஞ் சந்தர்ப்பம் கேரிடாமையாலும் பதிபக்திசெய்பவர்களாகக் காணப்படுகிறார்கள். மாதர்கள் தக்கனென் னும் தகாதவனென்னும், வாலிபனென்னும் முதியோனென்னும், அழகின

னென்னும் குருபியென்னுங் கருதார்கள். கணவனுகிறதை மாத்திரம் திருப்தி கரமாகக் கொள்வார்கள். பயம் - தயை - செல்வம் - உணவு - தாய் - தந்தையர் - கணவன் இவர்கட்களுக்கியும் கணவனுக்குச் சுவாதீனப் பட்மாட்டார்கள். நல்லகுலஸ்திரீகளும் ஆடையாபரணங்களே யணிந்து மனவிருப்பின்படிதிரியுந் தாழ்குலப்பெண்களுக்குச் சமானமாக நடக்க விரும்புகின்றார்கள். கணவன் அதிக அன்போடுநடத்தி வருவானுயினுங் கூனன் குருடன் மொண்டி முடவன் குருபி முதலிய அன்னிய புருஷரையே விரும்புவர். மாதர்கள் மனம்விரும்பாத ஆடவனே உலகத்திலில்லை. மாதர் தமக்குப்பராபுருஷர் கிடைக்காதபக்ஷத்தில் தமது சிருங்காரசேஷ்டைகளால் அவர்களே ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளுவார்கள். புருஷர்தாம் விரும்பியபடி கிடையாமையாலும் பந்துமித்திரர்க ளுணர்ந்தால் கண்டிப்பார்களென்னும் பீதத்தினாலும் பயந்திருக்கிறார்களன்றிச் சத்தியத்திற்குப் பயந்து நடக்கிறதில்லை. ஸ்திரீகள் மாதத்தின் இலேபோலவும் சமுத்திரத்தின் அலேபோலவும் அலேயும் மனமும், சமுத்திரத்தின் ஆழத்தினேப்போலக் கண்டறியப்படாத மன ஆழமுமுடையவர்கள். எவ்வளவு விறகினுலும் திருப்திபடையாத நெருப்புப்போலவும், எவ்வளவு நதி ஜலங்களாலும் நிரம்பாத சமுத்திரம்போல்வும், எவ்வளவு பிராணன்களாலும் பூர்த்தியடையாத இயமபுரம்போலவும், எத்தனே புருஷர்களேயடைந்தபோதினும் திருப்தியடையமாட்டார்கள். தேவருஷியே ! மற்றொரு இரகியமுள்ளது அதனேயுஞ் சொல்லுகின்றேன் : சுந்தரமான புருஷனேக் கண்டவுஸ்திரீயின் குறியானது திரவிக்கின்றது. ஸ்நானம்செய்து ஆடையாபரணுலங்கிருதனாக எதிர்போந்த விடபுருஷனேக் கண்டவளுக்குக் காமரசமானது தானே பிரவாகிக்கின்றது. இச்சித்த பொருள்களேயெல்லாங் கொடுப்பவனுயினுந் தன் கணவனிடம் மனம்விரும்பி நில்லார்கள். ஆடை ஆபரணம் மலர்வாசனேத் திரவியம் முதலியவற்றை அவாவடங்கக் கொடுப்பினும் காமத்தில் திருப்தியடைவதுபோல அவற்றைப் பேற்றுத் திருப்தி யடையமாட்டார்கள். அந்தகன் சமனன் ம்ருத்யு பாதாளம் வடவாக்கினி வாயின்முதலிவிஷம் இருஷ்ணசர்ப்பம் பிரளயாக்கினி இவற்றின் குணமெல்லாம் ஸ்திரீயின் குணத்துக்குச் சமானமாகா. பிரமதேவர் பஞ்சபூத சிருஷ்டியையுண்டுசெய்தபொழுதே பாவங்களேயெல்லாஞ் சேர்த்து மாதராக வுண்டுசெய்திருக்கிறார் என்றனள். இவ்வாறு கூறினள் என்றலுந்தருமமுனிவனே நோக்கி வியாஸபகவான் வினவுகின்றார்.

ஸ்வாமீ ! ஸநத்குமாரமுனிவரே ! புருஷர்கள் மன்மதனுற் பீடிக்கப்பட்டு மர்தபுத்தி யுடையவர்களாய் மேற்கூறிய துர்நடத்தைகளேயே இயற்கையாக வுடையமாதர்கட்கு எப்படி ரமிக்கிறார்கள். ஸ்திரீகளிடமும் புருஷர்களிடமும் மன்மதனேச் செயித்தவர்கள் ஒருவருமிலரென்று தெரிய வருகிறது. மாதர்களே மணஞ் செய்துகொள்கையில் "எல்லாவிதத் தர்மங்களே யநுஷ்டிக்கவேண்டும்," என்று அக்கினிசாக்ஷியாகச் சத்தியஞ்

செய்து கொள்வதனிருந்தமென்று நினேக்கின்றேன். ஸ்திரீகள் சபலபுத்தியுடையவர்களென்று வேதங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க விவாஹகாலத்திற் பதிவிரதாதர்மத்தை யநுசரிக்கும்படி சொல்லுகிற மந்திரங்களெல்லாம் உபசாரமாகத் தோன்றுகின்றதன்றி உண்மையென்று புலப்படவில்லே. இதுவிஷயத்தில் என்மனம் மிகுதியுஞ் சந்தேகமடைந்திருத்தலின் தேவரீர் கேள்விப்பட்டவகையே விசதமாக இன்னுஞ் சொல்லவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரமுனிவர் கூறுகின்றார். வியாஸமுனிவனே ! பூர்வத்தில் அஷ்டாவக்ர னென்னும் முனிவருக்கும் தீபா வென்னும் பெண்ணுக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லுகின்றேன். அஷ்டாவக்ரமுனிவர் வதான்ய னென்பவனேக்கண்டு அவனுடைய பிரபா வென்னுங்கன்னிகையுவதியும் பதிவிரதையும் கன்னடக்கையுடையவளும் ரூபவதியுமாயிருத்தலின், அவளே யெனக்கு மணஞ்செய்து கொடுக்க வெனக் கேட்க, வதான்யமுனிவன் அஷ்டாவக்ரரை நோக்கி நீர் வடதிசைக் கன்னிபைக்கண்டு வந்து மணஞ்செய்து கொள்ளென, அஷ்டாவக்ரர் வடதிசையிலெவ்வாறுசென்று எங்கடைந்து யாரைக் காணவேண்டும்? எனக்கேட்க, வதான்யர் சொல்லுகின்றார்: நீ இமாசலத்தை யடைந்து குபேரலோகத்தைத்கடந்து சித்தசாரணர் வசிக்கும் உருத்திர லோகத்தைக் கடந்து சென்றால், நீர்கொண்டேகம்போலக் கருமையாய்ப் பசும் புல்லேயுடைய மிலேச்சமான வனமொன்றினைக் காண்பாய்; அவ்வனத்திற் பெருந்தவமுடையவளாய்ப் பேரழகியாய் நிகரற்ற யுடையவளாய்விளங்கும் ஓர்ஸ்திரீயிருப்பாள். அவளே நீ அவசியம் பார்க்கவேண்டும். நீர் அவளேக்கண்டு திரும்பி வருவீராகில் என்பெண்ணே மணஞ்செய்து கொடுக்கத்தடையில்லே. நீர்சத்தியத்தவறுமல் அவ்விடத்திற்குப் போய்வரவேண்டுமெனக் கூற, அஷ்டாவக்ரர் அப்படியே நீர் கூறிய விடத்திற்குப்போய் அவளேக் கண்டுபேசிவருகின்றேன். நீர்மாத்திரம் சத்தியந் தவறுமல் தம்பெண்ணே மணஞ்செய்விக்கவேண்டும், என்றுகூறி, அங்கிருந்து புறப்பட்டு, சித்தசாரணர்கள் வசிக்கும் இமாசலத்தைத்தாண்டி, சர்பாவங்களேயு மொழிக்கும் பாஹுநதியென்னு நதியைக்கண்டு விதிப்படி அதில் ஸ்நானஞ்செய்து அநுஷ்டானமுடித்து, அன்று அவ்விடத்திருந்து மறுநாள் உதயத்தில் அங்கேயே ஸ்நானஞ்செய்து உருத்திராணி கூபத்தில் மூழ்கி அங்கீகாரகரிருந்து மறுநாள் கைலாயத்தை நோக்கிச்செல்லுகையில், யக்ஷர் குய்யகர் முதலானுர் வசிக்குந் தீரத்தையுடைய மந்தாகினி நதியில் ஸ்நானஞ்செய்து அதன்கரையிலிருந்து அநுஷ்டானஞ் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கிருந்த யக்ஷர்கள் அவனேநோக்கி ஐயா ! எங்கள் தலேவனுன குபேரன் உம்மைக் காணவருதலின் நீர்சிறிதுநேரம் இங்கிருக்கவேண்டுமென, அஷ்டாவக்ரர் அவ்வாறேயிருந்தனர். குபேரன் அவ்விடம்வந்து முகில்களிப்படி நூசித்து, ஸ்வாமீ ! தேவரீர் என்பட்டணத்திற்கு வந்து என்னுரை செய்யப்படும் பூசையை அங்கீகரிக்கவேண்டுமென, அஷ்டாவக்ரரினங்கி அவனுடன் அளகாபுரியையடைந்தனர். குபேரன் அம்முனிவனே

அர்க்கிய பாத்திரதிகளாலுபசரித்துத் திவ்வியாசனமுதலி, மதுபர்க்கங் கொடுத்து உபசரித்தனன். முனிவர் குபேரனை உட்காருக. வெனக்கூற, குபேரனும் அவனுடனிருந்த பரிசனர்களாகிய யக்ஷர்களும் உட்கார்ந்தனர். அப்பொழுது குபேரன் ஸ்வாமீ ! என்னிடத்திருக்கும் அப்சரசுகளை நாட்டியஞ்செய்ய உத்தரவுகொடுத்தால் நடிக்கச்செய்வேன். நீர் சற்றே தாமதிக்கலாம் எனக்கேட்க, முனிவர் இணங்கினர். அதனால் கிருதாசி மிச்ரகேசி ஊர்வசி அரம்பை அலம்புசை விசுவாசி சுகேசி கமுகிஹாசினி முதலிய அப்சரசுகள் வீணை வேணு மிருதங்கமுதலிய வாத்தியங்களோடும் பாடல்களோடும் நர்த்தனஞ்செய்தார்கள். அந்த ஆகந்தத்திலேயே தேவ வருஷம் ஒன்று கழிந்தது. அதுகண்ட குபேரன் அஞ்ஜலிபஸ்தனாய் இவ் வளவு காலங்கழிந்ததென்று விண்ணப்பித்து இனியான் யாது செய்யத்தக்கும்? எனவினவ, அஷ்டாவக்கர் குபேரனை நோக்கி நான் உன்னால் விசேஷமாகப் பூசிக்கப்பெற்றுப் பெருஞ்சந்தோஷத்தையடைந்தேன். இனி என் விருப்பின்படி செல்லலிடை யளிக்கவேண்டும் எனக்கூறி அவனது விருப்பையடைந்து புறப்பட்டு வடதிசைநோக்கி, கைலாயம் மந்தரம் ஹேமம் ஹரபர்வதம் இவற்றைப்பார்த்துச் சாஷ்டாங்கமாகப் பணிந்து மேலும் வடதிசைநோக்கிச்சென்று, சமபூமியாயும் மனோஜ்ஞமாயும் புண்ணியபூமியாயும் விளங்கும் ஒருவனத்தைக் கண்டார்.

வியாஸமுனிவனே ! இரத்தினமயமான பர்வதங்களும் இந்திரநீல முதலியரத்தினங்களாற் படிக்கட்டுகட்டியதாமரைத்தடாகங்களும்சுவர்ணமயமான விருக்ஷங்களும் வைடூரிய மயமான புல்லுகளும் சுவர்ணமயமான பறவைகளும் அழிர்தமயமான ஜலத்தையுடைய நதிகளும் நிரம்பியவவ்வனத்திற் பார்ப்பதற்கு அரியற்புதமான ஓர் ஆச்ரமத்தைக்கண்டனர். அத்த ஆச்ரமத்திற் சந்திரமண்டலத்தைப்போல வெண்ணிறமாயும், வச்சிரத்தாற் நிம்பங்களும், வைடூரியத்தால் தூண்களும் சந்திர காந்தத்தாலி ழைத்த சுவர்த்தல்களும், நீலக்கண்ணாடிகள் கட்டப்பெற்றுள்ள அறைகளும், பொற்கலசங்களும், ஸ்படிகத்தினாற் சாளரமும், முத்தாற் செய்யப்பட்ட திரைகளும், வச்சிரத்தாற்செய்த தளவரிசையும், கோடி சூரியோதயம்போன்ற வொளியும், தேவர்கள் சஞ்சரிக்கும் பலவித விமானங்களும், முத்துத்தோரணங்களும் உண்டைய ஓர்வீட்டினைக்கண்டு, அதின் வாயிற் படிவ்வையடைந்து நானெப்படி உள்ளே செல்லலாம் ? என்னை அநதியென்று யாவர் உபசரிப்பர் ? என்று கருதி நின்றுகொண்டிருக்கையில், நானாவித ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட வழுகன்னிகைகள் உள்ளேயிருந்து வெளிவந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் சமானமான அழகும் ஆபரணமும் யௌவனமும் இரதி தேவியைபோன்ற வடிவுமுடையவர்கள். அவர்கள் வனைக் கைகூப்பி, ஸ்வாமீ ! தேவரீர் எங்கள் இகத்திற்குள் வரவேண்டுமென்று பிரார்த்திக்க, தங்கக்கொடிபோன்ற அம்மாநர்களின் வினாகானம்போன்ற வொலியால் தம்மை யழைத்ததற்காகமகிழ்ந்து ஆச்சரியத்

துடன் உள்ளேசெல்ல, அவ்விடத்தில் ஓர் சப்ரகூட மஞ்சத்தின் பேரில் நிர்மலமான வஸ்திரமணிந்து சர்வாபரண பூஷிதையாய், திவ்வியமான பேரழகுடன் மின்னற்கொடிபோல விளங்கும் ஒருகன்னிகையைக் கண்டனர். அக்கன்னிகை அவரைக்கண்டவுடன் துண்ணென்றெழுந்து நமஸ்கரிக்க, முனிவர் ஆசீர்வதித்தனர். அவள் அவருக்குத்திவ்யமான ஆசனங் கொடுத்திருக்கச் செய்தனள். அப்பொழுது அஷ்டாவக்கிரர் அவர்கள் என்மனையும் நோக்கி, பெண்களை ! நான் சிரமபரிகாரஞ் செய்துகொள்ள வேண்டியிருத்தலின் உங்களில் மனஞ்சலியாதவள் யாரோ அவ்வகைய ஒருத்தி மாத்திரஞ் சிறுதுநேரம் என்னிடம் பணிவிடைசெய்ய இவ்விடத்திருக்கலாம் : ஏனையோர் தங்கள் இருப்பிடமாகிய அந்தப்புரத்தை யடையலாமென்றனர். அதனைக்கேட்ட அவ்வனிதையரில் எழுவர் அஷ்டாவக்கிரமுனிவரைப்பணிந்து அந்தப்புரமடைந்தனர். முனிவர் ஆங்கோர் சயனத்திற் படுத்துக்கொண்டனர். அருகிருந்தகன்னிகை மனச்சலிவின்றி அகந்தவிநயமாக வுபசரித்தனள். அப்பொழுது அம்முனிவர் தனக்கு ஊழியஞ் செய்பவளை நோக்கி, பெண்ணை ! இரவுவந்தது, இனி யாதும் நித்திரை செய்யவேண்டும், நீயும் நித்திரைசெய்ய வேண்டுமாதலின், நீ வேறுபடுக்கையிற் படுத்துறங்குகவென, அவள் அப்படியே யாகுகவென்று கூறி, மற்றோர் படுக்கையிற் சிறிது நாழிகை படுத்திருந்து, நித்திரை யடையாமல், குனிருகின்றதென்றோர் பொய்க்நித்தங் காட்டி, அஷ்டாவக்கிரருடைய சயனத்தை யடைந்து அவர் பக்கலிற் படுத்துக்கொண்டு என் சமீபத்தில் வாரும், எனக்குக் குளிருகிறது என்று அவரை யிறுகத்தழுவி யாலிங்கனஞ்செய்து கொண்டனள். குஷியோ மரம்போலுங் கல்போலுஞ் சலனமற்ற மனமுடையவரா யிருந்தனர். அந்தப்பெண்ணினள் அவர் மனங் கலங்காமையால் துக்கித்து மன்மதபாணங்களால் வருந்தி, பிராமணரிஷே ! புருஷர்களுக்குக்காட்டிலும் மாதர்களை காமவிஷயத்தில் தைரியசாலிகளென் பார்த்தீர். நீர் என் விஷயத்திற் தயவுசெய்யாதிருப்பதற்குக் காரணம் யாது ? காருண்யமோகித்து உம்மிடம்வந்தேனதலின் என்னை மனவிருப்பத்துடன் ஆலிங்கனஞ்செய்து சந்தோஷித்து, என்னையுஞ் சந்தோஷிப்பிக்கவேண்டும். அநேககாலம் உடல்வருந்தித் தவஞ்செய்து பெறுவேண்டிய சுவர்க்கசுகத்தை யான் இப்பொழுதே கொடுக்கிறேன். இதனால் உம்முடைய தவம் குறைபடமாட்டாது. என்னேத்திருப்தி செய்யும்பசுத்தில் சகல சுகங்களையுந் தடையின்றிப்பெறுவீர். என்னிட்டையுஞ் செல்வப் பெருக்கையும் பாரும். நீரே இவற்றிற்கெல்லாம் யஜமானனுவீர். இவ்விருவகங்களின் அமிர்தமயமானபலங்களைப்புசித்து ரமணியமான வாவிகூபதடாகங்களிற் கிரீடித்து, யாதும் என்னோழிகளுஞ்செய்யும் விநோதனத்தாற் களித்துச் சந்தோஷித்திருக்கலாம். மாதர்களாகப் பிறந்தோர்க்குப் புருஷசுகத்தைக்காட்டிலும் வேறுசுகமில்லை. இதுவே தானம் தவம் முதலிய யாவுமாகும். மாதர்கள் மன்மதனாதையுற்று ஆடவரைவேண்டிப் புணர்ந்தால் அதனைப் பாவஞ்சாப்பணியாது. ஸ்வயமாக ஆலிங்கனஞ்செய்ய

வந்த மங்கையின் சுகத்தைக்காட்டிலுஞ் சிறந்தசுகம் மற்றொன்றுமில்லை. இதனை நீர் இழந்துவிடவேண்டாம் என்று பலவாறுகூற, அவளைநோக்கி அஷ்டாவக்கிரர் கூறுகின்றார்.

ஸுந்தரவதியே! பரதாரங்களை யான்கையாற் பரிசிக்கவும் மாட்டேன். அன்றியும் யான் மணஞ் செய்துகொள்ள விருப்புற்றிருக்கிறேன். மாதர் முபக்கம், புத்திரப் போற்பினைக் கருதியே செய்யத்தகுமென்று தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன வாதலின், யான் மணவினைமுடித்துச் சத்புத்திரைப்பெற்று உயர்பதவியைச் சம்பாதிக்கப் போகிறேன். இந்த நியாயத்தைச் சத்திய மென்றுணர்ந்து உனக்கு என்னிடத்திலுண்டான ஆசையை யொழிப்பாயாக வென்றனர். அதனைக்கேட்ட அவ்வரிவை ஓ மகருஷியே! வாயு அக்னி வருணன்முதலிய தேவர்கள் ஒன்றுகூடினும் பதிவிரதாதர்மத்தைப் பாராட்டவேண்டுமென்று சொன்னபோதினும், மாதர்கள் மன்மதாவஸ்தையை நீக்கவேமாட்டார்கள். அவர்கள் என்றும் போகத்திலேயே விருப்பமுடையவர்கள். ஸ்திரீகளில் மேலுக்குப்பதிவிரதையாகக் காணப்படுபவள் ஆயிரத்திலொருத்தியும், வாஸ்தவத்தில் மனமொழி மெய்களாலும் பரபுருஷகமனஞ் செய்யாத உத்தமியோ லகூத்திலொருத்தியுங் கிடைப்பது துர்லபம். ஸ்திரீகள் காமமிருப்பமுற்ற பொழுது தமது தாய்வழி - தந்தைவழி - பெற்றோர்கௌரவம் - சகோதரனுடைய கன்னியம் - கணவனுடைய நல்லொழுக்க வாசாராதிகள் முதலியவற்றைக் கனப்படுத்துவது கருதாது, நதிகளோடுகையிற் கரையை யிடிப்பதுபோலத் தமது குலாசாரமுதலியவற்றைக் கெடுத்துவிடுவார்கள். உலகத்திலுள்ள தோஷங்களை யெல்லாஞ்சேர்த்துப் பெண்ணுருவாகச் செய்த பிரமதேவர் அவர்களுக்குரிய தோஷத்தைச் சாமானியமாகச் சொல்லினர் எனக்கூறினள். அதனைக்கேட்ட அஷ்டாவக்கிரர் பெண்ணே! யான்செய்ய வேண்டுவதாக நீயாது விரும்புகின்றனை? என, அவள் நீசென்னேடுகூடிச் சிலதுகாலஞ் சுகமநுபவிக்க வேண்டுமென்றனள். அப்படியே யாகுகவென்று முனிவர் அவளைக்கண்களாற் கண்டு, விருத்தையாகி ஒன்பேர்வயவங்களுங் கண்களுக்கு ரமிக்காதனவாகி விளங்குதலின், இவள் இவ்வீட்டிற்கு யஜமானியாகவும், சாபத்தினால் இவ்வகை புருஷத்தவளாகவு மிருக்கவேண்டுமென்று கருதி, இவளுக்கிவ்வகைய சாபவிர்தகாரணத்தை யறியவேண்டுமென்று ஞானதிருஷ்டியால் கோதிக்கொண்டிருக்கையில், சுந்தியாகாலஞ் சம்பவிக்க, அத்தன்றியாளவள் முனிவரே! அநுஷ்டானத்திற்கு எழுந்திருக்க வேண்டுமெனக் கூற, முனிவர் எனக்கு ஸ்நான ஜலம்வேண்டுமென, அவள் உடனேசென்று, ஓர்குண்டுவள்திரமும் நிர்மியமான தயிலமுங்கொண்டுவந்து, அவருந்திரவு பெற்று உடல்முழுவதும் பரிசித்துத் தயிலமிட்டுஸ்நான சாலையிலழைத்துக்கொண்டுபோய், அங்கு உட்கார்த்துல்ஸ்நானஞ் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள இரத்தினமயமான பீடத்திலிருத்தி, ஸ்நானஞ்செய்வித்து, சுந்தியாவந்தனாதி

கிரியைகள் முடிந்தபிறகு, சமையல் அறையிற் கூட்டிக்கொண்டு போய் ஷட்ரஸோபேதமாய்த் தேவாமிர்தத்திற்குச் சமானமான அன்னத்தைப் புசிக்கச் செய்தனள். உடல்முழுவதுநன்றாகத் தேய்த்துஸ்நானஞ்செய்யப் பெற்று, சுகமையான அன்னம்புசித்த காரணத்தால், முனிவர் சயனத்திற் படுத்தனர். சுந்தியாகாலி விசிக்கொண்டிருந்த அன்றிரவுமுழுதும் அவருக்குத் தெரியாமலே கழிந்தது. மறுநாள் விடியலில் விழித்துக்கொண்டு இரவு கழிந்ததற்காக அதிசயித்து, அந்தமங்கையை நோக்கி யான்யாது செய்யவேண்டும்? என, அவள் முறைப்படி அன்னபானாதிகளளிக்க வண்டு பகற்பொழுதைக் கழித்தனர். அஷ்டாவக்கிரர் அநுஷ்டானாதிகள் முடித்துக்கொண்ட வுட்னே, படுத்து நித்திரை செய்யலாமென்று அவள் சொல்ல, அவ்வாறே அவர்படுக்கையிற்படுத்திருக்கையில் அவரருகேயிவள் தன் படுக்கையைக்கொண்டாள். அப்படி யருகே படுக்கையைக் கொண்டவனை நோக்கி ஏ! சுந்தரி-என்மனதாற் பரஸ்திரீகளை ஒருக்காலுஞ் சிந்தியேனையாற் படுக்கையை விட்டெழுந்து வேறெசயனங் கொள்வாய் என்று பலகால் சொல்லி அதனும்படிச் செய்ய, அவள்என்னைப்பரஸ்திரியென்று கருதவேண்டாம், நான் யார்க்குஞ் சுதந்தரியல்ல, என்னைப் புணர்வதால் உமக்குந் தருமநாசமுண்டாகாது. என்னைச் சொந்தஸ்திரியாகவே பார்க்கலாமென, அவளைப்பார்த்து அஷ்டாவக்கிரர் சொன்னகாவது: ஒருக்காலும் ஸ்திரி சுதந்தரியா யிருக்கமாட்டாள் என்றே பிரமதேவர் சொல்லியிருக்கிறனென, அதற்கு அவள், ஐயாஜ் என்னை மன்மதாக்கினி தகிக்கின்றமையால் நான் உம்முடைய பத்தினியா யிருக்க உமது பாதத்திற் சரணமடைகிறேன்; நான்பரஸ்திரியா யிருக்கிறேனென்று கருதி ஆகில் என்னைப் பரிசிக்கிரகணஞ் செய்துகொண்டு சுகமனுபவிக்கலாம், ஒருக்காலுங் தோஷஞ் சம்பவியாது. சுதந்தரியா யிருக்கின்றமையால் என்னைச் சேர்வதா லடையுந் தோஷம் என்னைச் சேருமேயன்றி உமையடையவே யடையாது. இப்படிப்பிரார்த்திக்கு மென்னை யாதரியாதுவிடுத்தால் அதனால் உமக்குப்பெருந்தோஷஞ்சித்திக்கும் என, பெண்ணே! நீ பரபுருஷரைப் பலவந்தப்படுத்தி யிணங்க வைப்பதா லாகும் பாவம் என்னைச்சேருமேயன்றி உன்னைச் சாராது, ஆகையால் நான் உன்னிடஞ் சிலகாலஞ் செய்யேன் ஒடிப்போய்விடு அன்றியும் அஷ்டாவக்கிரமுனிவர் ஸ்திரீகள் பால்ப லௌமார யெளவன வார்த்திகப்பர்வங்களிலும் சுவாதீனமுடையவர்களல்லரா யிருக்க நீ சுவாதீன முடையனென்று சொல்வது யாதபற்றி? என்றார். அதற்கவள் உத்தரமாக: நான் கௌமார தசையிலிருந்து பிரமசரிய விரதத்தை யநுஷ்டிக்கிறேன், (அதாவது நான்கன்னிகையே) நான் பரஸ்திரியென்று கருதாது, என்னைமணஞ் செய்யக்கடவீரனை, அஷ்டாவக்கிரர் நான்கையாணைஞ் செய்துகொள்ள முயன்றதாலேற்பட்ட தடையை நிவர்த்தித்துக்கொள்ள இங்குவந்தேன், அவ்வாறு வந்தவிடத்தில் நீ என்னை மணஞ்செய்து கொள்ளச் சொல்கின்றனை, யான் வேற்றூர் பெண்ணை விரும்பியுள்ளேன், அவள்யிதாவென்னைச் செலுத்

துதலால்யான் இங்குவந்தேன்; இதனால் இருவர் மனோபிஷ்டமும் நிறை வேறுவதாக வில்லை யென்றுசொல்லி, இவள் இவ்வள்வு ரூபவதியாகவிருந்தும், ஆபரணம் வஸ்திரம் முதலியவைகளிற் குறைவற்றிருந்தும், தன் னுருவம் பங்கப்பட்டிருப்பதற்குக் காரணந் தெரியவில்லை, அப்படிநாம் கலியாணஞ் செய்து கொண்டாலும் நமது பிரமசரிய விரதத்திற்குலோப மில்லாமற் சாதிக்க வேண்டுமெனத் தன்னுள் யோகித்துத் தீர்மானித் தார் என்று ஸநத்குமார முநிவர் கூறினர்.

வியாஸபகவான் ஸநத்குமார முநிவரைநோக்கி ஸ்வாமீ! அஷ்டா வக்கிரர் கொடுத்தபசியாலும், சாபங்கொடுக்கச் சக்தியுள்ளவராயிருந்தும் அந்த ஸ்திரிசெய்புந் தொந்தனைகளுக்காக என் சாபங்கொடாதிருந்தனர்? என்றதிசயித்துரைத்தனர். வியாஸமுநிவனே! நெடுநேரம் யோகித்திருந்த அஷ்டாவக்கிரர் அவளை நோக்கி உன் தேகத்திற் இவ்விதமாகிய குரூர கிழத்தனம் வந்தகாரணத்தைச் சத்தியமாகச் சொல்லென்றார். அப்படி மொழிந்த அவரது வார்த்தையைக்கேட்டு, ஓ ஜிதேந்திரியரே! இப்பூமி தேவி ஆகாயவாணியுரைய உண்மையைச்சொல்கிறேன் என்று சொல்வந்தா னள். சுவாமி! என்னை உத்தரதிக்காகிய ஸ்திரியென்றறியும்; மிருகபக்ஷி முதலியவைகளுக்கே ஸ்திரீசம்போகத்திற் பிரியமிருக்கையில் மாறுட தேகிகளுக்கிருக்கச் சந்தேகமென்னே? ஸ்திரீயின் சாபல்ய மித்தகைய தென்று நன்குயறிந்து கொண்டீரா? உமக்குப் பிரமசரியத்திலுண்டாகிய உண்மையைச் சோதிக்கவெண்ணியே இவ்விதமாகச்செய்தோம். எங்கள் திருங்கார சேஷ்டைகளுக்கண்டுஞ் சலியாத உம்முடைய இந்திரிய நிக்ர கத்தைக்கண்டு இந்திராதிதேவர்கள் சர்வலோகங்களிலுந் தடையின்றிப் போற்றுவரவுசெய்யச் சுதந்தரங்கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். நீர் எந்தவரதானமென்னும் விப்பிரது கன்னிகையை வதுவைசெய்யக் கேட்டீரோ அவரே ஸ்திரி சுபாவமித்தகையதென் றறிந்துகொள்ள எங்க ளிடம்வந்தீரென்றார். எங்களாற் பேதிக்கப்படா மனதைக்கண்டு சந்தோஷித்த தோம். நீர் கேஷமமாக வழியைக்கடந்து சென்று அந்தக்கன்னிகையை மணந்து கல்லபுத்திரரைப் பெறப்போகிறீர். நீர் சத்தியமாக வினையு படியால் இவ்விதசுகியற்கரியமுக்குப் போதித்தேன். இன்னும் என்ன கேட்கவெண்டுமென் றிச்சித்தின்றி னென, அவரைக்கண்டு, அஷ்டாவக்கிரர் அஞ்சலிசெய்துகொண்டு உத்தரதிக்காகிய ஸ்திரியே! இனி நான் உன் னிடங்கேட்க வேண்டியதென்று மில்லையென்று உத்தரவு பெற்றுக் கொண்டு, தனது சொந்தராட்டையடைந்து இரைப்பாலிப்பத்துஜனங்களைப் பூசித்து, வதான்யரென்னும் பிராமணரை யடைந்தார். அப்படித் தம்மிடம் வந்தடைந்த அஷ்டாவக்கிரரைக்கண்ட வதான்யர் நான் கூறியவிடத் திற்குப்போய் வந்தீரா? என்று கேட்க, ஓவதான்யரே! நீர் கூறியபிரகாரம் சுத்தமாதனங்கடந்து, உத்தரதிக்கிலுள்ள நந்தனவனத்தில்வசிக்கும்ஸ்திரி யைக்கண்டு சம்பாஷித்து அவள் உத்தரவைப்பெற்றுத் தங்களிடம்வந்தே

னெனக்கூறிய அஷ்டாவக்கிரர் விஷயத்திற் சந்தோஷமெய்தி, ஓ இந்திரிய நிக்கிரகஞ்செய்த சத்தியவானே! நல்லலக்கினத்திற் என்கன்னிகையை விவாகஞ்செய்து சந்தோஷிக்கக்கடவாயென்று சொன்னவதான்யருடைய சம்மதத்தால் அதிசயந்தரியவதியான அவர் பெண்ணை மணஞ்செய்து களித்தார். ஆகையால் வியாஸமுநிவனே! ஸ்திரிகளது சுபாவமித்தகையது. இலட்சம்பேர்களில் ஒருத்திதான் பதிவிரதையாயிருக்கக்கூடும், அவர்கள் பேரை ஸ்மரித்தமாத்திரத்திற் சர்வபாவங்களுமொழியும். அஷ்டாவக் கிரரைப்போன்ற புருஷர்களைப்படிவதுந் துர்லபம். ஆகையால் இம்மகாத் மியத்தையெவர்கள்படித்தாலுங்கேட்டாலும்சர்வபாவங்களையுமொழித்த ஸ்திரிகளாயின் பதிவிரதைகளாயும், புருஷர்களாயின் இந்திரியநிக்கிர மடைந்தவர்களாயும் வாழ்வார்கள் என்று ஸநத்குமாரமுநிவர் கூறினர்.

ஸ்திரீகளின் ஸ்வபாவமுணர்த்தது

முற்றிற்று.

நாற்பத்துநான்காவது

அருந்ததியின் கற்பியல்புனைத்த அத்தியாயம்.

ஸநத்குமார முநிவர் வியாஸமுநிவரை நோக்கி, பூர்வம் வசிஷ்ட முநிவர் மனைவியாகிய அருந்ததி, அந்தஸ்திரீகளின் இயற்கையைப்பற்றிக் கூறியதையுஞ் சொல்லுகிறே னென்று சொல்லத் தொடங்கினர். ஒரு காலத்தில், இந்திரன் சூரியன் அக்கினி இம்மூவரும் தங்களைப் பூலோ கத்தில் விசேஷமாகப் பூசிப்பதற்கு நாற்வகை யாச்சிரமங்களிற் பிரகஸ் தர்ச்சிரமமே சிறந்தது. இல்லறத்திற்கு மனைவி குணவதியாயும் பதி விரதையாயு மிருக்கவேண்டும். பிராமணர் மற்றமூன்று வருணத்தோரும் பூசிக்கப்படுவதுபோல நாம்மூவரும் இல்லறத்தாராற் பூசிக்கப்படுகிறோம்: கம்மைப்பூசிப்பதால் திரிமூர்த்திகளைப்பூசைசெய்த பலனைப் பெறுவார் கள். அதனால் இகலோக சுகத்தையும் பரலோக சுகத்தையும் அடைவார் கள். ஸ்திரீகளிடத்தில் அசத்தியம் சாஹசம் மாயை மூர்க்கம் லோபம் ஆசாக்குறைவு கலையின்மை முதலிய துர்க்குணங்கள் சுபாவமா யிருப்பினும், அதனையொழித்தவர்களும், இல்லறதருமத்தைச் சரியாக நடத்திய பிராமணரை சதுர்வருணத்தவர்களும், முறைப்படி அரசுசெய்த மன்னர்களுக் தெவர்களுக்குச் சமான மாவார்க ளென்று யோசித்து, அம் மூவரும் மாதர்களுடைய பதிவிரதைத்தன்மையைப் பரிசோதிக்க விரும்பி அருந்ததியிடஞ்சென்றனர். கணவனையே தெய்வமாகப்பாவித்திருக் கிற் அருந்ததி, ஜலங்கொண்டு வரும்படி பாத்திரத்தை யெடுத்துக் கொண்டு செல்லுகையில் எதிர்கண்டிகிற்க, அருந்ததி அவர்களைத் தேவ னென்றுணர்ந்து மரியாதைசெய்து தாங்கள் இங்கு எண்ணாடுவந்த காரண மென்ன? எனக் கேட்க, சூரியன் இந்திரன் அக்கினி யென்னும் மூவரும்

யாங்களுன்னை யொன்றுவினவ விரும்பி வருகின்றோம் என, அருந்ததி தேவர்களே! நீங்கள் வினவுங் கேள்விக்கு விடையையும், மாதர்களிபற்றை யையும் யானே ஜலங்கொண்டுவந்த பின்னர் சொல்லுகின்றேன். தாங்கள் எனது பர்ணசாலையின்றும் வழிநடந்த ஆயாசத்தை யகற்றுங்கள்ளன, தேவர்கள் நீ ஜலத்திற்குச் செல்லவேண்டாம். நாங்கள் அந்தக்குட்டத்தை யிங்கேயே சிருப்பிவிடுகிறோம், எங்கள் வினவுக்கு விடைதந்து எங்களை மோசவி லனுப்ப வேண்டுமென, அருந்ததி ஆயின்அவ்வாறே யாகுகவென, அவர்களில் இந்திரன்—ஜன்மத்தினுல் பிராமணனிடத்தில் எனக்குப் பயமில்லாததும், தவம் பிரமசரியம் அக்னிஹோத்திராதி அறவிடானங்கள் என்பதனியை ஒருவன் அடைவதும் சத்தியமாயிருந்தால் அந்தச் சத்தியத்தால் இக்குடம் காற்பங்கு ஜலம் நிரம்பக்கடவது—என்றும், அக்னி—யாகம் பிதுர்சிரார்த்தம் இவற்றைக்காட்டிலும் அதிதியைப் பூசித்து அன்னமளிப்பதில்யான் திருப்தியடைவதுசத்தியமாயின் அதனால் இது இன்னுமோர் காற்பங்கு ஜலம் நிரம்பக்கடவது என்றும்—சூரியன்—நாடோறும் என துதயத்தில், மந்தேஹாள் என்னுமிராக்கதனை வேதியர் செய்யும் அர்க்கியப்பிரதானமாகிய பிரமாஸ்திரம் நீக்குவது சத்தியமானால் இன்னுங்காற்பங்கு ஜலம் நிரம்பக்கடவது என்றும் கூறினர். அவற்றைக்கண்ட அருந்ததி—இரகசியஸ்தானமும் இதர புருஷசம்போஷணையுங் கிடைக்குமெல்லையும் ஸ்திரீகள் பதிவிரதைகளா யிருக்கிறார்கள் ஆதலின் ஸ்திரீகளை அதிசாக்கிரதையாகக் காக்கவேண்டும். இது சத்தியமாயின், இதனால் இன்னுங்காற்பங்கு ஜலநிரம்பிப் பூரணகும்பமாகக்கடவது என்றனள். இவர்கள் சொல்லியபடியே குடம் சிறிதுசிறிதாக முழுவதும் நிரம்பியது. அதனைக்கண்ட தேவர்கள் அருந்ததியை நோக்கி, பதிவிரதாரத்தினமே! ஸ்திரீகளுடைய மனோபாவத்தைப் பரிசோதிக்க வந்தோம்; நாங்கள் போகிறோம்; மாதர்களிலேயும் உத்தமர் மத்திமர் அதமரென மூன்றுவகையினராக விருக்கின்றனரென்று கூறித் தமதிருக்கையை யடைந்தனர்.

வியாஸமுனிவனே! இன்னும் அருந்ததியின் சரித்திரத்தையும், விவாககாலத்தில் அருந்ததியைப்பார்க்கும் காரணத்தையும், அருந்ததி யைப்பரீக்ஷிப்பதனால் வரும் பலனையும் உனக்குச் சொல்லுகின்றேன். மூன்றுயுகாலத்தில் அக்னிதேவன் ஸப்த ருஷிகளின் மனைவியர்பேரில் மோகங்கொண்டவனுகித் தன்புற்றுக் காமாக்கினியாலே தகிக்கப்படுவதைகண்ட அவன்மனைவி ஸ்வாஹாதேவி தன் பதிவிரதாதர்மத்தால் அந்த முனிமங்கையர் வடிவம் ஒவ்வொன்றுக வகித்துத் தன்கணவனைத் தழுவி அவனுக்குச் சுகங்கொடுத்து வருகையில் அருந்ததி நீங்கிய மற்றை அறுவரருவெடுக்கச் சாத்தியப்பட்டனள். அருந்ததியின் வடிவத்தலக்ஷணமாமைகண்டு பெரிதும் அதிசயித்து அவ்வருந்ததியைக்கண்டு பதிவிரதாசிரோன்மணியே! உலகத்தில் அதிகஸ்திரீகளைக்காண்புறுகிறேன்.

உன்னைப்போன்ற பதிவிரதையைக் கண்டதேயில்லை. நான் சர்வதேவர்களுக்கும் முகமாயிருக்கிற அக்கினிதேவனுக்குப் பாரியையாயிருந்தும், காமரூபங்களைத் தரிக்கச் சக்தியுடையவளாயிருந்தும், உன்னுடையவடிவத்தை யெடுக்க எனக்கே சக்தியில்லாவிடின் பிறரொருவர்க்குச் சாத்தியமாகுமா? நீயே உத்தமி. ஆகையால் எத்த ஸ்திரீகள் விவாஹகாலத்தில் அக்னிப்பிராமணபக்ஷத்திரசந்நிதானத்தில் உன்னைத்தரிசித்து ஸ்மரிப்பார்களோ அவர்கள், சுகத்தையும் தனத்தையும் புத்திரசம்பத்தையும் பெற்றுப் பதிமதியராய் வைதவ்யமில்லாமல் பூலோகத்திற் தமதுவாணுளைக் கழித்து உன்னைப்போலக் கீர்த்தியடைந்து புண்ணியலோகத்தை யடைவார்கள் என்று அதுக்ரஹித்தனள். இதனால் அருந்ததிதேவியின் பிரபாவமும், வசிஷ்டாதிவர்கள் அருந்ததி தரிசனஞ்செய்யுங் காரணமும் அறிந்து கொள்ளலாயிற. இத்தச் சரித்திரத்தைப் பக்தியோடுகேட்டவர்கள் ஸ்திரீகளாயின் அருந்ததிபோலப் பதிவிரதாதர்மத்தையும் புருஷர்களாயின் இந்திராதி தேவர்போலக் கீர்த்தியையும் பெற்று இல்லறத்தை யதுபவித்து இறுதியிற் சிவபதவியை யடைவார்கள் எனக் கூறினர்.

அருந்ததியின் கற்பியல் புனைத்தது

முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது

சாவித்திரியின் சரிதமுரைத்த அத்தியாயம்.

ஸூதமுமாமுனிவர் வியாஸமுனிவனைநோக்கிச் சொல்லுகின்றார்! வியாஸமுனிவனே! கற்பின் சிறப்பினைப்பற்றி மற்றோர் உபக்கியாசஞ் சொல்லுகின்றேன் கேட்பாயாக. பல்லவங்களை நிறைத்தோங்கிய மத்திர தேசத்தில் மநுமுறைப்படி செங்கோல்செலுத்து மன்னனுகிய அச்வபதி என்போன் நெடுங்காலம் புத்திரப்பேறின்றிச் சாவித்திதேவியை உபாசித்து அவளைப் பிரத்தியட்சமாகத் தரிசித்துத் தாயே! எனக்குச் சக்ததி விருத்தியுண்டாகும்படி யதுக்ரஹஞ் செய்யவேண்டுமெனப் பிரார்த்திக்க, சாவித்திதேவி மன்னனே! உன்கோர் புதல்வியுண்டாவளென்று வர முதவினள். அதனைப்பெற்ற மன்னவன் மனமகிழாது மீண்டும் பிரார்த்திப்ப நீ யவளாற் பலசெல்வங்களுமடைவையென்று கூறி அந்தர்த்தானமாயினள். சிறிது காலத்திலவன் மனைவி ஓர் புத்திரியைப்பெற அச்வபதி அவளுக்குச் சாவித்திரியென்று பெயரிட்டு வளர்த்து வந்தனன். அந்தச் சாவித்திரி அவையங்களெல்லாம் நன்றுப் அமையப்பெற்று மங்கைப் பருவமுற்றனு கண்டு, அவளுக்கு மணவினை முடிக்கத்தக்க கணவனைத் தேடுவதில் மன்னவன் கவலைகொண்டிருக்கையில் நாரதமுனிவர் ஆங்குற, அவரைப்பூசித்துத் தன்மாளிகையிற் கொண்டுபோய்த் திவ்யாசனத்திருத்தி, தன்புதல்வியை வருவித்து அவருக்குக்காட்டி, முனிபுங்கவரே! என்

தவப்புதல்வியாகிய இக்கன்னிகைக்குத் தக்க மணமகனை யடையப்பெறுதல் வருந்தின்றேனென்று விண்ணப்பித்தனன். அதைக்கேட்ட நாரத முனிவர் அரசனே! நீ பெற்ற அரும்புதல்வியை உன்மனக்கருத்தின்படி மணஞ்செய்து கொடாது அவள் விரும்பியவரனை மணமுடிப்பிக்கவேண்டு மென்றுகூறிச் சாவித்திரியின் கருத்தைக்கேட்க, அவள் "சாலவேந்திய மன்னனுகிய சத்தியவானென்றவனை மணஞ்செய்ய விரும்பினனென்றனள். அதனைக்கேட்ட அரசன் நாரதமுனிவனைநோக்கி ஸ்வாமி, அச்சத்தியவானுடைய குணானுபவங்களெத்தகையின? எனக்கேட்க, எல்லாமறிந்த நாரதமுனிவர், அவன் பரிசுத்தன், சொற்றவறாதவன், கரும்புவில்லினையுடைய மன்மதனினியரத்தன், எல்லாவகையினுஞ் சிறந்தவன் ஆயினும் ஆயுள்காலம் ஓராண்டையுள்ளவன் எனக்கூற, அசுவபதிராஜன் தன்புத்திரியின் முகத்தைப்பார்த்து மகளே! நீ திருகாலஞான முணர்ந்த பிரமபுத்திரர்களிய நாரதமுனிவன் கூறியவார்த்தைகளைக் கேட்டனையா? அன்றியும் அவன்பிதா இராஜ்யத்தைச் சத்துருக்களுக்கிழந்து மனைவியையும் புத்திரனையு முடன்கொண்டு வனத்தில் வசித்தனன். இவற்றையெல்லாநோக்கினுபாதுன்னியவனுக்குக்கொடுக்கினும் அவன் ஒருவருடமே உயிர் வாழ்வானென்னில் அதனைக்காட்டினும் வேறேர் தின்பமுளதா? ஆதலின் நீ வேறேர் காயரனை வரிப்பாய் எனக்கூற, சாவித்திரிகூறுவாள். எந்தையே! பலமாதர்களால் அம்மன்னனது சிறப்பைக்கேட்டு அவன் மேல் ஆசைகொண்டேனல்லதலால், பிறனெருவனை நான் மணஞ்செய்யேனென, அருகிருந்த நாரதமுனிவர் அரசனே! இவள் கற்பிற்சிறந்தவளா யிருப்பனாதலின், தன் கணவனுயிரைப்பெருக்கி விதியினைவெல்லுவள்; நீ அவள் கருத்தின்படியே மணஞ்செய்து கொடுக்கலா மெனக்கூறினதால் மன்னவன் மறுக்காது இசைய, முனிவர் ஆசீர்வதித்துத் தன்னிச்சைப்படி சென்றனர். அதன்பின்னர் அசுவபதி தன்மனைவியாகிய மாளவியோடும், புத்திரியாகிய சாவித்திரியோடும் ரதாரூடனுய் நீரதவன்தையடைய, அங்கிருந்த சாலவேந்தசத்தியவான் எதிர்க்கொண்டனன். அவ்வரசரிருவரும் ஒருவரையொருவர் தழுவிக் குசலம் விஞவியபின்னர் அச்வபதி, என்மகள் சாவித்திரி நின்புதல்வனை வரித்தனளதனின் காரணம் வினவுங்குற்றனன் என்றனன். அதைக்கேட்ட சாலவமன்னன் நினைவழிந்தலின் துக்கிக்க அசுவபதி அவனைத்தேற்றிப் பிராமணர்களைக்கொண்டு திய சுப்முகூர்த்தத்தில் மணவினைமுடிப்பித்துத் தன்புத்திரிக்கு பசுவி, ஆடை, ஆபரணம், பொன், பணிப்பெண் முதலியன குறைவற வளித்துத் தன்னகரமடைந்தனன். சாவித்திரியோ கற்பிலருந்ததிபோலத் தன்கணவனுக்குப் பணிவிடைசெய்தும், மாமன்மாமிகளை விசேடமாக உபசரித்தும் வந்தனள். இவ்வாறிருக்க நாரதமுனிவர் கூறியபடி வருடம் ஒன்றும் தினங்கள் நான்குங்கழிந்தன.

வியாளமுனிவனே! சாவித்திரியானவள் உமாதேவியினை நோக்கி, தன்கணவனுயுள் விருத்தியினைக்குறித்து விரதமிருந்தாள். அச்சமயத்தில்

சத்தியவான் வனத்திற்கேக விருப்புற்றனுதலின் மாமன்மாமி உத்தரவு பெற்றுச் சாவித்திரியுமுடன் சென்றனன். வனமடைந்த மன்னவன் மரத்திலேறிக் காய்கனிகொய்தும் திருப்பையையுறுத்தும் சமித்தையொடித்தும் மரமேறியும் இறங்கியுஞ் செல்லுகையில், சாவித்திரியும் அவன் நிழல்போலப் பிரியாது செல்ல, ஓர்மரநிழலில்வந்து மனைவியை நோக்கி, பெண்ணே! கைகால்கள் நடுங்குகின்றன, கண்கள் சுழல்கின்றனவென்று தன்சிரசை அவள் மடியில் வைத்து நிலமிசைப்படுத்தனன். அப்பொழுது வாடாத மலர்மாலையை மார்பில்நின்று பாசமுந் தண்டுங் கரத்திற்கொண்டு இயமதருமன் அவ்விடம்வந்து அவனுயிரைக் கவருந் தன்மையைக்கண்டு, தன்கணவன் தலையைத் தாயிற் கிடத்தி மனம் வருந்தாது இயமதருமனைப்பணிந்து என்கணவனுயிரைப்பிரித்துக் கவருவதென்னனைதருமன் கற்புக்கரசியே! நின்புருஷன்வாணாள்கழிந்ததாலும் அவன் நற்குணத்தலுகலாலும் யானவனுக்கு அவனுயிரைக்கொண்டேன்; பிறப்பனவெல்லாமழிவனவே. நீகற்பிற் சிறந்தவளாதலின் எனதுருவத்தை உன்னுயிரோடுகண்டனை; உன்புகழென்னென்று சொல்வேன். யான் போகின்றேன். நீதிரும்பிப்போக என்றுசெல்ல, சாவித்திரியும்பின்றொடர, உடலோடுகணவனைப் பின்றொடர்ந்த கற்பினள் ஒருத்தியுமில்லை, உன் கணவனீங்க நீகேட்கும்வரத்தைக்கொடுக்கின்றேனென, சாவித்திரி என் மாதுலன் விழிபெறுமாறருள்செய்கவென, அந்தகன் அவ்வாறே ஆகுகவென்று கூறிச்செல்ல, சாவித்திரி மேலுந்தொடர்ந்து செல்ல, காலன் உன்கணவனீங்க இன்னேர் வரங்கேட்பாயாகவென, என்மாமன்தனது ராஜ்யாதிகாரத்தை யடையுமாறருள் செய்கவென, தருமன் அவ்வாறே பிரதக்ஷிணித்துச் செல்ல, மீண்டும் சாவித்திரி விடாது பின்செல்ல, கூற்றுவன் பதிவிரதையே! உன்கணவனீங்க இன்னுமோர்வரம் வேண்டுமாயிற் கேட்கவென, சாவித்திரி என்றந்தைக்குப் புதல்வர் உளராகவேண்டுமென, அவ்வாறே தூற்றுவர் பிறப்பார்களென்று கூறி மேலுஞ் செல்ல, சாவித்திரியும் விடாது சென்றனள். இயமதருமன் சாவித்திரியை நோக்கி, பெண்பால் வனத்திற்றனித்து வருதல்நகுதியல்ல; நின்னிருக்கைக்கேகுகவென, சாவித்திரி தருமதேவனே! நல்லோர் பெரியோர்க் கன்புசெய்வது தமது நுபரங்களெல்லாம் நீங்குவதென மேலோர் கூறியிருக்க, நீயோ தருமகாயகனுகிய உன்னைத்தரிசித்துப் பணிந்து சரணமடைந்து இன்னும் மனக்குறை வற்றிருப்பது உனக்குத்தருமமா? உயிர்நீத்த உடலை யாபரண சுகந்த மலர்மாலை யாதியவற்றால் அலங்கரிப்பதுபோல என் னுடலை இனிப்பாதுகாத்து வருவதிற் பலனென்னை? என்கணவனைப் பிரிந்து நான்செல்லகில்லேன் என்றுபலவாறு துக்கிக்க, பாசத்தன் அவளது பதிவிரதா தருமத்திற்குப் பயந்தவனுகி நீவேண்டிய வரத்தைக்கேட்க வென, யான் கற்பிற்சிறியாது பலபுதல்வரைப்பெற்று என் மாமன் அவர்மனோவியோடிழந்தரசுரிமைதோலுக்குமாறுஅதற்கிசைம் பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்க, செங்கோற்கடவுள் மனமிரங்கி அவ்வாறே கைகூடுமெனக்

கடாட்சித்து மறைந்தனன். சிறிது நேரத்திற் றன்கணவன் கிடக்குமிட மடைந்து அவனியுபசரிப்பாள் போன்றிருக்க, உடனே கண்விழித்தனன். சாவித்திரி தன்கண்வனி யாவிங்கனஞ் செய்துபசரித்துத் தன் மாமன் மாமியரிடங் கொண்டுபோய், மாமன் கண்பெற்றிருக்கவும் நஷ்டராச்சிய வாபமடையவுஞ் சந்தோஷித்து, பலபுத்திரரைப் பெற்று அநேககாலம் வாழ்ந்திருந்தனள். ஆதலின், மணவினை செய்துகொள்ள வேண்டியவன் உத்தம சாமுத்திரிக லக்ஷணமும், பரிசுத்தமான வழியில் தோற்றிய தாய் தந்தையராற் பிறப்புமுடைய சிறந்த கன்னிகையை மணஞ்செய்து கொள்ளும் பக்ஷத்தில் அவன்தேவனுக்குச் சமானமாவான். பதிவிரதை யாகிய உத்தமஸ்திரீயைமணந்து பிரமசரியமுதலிய நாற்வகைபாஸ்ரமி களுக்குந் துணைநிற்கும் பக்ஷத்திலவர்கள் சிவலோகத்தில் வாழ்ந்திருப் பார்கள் என்று ஸனத்குமாரமுநிவர் கூறினர்.

சாவித்திரியின் சரிதமுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தாறுவது

மரணகாலமறிவுதுரைத்த அத்தியாயம்.

ஸனத்குமாரமுநிவர் வியாஸபகவானை நோக்கிச் சொல்லுகின் றார். வியாஸமுநிவனே! முன் பார்வதிபரமேஸ்வர ஸம்வாதத்திற் பூஜ்யப் பிரமஜ்ஞானத்தைக்கூறி வருகையில் பார்வதிதேவியார் விரும்பியபடி பிண்டோற்பத்தி முதலிய கர்ப்பாவஸ்தைகளை யுரைத்தபின்னர், அழியக் கூடிய இந்தத்தேகத்தின் முடிவுகாலத்தையும் இதனால் முக்தியடையும் வழியையும் விளக்கியருளவேண்டும். சுவாமீ! உமது பூஜாவிதிகளெல்லாங் கேட்டியற்கவுஞ் சந்தோஷித்தேன். காலசக்கரத்தைப்பற்றி யோர்சக்தேக மிருக்கிறது. காலாந்தகத்தை மாதேவர் முன்னரேயறிந்து உமதுபாதார விந்தத்திற்குப் பக்தி செய்யவேண்டுதலின், அதனைத் தெரிந்துகொள்ளக் கூடியவழியை எனக்குச் சொல்ல வேண்டுகிறேன் எனப் பார்வதி தேவியார்கேட்க, பரமேஸ்வரர் பிருதிவியாதிய பஞ்சபூதாத்மகமான சரீரத்தை பெடுத்தோர்கள், மரணக்குறியையறிந்து கீர்த்தியைச் சம்பா திக்கும்படியான மார்க்கங்களைச் சொல்லுகின்றார்.

ஸுந்தரீ! தேகமெல்லாம் வெளுத்தும், தாது, நேத்திரம் நாசிமுதலியனசத்தரூபரசங்களையறிபச் சக்தியற்றும் உள்ளவன் ஆறுமா சத்தில் மரிப்பான். எத்தச்சத்தத்தைக் கேட்பினும் அதுமிருகசத்தத்தைப் போலக் கேட்டால் அவன் ஆறுமாசத்தில் மரணமடைவான். சூரிய சந்திர மண்டலங்கள் கறுத்திருக்கக் கண்டவன் ஆறுமாசத்திலிறப்பான். இடதுகை ஏழுநாள் துடித்தாலும், சர்வாங்கங்களுந் துடித்து நாலுநாள்

காலும், அவன் ஒருமாதத்தில் உயிர் துறப்பான். நாவின்வழி வ்யாதியித்த கபங்களொழுகப்பெற்றவன் ஒருபக்ஷத்தில் இறப்பான். நெஞ்சும் வாயும் உலரப்பெறுவானுயின் ஆறுமாசத்தி லழிவான். நாத்தடித்தும் குளிர்ச்சி யாற்பல்லிலுகக்கட்டப் பெறுவானுயினும் ஆறுமாதத்திலிறப்பான். ஜலம், நெய், எண்ணெய், கண்ணடி முதலியவற்றில் தன் றேகச் சாயையைக் காணுமலிருப்பானுயின் ஆறுமாதத்திலழிவான். தன்றேகச்சாயலைக்காண விடினும், சிரமில்லாதமுண்டமாய்க் காணப்படினும், ஒருமாசத்திலிறப் பான். இதுவரை அங்கத்தைப்பற்றிச் சொன்னேன். இனி வெளிக் குறியைப்பற்றி விவகரிக்கின்றேன் என்றுசொல்வதானுர். சந்திர சூரிய மண்டலங்களைக் கர்த்தியின்றி வஸ்திரத்தால் மூடப்பட்டதுபோல மங்க லாகக்கண்டவன் பதினைந்துநாளிலிறப்பான். அருந்ததியை ஆகாயத்தில் வாகனமின்றியும், சந்திரனிடத்துக்களங்கமின்றியும், இரவில் ஆகாயத்தில் நட்சத்திரம் பிரகாசமின்றியும், மேகமின்றி மின்னலுங்கண்டவன் ஆறுமா சத்தில் இறப்பான். திக்குகளைக்கண்டு பயங்குபவன் ஆறுமாசத்தில் உயிர் துறப்பான். ஆகாயத்தில் இராக்காலத்தில் இந்திரதநுவைக் கண்டவனும் பகற்காலத்தில் விண்மீழ்கொள்ளி விழக்காண்பவனும், காகம் கழுகு முத லிய பக்ஷிகள் தலைக்குமேல் வட்டமிடக்கண்டவனும் ஆறுமாசத்திலிறப் பர். ஆகாயமார்க்கத்திற் சந்தருஷி மண்டலத்தையும் ஸ்வர்க்கமாகிய சுவாதிமார்க்கத்தையும் எவன் காணவில்லையோ, அவன் ஆறுமாசத்தி லிறப்பான். பருவம் அமாவாசியை யின்றியே சந்திரசூரிய மண்டலத்தை இராகு மறைப்பதுபோலக் காண்பவனும், திக்குகள் சுழல்க்காண்பவனும், ஆறுமாசத்தி லழிவான். நீலவர்ணமாகிய சக்கள் சாதாரண தேகத்தை மோய்க்கக்கண்டவன் ஒருமாசத்தில் மரணமடைவான். தன் சிரசில், கழுகு காக்கை மாடப்புறு முதலியன உட்கார்கண்டவன் ஒருமாசத்தினுயிர்துறப் பான். ஆகாயத்திற் கரியயானை காணப்படின் ஆறுமாசத்தில் மரிப்பான். நிறம் ஐந்தும் சுவை ஆறும் பிறழ்வுற்றுக் காணப்படின், ஆறுமாசத்தி லிறப்பான். தன்னின் முன்னையும் மூக்கின் முன்னையும் பருவ நடுவுங் காண விடின் மூன்றுமாசத்திலிறப்பான். சேற்றிடையில் மிதித்த காலின் சுவடு கிறைவற்றுத் தோன்றுமாயின் மரணஞ் சமீபித்தவனுவான். நான்குபுறக் திலும் இந்திரதநுசு தோன்றினாலும், பகலிற் கண்ணெதிரிற் பேயாடி னும் ஒருமாசத்தில் உயிர் துறப்பான். பூரித்த தேகமுடையோர் இளைத் தாலும், இளைத்த தேகமுடையோர் பூரித்தாலும் ஒருமாசத்திலெழுவர். பேய் பூதம் நரி கழுதை அசுரர் கருங்காக்கை புலி செக்காய் பருந்து குரங்கு முதலியவை தன்மேலேறவும், அவை தன்னைத் தின்னவும், அவற் றைத் தான் தின்னவுமாகிய இவற்றி லொன்றைக் கனவிற் கண்டவன், பதினைந்துதினங்களிற் பூவுலகினின்றகல்வான். குரங்கின்மேலேறிக் தெற் திசை நோக்கிச் செல்லக் கனவுகண்டவன் ஒருபட்சகாலத்தி லிறப்பான்.

ஒருவன் தனது மரணகாலத்தை யறிந்துகொள்ள விரும்புவா னுயின், ஸ்நானஞ்செய்து, பூனிதமான வஸ்திரமணிந்து, தியானருபத்தை முடித்து, சங்கிலபட்சமும் அபாபட்சமுமென்று முறையே சொல்லப்படு கிற வலதுகையையு மிடதுகையையும் ஜலத்திலுலம்பி, மீண்டும் பாணி லலம்பி, சுத்தவஸ்திரத்தில் துடைத்து, சுகந்த சந்தனத்தை இரு கரங் களினு மெடுத்துக்கொண்டு உள்ளங்கைக ளிரண்டலுஞ் சிறுதுநேரங் குழைத்து, அந்தரவியல்தனுய் ஓரிரவைதுடன் உமாபதியைத் தியானித்து நாற்றெட்டுதரந் தேஜோமந்திரத்தைச் சபித்து, வைகறைப் பிரித்து நோக்க விரல்களின் கணுக்களொன்றில் கருமைநிறமாகக் காணப்படும். சிறுவிரல் முதல் பெருவிரலிறுதியாகக் கணுக்களொவ்வொன்றிற்கு மும்மூன்றாய் பூதிஜனந்து திதிகளாதலின், எந்தக்கையில் கருமை தோன்றுகிறதோ அந்தக் கைக்குரியபட்சத்தி லிறப்பாவென்றும், கனிட்டவிரலின் அடிக் கணுமுதல் மேல்நோக்கிப் பிரதமையாதி திதிகளாக வெண்ணிக்கொண்டு செல்கையில், எந்தத் திதியிற் குறி காணப்பட்டதோ அந்தத் திதியி லிறப்பானென்றுந் தெரிந்துகொள்வாயாக.

வியாஸமுனிவனே !. இனி ஸ்வாசத்தினு துணபத்தைக் கூர்க் கங்களாவன: சுதணம் நாடி லவம் நிமிஷம் காஷ்டை கலை முகூர்த்தம் இராப்பகல் பக்ஷம் மாசம் ருது வருஷம் யுகம் கற்பம் பிரமாகற்பமென் னுங் கிரமத்துடன் இம்முறையாகச் சிவபெருமான் சங்கரித்துவருகிறார். காசிவழியிலோடுஞ் சுவாசமானது பிங்கலைவழியாக ஐந்து நிமிஷங்கள் சென்றுமாயின் மூன்றுவருஷத்திலும், பத்துத்தினங்களோடுமாயின் இரண்டு வருஷத்திலும், எண்ணைந்துதினங்களோடுமாயின் ஒருவருஷத்திலும் உயி ரொழிவான். இரண்டு காசிகளிலும் இருபதுநாள் சுவாசமோடுமாயின் ஆறுமாதத்திலும், இருபத்தைந்து தினங்களோடின் மூன்றுமாதத்திலும், இருபத்தாறுதினங்களோடின் இரண்டுமாதத்திலும், இருபத்தேழுதினங்க ளோடின் ஒருமாதத்திலும் உயிரொழிவான். வலது காசிவழியாக ஆறு தினங்கள் சுவாசஞ் சென்றால் இரண்டுவருஷம் எட்டுமாதம் பதினெட்டு நாள் ஜீவிப்பான். எழுதினங்கள் சென்றால் இரண்டுவருஷம் எழுமாதம் ஆறு நாள் ஜீவிப்பான். எட்டுத்தினங்கள் சென்றால் இரண்டு வருஷம் நான்கு மாதம் இருபத்தொன்று நாள் வாழ்வான். ஒன்பது தினங்கள் சென்றால் ஒருவருஷம் எழுமாதம் பன்னிருதினங்கள் பிழைத்திருப்பான். பதினைந்து தினங்கள்சென்றால் ஒன்பதுமாதம் எட்டுநாள் உலகிலிருப்பான். பன்னிருதினங்கள் சென்றால் எழுமாதம் பன்னிருதினங்கள் பிராணனை யுருப்பான். இருபத்தைந்து தினங்கள் சென்றால் நான்குமாதம் ஆறு நாள் இருப்பான். முப்பது தினங்கள் சென்றால் ஒருமாதம் பத்து நாள் ஜீவிப்பான். முப்பத்தொருதினம் அப்படியே சுவாசஞ் சென்றால் ஐந்து தினங்கள் பிழைத்திருப்பான். வாய்வழிய சுவாசஞ் செல்லுமாயின் மூன்றுதினங்களில் இறப்பான். இதுதான் காலசக்கிரம். இதனை யுனக்குச்

சொன்னேன் என்று சிவபெருமான் பார்வதிதேவியாருக்குத் திருவாய் மலர்ந்தருளியபடியே ஸுதக்குமாரமுனிவர் வியாஸபகவானுக்குரைத்தனர்.

மரணகாலமறிவதுரைத்தது

முற்றிற்று.

நாற்பத்தேழாவது

யோகநிலையுரைத்த அத்தியாயம்.

வியாஸமுனிவனே! பார்வதிதேவியார் சிவபெருமானை நோக்கி, ஸ்வாமீ! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய மரணகாலக்குறிகளைக் கேட் டறிந்தேன். உலகினருயிரை இயமன் வஞ்சித்துக் கவர்ந்துகொண்டுபோ கின்றனெனக் கூறுகின்றீரே, அவன் அப்பிராணனை யெவ்வாறு வஞ்சித் துப் பிடித்துக்கொண்டுபோகின்றான்? அதனையும் விவரமாகச் சொல்ல வேண்டுமெனக் கேட்க, சிவபெருமான் உமையே! உலகினருக்கு இத முண்டாகும்படி அதனையுஞ் சொல்கின்றேன். பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்னும் பஞ்சபூதங்களுஞ் சேர்ந்தது சரீரம். அவற்றுள் ஆகா யம் சர்வவியாபியாயுள்ளது. மற்றப் பூதங்களெல்லாம் ஆகாயத்திலேயே யொடுங்கி மீண்டும் அதினின்றே தோன்றுகின்றன. இந்தப் பஞ்சபூத சரீரம் காரணத்துடன் கூடியதாதலின் ஞானிகளாயிருப்பினும் அவர்கள் சரீரத்திற்கும் நாசமுண்டாகும். அஃதொருபொழுதும் ஸ்திரமானதல்ல வெனக்கூற, பார்வதிதேவியார் பரமசிவனை நோக்கி, ஸ்வாமீ! பூர்வம் மன்மதனைத் தேவரீரே தகனஞ்செய்துவிட்டு அவன் மனைவி இரதி பல வாறு துக்கித்துப் பிரார்த்திக்க அவளுக்கிரங்கி மீண்டும் உயிர்பெறச்செய் தீர். இயமனையுதைத்து அவனதுயிர்போக்கிப் பூமிதேவியின் பிரார்த்தனைக் கிரங்கி அவனுக்கு மீண்டும் உயிர்தந்தருளினீர். இயமனைச் செயித்தவர்கள் தேவரீரையன்றியெவரேனுமுளராகில் அவர்யாவரென்று அடியேனுக்குச் சொல்லவேண்டுமெனக் கேட்கச் சிவபெருமான் கூறுகின்றார்: தேவர்கள் அசுரர்கள் யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் உரகர்கள் மானுடர்கள் முதலியோர் களாலுஞ் செயிக்கமுடியாத இயமதருமராஜனை தியானத்தால் யோகஞ் செய்பவர்கள், சரீரத்துடனே வெல்லுவார்கள் என்று கூறியருளினர். திரிலோகநாயகனுகிய சிவபெருமானுடைய திருவார்த்தையைக்கேட்டுப் பார்வதிதேவியார், ஆச்சரியத்துடன் புன்னகைசெய்து ஸ்வாமீ! அத்தகைய ஞானிகளுடைய சரித்திரத்தை எனக்கு விபரமாகச் சொல்லவேண்டு மெனக்கேட்க, சிவபெருமான் ஏ சந்திரவதனே! பஞ்சபூதாத்மகமான தேகமானது பூதகுணத்தையுடையது. பஞ்சபூதங்களில், ஆகாயத்தி னின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று ஜலமும், ஜலத்தினின்று பிருதிவியுந் தோன்றும். இவ்வைந்துஞ் சேருவதாற் சரீரமாகின்றது, பிருதிவிக்கு ஐந்து குணங்களும், ஜலத்திற்கு நான்கு

குணங்களும், தேயுவுக்கு மூன்றுகுணங்களும், வாயுவுக்கு இரண்டுகுணங்களும், ஆகாயத்திற்குச் சப்தமென்னும் ஒரு குணமும் உண்டு. பூதங்கள் தத்தமது குணங்களை நீங்கியகாலத்திற் சரீரம் நாசமடைகின்றது. ஞானியானவன் சரீரத்தையடைய விரும்பியபொழுது அப்பஞ்சபூத குணங்கள் அவ்வவற்றினின்றுண்டாகின்றன. இயமனை வெல்லவேண்டுமென்று விரும்பியவன், அவனது பூததேகத்தில் விளங்கும் ஆகாயத்தைத் தன்னுள்ளே கண்டு அதனிடத்திலேயே சர்வகுணங்களுமிருப்பதாகத்தெரிந்து மனத்தைப் புறஞ்செல்லாதொடுக்கி யோகத்தில் நிற்கவேண்டியது என, பார்வதிதேவி ஸ்வாமீ! தியானம் யோகம் இவற்றால் இயமனை வெல்லலாமென்பதை விளக்கிச் சொல்லவேண்டுமெனக் கேட்க, சிவபெருமான் தேவியே! அந்த யோகமார்க்கம் சித்தாபத்தியுடையவர்களுக்கன்றி நாஸ்திகனுக்கும் பூனிதமில்லாதவனுக்கும் அநர்மிக்குங் கூறத்தகாதது. அதனைச் சாதுக்களாகிய யோகிகளின் இதத்தைக்கருதி உனக்குச்சொல்லுகின்றேன்.

சுகமான ஆசனத்திலிருந்துகொண்டு யோகத்தை அப்பியசிக்க வேண்டும். காடோடாறும் ஏகாந்தமான விடத்திலிருந்து கர்ஜனியால் இரண்டு நாழிகை காலம் காதுகளை மூடிக்கொண்டு சிவபெருமானைத்தியானிக்கும் பகூதத்தில், வயிற்றிலுள்ள ஜடராக்கினியினின்று மோர்சத்த முண்டாகி அவனுக்குக்கேட்கும். அன்றியும் அந்தவோசை ஊதுவதுபோலக்கேட்டு வயிற்றிலுள்ள ஆகாரத்தையெல்லாம் பசனஞ்செய்துவிடும். ஜ்வராதி ரோகங்களைப்போக்கி உபத்திரவங்களை நீக்கிவிடும். இவ்வாறே பிரதினமும் இரண்டுநாழிகை வரையில் அப்பியசித்து வந்தவன் மிருத்யுவைச் சயித்துச் சுயேச்சையாகத் தரிகித்து எல்லாவற்றையுங் கண்டு சர்வசித்தியையுமடைகிறான். மழைக்காலத்தில் ஆகாயத்திலுண்டாகும் மேககர்ச்சனைபோன்ற சத்தத்தைக்கேட்டு அப்பியாசித்தவன் யோகியாய் ஜனன மரணங்களை நீங்கிச் சூக்ஷமத்திலுஞ் சூக்ஷமமாயுள்ள பிரமத்தைத் தரிசித்து, பதரை நீக்கி மணியைக் கொள்வான்போல,சமுசாராதி துக்கங்களை யொழித்து பிரமஞானத்தையடைகிறான். இது சப்தப் பிரமயோக மெனப்படும். இந்த யோகாப்பியாசமுடையோர் பரிதாகங்களைப்போக்கி, தாம் விரும்பியவற்றையடைவர். இதுவே முக்திக்குக் காரணம். இதுபாவருக்குஞ் சொல்லக்கூடாதது. நாச கிரதமானது. உபாதிவர்ஜிதமாகவுள்ளது. காலபாசத்தினால் மோகிக்கப்பட்டவர்களும், பாவிகளும், துர்ப்புத்திகளும் சப்தப்பிரமத்தை யறியார்கள். சப்தப்பிரமஞான மூண்டாகும் வரையில் சமுசாரபந்தம் விலகமாட்டாது. சப்தப்பிரமத்தை யறிந்தவர்கள் ஜன்மபந்தத்தினின்றும் நீங்குவார்கள். தன்தேகத்திலுண்டான சித்திரை சோம்பல் ஆலசியம் காமக்குரோதாதிகள் முதலியவற்றை நீக்கிச் சுகமான ஆசனத்திலிருந்து நூறுவயதுசென்ற பிழவனுமிருப்பினும் இந்தயோகத்தை அப்பியசிக்கும் பகூதத்தில் மிருத்யுஞ்ச சரீரத்தையும்

ஆரோக்கியத்தையும் நீர்க்காயுவையும் அடைகிறான். இதனால் அப்பியசித்தவனுக்குச் சர்வேசுரனிடத்தில் மிக்கபக்தியுண்டாகிறது. இந்த யோகத்திற்கு ஓங்காரமந்திர பீஜாகூரங்கள் வேண்டுவதில்லை. அப்பியாசத்தினாலேயே இவற்றையடையலாம். இதற்சப்தத்தில் ஒன்பது வகைப்பேதங்களுள்ளன. அவற்றையுஞ் சொல்லுகின்றேன். அவை கோவம், காம்ஸ்யம், ஸ்ருங்கம், கண்டா, வீணை, புள்ளாங்குழல், துந்துபி, சங்கம், மேகம்போன்ற ஒன்பது சப்தங்களாம். விவேகியானவன் இவ்வனைய வொலிகளைக் கேளாது விடுத்தால், ஓங்காரத்தின் ஓசையுண்டாகும்; அதனையே கேட்கவேண்டும். அதுவே சிறந்தது. அவ்வோங்கார சத்தத்தை யதோக்தமாக அப்பியசிக்கு மொருவனைப் புண்ணிய பாவங்களணுகாது. ஆறுமாதத்திற்கு அச்சத்தத்தை யப்பியசித்தவன் மஹாயோகியாய்ச் சர்வலோகங்களிலுஞ் சஞ்சரிப்பன். கோஷ மென்னுஞ் சத்தத்தை யப்பியசிப்பவன் ஆத்மசத்தியும், சர்வவியாதிகளினின்று நீங்குதலும், வசியகரமுதலிய சித்திகளையுமடைவான். காம்ஸ்யம் என்பதை யப்பியசிப்பவன் சமன்தபிராணிகளின் மனத்தைத் தடுக்கக்கூடியவனாவன். அன்றியும் விஷங்களைத்தடுக்கவும், பூதம் பேய் முதலியவற்றையடக்கவும் வல்லவனுவான். மூன்றுவதாகிய ஸ்ருங்கமென்னுஞ் சத்தத்தை யப்பியசித்தவன் சத்துரு நாசஞ்செய்யவும், தன்னிஷ்டப்படி அவர்களை நடக்கவைக்கவல்லமையுடையனுமாவான். கண்டாவென்னுஞ் சத்தத்தை யப்பியசிப்பவன் சகல தேவர்களையுந் தன்னிடம் வரவழைக்குந்திறமுடையவனுவான். அல்லாமல் யக்ஷர் கின்னரர் கிம்புருடர் மாதுடர் முதலானவர்களையும் வசப்படுத்த வல்லவனுவான். வீணை யென்னுஞ் சத்தத்தை யப்பியசிக்கும் ஒருவன் தூரதிருஷ்டியடையான். புள்ளாங்குழலென்னுஞ் சத்தத்தை யாசரிப்பவன் சர்வஜ்ஞனுகிறான். துந்துபி யென்பதை யப்பியசிப்பவன் ஜராமரணங்களை நீக்கிச் சுகியாயிருப்பான். சங்காதத்தை யப்பியசிப்பவன், தீனத்த உருவமெடுக்கவல்லவனுவான். மேகநாதத்தை யப்பியசிப்பவன் ஆகாயத்திற் சஞ்சரிக்க வல்லவனும், சர்வத்தையும் பார்க்க வல்லவனும் சர்வசித்திமானுமாவான். இவ்வாருகச் சத்தத்தின் விஷயத்தைப்பற்றி விவகரித்தேன். இனி எதைப்பற்றியறிய விரும்புகின்றனையோ அதை வினவுவாயாக, எனக்கூறிய சிவபெருமானை நோக்கித் தேவியானவகிறாள். சுவாமீ! எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாகிய ஆகாயத்தினின்றும் வாயுதேவன் முதலின் வாயுமயமான தேகத்திலுள் ஆகாயசொரூபமாகிய பிரமத்தை யெப்படி யறியலாம் எனக்கேட்ட தேவியை, ஈசன் விளித்து பெண்ணே! பூர்வத்தில் யோகிகளினிதத்தின் பொருட்டு விஸ்தரித்துச்சொல்லிய அவ்விஷயத்தை உனக்குச் சொல்லுகின்றேன்: இவ்வாயுமயமானசரீர மழிந்துபோகுமென்று காலக்கியானத்தாலறிந்து சரீரியானவன் பிராணுயாம மென்னும் யோகத்தை யப்பியசிக்கும்பகூதத்தில்,தனக்குண்டாகும் மரணத்தைப்பதினைந்து நாளில் விலக்கவல்லவனுவான். அவன் இதயத்திலிருக்கும் வாயுவானது எதா ஜடராக்

கினியோகெடி. உள்ளும்புறமுஞ் சஞ்சரித் திருக்கின்றது. அவ்வாயு வங்கும் வியாபகமுள்ளது. அத்தகைய வாயுவைப் புறஞ் செல்லாது தன்னுடைக்கும் யோகி உலகத்தைச் சயிக்கிருன். வாயுவானது தருத் திபுளிருந்து அதனைப்பூரிக்கச் செய்கிறதுபோல, பிராணவாயு ஒருவனு டைய்யிருக்கா லவனை யோகியாக்கும். சேகபூரகும்பங்களாற் பிரான வாயுவைச் சுவாதினஞ்செய்து கொள்பவன் மகத்தாகிருன். அவன் பல்லாயிரஞ் சிரங்களும் பல்லாயிரங் கங்களும் பல்லாயிரம் பதங்களு மமைந்த விராட்டின் சொரூபமாகிருன். இவ்வகைபிராணுயாமனது, காயத்திரிமந்திரத்தைச்சிரசோகூட்டியியாஹ்திபூர்வமாய்ப் பிராணவாயு வையடக்கிரேசகாதிகிலைகளினின்முமும்முறைசெய்தலாய் ஜபிப்பதே பிராணுயாம மெனப்படும். அதைக் காட்டிலுஞ் சிறந்த யோகமில்லை. அதுவே சர்வசித்தியையுங் கொடுக்கக்கூடியது. சக்திமகரியாதி சிரகங்க ளிறக்குமாயினும் பிராணுயாமஞ் செய்வோர் ஒருகாலத்திலு மிறவார். அவர்கள் மீண்டும் பிறப்பெய்தார். தாமுவருடகாலவளையிற் புண்ணிய தீரத்திலிருந்து தருப்பைதனியின் ஜலத்தை யருந்தி உயிர்காத்துக் கடுந் தவஞ் செய்தவன் பெறும்பலனை மேற்சொல்லியபடி ஒரு பிராணுயாமஞ் செய்தவன் பெறுவான் என்றால் அதன்பலனை யென்னென் றுரைப்பது? காலியிலெழுந்து ஒருதரமாவது விதிப்படி பிராணுயாமஞ் செய்த பிராமணர் பிரமலோகத்தை யடைவார்கள். தனிமையாய்த் திவ்யாசனத்தி லிருந்து இப்பிராணுயாமத்தை யப்பியசிக்கும் பட்சத்தில், ஜாமரணங் களை நீக்கி வாயுவைப்போல் ஆகாயத்திற் சஞ்சரிக்கும் வல்லபமும், சித்தனைப்போல ரூபமும், மின்னலைப்போன்ற தேககாந்தியும், அணிமின் விசேடமாகிய ஆற்றலும், பராக்கிரமும், வாயுவேகமும், ஆரோக்கியமும், தேவர்களுக்குத் துர்லபமானபதவியும் அடையச்செய்யும். இதுவே பிராணு யாமத்தின் பலன். இதனை உனக்குச் சொன்னேன்.

இனி, தேயுவினுலடையுஞ் சித்தியைச் சொல்கின்றேன். புனித ஆசனத்திற் சுத்தவுயிருந்து, நிர்ஜனமான பனி குவிர் முதலிய விடை யூறு களில்லாத விடத்தில் ஒரேமனதாய் மேல்நோக்குடன் அசைவுகூர்ந்த காலம் இருபுருவங்களின் மத்தியில் ஸ்வரசம்பந்தமான வெண்மை செம்மை கருமை புகைமை இந்திரதனுசுபோன்றசித்திரம் என்னும் நிறங்க ளமைந்த ஜோதியை இனஞ்ருரியனைப்போல வினங்கத் தரிசித்தவன் இந்திரியநிக்ரகமும், பரகாயப்பிரவேசமும், அணிமாதி அஷ்டசித்திகளும், ஞானநோக்கமும், தூரசத்த முனருமுனர்ச்சியும், பார்ப்பதற்கருமையான வற்றைப்பார்க்குஞ் சக்தியும் அடைகுவான். இதனை யெப்பொழுதும் பழகுபவன் ஆகாயசஞ்சாரஞ் செய்பவனுவான். வேதாத்தியயனஞ்செய்த வர்களாயினும் ஞானிகளாயினும் பூர்வகர்மவசத்தினுலே என்னுடையருரு வத்தைப்பார்க்க வல்லபமிருப்பினும் பார்க்கமாட்டார்கள். என்பிரபாவத் தைக்கேட்கச் சத்தியிருப்பினுஞ் செவிடர்போலக் கேட்கமாட்டார்கள்.

மூடத்தன்மையாற் குருடர்களைப்போல் என்னையறியமாட்டார்கள். அவ் வகைய வஸ்துவை யானே யறிந்தவன். அணுவுக்கணுவாயும் மஹத்துக்கு மஹத்தாயும் அஞ்ஞானவிருளுக்கு அதிகரித்த ஜோதிமயமான தேஜஸைத் தரிசித்தவன் ம்ருத்யுவைச்சயிக்கிருன். இதைக்காட்டிலும் ஆன்மாக்களைக் கடைத்தேற்றும் மார்க்கம் பிறிதொன்றில்லை. தேஜஸினுல் உண்டாகுஞ் சித்தியையுனக்குச்சொன்னேன். இதனையப்பியசித்தோர் அமரத்துவத்தை யடைவர். ஜலத்தாலுண்டாகுஞ் சித்தியைச் சொல்லுகின்றேன். ஸ்நா னாதிகளைச்செய்து பரிசுத்தனுய் நிர்மலமான ஸ்தானத்தில் ஏகாந்தமாக விருந்து சுகமான் ஆசனத்திலுட்கார்ந்து மனத்தைப்புலன்வழி செலுத் தாது சரீரத்தைநிமிர்த்திக் கைகளைக்கூப்பி, வாயைப்பறவையின் முக்குப் போலக் குவித்து வாய்வழியாக வாயுவையுட்கொள்ளும் பகுதத்தில், தாடையின் உட்பிரதேசத்தினின்றும் ஒருவகையான ஜலமுண்டாகும். பிராணனை விருத்திசெய்யும் அந்த ஜலத்தைப் புசிக்கவேண்டும். அது தேனமாகிய அமிர்த ஜலம். அதனைப்பானஞ்செய்தவன் திவ்வியசரீரத்தை யடைந்து, மகாதேஜஸையுடையவனுய்ப் பரிதாகங்களைப்போக்கி, லகிமை யால் யானையையும் வேகத்தினுற் குதிரையையும்போன்று, அதிதூரதிஷ்டி யையும் அதிதூர சிரவணத்தையும், கந்தர்வ வித்தியாதராதி கணங்களைப் போன்ற தேஜஸையும், புத்தியாற் பிரகற்பதியையொப்பும், தேவவருஷங் கள் தாறுவரையில் வாழ்வுமடைவான். இன்னும் ஒரு இரகசியத்தைச் சொல்லுகின்றன். அது தேவர்களுக்கும் அடைதற்கசாத்தியமானது. அஃதென்னெனில், நாவையவனித்து அதிலுள்ளமுனையை உண்ணுக்குடன் சேர்க்க, அதினின்றும் அமிர்தமயமான சீதளத்தைதாடுகூடிய ஜலமுண் டாகும். அந்த அமிர்த்தைப்புசித்தவன் அமரத்துவத்தையடைகிருன். நாவினை (J) ரேபம்போலவும் மனிநாக்கின் (?) வளைவுபோலவும் வளைத்து, மூலாதார ஸ்தானத்தைப்பந்திக்கும் பகுதத்தில், புனிதமான இதய காமையினின்றும் ஓர் பிந்து உண்டாகி நாதனியையடையும். ஆநந்த தரமும் ஜகந்சாரமும் சமுசாரதுன்பநீக்கமும் நிர்மலமான பிரமஸ்வரூப வுணர்ச்சியும் இயமனை வெல்லுதலும் அமரத்துவமும் பரிதாகநீக்கமுஞ் செய்யவல்லது அவ்வமிர்தமேயாம். இதனை லம்பிகாயோக மென்பர். மேற் கூறியவகைகளில் ஒன்றினை யப்பியசிக்கும் பகுதத்தில் அவனுடையதைரி யத்தினுலே இயமனைவென்று பிரமானந்தத்தையடைகிருன். உலகவின்ப மூழ்வதுஞ் சொப்பனம் போலுமென்றுணர்ந்து அவற்றில் வெறுப் புற்றுச் சுவர்க்காதி போகங்களைக் கருதாது, சாசுவிதமான எனது திருவடியில் மனத்தைச் செலுத்தினவர்கள் எனது சாயுச்சியத்தை யடைந்து கற்பகோடிகாலம் வாழ்ந்திருப்பார்கள் என்று சிவபெருமான் பார்வதிதேவியாருக்குக் கூறினவகையே ஸநத்குமாரமுனிவர் வியாஸமுனி வருக்குரைத்தருளினர்.

யோகநிலையுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தேட்டாவது

சாயாபுருஷ தரிசனமும்
புராணசிரவணமுமுரைத்த அத்தியாயம்.

ஸூதருமாரமுநிவர் சொல்லுகின்றார்: வியாஸமுநிவனே! பார்வதிதேவியார் பரமசிவனைநோக்கி, இறைவனே! தேவரீர் கூறிய காலக்கியானத்தையும் யோகசாதனத்தையு முணர்ந்தேன்; இன்னும் இத்தச்சம் பந்தமான விஷயங்களைச் சொல்லவேண்டுமென விளவ, சிவபெருமான் பார்வதி! சகலபாவங்களையு மொழிக்கத்தக்க சாயா புருஷ லக்ஷணத்தைச் சொல்லுகிறேன்; கேட்பாயாக. ஸுந்தரி! பகலிற் சூரியனையாவது, இரவிற் சந்திரனையாவது தனக்குப் பின்புறமாக்கி, ஸ்நானஞ்செய்து புனிதமான வஸ்திரமணிந்து சந்தன புஷ்பாதிகளா லலங்கரித்துக் கொண்டு, எனது பஞ்சாக்ஷர மந்திரத்தையுந் தேவியாகிய உனது நவாக்ஷரமந்திரத்தையும் ஜபித்துத் தனது தேகசாயையை முதலிற் பூமியிற் பார்த்துச் சிறிதுநேரத்தில் ஆகாயத்தில் மீண்டும் அவ்வகையே பார்க்கவேண்டும். ஆகாயத்திற் றோன்றுஞ்சாயை யென்னுடையது. அதனை நிர்மலமான மனத்துடன் தரிசிக்கும்பக்ஷத்திற் பிரமஹத்தியாதி பாவங்க ளெல்லாம் ஒழியும். அத்தச்சாயை சிரமின்றித் தோன்றினால் ஆறுமாதத்திலிறப்பான். கர்மசீலர்களும் தவசிகளும் யாகஞ்செய்தவர்களும் அடையுங் கதியை யடைவதற்கு யோகசாஸ்திரத்தை யப்பியசிக்க வேண்டும். அந்த யோகத்திற்கு முக்கியமாக வேண்டியது ஞானம். அந்த ஞானமானது கிரமமாக அடையத்தக்கது. அதுகிரமமாக உண்டாவதற்குப் பாவநாசம் வேண்டும். பாவநாசத்திற்குப் புராணசிரவணஞ் செய்ய வேண்டும். புராணங்களைக் கேட்பதனாலேயே சமுசாரபந்தத்தை நீக்கி ஞானத்தையடையலாம். தர்மார்த்த காமங்கட்குக் காரணமாயும் மோக்ஷத்திற்கு வழியாயுமிருக்கின்றது. ஆதலின், மாதுடஜனன மெடுத்தோர் அவசியம் புராணங்களை வாசித்துங் கேட்டுந் தமது ஜன்மசாபல்யத்தை யடையவேண்டும். யாகம் தானம் தவம் தீர்த்தயாத்திரை முதலியவற்றால் வரும் பலனைப் புராணசிரவண மொன்றனாலேயே பெறலாம். தர்மமார்க்கத்தை விளக்கத்தக்க புராணங்களில்லாத பக்ஷத்தில், மாதுடர் இகலோகத்திலேஜும் பரலோகத்திலேனுஞ் சுகமடைய மாட்டார்கள். உலகத்தின் சிருஷ்டியாதி கிரமங்கள்வேதத்திற் சொல்லப்பட்டிருப்பினும் யாவர்க்கும் அதுவிளங்காமையின், அநேககாலம் சாஸ்திராராய்ச்சிசெய்யமுடியாதவர்கள் சாமானியமாகப் புராணசிரவணத்தாலேயே அவற்றை யெல்லாம் உணரலாகும். புராணங்களில் ஆதிசிருஷ்டியும், சூரியசந்திர வம்சவிருத்தியும், மன்வந்தரக்கிரமமும், தானக்கிரமமும், ஆசாரமுறையும், கற்பபேதங்களும் பிரமதேவரால் சுயம்புவாய்ச் சொல்லப்பட்டுள்ளன. இவ்வகைய தர்மங்களைச் சொல்லத்தக்க புராணங்கள் முப்பத்தாறுள்ளன.

அவற்றுள் ஒருபுராணத்தை யாவது பக்தியோடு பூரணமாகச் சிரவணஞ் செய்தால், வனத்திலிருந்து சதுர்வேதங்களையும் ஒருமுறை பாராயணஞ் செய்து முடித்தபலனை யடையலாம். யாகம் தானம் தவமுதலியவற்றுண்டாகும் பலனைத் தர்மசாஸ்திரங்களை வாசித்து உணரவேண்டுமென்று சிவபெருமான் பார்வதி தேவியாருக்குக் கூறியவகையே ஸூதமுநிவர் வியாஸமுநிவருக்குக் கூறினர். அவ்வியாஸ பகவானிடங் கேட்டுணர்ந்தபடியே யான் உங்களுக்குச் சொன்னேனென்று ஸூதமுநிவர் சௌநகாதி முநிவர்களுக் குரைத்தனர்.

சாயாபுருஷ தரிசனமும் புராணசிரவணமுமுரைத்தது
முற்றிற்று.

நாற்பத்தொன்பதாவது

திரிமூர்த்திகளின் தோற்றமுரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்ய வாசிகளாகிய சௌநகாதி முநிவர்கள் ஸூதமுநிவரை நோக்கி, ஸ்வாமி! சிவபெருமானே இலிங்கமூர்த்தத்திலும், பிறதேவர்களை விக்கிரகமூர்த்தத்திலும் உலகினர் பூசித்துவருங் காரணமென்ன? என்பதனை யினக்கி அடியேங்களுக்குக் கூறவேண்டுமென, ஸூதமுநிவர் பூர்வம் இவ்விஷயத்தை வியாஸபகவான் ஸநத்குமாரமுநிவரிடங் கேட்டு அவரால் எனக்குக் கூறப்பட்டபடியே சொல்லுகின்றேன், நைமிசாரண்ய வாசிகளே! பூர்வத்தில் தாவர சங்கமங்க ளெல்லாம் நசித்துப் பூமிமுழுதும் ஜலத்தால் மூடப்பட்டிருந்தது. பிரமவிஷ்ணுருத்திரர் அச்சலத்தினின்று தோன்றினர். அவர்க ளுண்டான வழியைப் பண்டிதர்களு மறியார்கள். தாவரசங்கமங்கள் நசித்து ஜலமயமாயிருக்க, பெரிதாகியவாயுதோன்றி அதனையுலரச்செய்தது. அதனைத்தொடர்ந்து சாதிக்கள் கான்முகத்தினும் கால்வருமாகாயத்தில் வண்மருமாகப் பிரகாசித்து உலர்ச்செய்தனர். பாதலலோகத்தினின்று காலாக்கினி ருத்திரர் சர்வதேஜசோடு உதித்தனர். அவரும் சூரியனைஜோடு நிரையுலர்த்தியாருமறியாம்ற் பாதலஞ்சேர்த்தனர். இவ்வாறு நிருவாகிக்கப்பட்டபின்னர் ஸ்தூலதேகங்களிலிருவகுத்து முன்போல்வந்துசேர்ந்தமையாற்கியது. இப்படியே மாறிமாறியுண்டாவது இயற்கை. அத்திரிமூர்த்திகளில் ஆதிதேகத்தை தேககாரணியோடுகூடிய ருத்திரமூர்த்தியை நோக்கிப் பிரமவிஷ்ணுக்கள் நமஸ்கரித்து உலகசிருஷ்டி செய்ய வேண்டுமென்று சொல்ல, அவ்வாறேயாகுக வென்று ருத்திரர் ஜலத்தில்மூழ்கி மறைய, பிரமவிஷ்ணுக்கள் ஆயிரவருஷவரையிலும் அவர் நிருமிபி வராமைகண்டு வருந்தி, பிரமவிஷ்ணுவைநோக்கிச் சிருஷ்டியெவ்வாறுவதென்றினவ, விஷ்ணு என்வாக்கியத்தையே கொள்க; காலதாமதம்வேண்டாம், பிரபஞ்சிருஷ்டியில் பிரியத்தினப்படுவாயாகில் அதற்கு வேண்டிய சக்தியைக் கொடுத்

றேன் என, பிரமன் சிருஷ்டிசெய்யத் தொடங்கி, அண்டசம் சுவேதசம் உற்பிசம் சராயுசம் என்னும் நால்வகை யோனியாகிய தேவாசுர கந்தர்வ யக்ஷ ராக்ஷச பைசாச மானுட மிருக பசு பக்ஷி தாவரர்திகளைப் படைத்தார். இவ்வாறுயபின்னர் ஜலத்தில் மூழ்கிய ருத்திரர் சிருஷ்டிசெய்ய மீண்டு மெழுந்தபொழுது பிரபஞ்சம் படைத்திருக்கக் கண்டு கோபங்கொண்டு, தன்முகத்தினின்றும் ஓர் தேஜசை விடுப்ப, அதுகாலாக்கினியாகிப் பிரமனது சிருஷ்டிப்பொருள்களை முற்று மழித்தது. அதைக்கண்டு ருத்திர மூர்த்தியை, ஈசானமூர்த்தியே! காலன்வருமியே! அதிககண்களையுடையவனே! திரிநேத்திர தாரியே! வரதனே! நீலகண்டனே! பைரவனே! சம்போ! கபர்த்தினே! பசுபதியே! திரிசூலதாரியே! கபாலமாலினே! தேவதேவா! சந்திரசேகரா! சங்கரா! சரணம்! சரணம்! என்று பிரமன் தோத்திரஞ்செய்தனன். அவரது தோத்திரத்திற்குக் களித்த இறைவன் பிரமனே! உன் தோத்திரத்திற்குச் சந்தோஷித்தோன். என்னை வேண்டியவர்களை இரட்சிக்கின்றேன் ஆகையால், உனக்கு வேண்டிய வரத்தைக் கேட்பாயாக என்றதைக்கேட்ட பிரமன் நான் சிருஷ்டிசெய்த பிரபஞ்சம் முன்போலவே யிருக்கவேண்டுமென்றான். அதைக்கேட்ட ருத்திரர் என் முகத்தினின்றுண்டாய தேஜசை எவ்விடத்திற்தொடுக்கலாம்? எனப் பிரமன் சற்றுலோசித்து, பிரபஞ்சத்திற் கதுகூலமாயிருக்கச் சூரியனிடத்து இத்தத் தேஜசை வைத்தனிடவும், நீரே சூரியனிடமிருந்து சிருஷ்டியாதி தொழில்களைச் செய்யவும், பிரபஞ்சத்திலுள்ள பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களால் நித்தியமும் பூசிக்கப்பட்டு, கற்பாந்தத்தில் நீரே காரஞ் செய்யவும், வேண்டுகின்றேன் என்றனன். இவ்வாறுகூறிய பிரமனைப் பார்த்துப் புன்னகைசெய்து, என்னை இலிங்கமூர்த்தத்திற் பூசித்தத்தாலன்றி உனக்குச் சிருஷ்டி கைகூடாதென்று தேசோமயமான லிங்கரூபமாயினர். அந்த ரூபமானது பாதலத்திற் கடியிற் படிந்தும் அண்டாண்டசராசரங்கட்கப்புறம் உயர்ந்தும் ஓங்கியது. இவ்வாறுயே தேஜோமயலிங்கத்தின் அடியையும் முடியையு மறியுமாறு விஷ்ணுவும் பிரமனும் முயன்று பாதலத்தினும் ஆகாயத்தினுஞ் சென்று தேடுகையில், ஆகாயத்தினிடத்து அசரீரியாய்ச் சர்வமயமாகிய மேசனது தேஜோமயமான லிங்கமாகிய இதனைப் பூசிப்பவர்கள் [illegible] காமிய மோட்சங்களும், அணிமாதி சித்தியுஞ் சர்வலோகாதிபத்தியமும் சிருஷ்டி திதியாதியவற்றைச் செய்யயோக்கியதையும் பெறுவர். மேன்மையாகிய பதவியை யடைய லிங்கபூசையை யஞ்சி வேறு கதியில்லை. ஆகையால் இவ்விலிங்கத்தை யர்ச்சித்து உங்கள் மனோரத மடைவீர்களாகவெனக் கூறக்கேட்டு அவ்விருவரும் அதனைத் தேடியறிய விரும்பியதை விடுத்து அநேககாலம் பூசித்துக்கொண்டிருந்தனர்.

திரிமூர்த்திகளின் தோற்றமுணர்த்தது
முற்றிற்று.

ஐம்பதாவது
பிரம விஷ்ணுக்கள் வரம்பெற்ற அத்தியாயம்.

சௌநகாதி முனிவர்களே! இவ்விதமாகத்தோன்றிய இலிங்கத்தை விஷ்ணுமூர்த்தி சர்வோபசாரத்துடனும் விதிவழுவாது பூசனை செய்து பலவாறு தோத்திரஞ்செய்து, சதருத்திரிய நாமங்களாலுமர்ச்சித்து திவ்ய நாமங்களாற் பூசிக்க, விஷ்ணுவின் பூசனைக்கு மகிழ்ந்து, இலிங்கத்தினின்று மகாதேவராயுற்பவித்துக் கருணைகடாட்சத்தோடு பிரமவிஷ்ணுக்களைநோக்கி உங்களாற் சொல்லப்பட்ட தோத்திரங்களைக்கேட்டு மிகவுஞ் சந்தோஷித்தேன்: நீங்கள் ஸ்வயமாகச் செய்யுந் தோத்திரத்திற்கே சந்தோஷமடையும் நான் வேதத்தின் ஸ்லோகங்களாற் தோத்திரிப்பதற்காக மகிழ்வதைச் சொல்லவேண்டியதில்லை. விஷ்ணுவே! தேவாசுர மானுடர்களாற் பூசிக்கப்பட்டவனுய்ச் சர்வசத்துருக்களையுஞ் சயிக்கவல்லவனும் ஒருக்கால் என்னையுஞ் சயிக்கவல்லவனுய் வரங்கொடுத்தேன். பிரம! உனக்கு அழியாத சிருஷ்டியும் மந்வந்தராதி கிரமங்களையும் இந்திராதிபதங்களையும் ஏககாலத்தில் நான்குவேதங்களுந்நான்கு முகத்தாலுச் சரிக்கவல்லபமுங் கொடுத்தேன் என்றதைத்து மறைந்தார். ஆகையால் சௌநகாதி முனிவர்களே! உலகத்திற் புருஷார்த்தங்களைக் கொடுக்க வேறுதபசில்லை. இந்தலோகத்திற் புத்திர பௌத்திராதி இராச்சிய சம்பத்துக்களையும் சுவர்க்கபோகங்களையும் மோக்ஷ சாம்பிராச்சியங்களையுங்கொடுக்கவல்லது சிவலிங்கபூசையன்றி வேறில்லையென்று எனது குருவாகிய வியாஸமுனிவரார் கேட்டதை உங்களுக்குச் சொன்னேன். இன்னுங் கேட்கவேண்டியதுளவாயின் கேட்பீர்களாகவென்றார்.

பிரம விஷ்ணுக்கள் வரம் பெற்றது
முற்றிற்று.

ஐம்பத்தோன்றாவது
உலக சிருஷ்டி யுரைத்த அத்தியாயம்.

சௌநகாதி முனிவர்கள் ஸூதமுனிவனைநோக்கி, ஸ்வாமீ! தேவரீர் இறுகாலுஞ் சொல்லிவந்த விஷயங்களாற் சால்பு சந்தோஷித்தோம். இனி யிவ்வுலகம் பிரமதேவனால் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டதோ அதனையும் விபரமாகச் சொல்லவேண்டும் எனக்கேட்க ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். தர்மிசாரணியவாசிகளே! சிவபுராணக்கினிமையாயும் மோக்ஷானந்தத்தைக் கொடுக்க வல்லதாயும் வேதங்களுக்குச் சமானமானதாயும் அதனைக் கேட்போரைச் சிவலோகமடையச்செய்ய வல்லதாயுமுள்ள அந்த விவரத்தையும் உங்கட்குச் சொல்லுகின்றேன். அகண்டாகாரமானவராயும், வஸ்துமசஸ்துமானவராயும், மமதாதிகளற்றவராயும், விஷ்ணுபக்தி யுடையவராயும், பெருந்தேஜ

ஸுடையவராயும், கற்பம் காலமுதலியவற்றை வ்யாயறுப்பவராயும், வேதங்களில் ஹிரண்யகர்ப்பரென்று சொல்லப்படுபவராயும் விளங்கும் பிரம தேவருக்கு நமஸ்காரம். மகரிஷிகளே! சிருஷ்டிகர்த்தா பிரமனென்றும், திதிக்கர்த்தாவிஷ்ணுவென்றும், சங்காரகர்த்தா உருத்திரனென்றும், இவர்கள் மூவரும் கத்த சாகூதர்த்கார பரிவத்தினின்றுந் தோன்றினவர்களென்று முணர்வீராக. பிரமதேவர் அநேகவித சிருஷ்டிகளைச்செய்யக் கருத்துடையவராய் முதலில் ஜலத்தைப்படைத்து அதில் தன் வீரியத்தை விடுத்தார். அது சொர்ணமயமான ஓர் அண்டமாயிற்று. பிரமதேவர் தான் சிவபெருமானிடம் பூர்வம் பெற்றுள்ள வரத்தினால் சிருஷ்டிசெய்ய வல்லபமுடையராய், அந்தப்பொன்னிறத்த அண்டத்தினின்றுந்தோன்றிச் சுயம்புவானார். அவர் சிறிதுகாலம் அந்தஜலத்தில்வசித்துக்கொண்டிருந்து, பின்னர் அந்த அண்டத்தைத் இரண்டாக்கி அதிலொன்றினைச் சுவர்க்கமாகவும், ஒன்றினைப் பூமியாகவும், பதினான்கு லோகங்களாகவும், பூமிக்கும் சுவர்க்கத்திற்கும் இடையே ஆகாயமாகவுஞ் சிருஷ்டித்தார். இப்பூமியானது பத்துத்திக்குகளுடன்கூடி ஜலத்தின்மேலில் மிதந்துகொண்டிருக்கின்றது. இப்பூமியில் காலம் மனது வாக்கு காமம் குரோதம் ஆசை இவற்றைச்சிருஷ்டித்தார். பின்னர் மரீசி அத்திரி அங்கிரஸ் புலத்தியர் புலகர் கிருது வசிஷ்டர் என்னும் எழுவரை மானசிகபுத்திரராகப் படைத்தார். இவர்கள் ஸப்தப்பிரமாக்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அதன் பின்னர் ஸநத்குமாரமுனிவரை யுண்டுசெய்தனர். அந்த ஸநத்குமாரர் ஸப்தப்பிரமாக்களினுஞ் சிறந்தவராக விளங்கினர். இந்த ருஷிகள் எழுவரிடம் அநேக வமிசங்களுண்டாயின. மின்னல் இடி மேகம் இந்திரதனுசு பர்ஜன்யன் இவற்றைப்படைத்தார். இருக்கு யஜுர் சாமம் அதர்வணமென்னும் நான்கு வேதங்களையும் யாகத்தையும் படைத்தார். அந்த வேதங்களிற் கூறிய முறைப்படி அநேகர் அநேக யாகங்களை நடத்தி தேவர்களைத் திருப்தி செய்திருக்கிறார்கள். மீண்டும் பிரமதேவர் முகத்தினின்று தேவர்களையும், [illegible]ார்பிலிருந்து பிதுர்தேவர்களையும், இடையிலிருந்து மநுடரையும், கூடத்திலிருந்து அசுரரையும், பிற அவயவங்களினின்று நாஞவி[illegible]ன பூதங்களையுஞ் சிருஷ்டித்தார். இவ்வாறு படைக்கப்பட்டபிரஜைகள் சிருத்தியடையாது நசிக்கக்கண்டு பிரமதேவர் தனது தேஹத்தை இரண்டாக்கி ஸ்திரீ புருஷ ரூபங்களாய்த் தனது மகிமையால் மீண்டும் பண்டுபோலப்படைப்புந் தொழில்செய்ய மநுவைப்படைத்தார். அந்த வைராஜனென்னும் மநுவானவர் அநேக பிராணிகளையுண்டுசெய்தார். இவ்வாறு ஆதிபாகிய சிருஷ்டிக்ரமத்தை வாசிப்போருங் கேட்போருங் கீர்த்தியும் நிர்க்காயுளும் புத்திரபாக்கியமும் அகண்டைசுவரியமும் அடைந்து வாழ்ந்து இறுதியில் சிவலோகத்தை யடைவார்கள்.

உலகசிருஷ்டியுரைத்தது
முற்றிற்று.

இரண்டாவது
உலக விருத்தி யுரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்ய வாசிகளாகிய மஹரிஷிகளே! இவ்வாறு சிருஷ்டியிலே விருப்புடைய பிரமதேவரது நிர்க்கிமையால் சதரூபையென்னும் ஸ்திரியுண்டானாள். தர்மத்தினுலே அயோனிஜமாகத்தோன்றிய அந்தச் சதரூபை அநேககாலந் தவஞ்செய்து சுவாயம்புவனென்று சொல்லப்படுகிற அந்த மநுவை மணஞ்செய்து, பிரியவிரதன் உத்தானபாதனென்னும் இரு புதல்வரைப் பெற்றனள். இந்தச் சுவாயம்பு மநுவினுலேதான் எழுபத்தொரு யுகங்கள் ஒரு மநுவின் காலமென்று வரையறுக்கப்பட்டது. சுவாயம்பு மநுவுக்கும், சதரூபைக்கும் அநேக ஸ்திரீகள் ஜனித்தார்கள். கர்த்தமப்பிரஜாபதிக்குக் காம்யை யென்னுங் கன்னிகை தோன்றினள். காம்யை யென்பவளிடத்தில் சாம்ராட் அதி விராட் பிரபு வென்னும் நான்கு புதல்வர் தோன்றினர். உத்தானபாதன் இந்திரனுக்குச் சமானமான புதல்வரைப்பெற்றனன். கர்மத்தின் கன்னிகை சுநீதியின் கர்ப்பத்தில் உத்தான பாதனுக்குப் புதல்வனுகத் துருவன் தோன்றினன். அந்தத் துருவன் வாலிபத்திலேயே மூவாயிரவருஷந் தவஞ்செய்து அழியாத உயர்பதவியை யடைந்து, ஸப்த ருஷிகளின் மண்டலத்துக்கு மேலேயிருந்து நக்ஷத்திரகங்கட் காதாரமாய் ஜோதிஷ் சக்கரத்தின் சூத்திரத்தைக் கைப்பற்றி விளங்குகின்றன். துருவனுக்குப் புஷ்டியென்னுங் கன்னிகையும், கான்யன் என்னுங் குமாரனுந்தோன்றினர். புஷ்டியென்பவளிடம் ரிபு ரிபுஞ்சயன் விப்ரன் விரகலன் விருகேதனுஜன் என ஐந்து புத்திரர் ஜனித்தனர். ரிபு வென்பான் புஷ்கரிணி யென்பானை மணந்து புத்திரர் ஜனித்தனர். ரிபு வென்பான் சாக்ஷுஷனென்னு மநுவைப்பெற்றனன். வைராஜ மநுவினிடத்தில் அரட்வலி யென்பாளுக்கு ருரு பூரு சதத்யும்னன் தபஸ்வி ஸத்யஸித்து கவி அக்னிஷ்டோமன் அதிராத்திரன் அதிமன்யு சுயேசசன் எனப்பதின்மர் புத்திரர் பிறந்தனர். ருருவென்போன் ஆக்னேயியென்னும் பெண்ணை மணந்து அங்கன் சுமனஸ்கியாதி மூருதி ஆங்கிரஸ் ஸ்ரஷ்டியென அறுவரைப் பெற்றனன். அங்கன் ஸுநீதியென்பவளிடத்தில் வேனராஜனைப்பெற்றனன். அந்த வேனனுடைய அசாகதியிற் சிறிது குறைபாடுளதால், சந்ததிசிர்த்தியில்லாது வருந்துகையில், வேதியர் அவனது கையை மதனஞ்செய்ய, அவனது வலதுகையினின்றும் பிருதுசக்கரவர்த்தி யில்லுமம்பும் லக்ஷ்மி தேஜஸும் சகலசாஸ்திர வைசக்ஷண்யமும் கூடிய முதல்வனுகப் பிறந்து, உலகினைச் சமமாகத்திருத்தி அரசுபுரிந்தான். அநேக இராசசூய அசுவமேதாதிகளைச் செய்தான். பிருது வென்பவனுல் திருத்தப்பட்ட தாதலின் உலகுக்குப் பிருதிவியென்று பெயராயிற்று. தேவர் ருஷிகள் தானவர் உலகுக்குப் பிருதிவியென்று பெயராயிற்று. தேவர் ருஷிகள் பிதுர்க்கள் கந்தர்வர்கள் முதலிய வெல்லோருக்கும் உணவுண்டாகும்படி பலவிதமான தானியங்கள் வினையத்தக்க பயிர்களும் செடிகளும் மரங்களும் விருத்திசெய்து இப்பூமி முழுதுக்கும் சக்கிரவர்த்தியாயிருந்தான். அவனது

கோடையினுலேதான் யாவரும் பசிதணிக்க வழியிலிருந்தார்கள். அக்கப் பிருதுவுக்கு ஸுதமாகதர்என இரண்டுபுதல்வர் தோன்றினர். அவர்களைத் தனது சைனியங்களுக்குத் தலைவர்களாக்கிக் கொண்டனன்.

ஐம்பத்துமூன்றுவது
மேற்படி அத்தியாயம்.

முனிவர்களே! அக்கப்பிருது சக்ரவர்த்தியினிடத்தில் ஹவிர்த்தானி ஹவிர்த்தாமனென இரண்டுபுதல்வர் மீண்டும் பிறந்தனர். ஹவிர்த்தாமன் சிகண்டினியை விவாகஞ்செய்து பிராசீனபர்ஹி யென்பவனையும், பிராசீனபர்ஹி சமுத்திரதனயையை மணந்து பிரசேதஸ் என்னும் பெயர் வாய்ந்த பத்துப் புதல்வனையும் பெற்றனர். அவ்வாறு தோன்றிய அப்பதின்மரும் தநுர் வேதஸ்ல்லவர்களும் ஒரேமாதிரி தர்மானுஷ்டானஞ் செய்வோருமாய்ப் பத்தாயிரவருஷஞ் சமுத்திரத்தில் மூழ்கி உக்கிரமான தவத்தைச் செய்தார்கள். அப்பொழுது உலகத்தை அரசு செய்வோரின்றி உலகமுழுவதுஞ் செடிகளும் மரங்களுமாகிப் பிரஜைகள் குறைந்தன. இவ்விதமாகச் செடி கொடி படர்ந்து வளர்ந்தமையைக்கண்ட தசபிரசேதசுக்கள் தங்கள் கோபாக்கினியால்அவைகளையும்ஜனங்களையும்நாசஞ்செய்ய எத்தனித்தார்கள். இவ்வாறு செய்வதைக் கண்ட சோமராஜன் அவர்களை யவ்வாறு செய்யாதிருக்கும் படியும், கோபத்தைத் தணிக்கும் படியும் வேண்டிக் கொண்டான். மீண்டும், நானொரு கன்னிகையைத் தங்களுக்காகவே வைத்துக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் இவ்வாறு செய்வதாற் பிரபஞ்சம் நசித்துவிடுமென்று கருதியே யவளைக் காப்பாற்றி வருகிறேன். அவளை நீவிர் வதுவைசெய்தாற் பிரபஞ்சவிர்த்தியாகும். அவளிடத்தில் என்னுடைய அனைப்பாகத் தேசசாலும், உங்களுடைய அனைப்பாகத்தேசசாலும் தக்ஷப்பிரஜாபதி யுற்பத்தியாகப்போகிறன். அவன் உக்கிரமான பிரமதேசசோடு பிரபஞ்ச சிருஷ்டி செய்யப்போகிறன் என்று அரசன்கூற, அதற்கிணங்கி பதின்மரும் அவ்வாறே அவளைத்தருமமார்க்கமாக மணமுடித்துக் கொண்டனர். அவளிடம் தக்ஷப்பிரஜாபதி சந்திரனம்சத்தாலும், இருமூர்த்தியம்சத்தாலும் உண்டானன். தக்ஷன் சராசரங்களையும், சதுர்ப்பாத ஜந்துக்களையுஞ் சிருஷ்டிக்கவெண்ணிப் பிரதமத்திற்சில கன்னியர்களை யுண்டாக்கி, அக்கன்னியரிற் பதின்மரைத்தான் மணந்தும், பதின்மூவரைக் காசிபருக்கும், மற்றிருபது நக்ஷத்திரங்களுக்குங்கொடுத்தான். அத்தக்கன்னியரிடமிருந்துதேவாசுரர்களும்பக்ஷிகளும் நாகங்களு மின்னு மநேகமானவையு முண்டாயின. அதுமுதற் கொண்டே சம்போகஞ்செய்வதாற் சிருஷ்டியாகின்றதன்றி, அதன் முன் மனசங்கற்பத்தினுலும், தரிசனஸ்பர்சத்தினுலும், பரிசத்தினுலும் சிருஷ்டியுண்டாயிருந்த தென்று கூறிய ஸுதமுனிவனைப் பார்த்து, சௌனகாதி முனிபுங்கவர்கள் கேட்டலாயினர். ஸுதமுனிவரே! முன் தக்ஷப்

பிரஜாபதி பிரமனது பெருவிரலினின்றுந் தோன்றினரென முற்கூறி, இப்பொழுது தசப்பிரசேதசுக்களுக்குப் புத்திரராயவதித்தாரென்றும், தன் பெண் புத்திரியைச் சந்திரன் வதுவைசெய்தானென்றுஞ் சொல்லுகின்றது சந்தேகமாயிருத்தலின், அதை விளக்கும்படி வேண்டுகின்றோம் என்ற வகிராரண்ணிய முனிவர்களை நோக்கி, முனிவர்களே! உற்பத்தி நாசம் பிரமனுக்கிருக்குக் கற்பக்தோறு முண்டாகிற படியாலும் பூர்வத்தில், சிருஷ்டி மானசிகமாயிருந்தபடியாலும், ஜ்யேஷ்டகனிஷ்ட இரமமும் பெண் புத்திரனென்ற இரகமும் முறைமை பதசரித்துக் கலியாணஞ் செய்யுங் இரமமும் கிடையா. ஸ்திரீ புருஷரள் கூடியபின்பே இத்தகைய முறைகளேற்பட்டன. இதைப்பற்றிப் பண்டிதர்களாயுள்ளவர்கள் சந்தேகப்படுவது தவறு. தக்ஷப்பிரஜாபதியாலேற்பட்ட பிரபஞ்ச சிருஷ்டியினரும் பத்தைப் பத்தியோடு கேட்பவர்களும் படிப்பவர்களும் புத்திரசம்பத்தும் தீர்க்காயுவும் சிவலோக சாம்பிராச்சிய முதலியனவும் அடைவார்களென்று ஸுதமுனிவர் கூறினர்.

உலக விருத்தியுண்டாத்தது
முற்றிற்று.

ஐம்பத்துநான்காவது
காசிபர் முதலானர் பரம்பரையுரைத்த அத்தியாயம்.

சௌனகாதி கைமிசாரண்யவாசிகள் ஸுதமுனிவனை நோக்கி, ஸ்வாமீ! தேவர் தானவர் கந்தர்வர் இராக்ஷசர் முதலானுருண்டாய சிருஷ்டியை விரித்துச் சொல்லவேண்டுமெனக்கேட்க, ஸுதமுனிவர் சொல்லத் தொடங்கினர். முனிசிரேஷ்டர்களே! பூர்வத்தில் தக்ஷப்பிரஜாபதி தன் மனதிற் சிருஷ்டிசெய்து, அது விருத்தி யடையாமையை யோசித்து வீரணிப்பிரஜாபதியின் குமாரத்தியைப்புணர்ந்து அவளிடத்தில் ஆயிரம் புத்திரர்களை யுண்டுசெய்தனர். இவ்வாறு உண்டுசெய்த ஆயிரம் புதல்வர்களும், முன்னமே பிரமதேசவிடத்தினின்று தோன்றிய நாரத முனிவர் பார்த்து, சிறுவர்களே! உங்களுக்குச் சிருஷ்டியினியத்தில் யாது தெரியும்? காசிபமுனிவர் தக்ஷப்பிரஜாபதியின் புதல்வியிடமாகச் சிருஷ்டி செய்யப் போகிறர். பூமியின் திக்குகளையும் பிரதேசங்களையும் செவ்வையாகத் தெரிந்துகொண்டு சிருஷ்டி செய்யத்தொடங்குங்களென்று சொல்ல, அவ்வசனத்தையைக்கேட்டு, அவ்வண்ணமப்படி பூமிமுழுவதையும் பார்த்துவரும்படி சென்றார்கள். அவர்கள் இவ்வாறு சென்றமையைத் தெரிந்துகொண்ட தக்ஷப்பிரசாபதி மீண்டும் ஹரியன்வா வென்னும் பெயருடைய இக்ஷ்வாகு புதல்வனை யுண்டுசெய்து, அவர்களைச் சிருஷ்டி செய்யும்படி விரும்ப, அவர்கள் தக்ஷதாதைப்படி சிருஷ்டிக்கு யத்தனித்தலையில் நாரதமுனிவன் அவர்களையுங்கண்டு, மதியில்லாச் சிறுவர்களே!

பூமியின் பிரமாணத்தை யறியாது எவ்வாறு சிருஷ்டி செய்வீர்கள்? என, அதனைக்கேட்டு அவர்களும் பூமியின்பிரமாணத்தை யுணரப் சென்று, பலதிக்குகளிலு மலர்ந்து சுழன்று அவற்றின் பிரமாணத்தை யுணராது, சத்தியலோகத்தை நோக்கிச் சென்ற நதியானது திரும்பிவராதது போல அவர்கள் அவ்வாறே சென்றனர். அப்படியவர்களுந் திசைகளின் பேர், சென்றதை யறிந்துகொண்ட தக்ஷப்பிரஜாபதி வீரணியென்னும் தன் மனைவியிடமாக அறுபது கன்னிகைகளை யுண்டுசெய்து, அவருள் பத்துப் பெண்களைத் தர்மப்பிரஜாபதிக்கும், பதின்மூன்றுபெண்களைக் காசிபருக்கும், இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும், தான்கு பெண்களை அரிஷ்டநேமிக்கும், இரண்டுபுத்திரிகளைப் பிரமபுத்திரருக்கும், இருவரை ஆங்கிரசருக்கும், இருவரைக்கிருசாசுவர்க்கும் மணம்புரைத்தினர். அவருள் அருந்ததி வசு ஜாமி லம்பை பாநு மருத்வதி சங்கல்பா முஹூர்த்தை ஸாத்தை விசுவை யென்னும்பதின்மர் தர்மப்பிரசாபதியின் மனைவியர். அவரில் விசுவையென்பவள் விசுவே தேவர்களையும், ஸாத்யாவென்பவள் ஸாத்தியாரையும், மருத்துவதி மருத்துக்களையும், வசு வசுக்களையும், பாநு பானுக்களையும், முஹூர்த்தை முகூர்த்தங்களையும், லம்பை யென்பவள் கோஷத்தையும், ஜாமியென்பவள் நாகவீதியென்னும் பெண்ணையும், அருந்ததி பூப்பிரதேசங்களையும், சங்கல்பா வென்பாள் சங்கற்பத்தையும், சத்தியத்தையும் பெற்றனர். வசுவென்பவள் பெற்றமக்கள் அபன் துருவன் சோமன் தரன் அநிலன் அநலன் பிரத்தியூஷன் பிரபாசன் எனப்படுவர். அந்த வசுக்க ளெண்மரில் அபன் என்பவள் வேதண்டன் சிரமன் சாந்தன் முனி யென நால்வனையும், துருவ னென்பவன் காலன் லோகப்பிரபவன் என விருவனையும், சோமனென்பான் வர்ச்சான் என்பவனையும், தரனென் பான் மனோஹரையினிடத்தில் திரவிணன் ஹுதஹவ்யவஹன் சிசிரன் பிராணன் ரமணன் என்பானையும், அநிலனென்பான் சிவையென்னு மனைவியிடம் புரோஜவனையும், அநலனென்பவன் கிருத்திகைப் பெண்கள் அறுவரைமணந்து அக்கினிபுத்திரன் குமாரன் சரன்தம்பன் சாகன் விசாகன் நைகமேயனென அறுவரையும், பிரத்தியூஷனென்பவன் தேவல னென்னு மிருடியையும் உண்டுசெய்தனர். தேவலவிருடி பிரபாவன்க ளானவிருவரைப் பெற்றனன். பிரகற்பதியின் தங்கையை எட்டாவது வசுவான பிரபாசன் மணந்து தொஷ்டா என்பவனைப் பெற்றனன். அவன் தேவதச்சனுப்ச் சர்வாபரணங்களையும் விமானங்களையுஞ் செய்யவல்லவ னாடைந்தனன். தொஷ்டா விசுவரூபனைப்பெற்றனன். இதுவே தர்மப்பிர ஜாபதியின் வமிசமாம்.

முனிவர்களே! அதிதி திதி தநு அரிஷ்டை சுரசை இலை சுரபி விநதை தாம்ரை குரோதை சமை கத்ரு சனி*யென்னும் பதின்மூவர் காசிபருடைய மனைவியர். அவருள் அதிதி யென்பவள் சாதுரை மன்வந் தரத்தில் விஷ்ணு சக்ரன் அரியமான் தாதா த்வஷ்டா பூஷா விவஸ்வான்

சவிதா மித்ராவருணன் அம்சோபகன் அதிதேஜன் என்போரைத் துவஷ்டர் ளென்னும் பெயருடன் பெற்றனள். இவர்களே ரைவதமன்வந்தரத்திலும் துவாதசாதித்தர்களாயிருந்தார்கள். சூரியன் மனைவியாகிய அசுவினி முதலிய இருபத்தேழு மாதர்களிடம் அதிரூபதேக முடைய அதேக புத்திரர்களுண்டானார்கள். அரிஷ்டநேமி தன் மனைவியர் நால்வரிடம் பதினாறு பிள்ளைகளைப்பெற்றனன். கிருசாசுவன் தேவர்களது ஆயுதங்க ளாகிய அஸ்திர சாஸ்திரங்களை யீன்றனன். சூரியன் நாடோறுந்தோன்றி அஸ்தமனமாவான் போல இவ்வாறு வரன் முறையாகத் தோன்றிய முப்பத்து முக்கோடி தேவர்களும் கற்பக்கிடாறும் உண்டாகி லயமடைகிறார்கள். காசிபர் மனைவியரில், திதி யென்பவளிடம் இரணியகசிபு இரணியாக்ஷன் என்னும் பராக்கிரமசாலிகளான இரண்டு புதல்வரும், சிம்ஹிகை யென்னுங் கன்னிகையுந் தோன்றினர். இரணியகசிபு அநுக்கிலாதன் ஹிலாதன் பிரஹலாதன் ஸம்ஹிலாதனென நான்கு புதல்வரைப் பெற்றனன். ஹிலாத னுக்கு ஹிலதனும், ஹிலதனுக்கு ஆயுஷ்மான் சிபி காலனென மூவருந் தோன்றினர். பிரஹலாதனுக்குவிரோசனனும், விரோசனனுக்குப்பலியும், பலிக்கு வாணாசுரன் முதலிய நூற்றுவரும் பிறந்தனர். ஹிரண்யாக்ஷனுக்கு குருதகன் சகுனி பூதசந்தாபனன் மகாநாதன் காலநாபனென ஐவர் பிறந் தனர். தநுவென்பவள் காசிபரால் விரிய்யபராக்கிரமத்தோடி கூடிய தாறு புதல்வரைப்பெற்றனள். அதிற் பிரதானமானவர்கள் திவிமூர்த்தன் சகுன் பலி சிவன் பிரபு அயோமுகன் சம்பரன் கபிலன் வாமனன் விசுவாநரன் புலோமன் விக்ரநாவணன் மகாசரன் சுவர்ப்பாநு விருஷபர்வன் விப்பிர சித்து எனப்படுவர். இவருள் சுவர்ப்பாநு வென்பவன் பிரபாவையென் பவளையும், புலோமன் சசியென்பவளையும் பெற்றார்கள். விருஷபர்வா வென்பவன் மகளாகச் சர்மஷ்டையைப் பெற்றன். வைஸ்வானவனுக்குப் புலோமை காலிகையென்னும் இருகன்னியர் தோன்றினர். மரீசியின் வமிசத்தில் அறுபதினாயிரம் தானவர்களும், பௌலோமர், காலகஞ்சர் ஆகிய பேதமுள்ளவர்கள் தோன்றி, பிரமனைக்குறித்து வெகுகாலந்தவஞ் செய்து, சுவர்ண மயமான பட்டணங்களைச் சம்பாதித்து தேவர்களாற் சாகாவரம்பெற்று வாழ்ந்தார்கள். விப்ரசித்தியென்போன் சிம்ஹிகையை மணந்து உக்ர பராக்கிரமத்தோடி கூடிய சைமிகேயாளாவை இராகு கன்னியன் சுபலி பலன் மகாபலன் வாதாபி கமுச்சி வில்வலன் கல்சகுபன் அரகன் நரகன் காலகாபன் சரமாநன் சரகற்பன் என்னும் பதின்மூன்று பின்னோகளுண்டாகி, அவர்களால் அநேகம் புத்திரபௌத்திரரைப் பெற்ற னன். இரணிய கசிபன் பின்னோயாகிய சமக்கலாதனனுக்கு நிவாதகவசிக ளாகிய அதிபராக்கிரமசாலிகள் உண்டானார்கள். தம்மையென்னும் காசிபர் மனைவிக்குள்வத்தைச்சந்திக்கும் பகதிகள் தோன்றின. அவர் மனைவியருள் காகியென்பாள் காக்கையையும், உலூகியென்பாள் கோட்டான் வகைகளை யும், சேனியென்பாள் பெண் பருந்தையும், பாசியென்பாள் ஆண்பருந்தை யும், திருதி யென்பாள் கழுக்களையும், ஸுகியென்பாள் இனிகளையும்,

சுக்கிரி யென்பான் சுகமான பகதிகளையும், தாம்பரையென்பான் குதிரை கழுதை முகியவற்றையும் பெற்றார்கள். வினதையென்பான், பகதிராதி யிற் கிரேஷ்டனுகியும் வேகத்தில் வல்லவனுகியுமிருக்கும் கருடனையும் அருணனையுமீன்றாள். கத்துருவென்பவள் பலதிரங்களோடி கூடியதாயும் ஆகாயத்திற் சஞ்சரிக்கவல்லதாயும், காமரூபியாயும் உள்ள, சேஷன் வாகி கருகன் ரோதன் மகாபத்மன் கம்பளன் அசுவதரன் ஏலா புத்திரன் பத்மன் கார்க்கோடகன் தனஞ்சயன் மகாலேன் மகாவர்ணன் திருதராஷ்டிரன் பலாக்கன் சுகன் புஷ்பதந்தன் துர்முகன் சுமுகன், பஞ்சன் கரோமன் பாணி முதலிய நாகாக்களைப்பெற்றாள். * வாயென் பவன் அண்டசமாகிய பகிகள் பசுக்கள்முதலியவற்றைப் பெற்றாள். ஹரு வென்பான் பலவான்களாகிய ஐம்பது புத்திரனையும் விருஷம் கெடி கொடி முதலியவற்றைப்பெற்றாள். சுரபியென்பவள் முயல்களையும் எருமை வகைகளையும் பெற்றாள். இலை யென்பவள் புல் பூண்டி முதலிய ஓஷதிகளையும், சுவசை யக்ஷராக்ஷசர்களையும், முனியென்பவள் அப்சரசு களையும், அரிஷ்டாவென்பவள் காணித ஜந்துக்களையும் பெற்றார்கள். மேற்காட்டிய காசிபர் சந்ததியில் அநேக புத்திர பௌத்திரர்கள் தோன்றி உலகத்திற் பரவினர்கள். இத்தச்சிருஷ்டிகளையும் சுவாரோசிஷ மன்வந் தரசிருஷ்டி யென்னும் பெயரையுடையன. இனிவைவச்சுதமன்வந்தரசிருஷ்டி யின்வகையைக் கூறுகின்றேன்.

முனிவர்களே! இந்த மன்வந்தர சிருஷ்டியினாரம்பத்திற் பிரம தேவர் யாகங்களைச்செய்து பூர்வத்திலுள்ளி பண்ணின பிரகாரம் மான சிகமாய் ஏழுபுத்திரரை யுண்டாக்கினர். முன்னுண்டான தேவதானவர் களுக்குள், பெரிய கலகமுண்டானதால் அசுரர்கள் நசித்துப் போனதைக் கண்டதிதி யென்பவள் காசிபரைச் சரணடைந்து, தேவர் தலைவனை இந்திரனைக்கொல்லக்கூடிய புத்திரன் வேண்டுமென்று பிரார்த்தித்தாள். காசிபர் அதற்கிசைந்து, நீ ஆயிரவருடகாலம் நியமமாகப் புண்ணிய பூமி யில் விரதத்தையநுஷ்டிக்கும் பகுதத்தில் இந்திரனைக் கொல்லவல்ல புத்திர னைப்பகன். இவ்விரதநியமத்திற் றவறினுல் உன்மனோரதம் நிறை வேறு தென்றுனிடைதந்து தவத்துக்குச் சென்றனர். அவ்வாறே திதியென்பவள் பூலோகத்தில் தவஞ்செய்திருக்க இந்திரன் இவள் கருப்பத்தில் தனக்கு விரோதியுண்டாகுமென்றறிந்து அவள் கருப்பத்தைக் கலைக்கவேண்டி மென்று மெண்ணத்தோடி தாயென்னும் முறையாட்டி பணிவிடை செய்ய பாதுகாலங்கொண்டு வந்தான். இவள் விரதத்தில் ஆயிரவருடத் தில் நூறுவருடங் குறைவாயிருக்கையில் திதியென்பவள் அதிக பிரயாசை யிறும் சோர்வடைந்து பகற்காலத்தில் தலைமயிரைப் பாதத்தில் அளிந்து விட்டுத் தன்னை மறந்து நித்திரை யாயினள். அந்த சமயத்தில் இந்திரன் வச்சிராயுதபாணியாய் வெளியே வழிபாய்க் கருப்பத்திற் பிரவேசித்துப்

* ஸர்பங்களுக்கு-மேற்கூறிய மூன்றுமனைவியரிற் பல மனைவியருளரென்க.

பிண்டத்தைக் குலிசத்தால் வெட்டுகையில், கருவிலுள்ள குழந்தை சந்த மிட்டலற, இந்திரன் மாரோதீ! மாரோதீ! [அழாதே அழாதே] என்று சொல்லிக்கொண்டே ஏழுபிளவாக்கிப் பின்னரும் எவ்வேழுபிளவாக்கி வெளியில் வந்தான். அவ்வாறு வந்த இந்திரனைக்கண்டு திதியானவள் துக் கிக்க, இந்திரன் தாயே! நீ நியமத்தப்பி யிருந்தமையால் கருப்பத்தி லிருந்த என் சத்துருவைத் துண்டித்தேன். ஆகையால் என்னளவிற் கோபிக்கவேண்டாமென, அவனைக்கண்ட திதி, என்னுடைய குற்றத்தி னுலேயே காரணமடைந்த கருப்பம் பலவாகு மாகையால் அவற்றை நின் லோகத்தில் வைத்திருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். அவ்வாறே இந்திரன் ஏழுலோகத்திலும் எவ்வேழு பெயர்களாக மாருதர் களென்னும் பெயரோடு வசிக்கும்படி வரங்கொடுத்துத் தன்னுலகஞ் சார்ந் தான். இவ்விதமாகப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிசெய்து, பிருது முதலிய சக்கிரவர்த்திகளையும், இந்திரன், பிரஜாபதிகள், பர்ச்சன்யன், குபேரன், முதலிய சுவர்க்கவாசிகளையு முண்டாக்கினர். வேனனுடைய பிள்ளையாகிய பிருது சக்கிரவர்த்தியை அகண்ட பிரபஞ்சத்தைப் பலவேறு பாகங்க ளாக்கும்படி யாக்கியாபித்தார் என்று ஸுதகுமாரமுனிவர் கூறினர்.

காசிபர் முதலானூர் பரம்பரையுரைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவது

உலகநாயக ருவைத்த அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகள் ஸூதமுனிவரை நோக்கி, ஸ்வாமீ! பிரபஞ்ச சிருஷ்டியைச் சொன்னீர்களே! இவர்களில் எவ்வகையாக எவ்வெவர் எவ்வெவர்க்குத் தலைவர்களா யிருக்கின்றனரோ அதனையுமறிய விரும்புகின்றோமெனக் கேட்க, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். முனிசிரேஷ்டர்களே! பிராமணர், நக்ஷத்திரம், நவக்கிரகம், ஓஷதிகள், யக்ஞ யம், தவம் முதலியவற்றிற்கு அதிபதியாக சந்திரனையும், ஜலத்திற்கு வருணனையும், அரசர்களுக்குக் குபேரனையும், ஆதித்தர்களுக்கு விஷ்ணு வையும், அஷ்டவசுக்களுக்கு அக்கினியையும், பிரஜாபதிகளுக்குத் தக்ஷனை யும், மருத்துக்களுக்கு இந்திரனையும், தைத்திய தானவர்களுக்கு பிரகலா தனையும், பிதுர்க்களுக்கு யமதருமனையும், விரதங்கள் மாதாக்கள் மந்திரம் பசு (ஆன்மாக்கள்) யக்ஷராக்ஷசர் அரசர்கள் சர்வபூத பைசாசங்களுக்குஞ் சூலபாணியாகிய பரமேசுரனையும், பருவதங்களுக்கு ஹிமவானையும், நதி களுக்குச் சமுத்திரத்தையும், மிருகங்களுக்குச் சார்த்தூலத்தையும், பசுக்களுக்கு விருஷபத்தையும், கொடி செடிகளுக்கு விருக்ஷங்களையும் ஸுமனர்களாக நியமித்தும், அஷ்டதிக்குகளுக்குள் கிழக்கில் சுதன்மனை யும், தென்கிழக்கில் தெய்வதனென்பானையும், மேற்கில் கேதுமானையும், வடதிக்கில் ஹிரண்யரோமனையும் அரசராக ஸ்தாபித்தார். வைவஸ்வத

முதலின சிருஷ்டியை இதுகாறுஞ்சொன்னேன். இச்சிருஷ்டியின் வைபவங்களைப் படிப்போருஞ்சோட்போரும்தீர்க்காயுள்பெற்றுக் நிர்த்திமான்களாயிவ்வுலகில் வாழ்ந்து இறுதியிற் சிவபதமடைவர் என்று கூறியருளினர்.

உலகாராயகருணாத்தது
முற்றிற்று.

ஐம்பத்தாருவது

பிருதுசக்கிரவர்த்தியின் பிரபாவமுணர்த்த அத்தியாயம்.

சனகாதி முனிவர்கள் லூதமுனிவரைநோக்கி ஸ்வாமி! வேனனுடைய சரித்திரத்தையாமுணரவிஸ்தரித்துரைக்கவிரும்புகின்றோமென, அவர்களை நோக்கி லூதமுனிவர் கூறுகின்றார்: பூர்வத்தில் தருமவானும் அத்திரி யென்னும் பிரஜாபதிக்குச்சமமான வல்லமையோடு கூடியவனுமான அங்கப் பிரஜாபதியென்பான் றோன்றினன். அவனுக்கும் மிருத்தியுவின் பெண்ணிய சுநிதி யென்பவளுக்கும் வேனனென்னுமோர் புத்திரன் உதித்தான் அவன் தருமஞ்செய்வதில் மனமற்றிருந்தான். அவன் மிருத்தியுவின் தொழிலித்திரன் (பெண்வயிற்றுப்போகன்) ஆனதால் மிருத்யு தோஷத்தால் சுதர்மத்தையிட்டுக் காமத்திற் பிரியமுள்ளோனாய்த் தருமசாத்திரத்திற்கு விரோதமாகிய ஏற்பாடுகளை யுண்டுசெய்து, வருணச் சிரமங்களைச் சரிவர நடத்தச் செய்யாமல் அதருமவானு மிருந்தான். அவனரசாட்சியில் யாகாதி கிருத்தியங்கள் குறைந்தும், வேதசாஸ்திர பாராயணம் மட்டுப்பட்டும், தேவாலயபூசை நடவாமலும், யாகஞ்செய்ய வெத்தனிக்கும் பிராமணர்களைத் தேவர்களால் தடுத்தும், தவஞ்செய்வோரது நிலையைக் கெடுத்தும் அரசுசெய்தான். அவ்வேனனுடைய அக்கிரமத்தைக் கண்டு மரீசி முதலிய முனிவர் அவனை நோக்கி, நாங்கள் அநேககாலஞ்செய்து முடிக்கவேண்டிய யாகங்களைச் செய்து முடித்து உலகத்திற்கு நேமம் முண்டு செய்ய, நீகையைவிட்டு நிசரண்டோம். அவ்விரதத்தைக் கூடாதென்று தடைசெய்யவேண்டாம், நீ இப்படிசெய்வது நியாயமன்று. நாங்கள் செய்வது அநாதியாகிய தருமம். இவ்விதி தருமத்தையும் குடிகளையும் காத்து இரக்ஷிக்கும்படியே நீ படைக்கப்பட்டிருக்கிறாய். குடிகளை (ரஞ்சனை) இரக்ஷணைசெய்வதால் இராஜாவென்னும் பேர் கொடுக்கப்பட்டது, அந்தப்பெயரைக் கெடுத்துக்கொள்ள வேண்டாமென, அம்முனிவர்களை நோக்கி, புத்தியில்லாத வேன சக்கிரவர்த்தி நமக்கு, என்னைக்காட்டிலுந் தருமத்தை யுண்டு பண்ண வல்லவன்யார்? யாருடைய தருமத்தைக் கேட்டு நடக்கவேண்டும்; எனக்குமேலோர் ஆசிரியரில்லை. என்னை அதர்மனென்று சொல்லவந்த உங்களுக்குத் தருமம் தெரியாது. நீங்கள்தான் மூடர்கள் என்று பலவாறு இகழ்ந்து கிரிலோகத்திலுந் தனது அதர்மம் பரவச்செய்தனன். மீண்டும் முனிவர்கள்

சாமபேததான தண்டோபாயங்களால் வேண்டியது கூறியும் பலன் படாமையாற் கோபங்கொண்டு, அதிகபலிஷ்டனாகிய வேனனை முன்னே வேன்சக்கிரவர்த்தியின் இடது தொடையிற் பலாத்காரமாகத் தங்கள் தவவல்லமையாற் கடைய, அத் தொடையினின்றும், குறுகிய வடிவமும், பருத்தசரீரமும், கரியநிறமும் உள்ள ஓர் புருஷன் தோன்றி, அஞ்சலியஸ்தனாய் முகத்தை நேரேநிறுத்த வேண்டுமென்று கூற, அவனுக்குப் பட்டாபிடேகஞ் செய்தார்கள். அவன் பூமண்டலங்களுக்கெல்லாம் அரசனாகி மகாதேஜசுடையவனாயும் பிரதாபவானாகியும் பிருது சக்கிரவர்த்தி யென்னும் பெயரோடுந் தன்பிதாவால் நிரஸ்கரிக்கப்பட்ட தருமங்களையும் குடிகளையும் தான் அதிக அன்போடு விருத்திசெய்து பாதுகாத்து அரசனென்னும் பெயருக்கு இலக்கியமாயிருந்தான். அவனரசாகிதாலத்து, குடிகளடைந்த சந்தோஷத்தை யென்னென்று கூறுவேன்? அவன் ரதாருடனாய்ச் செல்லுங்காலத்து, நதிகள் தாழ்விடத்தே வழிவிடவும், பருவதங்கள்தாழ்ந்து சமவழிகாட்டவும், பூமி தானியத்தை விசேஷித்துக் கிருஷித்தொழிலின்றிக் கொடுக்கவும் பசுக்கள் எண்ணிய ரசபதார்த்தங்களையும் சகலவித வஸ்திரங்களையுங் கொடுக்கவும் அரசன் சந்தோஷித்திருந்தனன்.

இவ்வகையாகப் பிருது சக்கிரவர்த்தி செங்கோல் செலுத்திக்கொண்டு வருகையில் பிரமதேவர் ஒரு யாகஞ்செய்தனர். அப்பொழுது அப்பூர்ணகுதியில் ஸூதன் மாகதனென இருவர்தோன்றினர். அருகிருந்த மகருஷிகள் அவ்விருவரையும் பார்த்து நீங்கள் பிருது சக்கிரவர்த்தியின் சரித்திரத்தை அதிசயிப்புடனெக்கூற, அதனைக்கேட்ட ஸூதமாகதர்

முனிவர்களே! யாங்கள் இப்பொழுதே தேவதேவனுமாதலின் இவ்வரசன்று பிரபாவங்களே யெப்படி யறிவோம்? என, முனிவர்கள் இனிகடக்கப் போகிற விஷயங்களே யெடுத்துக் குறிசெய்யுங்களென, அவ்விருவரும் அவ்வாறே குறிசெய்ய, அதனைக்கேட்ட பிருது சக்கிரவர்த்தி பெருங்களிப்புடன் அவர்களில், அநுபமேசமென்னும் இராச்சியத்தை லுதனுக்கும், மகதராச்சியத்தை மாகதனுக்கும் கொடுத்தனன். அப்பொழுது அருகிருந்த தேவர்கள் அவ்விருவரையு நோக்கி, இவ்வரசன் உங்களிருவருக்கும், உலகத்தாருக்கும் விருத்தி யுண்டுசெய்யப்போகிறா னென்று கூறினர். அவ்வமரர் வார்த்தையைக்கேட்டலுமதகதரும் பிராமணர்களும் பிறரும் பிருது சக்கிரவர்த்தியை யடைந்து, எங்களுக்குச் சிவனே பாயத்தைக் கற்பிக்க வேண்டுமென்க் கேட்டனர். அதனே யவ்வாறே யுண்டுசெய்யவேண்டு மென்னும் கருத்துடன் பிருதுசக்கிரவர்த்தி வில்லையும் அம்பையுமெடுத்துப் பூமியினின்று, இவர்கட்கு ஆகாரத்தை யுண்டு செய்ய நினைக்கையில், பூமிதேவி பயமடைந்து பசுவடிவேற்று உலகமுழுவதுந் திரிய, சக்கிரவர்த்தியும் தனுஷ்பாணியாய்ப் பின்தொடர்ந்துதூரத்த, பூமிபயந்து இந்திராதிதேவர்களைச் சரணடைந்து தன்னே ரகிக்கவேண்டுமென்றுகேட்டும் ஒருவருஞ் சரணக்கொடாமையால் மீண்டு பிருதுசக்கிரவர்த்தியையே சரணமடைந்து அஞ்சலியத்தஞ்செய்துகொண்டு அரசனே! யானில்லாமல் இவ்வுலகத்தை நீ யெவ்வாறு பரிபாலனஞ் செய்வாய்? சர்வஜனங்களும் என்னிடத்தில் வசிக்கிறார்கள். சர்வஜகத்திற்கும் நான் ஆதாரமாயிருக்கிறேன். என்விஷயத்திற் சண்டைசெய்து கற்பக்கடோறும் அநேக மன்னர்கள் மாண்டு போயினர். நீ கீர்த்தியை யடைய வேண்டுமென்று விரும்புகிறபக்ஷத்தில் என்னே யிம்சிக்கவேண்டாம். நீ சுகந்திரத்தினல் முயற்சிசெய்யும் பக்ஷத்தில் உன் மனோரதங்களெல்லாஞ் சித்திக்கும்; இப்பிரஜைகளே யெல்லாம் நீ பாதுகாப்பாய். என் விஷயத்திற் கொண்டகோபத்தை நான்பெண்ணினை மாதலின் பாராட்டவேண்டாம். பிருதுவிபாலனென்னும் பெயரையடையப்போகிறாய், அதற்கு விரோதமாகத் தருமத்தை நாசஞ்செய்யாதே எனறிவ்வாறு பலவிதமாக நல்லவார்த்தைகள் சொல்லினள். அவளது வார்த்தையைக் கேட்ட தாமசிலுகிய பிருது சக்கிரவர்த்தி கோபத்தையடக்கி, பூதேவியே! ஒருவன் நிமித்தமாக அநேகரைக் கொல்வது தர்மமல்ல. அநேகருடைய நன்மை நிமித்தமாக ஆணுயிருப்பினும் பெண்ணுயிருப்பினும் ஒருவனைக்கொல்வது தர்மமேயாம். இப்பிரசைகளே யிரகஷிக்கவேண்டியுன்னே யிம்சிக்க விரும்புகின்றேன். நீ என் சொல்லே நிதமாகப்பாராட்டி வசுந்தரா [வசு - தரித்தல், தரா - தரித்தவள்] என்னும் பெயரைப் பிரித்தப்படுத்தி என் விருப்பத்தின்படி ஜனங்களே யிரகஷிக்கவேண்டியது என்று கூறினன்.

பிருதுசக்கிரவர்த்தியின் பிரபாவமுணர்த்தது
முற்றிற்று.

ஐம்பத்தேழாவது
பூமிதேவி பசுவடிவுற்ற அத்தியாயம்.

முனிவர்களே! பூமிதேவியானவள் பிருது சக்கிரவர்த்தியை நோக்கி, அரசனே! யான் கோரூபமாக நிற்றலின் எனக்கேற்ற கன்றொன்றேதடி, பர்வதமுதலிய மேடுபள்ளங்களைத் திருத்தினால் என்பாலிச்சர்வ விடங்களிலும் பாயும்படி செய்கின்றேனென, பிருது சக்கிரவர்த்தி கேட்டுச் சந்தோஷித்து, தனது வில்லின் முனையாற் பர்வதங்களையுடைத்து வழிகளுண்டாக்கிப் பூமியைச் சீர்திருத்தினன். பூர்வ சிருஷ்டியில் இப்பூமியைச் சீர்திருத்தினவர்கள் ஒருவருமிலாமலும், கிராம நகர அக்கிரார தேசமுதலிய பேதங்களில்லாமலும், பயிர் பசு கிருஷிவர்த்தகம் கடைவிதி முதலியன வில்லாமலுமிருந்தன. அதுநிற்க, பிருது சக்கிரவர்த்தியால் திருத்தப்பட்ட சமபூமியிலே பிரஜைகள் வசித்திருந்தார்கள். ஆகாரங்கள் கிழங்கு மூலங்கள் விருக்ஷங்கள் புஷ்பங்கள் தேன்முதலிய பொருள்களோடான் பிருதுசக்கிரவர்த்தியின் பிரார்த்தனைப்படி,சுவாயம்புமது ஓர் கன்றுக்குட்டியாய் வந்து பூமிதேவியாகிய பசுவின் மடியைப்பருக, அதினின்றும் பால் பெருகிப் பூமியெல்லாம் நனைந்து அநேகமான பயிர்களும் இரசவஸ்துக்களும் உண்டாயின. அவ்வாறு தோன்றியவற்றை ஜனங்கள் ஆகாரமாகப்புசித்து ஜீவித்தார்கள். அதன் பின்னர் முனிவர்கள் சந்திரனைக் கன்றாகக்கொண்டு கறந்து வேதம், தவம், விரதமுதலியவற்றை இதனுண்டுசெய்தார்கள். தேவர்கள் இந்திரனைக்கன்றாக்கிக் கறந்து தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை யடைந்தார்கள். சூரியன் சுவர்ணபாத்திரத்தில் பூமியைக்கறந்து தன்தேஜசையுண்டுபண்ணினன்.பிதிர்தேவர்கள் யமனைக் கன்றாக்கி அந்தகனுல் வெள்ளிப்பாத்திரத்திற் சுதாவென்னும் பாலைக் கறந்துகொண்டனர். நாகர்கள்தக்ஷகனைக்கன்றாக்கிச்சுரைப்பாத்திரத்தில் ஓரவதனுல்விஷத்தைக்கறந்துகொண்டார்கள். அதுமுதற்கொண்டேசர்ப்பங்களெல்லாம்வாயுபக்ஷணஞ்செய்துவருகின்றன. அசுரர் விரோசனனைக் கன்றாகச்செய்து இருப்புப்பாத்திரத்தில் மாயையாகியபாலை மதுவென்னும் அசுரனைக்கொண்டு கறந்தனர். அதுமுதற்கொண்டு அசுரர் மாயாவிகளாயினர். யக்ஷர்கள் குபேரனைக்கன்றாக்கி ஆமபாத்திரத்தில் மறைதலாகிய பாலைக்கறந்தார்கள். இராக்ஷசர்கள் தங்களரசன் சுமாலியைக் கன்றாக்கி இரத்தமயமான பாலைக்கறந்தார்கள். அப்சரசுகளும் கந்தர்வர்களும் சித்ரரதனைக் கன்றாக்கி வசுர்னியத்தினால் தாமரையிலையாகிய பாத்திரத்தில் தமக்குவேண்டிய பாலைக்கறந்தார்கள். பர்வதங்களெல்லாம் ஹிமவானைக்கன்றாக்கி மேருவைக்கொண்டு இரத்தினங்களையும் ஓஷதிகளையுங் கறந்துகொண்டன. பூர்வம் மதுகைடவர்களே விஷ்ணுமூர்த்தி சங்கரித்த பொழுது அவர்களது மேதை [கொழுப்பு] எங்கும் பரவியதால் உலருக்கு மேதினியென்றும், பிருது சக்கிரவர்த்தியால் இவ்வுலகம் பாருபாடு செய்யப்பட்டதாதலின் பிருதிவியென்றும் பேருண்டாயின. முனிவர்களே! பிர

ஜைகளே இரகஷிப்பதில் காருண்ணியனுயும், தேவ மாதுடோரால் புகழத்தக்க வனுயும், பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களால் அரசனுயிருக்க விரும்பப்பட்டவனுயும், மாதுடருக்குள் முதல்வனுயும், யுத்தத்தைமுத லில் நியமித்தவனுயும், மற்றெல்லாரிலத பொருள்களையும் ஆகாரமித்த மாகக்கண்டு பிடித்தவனுயும் விளங்கிய இந்தப் பிருதுசக்கிரவர்த்தியினது பிரபாவம்விசேஷமாகவேதங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வகைய சிறப்பினையுடைய பிருதுசக்கிரவர்த்தியின் கீர்த்தியை க்ஷத்திரியன் யுத்தத் தில் ஸ்மரித்தால் சத்துருக்களை ஜயிப்பான், வைசியன் ஸ்மரித்தால் தன லாபமடைவான். குத்திரன் ஸ்மரித்தால் புண்ணியமடைவான். கீர்த்தி யடைய விரும்பியோர் யாவராயினும் பௌர்ணமிகாலத்திற் பிருது சக்கிர வர்த்தியைத் தியானித்துச் சரணமடையவேண்டியது.

பூமிதேவிபசுவடிவுற்றது
முற்றிற்று.

ஐம்பத்தேட்டாவது
மந்வந்தரமுரைத்த அத்தியாயம்.

லோமமுனிவர் கைமிசாரண்யவாசிகளை நோக்கி, வியாஸபகவான் எனக்குச்சொன்னபடியே உங்களுக்குக் கூறியுள்ளேன். இன்னுங்கேட்க வேண்டியதுளவாயின் கேட்பீர்களாகவெனக்கூற, சௌநகாதிமுனிவர்கள் அவ்வாறே கேட்பதானர்கள்: மந்வந்தரங்களும், மனுக்களின் பெயரும் விவரமாயறிய விரும்புகின்றேமென, அம்முனிவர்களை நோக்கி லோமமுனி வர் சொல்லலாயினர்: சுவாயம்புவ வைவசுவதன், சாவர்ணி, பௌத்தியன், ரௌச்சியன், அசாவர்ணி, முதலாகத்தோன்றிய பதுக்க ளெகேகர். அவர் களிற் சிலர் தங்கள் வாணாளைத்தும் இனி கழிக்கவேண்டியவர்களாயு மிருக்கின்றனர். இனி ஸப்தருஷிகளையும் அவர்கள் புத்திரவர்க்கங்களையுங் கூறுகின்றேன்: மரீசி அத்திரி அங்கிரச புலகர் பிருது புலஸ்தியர் வசிஷ்ட ர் ஆகிய இவ்வெழுவரும் பிரமபுத்திரர். இவர்களிடக்கே சுவாயம்பு மன்வந்தரத்தில் இருந்தவர்கள். ஆக்கிதரர் அக்கிவாகர் மேதசு மாதா திதி வசு ஜோதிஷ்மான் துதிமான் அவ்யச்சனர் சுபுரு ஆகிய இவர்கள் துஷிதா ளென்னுந் தேவர்களோடு சுவாரோசிஷ மன்வந்தரத்தி லிருந்தவர்கள். ஸ்ரீக்கர் சுகிர்தி ஜோதிரயன் மூர்த்திரயன் ஸ்மயன் பிரதிதன் மந்தும்பன் நபன் சூரியன் ஆகிய இவர்கள் வியபராக்கிரமத்தோடுகூடி சுவாரோசிஷ மனுவின் புத்திரராயிருந்தார்கள். வசிஷ்டருக்கு ரூசிஷ்டா ளென்றும், ஊர்ஜாளென்றும் பெயருடைய இவர் ஊர்ஜாதர் ஊர்ஜ மது மாதவர் சுசி சுக்கிரவகர் நபசர் நபர் ஆகிய புதல்வர்கள் வைவசுவத மன்வந்தரத்திலிருந் தார்கள். சாவர்ணியமன்வந்தரத்தில்கார்தியர் பிருது அக்கி ஜன்மியர் தாதா கபிரகர் கபீவர்ன் என்னும் எழுமுனிவரும் ரத்தியாளென்னுந் தேவர் களுமிருந்தார்கள். தாமசமனுவின் புத்திரராகிய ஜ்யோதிர்தாமன் சௌதபசி

யன் தபகுலன் தாபன் தபோரதி அகல்மாஷன் தன்வி தன்விகுலன் மகருஷி ஆகிய பதின்மரும் சோமபர் என்னுந் தேவர்களோ டிருந்தார்கள். சாக்ஷியமன்வந்தரத்தில் சாக்ஷிய மதுவிற்குத் திருஹிமான் அவ்யயன் அவ் யக்தன் சத்தியதரிசி நிருச்சுவன் அரண்யன் பிரகாசன் நிர்த்துரோகன் சத்தியவாக்கு பிருதி என்னும் புத்திரரிருந்தனர். சாட்சுசமன்வந்தரத் தில் திருது, நகர், விசுவர், சுதர்மா, விரஜர், ஜாதிகாமர், அசுஷ்ணு ஆகிய ஸப்தருஷிகளும், ஆத்திரர் பிருதர் ரிபுக்கள் லேகர் என்னுந் தேவ கணங்களும், அங்கிரச மகருஷியின் புத்திரராகிய நத்வலேயர் என்போர் சிலருமிருந்தார்கள். அத்திரி வசிஷ்டர் கசியபர் கௌதமர் பரத்துவாசர் விசுவாமித்திரர் ஜமதக்கினி ஆகிய ஸப்தருஷிகளும், ஆதித்தர்கள் மருத் துக்கள் உருத்திரர் அசுவினிதேவதைகள் பாஸ்கரர் வச மகாராஜிகர் சாத் தியர் என்னுந் தேவர்களும், இக்ஷ்வாகுமுதலிய அரசர்களும், அவர்கள் புத்திரர்களும் வைவசுவதமன்தரத்தில் தரும காரியங்களைச் சரிவர நடத்திக்கொண்டும் லோகசம்ரட்சணை செய்தும் அசுவமேத முதலியவற் றைச் செய்தும் புண்ணியபதவி யடைந்தார்கள். பரமேஷ்டியின் புதல்வ ராயும் ககூப்பிரஜாபதிக்குந் தெளஹித்ரராயும் பிரியாவென்னும் ஸ்திரீயி னிடந்தோன்றி மேருசாவர்ணி யென்னும் பெயரை யடைந்தகிலர் மேருவி னுச்சியில் தவஞ்செய்து அங்கு வாழ்ந்திருந்தார்கள்.

ரூசி யென்னும் பிரஜாபதிக்கு ரௌச்சியென்னும் மநு தோன் றினன். பூதையென்பவளிடத்தில் பௌத்தியனென்னும் மநு உதித்தான். இவர்கள் பௌஷ்யகற்பத்தில் உதவினவர்கள். பௌஷ்யகற்பத்திலேயே இராமன் வியாசன் ஆத்திரேயன் தீப்திமான் சுபருஷிதன் அசுவத்தாமா கிருபன் கௌசிகன் காலவன் குருவாகிய இவர்கள் இருஷிகளாயிருந்தார்கள். மரீசி முனிவருக்கு விரவான் வனிவான் சுமந்தன் திருதிமான் வசு வரிஷ்ணு ஆரியன் விஷ்ணு இராஜா சுமதி என்னும் புதல்வரிருந்தனர்: சர்வர்னி மநுவிற்கு மேருசாவர்ணி யென்போன் ஜேஷ்டபுத்திரன். மோதகிதி பௌலஜியென் காசிபன் வச ஜோதிஷ்மான் பார்க்கவன் த்யுதிமான் அங் கிரச சுவனன் வசிஷ்டன் ஆத்திரேயன் அவ்வியயன் பௌலஸ்தன்னென்னும் புதல்வர் பதின்மூவரில் மூவர் தேவகணங்களாயிருந்தார்கர். ரோகிதரென் னும் பிரஜாபதிக்குத் தீக்ஷையென்னும் ஸ்திரியினிடந் திருஷ்டகேது தீர்த்த கேது பஞ்சஹஸ்தன் நிராமிருதி பிருது ஸ்வசு பூரித்திம்கன் ரசிகன் பித தன் சயன் என்போர் தோன்றினர். இந்தப் பிரஜாபதிக்கே அபரதி வம் சத்திலேயே இரண்டாம் மன்வந்தரத்தில் அவிக்ஷமன்கன் புலகன் சுகிர்தி பார்க்கவன் ஆயோமுத்தி ஆத்திரேயன் வசிஷ்டன் அவ்வியயன் பௌலஸ் தியன் பிரியதி நரபாகன் காசிபன் அங்கிரச நபசன் சத்தியன் எனுந் தேவகணங்களும் இருஷிகளுமுண்டானர்கள். அவர்களுள் தேவர்களுக்கு த்திவிவர்த்தனென்று பெயராயிருந்தது. மூன்றும் மன்வந்தரத்தில், அருந்தவன் உத்தமோஜன் பூரிஷேணன் சுதாநிகன் நிரமித்திரன் விருஷ

சேனன் ஜயத்ரதன் பூரித்திம்கன் சுவர்ச்சாவென்போரும், அவிஷ்மா காசிபன் வபுஷ்மான் வாருணன் அத்திரேயன் வசிஷ்டன் அகஸ்தன் அங்கிரசு கூரதிஷ்பன் பௌலஸ்யன் அக்கினிதேஜச என்போருள் மூவர் தேவகணங்களும் மற்றையோர் ருஷிகளுமாயிருந்தார்கள். அதே மன்வந்தரத்தில் பிரமபுத்திரராகச் சாவர்ணிகரன் சர்மா தேவாதிகன் கூஹமகன் திரிடேஷ்ணன் பண்டகன் தரிஷன் பாரு ஊரு என்போரிருந்தார்கள். நான்காவது மன்வந்தரத்தில் த்ருதி வசிஷ்டபுத்திரர் ஆத்திரேயர் சுதபச அங்கிரச மூர்த்தி தபஸ்வி கசியபர் தபோதனர் தேவலஸ்திர்யர் பௌலகர் தபோரதி ஆர்க்கவர் என்போரில் ஐவர் தேவகணங்களாகவும் மற்றையோர் ருஷிகளாகவுமிருந்தார்கள். ரௌச்சிய மன்வந்திரத்தில் அங்கிரசு திருதிமான் பௌலஸ்தியன் அவ்யவான் பௌலஹன் அதருஷி பார்க்கவன் நிருச்சவன் நிஷ்பிரபஞ்சன் ஆத்திரேயன் நிர்மோகன் காசிபன் சுதபசு வசிஷ்டனென்போருள் மூவர் தேவகணங்களாகவும் மற்றையோர் ருஷிகளாகவுமிருந்தார்கள். பைப்பிய மன்வந்தரத்தில் சித்திரன் வைசித்திரன் தர்மவிரதன் சுகேத்திரன் கூத்திரவிருத்தகன் நிர்ப்பயன் கதபசு காடன் என்னும் புத்திரருண்டானார்கள். ஆக்கினிதன் காசிபன் பௌலஸ்தியன் மாகதன் பார்க்கவன் அதிபாகியன் சுசி ஆங்கிரசன் யுக்தன் ஆத்திரேயன் சக்ரன் வாசிஷ்டன் அஜிதன் என்போரில் எழுவர் தேவகணங்களாகவும்மற்றையோர் ருஷிகளாகவுமானார்கள். பௌத்திய மன்வந்தரத்தில் தரங்கன் பேரு பிரத்தன் தரத்திரன் அறவுக்கிரன் அதிமானி பிரவினன் விஷ்ணு சங்கிரந்தனன் தேஜஸ்வி சம்பலன் என்போருள், ஈவர் தேவகணங்களும், மற்றவர்கள் ருஷிகளுமாயிருந்தார்கள். இதுகாறுஞ் சென்றபோன மன்வந்தரங்களையும் செல்லவேண்டிய மன்வந்தரங்களையும் வியாசபகவான் சொன்னவாறு சொன்னேன். இவ்வாறே மீண்டும் மீண்டுந் தோன்றியழிவதை எவ்வளவுகாலஞ் சொல்லினும் முடிவுறாது. இம்மநுக்களையும் அவர்களாலுண்டான தேவருஷிகளையும் ஸ்மரணபண்ணுபவர் தீர்க்காயுளுடையோராய்ப் புண்ணியலோகமடைவார்கள். தேவவருடத்தாலாயிரவருடம் ஆனகாலத்துச் சூரியன் தனது தீட்சண்யமான கிரணங்களாற் பிரபஞ்சத்தைத் தொளுத்தி நாசஞ்செய்கிறான். உலகத்திலுள்ளோர் பிரமனிரவுச்சரணிடை, பிரமன் ஆதிகாரயாணனியடைவான். அக்காலத்துப் பிரளயகால உருத்திரன் தோன்றி ஸம்ஹரிப்பான். இப்படி அநேக மன்வந்தரங்களும் அநேகபிரளயங்களு முண்டாகியும் ஜகம் விருத்தியாகாமல் கடைசியாக வைவசுவதமன்வந்தரத்தில் தொடர்ந்து விருத்தியானது. இப்புண்ணிய சரித்திரத்தைக் கேட்போரும் படிப்போரும் கைலாய பதவியை யடைந்து களித்துவாழ்ந்திருப்பார்கள் என்று லோமஹருஷிவர் கூறினர்.

மன்வந்தரமுறைத்தது
முற்றிற்று.

ஐம்பத்தோன்பதாவது
சஞ்ஜ்ஞிகை சாயையின் சரித்திரங்களுரைத்த அத்தியாயம்.

லோமஹருஷிவரை நோக்கி நைமிசாரண்யவாசிகள் சுவாமி! வைவசுவத மன்வந்தரத்தின் க்ரமத்தை விவரமாகச்சொல்லவேண்டு மென்று விரும்புகின்றோ மெனக்கேட்க, லோமஹருஷிவர் கூறுவதானார்: முனிவர்களே! பூர்வத்தில், காசிபமுனிவருக்குத் தக்ஷப்பிரஜாபதியின் புதல்வியினிடமாக விவசுவானென்னும் ஆதித்தனுண்டானான். அவன்துவஷ்டாவென்னு முனிவரின் புதல்வி சஞ்ஜ்ஞிகையைமணந்து வாழுங்காலத்து அவன் ஆதித்தன் தேஜசைச் சகிக்கச் சக்தியற்றவளாய் நீங்காத்துக்கத்திலாழ்ந்திருந்தாள். அவளிடத்தில் மூதலில், மதுவென்னும் பிரஜாபதியும், யமனும் யமுனையென்னும் பெண்ணும் இரட்டைப்பேறுகப்பிறந்தார்கள். சூரியரூபம் அதிதேஜசா யிருந்தமையால், தன் ஆத்மசக்தியால் ஒரு ஸ்திரியைத் தன்னேப்போ லுண்டாக்கிச் சாயையென்னும்பெயரோடழைத்த காலத்தவளுக்குப் பெண் சஞ்ஜ்ஞிகையை நோக்கி என்னேயுண்டுசெய்த காரணமியாதென்று வினவினன். அதற்கு அவள் நான்பிதாவின் கிரக்கத்திற்குப்போய்வரு மெல்லியும் என்கணவனுக்குச் சந்தேகமின்றிச் சுகத்தைக்கொடுத்துப்பணி செய்வதுந்தவிர, இச்சிறுவர்களேயும் பேதமின்றி இரக்ஷிப்பாயாக வென்றாள். அதைக்கேட்ட சாயை என்னைக் கூடியமட்டும் உண்மை வெளியாகும்வரையிற் செய்கிறேன். என்னுடைய மாறுகோலம் வெளியாகும் காலத்து உண்மையை வெளியிடுவேனென, அவ்வாறே ஆகுகவென்று பிதாவின்சமூகஞ்சென்றனள். புத்திரியைக்கண்ட துவஷ்டா கோபித்து பதியின் உத்தரவின்றி என்னிடம் வந்தமையால் நீ பெண்குதிரையாகுகவெனச் சபிக்க, அச்சாபத்தைப்பெற்று உத்தரகுரு வென்னு மிடத்திற் சஞ்சரித்துவந்தாள். சஞ்ஜ்ஞிகையானவள் தன் பிதாவின் சமூகஞ் சேர்ந்துணராத சூரியன் அவளாலுண்டாய சாயையின் மாறுபாடறியாமற்கலக்க, சாவர்ணி மநு, சனி, பத்திரையென்னும் பெண்ணையும் பெற்றனள். இவள் சஞ்ஜ்ஞிகை கேட்டுக்கொண்டபடி புத்திரர்களிடத்தாலு தன்புத்திரரிடத்து அதிக வாஞ்சையையும் மாற்றவள் புத்திரரிடத்து வெறுப்பாயும் வஞ்சனை செய்துவந்தாள். அவ்வஞ்சனையை யமன் சகிக்காதவனாய் வாலபழுதற் கொண்டு பேதம் பாராட்டுதலிற் கோபித்துக் காலாலுதைக்க, அதனேப் பொறுதமாற்றாய் உன்கால் புழுக்கக்கடவதுவென்று சபித்தாள். அதற்காகயமன் மனவருத்தமுற்றுச்சாபத்திற்குப்பயந்து தன்றந்தையாகியசூரியனிடத்து, எந்தையே! எங்கள்தாய் மூத்தோர் மூவரையுமுனிந்து இளையபுத்திரரிடம் அன்புபாராட்டுவதைக்கண்டு மனந்தாளாது, தாய் ஒரு வழிபாகப்புத்திரரைச்சபிருஷ்டிசெய்யாமையின்உதைப்பதாகச்சொல்லி என்காலே எடுத்தது பிசகே. பிள்ளையின் குற்றத்தைச்சகியாது தாய் சபிப்பதுந் தருமமா? அவ்வாறு தூக்கியகால் புழுச்சொரிகவெனச் சபித்துவிட்டனளாதலின், அச்சாபத்தைமாற்றி என்குற்றத்தையும் பொறுத்தருள

வேண்டுமென வேண்ட, சூரியன் புத்திரனைக்கண்டு புத்திரா! தாயின் சாபத்தை விலக்குவதிலு, சத்தியவானுயுள்ள உன்னை இவ்வாறு சபிப்ப தற்கு ஏதாகிலும் பெரியகாரண மிருக்கவேண்டும், அதை விசாரித்தறிவே னென்றுகூறிச் சம்மதப்படுத்திச்சாயையிடஞ்சென்று அதிகோபத்தோடு புத்திரனைச்சமமாய்ப் பாராமையால் வெறுப்படைந்தஇவனைக்கோபித்துச் சாபமிடலாமாவென்று கேட்டான். இவ்வாறு கேட்டதற்குச் சாயை இனி நாம் நமது மாறுவேஷத்தைத் தெரிவிக்காதிருப்பது தவறென்று உண்மை யைத் தெரிவித்தான். இவற்றைக்கேட்ட சூரியன் அதிக கோபத்தோடு மாமனுன துவஷ்டாவினிடஞ்சென்றுவிண்ணப்பிக்கஅவனியதோத்தமாய்ப் பூரித்து நல்லவார்த்தைகளாற் கோபத்தைமாற்றி, உன்தேஜசின் வெப்பத் தைச்சகிக்கச் சத்தியற்றவளாய்த் தன்மேனிகெட்டு உத்தரகுருவென்னும் பசுமையாகிய காட்டில் அத்மபலத்தாற் பெண்குதிரை வடிவுகொண்டு நின்வரவை எதிர்பார்த்துக்கொண்டு சஞ்சரிக்கிறுள் என்றுகூறி, இதனைற் கோபநீக்கிய சூரியனை மீண்டும் நோக்கி என் இஷ்டப்படி நடக்கின் உன்தேஜசை யாருஞ் சகிக்கும்படியாயும் பார்வைக்குரம்மியமாயிருக்கும் படியாயுஞ் செய்கிறேனென, அதற்கிசைந்த சூரியனைச் சாணையிலேற்றிச் சாணைசெய்து அதனுல்தீட்சண்யமடக்கிப்பார்ப்போர்சந்தோஷிக்கக்கூடிய ரூபமளித்தனன். துவஷ்டாவினிடம் உத்தரவுபெற்றுத்தன்மனைவியானசஞ் ஞிகையை யடையவேண்டுமென்னு மவாவால் தன் யோகபலத்தால் தன் னுருவைமாற்றி ஆண்குதிரைவடிவுகொண்டு, உத்தரகுருவையடைந்து மனை வியாகியபெண்குதிரையைக்கலக்கயத்தனிக்குங்காலத்து, அவள் பரபுருஷ னென்னுஞ் சங்தேகத்தால் விலகக்கண்ட சூரியனுகிய ஆண்குதிரை காவிவழியில் தன்வீரியத்தைவிட்டவிட அவ்வீரியத்தினுல் அசுவினி தேவதைகள் நாசத்தியரென்றும் தசரென்றும் பெயரடைந்து மிகவும் அழகிய உருவத்தோடு தோன்றித் தேவனைத்தியரானர்கள். அவர்களைக் கண்டு சூரியன் சந்தோஷிக்க அதனைக்கண்ட பெண்குதிரையாகிய சஞ் ஞிகை தன் கணவனென்றும் அவனுடைய தேஜசு குறைந்து அணுகக்கூடிய விதமாயிருந்தலைபுங்கண்டு சந்தோஷித்தாள். இயமன் தாயின் சாபத்தாற் பீடிக்கப்பட்டு, தருமத்தாற் பிரசைகளை இரகூித்து, தன் நல்லொழுக்கம் தவம் முதலியற்றால் தென்திசைக் கிழவனுகவும், பிதிர்களுக்குத் தலைவனுகவுஞ் சங்தாவென்னும் பெயருற்றுவாழ்ந்தான். முன் சாயையி னிடமுதித்த சாவர்ணிமநு மேருவாயினுச்சியில் மநுபதவியை யடைய வேண்டுமென்னு மவாவால் தவஞ்செய்து வருகிறுன். அவன் தம்பியாகிய சனிபகவான், கோரதவஞ்செய்து நவக்கிரகங்களிலொருவனுனான். இயமன் தங்கையான யமுனை வெகுகாலந் தவஞ்செய்து பூமியிலுள்ளோரைச் சுத்தி பண்ண யமுனையென்னும் நதியாகப் பிரவாகித்துயாவரையும்புனிதராக்கிச் சகலவித சௌக்கியங்களுக்கு மாதாரமாய்க் காளிந்தியென்னும் பெயரில் நதியாய்ப் பிரவாகித்துவருகிறுள். இச்சரித்திரத்தைப் பக்திசிரத்தையுடன் பூரித்துப் படிக்கின்றோருங் கேட்போருஞ் சகல்பாவங்களையும் போக்கிப்

புனிதராய் இகபரலோகசாம்பிராச்சியங்களை யடைவார்கள் என்று, ஊத முனிவர் நைமிசாரணிய வாசிகளான சௌநகாதி முனிவர்களுக்குக் கூறி யருளினர்.

சஞ்ஞிகை சாயையின் சரிதங்களுரைத்தது
முற்றிற்று.

அறுபதாவது

வைவஸ்வதமநு மரபுரைத்த அத்தியாயம்.

வ்யுதமுனிவர் நைமிசாரண்ய முனிவர்களை நோக்கி, சூரியபுத்திர ராகிய வைவஸ்வதமநுவினிட்சு, விரியவான்களாயும் சூரியதேஜசை யொத்தவர்களாயும், தருமக்கிரமப்படி நடப்போர்களாயும், இக்ஷ்வாகு திபி நாபாகன் திருஷ்ணு சையாதி நரிஷியந்தன் நாபாகன் கருஷன் திரிய விரதனென்னும் நவபுத்திரர் தோன்றினர். இவர்களல்லாமலும் வேறே புதல்வரையுண்டாக்கப் பலகாலம் யாகஞ்செய்து ஒருவருந்தோன்றுது கடைசியாக இடையென்னும் பெண்ணொருத்தி, மின்னற்கொடிபோலுஞ் சாயலும், சிறுத்த இடையும் பெருத்த தனமும் சந்திரனைப்போன்ற முகமும் மேகம்போன்ற கூந்தலும் ஒளிரிய தேகமுங்கொண்டு திவ்யாலங் கிர்த்த பூஷிதையாய்த் தோன்ற, அவ்வாறுதித்தவளைநோக்கிப் பெண்ணே! என்னுடைய புத்திரரையுண்டு பண்ணுவாயென்று சொன்ன மநுவை நோக்கித் தருமோபதேசமாகச் சொல்வதானுள். ஓ சக்கிரவர்த்தியே! நான் மித்திராவருணரைக்காகவுண்டாக்கப்பட்டவள். அவர்களைப்போய் அடைய வேண்டும், உம்மால் என்னை அதர்மம் அடைய வேண்டியதில்லை யென்று மித்திராவருணரிடஞ் சென்று நமஸ்கரித்து உங்களுக்காகவே மநுவின் யாகத்திலுண்டாக்கப் பட்டேனைகையால் என்னை யாதரிக்க வேண்டுமென் றுள். அவர்கள் இடையைக்கண்டு, தருமந்தெரிந்தவளே! உன்னுடையாலும் ஒழுக்கத்தாலும் குணத்தாலும் அழகாதிஞ் சந்தோஷமடைந்தோம், நீ மகத்தாகிய கீர்த்தியை எங்களாற்பெற்று மநுச்சக்கிரவர்த்தியின் குலத்தை விருத்திசெய்யக்கூடிய சுத்தியுமுனென்னும் நாமமுடைய புத்திரனைப் போகின்றுய் என்றார்கள். இதைக்கேட்ட இடை பித்ரரின் சமுகஞ் செல்லுமவழியில், சந்திரன் புதல்வனிய புதன் சந்திக்க, இவள் ரூபலாவண்யாதிகளைக்கண்டு மோகங்கொண்டுதன்னைச்சேரவேண்டுமென, அவன் விருப்பத்திற் கியைந்தவளாய் இருவருமங்கேகூட, புரூரவச்சக்ர வர்த்தி தோன்றினன். இடையாளவள் உடனே தன் பெண்வடிவு மாறு பட்டு, சுத்தியுமுன் என்னும் புருஷனனுள். (இடையென்பவளுக்குஸ்திரி புருஷரூபமிரண்டு முள்ளதாகையால்) இவனே சுத்தியுமுனென்னும் புருஷனுகவும் இடையென்னும் பெண்ணுகவுந்தோன்றி இருவருங்கூடி உத்கலன் கயன் விநதாசுவன் என்னும் மூன்று புத்திரர்களைத் தந்தனர். அவருள் உத்கலனென்பானுக்கு உத்கலமென்னுந் தென்திக்கையும்,

விநதாசுவனுக்கு மேல்திக்கையும் கயனுக்குக் கயகாட்ஷுடையும் கொடுத்துப் பாதுகாக்கும்படி ஏற்படுத்தப்பட்டது.

வைவசுவதமநு ஸ்ரீயனுபீஷ்டப்படி இப்பிரபஞ்சத்தைப் பத்துப் பிரிவாக்கித் தன் புதல்வருக்குக் கொடுத்தனர். அவருள் ஜேஷ்டனுகிய இக்ஷ்வாகு மத்திபகாட்டைப் பரிபாலித்துப் பிரதிஷ்டானமென்னும் நகரமொன்றை யுண்டாக்கி அதில் வசித்துவந்தான். சுத்தியும்நன் பிரதிஷ்டமென்னும் நகரத்தை யுண்டுசெய்து புரூரவனை யதில் வைத்தான். மநுச்சக்காவர்த்தியானுண்டான ஸ்திரிபுருஷரூபமான சுத்தியும்நன், நரிஷ்தானுக்கு ஷகையென்னும் பெண்ணை விவாகஞ்செய்து புத்திர விருத்தி செய்தான். அம்பரீஷனுக்குப் பாக்கிலீகனென்னும் புத்திரனும், சையாதிக்கு ஆநர்த்தனென்னுஞ் சில புத்திரரும், சுகன்யாவென்னும் பெண்ணு முண்டானார். சுகன்யா சவனமகருஷியை மணந்தனள். ஆநர்த்தனுக்கு ரேவனென்னும் புதல்வனுண்டாகி, ஆநர்த்தராச்சியத்தில் குசஸ்தலி யென்னு நகரத்தை நியமித்து அதில் வாழ்ந்து, வைவதன் கருத்மி யென இரு புதல்வரை யீன்றனன். அவர்களில் மூத்தவன் குசஸ்தலி இராச்சியத்தை யடைந்து பிரமலோகமுதலிய விடங்களுக்குச் செல்லும் வல்லமை யடைந்து, அநேககாலம் பிரமலோகத்தில் வசித்து இஷ்டமான ரூபங்களை யெடுக்கச் சாமர்த்தியனுய், ஒருகன்னிகையை ரேவதியென்னும் பெயருடன் உண்டுசெய்து அவளைத்துவாரகையிற் பலராமனுக்கு மனஞ்செய்வித்து மேருமலையில் தவஞ் செய்கின்றனன். கருத்மி யென்பவன் குசஸ்தலியை யடைந்து, சிலகாலம் அரசுசெய்து ஜராமரணமின்றி வாழக்கருதிப் பிரமலோகத்தையண்டிய, அப்பொழுது இராகூஸர்கள் அந்த இராச்சியத்தைக் கொண்டனர். அந்தக் கருத்மியென்பவன் தவச்செயலி லிருந்தமையாலும் அரசாகூயைத் தானவர் கைக்கொண்டமையாலும் அவன் புதல்வர் நூற்றுவரும் நானுதேசங்களிற் பரவினர். இக்ஷ்வாகுபுத்திரரில் அந்நூற்றுவருடைய வமிசங்கள் பலவிடங்களிற் பரவின. நாபாகனுக்குக் காருட னென்பவனுண்டாகித் தன்பெயரால் இராச்சியமுண்டுசெய்து அநேக கூத்திரியரை யுண்டுசெய்தனன். அவர்களில் ஒருவனே வபிச விருத்தி செய்தவன். அரிஷ்டனுக்குப் பிரஷ்நத்தவ னென்போனுண்டாகி, குருவின் பசுவைக் கொலைசெய்து, அதனுற் சாபமேற்றுச் சூத்திரத்துவத்தை யடைந்தான். வைவசுவதமநுவின் ஜேஷ்டபுத்திரனுகிய இக்ஷ்வாகுவுக்குச் சூரசந்தன்மைபுடைய நூறுபுதல்வர்களுளர். அவர்களில் விருகுக்ஷியென்பான் மூத்தவன். அவன் அயோத்தியாபுரியில் சக்கிரவர்த்தியாக வீற்றிருந்து, ஜம்பந்தாறு தேசங்களையும் அரசுசெய்தனன். அவனுக்குச் சகுனிமுதலிய பதினைந்து புதல்வர்தோன்றி வடதேசங்களைக் காத்தனர். இதுநிற்க: இக்ஷ்வாகு அரசுபுரிகையில் அவன்வீட்டில் சிரார்த்தத்தினத்திற் சமைக்கப்பட்டிருந்த முயற்கறியை, அவன்புத்திரனை விருகுக்ஷியென்பான் சுவைக்க, நக்ஷத்திரமாகிய இக்ஷ்வாகு உணர்ந்து மனம் வருந்திச்

சினந்து ஆசிரியரை வினவ, அவர் அவனை அரசுரிமைக் குடையவனுக்காது அனுப்பிவிடுகெவென், இக்ஷ்வாகு குருமொழியைக்கொண்டு விருகுக்ஷியென்னுந் தனதுபுதல்வனை அவ்வாறே அனுப்பிவிட்டு, தானே அரசுரிமை செய்து, சிலகாலஞ்சென்றபின்னர், விருகுக்ஷி யென்பானுக் கிக்ஷ்வாகுவனை ஆயோத்தி னென்பவனை மன்னனுக்கினன். ஆயோதனுக்குக் கருஸ்தனும் கருஸ்தனுக்கு அரிகாபனும், அரிகாபனுக்குப் பிருதுவும், பிருதுவுக்கு விஷ்டராசுவனும், விஷ்டராசுவனுக்கு இந்திரனும், இந்திரனுக்கு யுவநாசுவனும், யுவநாசுவனுக்குச் சிராவனும் புதல்வராகத்தோன்றி வமிசவிருத்தி யாயிற்று. சிராவன் தன் பெயரால் சிராவஸ்தியென்னு நகரத்தையுண்டு செய்து, கர்மசிலஞ்ஞ இராசரிகளுஞ்செய்து வந்தான். சிராவனுக்குப் பிருகதசுவனும், பிருகதசுவனுக்குக் குவலாசுவனும் உண்டாயினர். குவலாசுவன் இராசதீதிநவருது அரசுசெனுத்துகையில், அவனுக்கு விஷ்ணுவினிகளாகிய தாமபுத்திரர்கள் உண்டாக, அப்புத்திரர்களுக்குத் தனது இராச்சியத்தை யொப்பித்துவிட்டு வனத்தையடைந்து தவஞ்செய்ய வேண்டுமென்று கருதியிருக்கையில், அக்குவலாசுவனிடம் உத்தங்க முனிவர் வந்து, இக்ஷ்வாகு குலத்தரசனே! இப்பூமியை நீயே காக்க வேண்டும்; நீ வனத்தையடைவது தகுதியன்று; என் ஆசிரமத்திற்கருகே நிர்ஜனமான மணற்பிரதேசத்தில் ஓரசுரன் பிரமதேவனிடம் பெற்றவரத்தால் தேவர்களாலும் வெல்லமுடியாத பலிஷ்டதேகமுடையவனுய்ப் பூமியின் கீழே வசிக்கின்றனன். அவன் பெயரோ துந்து. மதுவின் மைந்தனை அந்த வெண்போன் உலகத்தை நாசஞ்செய்ய வேண்டுமென்று பூமியின் கீழேயிருந்து தவஞ்செய்து, வருஷத்திற் கொருமுறை சுவாசம் விடுகிறனன். அப்பொழுது அநேகபர்வத விருக்ஷமுதலியவற்றுடன் கூடிய பூமி ஏழுநாள்வரையில் நடுங்குகின்றது. கருத்துள் சென்றுள் பரவிச்சூரிய மண்டலத்தை மறைக்கின்றது. அவன் கண்களினின்றுந்தோன்றும் நெருப்புப்பொறிகள் பிரளயகாலாக்கினிபோல உலகமுழுவதையும் எரிக்கின்றன. அவனது கொடுமைகளைச்சகிக்க என்னாலும் உலகினராலுஞ் சாத்தியப்படாது. அவனை நீயே கொல்லவேண்டும். நீயவனைக் கொன்றுவிடையில் உலகினர் யாவருஞ் சுகமடைவார்கள். பூர்வத்தில் அவனை நிக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று யான் நெடுங்காலந் தவஞ்செய்ய, விஷ்ணுமூர்த்தி பிரசன்னராகி, உத்தங்கரே! நீர் இத்தகைய நிக்கிரகத்தை விரும்பவிராதில் உலகத்தில் கூத்திரியர்களிலே சிரேஷ்டனை வினவுங்கள் குவலாசுவனென்னும் அரசனைக்கொண்டு சங்கரிக்கலாம். அந்தச் சமயத்தில் அக்குவலாசுவனுக்கு எனது வல்லமையைக் கொடுக்கின்றேன். துஷ்டநிக்கிரகஞ்செய்து பிரதைகளைக்காப்பது கூத்திரியனுக்குரிய தர்மமென்று சொல்லியிருக்கிறார். இவ்வாறு செய்வதைக்காட்டிலும் தவஞ் செய்வது சிறந்ததன்றெனக் கூறினர். அதனைக்கேட்ட குவலாசுவன் முனிபுங்கவரே! நான் இனி ஆயுதங்களை யெடுக்கிறதில்லை யென்று பிரதிக்ஞை செய்திருக்கின்றனனென் றவனை வதஞ்செய்யக்

தடையிராது என்றுகூறித் தன்புதல்வரை முறிவருடனனுப்ப, அவர் அப்புத்திரர்கள் அவ்வசரனைக்கொல்ல வியலாதென, அரசனும் தன்புதல்வர்களையுடன் கொண்டு அந்த வனத்தையடைந்து அவனிருக்கு மிடத்தை யெட்டுகையில், துர்த்துவினுடைய சுவாசத்தால் அவன்புதல்வரில்மூவர் நீங்க எனையோர் உயிர் நீங்கினர். அப்பொழுது உத்தங்கமுனிவர் விஷ்ணுவைப் பிரார்த்திக்க அவர் குவலாசுவனுடலில் தனது அமிசத்தைச் செலுத்தினர். தேவர்கள் புஷ்பமாரி சொரிந்து இனி யிவன் துர்த்துமாரனென்னும் பெயரடையப் போகிறானென்று தேவதுந்துபிகளை முழக்கினர்கள். குவலாசுவன் துர்த்துவென்பவனை நேரிற் பார்த்தபொழுது, தூர்த்து தன் வாயினின்று ஓர் ஜலவேகத்தை யுண்டுசெய்ய, அதனைக் குவலாசுவன் அடக்கித் தன்னிடத்திருந்த நிவ்விய அஸ்திரங்களாலும் விஷ்ணுவின் கருணையாலும் அவனைச்சங்கரித்துத் துர்த்துமாரனென்னும் பெயரையடைந்தனன். உத்தங்க முனிவர் உள்ளக்களிப்புடன் அவ்வரசனை நோக்கி "செல்வமுதலியவற்றாற் குறைவின்றி வாழ்ந்து சத்துருக்களைச் செயித்துச் சிலகாலம் அரசுசெய்து தவச்செயலை மேற்கொண்டு அழிவில்லாத உத்தமமான பதவியையடைவாயாக" வென்று ஆசீர்வதித்தனர். அக்குவலாசுவன் சிலகாலம் அரசுசெய்து பின்னர் தவச்செய்லிருந்தனன். இதுகிற்க, தூர்த்துவாலிறவாது தப்பிய புதல்வர் மூவரில் திருடாசுவனென்பவன் மூத்தவன். ஹர்யசுவன் கபிலன் என்போரிளையோர். அவர்களிற் சிரேஷ்டனான திருடாசுவனுக்கு ஹரியசுவனும், ஹரியசுவனுக்கு நிகும்பனும், நிகும்பனுக்கு யுத்தபாக்கிரமமுடைய சங்காசுவனும், சங்காசுவனுக்கு அகூபாசுவன் கிருசாசுவனென்னும் புதல்வரும், திருஷத்வதியென்னும் பெண்ணும் பிறந்தனர். திருஷத்வதிக்குத் திரிலோகங்களிலும் பிரசித்திபான பிரசேனஜித்தென்பவன் தோன்றினன். அவன் தேஷ்ணியென்னும் பெண்ணை விவாகஞ்செய்து, யுவனாஸ்வனைப்பெற்று வாழ்ந்திருக்கையில், அவள் போரில் கோபங்கொண்டு நதிபுருவடைவெனச் சபித்தனன். யுவனாசுவன் மகன் மாந்தாதா திரிலோகங்களிலும் வைசுக்கிரவதியஞ்செய்து, சசிபிந்துவின் மகளாகிய சைத்திரவதியென்பவளை ரூபத்தில் ரதியைப்போலும் பதிவிரதத்தினால் அருந்ததிபோலும் விளங்கி, பதினாயிரஞ் சகோதரர்களோடு விளங்குதலின் யுவனாசுவனும், தருமசீலர்களான புருகுற்சன் முசுகுந்தனென்னும் இரண்டு புதல்வரைப் பெற்றனன். புருகுற்சனுக்கு நர்மதையென்னும் ஸ்திரீயினிடத்தில் திரிசதசியுவென்பவன் பிறந்தனன். அவனுக்குச் சூரத்வஜராசஞ்செய்யுந்தகுதி நிறைவுவரும், அவனுக்குத் திரையாருணியும், அவனுக்கு மகாபலிஷ்டனான சத்தியவதனனும் பிறந்தனர். சத்தியவதனன் தன்னுடைய அரசாட்சியில் தூரனை விவாகஞ்செய்து கொண்டவருடைய மனோபலத்தையும், வாலிபமான கன்னிகைகளையும் பலாத்காரமாகப் புணர்வதில் விருப்பமாயிருந்தான். அவனுடைய துஷ்கிருத்தியங்களைக் கண்டு மனஞ்சகியாத தகப்பனாகிய திரையாருணியின் போன் தஷ்புத்திரனை முனிந்து, தன் ராச்சியத்திலில்லாமல் வனத்தில்

வேடருடன்கூடி வாழும்படி அனுப்பிவிட்டனன். சத்தியவதனன் தன்றந்தை கட்டளைப்படி அவ்வாறே வாழ்ந்தனன். திரையாருணி தன்மைந்தன் செய்த அக்கிரமத்தை மனஞ்சகியாது விரக்த மனதுடன் வனத்தையடைந்து தவஞ்செய்தனன். அப்பொழுது துவாதசவருஷக்ஷாமம் சம்பவித்துப் பிரஜைகள் பெருங்கஷ்டத்தை யடைந்தனர். அந்தச் சமயத்தில் அவ்விடத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த விசுவாமித்திரர் தன்புத்திரர்களை விடுத்துச் சமுத்திர தீரத்தையடைந்து அங்கே தவச்செய்லிலிருந்தனர். அதனால் அம்முனி பத்தினி தன்புத்திரர்களைச் சவரக்ஷணை செய்யச்சக்தியற்றுத். தன்புத்திரர்களில் ஒருவனைக் கழுத்திற் கட்டிக்கொண்டுபோய்ச் சத்தியவதனனுக்கு விற்று அப்பொருளைக் கொண்டு தன்னை புதல்வரைப் பரிபாலித்தனள். சத்தியவதனன் விசுவாமித்திரரிடத்தில் வைத்த பிரீதியால் அப்பிள்ளையைப் பொருள்கொடுத்து வாங்கிக் காப்பாற்றினன். [களமாகிய கழுத்திற் கட்டிக்கொண்டு வந்தமையின் அப்புத்திரனுக்குக் காலவனெனப் பெயராயிற்று.] அக்காலவன் மகாதபசியாயிருந்தான்.

அறுபத்தொன்றாவது

மேற்படி அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகளே! சத்தியவதனன் விசுவாமித்திரமுனிவருடைய புத்திரனை யாதரித்தமையன்றி அம்முனிவருடைய மனைவியையும் பிறபுத்திரருடன் மாமிசமுதலிய ஆகாராதிகளையுதவி அவருடைய ஆசீர்மத்தையும் அதிலுள்ள தீர்த்தங்களையும் இரட்சித்து வந்தான். சத்தியவதனனுக்கு நிசையாருணன் வனத்திற்கோடுகையிலும், வனத்திலே அவன் மிருகாதிகளை யிம்சிக்கையிலும் திரிகால வர்த்தமானங்களையு மறிந்த வசிஷ்டமுனிவர் சமீபத்திலிருந்தும், மேல்நடக்க வேண்டியவற்றை யறிந்திருந்தும் சிறிதுந் தடைசெய்யவில்லையாயினும், சிலதுகாலங்கழித்துச் சிறந்தும் சிறிதுந் தடைசெய்யவில்லையாயினும், சிலதுகாலங்கழித்துச் சத்தியவதனனைக்கண்டு, நீ துஷ்கிருத்தியங்களை யொழிந்திருப்பாயாகில் உன் தந்தையினிடஞ்சொல்லி உனக்கு இராச்சியத்தைக் கொடுப்பிக்கிறேனென்று சொல்லினர். அவன் அதனையுங் கேளாதவனுய்த் தன் இச்சைப்படி நடந்துவருவதுகண்ட அவன்பிதா திரையாருணி தன்புரோவாகிய வசிஷ்டபகவானை நோக்கி, ஸ்வாமீ! என் இராச்சியத்திற்குச் சந்ததியில்லையே; பரதுவோ வனத்தில் செய்வேன்? எனக்கேட்க, வசிஷ்டர் இவன் இன்னுஞ் சிலகாலம் வனத்திலேயிருந்தால் இவனதுபாவங்கள் ஒழிந்துவிடும். உன் ஆயுள்முடிவில் இவனுக்கே இராச்சியத்தைக் கொடுத்துவிடலாமென்று கூறிவிடுத்து, சத்தியவதனனை விளித்து யான்பன்னிரண்டுவருஷந் திரையிலிருத்தலின் நீ சிறிதும் அக்கிரமமின்றி யெனக்குப்பணிவிடை செய்கவென, அவன் அதற்கிணங்கி அவருக்குத்தொண்டு செய்திருக்க, முனிவர் யோகத்திலிருந்தனர். அந்தச்சமையத்தில் விசுவாமித்திர குடும்பத்தைக்காக்க

உணவொன்றுங் கிடையாமல், வசிஷ்டராசிரமத்திலிருந்த காமதேனுவின் வமிசத்திற்சேர்ந்த இஷ்டகாமியங்களைக் கொடுக்கத்தக்கவேர் பசுவைக் கொன்று தானும்புசித்து விசுவாமித்திரர் மனைவிமுதலானருக்கும் ஊட்டினன். அதனையுணர்ந்த வசிஷ்டமுனிவர் அவனைமுனிந்து அடாதகாரியமே! உன் அபசாரத்திற்காக உன்னையிப்பொழுதே கொல்லுவேன், ஆயினும் உன் தந்தைக்கு உன்னை அரசனுக்குவேனெனக் கொடுத்தவரமும், நீ யெனக்குப் பன்னிரண்டு வருஷம் பணிவிடைசெய்வதாக வொப்புக் கொண்டதுந் தடைசெய்கின்றன. அவ்விரண்டுதடைகளு மில்லாவிடின் உன்னையிப்பொழுதே சபித்துவிடுவேன். அன்னிய ஸ்திரீகளை நீ புணர்ந்ததும், வேடுவர்போல ஜீவஹிம்சை செய்து வாழ்ந்ததும், பசுவைக் கொன்றதுமாகிய மூன்றுகுற்றங்களைச் செய்தனை. உன் குற்றத்திற்காக முன்னமே உன் சிரசிற் சங்கினை படிக்கவேண்டும். உன்தன்னதையை நோக்கி அவ்வாறு செய்யாதிருந்தேன். இப்பொழுது அனை மூன்றினையுஞ்சேர்த்து அடித்துவிடுகிறேனென்று திரிசங்கு எனக்கூப்பிட்டனர். அதுமுதல் சத்தியவதனனென்னும் பெயர்நீங்கி அவன் திரிசங்குவென்னும்பெயரெய்தினன். அதுமுதல் விசுவாமித்திர முனிவருடைய ஆசிரமத்திலிருந்தனன். அப்பொழுது, ஒருசமயத்தில் விசுவாமித்திரர் தன்றவத்தைநிறுத்திப் புத்திரர் முதலானோரைப் பார்க்கவிரும்பி அங்கடைந்து, தன்குடும்பத்தைச் சத்தியவதனன் பாதுகாத்து வருவதுகண்டு சந்தோஷித்து, உனக்கு யாதுவரம் வேண்டும்? எனக்கேட்க, திரிசங்கு அவரைச் சாஷ்டாங்கமாகப்பணிந்து ஸ்வாமீ! வசிஷ்டர் எனக்கு இராச்சியமில்லாமற் செய்து எனையேப் பாவியாக்கிவிட்டனர். யான் என இராச்சியத்தை யடையக் கிருபைசெய்ய வேண்டும் எனக்கேட்க, விசுவாமித்திரர் அஞ்சாதே! உன் பாவங்களையெல்லாம் ஒழித்து உன்னை அரசனுக்கிப் பட்டாபிஷேகஞ் செய்துவைப்பேனென்று, அந்த இராச்சியத்திலிருந்த குருப்பு நீங்கும்படி மழைபெய்யச்செய்து, யாகாதிகளைச்செய்து அவனுக்குப் பட்டங்கட்டி, அவனையே அரசனுக்கித் தனது விருப்பின்படி சென்றனர். திரிசங்கு சிலகாலஞ் சென்றபின்னர், கேகயவமிசத்தில் தோன்றிய சத்தியரதை யென்பவளிடம் அரிச்சந்திரனைப் புத்திரனைப்பெற்று, அவன் வயதடைந்தது கண்டு, அவனுக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்வித்து, வனத்தையடைந்து வசிஷ்டமுனிவனைக்கண்டு பணிந்து பழயபடியே குருவாகக்கொண்டு, யான் இந்தத் தேகத்துடனே சுவர்க்கத்தை யடையத் தயை செய்யவேண்டுமென்றுப் பிரார்த்திக்க, வசிஷ்டர் அசாத்தியமென, திரிசங்கு வசிஷ்டபுத்திரரையடைந்து அவர்களைக்கேட்க, அவர்களும் அசாத்தியமேயென, எனது குருவுங் குருபுத்திரருமாகிய வர்களால் முடியாதாயின் அவ்வாறு செய்வோரைக் குருவாகக் கொள்ளுவேனென, வசிஷ்டபுத்திரர் திரிசங்குவைநோக்கி, நீ யெங்களை யவமதித்ததால் நீசனுகுவனெனச் சபித்தனர். அந்தச் சாபத்தை யடைந்தபின்னர் மீண்டும் விசுவாமித்திரரைச் சரணமடைந்து, அவரால் யாகஞ்செய்வித்து மானுடதேகத்துடன் சுவர்க்க

லோகத்தை யடைய, தேவர்கள் தடுத்தனர். அதுகண்ட தேஜசிகர் தனது தவப்பலனால் திரிசங்கு சுவர்க்கமென்னு மிடமொன்றை யுண்டாக்கி அங்கு அவனைத் தங்கச்செய்தனர்.

முனிவர்களே! அரிச்சந்திரன் சக்கிரவர்த்தியாயிருந்து அநேக இராசசூய அசுவமேதாதிகளைச் செய்து மூவுலகத்திலும் சத்தியவானென்னும் பெயரையடைந்தான். அரிச்சந்திரனுக்கு ரோகிதாசுவனும், அவனுக்கு விருகனும், அவனுக்குப் பாகுவுந் தோன்றினர். பாகுவென்பான் அரசுசெய்கையில் * ஹைஹயவமிசத்தில் தோன்றியவர்களும் தாலஜங்கவமிசத்தில் தோன்றியவர்களும், அவனைப் சண்டைசெய்து அவனை வனத்திற்குத் துரத்தினர். பாகுவென்னும் அரசன் இராச்சியத்தையிழந்து வனத்தில், பிருகு வமிசத்துதித்த ஔர்வர்சிரமத்திற் புத்திரவிருப்பாற்றவஞ்செய்கையில், அவர் ஓர் கனியினைக்கொடுத்து அலன்மனையியைப்புசிக்கச்செய்கவென, அருகிருந்த அவ்வரசனது மற்றோர் மனைவி அதில் நஞ்சுகலந்து வஞ்சனையாகக் கொடுத்தனள். சிலநாளில் பாகு இறந்தனன். அவன் மனையியர் உடன்கட்டையேற யத்தனிக்கையில், ஔர்வமுனிவர் விஷத்தோடு கருவற்றிருப்பவளை, கர்ப்பவதி உடன் கட்டையேறப்படாதெனத்தடுத்து, அவள் வயிற்றிலிருந்த விஷம் அந்தச்சிசுவைத் துன்புறுத்தாது தன் மந்திரத்தாற்றடுப்ப, விஷத்தோடே அக்குழந்தை பிறந்தது. அது காரணமாக, சகரன் [கரம் - விஷம்; சகரன் - விஷத்தோடு தோன்றினவன்] என நாமகரணஞ் செய்து வேதசாஸ்திரங்களைப் பயிற்றினர். பின்னர் அவன் தன் தந்தையின் நஷ்டராச்சியத்தை யடைந்து மிலேச்சர் முதலானோரைச் சயித்து, ஔசசக்கிராதிபதியாய் அரசு செலுத்திவந்தான். அவன் ஔர்வமுனிவ ரநுக்கிரகத்தா லளிக்க ஆக்நேயாஸ்திரத்தாற் பல மன்னரை வெல்வது கண்டு, அரசர்கள் மனஞ்சகியாது சகரனுடைய குருவாகிய வசிஷ்டமுனிவரை யடைந்து அவர்பால் விண்ணப்பித்துக்கொள்ள, அவர் சொல்லவுங் கேளாதுப் சத்துருக்களை வதைத்துப் பிரஜைகளைப் பாதுகாத்துவந்தான். அம்மிலேச்சர்களிற் சகாள் என்பவர்களைக் குடுமியைக் கத்தரித்துச் சஞ்சரிக்கவென்றும், யவனரை முழுத்தலையும் முண்டிதமாயிருக்கவென்றும், காம்போஜரை மோவாயில் மயிர் வைத்திருக்க வென்றும், அக்கிரமஸ்தர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையாக இது போன்ற தண்டங்கள் விதித்து, அரசுசெய்து வந்தான். இதுநிற்க: சந்ததி விருத்தியை விரும்பிய சகர சக்கிரவர்த்தி வனத்தையடைந்து தவஞ்செய்து, ஔர்வமுனியின் கிருபையால் வரம்பெற்று, அதனால் அவன் மனையியிருவரில் முத்தவளிடம் வம்சோத்தாரகனும் அற்பாயுவடையவனுமாகிய அசமஞ்சனும், இளையவளிடம் அதிசூரரான அறுபதினாயிரம் புதல்வருந் தோன்றினர். அசமஞ்சன் தன்வாலிப தசையால் அக்நகரத்திலுள்ள குழந்தைகளையெல்லாம் நதியிற் போட்டுக் கொன்று வந்தனன். அதனையறிந்த சகரன் தன் குருவாகிய வசிஷ்டரிடம் தருமசாஸ்

திரத்தை விசாரித்து, அவனைக் காட்டிற்கனுப்பி விடுவது தருமமென் றுணர்ச்சூழ் அவனை யவ்வாறே வனத்திற்கு அனுப்பிவிட்டனன். அப் பொழுது அசமஞ்சன் மனைவி கர்ப்பவதியாயிருந்தனள். சில தினங்களில் அக்குழந்தை பிறக்க அதற்கு அம்சுமான் எனப் பெயரிட்டனர். பிலேச்சர்களாற் குறைவற்ற தானம் யாக முதலியவற்றை முன்போலவே விருத்தியாக்கி நிலைநிறுத்தி அசுவமேதஞ் செய்ய யத்தனித்து, இலக்கண மமைந்த அசுவத்தை யலங்கரித்துப் பூப்பிரதக்ஷிணஞ் செய்விக்க, அது கிழக்கடற் கரையிற் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், இந்திரன் சகர சக்கிரவர்த்தியினிடம் பகைமைகொண்டு அந்த அசுவத்தைக் யபகரித்துக் கொண்டு, பாதலத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த கபிலமுனிவருடைய ஆசிரமத்திற் கட்டிச்சென்றனன். சகரசக்கிரவர்த்தி தன் அசுவமேதப் புர வியைக்காணுது தன் புதல்வர். அறுபதினாயிரவரையும் அதனைத்தேடும்படி யனுப்ப, அவர்கள் உலகெங்குந் தேடிக்காணாது பூமியை வெட்டிக்கொண்டு பாதலஞ்சென்று, அங்கேகபிலமுனிவர் தவச்சாலையிற்குதிரையிருக்கக்கண்டு இம்முனிவனே இதனை யபகரித்தவனென்று, அவனைப் பலவாறு தூஷித்து இறைச்சலிகையில், முனிவர் யோகநீக்கி ஹுங்காரஞ் செய்ய, அவர்கள் யாவருஞ் சாம்பராயினர். நெடுநாள் கழிந்த பின்னர், சகரன் தன் பௌத் திரனாய அம்சுமானை நோக்கி, யான்தினைகூதசெய்து கொண்டிருக்கின்றேன். என் புதல்வரிறப்பினும் யாகத்தை விடப்படாது. நீ அப்புரவியைக் கொணர்கவென, அம்சுமான் அவ்வாறே தேடிச்சென்று பாதலத்தை யடைந்து முனிவரையும் புரவியையும் சகரபுத்திரரெரிந்தகனலாய சாம்பர் மலையையுங்கண்டு, விஷயத்தை யுணர்ந்து, முனிவரைப் பிரார்த்தித்துக் குதிரையை அவரனுமதியாற் பெற்றுக்கொண்டு, தன் மூதாதைகளுக்குக் கிரியைசெய்து முடிக்கையத்தனிக்கையில், தன் மாதுலனாகிய கருடபகவான் பிரசன்னனாகி, நீ ஆகாயகங்கையை வருவித்தாலன்றி இவர்கள் கதியடை யார்கள். சாபத்தியினால் நரகத்தை யடைந்துள்ளார்களென, அது தன்னால் முடியாதென்று கருதி, குதிரையைக் கொண்டுவந்து தன் பாட்டனாகிய சக்கிரவர்த்தியிடஞ் சேர்த்து யாகத்தை முடிப்பித்தான். சகரன் சிறிது காலத்தில் அம்சுமானுக்குப் பட்டங்கொடுத்துக் காலகதியடைந்தனன். அம்சுமான் அநேக காலம் அரசுசெய்து, தன் புதல்வன் திலீபனுக்குப் பட்டங்கட்டித் தேகநீங்கினன். திலீபன் தன் காலமுழுதுஞ் சகரபுத்திர னைச் சற்கதியேற்றச் சாத்தியப்படாது பகீரதனென்னுந் தன் புதல் வனுக்கு அரசுரிமைகொடுத்து நற்கதியெய்தினன். பகீரதன் தன் பெரி யோர் கபிலர் சாபத்தாற் கதிகாணடைந்திருப்பதுணர்ந்து அவர்களை நற் கதியை யடையச்செய்ய வேண்டுமென்று கோகர்ண தீர்த்தத்திற் றவஞ்செய்து ஆகாயகங்கையை வருவித்து, அவர்களையெல்லாம் நற்கதி யடையச் செய்தனன். பகீரதனுக்குச் சுருதசலனும், சுருதசலனுக்கு நாபாகனும், நாபாகனுக்கு அம்பரீஷனும், அம்பரீஷனுக்குச் சிந்துதீப னும், அவனுக்கு அயுதாஜியும், அவனுக்கு ருதுபர்ணனும் புத்திராகத்

தோன்றினர். ருதுபர்ணன் அக்ஷஹ்ருதயமென்னும் மந்திரத்தை யறிந்த வனாய், நளச்சக்கிரவர்த்தியை நட்பு கொண்டிருந்தனன். ருதுபர்ணனுக்கு அநுபர்ணனும், அநுபர்ணனுக்குக் கல்மாஷபாதனென்னுங் காரணப் பெயர் வாய்ந்த மித்திரசகனும், கல்மாஷபாதனுக்குச் சர்வகர்மாவும், சர்வகர்மாவுக்குத் தன்னைவென்ற இராவணனை நோக்கித் தன் வம்சத்திற் றோன்றி ஒருவனாலேறக்கவெனச் சாபமிட்ட அநரண்னியனும், அநரண் னியனுக்கு முண்டித்துருவனும், முண்டித்துருவனுக்கு நிஷதனும், நிஷத னுக்குத் தீர்க்கபாகுவும், தீர்க்கபாகுவுக்கு ரகுவும், ரகுவுக்கு அஜனும், அஜனுக்குத் தசரதனும், தசரதனுக்குத் தர்மத்திற் றிருப்பிடமாகவும் இராகூஸ்குல காலனுக்கும் நூறு அசுவமேதஞ் செய்தவனுகவுமுள்ள ஸ்ரீராமனும், ஸ்ரீராமனுக்குக் குசனும், குசனுக்கு அதிதியும், அதிதிக்கு நிஷதனும், நிஷதனுக்கு நளனும், நளனுக்கு நபசும், நபசுக்குப் புண்டரீ கனும், புண்டரீகனுக்கு க்ஷேமதன்வாவும், க்ஷேமதன்வாவுக்குத் தேவாநீ கனும், தேவாநீகனுக்கு அஹீநகுவும், அஹீநகுவுக்குச் சகல்வானும், சகல்வானுக்கு வீரசேனனுமாகப் புத்திரர்களாக அநேக அரசர்களுதோன் றினர்கள். இந்த மன்னர்கள் வைவசுவதமநுமரபிற்றோன்றிய ஜேஷ்டர்கள். இவர்கள் வம்சமுழுவதையுஞ் சொல்லிமுடிக்க யாதொருவருக்குஞ் சாத்தியமானதன்று. இந்த வைவசுவதமநு மரபைக் கேட்டவர்கள், ஆயுஷ் மான்களாகவும் புத்திரவான்களாகவும் சூரியமண்டல வழியாகச் சிவ லோகத்தை யடைந்து நித்தியமான வாழ்வையடைவார்களென்று ஸூத முனிவர் கூறினர்.

வைவசுவதமநுமரபுரைத்தது.

முற்றிற்று.

அறுபத்திரண்டாவது

பிதுர்தேவர் சிறப்புரைத்த அத்தியாயம்.

சௌநகாதி நைமிசாரணிய வாசிகள் ஸூதமுனிவரை நோக்கி, ஸ்வாமி! சூரியபகவானுடைய பரம்பரையைக்கேட்டுப் பேரானந்தமடைந் தோம். இனிச் சிரார்த்த தேவர்கள்யாவர்? பிதுர்கள்யாவர்? அவர்களை எவ் வாறு பூஜிக்கவேண்டும்? அவர்கள் எவ்வகைய பலனைக்கொடுப்பர்? இவற் றையெல்லாம் விரிவாகச்சொல்லவேண்டுமெனக்கேட்க, ஸூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்: முனிவர்களே! அருமையான விஷயத்தைக்கேட் டீர்கள். இவ்விஷயம் ஸநத்குமாரமுனிவரால் மார்க்கண்டேய முனிவருக்கும், மார்க்கண்டேயரால் பீஷ்மருக்கும், பீஷ்மரால் தர்மராஜாவுக்குஞ் சொல் லப்பட்டன. அவ்விஷயத்தைச் சொல்லுகிறேன்: பிதுர்கள் சிரார்த்தாதி கருமங்களாலேயே சந்தோஷத்தையடைவார்கள். அவர்களுக்கு வேண்டிய பொருள்களைக்கொடுத்துப் பூசிக்கவேண்டும். அவ்வாறு சிரார்த்தங்களை

முறைப்படி செய்தவர்கள் பிதுர்களால் இஷ்டகாமியங்களை யடைவார்கள். சிலருடைய பிதுர்கள் புண்யவசத்தால் சுவர்க்க லோகத்தையும், சில பிதுர்கள் பாவவசத்தால் அதோலோகத்தையும் அடைந்திருப்பார்களாதலின், ஒருவன் செய்யுஞ்ஸ்ராத்தம் அவர்களையெவ்வாறுசென்றடையுமென்று கேட்பீர்களானால், அதனையுஞ் சொல்லுகின்றேன். சுவர்க்கவாசிகளாகிய தேவர்களும், தங்கள் பிதுர் ஸ்ராத்தத்தைச் செய்துவருகிறார்களென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். பூர்வம் பீஷ்மர் தருமராஜனை நோக்கிச்சொன்னதாவது: தருமநந்தன! யானொருகாலத்தில் என்பிதாவாகிய சந்தனுமகாராஜனுக்குச் ஸ்ராத்தஞ்செய்கையில், பூமியைக்கிழித்து பிதுர் ஆவாஹனஞ்செய்தவிடத்திலிருந்து என் தகப்பனார் அப்பிண்டத்தைக் கைநீட்டிக்கேட்க, யான் அதனை யவர் கையிற்கொடாது தருப்பையின் பேரிலேயே வைத்தனன். அவர் அதனைக் கையிற்கொண்டு பெருமகிழ்ச்சியோடு எனக்குச் சிலதருமங்களைச் சொல்லினர். அதாவது: நீ தருமவான். உன்னாலேயே யான்புத்திரவத்தனனேன். உன்னாலேயே யான் கடைத்தேறினேன். அரசன் செய்கிற காரித்தையே பிரஜைகள் பிரமாணமாகக் கொண்டு நடக்கிறார்கள். யானே நேராகவந்து உன் கைப்பிண்டத்தைக் கையேற்றுக் கேட்டும் என்கையிற் கொடாது வேதமார்க்கத்தை நம்பித் தருப்பையின் பேரில் என்னை யுத்தேசித்து வைத்தமையால், உலகத்தில் தருமம் சாசுவதமாகவிருத்தி யடையப்போகிறது. யான் சந்தோஷித்தேன். நீ விரும்பியகாலத்திலன்றி யுன்னுயிர் நீங்காது வாழ்வாய் என்று கூற, யான் அன்னிபலோகத்தை யடைந்த பிதுர்கள் ஸ்ராத்தத்தால்எவ்வாறு திருப்தியடைகிறார்கள்எனக்கேட்க,என்தந்தை மைந்தனே! ஆதிதேவனுடைய புத்திரர்களாகிய பிதுர்கள் தேவர் அசுரர் மானுடர் யக்ஷர் ராக்ஷஸர் கந்தர்வர் கின்னரர் உரகர்களாலேயும் பூஜிக்கத் தக்கவர்கள். எத்தவருணச்சிரமத்தில் ஜனித்தவர்களாயினும் பிதுர்பூஜை அவசியஞ்செய்யவேண்டியவர்களே. தங்கள் பிதுர்கோத்திர நாமங்களைக் கூறிச் ஸ்ராத்தங்களைச் செய்தால், பிரமதேவனுற் படைக்கப்பட்டுள்ள ஸ்ராத்ததேவர்கள் அதனையடைந்து, பிதுர்களாகிய தாங்கள் சுவர்க்க நரகங்களில்எவ்விடத்திலிருப்பினும் எங்களை அவர்கள் திருப்தி செய்கிறார்கள். இன்னும் இதுஷிஷயத்தில் உனக்குற்ற சந்தேகங்களை மார்க்கண்டேயமுனிவரிடத்திற்கேட்டி அறிந்துகொள்க என்று கூறி, எனது தந்தை அந்தர்த்தானமாயினர். அதன்பின்னர், சிலகாலஞ் சென்று யான் இவ்விஷயத்தை மார்க்கண்டேயமுனிவரிடஞ்சென்று கேட்க, மார்க்கண்டேய முனிவர் கூறுகின்றார். பீஷ்மனே! தாயும் தீயும் பிறரும் பிதுர்களுடைய அநுக்கிரகத்தினாலேயே கீர்த்தி முதலியவற்றை யடைந்திருக்கிறோம். யான் அநேக யுகங்களுக்கு முன்னர் மேருமலையினுச்சியிற் கடுந்தவஞ்செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடைய தேஜசால் சுவர்க்கலோகத்திலிருந்து திவ்வியமான விமானமொன்று அற்புதவர்க்கண்டேன். அவ்விமானத்தில் மிகாதித்துக்கொண்

டிருக்கும் அக்கினிபோலவும், சூரியவொளியும் மழுங்கத்தக்க பேரொளியாகவும் விளங்கிய ஒரு அங்குஷ்ட அளவுடைய ஒருவரிருக்க, அவரைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து, நீர்யார்? யானெப்படி உம்மையறிவேன்? எனக்கேட்க, அவர் மார்க்கண்டேயனே! நீ யென்னையறியுஞ் சக்தியுடையனே. ஆயினும் நான்சொல்லுகிறேன். யானே சகலலோக சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவருடைய மானஸபுத்திரனாகிய ஸநத்குமாரமுனிவன். என் தம்பிகளாகிய மானஸபுத்திரர்களுடைய வம்சத்தான் உலகமுழுவதும் பரவியிருக்கின்றது. யான் ஸந்நியாசாச்சிரமத்தை மேற்கொண்டுள்ளேன். நெடுநாளைக்கு முற்பிறன்றி அதுமுதலாகக் குமாரனாகவே யிருத்தலின், ஸநத்குமாரனென் றழைக்கப்படுகிறேன். நீ பெரும்பக்தியுடன் தவஞ் செய்தமையின் உனக்குத் தரிசனந் தந்தேன். நீயாதுவரம்வேண்டுகின்றனை? எனக்கேட்க, யான் ஸநத்குமாரமுனிவனை நோக்கி, ஸ்வாமீ! பிதுர்களுடைய உற்பத்தியைப்பற்றி யெனக்கு நன்றாகச்சொல்லவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமாரமுனிவர் சொல்லுகிறார்.

முனிவனே! பூர்வத்திற் பிரமதேவர் சிலதேவர்களைச் சிருஷ்டி செய்து தன்னைப் பூசிக்கும்படி உபதேசித்தனர். அவர்கள் பிரமன் வாக்யத்தைத் தவறித் தங்களைத் தாங்களே பூசித்துக்கொண்டனர். தன்னைப் பூசியாத அந்தத் தேவர்களை வெகுண்டு, அதனால் ஞானவீனர்களாகுகவெனச் சபிக்க, அவ்வாறே அவ்வமரர் ஞானநீங்கி, பிரமதேவனைப் பணிந்து, எங்களுக்கு ஞானமுண்டாகும்படி அநுக்கிரகஞ் செய்யவேண்டுமெனப்பிரார்த்திக்க, பிரமதேவர் தேவர்களே! என்புத்திரனைக்கேட்டு அதற்குப்பரிகாரந் தேடிக்கொள்ளுங்களென்ன, அவர்கள் பிரமபுத்திரனை வேண்ட, அவர்கள் தேவர்களே! உங்களை யுக்தச் சாபம் பாதியாது, உங்கள் விருப்பின்படி செல்லுங்கள் புத்திரர்களே! என்று, அவர்கள் சாபத்தை விலக்கினர். அப்பொழுது பிரமதேவர் அவர்களைநோக்கி அமரரே! நீங்கள் என்புத்திரரைப் புத்திரர்களே என்றழைக்கப் பெற்றமையின், அவர்கள் பிதுர்களாகவும், நீங்கள் புத்திரர்களாகவும் விளங்குமின் என்றனுக்கிரகித்தனர். அவ்வகையாக வுள்ள பிதுர்களைக் குறித்துப் பிண்டதான ஸ்ராத்தாதிகளைச் செய்தால் அப்பிதுர் தேவர்கள் திருப்தியடைந்து செய்தவனுடைய பிதுர்களையுந் திருப்திசெய்து, அவனுடைய இஷ்ட காமியங்களையுங் கைகூடச் செய்வர். ஆதலின் விசுவதேவர் முதலாயினரைக் ஸ்ராத்தகாலங்களிற் பூசித்து இஷ்டகாமியங்களை யடைய வேண்டியது என்று ஸநத்குமாரமுனிவர் கூறினர்.

பிதுர்தேவர் சிறப்புரைத்தது

முற்றிற்று.

அறுபத்துமூன்றாவது

பிதுர் பக்தியின் பலனுரைத்த அத்தியாயம்.

வஜ்ரத்துமாரமுனிவர் பீஷ்மரைநோக்கி இன்னும் கூறுகின்றார். "இராஜரிஷியே! பிதுர்தேவர்கள் எழுவர்; கவ்வியவாகன் அனலன் சோமன் யமன் அரியமன் அக்நிஷ்வாத்தன் பர்ஹிஷதன் எனச் சொல்லுகிறார்கள். இவருள்ளால்வர் தேகத்தோடும் மூவர் தேகமின்றியும் விளங்குவர். அன்றியும் இவர்களில் மூவரைத் தேவர்களும் ஏனைய நால்வரைப் பிரமனைநினைந்தவர்களும் பூஜிக்கின்றனர். பிதுர்கட்குச் சிரார்த்தகாலத்தில் வெள்ளிப்பாத்திரத்தினும் சிரார்த்தஞ்செய்யவேண்டும். (பாகியையோகூடிய) அக்நிமானுயின் சுதாவென்னும் சுதந்தத்தினால் தோழஞ்செய்யவேண்டும். அல்லது ஜலத்திலாவது பிராமணனுடைய கையிலாவது ஹோமஞ் செய்யவேண்டும். அவ்வாறு செய்வோர் இகலோக சுகத்தையும் பரலோகத்தில் சுவர்க்கபோகத்தையும் அடைவார்கள். தேவகாரியத்தைக்காட்டிலும் பிதுர்காரியஞ் சிறந்தது. அதனையதிக பக்தியோடு செய்யவேண்டும். பிதுர்காரியத்தினால் அடையுங்கதியை யோகபலத்தினுலும் அடைய முடியாதென்று வஜ்ரகுமாரமுனிவர்கூறி, திவ்யமான ஞானதிருஷ்டியினால் ஆகாய மார்க்கமாகச் சென்றருளினர்.

பீஷ்மரே! பூர்வத்திலிருந்த ஒரு சரித்திரத்தைச் சொல்லுகின்றேன்: பரத்துவாஜமுனிவரைமைந்தர் யோகசருமத்தை யடைந்தும், தமது தர்மபத்தையாற் பிரஷ்டர்களானார்கள். வக்ஷுஷ்டன் - குலேர்தனன் - ஹிம்சிரன் பிசுனன் [கோள்] கபி [குரங்கு] பிதுர்வர்த்தி என அவர்கள் நடக்கை காரணமாகப்பெயருற்றனர். வெஷ்டிரன் [தங்கையையிரட்சித்தவன்] என ஒர்புத்திரனுமிருந்தனன்.

இவர்களெழுவரும் பிரஷ்டர்களாகவிலிருந்து அந்தஜனனத்தையொழித்து கௌரிகமுனிவருக்குப் புதல்வர்களாகத்தோன்றி கர்க்கமுனிவர் சிஷ்யர்களாகிக் குருகேஷத்திரத்தில் தமதாசிரியருக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்கையில், கர்க்கமுனிவர் அவர்களை நோக்கி வேதிரூர் ஆசிரமத்திலிருந்து பசுவுங்கன்றும் ஓட்டிக்கொண்டு வரும்படிசொல்ல, அவர்களெழுவரும் அவ்வாறுசென்று பசுவைக்கன்றுடன் பிடித்துக்கொண்டுவருகையில், அவர்களிற்சிலருக்குப் பசியினுலும் அயர்மையினுலும் பாவத்தினுலும் அப்பசுவைக்கொன்று புசிக்கலாமென்று குருரமான யோசனைபண்டாயிற்கூற, கபி [வன்]ருபன் என்போன் அதிபாவம் அவ்வாறு செய்யவேண்டாதென்று தடுப்ப, பிதுர்வர்த்தியென்போன் பிதுர்பக்தியுடையவனுயிருத்தலையின், நீங்கள் இதனைக்கொல்வதானுற் பிதுர்பிரீதி செய்துகொன்று புசிக்கலாமென்றனன். அதனையெல்லாரும் அங்கீகரித்து அப்பசுவைக்கொன்று சிரார்த்தத்திற்குபயோகித்து எழுவருமாக அதனைப்புசித்துவிட்டு, கன்றினைமட்டும் குருவினிடங் கொண்டுபோய்ச்சேர்த்து ஸ்வாமி! பசுவினைப் புசிகொன்றுவிட்டதெனக்கூற, முனிவர்கபடத்தை அதனையொப்புக்கொண்டனர். அவர்களெழுவருங் குலாசாரதருமத்தை விடுத்து கோவதை செய்து அதனைப் புசித்த பாவத்தாலும் குருவினிடம் பொய் பேசிய பாவத்தாலும் நரகாக்ஞியென்னு மிடத்தில் வேவெருவருத்திற் சகோதரர்களாகப்பிறந்தனர். கீழ்க்குலத்திலுதிப்பினும் அக்குலத்திற்கேற்ற ஆசாரத்தோடு நடப்பினும் பிதுர்பக்தியுடையவர்களாயிருத்தலையாலும் பூர்வஜன்மஞானமுண்டாகிச் சிலகாலம் மனு

வருத்தத்துடன் கழித்து, காலஞ்சரமென்னுமலையில் மிருகங்களாகப் பிறந்தனர். அப்பொழுதும் பூர்வஜனனக் கியானத்துடன் இந்த ஜனனத்தை யொழிக்கவேண்டுமென்று கழித்து, சரத்தீபத்தில் சக்ரவாக பக்ஷிகளாகப்பிறந்து ஜன்மாந்தரஞானத்துடன், குருவினிடம் பொய் கூறினும் பணிவிடையை மூறைப்படிசெய்தலையால், கோவதைசெய்த பாவத்தை யொழிக்கவேண்டுமென்னுங் கருத்துடையவர்களாயிருந்தார்கள். சுமனஸ் சுவாக் சுத்தன் பஞ்சாலன் சித்ரரதசன் சுநேத்ரன் சுதந்திரன் என்னும் பெயர்பெற்று அவர்கள் சக்ரவாகங்களாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், நீபதேசராசன் வேட்டையாடவந்தனன். சுதந்திரனென்னும்பறவை அவனுடைய செல்வத்தைக்கண்டு பொறுமைகொண்டு நான் இவனைப்போல ராஜாவாகப்பிறக்கும்படி பூர்வஜனன புண்ணிய மேதனு மிருக்குமோவென்றுசையுற்றுக் கூறியது. அதனைக்கேட்டுக் கொண்டருகிருந்த அதன் உடன்பிறந்த இரண்டுபறவைகள் நீயரசனுயின் யாங்கள் மந்திரிகளாகிறேமென்றன. அப்பொழுது சுவாக் என்னும் பறவை நீங்கள் ஞானத்தையடைய விரும்பாது இராச்சிய செல்வத்தை விரும்பினீர்களாதலின் அவன் அரசனுகவும் நீங்கள்மந்திரிகளாகவுஞ் சிலகாலத்திற் காம்பிலியமேதசத்தை யடைவீர்கள் எனக்கூற, அம்மூவரும் சுவாக் என்னும் சகோதரனைநோக்கி நாங்கள் போகத்தையடைந்தால் எங்களுக்கு எப்பொழுது எப்படிஞானம் வரும்? எனக்கேட்க, சுவாக், பிதுர்பக்தியுடையவர்களாதலின் மற்றொருஜனனத்தில் நாமெல்லோரும் ஒன்றுகூடி மாநடஜனனமடைந்து ஞானவான்களாவோம் என்று விடை கொடுத்தது.

அறுபத்துநான்காவது

மேற்படி அத்தியாயம்.

அந்தஎழுச்சரவாகங்களும்மாநதசிலில்அன்னப்பறவைகளாய்ப் பிறந்து ஜலத்தையும் வாயுவையும் பக்ஷித்துக்கொண்டு தவசிலுல் உடலையிளைக்கச்செய்து கொண்டிருந்தன. வக்ஷுத்தையடைந்த நீபதேசராசன் பலவிதமாகவேட்டையாடித் தன்சைனியங்களுடன் நகரத்தையடைந்து சிலகாலங்கழித்துத் தன்புதல்வனை ஹிரண்யனென்பவனுக்குப் பட்டங் கட்டி விடுத்து வனத்தையடைந்து தவஞ்செய்துகொண்டிருந்தனன். அவனது தவத்தினுல் அந்தவனம் பிரகாசித்தலையின் அதற்கு வைப்பிராஜமெனப் பெயராயிற்று. அந்த அன்னங்களுள் நான்கு யோகநிலையாகிய தவத்திலேயே விருப்புடனும் மூன்று மோகவிருப்பத்துடனும் அந்த ஜனனத்தையொழித்து, காம்பில்லிய நகரத்தில் சுதந்திரன் அரசன் புதல்வனுக ஹிரண்யன். என்னும்பெயருடன் பிறந்தது. சித்ரரதசன் சுநேத்திரனென்போர் அந்நகரத்திலே யோர்வேதியனுக்குப் புத்திரராகி வேதவேதாங்கங்களே யுணர்ந்து சான்றவான்களாயிருந்தார்கள். பஞ்சாலனென்போன் ருக்வேதியாகத்தோன்றி ஆசாரியனுக வினங்கினன். சுதந்தனென்போன் வேதியனுகத்தோன்றி இரண்டுவேதங்களே யுணர்ந்திருந்தனன். சுவாக் என்போன் சாமவேதமுணர்ந்த வேதியனுயினன். சுமனஸ் என்போன் யாகஞ்செய்விக்கும் யோக்கியதையுடைய ஆசிரியனுகப்பிறந்தான். இவ்வாறு சிலகாலஞ் சென்றபின்னர் ஹிரண்யனென்னு மரசன் பிரமதத்தனென்னுந் தன்புதல்வனுக்குத் தனது அரசுரிமையைக் கொ

தத்துவிட்டவனத்தையடைந்து பெருந்தவஞ்செய்து உயர்பதவியை யடைய விரும்பிக்காலங்கழித்தனன். அவ்வரசன் அவ்வாறுவனத்திற்குச் செல்லுகையில், பஞ்சாலனும் சுத்தனும் அலனுடன் தபோவனத்தை யடைந்து தவஞ்செய்து சிறந்தபதவியை யடைந்தார்கள். வேய நால்வரும் அத்தக் காம்பிலிய தேசத்திலேயே ஓர் வழைப்பிராமணனுக்குப் புத்திரர்களாகி, திருதிமான் சமஹாத்மா தத்துவதரிசி சிருத்தகனென்னும் பெயருடன் சாஸ்திரங்களையெல்லாங்கற்று யோகமார்க்கத்திலிருந்துமுக்தியையடைந் தார்கள். கேட்டீரோ பிஷ்மரே! கோவதையாகிய பெரும்பாவத்தைச் செய்தவர்களாயினும் பிதுர் திருப்திசெய்வித்த விசேஷத்தினால் அநேக ஜனனங்களைக் கழித்தபிறகும் ஜன்மாந்தர வுணர்ச்சியோடும் முக்தியை யடைந்தார்கள். ஆதலால் ஒவ்வொருவரும் பிதுர்காரியத்தைச் சிரத்தை பக்தி முதலியவற்றுடன் அவசியஞ்செய்யவேண்டுமென்று மார்க்கண்டேய முனிவர் எனக்குச் சொல்லியிருக்கிறாரென்று, பீஷ்மர் தருமகர்த்தனை சோக்கிக் கூறினரென்று ஸூதமுனிவர் கைதீசாரணிய வாசிகளுக்குக் கூறி யருளினர். மோக்ஷ சாம்பிரதாயத்தை யடைந்து சிவபெருமானுடைய திருவடி நீழலை யடையவேண்டுமென்று விரும்புவோர் யாவரும் இச் சிவபுராணத்தைப் படித்துங்கேட்டும் பிறருரைத்துஞ் சிவபெருமா னுடைய திருவடியில் மனதைச்செலுத்தியும் நல்வழியில் நிற்கக்கடவர். மஹாதேவா வென்றெழுமுறை சொன்னமாத்திரத்திலேயே பிரம ஹத்தியாதி பாவங்களெல்லாம் ஒழிந்துபோகுமாயின் அத்தப்பெருமா னுடைய சிவமஹாபுராணத்தைப் பக்தியோடுவாசிப்போரும்கேட்போரும் நீங்காது சிவலோகத்தில் வாழ்வார்களென்பது சொல்லவேண்டுமோ? சந்தேகமின்றி அவர்கள் மோக்ஷத்தையடைவார்கள்.

இத்தச் சிவமஹாபுராணத்தைச் சொல்லிய பிராமணசிரேஷ்டரை வன்திரபூஷணுதிகளால் சிவபெருமானுகப் பாவித்து விஷ்ணுமூர்த்தியின் அபாவதாரமாகிய வியாஸரூபியே! தேவரீருக்கு நமஸ்காரஞ் செய் கிறேனென்று பூஜிக்கும்பக்தரில், சர்வலோக நாயகனுகியசிவபெரு மான் பெருங்களிப்படைந்து திருப்பதவியையளிப்பன். இப்புராணத்தைச் சொல்லிவந்த ப்ராமணருக்குத் தன்னுபசுவுமாகப் பெருந்தக்ஷிணை வைத்துத் தானஞ்செய்யவேண்டியது. சுவர்ணத்தினுற் செய்தசிவலிங்க மூர்த்தத்தை யவருக்குக்கொடுத்து, சாஷ்டாங்கமாகப்பணிந்து தாங்கள் சொல்லியபுராணத்தைச் சிரவணஞ் செய்தபலன் எமக்குக் கைகூடுமாக வென்று சொல்லவேண்டியது. அவ்வாறுசெய்தவரே சிவபுராணசிரவண பலனை யடைவர். ஆதலின் இப்புராணஞ் சொன்னவனைச் சிவமாகவே பாவிக்கவேண்டுமென்று அவசியம்.

பிதுர்பக்தியின்பலனுரைத்தது

முற்றிற்று.

தர்மசம்ஹிதை முற்றுப்பெற்றது.

ஸ்ரீசாம்பசிவார்ப்பணமஸ்து.

சிவமயம.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சைவபுராணமென்னும்

ஸ்ரீ சிவமஹாபுராணம்.

கைலாயஸம்ஹிதை.

காப்பு.

நகேஶ்வராயஸாம்ப்ய வாமணாயஸுவஸ்தி நவே|
ஸுயாகவாஹவிஷோபாயஸுஸ்தோத்ரஹேதவே||

நமஸ்கிவாயஸாம்ப்ய வாகணயஸஸ்தேவே|
ப்ரதாகபுருஹேதபாய ஸர்கஸ்திதிஸம்ஹாரஹேதவே||

பார்வதிதேவியோடும், கணபதிஸ்கந்தர் முதலிய புத்திரர்களோ டும் பிரமதகணங்களோடும், பிரகிருதி புருஷர்களுக்குத் தலைவராகவும், சிருட்டி திதி சங்காரங்களுக்குக் காரணபூதராயும் மங்கலசொரூபராயு முள்ள பரமேஸ்வரனுக்கு நமஸ்காரம்.

மு : வது

சத்திரயாகஞ் த ழுத்தியாயம்.

பூர்வத்தில் ஹிமாசலத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த ருஷிகளெல்லாம் வேதரிசனஞ்செய்யக் காசியம்பதியை யடைந்தார்கள். ஆங்கிடத்துள்ள புண்ணியதீர்த்தமாகிய சங்காதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்ய மணிகர்ணிகைத் துறையையடைந்து ஸ்நானஞ்செய்து, தேவர் ருஷி பிதுர்முதலினோர்க்குத் தருப்பணஞ்செய்து விசுவநாதனைத் தரிசித்துப் பூசனைசெய்து, சதருத்திர மென்னும் வேதவாக்கியங்களால் துதிசெய்து, ஒவ்வொருவருங் கிருத திருத்திபர்களாகுமென்று சந்தோஷித்துக் காலங்கழிக்குநாளில், பஞ்ச சூரோசமென்னும் சேஷத்திரத்தைத் தரிசிக்கவேண்டி ஸூதபுராணிகர் அங்குற்றனர். ஒருநாள் அவனைக்கண்டு ஆனந்தங்கொண்டு அவருடன் மற்றவர்களுங்கூடி, ஸ்வாவிசுத்திதானஞ்சென்று விசுவநாதனைத்தரிசித்து முத்திமண்டப மடைந்தனர். அவ்விடத்துள்ள சிவபாசனத்தினுட்கார்ந்த புராணிக சிரேஷ்டரான ஸூதமுனிவரை அர்க்கியபாத்தியங்களாற் பூசித்து ஆனந்தக்கண்ணீர் துளித்தனர். வேதமுனிவர் அத்தகைய முனிவர்களை நோக்கி சேஷமமாயென வினவ, சிவானுக்கிரகத்தாலும் பெரியோராசீர்

வ்ரதத்தாலும் சுகமேயிருக்கிறோமென்று கூறி, ஸூதர் சந்தோஷத்தோ டிருப்பதையறிந்து பிரணவார்த்தத்தையறிய விருப்புடையராய்க் கேட்க லாயினர். வியாஸபகவானிட சீடரே! மகாபுராணிகரே! சத்தியவதிபுதல்வ ரான வியாஸபகவானுற் சகல புராணங்களையும் எம்போலியருக்கு உபதே சிக்குந் தன்மையாகப் புராணிகோத்தமரென்று பட்டாபிஷேகஞ்செய்யப் பெற்றவரே! புராணங்களின் சாரமுழுவதையுங் கருப்பத்திலடக்கி ஆனந் திக்கின்றவரே! புராணங்கள், வேதத்தின் சொரூபத்தையும் அதனங்கங் களையுமுணராதாரு மறியும்படி யாவருக்கும் பயன்படுமாறு சொல்லப்பட் டுள்ளவை, வேதமோ பிரணவத்தின் பொருளைக்குறிக்கும், பிரணவமோ மகேசுவர சொரூபம், மகேசுவரனே தேவரீருடைய இதய கமலத்தில் எழுந்தருளியிருக்கின்றனன். தேவரீருடைய முகமாகிய தாமரைமலரி னின்றுந் தோன்றுகின்ற சிவசரிதமாகிய அமுதத்தை அடியேங்கள் பானஞ்செய்து,எமது தீவினையை யொழித்துப் பரமானந்தத்தை யடையச் செய்யவேண்டும். தேவரீரையன்றி யெளியேங்கட்கு அத்தகைய அரும் பொருள்களை யுபதேசிக்கவல்ல பரமார்த்த குரு யாவரிருக்கின்றனர்? என்று உடல் புளகித்துக் கூறினர்கள். அதனைக்கேட்ட வியாஸரது தவப்பேறுகத்தோன்றிய ஸூதமுநிவர், விநாயகர் - சுப்பிரமணியர் - மஹா யரசபுத்திரியாகிய பார்வதியார் - பரமேசன் - சிலாத முநிவர் புதல்வரும் சுயசையின் கணவருமாகிய நந்திதேவர் - ஸநத்குமாரமுநிவர் - வியாஸபக வான் ஆகிய இவர்களைத் தோத்திரஞ்செய்து சொல்லத்தொடங்கினர்.

புண்ணிய சீலர்களே! மிகவும் நுட்பமான கேள்வியைக்கேட்டீர் கள். இதனையே எனது தாயினியரான முநிவர் பூர்வம் நைமிசாரண்ய வாசிகளுக்குரைத்தனர். அவ்வரலாறு பின்றேன். அதனை இந்திரியங் களைப் புறஞ்செல்லாதடக்கியிருக்கு டு கேட்பீர்களாக: பூர்வத்தில் ஸ்வர்லோகஸ்த மந்தாகினி அதிபு ணிய பூமியாகிய நைமிசாரண்ணி யத்தில்முநிவர்களெல்லாருங்கூடிப்பரமேசனைத்திர்க்கசத்திரயாகமியற்றிச் சந்தோஷிப்பித்து ஈசுவரசொரூபமித்தகையதென்றறிந்து கொள்ள வேண்டுமென்று விருப்புடையராய் வியாஸபகவான் வருகையை யெதிர் பார்த்திருந்தனர். விஷ்ணுவினபிசமாயும், ஜகத்குருவாயும், ஸகல புராண கர்த்தாவும், வேதங்களைப் பாருபாடு செய்தவராயும், பராசரமுநிவரின் தவப்பலனுமாகபகவானுமுள்ள வியாஸமுநிவரதுவரவைக்கண்டு,யாவருந் தீவிரத்திலெழுந்து எதிர்கொண்டழைத்து மலர்ந்த முகத்துடன் அர்க்கிய பாத்தியாதிகளாற் பூசித்து யாகசாலையிற் சுவர்ணமயமான ஆசனத்தி லிருத்தி, மகாவினயத்தோடு அஞ்சலியஸ்தராய் நிற்க வியாஸமுநிவர் நைமிசாரணிய முநிவர்களைக்கண்டு கூறலாயினர்: முநிவர்களே! நீவிரார ம்பித்தயாகம் நிர்விக்கினமாய் நடைபெற்றதா? இந்தயாகத்திற் பரமே சனைப் பூசித்ததற்குக் காரணமென்ன? இவ்வாறு அவரை அர்ச்சிப்ப தற்குக்காரணம் ஈசுவரசொரூபத்தை யறியவேண்டுமென்னும் எண்ண

முடையோராவீர்களென்றுந் தெரிவிக்கிறதென்றார். இதைக் கேட்ட முநிவர்கள் வியாஸபகவானை வணங்கி, நாராயணனுடைய அம்சமாகத் தோன்றியவரே! நீரே ஜகத்திற்குக் குருவாவீர். சிவபெருமான் திருமால் பிரமன் முதலானருடைய பிரசாத முழுவதையும் அடைந்திருக்கிறீர். பாவிகளுக்குத் துர்லபமான உம்முடைய பிரதாரவித்தத்தைத் தரிசித் தோமாதலின் நாங்களேதிருதகிருத்தியர்கள். புண்ணியமான நைமிசாரணி யத்திற் சத்திரயாகத்தை முடித்தும் பிரணவஸ்ரூபமான பரமசிவத்தை யறிய வேண்டுமென்று கருதிய எங்கள் கருத்து நிறைவேறுமையால் அதனைத் தேவரீர் அடியேங்களுக்குக் கூறியருளவேண்டும். எங்கள் இதயத்திலுள்ள சந்தேகங்களைப் போக்குதற்குத் தேவரீரை யன்றித் திரிலோகங்களிலும் யாவரிருக்கின்றனர்? அபாரமான பவசாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் எங்களைச் சிவஞானமாகிய ஓடத்தினால் முத்தியாகிய கரையையடையச் செய்வீராக எனக்கூறினர். அதனைக்கேட்ட வியாஸ முநிவர் வேதாந்தசாரமும் பிரணவஸ்ரூபமும் சமுசார மோசகமுமாகிய பரமேசுவரரை இதய புண்டரீகத்திற்தியானித்து, சந்தோஷித்தத்துடன் சொல்லத்தொடங்கினர்.

சத்திரயாகஞ் செய்தது

முற்றிற்று.

இரண்டாவது

பார்வதி பரமசிவ ஸம்வாதமுரைத்த அத்தியாயம்.

பிராமணசிரேஷ்டர்களே! நலமான கேள்வியைக் கேட்டீர் கள். சிவரூபத்தை விசாரித்தறியவேண்டுமென்னு ஞானம் உலகத்தில் உண்டாவது துர்லபம். சிவப்பிரசாதமுடையவர்களுக்கே பக்தியுண்டாகு மென்று வேதங்கள் கூறுகின்றன. தீர்க்கசத்திர யாகத்தினால் அம்பிகா பதியை யருச்சனை செய்தபடியால் அப்பிரமபதியின் லக்ஷணங்களை விசாரித் தறியத்தொடங்கினீர்கள். பூர்வத்தில் நடந்த உமாமஹேசுவர ஸம்வாத மான ஓர் இதிகாசத்தையுங்கட்குச் சொல்லுகின்றேன். ஈசுவரியார் தக்கனுடைய தவப்புதல்வியாகத்தோன்றி சிவபெருமானை யடைந்தபொழுது, தன் தந்தையாகிய தக்கன் சிவநிந்தை செய்தமையின் அவனைப் போஷித்து வளர்த்த வுடலையும் அவன் மகனென்பதனாலாகிய தாக்ஷாயணியென்னும் பெயரையும் மாற்றவேண்டுமென்று கருதிச் சிவானுக்ரஹத்தால் இமாசலமன்னனுக்குப் புத்திரியாக உமையென்னும் பெயருடன் தோன்றித் தவஞ்செய்து சிவபெருமானை மணஞ்செய்து கொண்டு அவ்விறைவனுடைய துடையின்மேலில் உட்கார்ந்து கொண்டிரு க்கும் சிவபெருமானை நோக்கி, பகவானே! சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங் களையும் கடத்துபவரே! சர்வஜ்ஞரே! பக்தவத்ஸலரே! எனக்கு இந்த

அவதாரத்தில் மந்திரதிக்ஷைசெய்து என்னைப் பரிசுத்தையர்க்கவேண்டும் எனக்கேட்க, "சந்திரசேகரராகிய சங்கரன் தேவி! உனக்கு அவ்வகைய யோசனை யிருக்கும்பக்ஷத்தில் நீ கைலாயகிரிக்கு வந்தால் அவ்வாறே கெய்விக்கின்றேனென்று, தேவியோடு வெள்ளிமலையையடைந்து விதிப் படி உமைக்குத் தீக்ஷைசெய்து பிரணவஸ்ரூபத்தை யுபதேசித்து, சுத்த தத்துவஸ்ரூபமாகிய உத்தியான வனத்தையடைந்தனர். உமாதேவியார் சுமாலினிமுதலிய தோழியர் கொண்டுவந்த மலர்களால் அலங்கரித்துக் கொண்டு சிவபெருமானது மடியில் எழுந்தருளியிருந்தனர். அந்தச்சம யத்திற் சிவபெருமான் பார்வதிதேவியின் திருமுகத்தைப்பார்த்து ஆனந் தித்துக்கொண்டிருக்க, பார்வதிதேவி எம்பெருமானை நோக்கி, ஸ்வாமீ! பிரணவமந்திரத்தை யுபதேசிக்கப்பெற்ற யான் அதன்பொருளை யறிய விரும்புகின்றேன். அப்பிரணவம் எவ்வாறு தோன்றியது? அதற்குப் பிரணவமென்னும் பெயர் எப்படி வந்தது? அதினின்றும் எவ்வளவு மந்திரங்கள் தோன்றின. வேதாதி யென்று அதனைச் சொல்வானேன்? அப்பிரணவ மந்திரத்திற்குத் தேவர்யாவர்? அப்பிரணவ தேவர்களை யெவ்வாறு பாவிப்பது? அதனையெப்படிப் பூஜிப்பது? பிரணவமே யெப்படி பிரபஞ்சத்திற்கு ஆத்மஸ்வரூபமென்பது? பிரணவமந்திரத்தை ஜபிக்கத் தக்க அதிகாரிகள் யாவர்? அதனனுண்டாகும் பிரயோசனத்தையும் அதன் பூஜாஸ்தானத்தையும் அதற்குரிய மண்டலப்பிரமாணத்தையும் அதற்குரிய ருஷிகளையும் நியாஸக்கிரமங்களையும் என்னிடத்தில் தய யுண்டாகி விஸ்தாரமாகச் சொல்லவேண்டு மெனக்கேட்க, சர்வலோக நாயகனாகிய சிவபெருமான் சொல்லத்தொடங்கினர்.

மூன்றாவது

மேற்படி அத்தியாயம்.

பார்வதி! நீ வினவிய விஷயத்தைச்சொல்லுகின்றேன். அதனைக் கேட்டமாத்திரத்திலேயே ஜீவர்கள் எனதுதன்மையையடைவார்கள். பிர ணவார்த்தத்தை யறிவதே என்சொரூபத்தையுணர்ந்தலாம். அது எல்லா வித்தைகளுக்குள் வித்தையாயுள்ளது. அதிசூக்ஷ்மமானது. விசேஷ அர்த்தத் தையுடையது. சர்மானியர்களாலறியச் சாத்தியமில்லாதது. சர்வஜ்ஞத் வமும் குணத்ரயமும் சர்வ வியாபியுமாகிய யான் ஓம் என்னும் அத்தப்பிரணவத்திலேயே பூர்ணனாக வினங்குவேன். உலகத்திலுள்ள தாவரசங்கமாதி யெல்லாரூபங்களையுங் காணப்படுவது பிரணவார்த்தமே. அதுவேபரப்பிரமம். அதுவே ஏகாக்ஷரமென்றும் ஆதியந்திரமென்றும் சர்வசாதகமானதென்றும் சொல்லப்படுவதால் எல்லாவற்றிற்கும் ஆதி யில் அப்பிரணவம் உச்சரிக்கப்படுகிறது. பிரணவமே நான். நானேபிரண வம். பிரணவமே யான். எனக்கும் பிரணவத்திற்குஞ் சிறிதும் பேதமே யில்லை. ஆகலின் ருஷிகளெல்லாரும் என்னை ஏகாக்ஷரூபியென் றறிகிறார்

கள். பிரணவமே வாச்சியம். யானே பதன்வாசகம். மோக்ஷமடையவிரும் பிய முமுக்ஷுக்கள் அதனையே யறியவேண்டும். பிரமாதி தாவரமீருக வுள்ள எல்லாவற்றிற்கும் பிராண ஸ்வரூபமாயிருத்தலின் அது பிரணவ மெனப்பெயருற்றது. அது பஞ்சவர்ணத்மகமானது. அகார உகார மகாரங் களாகிய மூன்றுஞ்சேர்ந்து மூன்றுமாத்திரையுடையதாக வுச்சரிக்கப் பிர ணவமாகும். மேலும் அதனோடு அரைமாத்திரை கூட்டி யுச்சரித்து ஈசான மந்திரத்தைச் சபித்தால் நாதபிந்துக்களின் மூலமாக என்னையறியலாம். அப்பிரணவஸ்வரூபியான என்னிடத்திலிருந்தே வேதங்கள் தோன்றின. வேதமுதல்வன்யானே - பிரணவமே எனது வாசகம். அகாரமானது ரஜோகுணத்துடன் நான்கு முகங்களையுடைய பிரமனுப்ச் சிருஷ்டியைச் செய்யும்; உகாரமானது ஸத்வ்குணத்துடன் பிரகிருதியென்னும் யோனி யாகிய விஷ்ணுசொரூபமாய் உலகத்தைரகஷிக்கும்; மகாரமானது தமோ குணத்துடன் உருத்ரனுகிய புருஷனாய் உலகத்தைச்சங்காரிக்கும். பிந்து வானது மஹேசுவரசொரூபமாய்த் திரோபவத்தைச்செய்யும். நாதமானது சதாசிவரூபமாய் எல்லாவற்றையும் அநுக்ரஹிக்கும். சதாசிவமூர்த்தியை சதாசிவரூபமாய் எல்லாவற்றையும் அநுக்ரஹிக்கும். சதாசிவமூர்த்தியை நாதாந்தத்திற் சர்வகர்த்தாவாகவும் சர்வஜ்ஞனுகவும் சர்வேசனுகவும் நிர் மலனுகவும் பிரமானந்தஸ்வரூபனுகவும் தியானிக்கவேண்டும். அகார உகார மகார பிந்து நாதங்களாகிய பஞ்சவர்ணங்களில் முறையே ஒன்றற் கொ ன்று மேம்பட்டன. ஸத்யோஜாதம் அகாரமும், வாமதேவம் உகாரமும், அகோரம் மகாரமும், தற்புருஷம் பிந்துவும், ஈசானம் நாதமும்மாகும். அகாரரூபியான ஸத்யோஜாத மூர்த்தியினின்று எட்டுக்கலைகளும், உகார ரூபியான வாமதேவமூர்த்தியின்று பதின்மூன்றுகலைகளும், மகாரரூபி யான் அகோரமூர்த்தியினின்று எட்டுக்கலைகளும், பிந்துரூபியான தற் புருஷமூர்த்தியினின்று நான்குகலைகளும், நாதரூபியான ஈசானமூர்த்தியி னின்று ஐந்துகலைகளுந் தோன்றும். மந்திரம் - யந்திரம் - தேவதை - பிரபஞ்சம் - குரு - சிடனென்னும் அறுவகைச் சாதனங்களால் என்னை யறிந்து ஐக்கியாநுசந்தானஞ்செய்து கொள்ளவேண்டும். சமஷ்டிஸ்வரூப மான மந்திரத்தைச் சொன்னேன். அம்மந்திரமே யந்திரமாவதையும், அதன் மண்டலக்கிரமத்தையும் உனக்குச் சொல்லுகின்றேன்: ஆறு ஆதாரங்களுக்கு மதிதப்பட்டிருக்குமென்னைத் தியானிக்கவேண்டியது. வைராக்கியமுடைய புருஷனே என்னை அவ்வாறு பாவிக்கவல்லவன். அவனுக்கே நான் விஷயமாவேன். ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதமின்றி யென்னைப்பாவிக்கவேண்டும். என்னை அவ்வாறுணர்தற்கு, னிரதம் சாந்தம் தவம் இந்திரியநிக்கிரகம் சௌசம் ஆசாரம் வேத வேதாங்க ஞானம் பிராமணத்துவம் விஷ்ணுபக்தி முதலிய குணங்களை யுடையவன் சகல சாஸ்திரஞானத்தையும் யோகநிலையையும் உடைய உத்தமாதிகாரியனுகிய பிதாவை நமஸ்கரித்துச் சந்தோஷிக்கச்செய்து, சிவமா கவே பாவித்து, தன் மனநிலைமையை யறிந்துகொள்ளவேண்டியது. அவர் தற்கிணங்கி அநுமதிகொடுப்பாராயின், பனிரண்டினங்கள் பரீக்ஷாதி

செய்துகொண்டு, சமுத்திரக்கரை, நதி, மலை, சிவாலயம் முதலிய விடங்களிற் சுக்கிலபக்ஷத்துப் பஞ்சமி அல்லது ஏகாதசிகளில், காலையில்ஸ்நானஞ் செய்து நித்திய கருமங்களை முடித்து, சுத்தமனசுடன் குருசந்நிதானமடைந்து வந்தித்து, சாந்திமுகத்தால் பிதுரர்களை யர்ச்சித்து, கண்டத்திற்குமேல் ஸ்நானஞ்செய்துகொண்டு நகங்களைக்கத்து ஸ்நானஞ்செய்து இருபத்தைந்து காழிகைக்குமேல் பொறிமாவைப் புசித்து, மாலைக்கடனைமுடித்து ஒளபாசனஞ்செய்து குருகாணிக்கை கொடுத்துக் குருவைப்பூசித்து ஓமத்திரவியங்களைக்கொண்டு தங்கள் சூத்திரத்திற் கூறியுள்ளபடியே பிரஜாபத்திய மென்னும் இஷ்டியை வேதமந்திரத்தினால் செய்து, வேதியருக்குத்தக்கதக்ஷிணை கொடுத்து, தான் அதுவரையிற் செய்துவந்த ஓமாக்கினியை ஆத்மாரோபனஞ்செய்யும் மந்திரங்கூறி, அன்னத்தையும் ஓமஞ்செய்து புருஷஸூக்த மந்திரத்தினால் ஓமாந்தஞ்செய்யவேண்டியது. அந்த அக்கினியில் வடதிசையில் தர்ப்பாசனத்தில் மரவுரி மான்றோல் முதலியன அணிந்து உட்கார்ந்து மௌனமாகக் காயத்திரியை மனோதிடத்துடன் விடிய ஐந்து காழிகைவரையில் அப்பியசிக்கவேண்டும். பிராமமுகூர்த்தத்தில் அவ்விடத்தைநீங்கி ஸ்நானமுடித்துச் சருவைப்பசனஞ்செய்து விரஜாஹோமத்தை வாமதேவ மதத்தினாலாவது சௌநகாதி மதத்தினாலாவது செய்யவேண்டும். இவ்வாறு செய்வோன் கர்ப்பவாச கஷ்டத்தினின்றும் விடுபடுகிறான். ஓமத்தை முடித்துக் காலைக்கடன் கழித்து நித்தியாக்கினியை வளர்த்தி, அதனை யாத்மாரோபணஞ்செய்து, சூரியோதயமாகு மெல்லையும் காயத்திரியை ஜபித்து, உலகவின்பத்தை விடுத்துப் பிரணவத்தை யுச்சரித்து, சிகை உபவீதம் கடிசூத்திரம் முதலிய விவற்றை விலக்கிக் கிழக்கு முகமாகவாவது வடக்கு முகமாகவாவது சிறிது தூரஞ்சென்று [விரக்தி முற்றப்பெருவிடின் தண்டம் கமண்டலம் கடி சூத்திரத்தை யணிந்து கொள்ளலாம்], ஆசிரியனையடைந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவர் திருவடியிற் பக்தியோடு நிற்கவேண்டும். அப்பொழுது ஆசிரியர் விரஜாஹோமஞ் செய்துள்ள பஸ்மத்தையெடுத்து "அக்கினிரிதி" முதலிய மந்திரத்தால் உடல் முழுவதும் பூசி, நெற்றியில் திரிபுண்டரமணிந்து தேனியே இவன் தனது இதயத்தில் உன்னையும் என்னையும் தியானிக்கும் யோக்கியதையுடையனாகக்கடவன் என்று கூறி, அவரது வலதுகையைச்சீடனுடைய சிரமேல்வைத்து அவனது வலதுகாதிற் பஞ்சவர்ணத்மகமான பிரணவ மந்திரத்தை அதற்குரிய ருஷி சந்தமாய் உபதேசிக்கவேண்டியது. மந்திர தந்திராதி ஷட்வித சாதனங்களால் அதனை யறிந்தகொண்டு குருவைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து நின்றேதானும் அவருக்குப் பணிவிடைசெய்ய வேண்டியது.

உமையே! அதன் பின்னர் அவன் எந்நேரமொருபொழுதும் மறவாதுகுருவினிடத்தில் ஞானுப்பியாசஞ் செய்யவேண்டியது, சமதமாதி குணங்களும் வேதசாஸ்திர ஞானமும் இராகத் துவேஷாதிகளினீக்கமும்

உடையவனுக்கு யதியென்னும் பெயரும் என்னை யுபாசிக்கும் யோக்கியதையும் உண்டாகும். இதய கமலத்தில் ஆதார சத்திமுதல் திரிதத்துவம் வரையில் அந்தராகாசத்தில் ஓமென்னும் ஏகாக்ஷர சொரூபமாகிய பிரமத்தையே தியானிக்கிறவன் என்லோகத்தை யடைந்து சிவஞானத்தைச் சம்பாதித்துச் சாயுச்சியத்தை யடைகிறான். மேலும் அவனதுஷ்டிக்க வேண்டிய நியமங்களாவன: காலையில் எழுந்து சுத்தபடிக ஒளிபோன்றவராயும், பரமசிவமாயும் உள்ளவராக மனதால் குருவைத் தியானித்து சோடசோபசாரங்களுடன் அஞ்சலியஸ்தனுய் அவர் சந்நிதானஞ்சென்று அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, நான் உதயமுதல் மாலைவரையிற் செய்யுஞ் செயல்களேயெல்லாம் சந்நிதானத்துப் பூஜையாகப் பாவித்து எனக்கதுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து, அவரதுக்கிரகத்தைப்பெற்று, ஜிதேந்திரியனுய்ப் பரிசுத்த தலத்தில் திவ்யாசனத்திலிருந்து,மூலாதி பிரமரந்திரபரியந்தம் பிரணவத்தை உச்சரித்து, சிரசோடுகூடிய பிராணயாமத்தால் தேகத்தைச் சுத்தஞ்செய்து, திருணத்தைப் பூமியிலிட்டு மலஜலங்களைக்கழித்து, ஜலசமீபஞ்சென்று சற்று விலகியிருந்து சௌசஞ்செய்யவேண்டியது. கைகால்களைச் சுத்தஞ்செய்தபின் ஆசமனஞ்செய்து பிரணவதியானமுள்ளவனுய் மௌனத்தோடு வடக்குமுகமாய்ப் பழுத்த மாவிலை முதலியவற்றில் தந்தாவனஞ்செய்தும் அமாவாசை ஏகாதசி முதலிய நாட்களில் பன்னிருமுறை வாய்க்கொப்பளித்து, முகத்தைப் பரிசுத்தஞ் செய்தும் இருமுறை ஆசமனியஞ்செய்து, நெல்லிக்காயளவு மண்ணைக் கொண்டு கைகால்களைக்கி, அருணோதயகாலத்தில் தேகமுழுதும் மண்ணைப் பூசி முதலில் ஸ்நானஞ்செய்து; பின்னர் எண்ணெயும் குருவையும் தியானித்து ஸ்நானஞ்செய்யவேண்டியது.

தேவி! பின்னர் ஜலத்திலிறங்கிச் சங்கமுத்திரையை யேழுதி, பிரணவத்தால் பன்னிரண்டுமுறைஸ்நானஞ்செய்து கையேழி,கெளபீனம் பரிசுத்தஞ்செய்து ஆசமனியஞ்செய்து பிரணவத்தால் தேகந்துடைக்கும் வஸ்திரத்தைப் புரோக்ஷித்து முதலில் முகந்துடைத்து, சிரமுதல் பாதம் வரை நன்முய்த்துடைத்து, குருசந்நிதானத்தில்வந்து மௌனமாய்ச் சுத்தமாயிருந்து, புது அரைஞாண்பூண்டு கௌபீனந்தரித்து இருமுறை ஆசமனியஞ்செய்து ஜலக்கரைசென்று விபூதியை ஸத்தியோஜாத மந்திரத்தால் எடுத்து "அக்கினிரிதி" என்னும் மந்திரத்தாற் தூளனஞ்செய்து "ஆபோவா" வென்னும் மந்திரத்தால் மானசிகமாய் ஜலம் புரோக்ஷித்து "ஓமாபு" வென்னும் மந்திரத்தாலும் "மானஸ்தோக்க" மென்னும் மந்திரத்தாலுங் குழைத்து சிரம், நெற்றி மார்பு தோள் நாபி முதலிய தானங்களில் ஈசானதிமந்திரங்களால் திரிபுண்டரந்தரித்து பிரணவத்தால் தேகமுழுதும் தூளனஞ்செய்து கையலம்பி, இரண்டாமுறை பஸ்மத்தை யெடுத்து மேற்சொன்ன மந்திரங்களாலேயே குழைத்து, "திரியாயுஷம் திரியம்பகம்" என்னும் மந்திரத்தைப் பிரணவத்துடன் ஜபித்து, சிரம் நெற்றி

மார்பு தோள் கரபிகை சந்தி இவ்வாறு ஸ்தானங்களிலும் பதாக்கிரம மாய்த் தரித்துக் கையுலம்பிப், பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக் குருவைத்தியானிக்க வேண்டியது. (இதில் முதலிற் சொல்லியது தூளையும் பின்னர் சொல்லியது திரிபுண்டரமுமென்க). ருஷிசந்தசுகளோடுகூடி பரிதாக்தமான ஆறு பிராணயாமங்களைச்செய்து பிராணவாயுவையடக்கி இந்திரிய துவாரங்களைப் பிரணவத்தால் மும்முறை தொட்டு ஆசமனியஞ்செய்து, ஓங்கார சொரூபியான ஈஸ்வரனைத் தியானித்துச் சூரியமண்டல மத்தியில் சர்வ தேஜோமயமாகியும் பரமாகியும் எட்டுக்கரங்கள் நான்கு முகங்களுடன் அர்த்தநாரீஸ்வர சொரூபமாயும், சர்வாலங்கார சர்வாச்சரியங்களட்டிருப்பிடமாயும் இருக்கின்றவனுக்கு மூன்றுமுறை அர்க்கியங்கொடுத்து நூற்றெட்டுமுறை ஜபஞ்செய்து, பன்னிருமுறை தர்ப்பணஞ்செய்து மறுபடி ஆசமனியஞ்செய்து, ருஷிபாதி கரமங்களுடன் மும்மூன்று பிராணயாமத்தைச்செய்து மௌனமாய்ப் பூஜைபண்ணுமிடஞ்சென்று அங்குகாலலம்பி இருமுறை ஆசமனியஞ்செய்து பூஜையிடத்தில் வலதுகாலை முதலில் எடுத்து வைத்துப் பின்னர் சென்று, விதிப்படி மண்டலத்தைச் செய்யவேண்டும்.

பார்வதி ப்ரமசிவ ஸம்வாதமுறைத்தது

முற்றிற்று.

நான்காவது

பஞ்சாவரண பூஜாமண்டலமுறைத்த அத்தியாயம்.

முனிவர்காள்! பரிசுத்தகுலத்தைக் கற்புவந்பங்களால் பூஷணஞ்செய்து அலங்காரமாகிய பக்தனொன்றமைத்து அவனுக்கிழ் இவ்விடமுழுவதும் நிரத்துக் கோமயங்கொண்டு மெழுகி, ஓலையைக்கொண்டு பதின்மூன்று பாகமாகக்கிழித்து, மண்டலத்தின் கிழ்ப்பக்கத்திருந்து மேல்முகநோக்கி முன்செய்த பதின்மூன்று கோலையும்வொன்றைப்பதின்மூன்று கூருக நூற்றறுபத்தேதான்பது கூருக்கி, மத்திபகூறைத்தாமரைப்பொருட்டுப்போலாக்கி அதன் சுற்றிலும் இதழ்களைபோல எட்டுப்பாகஞ்செய்து, அதன் நீனி நிலவர்ணமாகவும் அடிவெண்ணிறமாகவும் பொருட்டுமஞ்சணிறமாகவு மிருக்கச்செய்யவேண்டும். மேற்கண்ட எட்டுப்பாகத்தின் தகிணபாகத்துள்ள இதழை தூதியாகக்கொண்டு பிரதகூணக்கிரமத்தில், ஒன்று கறுப்பும் மற்றொன்று பொன்னிறமாகவும் மாறிமாற நிறங்களமைக்கவேண்டியது. அன்றியும் பொருட்டின் நடுவில் பிரணவாகாரமெழுதியிருக்கவேண்டும். இவ்வகைய பீடத்தின்மேற் பரமேசனை அமைக்கவேண்டும். அவர்மேல் அமரேசரையும் மகாகாளரையுமெழுதவேண்டும். இவ்விருவருவங்களின் சிரசில் கண்டமொன்று வரையவேண்டும். மேற்கண்ட பீடத்தை நிலவர்ணமாகவும் பரமேசரைப் பொன்னிறமாகவும்

அமரேசரையும் மகாகாளரையும் முறையே இரத்தநிறமாகவுங் கருநிறமாகவும், தண்டத்தைப் புகைநிறமாகவும், அத்தண்டத்தின்மேல் சிவபெருமானைப் படிகநிறமாகவும்வரைந்து, சத்தியோஜாத மந்திரத்தினால் இரத்தமயமான வட்டஞ்செய்ய வேண்டியது. இதற்கு அஷ்டகோணங்களுண்டு செய்து, நான்கு மூலைகளில் நான்கு துவாரஞ்செய்து, அக்கினி திக்கில் மஞ்சள் நிறமாக எட்டிதழ்களுள்ள தாமரையொன்றெழுத வேண்டும். அம்மலர்க்கிடையே பொன்னிறப் பொருட்டொன்றமைக்க வேண்டும். இவ்வகைய பொருட்டின் மத்தியில் ஓகாரமெழுதியிருக்கவேண்டும். நிருதி திக்கில் முன்போலத்தாமரை மலரும் பொருட்டுஞ்செய்து மத்தியில் லவென்னுமெழுத்தெழுத வேண்டும். அடுத்த பொருட்டில் உகர ஊகாரங்களும் அதற்கடுத்த தளத்தின் பொருட்டில் ஔகாரமும், ஈசானதிக்கில் முன்போல மலரும் பொருட்டு மெழுதி, அதன்மத்தியில் மகரவென்னுமெழுத்தெழுதி அதற்கு உகாரஞ்சேர்த்து மத்தியில் விந்துவையெழுதி அதன் வெளிப்புறத்தில் ஐந்து கோணங்கள்செய்து அதன் மத்தியிலுள்ள பொருட்டை இரத்தமயமாகவும் பொன்மயமாகவுஞ்செய்தும், இதழ்களைச் செந்நிறமாகவும், அதைச்சுற்றிலும் கருநிறமாகவுமாக்கி, அதன்சுற்றிலும் மீண்டும் வெண்ணிறமுண்டாக்கி இதன் கிழக்குப்பக்கத்தில் ஆறு கோணங்களுடன் கருநிறத்திலும், தென்புறத்தில் முக்கோணத்துடன் இரத்தநிறத்திலும், உதரபாகத்தில் திரிகோணத்துடன் வெண்ணிறத்திலும், மேல்பாகத்தில் பொன்னிறமாகவும் உண்டாக்கி, நான்குமூலைகளிலும் நான்கு விந்துவையெழுதி, உத்தரதிக்கில் உகாரமும் மேல்புறத்தில் மகாரமும் பூர்வபக்கத்தில் அகாரமும் அமைக்கவேண்டியது. இவ்வாறே அக்கினிதிக்குமுதல் மற்றதிக்குகளுக்கெல்லாம் அமைத்துக்கொள்ளவேண்டியது.[இதை விளக்கமாகக் குருமூர்த்தத்தானமிக.]இவ்விதமாக மண்டலத்தையெழுதி,சூரியனைப்பூசைசெய்பவன் பிரமத்தையறியுமியோகியதை யுடையவனாகிறான் என்று கூறினார்.

பஞ்சாவர்ண பூஜாமண்டலமுறைத்தது

முற்றிற்று.

ஐந்தாவது

பஞ்சாவரண பூஜாவிதியும் அங்கதியாவஸ்கரதியாவஸ்முறைத்த அத்தியாயம்.

முனிவர்களே! மேல்போந்த அத்தியாயத்தில் விரித்த மண்டலத்தின் தென்திக்கில் வடக்குமுகமாகப் புலித்தோலில் ஜலக்தெளித்து "சத்திகமலாய" என்று மந்திரத்தை நமவென்ப தோடு கூட்டிப் பன்முறை தனக்குக் கூடுமான ஆஸன ஜபிக்கவேண்டும். அதன்பின்னர் பிரணவபூர்வமாகப் பிராணயாமத்தை விதிப்படி செய்து

மார்பு தோள் நாபி கை சந்தி இவ்வாறு ஸ்தானங்களினும் யதாக்கிரம மாய்த் தரித்துக் கையலம்பிப், பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக் குருவைத்தியானிக்க வேண்டியது. (இதில் முதலிற் சொல்லியது தூளனமும் பின்னர் சொல்லியது திரிபுண்டரமுமென்க). ருஷிசந்தசுகளோடுகூடி பதோர்த்த மான ஆறு பிராணயாமங்களைச்செய்து பிராணவாயுவையடக்கி இந்திரிய துவாரங்களிற் பிரணவத்தால் மும்முறை தொட்டு ஆசமனியஞ்செய்து, ஓங்கார சொரூபியான ஈஸ்வரனைத் தியானித்துச் சூரியமண்டல மத்தியில் சர்வ தேஜோமயமாகியும் பரமாகியும் எட்டுக்கரங்கள் நான்கு முகங்களுடன் அர்த்தநாரீஸ்வர சொரூபமாயும், சர்வாலங்கார சர்வாச்சரியங்கட்கிருப்பிடமாயும் இருக்கின்றவனுக்கு மூன்றுமுறை அர்க்கியங்கொடுத்து தூற்றெட்டுமுறை ஜபஞ்செய்து, பன்னிருமுறை தர்ப்பணஞ்செய்து மறுபடி ஆசமனியஞ்செய்து, ருஷியாதி கிரமங்களுடன் மும்முறை பிராணயாமத்தைச்செய்து மௌனமாய்ப் பூஜைபண்ணுமிடஞ்சென்று அங்குகலசம்பி இருமுறை ஆசமனியஞ்செய்து பூஜையிடத்தில் வலதுகாலை முதலில் எடுத்து வைத்துப் பின்னர் சென்று, விதிப்படி மண்டலத்தைச் செய்ய வேண்டும்.

பார்வதி பரமசிவ ஸம்வாதமுணர்த்தது

முற்றிற்று.

நான்காவது

பஞ்சாவரண பூஜாமண்டலமுணர்த்த அத்தியாயம்.

முனிவர்காள்! பரிசுத்ததலத்தைக் கற்பூரப் பங்களால் பூசணஞ் செய்து அலங்காரமாகிய பத்மமொன்றமைத்து அதன்கிழ் இரண்டுமுழ அகலங்கனத்திற்குக் கோமயங்கொண்டு மெழுகி, ஓலையைக்கொண்டு பதின்மூன்று பாகமாகக்கிழித்து, மண்டலத்தின் கிழ்ப்பக்கத்திருந்து மேல்முகநோக்கி முன்செய்த பதின்மூன்று றேகையும்ஒவ்வொன்றைப்பதின்மூன்று கருகு நூற்றைம்பத்தேழான்பது கூறுக்கி, மத்தியகூறைத்தாமரைப்பொருட்டுப்போலாக்கி அதன் சுற்றிலும் இதழுள்ளனபோல எட்டுப்பாகஞ்செய்து, அதன் றனி நீலவர்ணமாகவும் அடிவெண்ணிறமாகவும் பொருட்டுமஞ்சணிறமாகவு மிருக்கச்செய்யவேண்டும். மேற்கண்ட எட்டுப்பாகத்தின் தகினபாகத்துள்ள இதழை ஆதியாகக்கொண்டு பிரதகிணகிரமத்தில், ஒன்று கறுப்பும் மற்றொன்று பொன்னிறமாகவும் மாறிமாறி நிறங்கனமைக்கவேண்டியது. அன்றியும் பொருட்டின் நடுவில் பிரணவாகாரமெழுதியிருக்கவேண்டும். இவ்வகைய பீடத்தின்மேற் பரமேசனை அமைக்க வேண்டும். அவர்மேல் அமரேசனையும் மகாகாளனையுமெழுத வேண்டும். இவ்விருவருவங்களின் சிரசில் கண்டமொன்று வையவேண்டும். மேற்கண்ட பீடத்தை நீலவர்ணமாகவும் பரமேசனைப் பொன்னிறமாகவும்

அமரேசனையும் மகாகாளனையும் முறையே இரத்தநிறமாகவுங் கருநிறமாகவும், தண்டத்தைப் புகைநிறமாகவும், அத்தண்டத்தின்மேல் சிவபெருமானைப் படிகநிறமாகவும்வரைந்து, சத்தியோஜாத மந்திரத்தினால் இரத்தமயமான வட்டஞ்செய்ய வேண்டியது. இதற்கு அஷ்டகோணங்களுண்டு செய்து, நான்கு மூலைகளில் நான்கு துவாரஞ்செய்து, அக்கினி திக்கில் மஞ்சள் நிறமாக எட்டிதழ்களுள்ள தாமரையொன்றெழுத வேண்டும். அம்மலர்க்கிடையே பொன்னிறப் பொருட்டொன்றமைக்க வேண்டும். இவ்வகைய பொருட்டின் மத்தியில் ஹகாரமெழுதியிருக்கவேண்டும். நிருதி திக்கில் முன்போலொத்தவாறே மலரும் பொருட்டுஞ்செய்து மத்தியில் வ வென்னுமெழுத்தெழுத வேண்டும். அடுத்த பொருட்டில் உகர ஊகாரங்களும் அதற்கடுத்த தளத்தின் பொருட்டில் ஸகரமும், ஈசானதிக்கில் முன்போல மலரும் பொருட்டு மெழுதி, அதன்மத்தியில் மகரவென்னு மெழுத்தெழுதி அதற்கு உகாரஞ்சேர்த்து மத்தியில் விந்துவையெழுதி அதன் வெளிப்புறத்தில் ஐந்து கோணங்கள் செய்து அதன் மத்தியிலுள்ள பொருட்டை இரத்தமயமாகவும் பொன்மயமாகவுஞ்செய்தும், இதழ்களைச் செந்நிறமாகவும், அதைச்சுற்றிலும் கருநிறமாகவுமாக்கி, அதன்சுற்றிலும் மீண்டும் வெண்ணிறமுண்டாக்கி இதன் கிழக்குப்பக்கத்தில் ஆறு கோணங்களுடன் கருநிறத்திலும், தென்புறத்தில் மூக்கோணத்துடன் இரத்தநிறத்திலும், உதரபாகத்தில் திரிகோணத்துடன் வெண்ணிறத்திலும், மேல்பாகத்தில் பொன்னிறமாகவும் உண்டாக்கி, நான்குமூலைகளிலும் நான்கு விந்துவையெழுதி, உத்தரதிக்கில் உகாரமும் மேல்புறத்தில் மகாரமும் பூர்வபக்கத்தில் அகாரமும் அமைக்கவேண்டியது. இவ்வாறே அக்கினிதிக்குமுதல் மற்றநிக்குகளுக்கெல்லாம் அமைத்துக் கொள்ளவேண்டியது. [இதை விளக்கமாகக் குருமூர்த்தத்தானறிக.] இவ்விதமாக மண்டலத்தையெழுதி, சூரியனைப்பூசைசெய்பவன் பிரமத்தையறியயோக்கியதையுடையவனுகிறான் என்று கூறினர்.

பஞ்சாவர்ண பூஜாமண்டலமுணர்த்தது

முற்றிற்று.

ஐந்தாவது

பஞ்சாவரண பூஜாவிதியும் அங்கந்தியாஸகரந்தியாஸமுமுணர்த்த அத்தியாயம்.

முனிவர்களே! மேல்போந்த அத்தியாயத்தில் விரித்த மண்டலத்தின் தென்திக்கில் வடக்குமுகமாகப் புலித்தோலில் ஜலத்தெளித்து அதன்மேலுட்கார்ந்து "சதாசிவமூர்த்தயே" என்று மந்திரத்தை நமவென்பதோடு கூட்டிப் பன்முறை தனக்குக் கூடுமான அளவு ஜபிக்கவேண்டும். அதன்பின்னர் பிரணவபூர்வமாகப் பிராணயாமத்தை விதிப்படி செய்து

"அக்கினிரிதி" என்னு மந்திரத்தினால் விபூதியைத்தேகமுழுதும் தூளனஞ் செய்து குருவைகமஸ்கரித்து, மண்டலஞ்செய்யவேண்டியது. எவ்வாறெனில்: ஈசான்குபுறம் சதுரமாகவும் மத்தியில் திரிகோணமாவும் அதற்குள் விருத்தமாகவுஞ்செய்து ஓமென்னும் மந்திரத்தினால் பீடஞ்செய்து சங்கம் வைத்து அதில் நீர்நிரப்பி, பரிமளபுஷ்பங்களாற் பிரணவத்துடன் அருச்சனைசெய்து பிரணவத்தைமீண்டும் ஜபித்து ஏழுமுறை ஜலந்தெளித்து, தேனுமுத்திரைகாட்டவேண்டியது. மீண்டும் பிரணவத்தாற்புரோகஷித்து, சங்கமுத்திரைகாட்டி அஸ்திரமந்திரத்தினால் தன்னையும் கந்தபுஷ்பாதி பூஜாத்திரவியங்களையும் புரோகஷிக்கவேண்டும். மேலும் பிராணயாமத்தை விதிப்படி மூன்றுமுறை செய்து ருஷியாதிந்நியாசங்களைச் செய்யவேண்டியது. அதன் விபரத்தையு மெடுத்துக் கூறுகின்றேன். மந்திரத்தின் பெயர் ஸௌரம். ருஷிதேவபாகரென்பார். காயத்ரியெனும் சந்தசு எழுத்தின் கணக்கு. தேவதை சூரியமகேசுவரராவர். ஸ்ரா முதலிய ஆறு அக்கரங்களைச்சபித்து அங்கந்யாச கரந்யாசங்களைச் செய்யவேண்டியது. முன்னெழுதிய சக்கரத்தில் அக்கினிமூலையிலுள்ள பதுமத்தில் அக்கினி மந்திரத்தினால் ஜலந்தெளித்து, பிரபூதம், விமலம், சாரம் என்னுந்தேவதைகளை ஆவாகனஞ்செயது, காலாக்கினிருந்திரையும் ஆதார சக்தியையும், அநந்தரையும், பிருதிவியையும், இரத்தினதீபத்தையும் அதற்குமேல் ஆவாகனஞ்செய்து, மாந்சிகமய் நவரத்தின கசிதமான பிரகமும் அதனருகே விருஷங்களும் உத்தியானவனமுமிருப்பதாகப் பாவித்து, தருமம் ஞானம் வைராக்கியம் ஈசுவரியமென்னும் நான்குவகையங்கொண்டு அருச்சித்தும், பின்னர் அதர்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரிய மென்னும் நான்கால் அருச்சிக்கவேண்டும். அம்மண்டலத்திலேயே மாயையைக்கீழ்ப்பீடமாக்கி விதானத்தை ஞானத்தால் மூடி அதனுள் ராஜஸதாமஸஸாத்விக குணங்களை யாவாகனஞ்செய்து பூர்வதிக்குமுதல், நீப்தை சூக்ஷமி ஜயை பத்ரை விபூதி விமலை அமோகை வைத்யுதை முதலிய ஆவரண சக்திகளைச்சூழவும்அவாகனஞ்செய்வதுடன் பிரம விஷ்ணுருத்திரர்களையும், அந்தராத்மாவையும், ஞானரூபமான பரமாத்மாவையும் ஆவாகனஞ்செய்து, யோகபீடத்தை வேதவிதிவழி யருச்சனைசெய்து அதன்மேல் மூலமந்திரத்தினால் ஆதாரசக்தியை ஸ்தாபித்து, பிராணயாமஞ்செய்து இடகலையால் சுவாசத்தை யுட்கொண்டு பிங்கலையால் வெளியிட்டு, புஷ்பாகூதைகளைக்கொண்டு செந்தூரம்போன்ற மேனியுடைய அர்த்தநாரீசுவரரை உருத்திராக்கமாலிகை, பாசம், கட்வாங்கம், கபாலம், அங்குசம், பங்கயம், சங்கு, சக்கரம் முதலிய ஆயுதங்களும், சதுர்முகங்களும் பன்னிரு கண்களும் உடையராய், மாந்சிகமாய் இருதயகமலத்தில் ஆவாகனஞ்செய்து ஸ்ராம் ஸ்ரீம் என்னும் பீஜாக்ஷரங்களால் அர்ச்சிக்கவேண்டியது. அதன்மேல் பிரகாசசக்தியுடன் சூரியனை ஆவாகனஞ்செய்து தேனு முதலிய முத்திரைகளைக் காட்டி, ஸ்ராம் ஸ்ரீம் என்று மந்திரத்தினால் பஞ்சோபசாரஞ்செய்து மூலமந்திரத்தாற் பூசிக்கவேண்டும். முன்

கண்ட கமலதளத்தின் இதழ்களில் அக்னி ஈசானன் நிருதி வாயுவாகிய இவர்களை முதலாவரணத்தி லாவாகனஞ்செய்து பூசனைசெய்து, இரண்டாவது ஆவரணத்தில் பூர்வாதி திக்குமுதல் ஆதித்தன் பாஸ்கரன் பானு ரவி யென்னும் சூரியர்களை காமபேதங்களா லாவாகனஞ்செய்து பூசிக்கவேண்டும். மூன்றுவது ஆவரணத்தில் ஈசானதிக்குமுதல் அர்க்கன் பிரமன் உருத்திரன் விஷ்ணு ஆகிய நால்வரைப் பூசிக்கவேண்டும். சந்திரன், அங்காரகன் புதன் பிரகற்பதி சுக்கிரன் சனி ராகு கேது முதலியவர்களைப் பூர்வதிக்குமுதல் சுற்றும் ஆவாகனஞ்செய்து பூசிக்கவேண்டியது. அன்றி இன்னொருவாறு கூறுவேன் கேட்பாயாக:

முதலிற் கூறியவாறே பிரதமத்திற் செய்து அதன்பின் இரண்டாம் ஆவரணத்தில் துவாசதாதித்தர்களையும் மூன்றுவது ஆவரணத்திற் சூரியன் நீங்க எட்டுக்கிரகங்களையும் ஆவாகனஞ்செய்தும், கடைசியில் கங்கையாதி புண்ணியதீர்த்தங்களையும், ருஷீஸ்வரர்களையும், தேவர்கந்தருவர்களையும் ஆவாகனஞ்செய்து பூசிக்கவேண்டியது. இவ்வகைய மூன்று ஆவரணங்களுக்குள் வேதமயமான சூரியனைப் பூசித்து அதனருகிற் சதுரமான மண்டலமொன்றெழுதி, குருணி நீர்கொள்ளக்கூடிய குடத்தில் சுகந்த நீர் நிரப்பி, சந்தனத்தா லருச்சனை செய்து முழந்தாளிட்டு நமஸ்கரித்து, சிந்துரவர்ணாயநம: சுமண்டலாயநம: சுவச்சாபரணாயநம: என்று தோத்திரஞ்செய்து, புஷ்பம் அக்ஷதை குங்குமம் வாசனைத்திரவியங் கலந்த நீரைப் பொற்பாத்திரத்திலெடுத்து மேற் கூறிய மந்திரங்களாலேயே துதித்து அர்க்கியத்தை யங்கீகரித்து எனக் கருதுகிரஹிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டியது. சாம்பாய சிவாய ஸகணாயாதிதேவதாயருத்ராயவிஷ்ணவே பிரம்மணேசூரியமூர்த்தயேஎன் னும் நாமங்களை நமோந்தமாய்க்கூறி நமஸ்கரிக்கவேண்டும்: கையைச் சுத்தஞ்செய்து முன்சொன்னமந்திரங்களை யுச்சரித்து விபூதி தூளனஞ்செய்து மூலமந்திரத்தினால் கரநீராசனஞ்செய்து பஞ்சோபசாரத்தாலருச்சித்து ஓம் குருவேநம: என்றருச்சனைசெய்யவேண்டியது. பஞ்சாத்மகவான பிரணவத்தைப் பஞ்சமசுவரத்துடன் கூட்டியும், இருபுறத்திலும் ஔகாரங்கூட்டியும் (கௌன) உச்சரித்து இருகரம் புறம், இருதோடை முதலியன படியும்படி, குரு, கணபதி, துர்க்கை, க்ஷேத்ரபாலகன் முதலியவர்களை நமஸ்கரித்து, பிரணவ பூர்வகமாய் ஹிருதய நியாசஞ்செய்து அதற்குமேல் உபஸ்தானஞ்செய்து, "அபஸர்ப்பத்து" என்னுமந்திரத்தினால் பிரணவபூர்வமாய் அஸ்திரமந்திரத்துடன் அருகேயுள்ள விக்நகரானவர்களை யும் ஆகாயத்திலுள்ளவர்களான யக்ஷராக்ஷசர்களையும் விலக்கி, நிவ்வாசனத்திலுட்கார்ந்து பிராணவாயுவையடக்கி பிரமரந்திரத்தினால் அமிசமந்திரத்தால் ஜீவசைதன்னிய விசாலமான பரமேசுவரனை இதயத்தில் சித்தருவமாய்த் தியானித்து, ரேசகபிரமத்தினால் பிராணயாமஞ்செய்து தூற்றப் பன்னிரண்டு பீஜாட்சரங்களால், வாயு அக்கினி, வருணன் முதலினோ

மந்திரத்தாலும் தத்தமது வேதமந்திரத்தினாலும் பிராணப்பிரதிஷ்டை செய்து ஏகாக்ரசித்தனாய் மாதுருகாஸ்யத்தைப் பிரணவத்துடன் ஆவாஹனஞ்செய்து பூசிக்கவேண்டும்: மீஎ ப்பம் பிராணாயாமஞ்செய்து ருஷிக்ரமமாய் ருஷிகளித்தியானிக்கவேண்டியது.

தேவி! இதற்கு ருஷி பிரமன், சந்தஸ் தேவிகாயத்ரம், தேவதை யான். பீஜம்-அகாரம், சக்தி-உகாரம், கீலகம்-மகாரம், என்றுணர்ந்து ஜபித்து மோக்ஷார்த்தத்தில் விநியோகிக்கவேண்டியது. இரு கரங்களின் தர்ஜனிகளால் அங்குஷ்டங்களைத் தொட்டு ஓங்காரபூர்வமாகவும் நமோந்தமாகவும் அகாராயவென்று [ஓம் அகாராய அங்குஷ்டாப்பியாம் நமஃ வென்றும்,] அங்குஷ்டங்களால் தர்ஜனிகளைத் தொட்டு ஓம் உகாராய தர்ஜநீப்பியாம்நமஃ வென்றும், மத்தியமங்களைத் தொட்டு ஓம் மகாராய மத்தியமாப்பியாம்நமஃ வென்றும், அநாமிகைகளைத்தொட்டு ஓம் பிந்தவே அநாமிகாப்பியாம்நமஃ என்றும், கனிஷ்டிகைகளைத்தொட்டு ஓம் நாதாய கனிஷ்டிகாப்பியாம்நமஃ என்றும், அகார உகார மகார நாதபிந்துக்களைச் சேர்த்து இருகரங்களையும் மேலுங்கீழுந் தடவி, கரதலகரப்ருஷ்டாப்யாம் நமஃ என்றுஞ் சபித்துக் கரந்யாஸ முடித்து, அம் பிரம்மஹ்ருதயாயநமஃ என்றும், உம் விஷ்ணுஹ்ருதயாயநமஃ என்றும், மம் ருத்ராத்மனே சிரசேஸ்வாஹா என்றும், மம் ருத்ராத்மனே சிகாய்வஷட் என்றும், அம் பிரம்மஹ்ருதயாயனமே கவசாய ஹும் என்று இருதோள்களையுந் தொட்டும், உம் விஷ்ணுவாத்மனே நேத்ரத்ரயாய வெளஷட் என்றும், மம் ருத்ராத்மனே அஸ்த்ராய பட் என்றும், வியாஹ்ருதிகளைப் பிரணவாந்தமாகத் (திக்பந்த ஃ என்று) திக்பந்தஞ்செய்து, பின்னர் முகமுதலிய அவயவங்களில் ஈசாநாதிகளை விந்யாஸஞ்செய்யவேண்டியது. அதாவது சிரம் முகம் இதயம் குய்யம் பாதமென்னுமிடங்களில் ஐந்து ஈசான கலைகளை நியாயஞ்செய்து; கான்குநிஷைகளிலும் தற்புருஷாதி நான்குமுகங்களையும் ஆவாஹநஞ் செய்து, இதயம் கண்டம் நேத்ர லலாடம் புஜம் மார்பு என்னுமிடங்களில் அகோர கலைகள் எட்டையும் நியாஸஞ்செய்து, குஹ்யம் ஆண் குறி தொடை முழங்கால் முழங்காலின் கீழ்ப்பிரதேசம் புஷ்டம் இடைபக்கம் என்னுமிடங்களில் வாமதேவ கலைகள் பதின்மூன்றையும் நியாஸஞ் செய்து, பாதம் கை பிராணன் சிரம் தோள் என்னுமிடங்களில் ஸத்யோஜாத கலைகளிளட்டையும் நியாஸஞ்செய்து, இவ்வகையாக சிவகலைகளில் மூப்பத்தெட்டினையும் நியாஸஞ்செய்து முடித்தபின்னர் இதில் விடுபட்ட அவயவங்களிலும் பிரணவமந்திரத்தினால் நியாஸமுடித்து, தேவியினுடைய ஹம்ஸமந்திரத்தினாலும் நியாஸஞ்செய்யவேண்டியது.

பஞ்சாவர்ண பூஜாவிதியும் அங்கந்யாஸ கரந்யாஸமுமுரைத்தது

முற்றிற்று.

ஆறாவது

பூஜாமந்திரமும் சதாசிவரூபமுமுரைத்த அத்தியாயம்.

சிவபெருமான் உமாதேவியை நோக்கிக் கூறுகின்றார்: தேவி! தான் உட்கார்ந்திருக்கும் பீடத்தின் இடப்பாகத்திற் சதுரமாக ஓர் மண்டலஞ்செய்து அதில் ஓரிடத்தில் ஆசனங் கற்பித்து அஸ்த்ரமந்திரத்தாற் பிங்கத்தை ஸ்தாபித்துப் பிரணவத்தினால் அதனை யர்ச்சித்து, சுத்தலத்தை யதில் நிரப்பி, கந்தபுஷ்பாதிகளாற் பிரணவமந்திரத்தைக் கொண்டர்ச்சித்து ஏழுமுறை பிரணவத்தை ஜபித்து, தேனுமுத்திரையைக் காட்டிப் பின்னர் சங்க முத்திரையைக்காட்டி, அம்மண்டலத்தினிடையே அர்த்த சந்திராகாரமாயும் அதன் மத்தியில் திரிகோணமாயும் அதன் மத்தியில் அறுகோணமாயும் எழுதி, அதிற் பீடத்தின்பேரில் அருக்கியபாத்திரத்தை வைத்து அதில் தருப்பை எள் நெல் யவை அக்ஷதை கந்தம் புஷ்பம் வெண்கடுகு விபூதி இவற்றைப்போட்டு, ஸத்தியோஜ மந்திரத்தினால் அபிமந்திரித்து, முற்கூறிய படியே அங்கந்யாயஞ் செய்து கவசமந்திரத்தால் கவசஞ்செய்து அஸ்த்ர மந்திரத்தால் அவகுண்டம் [மூடுதல்] செய்து, தேனுமுத்திரை காட்டி, அதன் பின்னர் அத்தச் சங்கதீர்த்தத்தை யெடுத்து அஸ்த்ர மந்திரத்தாற் பிரணவபூர்வமாய்ப் பூஜாத்ரவியங்களையுந் தன்னையும் மண்டலத்தையும் புரோக்ஷணஞ்செய்து, முன் எழுதியுள்ள பதுமத்தின் ஈசானபாகத்தில் ஓம் குர்வாஸ்ரயாநமஃ என்று குருவுக்கு ஆசனங்கற்பித்து, குங்குரூப்யோநமஃ என்று குருவை வரதாபய அஸ்தங்களும் இருநேத்ரங்களும் சிவரூபமும் தென்முகமும் படிகம் போல நின்மல சரீரமும் பிரசன்ன முகமுங்கொண்டு எழுந்தருளியிருப்பதாகப்பாவித்து, க்ரமப்படி கந்த புஷ்பாதிகளால் அர்ச்சித்து, பதுமத்தின் கிருதிபாகத்தில் விநாயகமூர்த்தியைக் "கணே நாக்த்வா" என்னுமந்திரத்தாற் செந்த தேகமும் சர்வாபரணமும் பெரியசரீரமும் பாசம் அங்குசம் தந்தம் மோதகம் இவற்றையேந்தியதரங்களும் யானை முகமுமுடையவராய் விக்கினங்களெல்லாம் விலக்கும் கணபதியேயென்று ஏகமனதாய்த்தியானித்து, கந்தபுஷ்பாதிகளால் யதாவிதியாக அர்ச்சித்து, வாழை மாதுளியபழங்கள் தேங்காய் மோதகமுதலியன நிவேதித்து, நமஸ்கரித்து, அப்பதுமத்தின் வாயுதிசையில் ஆசனமொன்று கற்பித்து ஸ்கந்தமூர்த்தியை ஸ்கந்தகாயத்ரியைப் பிரணவத்தோடுகூட்டி ஆவாஹனஞ்செய்து, உதயசூரியன் போன்ற காந்தியும் மயில்வாகனமும் சதுர்ப்புஜமும் திவ்விய தேகமும் மகுடஹாரங்களும் வரதாபயஹஸ்தமும் உயர்த்தியசேவற்கொடியுந்தரித்த இருகரங்களுமுடையராய்ப் பாவித்துக் கந்தபுஷ்பாதிகளாற் க்ரமமாகப்பூசித்து நமஸ்கரித்து, அப்பதுமத்தின் கிழக்குவாயிலின் தென்திசையில் ஆசனங் கற்பித்து, அந்தப்புறத்தலைமையும் தங்கமலை போன்ற சரீரமும் சர்வாபரண பூஷிதமும் சந்திரகுடமும் அழகும் திரி நேத்ரங்களும் சதுர்ப்புஜமும் சூலம் மான்மழு பொற்பிரம்புகளைத்தரித்த

கோலமும் சிங்கம்போன்ற உக்கிர முகமுமுடைய நந்திதேவரை ஆவாஹனஞ்செய்து பூசித்து, அப்பதுமத்தின் கிழக்குவாயிலின் வடதிசையில் மருத்தின் மகளாகியும் நந்திதேவராகிய கணவரைப் பாதசேவைசெய்துகொண்டிருப்பவருமாகிய சயசையையிதிப்படி பூசித்து, அதன் பின்னர் அப்பதுமத்தைச் சங்கதீர்த்தத்திலுல் பிரணவமந்திர மோதிப் புரோக்ஷணஞ்செய்து, ஆதாரசத்தியைச் சாமவர்ணமாகப் பாவித்துத்தியானித்த அந்த ஆதாரசத்தியின்பேரிற் குண்டலாகிருதியாயும், வெண்ணிறமாயுப் பரந்தபடமும் அந்தப்படத்தால் ஆகாயத்தையளாவுவதாயும் ஆதிசேடனை ஸ்தாபித்து, அவ்வனந்தன்பேரில் ஓர் சிங்காதனம் நிர்மாணஞ்செய்து தர்மம் ஞானம் வைராக்கியம் ஈசுவரியமென்னும் நான்குங்கால்களாகவும் ஆக்கினேயாதி மூலைகளில் அதர்மம் அஜ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியமென்னும் நான்கும் மூலைகளாகவும் பாவித்து, ஆச்சிங்காதனம் இரத்தினமயமானவிதானங்கட்டப்பட்டதாகச்செய்து, அந்தச்சிங்காதனத்தின்பேரில் தாமரைக்கொடி படர்ந்து இலைகள் முள்ளுகள் முதலியவற்றைப் பொருந்திய ஓர் மலர்பல இதழ்களோடும் அதனிடையே மொட்டும் பாவித்து, இதழ்களிற் சித்திகளையும், கேசரங்களிற் சத்திகளையும், அஷ்டப்பிரதான தளங்களில் * வாம்தேவாதி உருத்திரர்களையும், கர்ணிகையில் வைராக்கியத்தையும், விதையில் * நவசத்திகளையும், கிழக்கிற் சிவாத்மதமான தர்மத்தையும், காளத்திற் சிவஞானத்தையும், கர்ணிகையின்பேரில் அக்கினி சந்திரன் சூரியன் என்னு மூன்று மண்டலங்களையும், அதற்கப்புறம் சிவதத்துவத்தை எல்லா ஆசனங்களுக்கும் உச்சியிற் பலஷிதபுஷ்பங்களோடும் ஆகாயமயமான சரீரத்தோடும் விளங்குகிறதாகத் தகளித்தையால் ஆவாஹனஞ்செய்யவேண்டும். ஆதாரசத்திமுதல் சுத்தவித்தியாதத்துவம் வரையிலுள்ள அவருடைய சொருபத்தைப் பிரணவபூர்வமும் நமோர்த்தமுமாக வச்சரித்துப் பூசிக்கவேண்டியது. பூஜாக்கிரமம் இவ்வகையது.

பார்வதி! நின்னும் தேகம் முகம் கை இவற்றின் பேதங்களைச் சொல்லுகின்றேன்ற என்னைப்பூசிக்கும் விதயத்தில் முந்நிலைகளைத் தெரிந்துகொண்டு புஷ்பாஞ்சலிகளால் ஸத்தியோஜாத மந்திரந் தொடங்கி ஸதாசிவோம் என்பதுவரையில் உச்சரித்து அப்பொழுது மூலாதாரத்தினின்று பன்னிருசக்கரங்களைப் பினைத்துகொண்டு பிரமரந்திரம் வரையில் உண்டாகும் நாதத்தை ஓங்காரகோசரமாகி யானத்தியானிக்கவேண்டியது. சுத்தஸ்படிகம்போல நிர்மலராயும், ஆநந்தரூபியாயும், நிஷ்களராயும், அகண்டரூபியாயும், சர்வலோகாதாரரூபியாயும், சர்வலோக மயனும் பராத்பரனும், உள்ளும்வெளியும் விளங்குபவனுயும், அணுவுக்கணுவாயும், மகத்துக்கு மகத்தாயும், பக்தர்கட்கு எளியனுயும், ஈசுவரனுயும், நாசாதிகனுயும், பிரமேந்திரவிஷ்ணு ருத்திராதிகளுக்கு அரியனுயும், வேத

* இவ்விரண்டும் வாயுசங்கிதையில் நன்குவிளக்கும்.

வேதாந்தசாரமாயும், வித்வான்களுடைய வாக்குக் கெட்டாதவனுயும், அப்பிரமேயமாயும், ஆதிமத்தியாந்தரகிதனுயும், சமுசாரரோகிகளுக்கு மருந்தாயுமுள்ள என்னை மனப்பூர்வமாகப் பாவனைமாத்திரையாய் ஆவாஹனம் ஸ்தாபனம் ஸந்நிரோதம். நிரீக்ஷணம் நமஸ்காராதிகளை மாநசமாகச்செய்யவேண்டியது. சதாசிவராயும், நிஷ்கன்னராயும், சுத்தஸ்படிகமேனியராயும் குளிர்ந்தபார்வையும் மின்னற்கொடிபோற் படர்ந்த ஜடாடவியும் புலியதளும் புன்சுகையும் பதுமவதனமும் செந்தாமரை போன்ற கைகால் இதழ்களும் ஐந்துமுகமும் பத்துக்கரங்களும் சந்திரசூடமும் உள்ள மூர்த்தியைத் தியானிக்கவேண்டியது. அச் சதாசிவமூர்த்தியின் கிழக்குமுகமானது, தாமரைபோன்றதும் திரிநேத்திரங்களும், சந்திரகாந்தத்தால் முடியையுமுடையது. தென்புறத்துள்ள முகத்தை, நீர்கொண்டமேகம்போன்ற கருநிறமுடையதும் செவ்வந்த திரி நேத்திரங்களும் கோரப்பற்களும், கோரபார்வையும் அடித்த உதட்டுடனும் பாவிக்கவேண்டியது. வடபுறத்துள்ளது பவழம்போன்ற நிறமும், நெற்றியின் கண்ணுக்கு முன் தொங்கல்மயிரும் திரிநேத்திரங்களும், பிறையணிந்த முடியும் உடையதாகப் பாவிக்கவேண்டியது. மேல் கோக்கியதாயுள்ளதை சந்திரகாந்தியும், புன்சுகையும் திரிநேத்திரங்களும் சந்திரசூடணமு முடையதாகப் பாவிக்கவேண்டியது. பூருகாக்தியும் சந்திரனைத்தரித்த முடியும் மலர்ந்த திரிநேத்திரங்களும் முடையதாக ஈற்றாவது முகத்தைப் பாவிக்கவேண்டியது. இவரை வடபுறத்தில் சூலம் பரசு வச்சிரம் கட்கமும், இடப்புறத்தில் பிரகாம் நாகாசம் மணி, பாசம், அங்குசமுமுடையவராகப் பாவிக்கவேண்டும். முழுத்தாள் முதல் கண்டம் வரையில் வித்தியாகலை பொருந்தியதாயும், அதுமுதல் நெற்றிவரையிற்சாந்திகலையோடும் அதற்கு மேற் சாந்தியதீத கலையுடனும், சகலமலமுடனும் தற்புருடமுகமும் அகோரஇதயமும் வாமதேவ குஹ்யமும் சத்தியோஜாதபாதமும், மூப்பத்தெட்டு கலைகளோடு கூடியவராயும், சர்வலோகத்திற்கும் உற்பத்திகாரணமாயும், சகலதிவ்யபூஷணபூஷிதராயும், ஓங்காரமயமாயும், அம்சமயமாயும், பஞ்சாட்ச சடாட்சர சொருபராயும் ஷடங்க ரூபியாயும் ஷாட்குண்யபரிபூரணமாயும், உள்ளவராகத் தியானிக்கவேண்டியது.

தேவி! மறுமின்மணியாகிய உன்னை எனது வாமபாகத்தில் பிரணவபூர்வமாய் "ஹ்ரீளாமிமாய" என்னு மந்திரத்தினுல் ஆவாகனஞ்செய்து ஏகாக்கிரசித்தனுய்த் தியானிக்கக்கடவான். சீலோற்பலம்போன்ற திருமேனியும் பரந்த விழியும் பூரணசந்திரனைப்போன்ற முகமும் நீலநிறம்பொருந்திய திரு மயிர்தொங்கப்பெற்ற நெற்றியும், சந்திரகாணமும், பூரித்த தனபாரங்களும், தண்ணிய இடையும் பீதாம்பரவுடையும், சர்வாபரண பூஷிதராயும், நிலமணிந்த கதையும், மணிமகுடம் பல மலர்கள் அணிந்த அலகபாரமும் எனக்குச் சமானமான குணங்களும், கிரீதுணைத்தாற் குனிந்த திருஷ்டியும், வலதுகையிற் பொற்றமரையுங்கொ

ண்டு திவ்யாசனத்தில் வீற்றிருப்பதாக உன்னையும் என்னையும் புனிதமான மனதுடன் பாவித்து சங்கஜலத்தால் பிரணவ மந்திரத்தைக்கொண்டு புரோகணித்து அபிஷேகஞ் செய்யவேண்டியது. பலாயநமஃ என்று பாத்திரமும், வாமதேவாயநமஃ என்று ஆசமனீயமும், ஜேஷ்டாயநமஃ என்று யஜ்ஞோபவீதமும், ருத்ராயநமஃ என்று புராசமனீயமும், காலாயநமஃ என்று கந்தமும், கலவிகரணாயநமஃ என்று அக்ஷதையும், பலவிகரணாயநமஃ என்று புஷ்பமும், பலாயநமஃ என்று தூபமும், பலப்பிரமதகாயநமஃ என்று தீபமும், பஞ்சப்பிரமமந்திரத்தாற் காரியாசமஞ் செய்து பிரணவத்தால் எனக்கும் உனக்கும் முத்திரைகளைக்காட்டி முதலில் என்னை யருச்சிக்கவேண்டியது. இரண்டாவது உன்னை யருச்சிக்கையில் மேற்கூறிய மந்திரங்களை ஸ்திரீலிங்கமாகக் கூறிப் பஞ்சாவரணபூசையைச் செய்யவேண்டியது. கணபதி ஸ்கந்தர்களை முதலிற் பூசித்தபடியே மீண்டும் கந்தபுஷ்பாதிகளாற் பூசிக்கவேண்டியது. அதன்பின்னர் மண்டலத்தை நாற்புறத்திலும் அங்கரியாலை காரியாலங்களுடன் பூசிக்கவேண்டியது. அத்தாமரையின் எட்டுப்பாகத்தின் பூர்வதிக்கிலுள்ள இதழில் அநந்தனையும் தக்ஷிணபாகத்திதழில் சூக்ஷ்மனையும், மேற்புறத்திதழில் சிவோத்தமனையும், உத்தரபாகத்துள்ளிதழில் ஏகநேத்திரனையும், ஈசானதிக்கிலுள்ளதில் ஏகருத்திரனையும், அக்னிதிக்கில் திரிமூர்த்தியையும், நிருதிதிக்கில் ஸ்ரீகண்டனையும், வாயுதிக்கிலுள்ளதில் சிகண்டீசனையும் இரண்டாமாவரணத்திற் பூசிக்கவேண்டியது. மூன்றுமாவரணத்திற் கிழக்குத்திக்கில் விரவேசானனையும், இதற்கு வடபுறத்தில் நந்தியையும், இடதுபுறத்தில் மகாகாளனையும், தக்ஷிணபாகத்தில் பிருங்கீசனையும் இருபுறத்திலும் விநாயகரையும் மேற்புறத்தில் விருஷபனையும், வடபுறத்தில் பவன், சருவன் ஈசானன் உருத்திரன் பசுபதி உக்கிரன் பீமன் மகாதேவன் என்னு மிவர்களை "யோவேதாதௌ" என்று மந்திரத்தாற் பூசிக்கவேண்டியது. தாமரைப்பொகுட்டின் பூர்வபாகத்தில் ஈசுவரனையும், தக்ஷிணபாகத்தில் விசுவேசனையும் உத்தரபாகத்தில் பரமேசனையும் மேற்புப்பக்கத்திற் சர்வேசனையும் பூசிக்கவேண்டியது. அக்கர்ணிகைக்குத் தக்ஷிணபாகத்தில் உருத்திரனை "ஆவோராஜ்ய" என்று மந்திரத்தாற் பூசிக்கவேண்டியது. அக்கர்ணிகையின் தளத்தின் பூர்வதிக்கிலுள்ளதிற் சிவப்பிராணையும், தக்ஷிணதிக்கிலுள்ளதில் அரனையும், உத்தரதிக்கிலுள்ளதில் திருடனையும், மேற்பக்கத்திலுள்ளதிற் பவனையும், யதோக்தமாகப் பூசித்தும், அக்கர்ணிகையின் உத்தரபாகத்தில் விஷ்ணுவை "பிரதத்விஷ்ணு" என்னு மந்திரத்தாற் பூசித்தும், பூர்வதிக்கிலுள்ள பூர்வ தளத்தில் வாகதேவனையும், தக்ஷிணதளத்தில் அகிருத்தனையும், வடபுறத்திற் சங்கர்ஷனையும் மேற்பக்கத்திற் பிரத்தியும்நனையும் பூசித்து ஆவாகனஞ்செய்யவேண்டும். அப்பதுமத்தின் மேற்பாகத்திற் பிரமதேவனை "ஹிரண்யகர்ப்பர்" என்று மந்திரத்தினால் ஆவாகனஞ்செய்தும், பூர்வபாகத்தில் ஹிரண்யகர்ப்பனையும், தக்ஷிணபாகத்தில் விராஜனையும், உத்தரதிக்கிற் புருஷனையும், மேற்புறத்தில்

காலனையும் பூசிக்கவேண்டியது. அப்பதுமத்தின் பூர்வதிக்குமுதலெட்டுத்திக்குகளிலும் முறையே திக்குப்பாலகர்களை அவர்கள் பிஜாக்ஷரமாகிய மந்திரங்களைக் கூட்டிப் பூஜிக்கவேண்டியது. எவ்வாறெனில் இந்திரனுக்கு "ஓம் அம் லாம் இந்த்ராயா" என்றும், அக்கினிக்கு "ஓம் அம் ராம் அக்னயே" என்றும், இயமனுக்கு "ஓம் அம் மாம் யமாயா" என்றும், நிருதிக்கு "ஓம் அம் க்ஷாம் நிர்த்தியே" என்றும், வருணனுக்கு "ஓம் அம் வாம் வருணயா" என்றும், வாயுவுக்கு "ஓம் அம் யாம் வாயவே" என்றும், குபேரனுக்கு "ஓம் அம் சாம் குபேராயா" என்றும், ஈசானனுக்கு "ஓம் அம் ஹர்ம் ஈசானயா" என்றும் பூஜிக்கவேண்டியது. நிருதிக்கின் வடபாலில் பிரமனையும், ஈசானதிக்கின் வடபாலில் விஷ்ணுவையும் பூஜிக்கவேண்டியது. வெளியிலுள்ள ரேகையின் ஈசானதிக்கிற் சூலத்தையும் கிழக்கில் வஜ்ரத்தையும், அக்கினிதிக்கிற் பரசுவையும், தென்திக்கிற் பாணங்களையும், நிருதிதிக்கிற் கட்கத்தையும், மேற்திக்கிற் பாசத்தையும், வாயுதிக்கில் அங்குசத்தையும், வடபுறத்திற் பிரகாதத்தையும், மேற்குமுகமாக கூர்மத்திரபாலனையும் ஆவாகனஞ்செய்து பூஜிக்கவேண்டும். இவ்விதமாக ஆவாகனஞ்செய்த தேவர்களையெல்லாம் சமஸ்த ஆவரணங்களிலும் இருப்பதாகப்பாவித்துப் புஷ்பாஞ்சலியெடுத்துப் பிரதக்ஷிணஞ்செய்து பிரணவபூர்வமாய்ச் சிவநாமத்தாலருச்சித்து, கந்தாதிகளான சோடசோபசாரங்களாலும் பூசனைசெய்து, சுத்தமாய் நிவேதனத்தைச் சித்தஞ்செய்து பதார்த்தவகை பலகாரம், பழவகைகளுடன் நிவேதித்து ஆசமனீயங் கொடுத்து முன்போல அர்க்கியங்கொடுத்து, பரிசுத்தமாகிய தீர்த்தத்தையுட்கொள்ளும்படி பிரார்த்தித்து, தாம்பூலம் சமர்ப்பித்து, கர்ப்பூரநீராஞ்சனம் பண்ணுவதோடு எஞ்சிய பூஜைகளை முடித்து, சத்திரசாமரைகளால் உபசரித்து, தேவிதேவர்களாகிய இருவரையுந் தியானிக்கவேண்டியது. பரமசிவத்துக்குரியபஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டுமுறை தியானிப்பதுடன் தேவிமந்திரத்தையும் ஜபித்து, எழுந்துநின்று புஷ்பத்தைக் கையிற்கொண்டு "யோதேவாநா" என்று மந்திரத்தாலும், "யோவேதாதௌ" என்று மந்திரத்தாலும் மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து அப் புஷ்பத்தை மந்திரபுஷ்பமாகச் சமர்ப்பித்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து அடிக்கடி பிரதக்ஷிணஞ் செய்து திவ்யாசனத்திலிருந்து சிவாஷ்டோத்தரங்களாலருச்சித்து "மகாதேவரே! அடியேன் செய்த பூசனை மந்திரத்தாலும் தந்திரத்தாலும் நியமனத்தாலும் யந்திரம் ஆவாகனம் நிலையம் சத்தி காலம் முதலியவற்றுற் குறைந்திருந்தபோதிலும் அவற்றை யதோக்தமாயங்கேரித்து என்னையாட்கொள்ளவேண்டுமென்று" பிரார்த்தித்து, சங்கநீர்த்தத்தாலும் தேவி தேவர்களிருவரையும் புரோகணித்து, தேவியஷ்டோத்தரசத நாமங்களை ஜபிக்கவேண்டும். * ஆதியந்தருவியையும்,

* சிவன், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிதாமகன், சமுசார வைத்தியன், சர்வஜ்ஞன், பரமாத்மாவென்னும் எட்டு நாமங்களோடு விளங்குகிறவராகிய பரமேசனைத் தியானிக்கவேண்டியது. இந்நாமங்களுக்கு இனி பொருள் சொல்கின்றேன்.

எப்போதும் பரிசுத்தமான ஆத்மாவோடிருப்பதாற் சிவமென்றும், சமஸ்த மங்களங்களைக்கொடுப்பதாற் சிவமென்றும் சிவதத்துவத்தையறிந்த பெரியோர்கள் யாவரும் உச்சரிக்கிறார்கள். மஹாதாதி தத்துவங்களைக் காட்டிலும் சிரேஷ்டமானது பிரகிருதியெனப்படும். அப்பிரகிருதிக்கும் மாயும் புருஷராயு மிருக்கிறார் என்பர். வேதாந்திகளிற் பரமே சனே சுவரூபமாயிருப்பதாக மேதாவிகள் சொல்கிறார்கள். ஆகையால் வேதாந்திகளிலறியத்தக்க சொரூபர் வேதாந்தத்தி லமையப்பெற்றவர். அந்தப் பரமேசனே பிரகிருதியில் மறைந்தும் அதையே யதபவித்தும் வருகிறார். அம்மறைந்திருக்கும் புருஷனிலுஞ் சிரேஷ்டமானவர் மகேசுவரனெனப்படுவர். சர்வமும் அவருக்கே யதீதமாயிருக்கிற்து. அப்பிரகிருதி புருஷனிடமிருந்தே சமஸ்தமுந் தோன்றுகிறது. அன்றியும் ஸத்வரஜோதமோகுணங்களான மாயையே பிரகிருதியென்றும், அம்மாயையை யடக்க வல்லவர் காமேயென்றும் அவ்வகையால் மகேசுவரனென்றும், அன்றியும் அம்மாயையையழிக்க வல்லவராதலின் மகேசுவரனென்றும், உருத்திரனென்பதற்கு "ருத்" என்றுல் துக்கமென்றும் அத்துக்கத்தை நிக்கச்செய்வதால் "த்ராவைதி" என்றும் பொருள்படும். அன்றியும், "ருத்" என்பதற்குச் சத்தமென்றும், அச்சத்தத்தால் அஞ்ஞான்த்தை யொழித்து நாதப்பிரமத்தைத் தெரிவிப்பதால் ருத்திரனென்றும் அன்றியும், சங்காரகாலத்திற் பிரஜைகளை ரோதனஞ்செய்து சங்கரிப்பதால் ருத்திரனென்றும் பெயரெய்தி விளங்குவர். சிவதத்துவமுதற் பிருதிவி தத்துவம்வரையில் வியாபித்திருப்பதால் விஷ்ணுவென்றும், ஜகத்துக்கெல்லாம் பிதாபூதராய் இருப்பதால் பிதாமகனென்றும், சமுசார வைத்திய னென்றும் பெயருடையவராவர். வைத்திய னெவ்வாறு பிணியைப் போக்கடிக்கிறானோ அவ்வாறே ஆத்மாக்களின் பிணியைப் போக்கடிக்கின்றார். அன்றியும் போகமோக்ஷங்களிரண்டையுந் தரவல்லராதலின் அப்பெயரடைகிறார். எல்லாவற்றுக்குமங்களாயும் அணுவிற்கணுவாயும் மகத்திற்கு மகத்தாயும், இந்திரியங்களிருந்தாலுட் விஷயங்களாற்கிரகிக்கப்படாதவராயும் பிரயத்தனமின்றிச் சர்வத்தையுமறிய சக்தியுள்ளவராதலின் சர்வஜ்ஞரெனப்படுகிறார். சிரேஷ்டமான குணங்களாலுமறியச்சாத்தியமில்லாதவராதலாலும் இவரினும் மேலான ஆத்மா யாருக்குமில்லாதமையால் பரமாத்மாவென்றும் பெயருடையவராவர். இத்தகையோரைப் பிரணவசொரூபியாய்த் தியானித்துப் பூசித்துத் தன் மனோரதம் நிறைவேறவேண்டுமென்று அர்க்கியங் கொடுத்துப் பிரணவத்தால் அர்ச்சனைசெய்து புஷ்பாஞ்சலிகொண்டு பிரதக்ஷிணஞ்செய்து மேற்கண்ட மந்திரத்தால், மந்திரபுஷ்பங்கொடுத்து, பிரமோபரியந்தம் பஞ்சாக்ஷர சொரூபியாயும், நாதப்பிரமமாயும் வியாபித்திருக்கும் தேவியை இடது காதையால் வெளியில் விடவேண்டியது. வேறு காரியகாலவாரமாய்ச் சிவானந்தத்தை யுட்கொண் டதுபவித்து வெளியில் விடவேண்டியது. பூர்வத்தில் பூரித்தபிரகாரமே சர்வாபரண தேவதைகளையும் யதாக்கிரமமாக உத்வாசனஞ்செய்து வித்யாபூஜை குரு

பூஜைசெய்து, சங்கத்தையும் அர்க்கியபாத்திரத்தையுமெடுத்து அதில் எஞ்சிய ஜலத்தைச் சிரத்திற் புரோக்ஷணஞ் செய்து, அப்பாத்திரங்களை நேராத்திரத்திலொத்திக்கொண்டு நிர்மாலிய வஸ்துக்களைச் சண்டேசுவரருக்குச் சமர்ப்பித்து, பிரணயாமஞ் செய்துருஷிசந்தசுகள் பூர்வகமாய் வடங்கங்களைச்செய்து சதாசிவமூர்த்தியைத் தியானிக்கவேண்டும்.

தேவி! மேற்சொன்ன மண்டலத்தைக் கைலாசபிரஸ்தரமென்பர். இது சிவதத்துவமறிந்தவர்களுக் குபதேசிக்கத்தக்கது. இதுவேதாந்தங்களின் சாரமானபாகம். முனிவர் மனதிற்கும் அகோசரமானது. இது ரகசியமான மண்டலமென்றறிவாயாக. இம்மண்டலத்தை நிர்மாணஞ் செய்து மேற்கூறியபடியே பிரதினமுமருச்சிக்கவேண்டியது. அப்படிச் செய்யச்சக்தியில்லாவிடின் பட்சத்திற்கொருமுறை செய்யவேண்டும். அல்லது மாசமொருமுறையாகிலும் சாதுர்மாசிய பௌர்ணமியிலாகிலும் வருடத்திற்கொருமுறையாகிலும் செய்யவேண்டியது. இப்பூஜாவிஷயத்திலேயேயின்னுமோர் விசேஷஞ்சொல்கின்றேன்: குருவினிடம் எத்தனம் உபதேசஞ்செய்துகொள்கின்றனை, அன்றே அவர்சந்நிதானத்தில்மேற்கண்டதினங்களில் எதை யநுஷ்டிக்கச்சக்தியுண்டோ அதைப் பிரமாணிக்கம்பண்ணிக்கொள்ளவேண்டியது. அந்தநாட்களிற் பூர்வோக்தவிதியாய்த் தவறுதலறித்துவரவேண்டியது. சசானியபாகத்திற் சண்டேசுவரருக்கு நிருமாலித்தை நிவேதனஞ்செய்து லிங்கத்தை வஸ்திரத்தினாற் சுற்றிப் பரிசுத்தமானதானத்தில் நிறுத்திப் பிரணவத்தாற் புஷ்பத்தை அதன் சிரத்தில் வைத்து ஆதாரசத்திமுதற் சுத்தவித்தியாபரியந்தம் மனதாற் பாவித்து, பரமேசனைப் பஞ்சகௌவியங்களா லபிஷேகிக்கவேண்டியது. அன்றியும் பஞ்சாமிர்தத்தாலும் பரிமளமுள்ள புண்ணியதீர்த்தத்தாலும் "பாவமானம் ருத்திரம் சமகம் சமகம் லிங்கருத்தம் புருஷசூக்தம் நித்வைதே" மந்திரத்தாலும் சாமவேதத்திலுள்ள சாம்பவானத்தாலும் பஞ்சப்பிரமமந்திரங்களாலும், பஞ்சாக்ஷரத்தாலும் சிவநாமங்களாலும் ஜபித்து அபிஷேகஞ்செய்து லிங்கத்தைப் பரிசுத்த வஸ்திரத்தால் துடைத்து ஆசனஞ்செய்து பீடத்தில் வைக்கவேண்டியது. புஷ்பத்தால் மீண்டும் லிங்கசிரசி லருச்சிக்கவேண்டியது. பின்னர் சூரிய பூஜைசெய்து ஆதாரசத்தியையும் அநந்தனையும் அப்பீடத்தின் கீழ் ஆவாகனஞ்செய்து பூஜித்து அதன்மேற் சிங்காசனத்தை நிர்மாணஞ் செய்து, மேல் ஆவரணமுண்டுபண்ணி இலிங்கத்தில் உன்னையும் என்னையும் ஆவாகனஞ்செய்து பூஜிக்கவேண்டும். சுந்தரீ! மிகவும் ரகசியமாகிய இச் சிவபூஜாவிதானத்தை உனக்கு விளக்கினேன். இது மிகவும் பாதுகாக்கத்தக்கது. பக்தியில்லாதவர்களுக்கு உபதேசிக்கத்தகாதது. எனது பக்தராயும் சச்சியாகியாயும், ஆசையையொழித்தவிராயும் குருபக்தியுள்ளோராயும் சமாதிகுணமுள்ளவராயும், ஜிதேந்திரியராயும் உள்ளவர்களுக்கே உபதேசிக்கத்தக்கது. மேற்கண்ட பக்தியில்லாத மூடனுக்கு இச்சிவரகசியத்தை யுபதேசிக்கின்,

அத்தகையோன் சிவத்துரோகத்தால் நரகத்திற்கு ஆளாகிறான். என் பத்தர்களுக்கு எவ்வித தானம் கொடுத்தாலும், பூசித்தாலும், உண்பித்தாலும் அழியாத பதவியைக்கொடுப்பேன் அதற்கு நானுந் திருப்தியடைவேன்.

வ்யாதமுனிவர் நைமிசாரண்ணிய முனிவர்களை நோக்கி, இவ்விதமாக சிவபூஜாவிதானத்தையும், சிவமண்டல பரிமாணத்தையும், யந்திரக்கிரமத்தையும், ஆவாகனமுறையையும் உமையம்மையார் கேட்டுச்சந்தோஷித்து, சதருத்திரீய வாக்கியங்களாற் பரமசிவனைத் தோத்திரஞ்செய்து, பத்தர்களின் மனோபீஷ்டத்தை நமஸ்காரமாத்திரத்தில் நிறைவேற்றவல்ல பாதாரவிந்தங்களை நமஸ்கரித்து அத்தியந்த சந்தோஷத்தையடைய விரும்பினாள் என்று கூறினர். இம்மஹா ரகசியமான சாத்திரத்தைச் சிவஞானமுள்ளவர்களே யறியவேண்டும். உங்கள் மனோவியாதியைநீக்கிச்சிவஞானத்தைக் கொடுக்க வல்லது. இவ்விதமாகப் பரமசாதுவும் மஹா தபசியும், ஷாட்குண்யபரிபூரணரும் ஆகிய வியாஸபகவான் முனிவர்களுக்குபதேசித்து, அவர்கள் வந்தனாதிபூஜையை உட்கொண்டு ஸ்ரீ கைலயங்கிரியையடைந்தனர். அம்முனிவர்களும் சந்தோஷசித்தர்களாய், பத்தியுடன் சத்கிரியாகாண்டத்திற் சந்திரசூடரான பரமேசனை யர்ச்சித்து இயமாதி அஷ்டாங்கயோகப்பிரியராயும் சிவத்தியானத்திற் பிரீதியுள்ளவராயும், சிவனைப்பூஜித்துச் சிவானந்தத்தையநுபவித்தனர். இந்த ரகசியமான சிவபூஜாக்கிரமத்தை, பரமேசன் பார்வதிக்கும், பார்வதியார் சுப்பிரமணியருக்கும், அவர் நந்தியெம்பெருமானுக்கும், அவர் ஸநத்குமாரமுனிவருக்கும் அவர் என் குருவாகிய வியாஸருக்கு முறைத்தனர். அவரிடமிருந்து நானும் அடைந்தேன். அதை நானதிபக்தியுடன் உங்களுக்குபதேசித்தேன். நீங்கள் பெரியவர்களிடத்திற் பக்தியுடன் வசித்தும் உங்களிடம் பக்தியுள்ளவர்களுக்கும் உபதேசிக்கக்கடவீர்கள். முனிவர்களே! இச்சிவரகசியத்தை, சமாதிகுணங்களுள்ள பேதாபேதிகளுக்கும் பார்வதி பரமேசனிடம் அத்தியந்தவிசுவாசமுள்ளவர்களுக்குமே உபதேசிக்கக்கடவீர்கள். இவ்விதசிவபூஜாக்கிரமத்தையும் மண்டலக்கிரமத்தையும் பக்தியுடன் கேட்பவர்களும் படிப்பவர்களும் எழுதுபவர்களும் பிறப்பிறப்பற்று மோக்ஷானந்தத்தில் சதா வாழும்படி ஸ்ரீகண்ட பரமேசன் அருள்செய்வார். இவ்விதமாக வ்யாதபுராணிகர் காசியம்பதியிற் சிவபூஜாக்கிரமத்தை ருஷிகளுக்குபதேசித்து பஞ்சக்குரோச யாத்திரையை முடிக்கச்சென்றனர். முனிவர்களெல்லாரும் காசியிலேயே சிலகாலமிருந்து இச்சிவபூஜையைச் செய்து பரமயோகிகளடையத்தக்க கைலாயபதவியை யடைந்தார்கள்.

பூஜாமந்திரமும் சதாசிவரூபமுமுணர்த்தது

முற்றிற்று.

ஏழாவது

வாமதேவர் முருகப்பிரானையடைந்த அத்தியாயம்.

முனிவர்கள் பலர் இவ்விதமாக வியாஸமுனிவரிடத்தில் உபதேசம் பெற்ற வாமதேவமஹாபூஜாக்கிரமத்தை மறந்து மீண்டுந் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், தங்கள் சமுசாரபந்தங்களைப்போது ஒழியுமென்றும், சிவப்பிரசாதம் எப்போது சித்திக்குமென்றும், அச்சிவப்பிரசாத மடைதற்கு வியாஸபகவானே காரணராயிருத்தலின் அவர்வருகையெப்போது கிடைக்குமென்றுந் தங்கள் இதயத்திற் சதா வெண்ணிக்கொண்டிருந்தனர். இவ்வாறு வெண்ணிக்கொண்டிருக்க ஒருவருஷகாலமடைகையில், சுரியப்பிரகாசம்போன்ற தேஜஸோடு வ்யாஸபுராணிகர் தோன்றினர். அவரது வருகையைக்கண்ட முனிவர்கள், பசுவைக்கண்ட கன்றைப்போல மிகுந்த ஆவலோடு அருகேசென்று அர்க்கியபாத்யாதிகளாற் சோடசோபசாரஞ்செய்து, உயர்ந்த ஆசனத்திலிருத்தி, வந்தனை வழிபாடு செய்து களித்தனர் : இவ்விதமுபசாராதிகள் செய்த முனிவர்களின் சௌமாதிசயங்களினால், புன்சிரிப்புடன் சந்தோஷித்து, அவர்களுடன் கங்காநதியில் ஸ்நானஞ்செய்து, பிதிர்தேவதைகளுக்கும் ருஷிகளுக்குந் திலதர்ப்பணஞ் செய்து, கரையையடைந்து சுத்தஸ்வஸ்திரமணிந்து இரண்டுமுறை ஆசமனஞ்செய்து விபூதியை ஸத்யோஜாத மந்திரத்தாலபிமந்திரித்துத் தூளனமாய்த் தாரணஞ்செய்து, ருத்ராக்கமாலையணிந்து நித்தியகருமங்களை யதோக்தமாய் முடித்து, உமை பாகனை விசுவேசனைச்சகணங்களுடன் அருச்சித்து, அத்தியந்த பக்தியுடன் நமஸ்கரித்து, காலபைரவரையும் முறைப்படியருச்சனைசெய்து பன்முறை பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாய்ப்பணிந்து பஞ்சாக்ஷரமந்திரத்தை ஆயிரத்தெட்டுமுறை ஜபித்து, பரமசிவனை மன்னிப்புக்கேட்டுக்கொண்டு சதுர்வேதசரை அர்ச்சித்துமுனிவர் குழாஞ்சூழ முத்திமண்டபமடைந்து, அவர்களால் நியமிக்கப்பட்ட ஆசனத்தில் உட்கார்ந்து, தன்னிடத்தில் விசுவாசத்துடனும் சிவபக்தியுடனும் இருக்கும் முனிவர்களை நோக்கி அவர்கள் சித்தசுத்தமாகும்படி சிலவாக்கியங்களைச்சொல்வதாயினர். முனிவர்களே! யான் காசிக்ஷேத்திரத்தினின்றுந் தென்திசைநோக்கிச்சென்று கன்னியாகுமரியைக் கண்டு அங்கே சமுத்திரஸ்நானஞ்செய்து பராசக்தி ஸ்வரூபினியாகிய கன்னியாகுமரியைத்தரிசித்து, மீண்டு பொன்முகரிநதி நிரத்தையடைந்து அதில் ஸ்நானஞ்செய்து பிதிர் தர்ப்பணஞ்செய்து காளத்திக்ஷேத்திரத்தைச் சேர்ந்து, மேற்றிசைநோக்கிப் படிகநிறமாய் ஐந்து சிரங்களுடன் கூடித் தெரிசித்த மாக்தியத்தில் எல்லாப்பாவங்களையு மொழிக்கவல்ல காளத்தீசரையும் ஞானப்பூங்கோதையாரையும் அருச்சித்து நமஸ்கரித்து அநேக பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து நான்குமாசகாலம் அவ்விடத்தில் வசித்தேன். இவ்வாறிருக்குங்காலத்தில், ஓர்நாள் ஞானப்பூங்கோதையின் சன்னிதானத்திற் றருப்பாசனத்தி லுட்கார்ந்து இந்திரியங்களை யடக்கி மௌனவிரதத்

தேரடி பிராணயாமக்கிரமத்தினல் மூச்சடக்கிப் பரமசமாதியிற் சியோ
கத்திலிருந்தேன். கருணாகிதியும், நீர்கொண்டமேகம்போன்ற அழகிய
சரீரமும், மின்னல்போன்ற ஜடையும், கமண்டலம் தண்டம் திருஷ்ணை
ஜல்முதலியவைகளோடு விபூதி சண்ணித்தமேனியும், திரிபுண்டாலங்
கரும் நெற்றியும், உருத்திராக்கமாலிகை பூண்ட அவயவங்களும், மலர்ந்த
செந்தாமரைபோன்ற நேத்திரங்களும் உடையவராக எனது குரு
வாகிய வியாஸபகவான் இதயத்தில் ஆவிர்ப்பவித்திருக்கக்கண்டேன்.
உடனே சமாதிகலைத்து கண்விழித்துப் பார்த்து ஒருவரையுங்காணாமை
யால், கண்ணீர்பெருக்கிச் சத்தமிட்டழுதேன். இப்படித் தக்கிக்கையில்
ஆகாயத்தில் அசரீரியாகப்பூர்வத்தில்உன்னிடத்திற்சிவபூஜாக்கிரமத்தைக்
கேட்டறிந்த முனிவர்கள் உன்வருகையையெதிர்பார்த்திருக்கின்றமையால்
அங்குச்செல்வாயாக என்று சொல்லக்கேட்டு எழுந்திருந்து ஸ்ரீகாளத்திஸ்
வரரையும் ஞானப்பூங்கோதையாரையும் பணிந்து அரிதில் நீங்கி, பனி
ரண்டுமுறை மீண்டும் பிரதக்ஷிணஞ்செய்து, சிவாக்ஞையைச் சிரமேற்
றுங்கி நாற்பதுநாளாக விடாது நடந்து இங்குற்றேன். ஆகையால் என்னை
யனுக்கிரகிக்கவேண்டும். என்னிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டிய
விஷயமேதாகினு மிருந்தால் தெரிந்து கொள்வீர்களாக என்றார்.

இவ்வாறு ஸுதமுனிவர் கூறியதைக் கேட்டுச் சந்தோஷமனது
டையராய், வேதார்த்தப்பிரகாசராயும் புராணகர்த்தராயு முள்ள வியாஸ
பகவானே நமஸ்கரித்து, ஸுதமுனிவரே! நாங்களியாவருந் தங்களைக் குரு
வாகப்பாவித்திருக்கின்றோம். எப்போதும்சிஷ்யர்களிடம்சிநேகத்தன்மை
பாராட்டுபவரென்றும் காரணமின்றி அதுக்கிரகிக்கின்றவரென்றும் தங்க
ளாலேயே நாங்களறிந்திருக்கிறோம். ஆகையால் பூர்வத்தில் வாமதேவ
ராற் சொல்லப்பட்ட விரஜாஹோமத்தைச் சுருக்கமாகச் சொல்லக்கேட்
டருக்கின்றோமாயினும் நாங்கள் நன்முயுணருமாறு விரிவாகச்சொல்ல
வேண்டுமென்றனர். அதுக்கேட்ட ஸுதமுனிவர் சந்தோஷத்தினல் மயி
ர்க் கூச்செறிந்து, உமாதேவியையும் வியாசரையும்பணிந்து, அம்முனிவர்களை
முதலில் வாழ்த்தி, மேகம்போன்ற தொனியோடுஞ் சொல்லலாயினர்:
பரமரகசியமாயும், அதியற்புதமாயும் உள்ள விரஜாஹோம மர்ன்மியத்தை
என் குருமூலமாய்க் கேட்டுள்ளேன். அந்தரகசியம் வெளிப்படுத்தக்கூடா
தென்றே இதுவரை ஒருவருக்குஞ் சொல்லவில்லை. நீவிர் அதிகமாய்ச்
சிவபக்தியினும், அதைச்சார்ந்த கதைகளினும் பிரியமுள்ளவர்களாயிருப்
பதால் அதை யுங்களுக்கு உபதேசிக்கின்றேன், சாந்தசித்தத்துடன் கேட்
பீர்களாகவென்று கூறலாயினர்.

பூர்வத்தில் கருப்பவாசமொழித்தவராயும், சிவஞானங்கரை யுப
தேசிக்கவல்லவராயும், வேதாகமபுராணாதி சாஸ்திரார்த்தங்களையும் உப
நிடதார்த்தங்களையும் நன்முயுணர்ந்தவராயும், தேவாசுரமாதாடர்களுடைய
கருமத்தின் கனைபைக்கண்டவராயும் உள்ள வாமதேவமுனிவர், தேகமுழு

தும் விபூதி தாளனமும் உருத்திராக்கமாலையும் பூண்டு ஜடாமகுடத்துடன்
ஆனையையொழித்து அகங்காரத்தை நீக்கி அஞ்ஞர்ஞானி பயங்களைப்
போக்கித் திகம்பரராய்ச் சர்வலோகங்களிலுஞ் சஞ்சரித்துவந்தனர். அவர்
தமக்குச் சமானமான சிஷ்யகூட்டங்களோடு பூலோகத்திற் பாதம் படிவ
தாம் பரிசுத்தஞ்செய்து சர்வதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து, பரமாத்
மாவிடம் வைத்த சிவசிந்தனையோடு எங்குஞ் சஞ்சரிக்குகாலில் லோகா
நுக்ரஹார்த்தமாய் ஒருக்கால் மகாமேருவினுச்சில் தக்ஷிணபாகத்திற்
பரம கைரத்தையடைந்தனர். அங்கே பரமேசன் புத்திரராயும் மயில்
வாகனரூடராயும், ஞானசத்தியையுடையராயும், அசுரராகிய காட்டை
யழித்தவராயும், சர்வதேவர்களாற் பூசிக்கத்தக்கவராயும் தெய்வயானை
வள்ளியம்மைகள் சமேதராயும் உள்ள சுப்பிரமணியரை நமஸ்கரிக்கவேண்
டுமென்று, ஆங்குள்ள சமுத்திரம்போன்று விசாலமாயும் சந்திரகிரணம்
போல் அதிக குளிர்ச்சியுடையதாயும் அமுதம்போலப் பருகவல்லதாயும்
அதிக பரிசுத்தமாயும் அளவு காணப்படாத ஆழமுள்ளதாயுமுள்ள சர
வணப்பொய்கையிற் சிஷ்யவர்க்கங்களோடு கிரமமாக ஸ்நானஞ்செய்து
தேவருஷி பித்ருக்களுக்குத் தருப்பணாதிகள் செய்து, விபூதி தாளனஞ்
செய்து, அக்குமாலிகையில், நாரதாதிமுனிவர்குழாம் புடைசூழஷண்முக
ராஜியோகியர் நெருங்கியிருக்கக் கோடி இளஞ்ஞாயிறு முதித்தாற்போல
மயூரவாகனத்திற் சதுர்ப்புஜங்களுள்ள காம்பீர தேகத்தோடும் மகுடாதி
ஆகேயூரகங்கணாதிகளாற் லலங்கரிக்கப்பட்ட சர்வ அவயவங்களோடும்
ஞானசத்தி கிரியாசத்திகளால் உபாசிக்கப்பட்டவராயும் கோழிக்கொடி
வாகாபய அஸ்திரங்களோடும் விளங்கும் சாட்சாத் குமர குருபரனைக்
கண்டு ஆநந்தங்கொண்டு புளகாங்கிதராய் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து,
தன்னை மறந்தவராய்த் தோத்திரஞ்செய்யலாயினர்: பிரணவார்த்தாய -
பிரணவார்த்த வ்யாபினே - பிரணவாகூடரூபாய - பிரணவாய - வேதாந்
தார்த்த சொரூபாய - வேதாந்தார்த்த விதாயினே - வேதவேத்தியாய -
குகாய - குகாசுகிதாய - குஹ்யாய - குஹ்யரூபாய - குஹ்யாகமவிதே -
அனவே - அனீயசே - மகதே - மஹீயசே - பராவாக்யாய - பரமாத்ம
சொரூபிணே - ஸ்கந்தாய - ஸ்கந்தரூபாய - சிந்தாரூணதேஜசே, மந்
தாரமேலோத்தியன் மருடாதி பிருதே - சிவசிஷ்யாய - சிவபுத்ராய -
சிவதாயினே - சிவப்பிரியாய - சிவாநந்தகிதையே - கார்த்
திகேயாய - தீவதே - மாதுருபுத்ராய - மகதே - சரகானசாயினே -
ஷடாக்ஷரசரீராய - ஷட்பிதார்த்தவித்தாயினே - ஷட்பலாதிதரூபாய - ஷண்
முகாய - அவாதஜாயதநேத்ராய - அவாதசாயவபாகவே - அவாதசாயுத
தராய - அவாதசாத்மனே - சதுர்புஜாய - சாந்தாய - சத்திருக்குடதாரி
ணே - வாதாபய ஹஸ்தாய - அசுரவித்தாரினே - கஜாவல்லிருசாலிப்தருமந்
தருமாங்கிதவக்ஷஸே - க்ஷ்ஜானஞாதாய - கரிம்ணே - கந்திதாத்மனே—பிர
மாதிதேவமுனிகர்தருவ இன்னராதியோர் பாலப்பெற்ற கீர்த்திப்பத்துத்
திக்கிலும் பரவப்பெற்றவனே, இரத்தினங்களிழைத்துப் புஷ்பாரம்பூண்ட

முடிகளையுடையதேவர்கள் பணிவதால் முடிகளிலுள்ள இரத்தினங்களோ
ர்ந்தும் பூக்களிலுள்ள மகரந்தம் ஒழுகியும் உள்ள செந்தாமரை போழிய
பாதமுள்ளவனே! உன்னைப்பணிகின்றேன், என்றிதுபோற் பன்முறை நெ
த்திரஞ்செய்து, மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாய்ப் பலங்
முறை நமஸ்கரித்து, ஸுப்ரமண்யோம் என்னும் சாமவேதசுரத்துடன்த
அஞ்சலியஸ்தராய்ப் புளகாங்கிதமுடையராய் ஆனந்த பாஷ்பஞ்சொரிந்து
கொண்டு விநயத்துடனிற்கக்கண்ட தேவசேனாபதியான சுப்பிரமணிய
பூர்ணகடாக்ஷத்துடன் அவரை நோக்கிச் சொல்லலாயினர்.

வாமதேவமுனிவனே! உன்னிட தோத்திரத்தினாலும் பக்தியினா
லும் பூஜையினாலும் அத்தியந்த ஆனந்தத்தை யடைந்தேன். உனக்கு மங்
கலமுண்டாகக்கடவது. நீ யோகியர்களுட் சிரேட்டன். நித்தியதிருப்தி
யும் பரிபூரணானுபவமும் ஆசையை யொழித்தவனுமுள்ள நின்போன்றோர்
எதையும் அடையவேண்டிய கோரிக்கையற்றவர்களா யிருந்தபோதி
லும் உலகக் காப்புநிமித்தம் சாதுசொரூபிகளாய் உண்மைபோலவே
சஞ்சரிப்பார்கள். ஆகையால் காணுனக்குச் செய்யவேண்டிய காரிய
மென்ன? எந்த விஷயத்தை,என்னிடங் கேட்க விரும்புகின்றனை? என்ன
லிந்துகொள்ளவேண்டிய தேதேனுமிருக்கின் அதைப் பரமசிடனான உன
க்கு லோகாநுக்கிரகநிமித்தம் உபதேசிக்க யோக்கியதையுடையவனகி
றாய். அவ்வாறே கேட்பாயாகவென, அவ்வாக்கியத்தைக்கேட்ட வாம
தேவர், வியப்புடன் வணங்கினசரீரமுடையராய் உரைகுழறி, பக
வானே! பரமேசனே! பராபரவஸ்துவே! ஐசுவரியத்தைக் கொடுக்கவல்ல
வனே! சர்வவல்லவனே! தூலகர்த்தாவே! சர்வசாக்ஷியே! வள்ளலே!
உம்முடைய சச்சிதானந்தத்தினாலே ஜீவர்களான என்போலிய அன்மாக்கள்
எந்தச் சந்தேகத்தையுந் தீர்க்கவல்ல வல்லவர்களாவேம். ஆயினும் மேரு
வைச்சார்ந்த கருங்காகமுந்
பொன்னிறமடைந்துபோலவும், பாலொடு
கலந்தநீரும் அப்பானிறமடைவது போலவும் தேவரீரது சச்சிதானந்தநிலை
ருக்கப்பெற்ற யான் அறியாமையால் தவறுகக் கேட்பினும் மன்னித்துப்
பரமரகியப்பொருளையுபதேசிக்க வேண்டுகின்றேன். பிரணவசொரூபமே
பரமேசுவரவாசகமாயும் ஜீவாத்மாக்களுடைய பாசங்களை விடுவிப்பதாற்
பசுபதியாயும், உலகத்தில் வழங்கிவருகிறது. சர்வஜகமும், வேதவேதாங்
கங்களியாவும் பிரணவத்தினின்றேதோன்றுகிறதென்று அதாதியாகச்சொ
ல்லப்படுகிறது. அப்பிரணவமே பிரமமென்றும் அப்பிரமமே சர்வஜகத்
ரூபமென்றும் வேதாந்தங்களும் முறையிடுகின்றன. அதனையால் தேவ
சேனாபதியே! தேவர்பதியே! பதினும்பதியே! பரிபூரணை! அநேககோடி
வித்தனை, சிவத்தைக்காட்டிலும் பிரணவம் அதிகமென்றோர் படவில்லை.
சிவத்திற்கு சமியமான தொன்றுமில்லை என்றும் கேள்விப்பட்டுள்ளேன்.
அச்சிவமயமான பிரணவார்த்தத்தை ஆசாரியமார்க்கமுடனும் உபதேசவிதம
ாக உபதேசித்து என்னைக் கிருதார்த்தனாக்கும்படிப் பிரார்த்திக்கின்

றும். சர்வ ஜகத்திற்குங் காரணகர்த்தராயும் பிராணிகளின் ஜன்மகரு
ணையொழித்து மோக்ஷலக்ஷ்மியின் சாம்ராச்சிய பட்டாபிஷேகத்
தேற்றிச்செய்ய வல்லவராயுமுள்ள தேவரீரைக்காட்டிலும் பரமாச்சாரியர்க
ளிருக்கின்றார்கள் என்று கூறிப் பணிந்தனர்.

இவ்வாறு கூறியதைச் செவியேற்றுவந்தசுப்பிரமணியர் ஆனந்த
டையராய், சதாசிவசொரூபியாயும் பிரணவசரீரியாயும்முப்பத்தெட்டுக்
லைகளுடன் உமைசகாயராய் நந்திதேவராதியர் நமஸ்கரிக்கும் பதாம்
புயமும் உள்ள பரமேசனைச்சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து வேதங்களுக்கு
ஸ்தீதப்பட்ட ரகசியார்த்தத்தை உலோகாநுக்கிரகமாய் வாமதேவமுனி
வருக்கு உபதேசிக்கத் தொடங்கினர்.

வாமதேவர் முருகப்பிரானையடைந்தது.

முற்றிற்று.

எட்டாவது

ஸந்தியாசக் கிரமமுரைத்த அத்தியாயம்.

இவ்வாறு வணங்கிக்கேட்ட வாமதேவரை நோக்கிச் சுப்பிரமணி
யர் சொல்லுகின்றார்: வாமதேவரே! நீர் சிவபெருமானிடத்தில் அத்தி
யந்த பக்தியுள்ளவர். சிவஞானிகளுள்ளே அதிக சிரேட்டர். மூன்றுல
கங்களிலும் நீரறியாததொன்றுமில்லை. நீர் யாவுந் தெரிந்தவராயினும்
லோகாநுக்கிரகநிமித்தம் நீர் கேட்டதைக் கூறுகின்றேன். இவ்வுலகத்தில்
ஜீவர்கள் தத்துவத்தினுழன்று காலசால்தரங்கத்தில் அவாவுடையராய் மா
யையால் பசுக்களைப்போலகப்பட்டு,பரமசிவத்தை யடைவதை அம்மாயை
யினாலே வஞ்சிக்கப்பட்டு அவளையறியாமலே ஒழிகிறார்கள். இதை என்
வலக்கரத்தை யுயர்த்தி உண்மையாகக் கூறுகின்றேன். எல்லா உபநிட
தங்களிலும் பரமசிவமே பிரணவார்த்தமென்று முறையிடுகின்றன. அப்
பிரணவார்த்த சொரூபியான பரமசிவன் மனோவாக்குக்களுக் கெட்டாத
வரும், ஆனந்தரூபியும் ஞானரூபியும் நிர்ப்பயருமாவர். அவரிடத்தி
னின்றே சராசராத்மகமாகிய உலகமும், விஷ்ணு பிரமருத்திரேந்திராதி
களும் உதிக்கின்றனர். அவரிடமிருந்துசெல்லாந் தோன்றினாலும் தான்
எதினின்றும் யாராலும் பிறப்பிக்கப்பட்டிலர். அவரது தேக தேஜசின்.
முன் மின்னலும்சூரியனும் சந்திரனும் அக்கினியும் ஒளிமழுங்கும். அவரது
தேஜசினாலே யாவும் பிரகாசிக்கும். அவர்சர்வசுவரியங்களோடுங் கூடி
யிருப்பதனால் சர்வேசுவரனென்றழைக்கப்படுவர். தகராகாசமத்தியிலுள்ளவரா
தலின் முழுமுதற்கடவுளாலுந் தியானிக்கத்தக்கவர். அவரது பராசத்தி
மனோன்மணியாயும் நிர்க்குணியாயும் நிஷ்களையாயும் பிரகாசித்துக்கொண்
டிருக்கிறாள். அச்சத்தியினிடமிருந்தே இச்சகம் விருத்தியாகின்றது. அவ
ருக்கு மூன்று உருவங்களுள. அவை ஸ்தூல சூக்ஷ்ம பரமெனப்படும்.

எல்லாத் தேவர்களுக்கு மதிதேவராயும், திக்கனராயும், அதிதியாயும், ஞானக்கிரியாசுவபாவராயும் உள்ளவரே பரமேசரெனப்படுகிறார். அவரது மூர்த்தமே சதாசிவமெனப்படும். அவரே சத்தியோஜாதாதி பஞ்சமுக பிரமரூபியாய்க் கலாபஞ்ச விக்கிரக சுத்தஸ்படிகநிறமாயுள்ளவர். சந்திரனைப் போன்ற குளிர்ந்த பார்வையும் ஐந்து முகமும் பத்துக்கரங்களும், பதினைந்து நேத்திரங்களும், ஈசானமகுடமும், தற்புருட முகமும் அகோர இதயமும், வாமதேவ குஹ்யமும், சத்தியோஜாத பாதமும், சர்வஜ்ஞத்வாதிஷ்ட சத்திகளோடுகூடிய தேகமும் உடையராய்த் தன்னை யுபாசிக்கின்றவர்க ளிதயத்திற் பிரகாசிக்கின்றார். அவரது சத்தியாகிய மனோன்மனியாற் பகிர்க்துள்ள வாமபாகமுடையவரைச் சமஷ்டியாயும் வியஷ்டியாயும் பாகுபாடுபடுத்திக் கூறுகின்றேன். அதை உபதேசக்கிரமமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது.

வாமதேவரே! இவ்வுலகில் பிராமணர் முதல் நால்வருணத்தவரிருக்கின்றார்கள். அவர்களில் முதல் மூன்று வருணத்தவரே வேதாத்தியயனஞ்செய்ய உரியர். நான்காம் வருணத்தராய சூத்திரர் அதைக்கேட்க யோக்கியதையுடையரே யன்றி வாசிக்க அருகரல்லர். முதல் மூவருணத்தவர்களும் வேதத்திலுள்ள தருமங்களையே யநுஷ்டிக்கவேண்டியது. அதே முக்கியமானது. சுருதிஸ்மிருதிகளிற்கூறிய வருணாச்சிரம தருமங்களைத் தவறாமல் அநுஷ்டித்துப் பரமேசனைப் பூசித்து அநேகமுனிவர்கள் சாயுச்சியபதவியை யடைந்திருக்கிறார்கள். பிரமசரியத்தினால் ருஷிகளின் கடனையும், எக்கியத்தினால் தேவர்கடனையும், சிராத்தத்தினாற் பிதுரரின் கடனையும் முடிக்கவேண்டுமென்று வேதங்கூறுகின்றது. இவ்வகைய மூன்றுகடனையும் விலக்குவதாற் கிரகஸ்தாச்சிரமத்தையொழித்து வானப்பிரஸ்தாச்சிரமத்தையடைந்து, மனைவியோடு வனத்தையடைந்து இந்திரியநிக்கிரகஞ்செய்து சீதோஷ்ணங்களைச்சகித்து, ஓங்காரத்தை மட்டுப்படுத்தித் தவத்தினிருந்து சமதமாதி குணங்களையடையப்பெற்று, இயமாதி யோகங்களை யப்பியசிக்கவேண்டும். இவ்வாறு அப்பியசிக்கின் புத்தி கலியாது ஒடுங்கும். இவ்வகையாய்ச் சுத்தாத்மாவாகிச் சர்வகருமங்களையுஞ்செய்து யாவுஞ்சிவார்ப்பணஞ்செய்துகல்லாக்கருமங்களையுமொழித்துஞானபூஜையைச் செய்யவேண்டும். இதனால் சிவஞானத்தையடையின் ஜீவன்முத்தர்களாய்ப் பிரமானந்தத்தை யநுபவிப்பார்கள். அத்தகைய ஜீவன்முத்தியடையச் சிவஞானமுண்டாகவேண்டும். அதனையடைய உத்தமாசிரியனைத் தெரிந்து கொள்ளவேண்டும். அவர் சர்வசாஸ்திரார்த்தங்களையு முணர்ந்து வேதாந்தத்தின் கரையையுணர்ந்தவராயும் புத்திமானும், உத்தமகுலத்திற்பிறந்தவராயும், யதிபாயுமிருக்கவேண்டும். அப்படிப்பட்டவருக்குத் தன்டாகாரமாய்ப்பணிந்து தோத்திரங்களாற் சந்தோஷத்தையுண்டாக்கவேண்டும். சிவபெருமானே குருவாவர். குருவே சிவபெருமானுவர். அவரை அபேதமாகப் பாவித்துத் தான்அப்பியசிக்கவேண்டிய பிரணவார்த்தத்தை

யுணர்த்த வேண்டுமென்று கேட்டு, அவரது திருவருளைப்பெற்று, பன்னிரண்டுதினம் பாலைப்பருகிச் சுக்கிலபட்ச சதுர்த்தி தினத்திலாகிலும் தசமி திதியிலாகிலும் உதயத்திலெழுந்து நியமத்துடன் ஸ்நானஞ்செய்து பரிசுத்தவஸ்திரந்தரித்து நித்தியகருமங்களைமுடித்து ஓரேமனதாய்க் குருவினை வணக்கஞ்செய்து, அழைத்து நாந்திசிராத்தஞ்செய்ய ஆரம்பிக்கவேண்டியது. அப்பூஜையில் சத்தியவசு என்னும் பெயருடைய விசுவேதேவர்களைப் பூஜிக்கவேண்டியது. தேவசிராத்தத்தில் பிரமவிஷ்ணு மகேசுவரர்களையும், ருஷிசிராத்தத்தில் தேவமாதுடனையும் திவ்ய சிராத்தத்தில் வசுருத்ர ஆதித்தர்களையும், மாதுடசிராத்தத்தில் சனகாதிமுனிவர்களையும் பூதசிராத்தத்தில் பஞ்சமகா பூதங்களையும், பிதுர்சிராத்தத்தில் பிதாவையும் அவர் பிதாவையும் அவர் பிதாவையும், மாதுர்சிராத்தத்தில் மாதாவையும் பிதாவின் மாதாவையும் அவர் மாதாவையும், ஆன்மசிராத்தத்தில் தனக்குதவும் முற்கூறிய பிதாவின் பிதாவையும் அவர் பிதாவையும் அவர்கள் பத்தினிகளுடன் பூஜிக்கவேண்டியது. தாயைப்பெற்ற பாட்டன் சிராத்தத்தில் அவளையும் அவர் பிதாவையும் அவர் பிதாவையும் பூசிக்கவேண்டியது. இச்சிராத்தங்களெல்லாவற்றிலும் விசுவேதேவர்களைப் பூசிக்கவேண்டும். சிராத்தத்தில் பிராமணர் இருவருக்குக் குறையாமல் வருவித்து, சுத்தஜலத்தினால் அவர்கள் பாதத்தை யலம்பி எல்லாச்சம்பத்துகளையும் அடைவதற்குக் காரணமாய்ம் ஆபத்துக்களுக்குத் தாமகேதுவாகவும், கைகாணுத சமுசாரசாகரத்திற்கு அணையாகவும், விபத்காகிய இருளுக்குக் கோடிசூரியராகவும், மனோரதங்களைக்கொடுக்கத்தக்க காமதேனுவாகவும், புண்ணியதீர்த்தங்களையும் பரிசுத்தஞ்செய்வதாகவும் உள்ள அவர்களது பாததூளிகள் எல்லோரையுமகவென்று பிரார்த்தித்து,அவர்கள் காலைக்கழுவிய ஜலத்தைச் சிரசிற்புரோக்ஷணஞ்செய்து அவ்வேதியரை நமஸ்கரித்து, மனதினைப் பரமசிவனைத் தியானித்துக் கிழக்குமுகமாக நல்ல ஆசனத்திலுட்கார்ந்து ஆசமனியஞ்செய்து புனிதமான யஜ்ஞோபவீதமணிந்து பவித்திரந்தரித்து ரேசகக்கிரமத்தினால் மூன்றுபிராணயாமங்களைச்செய்து, வருடமாசதிதிகளைச் சொல்லி, யான் வைசுவதேவாதிபலிகளையும் அஷ்டவித சிராத்தங்களையும் அக்கினிமுலமாய்ச்செய்து முடித்துச் சந்நியாசம் பெறப்போகிறேன், நீங்கள் அனுஜ்ஞை கொடுக்கவேண்டுமென்று அவர் விருப்பத்தையடைந்து,விசுவேதேவர்த்தமாய்ப் பிராமணர்களை நியமித்து விசுவே தேவர்களையும் பிதுர் மாதுரு மாதா மகவர்க்கங்களையும் அப்பிராமணரிடத்தில் ஆவாகனஞ்செய்து, பிரமப்படி ஓமஞ்செய்து புனிதமான வாழையிலையில் அறுசுவையோடுகூடிய பதார்த்தம் அன்னம் பல்கார முதலியவற்றைப் படைத்துத் தத்தம் ஆசாரமுறைப்படி தங்கள் சூத்திரத்திற்கேற்ப நாமகோத்திரங்களைச் சொல்லிப் பிதுர்களின் பொருட்டித் தத்தஞ் செய்கிறேனென்று தேவர்களுக்கு அக்ஷதையும், பிதுர்களுக்குத் திலமும், ஜலத்துடன் கூட்டியும், தேவர்களுக்கு ஸ்வாஹாவென்றும், பிதுர்களுக்கு ஸ்வதாவென்றுந் தத்

தஞ்செய்து, "யத்பாதபத்ம ஸ்மரணாத் யச்சரீரகாம் ஜபாதபி - ந்யூநகர்ம பலவேத்பூர்ணம் தம்வந்தே ஸாம்பமீஸ்வரம்"—என்கிற பரமசிவனுடைய திருவடித்தாமரையை ஸ்மரித்தமாத்திரமும், அவருடைய திருநாமத்தை ஜபித்தமாத்திரமும் செய்கருமங்கள் பரிபூரணமாகுமோ, அந்தச் சாம்ப சிவனே இக்கருமஞ் சம்பூரண பலனையடையும் பொருட்டு நமஸ்கரிக்கி றேன் என்று பணிந்து, பிராமணரைப்பணிந்து யான்செய்யும் காந்திராத் தத்தை நீங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்று அவர்கள் கையில் ஜலத்தை விடித்து இது அமிர்தமாகட்டுமென்று கூறிப் போஜனஞ் செய்விக்க வேண்டும்.

அவ்வாறு அவர் போஜனஞ் செய்துகொண்டிருக்கையில் மற் றவர்களைக் கொண்டு உருத்திரம் நமகம் சமகம் புருஷஸூக்தம் பஞ்சப் பிரமமந்திராதிகளால் போஜநந்தம்வரையிற் பாராயணம் பண்ணுவித்து மீண்டும் பிராமணர்கள்கையில் உத்தரா போஜனங் கொடுத்து அவர்களை எழுந்திருக்கப் பிரார்த்தித்துக் கைகரல் பரிசுத்தஞ்செய்வித்துத் தானும் பரிசுத்தஞ்செய்துகொண்டு யாவரும் ஆசமனியஞ் செய்து ஓமஸ்தானத் திற் கிழக்குமுகமாகத் திவ்யாசனத்தி லுட்காரவேண்டியது. பிராணயா மத்தன் மூவித பிராணயாமங்களைச்செய்து, சங்கற்பம்பண்ணி தான்செய்த காந்திராத்தாங்கமாய்ப் பிண்டப்பிரதானங் கொடுக்கின்றபடியா லதை யுட்கொள்ளவேண்டுமென்று பிதுர்க்களைப் பிரார்த்தித்து, தங்கள் சூத் திரப் பிரகாரம் பிதுர்களை யாவாகனஞ்செய்து, ஒவ்வொருவருக்குங் கிரமமாய்ப் பிண்டதானஞ்செய்து பரமாத்வாளை பரமசிவனை, இதயதா மரையில் தியானித்து முற்கூறிய "யத்பாத—வாம்" மந்திரத்தைப்படன்ஞ் செய்து, தன் சத்தியாநுசாரம் பிராமணர்களுக்குத் தக்ஷிணைகொடுத்து பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, நான் கூட்டியுங்குறைத்தும் முடித்த குற் றங்களை மன்னித்துக் கிருதார்த்தனாக்க வேண்டுமென்று பிரார்த்தித்து எழுந்திருக்கச் செய்யவேண்டும். பிண்டப் பிரசாதத்தைப் பசுக்களுக் காகிலும் நீரிலாகிலும் இடவேண்டியது. புண்ணியாசனஞ்செய்து இஷ்ட பந்துக்களுடன் எஞ்சிய அன்னத்தைப் புசிக்கக்கடவன். அற்றைப் பொ ழுதைச் சிவத்தியானத்திற் கழித்து அடுத்த நாட்காலையில் நித்திய கருமங் களை முடித்து, கால்தவிர மற்றைத்தானங்களிற் சௌசஞ்செய்துகொண்டு புண்ணிய தீர்த்தமாடிப் புனிதவஸ்திரந்தரித்து இருமுறை ஆசமனியஞ் செய்து மௌனவிரதம்பூண்டு விபூதிதாளனஞ்செய்து பிராமணர்களுடன் புண்ணியாவாசனஞ்செய்து, தீர்த்தத்திறல் புரோக்ஷணஞ்செய்து, பிருந்த ஓமத்திரவியங்களைத் தக்ஷிணையுடன் சிவரூபியான குருவிற்கு வஸ்திரத் துடன் கொடுத்து, சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து எழுந்து புதிதான கடி சூத்திரம், கௌபீனம் வஸ்திரம் தண்டம் கமண்டலம் சமித்து முதலியன எடுத்துக்கொண்டு, சமுத்திரக்கரை, நதிக்கரை, மலையடிவாரம், சிவா லயம், இருடிகள் வசிக்கும் ஆச்சிரமம் பசுக்கட்டுமிடம், பரிசுத்தத்தலம்

ஆகிய இவற்றிலொன்றிற் சென்று ஆசமனியஞ்செய்து, மாநஸிகமாய்த் தேஹி மந்திரத்தையும் பஞ்சப்பிரம மந்திரத்தையும் ஓங்காரத்துடன் மும் முறை ஜபித்து "அக்நிமீளே புரோஹிதம் இஷேத்வோர்ஜேத்வா அக்நாயோ யாஹிவீதயே பின்வோதேவீரயிஷ்டயே" என்னும் மந்திரங்களாகிய நான்கு வேதங்களின் ஆதியையும் பிரணவங்களுடன் சேர்த்து ஜபித்து, அவ்வேதங்களுக்கங்கமான சிகைஷ, வியாகரணம், சந்தஸ, நிருத்தம், ஜோதிஷம் கல்பம் ஆகியவற்றின் அதிகளான "விருத்திராதைச்" ஆதியாக உள்ளனவற்றை ஜபித்து, பின்னர் "அதாதொதர் மஜிக்ஞாஸா" என்னுந் தருமசாஸ்திரத்தினடியையும் "அதாதொ பிரமஜிக்ஞாஸா" என்னும் வேதாந்த சூத்திரத்தின் அடியையும் ஜபித்து, பிரமன், இந்திரன் சூரியன் சந்திரன் பிரஜாபதி ஆத்மா அந்தராத்மா ஞானத்மா பரமாத்மா முதலியோரைப் பிரணவ பூர்வமாய் நமவசாந்த சதுர்த்தியந்தங்களுடன் உச்சரித்து நமஸ்கரித்து, பொரிமாவில் ஒருபிடி எடுத்துப் பிரணவத்தாலதை யுட்கொண்டு இருமுறை ஆசமனியஞ்செய்து முற்கூறிய ஆத்மா முதலிய நாமங்களால் நாபி முதலிய தானங்களைப் பரிசித்தும், அவர்களுடைய நாமங்களையே மீண்டும் ஸ்வாஹாந்தமாய்க் கூறியும், பால் தயிர் நெய் இவைகளால் மும் முறைப் பிராசனஞ்செய்து, இருமுறை ஆசமனியஞ்செய்து கிழக்குமுக மாய் மூன்று பிராணயாமங்களைச் செய்யக்கடவன்.

ஒன்பதாவது

மேற்படி அத்தியாயம்.

இவ்வாறு கூறிவந்தனவற்றைக் கேட்டுவந்த வாமதேவரை நோக்கிச் சுப்பிரமணியர் மீண்டுங்கூறலுயினர் : வாமதேவரே ! முற்கூறிய படியே கருமங்களை யெல்லாங் காலையில் முடித்துப் பகற்காலத்திற் புண் ணிய தீர்த்தமாடிப் பரிசுத்தவஸ்திரந்தரித்து ஒரே மனதுடையவனாய்வ னஞ்சென்று நறுமணமுள்ள புஷ்பங்களையும் சந்தனாதிகளையுஞ் சேகரித்து பூஜாஸ்தானத்தில் நிருதிதிக்கில் தேவதேவனையும் கணநாயகனையும் விளங்கும் விக்நேசுவரனைக் "கணநாந்த்வா" என்னும் மந்திரத்தால் யதாவிதியாய்ச் சென்றிறம், பருத்த உடல், சமஸ்த ஆபரணங்களாலலங்கரிக் கப்பட்ட அவயவங்கள், நான்குகரங்களிலும் பாசம் அங்குசம் உருத்திரா க்கமாலை அபயம் ஏந்தியிருக்கும்படி ஆவாகனஞ்செய்து, சோடசோபசா* ரங்களுடன் தூபதீபங்களாலருச்சித்து, பாயசம் மோதகம் தேங்காய் பழ வகைகள் முதலிய நிவேதனத்தாற் சந்தோஷிப்பித்து, மும்முறை பிரத கூணஞ் செய்து * நமஸ்தே நமனஞ்செய்து என்காரியம் நிர்விக்கினமாக நடைபெறவேண்டுமென்று பிரார்த்தித்து, உபாசனைக்கினியில் தங்கள் சூத்திரப்படி பிரதிஷ்டைசெய்து பிரமவே நிர்மாணித்துவியாஹ்ருதிகளால்

* இதைத் தமிழில் தோப்புகண்டமென்றும், தோப்புக்கரணமெனவுங் கூறுவர்.

ஓமஞ்செய்து, பூரணாகுதி முடித்துக் காயத்திரியைக்கிரமமாய் அபரான்ன பரியந்தஞ் செபித்து, மாலைப்போதில் சந்தியாவந்தனம் முடித்து அக்கினி பூஜைசெய்து மௌனத்துடன் குருவின் கட்டளைப்படி உபாசனைக்கினியில் அன்னத்தைப்பசனஞ்செய்து அவ்வக்கினியிலேயே ருத்திரஸூக்தத்தினாலும், சத்தியோஜாதாதி பஞ்சப்பிரம மந்திரங்களாலும், கௌரீமஹாயாய என்னும் மந்திரத்தினாலும் உமையும் பரமேசனும் இருப்பதாகப் பாவித்து ஓமஞ்செய்து, ஸ்விஷ்டகிருத ஓமம் ஒருமுறை அக்கினிக்காகச் செய்து, மற்றும் ஓமசேஷத்தைமுடித்து உத்தர பாகத்தில் திவ்யாசனத்திலிருந்து மௌனமாய் அருணோதய பரியந்தஞ் சித்தசுத்தத்துடன் காயத்திரியைச் செபிக்கவேண்டும். காலையில் ஜபத்தினின்றும் நீங்கிப் புண்ணிய தீர்த்தமாடி விபூதி தாளனஞ்செய்து முன்னுள்ள உபாசனைக்கினியில் அன்னத்தைப் பசனஞ்செய்து வடபுறத்திலிருந்து நெய்யாறி பரிசுத்தஞ் செய்துவியாஹ்ருதிகளையும்உருத்திரஸூக்தத்தையும்பஞ்சப்பிரமமந்திரத்தையுஞ் செபித்து, தகராகாசத்திற் சிவபாதாம்புயத்தைத் தியானித்து, பிரஜாபதி இந்திரன் விசுவேதேவர் பிரமன் முதலியவர்களுக்குப் பிரணவ பூர்வமாய்ச் சுகாந்தமான ஓமஞ்செய்து பின்பு புண்ணியாவாசனஞ் செய்து அக்கினி திருப்திக்காக அக்கினிஸ்வாஹாவென்று ஓமஞ்செய்து, பஞ்சப்பிராணர்களுக்குப் பஞ்சப்பிராண மந்திரத்தால் ஓமஞ்செய்து,† மஹோசாதி சதுர்வியூகங்களைச் சத்தியுடன் பாவித்துத் திருப்திகரமாக ஓமஞ்செய்ய வேண்டியது. ஸ்விஷ்டகிர்தாஹோமஞ்செய்து உருத்திர ஸூக்த பஞ்சப்பிரம ஸூக்தாதிகளைச்செய்து முறைப்படி சேஷத்தையும் முடித்து அவ்வத் தேவர்களையும் நினைத்துத் தான்செய்த கருமங்களைத் தியாகஞ்செய்து முடிக்கவேண்டியது. இதுவரையிற் கூறிவந்தது அக்கினியிற் செய்ய வேண்டிய கருமங்களென் றறிவாயாக.

வாமதேவரே! இனி இந்த ஓமத்தை ஆத்மாவிற்செய்யவேண்டிய விதத்தை விளம்புகின்றேன். இத்தேகம் இருபத்தாறு தத்துவங்களாலாக்கப்பட்டுள்ளது. இத்தத்துவங்களினுள்ளிருக்கும் ஆன்மா பரிசுத்தமடையும்படி ஸ்மரித்து அத்தத்துவங்களுளொன்றான ஆன்ம தத்துவசுத்திக்காகத்தைத்தியச்சாகையில் அருணபாடத்திற்படிக்கப்பட்டபிருதிவியாதி புருஷார்த்தமாக உள்ள மந்திரக்கிரமத்தால் நெய் அன்னம் முதலிய சமித்துகளோடு சிவபாதாம்புயங்களைத் தியானித்து மௌனவிரதத்துடன் பிருதிவியாதி பஞ்சபூதங்களையும் பஞ்சேந்திரியங்களையும் ஸப்ததாதுக்களையும் பிராணவாயுக்களைந்தையும் அன்னதி பஞ்சகோசங்களையும் சங்கற்பாதி குணங்களையும், பிரகிருதி புருஷர்களையும் குறித்து மேற்கூறிய முறைப்படி ஓமஞ்செய்யவேண்டியது. இதனை வித்தியாதத்துவமெனவும் சிவதத்துவமெனவும், பிரமவாக்கியங்களாற் கூறுவாருமுளர். பிருதிவிமுதல் சிவதத்துவம்வரையிலிருக்குந் தத்துவங்களை யாண்ம ஞானத்தாலறிந்து

† வாயுசங்கிதையில் கண்டு விளங்கும்.

பரிசுத்தஞ்செய்யவேண்டும். பின்னர் பதினெரு மந்திரங்களாற் "பாஸ்மீ பதபூருவ" மாயும் சதுர்த்தியாந்தமாயும், ஓங்காரத்துடன் நமஃ சத்தத்தை இறுதியிற் கூட்டி ஆகுதிசெய்யவேண்டும். அப்பதினெருபெயர்களாவன: ஓம் சிவஜோதிஷநமஃ ஓம் பரமாத்மனே, சிவமூர்த்தாய, கலாதிபதாய, வியாபகாய, விசுவரூபாய, கபர்தினேசுவராய, லோகத்ரயாய, லோகவியாபினே, தேவாய, விதித்யாய, பரப்பிரமனே ஆகிய இவற்றை யதாக்கிரமமாயும் விசுவரூபாய, பரமபுருஷாய, சிவாய என்பனவோடு கூட்டி ஓமஞ்செய்து தங்கள் ஸூத்திரத்திற் கூறியபடி ஓமத்திற்குரிய பூர்வாங்கங்களையும் உத்தராங்கங்களையு முடித்து, ஆசார்யத்துடன் ஓமஞ்செய்து மிருந்த அன்னத்தைப் பிரசாதமாக வட்டகொண்டு, ஆசாரியருக்குத் தகுதினைகொடுத்துமுன் செய்த ஓமத்திற்குச் சாகஷ்டராயிருந்த பிரமனே உத்வாசனஞ்செய்து அன்னிரவைக்கழித்து, விடியற்காலத்திலெழுந்து, காலைக்கடனை முடித்து அக்கினிக்கடனைச் செய்து "சமஞ் சக்ஷு மயுதைதி" என்னு மந்திரங்களைச் செபித்து "யாதேயக்னே" என்னு மந்திரத்தைக் கூறி, அவ்வக்கினியில் தனது வலக்கரத்தைச் சூடேற்றி, அதனையேமீண்டுந் தனது ஆன்மாவிலாரோபணஞ்செய்து, சூரியனுக்குச் செய்யவேண்டிய கடனை முடித்து, நதிக்கரையடைந்து நாபியளவு ஜலத்திலிறங்கி, பிரஜாபத்தியேஷ்டியை முடித்து, கிரகஸ்தாச்சிரமத்தை விட்டுச் சந்தியாசாச்சிரமத்திற்குப் போக வேண்டியதற்காக வேதங்களில் விளம்பியுள்ளபடி காயத்திரி முதலிய இவ்ய மந்திரங்களை ஓங்காரத்தி லடக்கியஞ்செய்து அப்பிரணவத்தை யுபதேசித்துக்கொள்ளவேண்டும். அக்காயத்திரியை வியாஹ்ருதிகளுடன் பாதம்பாதமாய் உச்சரித்து அவளது சொரூபரான பரமேசுவரியும் சங்கரரது பாதி சரீரத்தைப் பெற்றவளும், ஐந்து முகங்களுடையவளும், பதினைந்து கண்களும், நவரத்தினங்களாலும் சந்திரகலைகளாலு மலங்கரிக்கப்பட்ட பஞ்சமுடியும், சுத்தஸ்படிக சமானமான காந்தியும், வரதம், அபயம், அங்குசம், குறடு, கபாலம், பாசம், சங்கு, சக்கரம் கதை, தாமரை முதலியன வேந்திய பத்துக் கரங்களும், கங்கையின் வெள்ளம்போன்ற வெள்ளிய முத்துமாலையா லலங்கரிக்கப்பட்ட கண்டமும், இரத்தின கர்ணங்களா லலங்கரித்த மணிக்கட்டுகளும், மேகலையணிந்த இடையும், தண்டை சிலம்பு முதலியவற்று லலங்கரித்த பாதங்களும், வெண்பட்டணிந்த மேனியும்பெற்று ருஷிகள் கந்தருவர் யக்ஷர் தானவர்—மானுடர் முதலியோராற் சேவிக்கப்பட்டவளும், சர்வாத்மசொரூபினியும் திரிலோக வியாபினியும் சிவசொரூபியும், சதாசிவ பத்தினியும், அழகிய அவயவங்களுடையவளுமாகத் தியானிக்க வேண்டும். எவன் அச் சிவசொரூபியாகிய காயத்திரியைக் கிரமமாக வுபாசிக்கவில்லையோ அவன் பிரமகற்பமுடியுந் தொடரவாதிகிரயத்தை யநுபவிப்பான். அக்காயத்திரி வியாஹ்ருதியினின்றுந் தோன்றி அதிலேயே லயமடைவள். அவ்வியாஹ்ருதி பிரணவத்திற்றோன்றி அதிலேயே லயமடையும். அப்பிரணவம் எல்லா வேதங்களுக்குமாதி. அதுவே சிவவாசகசத்தம்.

அச்சிவமே பிரணவம். அப்பிரணவமே சிவம். வாச்சிய வாசக சத்
தங்களுட் கொஞ்சமேனும் பேதமில்லை. ஆகையால் அப்பரமசிவமே
ஏகாக்ஷரமாகிய பிரமம். அதுவே பரம்பரமான வஸ்து. அதுவே எல்லா
வற்றிற்குங் காரணம். அதுவே அகண்டாகாரமாயும், நிருமலமாயும், சர்வ
தேஜோமயமாயும், நிஷ்கள நிரஞ்சன நிராமய சச்சிதானந்தமாயும் விளங்
குவது. அதனையே துறவிகளெல்லாரும் மனமாகிய காமாயின் மத்தியில்
வெகுகாலமாகத் தியானித்து ஆனந்தமடைந்து பிறவியை யொழிக்கின்
றார்கள். இத்தகைய வடித்தெடுத்த காயத்திரியாகிய பிரணவத்தை யது
சந்தானஞ்செய்யவேண்டும். "அகம் ரகஸ்ய" "எத்சத்தசாம் நிஷபம்"
"கோபாயத்தம்" என்னும் மூன்று அநுவாக மந்திரங்களாற் ஈஷணத்திர
யங்களாகிய மண் பெண் பொன்னளவிலுள்ள ஆசையை யொழித்து, பிர
ணவத்தை வியாஹ்ருதியுடன் ஜபித்து "ஓம்பூஃ ஸந்தியஸ்தம்மயா" "ஓம்புவஃ
ஸந்தியஸ்தம்மயா" "ஓம்சுவஃ ஸந்தியஸ்தம்மயா" என்று சர்வ மந்திரங்
களையும் விட்டு, பிரணவத்தை மீண்டும் முன்னேகூறி, வியாஹ்ருதித்திரயங்
களைச் சமஷ்டியா யுச்சரித்து சந்தியஸ்தமென்று சொல்லவேண்டும். சதா
சிவமூர்த்தத்தை இதயத்திற் தியானித்துப் பிரேஷமந்திரத்தை ஜபித்து
சாவதானமனதுடன் சர்வபிராணிகளுக்கு மென்னிடத்தில் அபயமுண்டா
கக்கடவதென்று சுவஃ அந்தத்தினுல் ஜலத்தை எடுத்துக் கீழேவிடவேண்
டியது. பின்னர் காயத்திரியை ஜபித்துத் தன் கையால் தான் பூண்டிருக்
கும் பூணூலையும் சிகையையும் எடுத்து வியாஹ்ருதிகளுடன் பிரணவத்தை
யுச்சரித்து "வன்னிஜாயாம்" என்னும் மந்திரஞ் சபித்து சமுத்திரகச்ச
சுவர:என்றுஜலத்துடன்விடவேண்டியது. ஜலத்தைப் பிரஷமந்திரத்தினல்
அபிமந்திரித்து மும்முறை ப்ரோக்ஷணியஞ்செய்து அரையினுடுத்திய வஸ்தி
ராதிகளோக் கீழேபோட்டு விடவேண்டியது. இவைமுடிந்தபின்பு வடக்கு
முகமாகவாயினும் மேற்கு முகமாகவாயினும் எழுந்து நடக்கவேண்டியது.
அப்படி நடக்கையில் ஆசாரியர் அணுகி "நடவாதே நடவாதே" என்று
கூறித்தடுத்து வியவகாரநிவித்தமாய்க் கோவணத்தையுந் தண்டத்தையும்
பெற்றுக்கொள்ள வேண்டியதெனக் கூறுவதற்கிணங்கி அவற்றைப்பெற்
றுக்கொண்டு சூத்திரத்துடன் காவி வஸ்திரத்தைத் தரிக்கவேண்டியது.
ஆசாரியர் சிஷ்யப்பார்த்து "இந்திரஸ்ய வஜ்ரோசி" என்னும் மந்திரத்தாற்
கொடுத்த தண்டத்தைப் பிரார்த்தனையுடன் வாங்கி அதனைத்தனக்குச்
சிரேகனையிருக்க வேண்டிக்கொள்ளவேண்டும். ஆசாரியது சபீபஞ்சென்று
சிவபாதாம்புயத்தைத் தியானித்து அவரை மூன்றுமுறை சாஷ்டாங்க
மாய்ப்பணிந்து, அஞ்சலியஸ்தனுய் அவரது பாதத்தருகே நிற்கக்கடவன்.
முன்செய்துள்ள விரஜாஓமத்தின் பஸ்மத்தை ஆசாரியர் சீடனது தேக
முழுதும் அக்னிரித்யாதி மந்திரத்தாலும், ஈசானாதி மந்திரங்களாலும்
தானஞ்செய்து, திரிபுண்டரத்தைத் திரியாயுஷ்திரியம்பகம் மந்திரங்க
ளால் தரிக்கவேண்டும். அவ்வாசாரியரே இதயபுண்டரீகத்திற் பார்வதி
சமேதராய்ச் சதாசிவத்தைத் தியானித்துச் சீடனது சிரசில் வலதுகையை

வைத்துச் சந்தோஷமனதுடன் ருஷிஸஹிதமாய்ப் பிரணவத்தை அவன்
வலதுகாதில் உபதேசிக்கவேண்டும். அப்பிரணவத்தை மூன்றுபிரகாரமாய்
அநுசந்தானத்தை ஷட்விதார்த்த பரிஜ்ஞானத்துடன் சொல்லவேண்டும்.
இவைமுடிந்தபின் சீடன் ஆசாரியரைப் பன்னிருமுறை சாஷ்டாங்கமாய்ப்
பணிந்து அவரது சுவாதீனமாகி எக்காலத்திலும் பக்தியிற்றவறுமற்
பணிவிடைசெய்து வேதாந்தார்த்தங்களையும் பிரணவ சொரூபத்தையும்
சிவஞானத்தையும், தெரிந்துகொள்ள வேண்டுமென்று பிரார்த்தனை
செய்யக்கடவன். விடியற்காலத்தில் ஸ்நானஞ்செய்து குருவைவணங்கி
அன்றன்று செய்யவேண்டிய அநுஷ்டானங்களை அவரிடமிருந்து கிரமமாய்
முடித்து மூலமந்திரத்தை ஒவ்வொருவேளை பன்னீராயிரத்திற்குறையா
மல் ஜபஞ்செய்யவேண்டியது. இத்தகைய ஜபத்தைமுடித்து முற்கூறிய
கைலாயப்பிரஸ்தரமென்னும் மண்டலத்தைக் கிரமப்படி நியமித்துப் பூஜை
செய்ய ஆரம்பிக்கவேண்டும். பிரதினமுந் தவறுமல் இப்பூஜையைச்
செய்து வரவேண்டும். படிகமயமான இலிங்கத்தையும் பூஜைசெய்து
வரவேண்டும். அப்படிப் பூஜைசெய்ய யந்தனிக்கையிற் குருசந்நிதானத்
தில் என்பிராணனுழிந்தாலும்நிச்சேதமடையநேரிட்டாலும் திரிகேத்
திரனைப் பூசிக்காமல் ஆகாரதிகளைச் செய்வதில்லையென்று சத்தியங்கூறி
மகாதேவரிடத்திலே புனிதமான மனதுடனும் அத்தியந்த பக்தியுடனும்
பஞ்சாவரணக்கிரமத்துடன் பூசிக்கக்கடவன்.

ஸந்தியாசக் கிரமமுரைத்தது

முற்றிற்று.

பத்தாவது

ஷட்விதார்த்தமுரைத்த அத்தியாயம்.

மேற்கூறியவற்றைக் கேட்டுவந்த வாமதேவர் மீண்டும் சுப்பிர
மணியரை நோக்கி, பகவானே! விசேஷஞானமிர்தவாரியே! சம்ஸ்த
லோகங்களுக்கும் பரமேசனே! வழிபடுவோராபத்தையகற்றுவோனே!
என்று வணங்கி, யகண்டமான சிவசம்பத்தையடைதற்கு, ஷட்விதார்த்த
பரிஜ்ஞானமே முக்கியமானதென்று திருவாய்மலர்ந் திருக்கின்றீர்கள்.
அதனிலக்கி அர்த்தத்தின் வழியையும் ஞானத்தின் வழியையும், அவ்
வர்த்தத்தாலறியக்கூடிய வஸ்துவின்னதென்பதையும், அவ்வஸ்துவை
யடைதலாற்கூடும்பலன் முதலியவற்றையுங்கூறவேண்டும். இதையறியாது
பசுசாத்திரங்களால் மோகிக்கப்பட்டழலுகின்றேன். இதனிட்டுச் சிவபாத
மாகிய தாமரையினின்றும் பெருகும் அமுதத்தையுண்டு இவ்வஞ்ஞானத்
தினின்றும் நீங்கிச் சிவரூபத்தை யறுபவிக்கத் தங்கள் திருவுளமாகிய
அமுதத்தினுல் நிறைந்த கோகத்தைச் சரணாகதியடைந்த என்மீதுபரம்பி
ரதக்கிரகிக்க வேண்டுமென்று கூறியவாமதேவரை நோக்கி, கையில்

ஞானசத்திய யேத்திபவராயும், ஜகத்பிரபுவாயுமுள்ள அறுமுகர் சிவ பக்தியில்லாதவர்களுக்குப் பயங்கரமாயும், அஃதுள்ளவர்களுக்குச் சிவா நந்தத்தை யதிகரிக்கச் செய்வதாயுமுள்ள வாக்கியத்தால் திருவாய்மலர்ந் தருள்கின்றார். வாமதேவமுநிவனே! ஆதாவுடனே பரமேசனுடைய பிரண வார்த்த சொரூபத்தையும் ஷட்விதார்த்த பரிஜ்ஞானத்தையுங்கேட்டமை யாலவற்றை விரித்துக் கூறுகின்றேன். முதலாவது மந்திரம், இரண்டாவது யந்திரம் மூன்றுவது தேவதை பொருள், நான்காவது பிரபஞ்சம், ஐந்தாவது குரு, ஆறுவது சிடன், ஆகியவற்றைத்தான் ஷட்விதார்த்தமென்பது. இவ்வாரனுள் முதலாவதாகிய மந்திர சொரூபத்தைச் சொல்கின்றேன். * ஆதிபகரமாகிய அகாரமும் ஐந்தாவதாகிய உகாரமும், பவர்க்கத்தில் ஐந்தாவதாகிய மகாரமும், ஆகிய இம்மூன்றக்ஷரங்களே விந்துநாதங்களு டன் சேர்த்தாற் பிரணவமாகும். இதுவே வேதத்திற் காதியென்றும் சம ஷ்டியென்றும், வேதாந்தங்கள் சொல்லப்படுகின்றது. இதில் நாதமென் பது சர்வசமஷ்டி சொரூபமாகும். இதுவே சிவசொரூபமாகும். இரண் டாவதாகிய யந்திரக்கிரமத்தை உனக்குச் சொல்கின்றேன். இப்போது சொல்லப்போகின்ற யந்திரத்தையே சிவலிங்கமாகப்பாவிக்கவேண்டியது. அவ்வியந்திரத்திற்குக்கீழ் ஆதாரசத்தியைஸ்தாபித்து அதன்மேற் பிரண வமயமான பீடத்தை நிர்மாணஞ்செய்து அதற்குமேல் பிரதமசுவராகிய அகாரத்தையும் பஞ்சமவர்ணமான உகாரத்தையும் அதன்சிரசில் மகா ரத்தையும், அதன்சிரசில் விந்துவையும் அதன்சிரசில் நாதத்தையுமெழு திச் சுற்றிலும் பிரணவத்தினல் மதில்களுண்டாக்கி, அதற்கு நாதத்தி னலே வாயிலுண்டாக்கவேண்டியது. மூன்றுவதாகிய பரமசிவனுலேயே சொல்லப்பட்டுள்ள தேவதாரூபத்தைக் கூறுகின்றேன். சத்தியோ ஜாதம் பிரபத்யாமியென்று ஆரம்பித்து சதாசிவோமென்னும் பஞ்சப்பிரம மந்திரபரியந்தம், பஞ்சப்பிரம சொரூபமாயும் பிரணவ பிரமரூபினிக ளாயும் தேவதா சொரூபிகளாயும், வேதங்களின் சிவமூர்த்த பேதங்களைப் பஞ்சப்பிரமங்களென்றும் பிரணவசொரூபமென்று முற்கூறியுள்ளபடி ஈசானதி மகுடக்கிரமமாயுமுள்ள சிவவித்தாரகத்தைப் பாவிக்கவேண்டும். அவ்வவர்கு முகங்களும் திருட்டியாதி பஞ்சதிருந்தியங்களுக்குக் காரண மாக விருக்கின்றன. இவ்விதமான சதாசிவம் எழுந்தருளியிருக்கும் பீடமானது பரமபதமென்றும், யோகிகளாலும் யதிகளாலுமடையத்தக்க தென்றும், அவரை யுபாசிக்கின்றவர்களுக்கும் பிரணவத்தில் பிரியமுள்ள வர்களுக்கும், சிவசாம்பிராச்சியத்தை இச்சித்தவர்களும் உரியதாயுள்ள ஸ்தானமாம். அத்தானத்தையடைந்து இச்சித்தபோகங்களை யநுபவித்துப் பிரளயாந்த பரியந்தம் பிரமானந்தத்துடன் விளையாடி மகாப்பிரளயகாலத் தில் சிவசாரூபத்தை படைகின்றார்கள் "நேப்பிரமவோகயிதி" என்னும் வேதத்தின் அர்த்தப்படி சாதசிவத்தின் ஐசுவரியத்தையுமடைகிறார்கள்.

* இது வடமொழியிலென்றறிக.

அவர்களே சர்வைசுவரிய சம்பன்னர்களென்று அதர்வசிகோ உபநிடதங் கூறும். அத்தானத்தையடைந்தோன் மீண்டும் பிறப்பதில்லையென்று சாந் தோக்ய உபநிஷத்து கூறும். அவ்விதமேதைத்திரியசாகையில் சமகமந்தி ரத்தில் பஞ்சப்பிரம ஸ்தானத்தைக்காட்டியும் அடையத்தக்கின ஸ்தானம் வேறில்லையென்றிருக்கிறது. அப்பஞ்சப் பிரமத்தினிடத்திருந்தே நிவிர்த் தியாதி கலைகள் ஸூக்ஷுமரூபிகளாய்த் தோன்றின. பிரபஞ்சமென்பது ஸ்தூலஸூக்ஷுமமேதங்களாயுள்ளது. அது ஐந்து பிரகாரமாகப்பிரிக்கப் பட்டுள்ளது. அவ்வைவர்தள் ஒன்று, புருஷன்சரோத்திரம் வாணி, சத்தம், ஆகாயம், ஆகிய இவ்வைவர்தாய் விரிந்து ஈசானப்பிரமத்தினுல் வியாபரிக் கப்பட்டுள்ளது. இன்னென்று, பிரகிருதி, * துவக்கு, பாணி, பரிசம், வாயு, தற்புருடப்பிரமத்தினுல் வியாபரிக்கப்பட்டுள்ளது. மற்றொன்று அகங்காரம் நேத்திரம் பாதம் ரூபம் அக்கினி அகோரப்பிரமத்தினுல் வியாபரிக்கப்பட்டுள்ளது. நான்காவது, புத்தி, நாக்கு, ¶ பாயு, ரசம், ஜலம் வாமதேவபிரமத்தினுல் வியாபரிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது மனம் மூக்கு ருசி பரிமளம் பூமி சத்தியோஜாதப்பிரமத்தினுல் வியாபரிக்கப் பட்டுள்ளது.

இவ்வகையினுல் பிரபஞ்சம் பஞ்சப்பிரமங்களாலேயே வியாபரிக் கப்பட்டுள்ளது. இயந்திரசொரூபத்தினுலேயே சிவவாசகமான பிரணவத்தை யுபதேசித்தேன். அச்சிவபெருமானுலே யுபதேசிக்கப்பட்டதாகப் பாவிக் கக்கடவாய். வாமதேவமுனிவனே! சதாசிவப்பிரமம் சமஷ்டிரூபமாயும் ஆகாசாதிபதியாயும் பிரபுவாயும் ஆதியந்த சூனியராயும் உள்ள சதா சிவத்தின் யஷ்டிரூபத்தைச் சொல்லுகின்றேன். மகேசுவரனும் உருத்திர னும் விஷ்ணுவும் பிரமனும் அச்சதாசிவத்தின் அம்சமாய்த் தோன்றுகின் றார்கள். அம்மகேசனே வாமபாகத்தில் மாயாசத்தியை யேற்றி அருவுரு வராய் விளங்குகின்றார். அம்மகேசரூபம் தான்குவகையன: அவ்வை ஈசன் விசுவேசன் பரமேசன் சர்வேசுவரனென்பதும். இதுவே திரோபாவ சக்கரமென்பதும். அத்திரோபாவசக்கரம் இருவகைத்து. அதில் உருத்திர மூர்த்தி பேதமென ஒன்றும் ஜீவசொரூபமென மற்றொன்று முள்ளன. ஜீவசொரூபிகள் போகங்களைக்கருமத்திற்கிடாயநுபவித்துப் புண்ணிய பாவாந்தத்தில் பரமேசரதுக்கிரகத்தால் ஜனன்மடைகின்றார்கள். இது காறும் சர்வேசுவராதி பேதங்களைக் கூறிவந்தேன். இதே திரோபாவ சக்கரமாயும் சாந்திகளாமபமாயும் மகேசுவரரெழுந்தருளியிருக்கப்பட்ட தாயும் உத்தமோத்தமமாயும் உள்ளது. இத்தானத்தை அமேகர் விரும்பு கின்றார்கள். இதுவே சாலோகக் கிரமமாய் முத்தி யடையவேண்டியது. மேற்கூறியபடியே அம்மகேசுவரரது ஆயிரத்திலோரம்சத்தில் உருத்திர மூர்த்தி அகோரமூர்த்தியும், தேஜஸ்தத்துவங்களுக்கதிபராயும், வாமபாகத் திற் கௌரிசத்தியுடனும், சர்வசம்மாரகாரகராயும், உதிப்பார். அவ்வுருத்

* தோல். ¶ ஈரை.

திரமூர்த்தியின் வியஷ்டிரூபம் நான்குவகை பேதங்களையுடையது. அது சிவன், அரன், மிருடன், பவன் எனப்படும். இதனைச் சம்மார சக்கர மென்பர், இச்சம்மார சக்கரம் மூவகைத்து. அவை நித்தியநைமித்திக மகாப் பிரளயமென்ப. சத்திபமென்பது ஜீவவொடுக்கமும், (சுஷுத்தி) நைமித்திகம், பிரமனொடுக்கமும், மகாப்பிரளம் பிரமன் பரப்பிரமர்தி லொடுங் குங்காலமுமாகும். இவ்வாறு வேதங்கள்கூறும். இவ்வகைய ஜன்மதுக் கத்தில் ஜீவராசிகள் உழன்று ஆயாசமடைந்து ஆன்மசொரூப மறியாதவர் களாயிருப்பர் அவர்கள் வருத்தத்தைப் போக்கடித்தற்கு அவரவர் கர்மாநு சாரமாக உருத்திரமூர்த்தியினைச் சங்காரஞ் செய்யப்படுகிறார்கள். அச்சங் காரம் மூவகையென்பர். இச்சங்காரகாலத்திலும் சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களில்லாது போகவில்லை. எவ்வாறெனில்? பவாதிதேவர்களுக் காலத்தினு மிருப்பதால் சூஷ்மரூபமாய்ச் சிருஷ்டிபஞ்சகம் நடக்கும். இது வித்தியாரூபமாயும், களாமயமாயும், நிராமயமாயும், உருத்திரனெழுந் தருளி யிருக்கப்பட்டதாயுமுள்ளது. இதனை அறியவிரும்பியோர் அவனை ஆராதித்து உருத்திரசாலோக்கியக் கிரமமாய்ச் சாயுச்சியபதவியைப்பெறு வார்கள். அவ்வுருத்திர மூர்த்தியின் ஆயிரத்தி லோரம்சராக விஷ்ணு உதிப்பர். அவர் வாமதேவ சக்கரத்தினின்றுந் தோன்றி ஜலதத்துவத் திற்கு நாயகனாகி இடதுபாகத்தில் ரமாசத்தியையேற்றி எல்லாவற்றை யும் இரகஷிக்கவல்லவராயும், மகாத்மாவாயும் விளங்குவர். அவருடைய வியஷ்டிரூபத்தைக் கிரமமாகச் சொல்கின்றேன். வாசுதேவன், அநிருத் தன் சங்கருஷணன் பிரத்தியும்னன் எனநான்குபெயரோடு கூடியிருப்பர். இதனை ஸ்திதி சக்காமென்பர். எல்லா உலகங்களுக்கும் பிரமனுதிசிருஷ்டி கருத்தர்களுக்கும்இரகூஷகர்கள். சரீரமெடுத்தவர்கள்செய்துள்ள புண்ணிய பாவங்களுக்குத் தகுந்தபலனைக் கொடுப்பவரிவரே ஆவர். இத்தகைய ரகூஷக்கிரமமிவருடையதாகும். இப்பரிபாலனத்திலும் பஞ்சகிருத்தியங்கள் சூகூஷுமரூபமாய் விளங்கும். இதற்கே ஸ்திதி சக்கரமென்றும், பிரமபிர திஷ்டா ஸ்தானமென்றும், பரமபதமென்றும் ஜனர்த்தனர் வசிக்குமிடமா யும் விஷ்ணுபக்தி யுள்ளவர்களடையுந் தானமாயும், விஷ்ணுபக்தர்கள் சாலோக்கியக் கிரமத்தினல் முத்தியடையத் தக்கினதாயுமுள்ளது. இவரது ஆயிரத்திலோரம்சராய் சத்தியோஜாத முகாத்மகராய்ப் பிருதிவியாதி தத் துவங்களுக்கு நாயகராய் வாமபாகத்தில் வாணிசகிதராய் ஜகத்திற்குப் பிரபுவாய், சிருஷ்டிகர்த்தாவாய்ப் பிதாமகன் தோன்றுவர். அவருக்கு ஹிரணியகருப்பன் விராட் புருஷன் காலன்என நால்வகை நாமங்களுண்டு. இதற்கும் சிருஷ்டி சக்கரமென்ன வோர்பெயருண்டு. இப்பிரமனிடத்திலி ருந்தே சுவாயம்புவாதி மநுக்களும் ஸனகாதிமுனிகளுந் தோன்றுவர். பிர கிருதியிலடங்கியிருக்கும்ஜீவராசிகளைக் கருமங்களுடன்பிணித்துப் புத்திரபௌ த்திர களத்திராதிகளுடன் சுகதுக்கங்களை யனுபவிக்கச்செய்வதேசிருஷ்டி. இச்சிருஷ்டிகாலத்திலும் பஞ்சகிருத்தியங்களுண்டு. இதுவேசிருஷ்டி சக் கரம். நிவர்த்தி களாமயம் பிதாமகர் எழுந்தருளியிருப்பதும் பிரமனை யது

சத்திப்போ டையத்தக்கதும் சாலோக்கியக் கிரமத்தால் முத்தியைப் பயக்கத்தக்கதுமாகவுள்ளது.

இவ்விதமான நான்கு சக்கரங்களுக்கும் பிரணவமே காரணமாக வுள்ளது. இதையேஜகத்சக்கரமென்றும்சிருஷ்டியாதிபஞ்சவட்டங்களோடு கூடியதென்றும் வேதங்கூறுகின்றது. இத்தச்சக்கரம் சம்புவின்சத்தியாற் சுற்றப்பட்டதாய்,சிருஷ்டியாதிபஞ்சகிருத்தியங்களோடு கூடியிருப்பதாற் பஞ்சாரமென்றும்; குயவன் சக்கரம் நில்லாது சுழல்வதுபோற் சிருஷ்டி திதிலயங்களின்றி நடப்பதாற் காலசக்கரமென்றுஞ் சொல்லப்படுகின்றது. சம்புவின் தேஜசினாலும்சத்தி காரியத்தினாலும் இச்சக்கரம் சுழன்றும், ஹிரண்ய ஜோதிலென்னும் பெயருடன் விளங்குகின்றது. அச்சோதியா னது ஜலத்தினாலும் அது அக்கினியினாலும் அது காற்றினாலும், அது ஆகா யத்தினாலும், அவ்வாகாயம் அகங்காராதிகளாலும், அவ்வகங்காரம் மகத் தாதியுமாகிய ஆவரணங்களால் வியாபரிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய சக் கரத்தினும் ஜலம் பதின்மடங்கு அதிகமாம். இம்முறையே ஏழு ஆவரணங் களும் பப்பத்து அதிகப்பட்டதாகவிருக்கும். இவ்வர்த்தத்தை 'ஹிரண்ய ஜோதி ஹிசலிலஸ்யமத்ய'னவேதங்கூறும். சர்வவியாபியான பரமேசனை ஜலநடுவில் இருப்பதாகஎவ்வாறு கொள்ளலாம்? எனின், ஸத்தியோஜாத மூர்த்தியின் அநேகாம்சத்தி லோரம்சம் ஹிரண்யகருப்பனை விருத்தலின் அவ்வாறிருக்கக்கூடும். இவ்வாறு அநுக்கிரகம் திரோபவம் சங்காரம் ஸ்திதி சிருஷ்டியாகிய பஞ்சகிருத்தியங்களைத் தமது சத்தியுடன்கூடி லீலை யாகச் சிவபெருமான் இடைவிடாதுஞ் செய்கிறார். வாமதேவ முனிவனே! அதிகமாகக் கூறுவதி லென்னபயன்? சாரத்மாத்திரஞ் சொல்லுகின் றேன். பஞ்சப்பிரம சொரூபியான சதாசிவமே சமஸ்த பிரபஞ்ச சொரூபி யென்றும், சர்வசத்தியுடன் கூடியவரென்று மறியக்கடவாய்.

நைமிசாரண்யவாசிகளே! ஆதிகுருவாகிய சுப்பிரமணியரா லுப தேசிக்கப்பட்ட வேதார்த்தத்தையறிந்து பரமேசரது வாக்கியங்களுட் டனக்குத் தெரியாதவற்றை வாமதேவமுனிவர் கேட்கின்றார். ஞானசத்தி யைத்தரித்த பரமாநுக்கிரகரான சுப்பிரமணியரே! தேவரீர் முகமாகிய தாமரையினின்றும் பெருகிய பிரணவமாகிய அமிர்தத்தையுண்டு திடமன முடையனாயினேன். சக்தேகமு மொழிந்தது. சதாசிவப்பிரமமுதல் திருமி வரையிலுள்ள ஜீவராசிகளின் ஸ்திதியை யறிந்துகொண்டேன். எல்லா ஸ்திரி புருடரூபமாய்க் காணப்படுகிற ஜகத்திற்கும் ஆதிகாரணம் ஸ்திரி ரூபமா? அல்லது புருடரூபமா? அல்லது நபும்சகமா? இம்மூவகையி லெது உத்தமமானது? இம்மூவகை உருவன்றி வேறேயதாகிலுமுண்டா? இதன்விஷயமாக அதிகமாக யோசனைசெய்தும் ஒன்றுந் தோன்றவில்லை. பண்டிதர்கள் சாஸ்திரங்களால் மோகிக்கப்பட்டுச் சிருஷ்டிகளே அதிக விதமாய்ச் சொல்லுகிறார்கள். அவ்வித ஜகத்தும் ஸ்திரிபுருஷரூபமான சதாசிவமும் ஒரேசொரூபமென்பதன் உண்மை எனக்குத் தோற்றவில்லை.

யாதலின், இவற்றின் சித்தாந்தத்தை விரித்துச்சொல்ல வேண்டுகிறேன் என்று கேட்டுக்கொண்ட வாமதேவரை நோக்கி, மலர்ந்தமுகமண்டல முடைய சுப்பிரமணியர் இரகசியார்த்தத்தை விவரிக்கின்றார். நீர் இப்போது கேட்ட விஷயத்தை நான் முன் என் தாயாரிடம் அமுதமுண்ணுகையில் அவளுக்குப் பரமேசனே உபதேசிக்கக் கேட்டிருக்கின்றேன். அதையே உனக்குச் சொல்கின்றேன். இச்சகத்திற்குக் காரணப்பொருளை அநேக விதமாகக்கூறி வாதிடுவர். உன்னுபதேசமடைந்த சிடருள் உனக்குச் சமானருகிலர். கபிலராதுண்டு பண்ணிய சாஸ்திரங்களில் அநேகர் உழல்கின்றனர். இன்னுஞ் சிலர், நந்தி, தஸிசி, கௌதமர் முதலியோரது சாபங்களாற் சிவநிந்தை புரிந்து அஞ்ஞானத்திலகப்பட்டவல முறுகின்றார்கள். அவருளநேகர் நிரீசுவரவாதிகள். அவர் வார்த்தையை யொருவரும் கேட்கலாகாது. கேவல அநுமான பிரமாணங்களாலும் பிரத்தியகூ பிரமாணங்களாலும், ஐந்தொழில்களோடு கூடிய பரமேசனில்லையென்று வாதிடுவர். பிரத்தியகூ பிரபஞ்சத்தைப் பொய்யன்றுகூறி அப்பிரத்தியகூமான பரமேசனெப்படி யிருக்கக்கூடும்? என்பார்கள். அத்தகையோர்கள் நாஸ்திகரும், பரலோகத்தை நம்பாதவரும், சிவபத்தி அடியார்பத்தி குருவிசுவாசம் முதலியன இல்லாதவரு மாவார்கள். அவர்களுடன் கூடதலுங்கொடிது; வசனிப்பதும் அணுகுவது மதனினும் கொடிது.

ஆகையால், பரமேசனுயும் பரமாத்மாவாயும் நிர்க்குணநிராமய நிரஞ்சன நிராகாரமாயுமுள்ள வங்கும் நிறைந்துகலக்காலத்திலு மழிவற்ற சின்மயாகந்த பிரமமான சதாசிவப்பிரமமே அமியத்தக்கது. அதுவே யுண்மையென்று பன்முறை வலக்கரத்தை யுயர்த்திக் கூறுகின்றேன். வாமதேவமுனிவனே! எல்லாப்பிரபஞ்சமும் ஸ்திரிபுருடரூபமாகவே காணப்படுகின்றன. அப்பிரபஞ்சத்தில் ஷட்கோசமயமான [தேகங்களே] பிண்டங்களே உண்டாகின்றன. ஸ்திரிபுருட சம்பந்தமில்லாமல் ஷட்கோசமயமான தேகம் ஒருகாலு முண்டாகாது. அப்பிண்டம் பிதாமாதாக்களின் சங்கமங்களாற் றோன்றுகின்றன. இவ்விதமாகவே எல்லாச்சரீரங்களும் பிதாவினம்சத்தால் தோல் மாமிசம் உதிரம் முதலியவையும், மாதாவினம்சத்தால் எலும்பு கரம்பு கொழுப்புமாக ஷட்கோசங்கள் கூடினதேகமாகும். ஆகையாலெப்போது மழிவற்ற பரமாத்மாவாய், சர்வாத்தும சொரூபியாயிருக்கும் பரமேசனிடத்து ஸ்திரிபுருடபாவ மிருப்பதாகப்பண்டிதர் கூறுவர். உபநிடதங்கள் அவ்வஸ்து சச்சிதானந்த சொரூபமென்றும் நிர்க்குணமென்றும், நாமரூபமற்றதென்றும் சொல்லுகின்றன. அவ்விதபிரமத்தில் ஸ்திரிபுருட ரூபமெப்படி கற்பிக்கலாமெனின், ஆதனைவிவரிக்கின்றேன். அசத்தை நிவர்த்திப்பதாற் சத்துண்டாகும். அஞ்ஞானத்தைப் போக்குவதால்ஞானமுண்டாகும். அதனையே சித்தெனப்படும். அச்சத்துச் சத்தமானது மூன்று இலிங்கத்திலும் விரவியிருப்பதா லதனைப்புருடரூப

மென்றும், சித்தென்பது பிரகாசமுண்டாக்குவதற்குக் காரணமாயிருத்தலால் ஸ்திரிரூபமென்றுங் கூறப்படும். அப்பிரகாசமயமான சித்தும் அழிவற்ற ஆனந்தமயமான சத்தும் ஒன்று சேர்வதால் உலகத்தோற்றத்திற்குக் காரணமாகின்றன. சத்துச்சத்தமான பிரமத்தையே புருடனென்றும் விவகரிப்பர். சித்துச்சத்தத்தையே ஸ்திரியென்பர். எப்போதும் பிரகாசமாயிருந்தாலும் நீபத்திற்கு நெய் வர்த்திமுதலியவற்றின் தோஷத்தால் பங்கம் நேர்வதுபோலச் சத்பதார்த்தத்தோடு சித்பதார்த்தங் கூடுவதாற் சகத்தோன்றும். அக்கினி எல்லாவற்றையும் பரிசுத்தஞ்செய்வதாக விருப்பினும், அது சுடுகாட்டிலிருக்கையில் தனித்து, ஓர் கருநிறமும், மற்றவர் அணுகக்கூடாததாகவு மிருப்பதுபோலப் பிரமம் எப்போதும் சுயம்பிரகாசமாகவிருந்தாலுஞ் சித்துசேர்வதால்அழியும் பிரபஞ்சமாகும். இவ்விதசத்தி ஜீவாத்மாவையடைந்து எல்லாச்சகத்தையும் பிரகாசப்படுத்தும். வல்லாக்காலத்திலும் சத்தி சம்பந்தமின்றி யொன்றுஞ் சலிக்காது. சத்தி சம்பந்தத்தினாலேயே உலகத்திற் பலவானென்றும், சத்தியவானென்றுஞ் சொல்லுகிறார்கள். வாமதேவரே! பரமாத்மாவிடத்திற் சிவதத்துவம் சத்திதத்துவமிரண்டு மிருக்கின்றன. இச் சிவ சத்திகளுடைய கலப்பால் உண்டாவதே ஆனந்தமென்று சொல்லப்படுகிறது. அதனையே சச்சிதானந்தமென்பதுமுண்டு. அவ்விதமானதைப்பற்றி முனிவர்களெல்லாரும் பாவத்தைப்போக்கி அழிவற்றுள்ள பரப்பிரமத்தினிடத்து அடக்கக்கூடாத மனதைச் சமாதியிலிருத்தி அகாரமயமாயும் ஆகியந்த சூனியமாயும் அகண்டமாயும் என்னற்றதாயுமிருக்கும். ஆனந்தத்தை அநுபவிக்கின்றார்கள். சிவசத்திகளையே சர்வாத்மாவென்றும் சத்தியுமென்றும் ஞாவமென்றும் நித்திய சுத்த சொரூபமென்றும் உபநிடதங்கூறும். அகண்டமாய் ஒன்றுமடங்குதலின்றி யெல்லாவற்றிற்கும் பொதுவாயுள்ளதாற் பிரமமென்னும்பெயரோடு பிரமணத்துவம் பிரகத்துவமிரண்டும் சத்துப்பதார்த்தத்திலேயே யடங்கியிருக்கின்றன. நித்தியசுத்தராயிருப்பதாற் பிரகத்தென்றும் சர்வவியாபியாயிருப்பதாற் பஞ்சப்பிரம சொரூபியென்றும், அப்பஞ்சப் பிரமத்தினிடத்தே இப்பிரபஞ்சமானது தோன்றப்படுகிறதென்றும், அதனுலேயே பிரமமென்றும் விவகரிக்கின்றார்கள். ஸகாரம் சிவாத்துமகமாயும், ஹகாரம் சத்தியாத்துமகமாயும் இருப்பதால் இதுவே மகாமந்திரமாகவும், யோகியர் உச்சரிக்கும் மூலமந்திரமாகவு மிருக்கின்றது. குருவின் உபதேசகாலத்திற் சத்தியாத்துமகமான மந்திரத்தை யுச்சரிக்கின்றார்கள். இதனையே பசுவான ஜீவன் உச்சரித்துச் சமுசாரசாகரத்தைத் தாண்டவேண்டும். சத்தியாத்துமகமான சிவஞானம்வந்தால் அவனே சிவசாரூபமடைகிறான். பிரமவாக்கியத்திற் சாஸ்திரஞானமே பிரமமென்று சுருதிகூறும். சாஸ்திரஞானமாவதே சைதன்னியம். அச்சைதன்னியமே ஆன்மசொரூபமென்று சைவாகமங்கள் கூறும். சமஸ்த ஜகத்திலு மிருக்குஞ் சைதன்னியம் எங்கும் ஞானசிரியாத்மகமாகவும் சுதந்திரமாகவு மிருக்கப்பட்ட சுபாவமே ஆன்மாவென்று சிவஞானசித்தியாரும் சொல்லும்.

இவ்விதமாகப் பரமாத்மகசொரூபத்தை இதுகாறும் விவரித்தேன். இனி ஜீவசொரூபத்தை விளக்குகின்றேன்.

சிவஸ்தத்திரத்தில் ஞானமென்ப தொன்றுண்டு. அந்தஞானம் ஜீவர்களுக்குக் கொஞ்சமாகக் கிடைத்திருக்கும். ஞானசத்தியெனவும் கிரியாசத்தியெனவும் பிரமத்தினிடத்து இரண்டுண்டு. அச்சத்திகள் சிருஷ்டிக்குக் காரணமாயிருக்கும். அச்சத்திகளையே சுவேதாசுவதர வுபநிடதம் பராசத்தி யெனக்கூறும். பரமேசனுக்கு ஞானம், கிரியை, இச்சையாகிய மூன்றுகண்களுண்டு. அக்கண்களே இந்திய துவாரகோசரமாகச் சிவன் மனத்திற்கியானித்துச் சத்தாய் அமிகிறன். ஆகையால் ஆன்மாவிடத்திருந்தே இச்சொரூபங்காணப்படும். வாமதேவரே! பிரபஞ்சசொரூபமான பிரணவார்த்தத்தைக் கூறுகின்றேன். "ஓம் இதி" என்கிற வாக்கியமே பிரமமெனத் தைத்ரீய வுபநிடதங்கூறும். பிரணவத்தினின்றே பிரபஞ்சந் தோன்றியதென்று அவ்வுபநிடதம் மேலுங்கூறும். அவ்வுபநிடதத்தின் தாற்பரியத்தைக்கூறின் சிவசத்தியின் சம்யோகமே பரமாத்மாவென்று நிச்சயமாகும். அப் பரமாத்மாவினிடமிருந்து ஆகாயமும் அதினின்று வாயுவும், அதினின்று அக்கினியும், அதினின்று ஜலமும் அதினின்று பிருதிவியுந் தோன்றும். மாயையே பிரகிருதியும், அப்பிரகிருதியுடன் கூடிய வரே மகேசுரருமெனச் சர்வாகமங்களுங்கூறும். அப்பரப்பிரமத்தை யதிஷ்டித்த சத்தியே பராசத்தியென்று விவகரிக்கின்றார்கள். அப்பராசத்தியினின்றும் இச்சத்தியுதித்தாள். அவளிடமிருந்து ஆனந்தசத்தியும், அவளிடமிருந்து இச்சாசத்தியும், அவளிடமிருந்து ஞானசத்தியும், அவளிடமிருந்து கிரியாசத்தியுமாகஐவித சத்திகளுதிப்பர். இவரிடமிருந்து நிவர்த்தியாதி கலைகளுதிக்கும். சித்து ஆனந்தமென்பவற்றினிடமிருந்து நாதவிந்துக்கள் தோன்றும். இச்சாசத்தியினின்று மகாரமும், ஞானசத்தியினின்று உகாரமும், கிரியாசத்தியினின்று ஹகாரமுமுண்டாயின. சிவரிடமிருந்து ஈசானரும், அவரிடமிருந்து தற்புருடரும், அவரிடமிருந்து அகோரரும், அவரினின்று வாமதேவரும், அவரினின்று சத்தியோசாதருந் தோன்றினர். பஞ்சப் பிரமங்களிடமிருந்தே அகாராதி * மாதிருகணங்களும், அவற்றினிடமிருந்து முப்பத்தெட்டுக் கலைகளுந்தோன்றும். ஈசானரிடமிருந்து சாந்தியதீதகலையும், தற்புருடரிடமிருந்து சாந்திகலையும், அகோரரிடமிருந்து வித்தியாகலையும், வாமதேவரிடமிருந்து பிரதிஷ்டாகலையும், சத்தியோசாதரிடமிருந்து நிவர்த்திகலையுந்தோன்றும். ஈசானரும் சிற்சத்தியுஞ்சேர்வதால் அறுக்கிரகாதி பஞ்சசிருஷ்டியங்களுதிக்கும். அவரிடமிருந்தே கலாவருணசொரூபமான பஞ்சபூதங்கள் உதிக்கும். அப்பஞ்சபூதங்களே ஈசசிற்சத்தி சொரூபமென்றே கூறுவர். அவற்றின் குணங்களாவன: ஆகாயம் சத்தத்தையே குணமாகவும், வாயு சத்த ஸ்பரிசங்களையே குணமாகவும், அக்கினி சத்தஸ்பரிசரூபங்களையே குணமாகவும், ஜலம் சத்த ஸ்பரிச ரூப

* மாதிருகணம் - தாயெழுத்துக்கள். இவை முதலெழுத்துக்கள்.

ரசங்களையே குணமாகவும், பிருதிவி சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களையே குணமாகவுமுடையன். இவ்விதமாகவே பிரபஞ்சம் காணப்படும். சர்வ சமஷ்டியாய் எங்கும் வியாபித்திருக்கும் விராட்டே பிரமாண்டமென்று கூறப்படும். பிருதிவி தத்துவமுதல் சிவதத்துவமுவரையிற் பரமேசுவரனிடத்திலே ஒடுங்கும். ஜீவரூபத்தில் விராட் ஒடுங்கும். மீண்டுஞ் சத்தியுடன் சிருஷ்டிக்கு ஆரம்பித்தலால், சத்திமூலமாக மேற்சொன்ன தத்துவங்களும் ஸ்தூலசூக்குமரூபமான பிரபஞ்சங்களுந்தோன்றும். பிரளயபரியந்தம் ஜீவித்திருக்கும் மகேசன் தனதிச்சையாற் சகத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டால் அதனையே சிவதத்துவமெனவும், இச்சாசத்தி தத்துவமெனவுங் கொள்ளப்படும். ஞானசத்தி கிரியாசத்திகளிரண்டுங்கூடினால், ஞானமதிகரித்திருந்தால் சதாசிவ தத்துவமென்றும், ஞானத்திலுங் கிரியை யதிகரித்திருந்தால் மகேசுவர தத்துவ மென்று மூவிதமாக. ஞானக் கிரியாசத்திக்குச் சமானமாயும், சுத்த வித்தியாத்துவமாயும், தன்னங்களாகிய பங்களின் அவயவங்களினின்றுந் தோன்றிய பூதங்களுக்குத் தனது சுத்தசொரூபத்தை மாயாதத்துவத்தால் மறைத்து, அம்மாயையினால் ஜகத்துண்டாவதை மற்றையோருக்குத் தெரிவிக்காது உண்மையாகிய தனது பரமசுவரியரூபத்தையும் அம்மாயையினாலேயே மறைத்தும் விளங்குபவரையே புருஷனென்று வேதங்கூறும். சமுசாரர்களாயிருக்கும் ஜீவர்கள் ஈசுவரனைச் சமுச்சாரியென்று அவரது மாயையினாலேயே மோகித்து அவரினும் ஜகத்துவேறென்றும் தாங்கள்வேறென்றும் ஆன்மாவேறென்றும், பிரமைபடைகிறார்கள். அவரது மாயையையகித்து சிவத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் பேதமில்லையென்று அறிந்தபின் ஒருகாலும் அஞ்ஞானமணுகுவதில்லை. இந்திரஜாலத்தைக் கண்டோர் பிரமையடைந்தும், காட்டுவோர் பிரமையடையாது மிருப்பார்போல, யோகிகள் பிரமையடையார். இவ்விதமாகக் குருவாற் சிவசொரூபத்தையறிந்தவன் குருவை ஞானசொரூபியாய்ப் பாவித்துத் தான் சிவசொரூபியாகின்றன். அச்சிவத்திற்குச் சர்வகர்த்துருசொரூபினி, சர்வஞ்ஞத்துவசொரூபினி, பூரணத்துவரூபினி, நித்தியத்துவசொரூபினி, வியாபசொரூபினியென ஐந்து சத்திகள் உளர். அவர்கள் சத்தியினாலேயே சூரியர்கள் பிரகாசிக்கின்றார்கள். கலை வித்தை இராகம் காலம் நியதி என்னும். தத்துவபஞ்சகரூபங்கள் கலையென்று சொல்லப்படும். அதிற்கலையென்பது கொஞ்சதத்துவமுடையர் சாத்தியமாயுள்ளது. வித்தை முன்னையதினுங் கொஞ்சமதிகமாக அறியச் சாதகமாயுள்ளது. இராகமென்பது, விஷயங்களில் ஆசையை யுண்டுபண்ணத்தக்கது. காலமென்பது பாவாபாவங்களையும், கணிதங்களையுங் காண்பிக்கும். நியதியென்பது இதைச்செய்யலாம் மற்றதைச் செய்யக்கூடாதென்று நிர்மாளத்தை விளைப்பது. இவ்வைவகுமே பரமேசனது சொரூபத்தை வெளிப்படுத்தாது மறைப்பதாற் பஞ்ச (சட்டை) கஞ்சுகமெனப் பெயரெய்தின எனக் கூறினர்.

இவ்வாறு கூறிவந்த சுப்பிரமணியரைநோக்கி வாமதேவர் நிவ
ர்த்திக்குக்கீழ் பிரகிருதியென்றும், அதற்குமேல் புருஷனென்றுந் தங்களால்
முன்கூறியுள்ளது. இப்போது மாயையாலது மறைக்கப்படுகிறதென்றும்
அம்மாயைக்குக் கீழிருக்கிறதென்றுந் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றீர்
கள். இதனை விளக்கியருள வேண்டுமெனக்கேட்க, முருகப்பெருமான்
கூறலாயினர். நான் அதை மீண்டும் உனக்குரைப்பேன். சர்வ கருத்
தாவாகிய பரமேசனே தன்னுடைய மாயையினால் தனது உருவத்தை
மறைக்கிறவர்போலக் காணப்படுகின்றார். அவர் கலாபஞ்சகங்களாற் பிரகி
ருதியின்பேரிலிருந்து புருஷரூபி அத்குணங்களை யநுபவிக்கின்றார். அவ
ரது சமஷ்டிரூபம் சத்துவாதிகுணவயப்பட்டது. அதற்குப்பிரகிருதி தத்து
வமென்றும்பெயருண்டு. அதனிடமிருந்தேசத்துவரசதமோகுணங்களுண்
டாகின்றன. அக்குணங்களினிடமாக வஸ்து நிச்சயஞ்செய்யும் புத்தியுண்
டாகும். அப்புத்தியினிட்மிருந்து அகங்காரந்தோன்றும். அவ்வகங்காரம்
மூவகைத்து. அவை ஜீவனசாதகமெனவும், வைகல்பனவும், கர்வம்பன
வும் பெயரெய்தும். அக்குணங்களா லுண்டான சத்துவாதிகள் மீண்டும்
மூவகையாகப்பிரிந்து, தேஜஸினின்றுந்தோன்றிய அகங்காரத்தினிடமாக
மனோபுத்தி யிந்திரியாதிகள் தோன்றும். மனம் சங்கற்ப விகற்பத்திற்
குள்ளாயது. புத்தியாலறியத்தக்க இந்திரியம் பத்துவகைத்து. அவை
சுரோத்திரம், தெர்க்கு, சகஷு, சிங்குவை, ஆக்ராணம், சத்தம், பரிசம்,
ரூபம், ரசம், கந்தம், ஆகியன புத்திக்குக்கோசரம். விகாரத்தினாலுண்
டான கருமேந்திரியங்கள் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ஆகும்.
இது சூக்குமரூபத்தால் விளங்கும். மேற்கூறிய இந்திரியங்களிலிருந்தே
ஆகாயம் வாயு அக்கினி ஜலம் பூமி கோசரமாகும் எனக் கூறிய சுப்பிர
மணியரை நோக்கி வாமதேவர் வினவலாயினர்.

வீதன்முகா! இதுகாறும் பூதசிருஷ்டி விதையைக்கேட் டறிந்
தேன். முன் பூதசிருஷ்டியைப்பற்றிக் கூறியதற்கும் இப்போது கலைகளி
னின்றுஞ் சிருஷ்டியாகின்றதென்று கூறியதற்கும் முரணடைகின்றதே.
இப்போதிதனை இவ்வாறு என்கூறவேண்டும்? அதனைவிளக்கியருளல்வேண்
டும். ஆன்மதத்துவம் மகாரத்தினின்றும், வித்தியாதத்துவம் உகாரத்தி
னின்றும், சிவதத்துவம் அகாரத்தினின்றும், விந்துநாதங்கள் சர்வதத்து
வங்களினின்றுந்தோன்றும். மேற்கூறிய ஐந்தெழுத்துகளினின்றே பிரம
விஷ்ணுவருத்ர மகேசுவர சதாசிவர் தோன்றுகிறார்களென்றும், அவரவர்
அம்சங்களின் ஒவ்வொரு பாகத்திலிருந்து மற்றையோர்தோன்றுகிறார்க
ளென்றுங் கூறியருளியது சந்தேகமாயிருத்தலினதையும் விளக்கியருள
வேண்டுகின்றேனெனக்கூற, அதற்கு அவ்வாறே விளக்கத்தொடங்கினர்.
வாமதேவமுனிவனே! பஞ்சபூதாத்மகமான பிரபஞ்சம் கலைகளினிடமாக
உண்டாகுமென்று சொல்வது: பிரபஞ்சம் ஸ்தூலரூக்குமங்களா லிரு
வகையாகும். அப்பஞ்சபூதங்கள் பசுபதியின் சரீரமாகும். சிவதத்துவ

முதல் பிருதிவி தத்துவபரியந்தம் சிவசக்தி சம்யோகத்தால் தத்துவந்
தோன்றுகையில் அவற்றினின்றே பிரபஞ்சம் தோன்றும். தத்துவங்க
ளின் பாகுபாடே கலைகளெனப்படும். அக்கலைகளின் பகுதியும் பஞ்ச
பூதங்களும் ஐக்கியமாவதால் ஸ்தூலசூக்குமபேதமாவதைப் பிரமஞானி
களறிகிறார்கள். தூல சூக்குமாத்துமகமான பிரபஞ்சத்திற் சந்திரசூரியாதி
நவக்கிரகங்களும் அசுவினியாதி நக்ஷத்திரங்களும் பிரமவிஷ்ணு மகேசாதி
தேவர்களும், இந்திராதி அஷ்டதிக்குப் பாலகர்களும், மற்றைத்தேவ
கணங்களும், பிதுர்தேவதைகளும் அசுரர்களும், இராக்ஷத மானுடர்களும்,
பசு பக்ஷி புழு பாம்புமுதலிய பேதங்களுள்ள சங்கமபிராணிகளும், விரு
க்ஷம், கொடிபுதர், பருவதம், ஓஷதிகள், அஷ்டகுலாசலங்கள், கங்காதி
மகாநதிகள், சத்தசாகரங்கள் மற்றும் புலப்படுமெல்லாப்பொருள்களும்
உற்பத்தியாகின்றன. ஸ்திரிபுருஷ ரூபமான சிவசக்திகளின் சம்யோகத்
தினால் ஏற்பட்டுவிளங்கும் ஞானியருட் சிரேட்டனை நின்போன்ற ஞானி
கள், பிரபஞ்சமே பிரமமும் அப்பிரமமே பிரபஞ்சமுமாகவிருப்பதால், அவ்
வாறே உபாசிக்கக்கடவர். ஸர்வோவைருத்ரஃ என்னும் தைத்தீயசுருதி
இவ்வாறுகூறும். வாமதேவரே! இதனால் பிரபஞ்சாத்மகமாகவே சதா
சிவர் விளங்குகின்றார். முப்பத்தெட்டுக் கலைகளின் கிரமங்களைச் சந்தேக
மறத் தெரிந்துகொண்டவனே ஸதாசிவோஹம் என்னும் ஞானத்துடன்
பிரபஞ்சதேவதா யந்திர மந்திராத்மா என்னும் ஞானமும் உடையவனு
வான். அவனேகுரு. இவ்வகைய குருவின் கிருபையால் எல்லாப் பந்தங்
களு மறுபடும். அக்குருவின் பாதசமாசிரயத்தை விரும்பி அவரிடத்தில் பணி
விடைசெய்து அவரையே சிவமாகப்பாவித்துக் குருகுலவாசஞ்செய்தால்
தானும் சிவசொரூப முடையவனாகிறான். சுணபேதங்களா லறியக்கூடிய
எல்லாவஸ்துக்களும் பிரணவசொரூபமாகும்.

வாமதேவரே! இராகத்துவேஷாதிகளை யொழிக்க வல்லதாயும்
வேதங்களுட் சாரமுள்ளதாயும் சிவஞானப்பயிரைத் தழைக்கச்செய்வதா
யும், உபநிடதார்த்தமயமாயும், இரகசியங்களெல்லாவற்றிற்கும் இரகசிய
மாயும், எல்லாப்பிரபஞ்ச சொரூபியாயுமுள்ள பஞ்சப்பிரமத்தஞ் சொல்
லியவாறே யுனக்குச் சொன்னேன். இந்த ஷட்விதார்த்த ஞானப்பொரு
ளில் நம்பிக்கையையாது மதகுருவங்கொண்டு இராகத்துவேஷ யுக்தனாய்
தேவ ராக்ஷத மானுடயக்ஷ கந்தருவ சித்த கின்னராதியரில் யாராவது பிக
தென்று சந்தேகிப்பாராகில் அத்துராத்மாக்களின் சிரங்களைச்சத்துருக்களை
யதஞ்செய்யுங் காலாக்கினிபோன்ற எனது வேலாயுதத்தாற் துணித்து
விடுவேன். சிவாத்துவித வித்துக்களுட் சிறப்புடையவனாகிய உனக்கு இவ்
வர்த்தத்தை யுபதேசித்தேன். இதைப் பானம் பண்ணின உன்னுடைய
கடைக்கண்பார்வையால்எப்படிப்பட்டஅற்பனனபசுவும் பசுபதியாவான்,
உன்னைவணங்கி வழிபடுவோர்களுக் கறுக்கிரசித்த லோகாநுக்கிரகத்தி
னிமித்தமாகவே இவ்வரியபொருளை உபதேசஞ்செய்துள்ளேன். நீ அழி

யாத சிவபதவியை யடையக்கடவாய்—என் அவுக்கிரகஞ் செய்தனர். அதனைக்கேட்ட வாமதேவமுனிவர் சுப்பிரமணியரின் பாதமாகிய தாமரையில் வண்டுகள் எவ்வாறு படிந்துகிடக்குமோ அவ்வாறு பன்முறை பணிந்து ஆனந்தத்தை யடையப்பெற்றுக் களித்திருந்தார்.

ஷட்விதார்த்தமுரைத்தது

முற்றிற்று.

பதிமூன்றாவது

ஆசாரியாபிஷேகமுரைத்த அத்தியாயம்.

வாமதேவமுனிவர் சுப்பிரமணியரைநோக்கி, அநுகூலச் செல்வனே! ஷண்முகா! அமுதவாரிதியே! மேற்கூறிய சந்நியாசிகளுக்குக் குருத்துவமெவ்வாறு கிடைக்கும்? எவ்விதகுருவையடைந்த ஜீவராசிகளுக்குப் போகமோகூடுங்கள் சீக்கிரத்திற்கிட்டும்? குருத்துவம் வாழையடிவாழையாகப் பரம்பரையாக வந்தால்தான் உபதேசஞ்செய்யயோக்கியதையுண்டென்று மிருத்தலினாலும், சந்நியாசிகள் சௌளஞ்செய்துகொள்ளவேண்டியவிதி, அவர்கள் ஸ்நானஞ் செய்யவேண்டியமுறை முதலியவற்றையும் விளக்கிக் கூறவேண்டுமென்று கேட்க, சுப்பிரமணியர் சொல்லலாயினர். வாமதேவரே! ஆசாரியத்தன்மைச் சித்திப்பதற்குச் சாதனமாயுள்ள யோக பட்டாபிஷேகத்தைப்பற்றி முதலிற் கூறுகின்றேன். வைசாகம், சிராவணம், மாகம், ஆசுவயுஜம், கார்த்திகம் மார்க்கசிரிஷம் ஆகிய இம்மாதங்களொன்றனுள் சுபதினத்திற் பஞ்சமி பூர்ணை ஆகிய இவ்விருதிதிகளிலொன்றில் உதயத்திலெழுந்து காலைக்கடன்முடித்து, குருவணுஜ்ஞைபெற்று, ஒருமனதாக ஸ்நானஞ்செய்து, நல்ல வஸ்திரங்களை யணிந்துவைத்து இரண்டுபுரியாகச் சூத்திரந்தரித்து, சுத்தகௌபீனந்தரித்துக் கைகாலலம்பி, இருமுறை ஆசமனியஞ்செய்து, ஸ்தியோஜாதாதி மந்திரத்தால் உத்தூளன அவருண்டன திரிபுண்டரங்களாக விபூதியை யணிந்துகுருவின் கையைப்பற்றிக் கொண்டு இறக்குமுகமாக அலங்காரமுற்ற மண்டபத்திற் குருவாற் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆசனத்திலிருந்து, ஆசாரியராற் சங்கற்பித்தம் புரோக்ஷிக்கப்பெற்று முற்கூறியுள்ளபடி மண்டலத்தையும் யந்திரத்தையும் ஆவரணதேவர்களையும் பிரணவத்தால் ஆவாஹனஞ்செய்து புஷ்பாதிகளாலருச்சித்து அஸ்திரமந்திரத்தால்முடி, கவசமந்திரத்தாலாவரணஞ்செய்து, தேது சங்கம் முதலிய முத்திரைகளைக்காட்டி, தூபதீபங்கொடுத்து, ஐந்துவிதபுஷ்பம் ஐவகைப்பத்திரங்களாற் பூசித்து மணமுள்ள மலர்களாலலங்கரித்து நல்ல பழவகைகளால் நிவேதித்து, நீலம், பதுமராகம், பவளம், தங்கம், கோமேதகம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து, ஆகாரசத்திமுதல் முன்சொன்னபடி மூலமந்திரங்களால் முறைப்படி அருச்சித்து, மண்டபத்தின் ஈசானதிக்கிற் சதுரமாக மண்டலமொன்

மியற்றி அதன்மேல் திவ்யாசனங்கற்பித்து அவ்விடத்தில் தானிருந்து, முன்னே கும்பத்திலாவாகனஞ்செய்துள்ள ஜலத்தை மந்திரபூர்வமாகக் கொண்டுவந்து பிரதக்ஷிணமாக அபிஷேகஞ் செய்யவேண்டியது. இதனிடையே ஏழு ஆவர்த்தி பிரணவமந்திரத்தையும், பஞ்சப்பிரம மந்திரத்தையுஞ் செபித்து, சங்கஜலத்தாலபிஷேகஞ்செய்து தூபதீபங்கொண்டு, சுத்தவஸ்திரத்தாற் துடைத்து, தோய்த்துள்ள சூத்திரம் கௌபீனம் வஸ்திரம் அணிந்து கைகாலலம்பி, ஆசாரியர் விபூதியைக் கையிலெடுத்துச் சீடன் கைகளைப் பிடித்துக்கொண்டு மண்டபமத்தியிலுள்ள ஆசனத்திற் கிழக்குமுகமாக உட்காருவித்து, தான் வடக்குமுகமாக உட்கார்ந்து தத்துவஞானத்தில் அவாவுள்ள சீடனே! நிருமலனுகு—என்றனுக்கிரகித்து, ஆசாரியர் தான் பரிபூர்ணனுகவும் சிவோக்மடைந்தவனுகவும் இரண்டுநாழிகை கண்மூடியிருந்து, பின்னர் கண்விழித்துச் சாவதானமனதுடனும், பூரணகடாக்ஷத்துடனும் சீடனை நோக்கித் தனது விபூதிபூசிய கையை யவனது சிரத்தினிருத்தி வலதுகாதில் "ஹம்ஸ: சிவோஹம்" என்னுமிவ்வகாரங்களை யுபதேசிக்கவேண்டியது. அவற்றுள்ள மூலகூடமான ஓகாரம் சத்தியாத்மகமும், ஸகாரம்சிவாத்மகமுமாம். சர்வாத்மகராயும் சம்புவாயும் ஹம்ஸபதவாச்சியராயும் பஞ்சப்பிரமசொரூபியாயும் இருக்கப்பட்டவன் தானே எனப் பாவிக்கக்கடவாய். பிரஜ்ஞானம்பிரமா-சர்வம் கல்விதம்பிரமா-லோஹமஸ்மி-பிரஹ்மாஹமஸ்மி-பிராணோஹமஸ்மி-ஹிரண்யபாஹவே-ஸப்பிரமவஸிவ - இத்யாதிவாக்கியங்களை யுபதேசித்து, தன்னையே சிவமாகப் பாவிக்கத்தக்க மந்திரங்களை அவன் மனதில் திணித்து, பஸ்மம் பூசியுள்ள கையிலுற் சங்கதீர்த்தத்தையெடுத்து அஸ்திரமந்திரத்தினுல் ஓர் தலத்தைச் சுத்திசெய்து, அவ்விடத்திலேயே சங்கத்தை வைத்துப் பிரணவமந்திரத்தாலும், கந்தபுஷ்பாதிகளாலலங்கரித்து, பரிசுத்தஞ்செய்து, பிரணவத்தினுற் சங்கத்திலே சலத்தை நிரப்பி, பிரணவத்தை யெழுபதாவ்ருத்திகளுடன் ஜபித்து, அந்தச் சங்கதீர்த்தத்தை யெடுத்துக்கொண்டு, காணப்படும் உலகத்தை யொழித்து நித்தியப்பொருளாகிய சிவபெருமானையும் ஞானங் கைகூடுமாக என்று ஆசீர்வதித்து, அவன்பேரிற் புரோக்ஷித்தலவேண்டியது. சிஷ்யனிடமே சிவசொரூபமாகப் பாவித்து சிஷ்யபீடத்தை யதோத்தமாயருச்சித்து, அப்பீடத்திற் சிவாசனத்தை நியமித்து, அவனுடைய பாதமுதற் சிரம்வரையில் ஈசானாதி பஞ்சப்பிரமமாய் ஆவாஹனஞ்செய்து, பிரணவத்தினின்றுண்டான முப்பத்தெட்டுக்கலைகளையும் அங்கங்களில் நியாசஞ்செய்து, அவனுடைய சிரசில் சிவபெருமானை யாவாஹனஞ்செய்து, தேகத்திற் சங்கு தேனு முதலிய முத்திரைகளைக்காட்டி, வஸ்திரசோபசாரங்களோடு அருச்சித்து, பாயசான்னத்தைப் பிரணவமந்திரத்தால் நிவேதித்து, கைகால்களைச் சுத்தஞ்செய்வித்து ஆசமனியஞ் செய்யச்செய்து தூபதீபங்காட்டி, பவாதிபூமண்டலாருச்சித்து, வேதாங்க சம்பன்னர்களை அவ்விடத்திற்கு வரவழைத்து அவர்களுடன் குரு "ப்ரஹ்மணஸ்பத்னியம்" ப்ரஹ்ஸ்வை "வாரு

ணினீ" "யோதேவானும்" முதலாக தஸ்யப்ரஷ்ருதினீனஸ் யய: பரஸ் ஸமாஹஸ்வர: பரியர்நம் ஜபித்து, செங்கழுநீர்ப் புட்பங்களாற் புனைந்த மாலையைக்கழுத்துமுதல்பாதம்வரையில்தொங்கும்படி சீடனுக்குச்சூட்டி, குல்க்குலியை அவனது நெற்றியிற்றரிக்கவேண்டும். குடை, பாதுகை, சிவமந்திரங்களோ யபிடசத்தி, தான் இச்சீடனுக்கெவ்வாறு குருவானரோ அவ்வாறே இச்சீடன் பிறருக்குக் குருவாயிருக்கத் தகுந்த யோக்கியதை முதலியவற்றைக் கொடுக்கவேண்டியது. இதன்மேல் சிவரூபியான சீட னைப்பார்த்து, சீடனே! இந்த நிமிஷமுதல் எப்போதும் சமாதியிற்றவ றுமலிருக்கக்கடவாய் என்று தானும் அச்சிவரூபியான சீடனுக்கு நமஸ் காரம் புரியவேண்டியது. அவ்விடத்துள்ளவர்கள் சந்நியாசமடைந்ததால் குருவான சீடனை முறைப்படி நமஸ்கரிக்கவேண்டியது. இவைமுடிந்த பின், சீடன் ஆசனத்திலிருந்தெழுந்து தனது குருவையும் அவரது குரு வையும் குருவின் சிடர்களையும் கிரமப்படியே நமஸ்கரிக்கவேண்டியது. இவ்வாறுசெய்யுஞ் சீடனைக் குரு பிரணவத்தாலதுக்கிரகித்து, இதுமுதல் லோகாநுக்ரஹ நிமித்தமாக ஒரு இரவிற்கதிகமாக ஒரிடத்திற்றங்காது, சர்வலோகங்களினுஞ் சஞ்சரிக்கக்கடவாய். யாராகினும் உன்னிடஞ் சிவ ஞானம் போதித்துக்கொள்ள வந்தாலவர்களை ஒருவருடகாலஞ் சோதனை செய்து பின் உபதேசிக்கக்கடவாய். இராகாதிதோஷங்களை யொழித்துக் கோபத்தை நீக்கி ஞான கருமேந்திரியங்களை யடக்கிச் சற்புருஷர்களான சிவஞானிகளின் கூட்டறவோடு எப்போதுஞ் சிவஞானத்திற் பதிந்திருக் கக்கடவாய். சிவபத்தியில்லாதவர்களுடன் ஒருபோதுங் கூடவேண்டாம். உன் பிராணனுக் கவஸ்தைவந்தாலுஞ் சிவபூஜையின்றி ஏதையும் புசிக்க வேண்டாம். எவ்வித ஆபத்து சங்கடம் வந்தபோதுங் குருபத்தியிற்றவற வேண்டாம். எப்போதும் சிவாநந்தத்திலேயே ஆழ்ந்திருப்பாயாக வென் றுபதேசிக்கவேண்டியது.

வாமதேவரே! இதுகாறும் யோகபட்டாபிஷேக முறைமையைக் கூறிவந்தேன். யதிகளுக்குப் பரிசுத்தத்தை யுண்டாக்கத்தக்க சௌனக் கிரம ஸ்நானக்கிரமங்களை யினிக்கூறுகின்றேன். சீடன் முதனிற் குருவை நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்று, சிரஸ்நானஞ்செய்து ஆசமனீயஞ் செய்து, வஸ்திரந்தரித்து, சௌளத்திற்குட்கார்ந்து, பரிசுத்த நீரால் மிருத் திகையைக்கொண்டு கூவரகன் கைகளையும் கத்தியையும் பரிசுத்தஞ்செய் வித்து, சிவம் சிவம் என்று தானுச்சரித்துத் தனது இருநேத்திரங்களையும் இரண்டு கட்டைவிரலால் அஸ்தமந்திரத்தால் மூடி, பிரணவத்தை ஜபித்து அம்மந்திரத்தாலேயே கண்ணைத்திறந்து பன்னிருமுறை அம்மந்திரத்தி லேற் கத்தியைப் புரோக்ஷணஞ்செய்து, பிரணவத்தை உச்சரித்துத் தனது சிரத்தின் வலப்பக்கத்து மயிரைக்களைவித்துப்பூமியில் இலையிட்டு அதன்மேல் அம்மயிரைவைப்பிக்கவேண்டியது. இவையான பின்பு பிரதக்ஷிணக்கிரமமாகச் சிரத்தின் மயிரைக்களைந்து முகத்திலுள்ள

தற்கும் அவ்வாறே செய்வித்து, கால் கை நகங்களைக்களைவித்து, எழுந்து வில்வம், அரசு, துளசி இவற்றினென்னின்அடியில்மண்ணெடுத்துக்கொண்டு மகாநதிசென்று கொப்பூழிற்குக்கீழுள்ள ஜலத்திலிருந்து பன்னிருமுறை ஸ்நானஞ்செய்து பரிசுத்த தானத்திலிருந்து தான் கொணர்ந்த மண்ணை மூன்றுகப்பிரித்து, அதனை மும்மூன்றுகப்பிரித்து ஆஸ்திர மந்திரத்தாற் புரோக்ஷணஞ்செய்து,அப்பிரிவின் ஒருபாகத்தை எடுத்துக் கைகளைப் பன் னிருமுறை சுத்தஞ்செய்யவேண்டியது. மற்றொருபாகத்தை எடுத்துப் பாதங்களினும், மூற்றைப்பாகத்தைச் சிரம் முதலிய அவயவங்களினுங் கிரமப்படி பூசி ஜலத்திலிறங்கிப் பன்னிருமுறை சிரசிற்றடவிப் பன்முறை மூழ்கவேண்டியது. ஒவ்வொரு ஸ்நானத்திற்குங் கரையேறிப் பதினறு முறை வாய் கொப்புளித்து, பதினறுமுறை பிரணவத்தாலாசமனீயஞ் செய்து யதாவிதியாகப் பிராணயாமத்தை எட்டுமுறைசெய்து, வேறே மண்ணையெடுத்து முன்சொன்ன கிரமப்படி பிரித்து ஒருபாகத்தாற் குறி களையும் பாதங்களையும், மற்றப்பாகங்களால் வேறே இடங்களையும் பரிசுத் தஞ்செய்து,இருமுறை ஆசமனீயஞ்செய்து,பதினறு பிரணவ சத்தத்தாற் பிராணயாமஞ்செய்து ஸ்நானஞ்செய்து, சந்நியாசி ஆச்சிரமத்திற்காகச் சொல்லியுள்ள முறைப்படி, மண்ணைப்பூசி ஸ்நானஞ்செய்து தண்டத்தை யதாவிதியாகப் பரிசுத்தஞ்செய்து பூமியில்வைத்து ஆசாரியரையும் சிவ பிராணையும் ஸ்மரித்து, குரியனைப்பார்த்து மூன்றுமுறை பணிந்து பஞ் சாங்கங்களால் வந்தனஞ்செய்து, ஜலத்திலிறங்கி நடுவிலிருந்து தான் முன்பிரித்துள்ள மண்ணுள் மிருந்திருந்தவற்றைப்பூசி மூன்றுமுறை பிரணவத்தாலீஸ்நானஞ்செய்து சிவபாதத்தைத் தியானித்து, சங்கமுத் திரையை ஜலத்திலெழுதிப் பன்னிருமுறை ஸ்நானஞ்செய்து கரையேறி வேறே மண்ணுள் கைகாலலம்பி இருமுறை ஆசமனீயஞ்செய்து மறுபடி ஆசமனீயஞ்செய்து விரஜாபஸ்மத்தை யெடுத்துத் தேகமுழுதும் உத்தூள னக்கிரமமாய்த் திரிபுண்டரந்தரித்து, மத்தியானகிரியைமுடித்துக் குருவை யும் புண்ணியதீர்த்தத்தையும் நமஸ்கரித்து, முன்சொன்ன பஞ்சாவர்ண க்ரமமான கைலாசப்பிரஸ்தரமென்னு மண்டலத்திற் பரமேசனை முறைப் படி யருச்சித்துக் குருவை ஸ்மரித்து, சுத்தமான வீட்டிற்குச்சென்று பிச்சையெடுத்துக் கிடைத்ததைப் புசிக்கக்கடவன்.

ஆசாரியாபிஷேகமுறைத்தது

முற்றிற்று.

பன்னிரண்டாவது

தக்ஷனகன விதியுரைத்த அத்தியாயம்.

வாமதேவரே!கூவர ஸ்நானவிதிகளை முறைப்படி கூறியுள்ளேன். இன்னும் கேட்கவேண்டிய துளவாயின் கேட்டறிந்து கொள்வாயாக

வென்று சுப்பிரமணியர் வினவ, அதனைக்கேட்ட வர்மதேவர், முத்தர்களாகிய சந்நியாசிகளைத்தகனஞ்செய்யவேண்டுமென்றும், அவர்களைச்சமாதி வைக்கவேண்டுமென்றும், அவர்களிலும் முத்தர்களாய்ப் பிரமத்தை யுபாசித்துச் சர்வாத்மக சொரூபனை பரமேசனைச் சிவலோகம்பாவனேசுவரியும் ஞானிகளாகி, உபாசனை கிரமத்தால் தேகமாகிய கூட்டைவிட்டு முத்தியடைவோர்களது தேகத்தைக் கனனஞ்செய்யுங்கிரமத்தையும், அவரவரடையும் புண்ணியலோகப் பிராப்தி விசேஷங்களையும் விளக்கமாகச் சொல்லவேண்டுமென்று கேட்க, அவ்வாறே விளக்கத்தொடங்கினர். வாமதேவரே! சிவரகசியங்களுள் முக்கியமாகிய இவ்விரகசியத்தைப் பூர்வம் ஜகத்குருவாயும், எனது பிதாவாயும் பிரகஸ்பதியாயுமுள்ளவர், சிவயோகிகளுட் சிரேட்டரான ரிபுயோகிக் குபதேசித்தவாறே உனக்குச்சொல்கின்றேன். இது மூற்றையோருக்குரைக்கக்கூடாது. சந்நியாசாச்சிரமத்தையடைந்தயதியானபுருஷன் இடைவிடாது சமாதியிலிருந்து சிவாகமம்பாவனையால் தேகத்தைத்தரித்திருப்பின் பரிபூரணனுவான். அவனே ஜீவன்முத்தன், சிவசொரூபியாவான். சந்நியாசாச்சிரமத்தை யடைந்திருந்தும் சித்தசுவாதீனமின்றிச் சமதமாதிகுணங்களைத்தவறவிட்டுச் சமாதிகைகூடாதிருந்தால், ஞாதுரு ஞான ஞேய விருவருமாகிய மூன்று பதார்த்தங்களையும், சமாதியையையும் குருமுகமாகத்தெரிந்து யோகாப்பியாசஞ்செய்து எப்போதும் பிரணவத்தை ஜபஞ்செய்து அத்துவிதானந்தத்தை அநுபவிக்கவேண்டுமென்னு மவர்வுடனே தேகத்தைத் தியாகஞ்செய்வானுயின், சதாசிவத்தினுக்கிரகத்தால் மூர்த்தியெம்பெருமான் மூலமாக அதிவாஹ்யர் என்னும் அக்கினிக்கதிபன், பகற்காலத்திற் கதிபன், சுக்கிலபக்ஷத்திற் கதிபன், உத்தராயணத்திற்கதிபன், தேஜஸ்திற்கதிபனுகிய ஜீவர் உத்தராயணகாலத்திற் பிராணன்விடுஞ்சமையத்தில் தோன்றி ஜோதிர்மார்க்கமாய்ப் புண்ணியலோர்களைச் சேர்ப்பார்கள். அன்றியும் தக்ஷிணயனத்திற் பிராணனைவிடுவோர்களை இருளுக்கதிபன், இரவிற்கதிபன், கிருஷ்ணபக்ஷத்திற் கதிபன், புகைக்கதிபன் ஆகியஜீவர் தூமாதிமார்க்கமாய்ப் புண்ணியலோகத்திற் சேர்த்துப் புண்ணியமுடிவில் மானுடதேகமெடுக்க அனுப்புவார்கள். மூர்க்கரிய் உத்தராயண அபிமானதேவர்கள் பூலோகத்திலிருந்து ஜீவர்களைத் திவ்வியதேகத்துடன் ஜோதிர்மார்க்கமாய்ப் பரத்திற் பரமாயும், அஞ்ஞானத்திற்கதிதமாயும் இருளிற்கு ஒளியாயும் வாசாமகோசரமாயும்உள்ள சதாசிவ பதத்திற் சேர்த்துத் தாங்கள் அச்சதாசிவத்தை நமஸ்கரித்து ஒருபுறத்தில் நிற்பார்கள். அங்குப் பாதாரவிந்தத்தையடைந்த ஜீவர்களைச் சர்வலோகேசுரனை சதாசிவர் தமதுபூரணகடாட்சத்தினுல்நோக்கிரசித்து, விசுத்தனுயிருந்தால்மகாமந்திரோபதேசத்தையுபதேசஞ்செய்து, நிரிநேத்திரம், சதுர்புஜம், சந்திரகலை, கபாலம் முதலியவைதரித்தவராகிய சிவகணத்தில் லொருவனுக விருக்க அபிஷேகித்து, எங்குந்தடையின்றிச் செல்லத்தக்க விமானமுங்கொடுத்து, சாரூபபதவியை யடையச்செய்கிறார். இவ்வாறுதன்னிடங் கொணர்ந்தவர்கள் போகத்திற் விச்சையுள்ளவர்களாயிருப்பின், அதை யநுபவிக்க உருத்திரகணிகைகள், நிருத்தகீத மிருதங்க தொனிகள் கோஷித்திருக்கவும், வஸ்திரம், சந்தனம், ஆபரணம், அமுதகுடங்கள், மனோரம்மியமான ஆசனம்பொருந்திக் கோடிசூரியப்பிரகாசமாயச் சந்திரகலையுடன் மற்றும் லக்ஷணங்கள் பொருந்திய விமானத்தைக்கொடுத்து அநுக்கிரகஞ்செய்து, விரக்திவரும்வரையிற் போகத்தையநுபவித்துப் போகாந்தத்தில், அவர்களது அஞ்ஞானமொழியும்படி, ஏழு சாரமாகிய காட்டையொழிக்க, அக்கினிபோன்றிருப்பதாகிய சத்திமந்திரத்தையுபதேசித்துத் தமது அநுக்கிரகத்தினுற்சூரியனைப்போற் பிரகாசிக்குந்தன்மையையும், அஷ்டமகாசித்திகளையும், மூப்பதெட்டுக் கலைகளையும், தொண்ணூற்றாறு தத்துவங்களையும், பிரமப்பிரளயத்தினும் அழியாத முத்தியையுங் கொடுக்கின்றார். இந்தப்பதமே யாவராலு மடையத் தக்கது: எல்லாச்சம்பத்தையு மளிக்கத்தக்கது. (இது முத்திகண்டாபதமென்னும் பெயருடன் இருப்பதென்று வேதாந்தங்களால் நிச்சயமாகும்.) பிராணனைவிட இச்சையுள்ள சந்நியாசியின் அந்தத்தில், சந்நியாசக்கிரமங்களைச் சந்தேகமின்றியநுட்டித்தமற்றைச் சந்நியாசிகளும், வேதவேதாங்கசம்பன்னர்களான பிராமணர்களுஞ் சுற்றமிருந்து, பிரணவத்தை ஜபித்து, உபநிஷதவாக்கியங்களை யுபதேசித்து ஸ்ரவணஞ்செய்து, பிராணவாயு பிரியும்பரியந்தம் இடைவிடாது ஓங்காரசிந்தத்துடன் இருக்கவேண்டும். இவ்விதமாகச் சந்நியாசிகள் பிராணனை விடும்பரியந்தம் செய்யவேண்டிய நியமனமேயன்றி அதன் பின்னர் அவர்களுக்குத் தேகத்தைப்பற்றிய சம்பந்தமொன்றுமில்லை. அப்படி அவர்களுக்குரிய கருமங்கள் தேகங்களைத் தகனனஞ்செய்வதுங்கள் முறைப்படி செய்யாமையால் தீர்க்கநியமொன்று மனுருவதில்லை. ஏனெனில்: எல்லாக்கருமங்களையுமொழித்துப் பஞ்சபூதாத்மகமான சரீரத்தை மறந்து, இவ்விடத்திலேயே முத்தர்களான சந்நியாசிகள், சரீரம் பிராணவாயுக்களுடன் கூடியிருக்குங் காலத்திலும் அதற்குண்டாகுங் கஷ்டகரங்களையும் வெயில் மழைகளையுஞ் சகித்தவர்களாதலாற் பிராணவாயுக்கள் விலகியபின்பு தூர்க்கதியொன்றும் அடையமாட்டார்கள்.

அப்படி அவர்களுக்குச் சமஸ்காராதிகளைச் செய்யாததால் ஆங்குள்ள அரசர்முதலினோருக்கு கோமக்குறைவுண்டாகும். அதற்தோஷநிவாரணமாம்பொருட்டு "நஇரிண்யாய" என்று தொடங்கி "நஆயிவீர்கேந்திய:" என்னும் வரையிலுள்ள உருத்திர வாக்கியங்களைப் பிரணவத்துடன் கூட்டி ஜபஞ்செய்துகொண்டே பரிசுத்தமான நதிக்கரை முதலியதானங்களிற் பள்ளம்வெட்டி, புத்திரரிருந்தால் அவர்களாற் கிரமமாகச் சமஸ்காரத்தை முடிப்பிக்கவேண்டியது. அவர்களில்லாவிடின், சந்நியாசியின் குலத்தார் யாராயினும்சிரார்த்தாதிகளை முடிக்கலாம். சந்நியாசி தங்கியவிட்டத்திலே அவரைச்சுத்தஜலத்தாலபிஷேகித்துத்திவ்வியபுஷ்பங்களைக் கொண்டுருத்திரமந்திரங்களாலருச்சித்து எதிரில் மண்டலமொன்றியற்றிச் சங்கற்பாபித்து, பிரணவ வுச்சரிப்புடன் அதில் ஜலம் நிரப்பிக்கிரமப்

புடி அதனைப்பூஜித்து, அத்தீர்த்தத்தா லபிஷேகித்து, புஷ்பங்களாற் சிர சை "பரிஜைருக்ரஸ்யர" என்று சுத்தஞ்செய்து, கௌபீன சூத்திரங்களைக் களைந்து புதிதாகச்சாத்தி, விபூதியால் விதிப்படி சர்வாங்கத்திலும் உத் தூளனக்கிரமமாகத் திரிபுண்டரந்தரித்து, மாலிகைகளா லலங்கரித்துப் பஞ்சப்பிரமமயமான விமானமியற்றி அதனை அம்மந்திரத்தாற் பூசித்து, புஷ்பங்களாலலங்கரித்து, தேகத்தை அதில் உட்காரவைத்து வாத்திய கோஷம் வேதபாராயணம் உபநிடதபடனத்துடன் பிரமப் பிரதகிணஞ் செய்து முற்கூறியபள்ளத்திற்குக்கொண்டுபோகவேண்டியது. அப்பள்ளம் கிராமத்திற்கு வடபுறங் கிழ்ப்புறங்களிலாகிலும், நதிநதம் நாட்பட்ட மரத்தடி தேவாலயத்தருகாகிலுமிருக்கலாம். அக்குழியைப் பிரணவவியா ஸ்ருதிகளாற் பரிசுத்தஞ்செய்து, வன்னிபத்திரங்களையும் தருப்பைகளையும் வடக்கு நுனியாகப்போட்டு சரீரத்தைக்குழியிலிட்டு, பிரணவத்தாலபி மந்திரித்துப் பஞ்சகௌவியங்கொண்டு, பஞ்சப்பிரமமந்திரம் உருத்திர ஸூக்தம் ஜபித்து, சங்கஜலத்தாலபிஷேகித்து, புஷ்பத்தைச் சிரத்திலிட்டு வேதபாராயணத்துடன் யோகத்திலிருப்பதுபோல உருவங்கற்பித்து, தூப தீபங்கொடுத்து விஷ்ணு ஹவ்யமிதி என்று கூறி, வலது கையிற்றண்டத் தையும் இடதுகையிற் கமண்டலத்தையும் பிரஜாபதேநம: என்னும் மந்திர பூர்வமாகக்கொடுக்கவேண்டியது. அவரது சிரசில் வலக்கரத்தைவைத்து பிரசைஜ்ஞானமென்னு மந்திரத்தைப் படனம்பண்ணிக்கொண்டே தடவி, உருத்திரஸூக்தத்தால் நெற்றியைத்தடவி, மீண்டும் அக் கரத்தைச் சிரசி லிருத்தி மானேமகாந்தம் என்னும் நால்வகை மந்திரங்களை யுச்சரித்துக் கொண்டே தேங்காயைச்சிரசி லடித்துக் கபாலந்திறந்துன்பு குழியை மூடி, பஞ்சப்பிரமமந்திரத்தா லவ்விடத்தைப் பரிசுத்தஞ்செய்து "யோ தேவானும்" என்பதுமுதல் "ஸமஹேஸ்வரஃ" வரையில் ஜபித்து, சமூசார ரோக்நிவாரணகாரணராயும், பரப்பிரமமாயும், ஆதியந்த சூனியராயும், மகாதேவராயும் சர்வஜ்ஞராயும் அபராதினராயும் சர்வாதுக்கிரககாரகரா யும் உள்ள சதாசிவமூர்த்தத்தை ஜ்ஞானவு பீடத்தில் ஸ்தாபித்து, சுகந்த புஷ்பம் வில்வம் துளசிமுதலியனவால் அருச்சித்துத் தூபதீபங்கொடுத்து, பால், பரிசுத்தஅன்னம் நிவேதித்துப் பத்தியுடன் ஐந்து பிரதகிணஞ் செய்து, நமஸ்காரஞ்செய்து பிரணவத்தைப் பன்னிருமுறை உச்சரித்து, பத்துத்திக்குகளுக்கும் பிரணவத்தா லர்க்கியங்கொடுத்துப் பூசனைசெய்ய வேண்டும். இவ்வாறே பத்துநாள்செய்துவருக லாவசியம். பதினோரா நாளில் ஓர் வேதிகை நிர்மாணஞ்செய்து புண்ணிய தீர்த்தத்தைப் புரோ கணித்து வடக்குமுகமாக இருந்து கிழக்கிலும் மேற்கிலுஞ் சதுரமாக மண் டலமியற்றி, அதனுள் திரிகோண ஷட்கோணங்களைக்கிரமமாகவெற்படுத்தி, சங்கபூஜாக்கிரமப்படி பூஜைசெய்து, பிராணயாமஞ்செய்து முற்கூறியுள்ள ஐந்துதேவதைகளைப்பூசிக்கப்போவதாகச் சங்கற்பம்பண்ணிக்கையிலிருக் குந் தருப்பையை வடபுறத்திலிட்டு நல்ல தீர்த்தத்திற் கையலம்பி மேற் புறக்கொடங்கி ஆக்நேகோணங்களிலும் புஷ்பங்களை ஓம் ஹ்ரீம் அக்நி

ரூபா அதிவாகிகாம் தேவதாம் ஆவாஹயாமி என்ற விதியாகவே ஈவர் களையு மாவாஹனஞ்செய்து, முத்திரைகளைக்காட்டிப் பூரணங்கங்களையும் பாவிக்கவேண்டியது. அவை பாசம் அங்குசம் அபயம் வரதம் என்பனவும், சந்திரகாந்தத்திற்குச் சமமான இரத்தினம், பதுமராகச் சமானமான ரத்நகாந்திகளா லலங்கரித்தகைகள், கோவைபோற் செவ்வந்த அதரம், மாதுளம் காலம்போற் செவ்வந்தவஸ்திரம், செந்தாமரையையொத்த உள்ளங்கை கால், ஷோடசகலைகளோடுகூடிய சந்திரனைப்போன்ற முகமண்டலம், திரு பாசமுத்திரமாகிய மூன்று நேத்திரம், சந்திரகலை, கங்கைதரித்த ஜடை, மாணிக்கமகுடம் வச்சிரகுண்டலம், கண்ணாடிபோன்ற தாடை, உன்னத மான ஸ்தனமண்டலம், ஆரகேயூர கடக ஒட்டியாணங்களா லலங்கரித்த அவயவங்கள், சிறுத்த இடை, மாணிக்கத் தண்டையா லலங்கரித்த பாதம், மகேசனைப்போற் சர்வத்தையும் அநுக்கிரகிக்க வல்லமை, சிவ மூர்த்தசொரூபம் சதாசிவபாதமகசொரூபம் சாபாதுக்கிரகசத்தி முதலியன பொருந்தினவா யிருக்கவேண்டும். இவ்வைந்து தேவர்களுக்குஞ் சங்க தீர்த்தத்தாற் பாதத்திற் பாத்திய ஜலத்தையும், கையில் ஆசமனீயதீர்த் தத்தையும், சிரத்தில் அர்க்கிய ஜலத்தையுங்கொடுத்து, அத்தீர்த்தத்தினு லேயே அபிஷேகித்து இரத்தமயமான வஸ்திரங்களாலும் சுவர்ணமயமான மகுடங்களாலும், விலையுயர்ந்த ஆபரணங்களாலு மலங்கரித்து, வாசனை யுள்ள செந்நிறச் சந்தன அகருதைகளாலும் பரிமளமுள்ள மலர்களாலும், மூலமந்திர பாராயணத்துட னருச்சனை செய்யவேண்டியது. பரிமள தூப மும், நெய்த்தீபமுங் காண்பித்து, தேன்கூட்டிய பாயசம் நெய் சர்க்கரை யாலாக்கிய பலகாரவகைகள், வாழை பலா முதலிய பழங்கள் தனித்தனி நிவேதித்து வேண்டிக்கொள்ளவேண்டியது. இவை யெல்லாவற்றிற்கும் பிரணவாதி மூலமந்திரத்தையே யுச்சரிக்கவேண்டியது. பின்னர் தீர்த்தம் ஆசமனீயங்கொடுத்துக்ஷீகாலலம்பச்செய்து அர்க்கியங்கொடுத்து, தாம் பூலதூபதீபங்களாற் சந்தோஷிப்பித்து, பிரதகிணநமஸ்காரா திகளைச்செ ய்து அஞ்சலியஸ்தரனும் "லோகமாதாக்களே! என் பூஜையை யேற்றுக் கிவபதமடைய இசைகொண்டிருந்த இச்சந்நியாசி அவ்வாறே அடை யும்படி நீங்கள் சிவசந்நிதானத்தில் விஞ்ஞாபனம் பண்ணிக்கொள்ள வேண்டியது" என்று பிரார்த்தித்து அவரவர் ஞானத்தையடைய விசர் ஜனஞ் செய்யவேண்டியது. முற்கூறியுள்ள வட்டித்துள்ள பலகார பழ அன்னவகைகளைக் கன்னிகைகளுக்காவது பசுக்களுக்காவது ஜலத்திலா வது இடவேண்டும். அவ்விடத்திலேயாவது நாணிருக்கும் இருகத்திலேயா வது, அடைந்த சந்நியாசியைக்குறித்துப் பார்வணசிரார்த்தஞ் செய்தலாவ கியம். ஒருபோது சந்நியாசிகளா யடைந்தவர்களுக்குச் சிரார்த்தாதிகள் ஒருவருக்குநிகமாகச் செய்யக்கூடாது.

வாமதேவரே! இனிபார்வண சிரார்த்தமுறையைக்கூறுகின்றேன்: கேட்பாயாகவென்று சுப்பிரமணியர்கூறலாயினர். கருத்தாவானவன்முறை

ப்படி ஸ்நானஞ்செய்து பிராணயாமம் முடித்து ஓரேமனமுடையவனுய்ப் பவித்திரமணிந்த கையுடன் தருப்பையையெடுத்துப் பரலோகமடைந்த யதிக்காகப்பார்வணசிராத்தஞ்செய்யப்போகின்றேனென்றுசங்கற்பித்து, கையிலுள்ள தருப்பையை வடபுறத்திலெறிந்து, கையலம்பிச் சிவபூத்தர்களையும் வேதவேதாங்க சம்பன்னர்களையுமுள்ள ஈன்கு பிராமணர்களையழைத்து, அப்பியங்க ஸ்நானம் பண்ணுவித்து, தான்செய்யுஞ் சிராத்தத்திற்குச் சிராத்ததேவர்களாயிருந்து அதுக்கிரகம் புரியவேண்டுமென்று, விசுவேதேவருக்காக ஒருவரையும், ஆன்மசொரூபிக்காக ஒருவரையும், அந்தராத்மகருக்காக இன்னெருவரையும், பரமாத்மாவுக்காக மற்றவரையும் நியமித்து, பாதபிரக்ஷாளனஞ்செய்து கந்தபுஷ்பங்களாலருச்சித்துத் தூபதீபங்கொடுத்துச் சிவசொரூபிகளாகப் பாவித்துத் திவ்வியபோசனங்களாற் திருப்திசெய்வித்து, அவர்கள் சந்நிதானத்திற் பிழக்குமுகமாகத் தருப்பையையிட்டுப் பிராணயாமஞ்செய்து சிவரூபியான பதிக்குப் பிண்டதானஞ்செய்கின்றேனென்று சங்கற்பம் பண்ணி, மேழியிட்ட தருப்பையை மூன்று மண்டலஞ்செய்து அப்பிராமணர்களுக்குச் சதுர்த்தியார்த்தமாகப் பிரணவ பூர்வகமாய்த் தீர்த்தத்துடன் பிண்டத்தைத் தருப்பாசனத்திலிட்டெழுந்து அவர்களையுமெழுப்பிக் கைகாலலம்பி ஆசமனீயஞ்செய்து பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து தக்ஷிணைகொடுப்பதால் திருப்தியாக்குவித்து, முறைப்படி விசர்ஜனஞ்செய்து விட்டிற்கனுப்பி, அதேஸ்தானத்திற் சந்தியாதிகளைக்குறித்து உருத்ரபலியைச் செய்யவேண்டியது. பன்னிரண்டாநாள் விடியற்காலையிலெழுந்து காலிக்கடனைமுடித்து முறைப்படி ஸ்நானஞ்செய்துசந்தியாவந்தனாதிகளைமுடித்துச் சிவபத்தர்களாயும்ஜீதேந்திரியர்களாயும், வேதவேதாங்க சம்பன்னர்களாயும் உள்ள பிராமணர்களைப் பிரார்த்தித்து வரவழைத்து,பகற்காலத்தில் எண்ணெயிட்டு ஸ்நானஞ்செய்வித்து, சிவசந்நிதானத்திற் பூர்வமுகத்த பஞ்சரீவர்ணக் கிரமப்படி பூஜைசெய்து மும்முறை பிராணயாமஞ்செய்து, சிற் சொரூபியான எனது குருவிற்குப் பூஜைசெய்யப் போகின்றேனென்று சங்கற்பம் பண்ணிக்கொண்டு பவித்திரவிரலுடன் பிராமணர்களுக்குப் பாதபூஜைசெய்து திருநீண்டாபரணித்துத் தானுமவ்வாறே புரிந்துகொண்டு மௌனத்துடன் இழக்குமுகமாக இருத்தித் சதாசிவக்கிரமமாகஎட்டுப்பிராமணர்களைவகித்து, மிகுந்த நால்வர்களைக் குருவாயும், பரமகுருவாயும் பராத்பரகுருவாயும் பரமேஷ்டி குருவாயுந் தியானித்து, ஸ்தூலமாக இவர்களைச் சாம்பசிவஞ்சுவே பேதமின்றிப் பாவித்துப் பிரணவத்தால் ஒவ்வொரு நாமங்களையும் சதுர்த்தியார்த்தமாக ஆவாஹனஞ்செய்து,ஆசன ஆசமனீய பாத்திய அர்க்கிய வஸ்திர கந்த அக்ஷத புஷ்பங்களாற் பிரணவ பூர்வமாக நாமங்களைச் சொல்லிச் சதுர்த்தியார்த்தமாகப் பூஜிக்கவேண்டியது. பின்னர் தூபதீபங் கொடுத்து வாழையிலையில் நானுவிதமான பழவகைகளுடன் அமுசுவையோடுகூடிய அன்னத்தை வட்டித்து "விஷ்ணு! இந்தஹவியத்தை இரட்சிக்கக்கடவன்" என்றுபிரார்த்தித்து பூபோசனங்கொடுத்து, சதாசிவாதி பஞ்

னிரண்டுதேவர்களையுந் தனித்தனியாகக் கூப்பிட்டு "ஏதேவா" என்னு மந்திரத்தை ஜபித்து அக்ஷதையோடுகூடிய ஜலத்தைஅப்பன்னிருவர்மத்தியிற் றத்தஞ்செய்து சாஷ்டாங்கமாகநமஸ்கரித்து, இவர்களுக்குநான்கொடுத்த தி அமுதமாகட்டுமென்றுகூறிப் போஜனஞ்செய்விக்கவேண்டியது. அவ்வாறு அவர்கள் போஜனஞ்செய்யுங்காலையில் "கஜுநாந்வா" என்னும் ருக்கை யாரம்பித்து வேதாதி உருத்திர சமக பஞ்சப்பிரம மந்திரங்களை ஜபஞ்செய்து, அவர்கள் புசித்தபின்பு உத்தராபோஜனங்கொடுத்து கைகால் பரிசுத்தஞ்செய்வித்து, ஆசமனீயஞ்செய்தபின்பு ஆசனத்திலுட்காரப் பிரார்த்தித்து, பரிசுத்தஜலத்தினால் அவர்களைத் திருப்திகேட்டு, கர்ப்பூராதிவாசனைகளோடுகூடியதாம்பூலத்தைத்தக்ஷிணையுடன்கொடுத்து, பாதுகை, குடை, விசிறி, மண், தண்டங்களைக்கொடுத்து, பிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து சந்தோஷப்படுத்தி அவர்களாலாசீர்வாதம்பெற்று, குருசொரூபிகளாயும் சதாசிவ சொரூபிகளாயுமுள்ள பிராமணோத்தமர்களே! எனக்குஎக்காலத்திலுங் குருபத்தி தவறுதிருக்க அநுக்கிரகிப்பீர்களென்று வேண்டிக்கொண்டு, ஆசனத்திலிருந்து உபசாரத்துட னெழுப்பிவாசற்படிவரையிற் பின்தொடர்ந்து உபசாரத்துடன் அனுப்பி, அவர்களால் தன்னைத் திரும்பிப் போவாயாகவென்று சொல்லியபின்பு தான்திரும்பித் தன்னுடைய பந்துவர்க்கங்களுடனும் பிராமணர்களுடனுஞ் சேஷமான அன்னத்தைப்புசித்துத்தன்னோடுண்ணும்பிராமணர்களது ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்வானாக. இம்முறையே இக்குருவாராதனையைப் பத்தியுடன் செய்பவன் இவ்வுலகிற் சர்வபோகங்களையு மநுபவித்து, வாணாள் முடிவில் யோகியர்களுக்குந் துர்லபமான சிவலோகத்தை யடைகின்றான் என்று சுப்பிரமணியப் பெருமான் வாமதேவமுனிவருக் குரைத்தருளி, வாமதேவமுனிவனே ! இதனை நீ ஸநத்குமாரமுனிவனுக்கும் வியாஸமுனிவனுக்குஞ் சொல்லிகவென்றுகட்டளையிட்டனர். அவ்வாறே வாமதேவன் ஸநத்குமாரருக்குரைப்ப, ஸநத்குமாரர் சுகருக்குக்கூறினர். வைசம்பாயனர்-பைலர்-ஜைமினி-சமந்துவனதால்வர் வியாஸமுனிவருடையசிஷ்யர்கள். அகஸ்தியர் புலஸ்தியர் புலகர் கிருதுவென நால்வர் வாமதேவருடையசிஷ்யர்கள். ஸநகர் ஸநந்தனர் ஸநாதனர் ஸநத்குமாரர் என நால்வர் ஸநத்குமாரர்கள். இவர்களாய்ச் சிவயோகிகளாகிச் சகலவேதார்த்தங்களையு மறிந்தவர்கள். இந்நால்வர்களும் குரு பரமகுரு பராபரகுரு பரமேஷ்டிகுருவென்று சர்வலோகப் பிரசித்தர்களாக விளங்குவர். பிரணவார்த்தப் பிரகாசிகமாயும், புருஷார்த்தங்களில் நான்காவதாகிய மோக்ஷ சாம்பிராச்சியத்தைக் கொடுப்பதாயும், கைலாசப்பிரஸ்தமென்றும் மண்டலமாயும், சிவபூசாவிதியாயும், சந்தியாசாச்சிரமக்கிரமமாயும், சதாசிவப்பிரமத்தைச் சந்தியாசத்தினுலடையுங் கிரமமாயும் விளங்கும் விஷயங்களையுனக்குச் சொன்னேன். சர்வ யதிந்திரர்களாலும் பூஜிக்கத்தக்கதாயும் வேதசிவதுதிக்களின்சாரமாயும் எல்லோருக்குஞ் சந்தோஷமுண்டுசெய்வதாயும் உலகுக்கு சீர்த்தி யுண்டுசெய்வதாயும் பங்களகரமாயும் தகாவித்தியா ரகசிய

மாயும் வேதாந்தங்களிற் சித்தாந்தமாயும் உலககுருவாகிய என்பிதா சிவ பெருமானைற் சொல்லப்பட்டதாயுமுள்ள இந்த இரகசியத்தையான் என் தக்தையிடங் கேட்டபடியே புனக்குச்சொல்லினேன். இனி யிதுவாமதேவ மதமென வழங்குக. இந்த வாமதேவ மதப்படி சிவபூஜை செய்பவர்கள் சிவஞானத்தினிற் பிறவிகடோறும் ஞானவான்களாய்ப் பிரம விஷ்ணு ருத்திராதி கிரமமாய் மோகூத்தை யடைவரென வாமதேவ முனிவருக் குபதேசித்து, முருகக்கடவுள் ஸ்கந்தகிரியிலிருந்து கைலாயகிரத்தை யடைந்தார். இத்தக்காரணத்தினால் இத்தப்பாகத்திற்குக் கைலாயஸம் ஹிதை யென்று பெயராயிற்று.

தகனகன வியுரைத்த து

முற்றிற்று.

பதின்மூன்றாவது

ஸ்வேதமுனிவர் விடைகொண்ட அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளே! இவ்வாறு உபதேசிக்கப்பெற்ற வாம தேவரும் புத்திமுதிர்ச்சியுடன் கைலாயத்தையடைந்து பரமபதியைத் தரி சித்து உடல்நடுங்க உரோமமுதல் உடல்முழுதும் மயிர்க்கூர்செறியச் சாஷ் டாங்கமாக நமஸ்கரித்து, பலவேதவாக்கியங்களால் துதித்துச் சிவாநுக் ரகத்தையடைந்துவிடைகொண்டு வாழ்ந்திருந்தனர். ஆகையால் இப்பிர ணவார்த்தத்தை நீங்களும் அறிந்துகொண்டு இந்தக்காசி க்ஷேத்திரத்தில் வசித்து விசுவநாதருடைய திருவடியிற் பக்திசெய்து சிவதாயுச்சியத்தை யடையுங்கள். யானும் எனதுருவாகிய வியாஸபகவானுடைய சேவைக் காக வெதிரிகாச்சிரமஞ் சொல்கின்றேன். தங்களிப்போன்ற சதுரக்களு டைய தெரிசனமெப்பொழுதும் எனக்குண்டாகும்படி அநுக்கிரகஞ்செய் விர்களாக. நீங்கள் கேட்டவிஷயங்களைச் சொன்னேன். இது சிவமஹா புராணத்தில் உருத்திரஸஹஸ்ரமென்றுஞ் சொல்லப்படும். இது மங்களங் களுக்கெல்லாம் மங்களமாயும் சதாசிவப்பிரமத்தை யடியத்தக்கதாயும் பாவங்களையும் ரோகங்களையும் ஒழிக்கத்தக்கதாயும் இஷ்டசித்திகளைக் கொடுப்பதாயும் இவ்வுலகத்திற் போகத்தையும் பரலோகத்தில் மோகூத் தையுங் கொடுக்கத்தக்கதாயும் உள்ளதென, இந்த ஸம்ஹிதையைக்கேட்ட முனிவர்கள் ஆநந்தசாகரத்தில் மூழ்கிஎல்லாரையும் உரோமுதல், ஸ்வேதமுனி வரை நோக்கி, ஸ்வாமீ! அடியேங்கள் மனத்திலிருந்த அஞ்ஞானம் அறமே யொழிந்தது என்று அஞ்சலியஸ்தர்களாக நின்றார்கள். அப்பொழுது ஸ்வேதமுனிவர் அம்முனிவர்களைநோக்கி, வேதனை ஞானமற்றவர்களுக்கும் நாஸ்திகர்களுக்கும் பக்தியற்றவர்களுக்கும் சிவத்துவேஷிகளுக்குஞ் சொ ல்லப்படாது. வேதாந்தத்துச்சியில் விளங்கும்பொருள் சிவபெருமானென் றனாந்தபரியோர்களுக்கே சொல்லத்தக்கது. என்னுடைய குருவாகிய

வியாஸமுனிவர் அநேகவேதாந்தங்களையும் வேதசாரங்களையும் அஷ்டாதச புராணங்களையும் அநேகமுறை யோசித்துப்பார்த்து இதுவே சாரமான தென்றெனக் குபதேசித்தனர்.

முனிவர்களே! சிவபக்தியற்றவன் இதனைக் கேட்டாலும் பக்தி முதிர்ப்பெறுவான். ஒருமுறை குருமுகமாகக் கேட்டவன் பாவங்களை யொழிப்பான். இரண்டுமுறை கேட்டவன் சிவபக்தி யில்லாவிடினும் சிவபக்தியடைவான். மூன்றுமுறை கேட்டவன் சிவபக்தி முதிர்ப்பெறு வான். நான்குமுறைகேட்டவன் சிவஞானமடைவான். ஐந்துமுறை கேட் டவன் சிவபதவியையடைவான். ஆகையாற் போகமோகூங்களைப் பெற விரும்பினவன் இதனை யடிக்கடிகேட்கவேண்டியது. ஐந்துமுறை கேட்க வேண்டுமென்றே என்குரு உபதேசித்திருக்கின்றார். எந்தப்பலனை நாடி இதைப்படிதலுக் கேட்கின்றானோ அதையவனடைவானென, இவ்விதமா கக் கூறிவந்த இவற்றை ஐந்துமுறை கேட்டுச்சிவானந்தத்திலாழ்ந்து காசி க்ஷேத்திரத்தில் வாழ்ந்திருந்தார்கள். இவ்விதமாக ஐயமற உபதேசித்த ஸ்வேதமுனிவரை, நைமிசாரணியவாசிகள் வஸ்திரம் சந்தனம் புஷ்பம் அக்ஷதை ஆபரணங்களாலருச்சித்து, பன்முறை நமஸ்கரித்து, பிரியவா க்கியங்களாலுத்தோத்திரஞ்செய்து விடைவாக்கியங்களாலும் எப்போதும் இவ்வாறே சிவசரிதங்களைக் கூறிக்கொண்டிருக்க வேண்டுமென்று விடை கொடுத்தனுப்பி ஸ்வேதமுனிவர் திருவாய்மலர்ந்த இரகசியப்பொருளினும் அறியத்தக்கது வேறில்லையென்று, திருக்கைலாய நிக்கைநோக்கி நமஸ் கரித்துத் தாங்கள் எக்காலத்துஞ் சிவபிரானையே வழிபட்டுவந்தார்கள். இக்கைலாய ஸம்ஹிதையைப் பத்தியுடன் படித்துக் கேட்போர்கள் தரு மார்த்தகாமியங்களையநுபவித்துச் சிவஞானத்தாற் சிவசாம்பிராச்சியத் தையடைவார்கள். அவர்கள் ஜன்மங்களெடுக்கவேண்டி வந்தாலும் அந்த ஜன்மங்கடோறுஞ் சிவத்தியானமுடையவர்களாயிருந்து அந்தத்தில் அழி யாப்பதவியை யடைவார்கள். சுபம். சுபம். சுபம்.

ஸ்வேதமுனிவர் விடைகொண்டது

முற்றிற்று.

கைலாயஸம்ஹிதை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ சாம்பசிவார்ப்பணமஸ்து.

194

சிவமயம்.

ஸ்ரீ சிவமஹாபுராணத்தின் அட்டவணை.

ஞானஸம்ஹிதை.

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
க	புராணவர்வாறு	க
உ	ஜோதிலிங்கோற்பவவர்ணனம்	உ
ஊ	பிரமவிஷ்ணுக்களுக்கு வரமளித்தது	எ
ச	லிங்கமஹிமை	கச
ஙி	சிருஷ்டிநிரூபணம்	கசு
சு	ஷை	கஅ
எ	சிவபூஜாவிதி	உ0
அ	ஷை	உடி
சு	தேவர்களது துயருரைத்தது	உசு
க0	சிவபெருமான் யோகத்தமர்ந்தது	உசு
கக	பார்வதி பரிவர்த்தனம்	ஊச
கஉ	பார்வதி தபோவர்ணனம்	ஊச
கசு	ஷை	ஊஅ
கச	பார்வதிக்கு வரங்கொடுத்தது	ஙி0
கடி	பார்வதியை மணம்பேசியது	ஙச
கசு	திருமணத்திற்குத் தேவர்வந்தது	சசு
கள	மேனை அஞ்ஞான மயக்கமுற்றது	டிசு
கஅ	பார்வதி விவாகம்	டிசு
கசு	தாரகன்வதையுந் திரிபுரத்தோற்றமும்	சுச
உ0	திரிபுரஸம்ஹார ஆலோசனை	சுச
உவ	நைநதிகேசுரபதேசம்	சுடி
உஉ	திரிபுராதியரை வஞ்சித்தது	சுளி
உசு	திரிபுரோபாக்கியானம்	சுசு
உச	திரிபுரதகனம்	எ0
உடி	விசுவகர்மா சிவலிங்கமளித்தது	எசு
உசு	பாஷ்யாந்தர லிங்கங்களுரைத்தது	எசு
உள	நித்தியகருமம்	எஅ
உஅ	பூஜாவிதி வர்ணனம்	அசு
உசு	ஷை	அஉ
சு0	தாழம்பூவின் சாபம்	அடி
சுசி	சண்பகப்பூவின் சாபம்	அள
சுஉ	கணபாலன் அவதரித்தது	கச
சுசு	கணபாலன் போர்புரிந்தது	கடி
சுச	கணபதி பட்டாபிஷேகமும் விதமும்	கஅ
சுடி	கணபதி தாய்தந்தையரை வலம்வந்தது	க0சு
சுசி	கணபதி விவாஹம்	க0டி
சுள	உருத்திராக்ஷமஹிமை	க0சு
சுஅ	ஜோதிலிங்கங்களின் தொகை	க0சு
சுசு	நந்திகேசுவரலிங்கமஹிமை	கஉ
ச0	ஷை	கச

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
ககூ	அத்திரீசுவர மகிமை	கஎடு
சஉ	நாமேசுவர மகிமை	கஉ0
கஅ	அந்தகேசுவர மகிமை	கஉஊ
கச	ஆதிசைவர் சிறப்பு	கஉச
கடு	சோமேசுவர மல்லிகார்ச்சுன மகிமை	கஉக
கசு	மகாகால ஓங்காரலிங்கங்களின் மகிமை	கஊக
ஞள	கேதாரேசுவர் மகிமை	கஊச
கஅ	பீமசங்கர மகிமை	கஊடு
கக	காசியின் மகிமை	கஊஅ
நி0	காசிநகர வர்ணனம்	கசஉ
நந	ஷை.	கசக
நஉ	கௌதமேசுவர மகிமை	கடுக
நஊ	கோதாவரியின் தோற்றம்	கடுச
நச	திரியம்பக லிங்கமகிமை	கஊ0
நடி	வைத்தியநாதேசுவர மகிமை	கஎஊ
நசு	போகேசுவர மகிமை	கஎசு
நள	ஸ்ரீமேசுவர மகிமை	கள0
நஅ	குஸ்மேசுவர மகிமை	களக
நக	இரணியகசிபன் வரம்பெற்றதும் பிரகலாதனைப் படிப்பித்ததும்	களசு
க0	பிரகலாதன் விஷ்ணுமகிமையுரைத்தது	கஅச
கக	நரசிங்க சரபாவதாரங்களின் சரிதங்கள்	கஅசு
கஉ	நளராஜனது பூர்வகதை	ககஉ
கஊ	கண்ணனும் வியாதனும் பாண்டவரிடம் வந்தது	கஎஊ
கச	அர்ச்சுனன் தவஞ்செய்தது	கஎடு
கடி	மூகாசுர சங்காரம்	கஎக
கசு	சிவபெருமான் அர்ச்சுனனையடைந்தது	உ0உ
கஎ	அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றது	உ0க
கஅ	அர்ச்சுனன்செய்த சிவபூஜாவிதானம்	உ0எ
கக	கண்ணன் சிவபூஜைசெய்தது	உக0
எ0	திருமால் சேமிபெற்றது	உகஉ
எக	சிவநாமங்களாயிர முரைத்தது	உகஊ
எஉ	சிவராத்திரி விரதமகிமை	உஉ0
எஊ	சிவராத்திரி உத்தியாபனவிதி	உஉச
எச	வேடுவன் சிவராத்திரி பலனடைந்தது	உஉசு
எடி	வேதநிதி சிவராத்திரி பலனடைந்தது	உஊஊ
எசு	முத்திலகுணமும் சிவரூபமும்	உஊடி
எள	சிவபெருமானது நித்தியத்துவம்	உஊசு
எஅ	ஞானப்பிரகரண முரைத்தது	உஊஅ

தர்மலம்பகம்.

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
க	சிவமஹாத்மியமுணர்த்தல்	உஉ
உ	ஷை.	உசடி
ஊ	திரிபுரசங்காரம்	உடுஉ
ச	அந்தகாசுரன் கதை	உடுடி
டி	அந்தகாசுரன் முத்தி	உஎ0
சு	குருவின் கதை	உஎச
எ	சத்தி சிவங்களின் சிறப்பு	உஎஅ
அ	காமித்தின் கதை	உஅக
கூ	மன்மதன் கதை	உகஊ
க0	ஷை.	உஊக
கக	ஷை.	ஊ0எ
கஉ	ஷை.	ஊகஉ
கஊ	ஷை.	ஊகக
கச	ஷை.	ஊஉடி
கடி	நித்தியநைமித்திக பூஜாவிதி	ஊஉசு
கசு	சிவலிங்க பூஜாபலன்	ஊஊஉ
கள	சிவனடியவர் சிறப்பும் அடியவர் பூஜாப்பலனும்	ஊசஅ
கஅ	பாவவிவரணம்	ஊசகூ
கக	பாவிகள்பெறுந் தண்டனை	ஊடுடி
உ0	புண்ணியர்பெறும் பதவி	ஊசுசு
உக	அன்னதான பலன்	ஊளடு
உஉ	பாதானம் தவம்முதலியவற்றின் சிறப்பு	ஊளச
உஊ	புராணசிரவண மகிமை	ஊஅ0
உச	சுவர்ணதான பூதானங்களின் மகிமை	ஊஅஊ
உடி	பூதானவிதி	ஊஅஅ
உசு	திலஹவ்வி தானம்	ஊசு0
உள	சதுர்த்தசி விரதம்	ஊகஉ
உஅ	சதுர்த்தசிவிரத சமானம்	ஊகக
உக	துலாபுருஷதானம்	ச0சு
ஊ0	பரசுராமர் சரிதம்	ச0க
ஊக	பாதாளலோக வர்ணனை	சகஉ
ஊஉ	நாகலோக வர்ணனை	சகடி
ஊஊ	பூமண்டல விஸ்தரணம்	சகள
ஊச	பாரதவருஷ விஸ்தரணம்	சகஊ
ஊடி	மிருத்யுஞ்சய மந்திரம்	சஉஉ
ஊசு	மிருத்யுஞ்சயப் பிரபாவம்	சஉச
ஊள	பஞ்சப்பிரம மந்திரம்	சஉஅ
ஊஅ	ஈசான கல்பம்	சஉக
ஊக	தற்புருஷ கல்பம்	சஊக
ச0	அகோர வாமதேவ சத்தியோஜாத கல்பங்கள்	சஊஉ
சக	கூத்திரிய தருமம்	சஊஅ
சஉ	கருப்பவாச கூற்றம்	ச்ச0
சஊ	ஸ்திரீகளின் பாவம்	சசடி
சச	அருந்ததியின் கற்பியல்பு	சடிஊ
சடி	சாவித்திரியின் சரிதம்	சடிடி

அட்டவணை.

அத்தி யாயம்.	விஷயம்.	பக்கம்.
௮	மரணகாலமறிவது	௧௫௮
௨	யோகக்கலை	௧௬௫
௩	சாயுஜ்யருஷ தரிசனமும் புராண சிரவணமும்	௧௬௯
௪	மூர்த்திகளின் தோற்றம்	௧௭௨
௫	பிரம்விஷ்ணுக்கள் வரம்பெற்றது	௧௭௬
௬	உலகசிருஷ்டி	௧௭௯
௭	உலகவிருத்தி	௧௮௪
	ஷை.	
௮	காசிபர் முதலானோர் பரம்பரை	௧௮௭
௯	உலகநாயகர்	௧௯௪
௧௦	பிருதுசக்கிரவர்த்தியின் பிரபாவம்	௧௯௭
௧௧	பூதேவி பசுவடிவுற்றது	௨௦௩
௧௨	மன்வந்தரமுரைத்தது	௨௦௭
௧௩	சஞ்ஜ்ஞாதாயையின் சரிதமுரைத்தது	௨௧௨
௧௪	வைவசுவதமநு மரபுரைத்தது	௨௧௫
	ஷை.	
௧௫	பிதுர்தேவர் சிறப்புரைத்தது	௨௧௯
௧௬	பிதுர்பக்தியின் பலனுரைத்தது	௨௨௪
௧௭	ஷை.	௨௨௯

கைவல்யகண்டம்.

௧	சந்திரயாகஞ்செய்தது	௧
௨	பார்வதி பரமசிவ ஸம்வாதமுரைத்தது.	௫
௩	ஷை.	௫
௪	ஞ்சாவரண பூஜாமண்டலமுரைத்தது	௮
௫	ஞ்சாவரணபூஜாவிதியும்அங்கந்யாலக்ரந்யாசமுமுரைத்தது	௯
௬	ஜாமந்திரமும் சதாசிவரூபமுமுரைத்தது	௧௫
௭	ராமதேவர் முருகப்பிரானையடைந்தது	௨௬
௮	ஸக்தியாசக்கிரமமுரைத்தது	௨௯
௯	ஷை.	௩௬
௧௦	ஷட்விதார்த்தமுரைத்தது	௩௯
௧௧	ஆசாரியாபிஷேகமுரைத்தது	௪௪
௧௨	தக்ஷணக்ஷணவிதியுரைத்தது	௪௯
௧௩	ஸாதகருகிவர் விடைகொண்டது	௫௪

அட்டவணை முற்றிற்று.